Dic 193

TAMIL — ENGLISH

DICTIONARY

(BASED ON INDIAN MEDICAL SCIENCE)

By

T. V. SAMBASIVAM PILLAI

DIRECTORATE OF INDIAN MEDICINE AND
HOMOEOPATHY
MADRAS
1991

TAMIL — ENGLISH

DICTIONARY

OF

MEDICINE, CHEMISTRY, BOTANY

AND

ALLIED SCIENCES

(BASED ON INDIAN MEDICAL SCIENCE)

Volume 2

By

T. V. SAMBASIVAM PILLAI

THE MOST EXHAUSTIVE AND UP-TO-DATE MEDICAL DICTIONARY AVAILABLE

Publishers:
Directorate of Indian Medicine and Homoeopathy
Madras-600 106
1991

FIRST EDITION 1931

SECOND EDITION 1991

PRINTERS :

GOVERNMENT CENTRAL PRESS, MADRAS-600 079

க, ஆன்மா, the soul, the spirit, the unknown ; 2. உடல், body ; 3. சூரியன், the sun ; 4. தீ, fire ; 5. காற்று, wind ; 6. மயில், pea-cock ; 7. மனம், mind ; 8. ஒன்றென், the sign in Tamil for the numeral one ; 9. பிரசாபதி, Brahma ; 10. பிரபை, splendour ; 11. நீரில் வாழும், aquatic.

கஂக, காற் பலம், ¼ palam.

கஂஞுபா, ஓர் உயர்ந்த மணி. இதற்கு வடமொழியில் திருண மாரியென்றும், தமிழில் கற்பூர மணியென்றும் பெயர், amber—Succinum or Electrum. In Sanskrit, it is called *straw-attracting*-gem, and in Tamil *camphor*-gem. See கஞுபா.

கஂறு, கறுமை, blackness.

கக, மஞ்சள், country saffron ; 2. குங்குமம், saffron.

கக கலவாய், மஞ்சட் கல வாய் மீன், yellow perch.—Bodianus macrocephalus.

ககஞ்ஞென், ஓர் பூடு, half-hooded-flowered nutmeg.—Goniothalamus wynaadensis.

கக பதி, இராசாளி, a large kind of hawk ; the king eagle or the Royal falcon —Nisates Bonelli ; 2. பறவைகளுக் கரசன் அதாவது கருடன், the Brahminy kite, the Prince of birds — Haliaster Indus ; 3. கருடக் கொடி அல்லது பெரு மருந்து, Brahminy kite-creeper otherwise known as the 'Great Medicine' ; Indian birth-wort—Aristolochia Indica.

கக பம், ஓர் வகைக் கிழங்கு, the turnip-shaped root of a plant.

கக பாரி, மருத மரம், the murdah tree—Terminalia alata.

கக பீசம், சொறி நாயகம், a plant that could cure skin eruptions.

கக மாறம், மணித் தக்காளி, black solanum ; fox-grape—Solanum nigrum.

கக மூங்கில், சார்த்தற் கள்ளி, stout reed-bamboo—Ochlandra travancoria.

கக மூலி, கிருமி சத்துரு, any plant possessing the virtue of destroying worms—Anthelmintic.

ககம், சரகண்ட பாஷாணம், இது சத்துருக் களைக் கொல்ல அம்பு முனையில் தடவ வுத வும், a kind of native arsenic. It is a poison supposed to be used at the tip of arrows for killing enemies ; 2. மணித் தக்காளி, fox-grape.—Solanum nigrum ; 3. பறவை, a bird ; 4. மஞ்சள், turmeric.

கக ராசன், See கக பதி.

ககவ சுகம், ஆல், the banian tree — Ficus indica.

கக ளப்பிர நிறத்தி, ஆதொண்டை, Ceylon caper—Capparis horrida.

ககனக் குளிகை, சாரணை திரத்த ரசக் குளிகை, animated mercurial pill. See கவுனக் குளிகை.

ககன சாரம், see ககன சாரிகை.

ககன சாரி, ஆகாய மார்க்கத்தில் சஞ்சரிப்பவன், one who travels in the aerial region.

ககன சாரிகை, ஆகாய மார்க்கத்தில் சஞ்சரித்தல், travelling in the air.

ககனபம், வீணைத் தண்டு, the spinal column.

ககன மறி மூலி, ஆகாயத்தில் தங்கச் செய்யும் ஓர் மூலிகை, an unknown drug using which one could stop or remain suspended in the air.

ககன மார்க்கம், ஆகாய வழி, the region or the passage in the sky.

ககனம், ஆகாயம், the sky ; 2. வாயு, the air or the atmosphere ; 3. காடு, jungle ; 4. ஓர் வகைக் கிழங்கு, a kind of root, see ககபம் ; 5 பறவைப் பொது, birds in general. Title from their being found flying in the sky ; 6. துத்த நாகம், zinc ; 7. அப்பிரகம், talc ; 8. வாயு மண்டலம், aerial region.

கக ஞாவிந்தம், அந்தர அல்லது ஆகாயத் தாமரை, sky-lotus ; 2. கொட்டைப் பாசி, seed-moss—Sida humilis ; 3. சத்துப்பு அல்லது வெடியுப்பு, nitre—Potassium nitrate ; 4. படிக்கு, crystal glass.

கதுஞ் சலம், சாதகப் புள் அதாவது வானம் பாடி, sky-lark. See கபிஞ் சலம்.

கதுத்தம், முதுகு, the back ; 2. ஓர் பறவை, a bird.

கதுத்து, இராச லட்சணம், royal beauty ; 2. நாக்கு, the tongue ; 3. இமில், the hump of a bull.

கதுத் துருமம், நரி, the jackal ; 2. ஓர் பூடு, a medicinal plant ; 3. இமி லெருது அதாவது இமில் உள்ள ஓர் எருது, a bullock with a hump—Brahminy bull.

கதுந் தரம், பெண்களின் புட்டத்தி லிருக்கும் சுழி, an incurve found on the buttocks of women.

கதுபம், see கடுக்காய்ப் பூ ; 2. கரு மருது, black murdah—Terminalia tomentosa.

ககேசன், கருடன், brahmini-kite.

ககேருகம், வயிற்றுப் புழு, a worm in the stomach or the intestines.

கோதரம், பாம்பு, snake.

ககோளம் வான வட்டம், the region or the vault of the sky.

ககோள வித்தை, வானத்திற் பறக்கும் வித்தை, சித்தர்கள் கன குளிகையைக் கொண்டு இதைச் செய்வார்கள், the art of flying in the aerial regions. This is generally done by Siddhars with the aid of animated mercury pills. See also கவனம் பாய்தல் ; 2. வான சாஸ்திரம், astronomy.

கக் கடிகம், பேரீச்சம் பழம், wild date-fruit —Phoenix sylvestris.

கக் கட்டி, அக்குள் கட்டி, which see.

கக்க தண்டம், அக்குள் தாங்கி அதாவது நொண்டிகள் உபயோகிக்குங் கோல், a staff to be placed under the arm-pit to support the lame in walking—Crutch ; 2. யோக தண்டம், அதாவது யோகிகள் வாசிப் பழக்கத்திற்காக, உபயோகிக்கும் தடி. இதை இடது அக்குளில் வைப்பதால் வாசி வலது நாசியிலேயே நிகழ் யும், a leaning-staff used generally by yogis in the practice of yoga for the purpose of restricting the respirations through the right nostril only.

கக்க பாளம், கக்கப் பை, கை அடப்பம், wallet; 2. சந்நியாசிகள் கக்கத்தில் வைத்திருக்கும் மூட்டை, the outfit of a religious mendicant carried under his arm.

கக்கப் பொட்டணி, see கக்க பாளம்.

கக்கம், அக்குள், the arm-pit — Axilla ; 2. எண்ணெய்க் கசடு, dregs in oil ; sediment in oil ; 3. அக்குளின் கீழ்ப் பாகம், the lower portion of the arm-pit, *Cf.* கக்கத்தில் பின்ஜ. See கமுக் கட்டு.

கக்கரி, சிறு வெள்ளரி, small cucumber—Cucumis melo ; 2. ஓர் நாய், a kind of dog ; 3. நரி வெள்ளரி, fox cucumber—Cucumis utilitissimus ; 4. முள் வெள்ளரி, prickly cucumber — Cucumis sativus ; 5. வெள்ளரி, field cucumber or common cucumber—Cucumis sativus.

1. கக்கரிகம், see கக்கரி.

2. கக்கரிக் காய், சிறு வெள்ளரிக் காய். இது சாதாரண வெள்ளரிக் காயைப் போலிருந்தாலும் உருவத்தில் சிறியது, அடித் தண்டு வெள்ளரிக் காயைப்போல அவ்வளவு விசாலமாய் இராது. இளங் காயின் மேற் புறம் வழு வழுப்பாயும் உட் புறம் சதைப்பற்றும், பச்சை நிறமாயும், முற்றினால் மஞ்சள் நிறமாயு மிருக்கும். இதைப் பச்சையாகவும் தின்னலாம், கறிக்கு முதவும். இது உடம்பிற்குக் குளிர்ச்சி, தீய்ந்தபோன பித்தத்தை நீர் மூலமாய் வெளிப் படுத்தும். மண் ணீரலின் வீக்கத்தைக் கரைக்கும். உஷ்ண சுரத்தைப் போக்கும். Fox cucumber—Cucumis melo. It is almost of the same kind as the common cucumber, although its fruit is smaller and the stem is not so extensive as that of the other. When tender, the fruit is green and smooth. When ripe, it is changed to a bright orange colour. It is eaten raw and is also much used in preparing curries.

It cools the system, brings out the impurities of bile through urine and reduces the swelling of the enlarged spleen. It also cures the fever due to the excessive heat in the system.

கக்கலாத்து, கரப்பான் பூச்சி, cockroach—Blatta Orientalis.

கக்கல், இருமல், cough ; 2. கக்குதல், coughing spasmodically as in whooping cough ; 3. கக்கப் பட்டது, that which is ejected through the mouth ; 4. வாந்தி செய்தல், vomiting.

கக்கல் நோய், கக்குவான், chin-cough or whooping cough

கக்க வருணி, பிடரி, the hinder and upper part of the nape.

கக்க வைத்தல், வாந்தி யுண்டாக்கல், causing to vomit.

கக்காரம், சங்கு, the chank ; 2. தினை, millet —Panicum italicum; 3. மா மரம், mango-tree—Mangifera indica.

கக்கார், தேமா, அதாவது தித்திப்பு மாங்காய், sweeţ mango, as opposed to புளிமா, sour mango.

கக்கிக் கொடுத்தல், பறவைகள் ஊட்டி வளர்த்தல், to bring up by feeding from mouth to mouth as birds do for their young.

கக்கிசக் கிரியை, 16 அறைகளுள்ள யந்திரத்திற் குண்டான மாந்திரிகத் தொழில்கள், இந்த யந்திரம் பல விதக் காரியங்களுக் குபயோகப் படும், இவ்வொரு அறையிலும் ஒவ்வொரு இலக்கம் இருக்கும். இந்த யந்திரத்தின் நான்கு அறைகளி லுள்ள எண்களை எந்தப் பக்கமாகக் கூட்டினாலும் 34 வரும். மொத்தமாக எல்லா அறைகளின் இலக்கத்தைக் கூட்ட 136 வரும், *(in Mantric science)* the different kinds of magical performances arranged for various purposes by the use of a diagram consisting of 16 squares with appropriate numbers inserted in each. It contains sixteen numbers, and in every line the sum of all the 4 numbers whether taken horizontally, vertically or diagonally comes to 34. The total of all the numbers in the diagram is 136. There are also names of plants and animals inserted in each square and they are made to function according to magical operations based on doctrines of mathematics.

16	3	13	2
9	6	12	7
4	15	1	14
5	10	8	11

NOTE—1. In the Talismanic Magic of Cabala, a diagram almost similar to this is called the table of Jupiter and out of it is drawn the character of Jupiter and the spirits thereof. If this is engraven on a silver plate, it is conducive to gain, riches and favour, love, peace and concord. It appeases enemies and confirms honours and dignities.

2. Numbers are endowed with supreme virtues. They cure enmity in others. All things that are, were and will be, only subsist and can subsist by and receive and can receive their virtues, only from numbers. Therefore there is a very wonderful efficacy and virtue in numbers. It is said that numbers work very much upon the *soul*, figures upon the *body* and the harmony of bcth upon the *whole animal*.

கக்கிச மூலி, இரசத்தைக் கட்டுமோர் விதப் பூண்டு, a plant capable of consolidating mercury ; 2. நாகதாளி (literally) cobra convolvulus, a plant quite different from (சப்பாத்தி) prickly-pear.

கக்கிசம், அகஸ்தியர் செய்த இலக்கக் கக்கிசம் என்னும் மாந்திரீக நூல், a treatise on numerical magic compiled by Agastyar in Tamil ; 2. எருமை, buffalo ; 3. தான்றி, devils' abode — Terminalia bellerica ; 4. அக்குள், arm-pit (as being the most unexposed part of the human body) ; 5. அக்குள் கட்டி, painful boil in the arm-pit ; 6. கிரகபதம், (In Astronomy) Orbit.

கக்கிஷ தரம், புஜம், the part of the body where the upper arm is connected with the shoulder ; 2. தோட் பொருத்து, shoulder-joint.

கக்கிஷ லோமன், அக்குள் மயிர், hair in the arm-pit.

கக்கிஷ வித்தை, இரசத்தைக் கட்டும் வித்தை, the secret art of consolidating mercury ; 2. ஓர் மாந்திரீக வித்தை, a magic art. See கக்கிசக் கிரியை.

கக் கிருமல், உண்ட வுணவைக் கக்கச் செய்யுமோர் வகை யிருமல். இது சாதாரணமாய்க் குழந்தைகளைத் தாக்கும், a disease followed by a series of quick, short, dry coughs, continuing until the food takez is vomitted or otherwise ejected forcibly. It most frequently attacks children and is very contagious — Whoopin

cough; 2. *கா யிருமல்*, a deep resonant cough caused by the compression of the bronchi. It resembles the cough of a dog and so it is called the *dog-cough*. — Compression cough; 2. *கக்குவான் அல்லது கக்கு வாய். இது வோர் தொத்து நோய். இது சாதாரணமாய் நுண்ணுயிர்கள் விஷக் காற்று மூலியமாய்ச் சென்று சுவாசக் குழலில் இருக்கும் சிலேட்டும சவ்வை அது சரித்து, இருமலைப் பிறப்பிப்ப துடன், சில சமயங்களில் வேறு நோய்களையும் அவைகள் உண்டாக்கும். இந் நோய், பெரும்பாலும், குழந்தைகள் பால் பற்கள் முளைத்து வளர்ந்து பின்னர் மற்றப் பற்களும் முளைக்குங் காலத்தில் உண்டாவ தியல்பு. குழந்தைப் பருவத்தில் வாராம லிருந்தால் பிறகு வாலி பப் பருவததில் ஒரு சமயம் சிலருக்கு வந்தா லும் வரலாம். குழந்தைகளைப் போ லவ்வளவு துன்ப மிராது. இது சில சமயங்களில் எளிதில் குணப்படுவதா யிருந்தாலும் உயிர்ச் சேதத்தை விளைவிக்கும் நோய். ஒரு தடவை வந்தால் மறுபடியும் வருவ தரிது. இந் நோய் 7—10 தினம் நீடித்துப் பிறகு குணப் பட 5—7 வாரம் செல்லும். இதில் 3 வித நிலைமைகள் உண்டு—1, கபததோடு சல தோஷம், 2, பிறகு இருமல், வாந்தி, 3, கடைசியாக இருமல் குறைந்து வருதல். இந் நோயானது மூச்சுத் திணரல், வலிப்பு, முக வீக்கம், சளி ஒழுக்கு, உணவு கக்கல் முதலிய துன்பங்களை யுண்டாக்கும்.* Whooping cough or chin-cough. It is contagious and the disease is brought about by microbes transmitted through the contaminated air to the mucous membranes of the trachea. It commences as a common cough and then developes into fits, accompanied by the 'whoop'. At times, whooping cough may excite other maladies. It generally attacks young children whose most susceptible period lies between the 1st and the 2nd dentitions. It also affects sometimes adults not attacked by it in their childhood, but it will not be severe.

Although it may be cured in the ordinary course of time, it sometimes proves severe and fatal. It usually attacks one, only once in his or her life time.

The incubation period extends from 7 to 10 days to 5—7 weeks. There are three stages in this namely, the first which is the catarrhal stage, the second which is the paroxysmal stage, and the third, which is the period of recovery.

It is characterised by hard-breathing, paroxysm, swollen face, mucous discharge, vomiting, etc.

கக்கு, *கக்கல்*, to eject the contents of the stomach forcibly; 2. *கக்குவான்*, whooping cough; 3. *கற்கண்டு*, sugar-candy.

கக்குதல், *கக்கல்*, which see; 2. *விஷங் கக்கல்*, ejecting poison as do snakes; 3. *இருமுதல்*, spasmodic coughing; 4. *வாந்தி செய்தல்*, vomiting; 5. *கொப்பளித்தல்*, gargling, see *கக்கல்*; 6. *சாரமா யிறங்குதல்*, to pass through as essence; 7. *கசிதல்*, to ooze out as oil does through the pores of the skin.

கக்குரு, *மஞ்சள் நாயுருவி*, a yellow species of the plant Indian burr — Achyranthes aspera.

கக்குவ ரோகம், see *கக்குவான்*.

கக்கு வாய், see *கக் கிருமல்*.

கக்குவான், குக்கல் நோய். *இது குழந்தைகளுக்குப் பால் அல்லது சல தோஷததினால் வாயு அதிகரிதது மார்பில் தங்கி நிற்கும் சளி இளகுந் தருணததில், இரு விலாப் பக்கங்களு மிழுக்க இரும லுண்டாக்கி அத் துடன் தும்மல், மூக்கில் நீர் வடிதல், காய்ச்சல் முதலிய குணங்களைக் காட்டுவ துடன், குடித்த பால் அல்லது உண்ட வுணவைக் கக்குத லும், சிற் சில சமயம் கேவுதலுடன் மூச்சுத் திணறி, விழி பிதுங்கி, இரத்தமுங் கக்கித துன் புறுத்தவும் கூடியது. இது 90 நாள் வரைக்குங் கூட நீடித் திருக்கும். இதுவொரு தொத்து நோய்*, dog-cough. It is an infectious disease in children due to the aggravated condition of Vayu in the system arising from the defects in the milk or water taken in. It is marked by forcible ejection of milk or other food consumed, catarrh of the respiratory tract, and a peculiar paroxysm of cough ending in a prolonged crowing.

It is also attended with slight fever, sneezing, running at the nose, and in severe cases hemorrhage. It lasts even for a period of 90 days.

NOTE.—This disease sometimes attacks adults also and usually only once in his or

her life. It commences as a common cough, but after some days, it comes on in 'fits,' after which the breath is drawn in with a long effort. It is apt to be complicated with pneumonia, pulmonary collapse, convulsions, hemorrhages of the eye, ear or the brain, and severe cases are sometimes followed by chronic bronchitis, tuberculosis or nephritis.

See also *கக் இருமல்.*

கக்கூசு, *மல சலங் கழிக்கு மிடம்,* (collq) a place set apart or appropriated for answering the calls of nature.

கக்கூசு படை, *மர்ம ஸ்தானத்தி லேற்படும் ஓர் வகைப் படை நோய்,* (collq) a ringworm affecting the genital region.

கக்கூசு பற்று, See *கக்கூஸ் படை.*

கக் கோரம், *மா மரம்,* mango tree—Mangifera indica.

கக்கோலம், *ஓர் வாசனைக் காய் காய்க்கும் மரம், இக் காயினின்று ஓர் வித வாசனைத் திரவியம் தயாரிக்கப்படும்,* a species of tree bearing a berry, the inner part of which is waxy and aromatic. A perfume is prepared from the berries of this tree.

கங் கடிகம், *குருந் தொட்டி,* common balah—Sida rhombifolia.

கங்கடிக் காய், *சிறு தும்மட்டிக் காய்,* fowl's cucumber—Cucumis trigonus.

கங்கணம், *ஓர் நீர் வாழ்ப் பறவை,* a kind of water-fowl ; 2. *மாந்திரீகத்தி லுபயோகிக்கும் ஓர் கை வளை,* a bangle used in magic.

கங்க பத்திரம், *உமி,* husk ; 2. *பருந்திறகு,* the wing of a hawk ; hawk's feather.

கங்கம், *கழுகு,* an eagle ; 2. *கோளக பாஷாணம்,* a kind of native arsenic; a mineral poison ; 3. *பருந்து,* a species of hawk ; kite ; 4. *பெரு மரம்,* tree of heaven — Ailanthus malabaricus ; 5. *தீப் பொறி,* the spark of fire ; 6. *மரணம்,* death.

கங்கரம், *மோர்,* butter-milk.

கங்கர், *பக்குவப் படாத சுக்கான் கல்,* a crude lime-stone ; 2. *பருக்கைக் கல்,* gravel-stone.

கங்கலி, *பருந்து,* kite ; falcon.

கங்கன், *சிர்பந்த பாஷாணம்,* a kind of native arsenic ; a mineral poison.

கங்கா சல குப்பி, *கங்கை நீரை அடைத்துள்ள வோர் குப்பி. இது சன்னியாசிகளிடம் சாதாரணமாய் உண்டு;* a bottle containing the water of the Ganges, preserved generally by religious mendicants ; 2. *காசிக் குப்பி,* a bottle manufactured in Benares.

கங்கா நீலன், *நீலவேணிக் குதிரை,* a blue horse.

கங்காள மூலி, *சிவ கரந்தை,* Ceylon toolsy—Sphoeranthus zëylanicus.

கங்காளம், *தசை கழிந்த வுடலின் முழு வெலும்புக் கூடு,* the solid frame-work consisting of the bones of an animal separated from the flesh and fixed in its natural position ; 2. *எலும்புக் கோர்வை,* a net-work or a garland of the bones of the body ; 3. *உண் கலம்,* eating-dish or plate.

கங்காள ஞடுங் கூத்தன், see *கங்காளன்.*

கங்காளன், *துருசு,* blue vitriol ; copper sulphate.

கங்கானதம், *பருத்தி,* cotton-plant — Gossypium herbaceum.

கங்கிஷம், *சிறு வழுதலை, அல்லது கண்டங் கத்திரி,* the yellow-berried night shade—Solanum xanthocarpum.

கங்கு, *கருந் தினை,* black Italian millet—Panicum italicum ; 2. *கழுகு,* an eagle ; 3. *பருந்து,* kite ; 4. *கரும்பு,* sugar cane—Saccharum officinarum ; 5. *சாமை,* a kind of millet—Panicum ; 6. *பனை மட்டையின் அடிப் புறம்,* the base of a palmyra pedicle or foot-stalk.

கங்குட்டம், *ஓர்விதக் காவி, இது 64 கடைச் சரக்குகளி லொன்று,* a kind of Indian red earth. It forms one of the 64 bazaar drugs described in Tamil Medicine. It is supposed to be a medicinal earth described as found in two colours—one a light and the other a dark yellow ; 2. *மிருதாரு சிங்கு,* a kind of poison from lead—Plumbi Oxidum.

கங்குணம், *நான் முகப் புல்,* a kind of square grass—Saccharum spontaneum.

கங்குணி, see *கங்குனி.*

கங்கு பலா, *கானற் பலா,* wild jack, jungle jack—Artocarpus hirsuta.

கங்கு பனை, அடிக்குப் பனை, a species of palm tree; 2. அடியிற் கருக்குச் சூழ்ந்த பனை, rough palmyra tree.

கங்கு மட்டை, பனை மரத்தின் அடிக் கருக்கு மட்டை, the sharp-edged foot-stalk encircling the palmyra tree.

கங்கு ரோகம், உடம்பு முழுவதிலும் சாம்பல் நிறமான கொப்புளங்களை யுண்டாக்கு மோர் வகைச் சரும ரோகம், a skin disease developing grey-coloured ulcers or boils resembling grains of millet, on the surface of the body.

கங்குர், தினை, millet—Panicum.

கங்குல், இரவு, night; 2. இருள், darkness.

கங்குல் விழிப்பு, கோட்டான், the small screech-owl; 2. கூகை, the large hooting owl.

கங்கு வடலி, அடியில் கருக் குள்ள மட்டைகள் சூழ்ந்த இளம் பனை மரம், a young palmyra tree with sharp-edged foot-stalk surrounding the trunk.

கங்குளா, ஓர்வகை யுனானிக் கடைச் சரக்கு, a bazaar drug used by Unani doctors; 2. தங்கத்தை வெண் ணெயாகச் செய்யு மோர் சரக்கு, a drug capable of converting or reducing gold to a colloidal or semi-solid state.

கங்குளி, சிறு வாலுளுவை யரிசி, the seed of the spindle tree—Celastrus paniculata.

கங்குற் கிறை, சந்திர காந்தி, moon-flower—Ipomaea Bonanax; 2. சந்திரன், the moon.

கங்குனி, வாலுளுவை மரம், intellect tree—Celastrus paniculata.

கங்குனி பத்திரம், ஓர் பூடு, a plant—Panicum verticillatum.

கங்கு னிறம், கருப்பு நிறம், dark colour.

கங்கெளி, see கங்கேலி.

கங்கெரு, ஓர்விதக் காக்கை, a species of crow.

கங்கேலி, அசோக மரம், Buddha tree; Asoka tree—Jonesia asoka.

கங்கை, நவச்சாரம், sal ammoniac—Hydrochlorate of ammonia; 2. மருது, murdah tree—Terminalia alata; 3 நிலக் கடம்பு, a plant—Justicia acaulis.

கங்கைக் குணம், நவச் சாரம், a metallic cement, see கங்கை; 2. பற்று, a metallic cement; solder.

கங்கைக் குளன், see கங்கைக் குளம்.

கங்கை சாற்றி, மணித் தக்காளி, black berried solanum—Solanum nigrum.

கங்கை நிரும்பம், கோதுமை, wheat.

கங்கைப் பாலிலை, சதுரக் கள்ளி, square-spurge—Euphorbia antiquorum.

கங்கை மீட்டான், தண்ணீர் விட்டான் கிழங்கு, water-root—Asparagus racemosus alias A. sarmentosus.

கங்கையோன், துருசு, blue vitriol, see கங்காளன்.

கங்கோளி, அசோகு, which see; 2. (கங்கு + ஒளி) இருட்டில் வெளிச்சமா யிருக்கும் சோதி விருட்சம், a tree shining in darkness; luminous tree.

NOTE—Luminous plants have been a source of strange legends in India and Afghanistan. The mountains near Simla are illuminated by some magical herb which is believed to be a species of *Dictamnus*, which is available at the rock garden at Kew.

கங்கோடியம், குதிரை, a horse.

கங்கோலம், வால் மிளகு, tail pepper—Piper cubeba.

கச கசத்தல், வியர்வை விடல், to perspire.

கச கசப்பு, வியர்வையினு லுண்டாகும் பிசின் தன்மை, viscosity or stickiness caused in perspiration.

கச கச வெனல், வியர்வையால் உடம்பு பிசு பிசுப்பா யிருத்தல், clammy condition of the body from perspiration.

கச கசா, கச கசாச் செடியின் விதை. இது சிறியதாயும் வெண்மையாயு மிருக்கும். இதி னின்று பால் வரும். எண்ணெயும் எடுக்க லாம். இது மருந்திற் குபயோகப் படும். சித வேதிக்கு நமது நாட்டு வைத்தியர்க ளுபயோ கப் படுத்துவ துண்டு. பிட்டாய் செய்வ தற்கும் மசாலை வகைக்கும் இது மெத்தவு முபயோகப் படும். இருமல், காசம், முதலிய நோய்களுக் குதவும். இது அழற்சியைத் தணிப்பது மல்லாமல் உடம்பையும் போஷிக் கும். ஆகவே சில இடங்களில் இதை உணவா கக் கொள்வது முண்டு, seed of the white poppy plant—Papaver somniferum. The seeds are very small and white; all parts of the plant abound in milky juice. The seeds also yield a bland oil used in culinary preparations and they are also much used in medicine. They are also

much esteemed in the kitchen as a condiment and also in sweet-meat bazaars. Vaidyans use them in cases of diarrhoea, cough, asthma etc.

They are demulcent and nutritive and in some parts they are used as food.

கச கசா அம்பர், ஆசாம், ஜப்பான், சீனம் இவ்விடங்களி னின்று இறக்குமதி யாகும் ஓர் வகை அம்பர். இது கச கசாவைப் போல் உருவ முள்ளது, கருஞ் சாயல் நிறமு முள்ளது. இது ஓர் மரப் பிசின், a species of amber imported from Assam, Japan and China. It is small like the poppy-seed and is a little dark in colour. It is the resin of a tree.

கச கசாக் காய், போஸ்தக் காய், poppy-head.

கச கசாச் செடி, கச கசா விளையுஞ் செடி. இதன் பூக்களையும், விதைகளையுங் கருதித்தான் இது பயிராக்கப் படும். இது இந்தியாவில் எங்கும் விளைந்தாலும் மத்திய மாகாணம், வங்காளம் இவ் விடங்களில் மிகுதியா யுண்டு. இது சிவப்பு, வெண்மை யென இருவகைப் படும். சிவப்பு மற்றதை விடச் சிறியதா யிருக்கும். இலைகளைக் கொண்டும், பூத்தண்டைகளாலும் இவைகளின் வித்தியாசங்களை யூகிக்கலாம். சிகப்பு மயக்கந் தராது. வெள்ளை யினமோ 2-3 அடி உயரம் வளரும். அடித் தண்டு, வழுவழுப்பாயும், இலைகள் அரும் புள்ளதாயும், விதைகள் சிறியதாயும், வெண்மையாயும், பூக்கள் வெளுப் புடன் கூடிய சில நிறங்கள் வாய்ந்து மிருக்கும். இதன் காயைப் போஸ்தக் காய் எனக் கூறுவர். இச் செடியிலிருந்து வருஷந்தோறும் உண்டாகுங் காயை உடைத்து வித்தின் சவ்வு எடுக்கப்படும். Poppy plant—Paver somniferum. It is a herbaceous plant cultivated chiefly for its flowers and seeds. Although it is very extensively grown in India, it is very common in Behar, United provinces, Nepal, Assam and Burma. The two varieties are.—

1. Red poppy or the French poppy—Papaver rhoeas, found grown in corn-fields and so is known as corn-poppy.

2. White poppy or Garden poppy—Papaver somniferum alias P. album. It is known as opium poppy.

The red is smaller than the other and is distinguished from it by divided leaves and hairy flower-stalks; no active or narcotic principle is in this species.

The white variety grows from 2 to 3 ft; stem smooth, leaves toothed, capsules glabrous, seeds numerous and small and flowers generally white, but found mixed of rose or violet ones. The fruit is called *Posthakai*. The capsules are taken every year from the fruit and the mature capsules are called the-poppy-heads.

கச கசாத் தோல், போஸ்தக் காய்த் தோல். இது மிக்க வுபயோகமான சரக்கு, கச கசாச் செடியின் காய்க்குத் தான் போஸ்தக்கா யென்று பெயர். பழுக்காத தோலி லின்று எடுத்த பின்னர் உறைந்த பாலுக்குத தான் அபினி என்று பெயர். இதற்குத் துவர்ப்புச் சுவையும், மயக்கத்தைத் தருங் குணமு முண்டு. தாதுவைக் குறைக்கும். காய்ந்த தோலிலிருந்து கஷாயம், சர்பத், முதலியன தயாரிக்கலாம்.

பா லெடுத்த தோலை ஒத்தடங் கொடுத்தலாலும், ரணங்கள், கொப்புளங்கள் முதலியவைகளுக்குக் கட்டு மருந்தாக உபயோகப் படுத்துவதனாலும் வலி குறையும்; இதனின்று இறக்கும் ஷர்பத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்க இருமலைத் தணிக்கும்; the capsule of poppy-head. It is a very useful drug. The unripe or half-ripe capaules yield the juice which concretes into opium. It is astringent and narcotic and destroys or diminishes the sexual power. From the dried capsules, decoction and syrup are made and extract of poppies is also prepared from them. Bruised poppy-heads are used for sedative fomentation and also as poultice to inflamed or ulcerated surfaces of the body, as they have anodyne properties. The syrup prepared from them allays cough in children.

கச கசா நெய், கச கசாவி னின்று எடுக்கும் நெய், இது உணவு வகையி லுபயோகப் படும்; விளக்கெரிக்கவு முதவும். நித்திரை யூட்டுவதற்கும் உபயோகப் படும். சித்திர மெழுதுவோருக்கு மிகச் சிறந்தது, the oil extracted from the poppy seeds. It is used in culinary preparations and also for burning lamps. It induces sleep and is much prized by artists.

கச கசாப் பிசின், போஸ்தக் காய்த் தோலி லின்று வரும் பால், இது உறைந்து தான் அபினி யாகும், the inspissated juice from the unripe capsules of poppy heads.

This milky juice is called opium when condensed—Mecomium.

கசக, சோபிதம், இராம்பு, clove—Eugenia caryophyllata.

கசக பாலி, இனி முருக்கு, Red bean tree—Erythrina indica.

கசகம், வெள்ளரி, cucumber — Cucumis Sativus; 2. கருங் கொள்; black horse-gram; 3. ஓர் காளான், a species of mushroom.

கச கரணி, வெருகங் கிழங்கி லிருந்து இறக்கும் ஓர் தைலம், an oil extracted from the root of the plant — Arum macrorizon; 2. வெருகஞ் செடி. See கச கன்னி.

கச கரிகம், see கக்கரி.

கச கருப்பம், காலங் கடந்த அதாவது நீடித்த கருப்பம், a prolonged period of gestation.

கச கன்னம், செவி யாட்டும் வித்தை. அட்டயோகிகளில் இலரால் இது செய்யப் படும், the power or art of waving the ears in imitation of an elephant.

It is said that this is easily done by some of the Hatha Yogis who have brought the involuntary muscles of the body under their control.

கச கன்னி, வெருகஞ் செடி, a plant with large leaves—Arum macrorizon.

கசக்கல், கசக்குதல், rubbing, or bruising as we do the leaves for getting their juice; 2. வருத்துதல், tormenting.

கசக்கார், தே, மா sweet mango—Mangifera indica, see கக்கார்.

கசக்கிப் பிழிதல், பச் சிலையை இரண்டு உள்ளங் கைகளுக்கு மிடையே வைத்துத் தலைத்து நெருக்கிச் சாறு எடுத்தல், wringing or squeezing out as is being done to get juice from herbs, placing them between the palms.

கசக் கின்ற கொடிச்சி, செக் கிராய், an unknown plant said to possess great virtues—Mollugo genus.

கசக் குஞ்சிதம், வெள் மொச்சை, white bean —Dolichos albus.

கசக்குதல், see கசக்கல்; 2. பிழிதல், squeezing.

கசக்குந் தவளை, see கசப்புத் தவளை.

கசக்குப் புகையிலை, சுருட்டுக்காகப் பதமிட்டு உபயோகிக்கும் புகை யிலை, a prepared tobacco used in smoking.

கசக்கு முப்பு, இனி லவணம், a species of salt with a bad smell. It is so called from its bitterness to taste.

கசங்கம், பீநாறி, fetid tree — Sterculia fotida.

கசங்கு, காட்டு ஈந்து, wild date-palm—Phoenix sylvestris.

கசங்கு அன்னி, தொட்டாற் சிணுங்கி, a sensitive plant—Mimosa sensitiva. It is so called from its leaves mimicking sensibility.

கசங்கு தட்டு, ஈந்தின் ஈர்க்கு, palm leaf-stalk.

கசங்குதல், வேலையினால் இளைத்தல், to grow thin or emaciated or to get reduced by pressure of work; 2 வாடல், to be withered; to lose freshness by handling or smelling.

கசங்கேதன், புற வெட்டி, a herb used in skin affections. It is opposed to உள் வெட்டி, which see.

கச சருமம், அழுக்குத் தோல், the skin covered with filth, said of the skin of the body; 2. நாற்ற வுடம்பு, stinking body, as said of the body of one with perspiration; 3. அழுக்குத் தேமல் which see.

கச டறுக்கு மண், உழ மண், dhoby's earth which removes dirt from clothes.

கச டறுத்தல், அழுக்குப் போக்கல், removing filth; 2. சுத்தி செய்தல் cleaning as we do metal from rust; 3. மனத்தின் மாசு போக்கல், to get rid of the impurities of the mind.

கசடு, அடி வண்டல், sediment in liquids; 2. வயிற்றி னுள்ள மலம், morbid matter in the stomach or the intestines; 3. களிம்பு, iron rust or verdigris; 4. தழும்பு a scar; 5. கபம், phlegm; 6. குற்றம், defect, 7. யானை, elephant; 8. மயிர், hair; 9. சய ரோகம், consumption.

கசட்டம் புல், கக்குசரிப் புல், bitter grass—Andropogon martini.

கசட்டை, இளமை, youth-hood; 2. கசப்பு, bitterness; 3. துவர்ப்பு, astringency.

கசட்டைத் தயிர், ஆடை யெடுத்த தயிர், curd from which the cream is removed.

கசட்டைப் பிஞ்சு, கசப்புப் பிஞ்சு அல்லது இளங் காய், bitter and tender fruit; 2. துவர்ப்புப் பிஞ்சு, tender astringent fruit; 3. இளம் பிஞ்சு, tender and young fruit; 4. பழுக்காத காய், an unripe fruit.

கசத்தல், கைத்தல், tasting bitter.

கச நாரலிங்கம், கொட்டைப் பாசி, seed-moss.

கச நோய், சய ரோய், consumption.

கசந்த கொடிச்சி, செக்கிராய், see கசக்கின்ற கொடிச்சி.

கசந்தலை, see கயந்தலை.

கச பட்சிலை, யானை வணங்கி அதாவது தேட் கொடுக்கி, scorpion plant—Helotropium indicum.

கசபம், புல், grass—Panicum.

கச புடம், ஆயிரம் எரு முட்டையை வைத்தெரிக்கும் புடம், a fire prepared with one thousand cakes of dried cowdung for calcining medicines; 2. ஆயுர் வேதப் படி, ஒன்றரை முழ ஆழமும், ஒன்றரை முழ சதுரமுமான குழியின் நடுவில் மருந்திட்டுக் கீழும் மேலுமாகக் காட்டு முட்டையை அடுக்கிப் போடும் புடம். இது வட மொழியில் மாயிஷ புடமெனப் படும்.—According to Ayurveda, it is a fire ignited in a pit $1\frac{1}{2} \times 1\frac{1}{2} \times 1\frac{1}{2}$ cubits filled with cow-dung cakes having the medicine in the centre of it. It is known as 'Mayisham' in Sanskrit;

3. 1 கஜ நீளம், 3 கஜ ஆழம், ¾ கஜ அகல முள்ள ஒரு குழி தோண்டி அதில் முக்காற் பாகம் வரையில் விராட்டிகளை அடுக்கி அதன் மத்தியில் மருந்துப் பாண்டத்தை யிட்டு அதற்கு மேல் பள்ளத்தின் வா யளவிற்கு விராட்டிகளை யடுக்கி மூடிப் போடும் புடம், a fire prescribed for the calcination of medicines in a pit 3 yards deep, 1 yard long and ¾ yard broad, in which cow-dung cakes are filled in up to the level of the ground with the medicine in the centre;

4. 100 விராட்டியைக் கொண்டு எரிக்கும் புடம், the process of calcining medicines by burning with 100 cakes of cow-dung.

NOTE.—சிலர் இரண்டு வாராகம் கொண்டது ஒரு கசபுடமென்றும், வேறு சிலர் 500 பலம் இடையுள்ள விராட்டிகளைக் கொண்டு போடும் புடமென்றும் சொல்வர், மற்றுஞ் சிலர், இரண்டு முழ ஆழமும் விஸ்தாரமுமுள்ள குழியிற் போடும் புடமென்றும் சொல்வர்.

It is defined in some books that '*Gaja-putam*' is equal to two *Varaha putams* (a fire in which cow-dung cakes are piled up to the height of a pig); while in others it is defined as one prepared with cow-dung cakes weighing 500 palams.

NOTE 2—So, from the above variations, it can only be concluded that the best way of determining this is only by experience and knowledge of medicine and according to the nature and potency of the drugs.

NOTE 3—Vaidyans practising especially in Tamil Siddha medicines are expected to be very careful and cautious in calcining medicines which cannot stand the test of fire such as sulphur, mercury, orpiment, vermilion etc., and they should also be fully aware of the prescribed method.

கசப் பகத்தி, பேயத்தி, bitter fig or wild fig —Ficus hispida.

கசப்பாகிதம், பேய்க் கடலை, wild gram of Dolichos genus.

கசப்பி, மயிர்ச் சிகைப் பூடு, peacock fan or peacock's crest—Actiniopteris dichotoma; 2. வேம்பு, margosa — Azadirachta indica; 3. பேய்ப் பீர்க்கு, bitter gourd — Luffa amara; 4. சிறு வாலுளுவை, the small variety of the spindle tree—Celastrus paniculata; 5. வல்லாரை, Indian penny wort—Hydrocotyle asiatiaca; 6. பேய்த் தும்பை, wild tumbay plant—Phlomis zeylanica; 7. கருங்காலி, ebony tree—Acacia sundra; 8. பொன் னூமத்தை, dhatura plant bearing yellow flowers. —Datura fastuosa; 9. காசித் தும்பை, white dead nettle flower or balsam flower —Impatiens genus.

NOTE.—The term generally refers to any plant or drug which has a bitter taste but the above mentioned plants are specially called by this name on account of their extreme bitterness.

கசப்பு, கைப்பு, bitterness — Amara; 2. மயிர்ச் சிகைப் பூடு, pea-cock's crest — Adianthum caudatum, see also கசப்பி; 3. வல்லாரை, Indian penny-wort — Hydrocotyle asiatica; 4. வேம்பு, neem tree—Azadirachta indica. See கசப்பி.

கசப்புக் கச கசா, கருப்புக் கச கசா, black poppy.

கசப்புக் காய், பேய்ச் சுரை, bitter bottle-gourd.

கசப்புக் கிச்சிலி, *தஞ்சாவூர் நாரத்தை*, Tanjore bitter orange — Citrus aurantium (bigaradia).

கசப்புக் கும்மட்டி, *பேய்க் கும்மட்டி*, bitter apple—Citrullus colocynthis.

கசப்புக் கெண்டை, *கருங்கெண்டை, பர்மாவில் இதனின்று எண்ணெய் எடுக்கப் படும்*, bitter carp—Barbus chola alias B. liacanthus. Oil is obtained from it in Burmah.

கசப்புக் கையான், *கசப்புக் கரிசலை*, a bitter variety of Eclipse plant — Eclipta prostata.

கசப்புக் கொடிச்சி, *செந்நிராய்*, see *கசக்கின்ற கொடிச்சி*.

கசப்புக் கொழுமிச்சை, *காட்டுக் கொழுமிச்சை*, bitter citron; bitter orange — Citrus aurantium (bigaradia).

கசப்புக் கொள், *பேய்க் கொள்*, jungle horse-gram—Atylosia scarabaeoides; 2. *காட்டுக் கொள்* bitter horse-gram — Cassia absus.

கசப்புச் சீரிகம், *கசப்பு வெள்ளரி*, bitter cucumber.

கசப்புச் சுரிஞ்சான், *ஓர் யுனானிக் கசப்பு மூலிகை. இது பேதியை யுண்டாக்கு மோர் வேர்*, a bitter Unani drug — Hermodactylus. This is a Persian drug. It is a bitter variety of the root of the plant—Colchicum variegatum. It is a cathartic. It is opposed to *தித்திப்புச் சுரிஞ்சான்*, which see.

கசப்புச் சுரை, see *கசப்புக் காய்*.

கசப்புத் திரு, *சிவதை வேர்*, the root of Indian Jalap—Ipomaea turpethum.

கசப்புத் துவரை, *பேய்த் துவரை*, bitter dholl, wild dholl—Leersia hexandra.

NOTE.—It should not be confounded with *காட்டுத் துவரை*, Jungle dholl—Atylosia major, which appears to be a distinct variety.

கசப்புத் தோதிகம், *கசப் பெலுமிச்சை*, bitter lime.

கசப்பு நீர், *கறி யுப்பு எடுத்த பின் னின்ற கசப்பு நீர்*, brine remaining after salt has been got out of salt-water in salt-pan—Bittern.

கசப்பு பசலை, *கசக்கும் ஓர் விதப் பசலை. இதைத் தரைப் பசலை யெனக் கூறுவது முண்டு. இது மலைப் பிரதேசங்களில் அபூர்வமாய்க் கிடைக்கு மோர் மூலிகை. இதன் விவரத்திற்குப் போகர் கருக்கடை நிகண்டைப் பார்க்கவும். இதனால் சூதம் மணியாகும், சாதிலிங்கம் பற்பமாகும், நாகம் செந்தூரமாகும். பொன்னுக்கு மாற் றேறும்*, a species of bitter spinach of the spinacea genus. It is a very rare plant said to be found on the tops of mountains, and it is said to possess extraordinary virtues. For details see Bogar Karukkadai Nigandu (vocabulary of plants). The plant is said to be capable of consolidating mercury, of calcining vermilion and converting zinc into oxide or red oxide. It is said to increase the potency and purity of gold.

கசப்புப் பாசிதம், *வேப்ப மரம்*, margosa tree —Melia azadirachta.

கசப்புப் பாலை, *பேய்ப் பாலை*, bitter paulay; Indian ipecacuanha — Tylophora asthmatica.

கசப்புப் பீர்க்கு, *பேய்ப் பீர்க்கு*, wild-luffa — Cucumis acutangulis.

கசப்புப் பீ வேல், *கசப்பான பீ வேல மரம்*, a bitter variety of fetid mimosa.—Acacia farnesiana.

கசப்புப் புகையிலை, *கசப்புப் புகை யிலை*, bitter tobacco, wild tobacco—Lobelia nicotianaefolia.

NOTE.—There is also a species of Inflata (Luggera aurita), which is sometimes called wild tobacco.

கசப்புப் போளம், *கரிய போளம்*, black myrrh, black bole—Balsmodendron myrrha.

கசப்பு மாஞ்சகி, *பேய்க் கொம்மட்டி*, see *கசப் புக் கும்மிட்டி*.

கசப்பு முருங்கை, *புனல் முருங்கை*, bitter moringa—Indigofera arcuata; 2. *காட்டு முருங்கை*, wild Indian horse-radish—Moringa concanensis.

கசப்பு மூலிகை, *கசப்புக் கையான்*, which see; 2. *கச்சாங் தகரை*, which see; 3. *கசப் புள்ள எல்லா மூலிகைகள்*, name referring to all plants which are generally bitter.

கசப்பு வாதுமை, *கசப்பு வாதுமை மரம். இது காபூல், பாரசிகம், இமாலயம் இவ்விடங்களிற் பயிராகும், மற்ற மரங்களைப் பார்க்கிலும் இதி*

யது. இது எல்லா விதத்திலும் தித்திப்பு வாதுமைக்கு ஒத்ததா யிருந்தாலும், இதன் கொட்டையின் பருப்பு மாத்திரம் கசக்கும். இப் பருப்பைத் தண்ணீரில் இழைக்க ஓர்வித வாசனை யுண்டாகும். இப் பருப்பில் நர்க்கிப சம்பந்தமான சத்து இருப்பதா லிது விஷத் தன்மையது. ஆகவே இது எண்ணெ யெடுப் பதற்குத்தான் உதவும், இது வைத்தியத்தி லுபயோகப் படும். Bitter almond tree—Amygdalus communis (amara). It is cultivated in Kabul, Persia, certain places on the Himalayas, the Punjab etc. It is smaller than the sweet almond tree. Although the appearance etc. correspond in every way to the other variety (sweet) they can easily be distinguished by the taste of the kernel.

Bitter almonds, when rubbed with a little water emit a characteristic odour. They contain a nitrogenous substance called *amygdaline* besides a neutral principle called *emulsion* and so they are poisonous. They are officinal in pharmacopoeia only for the sake of the expressed oil.

NOTF.—It is opposed to sweet almond—Amygdalus communis dulcis, which is most commonly in use.

The other kinds are :—

1. Country almond—Terminalia catappa.
2. Wild almond—Hynocarpus venenata.
3. African almond—Brabejum stellatum.
4. Java almond—Cannarium commune.

கசப்பு வாதுமைக் கொட்டை, காட்டு வாது மைக் கொட்டை, bitter almond—Amygdala amara.

கசப்பு வாதுமை யெண்ணெய், கசப்பு வாது மைப் பருப்பி னின்று எடுக்கு மெண்ணெய். இது மிக்க விஷத் தன்மையது, சிறிது மஞ் சள் நிறமா யிருக்கும். இது மருந்திற் குபயோ கப்படும், oil of bitter almonds—Benzoic aldehyd alias Oleum amygdala amara. It is slightly yellow in colour and is extremely poisonous. It is useful in medicine.

NOTE.—The essential oil of bitter almonds is much used in flavouring custards etc., but great caution is necessary in its use on account of its poisonous nature.

கசப்பு வாருதி, வேம்பு, margosa tree—Azadirachta Indica.

கசப்பு வெட்பா லரிசி, கசப்பு வெட் பாலை, bitter oleander—Holarrhena antidysenterica.

கசப்பு வெட் பாலை, குளப் பாலை அல்லது குடச பாலை. இது காட்டில் விளையும் செடி, பூக்கள் வெண்மையா யிருக்கும், பட்டை சாம்பல் நிறம், மிருதுவா யிருக்கும், கிளைகளின் பட் டையின் மேற் பக்கம் கபில நிறம், உட் பக்கம் இலவங்கப் பட்டை நிறம், வேர்ப் பட்டை சிறிது இரும்புத் துரு நிறம் போன்றது. இப் பட்டை துவர்ப் பாயும் கசப் பாயு மிருக்கும் சீத பேதிக்கு உபயோகப் படும். அன்றியும் இதன் கஷாயம் இருமல், சுரம், அதிசாரம், மூத்திர நோய், கரப்பான் முதலிய நோய் களுக்குக் கொடுக்கலாம். இதன் சாம்பல் மிகவும் காரம்.

Tellichery bark or Conessi bark—Holarrhena antidysenterica. It is a large jungle shrub; flowers white, follicles a foot long. The tender bark is grey and nearly smooth on the branches; it is externally of a brown colour and internally of the cinnamon colour. The root-bark is of a rusty brown colour. The bark is astringent and bitter and it is a remedy in dysentery. A decoction of the root is also useful in cases of cough, fever, diarrhoea, urinary complaints, cutaneous diseases etc. The seeds are astringent and anthelmintic. The ashes are used as powerful mordants.

NOTE.—The bark is substituted for British chincona bark and the ipecacuanha.

கசப்பு வெப் பிரிகம், கருப்பு கரிசலாங் கண்ணி, black eclipse plant—Eclipta nigra.

கசப்பு வெள்ளரி, காட்டு வெள்ளரி, bitter cucumber; wild cucumber.

கசப்பு வேர், கேப்பு ரோகிணிச் செடியின் வேர். இது மிகக் கசப்பு, பலத்தைத் தரும். சுரத்தை நிறுத்தும், bitter root—Picrorhiza kurrosa root. It is intensely bitter and antiperiodic.

NOTE—It is a substitute for gentian and columba roots or chincona bark.

கசப் பூலிகம், மிதி பாகல், ground creeper.—Mimordican humilis.

கசப் பெலுமிச்சை, காட் டெலுமிச்சை, jungle lime—Atalantia monophylla.

கசப் பேறியப் பட்டை, தென் அமெரிக்காவில் விளையும் 'கெர்' மரத்தின் கசப்புப் பட்டை, இதைச் சீத பேதிக்கும், பித்த சுரம், முறை சுரம், இவைகளுக்கும் கொடுக்கப் படும், the bark of a tree of South America. —, Galipea cusparia. It is a bitter tonic and stimulant prescribed for dysentery. It is also used in bilious and intermittent fever. See also கஸ்பாரியா பட்டை.

கசப் பைந்து, ஐந்து கசப்புப் பூடுகள். அவையாவன :—

1. நொச்சி, common gendarussa — Justicia gendarussa.
2. வேம்பு, margosa tree—Melia azadirachta.
3. கண்டங் கத்தரி, prickly night shade —Solanum xanthocarpum.
4. சீந்தில், moon-creeper — Menispermum cordifolium.
5. பேய்ப் புடல், wild snake-gourd— Trichosantha cucumerina.

கசப் போளம், see கசப்புப் போளம்.

கச மரம், மஞ்சள், Indian saffron; turmeric—Curcuma longa.

கச மாது, see கச மாதுகம்.

கச மாதுகம், ஊமத்தை, datura — Datura stramonium.

கச மாலம், புகை, smoke.

கச முகத் திப்பிலி, யானைத் திப்பிலி, see ஆனைத் திப்பிலி

கச முத்தம், a pearl supposed to be found in the projections of an elphant's forehead.

கசமேடு, ஊமத்தை, datura genus.

கசம், சளி நோய், any phlegmatic disease; 2. காசம், asthma; 3. சய நோய், consumption attended with phlegm; 4. தாமரை, lotus — Nelumbium speciosum; 5. மயிர், hair; 6. புடம் போடும் குழி, a pit intended for calcining medicines; 7. இரண்டு முழ அளவு, two cubits or one yard in measurement; 8. யானை, elephant; 9. தலை மயிர், hair on the head; 10. புண் தழும்பு, cicatrix; 11. காய்ந்த அல்லது ஆறிய புண், a dry sore; 12. சரும நோய், any disease of the skin.

கசம்பி, கரு வண்டு, black beetle.

கசரத்து, மல்ல யுத்தப் பயிற்சி, wrestling exercise; 2. தேகப் பயிற்சி, gymnastic exercise.

கச ராகம், கொள்ளு, horse-gram—Dolichos uniflorus.

கசரை, காலே யரைக்காற் பலம், ⅜ of a pallam.

கச ரோகம், சய ரோகம், consumption—Pthisis.

கசர், இள நீர் முதலிய வற்றின் துவர், astringency of cocoanut water etc; 2. ஓர் சரக்கு, a drug; 3. துவர்ப்பு, astringency in general; 4. மிகுதி, excess; 5. குறைவு, deficiency.

கசர் பிடித்தல், கறை யுண்டாகுதல், to be soiled or stained with vegetable juice.

கசர்ப்பம், மஞ்சள், see கச மரம்.

கசர்ப் பாக்கு, மிக்கத் துவர்ப் புள்ள பாக்கு, a very astringent areca-nut.

கசர்ப்பு, இறைச்சி, flesh, meat.

கசலம், காடி நீர், any fermented liquid, vinegar.

கசவம், கடுகு, Indian mustard — Brassica juncea.

கச வாகிதம், கலியாண முருக்கு, Indian coral tree—Erythrina indica.

கச வியாதி, see கச ரோகம்.

கசவு, நாருள்ள பூடு, a fibrous plant.

கசற்பம், மஞ்சள், turmeric, see கச மரம்.

கசவண, ஈரம், moisture; 2. காவி, red earth; red ochre; 3. உப்புப் பற்று, impregnation of salt; 4. அன்பு, love; 5. சூட்டுக் கோல் அடையாளம், branded mark found in some cattle.

கசன்னி, see கச காணி.

கசா, see கசவு.

கசாகு, பாம்பு, a snake.

கசா கூளம், குப்பை, refuse, dregs, dirt.

கசாக் கிரம், மயிர்ச் சிகைப் பூடு, see கசப்பி; 2. மயிர் நுனி, hair's end; 3. மயிர் முனை, hair's breadth.

கசா சனம், அரச மரம், holy-fig tree—Ficus religiosa.

கசா சவண, see கசா சனம்.

கசாப்பு, ஆடு மாடு அடிக்கை, slaughter of cattle for food.

கசாப்புக் கடை, இறைச்சி விற்கு மிடம், butcher's stall.

கசாப்புக் காரன், மாமிசம் அல்லது இறைச்சி விற்போன், butcher.

கசாப்புக் கிடங்கு, ஆடு மாடுகள் அடிக்கு மிடம், slaughter house.

கசாயக் கிராமிணம், மாஞ்ச சோகணி, which see.

கசாய தித்தம், விஷ்ணு கரந்தை, Vishnu blue, Vishnu plant—Spoeranthus Indica alias Evolvulus hirsutus.

கசாயம், கஷாயம்; குடி நீர்: decoction.

கஷாயம், பச்சை அல்லது உலர்ந்த மூலிகைகளின் வேர், பட்டை, இலை, பூ, விதை முதலியவைகளைத் தண்ணீரில் ஊறப் போட்டு எரித்துக் கண்டக் காய்ச்சி வடித்த குடிநீர். இதற்கு வட மொழியில் 'சுவரசம்' என்று பெயர். ஆயுர் வேத முறைப்படி இக் கஷாயத்தை அடியிற் கண்டபடி வேறு விதமாகவும் தயாரிக்கப் படும்.

The water in which the root, bark, leaf, flower or seed of a green plant or dried drug has been *boiled* to a reducible quantity, and their soluble parts or principles filtered through—Decocta.

According to Ayurveda, decoction is prepared in several other ways as noted under:—

1. ஒரு பங்கு மூலிகைச் சூரணத்தை 8 பங்கு வெந்நீரில் இராத்திரி முழுவதும் அல்லது பன்னிரண்டு மணி நேரம் ஊற வைத்து வடித்த கஷாயம். — வெந்நீர்க் கஷாயம். இதற்கு வட மொழியில் பாண்டம் என்று பெயர், decoction prepared by steeping one part of powdered herb or herbs or drugs in eight parts of hot water for the whole night *i.e.*, for 12 hours—Infusion.

2. ஒரு பங்கு மூலிகையை ஆறு பங்கு குளிர்ந்த தண்ணீரில் இரவில் ஊறப் போட்டுக் காலையில் வடித் தெடுத்த கஷாயம்.—சீத கஷாயம், a preparation of decoction by steeping one part of a drug in six parts of cold water for the night and then straining the fluid in the morning—Cold infusion.

3. ஒரு பங்கு மூலிகைச் சரக்கை முப்பத்திரண்டு பங்கு தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து அரைப் பங்காய்க் கண்டிய பின் வடித்த கஷாயம், இது இலகுவான கஷாயம். வேண்டும் போது மருந்தாகவும், தாகம் தீர்ப்பதற்கு முபயோக மாகும்.—பானீயம். a decoction prepared by boiling one part of medicinal substance in thirty-two parts of water till the latter is reduced to one-half in quantity. This preparation is usually taken *ad libitum* for appeasing thirst and also as medicine.

4. மூலிகை அல்லது வேறு வித மருந்தை நசுக்கிக் கடைந்து அல்லது இடித்துத் தூளாக்கிக் கண்ட பாகத்திற்கு எட்டுப் பங்கு தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து, கால்பங்காகச் சுண்ட வைத்து வடித்த கஷாயம்.—பிரமத்தியை. இதைத் தேன் கலந்து உட்கொள்வது; a sort of decoction in which the drug or the medicine is first reduced to a pulp and then boiled in eight parts of water, till the latter is reduced to one-fourth of the original quantity. It is administered with the addition of honey as a vehicle.

5. ஒருபாகம் மருந்தை எட்டுப் பாகம் பாலிலும் 32 பாகம் தண்ணீரிலும் கலந்து தண்ணீர் முழுவதும் சுண்டிப் பால் மாத்திரம் நிற்கும் சமயம் வடிக் கட்டி எடுத்த கஷாயம்—க்ஷீர பாகம், a milk decoction in which eight parts of milk and thirty-two parts of water are added to one part of medicine and then boiled together till the water is evaporated and the milk alone is left behind. The decoction is then strained.

கஷாயம், see ஊறற் கஷாயம்.

கஷாயம் போடல், கஷாயம் வடித்தல், the act or process of boiling to prepare decoction.

கசாயர், மஞ்சள், turmeric.

கஷாயவா, பேரீந்து, date-tree, wild date-palm—Phoenix dactylifera.

கசா யானி, பவழ மருது, a species of red grass.

கசாயி, see கசாப்புக் காரன்.

கசாலை, சமைக்கு மிடம், kitchen.

கசா வாணிபம், கச கசா, which see.

கசி, ஈர மூறல், percolating; oozing.

கசி கசிப்பு, கசகசத்தல், perspiration; 2. கசிவு, moisture.

கசிகா புகா, கிலா வங்கம், the principal ore of lead; native lead—Galena; 2. காரீயக் கல், black-lead stone—Graphite. It is a form of carbon occurring pure or mixed with more or less iron oxide in crystalline rocks.

கசிதம், தைலம், லேகியம் இவைகளைக் கிண்டுவதற்கு உபயோகிக்கும் சிறிய துடுப்பு, a small ladle used for stirring medicinal oils, and electuaries in their preparation.

கசிதல், அழுதல், weeping; 2. இளகுதல், melting or fusing; 3. கரைதல், dissolving as salt does; 4. வியர்த்தல்; perspiring; 5. ஊறுதல், soaking.

கசி தைலம், செய்ப் புள்ள தைலம், greasy oil.

கசித்தி, வீழி, a straggling plant.

கசிந்து, பொன், gold.

கசியம், கள், toddy.

கசிரம், கடம்பு, Cadamba tree — Eugenia racemosa; 2. வாலுளுவை, spindle tree—Celastrus paniculata.

கசிரி, செம் புளிச்சை, red cedar — Erythroxylon monogynum.

கசிரிகா, சிறு வழுதலை, see கக்கிஷம்.

கசி வறல், (கசிவு + அறல்), கசிவு நீங்குதல், to stop oozing; getting rid of moisture.

கசி விறுத்தல், கசிந்த நீரை இறுத்துக் கொள்ளல், collecting the water oozing out.

கசிவு, வியர்வை, perspiration; 2. ஒழுக்கு, oozing; 3. ஊறுகை, percolation; 4 புண் அல்லது இரணத்தி னின்று வரும் ஒழுக்கு, the flow of matter out of a wound —Discharge. 5. ஈரம், moisture; 6. மனமுருக்கம், tenderness of mind; 7. வருத்தம், pain, distress.

கசிவு தேமல், குருக்க ளெழும்பிய தேமல், an inflammatory skin disease characterised by isolated pustules—Impetigo.

கசு, காற் பலம், ¼ pallam.

கசு பிசுக்கை, பிசு பிசுத்தல், sticky or adhesive nature; adhesiveness.

கசுமல பூதம், ஒரு நோயு மில்லாமலே யுண்டாகும் நோய். இது சோற்றைக் கண்ட வுடன் சிரித்தல், கூச்சக் குர லிடல், திடுக் கிடல் ஆகிய குணங்களை யுண்டாக்கு மோர் நோய், a disease due to the unstable condition of the nervous system, without any organic disease. The patient on seeing the food taken to him, begins to laugh or scream or get shocked at it.—Hysteria.

கசு மலம், அழுக்கு, dirt, filth; 2. மயக்கம், giddiness.

கசு மாலம், see கசு மலம்; 2. அசுத்தமான பெண், a filthy woman; 3. ருதுகப் பெண், a woman in her menses.

கசு மாலர், சுத்த மில்லாதவர், persons of slovenly habits.

கசு மாலி, see கசுமாலம்; 2. ருதுகப் பெண், a woman in her periods.

கசுவு நார், கசா என்னும் செடியி னின்று எடுத்த நார், the fibre of the plant *kasa*.

கசேரிகை, முது கெலும்பு, back-bone—Vertebra.

கசேரு. முள்ளந் தண்டு, spinal column—Vertebral column.

கசேருகம், தமரத்தை, country gooseberry—Averrhoa carambola.

கசேருக் காடி, see கசேரு லதை.

கசேரு நீர்க் கோவை, முள்ளந் தண்டிற் றங்கி நிற்கும் வாத நீர், a collection of morbid fluid in the vertebral column—Hydrorachis.

கசேருபம், முள்ளந் தண்டி லிருக்கும் 33 முள் ளெலும்புகள், the thirty-three vertebrae; 2. முது கெலும்பு, back-bone.

கசேருபவர், முள்ளந் தண்டிற் பிளவு ஏற்பட்டுப் பிதுங்கி நிற்கு மோர் பிறவி நோய், congenital cleft of the vertebral column with some protrusion—Spina bifida.

கசேரு லதை, முள்ளந் தண்டின் நடுவே யிருக்கும் குழாய்க்குள் நீளமாக ஓடும் கயிறு போன்ற நரம்புக்கொடி, the long cord-like structure contained in the spinal canal —Spinal cord.

கசேவம், கற் றாமரை, a lotus without moisture—Stone lotus.

கசை, பசை, paste.

கசை முறுக்கி, தட்டான் குறடு, goldsmith's pincers.

கசோதம், பிராய் முட்டி, Ceylon pavonia—Pavonia zeylanica.

கசோதிகம், கருப் பெள்ளு, black gingelly seed—Sessamum indicum.

கசோரம், ஓர் பூடு, a plant—Curcuma zerumbet.

கச் சகப்பை, நெல் லளக்கும் மரக்காலைப் போல வும் நீண்ட காம்பு முள்ளதுமான வோர் வகை யகப்பை, a kind of ladle with a broad and round cup, like that of a measure, with a long handle.

கச் சகம், குரங்கு, monkey—Macacus sinicus; 2. கொள்ளு, horse-gram—Dolichos uniflora.

கச்சகர், கொள்ளு, see கச்சகம்.

கச்சக் கடாய், ஆமை யோடு, the shell of a tortoise.

கச்சக் கட்டை மரம், சின்னுஞ்சி, சதுரமான கிளைகளை யுடைய ஓர் மரம். இதன் பூ வெண்மையாயும், வாசனையாயு மிருக்கும். இதன் பிசின் அல்லது குக்குலும் வாசனை யுள்ளது. இம் மரக்கரிப் பட்டை சாய மேற்ற வுதவும், crape myrtle—Lagerstroemia parviflora. It is a tree with quadrangular branches; flowers are white, fragrant and very numerous. It gives a sweet gum-resin (googul) and yields a very good charcoal. The bark is used in dyeing skins black.

கச்சக் கருவாடு, உலர்ந்த பொடி மீன், small dried fish.

கச்சக் குமிட்டி, தலை விரித்தான், அதாவது ஓர் வகைக் குமட்டி, a kind of bitter plant—Colocynthis; 2. பேய்க் கொம்மட்டி, wild gourd—Cucumis colocynthis.

கச்சக் குறிஞ்சா, கசப்புக் குறிஞ்சா, a plant.

கச்சக் கோரை, உப்பங் கோரை, which see.

கச்ச சாலி, சிகப்பு நெல், a kind of red paddy. C.f. பொச்சாலி.

கச்ச சுத்தி, கோவணத்தை சுத்தமாக வைத் திருத்தல், to keep one's loin cloth or under cloth clean, i. e., free from any stain as that occurring in sexual intercourse. It is a term used in a figurative sense, to indicate a man's chastity or moral purity in leading the life of celibacy.

கச்சச் செல்வம், கச்ச மீ னெலும்பு, bone of *kacha* fish.

கச்சடம், சல பிப்பிலி, an aquatic plant supposed to be a variety of long-pepper.

கச் சட்டம், கோவணம், a piece of cloth covering the man's private parts.

கச் சண்டம், அலரி, which see.

கச்ச தாஷன், தவளை, frog.

கச்சத்தி ணங்கம், மீ னெலும்பு, fish-bone.

கச்ச நாரத்தை, கசப்பு நாரத்தை, bitter citron — Citrus aurantium; 2. இள நாரத்தை, unripe citron; tender citron.

கச்சந்தி, சிறு கோணிப் பை, a small gunny bag.

கச்சந் திராய், ஓர் வகைக் கசப்புத திராய், a species of bitter edible plant; Indian chickweed—Mollugo parviflora.

கச்சபக் கடாய், ஆமை யோடு, see கச்சக் கடாய்.

கச்சபம், ஆமை, tortoise; fresh water turtle—Trionicidae; 2. மேல் வாயில் காணும் ஓர் வீக்கம், a tumour on the palate; 3. வாலைக் கருவி, an apparatus used in the distillation of spirituous liquors; a kind of flat still; 4. பெண் ணாமை, the female tortoise; 5. ஓர் சரும நோய், a skin (cutaneous) disease; 6. பரு, wart; 7. சிணப்பு, blotch; 8. கட லாமை, marine turtle—Chilonidae.

கச்சப லேகியம், ஆமையி னின்று தயாரித்த லேகியம், an electuary prepared from the flesh of tortoise.

கடலைச் சத்து, கடலைப் பசை, கடலைப் பருப்பைத் தண்ணீரிற் கொட்டி ஊற வைத்துப் பிறகு அதைப் பிசைந்து வெளிவரும் பாலைத் தெளிவிறுத்த பிறகு அடியில் நின்ற வண்டல் தான் இதன் சத்து. இதற்கு யுனானியில் 'நிஷாஷ்தா' என்றும், வட மொழியில் சியானத் திரவியம் என்றும் பெயர், starch from Bengal gram used for food—Amylum. It is obtained by soaking the crushed gram in water and then squeezing the juice out, is left for the residue to settle at the bottom. The product so precipitated is known as 'Nishashth' in Unani and 'Shyana Dravyam' in Sanskrit.

கடலை நிறை, கடலை நிறை பளவு, anything of the weight of a Bengal gram.

கடலைப் பணியாரம், கடலை உருண்டை, a ball or cake of fried ground-nut and sugar.

கடலைப் புளிப்பு, கடலைக் காடி, இது கடலைச் செடிகளின் மேல் சல்லாத் துணிகளை இராக் காலத்தில் அல்லது விடியற் காலையில் விரித்து விடுவதால் இரவில் அல்லது விடியற் காலையில் பெய்யும் பனியினால் துணிகள் நனைந்து செடிகளின் மீது இருப்பதனால் செடிகளின் சத்தும் பனி நீரில் ஏறிக் காடியாக மாறும். இத்துணிகளைப் பிழிந்தெடுத்த நீர் தான் கடலைப் புளிப்பு. இது சீதனத்தையும், குடலுக்கு வலிமையும், உடம்பிற்கு பலத்தையும் தரும். குன்மத்திற்கும் கொடுக்கலாம். இது காடியைப் போன்றதாயினும் அதை விட மூன்று பங்கு அதிக விலையுள்ளது. இது மைசூர் வங்காளம் முதலிய இடங்களில் அதிகமாய்க் கிடைக்கும். Bengal gram vinegar. It is collected from the plant in the following manner. A piece or pieces of thin and clean cloth is or are tied and spread on the leaves of the plant early in the morning or in the latter part of the night, so as to absorb the dew on them. When the cloth or the pieces of cloth found wet in the morning, is squeezed or wrung out in a vessel, we get this vinegar. It is refrigerant, stomachic and tonic and is also used as a tonic in atonic dyspepsia.

This vinegar is about three times as costly as the ordinary vinegar. It is largely collected in Mysore, Bengal and other places.

NOTE—Sometimes diluted sulphuric acid is sold in bazaars under this name fraudulently.

கடலை யிடல், கடலை முதலிய தானிய வகைகளை உடைத்தல், the crushing of grains.

கடலை யெண்ணெய், வேர்க் கடலை யெண்ணெய். இது ஒலிவை யெண்ணெய்க்குப் பதிலாக உபயோகப் படுத்தப் படும். அன்றியும், நல்லெண்ணெ யோடு கலக்கவும், சவுக்காரம் செய்யவும் உபயோக மாகும், the oil extracted from ground nut. It forms a good substitute for olive oil and is much used in adulterating gingelly oil. It is also used in soap-making.

கடல், பசு, cow ; 2. சமுத்திரம், sea ; 3. கடல் வாழ், marine as கடல் குதிரை etc. ; 4. சில பூண்டுகளின் முதன் மொழி, the first word of the name of some plants as in கடலாமணக்கு ; 5. இது மொழிக்கு முதலில் பற்பல அர்த்தங்கள் கொள்ளும்படி வரும் உப சர்க்கம். (உ-ம்.) கடல் உளுவை, கடல் தேங்காய், கடல் நண்டு, கடல் நீர். As prefix to certain names it signifies different meanings as in sea-coloured, sea-born, sea-borne etc. As for example :—

1. கடலுளுவை, sea mud-fish distinguished from the river-fish.

2. கடல் தேங்காய், foreign cocoanut *i.e.* introduced or imported from abroad or from over-seas.

கடல் உளுவை, கப்ப லோட்டி மீன், sucker-fish ; 2. ஓர் உளுவை, sea mud-fish

கடல் கட்டி, சமுத்திரத்தி லுள்ள பிராணிகளை மந்திரத்தால் கட்டி, அதனால் கடலில் மூழ்கு பவனைக் காப்பாற்றுவோன், a magician who could control aquatic and marine animals. He protects therefore divers from being attacked by them.

கடல் கலக்கி, பேய் முசுட்டை, Malabar convolvulus—Convolvulus malabaricus.

கடல் கொடி, தும்பை, bitter leucas—Phlomis aspera.

கடல் சம்பு, ஓர் வகைக் கடல நத்தை. இது பத்தியத்திற் குதவும், a kind of sea-snail. This is useful in diet for patients.

கடல் சாரை, ஓர் கடற் பாம்பு, a species of sea rat-snake.

கடல் சிறை, கொட்டை யிலந்தை, seed jujube—Zizyphus xylopyra.

கடல் சொறி, கடலில் வெப்பாக மிதக்கு மோர் வஸ்து, a red substance found floating on the sea.

கடல் தாமரை, ஓர் பூ. see கடற் றாமரை; 2. ஓர் கடல் மீன், a sea-fish—Sea-Anemones.

கடல் தேங்காய், இரட்டைத் தேங்காய். இது தீவாந்திரங்களி லிருந்து இறக்கு மதியாகும் ஓர் வகைத் தேங்காய். இது மிகவும் பெரிதா யிருக்கும். எலும் புருக்கி, சுரம், ரத்த நோய், கரப்பான், இலிங்கப் புற்று முதலிய நோய் களுக்குக் கொடுக்கலாம். Sea.cocoanut—Lodoicea seychellarum. It is also known as Double cocoanut, from its fruit resembling two cocoanuts fastened together. It is imported from the East Indies and it is vey large. It is prescribed for consumptive fever, glandular swellings or syphilis, skin eruptions, chancre etc.

See கடற் றேங்காய்.

கடல் நண்டு, கடலில் வாழும் ஓர் பெரிய நண்டு, இது கறிக் குதவும், a sea-crab—Cancer pugurus ; 2. ஓர் அபூர்வ மூலிகை, sea-crab (a plant)—Sisymbrium nasturtium.

கடல் நாக்கு மீன், நாக்கு மீன், flat fish—Pluronictus solea. See எருமை நாக்கு மீன்.

கடல் நாய், நீர் நாய், sea-dog or seul ; 2. நாய் மீன், dog-fish or small shark.

கடல் நீர், சமுத்திர நீர், sea-water—Aqua marina ; 2. உப்பு நீர், salt water.

கடல் நீர் முள்ளி, உப்புக் கறி நீர் முள்ளி, sea-holly—Acanthus ilicifolius.

கடல் நுரை, அக்கினி கர்ப்பம், which see ; 2. கணவாய் மீ னெலும்பு, cuttle-fish bone; 3. உபரச வகைகளி லொன்று, one of the 120 kinds of natural bodies or substances found in the sea ; 4. ஓர் அப்பம், a kind of cake.

NOTE—இதற்குப் பல பேருண்டு:— அவை அக்கினி சாலம், சமுத்திர கோசம், வாருதி நஞ்சு, சலக் கனல், அக்கினி கற்பம், வாருதி விந்து, மலச் சாக்கு முதலியன. It is known by several names as enumerated above. It is a substance found at the bottom of the sea supposed to be the production of some insect.

கடனுரைக் கிழங்கு, ஓர் வகைக் கிழங்கு, an unknown bulbous root.

கடல் பச்சை, சமுத்திரப் பச்சை, sea-green —Argyreia speciosa.

கடல் பஞ்சு, see கடல் சொறி.

கடல் படு திரவியம், கடலில் விளையும் வஸ்து

வஸ்துக்கள், அவையாவன:—உப்பு, ஓர்க்கோலை, சங்கு, பவளம், முத்து, the five substances produced in the sea viz., salt, amber, conch or chank, coral and pearl; Sea-born substances in general.

கடல் பருத்தி, சீமைப் பருத்தி, foreign cotton such as Barbadoes, Mexican, West Indian, Brazil, American etc.—Gossypium barbadense.

கடல் பற்பப் பூச்சி, ஓர் கடல் மீன், a sea-fish called sea-urchins.

கடல் பன்றி, ஓர் வகைக் கடல் மீன், hog-fish, sea-hog—Delphinus perniger. See கடல் பன்றி.

கடல் பாசி, கடலில் முளைக்கும் பாசி, sea-weed—Gracilaria lichenoides. See கடற் பாசி.

கடல் பாம்பு, கடல் வாழ் பாம்பு வகை, a common term for sea-snakes—Platurns genus.

கடல் பாவல, see கடற் பாலை.

கடல் பிசாசு, பிசாசைப் போன்ற மீன் வகைகள், devil-fishes; sea devils—Myliobatidae.

கடல் பூனை, ஓர் வகை மீன், wolf-fish.

கடல் மடு, see கடல் வழிஞ்சி.

கடல் மா, காட்டு மா, jungle mango—Cerbera odollam.

கடல் மாதர், பெண்ணின் முகமும் உடம்பும், அதன் கீழ் மீ னுடம்பும் வாய்ந்து, கடலில் வாழு மோர்வகைப் பெண் பிராணிகள், marine creatures supposed to be living in the sea having the upper part like that of a woman and the lower part like that of a fish—Mermaids; 2. சப்த கன்னிகைகள், the seven beautiful maidens supposed to be haunting the oceans, forests, mountains etc.—Sea-nymphs.

கடல் மாது திரண்ட வுப்பு, பாறை யுப்பு, salt deposited in rocks on several beds underneath the sea, owing to evaporation of water from time to time—Sea-salt (natural).

கடல் மான், ஓர் வகை கடல் மீன், a species of sea-fish.

கடல் மிரட்டி, மாந்திரீகத்தில் மோடிக் குதவு மோர் மூலிகை, a herb used in a magic play or show in which the course of events is influenced by compelling the agency of spiritual beings or by bringing into operation some occult controlling principle of nature.

In this show, are produced surprising phenomomons, optical illusions etc., resembling the results of magic.

கடல் மீன், கடலில் வாழும் மீன், marine fish.

தென் னிந்தியாவில் கிடைக்கக் கூடிய முக்கியமான கடல் மீன்களின் பெயர்களைத் தமிழ், இங்கிலீஷ் பெயர்களின்படி திரட்டி அடியிற் கண்டபடி கூறப் பட்டுள்ளது, the following is a key synopsis of the Sonth Indian marine fishes according to the different species, connecting the European and native terminology in alphabetical order—

1. அணிலாம் பிள்ளை, squirrel-fish.
2. அப்பைக் கொறுக்கை, a small fish—Monocanthus monoceros.
3. அம்பட்டன் கத்தி, razor fish; barber vaulay—Mene maculata.
4. அரணை வால், lizard's tail fish.
5. ஆக் கெளுத்தி, cat fish of the macorne genus—Plotosus arab.
6. இரங்கூன் மாவலாசி, Rangoon seer fish—Cybium commorsonii.
7. இராமப் பாரை, Rama pauray fish—Caranx leptolepis.
8. இரால், seer fish—Cybium commersonii; butter fish—Elacta nigra.
9. இலைக் கிழாத்தி, leaf jella—Bagrus anguis.
10. உடுப்பாத்தி, a light, green fish—Etroplus suratensis.
11. உளுவை, false bummelo—Selma tumbil.
12. ஊசிக் கழுத்தி, see கொக்கு மீன்.
13. எருமை நாக்கு, Indian turbot—Pleronectus solea.
14. ஓரா, a grey fish—Tenthis cancalenata.
15. கடல் விரால், sea-murrel—Elacate nigra.
16. கண்ணிப் பாரை, striped pauray—Caranx atropus.
17. கருந் தலைப் பாரை, black head pauray—Caranx ire.

கடல் மீன்

18. கருந் தும்பி, black toomby—Pterois miles.

19. கருப்பு விரால், pariah murrel—Chena sola.

20. கருப்பு வெளவால், black-faced pomfret—Stromateus niger.

21. கருமணிக் கெண்டை அல்லது கருவிழிக் கெண்டை, black labeo—Labeo kontius.

22. கரு முஞ்சிப் பாறை, see கருந்தலைப் பாறை.

23. கரு வண் டிறால், karu vand iraul—Astacus nigricans.

24. கல வாய், a kind of fish—Serranus genus.

25. கல் குறவை, rock doke—Discognathus lamta.

26. கல் மீன், angle-fish.

27. கல் வாரல், rock-aural—Mastacembelus armatus.

28. கல் துருவை, stone bummelo—Laurida tombil.

29. கள்ளப் பாறை, thief pauray—Caranx kalla.

30. கருப்பு வெளவால், black pomfret.

30A. கற் பிலாச்சை, bony plautchey—Ostracion turritus.

31. கற்றலை, cutralay fish—Scinaena genus.

32. காக்கன், a kind of fish dark like crow—Pristiporma.

33. கார் வாய், black mouthed or black-lipped fish. See கல் வாய்.

34. காலா, robaul—Polynemus genus.

35. கா விரால், long-legged prawn—Astacus jamaicensis.

36. கிழக்கான், European rousty; Indian whiting.

37. கெழுத்தி, jella of Siluridae family—Sphyraena jello.

38. கிச்சான், kitchaun of theropon genus—Pisces jarbua.

39. குமரப் பாறை, shark pauray—Caranx rottleri.

40. குரங்கன் சுறா, dog-fish—Chiloscyllium indicum.

41. குளக் கெழுத்தி, mud jella—Pangasius bucharani.

கடல் மீன்

42. கெண்டை, sea-carp—Barbus.

43. கெளிறு, macrene—Vittatus.

44. கொக்கு மீன், stork pike—Belone strongilurus.

45. கொடு வாய், cock-up; Indian perch—Lates calcarifer.

46. கொம்பன் சுறா, hammer-headed shark—Sphyrna blochii.

47. கொறுக்கை, see காக்கன்.

48. கோலா, gar-fish—Belone genus.

49. சங்கரா, Java fish—Gaurami.

50. சாம்பற் கற்றலை, gray cutralay—Sciaena albida.

51. சா வாளை, ribbon fish.

52. சிகப்புக் கலவாய், red perch—Serranus sonnerati.

53. சிகப்பு மட்டி வாயன், red-rock cod—Labrus argentatus.

54. சிங் இறால் lobster—Astacus marinus.

55. சீ வாளி நண்டு, sea-crab—Cancer genus.

56. சுறா, shark—Carcharias genus.

57. சுறாப் பாறை, shark pauray—Caranx rottleri. See குமரப் பாறை.

58. செங் காரை, bride-fish—Marginatus.

59. சென்ன கூனி, shrimp—Crangon vulgaris.

60. சொட்டை வாளை, butter-fish—Callichrous bimaculatus.

61. சோனக வாளை, moorman's vaulay; salve-fish—Trichiurus malabaricus.

62. தங்கப் பாறை, cobbler-fish — Caranx armatus.

63. தவளை மீன், frog-fish — Tetrodon lunaris.

64. தாழங் காலா, screw-pine robaul—Polynimus indicus.

65. தும்பி, toomby fish—Pterois genus

66. தோற் பாறை, thick-skin pauray—Chorinemus aculeatus.

67. நாக்கு மீன், flat-fish—Pluronictus solea.

68. பச்சைக் கோலா, green-pike—Belone annulata.

69. பச்சைக் கல வாய், green-perch—Serranus formosus.

70. பறவைக் கோலா, flying pike—Exococtus poecilopterus.

71. பறவைத் தும்பி, flying toomby—Pterois volitans.

72. பனை யேறி, palmyra fish or climbing perch—Anabas scandens.

73. பன்றி வெத்தான், dolphin fish—Coryphaena hippurus.

74. பாரை, horse-mackerel — Caranx genus.

75. பிலாச்சை; seer-fish — Ostracion genus.

76. புள்ளிக் கல வாய், spotted perch—Serranus hexagonatus.

77. பூ விரால், sea-murrel—Elacate nigra.

78. பேய்க்கால் நண்டு, long-legged crab.

79. பொன் காலா, golden robant—Polynemus tetradactylus.

80. மஞ்சட் கலவாய், yellow-perch—Serranus borbonicus.

81. மடலைக் கெண்டை, sea-carb—Rugilidae family.

82. மட்டி வாய், (lit) clumsy mouth; black rock cod — Chrysophrys berda.

83. மணலை, red mullet or Indian surmullet—Mulles barbatus.

84. மணிச் சுறா, jutjot — Carcharius malabaricus.

85. மயில் மீன், pea-cock fish—Histiophorus immaculatus.

86. மாட்டுப் பிலாச்சை, coffer-fish — Ostracion cornutus.

87. முதலை மீன், crocodile fish—Platecephalus genus.

88. முள்ளம் பிலாச்சை, prickly globe-fish—Diodon hystrix.

89. முள் விறால், spiny lobster.

90. வஞ்சிரம், Indian salmon—Scomber commersonii.

91. வடுத்தலைக் கலவாய், sore-headed perch—Serranus lanceolatus.

92. வரிக் கலவாய், striped-perch—Serranus boenack.

93. வரிக் கற்றலை, striped cutralay—Sciaena maculata.

94. வரிப் பாரை, striped pauray—Caranx atropus.

95. புலியன் சுறா, yellow shark—Galeocardo tigrinus.

96. விலாங்கு, sea-ell—Murainidae.

97. வெள் கற்றலை, white catralay—Sciaena miles.

98. வெள் விரால், white prawn—Cancer setiferus.

99. வெள்ளை வெளவால், white pormfret—Stromateus cinereus.

100. வெளவால், pomfret—Stromateus genus.

NOTE.—In the case of those scientific terms connected with South Indian vernaculars some of the terms themselves borrowed as they have been from fisherman's patois, are so corrupt and badly pronounced as to be almost beyond recognition, as for example—அல்லாத்தி, உருவிக் குட்டி, நக்கடலி, கண்டல், காக்காக்ஷி, கார்வாய், குத்துவாய், செம்படக்கா, தளா, கைடான, தாட்டை, தாடிப் பெருவாய, தோரக்கடலி, துக்கிருளி, துலேலி, செய்வெட்டி, படக்கன், பாட்டை, பூவாலி, பேரண்டா, பொன்னூக் தாட்டை, மெத்தப் பிரியன், யொவான், வக்காளாளி, வெக்கடை, வெள்ளுடான, வெள்ளுவா முதலியன.

கடல் முட் பன்றி, பிலாச்சை மீன், frog fish—Ostracion genus. It is so called from its ugly appearance; 2. முள்ளம் பிலாச்சை மீன், globe-fish, which assumes a globular form by inflation—Diotontidae or Tetrodontidae. For the different species, see under பிலாச்சை,

கடல் முயல், முயலைப் போன்ற கடலில் வாழு மோர் பிராணி, a marine molluscous animal having a fancied appearance to a hare.

கடல் முள்ளி, ஓர் வகை முள்ளி, a species of Indian night-shade; 2. see கடல் நீர் முள்ளி.

கடல் யானை, கடலில் வசிக்கும் ஓர் பெரிய மீன். பெண் இனத்திற்கு மூக்குச் சிறிது நீண்டிருக்கும். Sea-elephant; a species of seal, the females of which have the snout somewhat prolonged—Macrorhinus proboseideus alias M. elephantinus. It is also called elephant seal.

2. கடற் குதிரை, the sea-horse or Morse—Trichechus rosmarus.

3. கடற் சிங்கம், a marine mammal allied to seal and chiefly distinguished by its two tusks.

NOTE—Nos. 2 & 3 have two tusks like those of the elephants and therefore are mistakenly called sea-elephants, while they refer only to morse and evalrus

கடல் ராஞ்சி, see கட ராஞ்சி.

கடல் வங்கம், வெள் வங்கம், tin — Plumbium.

கடல் வண்டு, குடை வண்டு, a genus of boring bivalve molluscs—Pholas.

NOTE—In zoology an animal of this boring nature in the sea is known as 'piddock.'

கடல் வாத்து, கடலில் வசிக்கும் வாத்து, a duck commonly found in the seas — Scoter; 2. பன்றி மீன், இதன் மூக்கு வாத்து மூக்கைப்போ லிருப்பதால் இப் பெயர், sea-goose, also called goose-beak from its beak resembling that of a goose—Delphinidae.

கடல் வாழ், கடலில் பிறந்த, sea born; 2. கடலில் விளைந்த, produced in the sea.

கடல் வாழ் காரம், வெடி காரம், nitre.

கடல் விசிறி, கடல் பவளச் செடி, sea-fan.

கடல் விராய்ஞ்சி, see கட விராஞ்சி.

கடல் விரால், கடலில் வாழும் விரால் மீன், இதன் தலையின் உச்சி சப்பையாயும், மேற் பாகம் கபில நிறமாயும், சுமார் 18½ அங்குல நீள முள்ளதாயு மிருக்கும், sea-murrel—Elacate nigra alias E. malabarica. It is a sea-fish of the species of cobez known as butter-fish. The upper surface of the head is flat and the top brownish. It is about 18½ inches long.

கடல் விலாங்கு, சமுத்திரத்தில் பாறைகளின் இடுக்கில் வசிக்கு மோர் பழுப்பு நிறமான பாம்பு போன்ற நீண்ட மீன். இது தியாப் பசியுள்ளது, a kind of sea-eel living in the crevices of rocks in the sea. It is brownish in colour and long with a voracious appetite—Muraenidae.

கடல் விளை யமுதம், கட லமிர்தம் அதாவது உப்பு, common salt, an invaluable product of the sea.

கடல் விறுல், நான் கடி நீள முள்ள கடலில் வசிக்கும் விறுல் மீன், a sea-fish 4 ft. in length—Elacate nigra. See கடல் விரால்.

கட வகம், நாயுருவி, Indian burr—Achyranthus aspera.

கட வயிதம், குடத்தைப் போன்ற ஓர் வகை உருண்டைச் சுரை, a kind of gourd resembling a round pot.

கட வாய், see கடை வாய்.

கடவி, மர மஞ்சள், tree-turmeric — Coscinum fenestratum.

கட விழி, கலை மான், a species of deer—Hart.

கடவு, தணக்கு, potter's tree—Gyrocarpus jacquinii; 2. எருமைக் கடா, male buffalo; 3. ஆட்டுக் கடா, he-goat or sheep; 4. வயிரை அல்லது அசனை வென்னும் பூடு, Concan blue-druped feather-foil—Bridelia hamiltoniana.

கடவு காசிகம், ஆவாரை, which see.

கடவு மரம், see கடவு.

கடவுளம்
கடவுள் } தேவ தாரு, Himalayan cedar—Cedrus deodara alias Sethia indica.

கடவுளர் தாரம், காட்டுச் சந்தனம், bastard sandal—Erythroxylon monogynum; 2. தேவ தாரு, red cedar—Sethia indica.

கடவுளான், துருசு, blue vitriol — Copper sulphate; copper acetate.

கடவுள், மௌனி, a silent man; 2. சாலக் கிராமம் எனப் பட்ட ஓர் வகை மஞ்சட் கல், a yellow or golden-coloured stone commonly found in the Gandaka river—A species of Ammonite. See சாலக் கிராமம்.

கடவுள் கிருபை, தெய்வ அநுக் கிரகம், god-willing—Volenteo deo.

கடவுள் குற்றம், சாபம், தேவதைகளின் கோபம், அல்லது மாந்திரீகத்தா லேற்படும் தோஷங்கள், morbid diathesis or diseases of the Providential type due to curses, divine wrath, or displeasure or through the mystic potencies of charms and spells.

கடவுள் தாரகம், see கடவுளம்.

கடவுள் பாம்பு, படமும் வாலுந் தவிர மற்றைய உறுப்புக்கள் எல்லாம் தேவ வடிவம் கொண்டிருக்கும் ஓர்வகைப் பாம்பு, தெய்வ லோகத்தி லுள்ளது. (அஷ்ட நாகம்) என்ற படி இது எட்டு வகைப் படும், the eight kinds of cobras of the Celestial world, endowed with the body of Devas excepting the hood and the tail. They are—Vasuki, Anantan, Dakshan, Paduman. Karkodakan, etc.

கடலை, கொட்டைத் தணக்கு, potter's tree—Gyrocarpus jacquini, see also கடவு.

கடலைக் கிரியம், துத்த மல்லிகை, which see

கடறு, சுரம், fever; 2. காடு, forest; 3. மலைச் சாரல், mountain region.

கடற்கரடி, வெண் கரடி, இதை உத்தர துருவ தேசம் அல்லது துருவ தேசங்களிற் காண லாம், the white bear in the Artic or the Polar regions—Sea-bear.

கடற்கரை சுரம், கடலோரங்களில் வசிப்பதனு லேற்படும் ஓர் வகைச் சுரம், a kind of fever due to the living near the sea-shore.

கடற்கரைப் புல், கடலோரத்தில் விளையும் புல், grass growing near the sea-shore—Sea-grass; Eel-grass.

கடற்கரைப் பூடு, சமுத்திரக் கரை யோரங்களில் விளையும் மூலிகைகள், இவை வைத்தியத்திற் குதவா வென கருதப் படும், plants growing on or near the sea-shore. They are regarded unfit for use in medicine.

கடற் கலக்கி, பேய் முசுட்டை, see கடல் கலக்கி.

கடற் கனி, சமுத்திராப் பழம், sea fruit, Andaman Indian oak—Barringtonia speciosa.

கடற் கன்று, ஓர் கடல் மீன், the common seal fish.

கடற் காகம், கடலில் வாழும் காக்கை, sea-crow—Carmorant; 2. சமுத்திரக் காக்கை, sea-crow—Xema brunnicephala; 3. நீர்க் காக்கை, water-crow or large carmorant—Grauculous carbo.

கடற் காக்கை, see, கடற் காகம்,

கடற் காந்தள், நிப் பிருத்தை; கரைக் காந்தள் இதை மலையாளத்தில் மிகுதியாகக்காணலாம், a sea-shore plant, Madagascar mangrove—Lumnitzera racemosa. It is largely grown in Malabar; 2. சீனக் காந்தள், China mangrove—Pyrranthus albus.

கடற் காளான், கடற் பஞ்சு, sponge; 2. கடலி லிறந்த சிறுபிராணிகள் எலும்பின் கண்ண றைகள் சாதாரணமாய்க் கடலின் அடியி லுள்ள பாறைகளில் தங்கி நிற்கும், பழுப்பு நிறமா யிருக்கும், a skeleton of cells and pores secreted by numerous associated animalcules. The animal matter is removed by the soaking in salt water, leaving only the skeleton. It is found attached to the rocks at the bottom of the sea. It is soft brownish yellow.

கடற் காற்று, உப்பங் காற்று. அதாவது கடற் கரை யண்டை அடிக்குங் காற்று. இது உடம் பிற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். ஆனால் மூலிகைப் பூண்டு களுக்கு இவ் வாடை உத வாது, the air above or in the neighbourhood of the sea, containing saline or gaseous matter derived from sea-water. It is a local wind occurring along the sea-coast. It is very conducive to health and hence known as "the Doctor." But it is very unsuitable to the plants reared for use in medicines.

கடற் குதிரை, மே லுடம்பு குதிரையைப் போ லும், கீழுடம்பு மீனைப் போலு முள்ள வோர் பிராணி, a fabulous animal partly horse and partly fish; evalrus or morse; 2. கடலில் வாழும் குதிரை, river-horse—Hippopotamus; 3. கடலில் வாழும் குதிரை யைப் போன்ற ஓர் சிறு மீன், the name of a small fish having the head and fore-parts horse-like in form—Hippocampus guttalatus; 4. கற் பாம்பு, whip-fish or pipe-fish—Syngnathus serratus.

கடற் குருவி, கல்லுப்பு. இதுதான் சமுத்திரத் தில் தானும் வளர்ந்த உப்பு, salt found in lumps deposited on beds of rocks at the bottom of the sea owing to evaporation of sea-water; 2. கடற் கரை யோரங்களில் வசிக்கும் குருவி, squat sparrow; 3. சோற் றுப்பு, common salt.

கடற் கேசிதம், ஆற்றுப் பூவரசு, which see.

கடற் கொஞ்சி, சீமைக் கொஞ்சி, China box tree — Murraya exotica; See ஆற்றுப் பஞ்சுச் செடி.

கடற் கொடி, தும்பைச் செடி, bitter leucas — Leucas aspera; 2. கடற் றாமரை, sea-creeper, sea-lotus.

கடற் கொடிச்சி, see கடற் கொடி.

கடற் கொடித் தாமம், தணக்கு, see கடவு.

கடற் கொடி முந்திரி, கடலோரத்தில் விளையும் கொடி முந்திரிக்கை, sea-side grape—Coccoloba uvifera.

கடற் கொடு பாலிகம், ஆள் வாடைத் தட்டி, which see.

கடற் கொழுப்பை, எழுத்தாணிப் பூடு, style plant.

கடற் கோடு, கடலோரம், sea-coast; 2. கடல் நத்தை, sea-snail; 3. கடற் சங்கு, conch found in the sea.

கடற் கோழி, கடலில் வாழும் கோழியைப் போன்ற பறவை, a bird resembling the fowl as the grey plover—Sea-cock.

கடற் சார்பு, நெய்தல் நிலம், sea-coast or lands adjoining sea-coast; maritime tract.

கடற் சிங்கம், சமுத்திரத்தில் வாழும் சிங்கத்தைப் போன்ற ஓர் நாற் கால் மிருகம். இதற்குப் பிடரியில் மயிருண்டு, the name of a large seal with a mane on the back. Sea-lion—Otavia stelleri alias O. jubata.

கடற் சிப்பி, கடற் கரையோரங்களி லுள்ள சிப்பி, sea-shell; sea-oysters.

கடற் சில், கடல் மரக் கொட்டை, flat round seeds of a sea-plant.

கடற் சிறுத்தை, கடலில் வசிக்கும் சிறுத்தையைப் போன்ற பிராணி, a spotted species of seal—Ogmorhinus

கடற் சுரம், கடல் பிரயாணம் செய்வதால் பித்தம் தலைக் கேறி வாந்தி, மயக்கம், பேதி, தலைவலி, இக் குணங்களோடு கூடிய சுரம், sea-sickness attended with fever, vomiting, giddiness, purging, head-ache etc., due to the derangement of bile arising from sea voyage.

கடற் சொறி, see கடல் சொறி.

கடற் தந்தம், கடற் பிராணிகளின் கொம்புகளின் தந்தம், ivory from the tusks and horns of marine mammalia—Sea-ivory.

கடற் பகை, வெண் கடுகு, white mustard—Brassica alba.

கடற் பக்கி, see கடற் பட்சி.

கடற் பச்சை, கடல் நீரைப் போன்ற பச்சை நிறம், green in colour like that of the sea-water; a faint green colour; 2. சமுத்திரப் பச்சை, a fragrant plant; sea-green—Convolvulus nervosus alias Menthu zeylam. See also கடற் பாலை.

கடற் பஞ்சு, கடற் காளான், sponge.

கடற் பட்சி, கிளிஞ்சில், bivalve; sea-shell; 2. கிளிஞ்சில் மீன், shell-fish.

கடற் பருந்து, மீன் குத்திப் பறவை, a large hawk which feeds almost entirely on fish, Osprey—Pandian haliactus.

கடற் பறவை, கடலில் வாழும் பறவைகள், birds that live in sea-water such as the cormorant, turnstone, sandpipers etc; 2. கடற் கரையில் வசிக்கும் பறவைகள்; birds that frequent the sea-shore.

கடற் பன்றி, ஓர் பெரு மீன், porpoise—Delphinus perniger. See கடற் பன்றி மீன்.

கடற் பன்றி மீன், ஓர் வகைப் பன்றி மீன், இதற்குப் பக்கத்திற்கு 26 பற்கள் உண்டு. உடம்பு 5 அடி நீளமாயும், தட்டையாயும் முதுகின் பக்கம் சாம்பற் கலந்த மஞ்சள் நிறமாயு மிருக்கும். சென்னையில் இதை மிகுதியாய்ப் புசிப்பார்கள், கருப்பு நிறமாயு மிருக்கும், அதிக வேகமாய்ச் செல்லக் கூடியது. இறக்கும் பொழுது இதன் நிறம் பல விதமாக மாறும், a kind of sea-goose known as sea hog-fish—Delphinus perniger. It has 26 teeth on each side above and below. Body elongated and is about 5 ft. in length. Back greyish, shot with gold. It is extremely swift in going and changes tints when dying.

கடற் பாசி, கடலில் மிதக்கும் பாசி. இது இந்தியா, மலாய்நாடு, கீழ் சமுத்திரத் தீவு ஆகிய விடங்களில் சமுத்திரத்தி லிருந்து சேகரிக்கப்படும். இது நீலம் அல்லது பச்சை நிறமாயிருக்கும், இது வீக்கத்தையும் வலியையும் வாங்கக் கூடிய சக்தி வாய்ந்தது. இதைக் கஷாய மிட்டுப் பலவீனப்பட்ட குழந்தைகளுக்குப் பால் சர்க்கரை யுடன் கலந்து உணவாகக் கொடுக்கப் படும். இதைச் சூரணித்துச் சீத பேதிக்குக் கொடுப்பதுண்டு. இது உடம்பின் கொதிப்பைப் போக்கி உடம்பைப் போஷிக்கும். Edible sea-weed; Ceylon or Jaffna-moss—Alga zeylanica alias Gracilaria lichenoides. It grows on the Ceylon coast, India, Malaya and the East Indies. It is gathered from the surface of the sea-water, and it is purple or greenish in colour. It is an emmolient resembling rock-moss. In decoction, it constitutes a food for invalids and children when mixed with milk and sugar. It is powdered and given for dysentery. It removes the bodily heat and tones the system. It is like Iceland moss.

NOTE—Almost all the plants of this class yield soda and iodine on incineration. For the other kinds of moss, see under பாசி.

கடற் பாசி நீர், சுத்த சலம், pure water.

கடற் பாம்பு, கடலில் வசிக்கும் பாம்பு; சிற்றுளியம், a sea-snake of Chittulia genus—Hydrophis ophidia; 2. கடற் கரையில் வசிக்கும் நஞ்சுடைய பாம்பு, a variety of dangerous sea-snake found near the sea-coast—Platurus scutatus. It is poisonous; 3. வாளைக் கடியன் பாம்பு, a poisonous

sea-snake known as Valaikkadyan — Enhydrina valakkadyen.

NOTE—The following are the different species of sea-snakes in the Madras coast :—Chloris, Caerulescens, Cyanocinta, Eiadema, Ellioti, Fasciata, Gracilis, Jerdonii, Lapemoides, Linsayi Longiceps, Major, Melanosoma, Ornata, Robusta. Spiralis, Stricticollis, Sulecinta and Viperina.

கடற் பாலை, சமுத்திர சோகி. இது ஒரு கொடி, இதன் வேர் நீளமாயும், சொற சொறப்பா யும், மேற் பட்டை கபில நிறமாயு மிருக்கும். இது மருந்திற்கு மிக்க வுதவும், காடியோடு கலந்து உடம்பிற் பூசப் பருமன் குறையும். இலையின் மேற் பக்கத்தைக் கட்டி களுக்கு வைத்துக் கட்டச் சீழ் முதலியவை வெளி வரும். இலையின் கீழ்ப் பக்கத்தைக் கட்டி களுக்குக் கட்ட அவை பழுக்கும், a creeper, ocean-dryer — Convolvulus nervosus alias Argreia speciosa. It is a large climber with thickly-nerved leaves; roots are long and tough, covered with a dark brown bark. Roots medicinally alterative tonic; rubbed over the body to reduce obesity; the upper side of the leaves is used for dispersing a tumour or morbid matter, while the under or the white side of the leaves for ripening abscess, tumour, etc. See சமுத்திரச் செடி.

கடற் பிலா, பெருங் காந்தம், Assam rubber-leaved staff-tree — Kurrimia bipartita.

கடற் பூ, செம் மருது, blood-wood.

கடற் பூடு, ஓர் வகைப் பூடு, sea-weed—Spherococens lichenoides.

கடற் பேய், ஓர் மீன், sea-devil — Myleobatidae.

கடற் பொடி, தும்பை, bitter leucas—Leucas aspera.

கடற் றாமரை, பெருந் தாமரை, a variety of big lotus—Sea-lotus

கடற் றாரா, கடலில் வாழும் தாராப் பறவை, the ducks that frequent the sea—Sea-duck.

கடற் றாழிகம், இலைக் கள்ளி, leafy milk-hedge —Euphorbia neriifolia.

கடற் றாழை, கொந் தாழை, sea-weed; 2, வாட் டாழை, a sea-plant yielding an edible fruit.

கடற் றிலகம், நீர்ச் சுண்டி, floating sensitive plant—Neptunia genus.

கடற் றீ, கடல் நுரை, sea-froth.

கடற் றுவரை, அக்கரைத் துவரை, dholl imported from foreign countries over the sea.

கடற் றெங்கு, தீவாந்திரத் தென்னை. இம் மரம் கடலின் மத்தியி லுள்ள தீவுகளில் விசேஷமாய்ப் பயிராகும். மரம், மிக்க வுயரமாயும் நேராகவும் வளரும். இதன் காய் இரண்டு தேங்காய்கள் ஒட்டி யுள்ளதைப் போற் காணப் படும். ஒரு பக்கம் வளை வாகவும், மற் றொருப் பக்கம் சப்பையாயும், இரு பக்கங் களும் கூராகவு மிருக்கும். ஓடு கருப்பாக விருக்கும், உள்ளிருக்கும் சதைப் பற்றுச் சாதாரணத் தேங்காயைப் போல் இருந்தா லும் ருசி யிராது. இதற்கு விஷத்தை முறிக் குந் தன்மை யுண்டு. ஆகவே இப் பாலை விஷக் கடிக்குக் கொடுப்ப துண்டு. Maldive cocoanut or sea-cocoa-nut—Cocoe Maldivica alias Lodoicea seychellarum. Cocoanut tree found in the islands of the Indian ocean, such as the Andamans, Nicobars and Maldives. It is found in abundance in the Scychelles islands; very tall erect tree; fruit resembles two cocoanuts adhered together, it is convex on one side and flat on the other and pointed in both ends. Shell is dark and kernel is not unlike that of ordinary cocoanut, but rather insipid. Fruit is reputed to be an universal antidote and its juice is given in poisonous bites.

கடற் றேங்காய், கடலின் வழியாய்ப் படகின்மே லேற்றிக் கொண்டு வந்து இறக்குமதி யாகும் தேங்காய், cocoanuts brought by boats over the sea, sea-cocanuts -Lodoicea seychellarum; 2. See கடற் றெங்கு and also கப்பற் றேங்காய்.

கடற் றேவி, (கடல்+தேவி), சமுத்திர தேவி, a female deity of the ocean.

கட னண்டு, கடல் நண்டு, sea-crab—Cancer pagurus.

கட னுக்கு, சிகப்புச் சோற்றுக் கற்றாழை, curacoa aloes—Aloe vera officinalis; 2. கடல் நாக்கு மீன், which see.

கடனுக்கு மீன், எருமை நாக்கு மீன், a sea-fish, flat and brownish black, about 16 in. long—Pleuronectus erumei.

கட ஞாய், கடல் நாய் அல்லது மீ ஞாய், sea-otter.

கட னுரை, ஓர் கடல்-மீன் ஓடு, cuttle-fish bone, see கடல் நுரை; 2. ஓர் பணியாரம், a kind of pastry.

கடனை, இறுகிய சவ்வு, hardened tissue in the body—Sclerosis.

கடன் கழித்தல், மல சல பாதை போக்குதல், to answer calls of nature.

கடன் முள்ளி, see கடல் முள்ளி.

கடா, ஆட்டுக் கடா, he-goat; 2. எருமை முதலிய வற்றின் ஆண், the male of a buffalo etc.

கடாகம், பெருங் கொப்பரை, a big water-kettle; boiler; 2. பொரி வட்டில், frying pan; 3. ஆமை யோடு, turtle shell.

கடாகு, பறவை, a bird.

கடா சலம், யானை, elephant.

கடாஞ்சிப் பட்டை, கட கிராஞ்சிப் பட்டை, see கட கிராஞ்சி.

கடாட்சம், கடைக் கண் பார்வை, side-glance or side-look; 2. கடைக் கண், the outer corner of the eye.

கடா நாரத்தை, see கடார நாரத்தை.

கடாந் திரம், சில விரா, a kind of விரா of the feronium genus.

கடாம், யானை மதம், the secretion of an elephant in rut.

கடாய தந்த வெலி, தாக் கெலி. இது பதினெட்டு வித எலிகளி லொன்று, இதற்குச் சிவந்த பற்க ளுண்டு. கடித்தால் உறக்கம், மார்பு வறட்சி, மல பந்தம் முதலிய குணங்க ளுண்டாகும், one of the 18 kinds of rats. It is endowed with red teeth and its bite promotes drowsiness, dryness of the chest, constipation etc.

கஷாய கஷாயம், மிக்கத் துவர்ப்பான கஷாயம். இது சில சமயம் சுரத்தை யுள்ளடக்கி மறுபடியு மெழும்புந் தன்மை வாய்ந்தது, a decoction extremely astringent. It has a tendency at times to suppress fever, which subsequently relapses.

கஷாய சட்டி, see கஷாய பாண்டம்.

கஷாய தித்தம், வெள் வேல், white acacia—Acacia leucophloea.

கஷாய பாக விதி, கஷாயம் தயாரிக்கும் முறை, rule for preparing decoction. See கஷாயம்.

கஷாய பாண்டம், கஷாயம் காய்ச்சுவதற்காக உபயோகப் படுத்தும் மண் கலம், an earthen pot used for preparing decoction.

கடாயம் } கஷாயம் } குடி நீர், decoction; 2. நாரிச் சுக்கிலம், menstrual blood; 3. பஞ்ச மூலக் கஷாயம், அதாவது ஐந்து வித வேர்களை யிட்டு வடித்த கஷாயம், a decoction prepared using five different roots; 4. துவர்ப்பு மருந்து, astringent medicine; 5. ரோகத்தைக் கண்டிக்கு மருந்து நீர், any healing or medicinal potion.

கஷாய ரசம், துவர்ப்பு, astringency; 2. கஷாய சத்து, the essence in decoction.

கடாய், பொரிக்குஞ் சட்டி, frying pan.

கடாரங் காய், see கடார நாரத்தை.

கடார நாரத்தை, பெரு நாரத்தை, Citron—Citrus aurantium (Bigaradia).

கடார நாரத்தை, பெரு நாரத்தங் காய் மரம், இது ஒரு சிறிய மரம், இலைகள் நீளமாயும், பின் பக்கம் சிறிது வெளுப் பாயும், பூ சிறியதாயும், வெண்மையாயும், காய் வெளிர் மஞ்சளாயும், தோலில் எண்ணெய்ப் பசை யுள்ளதாயு மிருக்கும். இது கிச்சிலியைப்போ லிருந்தாலும் இலைக் காம்புகளில் மாத்திரந்தான் வித்தியாசம். இதன் தோல் கசப்பும், விரு விருப்பும் வாய்ந்தது; சதைப் பற்றுப் புளிப் பாயும், கசப்பாயு மிருக்கும். கொட்டை மிகவும் கசப்பு, இது ஊறு காய் போட வுதவும்.

இது பந்தைப்போ லுருண்டை யாகவும், மஞ்சள் நிறமாகவும், தோல் கனதியாகவும், எல்லா விததத்திலும், கிச்சிலி நாரத்தையைப் போலவு மிருக்கும். இதை நமது நாட்டில் சாதாரணமாய் வீடுகள் தோறும் ஊறு காய் போட உபயோகிப்பார்கள். இது எங்கும் பயிராகக்-கூடியது, கொல்லை, தோட்டம் இவ்விடங்களில் அதிகமாய்ப் பயிராகும். இதன் இரசம் எடுத்து ஆயுள் வேத வைத்தியர்கள் வாந்தி, அரோசகம், பித்தாதிக்கம், முதலிய நோய்களுக்கு இருதம் செய்து கொடுப்பார்கள். உப்பி லிட்ட பழைய ஊறுகாய், (அடை காய்) வாந்தி, சுரம், அரோசகம், இவைகளைப் போக்கித் தாக விடாயைக் கண்டிக்கும்.

Bigarada orange or Seville orange—Citrus aurantium (bigaradia). It is a small tree with elongated leaves; under-

side somewhat pale; flowers usually small and white; fruit pale yellow; rind with vesicles of fragrant oil. The leaves differ from those of the sweet orange in the petiole only; the rind of the fruit is bitter, acrid and hot to the taste; the pulp, acid and bitter and the seeds are excessively bitter. It is mostly used in pickle, which is useful as an appetiser in various kinds of fever, dyspepsia etc.

It is round like a ball; pale yellow, rind thick and bitter. It resembles orange and bitter orange in all respects.

In our country, it is used for pickle in almost every house. It is commonly found grown in fields, gardens etc.

From the juice of the fruit a medicated ghee is prepared and given for vomiting, nausea, biliousness etc. The dried pickle of this fruit is also used to stop or cure vomiting, fever, thirst etc.

NOTE—It is a blood purifier and appetiser. The dried peel or rind possesses stomachic, tonic and astringent properties.

கடார பித்தம், பித்தத்தின் வேறோர் பாகம் அதாவது தீய்ந்து கறுத்து மற்றப்பாகத்துடன் கலந்த பித்தம், a mixture of ordinary yellow bile and the black overheated bile

கடாரன், காமி, a libidinous man; a lecher.

கடாரி, ஈனுப் பசுங் கன்று, a young cow that has not calved.

கடாரை, see கடார நாரத்தை.

கடார விருட்சம், எருமைக் கடார விருட்சம், see எருமைக் கிச்சிலி.

கடி, இடுப்பு, the hip; 2. விஷக் கடி, poisonous bite (உ-ம்); எலிக் கடி, பாம்புக் கடி, the bite of a poisonous animal *C.f.* rat-bite, snake-bite; 3. அத்தி, fig-tree — Ficus glomerata; 4. கரிப்பு, pungency; 5. சிறு கொடி, a small creeper; 6. கடிதடம், the generative organ which becomes covered with hair at puberty — Pubes; 7. பிணம், corpse; 8. இன்பம், pleasure; 9. ஒளி, brightness, transparency; 10. காலம், time in minutes; 11. பொழுது, time; 12. நிதம்பம், the genital of a female — Pudendum muliebre or Mons veneris; 13. பிசாசம், a vampire; 14. வாசனை, fragrance; 15. அச்சம், fear; 16. கூர்மை, sharpness; 17. புது மணம், nuptials; 18. கந்த வனம், flower-garden; 19. திப்பிலி, long-pepper—Piper longum; 20. புட்டம், the buttocks; 21. ஊறு காய், pickle; 22. அரைப் படை, ring-worm; dhoby's itch; 23. கடித்தல், biting.

கடி கண்டு, பூனைக் காலி, a plant; cat bean—Mucana pruriens.

கடிகம், பிசின், gum, resin.

கடிக வெங்காயம், ஈருள்ளி, onion.

கடிகா ஸ்நானம், இடுப்பு வரைக்கும் செய்யும் குளியல், hip-bath. See கடி ஸ்நானம்.

கடி காயம், கடிக்கப் பட்ட தழும்பு, a scar from an animal bite.

கடி காலி, பூனைக் காலி, see கடி கண்டு.

கடிகி பலம், சுண்டைக் காய், pubescent solanum—Solanum pubescens.

கடி குட்டம், ஓர் வகைக் குட்ட நோய், a variety of leprosy.

கடி கூபம், இடுப்பின் மேலுள்ள குழி, the hollow above the hip; the loins.

கடிகை, அரை யாப்பு, a venereal tumour or swelling in the groin — Bubo; 2. நாழிகை, Indian calculation of twenty-four minutes; 3. குவளை, a small earthen vessel; 4. உண் கலம், any plate for eating—Eating dish: 5. துண்டம், cut-piece.

கடிக் கன்னி, அட்டை, leech.

கடிக் காய், சிறு தும்மட்டிக் காய், small bitter water melon—Citrullus colocynthes.

கடிக் கிரகம், இடுப்புப் பிடிப்பு, a catching pain in the loin.

கடிக்கை, கருக்கு வாய்ச்சி மரம், jagged jujube— Zizyphus trinervia. *C.f.* சூரிக்கை.

கடிச காலி, இலவ மரம், silk-cotton tree — Bombax malabaricum.

கடி சூலை, இடுப்பில் வரும் ஓர் சூலை நோய், a rheumatic affection of the muscles about the loins—Lumbago; 2. தொடை நரம்பைப் பற்றிய நோய், a sciatic pain.

கடிச்சகம், காஞ்சொறி, climbing nettle—Tragia involucrata.

கடிச்ச வாய், கற்றாழை, aloe — Aloe vera (officinalis).

கடிச்ச வாய்த் தடிச்சான், காஞ் சொறி, climbing nettle — Tragia involucrata. See கடிச்சகம்.

கடிச்ச வாய்த் துடைச்சான், காஞ் சொறி, see கடிச்சகம்; 2. எருக்கு, madar plant — Calotropis gigantea.

கடிச்ச வாய்த் துடைத்த படி, திடீ ரென, suddenly; occurring without any perceptible lapse of time as does death by cholera etc.: 2. சடுதி; உடனுக்குடன், instantaneously.

கடிச் சேபகம், இலுப்பை, long-leaved bassia, —Bassia longifolia.

கடிச்சை, ஓர் சிறிய மரம், இலைகள் மாறி மாறியும், பூங் காம்பு குட்டை யாயும், பூக்கள் சிறியவையாயும், குடை கவிழ்த்த மாதிரி கும்பலாயும், பச்சையாயு மிருக்கும். இதைக் கடற்கரைக் காடு, நீர் நிலைகளின் புதர்கள் முதலியவைகளில் காணலாம். பூண்டு முழுவதும் கசப்பு, இலை பதநியமாகக் குளிப்பதற்கும், பழம் மூத்திரத்தைப் போக்கு வதற்கும், பட்டை கபிலப் பொடிக்குப் பதிலாகவு முபயோகப்படும். காய் மீன்களைக் கொல்லும், a small tree, caulamesara — Casearia tomentosa alias C. elliptica. Leaves alternate; peduncles short; one-flowered; flowers small and crowded into globular heads; pale green. It is found in the jungles near the sea-coast and in bushes near stagnant water; very bitter in all its parts.

Leaves are used in medicated baths and the pulp of the fruit is diuretic; the bark is used as an adulterant in Kamela powder. The fruit kills fishes.

NOTE—There is a belief among the Malayalees that elephants would retire at the sight of this plant.

கடிச்சை, ஓர் சிறு கடல் மீன், a small sea-fish, grayish, about 16 inches in length —Pristipoma maculatum.

கடிஞ் சரம், துளசி, holy basil — Ocimum sanctum.

கடி தடத் திறைவன், இலிங்க பாஷாணம், a kind of mercurial poison.

கடி தடத்துக் கிறை, அல்குலுக்கு இறைவனை இலிங்கம், the penis, the lord of the genital portion of the females.

கடி தடப் புற்று, யோனிப் புற்று, இது பெண் குறியில் சிறுசிப் புண்கள் பிறந்து, பிறகு அறிகப் பட்டுப் புற்றைப் போல் வளர்ந்து, கற்றிலும் நமைச்சலுடன் வலியுங் கூடிய விரணங்களேற்பட்டுச், சீழ ரத்தம் ஒழுகு மோர் மேக நோய், a venereal sore in the genital of a female beginning with small pustules. It is subsequently increased by degrees like the hill of white ants and is surrounded with painful itchy ulcers accompanied by a discharge of pus and blood—Chancre.

கடி தடம், பெண்களின் அடி வயிற்றின் கீழ் மேடாய், மிருதுவா யிருக்கிற மர்மஸ்தானத்தின் மேற் பாகம், இது மயிர்களால் மூடப்பட்டிருக்கும், the hypogastric region, which in the adult female becomes covered with hair—Pubic region; 2. நிதம்பம், the external genital organ of a female—Pudendum muliebre or Mons veneris. See கடி.

கடி தண்டு, ஓர் செடி, a plant; 2. வாழைத் தண்டு, the inner portion of the stalk or stem of a plantain tree; plantain core; 3. ஊறுகாய்க் குபயோகிக்குங் காயின் தண்டு, a vegetable core or stalk used in pickles.

கடித மாறு, ஊமத்தை, dhatura plant — Dhatura stramonium.

கடிதம், பிசின், gum, resin.

கடிதல், ஒடுக்கல், subjecting as the senses.

கடி தேசம், இடைப் பாகம், the lumbar region.

கடி தோமம், கோரைக் கிழங்கு, *koray* root— Cyperus rotundus.

கடித்த தூஷன், தவளை, a frog.

கடித் தலம், இடுப்பு, waist.

கடித்தல், பல்லினாற் கடித்தல், biting; 2. காயப் படுத்தல், to cause injury; 3. துணித்துப் போடல், to cut into pieces; 4. விஷ செந்து கடித்தல், the biting of poisonous creatures.

கடி ஸ்நானம், இடுப்பு வரைக்கும் செய்யும் குளியல். ஒரு பாத்திரத்தில் உட்கார்ந்து கொண்டு, இடுப்பு வரையில் மாத்திரம் தண்ணீரில் அமிழும்படிச் செய்தல். ஜலத்துடன் கடுகையும் சேர்க்கச் சூதகத் தடையை நீக்கிச் சூதகத்தை வெளிப் படுத்தும். இது பெண்களுக்கு வேறுவித இடுப்பு நோய்களுக்கும் மிக்க நன்மையைத் தரும். நோயாளிகளுக்குச் சில சமயம் மிக்க உபயோக மானது, a form of bath in any vessel in which the patient can be covered up to the hip, in water. A hot hip bath with the addition

of mustard, is useful in bringing on delayed menstruation resulting from chilliness. It also affords good results in some diseases of the pelvic organs in females. This is very useful in the sick room.

NOTE—A daily cold or tepid hip bath acts as a highly benefici l tonic for women, but it should not be used at or about the monthly or menstrual periods.

கடிநப் பிரட்டம், யானை, elephant.

கடிநம், சர்க்கரை, sugar ; 2. பானை, pot. See கடினம்.

கடி நாய், கடிக்கும் நாய், a snappish dog ; 2. வெறி கொண்ட நாய், a rabid dog.

கடிநை, கண்களி லிருக்கும் வெள்ளைச் சவ்வு, the firm white membrane which covers the posterior part of the eye—Sclerotic

கடி பிடிதக் கரணம், ஓர் வித சீலை, a kind of posture in sexual intercourse.

கடிபேசி, மகா கடிபேசி யென்னும் சதை, the name of the loin muscles—Psoas muscle.

கடிப் பனை, வேம்பு, margosa tree — Azadirachta indica ; 2. கடுகு, mustard plant —Sinapis niger ; 3. ஐவிரலி, a creeping plant — Bryonia lacimosa ; 4. வெள் கடுகு, white mustard.

கடிப்பா, see கடிப்பான்.

கடிப் பாங்கிகம், குப்பை மேனி, rubbish plant —Acalypha indica.

கடிப்பான், ஊறு காய், உண்ணும்போது வாய் நீரைப் பெருக்க வேண்டிக் கடித்துக் கொள்ள உபயோகிப்பது, pickle, literally that which is nibbled or bitten while eating to secrete saliva ; 2. கறிக் கூட்டு, any cooked vegetable used as an adjunct to food.

கடிப் பிரதேசம், இடுப்பின் கீழ் வெளிப் பாகத்தி லுள்ள எதிர் உறுப்பு; அதாவது குண்டி, the protruberant part of the body below the hip—Buttocks.

கடிப் பிரமாணம், பெரு கடிப் பிரமாணம், அதாவது மூன்று விரலாற் கொள்ளு மளவு, as much as can be taken up between the thumb and the next two fingers forming a big pinch—Pugil.

கடிப் பிரோதம், தொடைச் சந்து, the lowest part of the abdominal wall near its junction with the thigh—Groin.

கடிப்பு, கடி பட்ட காயம் அதாவது கடிக்கப் பட்டதாலேற்பட்ட இரணம், wound caused by animal bite ; 2. கடி பட்ட தழும்பு, a scar due to a bite ; 3. ஆமை, tortoise.

கடிப்பை, சிறு கடுகு, a variety of small mustard ; 2. வெள் கடுகு, white mustard.

கடி மூலம், முள்ளங்கிச் செடி, garden radish root—Raphanus sativus.

கடி மேகம், இடுப்பில் வரும் சிரங்கு, புண் அல்லது படை, itch, sore or ringworm on the hip or the loins ; 2. அல்குலில் வரும் ஓர் மேகப் புண் அல்லது சிரந்தி, an ulcer or syphilitic sore in the genital of a female.

கடியகை, கடுகு, mustard.

கடிய கொடிச்சி, பிரண்டை, square-stalked vine—Vitex quadrangularis.

கடிய சுண்ணம், see கடிக்காரச் சுண்ணம்.

கடிய செம்பு, கல்லரளி, stone gannair (a plant).

கடி யநி / கடி யநித்தன் / கடி யட்டகம், சிற்றரத்தை, nodding galangal — Alpinia nutans.

கடி யமுதனை, பேரீச்சம் பழம், wild date fruit—Phoenix dactylifera.

கடி யரிசி, வாலுளுவை, intellect plant—Celastrus paniculata.

கடி யவம், நறும் பிசின், a fragrant resin or gum.

கடிய வல்லாதி, சேங் கொட்டை, dhoby's nut.

கடிய விஷத்தி, தேள் கொடுக்கி, scorpion plant—Helotropium indicum.

கடிய விஷவா, பேய்ப் பீர்க்கு, wild bitter gourd—Luffa acutangula.

கடியன், ஊறு காய், pickle.

கடி யின்டு, ஓர் வகை இண்டு, black bonduc ; tiger stopper—Caesalpinia sepiaria.

கடி யிரத்தம், மூக்கிரட்டை, spreading hogweed—Boerhavia repens alias B. procumbens ; 2. பெண் குறியிலிருந்து ஒழுகும் இரத்தம், menstrual blood.

கடி ரகம், சரக் கொன்றை, Indian laburnam —Bassia fistula.

கடி ரோமம், கோரைக் கிழங்கு, koray root—Cyperus rotunda alias C. bulbosa ; இதம்பதியின் மயிர், hair on the pubes.

கடி லகம்; சாரணை, one-styled trianthema—Trianthema monogyna.

கடிலம், பாகற் செடி, **spiked bitter cucumber—Mimordica charantium.**

கடிலா,
கடிலி, } மூக் கிரட்டை, see கடி விரத்தம்.
கடில்,

கடில்லகம், துளசி, holy basil — Ocimum sanctum.

கடிவாய், கடி பட்ட விடம், **the part affected by animal bite ; 2.** யோனி வாய், **vagina.**

கடி வால், கும்மட்டி, bitter-apple—Cucumis colocynthes.

கடிவாளப் புண், கடை வாய்ப் புண்; வாயின் இரு பக்கத்திலும் ஏற்படும் புண், a skin affection on the corners of the mouth; 2. ஓர் குதிரை நோய், a disease of the horse; 3. யோனிப் புண், a sore or ulceration in the labial portion of the female genital.

கடிவாளம், யோனி உதடுகளின் கீழ் முடிவு, bridle of the genital lips; fourchette—Froenum labiorum.

கடி விஷைக் கிழங்கு, மூ விலைக் குருந்து, three-leaved wild lime—Atlantia genus.

கடி விஷைத் தான், செய்யான், a kind of red insect. (Centipede)

கடி விஷம், விஷப் பிராணிகள் கடிப்பதனு லேற்படும் விஷம், poison arising from the bite of venomous creatures—Animal poison; 2. தொத்து விஷம். இது நாய்க் கடி முதலிய வைகளா லேற்படும்; contagious poisonous matter as that of hydrophobia from dog-bite—Virus. See பேய்க் கடி விஷம்.

கடி விஷம் போக்கி, கடிப்பதனு லேற்பட்ட விஷத்தை உடம்பினின்று அகற்று மருந்து. உ-ம். சேங் கொட்டை, பாற் சோற்றி, புளியாரை முதலியன, that which removes the effect of poisonous bites from the system, such as the common marking nut, gutta-percha, sour-green leaf etc.; an antidote against the bite of poisonous animals.

கடி விரண காரி, சிறு வாலுளுவை, climbing stuff plant—Celastrus paniculata.

கடிவு, அரையில் வரும் திரட்சி, a swelling or tumour in the groin—Bubo.

கடி வுகம், இடுப்பின் கீழ் வரும் வீக்கம், a swelling below the hip.

கடி வேல், கஸ்தூரி வேல், musk-scented babool—Acacia farnesiana.

கடிவை, யானை, elephant.

கடினக் கபம், துணுக்குக் கபம், hard phlegm.

கடின சம்போகம், நீடித்த புணர்ச்சி, a sustained sexual intercourse; 2. மிகுதியாகச் சம்போகித்தல், excess of sexual intercourse or sexual indulgence; 3. வருத்தத் தோடு கூடிய புணர்ச்சி, painful intercourse.

கடின நிலை, வருத்த நிலை, critical stage; serious condition.

கடின பலம், விளாங் காய், wood-apple.

கடினப் புல், ஓர் வகைப் புல், a kind of hard or rough grass—Seleria hethosperma.

கடினப் புற்று, கெட்டிப் பட்ட புற்றுப் புண், a hard or indurated sore—Chancre; 2. கெட்டியான சிரந்திப் புண், a hard cancerous tumour—Scirrhus.

கடினம், வெல்லம், jaggery; 2. அச்சு வெல்லம், jaggery cast in moulds; 3. ஓர் வெற்றிலை, a species of betel; 4. வன்மை, hardness; 5, கடுமை, fierceness; 9. முறைப்பு, stiffness.

கடின வியாதி, கொடிய நோய், a severe disease; 2. தீராத நோய, an incurable disease.

கடினை, உரப்பாய் விழி யகத்தே யுள்ள வெளிச் சவ்வு, the dense fibrous membrane forming the outer coating of the eye—Sclerotica. See கடினை.

கடீக தருணம், இடுப்பின் பாகத்தில் முள்ளந் தண்டிற்கு இரு பக்கங்களிலு முள்ள எலும் பின் சில பகுதிகள், some parts of the bone found on both sides of the vertebral column in the sacral region.

கடீரக சத்தம், மூக்கிரட்டை, see கடலி.

கடீரகம், அல்குல், female genital.

கடீரம், see கடீரகம்; 2. இடுப்பின் பள்ளம், the cavity of the loins; the iliac region.

கடு, கடுக்காய் மரம், Indian gall-nut tree—Terminalia chebula; 2. கசப்பு, bitterness; 3. கடுகு ரோகணி, a purgative drug known as black hellebore—Helleborous niger; 4. நஞ்சு, poison, venom; 5. மாசி

லங்கு, lingam tree—Crataeva roxburghii; 6. முள்ளி, spiny under-shrub—Barleria genus; 7. முள், thorn; 8. பாம்பு, snake, serpent; 9. முதலை, alligator; 10. கார்த்தல், astringency; 11. கடுகு, mustard; 12. காரமான, pungent; 13. அறு சுவை குளியில் ஒன்று, one of the six kinds of flavour; 14. நெடி, strong stimulating smell; 15. மிக்க வாசனையுள்ள, strong-scented; 16. நாற்ற முள்ள, evil-smelling; 17. தீபன முள்ள, caustic; 18. ஓர் வகைக் கருப்பூரம், a kind of camphor; 19. காடு, forest.

கடு கடுக்காய், நஞ்சு, poison.

கடு கடுத்தல், விஷத்தினு லேற்பட்ட வெரிச்சல், burning sensation due to poisonous bites; 2. வயிற்றி லுண்டாகு மோர் வித வலி, a griping pain in the stomach as in dysentery, cholera etc.; 3. சூட்டினுல் வயிற்றி லுண்டாகும் வலி, colicky pain from excess of heat in the system; 4. உறைத்தல், to be highly pungent.

கடு கடுப்பு, விரு விருப்பு, pain experienced as from poisonous stings; 2. மிக்க உறைப்பு, excessive pungency.

கடு கத்தி, (கடுகு+அத்தி), கஸ்தூரி எலும்பு, a fragrant bone; 2. (கடுகு+அத்தி), பேயத்தி, bitter fig, wild fig—Ficus oppositifolia.

கடு கந்தம், இஞ்சிக் கிழங்கு, ginger-root—Zingiber officinalis; 2. வெள்ளைப் பூண்டு, garlic.

கடுகம், திரி கடுகு, the three stimulants viz, pepper, dried ginger and long-pepper; 2. கடுகு ரோகணி, black hellebore—Helleborus niger; 3. மான் செவிக் கள்ளி, spiral leafy milk hedge—Euphorbia neriifolia; 4. மருக் காரை, common emetic nut—Randia dumetorum; 5. கார்ப்பு, astringency; 6. காப்பாற்று மருந்து, protective drug or medicine; 7. கார்க்கு மருந்து, pungent drug; 8. குடம், pot.

கடு கம்மை, காய்ச்ச லடித்த மூன்றும் நாளில் தலையில் கடுகைப் போல் குருக்கள் தோன்றிப் பிறகு உடம்பில் பரவி, வலி, தொண்டைக் கம்மல், பேதி முதலிய குணங்களைக் காட்டு மோர் வகை அம்மை நோய், a kind of measles appearing on the third day of fever with eruptions on the head which thence spreads over the body. It is marked by bodily pain, sore-throat, purging etc.

கடு காஞ்சம், கழற் கொடி, bonduc creeper—Guilandina bonducella.

கடுகர், see கடுக்காய்.

கடு கன்னம், see கடுகு சாதம்.

கடு காரம், கடுகு ரோகணி, black hellebore—Helleborus niger; 2. சாதி பத்திரி, the mace or pulp of myristica fragrans.

கடு காலி, குன்றி மணி, red bead vine—Abrus precatorius.

கடு காற் சுரை, பேய்ச் சுரை, bitter bottle gourd. See கசப்புச் காய்.

கடுகி, கண்டைச் செடி, double-coloured solanum; Indian tree-potato — Solanum adulterinum.

கடுகிய காந்தி, இரசித பாஷாணம், a kind of arsenic prepared from silver; a mineral poison.

கடுகிய வுப்பு, காரமான வுப்பு, acrid salt.

கடு கிரந்தி, திப்பிலி மூலம், the root of long-pepper; 2. சுக்கு, dried ginger.

கடு கீடகம், கொசுகு, mosquito.

கடு கீடம், see கடு கீடகம்.

கடு கீதம், உடை, which see.

கடுகு, கடுகுச் செடி. இது எங்கும் பார்க்கக் கூடியது. இதை வயல்களில் கேழ் வரகுடன் தெளித்து, மழை யில்லா விட்டால் பதினைந் தாம் நாள் தண்ணீர் விடவேண்டியது. இதன் பயிர் நன்றாய் வளர்ந்தால் நான்கு, ஐந்து அடி உயரம் வளரும். மூன்று, நான்குமாதம் சென்றவுடன் அறுத்துக் காய வைத்து தடியால் அடித்து விதையை எடுப்பார்கள். இது தான் கடையில் விற்கும் கடுகு. இது கேழ்வரகைப் போல் சிறியதும் பெரியதுமாய்க் கருப்பாகவும், சிகப்பாகவும், உள்ளே வெண்மையாகவுமிருக்கும். இதில் இரண்டு வகைகள் உண்டு, வெள்ளை, சிகப்பு அல்லது கபில நிறம். சாதாரணமாய்ச் சிகப்பு அல்லது கபில நிறக் கடுகு தான் பல வகையிலும் உபயோகப்படும். இது ஜீவ சக்தியை விருத்தி செய்து ஞாபகத்திற்கும், மனத்திற்கும் ஆதாரமாக மூளையி லமர்ந்துள்ள ஜீவ சாலங்களை நேராகத் தூண்டும். இது ஒரு காரமான வஸ்து; இதைக் கறி வகைக்கு உபயோகப் படுத்தினும் பத்தியத்திற் குதவாது; இத

னின்று எண்ணெய் எடுத்து நல் லெண்ணெயைப் போல் உபயோகிப்பார்கள். இது மஞ்சளாயும், மிக்க வாசனையாயும், கடுகைப் போல் குணியாயு மிருக்கும். தலைக்கும் மேற் பூச்சக்கும் இது மிகக வுபயோக மாகும். இதைத் தடவுவதனு லுடம்பிற்கு வலு வுண்டாகும். இதைச் சில சமயங்களில் வயிற்று வலிக்கும் கொடுப்ப துண்டு. ஆயினும் அவ்வளவு சிறந்த தல்ல. கொப்புளம், ரணம், இவைகளுக்குப் பூச அவை ஆறும். இவ் விதையை அரைத்துத் தலை வலி, பயித்தியம் முதலியவைகளுக்குப் பற்றுப் போடுவ துண்டு. சில சமயம் சீமைக் கடுகுக்குப் பதிலாக இதைக் கட்டுக் கட்ட வுபயோகிப்ப துண்டு. இதற்கு உண்டான காரத்தினுல் தோல் வெந்து போய் எரிச்ச லுண்டாக்கும். இதை அரைத்துக் காடியிற் கலந்து கட்டு மருந்தாக அடியிற் கண்ட நோய்களுக்கு முறையே உடம்பின் வேண்டிய பாகங்களில் வைத்துக் கட்டுவ துண்டு.

1. புத்தி தடுமாற்றம், சுரம், அம்மை இவைகளுக்குப்	பாதம் அல்லது பிடரியிற் கட்டலாம்.
2. சுரம், மயக்கம், தோஷம்	பாதம்.
3. நித்திரை யின்மை, இரத்த வோட்டம் இன்மை.	பாதம், அடிவயிறு.
4. வயிற்று வலி, விஷ பேதி, வயிற் றிசிவு	அடி வயிறு.
5. வாந்தி, முறை சுரம்...	வயிறு.
6. விஷ பேதி, கப வாத சுரம்.	மார்பின் இடது பக்கம்.
7. இருமல், சுவாசம், இரைப்பு	மார்பு, தோள் பட்டை.
8. கக் கிருமல் ...	முதுகு

இதன்றியும், பல் வலி, முக வாதம், கழுத்துக் குடைச்சல் இவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

இக் கடுகு அடியிற் கண்டபடி பல வகைப்படும் :—

கட்டுச் செந்தூரம், வாத முறைப்படி ஓடுஞ் சரக்குகளைக் கட்டிப் பிறகு அவைகளை வைத்திய முறைப்படிப் புட மிட்டு எடுத்த செந்தூரம், red oxide prepared by the process of calcination or by heating of substances in a fire as laid down in Tamil medical science, from substances previously consolidated according to the rules of Alchemical science.

NOTE—*These kinds of red oxides are peculiar only to the Tamil Siddhars' Medical science, as the processes of making them are unknown to any other system of medicines now in vogue. They are useful both in Alchemy and Medicine because of their extraordinary virtue of transmuting base metals into gold and also of curing all kinds of chronic, complicated and incurable diseases thus paving the way for rejuvenation.*

கட்டுச் செம்பு, களிம் பற்ற செம்பு, copper free from verdigris.

கட்டுச் சொல்லல், குறி சொல்லுதல், foretelling future events.

கட்டுச் சோறு, see கட்டமுது.

கட்டுஞ் சரக்கு, தமிழ் வாத நூற்களில் சொல்லியுள்ள மூலிகைகளும், கார சாரச் சரக்குகளும், அவைகள் ஓடுஞ் சரக்குகளையெல்லாம் நெருப்பிற்கு ஓடாதபடிக்கும், பொன்னைப் போல் உருகிக் கண் விட்டாடும் படிக்கும் செய்யக்கூடிய சரக்குகள். சித்தர் நூற்களில் அவை பலவித மாகவும், பரிபாஷையிலும், எளிதில் தெரிந்துக் கொள்ளக் கூடாதபடியும் கூறப் பட்டுள்ளன. அநுபவம் அல்லது குரு மூகமாய் தெரிந்துக் கொள்ளக் கூடிய விஷயமாயினும், நூலிற் கூறியுள்ளபடிப் பொது ஜனங்களின் அறிக்கைக்காகச் சிலவற்றைச் சுருக்கமாக இங்கு அடியிற் கூறப் பட்டுள்ளது. இவ் வகைச் சரக்குகளில் ஒன்றையாவது தெரிந்து கொள்வ தரிது. அன்றியும் அவைகள் கிடைப்பது மரிது. ஆகவே, ஆராய்ச்சிகளில் நோக்க முள்ள மாணாக்கர்கள். இது விஷயமாகப் பின் னிட்டாவது ஆராய்ச்சி புரிந்தால் மிக்க நலமாய் இருக்குமென்று கருதப் படும். மேற்படி சரக்குகளாவன:—

(a) மூலிகைச் சரக்குகள்:—

1. சர்க்கரை வேம்பு.	3. சித்திப்புக்கோவை
2. கருங் குறிஞ்சி.	4. பேய்த் துவரை.
5. கருந் தக்காளி.	32. இடவகம்.
6. கல் தாமரை.	33. கரு முருங்கை.
7. பால் இருளி.	34. பாற்பை.
8. கண் பூ.	35. நிமிக.
9. தாம்பூரச் சிகை.	36. விடத்தேர்.
10. கப்பொட்டி.	37. மீனிரை.
11. அழு கண்ணி.	38. இங்குணம்.
12. எருமைக் கனை	39. மயூரச்சிகை.
13. நாக சிங்கி. [சான்	40. முடவாட்டின்கால்
14. பொன்னூமத்தை.	41. நாக சிங்கி.
15. உரோம விருட்சம்.	42. சணங்கள்விருட்சம்
16. சாயா விருட்சம்.	43. குமலாதொண்டை
17. செம் மல்லிப் பூ.	44. முத்திருக்கஞ்செவி
18. கல் லறணி.	45. புறங் கை காதி.
19. அம்பளங்காய்.	46. பூதணங்கு.
20. தேவதாளி.	47. செருந்தி.
21. நாகமலை.	48. புளம் புளி.
22. புளிவிஞ்சை.	49. பெருங் கம்பி.
23. சிறு கஸ்தூரி.	50. சுர புன்னை.
24. தலைச்சுருட்டு வள்ளி.	51. இருசுவற் பாட்சி.
25. தீன் பூ.	52. சேய மரம்.
26. கப்புச் சிடைச்சி.	53. பரியங்கப் பாறி.
27. கழுதைமான்புல்லி	54. பொன் பார்வை.
28. கிளி முருக்கு.	55. களா விழுது.
29. விருத்தி.	56. சேர்ந்தாடு பாவை.
30. ஈசுர மூலி.	57. சின்னுருகை.
31. இருப்பவல்லிழுங்கு	

(b) தாதுச் சரக்குகள்:—

1. ஏகம்பச் சாரம்	9. சீல பாஷாணம்
2. கல்லுப்பு.	10. தாளக பாஷாணம்
3. மீனம்பர்.	11. கல் பாஷாணம்
4. பொன் னம்பர்.	12. குங்குமபாஷாணம்
5. சவர்க் காரம்.	13. வைக்கிராந்த ,,
6. இராசவர்த்தகக்கல்	14. பவண்டுறுக ,,
7. நாக பாஷாணம்	15. கோடாசூரி ,,
8. சிங்கி பாஷாணம்	16. இலவண ,,

(c) மற்றச் சரக்குகள்.

1. காண்டாமிருகக்	6. அமுரி யுப்பு.
2. பூ நாகம். [கல்.	7. இந்திர கோபம்.
3. கல் மதம்.	8. நண்டுச் சத்து.
4. சிலா வங்கம்.	9. மாங்கிஷ பேதி.
5. நாகர வண்டு.	10. சொர்ண பேதி.

Herbs, drugs and other chemicals referred to, are in Tamil Alchemical science, capable of resisting the action of fire, and used for consolidating substances that can readily pass off into fumes or vapour, when subjected to fire and for melting them like gold in a crucible.

They are enumerated in Siddhars' science in different ways and in code

words mixed with incomprehensible expressions. Although the drugs and the processes of employing them should be learnt through experience or through a Spiritual teacher (guru), an attempt has been made to publish them in this work as related to the science, for the information of the public.

These drugs are mentioned under three heads and none of them is either available or identifiable and therefore it is hoped that some research scholars would direct their activities in this direction at some future date though not now.

For further details see under *சரக்கு*.

கட்டு டாசம் see *கட்டுக் காடை*.

கட்டுடைதல், *நோய், வயது முதலிய காரணங்களை முன்னிட்டு உடம்பு தளருதல்*, to suffer a break down in constitution on account of sickness or age; 2. *பூ முறுக் கவிழ்ந்து பூத்தல்*, to blossom by petals being opened.

கட்டுடைத்தல், *மந்திரத்தினால் உடம்பு தளர்ச்சி யடையும்படிச் செய்தல்*, causing breakdown of constitution through magic; 2. *கட்டி, புண் இவைகள் உடையும்படிச் செய்தல்*, causing boils and abscesses to open.

கட்டுண்டல், *கை, கால் பிணிக்கப் படல்*, to be bound hand and foot.

கட்டுண்ணல், *கட்டுப் படல் அதாவது நெருப்புக்கு ஓடாதபடி கட்டிப் போதல்*, to become consolidated so as not to pass off into vapour or fume as the case may be, when exposed to fire; 2. *கட்டுச் சோற்றைப் புசித்தல்*, to eat the preserved food.

கட்டுண்ணி, *மந்திர சக்தியினால் கட்டுப் பட்டவன்*, (*In Magic*) one who is bound by spell or its power; 2. *சூலைக் கட்டினால் வருந்து பவன்*, one who suffers from arthritis; 3. *பெண்சாதிக்குக் கட்டுப் பட்ட அல்லது அடங்கிய புருஷன்*, a husband controlled or restricted by his wife.

கட்டுதல், see *கட்டல்*; 2. *பிணித்தல்*, to tie, bind or fasten; 3. *தழுவுதல்*, to embrace; to hug; 4. *இறுகச் செய்தல்*, to harden, condense, or consolidate; 5. *மந்திரத்தினால் தடை செய்தல்*, (*in magic*) to bind or restrain by spells as is done to the mouth of bear, tiger, etc; 6. *தொண்டை கட்டுதல்*, to be congested as in sore throat or in acute pharyngitis; 7. *புண் அல்லது கட்டி திரளுதல்*, concentrated as in a tumour or imposthume; 8. *உடம்பு வலி வடைதல்*, to be strengthened physically; 9. *கட்டல்*, to arrest as in *பேதி கட்டல்*, to arrest purgation; 10. *அடக்குதல்* to restrict as in

"*வாயைக் கட்டினவளுக்குப் புருஷன்*
வயிற்றைக் கட்டினவளுக்குப் பிள்ளை."
Husband is for one who restricts
herself from talking too much.
Child is for a woman who restricts
herself in her diet. See *கட்டல்*.

கட்டுத் திரளுதல், *கட்டி பருத்து முகங் காட்டல*, to gather to a head as does an abscess or a boil—Pointing.

கட்டு படல், see *கட்டு படுதல்*.

கட்டுப் படாமை, *எளிதல் வசப் படாமை*, not easily restricted or controlled; 2. *திரளாமை*, not easily solidified or condensed.

கட்டுப்படா ரஞ்சன், *விச்சுளி*, a bird flying swiftly.

கட்டுப் படுதல், *மந்திர சக்தியால் பந்தப் படல்*, to be bound by magic spells; 2. *மலங் கழியாது தடைபடல்*, to be constipated; 3. *உடம்பில் இரத்தம் முதலியவை தடைபடல்*, to be obstructed in the flow of blood or other fluids in the system; 4. *நெருப்பிற்கு ஓடாதபடி நிற்றல்*, to stand the test of fire without being evaporated.

கட்டுப் படுத்தல், *மந்திர சக்தியால் தடைப் படுத்தல்*, to cause one to be bound or restraining by magic spells; 2. *ஓடுஞ் சரக்குகளை நெருப்பிற் கோடாதபடித் தடுததல்*, to restrict or prevent volatile substances from fuming or evaporating.

கட்டுப் பரீட்சை, *கட்டிய இரசகந்த பாஷாணச் சரக்குகள் நெருப்பிற்கு ஓடாதபடி நிற்குமாவெனச் சோதித்தல். இது அடியிற் கண்ட முறைகளைக் கொண்டு தெரிந்து கொள்ள இயலும். (1) கல்லுப்புக் கரியி லுருகும்; (2) வெடி யுப்பு தந்தம் போலாகும்; (3) வெண் காரம் பொங்கி உருகி யாடும்; (4) சீனம் மணிபோ லுருகும்; (5) சூடன் எரியாது; (6) இந்துப்பு வெடிக்காது; (7) துரிச*

இளகாது; (8) இரசம், கந்தகம், பாஷாணம் இவை புகையாது, examination of volatile bodies or similar other substances supposed to have been consolidated, to see if they could withstand the action of fire. The following are the proofs :—

(1) Common salt will melt.
(2) Nitre will be hardened like ivory.
(3) Borax will boil and then melt.
(4) Alum will melt and appear like a bead.
(5) Camphor will not burn *i. e.*, it becomes incumbustible.
(6) Rock-salt will burst and break into fragments.
(7) Blue vitriol will not lose its hardness.
(8) Mercury, sulphur, arsenic etc will not pass off into fume or vapour.

கட்டுப் பனை, மத நீருக்காக வேண்டிப் பாளை கட்டப் பட்ட பனை, palmyra tree which is tapped for the purpose of drawing its juice.

கட்டுப் பாக்கு, வாய்ச் சூட்டைத் துணி மூலிய மாய்க் கொடுக்கும் ஒத்தடம், fomentation with the warmth of the mouth passed through a rolled cloth.

கட்டுப் பாளை, see கட்டுப் பனை

கட்டுப் பிடித்துப் பார்த்தல், நோயின் கூறுகளைத் தெரிந்து கொள்ள வேண்டிக் குறி கேட்டல், to ascertain the cause, cure etc of a disease through magical means or conjectural presage.

NOTE—This is generally said to be done in almost every household through the worship of Ganesha. A vessel containing water is placed on paddy or rice spread on a plantain leaf and then lifted with the hand after Puja. The cure or otherwise of the disease is determined by the difficulty experienced in lifting it.

கட்டுப் பித்தளை, வாத முறையால் களிம்பகற் றிய பித்தளை, brass from which rust is removed alchemically.

கட்டுப் பிரியன், உடம்பிலும் நெற்றியிலும் வரி களை யுடைய ஓர் கடல் மீன். இது கபில நிற மாயும் நீலப் புள்ளிக ளமைந்து சுமார் 15 அங்குல நீளமு முள்ளது, a sea-fish with bands or stripes on its body and the forehead—Lutjamus revulatus. It is brownish in colour with blue spots and is about 15" in length.

கட்டுப்பு, நெருப்புக்கு ஓடாதபடிக் கட்டிய உப்பு, சாதாரணமாக உப்பை வெடி யுப்பு, சீனம், நவாச்சாரம், சமுத்திர நீர் முதலானவை களைக் கொண்டு கட்டலாம் என்று சொல்லப் படுகிறது. அது கசிவு நீங்கித் தந்தம் போல் கெட்டியாக ஆகும். அதற்கு அனேக சிறந்த குணங்க ளுண்டு. தேகத்தில் எழும்பலாம், பாம்பைப் போல் சட்டை போக்கிக் கொள்ள லாம். சடத்தை வயிரம் போலாக்கி நெடுங் காலமிருத்தும். யோகத்தில் அது மூச்சடை வொட்டாது. தூக்க மிராது, உடம்பில் வியர் வை உண்டாகாது. வாதத்திற் குதவும்.

"உப்பைக் கட்டியவன்
உலோகத்தைக் கட்டுவான்"

என்ற பழமொழியும் உண்டு, consolidated common salt which restrains the action of fire. It is said in the Tamil works on Alchemy that it can be consolidated with the aid of nitre, alum, sal ammoniac, sea-water etc used in due proportions. The recipe is a secret. Such consolidated salt will generally be found as hard as ivory and it is neither soluble nor capable of absorbing moisture and it is said to possess miraculous virtues viz , the body can be lifted high up in the air, can cast off the skin (epidermis) like a serpent. It invigorates the system making it adamantine so as to live to a long age, enables the user to suppress the breath in Yoga practice, prevents sleepiness and perspiration. It is very useful in Alchemy as it is proverbially said :—

"He who consolidates salt
will consolidate all metals."

For other details see உப்பு.

கட்டுப் பேச்சு, மட்டான பேச்சு, restrained speech.

கட்டு மண், பாத்திரம் வார்க்க வுபயோகிக்கும் மண் கரு, earth mould for casting metal vessels,

கட்டு மஸ்து, தேகக் கட்டு, robust build ; sturdy growth.

கட்டு மந்திரம், இரசம் முதலிய ஓடுஞ் சரக்கு களை ஓடாமற்படித் தடுக்கவும், விஷ கடி, சில் விஷம் முதலியவற்றைப் போக்கவும், மனிதர்

அல்லது விலங்கின் வாய் முதலியவைகளைக் கடிக்காதபடித் தடை பண்ணுவதற்கு உபயோகிக்கும் மந்திர வித்தை, magical art employed for binding the mouths of men or ferocious animals or for consolidating or fixing volatile bodies.

கட்டு மருந்து, வாந்தி, பேதி, இரத்த வொழுக்கு பெரும்பாடு முதலிய போக்குகளை நிறுத்தும் மருந்து, medicine that can arrest vomiting or purging, hemorrhage, excess of menstruation (menorrhagia) etc.—Astringents; 2. விரணம், காயம், வெட்டு, புண், முதலியவைகளைக் கட்டுவதற்கு முன் இடும் ஆற்றும் மருந்து, medicines applied externally for healing a wound, injury, ulcer, sore etc. before bandaging them; 3. தமிழ் வைத்திய முறைப்படி வீரம், பூரம், இலிங்கம், முதலியவைகளைக் கட்டி, நோய்களுக்குத் தேன், முலைப்பால், மூலிகை ரசம் முதலியவைகளில் இழைத்துக் கொடுக்கும் மருந்து, pills of corrosive sublimate, muriate of mercury, vermilion etc consolidated (partially) as per rules of Tamil medicine and prescribed by Vaithyans as internal remedies after macerating in honey, breast-milk, juice of green herbs etc.

கட்டு மா, கட்டு மா மரம், graft mango tree.

கட்டு மாக்களி, கட்டிகளுக்கு வைத்துக் கட்ட வுபயோகிக்கும் மாவுக் களி, a soft composition of baked flour applied to abscesses—Poultice.

கட்டு மாத்திரை, குழந்தைகளுக் குண்டாகும் பேதி, வாந்தி இவைகளைக் கட்டுவதற்காக உபயோகிக்கும் மாத்திரை, pill serving as an agent to arrest purging and vomiting in children—Astringent pill; 2. பல மருந்துக் கூட்டுகளைக் கொண்டு இறுகும்படிச் சேர்க்கப்பட்ட மாத்திரை, a solid or crystalised pill prepared with various medicinal ingredients; 3. பேதியைக் கட்டும் மாத்திரை, pill serving to regulate loose bowels.

கட்டு மாந்தம், குழந்தைகளுக்கு மலம் கட்டுப் பட்டு, உணவு செரியாமை, வயிற்று வலி, இருமல், சுரம், கொட்டாவி, வியர்வை, முதலிய குணங்களைக் காட்டு மோர் வகை மாந்த நோய், a disease in children arising from constipation. It is marked by indigestion, stomach pain, cough, fever, yawning, perspiration etc.

கட்டு முட்டு, தேகக் கட்டு, strong physique.

கட்டு முறை, ஓடுகு சரக்குகளை நெருப்பிற் கோடாதபடிச் செய்ய சித்தர்களின் வாத நூல்களிற் சொல்லி புள்ள வழிகள், the several methods or processes laid down in the Siddhars' works on Alchemy for consolidating or fixing substances which pass off as fumes or into vapour in fire or when exposed to heat. See கட்டல்.

கட்டு ரசம், சாதி லிங்கம், a mineral substance found native in lumps in quick silver mines. It is also made artificially according to Tamil Poorna sutram compiled by Agastyar; 2. உலாந்தா லிங்கம், இதி னின்று சுத்த ரசம் எடுத்துத் தமிழ் வைத்தியத்தில் உபயோகப் படுத்துவ துண்டு, vermilion exported from Holland and said to contain more of pure mercury. It is freely used in Tamil medicines; 3. நெருப்புக் கோடாதபடிக் கட்டிய ரசம், consolidated mercury resisting the action of fire; 4. இலிங்கக் கட்டு அதாவது வைத்திய முறை யாற் கட்டிய சாதி லிங்கம். இதைச் சுரம், சீதளம், இருமல் முதலிய நோய்களுக்குக் கொடுக்கப் படும், vermilion consolidated (partially) as per process laid down in Tamil Medicine and used for curing diseases such as fever, cold, cough etc.

கட்டு வகை, see கட்டினம்; 2. கட்டி, புண், காயம், இவைகளுக்குக் கட்டுக் கட்டும் பலவித முறைகள், the different methods employed in applying bandages to boils, wounds, injuries etc.

கட்டுவகைத் திராவகம், பூ நீர், கட்டிய பூரம், கட்டிய வீரம், முதலானவைகளை வாலையிலிட்டு வடித்த திராவகம், இதைக் கட்டு வகைகளுக் குபயோகப் படுத்தப் படும். (*In Tamil Medicine*), an acid prepared by distillation from a mixture of fuller's earth, consolidated muriate of mercury, and corrosive sublimate etc. It is said to be useful for consolidating purposes in Alchemy.

கட்டு வர்க்கம், see கட்டினம்.

கட்டு வாங்கம், தேரையர் நூலிற் சொல்லி புள்ள ஓர் வகைத் தைலம். இதனால் கிராணி போம், a medicated oil described in Theraiyar's works. It is prescribed in cases of chronic diarrhoea.

கட்டுவாங் குளிகை, see கட்டுவாதிக் குளிகை.

கட்டுவாதி, நெருப்பிற்கு நிற்கும் சரக்குகளை ஓடா மற் படியக் கட்டி இரசவாதம் செய்பவன், an alchemist who is skilled in the art of fixing volatile bodies for purposes of transmutation.

கட்டுவாதிக் குளிகை, பேதியைக் கட்டும்படி அபினி சேர்த்துக் கொடுக்கு மருந்து, an astringent pill mixed with opium and given to stop purging as in cases of diarrhoea, dysentery etc.

கட்டுவாதி மாத்திரை, அபினி, சுக்குத் தூள், முதலியவைகளைச் சேர்த்து அதிசார பேதியைக் கட்டுவதற்குக் கொடுக்கும் மாத்திரை, a pill prepared as per Tamil medical works using opium, dried ginger-powder etc. and administered for diarrhoea. See also கட்டு வாதிக் குளிகை.

கட்டு விச்சி, குறி சொல்பவள், a female sooth sayer.

கட்டு விடல், உடம்பு தளர்தல், relaxation of the muscles of the body; 2. இந்திரியம் நீர்த்தல், sperm becoming watery; 3. பல வீன மடைந்து களைத்தல், to be fatigued through weakness; 4. இந்திரியம் விடுகை, discharge of semen. See கட்டுக் குலைதல்.

கட்டு விடுதல், see கட்டு விடல்; 2. பொருத்து அல்லது மூட்டுகள் மரணகாலத்தில் தளர்ச்சி யடைதல், relaxation of muscles and joints at the time of death; 3. நோய்க் கட்டி னின்று விடுபடல், to be released or cured, from stiffness of joints; 4. நோயால் மூட்டுகள் தளர்தல், relaxation of joints through disease; 5. உடம்பு பலவீனப் படல், to be weakened in body.

கட்டு வித்தி, see கட்டு விச்சி.

கட்டு விரியன், உடம்பில் சட்டுக் கட்டாக விருக் கும் ஓர்வகை விரியன் பாம்பு,(lit) it means viper having rings on the body. Band viper—Odontomous nymphs.

கட்டுவை, செம்பு, copper; 2. கட்டில், cot.

கட்டுறவி, கட் டெறும்பு, large black ant—Formica compressa.

கட் டெறும்பு, ஓர்வகைக் கறுப்பு எறும்பு, இது கடித்தால் வலித்துத் தடிக்கும், (stick +ant) a kind of black ant whose bite causes pain and swelling—Formica compressa.

கட் டேறுதல், ஆவேச முண்டாதல், to become possessed by a spirit; to be influenced by spiritual emotion.

கட்டை, விறகு, fuel; firewood; 2. உடம்பு, a contemptuous term referring to human body; 3. உயிர் நீங்கிய உடல், சவம், corpse; 4. மயிர்க் கட்டை, hair stump; 5. குட்டை, short in length; 6. குறைவு, deficiency.

கட்டைக் கரி, அடுப்புக் கரி, wood charcoal.

கட்டைக் கழுத்தன், மர வட்டை, wood-louse Hydenocarpus inebrians.

கட்டைக் காலி, கரடி, bear — Ursus americanus; 2. குறுகிய காலை யுடைய பெண், short-legged woman.

கட்டைக் கால், குறுகிய தடித்த கால், a deformed leg appearing short and stout.

கட்டைக் கீச்சான், உடம்பில் வெண்மையாக வும் கட்டுக் கட்டாகவும் உள்ள ஓர் கடல் மீன் a species of marine fish with silvery colour and longitudinal bands—Therapon genus.

கட்டைக் குரல், மந்தக் குரல், short and dull voice due to some disorder of the larynx; 2. கம்மிய குரல், low voice; 3. தடித்த குரல், harsh or grating voice.

கட்டைக் குருத்து, வாழையின் ஈற்றிலை, the last tender leaf at the stem of a plantain tree.

கட்டைக் கெளுத்தி, ஓர் பள பளப்பான 18 அங்குல நீளமுள்ள வெள்ளைக் கெளுத்து மீன், a silver-coloured river-fish about 18" in length—Marones cavasius.

கட்டைச்சி, குட்டைப் பெண், short woman.

கட்டைப் பயிர், முதிர்ந்த பயிர், full grown plant.

கட்டைப் பயிர் வெற்றிலை, முதிர்ந்த கால் னின்று கிள்ளிய வெற்றிலை, betel plucked from a full-grown betel vine.

கட்டைப் புத்தி, மழுங்கிய அறிவு, dull-wit.

கட்டைப் போடுதல், மூர்ச்சித்தல், to swoon; to faint; 2. இறத்தல், to die.

கட்டை யவிழ்த்தல், புண், கட்டி இவைகளின் கட்டுகளை நீக்கல், to untie the bandage bound over a wound or abscess.

கட்டையன், குட்டை மனிதன், short man.

கட்டை யாடு, பள்ளை யாடு, a species of dwarf goat.

கட்டையிலே கிடத்தல், இறத்தல், to suffer death, C.f. "கட்டையிலே கிடக்கு மட்டும் கவலை தானே" to be care-worn until one is laid down on the funeral pyre i.e. one's death.

கட்டையி லேறல், இறத்தல், to die; to ascend the funeral pile.

கட்டை விரல், காலின் பெரு விரல், big toe; great toe.

கட்டை வெள்ளி, மட்ட வெள்ளி, impure or unrefined silver.

கட் பலம், தான்றி, a tree, devil's abode—Terminalia belerica; 2. தேக்கு, teak—Tectona grandis.

கட்பலா, காட்டுப் பலா, jungle jack—Artocarpus hirsuta.

கட் புலம், கண் இந்திரியம், sense of sight; 2. பார்வை, vision.

கட் புலன், See கட் புலம்.

கட் பேசு, வெள்ளைக் காக்கணம், wing-leaved clitoria—Clitoria ternatea.

கட் மீன், ஓர் வகைக் கடல் மீன், cod-fish—Gadus morrhua.

கண கணத்தல், காந்தல், exhibiting perceptible heat; 2. உடம்பு சூடேறுதல், to feel feverish; developing the symptom of feverishness.

கண கணப்பு, உடம்பு சிறிது சூடா யிருத்தல், slight rise in the temperature of the body; 2. அதிகச் சூடு அல்லது உரத்த சூடு, excessive or intense heat.

கண கனைனல், உடம்பின் கொதிப்பின் குறிப்பு, feeling feverish; sign of feverishness; 2. தணிந்து எரிவதின் குறிப்பு, the glow of the fire; burning especially without flame.

கண காசகம், see கண காசம்.

கண காசம், கருங் கச்சோலம், a black variety of camphor-root plant — Alpinia sessilis.

கணைக் கடுப்பு, உடம்பின் கணைச் சூட்டினால் ஏற்பட்ட கடுப்பு. இதனால் உடம்பி லுள்ள உறுப்புகளின் தாதுக்களில் தாபிதங் கண்டு அப் பாகங்கள் வீங்கி இளைக்கச் செய்யும், inflammation from hectic fever. It is characterised by atrophy of the functional part of an organ caused by over growth (hyper-trophy) of the fibrous elements or tissues.

கணைக் கழிச்சல், குழந்தைகளுக்குப் பாற் குற்றத்தினாலும், மாக் கஞ்சி முதலிய வேறு வகை உணவினாலும், சீரண வுறுப்புகள் கோளாறடைந்து அக் கோளங்களில் வெது வீங்கி அதனால் ஏற்படும் கழிச்சல். இதனால் சீதமும், செரியாப் பால் கரிந்தன் னீர்போலும், பிறகிர்த்தி யாகி உடம்பை இளைக்கச் செய்யும், diarrhoea in children arising from digestive derangement due to defects in milk or conjee diets. It is attributed to the tubercular enlargement of the glands of the bowels, known as the mesenteric glands. It is marked by elimination of mucous, discharge of undigested milk of a dark colour and the wasting of the body.

கணைக்கன், சண்பக மரம், champaca tree—Michelia champaca.

கணைக்காய்க் கலத்தல், நூல் முறைப்படி மருந்துகளைச் சேர்த்தல், (*in Medicine*) mixing or compounding medicines as per rules of prescription.

கணைக் காய்ச்சல், கணைச் சூட்டினால் குழந்தைகளுக்குச் சாயுங் காலத்திற் சுரங் கண்டு, அதனால் உடம்பில், களைப்பு, இளைப்பு, பலஹீனம், வியர்வை முதலிய குணங்களைக் காட்டும் ஓர் வகைக் காய்ச்சல். இது உணவின் குற்றங்களினால் ஏற்படும், a kind of hectic fever associated with phthisis and common in children. It is marked by a low fever in the evenings, langour, weakness, perspiration etc. It is a condition of atrophy arising from improper feeding.

கணைக்காய்ச் செய்தல், முறைப்படிச் செய்தல், (உ-ம்) சீலை மண் கணைக்காய்ச் செய்தல், doing a thing according to rules or the prescribed process as in luting before calcination.

கணைக்காய்ச் சேர்த்தல், கணக்குப்படி மருந்துச் சரக்குகளைச் சேர்த்தல், adding or mixing up of drugs or other ingredients in proper proportions.

கணைக்காரி, குண்டு பனை, round palm — Borassus genus.

கணைக்கு, அளவு, limit.

கணைக்குப் படி, நியமித்த பிரகாரம், according to the prescribed limit or formula.

கணைங்கம், சுண்ணும்பு, lime, quick-lime.

கணைச் சக்கிரன், கரு விழியில் கோவையும், அனல் போல் காந்தலையு முண்டாக்கி வருத்து மோர் கண் ணோய், inflammation of the cornea attended with pain—Keratitis.

கணைச் சூடு, (கணம்+சூடு = குறைவு + சூடு) மாதா பிதாக்களின் நாத விந்துக்குள் அடங்கிய சூடு. இது கர்ப்பா சயத்துச் சிசுவைப் பற்றுவதால் இதற்குக் கர்ப்பச் சூடு என அர்த்தங் கொள்வதே பொருந்தும். ஏனெனில் இச் சூட்டினால் குழந்தைகட்கு உடம்பில் கணப்பு அல்லது கத கதப்பு ஏற்படும், (low + heat). It is a low heat of the skin generally supposed to be inherited from the parents by children while in the womb and so it is a constitutional heat arising from congenital causes as a result of which the children are observed to develop a low fever or heat of the skin.

NOTE—This congenital heat, as children advance in age, developes into a sensible heat giving rise to a low fever which forms the main sonrce of various diseases in them such as atropy, tabes, phthisis, rickets etc in several forms, according to the nature of the constitution, diet and idiosyncrasy. But in the Western science, such complaints are attributed chiefly to improper feeding and faulty nutrition.

கணை தீபம், எருக்கு, madar plant—Calotropis gigantea.

கணைத் தாதிசாரம், குடசப் பாலை அல்லது வெட்பாலை, dysentery rosebay — Holarhena antidysenterica ; 2. கொடிப் பாலை, cotton milk plant—Dregea volubilis alias Asclepias volubilis; 3. (கணைத்து + அதிசாரம்) குழந்தைகட்குக் கணைத்தினால் குடல் பருத்து அதனா லேற்படும் அதிசாரம், diarrhoea due to low heat arising from the enlargement of the glands of the bowels (tabes mesenterica).

கணைத் தாளி, தாளிப் பனை, fan-palm—Corypha umbraculifera.

கணைத்தி, ஓர் வைப் பரிதாரம், a prepared arsenic; 2. செங் கடம்பு, small Indian oak; 3. கணைச் சூட்டைத் தணிக்கு மருந்து, any medicine curing the low heat in children.

கணைத் தைலம், கணை நோய்க்குக் கொடுக்கும் தைலம், a medicated oil prescribed by Vaidyans for tabes, rickets, phthisis etc., in children.

கணை நாதம், ஓர் வகைச் சிவப்புக் கல். இது கங்கையில் விழும் சோண பத்திரா நதியில் கிடைக்கும். இதை இலிங்கமாக இயற்றிக் கண நாதன் எனப் பூசிப்பார்கள், a species of ammonite of a red colour common in the Shonapatra river, a tributary of the Ganges. It is greatly reverenced and worshipped as a representation of God Siva. *C.f.* சாலக் கிராமம்.

NOTE.—It is more a fossil with the impression of ammonites having mystic virtues. It is possibly akin to the eagle stone of the ancients.

கணை நோய், see கணம்.

கணபதி தாபம், வெள்ளெருக்கு, white madar plant—Calotropis gigantea (albiflora).

கணபதி மணி, அறுகம் புல், grass sacred to Ganesha—Agrostis linearis.

கணை பால ரோகம், குடலைச் சேர்த்துப் பிடித் திருக்கும் சவ்வில் அடங்கி யிருக்கிற கோளங் கள் வீங்குவதனால் குழந்தைகளுக் கேற்படு மோர்வகைக் கணை நோய். இதனால் வயிறு கோளா றடைந்து உடம்பு மெலியும், tuberculosis of the mesenteric glands in children, resulting in digestive derangement and wasting of the body—Tabes mesenterica. *C.f.* கணம்.

கணை புடம், சிறு தீப் புடம், calcination under a moderate heat.

கணைப் பாண்டு, கணை நோயினால், குழந்தைகளுக்கு இரத்தப் போக்கும் வாந்தியும் கண்டு, உடம் பிளைத்துத் தடிப்பென வீங்கிக் காணும் ஓர்வகைப் பாண்டு நோய், oedema in children arising from hectic fever. It is attended with bleeding and vomiting followed by the symptoms of dropsy such as emaciation, anemia, etc.

கணைப்பு, குளிர் காயுந் தீ, fire kindled so as to lend warmth to the body; 2. கணைப்புச் சட்டி, fire-pot ; 3. சூடு, heat generally.

கணைப்புச் சட்டி, குளிர் காய்வதற்காக வெற்பட்ட நெருப்புச் சட்டி, fire-grate used in Indian household.

கணைப்புப் போடல், குளிராலும், அல்லது சீதளம், சன்னி, இவைகளாலும் வருந்துபவர்களுக்குச் சூடுண்டாக்க அவர்களிருக்கு மிடத்திலோ அல்லது வசிக்கும் அறையிலோ தீ மூட்டல், to set up or to ignite fire in any place or room so as to lend warmt

to a person suffering from intense cold or chilliness or from delirium, apoplexy etc., resulting in coldness of the extremities.

கணப் புல், ஓர் வாசனைப் புல், a fragrant grass.

கணப் பூண்டு, கணச் சூட்டைத் தணிக்கும் பூண்டு அதாவது சின்னம்மான் பச்சரிசி, thimy-leaved spurge or false raw rice—Euphorbia thymifolia. It is so called from its use for subsiding the constitutional heat in children.

கணப் பொழுது, நொடிப் பொழுது, a moment of time.

கண மாந்தம், கண நோயினால் குழந்தைகளுக்குக் காணும் செரியாமை நோய். இதனால் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் சுரமும், இருமலும் கண்டு, குடலைச் சேர்ந்து பிடித்திருக்கும் சவ்வில் அடங்கி யுள்ள கோளங்கள் வீங்கி, அதனால் அவைகளின் வழியாய்ப் போகும் இரச வாகினிகள் அடைபட்டு, அன்னரசம் மேனிக்கு ஏறாமல் உடம்பு இளைத்துப் போகும் ஓர் மாந்த நோய். இது தான் கணச் சூட்டுக்கும், கணக் காய்ச்சலுக்கும், காரணமாகும், digestive disturbances in children due to tabes mesenterica. It is an atrophy usually associated with tubercular enlargement of the mesenteric glands of the bowels. It is marked by fever and emaciation due to the obstruction of the digestive tract due to the above enlargement. The congenital heat and hectic fever are supposed to emanate from this disease.

கண மூலம், மூலக் கணம், a kind of atrophy in children developing piles; 2. திப்பிலி வேர், root of long pepper.

கண மூலி, பெருந் தும்பை, rough toombay—Leucas aspera; 2. திப்பிலி, long pepper—Piper longum; 3. சாணாக்கி, a plant, see எருமை நாக்கி.

கணமேக சஞ்சீவி, வன மிரட்டி, (வனம் + மிரட்டி), that which threatens forest, a plant, probably குட்டாக் கொடி, an unidentified creeper.

கண மேகம் போக்கி, திப்பிலி, long-pepper—Piper longum.

கணம், கண நோய், tabes mesenterica; 2. பாலர்களின் எலும்பை உலர்த்தும் ஓர் கண நோய், a constitutional disease in infancy followed by emaciation and necrosis of the bones—Infantile atrophy; 3. வெள்ளைச் சீரகம், a white species of cummin seed—Cuminum cyminum; 4. ஓர் வகைப் புல், a species of grass; 5. அரிசித் திப்பிலி, long-pepper—Piper longum (minor); 6. கண ரோகம், atrophy resulting from diseases in children; 7. கண சுரம், a kind of hectic fever in children, see கணக் காய்ச்சல்; 8. விலங்கின் கூட்டம், a class or collection of animals; 9. மிளகு, pepper; 10. கால நுட்பம், a minute portion of time; moment; 11. குறைவு, deficiency; 12. திரட்சி, roundness, sphericity; 13. பிசாசம், demon; vampire; 14. வட்டம், circle; 15. தீப் பொறி, spark; 16. நான்கு நிமிஷம் கொண்ட கால அளவு, a short period of four minntes; 17. நீர்த் துளி, a drop of water.

கணம், மாதா பிதாக்களின் நாத விந்துக் குள் அடங்கிய வாதாதி தோஷங்களினின்று உற்பத்தியாகிக் கருப்பாசயத்துச் சிசுவைப்பற்றி அச் சிசுவினது எழுவகைத் தாதுக்களும் வன்மை யடையுங் காலத்து அதை நோயால் வருந்தச் செய்யும் நோய். இது தமிழ் வைத்தியப் படி நோயின் குணம், குறி இவைகளின் பெயரிட்டு அநேக விதமாய்க் கொள்ளப் படும், a congenital disease of the child arising from the maturity of bad humours inherited from the parents. It is an atrophy resulting from the enlargement of the bowels (tabes mesenterica). The disease progresses in several forms as the child advances in age.

According to Tamil medical science it consists of different kinds and their names signify the symptoms characterising the disease as shown under:—

1. மாந்தக் கணம், atrophy resulting from indigestion.
2. முக்குக் கணம், atrophy marked by prolapsus of the anus due to straining.
3. ஊதுக் கணம், atrophy attended with a diffuse turgidity arising from the collection of morbid fluid.
4. சுழிக் கணம், atrophy followed by the whirling of the eyes.

5. குத்தக் கணம், atrophy characterised by acute pain on the sides.

6. சீதக் கணம், atrophy arising from nutritional disorders and marked by mucous in the stools.

7. மூலக் கணம், atrophy associated with the heat of the lower rectum.

8. குட்டுக் கணம் அல்லது கழி கணம், atrophy due to excess of heat in the system resulting in diarrhoea.

9. வாதக் கணம்,	atrophy caused by the three morbid humours of the system.
10. பித்தக் கணம்,	
11. சிலேட்டுமக் கணம்,	

12. நீர்க் கணம், atrophy marked by the swelling of the extremities due to the collection of morbid fluid.

13. பிரளிக் கணம், atrophy attended with convulsions or fits and rolling of the head.

14. வரட் கணம், atrophy characterised by intense thirst due to parched up tongue.

15. கொரிப்புக் கணம், atrophy followed by inflammation of the alimentary tract.

16. பிறவிக் கணம், atrophy arising from congenital causes.

17. மசா கணம், atrophy associated with aphthae *and anemia*.

18. வீக்கக் கணம், atrophy distinguished by diffuse swelling of the body.

19. போர்க் கணம், atrophy attended with palpitation of the heart and giddiness.

20. இரத்தக் கணம், atrophy followed by hemorrhage internal or external.

21. எரி கணம், atrophy characterised by burning sensation all over the body and sleeplessness.

22. மந்தாரக் கணம், atrophy peculiar to rainy season.

23. அந்தகக் கணம், atrophy attended with cerebral affections ending in death.

24. கடு மாந்தக் கணம், atrophy attended with indigestion and swelling of the abdomen.

25. விஷ மாந்தக் கணம், atrophy or another variety of No. 1.

26. தேரைக் கணம், atrophy associated with internal fever and marked by great emaciation.

NOTE.—This disease is mentioned only in the Tamil Medical science and the particulars of diagnosis differ essentially from the European science. The above classification generally refers to atrophy (in children) as a result of diseases arising from a variety of causes with various symptoms.

These symptoms, according to the Western science, are said to be caused by faulty nutrition, bad or improper feeding or from an undeveloped condition of the constitutional diseases in children such as rickets, worms in the intestines, tabes mesenterica, scrofula, consumption, bright's disease, malarial influences, infantile remittent fever etc., invariably attended with atrophy.

கணை ரீபம், எருக்கு, madar plant — Calotropis gigantea.

கணை ரோகம், குழந்தைகளுக்கு கணைச் சூட்டினாலும், பாலின் குற்றத்தினாலும் வயிறு கோளாறடைந்து, உடம்பில் கனப் புண்டாகிச் சுரம், வியர்வை, நரம்பு வலி முதலியன ஏற்பட்டு எலும்பு குழகி, உடம்பு இளைத்து வரும் ஓர் நோய், a constitutional disease in children arising from congenital heat or bad nutrition resulting in disorder of the stomach, and glowing heat in the body. It is marked by fever, sweating of the head, nervous affection of the bones, general emaciation, rickets etc.

கணைவ சாரம், நவச் சாரம், sal-ammoniac— Hydrochlorate of Ammonia.

கணை வதிரோதயம், யானை, elephant—Elephas indicu .

கணையம், அரச மரம், peepul tree — Ficus religiosa.

கணைவலரி, அலரி, sweet-scented oleander.

கணைவன், சூத பாஷாணம், a kind of mercurial poison.

கணவா யோடு, கணவாய் மீன் எலும்பு, cuttle-fish bone—Os sepiae; 2. கணவாய்ச் சிப்பி, shell of the cuttle-fish..

கணை வாய், கணை வாய் மீன், cuttle-fish. It is a two-gilled cephalopodous mollusc with 8 arms covered with suckers and a sac.

கணைவாய்ப் பூச்சிக் கூடு, நத்தை, snail; 2. ஓர் வகைச் சிப்பி, a cephalopod—Sepia.

கணைவிச் சாடம், துரிஞ்சல், see உசில்.

கணைவிரி, அலரி, Indian willow — Nerium odorum.

கணை விருமல், கணை ரோகத்தினால் ஏற்படும் இருமல், இதனால் குழந்தைகளுக் குடம்பு இளைக்கும், a disease marked by progressive wasting or emaciation of the body and obstinate cough in children, due to tuberculosis of the intestines and the mesenteric glands—Abdominal phthisis or Bronchial phthisis.

கணை வீரம், அலரி, see கணை விரி; 2. செவ்வலரி, red oleander.

கணைவு மூங்கிகம், விஷ மூங்கில், Asiatic poison bulb—Crinum asiaticum.

கணைவு மூலி, see கணைவு மூங்கிகம்.

கணை வெட்டை, மாதா பிதாக்களின் மேக நோயினால் குழந்தைகளுக்குக் கணைச் சூடு ஏற்பட்டு அதன் மூலமாய்க் காணும் மேக வொழுக்கு, இது ஒரு உடம்பைப் பற்றிய நோய், venereal discharge found in children due to the congenital heat acquired from their parents. It is a constitutional disease.

கணை வெதுப்பு, see கணைச் சூடு.

கணு, திப்பிலி, long-pepper—Piper longum; 2. சீரகம், cummin seed.

கணுதி, வெண் சீரகச் செடி white cummin plant—Lygusticum cyminum.

கணு மூலம், திப்பிலி வேர், the root of long-pepper.

கணி, மூங்கில், bamboo—Bambusa arundinacea; 2. வேங்கை மரம், Malabar kino—Pterocarpus bilobus alias P. marsupium; 3. மருத நிலம், agricultural tract; 4. மிளகரணை, prickly scopolia—Toddalia asiatica; 5. சந்தனம், sandalpaste; 6. பிரம தண்டு, Brahmin's staff — Argemone mexicana; 7. கையாந் தகரை, bee plant or eclipse plant—Eclipta prostata alias E. alba.

கணிகம், கால நுட்பம், short duration of time; 2, கணப் பொழுது இருக்கக் கூடியது, that which lasts only for a moment.

கணிகன், சோதிடன், astrologer.

கணி காரம், கோங் கிலவு, red cotton tree.

கணிகை, முல்லை, eared-jasmine — Jasminum auriculatum.

கணிக் காரிகை, குறி சொல்லும் பெண், a female fortune teller.

கணிசம், மதிப்பு, (*in Alchemy*) estimation; 2. அளவு, measure; 3. நிறை, weight; 4. ஒலி, voice.

கணிசித்தல், சிந்தித்தல், to meditate, to contemplate; 2. உய்த் துணர்தல், to discern.

கணிச்சி, வெற் றிலை மூக் கரியுங் கத்தி, a knife used for cutting the stalk of betel leaf.

கணிஜ பேதம், செம்பு, இரும்பு முதலிய தாதுக்களின் ரூப குண பேதங்களை மாற்றி அவைகளைப் பொன்னாக்கும் வாதத் தொழில், the art of transmuting base metals such as copper, iron etc., into gold — Alchemy.

கணிதன், சோதிடன், astrologer.

கணித்தல், கணக் கிடுதல், (*in Astrology*) to reckon or calculate; 2. மனதிற் குள்ளே மந்திரம் செபித்தல், (*in Magic*) to repeat mantras mentally.

கணி மாசம், இந்துப்பு, இது பூமியி னின்றும் ஏராளமாய் கிடைக்கும், rock-salt—Sodium chloride. It is obtained in nature in large quantities.

கணி யுப்பு, கறி யுப்பு, common salt dug out from mines.

கணி வேங்கை, see உதிர வேங்கை.

கணீ ரிடல், கணீர் என்ற உலோக சப்தம் ஏற்படல், to resound.

கணீ ரிருமல், see கணீரென் றிருமல்.

கணீரென் றிருமல், உலோக சப்தமான இருமல், cough marked by a metallic sound.

கணு, மூட்டு, joint; (*In Anatomy*) the name of the two processes of the thigh-bone; the ball on which the hip bone turns in its socket—Trochanter; 2. முட்டி, knuckle; 3. எலும்புக் கணு, the tubercle of a bone; 4. முடிச்சு, knot; 5. மூங்கில், bamboo — Bambusa arundinacea; 6. திரட்சி, tubercle; 7. மரம் முதலியவைகளின் கணு, node; 8. உடம்பி லேற் படும் நரம்பு முடிச்சுகள், nodules formed in the nervous system.

கணுக் கரி, see உமில்.

கணுக்கா லெலும்பு, பாதத்தில் பிறங்கி நிற்கும் எலும்பு, ankle-bone upon which the tibia rests—Astragalus.

கணுக் கால், கால் பரடு, the joint between the tibia and the fibula above and on the sides; the part of the leg just above the foot—Ankle.

கணுக் கால் சூலை, வாதத்தின் மேலீட்டினால் கணுக் காலில் ஏற்படும் ஓர் வகைக் குத்தல், an acute or excruciating pain in the ankle due to derangement of Vayu in the system—Articular gout.

கணுக் கால் வாதம், கணுக் காலிலும், விரல் சந்துக்களிலும் பாவிக் காலைத் தூக்கி வைக்கும் போது முள் அல்லது கல் குத்துவதைப் போல் வலியை யுண்டாக்கும் ஓர் வாத நோய், a kind of arthritis affecting the ankle and the parts between the toes. It is marked by acute pin-prick pain especially when planting the feet on uneven ground. It is a disease in which the local Vayu, finds lodgment in the region of the ankle and the instep when one steps on uneven ground.

கணுக் கிரந்தி, மேகத்தினால் பொருத்துகளில் வரும் ஓர் வகைக் கிரந்திப் புண், ulceration of the joints in syphilitic arthritis; a venereal ulcer affecting the joints in the body.

கணுக் கை, மணிக் கட்டு, wrist.

கணுச் சூலை, எலும்பின் பொருத்துகளிற் காணும் வாதத்தினா லேற்பட்ட ஓர் குத்தல் நோய், an acute pain in the joints arising from rheumatism—Rheumatoid arthritis alias Osteoarthritis.

கணுத் தாபிதம், கணுக்களில் அழற்சியினால் ஏற்படும் வலி அல்லது எரிச்சல், inflammation of the joints—Arthritis.

கணுப் பவுத்திரம், எலும்பின் பொருத்துகளிற் காணும் துவாரம், a fistulous opening into a joint—Arthrosyrinx.

கணுப் பாலை, (கணு + பாலை, knot + paulay) knotty paulay—Mimusops roxburghiana; 2. ஏழிலைப் பாலை, seven-leaved milky plant—Alstonia scholaris.

கணுப் பாவகம், வாதநாராயணி, a tree, Indian poinciana—Poinciana elata.

கணு மாந்தி, நகச் சுற்று, whitlow.

கணு வட்டு, சிறு வாழைக் குலை, a small bunch of plantains.

கணு வவரை, ஓர் அவரை, a species of country bean—Dolichos lablab.

கணு வாதம், மூட்டுகளில் வரும் ஓர் வாத நோய். இதனால் கீல்களில் வீக்கம், வலி முதலியன உண்டாகும், inflammation of the joints. It is marked by swelling, pain etc; painful inflammatory or other affections of a joint—Arthrosia.

கணு விரல், விரலின் கணு, knuckle.

கணோரம், மலைப் புளிச்சை, mountain-sorrel —Hibiscus furcatus.

கணை, கரும்பு, sugar-cane — Saccharum officinarum; 2. கணை நோய் a kind of atrophy in children due to rickets or tabes mesenterica; 3. திப்பிலிக் கட்டை, the root of long-pepper—Piper longum; 4. திரண்ட வடிவு, cylindrical shape; 5. கால் நடைகளுக்கு ஏற்படும் நோய், a disease attacking cattle.

கணைக் காய்ச்சல், see கணைக் காய்ச்சல்.

கணைக் கால், முழந்தாளின் கீழ்க் கால், that portion below the knee—Shin; shank.

கணைக் கால் பொருத்து, கணைக் காலுக்கும் பாதத்திற்கும் இடையே யுள்ள மூட்டெலும்புகள், the space between the bones of the leg and the foot; 2. பரடு, heel.

கணைக் கை, முன்னங் கை, fore-arm—Antebrachium.

கணைச் சுரம், see கணைக் காய்ச்சல்.

கணைச் சூடு, see கணைச் சூடு.

கணைப் பிரண்டை, ஓர் வித இலவங்கப் பட்டை, a kind of cinnamon—Alseodaphne semicarpifolia.

கணைப் புல், see ஓட்டுப் புல்.

கணைப் புள் தோஷம், உச்சி, கண் இமைகள் குழிந்து, பால் தங்காது, பச்சை நிறமாய்க் கழிந்து, பறவைக் குரல், முதலிய குணங்களைக் காட்டுமோர் குழந்தை தோஷ நோய். (பாலசேகரம்), a kind of bad humour or morbific diathesis in children due to their being taken out in the open air during the evening time. It is marked by depression of the fontanelle,

sunken eyes, vomiting or eructation of consumed milk, purging green stools, shrill cry due to the affection of the larynx etc.

கணைப் பூடு, திருவாளிப் பூடு அதாவது செவ் வாமணக்கு, red castor plant — Ricinus communis.

கணை மூங்கில், நீர்ப் பாங்குள்ள நிலங்களில் விளையு மோர் பூடு, a plant found commonly grown in damp places. C.f. பொன் னாங் கண்ணி.

கணை மூலம், see கணை மூலம்.

கணைய கோளம், ஆண் பின்னைக்கு, மூத்திரப் பைக்கும் நீர்த் தாரைக்கும் நடுவே சுற்றி யுள்ள கோளம், a gland surrounding the neck of the bladder and the urethra in the male—Prostate gland.

கணைய நீர், வயிற் றண்டை யிருக்கும் கணையம் என்ற கோளத்தி னின்று உமிழ் நீரைப் போல் பொசியும் ஓர் விதத் தடிப்பான நீர், a thick transparent fluid secreted by the pancreas—Pancreatic juice.

கணைய மேதிலம், இரைப்பைக்குப் பின் சற்றுக் கீழாக மண் ணீரலுக்கும் சிறு குடலுக்கும் சம் பந்தமா யுள்ள ஓர் பெரிய நீண்ட கோளம். இது உழு வகரப் பிடிபோல் நீண்டும் வளைந்து சப்பையானது மான வோர் உறுப்பு. இது 6-8" நீளம், 1½" பருமன், ½-1" கனம், a large elongated gland below the stomach and in relation with the spleen and the duodenum (small intestines)—Pancreas It is 6-8" by 1½" by ½ to 1' See திலம்.

கணையம், கணைய மேதிலம், which see; 2. பொன், gold.

கணையா கன்னி, வாடா மல்லிகை, everlasting jasmine —Gomphrena globosa; 2. வளைந்த தடி, a curved club.

கணை யுலக்கை, பூணில்லா வுலக்கை, a pestle or rice pounder without ferrule.

கணை வெட்டை, குட லுறுப்புத் தாக்கப் படுவதா லேற்படும் ஓர் வெட்டை நோய், a congenital disease in children marked by tuberculosis of the mesenteric gland.

கண், இடம், place; 2. மூங்கில், bamboo — Bambusa arundinacea; 3. கரும்பு, sugar-cane—Saccharum officinarum; 4. அல்லி, Indian water-lily — Nymphaea genus; 5. கணு, a knot or a joint in a tree; 6. மயிற் றோகைக் கண், the spangle in a peacock's tail; 7. துவாரம், hole as in கண் ணறை, a cell; 8. தேங்காய்க் கண், any one of the three pits found on the top surface of a cocoanut shell; 9. புண் ணின் கண், the core of a boil; 10. விழி, அதாவது ஐம் பொறிகளி லொன்று. இரு வகைக் கண்களில் ஒன்றாகிய புறக் கண். இது முகத்தின் நெற்றியின் கீழுள்ள இரண்டு குழிகளுக் குள் அழகு பொருந்தவும், அதிக வில்தூரமான பார்வைக்கு இசையும் படிக் கும் ஏற்றபடி அமைக்கப் பெற்ற ஓர் முக்கிய மான உறுப்பு, the eye, one of the five sensory organs, and one of the two kinds i.e. the external or the physical eye. It is an organ of extensive vision set in two sockets below the forehead so beautifully fixed as to form an optical apparatus by means of which objects at a distance may be distinctly seen; 11. அகக் கண் அதாவது ஞானக் கண். கண்ணுக் கெதிரே பார்க்கக் கூடாதவற்றை அறியக்கூடிய அகக் கண். இது வடமொழி யில் ஞான திருஷ்டி யென்று சொல்லப் படும். ஒரு ஞானி இப் பார்வையைக்கொண்டு தூரத் தில் நடக்குஞ் செய்திகளைத் தெரிந்து கொள் ளவும், அங்கு நிகழும் விஷயங்களை எதிரில் நின்று பார்ப்பது போற் பார்க்கவும் முடியும். ஆகவே இக் கண்ணுக்கு உலகத்தி லுள்ள எல்லா வஸ்துக்களும் நேராகவே தோன்றும். ஆகவே துரிய நிலையி லிருக்கும் எவரும் மறைந்து கிடக்கும் பொருள்களைப் பார்க்க வும் தூரத்தில் நடக்கும் சங்கதிகளைச் சொல் லவும் கூடும். (*In Yoga Philosophy*) (lit) internal eye or the eye of wisdom. With the help of this sight, a sage can, not only understand what happens at a distant place but also see as if before him what takes place beyond the reach of human vision. So these eyes are open to all things in this world and therefore this kind of mental perception is known as Clairvoyance or Second sight. It is a power, as explained in psychology, attributed to any person in the mesmeric state, by which he discerns objects concealed from ordinary sight and tells what is happening at a distance; 12. மாந்திரீக நூலின் படிச் சாதாரணமாய்க் கண்ணிற்கு அநேக சக்திக ளுண்டு என்று ஏற்படுகிறது. அதனால் ஒருவரை வசப் படுத்தவும், பயப்படும் படிச் செய்யவும், நேரில் இல்லாத வஸ்துவைப் பார்ப்பதாக நினைக்கும் படிக்கும், இருக்கும் வஸ்துவை

இவ்வே வொளி விழைக்கு மாறும் செய்ய வும் இயலும். இன்னும் பல மாறியான காட்சிகளுக்கும் அது காரணமு மாகும். (*In Mantric Philosophy*) the eye is defined as the medium of several illusions as being endowed with magnetic powers to control many sensations arising around a person induced by a hypnotist. It is by the force of his eye that a subject can be controlled or terrified or made to see what does not exist or otherwise rendered unable to see what really exists, before him. Several other similar illusions are created by the influencing power of the eye.

NOTE.—The eye emits a peculiar magnetic ray which is sufficient to make one tremble feeling an electric-like shock. It is the powerful glance of a spiritual Guru, that enables his disciple to attain spiritual illumination and the fixed eye of a Hypnotist that makes his subjects yield to his wishes. It was the powerful glance of Napolean that halted multitudes of people and held them in confusion. So the organ eye plays an important role in Occult science.

கண், சாதாரணமாக அதன் அமைப்பு, தன்மை, நோய் இவைகளைக் கருதி அடியிற் கண்டபடிப் பல வகைப்படும், the eye ordinarily according to its structure, nature, disease etc. is known by different names as mentioned under:—

1. கருடக் கண், squint-eye.
2. காக்கைக் கண், eye with one-sided or oblique look like that of a crow.
3. முண்டைக் கண், distorted or rolling eye—Goggle-eye.
4. ஆந்தைக் கண், big-eye; owl-eye.
5. யானைக் கண், small eye, not proportionate to the body.
6. பூனைக் கண் அல்லது புலிக் கண், dazzling eye.
7. மீன் கண், prominent eye.
8. நரக் கண், same as No. 1.
9. செங் கண் அல்லது இரத்தக் கண், blood-shot eye.
10. மயிற் கண், beautiful eye.
11. மாட்டுக் கண், big eye.
12. அஞ்சனக் கண் அல்லது மைக் கண், eye bordered with dark eyelids.
13. சாக்கண் அல்லது பஞ் சடைந்த கண், eye which has lost its lustre as it is just before death.
14. சாயல் கண், same as No. 2.
15. மஞ்சட் கண், eye affected by jaundice.
16. குண்டு மணிக் கண், small red eye.
17. குருட்டுக் கண், blind eye.
18. இராக் கண், eye the vision of which fails in the night.
19. அழி கண், rotten eye.
20. ஒற்றைக் கண், one or single eye.
21. முக் கண், three eyes including the second sight; three eyes in monstrous births.
22. கூச்சக் கண், eye intolerant to light.
23. கூர்மைக் கண், sharp eye.
24. கோணக் கண், deformed eye.
25. மயக்குக் கண், hypnotic eye.
26. ஒட்டுக் கண், eye in which the lids stick to the eyeball or to each other; eye attended with watery and muco-purulent discharge—Sore-eye.
27. மாலைக் கண், eye the vision of which fails in twilight or sunset.
28. பகற் கண், eye the vision of which fails in the day.
29. புளித்த கண், blear-eye.
30. இளித்தற் கண், eye attended with inflammation of the eyelids and marked by irritation and watery discharge.—Lachrimal eye.
31. கொள்ளிக் கண், evil-eye.
32. உள்வாங் கண், sunken eye.
33. விரி கண், see No. 15.
34. சுழற் கண், rotary eye.
35. சுற்றுக் கண், whirling eye.
36. பறவைக் கண், bird's eye.
37. சுருங்குக் கண், shrunken eye; eye marked by atrophy.
38. கடைக் கண், the corner of the eye.
39. புகைச்சற் கண், eye with corneal opacity
40. பூக் கண், cataract eye.
41. பீளைக் கண், eye with muco-purulent discharge; purulent eye.

42. இருட் கண், eye with a dark opacity; eye with a blind or partially blind area in the visual field as in *Scotoma*.

43. கீழ்க் கண், eye with a downward look.

44. திறந்த கண், eye in which the eye lids cannot be closed; blinking eye.

45. இமிட்டுக் கண், winking eye.

46. நிலைக் குத்தற் கண், fixed eye.

47. பொய்க் கண், false or artificial eye.

48. பிரி கண், abnormal turning of the eyes outward.

49. சுழி கண், உள் வளைந்த கண், inward turning of the eyes; cross-eye.

50. நாலு கண், eyes with the spectacles on.

51. இழி கண், eye in old age with Arcus senilis.

கண் கடை, கடைக் கண், the corner of the eye (inner or outer).

கண் கட்டி, கண்ணில் உண்டாகும் கட்டி, வீக்கம் அல்லது சதை வளர்தி, an abscess, swelling or other fleshy growth in the eye: 2. புருவத்தி லுண்டாகும் கட்டி, a small inflammatory tumour on the edge of the eye-lid—Stye.

கண் கட்டி வித்தை, see கண் கட்டு சாலம்.

கண் கட்டு, கண் நோய்களில் கண்ணுக் கிடும் மருந்துக் கட்டு, bandage to the eye after application of medicine; 2. கண்ணைக் கட்டுதல், to fold something over the eyes so as to blind or hinder the person from seeing—Blind-foldness; 3. கண் மறைப்பு வித்தை. இதனால் இல்லாதது இருப்பதாகவும், இருப்பது இல்லாததாகவும் தோற்றும். இது கரு வேலையினால் ஏற்படும் ஓர் பொய்க் காட்சி, a deceptive appearance or vision in which objects are believed to be seen and sensation experienced when there was nothing before one, to do so and vice versa. This is a false perception brought about by magic—Illusion. See கண் கட்டு சாலம்.

NOTE—This should not be confounded with hulluoination created in cases of delirium or that produced at times owing to the inhalation of various ethers such as chloroform, nitrous oxide, hydro-carbonates, etc.

கண் கட்டுக் காசம், கண்ணில் யாதொரு குற்றங்களும் ஏற்படாமலே கண்ணைக் கட்டியது போல் பார்வையைக் கெடுத்துக் குருடாக்கும் கரு விழியைச் சேர்ந்த ஓர் நோய். இது மூளை அல்லது கண் நரம்பின் குற்றங்களினால் ஏற்படும், blindness occurring without apparent lesion of the eye, from disease of the optic nerve, retina or the brain—Amaurosis or Gutta serena. *C.f.* கண் காசப் படலம்.

கண் கட்டுச் சாலம், கண் பார்வையை மறைத்து அல்லது வேறு படுத்தி வேற் றுருவமாகத் தோன்றச் செய்யு மோர் சாலவித்தை, the art of deceiving or imposing upon a person, an unreal vision by which he is made to believe things which have no real existence—Illusion.

NOTE—It is one of the several kinds of magic fully explained and illustrated in the works of Pulippani a native of China and one of the Tamil Siddhars of Southern India.

கண் கட்டுதல், கண்ணைக் கட்டி விடுதல், to blindfold; 2. மந்திரத்தால் கண்ணை மறைத்தல், to blind the eyes by magic.

கண் கட்டு வித்தை, கண்ணை மறைக்கும் வித்தை, the art of hood-winking by jugglary. It is a sleight of hand trick. See கண் கட்டு சாலம்.

கண் கயில், கண் கொட்டாங் கச்சி, the top portion of a cocoanut with three round spots in it, like eyes.

கண் கரித்தல், கண் னெரிவு. இது தூசு, கரிக்கும் வஸ்துக்கள் முதலியன கண்ணிற் படுவதா லுண்டாகும், a mild form of irritation of the eyes, especially when foreign bodies such as dust or any fragments of pungent substances etc. come in contact with the eyes; 2. அனுதாபம் காட்டல், sympathising. *C.f.*

"கண்ணுக்குக் கரித்தவர்களும்,
மண்ணுக்குப் பிறந்தவர்களும் வேண்டும்"

metaphorically implies sympathy shown by an interested person as indicated in the above proverb.

கண் கருப்பு, உடம்பின் சூட்டினால் கண்ணில் ஏற்படும் வலி, irritation in the eye due to excessive heat of the body.

கண் கலக்கம், an abnormal flow of tears down the cheek through grief, pain, etc—Epiphora.

கண் கலங்கல், துக்கம், வருத்தம் முதலிய வற்ருல் அதிகமாகக் கண்ணீர் விடல், watering of the eye from lachrimation due to grief, trouble etc.; 2. கண்ணில் காயம் முதலியவற்ருல் இரத்தங் கட்டல், an extravasation of blood from the injury of the eyes.—Black eye.

கண் கலவி, தலைவனும் தலைவியும் முதற் பார்வையால் காமக் குறிப்பைக் காட்டுதல். exchange of amorous glances between lovers even during their first meeting.

கண் கலிக்கம், கண் ரோகம், சன்னி, முதலிய நோய்களில் கண்ணுக் கிடும் கார மருந்து, stimulant application for the eye, in cases of delirium, eye diseases, apoplexy etc. See கண் ணோய்க் காரம்.

கண் கல், கண்ணுக்குள் ளிருக்கும் கல்லைப் போன்ற ஓர் கெட்டியான வஸ்து, a hard substance like stone i.e. the lens of the eye; 2. கண்ணில் தங்கி நின்ற துன் புறுத்தும் வஸ்துக்களை வெளிப்படுத்துவதற் காக உபயோகிக்கும் ஓர் வகைக் கிளிஞ்சிற் கல், the cover of a small shell or other small calcareous object used for removing foreign substances from the eye—Eye-stone.

கண் கழு நீர், see கண் கழுவு நீர்.

கண் கழுவுதல், கண்களைத் தண்ணீர் அல்லது மருந்து நீரிட்டுக் கழுவுதல், to clean the eyes with water or lotion.

கண் கழுவு நீர், கண்ணோய்களைக் கழுவ வேண்டி உபயோகிக்கும் மருந்து நீர், lotion for the eyes; eye-wash—Collyrium.

கண்கள் நாசனி, செக் கிராப். இது ஓர் அரிய பூடு, கண்ணைக் கெடுக்கும் வஸ்துவாயினும், சித்தர்கள் இதைக் காய சித்திக்காக உபயோகப் படுத்துவார்கள், a rare plant used by Siddhars for rejuvenation although it appears to affect the eyesight. It is not known if it is a red variety of Indian chickweed—Mollugo spergula alias M. parviflora.

NOTE—*Many of the drugs used by Siddhars appear to be dangerous ones and unless one is fully acquainted with or familiar to the use of such drugs, they cannot be used for rejuvenation or other purposes mentioned in their science. It is only a thorough and wide study that can divulge the secrets involved in employing them.*

கண் கறுத்த தேங்காய், முற்றிய தேங்காய், a fully matured cocoanut.

கண் கனலுதல், கண் சிவத்தல், eyes becoming inflamed; reddening of the eyes.

கண் காசப் படலம், (கண் + காசம் + படலம்), (eye + lens + cornea). கண்களில் வாயு தங்குவதனுல் மூன்ரும் பிறைச் சவ்வை அது சரித்து அதனுல் கரு விழியில் பூப் படர்ந்து கண் ணொளியை மறைத்துக் குருடாக்கும் ஓர் கண்ணோய், an eye disease arising from Vayu finding its lodgment in the eyes and as a result of which the transparent membrane forming the third coat in the fore-part of the eye through which the rays of light pass (cornea) is affected, cataract formed and the vision is destroyed. It is a disease affecting both the cornea and the lens. See இலிங்க நாசனம்.

கண் காசம், கரு விழிக்குக் காணும் நோய், any disease of the eye in general, affecting the black of the eye—Cataract; 2. கண் பூ, opacity of the cornea. *C.f.* கண் காசப் படலம்.

கண் காட்சி, விசித்திரமான வேடிக்கைகளைக் கண்ணுறக் காணுதல், the act of seeing sights or visiting scenes of interest.

கண் காட்சி சாலை, நானு விதமான வஸ்துக்களையும் பழமையான சாமான்களையும் கண்ணுறும்படி வைத்திருக்கும் சாலை, a repository of interesting objects, curiosities, antiques etc.—Museum.

கண் காணு தோடல், மறுபடியும் திரும்பாது முற்றிலும் நோய் குணமாதல், curing of diseases radically without a recurrence or relapse.

கண் காந்தல், கண் எரிதல், burning sensation of the eyes through inflammation—Ophthalmia.

கண்காரம், கண்ணிற் கிடும் கார மருந்து, pungent substance used as a stimulant application for the eye. See கண் கலிக்கம்.

கண் காரர், அஞ்சனம் பார்ப் போர், (*in Occult science*) those who fix the eyes and look steadily at the crystal — Crystal gazer.

கண் கிடங்கில் விழல், அசீரண பேதி, வாந்தி பேதி முதலிய நோய்களினுல் கண் குழிப்படுதல், sinking of the eyes, as within a

hole, observed in cases of diarrhoea, cholera etc.

கண் குத்த விடல், சாகும் வாயில் கண் நிலைக் குத்த விடல், eye becoming fixed and wide open, especially under the influence of a powerful feeling or on approaching death.

கண் குத்தல், கண்ணில் முள் அல்லது ஊசி யாற் குத்துவது போற் காணும் வலி. இது வாயுவினால் பிறக்கு மென்க் கருதப் படும், piercing, penetrating or pin-prick pain experienced in the eye. This is said to arise from the derangement of Vayu in the system; 2. கண்ணைக் குத்தல், to prick the eye with something.

கண் குத்திப் பாம்பு, பச்சைப் பாம்பு. இது பச்சை நிறமாதலால் மரங்களின் இலைகளில் தங்கி யிருக்கும் போது கண்ணுக்குத் தெரியாது. இது அடுத்தவர்களது கண்ணைக் குத்துவது வழக்க மாதலால் இப் பெயர். இவ் வகையில் பெரும் பாம்புகள் கடித்தால் மிக்க விஷத்தையும், சில சமயம் அபாயத்தையும் மரணத்தையு முண்டு பண்ணும், tree-snake or whip snake — Trimeresurus anamellensis. It is uniformly green and as such, it very closely resembles the leaves of the branch on which it rests, generally not perceived until it prepares to dart. It is so called in Tamil because it strikes on the eye of those who approach it. The bite of large specimens of this kind of snake is venomous and dangerous and sometimes even proves fatal; 2. ஓர் வகை விரியன் பாம்பு, pit-viper or arboreal snake—Crotodilae.

NOTE.—The other species in South India are:—

1. Halys ellioti alias Trigonocephalus elliotti,
2. Hypnale nepa (the Cararvilla) alias Coluber nepa,
3. Cophias hypnale,
4. Hynale cararvala.
5. Trigonocephalus hypnale,
6. Peltopeler macrolepis alias Trimeresurus macrolepis,

These are known by the very large scales with which the head and the body are covered. They are distinguished by the pit or depression between the eye and the nostrils in the loreal region, the triangular broad head and the short thick body.

கண் குந்தம், கரு விழியின் நடுவே யுள்ள பாபாவின் மேல் அழற்சியினால் பருவைப் போன்ற விலக்கி யுண்டாகிப் புடைத்துக் காணும் ஓர் கண்ணோய், a tubercle causing the protrusion of the cornea due to inflammation of the central part of the retina—Staphyloma.

கண் குருடு, கண்ணுக்கு ஏறபட்ட குருட்டுத் தன்மை, blindness of the eye; 2. மாதம் அல்லது பட்சத்தி லொருதடவை கண்ணில் வலியும் கடுப்பு முண்டாகிப் பருவைப் போல் சதை முளைத்துத் தினந் தோறும் நகங்கிப் பீளை கட்டியும், தலை, முகம், பிடரி இவ் விடங்களில் வலியை உண்டாக்கியும் கண்ணைக் கெடுக்கும் ஓர் கண்ணோய், a disease of the eye marked by pain, inflammation, from eruptions (which subsequently disappear) purulent discharge, headache, pain in the face and the nape occurring periodically (once in a month or a fortnight) and finally ending in blindness.

கண் குவளை, கண் குழி யாகிய எலும்பின் பகுதி, the bony cavity in which the eye is situated—Orbit or socket for the eye.

கண் குழி, see கண் குவளை.

கண் குழிதல், கண் உள்ளடங்கிக் குழி விழுதல், sinking of the eyes causing hollowness or cavity by excessive purgation as in cholera etc. or by emaciation. See கண் ஓடுங்கல் விழல்.

கண் குளிர்ச்சி, கண்ணுக் கேற்படும் குளிர்ச்சி, coolness or the cooling of the eyes.

கண் குளிர்தல், கண் எரிச்சலினின்று குளிர்ச்சி யடைதல், to feel coolness in the eyes after being relieved from the burning sensation.

கண் கூச்சம், அதிக வெளிச்சத்தைப் பார்க்க முடியாது கண் கூசுதல், incapacity of the eye to receive light from external objects owing to extreme sensitiveness; eyes incapable to bear strong light; intolerance to light.—Photophobia.

கண் கூடு, கண் குவளை, which see; 2. பிரத்தியட்சம், that which is apparent to actual vision.

கண் கூர்மை, பார்வையின் அட்பம், acuteness of eye-sight or vision.

கண் கெடுதல், பார்வை குறைதல், defects in the eye sight; 2. பார்வை அழிதல், loss of sight or vision; 3. கண் காயப் படுதல், affection of the eye through injury.

கண் கொட்டல், கண் ணிமைத்தல், to wink.

கண் கொதி, கண் திருஷ்டி, blight from an evil eye. See கண் ணூறு.

கண் கொதிப்பு, கண்ணுக்குச் சூட்டினு லேற்படும் அழற்சி, inflammation of the eye arising from excessive heat.

கண் கொத்திப் பாம்பு, see கண் குத்திப் பாம்பு.

கண் சதை, கண்ணிற் குண் டான மாமிச வளர்ச்சி, an abnormal growth of flesh in the eye; 2. கண்ணின் மேற்றோல் அல்லது கண்ணிமைத் தோலின் தடிப்பு, thickening of the sclerotic of the eye or of the eyelid.

கண் சந்து நோய், வெண் விழிக்கும் இமைச் சந்திற்கும் நடுவில் பிறக்கும் நோய்கள், diseases which occur in the fissure (palpebral fissure) between the eyelids and the eyeball.

கண் சமிக்கை, கண் சாடை, giving a hint or intimation by a motion of the eye-lids; 2. இமை கொட்டல், to shut and open the eye-lids alternately; winking of the eye; nictitation.

கண் சவ்வு, கண் இரப்பையையும், விழியையும் கவர்ந் துள்ள மெல்லிய சவ்வு, the delicate membrane that lines the eyelids and covers the eye-ball—Conjunctiva.

கண் சாய்தல், உறங்கல், to doze; 2. தூங்கல், to sleep; 3. அறிவு தளர்தல், to lose one's wits; 4. அன்பு குறைதல், to grow cold in love.

கண் சாய்த்தல், பதனழிதல், (*in Botany*) to lose native freshness and bloom; 2. வாடல், to wither.

கண் சாய்வு, சாய்ந்த பார்வை, oblique look; side-look.

கண் சிமிட்டல், அடிக்கடி இமை கொட்டல், to blink continuously because of a spasm of the eyelids—Blapharism.

கண் சிமிட்டி, சிமிட்டுக் கண்ணன், அல்லது சிமிட்டுக் கண்ணி, a person who blinks continuously — Blinkard; 2. சிமிட்டுக் கண்ணி, a sensitive plant.

கண் சிம்புளித்தல், கண் கூசல், to be sensitive to light.

கண் சிரட்டை, கண் கொட்டாங் கச்சி, a cocoanut shell with three eyes (holes) or depressions.

கண் சிவத்தல், கண் செந்நிற மடைதல், reddening of the eyes as from disease, heat, pain etc.

கண் சிவப்பு, கண் ணழற்சி, inflammation of the eye or of the eye-lids—Ophthalmia; 2. செங் கண், red eye or blood-shot eye; 3. கண் வெந்து, கனத்து, நீர் வடிந்து, கண் சிறுத்து, தேகம் இளைத்து, ஏப்பத்தை யுண் டாக்கு மோர் கண்ணோய், an eye-disease marked by inflammation, heaviness and diminution of the eyes, watery discharge, emaciation of the body and belching.

கண் சுருட்டல், கண் ணுறக்கல், to be drowsy or sleepy.

கண் சுருண்டு போதல், கண் சோர்வடைதல், the eye becoming or getting atrophied.

கண் சுருளல், கண் இரப்பை மடங்குதல், the folding of the eyelids.

கண் சுருள், இரப்பை மடிப்பு, the fold of the eyelid.

கண் சுழல்வு, see கண் சுருளல்.

கண் சுழற்சி, விழி தனக்குத் தானே விரைவாகச் சுழலுதல். இது பக்கங்களிலும், மேல் கீழாகவும் வளைந்து வளைந்தும், இன்னும் பலவிதமாகக் கலந்தும் சுழலும், an involuntary rapid movement of the eye-ball, which may be either lateral, rotary or mixed *i.e.* consisting of two varieties—Nystagmus.

கண் செம்முதல், கண் பொங்குதல், eyes getting inflamed as from excessive heat; 2. கண் மூடுதல், closing of the eyes.

கண் சொக்கல், see கண் சொருகுதல், 2. பெண்களுக்கு சம்போகத்தில் கண்ணுக் கேற்படு மோர் நிலைமை, a peculiar sleepy condition of the eyes felt by women during coitus; 3 தன்னை யறியாது மயங்கி நித்திரை கொள்ளல், (*in Occult science*) dizziness with inclination to sleep induced by hypnotism.

கண் சொக்குதல், கண் மயங்குதல், to feel heaviness in the eyes as from sleep. *C.f.* கண் சொக்கல்.

கண் சொருகல், நித்திரை பிடித்தல்; peculiar turning of the eyes just before sleep; 2. கண் சொக்கல், the turning of the eye simultaneously upward and inward; 3. சாக்கை வலிப்பு, வலிப்பு, சன்னி, முதலிய நோய்களில் கண்கள் அடையும் நிலைமை, a condition of the eyes observed generally during the attack of some diseases, such as epileptic fits, ordinary convulsions, delirium etc; 4. ஓர் மரணக் குறி, a symptom of death in which the eyes assume a peculiar turn.

கண் சொருகுதல், விழி உள் வாங்கல், rolling up of the eyes as in swoon, death, fits etc.

கண் சோதி, கண்ணின் கருவிழி யின் மையம், the area of clearest vision in the centre of the retina—Macula lutea.

கண்டக சங்கம், (கண்டகம் + சங்கு) முட் சங்கு, இது உபரசச் சரக்குகளி லொன்று, chunk with thorn-like points. It is one of the natural bodies classified in Tamil medicine; 2. முட்களை யுடைய சங்கஞ் செடி, four-spined monetia or mistletoe berry thorn—Azima tetracantha monetia.

கண்டகச் சிலை, see கண்டகிச் சிலை.

கண்டகத் துருமம், முள் இலவு, thorny silk-cotton—Bombax heptaphyllum.

கண்டகத் துவாரம், முள்ளந் தண் டெலும்பின் துளை, the central hole of the spine—Foramen spinale.

கண்டக பலம், மேலே முட்களைப்போல் தோல் அமைந்த பழம் அதாவது பலாப் பழம், a fruit with thorn-like processes of rind i.e. jack fruit—Atrocarpus integrifolia.

கண்டகம், முள், thorn; 2. முள் ளெலும்பு, a bone with thorn-like process i.e. the spine; 3. நீர் முள்ளி, cow thorn; water thorn — Hygrophila spinosa alias Asteracantha longifolia alias Ruellia longifolia; 4. ஒட்டை மரம், camel tree, or camel thistle—Echinops echinatus; 5. மர வயிரம், the hard inner part (core) of a tree; 6. காடு, forest; 7. இலைக் கள்ளி, leafy tree-spurge—Euphorbia neriifolia; 8. சிலேட்டுமம் இருக்கும் பை, a sac that encloses phlegm; 9. அஞ்சனம், a black paint used in magic; 10. நகம், finger nail; 11. பதனீர், treacle; 12. வெல்லப் பாகு, molasses; 13. கற் கண்டு, candied sugar.

கண்ட கரப்பன், தொண்டையில் வரும் ஓர் வகைக் கரப்பன் நோய். இதனால் தலை கனத்துக் காது வலித்து, கண்டத்தில் கரகரத்துக் காணும், a carpang or a kind of rash affecting the throat. It is marked by heaviness of head, ear ache and a slight irritation in the throat 2. குழந்தைகளுக்குத் தொண்டையில் ஏற்படும் கண்ட மாலையைப் போன்ற ஓர்விதக் கரப்பன், a form of skin eruption in children consisting of reddish papules of a scrofulous nature in the throat—Lichen scrofulosus.

கண்ட கலுகம், சர்க்கரை வள்ளி, sweet potato.

கண்ட கள்ளி, பச்சான் கள்ளி, a kind of spurge (*unidentified*).

கண்டக ஞக்கன், காண்டா மிருகக் கொம்பு, the horn of a rhinoceros.

கண்ட காசனம், ஒட்டகம், camel—Camelus dromedarius.

கண்ட காரகம், see கண்ட காரிகை.

கண்ட காரம், see கண்ட காரிகை; 2. முள் இலவு, thorny silk cotton—Bombax heptaphyllum; 3. கோடலி, potato plum — Flacourtia sapida.

கண்ட காரி, }
கண்ட காரிகை, } கண்டங் கத்திரி, yellow-berried night shade — Solanum jacquini.

கண்டகி, முதுகின் முள் ளெலும்பு, spine; a bone with thorny-process—Vertebrae; 2. மூங்கில், bamboo—Bambusa arundinacea; 3. கருங் காலி, ebony tree-Acacia sundara; 4. வளைய லுப்பு, a white medicinal salt extracted from fuller's earth known as Pooneer; glass gall—Fel vitri; 5. தாழை, fragrant screw pine—Pandanus odoratissimus; 6. சிகப்பு சதுரக் கள்ளி, red quadrangular spurge of the Euphorbia genus (*unidentified*); 7. இலந்தை, jujube-tree—Zizyphus jujuba; 8. நேபாளத்தி லுள்ள சாலக் கிராமம் உற்பத்தியாகும் கண்டகி நதி, Gandak, a sacred river in Nepaul wherein originates the sacred stone known as Salagram, a fossil ammonite. See கண்டகிக் கல்.

கண்டகிக் கல், சாலக் கிராமம், இக் கல் வட இந்தியாவில் சில நதிகளி லிருந்து எடுக்கப் படும். அவைகளிற் சில விஷ்ணு அம்சமெனக் கருதப்படுவதால், விஷ்ணு பக்தர்கள் அவை

கரைச் சிறந்தவைகளாகக் கொண்டு பூசை செய்வார்கள். அதில் லட்சுமி, நாராயணி, வாமனம், தாமோதரம், நரசிங்கம் என்று அனேக விதங்க ளுண்டு. It is a ammonite stone (fossil) having mysterious virtues, found in certain rivers of Northern India and referred to in Vaishnava religion. It is used in the worship of Vishnu and in other ceremonies of Vaishnavites as it is said that Vishnu's virtue is in it. There are different sorts, as enumerated above in Tamil. See சாலக் கிராமம்.

கண்டகிச் சிலை, see கண்டகிக் கல். இது காசிக் கருகே யுள்ள கண்டகி என்னும் நதியில் அகப்படுவதால் இதற்கு இப் பெயர், Kandaki stone. It is so called because it is found in the river Kandaka near Benares. A sacred stone for worshipping Vishnu. *C.f.* கண நாதம்.

கண்ட சித்தம், பெரு முத்தக் காசு, a big species of Cyperus grass — Cyperus juncifolius.

கண்ட குச்ச சன்னி, மிக்க சுரத்தினால் கண்டத்தைக் குறுக்கிப் பிடிப்பது போலும், முட் சொருகியது போலும், உணர்ச்சியைக் காட்டி அலரி எழுந்து ஓடல், நடுக்கல், மூர்ச்சை, ஆகிய குணங்களைக் காட்டும் ஓர் வகை சன்னி. இது 18 நாளைக்குள் கொல்லும். இது பதின் மூன்று சன்னி வகைகளில் ஒன்று, (*In Ayurveda*) a kind of delirium from fever with a feeling of throtling caused by the affection of esophageal muscles of the neck from excessive fever. It is marked by a wild and excited cry, restlessness, sudden rising from the bed and running about, trembling, swooning, etc. It proves fatal in 18 days and is classified as one of the 18 kinds of delirium.

கண்ட குச்சம், சுரம் கொடூரமாய்க் காய்ந்து உடல் நொந்து நடுங்கித் தொண்டை, நாக்கு இவ் விடங்களில் முள்ளுண்டாகி வாந்தி, விக்கல், மூச்சு, இளைப்பு முதலியன ஏற்படும் காய்ச்சல் நோய், (*In Ayurveda*) a kind of virulent fever caused by the affection of throat. It is marked by excessive fever, pain, tremor, minute projections in the throat and on the tongue and followed by vomiting, hiccough, hard-breathing, fatigue etc.

கண்ட குடம், தொண்டையி லுண்டாகும் புடைப்பு. இது கண்டத்தி லுள்ள விசுத்திக் கோளத்தின் குற்றத்தினால் ஏற்படும், a spherical protruberance in the throat. It is a morbid enlargement of the thyroid gland on the front of the neck—Goitre.

கண்ட குரண்டம், நீலச்-செம் முள்ளி, crested purple nail-dye—Barberic cristata.

கண்ட கூச்ச சன்னி, see கண்ட குச்ச சன்னி.

கண்ட கூஷ் மாண்டகம். ஆயுர் வேதப்படிச் சாம்பற் பூசினிக்காயைக்கொண்டு தயாரித்த லேகியம், an electuary prepared according to the process of Ayurveda from ash-coloured pumpkin.

கண்ட கூபம், குரல் வளை, the cavity of the throat.

கண்டக் கருவி, கண்டத்தைச் சோதிக்க உபயோகப் படுத்தும் கருவி, an instrument for examining the interior of the esophagus; 2. மிடற்றுக் கருவி, a cavity in the throat containing vocal cords—Larynx.

கண்டக் காய்ச்சல், குழந்தைகளுக்கும் பாலர்களுக்கும் காணும் ஓர் விதத் தொத்துக் காய்ச்சல். இதில் அம்மையைப் போன்ற குறிகள் தோன்றுவதால் சிலர் இதை அம்மையென்றே நினைப்ப துண்டு. இதனால் குளிர்சுரம், தொண்டைக் கம்மல், உடம்பு முழுதும் அம்மை மாதிரி குருக்கள், வாந்தி, நாடித் துடிப்பு, முதலிய குணங்கள் காணும்; சில நாளைக் குள் குருக்கள் மறைந்து சுரம் நின்று விடும். இதைத் தகுந்தபடிக் கவனிக்காவிடில் பல நோய்க ளேற்படும், an acute contagious disease resembling almost small-pox. It principally attacks children and youths but sometimes adults also. The general symptoms are chillness or shivering followed by fever, sore-throat, eruptions or rash on the body, nausea, rapid pulse etc. Eruptions may fade or disappear after some days and fever departs with the eruption. If not properly attended to, it may bring on several complications. *C.f.* கண்ட குச்சம்.

கண்டக் கிரகம், குழந்தைகளுக்குக் குரலைப் பற்றி நொந்து, மார்பிலும், பிடரியிலும், வலியை யுண்டாக்கு மோர் நோய், an affection of the throat in children accompanied by pain in the chest and the nape.

கண்டக் கிரந்தி, இளநீர்க் கட்டி, inflammation of the tonsils — Tonsilitis; 2. தொண்டைப் புண், an ulcer in the throat causing hoarseness; 3. தொண்டை கட்டிக் கொண்டு, அவ் விடத்தி லுண்டாகும், ஓர் வித விரண நோய், a mistaken name for syphtheretic ulcer causing sore-throat etc.; 4. தொண்டைக் குள் உண்டாகும் எவ் விதப் பரு அல்லது சிலந்தி. இது மேகத்தினு லுண்டாகும், any syphilitic sore or ulcer formed inside the throat; 5. உண்ணாக் கண்டை தொண்டைக் கிரு பக்கங்களிலு முள்ள கோளங்களுக்கு ஏற்படும் தாபிதத்தினு லுண்டாகும் புண். இதனால் வீக்கம், வலி, சீழ் பிடித்தல் முதலியவை யுண்டாகும், a sore due to the inflammation of a small fleshy mass known as the tonsil, on either side of the throat. It is marked by swelling and pain; acute suppurative inflammation of the tonsils —Quinsy.

NOTE 1.—Sore-throat occurs as a symptom in various maladies, viz. — Diphtheria, mumps, consumption, syphilis, inflammation of the wind-pipe, croup, thrush etc. A severe sore-throat may cause acute tonsilitis or quinsy. In such cases, both the tonsils are affected. The part attacked becomes much inflamed and swollen, and often either ulcerates or becomes the seat of an abscess.

NOTE 2.—This should not be confounded with the curious form of chronic ulcerated throat occurring in weak boys and girls and allied to diphtheria.

கண்டக் குறு குறுப்பு, தொண்டைக் குள் ளுண் டாகு மோர் விதச் சப்தம், a crackling or rattling sound produced in the throat; 2. கப வாத சுரத்தினால் பீடிக்கப் பட்ட பொழுது நுரை யீரலில் ஏற்படு மோர் சத் தம், a rattling sound in the lungs known as *rales*, heard in cases of pneumonia—Crepitus indux.

NOTE—No distinction is made here between the sounds in the throat, in the lungs or in between the throat and the neck.

கண்டங் கணம், திப்பிலி, long-pepper—Piper longum.

கண்டங் கத்தாரி, செங் கத்தாரி அதாவது மயி லடிக் குருத்து, false peacock's-foot tree —Niebuhria linearis.

கண்டங் கத்திரி, ஓர் முள் செடி, இதன் இலை கள் அகலமாயும், நடுவில் முள்ளு முள்ளாக வும், காய்கள் மஞ்சளாகவும், பச்சையாகவு மிருக்கும். இது ஓர் சிறிய படர் செடி. மைதானங்களிலும், மணற் பாங்கான இடங் களிலும் விளையும். சாதாரணமாய்ப் புழக் கடையிலும், கொல்லை வேலி ஓரங்களிலும், குளக்கரை முதலிய பல விடங்களிலும் இயற்கையாகவே யுண்டாகும். செடி முழுவ தும் முட்கள் நிறைந்த தாகவே யிருக்கும். இதற்குப் பல பெயருண்டு, அவையாவன:— முள் கொடிச்சி, கபகாசனி, பொன் னிறத்தி, சிங்கினி, மரதகின் பஞ்சு, சுவாச கா சக்கினி, முதலியன. இதைச் சுரம், சுவாச காசம், இருமல் மார் வலி, வாதம், இவைகளுக்குக் கொடுக்கலாம். விதைகளை நெருப்பி லிட்டு அவைகளின் புகையைக் காட்டப் பற்களி லுள்ள பூச்சிகள் வெளி வந்து விழும். இதன் கஷாயம் சுரத்திற்கும், சய ரோகத்திற்கும். கொடுக்கப் படும் கஷாயத்தோடு திப்பிலி யும் தேனும் சேர்த்துக் குடிக்கச் சல தோஷம் போம்; கல் லுப்பும், பெருங்காய மும் சேர்த்துக் குடிக்க இளைப் பிருமல் போம். இதன் காய், கறிக் குதவும், காய்ச் சாற்றினால் தொண்டைக் கட்டு நீங்கும். விதையைச் சாராயத்தில் அரைத்துக் கொடு க்க வாந்தியை நிறுத்தும்; a thorny plant, yellow-berried night shade — Solanum jacquini alias S. Xanthocarpum. Leaves are broad and prickly in the centre on both surfaces; fruit is yellow or green as the case may be; a small and low spreading prickly shrub; found in plains and sandy tracts, but is very common in backyards of houses, gardens, hedges and tank bunds etc. The plant is fully armed and is found naturally all over the land. It is known by several names as mentioned above.

It is much esteemed as an expectorant and is used in catarrhal fever, asthma, cough and pain in the chest. Fumigation with the smoke of the burning seeds is reputed to cure toothache by eliminating the germs. The decoction of the plant is a good remedy in fever and consumptive complaints, and that of the root is given with long pepper and honey in catarrh and with rock-salt and asafoetida in spasmodic cough. The fruit is used in curries and the juice of the berry in cases of sore throat. The root beaten up and mixed with wine is given to check vomiting.

NOTE—It is also a valuable medicine for dropsy, being a powerful diuretic and is

also useful in violent chronic and low fever, dropsy or general anasarca, low vitality of the general system, and enlargement of the liver and the spleen. It is also recommended in dysuria, leprosy, costiveness, stone in the bladder etc. An electuary prepared from this is generally prescribed for lung complaints.

கண்டங் கத்திரி நீர், see. அண்ட நீர்.

கண்டங் கரு வழலை, ஓர் வகைக் கரு வழலைப் பாம்பு. இதன் உடம்பு கருப்பாயும் இடைக் கிடையே வெண்ணிறமான வரிகள் பல பிரிவுகளாக அமைந்து இருக்கும் இது சட்டை கழட்டும்—Krait. It is a name for the black serpent of the Lycodon family—Bungarus caeruleus. The black body is divided into divisions by thin white arches. It casts off the skin periodically.

கண்டங் கருவிலி, see கண்டங் கரு வழலை.

கண்டங் கனம் திப்பிலி, long-pepper—Piper longum.

கண்டங் காரி, } see கண்டங் கத்திரி.
கண்டங் காலி, }

கண்டங் கிரந்தி, see கண்டச் சிரந்தி.

கண்ட சந்து ரோகம், தொண்டைக்குள் இரண்டு பக்கங்களிலும், இரண்டு சொளக்களும் வீங்கி கெதி போல் கட்டிக் கொண்டு, வாய் திறக்க முடியாது வேதனையை யுண்டாக்கி எப் பண்டங்களையும் விழுங்க முடியாமல் வலியையு முண்டாக்கு மோர் நோய். இதை சைத்தியக கட்டி யெனக் கூறுவது முண்டு, enlargement of the tonsils on either side of the throat attended with pain and difficulty in swallowing.

NOTE—This is frequently the result of repeated attacks of inflammation of the tonsils (tonsilitis), but enlargement of the tonsils may also be congenital or it may exist if there is any constitutional scrofulous taint.

கண்ட சருக்கரை, கற் கண்டு, sugar-candy; 2. கரும்பின் சருக்கரை sugar extracted from sugar-cane.

கண்ட சருக்கரைத் தேறு, கற்கண்டுக் கட்டி, a lump of sugar-candy.

கண்ட சாறுகம், வாத பித்தக் கோளாறினால் கழுத்திற்கு உட் புறத்தில் சாதிக் காயைப் போல் திரட்சியான வீக்கம் கண்டு அதன் மேல் முட்களைப் போல் முளைத்துக் கழுத்தைத் திருப்பவும் மூச்சு விடவும், விழுங்க முடியாமலும் செய்யு மோர் நோய். இதனால் சுரம், சோகை, தொண்டைக் கம்மல், காது அண்டை வீக்கம், தளர்ச்சி, முதலிய குணங்கள் ஏற்படும். இது ஓர் தொத்து நோய், an acute infectious disease in which a nodular growth in the shape of a nutmeg crops up in the throat, which is felt as if it was stuffed with bristles or pricked by thorns. It is due to the concerted action of the deranged Vayu(wind) and bile in the system. It is attended with swelling of the larynx and the pharynx and the consequent inability to turn the neck, and difficulty of breathing and swallowing. The general symptoms are:—fever, anemia, sore-throat, prostration, swelling of the gland near the ear etc. It is an infectious disease.

NOTE—This should not be confounded with croup (கண்டக் கரம்) which also exhibits a similar symptom. Although these are allied diseases, there are points of difference.

கண்ட சித்தர், சித்தருக்குள் தேறினவர், the most cultured in the School of Siddhars.

கண்ட சிலேட்டும ரோகணி, கண்டத்தில் காணு மோர் வகைச் சிலேட்டும நோய். இது கழுத்தினுட் புறத்தில் தடித்து மாமிசத்தைத் புண்டாக்கி, விரல் கெண்டையைப் போல் நீளமல் வாயின் வழியாய் வெளி வடித்து உடம்பை மெலியச் செய்யும், a disease of the throat arising from the deranged condition of phlegm in the system. It is marked by the thickening of the walls inside the throat by the formation of a mucous membrane and attended with an oily exudation often extending to the mouth. It is followed by emaciation and general weakness of the body.

கண்ட கண்டி, ஓர் வகைத் தொண்டை வீக்கம், a swelling of the tonsils.

கண்ட சுத்தி, தொண்டையி லுள்ள கபத்தை வெளிப் படுத்த யோகிகள் அனுசரிக்கு முறை, a process of cleansing the throat adopted by a practising yogi and thus freeing it from phlegmatic obstructions; 2. முகம் கழுவும் போது தொண்டையைச் சுத்தி செய்தல், cleaning the throat ordinarily when washing the face; 3. கண்ட மாலையிற் காணும் குத்தல் நோய், an acute pain experienced in scrofulous complaints.

கண்ட சுரம், எட்டி, nux vomica — Strychnos nux vomica ; 2. தொண்டை வியாதியினால் ஏற்படும் சுரம், fever from throat affections. See கண்டக் காய்ச்சல்.

கண்ட சூலை, தொண்டையில் ஏற்படும் ஓர் குத்தல் நோய், an acute pain in the throat ; 2. கண்டத்தின் கோளங்களில் உண்டாகும் குத்தல் வலி, an acute pain felt in the throat owing to the inflammation of the glands of the neck ; glandular disease of the neck.

கண்ட சோஷம், தொண்டை வரட்சி, dryness of the throat ; 2. வரண்ட தொண்டை, dry throat.

கண்டச் சகனம், குரல் வளையில் வெண் மாசு படிந்து, மூச்சுவிட முடியாது கோழைகட்டிக் கணீ ரென்று இருமல், திணறுதல், முதலிய குணங்களைக் காட்டுமோர் தொண்டை நோய். இது குழந்தைகளுக்குச் சீதளத்தினாலும், பனிக் காற்றினாலும் ஏற்படும், a disease of the throat in children characterised by laborious and suffocative breathing due to some white patches formed in the larynx, spasm, metallic cough, discharge of mucous fluid etc.—Croup. It is said to arise from cold, exposure to damp and dewy weather and other changeable atmospheric conditions.

கண்டச் சங்கு, முட் சங்கு. see கண்டக சங்கம்.

கண்டச் சிரடம், மர வட்டை, wood louse—Hydenocarpus inebrians

கண்ட தலம், தாழம் பூ அல்லது தாழை, fragrant screw pine—Pandamus odoratissimus.

கண்ட தாபன ரோகம், குரல் வளையின் அழற்சியினால் வறட்சி கண்டு, தொண்டை கம்மி, இருமல், வலி, விழுங்க முடியாமை முதலிய குணங்களைக் காட்டும் ஓர் தொண்டை நோய், inflammation of the larynx attended with dryness and soreness of the throat, cough, pain, difficulty in swallowing (dysphagia) etc.—Laryngitis.

கண்ட திப்பிலி, வங்காளத் திப்பிலி, Bengal long-pepper—Clavica roxburghii.

கண்டது கடையது, இழிவான பண்டங்கள், waste and worthless stuff or trash, said of persons and generally of children who indiscriminately eat whatever they come across with although they are considered worthless.

கண்ட துண்டம், சிறியதும் பெரியது மான பல துண்டுகள், pieces of varied sizes big, small and moderate.

கண்ட தேசம், கழுத்தை ஒட்டிய கன்ன பாகம், the region of the cheek adjoining the neck.

கண்டத் தாபனம், see கண்ட தாபனம்.

கண்டத் தானம், கண்ட ஸ்நானம் அதாவது கண்டம் அல்லது கழுத்து வரையில் குளித்தல், bathing without immersing or wetting the head in water ; 2. கழுத்தின் பாகம், the region of the neck—Cervical region.

கண்ட நாளம், தொண்டைக் குழி, gullet ; 2. கழுத்தின் கா ரிரத்தக் குழல்கள், the veins pertaining to the neck—Jugular veins.

கண்டந் திறத்தல், தொண்டை திறத்தல், the formation of an artificial opening into the trachea—Tracheotomy ; 2. கூச்சலிடல், to make a loud cry, said in a figurative sense ; 3. குரல் எடுத்துக் காட்டல், to become clear or shrill in the voice of the throat ; modulating the sound of the voice in the cartilagenous cavity of the larynx.

கண்ட பதம், பூ நாகம், flower cobra,—the smallest of the kind found in flowers. It is extremely venomous; 2. மண்ணுளிப் பாம்பு, earth-worm.

கண்ட பத்திரம், கோடலி, see கண்ட காரம்.

கண்ட பத்திரிகம், கத்தரிக் காய், brinjal — Solanum melongena.

கண்ட பலம், இலவு, silk cotton — Bombax malabarica.

கண்ட பலி, குாமுல், the heart of a tree.

கண்ட பாடலி, பாதிரி, trumpet flower tree.

கண்ட பாதம், see கண்ட பத்திரம்.

கண்ட பித்த ரோகணி, ஓர் வகைத் தொண்டை நோய். இது கழுத்திற் குட் புறத்தில் மூக்கில் பத்தையைப் போல் தன் மாமிசத்தை யுண்டாக்கி அதனால் அவ்விடத்தில் வேதனை, தொடக் கூடாத வலி, சுரம், தாகம், தாகம், சோர்தல் என்னும் குணங்களை உண்டாக்கும், a disease of the throat attended with an abnormal growth of flesh inside the neck and the consequent uneasiness, pain, fever, thirst, burning sensation, fatigue etc.

கண்ட பித்தம், பித்தத்தா லெழுந்த ஓர் வகைத் தொண்டை நோய். இதனால் குரல் கனத்துக் கண்டத்தில் புண் போலாகிப் புற விகவும், கா வழுவழுத்து வரண்டும், தாளடியில் கனப்பும், காதிரைச்சலும்-காதூதும், a throat disease due to the deranged condition of bile in the system. It is marked by inflammation of the throat, violent streching pain on the back of the neck, viscous coating and dryness of the tongue, affection of the jaw, noise in the ear etc.

கண்ட பீசம், ஐகாரம், the mystic letter "I" in Tamil; 2. கிலு கிலுப்பை விதை, the seed of rattle-wort plant.

கண்ட பீடம், தொண்டைக் குத்தல், a sharp or acute pain in the throat.

கண்ட பீரம், அலரி, oleander — Nerium odorum.

கண்ட பீனிசம், மூக்குள் கண்டைக் காயைப் போன்ற சதை வளர்ந்து அடைத்துக் கொண்டு, மூச்சு விடுவதற்குப் போதுமான இடமற்று, அதனால் தலையினின்றும் நீர் சதா மூக்கின் வழியாயும் நெஞ்சிற் குள்ளும் இறங்கிக் கபம் கட்டு மோர் பீனிசம், a from catarrh resulting in a smooth growth of flesh of the size of solanum *i.e.* a polypus developing in the nasal canal and obstructing the free passage for respiration. It is followed by a free and frequent mucous discharge from the nose, formation of phlegm in the air-passages owing to the descent of a portion of the mucous discharge into them—Nasal polypus.

கண்ட புங்கிசம், see கண்டக் கத்திரி.

கண்ட பூர்த்தி, கழுத்து வரை அதாவது நிறைவு, fullness up to the neck as in eating food; repletion.

கண்ட பேரண்ட பட்சி, இருதலைப் பட்சி, a monstrous and mythical two-headed bird represented as holding an elephant or a serpent in its beak and in its claws.

NOTE.—Compare this with the Angka of the Arabs, Ipos of the Greeks, Griffin of the European heraldry, Gryphon of Marco polo, and also with Roc in Sindbad the Sailor and his adventures with the gigantic bird (பேரண்டம்)—(Arabian Nights).

கண்ட பேர் தழுவாள், ஊர்க் கள்ளி, which see.

கண்டப் பனி, கால் நடைகளுக் குதவாக் கொடிய பனி, heavy and thick dew injurious to cattle; 2. தொண்டையையும் தாடையும் இறுக்கும் பனி, heavy dew affecting the jaw and the throat in men and women.

கண்டப் புற்று, தொண்டையின் அழுத கோளத்தி லுண்டாகும் ஓர்வகைப் புற்று. இது ஆங்கிலேய வைத்தியத்தில் அசாத்திய நோய் எனவும், சத்திர சிகிச்சையால் அழிவுற்ற கோளத்தின் பாகத்தை அறுத்து நீக்குவதே பரிகார மெனவும் கொள்ளப் படும், cancer of the thyroid gland in the throat, for which there is only one treatment in Allopathic medicine viz. the removal of all the affected portions of the gland by early operation, as it is considered to be incurable otherwise—Cancer. See கண்ட குடம்.

கண்ட மணி, கழுத்தி லுள்ள முருந்து, thyroid cartilage.

கண்ட மண்டலம், கழுத்துப் பாகம். இது உடம்பினுள் ளமைந்த மூம் மண்டலத்தி லொன்றாகிய சந்திர மண்டலமே. அதாவது தலை, கழுத்து, தோள் இவைகள் சேர்ந்தது, one of the three mystic regions in the human body *i.e.* the moon comprising the head, the neck and the shoulders.

NOTE.—(*In Agama Philosophy*) it is the region assigned for the worship of கிரியா சத்தி, one of the three energies of God by which the worshipper affects the creation and the evolution of the Universe.

கண்ட மதுரம், மா மரம், mango tree—Mangifera indica.

கண்ட மாலை, தாய் தந்தையரின் உடம்பின் விகற்பத்தாலும், இரத்தக் கேட்டினாலும், கழுத்தைச் சுற்றி யிருக்கும் கோளங்கள் வீங்கி வலித்துச் சீழ் கொண்டு உடைந்து இரண மாகி, நெடு நாளிருக்கும் குருமலை கிளர்ந்துக் கொண்டு தன் புறத்தும் ஓர் நோய். இது கண்டத்தைச் சுற்றி மாலைபோல் பிறப்பதால் இதற்கு இப் பெயர், a congenital disease in children arising from the maturity of bad humours inherited from their parents as a result of the difference in the nature of their (parent's) constitutions arising from the impurities of blood. It is marked by a string of hard, glossy, pain-

less nodular or elongated swellings about the neck or about the throat with slowly suppurating abscesses and fistulous passages, the inflamed structure being subject to cheesy degeneration—Scrofula. It is so called because it resembles a garland round the neck.

NOTE.—In this disease, many small tumours like plums appear round the neck and they are produced by diseased fat and phlegm. Although it is incurable ordinarily, it is said that Hindu Psychotherapeutists can successfully treat this disease because they know that mental activity improves every physical function of the body.

They lay much stress or emphasis on the circulation of nerve currents more so than they do upon the circulation of blood. For fuller details, see Hindu Medical treatment by Dorothy Chaplain.

கண்ட மாலை விரணம் போக்கி, செம் மந்தாரை, கண்ட மாலை என்ற நோயைப் போக்கக் கூடியதாதலின் இப் பெயர், red mountain ebony—Bauhinia variegata. It is so called from its curing scrofula.

கண்ட மூங்கில், ஓர் வகை மூங்கில், a kind of bamboo-tree—Bambusa genus.

கண்ட மூலம், கழுத்தின் அடிப் பாகம், the bottom or the deepest part of the throat.

கண்ட மேல், கழுத்திற்கு மேல் அதாவது தலை, the head which is above the neck.

கண்டம், கண்ட சருக்கரை, a coarse kind of sugar or sugar candy ; 2. கழுத்து, neck ; 3. வெல்லம், jaggery ; 4. கள்ளி, a common term for milk-spurge plant—Euphorbia (genus); 5. தொண்டை, throat; 6. கழுத்து, neck 7. குன்றி வேர், liquorice root—Abrus precatorius ; 8. சாதி லிங்கம், vermilion or cinnabar—Red sulphide of mercury ; 9. உயிருக் கேற்படும் ஆபத்து, an accident endangering life ; fatal end or disaster ; 10. கண்ட மாலையைப் போன்ற ஓர் கட்டி, a glandular swelling or any other excrescence on the neck ; goitre ; bronchocele ; 11. நில வேம்பு, ground neem — Andrographis paniculata ; 12. நீர்க் குருவி, a water-bird ; 13. கண்டங் கத்திரி, yellow-berried night-shade—Solanum jacquinii; 14. துண்டம், a piece or a fragment ; 15. பிரிவு, section ; division ; 16. தத்து, (*in Astrology*) malignity of evil planets as experienced in its effects in critical periods costing one his life ; 17. துரிசு, blue vitriol—Copper sulphate ; 18. குரல், voice ; 19. கொப்புளம், boil ; 20. பரு, pimple ; 21. கடைந்த கூட்டுக் கறி, a dish in which vegetables are made into a pulp after adding curry-stuff to it.

கண்ட ரத்தக் குழல், கழுத்தின் இரு பக்கமும் ஓடும் நாடிகள், the large veins (two, one on each side) of the neck—Jugular veins.

கண்ட ரத்தம், கழுத்தின் ரத்தம், blood in the neck ; 2. துண்டு இரத்தம், a clot or drop of blood ; 3. கழுத்தில் ஏற் படும் ஓர் நோய், a disease of the neck. See கண்ட ரத்த ரோகணி.

கண்ட ரத்த ரோகணி, கழுத்தின் உட் புறத்தில் தின் மாமிசம் வளர்ந்து, அதில் கரி நெருப்பைப் போன்ற கொப்புளங்கள் நிறைந்து காணும் ஓர் நோய். இது தொண்டை வலி, சுரம், தாகம், சோர்வு, முதலிய குணங்களைக் காட்டும், enlargement of the tonsils of the throat attended with ulceration of the affected part. It is marked by difficulty in breathing and swallowing, pain in the ears, fever, thirst, fatigue etc.—Quinsy.

கண்டர நாடி, see கண்டரை.

கண்டரம், தசை நார்களை எலும்புடன் கட்டும் ஓர் கயிறைப் போன்ற நார், a bundle of fibres by which a muscle is attached to a bone—Tendon ; 2. ஓர் முக்கியமான இரத்தக் குழாய், a principal blood vessel in the body ; 3. பெரிய நாடி அல்லது நாளம், a large artery or vein.

கண்ட ரவி, துரிசுச் செம்பு, copper extracted from blue vitriol (copper sulphate).

கண்டரி, கண்டங் கத்திரி, prickly brinjal—Solanum xanthocarpum.

கண்டரிக் கிரந்தி, (கண்டம் + அரி கிரந்தி) தொண்டைக் குள் ஏற்படும் அரி கிரந்தி, a phagedenic ulcer with erosions inside the throat.

கண்டரை, ஆதார நாடி, பெரு நாடி அல்லது மகா நாடி. இது உடம்பி லுள்ள எல்லா நாடி களுக்கும் காரணமாக விருக்கும் ஓர் முக்கிய மான செவ் விரத்தக் குழல். இது இருத யத்தி லிருந்து இடது சடரத்தின் மேற் பகுதி யில் துவங்கிச் சற்றே மிதந்து மறுபடியும்

இடது புப்புச வேரைக் கடந்து, இடது பக்கத்தை நோக்கிப் பின்னுக்கு வளைந்து, முன்னந் தண்டின் இடது பக்கமாக நெஞ்சறைக் குள் ளிறங்கி, விதானத்தின் வழியாய் வயிற்றறைக் குட் சென்று, இடுப்பின் வழியாய் வலது இடது பக்கங்களில் இரண்டாகப் பிரிந்து, செவ் விரத்தத்தை உடம்பில் ஒவ் வொரு பகுதிக்கும் பாயச்செய்து அவ்விடங் களைப் போஷிக்கும், the great artery that springs from the main chamber of the heart *i.e.* the left ventricle and gives rise to the pulmonary artery and crossing the root of the lungs passes down in front of the back bone. It distributes itself into the stomach and then ends with its bifurcation at the lumbar region into common iliac. It distributes the blood through these arteries to all parts of the body, and thus feeds the surrounding tissues—Aorta.

கண்டரைச் சுருக்கம், கண்டரை நாடியின் ஒடுக் கம், the narrowing or the structure of the aorta—Aortostenosis.

கண்டரை தாபிதம், கண்டரை நாடிக்கு ஏற் படும் அழற்சி, inflammation of the aorta —Aortitis.

கண்டரை விரிவு, கண்டரை நாடி விரிதல், aortic dilation—Aortectasia.

கண்டர், துருசு, blue vitriol, copper sulphate, more correctly copper acetate.

கண்டர் செம்பு, துரிசி லின்று எடுத்த சுத்த மான செம்பு, pure copper extracted from copper sulphate.

கண்டர்தவன செம்பாக்கி, குதிரை வாலிப் புல், horse tail grass — Panicum frumentaceum.

கண்டர் பற்பி, உப்பிரி மாரி, which see.

கண்டலங் காய்,(கண்டல் + காய்) இம் மரத்தைச் சாதாரணமாய் மலையாளத்தில் காணலாம். இதன் பூக்கள் சிறியவைகளாயும், மஞ்சள் வர்ணமாயும், காய் உருண்டையாயு மிருக்கும். விதையி லின்று எண்ணெய் எடுத்துத் தலை மயிருக்கும், விளக்கு எரிப்பதற்கும் உபயோ கிக்கப் படும். இதன் பிசின் கபில நிறமாயும் ஒடியுந் தன்மை யுள்ளதாயு மிருக்கும், rhizofora fruit otherwise known as Indian wooden pomegranate —Carapa moluccensis alias C. oboyata. It is a tree with spherical fruit and small yellowish flowers, found in Malabar. *Oil is expressed* from its seeds and it is used as hair-oil and also for burning purposes. It also yields a clear brown brittle resin.

கண்டலம், முள்ளி, இது தசமூலத் தொன்று, *prickly brinjal*—Solanum indicum. It forms one of the 10 ingredients of Dasamoolam. given in very many diseases; 2. கருவேல், a tree yielding a species of gum arabic or Indian gum *arabic* — *Mimosa* arabica alias Acacia arabica.

கண்டலி, நீர் முள்ளி, water-thorn—Hygrophila spinosa alias Ruellia longifolia.

கண்டலி வுச்சு, சாரணை, a plant; one-styled trianthema—Trianthema monogyna.

கண்டல், தாழை, an odoriferous plant; fragrant screw-pine — Pandama oderatissima; 2. பூக் கண்டல் செடி, a shrub known as mangrove —Kandelia rheedii, see கண்டல்; 3. பேய்ச் கண்டல் மரம், a *small tree; demon candel*; fire-fly tree—Rhizophora mucronata; 4. முள்ளிக் கீரை, prickly spinach—Amaranthus spinosus; 5. நீர் முள்ளி, water-thorn—Hygrophila spinosa; 6. வெண் கண்டல், white mangrove—*Dichotomus mangrove*; 7. முள்ளி, Indian night-shade—Solanum indicum; 8. ஓர் செந் நிறமான கடல் மீன், a reddish sea-fish about 12 inches long—Scolopsis vosmeri.

கண்டல், சிறு கண்டல் என்னும் ஓர் செடி. வெண்மையும் பச்சையுங் கலந்த பூக்கள்; ஒரு கொத்தில் நான்கு முதல் ஒன்பது பூக் களிருக்கும். பழம் பெரிதாக விருக்கும். இது தென் கன்னடம், மலையாளம் இவ் விடங்களின் உப்புக் கழி யோரங்களில் முளைக்கும். இதன் பட்டை யுடன் சுக்கும், திப்பிலியும் சேர்த்துப் பன்னீரால் அரைத்துக் கொடுக்க நீரிழிவு குண மாகும். பட்டைத் தோலைப் பதப் படுத் தவும் சாயத்திற்கும் உபயோகிப்ப துண்டு. இதில் பலவித முண்டு, small candel shrub also known as mangrove — Kandelia rheedii. Its flowers are large, white and green; leaves quite entire; four to nine-*flowered*; fruit, large and oblong. Commonly found in South Canara and Malabar near tidal back-waters. Bark crushed and mixed with crushed dried ginger, long-pepper and rose-water is *a cure for* diabetes. The bark is also

used in tanning and it also gives a dye. The tree consists of the following varieties:—

1. சிறு கண்டல், small bulb-like candel—Kandelia rheedii.
2. பூக் கண்டல், flower candel tree—Rhizophora candel.
3. சீனக் கண்டல் அல்லது கரைக் கண்டல், China mangrove or sea-candel—Lumnitzera racemosa.
4. பேய்க் கண்டல், demon candel—Rhizophora mucronata.
5. வெண் கண்டல், white mangrove—Avicennia officinalis.
6. காட்டுக் கண்டல், wild cassia—Carallia corymbosa.

கண்டல் கரைசல், கட்டியும் குழம்பும் (உ-ம்) கண்டல் கரைசலாகப் பேதியாதல், solid and semi-solid purgation.

கண்ட வல்லி, சீயக் காய், soap-pod—Acacia concinna.

கண்டவாத ரோகணி, ஓர் வகைத் தொண்டை நோய். இது கழுத்திற் குட் புறத்தில் நீர் மாமிச முளைகளை உண்டாக்கி, அம் மார்க்கத்தை அடைத்து, நாவை ஆட வொட்டாமற் செய்யும். அதனால் நெஞ்சும், வாயும் உலர்தல், கழுத்திலும், செவியிலும் நோதல், முதலிய கஷ்டங்க ளுண்டாகும், a disease of the throat attended with small fleshy growths and thereby obstructing the passage and preventing the movement of the tongue. It is marked by dryness of the chest and the mouth and pain in the neck and the ear; 2. நாக்கில் முளைகள் எழும்பித் தொண்டை மார்க்கத்தை அடைத்து மிக்க வலியை யுண்டாக்கி வாத ரோகத்திற் குண்டான குறிகளைக் காட்டு மோர் நோய், a disease in which a vegetation of extremely painful fleshy nodules crop up all over the tongue, which tend to obstruct the passage to the throat with other distressing symptoms characteristic of deranged Vayu in the system.

கண்டற் குயம், (கண்டல்+குயம்) தாழை முகை, (lit) flourished breast i.e., fully developed breast; 2. தாழை, a sweet-scented pine—Pandanus odoratissima; 3. தாழை விழுது, aerial root of screw-pine.

கண்டற் சருக்கரை, கண்டல் மரத்தின் பழ ரசத்தினின்று தயாரிக்கும் சருக்கரை, sugar extracted from the juice of the fruit of mangrove tree — Rhizophora mucronata; 2. கண்டல் மரத்தின் வேரி னின்று தயாரிக்கும் உப்பு, sugar (strictly salt) extracted from the aerial roots of the above mentioned tree and named the Mangrove sugar.

NOTE.—Sugar is a colloquial name for salt as சீத்திற் சருக்கரை.

கண்டற் பட்டை, கண்ட மரத்தின் பட்டை, the bark of the mangrove tree. It is used in tanning.

கண்டாக்கினி, பறவை, a bird.

கண்டாஞ்சி, முள் வேல மரம், buffalo-thorn tree,—Acacia latronum; 2. கண்டாஞ்சி மரம், entire-leaved staff tree—Gymnosporia emarginata.

கண்டாந் துலி, ஓர் வகை முள்ளி, Mysore purple prickly nail dye—Barieria mysorensis.

கண்டாதிக் கிருதம், கண்டங் கத்தரி நெய், a medicated ghee prepared from the prickly brinjal with other bazaar drugs.

கண்டாத்திரி, கஞ்சா, gunjah plant—Cannabis sativa.

கண்டாத்திரிக் கிருதம், கஞ்சா சேர்ந்த மருந்து நெய், a medicated ghee in which ganjah forms an important ingredient.

கண்டாத்திரி லேகியம், கஞ்சா, இஞ்சி முதலியவைகள் சேர்ந்த பூரணாதியைப் போன்ற ஓர் லேகியம், an electuary (like *Puranathi*) with opium and ginger as chief ingredients.

கண்டா பலம், பலாப் பழம், jack-fruit—Artocarpus integrifolia.

கண்டா பாத்திரம், மணியைப் போல் கவிழ்த்தின்ன மூடும் பாத்திரம்; மேல் மூடும் சட்டி, any vessel or earthenware in the form of a bell, used as a covering—Bell-jar.

கண்டா மலகம், சிறு துண்டு களாகத் தரித்து மருந்தாக உபயோகிக்கப்படும் நெல்லிக்காய், myrobalan (gooseberry) cut into small pieces and used as a medicine.

கண்டா ரவம், சிறு கிலுப்பை, large rattlewort—Crotolaria laburnifolia. It is so called from its rattling noise.

கண்டா லசி, கழுத்தில் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படும் கட்டி, அதாவது கண்ட மாலை, which see; 2. காதின் பிற் புறம், கழுத்

...நில் உண்டாகும் கூகைக் கட்டி, a disease consisting of an inflammation of the salivary glands with swelling along the neck; Mumps—Parotitis.

கண்டாலம், ஒட்டகம், camel — Camelus dromedarius

கண்டாலி, வெள் ளெருக்கு, white madar plant—Ascelepias gigantea.

கண்டால் மயக்கி, பார்த்தவுடன் மயக்கச் செய்யும் பூண்டு, a plant inducing giddiness by mere sight of it. (*unidentified*).

கண்டா விழ்தம், (கண்டம்+அவிழ்தம்), any medicine that relieves the trouble of the throat; 2. தாளிறுக்கிற்கு அலகுக் கண்டிக்க உபயோகிக்கும் மருந்து, a medicine used in cases of lock-jaw; 3. மான், யானை முதலிய மிருகங்களின் கொம்பை அல்லது தந்தத்தை இழைத்துத் தேனில் குழைத்து நாக்கில் தடவ உதவும் ஓர் மருந்து, a medicinal preparation derived by macerating the horn of a deer or the tusk of an elephant etc. with honey and given for licking; 4. சாகுந் தருவாயில் முலைப் பாலில் நவரத்தினங்களை இழைத்துத் தொண்டைக் கபத்தின் தொந்திரவினின்று நீங்கவேண்டிக் கொடுக்கும் மருந்து, a medicine prepared by macerating the nine gems in a woman's breast milk and administered to a dying patient so as to relieve him from the obstruction of respiration due to the accumulation of phlegm in the throat.

கண்டாவுடதம், see கண்டாவிழ்தம்.

கண்டாற்புதம், (கண்டம் + அற்புதம்) ஓர் தொண்டை நோய். இது கண்டத்திற் பிறந்த சிரஞ் வேகம் கபாலத்தில் அடி படுவதால் பிறப்பது. அதனால் அங்கு தங்கி நிற்கும் கபமாகிய கோழைச் சலம் கறுத்தாவது வெளுத்தாவது மூக்கின் வழியாகிலும், தொண்டை வழியாக வேனும் மாறாது விழுந்து கொண்டே இருக்கும், inflammation of the mucous membrane of the throat with a free discharge of watery mucous which is more or less altered in quality (becoming black or white) through the nasal passages or the pharynx.

கண்டி, சிறு கீரை, pig greens—Amaranthus campestris; 2. கண்டங் கத்திரி, yellow-berried night shade—Solanum jacquini; 3. சதுரக் கள்ளி, square-spurge — Euphorbia antiquorum; 5. வெண் கடுகு, white mustard—Brassica alba; 6. இருபது மணங்கு அல்லது ஒரு பாரம், twenty maunds or one candy; 7. கள கண்டம், goitre or bronchocele.

கண்டிகம், ஓர் தானியம், a grain.

கண்டிகை, கைக் குழி, arm-pit—Axilla.

கண்டிக்கு மருந்து, நோய்களைக் குணப்படுத்து மருந்து, an efficacious preparation of a medicine; an infallible remedy.

கண்டிடைத் தூக்கல், ஒரு பாரம் நிறுத்தல் அளவு, one candy weight.

கண்டி தாத்திரி, வரிக் கோவை, a creeper, Indian striped caper — Curcubita dicca.

கண்டித்தல், நோயைக் குணப் படுத்தல், curing a disease; 2. பருத்தல், to grow fat.

கண்டிப்பு, வீக்கம், swelling; 2. துண்டு துண்டாய்த் தடித்தல், swelling in patches.

கண்டிலை, சிறு கீரை, see கண்டி.

கண்டிலைப் பாலை, ஓர் காட்டலரி, wax flower, dog-bane.

கண்டில் வெண்ணெய், குறிஞ்சி நிலத்திலுள்ள ஓர் மரம், a tree in the agricultural tract (*unidentified*); 2 குங்கிலிய வெண்ணெய், ointment prepared from bdellium; 3. அத்திக் குட்டி மலம், the feces of an elephant's kid.

கண்டினி, முண்டினி விருட்சம், an unidentified tree spoken of very highly in the Tamil Siddhar's Science.

கண்டீரம், சதுரக் கள்ளி, square-spurge—Euphorbia antiquorum; 2. செவ்வியம், the root of black pepper plant; ஓர் வித அவரை, a kind of kidney bean.

கண்டீரவம், சதுரக் கள்ளி, see கண்டீரம், 2. சிங்கம்; lion; 3. புலி, tiger; 4. சப்பாத்தி, many spined prickly pear — Opuntia spinosissima.

கண்டீரை, செவ்வியம், see கண்டீரம்.

கண்டு, கற்கண்டு, sugar-candy; 2. கண்டங் கத்திரி, yellow berried night-shade — Solanum jacquini alias S. Xanthocarpum; 3. முடிச்சு, கணு, nodule; 4, கழலைக் கட்டி, wen; 5. சிரங்கு, itches; 6. பரு, wart; 7. கட்டி, boil; abscess; 8. கண்டு பாரங்கி, knot plant—Cleodendron serra.

sum ; 9. ஆமை யோடு, tortoise shell ; 10. கருப்பக் கட்டி, a ball of jaggery; 11. காஞ்சொறி, nettle plant — Tragia involucrata ; 12. காக்குப் பூச்சி, earth-worm ; 13. புழு, worm ; 14. எலும்பு, bone

கண்டு கட்டல், முடிச்சு முடிச்சாக உண்டாகுதல், formation in nodules as in scrofula; 2. கோளம் வீங்கல், glandular swelling.

கண்டு கட்டி, முடிச்சு முடிச்சாக எழும்புக் கட்டி, a nodular swelling.

கண்டு கண்டாக தடித்தல், தண்டு தண்டான தடிப்பு, raised in allied patches on the body.

கண்டு கண்டாக வெழும்பல், முடிச்சு முடிச்சாக உண்டாகும் எழுச்சி, appearance of nodular glands, as in rat-bite.

கண்டு கத்திரி, மலடு கத்திரி, a brinjal plant not bearing any fruit.

கண்டுகம், மஞ்சிட்டி, copper creeper or ulcer-killer—Rubia cordifolia alias R. mungista.

கண்டு கரி, பூனைக் காலி, cow-hage plant—Mucana pruriens.

கண்டு கழித்தல், உணவை அடிக்கடிக் கையாளுவதால் ஏற்படும் பசி மந்தம், dullness of appetite caused by handling food constantly ; 2. கழலையை அறுத் தெடுத்தல், operation on a tumour.

கண்டு காசி, எலி யாமணக்கு, adul oil plant —Jatropha glandulifero.

கண்டு காணுதல், கழலைக் கட்டி உற்பத்தியாதல், the formation of a tumour.

கண்டு கொள்ளுதல், கடினமான வீக்க முண்டாதல், the appearance of a hard swelling on the surface of the body.

கண்டுக்கி, கருப்பு வாகை, fragrant acacia—Albizzia odorotissima.

கண்டு சர்க்கரை, கற் கண்டு, sugar-candy ; 2. புகை போடுவதற் குரிய ஓர் வாசனைப் பண்டம், a fragrant drug used as an incense ; fumigant.

கண்டுச் சோளம், வெள்ளைச் சோளம், Indian millet or great millet—Sorgham vulgare.

கண்டு தூங்சல், தூங்கல், to sleep.

கண்டுஷம், வாய் கொப்புளிக்க ஏற்பட்ட ஜலம் அல்லது திரவம், a solution used for rinsing the mouth and the throat—Gargle ; 2. வாய் கொப்புளித்தல், rinsing the mouth. See கண் டூஷம்.

கண்டுண் டெலி, எலி, rat.

கண்டு துத்தி, வட்டத் துத்தி, Indian marsh mallow—Abutilon indicum ; 2. ஒரிலைத் துத்தி, a species of one-leaved mallow —Sida acuminata.

கண்டு பரங்கி, see கண்டு பரங்கி ; 2. ஓர் சிறு மரம். Indian lotus croton, a small tree — Macaragua indica.

கண்டு பாசிதம், உசிலம் பாசி, which see.

கண்டு பாரங்கி, சிறு தேக்கு, knot plant—Cleodendron serratum ; 2. இலைத் கஷாயமிட்டுக் கொடுக்கக் குளிர் சுரம்,சல தோஷம், இருமல் இவைகள் நீங்கும், a decoction of this is prescribed in ague, cold, cough, etc. See தேக்கு.

கண்டு பித்தம், உடம்பு முழுவதும் திமிர் கமைச்சல், தடிப்பு இவைகளுடன் சிறு கொப்புளங்கள், கடுக்கம், சோர்வு, சீதளம், வியர்வை, குலை, நித்திரை பங்கம், விக்கல், தொண்டை முழந் தாள்களில் வலி, முதலிய குணங்களை யுண்டாக்கும் ஓர் பித்த நோய், a bilious disease characterised by loss of sensation, intense itching in the body, small papules, with swelling, tremor, exhaustion, cold, perspiration, acute pain, sleeplessness, hiccough, pain in the thighs and the knees, etc.

கண்டு மாலம், நெல்லி, country gooseberry —Phyllanthus emblica.

கண்டு மூலம், சிறு தேக்கு, see கண்டு பாரங்கி; 2. திப்பிலி மூலம், root of long-pepper—(root of) piper longum ; 3. திப்பிலி, long-pepper—Piper longum.

கண் டுயிலுதல், தூங்குதல், to sleep; 2 பார்வை குறைதல், to grow dim in eyesight.

கண்டூரம், தினவு வெடுத்தல், itching ; 2. சொறிதல், scratching; 3 ஓர் நாணல், a species of reed ; 4. பாகற் காய், bitter paugel—Mimordica charantia.

கண்டோா, பூனைக் காலி see கண்டு கரி.

கண் டேலத்தி, காட்டு மா, forest mango or Cudappa almond—Spondias mangifera alias Buchanania latifolia.

கண்டூல் யோனி, மிகுந்த சையோகத்தினால் யோனிகருள் இரத்தங் கெட்டுக் கிருமிகள் உண்டாகி அதிக நமைச்சல் ஏற்பட்டு அதனால் எப்போதும் சையோகத்தில் மிகுந்த ஆசையையும் இதத்தையு முண்டு பண்ணும் ஓர் நோய், a disease of the vagina always giving rise to an abnormal desire for coitus and the pleasure in the act, due to intense itching (pruritus) in the vaginal canal caused by the action of the germs arising from the altered condition of the blood in the passage owing to excessive indulgence in sexual intercourse in the past.

கண்டு வஸ்தி, தாமல பத்திரி அல்லது தாளிச பத்திரி, East Indian plum — Flacourtia cataphracta.

கண்டூகம், மஞ்சிட்டி, see கண்டுகம்.

கண்டூஷ கஷாயம், ஆறி லொன்றாய்க் காய்ச்சி வடித்து வாய்க் கொப்பளிக்க உபயோகிக்கும் நீர் அல்லது கிழாயம், a decoction or extract obtained by boiling and reducing to one-sixth part. It is used as a gargle.

கண்டூஷம், வாய் நிரம்ப மருந்து நீரை வைத்திக் கொப்பளிக்கு மருந்து, a solution or extract used in mouthfuls for rinsing the mouth and the throat. It is opposed to கவளம், which means using it in small quantities—Gargle.

கண்டூதி, காஞ்சொறி, nettle plant—Tragia involucrata; 2. தினவு, itching; pruriens; 3. காம விச்சை, sexual desire chiefly of a woman.

கண்டூபதம் மண்ணுளிப் பாம்பு, an earthworm.

கண்டூபலம், மண்ணுண்ணிப் பாம்பு, see கண்டூபதம்.

கண்டூயகம், உதிரி மாரி, which see.

கண்டூயம், தினவு, நமைச்சல், itching.

கண்டூரம், கண்டாவிழ்தம், which see; 2. பூனைக் காலி, cowhage plant—Mucuna pruriens.

கண்டூரை, பூனைக் காலி, see கண்டூரம்.

கண்டூலை யோனி, see கண்டூல் யோனி.

கண்டைக் கடுவேன், see கெண்டைக் கடுவன் as the proper spelling appears to be so.

கண்டோஷம், தேள், scorpion.

கண்டோஷ்டம், வாயு வானது உதட்டில் சேரும் போது உண்டாகும் வெடிப்பு, cracked lip due to accumulated or aggravated Vayu. See அக் தோட்டம்.

கண்டௌஷதம், see கண்டாவிழ்தம்; 2. கைகண்ட அவுஷதம், an infallible remedy found so by practice.

கண்ணஞ்சனம், நீலாஞ்சனக் கல், black antimony—Stibium; 2. கண்ணுக் கிடு மை, black paint for the eyelids and eyelashes used by women; 3. துரிசு, blue vitriol.

கண்ணடைதல், கண் பஞ்சடைதல், ஓர் மரணக் குறி, dimness of vision—a symptom of death; 2. துவாரம் அடை படுதல், to be blocked up as is done to a hole.

கண்ணடைத்தல், தேங்காயில் திறந்த கண்ணை அல்லது கண்களை மறுபடி மூடல், plugging the hole or holes in a cocoanut; 2. புண் புரையில் உள்ள துவாரத்தை மருந்துச் சீலை யிட்டு அடைத்தல், plugging the sinus or opening, of a sore with a lint; 3. தூங்குதல், to close the eyes i.e. to sleep; 4. இறந்தவரின் பரந்த கண்ணை மூடுதல், to cover the open eyes of a dead person with something; closing the eye of a corpse.

கண்ணடைத் தேகி, தேயிலைச் செடி, tea-plant—Camellia theifera.

கண்ணடைந்த பால், அதிக நேரம் வைத்திருத்தலால், திரி படைந்த அதாவது கெடுதி யுற்ற பால், milk spoiled from long-keeping—Stale milk.

கண்ணமரம், (கண் + அமரம்) சூட்டினால் கண்களின் இரப்பையில் கோவுண்டாகிச் சிவந்து குருக்களை எழுப்புவதனால் அவ்விடம் சுருக்கமடைந்து விகாரமாய்த் தோன்றச் செய்யும் ஓர் வகைக் கண்ணோய், a disease of the membraneous portion of the eyelids (conjunctiva) attended with the formation of small elevations on the conjunctiva of the lids with deformity of the eyelids —Granular conjunctivitis or Trachoma; 2. கண் சூட்டு நோய், conjunctivitis or granular ophthalmia due to excess of heat in the body.

கண்ணமுது, சவ்வரிசி பாயசம், a pudding with sago rice, sugar and other ingredients boiled in milk.

கண்ணமைப்பு, கண் ஆக்கப் பட்ட விதம், தமிழ் வைத்திய நூலின்படிக் கண் முழுவதும் நான்கு பாகமாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவையாவன:—(1) கருவிழி, (2) வெள் விழி, (3) இமைகள், (4) கடைக் கண்.

(1) கருவிழி என்பது சிருங்கை, (கருவிழி மேற்றோல்) தருணிசம், அதற்கடியில் வருணி என மூன்று சவ்வுகளினால் ஆக்கப்பட்டு, அதன் நடுவில் கண்மணி, பாவை யென்னும் இரண்டும் பொருந்தி நிற்கும். இவைகளே பார்வைக்குக் கருவிகளாகும். சிருங்கை யென்பது ஒளி யூடுறக் கூடிய சவ்வா லானது. இச் சவ்வு, சம்பந்தத் தசை நார் கத்தைகளால் அமைக்கப் பட்டது. தருணிசம் என்பது இரத்த நரம்புகளினால் வேறுபட்டுக் கறுத்திருக்கும். வருணி என்பது மிக மெல்லிய சவ்வு. குவிந்த பாகம், முன் பக்கத்தை நோக்கி யிருக்கும். அதில் நரம்பு சாலங்கள் அனேகமாய்ச் சேர்ந்து அமைக்கப் பெற்றுள்ளது.

(2) வெள் விழி:—இதன் வெள்ளைச் சவ்வு விழியின் பெரும் பாகத்தை மூடிக் கொண்டிருக்கிறது; இதன் பின் பக்கம் நேத்திர நாடி சம்பந்தப் பட்டுள்ளது.

(3) இரப்பைகள்:—இவைகள் தோல் மடிப்பாக வுள்ளவை. மெல்லிய முருந்துகளினால் ஆக்கப் பட்டு ஓரங்களில் கோளங்க ளமைந்து மயிர்கள் முளைத் துள்ளன.

(4) கடைக் கண் ணென்பது கண்ணின் இரு புறத்து மூலை. இமைகள் சேருமிடம்.

ஆயுள் வேதப்படி கண்ணமைப்பைப் பற்றி அடியிற் கண்டபடி வகுக்கப்பட்டுள்ளது:—(1) பக்கம மண்டலம் (கண் மயிர் வட்டம்), (2) வர்த்தம மண்டலம் (கண் இரப்பை வட்டம்), (3) சுவேத மண்டலம் (வெள் விழி வட்டம்), (4) கிருஷ்ண மண்டலம் (கருவிழி வட்டம்), (5) திருஷ்டி மண்டலம் (கண்மணி வட்டம்), (6) கடைக் கண் வட்டம்—கனீனகம் (உட் பாகம்), அபாங்கம் (வெளிப் பாகம்), the structure (*anatomical*) of the eye.

According to Tamil Medical science, the eye in shape consists of four parts viz;—(1) the white of the eye, (2) the black, (3) the eyelids and (4) the corners (inner and outer) of the eye.

(1) The black of the eye is composed of three coats viz. the cornea, the choroid, and the retina. In its centre are the pupil and the lens forming the materials for vision. The cornea is the transparent structure forming the external layer of the eye-ball. It is attached by connective tissues. The choroid is chiefly composed of blood vessels and pigment. The retina is composed of nerve-tissue of many layers.

(2) The white of the eye is the sclerotic coat, which is white and opaque. It is connected with optic nerves behind.

(3) The eyelids are folds of skin and mucous membrane enclosing thin plates of cartilage and fringed at the edges with lashes (the eye-lashes) with a series of small glands.

(4) The corners of the eye—the inner and the outer.

According to *Ayurveda*, the structure of the eye is described as comprising (1) the Pakshama-mandala (the region of the eye-lashes), (2) the Varthama mandala, (that of the eye-lid), (3) the Sveda-mandala (that of the sclerotic), (4) the Krishna mandala (the cornea with layers behind it) and (5) the Drishti mandala (the pupil), (6) the Kaninakas (the nasal canthus *i. e.*, the interior corner or angle) and the Apangas (the temporal canthus *i.e.*, the exterior corner or angle) of the eye.

NOTE 1.—The black portion forms 1/3 part of the eye and the pupil about 1/7 part of the black portion. Of the Patalas (coats), two are in the eye-lids and four in the eye proper and of these four, the first or anterior coat surrounds the vitreous humour (or glistening water), the second coat (choroid) is supported by muscles (flesh), the third coat consists of fat and the fourth is known as Drishti with divisions and sub-divisions of the coats.

The different parts of the eye-ball are held together by the blood-vessels, the muscles, the vitreous body and the choroid. Beyond the choroid, the eye-ball is held in the orbit by a mass of viscid substance—capsule of Tenon supported by a number of vessels.

NOTE 2.—The eye is made up of the five elements of which the body and the cosmos are built up. The earth contributes to the formation of muscles, the water preponderates in the white part (vitreous body), the fire exists in the blood (in its veins and arteries), the wind contributes

to the formation of the iris (black part) and sky (ether) forms lachrymal a 1 other ducts and sacs through which the secretions are discharged. (Sushruta Samhita).

NOTE 3.—According to Western science, the eye consists of a large sphere with the segment of a smaller sphere the cornea, in front. It is composed of three coats—the sclerotic and the cornea and choroid and the retina and within these the coats are the refracting media viz.—the aqueous humour, the crystalline lens and the vitreous humour. The iris is a curtain with a central perforation (the pupil) and is suspended in the aqueous humour in front of the lens. The ciliary body surrounds the iris.

கண்ணயர்தல், தூக்கம் வருதல், to be drowsy; to have heaviness of eyelids as forerunner of sleep; 2. தூங்கல், to sleep; 3. தூங்கி விடல், to sleep away.

கண்ணயனம், கட் குழி, the orbit.

கண்ணராவி, கண்ணுக்கு வெறுப் பானது, that which is unpleasant or disgusting to look at even as an eye-sore is.

NOTE—This term is contemptuously used to indicate envy or disgust.

கண்ணரித்தல், கண் இரப்பையை அரிக்கும் ஓர் மேக நோய், an erosion of the evelid due to gonorrheal affection.

கண்ணரிப்பு, கண்களிற் கேற்படும் தினவு அல்லது நமைச்சல், itching of the eye-lids; neuralgia of the orbital nerve.

கண்ணருகுதல், கண்ணை இடுக்குதல், to twist the eye; 2. கண் உறுத்தல், irritation of the eye.

கண்ணருவல், கண்களின் இரப்பைகளில் ஏற்படும் வலி அதாவது கண் கரித்தல், the burning sensation in the eye due to inflammation of the membrane of the eyelids; 2. கண் இரப்பை கெடுதல், atrophy of the eyelids; 3. மண் தூசு முதலியவை கண்ணிற்குள் படிவதால் இரப்பையில் உண்டாகும் ஓர் வலி யுணர்ச்சி, a painful sensation in the eye-lids due to the presence of foreign bodies, such as dust, particles of mud etc, on them; 4. see கண்ணருகுதல்.

கண்ணரை, அரைக் கண், one half of the eye; partial eye or vision; 2. கண் பகுதி, a part of the eye.

கண்ணல், கன்றல், to become congested; congestion.

கண்ணழகு, சாமுத்திரிகா லட்சணப் படிக் கண்ணின் அமைப்பினால் ஏற்பட்ட அழகு, the structural beauty of the eyes as described in Physiognomy.

கண்ணழகுக் கொடி, கேசரி வள்ளிக் கொடி, a creeper of the Dioscorea genus.

கண்ணழல், உஷ்ணம் அல்லது வெப்பத்தினால் கண் அல்லது இரப்பைக் குள் ஏற்படும் எரிச்சல், inflammation of the eye or of the conjunctiva.—Ophthalmia.

கண்ணழற்சி, see கண் ணழல்; 2 கண் ணெரிவு, burning sensation in the eyes.

கண்ணழிதல், பார்வை கெடல், loss of vision; 2. கண் நோயினால் மெலிதல், atrophy or degeneration due to diseases of the eye.

கண்ணழித்தல், கண் பார்வையைக் கெடுத்தல், to spoil or injure the sight; 2. கண் முழுதும் அழிந்து போதல், total destruction of the eye.

கண்ணழிவு, see கண் ணழித்தல்.

கண்ணழுக்கு, கண் பீளை, the muco-purulent matter discharged from the eyes.

கண்ணறை, கட் குழி, the socket or orbit of the eye; 2. சிறு சிறு துவாரங்கள், small or minute protoplasmic holes in a tissue —Cell; 3. வலைக் கண்கள், holes as in a net-work; 4. குருடு, blindness; 5. அகலமாக்கல், to broaden; 6. நுரை யீரலின் வாயு அறை, air-cell in the lungs.

கண்ணறையன், குருடன், a blind man.

கண்ணறை யுள்ள, சல்லடைக் கண் போலுள்ள, pitted with depressions like the holes in a sieve—Cribrate; 2. சல்லடைக் கண் போன்ற துவாரம் நிறைந்த, full of minute holes or pores like those of a sieve—Foraminous.

கண்ணறை ரூபம், சல்லடைக் கண் போன்ற வடிவம், a form with small apertures like those of a sieve—Cribriform.

கண்ணனிட மூலி, துளசி, holy-basil—Ocimum sanctum.

கண்ணனன், கையாந் தகரை, eclipse plant.—Eclipta prostata; 2. சோர பாஷாணம், a mineral poison.

கண்ணனன் கற்பம், மயி லாரை, a rejuvenating plant (unidentified), perhaps it is one of the Marsilea genus (ஆரை).

கண்ணன் பட்சி, கருடன், Brahminy kite—Haliaster indicus.

கண்ணன் மூலி, see கண்ணன் விட்ட மூலி; 2. கையாந்த கரை, see கண்ணன்.

கண்ணு, திப்பிலி, long-pepper—Piper longum; 2. இலைக்கத்தக் கொடி, lance-leaved digitate ivy — Heptapleurum racemosum.

கண்ணுந் சுழலை, மருண்ட பார்வை, bewildered look; 2. கண் சுழல்வு, the rolling of the eye.

கண்ணுடம், திப்பிலி, see கண்ணு.

கண்ணாடி, பளிங்கு. இது இரும்பு மண், பூநீறு இவைகளைக் கொண்டு செய்தது. இதில் பல விதமுண்டு. அவைகளாவன :—Glass made from iron ore and coarse soda. The different kinds are :—

i. மூக்குக் கண்ணாடி, spectacles.

ii. சூரிய காந்தக் கண்ணாடி, burning glass.

iii. பூதக் கண்ணாடி, magnifying glass i.e. the glass which magnifies—Microscope.

iv. தூர திருஷ்டிக் கண்ணாடி, glass intended for a distant sight—Telescope.

2. உருவங் காட்டி. இதில் இரண்டு வகைகள் உண்டு, a looking glass or mirror consisting of two kinds, viz :—

i. முகக் கண்ணாடி, looking glass (small).

ii. நிலைக் கண்ணாடி, a mirror (big).

NOTE—Glass of an inferior quality is made in several parts of Southern India. In Mysore the frit employed for making glass is composed of one part of white quarry (வெள்ளைக் கல்) and six parts of a kind of coarse soda (மண் காரம்). In Pudukkottah and Kalahasti, the frit is prepared by adding to fine river sand (மணல்) a very strong solution of the alkaline earth (உவர் மண் அல்லது பூநீறு), which contains much soda. Impure bicarbonate of soda (Poongauram) is also added to the powdered frit and the whole is then fused for many hours to obtain glass.

கண்ணாடிக் கல், பூர்வத்தில் வாதிகள் உலோகங்களுக்கு அக்கினி புடமிடுவதற்கு அதாவது கவசம் செய்வதற்கு அரைத்து உபயோகப் படுத்தும் ஓர் வகைக் கல், a very hard siliceous stone formerly used by alchemists for covering metals to be calcined, by grinding it into a lump—Flint.

கண்ணாடிக் கள்ளி, ஓர் வகைக் கள்ளி, a kind of milky shurb of the Euphorbia genus. (*unidentified*).

கண்ணாடிக் கற்றாழை, ஓர் வகைக் கற்றாழை, a variety of glistening aloe (*unidentified*).

கண்ணாடித் தாரா, ஓர் வகை வாத்து, a species of duck.

கண்ணாடிப் புடையன், வயிற்றில் வெள்ளை வரி கண்ட புடையன் ஓர் வகை விரியன் பாம்பு. சிறிய பாம்புகளில் இவ் வெள்ளை வரிகள் முதுகு வரைக்கும் பாய்ந் திருப்பது வெகு தெளிவாக விளங்கும். இப் பாம்பை ஆறுகளில் காணலாம். இதற்கு அதிக விஷமிராது, a kind of wart-snake with whitish cross bands on the sides and the abdomen—Acrochordus fasciatus. In the young snake, the white bands are more clearly defined and they extend on to the back. It is generally found in rivers and is not so venomous.

கண்ணாடிப் புல், சதுரகிரியில் விளையும் சோதிப் புல், a luminous grass said to be found grown in Sathuragiri hills in the Madura district. (*unidentified*).

கண்ணாடி மணி, வெண் கலம், அதாவது செம்பும் வெள் ளீயமும் கலந்த ஓர் உலோகம், bronze i. e. an alloy of copper and tin.

கண்ணாடி மிலை, வாழையின் கடைசியிலை, the last leaf of a plantain tree; 2. சுந்தரி மரம், sundari tree with glistening leaves; looking glass plant grown on the sea-coasts—Heriteira formes alias H. Littoralia.

கண்ணாடி வட்டப் பூச்சி, புதையலைக் காண வேண்டி, மந்திர அஞ்சனம் திரட்டுவதற்கு உபயோகப்படு மோர் வகைப் பூச்சி, a round luminous insect (*unidentified*), perhaps fire-fly used for preparing collyrium (a magic black paint) to find out hidden treasure.

கண்ணாடி வட்டப் பூடு, ஓர் பள பளப்பான பூடு, a luminous or shining plant (*unidentified*).

கண்ணாடி வாலை, கண்ணாடியாற் செய்யப் பட்ட வாலுகா யந்திரம், a distilling apparatus made of glass.

கண்ணுடி விரியன், முதுகின் பக்கம் பளபளப்பான வெள்ளை வரிகளை யுடைய ஓர் விரியன் பாம்பு. இவ் வரிகள் பார்ப்பதற்கு வெகு அழகாய் இருக்கும். ஆகவே இப் பெயர். இது 3-4 அடி நீளம்; தலையின் பக்கம் மஞ்சள் வரியும், வயிறு மஞ்சள் நிறமும் வாய்ந்தது. இது குப்பை மேட்டிலும் கத்தரித் தோட்டத்திலும் வசிக்கும். இப் பாம்பு கடித்தால் மனிதர் இறந்து போன பின்பு கூட இரத்தம் உறையாது. நீர்த்தே யிருக்கும். இது சாதாரணமாய்க் கடிக்காது. கடித்தால் உயிருக்கு அபாயந் தான். இது நாகத்தைப் போல் அவ்வளவு விஷத் தன்மை யுடையதல்ல, Russell's viper alias Necklace snake — *Daboia elegans* alias D. Russellii. It is a viper with brilliant white-edged rings on the back. The markings on its body are very beautiful and shining and they justify the name. It varies in length from 3–4 ft. or so. A yellow line lies on each side of the head. Belly is uniformly yellowish. It frequents dung-hills and brinjal gardens or fields. The blood usually remains fluid even after death from its poison. It does not readily strike, but when it bites, it is dangerous to human life. It is not as venomous as the cobra.

NOTE—It is one of the true vipers and is known by different names such as—Looking glass viper, Shining snake, Dung snake, Bloody snake, Fire-emitting snake, Bright snake, Cobra manilla etc.

கண்ணுட்டி, மார்பெலும்பு, the breast bone—Sternum.

கண்ணுணி, கரு விழி நடுவே யுள்ள கண் மணி, the pupil of the eye.

கண்ணுணிப் பூ, கண்ணில் விழும் பூ, a cataract of the crystalline lens of the eye.

கண்ணுத சாதி, சைதன்னியப் பிரகாச சாதியா கிய ஆண் சாதியின் நான்கு வகையில் ஒன்று, one of the four classes of men divided according to their religious devotion to God.

கண்ணு மண்டை, கண் அருகில் இருக்கும் மண்டை அதாவது நெற்றி அல்லது கன்னப் பொட்டு, that portion of the skull around the socket of the eyes *i.e.*, the forehead or the temple; 2. கண்ணின் மேற் பக்க முள்ள எலும்பு, the frontal bone.

கண்ணும் பூச்சி, பொறி தட்டுவதால் கண் முன் மின் மின்னும் பூச்சி பறப்பது போல் தோற்றும் பொய்ப் பூச்சி, motes appearing before the eyes, caused by sudden affection of the retina; 2. கண் மயக்கம், false appearance to the eyes.

கண்ணும் பூச்சி பறத்தல், பொறி தட்டல், அதாவது கண்ணுக்கு மின் மினிப் பூச்சிகள் பறப்பது போற் றோன்றல், to swim as the eyes do from weakness or from defective vision. In this, motes appear as floating in the air.

கண்ணு யருடம், செந் நாய், red wild dog—Canis dukhenensis.

கண்ணு யிருத்தல், விழிப்பா யிருத்தல், to be awake; 2. உன்னிப்பா யிருத்தல், to look steadfastly.

கண்ணாரக் காணுதல், பிரத்தி யட்ச மாய்ப் பார்த்தல், to see directly; to be an eye witness; 2. பூரணமாய்ப் பார்த்தல், to view fully and with satisfaction.

கண்ணால முருங்கை, see கலியாண முருங்கை.

கண்ணுவி, கண் திருஷ்டி, evil eye.

கண்ணுற் சுடுதல், கண்ணேறு பட நோக்கல், to blight with the eyes.

கண்ணுஸ் பத்திரி, கண் வைத்தியம் பார்க்கு மிடம், eye infirmary; 2. கண் வைத்திய சாலை, ophthalmic hospital.

கண்ணணி, பூ வரும்பு, flower-bud; 2. பூங் கொத்து, a bunch of flowers; 3. அழு கண்ணி, (எப்பொழுதும் தண்ணீர் கசிந்துக் கொண்டிருக்கும் மரம்). இதைப் போன்றது தென் னமேரிக்காவிலு முண்டு, an unidentified tree from which water is said to be oozing out always; a similar tree is said to be found in South America; 4. கரிசலாங் கண்ணி, eclipse plant — Eclypta prostrata; 5. உணவுக் குதவும் பொன்னாங் கண்ணி, an edible plant — Illecebrum sessile; 6. தொழு கண்ணி, காடைக் கண்ணி இவைகளைக் குறிக்கும் சொல், an abbreviated term used to indicate plants such as Hedysarum and Indian oats (Panicum miliaceum) 7. முடிச்சு, knot; 8. கயிறு, rope; 9. கொழுந்து, very tender leaf.

கண்ணணிகம், மணித் தக்காளி, fox-grape — Solanum nigrum.

கண்ணணிகா, மூக்குறட்டை, cat's jasmine—Boerhaavia repens.

கண்ணிகாரம், காட்டிலவு, yellow-flowered silk cotton — Cochlospermum gossypium.

கண்ணிகை, தாமரைக் கொட்டை, pericarp of the lotus; 2. பூ வரும்பு, flower bud.

கண்ணிக் கொடி, படரும் ஓர் பூங் கொடி, a spreading flower-creeper — Apposimum frutescens; 2. ஓர் வகைப் புல், a species of grass; 3. கருப்புக் காக்கணங் கொடி, black mussell-shell creeper — Clitoria ternatea (typica).

கண்ணிசி, காஞ் சொறி, climbing nettle—Tragia involucrata.

கண்ணிச் சாறு, பொன்னும் கண்ணி அல்லது கரிசலாங் கண்ணியின் இலைச் சாறு, a short term (an abreviation) commonly used for the juice from the leaves of the two plants viz., Eclipse and Sessile plants.

கண்ணிடி விழல், வாந்தி பேதி, அதிசார பேதி முதலிய நோய்களினாலும், பட்டினி யாலும் கண் உள் வாங்கல், sinking or depression of the eye due to cholera, diarrhoea, starvation etc; 2. ஓர் மரணக் குறி, a death symptom.

கண்ணிடு காணம், (கண்ணிடு+காணம்) காட்டுக் கொள், இதைத் தூள்செய்து கண்ணி அதக் கண்ணோய் குணமாகும். ஆகவே இப் பெயர், (eye powder+Cassia absus), black horse gram; jungle-horse gram. It is so called because the seeds are reduced to a fine powder for a direct application to the conjunctiva in purulent and other forms of ophthalmia by blowing in a few grains from a quill. *C f.* இடி கொள்.

கண் ணிடுக்குதல், தூக்க மயக்கமா யிருத்தல், to be drowsy; to be in half-sleep.

கண்ணிடு மருந்து, கண்ணில் துளித் துளியாக விடும் மருந்து, a fluid preparation to be dropped into the eyes; eye-drops — Guttae; 2. சன்னி, சுரம், சீதளம் முதலிய நோய்களில் கண்ணுக் கிடும் கலிக்கம், an ointment prepared from pungent substances such as pepper etc., and used as an external application to the eye-lids, especially in cases of delirium, fever, severe cold etc.

கண் ணிதழ், கண் மடல், கண் ணிமை, eye-lid.

கண்ணிப் பாறை, ஓர் வகைப் பாறை மீன் இது கடல் மீன். வெள்ளியைப் போல் பள பளப்பாயும், பக்கங்களிலும்,அடிப்பிலும் நீல நிறமாகவும், தட்டையாகவும் இருக்கும். நீளம் சுமார், 1 அடி, a sea-fish; striped flat-fish —Caranx atropus. It is bluish-green on the back, and silvery-spotted with purple on sides and beneath; flat and oval in shape and about 1 ft. long.

கண்ணி மயக்கி, தொட்டிப் பூடு, small jujube —Scutia indica.

கண் ணிமை, கண் இரப்பை, eye.lid; 2. மாத்திரைப் பொழுது, a measure of time among the Dravadians, to indicate as much time as is taken for a twinkle of the eye.

"கண்ணிமைப் பொழுதும் கைந் நொடிப் பொழுதும் மாத்திரைக் களவாம்"

(இலக்கணம்)

"which means the time taken for twinkling the eye and that taken for the snap of the finger are equivalents to one Mattirai"

The approximate actual period of kannimay (Mattirai) = ·4 English second.

கண் ணிமைக் கழலை, கண்ணிமையிற் காணும் புனைக் குழல், a tumour on the eyelid—Blepharoncus.

கண் ணிமைக் கோளம், கண்ணிமையி லிருக்கும் கோளங்கள், sebaceous glands of the eyelids.

கண்ணிமைச் சவ்வு, கண் ணிமையின் உட்பக்க முள்ள சவ்வு, the membrane covering the inner side of the eyelid—Conjunctiva.

கண் ணிமை திறத்தல், பறக்க விழித்தல், excessive separation of the eyelids, causing the eye to be open very wide—Blepharodiastasis.

கண் ணிமைத் தடிப்பு, நோயினால் கண்ணிமை கள் தடித்தல், the morbid thickening of an eye-lid—Blepharopachynsil.

கண் ணிமைத்தல், இமை கொட்டல், the shutting and the opening of the eyelids—Wink.

கண் ணிமைத் துடிப்பு, இமை அடித்தல், quivering of the eyelid.

கண் ணிமை நோய், பொதுவாகக் கண்ணின் இரப்பையில் வரும் பலவித மான நோய்கள்.

இமை அடியிற் கண்டபடி பில்லம், பற்ப ரோகம், கழலை இவைகளின் பிரிவுகளுடன் சேர்ந்து 16 வித ரோகங்கள், அவையாவன :—general name for the diseases of the eye-lids and they are divided into 16 kinds including the sub-divisions of blepharitis, conjunctivitis and tumour as shown under in (*a*), (*b*) and (*c*) viz:—

(*a*) *பில்லம்*, blepharitis in 3 forms :—

1. *நீர்ப் பில்லம்*, purulent oedema of the eyelid.
2. *அமர பில்லம்*, catarrhal conjunctivitis.
3. *இடர்ப் பில்லம்*, xanthoma palpebrarum.

(*b*) *பற்ப ரோகம்*, conjunctivitis in three types :—

4. *நீர்*, due to morbid fluid.
5. *சதை*, from morbid growth of membrane.
6. *வரி*, marked by streaks.

(*c*) *கழலை*, tumour of 3 kinds :—

7. *நீர்க் கழலை*, an encysted tumour or sebaceous cyst of an eyelid—Blepharo-atheroma.
8. *இரத்தக் கழலை*, a tumour of red growth in the eyelid.
9. *சதைக் கழலை*, a fleshy tumour on the eyelid—Blepharoncus.
10. *இமைத் தடிப்பு*, morbid thickening of the eyelid — Bleparopachynsis.
11. *மூட மயிர்*, *மயிர் உள் முகம் கோணி முளைத்தல்*, ingrowing of eyelashes—Blepharolosis.
12. *இளிச்சற் கண் அதாவது இமை திறந்த கண்*, eye with open eyelids ; 2. *கண் மூடமுடியாத இமை*, a condition in which the eye cannot be completely closed—Lagophthalmos.
13. *நீர்ப் பாய்ச்சல்*, effusion of morbid fluid.
14. *சற்றுக் குழிவு*, blepharitis marginalis.
15. *புழு வெட்டு*, ringworm — Tinea ciliorum.
16. *இமை விறைச்சி*, atrophy from an erosion of the lid.

கண்ணிமைப் பசு பசுப்பு, *கண் ணிமையின் தினவு*, itching of the eye-lid from inflammation—Blepharitis marginatis.

கண்ணிமைப்பு, *இமை வெட்டு*, see *கண்ணிமைத்தல்*.

கண்ணிமைப் பொழுது, *கண் இமைக் கொட்டுங் கால வளவு*, a very small period determined by the twinkling of an eye ; the time taken up in winking the eye ; a flash of time.

கண்ணிமை மயிர், *இமையின் மயிர்*, *இரப்பை மயிர்*, hair growing upon the edge of the eyelid—Eye-lash.

கண்ணிமை யுயர்ச்சி, *கண் ணிமை வெளிப் பிதுங்கல்*, the turning inside out or extroversion of the eyelid.

கண்ணிமை யுரிஞ்சல், *கண்ணிமை விழியில் உராய்தல்*, rubbing of the eyelids against the eyeball.

கண்ணிமை யுறுத்தல், *இமை யுறுத்தல்*, irritation of the eyelid.

கண்ணிமை யொட்டல், see *இமை யொட்டு*.

கண்ணிமை யோரம், *கண்ணிமை விளிம்பு*, edge of the eyelid.

கண்ணிமை வலி, *கண்ணிமைகளுக் குண்டாகும் நரம்பு வலி*, spasm of the muscle of the eyelids—Blepharospasm.

கண்ணிமை வாயு, *கண் ணிமைக் கேற்படும் மிமிர் அல்லது சோர்வு*, paralysis of the eyelid—Blepharoplegia.

கண்ணிமை விழுல், *மேலிமை உணர்ச்சி யற்றுத் தொங்கல்*, drooping of the upper eyelid from paralysis—Blepharoptosis.

கண்ணியக்கம், *கண் பிரகாசம்*, lustre of the eye.

கண்ணியம், *மர மஞ்சள்*, tree-turmeric.

கண்ணியல், *கண்ணைப் பற்றிக் கூறும் இலக்கணம்*, the sum of knowledge concerning the eye and its diseases — Ophthalmology.

கண்ணிரப்பை, *கண் ணிதழ்*, the eye-lid.

கண்ணிருட்சி, *கண் மயக்கம்*, giddiness arising from defects in the eyes ; 2. *நோயினாலும், பட்டினியாலும் கண் இருளுதல்*, darkening of the eyes as from disease (amaurosis) or temporarily from starvation etc.

கண்ணிருளல், see கண்ணிருட்சி; 2. கண் பஞ்சடைதல், இது ஓர் மரணக் குறி, dimness of vision, which is considered a symptom of death.

கண்ணிருள் மூடல், see கண்ணிருளல்.

கண்ணிரெப்பை, see கண்ணிரப்பை.

கண்ணிலகுதல், கண்ஜொளி செய்தல், twinkling of the eye; 2. கண் துலக்க மடைதல், having clear vision of the eyes; 3. கண் பிரகாசித்தல், glistening or shining of the eye.

கண்ணிலான், பிறவிக் குருடன், one with congenital absence of eyes or with total blindness; 2. கண்ணில்லாதவன் a person born with no eyes—Anophthalmos.

கண்ணிலி, கண்ணில்லாதவன், see கண்ணிலான்; 2. பார்வை யற்றவன், one who has lost his vision; 3. எறும்பு, ant; 4. குருடி, a blindwoman.

கண்ணிலிடல், கண்ணில் பூசல், to apply to the eyes, as we do with collyrium.

கண்ணில் தீட்டல், see கண்ணிலிடல்.

கண்ணிழிதல், கண் இழிவுறல், eye getting degenerated.

கண்ணிழுக்கம், கண் தளர்ச்சி, relaxation of the eye; 2. கண் சுருக்கம், shrinking of the eye; 3. கண் ஈனம் அல்லது கண் பார்வைக் குறைவு, defective eye-sight.

கண்ணிழைதல், கண் உறுத்தல், rubbing of the eyelids against the eyeball; 2. கண்ணின் உட் புறம் குழைதல், softening, shrinking or being rendered pulpy or slimy in the interior portion of the eye.

கண்ணிறம், சங்கு, mistletoe berry-thorn—Azima tetracantha.

கண்ணிறுக்கம், விழி பருத்தலால் ஏற்படும் கண் நெருக்கம், a pressure on the eye due to enlargement of the eye-ball.

கண்ணிறை, தூக்கம், sleep.

கண்ணிறைச்சி, மேல் இரெப்பையில் சதை வளர்ந்து, பிறகு கீழ் இமையிலும், கருவிழியிலும் பரவிக் கண்ணை மங்கலாக்கிப் பார்வையைக் குறைத்து, உள் ளமைப்பில் நோய் கொண்ட பாகத்தின் வழியாய்க் கடைசியாய் சதை வெளிப்பிதுங்கிக் குவளைவீக்கிச் சீழும் நீரும் வடியும் ஓர் தொத்துக் கண்ணோய், இது சாதாரணமாய்க் கண்ணிற்கு மை யிடும் மகமதியர், யூதர் (Jews) இவர்களைப் பீடிக்கும். இதற்குத் தமிழில், விழி விழுங்கி என்று பெயர், an infectious eye-disease marked by the thickening of the eyelids, an abnormal growth of flesh in the upper lid extending to the lower lid and the cornea, dimness of vision and lastly the protrusion of the affected part accompanied by discharge of pus and fluid. It generally affects the Mahomadans and Jews applying collyrium to the eyes.

கண்ணிற்றுப் போடுதல், கண்ணுக் கிடுதல், to apply to the eyes.

கண்ணீரம், கண்ணிற் கிடு மை, collyrium for the eyes.

கண்ணீரருகல், கண்ணி னின்று எப்பொழுதும் நீர் ஒழுகிக் கொண் டிருக்கும் ஓர் கண்ணோய், an eye-disease attended with constant discharge of water from the eye.

கண்ணீராக்கி, பச்சைக் கற்பூரம், இது ஓர் மரத்தின் உள் பாகத்தில் வெள்ளைத் துண்டுகளாக அகப்படும், crude camphor. It exists in the form of white crystalline fragments inside a tree—Dryobalanopo camphora.

கண்ணீருகுத்தல், கண்ணீர் சிந்தல், to shed tears.

கண்ணீருறுப்பு, கண்ணீர் உற்பத்தி யாகும் உறுப்பு, lacrimal gland. See கண்ணீர்க் கோளம்.

கண்ணீரொழுக்கு, கண்ணி னின்று நீர் வடிதல், discharge of water from the eyes; 2. கண்ணீர் வடிதல், the secretion and discharge of tears.

கண்ணீர், கண்ணி லிருந்து வழியும் நீர், water from the eyes, tears; 2. (கள் + நீர்), கள், toddy; 3. அழுத கண்ணீர் அதாவது விசனம், கவலை இவைகளின் மேலீட்டினால் கண்ணின் நீர்க் கோளத்தி னின்று ஒழுகும் நீர். இந் நீருக்கே ஓர் கெட்ட குணம் உண்டெனக் கருதி, மாந்திரீகத் தொழிலில் இதை உபயோகப் படுத்துவ துண்டு. அடியிற் கண்ட உதாரணங்களிலு மிது இனிது விளங்கும்:—

"வைய மதில் மணவாளன் இறந்த போது மா தழுத கண்ணீரும் உண்ணாப் பாலும்"
(கரு. மெய். சரு).

"ஏழைஅழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்"

tears shed through grief, which appear to have peculiar properties and as such

is used in magic, as can be inferred from the above stanza. Perhaps *lacrymalin* which is a substance obtained from the secretion of the lacrimal gland. The figurative use of this term for grief is also indicated by the proverb quoted above in which the tears shed by poor people is compared to a sharp sword.

கண்ணீர்க் கலங்கல், *கண்ணீர் ததும்பல்*, suffused with tears.

கண்ணீர்க் குடை, *மூக் குறட்டை*, cat's jasmine--Boerhaavia repens.

கண்ணீர்க் குழல், *கண்ணீர்த் தாரை*, lacrimal duct or tears duct.

கண்ணீர்க் கோளம், *கண்ணீர் உற்பத்தி யாகும் கோளம்*, the gland generating or secreting tears—Lachrymal gland.

கண்ணீர்த் ததும்பல், the excess or fulness of tears in the eye. See *கண்ணோய்*.

கண்ணீர் நடுக் குறை, *மூக் குறட்டை*, spreading hogweed—Boerhaavia diffusa.

கண்ணீர்ப் பாய்ச்சல், *இமையைப் பற்றிய வோர் நோய்*, a disease of the conjunctiva; 2. *நீர்ப் பாய்ச் சலினால் விழி பருத்தல்*, distension of the eyeball by a watery effusion—Hydrophthalmos.

கண்ணீர்ப் புளிப்பு, *கண்ணீரைப் புளிக்க வைத்த நீர்*, a ferment obtained from the tears or secretion of lacrimal gland.

கண்ணீர்ப் பெருக்கம், *கண்ணி லிருந்து அதிக மாக நீர் சிந்தல்*, copious secretion and discharge of tears from the eyes—Lachrymation.

NOTE—This abnormal overflow of tears down the cheek may be either from a disease or through grief or weeping. It is mainly due to the structure of the lachrymal passages and is known as Epiphora.

கண்ணீர் முட்டல், see *கண்ணீர் ததும்பல்*.

கண்ணீர் வறட்சி, *கண்ணில் ஈர மின்மை*, dryness or want of moisture in the eyes due to the affection of lachrymal gland.

கண்ணீர் விடுதல், *அழுதல்*, to weep; 2. *கண்ணீ ருகுத்தல்* to shed tears.

கண்ணீலம் பூத்தல், *கண் நீல நிற மடைதல், ஓர் மரணக் குறி*, the formation of a blue or dark-coloured film on the eye which is considered to be a symptom of approaching death.

கண்ணுகம், *குதிரை*, a horse.

கண்ணுக் கஞ்சனம், *அஞ்சனக் கல்*, sulphuret of antimony; 2. *கண்ணுக் கிடு மை*, a black paint for the eyelids—Collyrium.

கண்ணுக் கனி மூலி, *உணவில் உபயோகப் படும் பொன்னாங் கண்ணி. இது கண்ணுக் குபயோகப் படுத்தப் படுவதால் இப் பெயர்*, an edible plant—Illecebrum sessile. It is so called from its application to the eyes.

கண்ணுக் கரசன், *துரிசு*, blue vitriol—Copper sulphate.

கண்ணுக் காசனிகம், *அம்பர்*, amber, the term is so named from its use in eye diseases.

கண்ணுக் கிடு மருந்து, *கலிக்கம்*, a pungent ointment used by Vaidyans in cases of, cold, delirium ophthalmia etc; 2. *மை*, a black paint for the eyes used medicinally as well as ornamentally; 3. *கண் ரோகங்களுக்கு விடும் மருந்துத் துளி*, eye-drops or eye-salve.

கண்ணுக் கிராசன், see *கண்ணுக் கரசன்*.

கண்ணுக் கினியான், *கரி சலாங் கண்ணி*, eclipse plant—Eclypta prostata; 2. *பொன்னாங் கண்ணி*, an edible plant—Illecebrum sessile; 3. *கண்ணிற்கு நன்மை பயக்கும் மருந்து*, any medicine or application doing good to the eye.

கண்ணுக்குக் கட்டுதல், *கண்ணுக்கு எண்ணெ யல்லது தைல மிட்டுக் கொள்ளுதல்*, having drops of oil or medicinal oil applied to the eyes.

கண்ணுக்குடையான், see *கண்ணுக் குள்ளான்*.

கண்ணுக் குளிர்ச்சி, *பீத ரோகணி*, a medicinal plant used in eye complaints (*unidentified*).

கண்ணுக் குள் விதனம் போக்கி, *நந்தியா வட்டப் பூ. கண்ணுக் குள் ளிருக்கும் வேதனை யைப் போக்குவதா லிப் பெயர்*, Ceylon jasmine — Tabernaemontana coronaria alias Nerium coronarium. It is so called from its removing the trouble in the eye.

கண்ணுக் குள்ளான், *நெல்லிக் காய்*, Indian gooseberry—Phyllanthus emblica.

கண்ணுக் குள் ளிமை see *கண்ணுள் ளிமை*.

கண்ணுக் கேற்றுள், *கொடி நெல்லி*, gooseberry creeper (*unidentified*).

கண்ணுடை மூலி, *விஷ்ணு கரந்தை*, Vishnu blue plant—Evolvulus alcinoides.

கண்ணூட் பற்று, கண்ணின் உட் புறம் கவர்ந் தன்னது, that which covers the interior portion of the eye.

கண் ணுதலான் வெற்பு, இதுவே கைலாசம். சிவனுடைய வாசஸ்தல மாதலால் இப் பெயர் பெறும், mountain referring to Mount Kailas. It is so called because it is said to be the abode of God Siva.

கண் ணுதறல், கண் ணடுக்கம், trembling of the eye.

கண் ணுதித்தல், இழந்த பார்வை தோன்றல், appearance of sight which was once lost; 2. கண் பருத்தல், swelling of the eye.

கண் ணுந்தல், கண் வெளி தள்ளல், protrusion of the eye; 2. கரு விழியில் சதை வளரல், growth of flesh on the cornea.

கண் ணுபாந்தியம், கடைக் கண், the corner of the eye.

கண்ணுப் பீ, see கண்ணுப் பீளை.

கண்ணுப் பீழை, பெரும் பீழைச் செடி, an unknown plant called Peelai.

கண்ணுப் பீளை, கண் மலம், a gummy secretion from the eyes — Muco-purulent matter.

கண்ணுப் பூ, see கண் பூ.

கண்ணுப் பேரிகம், இரு வாட்சி, double petalled Arabian jasmine — Jasminium fragrans.

கண் ணுமை, கண் காட்சி, a fanciful view; a vision; 2. பார்வை, sight.

கண் ணுயர்தல், see கண் ணுந்தல்.

கண் ணுயிர்த்தல், தூங்கி விழித்தல், to get up from sleep.

கண் ணுரசல், கண் தேய்த்தல், the rubbing of the eye.

கண் ணுரித்தல், கண்ணில் படர்ந்த சவ்வைக் கழற்றுதல், to peel off the morbid skin from the eye; removing the cataract formed in the eye.

கண் ணுரு, see கண் ணுள்; 2. கண் ணிறம், the colour of the eye; 3. கண் நோய், eye-disease.

கண் ணுருகல், கண்ணீர் கசிதல், oozing of water from the eye; secretion of tears; 2. கண்ணீர் பொழிதல், to shed tears.

கண் ணுருட்டல், கண்ணை உருளச் செய்தல், rolling the eye.

கண் ணுலை மூடி, வடி தட்டு, a sieve used in cooking—Colander.

கண் ணுலைவு, கண் ணடுக்கம், the tremor of the eye.

கண்ணு வலி, see கண் வலி.

கண்ணு வலிப் பூ, கலப்பைக் கிழங்கு, November flower plant—Gloriosa superba.

கண் ணுழற்சி, see கண் சுழற்சி.

கண் ணுளான், கண்ணை யுடையவன், one having eyes or one provided with the faculty of seeing as opposed to கண்ணிலான், one without the eye or deprived of eye-sight.

கண் ணுள், கண்ணின் உட் புறம், the inner side of the eye.

கண் ணுள் ளிமை, கண் ணிமையின் உட் புறம், the inner side of the eyelid.

கண்ணுள் ளிமை மயிர், கண் ணுள் கோக்கி வளரும் இமை மயிர், the ingrowing hair of the eye-lash.

கண் ணுறக்கம், தூக்கம், sleep; 2. அரைத் தூக்கம், drowsiness.

கண் ணுறக்கல், தூங்கும்படிச் செய்தல், to cause or induce one to sleep; 2. குழந்தையைத் தூங்கச் செய்தல், to lull a child to sleep even as a nurse does; 3. கண் முற்றும் கவரல், covering the eye completely as a film or a cataract does.

கண் ணுறல், see கண் ணுறுதல்.

கண் ணுறுதல், பார்த்தல், seeing; looking at.

கண் ணுறுத்தல், கண் ணருகுதல், smarting irritation or pricking pain in the eyes.

கண் ணுறு படலம், see கண் படலம்.

கண் ணுறுப்பு, கண்ணின் பகுதிகள், அவையாவன—இமைகள், விழிப் படலம், வெள் விழி, வெள் விழிச் சந்து, கரு விழி, பாவை, கண் குழி, கண் சோதி, தரிச நரம்புச் சாலம், தரிச நரம்பு, the several parts of the eye viz:—the eye-lids, the choroid, the sclerotica, the conjunctiva, the iris, the lens, the orbit, the vitreous humour, the retina and the optic-nerve.

கண் ணுறை, கண்ணோய் தீர்க்கு மருந்து, a medicine effective in treating eye-diseases; 2. கண் காரம், a pungent salve for the eye. C.f. கலிக்கம்; 3. கண் மருந்து, any medicament for the eye; 4. கறி, curry; 5. மசாலை, curry-stuff. See கண் ணுக் கிடு மருந்து.

கண் ணூனம், கண்ணில் யாதொரு குற்றமும் காணப் படாமலே ஏற்படும் குருட்டுத் தன்மை, the loss of vision or blindness without apparent lesion of the eye—Amaurosis.

கண் ணூல், கண் நோய்களைப் பற்றிக் கூறும் நூல், the science which treats of diseases of the eyes; 2. அகத்தியர் செய்த நயன விதி, an ophthalmic science compiled by Agastya Siddha.

கண் ணூறு, see கண் ணெச்சல்.

கண் ணூறு கழித்தல், திருஷ்டி தோஷம் கழித்தல், dispelling or removing the blight of an evil eye through some prescribed ceremonies or magic spells.

கண் ணெச்சல், கண் பார்வையால் ஏற்பட்ட தோஷம், அதாவது கண் திருஷ்டி தோஷம், the blight of the eye; the glance of an evil-eye; 2. கண் ணொழுக்கு, secretion of or discharge from the eye. See கண் திருஷ்டி.

கண் ணெச்சில், see கண் ணூறு.

கண் ணெடுப்பு, கடைக் கண்ணில் உப்பலை யுண்டாக்கிக் கொண்டே யிருக்கும் ஓர் கண் ணோய், a disease of the outer corner of the eye attended with frequent swelling of the part; 2. கண் வீக்கம், the swelling of the eyes; 3. விழி வெளிப் பிதுங்கல், protrusion of the eye-ball.

கண் ணெரிசல், கண் விழி வீங்குதலால் கண்ணுக் கேற்படும் நெருக்கம், pressure to the eye caused by the enlargement of the eye-ball.

கண் ணெரிதல், கண்ணுக் குண்டாகும் எரிச்சல், burning sensation in the eye.

கண் ணெரித்தல், (கண் + நெரித்தல்) கண் குவளையை நெரிக்கு மதுபோற் காணு மோர் நோய், an affection of the socket of the eye attended with crushing pain; 2. (கண் + எரித்தல்) கண்ணெரியச் செய்தல், causing or inducing burning sensation in the eyes; 3. கண்ணில் வளரும் கெட்ட சதையைக் கார வஸ்துவைக் கொண்டு கரைத்தல், to remove the morbid flesh in the eye by applying a corrosive medicine.

கண் ணெரிவு, உஷ்ணம், தூக்க மின்மை, அழற்சி, முதலிய வற்றால் கண்ணில் ஏற்படும் எரிச்சல், burning sensation in the eyes from heat, sleeplessness, inflammation etc.

கண் ணெருக்கம், நடு விழி அல்லது கண் ணிரப்பையில் அதிகமாக வீக்கம் காணு வதால் கண்ணிற் கேற்படும் இறுக்கம், the pressure or the constricting force experienced in the eye-ball or the eye-lids due to their being abnormally swollen.

கண்ணெழு காசம், கரு விழியில் உண்டாகிக் கண் பார்வையைக் கெடுக்கும் எட்டு விதக் காச நோய்கள், the eight forms of cataract or opacity occurring in the black of the eye. See கண்ணோய் வகை.

கண் ணெழுச்சி, கண்ணி லெழும்புதல், (lit) rising or developing in the eye; 2. கண்ணில் சதை வளருதல், morbid growth in the eye; 3. வெள் விழியில் உண்டாகும் குரு நோய் அல்லது சதை வளர்ச்சி, a tubercle or any granular growth of flesh in the sclerotic coat of the eye.

கண் ணெறி, திருஷ்டி தோஷம், see கண் ணூறு; 2. கண்ணின் வெள் விழியில் ஏற்படும் விரணம், an ulcer on the white of the eye.

கண் ணேறு, திருஷ்டி தோஷம், இதனால் வயிற்று வலி, உணவு செரியாமை முதலியன ஏற்படும், the blight of the eyes; an unlucky look or stare said to cause evil effects such as stomach ache, indigestion etc. See கண் ணூறு.

கண் ணேறு வாந்தி, ஒருவர் சாப்பிடும் உணவைப் பார்த்தது தனக்கு இல்லையே யென்று வருந்துவதால் அல்லது பொறாமைப் படுவதால் உண் போருக்குத் திருஷ்டி ஏற்பட்டு ஓயாத வாந்தியை யுண்டாக்கும் ஓர் தோஷம், a morbid diathesis marked by constant vomiting in a person whos food was looked at and envied. It is du to the glance of the evil eye of another. See also திருஷ்டி தோஷம்.

கண்ணைக் கசக்குதல், கண்ணைத் தேய்த்தல், விழித்த வுடன் செய்வது, to rub the eyes as one does when waking from sleep.

கண்வணக் கவர்தல், கண்ணைப் பறித்தல், to dim the eye as the light does; 2. கண்ணை மூடிக் கொள்ளல், covering or closing the eye.

கண்வணைப் பறித்தல், கண் பார்வையைக் கவருதல், to dazzle or blind the eyes as a glare of light does.

கண்வணைப் பற்றுதல், கண்ணை வன்றிப் பிடித்தல், to be affected deeply in the eyes.

கண்வணைப் பிசைதல், see கண்ணைக் கசக்குதல்.

கண்ணொட்டல், கண்ணின் இரப்பைகள் பீளையினால் ஒட்டிக் கொள்ளல், stickiness of the eye-lids through discharge of muco-purulence; 2. இரப்பை ஒன்றோடொன்று சேர்ந்துக் கொள்ளுதல், the adhesion of eye-lids—Blepharosynchia; 3. தூக்க மடைதல், to be heavy with sleep; 4. கண் இரப்பை, கண் விழியில் ஒட்டிக் கொள்ளுதல், the adhering of the eye-lids to the eye-ball

கண்ணொளி, கண் வெளிச்சம், the brightness of vision; 2. பார்வை, sight; 2. கண்ணின் பிரகாசம், the lustre of the eye.

கண்ணொளி மங்கல், பார்வை குறைதல், dullness of vision—Amblyopia.

கண்ணொளி மழுங்குதல், see கண்ணொளி மங்கல்.

கண்ணொளி மூலி, கள்ளி மேற் புல்லுருவி, a parasite found grown on the Kalli (milk-spurge) plant; 2. கண்ணுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கு மூலிகைகள். அவையாவன—நெல்லி, கடுக்காய்த் தோல், வாதுமை, பெருஞ் சீரகம், மிளகு முதலியன, drugs or substances that will brighten the vision viz:— gooseberry, skin of gallnut, almond, star anise, black pepper etc.

கண்ணோ, கண் நோய், any disease of the eye; 2. கண் வலி, pain in the eye.

கண்ணோக்கம், பார்வை, sight.

கண்ணோக்கல், பார்த்தல், seeing; looking at.

கண்ணோக்காடு, கண் வலி, pain in the eye—Ophthalmagia; 2. கண் வாதம், neuralgic pain in the eye.

கண்ணோக்கு, கண் பார்வை, see கண்ணோக்கம்; 2. அருட் பார்வை, graceful look.

கண்ணோசை, கண்ணில் சதை வளருதல், morbid growth of flesh in the eye.

கண்ணோடை, கண்ணீர்த் தாரை, lacrimal duct.

கண்ணோட்டம், கடைக் கண் பார்வை, askant look; looking obliquely towards one corner of the eye; 2. சுழிமுனை நோக்கம், (*in Yoga Philosophy*) looking at the space between the eye-brows; concentration.

கண்ணோட்டு ஊசி, கண் சிகிச்சைக்கு உபயோகிக்கு மூசி, a needle intended for eye-operations—Acus interpunctoria.

கண்ணோய், கண் வலி, pain in the eye; 2. புளிச்சற் கண், blear-eye; 3. பொதுவாகக் கண்ணில் ஏற்படும் நோய்கள், diseases in general of the eye.

கண்ணோய் வகை, பொதுவாகக் கண்ணிற்கு ஏற்படும் பலவகை நோய்கள். இவைகள் தமிழில் பூர்வ சித்த நூற்களிற் கூறிய வண்ணம் வாத பித்த கப மாகிய முக் குணங்களைக் கருதி கண் நோய்கள் மூன்று பிரிவுகள் அடங்கிய 96 வகை களாக அடியிற் கண்டபடி பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன:—

வாத கோபத்தால்	... 45
பித்த கோபத்தால்	... 31
கப கோபத்தால்	... 20

ஆகவே இத் தொண்ணூற் றாறு நோய்களும் கண்ணின் ஆறு ஸ்தானங்களைப் பற்றி இன்ன விடத்தில் இத்தனை நோய் என்பதை விளக்க மறுபடியும் பிரித் துரைக்கப் பட்டுள்ளன:—

1. பாவையில் ...	... 27
2. கரு விழியில் ...	... 10
3. வெள் விழியில் ...	... 13
4. சந்து (கரு விழிக்கும் வெள் விழிக்கும் இடையே யுள்ள பாகம்).	9
5. இமை (கீழ், மேல்)	... 24
6. கண் முழுவதும்	... 13

மேற்கண்ட படி 96 வகைகளாகப் பிரிக்கப் பட்டாயினும், இவைகளையே விவரித் துரைக்குங் கால், பிரிவினையில் காட்டிய ஒழுங்குப் படிக் கூறாமல், பொதுவாகக் கலந் துரைக்கப் பட்டதென்பது அடியிற் கண்ட பாயிரத்தின் செய்யுளால் இனிது விளங்கும். ஆதலின், இப் பிரிவினை பூர்வ நூலிற்குப் பிறகே ஏற்பட்ட தென்பது தெட்டென விளங்கு மாதலால், மேற்படி 96 நோய்களை விவரிக்கும் பாயிரத்தையே அடிப் படையாகக் கொண்டு இங்கு கூறப்பட்டது.

கண்ணோய் வகை

"நேத்திர ரோக நெடும் பெயர் கேளாய்
சுக்கிரப் படுவன் சோதி தெறித்தல்
மிக்க வீக்கம் விதன மூட மயிர்
சத்தைத் தூறுபோல் நடுமுழி புடைத்தல்
பித்த காசம் பிறவிக் குருடு
நாக படலம் கண்முழி விழுங்கி
திமிலம் திமிரம் சிலேத்தும காசம்
அமர மெழுச்சி அந்தர காசம்
சோதி விரணம் துர்மாமிச வளர்ச்சி
கோதிலா விழியில் குருதிசீழ்ப் பிடித்தல்
இமைமுழி மாமிசம் நெருசலிப் பிடித்தல்
முழிகண் குருடு முன்னிமைக் குதது
அழிகண் புழுவெட் டடர்ந்துகண் பிரித்தல்
முத்த காசம் முதுதிமிர் காசம்
இரத்தப் படலம் சீர்ப்பற்ப ரோகம்
கருமுழி புடைந்து கண்மணி விழுதல்
சிறிய பயறுபோல் சிதறின முளைகள்
பாவைப் பூவொடு பஞ்சுநீர்ப் படலம்
அருவிநீர்த் ததும்பல் மதுவர்ண காசம்
கடைக்கண் படலம் கண்குரு காசம்
கூறிய உதிரம் குருதியாய் வடிதல்
புடலம் பூப்போல் பிரிந்து பூப்படர்தல்
குவளை காசம் கூர்மை வெள்ளெழுத்து
கவலைகள் மிகவாய்க் கண்முழி கனத்தல்
சிதறின புள்ளிபோல் சிறிது பூக்கள்
மாலை காசம் மயிர்க்குத் துடனே
நீல காசம் இமைக்கண் துடிப்பு
உருவிழி புடைத்து உடைந்தெழுங் கானான்
கருமுழி வெண்முழி கனக்கவே புடைத்தல்
வெள்ளை முழியில் விளங்கு துர்மாமிசம்
ஒள்ளிய விதழ்போ லுதித்திடும் பில்லம்
வலி சிவப்பாலே வருஞ்சில பூக்கள்
அலரிப் பூப்போல் அதுசில சிவப்பு
புத்து வளர்ந்து புடைப்புப் புடைப்பாய்
துத்திடு மாமிசம் சொரிநீர்ப் பில்லம்
மையிருள் காசம் வளர்சொரிப் பில்லம்
பேணிமைப் படுவன் வியன்குந்த விரணம்
கருக்காய்ப் பழம்போல் கனத்த முளைகள்
புருவக் குடைச்சல் பொங்கி யுறுத்துதல்
அந்தி மாலை யானகண் கட்டி
கத்தைப் படுவன் நற்புழு மேய்ச்சல்
வெள்ளை முழியில் விரணம் சீழ்ப்பற்றி
தள்ளிய சூடு தான்வளர்ந் திடுதல்
பீளைகள் சாரல் பொங்கிநீர் வீழ்தல்
நீளவே இமையில் இமைப்பரு உறுத்தல்
காளை முளைபோல் கண்டிடும் இமையில்
குருவு கனிறலே கொதறிப் பூப்படுதல்
மாதுளம் பூப்போல் மலிந்திடும் சிவப்பு
வாத காசம் வருங் குமரிகாசம்
அதிக புணர்ச்சியால் ஆனதோர் மந்தம்
கூர்மைப் பார்வையால் கூடின மந்தம்
சூரிய கிரணத்தால் தோன்றிடு மந்தம்
உட்டண வளர்த்தியால் உதித்திடு மந்தம்
மேக வெட்டையால் மிகுந்திடு மந்தம்
சாத்திர நெறியைத் தவிர்ந்து செய்வினை
தைல முதலும் சார்ந்திடு மந்தம்
கிரந்தி குலையால் கெட்டிடு மந்தம்
அடிகள் பட்டு அடைந்திடு மந்தம்
படிக வெண்முழியில் பலவிதம் புடைத்தல்
உழுத்தம் பயறுபோல் ஒருதர முளைகள்
தெளிந்தவெண் முழியில் செவ்வேர் வீழ்தல்
இஷ்டநீர் காசம் எழுமிமைக் கழலை
அன்ன கோபம் அழற்றிய கூச்சம்
மேனிமைச் சரிந்து விழுந்திடுந் தொங்கல்
நினைவு தடிப்பு தேர்ந்தெழு நாயிறு
கண்கரு விழியில் கண்சவ்வு மூடுதல்
கருகின புகைபோல் கருத்த சிவப்பு
வெருவிய கருவிழி விழுகும் செவ்வேர்
நவ்விவேல் விழியில் நயந்திடும் சூம்பல்
கோவைப் பழத்து கொத்துபோல் மாமிசம்
கண்முழி கபாலம் கண்ணிமைக் குடைச்சல்
கொம்மையாய் வருகும் குவளை விப்புருதி
வால காசம் வகையறி பயனும்
ஏலவார் குழலர்க் கிதனுட னுரைத்த
எண்ணிய வியாதிகள் தொண்ணூற் றாறும்
கண்ணில் வினை யெனக் கருதலாமே"

(அகஸ். நயனவிதி. 500)

Different kinds of diseases of the eye in general. According to Siddhars' Tamil Medical Science although the eye-diseases are brought under three general classifications with regard to the three humours in the human system, they are sub-divided into 96 different kinds as follows:—

Deranged	Vatha	... 45
"	Pitha	... 31
"	Phlegm	... 29

The above said 96 diseases are of the eye as shown under:—

Lens.	27	Binding unions.	9
Black of the eye.	10	Eye-lids.	24
White "	18	Eye-ball.	18

Although they are divided in regular order in the above classification, this order does not seem to have been observed, in the above introductory poem (in blank verses) as they are all apparently jumbled up. So, this is a clear proof to show that the classification is subsequent to the enumeration in the original work. Therefore this poem which is believed to be original, containing the names of 96 diseases is quoted as an authority.

A. மேற் கண்ட அகஸ்தியர் நயன விதி 500 ன் பாயிர வகைப்படி கூறப்பட்ட 96 ரோகங்களின் விவரங்களாவன, the descriptive names of the 96 diseases enumerated in the said verses of the prologue to Agastya's 500 on diseases of the eye are:—

1. சுக்கிரப் படலம்—கண்ணின் கருவிழியிலும், இமைத் தோலிலும் உண்டாகும் விரணம், ulceration in the black of the eye and the conjunctiva—Phlyctenular Ophthalmia.
2. சோதி நெறித்தல் — கரு விழியின் மையத்தி லுள்ள சோதி பாகத்திற்குக் காணும் நோய், an affection of or pressure to the area of clearest vision in the centre of the retina (*Macula lutea*).
3. மிக்க வீக்கம்—கண்ணில் முழுவதும் ஏற்படும் வீக்கம், a diffuse or abnormal swelling of the eye.
4. மூட மயிர்—உள் வளைந்து காணும், இமையின் மயிர்கள், in-growing eye-lashes—Blepharelosis.
5. நடு விழி புடைத்தல் (நத்தைத் தூறு போல்) — அழற்சியால் கரு விழி புடைத்துக் காணல், protrusion of the cornea resulting from inflammation — Projecting or Protruding Staphyloma.
6. பித்த காசம் — கரு விழி நீலம் அல்லது நீலங் கலந்த மஞ்சள் நிறமாகத் தோன்றும் காசம், a form of cataract in which the pupil assumes blue or bluish yellow colour.
7. பிறவிக் குருடு—பிறக்கும் பொழுதே குருடாகப் பிறத்தல், blindness from birth—Congenital Amaurosis.
8. நாக படலம்—விழி முழுமையும் சவ்வு படர்ந்து முனையில் கூம்பிக் காணு மோர் நோய், a film or coating with tapering ends covering the whole eye.
9. (கண்) முழி விழுங்கி — மேலிமைச் சந்தில் தொடங்கி கருவிழி, கீழிமையிலும் சதை படர்ந்து ஊமச்சிப்பியைப் போல் விழி முழுவதையுங் கவர்ந்து கொள்ளும் ஓர் நோய், a disease in which the growth of flesh originates in the upper-lid and extending to the cornea and the lower-lid covers the whole eye like an oyster-shell; 2. கரு விழி அழற்சியால் சீழ் பிடித்து நாளுக்கு நாள் சுருங்கிக் கடைசியாக முழுவதும் மறைந்து விடுதல், the shrivelling and disappearance of the cornea after suppurative keratitis — Phthisis cornea. *C. f.* கண்ணிறைச்சி.
10. திமிரம் (விழி கண் குருடு)—கரு விழியின் தரிச மண்டலத்தி லுள்ள தரிச நரம்பிற்கும், மூளைத் தண்டு, மூள இலைகளுக்கும் காணும் நோயினால் ஏற்படும் குருட்டுத் தன்மை, blindness from optic atrophy; total blindness caused from diseases of the optic nerve, retina, etc.—Amaurosis.

NOTE.—It is a loss of vision or blinoness resulting from the deranged humours (doshas) and is confined to the fourth coat or patala (choroid) of the eye.

11. சிலேட்டும காசம் — கரு மணியின் மேல் வெண்ணிறமான கொப்புளங் கண்டு நீர் வடிந்து அதனு லுண்டாகும் மங்கல் அல்லது இருள். இது சிலேட்டு மத்தினு லேற்படும், opacity due to a vesicular growth over the area of the pupil and discharge of white watery fluid from the pupil arising from phlegmatic causes—A form of Cataract.
12. அமர மெழுச்சி—விழிச் சந்தில் தானியம் போன்ற தசை வளர்ச்சி, a large-sized granular growth on the conjuctiva—Granular Conjunctivitis.
13. அந்தர காசம்—(அந்தரம் = இருள் + காசம் = பார்வை) கண்ணின் பார்வைக் கேற்படும் இருள், dark-coloured opacity of the crystalline lens.
14. சோதி விரணம் — கண்ணின் கரு விழிக்கு மையத்தி லமைந்த சோதிக்குக் காணும் விரணம். இதனுல் விழி மறைப் பேற்படும், ulceration in the central area of the retina attended with the affection of the vision.
15. துன் மாமிச வளர்ச்சி — கண்ணில் பொதுவாக ஏற்படும் சதை வளர்ச்சி, morbid growth of flesh in the eye in general.

16. (கோரினை) விழியில் குருதி சீழ்ப் பிடித்தல் — கண்ணின் கருவிழிக்குள் இரத்தக் கட்டிச் சீழுண்டாதல், inflammation of the eye marked by the formation of pus —Suppurative Keratitis ; 2. விழியின் முன்பாகத்தில் சீழ் கொள்ளல், an accumulation of pus in the anterior chamber of the eye—Hypopyon.

17. இமை முழி மாமிசம் நெருக்கிப் பிடித்தல்—கண்ணிமை, கருவிழி, நெருக்கமுற்றுக் கெட்டிப் படும் ஓர் விழி நோய், a disease of the eye marked by intense intra-ocular pressure due to enlargement of the eye-ball resulting in hardness of the eye and the eye-lids—Glaucoma.

18. முழி கண் குருடு—கண் விழியி னுள் காணும் குருட்டுத் தன்மை, blindness caused from diseases of the eye-ball. *C.f.* திமிரம்.

19. (முன்) இமைக் குத்து—இமைக்குக் காணும் குத்தல் நோய், a disease of the eye-lid attended with acute pain.

20. அழி கண் — சிவந்து பீளை தள்ளும் கண், inflammation of the eye with purulent discharge—Purulent Ophthalmia.

21. புழு வெட்டு, கண்ணிமைகளின் மயிர்களைத் தாக்கி உதிரச் செய்யு மோர் படர் நோய், a ringworm affecting the eye-lashes—Tinea Ciliarum.

22. அடர்ந்து கண் பிரிதல்—கண் நெருக்க முற்று விழி வேறாகப் பிரிதல், the separation or loosening of the iris from its attachment owing to intra-ocular pressure—Iridodialysis.

23. முத்த காசம்—கண் பாவை முதிர்ச்சியடைந்து முழுவதும் தாக்கப் பட்டு அதனு லேற்படும் கண்ணிருள், a disease in which the lens is completely opaque — Mature Cataract.

24. முது திமிர்க் காசம்—வலி யில்லாமலே பாவைக்கு ஏற்படும் இருள், a chronic cataract without pain—Hypermature Cataract.

25. இரத்தப் படலம் — கண் மணியின் மேல் இரத்தக் கட்டிச் செந்நிறமான சவ்வு படருதல், formation of red coating and effusion of blood in the pupillary area.

26. நீர்ப் பற்ப ரோகம்—இமைகள் மெலிவடைந்து கண்ணீர் வடிதல், watery discharge from the eyes due to softening of the eye-lid—Tarsomalacia.

27. கருமுழி உடைந்து கண்மணி விழுதல்—கரு விழிக்குக் காயம் ஏற்பட்டு அதனால் கண் மணி பிரிந்து வெளிக் காணல், falling out of the lens from injury to the eye-ball.

28. சிறுபயறு போல் சிதறின முளைகள்—கண் விழியில் சிறு பயறைப் போல் சிதறிக் காணப்படும் முளைகள், small granules found scattered in the eye.

29. பாவைப் பூ—கண்ணின் பாவைக்குக் காணும் வெண் பூப் படர்ச்சி, opacity of the crystalline lens—Cataract.

30. பஞ்சு நீர்ப் படலம் — கரு விழியில் நீர்க் கோர்த்துக் காணல், accumulation of morbid fluid on the black of the eye ; milky-white opacity of the cornea—Leukoma.

31. அருவி நீர்த் ததும்பல்—அருவியைப் போல் கண்ணீர் வடிதல், excessive secretion of tears from the eyes ; abnormal overflow of tears — Epiphora.

32. மது வர்ண காசம் — கரு விழியின் பாவையில் வெண்ணிறமான சவ்வு படர்ந்து கண் பார்வையைக் கெடுக்கும் நோய், a white-coloured opacity of the crystalline lens — Milky Cataract.

33. கடைக் கண் படலம்—கடைக் கண்ணில், சவ்வு படருதல், a film or layer formed on the corner of the eyes —Pterygium.

34. கண் குரு காசம்—கண்ணில் யாதொரு நோயின்றித் தானாகவே ஏற்பட்ட காச நோய், a variety of cataract developing independently of any other disease—Primary Cataract.

35. உதிரம் வடிதல் — கண்ணினின்று இரத்தம் வடிதல், bleeding from the eye ; ௨. விழி நெருக்கத்தால் ஏற்படும் இரத்த வொழுக்கு, hemor-

rhage from the retina caused by pressure.

36. பிரிந்து பூப் படர்தல் (புடலம் பூப் போல்)—விழியில் பூப் படருதல், formation of a film or coating on the pupil in the form of a gourd-flower.

37. குவளை காசம்—கண் குவளைக்கு நோய் ஏற்பட்டு, பார்வையைத் தாக்கும் ஓர் வகைக் காச நோய், a form of cataract affecting the eye-sight due to diseases of the socket or the orbit of the eye.

38. வெள்ளெழுத்து—மூப் படைந்தோருக்குப் பார்வை புகைந்து காட்டிக் கிட்டப் பார்வை குறைந்து காணுதல், impairment of vision, far-sightedness and failure of vision when directed to near objects, occurring in advanced age—Presbyopia.

39. கண் முழி கனத்தல் (கவலைகள் மிக வாய்)—கவலை மேலீட்டினால் விழி பெரிதாதல், enlargement or bulging out of the eye-ball (exophthalmos) through mental worry.

40. சிதறின புள்ளி போல் சிறுது பூக்கள்—கண்ணின் கரு விழியில் கலக்கக் காணும் பூக்கள், a form of cataract marked by scattered or diffused dot-like opacity behind the area of the pupil.

41. மாலை காசம்—சாயுங் காலத்தில் கண் புகைச்சல் அதிகமாகித் தீப வொளி வேறாகக் காட்டும் ஓர் காச நோய், an affection of the vision in which the patient sees the lamp light different from what it actually is. *C.f.* அந்தி மாலை.

42. மயிர்க் குத்து—இமையின் மயிர்கள் உட் புறமாக வளர்ந்து அதனால் விழிக்கு ஏற்படும் குத்தல், a condition of ingrowing eye-lashes causing irritation in the eye—Trichiasis. *C.f.* மூட மயிர் in No 4.

43. நீல காசம்—கண்ணின் பாவையில் நீல நிறமான மந்தாரத்தை உண்டு பண்ணும் ஓர் வகைக் காச நோய், a form of cataract with a blue-coloured opacity of the crystalline lens.

44. இமைக் கண் துடிப்பு — வாயுவினால் கண்ணின் இமைக்கு ஏற்படும் துடிப்பு. இதை வலது அல்லது இடது கண் கருதி நல்ல சகுனம் அல்லது அவசகுன மாகவும் கொள்ளப் படும், quivering or tremulous motion of the eye-lids due to the deranged Vayu (humour) in the system—Blepharospasm. Such a condition is also considered as a good or bad symptom according to the eye right or left.

45. உருவிழி புடைத்து உயர்ந் தெழுங் காளான்—கண் விழியில் காளானைப் போலுண்டாகும் எழுச்சி, an enlargement of the eye-ball marked by a mushroom-like growth of the cornea—Keratomycosis.

46. கரு முழி, வெண் முழி சேர்க்கவே புடைத்தல்—கரு விழியும் வெள்ளை விழியும் மிகுதியாக வீங்கி வெளி தள்ளுதல், protrusion of the eye-ball projecting beyond the eye-lid—Staphyloma.

47. வெள்ளை முழியில் விளங்கும் துர் மாமிசம்—வெள்ளை விழியில் அதிகமாகக் கெட்ட சதை வளருதல், a morbid growth of flesh on the white (sclerotic) coat of the eye.

48 இதழ் போ லுதித்திடும் பில்லம்—கண்ணிமை யானது உதட்டைப் போல் தடித்துக் காணல், an abnormal morbid thickening of an eyelid—Blepharopachynsis.

49. வலி சிவப்பாலே வரும் சில பூக்கள்—விழியில் அழற்சியால் ஏற்படு வெண் புள்ளிகள், an appearance of red films of flower pattern from inflammation of the eye.

50. அலரிப் பூப் போல் அது சில பூக்கள்—கண்ணில் அழற்சியினால் அலரிப் பூவைப் போலக் காணும் நோய், an eye disease with apperance of white films of the daisy flower pattern arising from inflammation of the eye.

51. புத்து வளர்ந்து புடைப்புப் புடைப்பாய்த் துத்திடு மாமிசம்—கண்ணில் புற்றைப் போல் கெட்ட சதை வளர்ந்து பல துவாரங்களை யுண்டாக்கிப் புடைத்துக் காணும் நோய், abnormal morbid nodular

growths in the eye attended with several openings like those in an ant-hill.

52. சொரி நீர்ப் பில்லம்—இமை நோயி னால் உண்டாகும் அதிக நீர் ஒழுக்கு, inflammation of the eye-lids attended with abnormal watery discharge.

53. மை யிருள் காசம்—கரு விழியில் பூப் படர்ந்து பார்வை இருண்டு காட்டும் ஓர் வகைக் காசம், a form of cataract marked by dark-coloured opacity—Black Cataract.

54. வளர் சொரிப் பில்லம்—(சொரி= உதிர்) கண்ணிமை ஓரத்தில் அழற்சி கண்டு தோலுதிர்தல், inflammation of the margins of the eyelids which become scaly—Blepharitis Squamosa.

55. மேணிமைப் படுவன்—கண்ணின் மேனிமையில் ஏற்படும் விரணம், ulceration of the upper eye-lid—Blepharitis Ulcerosa.

56. (வியன்) குந்த விரணம், கருக்காம் பழம் போல் கனத்த முளைகள்—கரு விழியில் அதிகமாகச் சதைப் புடைத்து வெளித் தள்ளி விரணங் காணுதல், ulceration of the tubercles on the cornea.

57. புருவக் குடைச்சல்—கண் குவளை நோயினால் புருவத்திற் சேரப்படும் குடைச்சல், neuralgic pain of the eye-brow due indirectly to the disease of the orbit.

58. பொங்கி யுறுத்துதல்—அழற்சியால் கண் பொங்கி உறுத்துதல், inflammation of the eye—Ophthalmia.

59. அந்தி மாலை—மாலைப் பொழுதில் கண் ணொளியை மறைக்கு மோர் கண் ணோய், a degeneration of the retina in which the vision fails at twilight or sunset–Nyctolopia.

NOTE—It also refers to a form of partial blindness in which the patient can see in broad day light only, being blind during the remainder of the twenty-four hours. It usually occurs in persons who have been habitually exposed to the strong glaring light of the tropics.

60. கண் கட்டி—கண் ணிமை, கடைக் கண் அல்லது விழியில் உண்டாகும் கட்டி, a tumour or any abscess on the eye-lids or at the corners of the eye or on the eye-ball but generally refers to stye.

61. நத்தைப் படுவன், நற் புழு மேய்ச்சல்—கண்ணில் விரணம் ஏற்பட்டுப் புழுக்கள் உலாவுதல், an ulceration of the eye or its appendages marked by movements of worms.

62. வெள்ளை முழியில் விரணம் சீழ்ப் பற் றல்—கண்ணின் வெள்ளை விழியில் விரணம் பற்றிச் சீழுண்டாதல், ulceration of the white of the eye attended with the formation of pus.

63. (தள்ளிய) சூடு தான் வளர்ந்திடுதல்—கண் ணிமைக்குள் சவ்வுக்கு அழற்சி கண்டு சதை வளர்தல், inflammation of the conjunctiva associated with the formation of membrane—Croupous Conjunctivitis.

64. பீளை சாரல்—அழற்சியால் கண்ணில் பீளை யுண்டாதல், formation of muco-purulent matter in the eye as in cases of opthalmia or conjunctivitis.

65. பொங்கி நீர் வீழ்தல்—சூட்டினால் கண் பொங்கி நீர் வடிதல், discharge of water from the eyes due to excess of heat in the system. *C.f.* No. 58.

66. இமையில் உறுத்தல்—கண் ணிமை யில் அழற்சியால் உறுத்தல், smarting pain or irritation from inflammation of the eye-lids—Blepharitis.

67. இமைப் பரு (காரை முளை போல் கண்டிடும்)—கண் ணிமையில் காரை முளையைப் போல் எழும்பும் பரு, a small tumour on the eye-lids—Chalazion.

68. இமையில் குருவு களினாலே கொதறிப் பூப் படுதல்—இமையில் குருக்கள் ஏற்பட்டு விரணமாகி விழியில் பூப் படருதல், appearance of a dense pellicle on the eye due to granular conjunctivitis; opacity or pannus arising from trachoma.

69. மாதளம் பூப் போல் வலித்திடும் சிவப்பு—விழியில் சிவப்புச் சதை வளர்ந்து வலியை யுண்டாக்கும், an inflammation of the eye marked by red morbid growth of a flo' pattern attended with pain.

70. வாத காசம்—நடு விழியைக் கடுத்து நொந்து விழியை யுள்ளே யிழுத்துக் கொள்ளும் ஓர் நோய், a disease characterised by excessive pain from inflammation of the eye-ball resulting in shrinking and final disappearance of the cornea —Phthisis corneae.

71. குமரி காசம்—வாயுவினால் கண்மணி பெருத்துக் கருவிழி வீங்கியும், கலங்கியும், நடு விழியில் குத்தலுடன், நீர் கோர்த்துக் கொண்டும்,பார்வையைக் கெடுக்கும் ஓர் வகைக் காசம், a chronic form of cataract in which the pupil is dilated and cornea is congested. It is marked by acute pain, affection of vision due to collection of morbid fluid in the eye-ball.

72. அதிகப் புணர்ச்சியால் ஆன தோர் மந்தம்—மித மிஞ்சிய பெண் கலவியினால் ஏற்படும் புகைச்சற் பார்வை, an obscurity of vision or opacity of the eye from excessive indulgence in sexual intercourse—Post-marital Amblyopia.

73. கூர்மை பார்வையால் கூடின மந்தம் —அடிக்கடி ஊன்றிப் பார்ப்பதால் கண்ணுக்கு ஏற்படும் மந்தப் பார்வை, dullness of vision due to excessive eye-strain.

74. சூரிய கிரணததால் தோன்றிடு மந்தம்—அதிக சூரிய வெளிச்சததினால் கண்ணுக் கேற்படும் மந்தாரப் பார்வை, darkness of vision or opactiy arising from excessive brilliant light like that of the glare of the sun.

75. உஷ்ண வளர்த்தியால் உதித்திடு மந்தம்—உடம்பில் அதிகச் சூடு ஏற்படுவதால் கண்ணுக் குண்டாகும் புகைச்சல், dimness of vision due to excessive constitutional heat.

76. மேக வெட்டையால் மிகுந்திடு மந்தம் —உடம்பில் மேக வெட்டை அதிகரித்து அதனாலுண்டாகும் பார்வை மந்தம், defective vision arising from gonorrhoea or whites.

77. தைல மதனால் சார்ந்திடு மந்தம் (சாஸ்திர நெறியைத் தவிர்த்து செய்யின்ற)—தைலங்கள் நூலளவாகக் காய்ச்சாத குற்றத்தினால் கண்ணிற் கேற்படும் பார்வைக் குறைவு, disturbance of vision caused by anointing the head with medicated oil prepared off-hand without adhering to the principles laid down in the Medical science.

78. கிரந்தி சூலையால் கெட்டிடு மந்தம்—கிரந்தியினாலும்,சூலை நோயாலும் ஏற்படும் கண் மந்தம், opacity of the eye as a result of contraction due to syphilis, gonorrheal rheumatism etc.

79. அடிகள் பட்டு அடைந்திடு மந்தம்—கண்ணில் அடி படுவதால் உண்டாகும் மந்தப் பார்வை, faulty vision or opacity of the eye due to an injury—Traumatic Amblyopia.

80. படிக வெண் முழியில் பலவிதம் புடைத்தல் (உளுத்தம் பயறு ஒரு தர முளைகள்)—உளுத்தம் பயறு போலும் இன்னும் பலவித மாகவும் வெள்ளை விழியில் சதை ஏற்பட்டுப் புடைத்துக் காணல், swelling or feshy growths of varying sizes like grains on the white of the eye; large-sized granulations on the sclerotic.

81. வெண் முழியில் செவ் வேர் வீழ்தல் —கண்ணின் வெள் விழியில் சிகப்பு வரிகள் படர்தல், formation of red-streaks or lines on the sclerotic coat of the eye.

82. நீர்க் காசம்அல்லது நீரெழு காசம்—கண்ணுள் நீர் கோர்த்துத் திரண்டு, பூப் போல் தோன்றித் தீப் பொறி போல் ஒளி விடும் ஓர் கண்ணோய், a film or cataract on the eye caused by the collection of morbid fluid, giving rise to an appearance as of sparks or flashes before the eyes due to retinal disease.

83. எழு நிமைக் கழலை—கண் ணிமையில் எழும்பும் கழலை—a tumour in the eye-lid—Blepharoncus.

84. அன்ன கோபம் — கண்ணுக் குள் எரிச்ச லுண்டாகிச் சிவந்து விம்மி, விழி புடைத்துக் கண் ணுறுத்தும் ஓர் நோய், an opthalmia marked by burning sensation and irritation due to swelling or enlargement of the eye-ball.

85. அழற்றிய கூச்சம்—கண் ணழற்சியால் வெளிச்சத்தைப் பார்க்கக் கூடாத படிச் செய்யும் கண் கூச்சம், abnormal intolerance to light due to inflammation of the eyes—Photophobia.

86. மேனிமைச் சரிந்து விழிந்திடுந் தொங்கல்—வாயுவால் கண்ணின் மேனிமை சரிந்து தொங்குதல், a paralytic drooping of the eye-lid—Ptosis.

87. தினவு — கண் அல்லது இமைத் தினவு, itching of the eye or the eye-lid.

88. தடிப்பு — இமைத் தடிப்பு அல்லது கண் வீக்கம், thickness of the eye-lid or swelling of the eye-ball.

89. எழு நாயிறு—காலையில் வலி தொடங்கி மத்தியானம் வரை யிலும் அதிகரித்தும், மாலையில் தணிந்தும் காட்டும் ஓர் கண்ணோய், a disease of the eye attended with pain beginniug with the rising sun, increasing till towards midday and settling down with sunset.

90. (கண்) கரு விழியில் கண் சவ்வு மூடுதல் (கருகின புகை போல் கருத்த சிவப்பு)—கண்ணின் கரு விழியில் சவ்வு படர்ந்து மூடிக் கருத்த சிவப்புப் புகை போற் காணுதல், a dark opacity of the cornea giving rise to dark red smoky appearance.

91. (வெருவிய) கரு விழி விழுகும் செவ்வேர்—கரு விழியில் சிகப்பு வரிகள் ஏற்படுதல், red streaks or lines on the cornea.

92. விழியில் சயந்திடும் கும்பல் — கண் கும்புதல், atrophy of the eye.

93. கொவ்வைப் பழத்துக் கொத்துப் போல் மாமிசம் — கண் விழியில் சிவந்த மாமிச மொத்தை, red fleshy growth on the eye-ball.

94. கண் மூழி கபாலம், கண் ணிமைக் குடைச்சல் — கண் ணிமையிற் காணும் குடைச்சல் வலி, neuralgic pain of the eyelid and its adjacent parts such as the eye-ball, the head, etc.

95. குவளை விப்புருதி — குவளையிற் காணும் கட்டி, an abscess in the orbit of the eye.

96. வால காசம் — வாலிபர் களுக்குக் காணும் கண் காசம், a soft cataract in young persons—Juvenile cataract. *C.f.* Infantile cataract.

NOTE—Some of these lengthy names are found shortened in some of the books on Tamil Medicine; while in others, most of these names are differently termed and so, they are evidently coined by the subsequent writers supposed to be Ugimuny, Rama Devar and others with a view to simplifying them and giving them a scientific terminology to suit the purpose of nomenclature.

In their attempts to do so, it will be found that names are given as they liked, thus leading to confusion when coming to etiology and symptoms, as to which disease a particular name refers, although they had tried to maintain to a certain extent the sense and ideas attributed to each disease.

To get over this difficulty, and to maintain accuracy, it is thought advisable to quote the very stanza containing the names of the ninety-six diseases and to give them in enumeration as they are mentioned in it (the stanza), with a view to give a correct idea so as to distinguish them easily from those coined names in which brevity without accuracy was chiefly aimed at by the subsequent writers.

The names given by the different commentators are also given here for the information of the readers without an attempt being made to translate them into English, for it is feared that such correlation may lead to confusion and fail to give a correct knowledge of the diseases as contemplated in the original works of Siddhars. Some of the names which can be translated appropriately and correctly are also given here as far as possible.

B. வேறு நூற்களிற் காணும் கண் ணோய்கள் 96க்கும் பெயர்கள் அடியிற் கூறப் பட்டுள்ளன. அவைகளைப் பாயிரத்தோடு ஒத்திட்டுப் பார்க்குங்கால், பெயர்களைச் சிறிது மாற்றியும், வேறு சில நோய்கள் பெயர்களைப் புதிப்பித்தும், மற்றும் சிலவற்றைக் கழித்தும் கூறப் பட்டுள்ளன. இத்தகைய மாற்றத்தால் நோய்களின் பூர்வப் பெயர்கள் இன்னவைதான் என்று பூசித் தறிந்து நிச்சயிக்க முடியாமல் பெருஞ் சந்தேகத்திற்கு இடமாயிற்று. இதுவுமன்றிப் பிற்காலத்திய நூலாசிரியர்கள் அனேகம் நூற்களைப் பாடிச் சித்தர்கள் பாடியதாகப் பொய்ப் பெயரிட்டு வெளிப் படுத்தியு மிருக்கிறார்கள். ஆகவே மேற் கண்ட வித்தியாசங்களும் கூடிய வரையில் அடியில் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. இவ் வித்தியாசங்கள் பிற்காலத்திய நூலாசிரியர்களால், யுக்தி அனுபவங்களைக் கொண்டு

கண்ணோய் வகை

பல விதிகளாக அவ ரவர்களுக்குத் தோற் றிய படிக் கூறப்பட்டுள்ளன வென்பதற்குச் சிறிதேனும் ஐய மில்லை. சுருக்கிச் சொன்ன பெயர்களாவன :—

The following is a list of the names of the 96 diseases of the eyes. They are all the technical terms coined by various subsequent writers or commentators and published under fictitious names and when these terms are compared with the descriptive names given in the said introductory poem, it will be found that the names of several diseases are omitted, and some are even added so as to make up the 96 diseases. So, it is evident that such indiscriminate alterations from the original have created a great confusion and difficulty in determining the real and the original 96 diseases contemplated by Siddhars. To add to this, many literary forgeries seem to have been committed, as many poems composed subsequently are found fathered upon Siddhars of the Siddha School of medicine.

(*a*) The abbreviated or simplified names are :—

1. சுக்கிர ரோகம்.
2. சோதி நெறித்தல்.
3. வீங்கி விழித்தல்.
4. முடமயிர்.
5. நத்தைப் படுவன்.
6. பித்த காசம்.
7. பிறவிக் குருடு.
8. நாக படலம்.
9. திமிரம்.
10. சிலேட்டும காசம்.
11. அமரம்.
12. எழுச்சி.
13. அந்தர காசம்.
14. சோதியில் விரணம்.
15. தூர் மாமிசம்.
16. கண் குருடு.
17. புழு வெட்டு. [தல்.
18. அடர்ந் தெழுந்திடு
19. இரத்தப் படலம்.
20. பற்ப ரோகம்.
21. பாவைப் பூ.
22. நீர்ப் படலம். [பல்.
23. அருவி நீர்த் ததும்
24. குவளை காசம்.
25. வெள் ளெழுத்து.
26. மாலை காசம்.
27. நீல காசம்.
28. கண் அடிப்பு.
29. வால காசம்.
30. பில்லம்.
31. நீர்ப் பில்லம்.
32. குந்தம்.
33. பொங்கிய விதனம்
34. இமைத் தடிப்பு.
35. பருமூலை யெழுச்சி.
36. கண் சிவப்பு.
37. வாத காசம்.
38. குமரி காசம்.
39. அதி மந்தம்.
40. செவ்வேர்ப்படலம்
41. நீரெழு காசம்.
42. அன்ன கோபம்.
43. கூசி விழித்தல்.
44. கண் தினவு.
45. இமையோ டுறத்
46. எழு நாயிறு. [தல்.
47. குவளை விப்புருதி.
48. அக்கர ரோகம்.
49. சருங் கண்.
50. அவிகாய விரணம்.
51. ஆணிப் பூ.
52. சந்திர ரோகம்.
53. சாயல் கண்.
54. நீர்ப் பாய்ச்சல்.
55. கண் புகைச்சல்.
56. மணி காசம்.
57. வெண் குருடு. [கல்.
58. கண் ணொளி மழுங்
59. குவளை நெறித்தல்.
60. அழி கண் பிரிதல்.
61. மதன மந்தாரம்.
62. நீரொளிக் காசம்.
63. மாலைக் கண்.
64. வெண் ணெக்காடு.
65. இரத்த காசம்.
66. நீர்ப் படலம்.
67. இரத்தப் படர்தி.
68. வெண் மாசு படலம்
69. விழி விழுங்கி.
70. மணி வளர்த்தி.
71. சுற்றுக் கண்.
72. கண் ணுளைவு.
73. உயர்ந்து கண் புடைத்தல்.
74. கண் வலி.
75. செஞ் சுடரெழுச்சி
76. கண் கட்டி.
77. இருட் கண்.
78. நேத்திர வாயு.
79. இமை யிறைச்சி.
80. வெண் புகைச்சல்.
81. சுடர்ப் படலம்.
82. பீளை சாரல்.
83. இரத்த நெரிசல்.
84. சூழ விரித்தல்.
85. சுற்றுக் குவளை.
86. கருவிழி உடைதல்.
87. குருதி சிந் திடித் [தல்.
88. கண் பூ.
89. வறட்சி காசம்
90. சுடர்பலதோன்றல்
91. கண் கழலை.
92. இளிச்சற் கண்.
93. விழி வாதம்.
94. பூ சாந்திரம்.
95. விழி மயக்கம்.
96. உயர்ந் தெழு காளான்.

(*b*) The following is a consolidated list of other names of eye-diseases which do not come under the above said 96 kinds or under any of the other classified groups :—

1. பக்கப் படலம்.
2. அக்கரம் பில்லம்
3. கண் ணெடுப்பு.
4. கண் ணிறைச்சி.
5. அந்தி காசம்.
6. சல ரோகம்.
7. செவ்வரி படலம்.
8. விரண சுக்கிரன்.
9. விழி யுந்தல்.
10. விரணப் பரு.
11. சல கும்பம்.
12. மதி யந்தம்.
13. பரு வலி.
14. காக வெறி.
15. அனற் கோபம்.
16. அடையோ டுறு [தல்.
17. விதந்திரதி.
18. இமைக் குரு.
19. வெள்ளைப் படலம்.
20. வெண் சுக்கிரன்.
21. இரத்தக் குமுதம்.
22. உட்டிண நெரிசல்.
23. ஒளிவிழி மழுங்கல்.
24. அதிக் மந்தாரம்.
25. அதி காசம்.
26. அந்தர விதனம்.
27. கண்ணளி லெழுச்சி.
28. கருப்ப காசம்.
29. குமுத ரோகம்.
30. மூலை வறட்சி.
31. இமை யுயர்ச்சி.
32. கும்பிமைத் தடி [தல்.
33. மூலைப் பூ.
34. மேகநீர் பாய்ச்சல்
35. சதை வளர்த்தி.
36. சுழல் வண் டெரி [தல்.
37. இமைப் பரு.
38. இமைக் கழலை.
39. குவளை விரைப்பு.
40. நயனப் படுவன்.
41. இமைசரி தொங் [கல்.
42. சவ்வு மூடல்.
43. மந்தார காசம்.
44. வெண் புகைப் பூ.
45. குவளை பூத் தெழு [தல்.
46. பசு விழி.

47. கண் கூச்சம்.	51. ஒட்டிக் கண்.
48. கண் குருடு.	52. புளித்த கண்.
49. நீர்த் ததும்பல்.	53. மந்தார காசம்.
50. இமை நீர்ப் பாய்ச்சல்.	54. வெள் விழி புடைத்தல்.]

C. நாக முனிவர் நயன விதி (இருநூறு) என்னும் தமிழ் நூலில் கண்ணோய்கள் அடியில் கண்டபடி நான்கு ஸ்தானங்களைக் கருதி 96 விதங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அவை யாவன:—

I. கரு விழி நோய். 45	III. இமைகள். 16
II. வெள் விழி நோய். 20	IV. கடைக் கண். 15

I. கருவிழி நோய் 45 விவரம்:—

(a) காசம்.	8	(f) திமிரம்.	7
(b) படலம்.	7	(g) வரி.	3
(c) குமுதம்.	3	(h) சுக்கிரன்.	5
(d) விழி யுந்தல்.	3	(i) நெரிசல்.	3
(e) குந்தம்.	3	(j) பூ.	3

(a) காசம் எட்டிற்கும் விவரம்:—1. நீல காசம்; 2. பித்த காசம்; 3. வாத காசம்; 4. வால காசம்; 5. மந்தார காசம்; 6 சிலேட்டும காசம்; 7. குமரி காசம்; 8. அந்தர காசம்.

(b) படலம் ஏழிற்கும் விவரம்:— 1. வெள்ளை; 2. சதை; 3. இரத்தம்; 4. நீர் 5. வரி; 6. நாகம்; 7. அதி மாமிசம்.

(c) குமுதம் மூன்றிற்கும் விவரம்:—1. சிகப்பு; 2. வெள்ளை; 3. கறுப்பு.

(d) விழி யுந்தல் மூன்றிற்கும் விவரம்:— 1. செஞ் சதை; 2. வெண் சதை; 3. மூழ்க் கண்.

(e) குந்தம் மூன்றிற்கும் விவரம்:—1. சதை; 2. இரத்தம்; 3. நீர்.

(f) திமிரம் (இருள்) ஏழிற்கும் விவரம்:— 1. வெள் னெழுத்து; 2. மந்தாரம்; 3. மூளை வறட்சி; 4. நீர்த் திமிரம்; 5. வாயுத் திமிரம்; 6. மேகம்; 7. விழி மயக்கம்.

(g) வரி மூன்றிற்கும் விவரம்:—1. வெள் வரி; 2. நீர் வரி; 3. இரத்த வரி.

(h) சுக்கிரன் ஐந்திற்கும் விவரம்:—1. விரணம்; 2. வெள்ளை; 3. விழி விழுங்கி; 4. அனற் சுக்கிரன்; 5. கருஞ் சுக்கிரன்.

(i) நெரிசல் மூன்றிற்கும் விவரம்:—1. உஷ்ணம்; 2. இரத்தம்; 3. நீர்.

(j) பூ மூன்றிற்கும் விவரம்:—1. ஆணிப் பூ; 2. வெண் புகைப் பூ; 3. பாவைப் பூ.

II. வெள்விழி நோய் 20 விவரம்:—

(a) எழுச்சி.	5	(d) புற்று.	3
(b) படர்தி.	3	(e) குமிழம்.	3
(c) நெரிசல்.	3	(f) வரி.	3

(a) எழுச்சி ஐந்திற்கும் விவரம்:—1. வரி; 2. விரணம்; 3. குவை; 4. நீர்; 5. உக்கிரம்.

(b) படர்தி மூன்றிற்கும் விவரம்:—1. சதை; 2. வரி; 3. இரத்தம் (சோரி).

(c) நெரிசல் மூன்றிற்கும் விவரம்:—1. அரி; 2. உக்கிரம்; 3. விரணம்.

(d) புற்று மூன்றிற்கும் விவரம்:—1. சதை; 2. நீர்; 3. அனல்.

(e) குமிழம் மூன்றிற்கும் விவரம்:—1. நீர்; 2. இரத்தம்; 3. சதை.

(f) வரி மூன்றிற்கும் விவரம்:—1. வெள் வரி; 2. நீல வரி; 3. இரத்த வரி.

III. இமைகளின் நோய் 16 விவரம்:—

(a) பில்லம்	3	(f) இழிச்சற் கண்	1
(b) பற்ப ரோகம்	3	(g) நீர்ப் பாய்ச்சல்	1
(c) கழலை	3	(h) கற்றுக் குழலை	1
(d) இமைத் தடிப்பு	1	(i) புழுக் கடி	1
(e) மூட மயிர்	1	(j) இமை யிறைச்சி	1

(a) பில்லம் மூன்றிற்கும் விவரம்:—1. நீர்; 2. அமரம்; 3. இடர்.

(b) பற்ப ரோகம் மூன்றிற்கும் விவரம்:— 1. நீர்; 2. சதை; 3. இரத்தம்.

(c) கழலை மூன்றிற்கும் விவரம்:—1. நீர்; 2. சதை; 3. இரத்தம்.

IV. கடைக் கண்ணோய் 15 விவரம்:—

(a) படர்தி	3	(g) வித்திரதி	1
(b) குவை	3	(h) இமைக் குரு	1
(c) கண் ணெடுப்பு	1	(i) குமிழ்	1
(d) பூசாந்திரம்	1	(j) நேத்திர வாயு	1
(e) விழி வாதம்	1	(k) கண் நோவு	1
(f) விரணப் பரு	1		

(a) படர்தி மூன்றிற்கும் விவரம்:—1. நீர்; 2. சதை; 3. இரத்தம்.

(b) குவை மூன்றிற்கும் விவரம்:—1. நீர்; 2. சதை; 3. இரத்தம்.

In Tamil Medical science compiled by Nagamuni, the diseases of the eyes are divided into 96 kinds and according to the four regions of the eye, they are classified as shown under:—

I.	Diseases of the black of the eye (including the cornea, choroid, iris, retina, pupil, lens and the vitreous humour).	45
II.	Diseases of the white of the eye (sclera)	20
III.	Diseases of the eyelids ...	16
IV.	Diseases of the corners (angles) of the eye	15

கண்ரோகம் வகை

I. Diseases of the black of the eye 45 viz :—

(a) Kasa	8	(f) Timiram	7
(b) Patala	7	(g) Vari	3
(c) Kumuda	3	(h) Sukkiran	5
(d) Viziundal	3	(i) Nerisal	3
(e) Kundam	3	(j) Poo	3

(a) Kasa (diseases of the lens) ... 8 viz :—1. blue ; 2. bilious ; 3. windy ; 4. juvenile ; 5. smoky; 6. phlegmatic ; 7. chronic ; 8. dark.

(b) Patala (diseases of the several coats or films over the pupil) 7 viz :—1. white ; 2. fleshy ; 3. bloody ; 4. watery or containing fluid ; 5. streaks or lines ; 6. hood-like with a tapering end ; 7. thin growth of flesh.

(c) Kumuda (morbid growth of flesh over the pupil) 3 viz :—1. red ; 2. white ; 3. black or dark.

(d) Viziundal (spreading growth on the cornea) 3 viz :—1. red flesh or film ; 2. white flesh or film ; 3. growth affecting the whole eye.

(e) Kundam (protrusion of the eye-ball — Staphyloma); 3 viz :—1. flesh ; 2. blood ; 3. water.

(f) Timira (loss of vision — Amaurosis) 7 viz :—1. long-sight — Presbyopia ; 2. smoke or dullness of vision— Amblyopia ; 3. affection of the brain ; 4. water ; 5. windy humour; 6. venereal or syphilitic ; 7. changes in the pupil.

(g) Vari (streaks or lines on the cornea) 3 viz :—1. white ; 2. water ; 3. blood.

(h) Sukkiran (white film or fleshy growth on the choroid including the iris or the white specks on the black of the eye) 5 viz :—1. ulceration ; 2. white ; 3. Phthisis bulbi ; 4. burning sensation ; 5. black.

(i) Nerisal (pressure due to swelling of the eye-ball) 3 viz :— 1. heat ; 2. blood ; 3. water.

(j) Poo (cataract) 3 viz :—1. deep-seated ; 2. white smoky ; 3. opacity of the lens.

கண்ரோகம் வகை

II. Diseases of the white of the eye (sclerotic coat) 20 viz :—

(a) Ezuchi	5	(d) Puthu	3
(b) Padarthi	3	(e) Kumilam	3
(c) Nerisal	3	(f) Vari	3

(a) Eluchi (tubercle) 5 viz:—1. streaks or lines ; 2. ulceration ; 3. morbid growth of flesh ; 4. water ; 5. spreading growth of flesh.

(b) Padarthi (film) 3 viz :—1. fleshy growth ; 2. streaks or lines ; 3. blood.

(c) Nerisal (pressure due to swelling or enlargement) 3 viz: —1. drop or clot ; 2. morbid flesh ; 3. ulceration.

(d) Puthu (abnormal growth or swelling with punctrres or sinuses) 3 viz :—1. red fleshy growth ; 2. water or fluid ; 3. heat or burning.

(e) Kumilam (red boils) 3 viz :—1. water ; 2. blood ; 3. flesh.

(f) Vari (streaks or lines) 3 viz :—1. white ; 2. blue ; 3. blood.

III. Diseases of the eyelids 16 viz ;—

(a) Pillam	3	(f) Izicharkkan	1
(b) Parparogam	3	(g) Neerpaichal	1
(c) Kazalai	3	(h) Surrukkulaivu	1
(d) Tadippu	1	(i) Puzhukkadi	1
(e) Mudamayir	1	(j) Imayiraichi	1

(a) Pillam (blepharitis) 3 viz :—1. water ; 2. growth of flesh ; 3. thickening of the nerves.

(b) Parparoga morbid softening (tarsomalacia) 3 viz :—1. water ; 2. blood ; 3. morbid flesh.

(c) Kazalai (tumour) 3 viz :— 1. water ; 2. blood ; 3. flesh.

(d) Tadippu (thickening) ... 1

(e) Mudamayir (trichiasis) ... 1

(f) Izicharkkan (inability to close the lids) ... 1

(g) Imaineerpaichal (lacrimation). 1

(h) Surrukulaivu (ulceration) ... 1

(i) Puzhukkadi (madarosis) ... 1

(j) Imayiraichi (entropion) ... 1

See கண்ணிமை நோய் for details.

IV. Diseases of the corners or angles of the eyes (inner and outer) 15 viz :—

(a) Padarthi	3	(g) Vithrathi	1
(b) Kuvai	3	(h) Imaikkuru	1
(c) Kanneduppu	1	(i) Kumiz	1
(d) Poosandram	1	(j) Netravayu	1
(e) Vizhivaudam	1	(k) Kannoi	1
(f) Viranapparu	1		

(a) Padarthi (filmy growth) 3 viz :— 1. water ; 2. flesh ; 3. blood.

(b) Kuvai (conical-shaped growth) 3 viz:—1. water ; 2, flesh; 3. blood.

(c) Kanneduppu (frequent swelling) 1

(d) Poosandram (tubercle) ... 1

(e) Vizhivaudam (paralysis) ... 1

(f) Viranapparu (wart in the edge) ... 1

(g) Vithrathi (thickening on the nerve-path) ... 1

(h) Imaikkuru (stye) ... 1

(i) Kumil (membraneous growth). 1

(j) Netravayu (ptosis) ... 1

(k) Kannoi (inflammation) ... 1

NOTE 1.—Probably the so called Nagamuni above referred to is that Nagarjuna, a follower of the Siddhars' School of Thought and one of the commentators of Ayurveda. He apparently seems to have reconciled the two branches of the sciences viz. the Tamil Siddhars and the Ayurveda and it is this that has given rise to a different mode of classification.

NOTE 2.—In the above classification, the names of the ninety-six diseases of the eye are not apparently consistent with those mentioned in the original works of the Siddhars who simply gave out descriptive names for purposes of maintaining the original sense and enforcing the correct interpretation of symptoms with regard to each disease although such lengthy names may appear clumsy and unscientific to a lay mind.

NOTE 3.—The diseases of the eyes, according to Tamil Siddha Medical science, are divided in 96 kinds definitely, but it will be found in Ayurveya that this classification is varied according to the opinions held by the different commentators or subsequent writers who declare the diseases to be 94, although Charaka and Sushruta distinctly hold them as 74 diseases—not to speak of the two referring to traumatic causes. The difference of 20 (94 – 74) is evidently an addition to the original, perhaps the work of subsequent annotators with a view to bring it in accordance with the Tamil Medicine.

D. ஆயுள் வேதப் படி, கண் ரோகம் 76 விதமென்றும், அவைகளில் வாயு 10, பித்தம் 10, சிலேட்டுமம் 13, இரத்தம் 16, திரிதோஷம் 25, இவைகளின் கோளாறுகளினாலும், பிச்சம் 2, காயம், புண் முதலிய வெளிக் காரணங்களினாலும் உற்பத்தியாகிறதாகக் கூறப்பட்டுள்ளது.

மேற் கூறிய 76 நோய்கள் அடியிற் கண்ட படி பிரிக்கப் பட்டுள்ளன :—

I. சந்திகள் (கரு விழி, வெள் விழி இவைகளின் இடை) ... 9
II. வர்த்தமம் (கண் ணிரப்பை) ... 21
III. சுக்கில பாகம்(வெள் விழிப் பகுதி). 11
IV. கிருஷ்ண பாகம் (கரு விழிப் பகுதி). 4
V. சர்வ கதம் (விழி முழுமையும்) ... 19
VI. திருஷ்டி (கண் மணி, பாவை, சோதி முதலியன) ... 12

I. கரு விழி: வெள் விழி இவைகளின் இடையே யுள்ள சந்து பாகத்திற் குரிய 9 நோய்க ளாவன :—

1. புய லசம்—கெட்ட நாற்றத்துடன் சீழ் கொண் டொழுகும் வீக்கம்.
2. உப னகம் — வலி யற்ற தினை நீர்க் கட்டி. இதில் தின வுண்டாகிச் சீழ்க் கொள்ளும்.
3. பூய சிராவம் இதுவே நேத்திர நாடி— சீழ் ஒழுகும் கட்டி அல்லது வீக்கம்.
4. சிலேட்டுமச் சிராவம் — கண்ணில் வலி யில்லாமலே வெண் ணிறமான பீளை தள்ளும்.
5. இரத்த சிராவம்—இரத்தம் கலந்த ஒழுக்கு.
6. பித்த சிராவம் — நீலங் கலந்த மஞ் சள் நீர் ஒழுக்கு.
7. பரு வணி—வலி, எரிச்சல் முதலிய குணங்களோடு கூடிய சிறிய உருண் டையான சிகப்புக் கட்டி.
8. அலஜி — அழற்சியால் எரிச்சற் காணும் சிவப்புக் கட்டி.
9. கிருமிக் கிரந்தி — புழுக்க ளுறும் கட்டி.

II. கண் ணிரப்பைக் குரிய 21 நோய்க ளாவன :—

1. உத்சங்கினி—இமையின் விளிம்பிற் காணும் கொப்புளம் அல்லது எழுச்சி.

2. கும்பிகம்—கண் ணிமைக்கும், கண்ணிரப்பைக்கும் நடுவே காணும் சிறு குருக்கள்.
3. போதகி — நினவுடன் நீரொழுகிக் காணும் கடினமான பல சிறு குருக்கள்.
4. வர்த்தம சர்க்கரம் — இமை யோர முற்றிலும் எழும்பும் பெரிய பருக்களைச் சுற்றிலும் காணும் சிறிய சிவப்புக் குருக்கள்.
5. அரிசோ வர்த்தமம் — சிறிது வலியுடன் இமையிற் காணும் காளானைப் போன்ற சிறு முளைகள்.
6. சுட்க அரிசம் — இமையிற் காணும் சொர சொரப் புள்ள சிறு முளைகள்.
7. அஞ்சனம் — எரிச்ச லுடன் குத்த லுண்டாகும் மிருதுவான சிறிய சிகப்புக் குருக்கள்.
8. பகள வர்த்தமம்—கடினமான பருக்கள்.
9. வர்த்தம அவ பந்தம் — நினவுடன் அற்ப வலி கொள்ளும் சிறு கட்டி.
10. கிலிஷ்ட வர்த்தமம்—இரத்த மொழுகும் சிவப்பான கட்டி.
11. கர்த்தம வர்த்தமம்—சனி நீ ரொழுகப் பெற்ற சிவந்த கட்டி.
12. சியாவ வர்த்தமம்—நமைச்சல் எரிச்சலுடன் சீழ் கொண்ட கரு நிறமான கட்டி அல்லது வீக்கம்.
13. பிரக்கி வின்ன வர்த்தமம்—நமைச்சலுடன் குத்தல் காணும் சனி சவ்வுக் கழலை.
14. பரிக்கி வின்ன வர்த்தமம் — சீழ் கொள்ளாமலே இரப்பைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளல்.
15. அற்புதம் — இமைக் குள் சிகப்பு முடிச்சுப் போன்று சிறிது வலியுடன் கூடிய வீக்கம்.
16. நிமிஷம்—நரம்புக் கோளாறினு லேற்பட்ட சிமிட்டுக் கண்.
17. சுரோணித அரிசம் — நின வோடும், எரிச்ச லோடுங் கூடிய மெல்லிய சதை வளர்ச்சி. இதைக் கத்தி கொண்டு நீக்கினும் மறுபடியும் கிளைக்கும்.
18. இலகணம் — நமைச்சலுடன் கூடிய கடின மானதும்,வழ வழப் புள்ளது மான வீக்கம்.
19. விஷ வர்த்தமம்—அழற்சியினுல் ஏற்படும் புள்ளி போன்ற சிறு குழிகளுள்ள வீக்கம்.
20. பட்சம கோபம்—உஷ்ணத்தையும், வெளிச்சத்தையும், சகிக்க முடியாமல் வலி யுடனுங் கூடிய சொர சொரப்பான கூர்மை யுள்ள இமை மயிர்கள்.
21. வாதசத வர்த்தமம் — இமைகள் சரிந்து தொங்கல்.

III. வெள் விழிப் பாகத்திற் குரிய 11 நோய்களாவன :—

1. பிரஸ்த கரி †அருமம்—சிகப்பும் நீலமும் கலந்த பரவிய கிரந்தி வீக்கம்.
2. சுக்கில வருமம் — வெள் விழியில் முழுவதும் பரவியுள்ள மிருதுவான வெள்ளைச் சதை வளர்த்தி.
3. இரத்த வருமம் — சிகப்புச் சதை வளர்த்தி.
4. அதி மாமிச வருமம்—கனியாயும் கல் லீரலைப் போன்ற நிறத்தையுமுடைய சதை வளர்த்தி.
5. சினேக வருமம் — மெதுவாகப் படரும் மஞ்சள் சதை வளர்த்தி.
6. சுக்திகம்—கபில நிறமான புள்ளிகள்.
7. பிஷ்டகம் — சோற்றுப் பசையைப் போல் தடித்த உருண்டையான வெண் புள்ளிகள்.
9. ‡சிர சாலம்—விஸ்தாரமான சிகப்புத் தடிப்பான வலையைப் போன்ற நாளங்கள்.
10. சிர பிடகம்—உதிர்ந்த நாளங்களின், தோல்கள் நிறைந்த வெண்ணிறமான குருக்கள்.
11. பலச கிரதிதம்—நாளத்தோடு கூடிய வெங்கல நிறத்தை யுடைய புள்ளி.

IV. கரு விழியைச் சேர்ந்த 4 நோய்களாவன :—

1. ஆவரண சுக்கிரன் — கண்ணீர் வடியச் செய்யும் மேகத்தை யொத்த, ஒளி ஊடுருவிச் செல்லத் தக்கதான வெள்ளைத் தழும்பு.
2. சவரண சுக்கிரன்—குத்தல் வலியும், நீர் ஒழுக்கு முடைய குழி விழுந்த தழும்பு. இது பூரணமாகவும், விரண மாகாமலேயும் இருக்கும்.
3. பாகத நியாயம்—பால் ஏடு போல விழி முழுவதும் படர்ந்து வலியை யுண்டாக்கும்.
4. அஜகம்—வழ வழப் புள்ள செந் நிறமான ஒழுக்கலும், ஆழ்ந்த வலியுமுள்ள ஓர் கனதி யான சதை வளர்த்தி.

† அருமம் = பிணி சீர்ப் பையைப் போன்ற சதைத் துணுக் குள்ள எழுச்சி.

‡ ஜாலம், சாலம் = வலை.

V. விழி முழுமையையும் பற்றும் 19 நோய்களாவன :—

நான்கு வகை அபிஷியாந்தம் :—

1. வாத அபிஷியாந்தம் — குத்தல், உறுத்தல், கண்ணீர்த் ததும்பல், தலை வலி முதலிய குணங்களைக் காட்டும்.

2. பித்த அபிஷியாந்தம்—கண் சிவந்து சீழ் கொண்டு பார்வை கம்மலாகி, மஞ்சளா யிருக்கும்.

3. சிலேட்டும அபிஷியாந்தம் — தடிப் புண்டாகித் தினவெடுத்து, வீங்கி, கண்ணில் பீளை வடியும்.

4. இரத்த அபிஷியாந்தம் — கண் சிவந்து, செவ்வரி படர்ந்து, செந்நீர் வடியும்.

நான்கு வகை அதிமந்தம் :—

5. வாதாதி மந்தம் — கண் உறுத்தி, வீங்கிக் குத்தல் கண்டு, புகைச்சலாய்க் காணும். அதுடன் தலை வலியும் உண்டாகும்

6. பித்தாதி மந்தம் — கண் வீங்கி, செவ்வரி படர்ந்து, சீழ் கொண்டு, எரிச்சல் கண்டு, நீர் வடியும்.

7. கபாதி மந்தம்—கண் கலங்கி, வீங்கிக் கனதியாகித் தலைவலி கண்டு, பார்வை மந்தப் படும்.

8. இரத்தாதி மந்தம்—கண் சிவந்து, இரத்தங் கலந்த நீர் வடிந்துக் குத்தல் கண்டு, கண் புகைந்து காட்டும்.

இரு வகை நேத்திர பாகம் :—

9. சசோப நேத்திர பாகம்—கண் தினவெடுத்துக் குத்தல் கண்டு, பீளை சேர்ந்து, சீழும் நீரும் வடிந்து, விழியில் எரிச்சலையு முண்டாக்கும்.

10. அசோப நேத்திர பாகம்—1. வதில் கண்ட குணங்களுடன் வீக்க மில்லாமல் இருக்கும்.

11. [illegible]ாதி மந்தம்—தரிச நரம்பு தாக்குண்டலால், கண்ணின் பார்வையைக் கெடுக்கு மோர் நோய்.

12. அனிலப் பரியாயம் — கண் ணிரப்பை, புருவம், விழி இவ் விடங்களில் மாறி மாறி ஏற்படும் நோய்.

13. சுட்க அட்சி பாகம்—இரப்பை வறண்டு வலியால் திறக்க முடியாது. எப்பொழுதும் மூடின படியே இருக்கச் செய்வது மன்றிப் பார்வையையும் புகைச்சலாய்க் காட்டும்.

14. அநியோத வாதம்—விழிக்கும், புருவத்திற்கும், மற்றும் அருகி லுள்ள பாகங்களுக்கு முண்டாகும் தாங்க முடியாத வலி.

15. அமில தூஷிதம் — புளிப்புப் பண்டங்களை உணவில் சேர்த்துக் கொள்வதாலும், அல்லது வயிற்றுப் புளிப்பை யுண்டாக்கும் வஸ்துக்களை உட் கொள்வதாலும் ஏற்படும் கண்ணோய்.

16. சிரோ பாதம் — வலி யிருந்தாலும் அல்லது இல்லா விட்டாலும் விழியில் ஓடும் இரத்த நாளங்கள் சிவப்பாயும் அல்லது நிறம் மாறியுங் காணும்.

17. சிரோ அரிஷம்—மேற் கண்ட சிரோ பாதத்தைக் கவனியாது விட்டு விடுவதனால், கண்ணில் பல விதமான ஒழுக்குகள் ஏற்பட்டுக் கண் பார்வையை முழுவதும் கெடுத்துக் குருடாகச் செய்யும்.

18. } அடியிற்கண்ட குறிப்பை
19. } பார்க்கவும்.

குறிப்பு :—மேலே காட்டி யுள்ள 18, 19, ஆகிய இவ் விரண்டு நோய்களும், குத்து, காயம், விரணம், மின்னல் போன்ற வெளிச்சத்தைத் திடீரெனப் பார்த்தல், முதலிய வெளிக் காரணங்களால் ஏற்படும்.

VI. பார்வைக் குண்டான பாகத்திற்குரிய 12 நோய்களாவன :—

எட்டு வித இலிங்க நாசம் அதாவது காசம் :—

1. வாதலிங்க நாசம்—இதில் கண் மணி மே லுள்ள வட்டமான சவ்வு சிகப்பாய் விடும்.

2. பித்தலிங்க நாசம்—மேற்படி சவ்வு, நீலம் அல்லது நீலங் கலந்த மஞ்சள் நிறமா யிருக்கும்.

3. கபலிங்க நாசம் — இதில் கண் மணியின் மேல் தோல் வெண்மை யாயும், தள தளப்பாய் யிருக்கும். கண்ணைக் கசக்கச் சவ்வானது இரு புறமும் அசையும்.

4. இரத்த லிங்க நாசம் — மேற்படிச் சவ்வு செந் நிறமடையும்.

5. திரிதோஷ லிங்க நாசம் — மேற் கண்ட நான்கு வகைகளிற் சொல்லி யுள்ள குறி, நிறங்களைக் கொண்டு, பல விதங்களாகக் காணப் படும்.

6. பரிம்லாயி—கண் மணி மஞ்சளாயும், நெருப்பைப் போலும் காணப் படும். பார்வை கம்மலாகத் தோன்றும்.

7. பித்த விதக்தம்—கண் மணி மஞ்சளாகவும், மற்ற வஸ்துக்களும் அந்நிறமாகவேயும் காணப் படும். ஆதலின், பகலில் பார்க்க முடியாது, இரவில் தான் வஸ்துக்கள் தோன்றும்.

8. சிலேட்டும விதக்தம்—பார்ப்பதற்கு வஸ்துக்கள் வெண்மையாகத் தோற்றும். இரவில் பார்க்க முடியாது, பகலில் தான் முடியும்.

9. தூமம்—கவலை, சுரம், உற்றுப் பார்த்தல், அதி சிரமம் முதலிய காரணங்களைப் பற்றிக் கண்ணுக்குப் புகைச்சல் ஏற்படும்.

10. இரசவ சாட்டியம் — இந் நோயில் சிறிய வஸ்துக்கள் இரவில் நன்கு புலப் படும். ஆனால் பகலிலோ மிக்க கஷ்டத்தோடு தான் அவைகளைப் பார்க்க முடியும்.

11. கரு லக்ஷியம்—கண் மணியி லிருந்து பனிச் சென ஒளி வீசுவதால், பகலில் பார்க்கும் வஸ்துக்கள், பல நிறங்க ளாகவே தோன்றும்.

12. கம்பீரம் — இதில் விழி சுருங்கிப் பேதப் பட்டுக் கிடங்கில் விழும்.

According to *Ayurveda*, the diseases of the eye are classified into 76 kinds and of these, it is said that 10 are due to the deranged Vayu, 10 to deranged Pitta, 13 to deranged Kapha, 16 to vitiated blood, 25 to the concerted action of the three deranged humours in the system and the remaining 2 are due to external causes (traumatic in nature).

The said 76 diseases are enumerated as follows :—

I.	Sandhis (binding union) ...	9
II.	Vartama (eye-lids) ...	21
III.	Sukkila bhaga (the vitreous body) ...	11
IV.	Krishna bhaga (the black of the eye) ...	4
V.	Sarvakatha roga (eye-ball) ...	19
VI.	Drishti (pupil, lens etc.) ...	12

I. The 9 Sandhi diseases which are peculiar to the joints or the binding membranes of the eye are :—

1. Puyalasa (a suppurated swelling exuding a fetid pus.)

2. Upanaga (a painless cyst (கிரந்தி) with an itching sensation and little suppuration).
3. Puya-srava (சீழ்ச்சீர் ஸ்ராவம்) (a swelling with a discharge of pus.)
4. Sleshma-srava (secretion of white and thick muco-purulent discharge with no pain).
5. Raktha srava (thin copious discharge with blood-streaks).
6. Pitta-srava (a watery yellowish. blue discharge).
7. Parvani (a small, round, red swelling with pain and burning sensation).
8. Alaji (a large red swelling with inflammation—Keratitis).
9. Kirimi-granthi (swelling infested with germs or parasites.

NOTE.—Srava (சீழ்ச்சீர் ஸ்ராவம்) is a painless secretion set up by the deranged three humours when passing through the lachrymal ducts into the binding tissues of the four different sandhis (joinings). It is characterised by the specific symptoms according to the nature of the Doshas involved.

II. The 21 Vartama diseases which are restricted to the eye-lids are :—

1. Utsangini (a boil or eruption along the lower eye-lid on its exterior side).
2. Kumbhika (a number of boils or pustules at the junction of the eye-lids and the eye-lashes).
3. Pothaki (several hard red boils or pustules attended with itching and exudation).
4. Vartama sarkarh (a large and rough pustule surrounded by small ones with superficial redness covering the entire length of the eye-lid).
5. Arso - vartama (vegetations of small papilae on the eye-lids with very little pain),
6. Sutka arsas (rough pupilae on the eye-lid).
7. Anjana (small, soft, red pustules with burning and pricking sensation).
8. Bagala-vartama (hard pustules).

9. Vartama - abanda (swelling with an itching sensation and slight pain in which the eyes cannot be easily opened).
10. Kilishta vartama (a mild red inflammatory swelling with bleeding).
11. Karthama vartama (a red inflammatory swelling with a mucous discharge from both the lids).
12. Syava-vartama (a swelling of a dark-brown colour with an itching and burning sensation followed by a discharge of pus.)
13. Praklinna vartama (a swelling with a coating of mucous matter attended with itching and pricking sensation).
14. Pariklinna vartama (a sticking together of eyelids without any suppuration).
15. Arvuda (a red and knotty swelling or tumeur on the inner side with little pain).
16. Nimesha (constant winking of the eyelids due to nerve affection).
17. Sronida-arsa (soft and fleshy growth with itching and burning sensation and recurring even after being operated on).
18. Lagana or Nagana (a hard, slimy, nodular painless swelling with an itching sensation but without suppuration).
19. Visha-vartama (an inflammatory swelling dotted with minute punctures).
20. Pakshama-kopa (rough and pointed eye-lashes with pain and intolerance to light and heat).
21. Vatahata-vartama (drooping down of the eye-lids).

III. The 11 Sukkila bhaga, diseases peculiar to the white of the eye (sclerotic coat) are :—

1. Prastahari †arma (a thin and extended glandular swelling with a reddish blue colour).

† Arma = a cyst-like papilla or protuberance.

2. Sukkila - arma (soft whitish growths gradually extending over the entire length).
3. Raktha - arma (a red fleshy growth).
4. Adhimamsa-arma (a thick, liver-coloured growth).
5. Snayu-arma (a rough yellowish growth spreading slowly).
6. Suktika (dark-brown specks with an oyster-shell colour).
7. Arjuna (a red speck, like a drop of blood).
8. Pishtaka (a raised and round white speck, like rice paste).
9. ‡ Sirajala (red and extensive patches of hardened veins spreading like a net-work).
10. Sira - pitaka (white pustular growths covered with shreads of veins).
11. Palasa-grathitha (a bell-metal coloured speck covered with a vein).

IV. The 4 Krishnabhaga, diseases on the black of the eye (choroid and iris):–

1. Avarna-sukra (a whitsh film like a speck of transparent cloud in the sky attended with tears. It may be non-ulcerated.
2. Savvirana-sukra (a puncture-like dip with a pin-brick pain and exudation).
3. Paukatyaya (white milky film spreading over the whole region with acute pain).
4. Ajaka (a painful deep-seated growth with red slimy secretion).

V. The 19 Sarvakatha Roga or diseases affecting the eye as a whole, are :—

Abishyanta (ophthalmitis) with its 4 types :—

1. that due to deranged Vayu is attended with pricking pain, irritation, tears in the eye and head-ache.
2. that due to Pitta type is marked by inflammatory suppuration of

‡ Sira = vein ; jala = net-work.

the eyes, cloudy vision and yellowness of the eye.

3. that from Kapa type is attended with heaviness, itching sensation, swelling and discharge of slimy mucous from the affected part.

4. that arising from vitiated blood is characterised by inflammation, red tears and deep red stripes or lines on the affected part.

NOTE — The specific symtoms which mark a case of Abhishyanta itself are :— Irritation and pricking pain in the eyes, numbness, horripilation, cold lacrimation and headache and in the case of Adhimantham the symptom is excruciating pain in the eye extending to one-half of the region of the head. The said common symptoms are invariably found to be present or involved in each variety along with those characterising the Doshas (humours) themselves.

Adhimantha (severe ophthalmia) disease with its 4 types viz :—

5. Vata type—marked by cloudy eyes, irritating, cutting and piercing pain, swelling, and hemicrania on the side of the affected eye.

6. Pitta type — characterised by blood - streaks attended with secretions and burning sensation, and swelling and suppuration in the affected part. The eyes look as if ulcerated.

7. Kapa type — distinguished by swelling with slight congestion, heaviness of the eyes, cloudy vision and headache. Objects appear to be full of dust.

8. Rakta type — attended with symptoms of inflamed eyes, redness of the cornea, pricking pain, blood - streaked secretion and vision with the appearance of objects enveloped in flames.

Akshi-bhaga (suppuration of the eye) with its two forms viz :—

9. Sasopha Netrapaka exhibits the following symptoms viz :— eye with itching sensation, deposit of mucous matter, lacrimation and inflammation with suppuration and slimy discharge and eye-ball with burning sensation and pricking pain.

10. Asopha Netrapaka shows the symptoms of No. 9 but *without* swelling.

11. Hata-adhimantha is blinding ophthalmia due to the affection of the optic-nerve.

12. Vata or Anilaparyaya is a shifting pain in the eye-lids or the eye-brows or the region of the eye.

13. Sutka-akshipaka — a disease in which the eye-lids become dry and are always closed. It will be very painful to open them. The vision will be cloudy and hazy—Xerophthalmia.

14. Anyato-vata—a disease marked by excessive pain in the eyes or the eye-brows with nervous pain in the adjacent parts.

15. Amladorshita—a disease arising from taking acid-promoting food or food likely to bring on acidity in the process of digession as a reaction.

16. Siropata—a disease in which the veins all over the eye become red and discoloured.

17. Sira-arisham—a neglected case of No. 16 giving rise to abnormal discharges with complete blindness of vision.

18. }
19. } See Note 1. below.

NOTE 1—The 19 diseases mentioned above in No. V, also include the two, caused from external causes viz. external blow, wounds and injuries from weapons or from a sudden sight of glare or lightning, or fall of meteors etc. extremely brilliant. Although the diseases originate from such causes and affect the whole of the eye or the eye-ball yet, they are all chiefly located in the visual area. (Drishti).

NOTE 2.—The diseases in the above classification are only 76, (including the two caused by extraneous causes), but they entirely differ from those referred to, in the books of subsequent writers or commentators who held them to be 94 and so the difference of 18 is apparenthy an addition to the original and this is clear as per details shown under :—

	Origi-nal.	Subse-quent.
I. Sandhis (binding union) ...	9	9
II. Vartama (eye-lids) ...	21	24
III. Sukkila bhaga (the vitreous body) ...	11	13
IV. Krishna bhaga (the black of the eye) ...	4	5
V. Sarvakatha raga (eye-ball)	19	16
VI. Drishti (pupil, lens etc) ...	12	27
	76	94

VI. The 12 Drishti diseases which are peculiar to the pupil of the eye are :—

Linga-nasa (நாசம்) with its 8 types—

1. Vata in which the circular patches *over the pupil become red.*
2. Pitta in which the pupil is coloured blue or bluish-yellow.
3. Kapa in which the pupil looks white and the circular patch over it moves to and fro when the eye is rubbed.
4. Raktaja in which the pupil becomes red-coloured.
5. Tridosha in which the pupil is marked by varied colours and with the symptoms of Nos 1–4.
6. Parimlayi in which the pupil becomes yellow and looks like fire and the patient will have a faint vision.
7. Pitta - vidaktha in which the pupil turns to a yellow colour and all objects appear likewise. In this, the patient cannot see in the day but only in the night.

   Sleshma-vidaktha in which the objects appear white when looked at and the patient cannot see in the night, but can see only in the day.
9. Dhuma is a disease which lends smoky sight to the eye and it is due to grief, fever, overstraining or excessive physical exertion.
10. Hirasava - *jatya is a disease in* which small objects clearly seen in the night become difficult to see in the day.
11. Nakulandya is a form of eye affection in which objects appear in various colours in the day time due to the pupil found to emit flashes—Photopsia.
12. Gambhiraka is a disease in which the pupil is contracted and deformed and it sinks into the socket.

NOTE 3.—Visions or symptoms occurring in this region of the eye entirely depend upon or differ according to the affection of the 4 Patalas (coats) of the pupil when the deranged three humours of the body passing through the veins of the eyes get into them.

கண்ணோய்க் காரம், கலிக்கம், stimulant applications in affections of the eye ; 2. 2. கண்ணுக் கிடும் பிரம தண்டு, கருங் கொள், ஆவாரை முதலியன, plants and grain used in eye diseases such as, yellow-thistle, black horse-gram, tanner's cassia etc.

கண்ணோய்க் கிரியை, கண்ணோய்களுக் கேற் பட்ட பலவிதமான சிகிச்சைகள் அவை யாவன — சுணை யிட் டறுத்தல், சத்திரம் வைத்தல், உபநாகம் கட்டல், ஒத்தடம் கொடுத்தல், கட்டு கட்டல், கீறுதல் அல்லது உள் ளீடாக அறுத்தல், அறுத் துணித்தல், தமரிடுதல், இரத்தங் குத்தி வாங்கல் சுட்டுத் தீய்த்தல், அட்டை யிடல், கலிக்க மிடல், கழுவல் முதலியன. The different kinds of treatment adopted or resorted to, for curing eye-diseases viz :—scarification, operation, poulticing, application of fumigation, fomentation, bandaging, incision, excision, perforation, vene-section, cauterisation, leeching, salving, washing etc.

கண்ணோய்க் குடைச்சல், கண்ணோயி லேற் படும் குடைச்சல் வலி, scooping pain in the eye—*Ophthalmodynia.*

கண்ணோய்க் குத்தல், கண்ணோயிற் காணும் குத்தல் வலி, acute pain experienced in diseases of the eye.

கண்ணோய்க் கூச்சம், கண் ணழற்சியா லுண் டாகும் கூச்சம், intolerance to light from inflammation of the eyes. *C.f.* கண் கூச்சம்.

கண்ணோய்ச் சிகிச்சை, கண்ணோய் வைத்தி யம், treatment of eye-diseases.

கண் ணோய்க் குடைவு, கண் ணோயிற் காணும் குடைவு, boring pain in ophthalmia.

கண் ணோய்த் தூமம், கண்ணோய்க் கிடும் புகை, fumigation applied to inflamed eyes.

கண் ணோய்ப் பரிகாரம், see கண் ணோய்ச் சிகிச்சை.

கண் ணோய்ப் பீளை, கண் ணழற்சியினால் உண்டாகும் பீளை, muco-purulent matter in ophthalmia.

கண் ணோய் மூலி, see கண் மருந்து.

கண் ணோய் வலி, see கண் ணோவு.

கண் ணோய் விகாரம், கண்ணுக் கேற் படும் நோயினா லுண்டாகும் விகற்பங்கள், changes or modifications occurring in eye-diseases.

கண் ணோவு, கண்ணில் ஏற்படும் வலி, pain in the eye, referring generally to ophthalmia; 2. கண் ணிரப்பையின் சவ்விற் கேற்படும் வலி, conjunctivitis.

கண் ணோவுப் பூண்டு, காந்தள், flame-flower—Gloriosa superba.

கண் தாரை, கண்ணின் நடுவில் இருக்கும் கண் மணி, the aperture in the middle of the iris through which the rays of light pass—Pupil.

கண் திட்டி, see கண் திருட்டி.

கண் திமிரம், கண் புரைகளில் வாயு அநுசரிப்பதனால் கண் ணரம்பைக் கெடுத்துப் பார்வையைக் குறைத்து, இருளை யுண்டாக்கும் ஓர் நோய், loss of vision or blindness due to the affection of the optic-nerve arising from deranged Vayu extending to the eye—Amaurosis.

கண் திருட்டி, } கண் திருஷ்டி, } கண்ணின் பார்வை, eye-sight; 2. கண் பார்வையினா லுண்டாகும் திருஷ்டி தோஷம், morbid diathesis arising from the glance of an evil-eye. See கண்ணூறு.

கண் திரை, கண்ணோய் காலத்தில் வெளிச்சம், தூசு முதலியன படாத படிக் கண்ணுக் கிடும் திரை, a covering for the eyes to protect them from light and dust—Eye-shield; 2. கண் சுருக்கம், contraction of the eye as opposed to கண் விரிவு, dilatation.

கண் திறத்தல், தேங்காயின் கண்ணைத் துளைத்து வழி ஏற்படுத்துதல், to bore a hole in the eye of a cocoanut and make a passage; 2. கண்ணைத் திறத்தல், to open the eye as is done in the case of a new-born child.

கண் தினவு, கண் சிவந்து, அரிப்பும் உறுத்தலு முண்டாகி, நீர் வடிந்து, எரிச்சல், தூக்க மின்மை முதலிய குணங்களைக் காட்டும் நோய். இதனால் பார்வை, புகை கம்மியது போல் காட்டிக் கண்ணைச் சிறிய தாக்கும், a disease of the eye characterised by inflammation, itching, irritation, liquid discharge, burning senstion, sleeplessness etc. It is marked by hazy appearance and diminution in the size of the eye.

கண் தெறித்தல், கண் ஒளி மழுங்கல், to be dazzled or overpowered by light as the eyes do.

கண் நிலைக் குத்த லிடல், கண் மேலே பார்த்த படி ஒரு வழியே நிற்றல், upward and outward fixation of the eyes in one direction—Hyperixophoria.

கண் பகிர்தல், see கண் வெடிப்பு.

கண் பசத்தல், கண் ணிறம் மாற்ற மடைதல், to lose the brilliancy of the eyes.

கண் பஞ்சடைதல், கண்ணில் இருள் கம்மல், appearance of dark, vanishing cloudy patches before the eyes—Scotoma; 2. கண் ஒளி மழுங்கும் ஓர் மரணக் குறி, eyes growing dim as a symptom of approaching death.

கண் படலம், பார்வையைக் கெடுக்கும் ஓர் கண் ணோய், a disease of the eye causing loss of vision on account of the opacity of the crystalline lens of the eye—Cataract; 2. கண்ணி னுள்ள நான்கு அடுக்கு, the four coats or layers of the eye.

கண் படல், see கண் படுதல்.

கண் படுதல், தூங்குதல், to sleep; 2. திருட்டி யுண்டாதல், to be affected by an evil eye.

கண் படை, தூக்கம், sleep; 2. மேகத்தினால் கண்ணில் படரும் சதை சவ்வு, a membrane or other formation which lines or covers a part of the eye and due to syphilis and other allied causes; 3. மனிதர் படுக்கை human bed.

கண் படை நிலை, தூக்க நிலை, sleeping stage or state.

கண் பட்ட சட்டி, துவாரங்கள் அமைந்த சட்டி, a pot with holes in it.

கண் பட்டை, கண் ணிமை, eye-lid.

கண் பரிகாரம், கண் வைத்தியம், eye-treatment; ophthalmic treatment.

கண் பரிகாரி, கண் வைத்தியம் செய்வோன், eye doctor; oculist.

கண் பனித்தல், கண்ணீர்ச் சிந்தல், to shed tears.

கண் பாடு, தூக்கம், sleep.

கண் பாய்ச்சல், பார்வை, look or glance.

கண் பார்த்தல், பரீட்சித்தல், to examine closely.

கண் பார்வை, கண் நோக்கு, eye-sight.

கண் பிசைதல், கண் கசக்கல், rubbing the eyes.

கண் பிசைந் தழுகின்றேன், பேய்த் துவரை, jungle dholl or wild dholl — Atylosia candollei.

கண் பிடி, இளங் காய், tender fruit.

கண் பிணி, கண் நோய், which see.

கண் பிதுக்கம், கண் வெளித் தோன்றி நிற்றல், bulging out of the eye; prominence of the eye.

கண் பிரிதல், }
கண் பிரிவு, } கரு விழி பிரிதல், the separation or loosening of the iris from its attachment—Iridodyalysis.

கண் பீளை, கண் அழுக்கு, the waxy deposit in the corners of the eye.

கண் பீளைச் செடி, பெரும் பூம் பாதிரி, long-leaved trumpet plant—Dolichondrone rheedi.

கண் பீளைப் பாய்ச்சி, மூளையின் மாமிசம், the mass of nervous matter in the brain.

கண்பு, சம்பங் கோரை, elephant koray grass.

கண் புகைச்சல், பார்வை, மேகம் கம்மியது போல் மங்கலாய் இருத்தல், smoky appearance of the objects around; 2. வெள்ளெழுத்து, long sight due to advancing years or to old age—Presbyopia; 3. தூம திருஷ்டி, an eye-disease in which the external objects appear dusky or smoke-coloured when the sight is affected by grief, through age or through overstraining or injury to the head etc

கண் புடைத்தல், கண்ணுக் குள் சதை வளர்ந்து, குத்த லுடன், மிக்க வலியையும், மெய் மறந்த மூர்ச்சையையும், நினைவையும், வேதனையையும் உண்டாக்கும் ஓர் கண் நோய், an eye-disease marked by an abnormal growth of flesh, watery discharge, itching and acute pain; 2. கண் வீங்குதல், swelling of the eye.

கண் புண், கண்ணி லேற்படும் ஆறாப் புண், a chronic ulcer in the eye; sore-eye; 2. கண்ணில் காயத்தினால் ஏற்பட்ட விரணம், a wound caused by an injury to the eye.

கண் புதைதல், கண் உள்ளுக்கு ஆழ்தல், the sinking of the eye.

கண் புதைத்தல், கண்ணை மறைத்தல், to cover the eyes as it is done to the dead.

கண் புரை, கண்ணின் புரை சவ்வுகளுக்குத் தாபிதம் முதலியவை ஏற்பட்டு அதனால் உண்டாகும் நோய்கள், diseases arising from the inflammation etc. of the membraneous layers of the eyes such as sclerotic coat, cornea etc; 2. கண்ணில் வளரும் படலம், cataract.

கண் புழு, கண்ணின் குவளையிற் காணப்படும் புழு, eye-worm—Filaria loa; 2. மேலிமையிற் காணும் புழு, a thread worm found in the upper eye-lid—Filaria palpebralis.

கண் புழு வெட்டு, கண்ணின் இரப்பையில் உள்ள மயிர்களைப் புழுக்க ளரித்து அழற்சியையுண்டாக்கும் ஓர் கண்நோய், a ringworm of the eyelid in which the hairs fall off and the hair follicles are inflamed due to the action of germs.

கண் புளிச்சல், see கண் பீளை.

கண் பூ, கண் இரப்பையில் சதை வளர்ந்து அதனால் விழி தேய் வடைந்து, கண்ணில் பூவைப் போல் படர்ந்து காணப்படும் ஓர் கண் நோய், a disease marked by a growth of flesh of a flower pattern due to conjunctivitis; a disease of the eye by which the vision is destroyed, resulting in the opacity of the crystalline lens — Cataract; 2. கண் நோய்களுக் குபயோகிக்கும் பூ அல்லது பூக்கள் அதாவது நந்தியா வட்டம், ஆடா தோடை, ஊமத்தை முதலியவைகளின் பூக்கள். ஆயுர் வேதப் படி, சிரிங்கி, திருஷ்ண குச்சம் முதலிய பூக்கள், flowers of plants used in cases of ophthalmia such as, the Indian rosebay, wintercherry, dhatura etc. In Ayurveda, flowers like shringi, thathaki etc.

கண் பூத்தல், கண் மயக்கல், faintness of the eye due to giddiness; 2. நெடு நேரம் உற்றுப் பார்ப்பதால் கண்ணுக் கேற்படும் ஒளிக் குறைவு, dimness of the eyes through eye-strain.

கண் பூளைப் பூ, see கண் பீளைச் செடி.

கண் பெறுதல், இழந்த பார்வையை மீளவும் அடைதல், to regain the power of sight or the faculty of seeing, once lost.

கண் பொங்கல், வெப்பத்தினால் கண் இரப்பை மூடிக் கொள்ளல், sticking together of the eye-lids through inflammation of the eyes—Ophthalmia.

2. சுயமான கஸ்தூரியில் சிறிது எடுத்து உள்ளங் கையில் வைத்துக் கொண்டு 2, 3, துளி நீரில் தேய்க்கத் திரியைப் போல் திரளாமல் அது இருக்க வேண்டும், போலிக் கஸ்தூரி யானால் அது முயல் ரத்தத்தைப் போலிருக்கும்.
3. கொஞ்சம் கஸ்தூரியை எடுத்துத் தண்ணீரில் போட, உடனே அது ஊதா நிறங்கொண்டு, வால் நட்சத்திரத்தைப் போல் உள் ளிறங்கும். போலிக் கஸ்தூரிக்கோ இவ் விதக் குண மிராது.

கஸ்தூரி நமது தேசத்தில் எல்லா வைத்தியர்களாலும் கை யாளப் படும். மிக்க உபயோகமான வஸ்து.

இது சாதாரணமாய் உடம்பின் தாதுக்களுக்குப் பலத்தையும், உற்சாகத்தையுங் கொடுத்து, உடம்பில் வலிப்பைத் தடுத்து, நரம்புகளைப் பலப் படுத்தி, இளைப்பு, சோர்வு, தாகம், அசதி முதலிய துர்க்குணங்களை, நீக்கி, முக விலாசத்தையு முண்டு பண்ணும்.

வைத்தியத்தில், சன்னியை யுண்டாக்கக் கூடிய நோய், மூளைப் பலவீனம், கருப்பைக் கோளாறு, விஷ சுரம், காக்கை வலி, இழுப்பு, நரம்பு நோய்கள், வலி காசம், குழந்தைகளுக் கேற்படும் தொண்டை கொர கொரப்பு, கக்குவான் முதலியவை களுக்குக் கஸ்தூரி கொடுக்கப் படும்.

குழந்தை கட்குக் கஸ்தூரியைக் கடைச் சரக்குகளுடன் சேர்த்துத் துளசிச் சாற்றால் அரைத்தும், முலைப் பால் அல்லது வெற்றிலைச் சாறு, தேன் இவைகளில் இழைத்தும், கொடுக்கக் கபம், கோழை, இருமல், இசிவு, சீதளம், சல தோஷம், முதலான நோய்கள் குணப் படும். பெண்களுக்கு உடம்பில் பலத்தை யுண்டாக்கவும், இளைத்த வுடம்பைத் தேற்றவும், பிரசவ சன்னி, பிரசவ வலி, கர்ப்பக் கோளாறு, நாத விர்த்தி, முதலானவைகளுக்கும் கொடுக்கப் படும். அன்றியும், இச் சரக்கு, பல வீனம், நபும்சகம் இவைகளுக்கும் உபயோகப் படும். கப வாத சுரம், குளிப் பிடிப்பு, நோய், பயம் முதலியவைகளுக்கும் கொடுப்ப துண்டு. குடி நீரிலும், சூரணத்திலும் மற்றச் சரக்கு களோடு இதைச் சேர்ப்ப துண்டு. குதிரை வைத்தியத்தில், ஒட்டை வேருடன் சேர்த்து வாதப் பிடிப்பு அல்லது சீதளம் முதலிய நோய்களுக்கும் கொடுக்கலாம். இச் சரக்கு விலை உயர்ந்த தாகையால் தற்காலம் மிகுதியாக வழங்கப் படுவ தில்லை. Musk—Moschus or Casto-reum. It is one of the valuable perfumes, It is the inspissated and dried secretion from the preputial follicles contained in a globular sac known as '*musk pod*' found near the navel of some of the male musk-deer.—Moschus moschiferus.

Musk is contained in a round or oval membraneous sac, about 2 inches in diameter, covered on the outer side with stiff greyish hair arranged in a concentric manner around its central orifice. On opening the sac, an irregular reddish-black or rather unctuous grains or lumps of musk having a strong, peculiar and very diffusive odour is found. In Tamil Medicine, it is selected and included as one of the 120 kinds of natural drugs.

According to Ayurveda, it is of five kinds, considering the colour, the shape and the size as enumerated above.

Musk of a superior quality in its pure state has the consistency of an electuary, generally of yellowish or reddish black colour, with a bitter pungent and aromatic taste. Being a very costly drug, it is only procurable from rich merchants; but the one obtained in retail in the shops or petty bazaars is mostly adulterated and so buyers are advised to examine it well before purchase.

The following are the tests for pure musk according to the Tamil Medical science :—

1. The thread which is made to pass through a garlic bulb using a needle, when rubbed with the

musk should exhibit the smell of only the musk and not that of the garlic.

2. A little of the pure musk steeped in a few drops of water and rubbed on the palm should macerate. A fictitious musk will show red like a hare's blood.

3. A little of the musk when dropped into a tumbler of water should find its way to the bottom shooting like a meteor and readily dissolve lending its colour to the water.

Musk is used, by all Tamil Vaidyans (physicians) of Southern India in their treatment of diseases.

Musk is a stimulant and anti-spasmodic and is generally prescribed in cases of fatigue, exhaustion, thirst, and prostration accompanying any disease. It lends beauty to the facial expression. In diseases, it forms a useful remedy especially in cases of typhus and typhoid fevers, affection of the brain, uterine disorders, advanced stages of febrile affections such as delirium etc., nervous and spasmodic affections such as epilepsy. cholera, hysteria and infantile convulsions. It has been found serviceable, also in cases of spasmodic asthma, laryngismus stridulus, chronic stage of whooping cough and sleeplessness.

It is mixed with other bazaar drugs and macerated in woman's breast milk, in betel juice or in honey and given to children in cases of phlegmatic affections, chillness, cold etc. To women, it is prescribed as a stimulant and tonic and also as a cure in cases of canvalescence, delirium following delivery, labour pains, uterine and menstrual disorders.

Musk is useful in general debility and impotence and is frequently prescribed in tincture or powder in combination with other restoratives and anti-spasmodics.

It is also given in asthenic pneumonia, retrocedent gout, hypochondriasis and other affections of an asthenic type. It is sometimes combined with ammonium carbonate or with camphor.

In Veterinary practice, a scruple of this with two drachms of gentian (chiretta) is given daily to horses suffering from rheumatism or cold. Musk is however, rarely used at the present day, because it is very costly.

NOTE.—Each musk-deer is said to yield about an ounce of musk valued at about Rs. 40 in the markets of Southern India. The chief constituent of musk is a volatile oil, and in addition, ammonia, stearin, and cholestrin. If it is kept for a long time, musk becomes dry and crumbly and if it is of rather light-brown colour and granulated, it is impure. Musk is adulterated either with dry blood or asphaltum (கீலரத்தம்). Fictitious musk may be made by digesting together rectified oil of amber (அம்பர்), one part with nitric acid and four parts, to be afterwards added and well-washed in water in the end. The smell then will be similar to that of musk or ambergiris (மீனம்பர்) and may form a good substitute.

கஸ்தூரி, கஸ்தூரி மான், male musk-deer — Moschus moschiferous; 2. மான் மதநூலி, musk-moschus; 3. கஸ்தூரி வேல், musk babool tree—Acacia farnesiana.

கஸ்தூரி எருமை, உடம்பில் கஸ்தூரியைப் போல் வாசனை வீசும் ஓர் வித எருமை, a kind of buffalo with musky smell on its body—Musk buffalo.

கஸ்தூரி எலி, மூஞ்சூறு, musk rat, so called perhaps ironically from its smell—Crocidura caerulea.

கஸ்தூரி எலுமிச்சை, காட்டு எலுமிச்சை; காயெலுமிச்சை, musk deer plant — Limonia acidissima alias L. crenulata.

கஸ்தூரி கொம்மட்டி, வெள்ளரி, musk melon —Cucurbita moschata.

கஸ்தூரி சேறு, வாசனைக்காக உபயோகிக்கும் கஸ்தூரிக் குழம்பு, a jellied musk preparation in perfumery.

கஸ்தூரித் தைலம், கஸ்தூரியைப் பிரதானமாகக் கொண்டு மற்ற கடைச் சரக்குகளுடன் சேர்த்து வடிக்கும் தைலம். இது தலை முழுகவும், மேற் பூச்சு மருந்தாகவும் உபயோகப் படும், a medicated oil prepared with musk as the chief ingredient mixed with other bazaar drugs and filtered for use. It is used for anointing the body and also as an external application.

கஸ்தூரி நாரத்தை, ஓர் பெரு நாரத்தை, மலை நாரத்தை, trifoliate winged lime — Limonia alata.

கஸ்தூரி நாவி, கஸ்தூரி மிருகம், அதாவது கஸ்தூரி மான், musk deer — Moschus moschiferus ; 2. see கஸ்தூரிப் பிள்ளை.

கஸ்தூரி நாறி, கஸ்தூரி வாசனை யுடைய ஓர் மரம், a tree with the smell of musk.

கஸ்தூரி நிசி, see கஸ்தூரி மஞ்சள்.

கஸ்தூரி நீலி, அவுரி, indigo — Indigofera tinctoria.

கஸ்தூரிப் பட்சி, இது உருவத்தில் பழுப்பு கக்கையைப் போல் சிகப்பா யிருக்கும். வாதத்திற் குபயோகப் படும். இது இமய மலைச் சாரலில் அகப்படுவதாகச் சொல்லப் படும், an unknown red bird used in Alchemy. (அகஸ். 4 காண்ட). It is said to be found in the Himalayan regions.

கஸ்தூரிப் பட்டை, கஸ்தூரி வாசனை யுள்ள அலரிப் பூச் செடி. இதற்குக் கஸ்தூரி யலரி என்றும் பெயர், musk-scented oleander—Nerium odorum (rubra).

கஸ்தூரிப் பிழம்புத் திராவகம், கஸ்தூரியைப் பிரதானமாகக் கொண்டு வடிக்கும் திராவகம், an acid extracted from a mixture with musk as a chief ingredient.

கஸ்தூரிப் பிள்ளை, see கஸ்தூரிப் பூனை.

கஸ்தூரிப் பிள்ளை, இது பல தீவுகளில் காணப் படும். இது வெயிற் காலத்தில் உடம்பில் சூடு தாக்காமல் இருக்கக் குளிர்ச்சிக்காக வாழை மரத்தின் இலை யடியில் மல்லாந்த படி படுத்துத் தூங்கும். இதற்கு முயல் குட்டியைப் போல் உடம்பு முழுவதும் மயிர் இருக்கும். நான்கு கால்கள் உண்டு. இதில் ஆண் பெண் என இரு வகையும் உண்டு. (அக. 4 காண்ட வைத்தி). இதைப் பற்றி ஓர் கதையு முண்டு. அதாவது மனிதர் தன்னைப் பிடிக்க வருவது தெரிந்ததும் ஓடி ஒளிந்து கொள்ளுமென்றும், சாதாரணமாக இதை எளிதில் பிடிப்பது அசாத்தியமான காரிய மாதலின், வெகு தூரத்தி னின்றே நான்கு பக்கமும் வலை கட்டிப் பிறகு அதை நெருக்கிக் கொணடே வந்து கடைசி யாகப் பிடிக்கப் படும் என்றும், அப்படி மனிதர் கைக்குப் பிடிபடுவதாக அது யூகித்தால் அந்த நிமிஷத்திலேயே அதனிட மிருக்கும் கஸ்தூரி யானது, அதற்குப் பயத்தினு லேற்படும் சூட்டினுல் இளகி, அதன் இருப் பிடத்தை விட்டு மறைந்து உடம்பிற் கொண்டு விடுமெனவும் சொல்வ துண்டு. ஆகவே, இதைப் புனுகு அ... று சவ்வாது பூனை யெனக் கொள்ளப் படாது, a species of civet-cat, large in size, resembling almost a hare and said to be found in some islands. Finding the heat unbearable in summer, it resorts to the shade of plantain trees and is often found lying on the leaves at the bottom. The male and the female are the two varieties of this creature. There is an allusion about it. It is said that it is not easily caught or even approached since if it comes to know of any approach to it, it makes itself scarce. So, it is generally caught by laying nets abroad to surround it and then gradually approximating it to a certain limit by drawing them nearer and nearer, so as entrap it finally. It is also said that the moment it scents being ensnared, the secretion from the preputial sac oozes out in fear and is absorbed in the system. So, it cannot be construed as a civet.cat, which is quite a different variety with a secretion of entirely a distinct quality.

கஸ்தூரிப் பூ, see கஸ்தூரிப் பட்டை.

கஸ்தூரிப் பூடு, கஸ்தூரி வாசனை யுள்ள பூண்டு வகை, a genus of malvaceous plants — Abelmosches.

கஸ்தூரிப் பூனை, சவ்வாது பூனை, large civet-cat—Viverra zibetha ; 2. புனுகு பூனை, civet cat—Viverra civettina. See கஸ்தூரி பிள்ளை.

NOTE—The meanings given here as are found in other dictionaries are apparently wrong. No distinction seems to have been observed between சவ்வாது and புனுகு, which are entirely distinct varieties; the former is more costly and found very rarely, while the latter is procurable everywhere and is very common. In Tamil Medical science, this distinction is greatly observed especially in Alchemical Science and in the preparation of calcined powders. So கஸ்தூரி பூனை cannot be either சவ்வாது பூனை or புனுகு பூனை.

கஸ்தூரி மஞ்சள், இதுவே காட்டு மஞ்சள். இந்தச் செடியின் சிவந்த பூக்கள் வாசனையாயும், நடுவில் மஞ்சள் நிறம் வாய்ந்த தாயு மிருக்கும். கஸ்தூரியைப் போன்ற வாசனையு முள்ளது. செழிப்புள்ள காடுகளில் வளரும். வேரின் வெளிப் பக்கம் மஞ்சள், உட் பக்கம் சிவந்த நிறம். இது கர்ப்பத்தினு லுண்டாகும் வாத நோயைப் போக்கி உடம்பிற்குப் பலத்தைக் கொடுக்கும். இதைச் சந்தனத்

தான் முதலிய வாசனைத் திரவியங்களோடு சேர்த்துக் குளியலுடன் காப்பான், சொறி சிரங்கு, புண் இவைகள் போம். பெண்கள் விசேஷமாய் இதை உபயோகிப் பார்கள். இதைத் தைலத்தில் சேர்த்துக் காய்ச்சித் தலை முழுகத் தலை வலி, சரும ரோகங்கள் முதலியன போம். இதற்கு வாயுவைப் போக்குங் குணமு முண்டு. இது வாசனை யுள்ளதால், மருந்துகளில் மற்ற சரக்கு களுடன் இதையும் சேர்ப்ப துண்டு. எண்ணெயி லிட்டுக் காய்ச்சி நரம்புச் சுளுக்கு, வழுவுண்டாயம் முதலியவை களுக்குத் தடவ உபயோகிக்கலாம், musk turmeric; red zedoary —Curcuma aromatica. It is a wild produce; the pale rose-coloured flowers are aromatic with an yellow tinge along the middle of the lip; the smell resembles that of musk somewhat. It grows in moist forests. The root is externally dirty, yellow and wrinkled and internally of a brownish red, possessing an agreeable fragrant smell and aromatic taste.

Medicinally, this drug cures the nervous affections arising in pregnancy. It possesses tonic properties. It is used as a perfume and is mixed with other aromatic powders such as sandalwood powder etc., with which Hindu women of rank generally rub their skins while taking a bath. The dried rhizome is used as a carminative and as an aromatic adjunct to other drugs used in medicines.

It is bruised in oil for an application to sprains and bruises.

NOTE—It is cultivated in gardens and is commonly found in Malabar and Bengal. It is an ornamental and beautiful plant when in flower and abounds in the Travancore forests.

கஸ்தூரி மல்லிகை, கஸ்தூரி வாசனை யுள்ள மகரந்தப் பூ, musk jasmine — Jasminum pubescens.

கஸ்தூரி மாதியம், உதிர் பன்னீர் மரம், dew flower tree —Guettarda speciosa.

கஸ்தூரி மான், கஸ்தூரியைக் கொண்டிருக்கும் ஆண் மான், musk deer (male) — Moschus moschiferous.

கஸ்தூரி மிருகம், கஸ்தூரி மான். கமது தென்னிந்தியாவில் இதைப் பார்ப்ப தரிது. இம் மிருகம், மத்திய மாகாணம், திபேத், காசுமீரம், இமய மலை, சீனம் முதலிய இடங்களில் திரியும். இதன் மேல் வாயில் நீண்ட கோரப் பற்க ளுண்டு, musk deer. The animal is not represented in Southern India, but it is generally found in Central India, Tibet, Cashmere, China and the Himalayan regions. It can be identified by its long ugly teeth in the upper row.

கஸ்தூரி யலரி, ரோஜாப் பூவைப் போன்ற கஸ்தூரி வாசனை யுள்ள ஓர் அலரி, musk-scented oleander — Nerium odorum (rubra). See கஸ்தூரிப் பட்டை.

கஸ்தூரி யெலுமிச்சை, சின்னக் கொழுஞ்சி, musk lime; manilla lime; lime-berry—Triphasia trifoliata alias T. aurantiola.

கஸ்தூரி யெலும்பு, கஸ்தூரியைப் போல் வாசனையை யுடைய எலும்பு, bone smelling like musk.

கஸ்தூரி ரோஜா, சதா பத்திரி, musk rose—Rosa moschata.

கஸ்தூரி வாத்து, கஸ்தூரி வாசனை யுள்ள ஓர் வகை வாத்து, musk-duck.

கஸ்தூரி விதை, கஸ்தூரி வெண்டைக் காய் விதை, the seed of musk plant or musk mallow. It is known as musk seed because it smells like a musk and is used as a substitue for musk—Ambrette.

கஸ்தூரி வெண்டை, காட்டுக் கஸ்தூரி மரம்; வெற்றிலைக் கஸ்தூரி, musk bendy or musk plant — Hibiscus abelmoschus alias Abelmoschus moschatus

NOTE—It is known by several names in Tamil—காட்டுக் கஸ்தூரி, பெட்டகத் துத்தி, இரட்டைத் துத்தி, காட்டுப் பருத்தி, etc.

கஸ்தூரி வெண்டை விதை, காட்டுக் கஸ்தூரி விதை. இதைக் காட்டு வெண்டை விதை அல்லது சீமை வெண்டை விதை யெனவும் சொல்வ துண்டு. இது கபில நிறமாயும், குண்டிக் காய் வடிவ முள்ளதாயும், தட்டையாயும், வரிகள் அமைந்த தாயு மிருக்கும். இது, கார்போக அரிசியைப் போலுள்ளதால் இதற்குப் பதிலாகக் கார்போக அரிசியை மோசடியாக விற்பதுண்டு. வாயிற் போட்டு மென்று பார்த்தாலும் அல்லது விரல்களில் நசுக்கிப் பார்த்தாலும், வித்தியாசம் இனிது விளங்கும். இவ் விதை, கஸ்தூரியைப் போல் வாசனை வீசும். ஆனால் கார்போ கரிசியைப் போல் கசப்பா யிராது. மருந்திற்கு மிக்க உபயோக மானது. உடம்பிற்கு வலுவைக் கொடுப்பது மன்றி அரோசகத்தையும் நிவர்த்தி செய்யும். இதைத் தூள் செய்து, பாம்புக் கடிக்கும் கொடுப்ப துண்டு. இதைக்

குளிப்பதற்கு உபயோகிக்கும் வாசனைத் திரவியங்களில் சேர்ப்பதுண்டு. தைலங்கள் காய்ச்சுவதிலும் உபயோகப் படுத்துவார்கள். இதை முற் காலத்தில் கஸ்தூரிக்குப் பதிலாகவும், கூந்தற் பரிமளத்திற்காகவும் உபயோகித்து வந்தார்கள். வாசனைக்காகக் காப்பிப் பொடியிலும் சேர்ப்பதுண்டு, musk seed *i.e.*, the seed of musk mallow plant (Hibiscus abelmoschus)—Ambretta. It is brown in colour, kidney shaped, slightly compressed and marked with parallel elevated lines. Psoralea seeds are ofen sold as these seeds fraudulently. The difference in the seeds will be distinctly perceptible when they are put in the mouth and chewed or rubbed between the fingers and smelled. This seed will smell like pure musk and is not bitter.

It is medicinally a cordial, stomachic and when bruised, it is given as an antidote to snake-bite poison. It is applied externally, being used in medicated oils and in Indian perfumery. Formerly, it was used as a hair powder and also for pomatum. Sometimes it is used for giving flavour to coffee.

NOTE—The following descriptions of the two varieties will distinguish them easily :—The seeds of Hibiscus abelmoschus—kidney-shaped, slightly compressed, striated or marked with minute parallel elevated lines, brown in colour and smells like pure musk when chewed or bruised and is not bitter; whereas the seeds of Psora corylifolia are oval or oblong and flat, brown or dark brown in colour, aromatic in smell and slightly bitterish in taste.

கஸ்தூரி வேல், கஸ்தூரி வாசனை யுள்ள ஓர் வகை வேல மரம், musk-scented babool—Acacia farnesiana.

கஸ்தூரி வைப்பு, செயற்கைக் கஸ்தூரி; பொய்க் கஸ்தூரி. கல் மதம், அல்லது உறைந்து காய்ந்த இரத்தத்தை மீன் அம்பர் எண்ணெயோடு கலந்து உறவான வுடன், வெடியுப்புத் திராவகத்தையும் சேர்த்துப் பிறகு தண்ணீர் விட்டு அலம்பி எடுத்தால், கஸ்தூரியைப் போல் வாசனை வீசும்.

போகர் நூலிற் சொல்லியபடி கஸ்தூரி வைப்புச் சரக்கு அடியிற் கண்டபடி வேறு விதமாகவும் தயாரிக்கலாம் :—

1. இரத்தப் பாஷாணம், வேங்கை மரப் பிசின், பழந் தின்னி வௌவால் எச்சம், இவைகளைக் கலைமானின் இரத்தத்தில் அரைத்துத் தாழை மலரில் கவசம் செய்து, ஓர் சட்டிக்குள் வைத்துப் பொதிந்து மூடிப் பூமியில் ஒரு மண்டலம் புதைத்து வைத்துப் பின்னர் எடுத்துப் பார்க்க, அசல் கஸ்தூரியைப்போ லிருப்பது மன்றி வாசனையும் அவ்வண்ணமாகவே இருக்கும். தண்ணீரில் போடக் கஸ்தூரி மாதிரியே நிறம் ஊடுருவிச் செல்லும். சன்னி, சுரம் ஆகிய இவைகளையும் கண்டிக்கும் தன்மையும் வாய்ந்தது.
2. காண்டா மிருகத்தின் இரத்தம், கருங் காலிப் பட்டைத் தூள், காசுக் கட்டி, இவைகளைச் சமனாகக் கொண்டு, அதனுடன் சம நிறை கிராம்பு, ஏலம், கெவுனா, முதலியவைகளையும் சரிக் கூட்டி, 12 மணி நேரம் அரைத்து, ஒரு சாடிக்குள் போட்டு, முதல் தரமான பன்னீர் நிறைய விட்டுச் சீலை மண் செய்து, 8 நாள் எரிக்கச் சரக்கெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து கட்டிப் போகும். திறந்து பார்க்க வாசனை கஸ்தூரியைப் போலவே யிருக்கும்.
3. இரத்தப் பாஷாணம், கார்போக வரிசி, வாலுளுவை யரிசி, கூகை நீறு, இவைகளைச் சமன் கூட்டிப் பன்னீரா லரைத்துப் பாண்டத்தி லிட்டுச் சீலை மண் செய்து, பூமிக்குள் புதைத்து ஒரு மண்டலம் வைத்து எடுத்துப் பார்க்க, நீரெல்லாம் சுண்டிக் கறுப்பு நிறமா யிருக்கும். முகர்ந்தால் மிக்க வாசனையால் திணறும் படி நேரிடும். இதைக் கஸ்தூரிக்குப் பதிலாக மருந்தில் உபயோகிக்கலாம்.

Prepared musk ; fictitious musk. It is generally adulterated with dried blood or asphaltum and then, after digesting in rectified oil of ambergiris and nitric acid, it is well-washed in water. The smell will be similar to that of musk or ambergiris.

According to Tamil Medical work compiled by Bogar (7000), fictitious musk may be prepared in other ways also as mentioned below :—

1. Dried blood, gum of kino tree and feces of flying fox are macerated in the blood of a stag and then dried into a lump and cove-

red by petals of flowers of screw-pine plant—(Pandanus odoratisismus). The whole is then put into an earthen vessel and covered air-tight. The pot is afterwards kept buried under the earth for 40 days and then taken out. The mass contained in the pot will be found smelling exactly like musk. It will also stand the test for genuine musk and will be found to be similarly useful in cases of fever, typhoid fever, delirium etc.

2. the blood of rhinoceros, powdered bark of rosewood and catechu, taken in equal quantities to which are added equal weights of clove, cardomom and gavula (an aromatic substance). The whole is mixed up and then ground well for 12 hours. The mass is immediately transferred to a jar and pure rose-water is poured into it fully and then hermetically sealed. It is afterwards gently and uniformly heated for 8 days, when the whole will be found reduced to a pulp smelling like a pure musk and resembling it in every respect.

3. congealed blood, psoralea seeds, seeds of spindle tree and arrow root flour are taken in equal quantities and triturated in rose-water. The product is then put into a pot and then hermetically sealed or hermetically luted with clay and buried under the earth. It is taken out after 40 days, when it will be found smelling like real musk and even resemble it in every way.

கஸ்தூரி னிசி, see கஸ்தூரி மஞ்சள்.

கஸ்தூ வலகம், உலோத்திரம், lodhra bark which is very useful in Ayurvedic preparations—Simplocos racemosa

கஸ் தோவர், ஊமத்தை, datura plant — Dhatura stramonium.

கஸ்பாரியா பட்டை, (*English*) மேனுட்டி லிருந்து இறக்குமதி யாகும் ஓர் மரத்தின் பட்டை. இம் மரம் தென் அமெரிக்காவில் விளை ளும். இப் பட்டையைக் கஷாயம் வைத்துச் சீத பேதிக்கும், முறைச் சுரத்திற்கும் கொடுக் கலாம். இது அங்கஸ்துரா என்னும் ஊரில் விளைவதால் இதற்கு அங்கஸ்துராப் பட்டை யென்றும் பெயர், the bark of a tree —Galipea cusparia. It is exported from America. It is a tree of Angustura—a town in Venezuala in South America. It is used in infusion in cases of dysentery and intermittent fever. It is a bitter tonic and a stimulant.

கககதம், ஒட்டகம், camel.

கக்க மிளகு, வால் மிளகு, tail-pepper—Piper cubeba.

கநக ரசம், பொன் அரிதாரம், yellow orpiment. It is so called because it is of gold colour and is used in Alchemy.

கந காசம், கரு விழியைப் பற்றிய நோய், a disease of the iris of the eye.

கந காட்சி, பெண் ஆந்தை, a female owl

கந காமிர்தம், வெள்ளி, silver.

கநங் காய், ஊமத்தை, thorn apple—Dhatura.

கந சாரகம், இரசம், mercury; 2. கற்பூரம், camphor; 3. நீர், water.

கநம், இரண்டு மாதத்திய ஆண் கருப் பிண்டம், male foetus two month's old.

கநீயசம், தாமிரம், copper.

கநீயசி, செடி, plant.

கந்த அபசுமார கிரகம், இது குழந்தைகளைத் தாக்கு மோர் வகைக் கிரக தோஷம். இது உடம்பின் மீது இரத்தக் கவிச்சு, துர் நாற்றம், கண் கிலைக் குத்த விடல், அச்சம், அழுகை, கண் சுழற்சி, மலக் கட்டு, இடை இடையே அறிவு மயக்கம், கை கால் வலிப்பு, வாயில் நுரை தள்ளல், முதலிய குணங் களைக் காட்டும், a morbific diathesis in children due to the influence of evil planets. The following are the symptoms:—the body will emit bloody and stinking smell; the eye-lids would become fixed and motionless; the child would look frightened, close its fists and moan a little. The eyes would be rolling and its stool would become hard and constipated. Alternate fits of fainting and loss of consciousness, with convulsive jerks of hands and legs and frothy discharge from the mouth would also be the characteristic features of the attack.

கந்தகக் கலப் பியம், கந்தக வியம். ஈயத்தோடு கந்தகத்தைக் கலந்து தயாரிக்கு மோர் மருந்து. இது நாட்டு வைத்தியர்களால் தயாரிக்கப் படும், a preparation of lead and sulphur by native Vaidyans—Native sulphide of lead; 2. வங்க பற்பம், calcined powder of lead combined with other ingredients.

கந்தகக் களிம்பு, ரசம், பாஷாணம், கந்தகம் முதலியவைகளுடன் மெழுகும் சேர்த்துத் தயாரித்துப் புண் புரைகளுக் குபயோகிக் கும் களிம்பு, an ointment consisting of arsenic, sulphur and mercury as chief ingredients, prepared by mixing them with wax and applied for wounds and sores—Sulphur ointment.

NOTE—According to Allopathic science, it is an ointment in which sublimed sulphur and prepared lard are mixed thoroughly — Unguentum sulphuris. It is an effectual application in scabies.

கந்தகச் சத்துரு, ஆல், the banyan tree—Ficus Bengalensis. It is supposed to kill the effects of sulphur.

கந்தகச் சிந்தூரம், கந்தகத்தை நெருப்புக் கோடாதபடிக் கட்டிப் பிறகு புடத்தி லிட்ட செந்தூரம், red oxide of sulphur obtained by calcination after consolidating sulphur so that it may not readily escape as fumes in fire.

NOTE—It should be remembered that the above is an Alchemical process and so cannot be prepared ordinarily.

கந்தகச் சுண்ணம், சித்த நூற்படிக் கந்தகத்தை நெருப்பிற்கு ஓடாத படிக் கட்டிய பிறகு, அதை இதரச் சரக்குகளோடு சேர்த்து அரைத்துப் புடமிட் டெடுத்த சுண்ணம், according to Siddhar's science, it is a compound prepared by consolidating sulphur and then calcining it by adding to it other drugs; 2. ஆங்கிலேய முறைப்படிக் கந்தகம் கலந்த சுண்ணும்பு, (In Allopathic science) a simple mixture of sulphur and lime; sulphurated lime—Calx sulphurate.

கந்தகச் சுத்தி, பதங்க முறையால் அல்லது வாலையி லிட்டுக் கந்தகத்தைச் சுத்தி செய் தல், purificatian or refining of crude sulphur effected by sublimation or by the process of distillation; 2. கந்தகத் தைப் பசுவி னெய்யி லிட் டுருக்கி ஏழு தடவை பாலில் சாய்ப் பதனு லுண்டாகும் சுத்தி, cleaning of sulphur from impurities by melting it in cow's ghee and then pouring it in cow's milk. The process here has to be repeated seven times to effect a perfect cleaning as contemplated in Tamil Medical science.

NOTE—The sulphur in the market may be purified by the process of sublimation when the sulpur vapour is found deposited as a light powder called the flower of sulphur. This powder can also be melted and drawn off as roll sulphur.

கந்தகச் செந்தூரம், see கந்தகச் சிந்தூரம், calcined brimstone.

கந்தகட் பலம், தான்றி, devil's tree—Terminalia bellerica.

கந்த கணம், தேற்றான் கொட்டை, water-clearing nut—Strychnos potatorum.

கந்தகத் திராவகம், கந்தகத் தோடு மற்றச் சரக்கு களைச் சேர்த்து வடிக்கும் திராவகம். சாதாரணமாய்க் கந்தகம், படிக் காரம், வெடியுப்பு, இவைகள் வகைக்குப் பலம் 5 வீதங் கொண்டு, இடித்து வாலையி லிட்டு வடிக்கும் திராவகம். இதை நமது நாட்டு வைத்தியர் கள் தண்ணீ ருடன் கலந்து, கண்ட மாலை, பல வீனம், வாந்தி பேதி, விடாச் சுரம் முதலிய நோய்களுக்கும், இலவங்கக் கஷாயத் துடன் சேர்த்து முக்கல் முதலிய வயிற்றுக் கோளாறுகளுக்கும் கொடுப்ப துண்டு.

போகர் முறைப் படிக் கெந்தகம் 1 சேர், சீனம் 2 சேர், பூ நீறு ¼ சேர், சோற் றுப்பு ½ சேர், வளைய லுப்பு ¼ சேர், மலட் சாரம் ¼ சேர், இவைகளைப் பொடியாகச் செய்து, சக்கர வாலையி லிட்டு வடிக்கும் திராவகம். இது வாத முறையிலும் உபயோகப் படும்.

Sulphuric acid prepared ordinarily by mixing powdered sulphur with other ingredients and then distilling the mixture when a clear liquid will be collected by evaporation and condensation. It is generally prepared by our Vaidyans as follows:—sulphur, alum and nitre are taken in equal quantities (5 palams); they are powdered well and put into a strong earthen still (வாலை) and then distilled in the same way as distillation is done at present, but in a crude way. This acid is diluted and prescribed by our Vaidyans, internally, in scrofulous affections, and in cases of general debi-

lity, cholera and incessant fever. It is also given and with infusion of cloves, in certain bowel complaints unaccompanied by tenesmus.

According to Bogar's work, the acid is prepared in the following manner:—sulphur 1 seer, alum 2 seers, pooneer (soda) $\frac{1}{4}$ seer, common salt $\frac{1}{8}$ seer, fel vetrix $\frac{1}{4}$ seer, and salt petre $\frac{1}{4}$ seer are to be taken and powdered together well; the powdered mixture is to be placed in a strong earthen still and then distilled in the usual way when a strong liquid will be found collected at the other end of the tube in the still. This acid is also used in Alchemy.

கந்தகத்திற் குரிய, கந்தக சம்பந்த மான pertaining to sulphur—Sulphuric.

கந்தகத் தூள், கந்தகப் பொடி, amorphous sulphur in which no signs of crystallisation can be detected.

கந்தகத் தைலம், கந்தகத் துடன், நவச்சாரம், வீரம், இரசம், வெடி யுப்பு, அரிதாரம், இலிங்கம், பூரம், ஆகிய சரக்குகளைக் கல் வத்தி லிட்டுப் பொடித்துப் பசுவின் வெண் ணெயால் ஈர மில்லாமற் படி அரைத்து, முழச் சீலையில் தடவிச் சுருட்டிக் கொளுத்தி யெரியவிட, அதி லிருந்து வடியும் தைலம். இதில் 5, 6, துளி சருக்கரையில், கலந்து கொடுக்கக் குட்டம், காசம், குன்மம், கை கால் பிடிப்பு முதலிய நோய்கள் குண மாகும். Oil of Sulphur It is a medicated oil prepared in the following manner:—Sal ammoniac, corrosive sublimate, mercury, nitre, orpiment, vermilion, and muriate of mercury are mixed with sulphur and cow's butter and the whole mixture is well ground in a stone mortar till the moisture is completely got rid of. The product so obtained is to be steeped in a cloth one cubit long and then rolled up in the form of a wick and then burnt, when the drops of oil falling therefrom are carefully collected in a vessel arranged for the purpose and then secured in a well-corked bottle. A few drops say 5 or 6, mixed in sugar are administered by our Vaidyans in cases of leprosy, asthma, dyspepsia, rheumatism etc.

கந்தக நீறு, கந்தக பற்பம், which see.

கந்தக பதங்கம், சாதாரணமாய்க் கந்தகத்தை மூடின ஒரு பாண்டத்தி லிட்டு எரிக்க, மேற் புறம் பதங்கமாய் நிற்கும் கந்தகம். இதுவே பதங்கித்த கந்தகம். இதைச் சொறி சிரங்கு, புண், முதலிய சரும நோய்களுக்கும், வயி ற்று வலி, வாய்ப் பிடிப்பு, வாதப் பிடிப்பு, இழுப்புக் காசம், மார்பு வலி, கக்குவான், கண்ட மாலை இவைகளுக்கும் கொடுக்கப் படும், sublimed sulphur. It is prepared from crudesulphur by the process of sublimation. It is alterative and diaphoretic in small doses and mildly aperient in large doses. It is therapeutically used in scabies and other cutaneous affections both as an internal and an external remedy. It is prescribed internally with advantage in lead poisoning, such as, Colica pictonum and also in ptyalism arising from misuse of mercury, rheumatism, spasmodic asthma, heart disease (angina pectoris), whooping cough, scrofula etc.

கந்தக பற்பம், கந்தகத்தை நெருப்புக்கு ஓடாத படிக் கட்டிப் பிறகு அத்துடன் மூலிகை களைச் சேர்த் தரைத்துப் புடமிட் டெடுத்த பற்பம், calcined sulphur. This can only be obtained by consolidating sulphur first and then calcining it by adding to it drugs required for the purpose.

NOTE—Although this oxide is said to be very effective in its curative power, it cannot be easily prepared and therefore, it is not found to be used much in practice.

கந்தக பாஷாணம், ஓர் பிறவிப் பாஷாணம், a poisonous compound of sulphur in its native state; 2. அவுபல பாஷாணம், one of the 32 kinds of arsenics in its natural state. It is a mineral poison containing sulphur. Although it is classified as one of the 32 kinds of arsenics, the correct chemical name of this compound is not known, perhaps it is an arsenical compound. See பாஷாணம்.

கந்தகப் பாகு, கந்தகத்தை உருக்கிக் குளிர்ந்த தண்ணீரில் சாய்ப்பதால் உண்டாகும் சவ்வு போன்ற கந்தகம், molten sulphur poured into cold water, when a tough elastic material is obtained. It is named 'Plastic sulphur.'

கந்தகப் புகை, சொறி, சிரங்கு, புண் முதலிய சரும நோய்களுக்குக் கந்தகத்தை எரிய விட் டுக் காட்டும் புகை, fumigation of sulphur

or sulphur vapour—a treatment adopted in cases of scabies and other skin affections.

கந்தகப் புளிப்பு, ஒன்றுக்குப் பத்துப் பங்கு தண்ணீர் கலந்த கந்தகத் திராவகம். இது மிக்கப் புளிப்பா யிருக்கும். இதைக் கடையில், கடலைப் புளிப்புக்குப் பதிலாக விற்பார்கள். இதை வயிற்று வலி, வாய் வழியாக அல்லது கருப் பையி லின்று இரத்தங் கொட்டல், அதி சார பேதி, கிராக் சுரம், சரும நோய், மேக நோய், சய ரோக வியர்வை, தொண்டைப் புண் முதலிய நோய்களுக் குபயோகிக்கலாம், diluted sulphuric acid—Acidum sulphuricum dilutum. Water is added to this in the proportion of 10 : 1 when the diluted acid becomes an astringent. It can safely be used with advantage in colic from lead poisoning (Colica pictonum), passive hemorrhage from the stomach or the uterous and in various forms of diarrhoea, as well as in the advanced stages of continued fevers, in some skin diseases, in syphilitic affections, in profuse perspiration in phthisis and in sore throat as an excellent adjunct to gargles.

கந்தகப் பூமி, மிக்க உஷ்ணமான பூமி, earth impregnated with excess of heat; it is said to be due to the presence of the substance sulphur; 2. கந்தக முள்ள பூமி, soil containing sulphur or sulphides.

கந்தக மய மலை, கந்தகச் சுரங்கம், sulphur mine.

கந்தக மய மான, கந்தகச் சத்துப் பொருந்திய, impregnated with or containing sulphur—Sulphurous.

கந்தக முள்ள, கந்தக மடங்கிய, containing sulphur—Sulphurous.

கந்தக முறிவு, கந்தகக் குணத்தை மாற்றுதல், changing or neutralising the effects of sulphur. *C.f.* கந்தகச் சத்துரு.

கந்தகம், முருங்கை, moringa—Hyperanthera moringa.

கந்தகம், இது இயற்கை யாகவே உற்பத்தி யாகும் ஓர் வகைச் சரக்கு. இது சாதாரணமாய் எரி மலை யிருக்கும் தேசங்களில் அதாவது சிசிலி, ஜப்பான், ஐஸ்லாந்து, சுமத்திராத் தீவு, பிலிப்பைன் தீவு, முதலிய விடங்களில் விசேஷ மாகக் கிடைக்கும். அன்றியும் இந்தியாவில், நேபாளம், காஷ்மீரம், ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களிலும், பர்மாவிலும், அகப்படும். இது செம்பு, இரும்பு முதலிய தாதுக் களுடன் கலந்தும் பூமியி லின்று வெட்டி யெடுக்கப் படும். மேலும், தாவரங் களி லிருந்தும் மிக்கச் சொற்ப அளவில் கிடைக்கும். இது நமது நாட்டிற்கு, மேற் கண்ட விடங்களி லிருந்து எடுதுச் சுத்தி செய்து இறக்குமதி யாகிறது. நமது நாட்டில் ஏராளமாய் இல்லா விட்டாலும், சிறிய வளவில் உதய புரம், திருவாங்கூர் இவ் விடங் களில் மற்றத் தாதுக்க ளாகிய இரும்பு, படிக் காரம் முதலியவை களுடன் கலந்தபடி யாக அகப்படும். கெந்தக மானது சிகப்பு, மஞ்சள், வெண்மை, கருப்பு, முதலிய நிறங்கள் வாய்ந் திருக்கும். காய கற்பத்திற்கும் உதவு மெனக் கருதப் படும். ஆயினும், கருப்பு அல்லது நீல வகை அகப்படுவது மிக்கக் கஷ்டம்.

சாதாரணமாகக் கந்தகத்தைச் சுத்தி முறைப் பிரகாரம் சுத்தி செய்து தான் வைத்தியத்திற் குபயோகிக்க வேண்டும். அசுத்தக் கந்தகம் நோய்களுக்குக் காரண மாகும்.

கந்தகம் கடைகளில் அடியிற் கண்டபடிப் பல தினுசுகளாக விற்கப் படும். அவைகளுள் நெல்லிக்காய்க் கந்தகந் தான் மருந்திற்கு மிக்க உபயோகப் படும். கந்தகதி லின்று கந்தகப் பதங்கம், கந்தகத் தூள், பூக் கந்தகம், புட மிட்ட கந்தகம் எனப் பல மாதிரிகளாகத் தயாரிக்கப் படும். அன்ன பேதி, வெண் துத்தம், ரச பற்பம், மயில் துத்தம் முதலியவைகளும் கந்தகம் சேர்ந்தவைகளே.

கந்தகம், சாதாரணமாய்ச் சொறி சிரங்கு, புண் முதலிய சரும நோய்களுக்கு முக்கியமாக உபயோகிக்கப் படும். அதைக் கருஞ் சீரகத் தூளுடன் நல் லெண்ணெயி லுழைத்துச் சிரங்குகளுக்கு மேற் பூச்சு மருந்தாகப் பூசுவ துண்டு. இதன் புகையினால் குலைப் பிடிப்பு முதலிய வாத நோய்கள் நீங்கும்.

கந்தகத்தைத் தேங்கா யெண்ணெ யுடன் கலந்து சிரங்குகளுக்குப் போடுவ துண்டு. வேப் பெண்ணெ யுடன் கலந்து, வாதம், முடக்கு வாயு, குலைக் கட்டு நோய், முதலியவைகளுக் குபயோகிக்கலாம். நல் லெண்ணெ யுடன் கருஞ் சீரகத்தைப் பொடித்துக் கந்தகத்துடன் கலந்து உட் கொள்ளக் கிரந்தி நோய் போம். இதன் பற்பத்தால் குட்டம், காமாலை, குலைக் கட்டு, மேகம், முதலியன தீரும். இதன் திராவகம் உடம்பிற் படக் கொப்பளிக்கும்.

Sulphur is a mineral which exists as a natural production and occurs abundantly and uncombined, in nature. It is found particularly in the neighbourhood of valcanoes such as in Sicily, Japan, Iceland, Sumatra, the Philipine Islands etc,

the chief centres for the sulphur of commerce. It also occurrs naturally in some parts of India like Nepaul, Cashmere, Afghanistan and Burma.

Sulphur occurs further, in combination with many metals such as copper, iron etc. as sulphides and in a few vegetable and animal products in small quantities. The crude brim-stone first obtained is afterwards refined and imported into India.

Although sulphur does not appear to be found in great abundance in India, it is met with in small quantities in the district of Udaipur in Northern India, in Travancore and some other places, in combination with iron and alum. It is of four different colours viz:—red, yellow, white and blue or black, of which the red variety is used in Alchemy, the yellow in Medicine, the white and the blue or the black for Rejuvenation, but the last mentioned are said to be obtained very rarely and with much difficulty.

Sulphur is used in Medicine only after it is refined and cleaned according to the rules laid down in Tamil medical science, because impure sulphur is said to bring on diseases or other complications.

Sulphur is procurable in bazaars in different forms as mentioned below but among those, the myrobalan sulphur which is the purest of all is the one used in medicine. From sulphur are prepared, sublimated sulphur, amorphous sulphur, and flowers of sulphur, but calcined sulphur, green vitriol, white vitriol, blue stone, oxide of mercury etc., are all different kinds of sulphates.

Therapeutic use of sulphur:—Sulphur is chiefly used in scabies and other skin diseases both as an external and an internal remedy. The fumes of burning sulphur are said to cure gout and rheumatic affections.

When mixed with cocoanut oil, it is applied to itches and sores; with neem oil to rheumatic affections and with gingelly oil and powdered black cumin seed, it is given internally for venereal herpes. The calcined sulphur (contemplated in Tamil Medicine) is prescribed by Vaidyans for leprosy (lepra arabum) jaundice, contracted limbs, venereal diseases etc. The acid prepared from sulphur is corrosive and will raise blisters on the body when coming in contact with it.

NOTE—In olden days, sulphur was brought to India from Muscat, Sumatra and the Sunda Island and sometimes from Pegu and the Philipine Islands. It is a product which has been known from the earliest times. It is also said to be found in the west coast (Canara) and also in the Godaveri district.

NOTE 2.—Many important metallic ores are sulphides i.e. compounds of sulphur with one or more metals. e.g.—Galena (lead sulphide) PbS; Zinc blende (Zinc sulphide, ZnS); cinnabar (mercury sulphide, Hg S); pyrites (iron sulphide, FeS_2) etc. and Sulphates such as gypsum (calcium sulphate, $CaSO_4$). and heavy spar (barium sulphate, $BaSO_4$) etc. The animal and vegetable products in which sulphur is found are:—onions, வெங்காயம்; garlic, வெள்ளைப் பூண்டு; mustard, கடுகு; horse radish, முள்ளங்கி; hair, மயிர்; many oils, எண்ணெய்கள்; eggs, முட்டைகள்; proteids தச்சிமய வஸ்துக்கள் etc.

NOTE 3.—Hydrogen sulphide is found in the water of many sulphur springs. Sulphurous vapour and sulphurous or divine water found in the writings of the alchemists also contained hydrogen sulphides. Silver is easily tarnished by hydrogen sulphide and this is clearly seen in the use of silver spoon in eggs.

கடைகளிற் கிடைக்கும் பல வகைக் கந்தக வகைகளாவன, the several kinds of sulphur met with in Indian bazaars are:—

1. பாண கந்தகம்—பாண வேடிக்கைக் குபயோகப் படுத்தும் கந்தகம், a form of sulphur chiefly employed in the preparation of gun-powder in fire-works and in the manufacture of matches.

2. குழாய் கந்தகம்—சாதாரணமாக,கந்தகத்தை வாலையி லிட்டு வடித்து, மரவச்சுக்களில் வார்த்து எடுத்தது, roll brimstone or stick sulphur. It is a form in which the crude brimstone is refined by distillation, condensed, collected and drawn off into wooden moulds.

3. நெல்லிக் காய் கந்தகம் — மற்ற வகைகளைக் காட்டிலும் இது மிக்கச் சுத்தமானது. இது பிரகாச மான மஞ்சள் நிறமாக விருக்கும். இதில் பச்சை நிறக் காந்தியுங் கலந் திருக்கும். எல்லாக் கடைகளிலு மகப்படும். இது தான் மருந்திற் குபயோகப் படுவது. இது நெல்லிக் காய் நிறத்தை யொத்ததா லிப் பெயர், myrobalan gandac or rhombic sulphur. It is the purest of all the kinds and is of a bright yellow colour with a shade of green. It is procurable in all bazaars in crystalline pieces. It is this which is much used in medicine and is so called from its resemblance to Indian gooseberry in colour.

4. பச்சைக் கந்தகம்—இது மற்றத் தினுசுகளை விட மிகவும் மட்டமான சரக்கு. கெட்டியாயும், அசுத்த மாயும், வெளிர் மஞ்சளாகவும், நாட்டுக் கந்தகத்தைப் போலவு மிருக்கும், crude sulphide or sulphur ore. It is the most impure and crude of all the kinds. It is hard and yellowish-white, much resembling No. 5. It is so called from its passing off into vapour so very easily when heated in fire.

5. நாட்டுக் கந்தகம்—இரும்பு, படிக்காரம் முதலிய தாதுக்களுடன் கலந்த கந்தகம். இதுவும் 4 வதில் சொல்லிய படி மிகவும் மட்ட மான சரக்கு, indigenous crude sulphur found in combination with iron and alum. It is as impure as the one mentioned in item No. 4.

6. பருப்புக் கந்தகம்—இது மிகப் பிரகாச மான மஞ்சள் நிறமா யிருக்கும். இது சிறு சிறு துண்டுக ளாகவும், அவைகளில் சிலது மெல்லிய தாகவும், சிலது பருப்பைப் போல் தட்டையாகவும் அல்லது உருண்டை யாகவும் இருக்கும். Dholl sulphur. It is so named from its resemblance in form and colour, to a split or ½ seed dholl without husk. It is found in small pieces, some of which are thin, some flat and some round like a shot.

7. கோழித் தலைக் கந்தகம்—இது செங்கற் றூள் மாதிரி, சிவப்பா யிருக்கும். சிறு சிறு துண்டுகளாகச் சிறிய அளவில் அகப்படும். இது உலோகம் கலந்த தென்று கருதப் படுகிறது. வாதத்திற்கு மிக்க வுபயோகப் படும். Red sulphur. It is so called from its red colour like that of a cock's comb. It is said to be found in a small scale mixed with other minerals and is used much by native alchemists.

8. அமர சிலைக் கந்தகம்—இது ஓர் விதவைப்புச் சரக்கு. இது 64 பாஷாணங்களுள் ஒன்று, an artificially prepared compound of sulphur. It is one of the 64 poisons described in the Tamil Medical science.

9. நாட்டுக் கந்தகம், crude or rough sulphur or brim-stone.

10. சிவப்புக் கந்தகம், red sulphur, used in Alchemy; same as No. 7.

11. களரக் காய் கந்தகம், a variety of sulphur formerly sold in bazaars (not available now)

12. நீலக் கந்தகம், cupric sulphide.

13. நெல்லிய கந்தகம், same as No. 3.

14. கருப்புக் கந்தகம், lead sulphide—Galena.

15. பூ கந்தகம், sublimed sulphur or flower of sulphur.

16. பதங்கித்த கந்தகம், sublimed or precipitated sulphur used medicinally and in ointments.

NOTE 3—All these different forms of sulphur are only modifications of only one element although each of them is endowed with different properties. This sort of existence of sulphur is known in Chemistry as Allotrophy.

கந்தகம், கந்தக பாஷாணம், a kind of prepared arsenic; 2. முருங்கை, horse-radish—Moringa; 3. வெள்ளை வெங்காயம், white onion; 4. பூண்டு, garlic.

கந்தக யுக்தம், ஓர்வகை கந்தக வுப்பு, a sulphate or salt formed by the action of sulphuric acid on any base.

கந்தக ரசாயனம், ஆயுள் வேதத்திற் சொல்லிய படி, இரசாயன முறையால் தயாரித்த கந்தக மருந்து, a pharmaceutical preparation

of sulphur, as laid drown in Ayurveda. It is a kind of alterative fancied to re-establish healthy functions in the human system and prolong life ; 2. *கந்தகத்தைக் கொண்டு இரசாயன முறையாக மருந்துகளைத் தயாரிக்கும் விதத்தைச் சொல்லுமோர் ஆயுள் வேத நூல்*, a treatise on medicine in Ayurveda, devoted exclusively to the Pharmaceutical preparations of sulphur.

கந்தக லேகியம், *பதங்கித்த கந்தகத்தோடு மற்றச் சரக்குகளையும் சேர்த்துத் தயாரிக்கும் ஓர் வகை லேகியம்*, an electuary prepared from sublimed sulphur mixed with other ingredients.

கந்தக விரும்பு, *கந்தகம் கலந்த இரும்பு*, iron found in combination with sulphur as iron pyrites ($Fe S_2$) and copper and iron pyrites ($Fe Cu S_2$).

கந்தக வுப்பு, *கந்தகத்தோடு இதரச் சரக்குகளையும் சேர்த்துத் தயாரிக்கும் உப்பு*, salt obtained from sulphur mixed with other ingredients ; 2. see *கந்த யுக்தம்* ; 3. *கடுக் கூர்மை யுப்பு*, black salt or impure chloride of sodium ; so called because of its smell of sulphur, as it contains a little sulphuret of iron.

கந்தக வெடி, *கந்தகம், வெடி யுப்பு, அடுப்புக் கரி இவைகள் சேர்ந்த வெடி மருந்து, இந்துக்களுக்கு இது வெகு காலமாய்த் தெரியும்*, gun powder made of sulphur, nitre and charcoal. It has long been known to the Hindus.

கந்தக வெண்ணெய், *இரசாயன முறைப்படித் தயாரித்த வெண்ணெயைப் போன்ற கந்தகம்*, colloidal sulphur prepared chemically.

கந்தக வைப்பு, *தாது அல்லது உபரச வகைகளி னின்று பிரித் தெடுத்த கந்தகம். சாதாரணமாக, மற்றத் தாதுக்கள் கலந்த கந்தகத்தைப் பூமியி னின்று வெட்டி யெடுத்துக் காற்றுப் புகும்படி அடுக்கிப் பிறகு மூடி எரிக்கக் கந்தக மானது உருகி அடியில் நிற்பதை அடிக்கடி வடித்துக் கொள்ளுவதே வைப்புக் கந்தகம்*, extraction of sulphur from its ores. Generally, sulphur mixed with many earthy substances is taken from the mines. The ores thus obtained are piled up in such a way as to leave passages for free air. The piles are covered with some material and the mass is then lighted below. A part of the sulphur burns, and the heat thus furnished melts the rest of the sulphur. The molten sulphur runs down to the bottom of the pile wherefrom it is drawn off from time to time.

கந்த காப்பிரகம், *மஞ்சள் அப்பிரகம்*, yellow mica probably so called from its combination with or colour like, sulphur.

கந்த காமிலம், *கந்தகத் திராவகம்*, sulphuric acid.

கந்த காமீலியம், *கந்தக வுப்பு அதாவது கந்தகத் திராவகத்தைக் கொண்டு தயாரித்த உப்பு*, any salt obtained by the action of sulphuric acid—Sulphate.

கந்த காரி, *வறட் சுண்டி*, a bitter plant ; worm killer—Aristolochia bracteata.

கந்த கிரக தோஷம், *நவக் கிரகக் கோளாறினால் குழந்தைகளுக் கேற்படும் ஓர் விதத் தோஷ நோய். இதனால் ஒரு பக்கமாய்ப் புருவம், கண், தாடை இவைகள் துடித்தலும், ஒரு கண்ணில் நீர் கட்டி வீங்குதலும், பாலுண்ணாமல் அடிக்கடித் தலை யாட்டலும், அத்துடன் ஒரு பக்கம் கோட்டி வாய் வடிதல், வாயில் நீருறல், உளறல் முதலிய குணங்களு முண்டாகும்*, a morbific diathesis in children said to be due to the evil influence of the stars. It is marked by the following symptoms :—tremor of the facial nerves often one-sided, in the eyebrow, eye and the jaw, odema of the eyes, frequent rolling of the head, aversion to breast-milk, secretion of saliva, incoherent speech etc.

கந்தகீய, *கந்தகத்தா லாகிய*, formed of sulphur ; containing sulphur.

கந்த குடம், *ஆப்பில் பழம்*, apple fruit ; 2. *தொண்டையில் உண்டாகும் எழுச்சி*, a protuberance in the throat.

கந்த குடிச்சி, *ஓர் காட்டுக் கொடி*, a kind of moonseed-creeper (cocculus).

கந்த கேடம், *கற்பூரப் புல்*, lemon grass — Andropogon schoenanthus.

கந்த கோகிலம், *ஓர் வாசனை*, a perfume.

கந்தக் கினி, *கெட்ட நாற்றத்தைப் போக்கும் வஸ்து*, a substance which has the power of destroying fetid smell—Deodoriser.

கந்தங் குலி, *மிளகு*, pepper—Piper nigrum.

கந்தங் குவளம், *கழுகு*, eagle.

கந்த சட்கம், கந்த சட்சம், } தமரத்தை மரம், a tree bearing an acid fruit; square-tamarind—Averrhoea carambola.

கந்த சாகிகம், உகா மரம், sack tree—Salvadora persica.

கந்த சாரணம், ஓர் வாசனை, a perfume.

கந்த சாரம், சந்தனம், sandalwood paste—Santanum album; 2. பன்னீர், rose-water; 3. மருந்துகளுக் குபயோகிக்கும் முள்ளங்கி கிழங்கின் சாறு, (*In Ayurveda*) the juice of the green bulbous root employed in the preparation of medicine; 4. வாசனைத் திரவியங்களின் சத்து, the essence of fragrant substances or their perfumes; 5. பஞ்ச கந்த சாரம், the essential portions of the five kinds of fragrant roots; 6. ஓர் மல்லிகை, a kind of jasmine.

கந்த சாலி, மகத தேசம் முதலிய வட தேசங்களில் விளையும் ஓர் உயர்ந்த வாசனை நெல், a superior kind of paddy with sweet smell grown in the kingdom of Maghada, (said to be a country south of Behar.)

கந்த சுக்கிலம், அதி விடயம், Indian atees—Aconitum heterophyllum.

கந்த சூலிகம், ஈர வெங்காயம், onion—Allium cepa.

கந்தடம், வெண் குவளை, Indian white water-lily—Pontederia.

கந்த தரு, வாசனை விருட்சம், fragrant tree; 2. அகரு, aloe wood—Agallocha.

கந்த தன் மாத்திரை, வாசனை யறியும் புலன், the sense of smelling.

கந்த தாரம், மது, spirituous liquor; 2. தேன், honey.

கந்த தாளி, அட்சர நோய், ulceration of the alimentary tract.

கந்த தைலம், வாசனைத் திரவியங்களைக் கொண்டு தயாரித்த தைலம், a medicated oil prepared with fragrant substances; 2. சந்தனாதித் தைலம், medicated oil prepared with sandalwood as the chief ingredien

கந்த தோயம், பன்னீர், fragrant water; rose water.

கந்த நாகுலி, செவ்வியம், black pepper plant creeper; 2. மிளகுச் செடி, pepper plant—Piper nigrum; 3. ஓர் பூடு, Ichneumon plant—Vanda Roxburghii; 4 மாசிபத்திரி, Indian absinth—Artemesia vulgaris.

கந்த நாகுலியம், பேரரத்தை, greater galangal—Alpinia galanga (major).

கந்த நாமன், ஓர் வகைத் துளசி, a kind of holy basil—Ocimum genus.

கந்த நிலையம், ஓர் வகை மல்லிகை, a species of jasmine.

கந்த பத்தம், ஓர் உயர்ந்த புனுகுச் சம்பா நெல், a superior kind of musk paddy.

கந்த பத்திரகம், see கந்த பத்திரம்; 2. அசமதாகம், ajmood ajwaun—Apium involucratum.

கந்த பத்திரம், வெண் துளசி, white basil—Ocimum canum alias O. album; 2. வாசனை பொருந்திய இலை, a fragrant leaf, see செந்த பத்திரம்; 3. வில்வ மரம், Indian bael tree—Aegle marmelos; 4. கிச்சிலி மரம், orange tree; 5. அசுவ கெந்தி, horse root—Physalis flexuosa.

கந்த பந்து, மா மரம், the mango tree.

கந்த பரணி, ஏழிலைப் பாலை, seven-leaved poon tree—Alstonia scholaris.

கந்த பர மாணு, வாசனைப் பொருள்களி லிருந்து வெளிப் படுகின்ற பர மாணு, the smallest atom which is flowing out from one to another in an invisible form: something flowing out in a subtle or invisible form (said of smell).

கந்த பலாசி, கற்பூரக் கிச்சிலிக் கிழங்கு, camphor turmeric—Curcuma zerumbet; 2. சிறு புள்ளடி, tick trifoil—Desmodium gangeticum.

கந்த பலா சிகம், பூசு மஞ்சள், turmeric.

கந்த பலம், விளா, wood-apple—Feronia elephantum; 3. வில்வ மரம், Indian bael tree—Aegle marmelos; 4. வெந்தயம், fenugreek—Trigonella foenum alias T. graceum; 5. நிலப் பூசணி, panicled bindweed—Batalas paniculata alias Ipomaea digitata; 6. குங்கிலிய மரம், olibanum tree.

கந்த பாகம், தைலத்திற்கு வாசனை யூட்டும் முறை, the process of subjecting a prepared medicated oil to a further process of rendering it fragrant or of making it to have an agreeable smell; 2. உடம்பின் பாகம், a part of the body.

கந்த பாஷாணம், கந்தகம், ordinarily sulphur; 2. கந்தகம் சேர்ந்த பாஷாணம், any poisonous compound of sulphur; 3. அவுபல பாஷாணம், see கந்தகம்.

கந்த புட்பம், வெள் ளூமத்தை, bell-flower—Datura fastuosa (alba); 2. வஞ்சிக் கொடி, water rattan — Calamus rotang; 3. see அழிஞ்சில்; 4. சிறு நறு விலி, small sebesten — Cordia myxa; 5. அவுரி, indigo plant; 6. தாழை, screw-pine—Pandanus odoratissimus.

கந்த புட்பி, பெருகன் கிழங்குச் செடி, a plant with a long tuberous root—Arum macrorhizon.

கந்த புட்பை, அவுரி, indigo plant—Indigofera tinctoria.

கந்த பூஷணம், ஏலா வாலுகம், larger cardamom—Amomum subulatum.

கந்த பூதனம், ஒரு பிரதம ரோகமு முண்டாக்கும் பேய், a goblin that could cause a particular disease.

கந்த பூதியம், நாய் வேளை, wild mustard—Cleome viscosa alias Polanasia icosandra.

கந்தப் புலன், வாசனை யறியும் புலன் அதாவது மூக்கு, the organ of smell *i.e.* the nose.

கந்தப் பொடி, வாசனைப் பொடி, scented powder; aromatic powder.

கந்தமம், வசம்பு, sweet-flag—Acorus calamus.

கந்த மாஞ்சி, சடா மாஞ்சில், Indian spikenard. See கெந்த மாஞ்சில்.

கந்த மாதனம், இராமேசுரத்திற் கருகில் உள்ள குன்று, a hill near Rameswaram.

கந்த மாதனன், ஓர் வகைக் குரங்கு, a kind of monkey.

கந்த மாத்திரி, ஓர் வாசனை, a perfume.

கந்த மித்திரம், குமிழ், a kind of thorny tree—Gmelina tomentosa.

கந்த மிருகம், கஸ்தூரி மிருகம், musk deer.

கந்த மூஷி, மூஞ்சூறு, musk-rat, said ironically perhaps—Crocidura caerulea.

கந்த மூஷிகம், கஸ்தூரி எலி அதாவது மூஞ்சூறு, an animal with a bad smell called musk-rat ironically. See கந்த மூஷி.

கந்த மூலகம், நெல்லி, Indian gooseberry—Emblica officinalis.

கந்த மூல பலாதி, யோகிகளுக் குணவாக வுதவும் காய், கிழங்கு, வேர், பூ, இலை முதலியன, fruits, esculent roots, flowers, leaves etc, which serve as food for Yogees living in the forest.

கந்த மூலம், கிழங்கு, bulbous root of a plant; 2. அரத்தை, galangal — Alpinia galanga; 3. குங்கிலிய மரம், olilbanum tree.

கந்த மூலி, சிறு மின்டக் செடி. அதாவது சிற் றின்டு, a small species of the plant of the Mimosa genus. C.f. கற்பூர மரம்.

கந்த மெழுகு, சிசு மண்டை ஓட்டி லிருந்து தயாரிக்கும் அண்ட மெழுகு, a wax-like substance prepared by a secret process from the skull of a foetus. See அண்ட மூடி மெழுகு.

கந்த மோகினி, சம்பக மொக்கு, the bud of champaca tree—Michelia champaca,

கரச்சி, பனை யேறி இனத்தைச் சேர்ந்த ஓர் வகைக் கடல் மீன். இது 16 அங்குல நீளம். பக்க வரிசைக்கு மேலுள்ள செதல்கள் சாய்ந்த வரிசை யாகவும், அடியில் சாம்பல் நிறத்தோடு கூடிய வெண் ணிற மாயும், தலைப் பக்கம், நீல நிறமாயு மிருக்கும். முதுகில் நீண்ட கருப்புக் கோடுண்டு, a kind of sea-fish of the Perlidae family—Pristipoma maculatum alias P. caripa alias Anthias maculatus. It is 16 inches long; scales in oblique rows above the lateral line; greyish white beneath and purplish about the head; spinous dorsal with a large black line.

கரச் சூலி, அகச் சூலி, which see.

கரச் சூலை, கையி லுண்டாகும் ஓர் சூலை நோய், a disease of the hand attended with a darting pain.

கரஞ்சத் திவயம், ஆயிற் பட்டைப் பிசின், the gum of the Chittagong tree—Chukrassia tabularis.

கரஞ் சகம், புங்க மரம், the poonga oil tree—Dalbergia arborea alias Pongamia glabra; 2. பெரு மரம், large bastard poon—Ailanthus (genus) alias A. malabaricus.

கரஞ்ச பலகம், விளா, wood-apple tree—Feronia elephantum.

கரஞ் சமம், கரஞ்சம், } see கரஞ்சகம்; 2. புன்கு, Indian beech tree.

கரடக பாஷாணம், லிங்கி பாஷாணம், a kind of mineral poison.

கரடம், குசும்பா மரம், curdy oil plant—Carthamus tinctorius; 2. காக்கை, crow; 3. யானை மதம், elephant's secretion when in rut.

கரடன், see கரடம்; 2. ஓர் எலி, a kind of rat.

கரடி, see கரடிப் பூடு.

கரடி, ஐவாய் மிருகம், இது 4 அடி உயரம், 7. அடி நீளம்; மயி ரடர்ந்து கனமான கருத்த தேகமும், கூரான நகமும் உள்ளது. காட்டு மிருகம், மரம் நன்றாக ஏறும். இது குளிர் காலம் கழியும் வரை 3, 4, மாதம் அன்னஆகார மின்றி ஒரே தூக்கமாய்த் தூங் கும். அக் காலத்தில் இதன் தொண்டைக் குள் அமைக்கப் பெற்ற கேடய கோளத்தி னூறும் அமுதத்தை யுண்டு, பசி யில்லா திருக்கும். இது சாதாரணமாய் மலை நாட்டுக் குகைகளில் வசிக்கும். காற்றை வாய் வழி யாக உள்ளுக் கிழுப்பதிலும், வெளிப் படுத்து வதிலும் மிக்க சக்தி வாய்ந்தது. இதன் மயிரைக் குளிச மாடிக் குழந்தைகள் கழுத் தில் கட்டுவ துண்டு, எருதுகளுக்கு நோய ணுகா வண்ணம் இதன் தோலைக் கட்டுவ துண்டு. சில சமயங்களில் இதன் இரத்தத் தைத் துணியில் சேகரித்து, வாத நோய்க் குப் போடலாம், இதன் கொழுப்பையும் இம் மாதிரியே உபயோகிக்க லாம், Indian black bear alias Sloth bear — Melursus ursinus alias Bradypus ursinus. It is 4 ft. high and 7 ft. long, has black hair very long and it is shaggy; claws long and stout; as a class the bears are most expert climbers. During rainy weather, bears will *continue to sleep for 3* or 4 months at a stretch without food, on account of their consuming the abnormal secretion of the thyroid gland, the function of which is peculiar in these animals. They are found chiefly in hilly, districts, especially in the natural caves formed by the decomposed masses of granite. The power of suction in the *bear as well as of propelling wind* through its mouth is great. Bear's hairs are enclosed in amulet and tied around the neck of children, as a talisman. Its skin is cut into strips and tied round the necks of *bulls* as a *safeguard against* diseases. Sometimes its blood is preserved on cloths and used in rheumatic pains; bear's grease is also used as an emmollient in the same way.

கரடிக் கல், கரடித் தலைமண்டைக் குள்ளிருக்கும தீப் பொறிப் போலக் காணும் விஷத் தீர்க் கும் கல், a red stone resembling a spark said to exist inside the skull of a bear. This stone is supposed to be an antidote for poisons.

கரடிக் கொழுப்பு, கரடியின் கொழுப்பு. இது வாத நோய்களுக்குப் பூச உபயோகப் படும், bear's fat It is a useful application in rheumatism.

கரடித் தோல், கரடியின் தோல். இது மாந்தி ரீகத்திலும் வைத்தியத்திலும் மிக்க உபயோ கப் படும், bear's skin useful in magic and also in medicine.

கரடிப் புங்கன், கரடிப் புன்கு, } நொய்க் கொட்டான், four-leaved soap nut—Hemigyrosa canescens.

கரடிப் புண், அதமப் புணர்ச்சியினுல் பீசத்தி லுண்டாகு மோர் விரண நோய், a sore or an ulcer in the testis due to unnatural intercourse.

கரடிப் பூடு, விரியன் பூடு, common sebesten—Cordia myxa.

கரடு, காற் பரடு, ankle; 2. மரக் கணு, the knot in a tree; 3. ஓர் புல், a kind of grass; 4. மூட்டுகளில் வீங்கிக் கெட்டிப் படல், induration of a bone or bony substance as in சரித் தலை வாதம், (rheumatoid arthritis); 5. ஓர் வகை முத்து, a kind of pearl.

கரடு கட்டல், மூட்டுகள் கெட்டிப் படல், (*in Pathology*) rigidity due to morbid enlargement or over-growth of the cartilage at the edge of the joints; 2. (*in Chemistry*) உலோகங்களை, ஊது முறைப் படிச் சரிவர எரிக்காத குற்றத்தினுல் அது உருகாமல் கட்டிப் போவது, formation of a knot or the thickening of metals due to imperfect or defective methods adopted in their fusion.

கரடு பட்ட புண், a hardened chronic sore.

கரடு முரடு, செம்மை யற்றது, that which is not well formed; coarse; 2. வயிரமும் கணுவுங் கொண்டது, knotty formations with induration.

கரட் டரிதாரம், கரடு கட்டிய அரிதாரம், a crude form of orpiment; a virulent kind of arsenic.

கரட்டான், ஓர் வகை ஓணான், a kind of rough lizard or blood sucker. See கரட்டோணான்.

கரட்டு, நெஞ்சி லுண்டாகும் ஓர் ஒலி, an abnormal noise in the lungs—Rale.

கரட்டு கந்தகம், முரடான கந்தகம், crude or rough sulphur—Brimstone.

கரட்டு கரட்டெனல், தொண்டையி லுண்டாகு மோர் சத்தம், a rale produced in the throat—Gutteral rale; 2. சாகுந் தருவாயில் நெஞ்சில் சிலேட்டுமங் கட்டி இழுத்தல், the sound sometimes emitted by the dying and caused by the expulsion of the breath through channels partly filled with phlegm or mucous—Death-rattle.

கரட்டுத் தரை, கரிசற் பூமி, hard clayey soil.

கரட்டுத் தாளகம், பிறவுப் பாஷாணம் 32-ல் ஒன்று, one of the 32 kinds of orpiment found in native state. See கரட் டரிதாரம்.

கரட்டு வாதம், உடம்பின் மூட்டெலும்புகளில் கரடு கட்டி அசைக்க முடியாமற் செய்யு மோர் வாத நோய், knotty formations in the bone of the joints of the body rendering motion impossible.

கரட்டு விரியன், மேலே சொர சொரப் புள்ள சிகப்பு விரியன் பாம்பு, rough and red-viper.

கரட் டோணான், சொர சொரப் புள்ள ஓணான், a rough lizard—Mecolepis hirsutus.

கரட் டோணான் பிச்சு, சொர சொரப்புள்ள ஓணானின் பித்தப் பை. இது மாந்திரீகத்தில் உபயோகப் படும், the bile duct of the rough lizard used in magic.

கரட் டோந்தி, see கரட் டோணான்.

கரணகம், அந்தக் கரணம், mental faculty.

கரணசன், நீண்ட சந்துடைய மூக்கன், one having long nostrils.

கரண சிரா வேதை, அண்ட விருத்தி, விதை வீக்கம் முதலியவைகளை நிவர்த்தி செய்வதற் காகக் காது மத்தியி லிருக்கும் இரத்த மூல நரம்பைத் துளையிடல், boring the central concavity of the external ear (concha) as a reflex treatment, resorted to in olden days for purposes of arresting growth or swelling in cases of hydrocele, orchitis etc.

கரண பூராக்கியம், கடம்பு, cadamba tree—Barringtonia racemosa alias Eugenia racemosa.

கரணம், ஐம் பொறிகள், the five sensory organs; 2. உடம்பு, body; 3. எட்டி, nux vomica—Strychnos nux vomica; 4. அந்தக் கரணம், intellectual faculty; 5. மனம், mind; 6. புத்தி, intellect; 7. அகங்காரம், egotism; 8. சித்தம், volition; 9. கலவி, sexual intercourse; copulation; 10. உடம்பில் நின்று ஆன்மாவோடு கூடி இந்திரியங்களைத் தொழிற் படுத்துபவைகள், those which perform in conjunction with life the office or duty of any particular part, organ or faculty in men or animals; organs responsible for life-function.

கரணம், கொக்கோக நூலிற் சொல்லி யுள்ள 64 விதிகள் அவையாவன, the 64 postures in sexual intercourse as described in the erotic science Kokkogam viz:—

ஸாமியம்.	வரிப்புலிக் கரணம்.
நாகரம்.	கரி பதம்.
உற்பல்லிதம்.	எட்டிதம்.
சிரும்பிதம்.	வாடவம்.
இந்திராணிகம்.	ஏக பந்தம்
உத்தான சம்புடம்.	அந்தினி பீடனம்.
பாற் சம்புடம்.	வேணுப் பிணவை.
உப்புக் கினம்.	சூதாயுதம்.
பதுமாசனம்.	தாசகக் கரணம்.
மதன சிரும்பிதம்.	துளையக் கரணம்.
வேணு விதாரிகம்.	அந்தக் கூர்மம்.
சங்காடகம்.	பிடித கரணம்.
பிரேங்கா.	ககரணம்.
சம்பனம்.	கூர்ம கரணம்.
பசு கரணம்.	பரி வாகனம்.
அவலம்பிதம்.	கடிபிடித கரணம்.
மஞ்சாடகம்.	மல்லார்ந்த கரணம்.
சன கரணம்.	குறுக் கிட்ட கரணம்.
சானு கூர்ப்பம்.	மாசக் கரணம்.
சிரங் கரணம்.	கலவிக் கரணம்
ஆவர்த்தம்.	ஏர்க் கும்பிதம்.

NOTE.—As a complete list of the 64 postures in the sexual congress, contemplated in the erotic science of Kokkoga Muni is not available, a few as mentioned above, have been published as far as possible. It is hoped that if a complete list is available in the meanwhile, it will be published under காம விலை.

கரணம், ஆசனம் அல்லது யோக நிலை, அதாவது யோகம் புரிவதற்காக வேண்டி, உடம்பை ஏதோ ஒரு விதமாக வைத்துக் கொண்டு ஓர் நிலையில் நிற்றல். இவ் விதமான நிலைகள் பலவாக வகுக்கப் பட்டிருந்தாலும், ஒருவருடைய உடம்பின் இயல்பு, தன்மை, சௌகரியம் முதலிய வற்றிற்குப் பொருத்தமாக வுள்ளது எதுவோ, அதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். காம லீலை எப்படி 64 விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ அவ் விதமாகவே இந்த யோக நிலையும் 84 ஆகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆக இவ் விரு வகைப் பிரிவும், ஒரு பிரயோசனத்தைக் கருதிச் நன்மைக்காகச் செய்ததே ஒழிய விளையாட்டாகச் செய்யப்பட்டதென்று கொள்ளப் படாது, the posture of an ascetic in Yoga practice. Asana (posture of the body) consists in putting the physical body in one or other of the numerous yogic posture. Various postures are recommended for yoga. One may choose for himself whichever suits him best according to the condition of his body and his temperament. There are no less than 84 postures or Asanas prescribed for the practice of yoga just in the same way as there are those prescribed for sexual intercourse. So they should not be taken as diversions since they are meant to serve a particular purpose.

கரணம், கருவி, instrument; 2. உப கரணம், implement ; 3. விழுங்கல், swallowing ; 4. நல் வினை தீ வினை, moral actions good or bad.

கரண வாசனை, அந்தக் கரண வாசனை, experiences of intellectual faculties ; 2. ஐம் பொறிகளின் அனுபவம், the experience, painful or pleasant, as associated with the five sensory organs.

கரண வாதனை, உடம்பின் அவயவங்கள் அல்லது இந்திரியங்களுக் கடுத்த சுக துக்கங்களை உணரும் அறிவு, the knowledge experienced of sensation pleasing or painful, relating to the bodily organs or mental faculties. See கரண வாசனை.

கரண வேதை, காதில் துளை யிடல், boring the ear ordinarily.

கரணுத சம்மிதை, காதைப் பற்றிய வரலாற்றைக் கூறு மோர் ஆயுள் வேத நூல், an Ayurvedic science treating all about the ear.

கரணி, மருந்து, medicine ; 2. சஞ்சீவி, elixir; 3. உத்தாமணி, hedge cotton — Daemia extensa ; 4. செயல், doing or effecting as do *e.g.* சல்லிய கரணி, சந்தான கரணி, medicaments for healing wounds.

NOTE—This term is used only in compound words.

கரணிக சன்னி, காதின் ரோகத்தினால், கண்டத்தை இறுக்கிப் பிடிப்பதனா லேற்படும் ஓர் வகை சன்னி, a kind of delirium caused through the disease of the ear attended with constriction of the throat

கரணிகம், இரு செவியும் மந்தித்தல், growing deaf in both the ears ; 2. வெள்ளைக் காக்கணம், see கரணிகா ; 3. கலவி, copulation.

கரணிகா, வெள்ளைக் காக்கணம், white flowered mussel-shell creeper—Clitoria ternatea (albiflora).

கரணிதம், கலவி, copulation ; 2. அந்தக் கரணம், intellectual faculty; 3. மனம், mind, as the organ of thought ; 4 புத்தி the organ of consciousness.

கரணிய மேனிக் கல், கரும் புள்ளிக் கல், a stone with black dots. See காளக் கல்.

கரணை, கருணை, which see ; 2. துண்டு as in கரும்புக் கரணை, a piece e.g. a chopped piece of sugar-cane ; 3. இலைக் காம்பு, the foot stalk of a leaf ; pedicle ; 4. புண் வடு, scar ; 5. பா வட்டை, see கரணை பாவட்டை; 6. கல் மூங்கில், stone or solid bamboo—Dendrocalamus strictus ; 7. மரக் கணு, see கரடு ; 8. பூண்டின் கடைப் பெயர், plants' second term as in அச்சயில் கரணை, சிச்சிலிக் கரணை, மலைக் கரணை, முள்ளுக் கரணை etc.; 9. முளி, joint.

கரணைக் கிழங்கு, see கருணைக் கிழங்கு.

கரணைக் கொட்டி, காறற் கொட்டி, a medicinal aquatic plant with an acrid taste.

கரணைப் பலா, வெருகு, a tuberous rooted tree— Arum macrorhizone.

கரணைப் பாவட்டை, ஓர் வகைப் பாவட்டை, Pavetta plant—Pavetta indica ; 2. ஆடா தோடை, justicewort—Adhatoda vesica.

கரணைப் பிரண்டை, அனேக கணுக்க ளுள்ள மணிப் பிரண்டை, a kind of adamant creeper (vitis) with several knots.

கரணைப் புத்து, ஓர் விதப் புற்று நோய், a kind of cancer.

கரண், புண் வடு, scar.

கரண்டக பாஷாணம், a kind of poison.

கரண்டகம், சுண்ணாம்புச் செப்பு, chunam box, of persons chewing betel.

கரண்டம், நீர்க் காக்கை, water crow—Cormorant; 2. கரண்டக பாஷாணம், which see; 3. கமண்டலம், drinking vessel of Sanyasis.

கரண்டாகிதம், பிளவைக் கொல்லி, a plant capable of curing cancer.

கரண்டி, இரும்பு, வெள்ளி, பித்தளை முதலிய லோகங்களினாற் செய்த சிற் றகப்பை. இது பக்ஷியில், காய், கறிகள் எடுக்கவும், தைலம், எண்ணெய், முதலியவைகளைக் கிளறிக் காய்ச்சவும் உபயோகப் படும், a big spoon among domestic utensils made of metals like iron, silver, brass etc., with long handles used ordinarily for taking up prepared articles of food, while serving meals. This is also used in preparing medicated oils, ointments, etc., in a small scale in emergent cases. It is a common term used both for a ladle and a spoon. There are three kinds of it as noted below in Tamil—

1. ஆலக் கரண்டி.
2. உச்சிக் கரண்டி.
3. பொட்டுக் கரண்டி.

} மூவகைக் கரண்டிகள், the three kinds of spoons of different sizes.

கரண்டிக் காம்பு, இரும்புக் கரண்டியின் காம்பு, இதைப் பழுக்கக் காய்ச்சி, எண்ணெய் முதலியவைகளை முறிக்க உபயோகப் படுத்தலாம், the handle of an iron spoon. It is generally used when red-hot, for neutralising or otherwise rendering inert the poisonous or injurious effects of oil and other liquids.

கரண்டிக் கீரை, ஓர் வகைக் கீரை, a kind of vegetable green.

கரண்டித் திரு, கரண்டியின் அடி, the bottom of the spoon.

கரண்டிப் பாறை, ஓர் கடல் மீன். இது பச்சை நிறம், 1 அடி நீளம், a sea-fish; horse-mackerel, greenish in colour, about 1 ft. long—Caranx jarra.

கரண்டிப் பூடு, புளி நகக் கொன்றை, a plant.

கரண்டி வீதம், கரண்டி யளவு, a spoonful—Cochleare; 2. பெருங் கரண்டி யளவு, large spoonful—Cochleare amplum; 3. உச்சிக் கரண்டி யளவு, tea spoonful — Cochleare parvum.

கரண்டை, நாணல், reed; 2. முனிவர்கள் ஆசிரமம், the abode of sages (Rishis).

கரண்டைக் கை, முன்னங் கை, fore-arm.

கரதம், காக்கை, crow.

கரதலம், உள்ளங் கை, the palm of the hand.

கரதலன், மிருத பாஷாணம், a mineral poison.

கரதாளம், பனை மரம், palmyra tree—Borassus flabelliformis.

கரதாளிகம், தென்னை, cocoanut tree—Cocos nucifera.

கர தோஷம், இரசாயன மருந்துகளால் ஏற்பட்ட விஷ தோஷம், chemical poisoning.

கரத் தம்ப வாதம், இரண்டு உள்ளங் கைகளிலும், உள்ளங் கால்களிலும், நெருப்பில் வைத்தாப் போல் எரிச்சல் கண்டு, உடம் பெங்கும் வெளுத் துலர்ந்து, புரைதனில் புழுக்கள் ஊருதல் போல் ஊர்ந்து நடை கொடாது, வா யுலர்ந்து, உடம்பு கனத்துக் காணுமோர் வாத நோய். (யூகி. முனி. 800), a kind of rheumatism marked by burning sensation on both the palms and the soles, pale and dried condition of the body, a peculiar sensation in the folds of the skin corresponding to the movements of a worm in a wound, inability to walk or move about freely, parched tongue, heaviness of body etc; 2. கை யெழ வொட்டாமற் செய்யு மோர் வாத நோய், paralysis of the arm.

கரத்தல், மறைத்தல், hiding; concealing; 2. அழித்துப் பழய நிலைக்கு ஒடுக்குதல், analysing and reducing to primal elements.

கர நியாசம், தேவர்களை மந்திர மூலியமாய் விரல்களில் வைக்கும் கிரியை, assignment of fingers to tutelary deities through appropriate mantrams.

கரந்தை, கரந்தைப் பூடு, இது அட்டதச மூலத் தொன்று, sweet basil—Ocimum basilicum; it is classified as one of the 18 kinds of drugs; 2. சட்டி, iron weed—Vernonia arborea; 3. திருநீற்றுப் பச்சை, fragrant basil; 4. கொட்டைக் கரந்தை, Indian globe thistle—Sphaeranthus hirtus; 5. நீர்ச் செம்பு, arrow-head aquatic plant; 6. கல் லாரை, which see; 7. பூண்டுகளின் பெயர்களில் ஈறாக வரும் மொழி, the second term of certain plants as in:—

1. சுரக் கரந்தை, fever toolsy or Sphaeranthus amaranthoides.

2. இலை கரந்தை, Ceylon toolsy—Sphaeranthus zeylanicus.

3. சிவகக் கரந்தை, sharp basil — Ocimum pilosum.

4. சிறு கொட்டைக் கரந்தை, small seeded basil—Brachycome assamica.

5. சின்ன பூக்கொட்டைக் கரந்தை, same as No. 4.

6. கோடாலிக் கரந்தை, axe basil — Sphaeranthus indicus. So called from its use against disease.

7. கொட்டைக் கரந்தை, Indian globe thistle—Sphaeranthus hirtus.

8. விஷ்ணுக் கரந்தை, blue - flowered Vishnu basil — Shpaeranthus mollis.

9. வயல் கரந்தை, same as No. 7.

10. குத்துக் கரந்தை, a variety of No. 7 grown in clusters.

11. நறுங் கரந்தை, same as No. 18.

12. பிரப்பங் காய்க் கரந்தை, (an unknown variety).

18. சூரியக் கரந்தை. *unidentified* plant.

14 வெள்ளை கொட்டைக் கரந்தை அல்லது வெள் கரந்தை, a white species of No. 7.

15. வெள்ளை விஷ்ணு கரந்தை, same as No. 8, but with white flowers instead of blue. A very rare plant.

16. சங்க நிறக் கரந்தை, same as No. 14.

17. சுவைக் கரந்தை, perhaps a misnomer of No 1.

18. நாறு கரந்தை. See கொட்டைக் கரந்தை.

19. பசுங் கரந்தை, young plant of No. 7.

NOTE.—According to Tamil Medicine the various prefixes added to the general term 'Karandai' indicate 19 different kinds of plant as mentioned above.

கரந்தைச் சாறு, கரந்தை யிலைச் சாறு, the juice of the basil plants in general.

கர பத்திரம், சுக்கு, dried ginger; 2. எலும்பினை அறுக்க உபயோகிக்கும் கத்தி அல்லது வாள், a surgical cutting instrument or saw, used for cutting a bone or in performing amputations; (*in Surgery*) a saw used in osteomy—Adam's saw.

கரபம், மணிக் கட்டி லிருந்து விரல்கள் வரையி லுள்ள பகுதி, that part of the hand between the wrist and the fingers—Meta carpus; 2. யானை, elephant; 3. கழுதை; ass.

கர பரிசம், கையிற் தொடுதலினு லேற்படும் உணர்ச்சி, sensation arising from touch by hand.

கர பர்ணம், செவ் வாமணக்கு இலை, the leaf of red castor seed plant—Ricinus communis

கர பல்லவம், கை விரல், finger.

கரப வல்லவம், விளா மரம், wood-apple tree —Feronia elephantum.

கர பாகம், உலோக வகைகள் மணலைப் போ லிருக்குந் தன்மை, the powdered state of metals; 2. கை பாகம், right-handedness or that readiness in performing an action, which proceeds from experience or practice; skilful and active process in manual employment; 3. விரல்களி னிரில் தேய்த்து மருந்துகளைப் பாகம் எடுத்தால் மிருதுவான குளிகை போல் திரளும் பாகம், a process of determining, in manual employment, the right or the correct stage which a medicine under preparation has arrived at; 4. உலோக வகைகளை மணலைப் போற செய்யும் புடபாகம், the process of rendering metals into a powder by way of calcination.

கர பாதம், கையும் காலும், the arm and the leg; the limbs.

கர பாத்திரத்தி லுண்ணல், கையே பாத்திர மாகக் கொண்டு கையில் வாங்கிச் சாப்பிடல், to eat by receiving the food into the cavity or the hollow of the hands united or joined for the purpose, as beggars do.

கர பாத்திர மெடுத்தல், see கர பாத்திரத்தி லுண்ணல்.

கர பாத்திரம், விரல்களை மடக்கி உள்ளங் கையை குழியாகச் செய்வது, the hollow of the hand made to resemble a vessel by the flexion of the fingers.

கரபி, யானை, elephant.

கர பிப்பிலி, நா யுருவி, Indian burr—Achyranthus aspera.

கர பீரம், சிங்கம், lion.

கரப் பர்ணம், ஆமணக்கு இலை, castor plant—Ricinus communis (leaf of). See கர பர்ணம்.

கரப்பன், உடம்பின் தோலைப் பற்றிய விரண ரோகம். இது சுரம் வராமலே, சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு மூன்று அல்லது நான்கு வயது வரைக்குங் காணும். அன்றியும், பல சமயங்களிலும் உடம்பில் பல விடங்களிலும் ஏற்படும். அப்பொழுது ஏற்படும் புண், சிரங்கு அல்லது விரணம் இவைகளுக்கு, நிறத்தையும், இடத்தையுங் கருதி பல விதமாகப் பெயர்கள் வழங்கும். ஆயினும், இவ்விதப் பெயர்கள் சரிவரப் பொருந்தும் படிப் பெயர் கிடையாததைப் பற்றி தமிழ் வைத்தியர்கள் பலவிதமாகக் கருதுவார்கள். ஆயினும் அது அடியிற் கண்ட படிப் பல விதமாகக் கொள்ளப் படும், a name given to those eruptions in children, which are unaccompanied by fever, and which shew themselves, at different periods from the age of 3 or 4 months up to 4 years. It takes several names according to the location in the organs of the body, the size, the colour and the nature of the eruptions. The Tamil Practitioners reckon a great variety of them, but they may with propriety, be confined to the following:—

1. செங் கரப்பன், this corresponds to Red gum—Strophulus intertinctus. It usually shows itself at some period during the first two months.
2. கொள்ளிக் கரப்பன், fire-brand carpang—marked by red spots consisting of innumerable small papulae occurring between the ages of 2 and 4. It terminates in a brownish itchy scab.
3. கருங் கொள்ளிக் கரப்பன் — See Nos. 2 and 15.
4. பெருங் கரப்பன், a variety of strophulus in which the papulae are larger, and not inflamed, but have a smooth shining surface —Strophulus candidus.
5. சடைக் கரப்பன், a variety of strophulus with crowded papulae—Strophulus confertus.
6. சொறி கரப்பன், a form characterised by intensely itching papules —Strophulus pruriginosus.
7. ஓடு கரப்பன், flying strophulus or wild fire rash, a form characterised by wandering eruptions — Strophulus volaticus.
8. மண்டைக் கரப்பன் அல்லது கபாலக் கரப்பன், a thick crust corresponding to milk cap, invariably coming on the fore-head and on the scalp and occasionally a little over the face—Crusta lactea.
9. கடுவன் கரப்பன், a form confined solely to the space between the knees and the ankles and marked by a throbbing pain—Lichen planus *ocreaformis* (papules rounding each leg like shin-guard).
10. வரிக் கரப்பன், an eruption of papules in long lines on the extremities—*Lichen ruber moniliformis*.
11. கண்டக் கரப்பன், a form of lichen, consisting of reddish papules of a scrofulous nature on the neck —*Lichen scrofulosus*.
12. உமிக் கரப்பன், a form accompanied by the formation of minute papules of deep red colour — Eczema papulosum.
13. சுர கரப்பன், இதில் குளிர் காய்ச்சற் காணும், a form of eczema attended with fever and marked by swollen skin—*Eczema madidans*.
14. விடக் கரப்பன், one marked by development of red patches with little or no itching due to poisons or other idiopathic causes.
15. கருங் கரப்பன், a form of black eruption occurring in early infant life.
16. புடைக் கரப்பன், a disease of the skin in which minute vascular points looking like grains of pepper are formed in rings — Angino serpiginosum.
17. முழங்காற் கரப்பன், eczema of the knee.
18. சிலந்திக் கரப்பன், ulcerating eruption.
19. கழலைக் கரப்பன், a condition marked by multiple tumours on the skin accompanied by intense itching.

20. வைத்தியக் கரப்பன், a variety of carpang developing unsoundness of mind.

21. கர்ப்பிணிக் கரப்பன், an inflammatory severe skin disease affecting pregnant woman — Impetigo herpetiformis.

22. குட்டக் கரப்பன், a white scabby scurf with lesions spreading over the whole surface of the body—Psoriasis universalis.

23. சிக்கக் கரப்பன், a skin disease with red swelling eruptions.

24. அரி கரப்பன், a kind of itching eczema in children.

25. ஆனந்தக் கரப்பன், a skin disease which at first gives a pleasant sensation when scratched but is soon followed by a burning sensation after the scratching —Prurigo mitis.

26. அக்கினிக் கரப்பன், a skin disease of the type of herpes — Tinea imbricata.

27. திமிர்க் கரப்பன், eczema with loss of sensation.

28. வரட்டுக் கரப்பன், dry scales — a skin disease with scaly incrustations.

29. இடி கரப்பன், another variety.

NOTE.—All the above kinds fall under the five general classifications according to the changes of the three humours in the system viz:—வாதக் கரப்பன், பித்தக் கரப்பன், சிலேட்டுமக் கரப்பன், முன் கரப்பன், பின கரப்பன்.

கரப்பன் கட்டு, பெண் குறி மேல் குருக்கள் எழும்பி மிக்க நமைச்சலை யுண்டாக்கும் ஓர் வகைக் கரப்பன், a form of skin disease on the external genital of a female, marked by intense itching — Pruritus vulvae.

கரப்பன் பண்டம், கரப்பானை உண்டாக்கக் கூடிய பதார்த்தங்கள், articles of food or other eatables likely to develope itching eruptions on the skin.

கரப்பான்,சொறி,புண் முதலியவைகளின் வகை, the name for any eruption or other skin diseases such as rash, eczema, etc; 2. சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு உடம்பில் எப் பாகத்திலாவது நெருக்க வுண்டாகும் கடுகைப் போன்ற குருக்கள். கடைசியாக இக் குருக்கள் திரண்டு மஞ்சள் அல்லது கபில நிறமான பருக்கலி உண்டாக்கும், eruptions common in children,spreading over any part of the body in clusters of light-coloured papules, each of the size of a mustard seed. It terminates in large loose yellowish or brown scabs. See கரப்பன்.

கரப்பான் கட்டு, ஓர் வகைக் கரப்பன், cellulitis.

கரப்பான் கொல்லி,கரப்பான்நோயைக் கொல்லு மூலிகை அல்லது மருந்து, drug or other medicine that cures carpang (scurvy)—Antiscorbutic.

கரப்பான் சிலந்தி, சிலந்திக் கரப்பன், a variety of carpang eruptions attended with ulcers.

கரப்பான் பித்தம், ஓர் வகைப் பித்த நோய். இதனால் உடம்பு முழுவதிலும், சொறியும் கட்டியும் உண்டாகிப் பேதி, இரைச்சலுடன் பொருமல், இசிவு, கால்களில் வலி யிலைப்பு, இடுப்பு நோவு, திமிர், உடம்புக் காந்தல், நிறைக் குறைவு, முதலிய குணங்களும் ஏற்படும், a bilious affection characterised by the following symptoms viz.--itching all over the body, painful eruptions, purging, rumbling noise in the stomach accompanied by tympanites, convulsions, weakness of the limbs, pain in the loin, numbness, glowing heat, loss of bodily weight etc.

கரப்பான் பிர மேகம், ஓர் வகைப் பிரமேக நோய். இதனால் வயிற் றிரைச்சல், சீதக் கழிப்பு,சீக்கடுப்பு,மூத்திரத் துவாரம் புண்ணாகிக் குத்தலுடன் மூத்திரம் கண்ணும்பு சலம்போல விறங்கல், கை கால் குய்ச்சல், உடம் பெல்லாம் நெருங்கிய பெருஞ் சொறி, முதலிய குணங்கள் ஏற்படும், a kind of gonorrhoea attended frequently with complications such as, pain in the abdomen, mucous discharge, painful micturition, pain in the urethra through inflammation of the bladder, psoriasis with lesions over the whole body etc.

கரப்பான் பூச்சி, கரப்பான் வண்டு, an insect or beetle giving much trouble in houses; Cockroach—Blatta orientalis

கரப்பான் பூடு, கரப்பானைக் குணப் படுத்தும் ஓர் பூண்டு அதாவது சிறுக் குறண்டி, a thorny plant capable of curing scurf; lowly corandy—Lepidagathis cristata.

கரப் பிரவேசம், பிரசவத்தில் குழந்தையை வெளிப் படுத்த வேண்டி,யோனி வழியாய்க்

கையைப் பிரவேசித்தல்; introduction of the hand into the vagina to effect a speedy delivery of the child.

கரப்பு, மத்து, churn; 2. கரப்பான் பூச்சி which see.

கர மசாலை, கறிக் கிடுவதற்காகக் கையினுற் கூட்டும் வாசனை வர்க்கம், powdered or well ground curry stuffs prepared by hand without the aid of a machine. C.f. கறி மசாலை.

கர மஞ்சரி, நாயுருவி, Indian burr — Achyranthes aspera. A plant growing in hedges.

கர மட்டம், வெற்றிலைக் கொடி, betel-vine creeper.

கர மண்டலி, நாயுருவி, Indian burr—Achyranthes aspera.

கரமார்த்திகை, திராட்சைக் கொடி, vine creeper.

கர மாலம், புகை, smoke.

கர முட்டி, கைப் பிடி, the fist; 2. கை முட்டி, causation of an orgasm by the hand—Masturbation.

கர முட்டி செய்தல், காம விச்சை தீர இலிங்கத்தை கையினுல் பிடித்து ஆட்டுதல், to masturbate.

கரமை, யானை, elephant.

கரம், கழுதை, ass; 2. சூரிய கிரணம், sun's rays; 3. கை, hand; 4. நஞ்சு, poison; 5. இடு மருந்து, a potion administered to men or women to gain the love of the intended party—Love-philter; 6. முழம், cubit; 7. ஒளி, light; 8. இரசாயன விஷம், chemical poison.

கரம்பம், கஞ்சி, a kind of gruel; pap.

கரம்பரி, சிறு களா, a small variety of களா, which see.

கரம் பூதம், see அப்பைக் கோவை.

கரம்பை, ஓர் பூடு, an unknown plant; 2. களி மண், clay; 3. சிறு களா, see கரம்பரி.

கரய வல்லவம், விளா மரம், wood-apple tree—Feronia elephantum.

கரருகம், கைக் கண், the bed of the finger's nail; 2. நகம், nail.

கரவம், காட்டீந்து, wild date-palm.

கரவா, ஓர் சிவப்புக் கடல் மீன், a red sea-fish —Upeneus cinnabarinus.

கர வாகம், காக்கை, crow, so called from its harsh voice.

கர வாடகம், மருவு, a fragrant plant known as organy—Origanum (*genus*).

கர வாட்டி, சுற்பாட்டி, an unknown plant.

கரவாத சன்னி, விஷத்திறு லேற்படும் சன்னி, delirium due to poisoning; 2. வாத ரோயால் உடம்பில் விஷம் தாக்கி, அதனு லேற்படும் சன்னி, delirium due to sceptic poison arising from rheumatism.

கரவாதம், கைக் குடைச்சல், a form of neuritis associated with rheumatic symptoms.

கர வாலம், see கருகம்.

கர வாளம், பாஷாணம், poison, 2. நேர் வாளம், crcton oil plant—Croton tigilium.

கர விகாரம், விஷத்தினுல் உடம்பி லேற்படும் வேற்றுமைகள், various modifications or changes occurring in the system due to poisoning; 2. இடு மருந்தினுல் உடம்பி லுண்டாகும் ரோய்கள். diseases occurring in the body due to introduction of love philter as an after-effect; 3 இடு மருந்தினுல் புருஷர் அல்லது பெண்களுக் கேற்படும் காமக் கவலை, lustful thoughts or venereal passions arising from introducing love-potion; 4. கையில் உண்டாகும் விகாரங்கள், accidents to or changes in the hand or the arm such as fracture, deformities etc.

கர விஷம், சிறிதனவாக விஷமேற்றி வரல், slow poisoning; 2. புருஷர்களைத் தம்மிடம் பாசமுள்ளவர்களாகச் செய்ய விருப்பமுள்ள பெண்களாவது, பகைவர்களாவது, உணவு,தின்பண்டம் முதலியவைகளில் இடும் ஓர் இடு மருந்து, a philter or substance usually administered by jealous wives to their husbands or by an enemy to one, in food or other eatables for purposes of subjecting him to her or his control. It is a slow poisoning by which the health of the victim is impaired and the person dies ultimately.

கரவிந்தை, களாச் செடி, Bengal currant bush—Carrisa carandas.

கர வீரகம், விஷத் தன்மை யுள்ள அலரி வேர், the poisonous root of oleander.

கர வீரம், அலரிச் செடி, oleander shrub — Nerium odorum; 2. சிவப்பாயும், சிந்தூரத்தைப் போலும் மிகவும் பளுவுமுள்ள ஓர் மனோசிலை, a kind of red orpiment—Arsenicum bisulphuretum. It is bright red

in colour and very heavy; 3. ஓர் வகை சோமப் பூடு, a species of Soma plant; 4. அலரிப் பூ, oleander flower; 5. ஓர் வெங் காயம், a species of onion; 6. துவரை, common dholl — *Cajanus indicus*; 7. பெரு விரல், the thumb.

கர வீரியன், விஷ வைத்தியன், the name of a physician who cures poison or poisonous effects.

கரவு, முதலை, alligator; crocodile.

கர வேகம், see அடுக்குச் செம்பரத்தை.

கராளக வேர், எட்டி வேர், the root of Yetti tree—Strychnos potatorum.

கராளம், எட்டி மரம், Indian poison-nut tree —Strychnos nux vomica; 2. நஞ்சு, poison; 3. பாம்பின் விஷம், the venom of a snake; 4. நாபி, aconite — Aconitum ferox.

கரளை, பழுக்காத காய் (*in Botany*), a fruit which will never ripen; 2. பழுக்க நாட் செல்லுங் காய், fruit taking time to ripen; an immature fruit; 3. மென் மேலும் வளராது கெட்டித் தன்மை யடைந்த கழலைக் கட்டி, (*in Pathology*) an indurated and undeveloped solid tumour; 4. வளர்த் தியின்மை, growthlessness; stuntedness.

கரளைக் கட்டி, கெட்டியான கழலைக் கட்டி, an indurated tumour. See கரளை.

கரா, முதலை, crocodile; 2. ஆண் முதலை, a male alligator; 3. இலவங்கம், clove; 4. நண்டுக் கால, claws of a crab; 5. அழியா தது, that which is everlasting or imperishable.

கரா கரி, தேவ தாரு, bastard sandal—Erythroxylon monogynum.

கரா கிகம், மருக் காரை, common emetic nut —Randia dumetorum.

கராக் கினி, விஷ ரோகத்தைத் தீர்த்தல், removing poisonous effects of a disease.

கரா சகம், அரோரூட்டுமா, the arrow root flour.

கரா சலம், யானை, elephant.

கராசனம், புலி, a tiger which rests on its paws.

கராசி, வெண் கடம்பு, common cadamba — Anthocephalus cadamba.

கராடம், மருக் காரை, see கராகிகம்.

கராட் சேபக வாதம், ஓர் வகை வாத நோய். இது அதிக வாத பண்டங்களைப் புசிப்பதனாற் பிறந்து, உடம்பு முழுவதும் வியாபித்து, பின்னர் கை கால்களை அனுசரிக்கும். அப் போது கைகளை அசைக்கவும், நீட்டவும், மடக் கவும் கூடாமையாயிருக்கும், a kind of paralysis attended with loss of motion and function of the limbs, especially the arm, as a result of the deranged condition of Vayu, which begins in the muscles of a particular part and gradually spreads all over the body. It is said to be caused by over-indulging in articles of fare likely to develope Vatha.

கராத்திரி, யானை, elephant. See கரா சலம்.

கரா பத்தினி, பேரா முட்டி, fragrant sticky mallow—Pavonia odorata.

கராமம், வெண் கடம்பு, see கராசி.

கரா முத்து, முதலையிற் பிறந்த வெண்ணிற மான முத்து, a concretion like a white pearl found in a crocodile.

கராம், ஆண் முதலை, male alligator, see கரா.

கராம்பு, கிராம்பு மரம், clove tree.

கராம்புச் சூரணம், கிராம்புப் பொடி, powdered cloves; 2. கிராம்புடன் மற்றக் கடைச் சரக்கு களையும் சேர்த்துச் செய்த மருந்துப் பொடி, a medicinal powder with clove as the chief ingredient among other bazaar drugs.

கராம்புத் தைலம், கிராம்பி னின்று வாலை ரூப மாய் வடிக்கத் தைலம். இதைப் பல் வலி, பற் சொத்தை முதலியவைகளில் உபயோ கிக்கலாம். சீதளத்தைப் போக்க, மேற் பூச்சுத் தைலமாகவும் உபயோகிக்கலாம், oil of cloves—Oleum caryophylli. It is obtained from cloves by distillation. Vaidyans apply it to relieve tooth-ache and also to tooth to cauterise the exposed nerve. It also forms an external application in cold.

கரா யிகம், ஓர் சிறு நாரை, a species of small crane.

கரா லகம், நீலத் துளசி, purple-stalked basil —Ocimum sanctum (typica); 2. கருந் துளசி, black basil, said to be found very rarely.

கராள கேசரி, கோர ரூபமான சிங்கம், a fierce or furious lion.

கராளத் தைலம், எர்க்க மரத்தின் அடிப் பக் கத்தைத் துளையிட்டு அதனின்று வடியும் தைலம். இதை உள்ளுக்குக் கொடுக்க, அடங்கி நின்ற மூத்திரத்தை வெளிப் படுத்தும், உடம்

கிறுக்கிப் பன்றித்தயும், உற்சாகத்தையும் கொடுக்கும். இது நூற்றடித்ததப் போக்கு மெவரவும் கருதப் படும், balsam obtained from the notch made in the trunk of Gurjan tree. It is generally sold in the bazaar. When given internally, it is a stimulant, diuretic and alterative. It is considered to be a specific for leprosy.

கராளம், கஸ்தூரி மான், musk deer; 2 குக்கிலியத் தைலம், a mixture of oil and dammer; 3. கர்சூரி, Indian sarsaparilla—Hemidesmus indicus alias Periploca indica; 4. தைலம் வடிக்கும் ஓர் மரம், a tree from which Gurjan balsam oil is obtained by cutting a notch in the trunk; wood oil tree—Dipterocarpus turbinatus.

கரி, முதல் வரிசை அடைமொழி, a prefix as in the name of plant's first term, as in கரி முள்ளி, கரித் திப்பிலி etc; 2. கட்டைக் கரி, wood charcoal; 3. அடுப்புக் கரி, artificial charcoal obtained from burning the fuel in oven; 4. கருப்பு, black; 5. அத்தி, fig; 6. வயிரம், the hard part inside a timber as its core; 7. மிளகு, pepper; 8. நஞ்சு, poison; 9. கரிப்பு, saltishness; 10. கண்ணுக் கிடு மை, black pigment for the eye.

கரி கண்ணி, வெருகன் கிழங்கு, see கரி கண்ணி.

கரிகம், தேங்காய் உட் பற்று, the kernel of a cocoanut.

கரி காணம், ஓர் வித கரத லீலை, a posture in sexual enjoyment. See கரி ரதம்.

கரி கறுத்தல், மிகவும் கறுத்தல், to grow very dark.

கரி கண்ணி, வெருகு, a herb with tuberous roots and very large leaves used for covering newly-planted saplings — Arum macrorhizon.

கரி காடு, சுடு காடு the cremation ground.

கரிகை, ஐந்து வகைக் கஸ்தூரிகளு ளொன்று அதாவது சிகப்புக் கஸ்தூரி, red musk, one of the five kinds of musk.

கரிக் கூட்டு, காசுக் கட்டி, areca catechu.

கரிக் கட்டை, எரிந் தணிந்த கட்டை, burnt or charred wood; charcoal; 2. தென் னிந்தியாவில் உற்பத்தியாகும் ஓர் செம் மரம், a red ebony tree of South India—Diospyros hirsutus alias D. candolleana.

கரிக் கலை, யானைத் திப்பிலி, monkey-creeper; elephant pepper—Scindapsis officinalis.

கரிக் கண்டு, கரிசலாங் கண்ணி, eclipse plant—Eclipta prostata.

கரிக்கல்ய ரலி, யானைத் திப்பிலி, see கரிக் கலை.

கரிக்கப் போடல், கரிக்கும் படி உப்பை மிகுதி யாகச் சேர்த்தல், to add salt in excess in culinary preparations to render it more saline to the taste.

கரிக் கரம், குருந்தின் அதாவது காட்டுக் கருவேப்பிலை, shrubby wampy — Clausena wildenovii.

கரிக் கருவளை, see காறு கருவிளை.

கரிக் கருமா, see கரிக் குருவி.

கரிக் களா, கையாந்தகரை, see கரிக் கண்டு.

கரிக் களி, புண்களுக்கு வைத்துக் கட்டுவதற் காகச் சோற்றையும், அடுப்புக் கரியையும் அரைத்துத் தயாரிக்கும் களி, a poultice prepared out of charcoal and boiled rice to apply to wounds.

கரிக் கன்று, see கரிக் கண்டு.

கரிக்கா, see ஆனைக் கீரை.

கரிக் காத்தாள், காளி, the black deity Kali; 2. அங்காளம்மன், the village goddess Angalamman.

கரிக் காந்தல், கருகிக் காந்தியது, that which is burnt and charred; 2. சமைக்கும் போது, தைலம், லேகியம் முதலிய வைகளைத் தயாரிக்கும் போது பாத்திரத்தின் அடியில் பற்றிய உணவு அல்லது மருந்து, cooked food, medicinal oil or electuary which is charred by overheat and is sticking to the bottom inside the pot or the vessel in which it is prepared.

கரிக் காலன், கருப்புக் காலை யுடையவன் அதா வது மேகப் படையால் கரு நிற மடைந்த காலை யுடையவன், a man with legs of a dark colour due to eczema or lichen.

கரிக் கால், கருங் கிரந்தி அல்லது கரப்பன் கொண்ட கால், black leg due to skin disease.

கரிக் காளான், ஓர் வகைக் காளான், a kind of mush-room.

கரிக் கிடங்கு, அடுப்புக் கரி தயாரிக்கு மிடம், place intended for burning wood in heaps to produce charcoal; 2. கரி யிருக்கு மிடம், charcoal godown.

கரிக் குடர், }
கரிக் குடல், } மலக் குடல், the lower part of the large intestine which serves to retain the feces—Rectum; 2. சற் குடல், sluggish intestine not acting properly.

கரிக் குட்டம், உடம் பெல்லாம் கறுத்துக் காணும் ஓர் வகைக் குட்டம், a kind of leprosy in which the whole body is rendered black—Black leprosy.

கரிக் குருவி, உடம்பு முழுவதும் கருப்பான ஓர் குருவி. இது பள பளப்பாயும், வால் நீண்டு விரிந்து மிருக்கும். இதன் கண் அஞ்சனம் செய்வதற் குதவும், King-crow; drongo shrikes—Dicrurus indicus alias D. macrocercus. It is a black bird so called from its colour like that of charcoal. It is glossy with a long forked tail. A magic paint or unguent is prepared from its eyes.

கரிக்கை, see கரிசலாங் கண்ணி.

கரிக் கொடி, மூவகைக் கொடிகளில் ஒன்று, one of the three kinds of creepers; 2. கருங் கொடி வேலி, black flowered lead-wort—a very rare plant of the Plumbago (genus).

கரிக் கொட்டன், கருக்கு வாய்ச்சி மரம், jagged jujube—Zizyphus trinervia.

கரி கொட்டை, see கரி கொட்டான்; 2. கருந்தும்பி, coromandel ebony — Diospyros melanoxylon.

கரிக் கொம்பு, யானைக் கொம்பு, elephant's tusk.

கரிக் கொள்ளி, குறைக் கொள்ளி, charred brand.

கரிக் கோலம், அழிஞ்சில், alangium — Alangium decapitalum; 2. அசுத்தமான நிலை, unclean state.

கரிக் கோழம், see கரிக் கோலம்.

கரிக்கோ ளிம்பு, பெரு வேம்பு, large neem—Melia azadirachta.

கரி சண்ணி, see கரி சன்னி.

கரி சத்திரம், see ஆட்டாங் கொடி.

கரிசலாங் கண்ணி, கரிசல்+ஆம்+கண்ணி= (blackness+to become+eye.) இதற்குக் கரிசலை, கையாந் தகரை, கரிப்பான், கை கேசி என்ற பல பெயர்க ளுண்டு. இது புற்றரை, ஈர முள்ள நிலம், களி மண் பூமி முதலிய விடங்களிலும், குளம், குட்டை ஆறு முதலிய நீர்ப் பாங்குள்ள விடங்களிலும் முளைக்கும்.

இதன் சமூலம், உடம்புக்கு ஆரோக்கியத்தையும், பலத்தையும் தருவது மன்றி, பித்தத்தை, பேதி மூலியமாய் வெளிப்படுத்தும் தன்மையையும், மூத்திரப் போக்கை யுண்டாக்கும் குணமும் வாய்ந்தது. இது வைத்தியத்தில் மிக்க வுபயோகப்படும். இதை அரைத்து நல் லெண்ணெ யுடன் கலந்து மேனுக்குத் தடவ, யானைக் கால் குணப் படும். இதன் சாற்றைச் சுரம், காமாலை, பாண்டு, குஷ்டம், முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு. இதை மேனுக்குப் பூசச் சொறி சிரங்குகளின் தினவைப்போக்கும், உடம்பிற்கு மிக்கக் குளிர்ச்சியைத் தரும். இதன் சாறினின்று மை செய்து கண் ணோய்களுக்குப் போடலாம். சாற்றை உண் ணாக்கிற் றடவக் கோழை வெளிவரும். இதை நசுக்கித் தலையில் தேய்த்து முழுகத் தலை வலி, கபால நோய், பீனசம், கண் ணெரிச்சல் முதலியவைகளைப் போக்கி, உடம்பிற்குக் குளிர்ச்சியையும் தரும். இதை யோகிகள் கோழை யகற்றவும், பல் தேய்க்கவும், காய கற்பமாகவும் கொள்வார்கள். இதன் வேருக்கு மலத்தை யிளக்குங் குணமும், வாந்தியை யுண்டாக்கும் குணமும் உண்டு. இதைக் கஷாய மிட்டு உட்கொள்ள, வெட்டைச் சூட்டைத் தணிக்கும், புத்தி தெளி வாகும். தயிலமாக வுபயோகிக்கத் தலை, மூக்கு, கண் இவைகளின் வியாதிகளைக் குணப் படுத்தும். இக் கீரையைச் சாதாரணமாய்ச் சமையல் செய்து சாப்பிடுவதுண்டு. சூரணித்துத் தினங் கொள்ள மலத்தை இளக்கிச் சூட்டைத் தணிக்கும்.

இதன் வேர் பலத்தைத் தருவது மின்றி, ஈரல் வீக்கம், மண் ணீரல் வீக்கம் முதலியவைகளுக்கு மேற் பூச்சு மருந்தாகவும் அதை உபயோகிக்கலாம். நீர்ச் சுருக்கைப் போக்கும். தேள் கடி விஷத்திற்கும் இவ் விலையை உபயோகிக்கலாம். இதன் சாற்றுடன் நல் லெண்ணெய் அல்லது தேங்கா யெண்ணெயைக் கலந்து கொதிக்க வைத்துத் தலையில் தேய்த்துக் கொள்ள மயிர் கறுத்து வளரும். Bee plant or Eclipse plant—Eclipta alba alias E. prostata alias Verbesina alba. It is a herbaceous plant found grown in grassy, damp or clayey soils and also near tanks, river beds etc.

The whole plant is alterative, tonic, cholagogue, purgative and diuretic. It is very useful in medicine. The paste mixed with gingelly oil is a local remedy in elephantiasis. The expressed juice is administered in cases of fever, jaundice, dropsy, leprosy etc, and is externally applied with advantage in itching, pruritus and other skin diseases. It cools the system. A black paint is prepared from the juice and applied as a collyrium to the eyes to effect a cure in some eye diseases. The juice with which the uvula is touched, brings out mucous from the lungs and the trachea.

It is an anodyne and an absorbent; the bruised leaves rubbed on the head before a bath, relieves headache, catarrh, burning of the eyes etc. The whole plant is used by Yogees not only for cleaning the teeth and bringing out the phlegm from the throat but also for rejuvenating the system. The root has emetic and purgative properties. Decoction of the leaves allays venereal heat with great efficacy and improves intellect. Medicated oil prepared from this is prescribed by Vaidyans for diseases of the head, nose, and the eyes. The leaves are generally used in culinary preparations in South India. A powder of the leaves when taken daily, proves a gentle purgative and cools the system.

The root is not only a tonic, but it is also a deobstruent in hepatic and splenic enlargements when applied externally. It is given to relieve scalding feeling or difficulty in passing urine (dysuria). The leaves form an excellent remedy for scorpion sting. The juice of the leaves mixed with gingelly or cocoanut oil and boiled, makes an excellent preparation for anointing the head with and is said to render the hair black and luxuriant in growth.

[illegible], [illegible]. [illegible], Marygold verbesina—Wedelia calendulacea. It is also called golden-coloured eclipta.

[illegible], [illegible].

[illegible], [illegible]. ([illegible]) [illegible], (in Rhetoric) the art of using language artistically so as not to be easily understood, as in "Therayar karisal" which means the difficult and terse verses composed by Therayar; a Tamil Medical work; 2. [illegible], a treatise on medicine not easily comprehensible compiled by Agastya; 3. [illegible], blackness; 4. [illegible], a universal solvent composed of three kinds of salt, as contemplated in Tamil works on Alchemy. It is so called from the extreme difficulty involved in its preparation.

[illegible], [illegible], rich black loam—a soil in which cotton is usually planted and so, it is commonly termed the "Black cotton soil". When cultivated, the fertility of the soil is so very great that it is said to produce crops even for 2000 years without manure and without irrigation, as determined by the ancient Geologists even from a remote period. Grass is commonly found growing in it to 3 to 4 ft. in height. The present day Geologists and Analytical Chemists have found out the reasons underlying this fertility.

NOTE.—Such kinds of soil are met with, in the Deccan districts and the plains of Surat and Broach in Gujerat. It is a stiff alluvium ([illegible]) deposited from still water, and consists chemically of silica, lime, alumina and oxide of iron. The soil is absorbent of moisture and also very retentive.

[illegible], [illegible], forest and soil of cotton; black soil forest.

[illegible], [illegible], black soil where cotton etc., are usually grown—Black cotton soil. See [illegible].

[illegible], [illegible], dark humus found in Tamil districts, much resembling the regar or the black cotton soil. It ranks next to regar in productive power.

[illegible], [illegible], Ceylon verbesina, see [illegible]; 2. [illegible], elephant's tusk.

கரி சன்னி, வெள் காக்கணம், white-flowered Mussel-shell creeper — Clitoria ternatea (albi-flora).

கரி சாரக் கண்ணி, see கரிசலாங் கண்ணி.

கரி சாலை, see கரிசலாங் கண்ணி.

கரிசாலைச் சூரணம், கரிசலாங் கண்ணி சமூலத்தை நிழலில் உலர்த்தி, இடித்து வடித்த பொடி. இது மலத்தை இளக்கிச் சூட்டைத் தணிக்கும், a powder prepared from the eclipse plant. It is dried in the shade and then pounded and filtered into a fine powder. This is a laxative and it generally cools the system.

கரிசை, ஓர் அளவு, see கரசை.

கரி சோளம், see இருங்கு சோளம்.

கரிச்சக் காய், புளிச்சக் காய், acid cucumber tree—Averrhoa bilimbi.

கரிச் சட்டி, புகை படைந்த சட்டி, smutty pot.

கரிச் சால், see கரிசலாங் கண்ணி.

கரிச் சான், கரிசலாங் கண்ணி, which see; 2. விடியற் காலையில் கூச்சலிடும் கரிக் குருவி, a black bird screeching early in the morning (generally at 4 A.M.); Tailed drongo—Edclius; 3. நாய்க் கரிச்சான், an unknown tree.

கரிச் சான் கிழங்கு, காரும் கருணைக் கிழங்கு, elephant foot yam with an acrid taste —Typhonium orixense; 2. காட்டுக் கருணைக் கிழங்கு, wild itching root — Dracontium polyphyllum.

கரிச் சான் பட்டை, நாய்க் கரிச்சான் பட்டை, the bark of an unknown tree.

கரிச்சான் பூண்டு, see கரிசலாங் கண்ணி.

கரிச் சிரா } கரிச்சை } கையாந் தகரை, see கரிசலாங் கண்ணி.

கரிச் சோளம், கருப்புச் சோளம், black millet.

கரிஞ்சம், அன்றில் பறவை, a bird noted for its staunch attachment to its mate.

கரிணி, யானை, elephant; 2. மலைக் குகை, mountain cave.

கரிண்டு, சிறு கத்தரி, hedge caper shrub.

கரிதல், கரி யாதல், to become charred; 2. கருப் பாதல், to become black; 3. தீய்தல், to be scorched.

கரி தாரகம், சிங்கம், lion.

கரி திப்பிலி, ஆனைத் திப்பிலி, elephant pepper —Scindapsus officinalis.

கரித்தல், உப்புக் கரித்தல், to be saltish: 2. உறுத்துதல், to smart as it does in the eyes; 3. அசீரணத்தால் தொண்டையில் உறுத்துதல், a sensation in the throat due to acidity of the stomach; 4 உறைத்தல்; காரத்தல், being pungent; 5. எரிதல் burning; 6. தாளித்தல், to season with spice.

கரித் திரா, ஆட்டுச் செவிக் கள்ளி, which see.

கரித் திராவக, கரி சேர்ந்த திராவகத் தன்மையுடைய, having the features of carbonate solution derived by dissolving carbon dioxide in water.

கரித் திராவகம், கரி சேர்ந்த திராவகம், an acidulous unstable liquid (H_2CO_3).

கரித் தைலம், கரியி லிருந்து வாலையின் மூலியமாய் வடித்த தைலம், a dark semi-solid oily product obtained from coal by distillation.

கரித் தோல், அத்திப் பட்டை, the bark of the fig tree.

கரி நெருப்பு, கரியை எரிப்பதனு லுண்டான நெருப்பு, charcoal fire.

கரி நேயம், மலை நாரத்தை, trifoliate winged lime—Limonia alata.

கரிந்து, சிறு கத்திரி, caper shrub—Capparis sepiara.

கரிபத பாரி, யானை, elephant.

கரி பதம், கொக்கோக நூலிற் சொல்லி யுள்ள 64 வகைப் புணர்ச்சிகளில் ஒன்று, one of the 64 postures in coition, as contemplated in the erotic science compiled by Kokkagamuni.

கரி பத்திரம், தாளிச பத்திரி, East Indian plum; Water myrobalan — Flacourtea cataphracta.

கரிபம், அரசு, pepul tree—Ficus religiosa.

கரி பரி லேகியம், யானை அல்லது குதிரை புணரும் காலத்து காத்திருந்து அச் சமயம் வானால் அதன் இலிங்கத்தைத் தரிதறுப் பின்னர், அண்டகோசத்தை வெயிலிற் காய வைத்து அத்துடன் மருந்துச் சரக்குகளும் சேர்த்து இடித்துக் கிளறித் தயாரித்து இலேபனத்திற்காகக் கொடுக்கும் ஓர் வகைத் தாது புஷ்டி லேகியம், an electuary for exciting the sexual impulse. It is prepared in the following way. The penis of the elephant or the horse is severed while in the sexual tension and subse-

quently dried and powdered. To this powder are added several other pulverised ingredients and the whole mixture incorporated with some conserve, honey or syrup and then heated sufficiently till it becomes a thick consistency.

கரி பித்தம், பித்தத்துடன் எரிந்து போன வண்டல் சேர்ந்த ஓர் கலப்புப் பித்தம், bile containing sediments of bile pigments.

கரி பிப்பிலி, ஆனை திப்பிலி, elephant pepper. See கரிக் கணை.

கரி புங்கம், சூரிய காந்தம், sun stone.

கரி புளிப்பு, கரி யமிலம், carbonic acid.

கரிப் பாலி, மலையாளத்தில் விளையு மோர் வகை நெல், a Malabar paddy with a juicy rice and black husk. *C.f.* கருங் குருவை.

கரிப் பாவல், கொடிப் பாலை, mimusops creeper.

கரிப் பாவை, பொன்னாங் கண்ணி, sessile plant—Illecebrum sessile.

கரிப்பான், கரிசலாங் கண்ணி, which see; 2. செங் கரிப்பான், a red variety of eclipse plant; 3. கருங் கரிப்பான், a black variety of eclipse plant; 4. பொற்றலை கரிப்பான், mary-gold verbisena: 5. கருப்புக் கரிசலாங் கண்ணி, another dark variety of eclipse plant found rarely; 6. கறி யுப்பு, common salt.

கரிப் பிலி, ஆனைத் திப்பிலி, elephant pepper. See கரி பிப்பிலி.

கரிப்பு, கண் கரிப்பு, acute pain or irritation of the eyes; 2. அச்சம், fear; 3. காரம், pungency.

கரிப் புளிப்பு, கரி யமிலம், carbonic acid.

கரிப் பூட்டை, சோளப் பயிருக் குண்டாகும் நோய், smut which blights the maize crop.

கரிப்பை, ஓர் வகைக் கடல் மீன். இதன் காற்றுப் பையி னின்று, பாகு போன்ற களி எடுக்கலாம், a sea-fish—Prislipoma. The air-bladder of this fish gives isinglass. *C.f.* காச்சி.

கரிப் போகி, see கரிப் பாலை.

கரி மட்டை, see கரு மருது.

கரிமம், குருத் துவம், gravity.

கரி மாலி, உடம்பு கறு நிற மடைந்து சாதல், death following the discolouration of the skin—Black death; 2. ஓர் பெரு வாரி நோய், an old name for an epidemic.

கரி மருது, see கரு மருது.

கரி மருந்து, வெடி மருந்து, gun-powder.

கரிமா, ஒரு பொருளை மிக்கக் கனமாகச் செய்யு மோர் வித்தை. இது அஷ்டமா சித்திகளு ளொன்று, one of the eight Siddhies or supernatural powers *i.e.*, the art of making a substance very heavy at will.

கரி மாசலம், சிங்கம், lion.

கரி முக மாலி, சிவக மூலி அதாவது சீந்தில், moon creeper — Menispermum cordifolium.

கரிமுக வாவண, கதண்டுக் கல், beetle stone.

கரி முண்டம், கரித் துண்டு, a lump of charcoal.

கரி முண்டன், கறுத்த திட காத்திர தேகி, a black stalwart and sturdy fellow.

கரி முந்திரிகை, முந்திரி, cashew tree—Anacardium occidentalis.

கரி முடு, அவிந்த கொள்ளிக் கட்டை, an extinguished fire-brand.

கரி முருக்கு, see இரச்சை மரம்.

கரி முல்லை, கருப்பு முல்லைப் பூ, smooth jasmine—Jasminum ritchiei.

கரி முள்ளி, கண்டங் கத்திரி, Indian night shade—Solanum indicum.

கரி முஞ்சிப் பாறை, ஓர் சிறு கடல் மீன். இது சாம்பல் வர்ணம், சுமார் 1 அடி நீள மிருக்கும், horse-mackerel—Coranx ire. It is grey and about a foot in length.

கரி மேதை, கருப்பு எருமை, a black buffaloe.

கரிய கரிப்பான், கருப்புக் கரிசலாங் கண்ணி. இது வெகு அபூர்வம், black eclipse plant. It is a very rare plant.

கரிய சாலை, see கரிய கரிப்பான்.

கரிய சீரகம், see கருஞ் சீரகம்.

கரிய நாதக் குழம்பு, காசிப முனியின் முறைப் படிச் செய்யப் பட்ட மருந்து, a semi-solid medicinal preparation according to the method prescribed by Kasibha Muni.

கரிய நிம்பம், கறி வேப்பிலை மரம், curry-leaf tree—Murraya koenigii.

கரிய பவளம், கருப்புப் பவளம், black coral.

கரிய பனங்காய், முதிர்ந்த கருப்புப் பனை மரத் துக் காய், a matured black palmyra fruit.

கரிய பிலை, கறி வேப்பிலை, see கரிய நிம்பம்.

கரிய பிள்ளை, பாலாட்டாங் கொடி, a creeper (*unidentified*). C.f. ஆட்டாங் கொடி.

கரிய போளம், இரத்த பாளம், இது சாதாரணமாய் மலைக் கற்றாழையின் சாற்றை உறையும்படிப் பக்குவப் படுத்தித் தயாரித்த ஓர் கருப்பு வஸ்து. யுனானியில் இச் செடியை 'கீகுமார்' என்றும், வடமொழியில் 'தருணி' என்றும் சொல்லப் படும். இதற்குத் தமிழில் 'சன்னி நாயகம்' என்றும், 'மூசாம்பரம்' என்றும் பெயர். நமது நாட்டில் சில விடங்களில் இக் கற்றாழை பயிராக்கப் பட்டாலும், கடைகளில் விற்கப்படும் கரியபோளம் வெளி நாடுகளி லிருந்து அதாவது ஜமேகா தீவு, ஆபிரிகாவின் கடற்கரை தேசம் முதலிய விடங்களில் ஏராளமாய்த் தயாரிக்கப் பட்டு இவ் விடத்திற்கு இறக்குமதி யாகிறது. உள் நாட்டில் தயாரிக்கும் மூசாம்பரத்தை வெளி நாட்டுக் கரிய போளத்திற்குச் சம மாகவே சொல்லலாம். இது மண் ணிறம் வாய்ந்த கட்டி களாயும், ஓரங்களில் பள பளப்பும் அல்லது மங்கலாயும், ஒடிக்கப் பிசின் தூளைப் போலும் இருக்கும். இது கசப்பாயும், வாசனையாயு மிருக்கும். எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

இது சிறிய வளவில் வயிற்றுக் கோளாறுகளையும், பெரு வளவில் பேதியையும், சூதகப் போக்கையு முண்டாக்கும். ஆகவே, பெண்களுக்கு முறை தவறாகச் சூதகம் நின்றிருந்தாலும், வெளி வந்தாலும், இச் சரக்கு மிக்க வுபயோக மானது. ஆனால் கர்ப்பிணி களுக்கு உதவாது. இதைக் கடைச் சரக்குகளோடு கூட்டி மாத்திரைகளாகச் செய்து மேற் கண்ட மாதவிடாய் நோவுக்குக் கொடுப்பதுண்டு. இது மூல நோயை அதிகப் படுத்தும் தன்மை யுடையதால் அந் நோயாளிக்கு இது உதவாது. இது கை கால் பிடிப்பு, மலக் கட்டு, குன்மம், காமாலை, சரும நோய் முதலியவை களுக்கும் உபயோகப் படும்.

யூனானி வைத்தியப்படி, இது மூன்று வகைப் படும் :—(1) அரபி போளம், (2) இந்து போளம், (3) பாரசீக போளம்.—(1) அரபி போளம்—மஞ்சள் வர்ணம், சற்றுச் சிவப்பு, பள பளப்பும் கூடியது. ஈரல் துண்டைப்போ லிருக்கும். இலேசாய் ஒடியும். இதுதான் சிறந்தது. (2) இந்துப் போளம்—கருஞ் சாயலான மஞ்சள் நிறமும் பள பளப்புக் குறைந்தும் இருக்கும். (3) பாரசீக போளம்—நாற்ற முள்ள தாகவும், இலேசாகவும், அதிகக் கசப்பு வாய்ந்தது மாயு மிருக்கும்.

இது குடல் வாய்வுவைக் கண்டிக்கும். இரைப் பை புழுக்களைப் போக்கும். இது மஞ்சள் காமாலை, சோகை, வாயு, வயிற்றுக் கிருமி, மண் ணீரல் நோய் முதலிய வைகளைப் போக்கும். அடிபட்டுக் கெட்டுப் போன இரத்தத்தைக் கரைக்கும். அஸ்தி முறிவுகளைப் பொருத்தும். இரணங்களை யாற்றும். குழந்தை செவ்வாப் பூப் போம். காடியில் அரைத்துக் கண் ணோய்களுக்குக் கண்ணைச் சுற்றிலும் பற்றுப் போடலாம். இதை நெருப்பில் வாட்டிப் பிரசவித்த பெண்களின் வயிற்று ரணங்களுக்கு உபயோகப் படுத்தப் படும். இதைச் சுத்தி முறைப்படிச் சுத்தி செய்து வியாதிகளுக்குப் பிரயோகிக்க வேண்டும், Black bole ; black aloe ; hepatic aloe. It is the inspissated juice of the leaf of Aloe socotrina alias A. spicata. In Unani, this plant is called Ghicumar ; in Tamil it is named 'Mountain aloe' (Malai kathalai), and in Sanskrit 'Taruni'. In Tamil, it is also known as 'Janninayakam' (curer of delirium) and 'Moosambaram.' Although this plant is cultivated in some parts of India, the product that is generally met with in bazaars of our country is brought from Jamaica islands and from the coast of Africa where it is procurable in abundance. The Moosamber obtainable here is not in any way inferior to the imported stuff. The drug in mass is black or reddish-brown; opaque or translucent at the edges; breaks with an irregular and resinous fracture. It has a bitter taste, and a strong but fragrant odour. It is sold in many bazaars.

In small doses, it is a stomachic and a tonic and in larger ones, a purgative and an emmenogogue. It likewise proves serviceable in menstrual disorders such as amenorrhoea, chlorosis etc. and so it should not be prescribed for pregnant women. The native practitioners mix it with other bazaar drugs, prepare pills, and use them for the above mentioned menstrual disorders.

It cannot be used with advantage to patients suffering from piles, as it has a tendency to aggravate such complaints. It is a favourite remedy in rheumatic affections, constipation, (especially in that connected with hysteria); atonic dyspepsia and jaundice; when

locally applied, it acts favourably in skin diseases as a stimulant.

According to Unani medical science, this consists of three kinds:—(1) Arab bole, (2) Indu bole, (3) Persian bole—(1) The Arab bole which is yellowish red has a glassy fracture and much resembles a slice of liver and is brittle. This is considered superior in kind and so is used much in Unani medicine. (2) The Indu bole is of a dark yellowish colour and is opaque; (3) the Persian bole is light, bitter to the taste and gives out a little offensive smell.

It removes flatulent dyspepsia and impurities of the bowel. The Arab bole proves serviceable in jaundice, anemia, flatulence, worm in the intestines and diseases of the liver and the spleen. Unani doctors also use this locally in cases of congestion of blood, and in fracture and also for healing ulcers. Sometimes a diffuse redness of the skin with which babies are affected is also cured by using it. Mixed with vinegar, it is also applied externally round the eyes, in cases of chronic ophthalmia. Vaidyans administer it, when toasted, in certain bowel affections to which women are subjected soon after lying-in. It should be well cleaned before use according to the rules prescribed for the purpose.

கரிய மணி, கருஞ் சீரகம், black cumin seed —Nigella sativa; 2. கண் மணி, the pupil of the eye; 3. கருப்புப் பாசி, black moss.

கரிய மால், காய்ச்சற் பாஷாணம், a kind of native arsenic.

கரிய மால் துளசி, கருந் துளசி, purple-stalked basil—Ocimum sanctum (typica).

கரிய மான், கருப்பு மான், இம் மான் 4 அடி நீளம், 2-3 அடி உயரம். கொம்பு 20-25, அங்குல நீளம். இதன் கறி மிக்க ருசியா யிருக்கும். இதன் தோல் ஆசனத்திற் குதவும். ஆண் மான் தோல் யாக முடிப்போருக் குதவும். இதன் அரிதாரம் வாத நோய்க் குபயோக மாகும். கொம்பு, பஸ்பம் செய்ய வுதவும். கொம்பை இடித்துப் பொடியாகச் செய்து, வயிற்று வலி முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம். இப் பொடியை நெருப்பி லிட்டுப் புகை காட்டத் தேள், கொசு முதலி யன அணுகாது, black dear; Indian antelope—Antelope bezoartica. It has a dark back; length about 4 ft. and is about 2-3 ft. high; horn 20-25 inches long. The venison of this antelope makes an excellent dish. The skin is held sacred and is used to sit upon in religious worship. The skin of the male antelope in its full shape is especially valued by performers of Yagam (யாகம்). The intestinal secretion is used in rheumatic pains. Basmams are prepared from its horn. Reduced to powder, it is used as a medicine in colic and other diseases. The powdered horn is sometimes burnt to keep off scorpions and mosquitoes.

கரி யமிலம், கரிப் புளிப்பு, carbonic acid.

கரி யமில வாயு, கரி வாயு, carbonic acid gas.

கரியரி யுரித்தோன், குப்பை மேனி, rubbish plant—Acalypha indica.

கரியலாங் கண்ணி, see கரிசலாங் கண்ணி.

கரியல், வளரா மரம், a tree of stunted growth.

கரியல் வடலி, பனங் கருக்கு, the sharp ends of a palmyra tree; 2. இளம் பனை, young palmyra tree of stunted growth.

கரியவன், கருப்பு நிற முடையவன், a dark man; see கரியன்.

கரிய வீயம், காரீயம், black lead; graphite—Plumbago.

கரிய ளுச்சான், see அஞ்சில்.

கரியன், கருப்பு நிற முள்ளோன், a dark man; 2. பறையன், a dark pariah. See கருப்பன்.

கரியன் திப்பிலி, see ஆனைத் திப்பிலி.

கரி யாக்கல், தீய்த்துக் கரியாக்கல், to reduce to charcoal or carbon by charring or burning wood.

கரியாசு, இலவு, cotton-tree.

கரியாத்து, நில வேம்பு, ground neem; French chiretta — Justicia paniculata; 2. சிரியாத்து, Himalayan chiretta — Swertia chirata.

கரியான், கருப்புக் குதிரை, a black horse.

கரியி லாடல், நெருப்பி லுருகல், melting in fire; 2. நெருப்பில் கண் விட் டாடல், glowing in charcoal fire.

கரியின் தந்தம், யானைக் கொம்பு, elephant's tusk.

கரி யுப்பு, பிரம வுப்பு, a kind of salt; 2. கரியை எரித்து அதனின்று எடுக்கும் உப்பு, salt extracted after burning charcoal; 3. கருக் கொடி, navel cord.

கரிபோட்டு ஊதல், உடைந்த சட்டியில் வைத்து ஊதல், blowing red hot anything kept in a broken piece of pot; 2. கும்மட்டிச் சட்டியில் வைத்து ஊதல், melting anything in the fire of a goldsmith's pot or melting pot.

கரி போட்டில் வாட்டல், see கரிபோட்டு ஊதல்.

கரி மதம், யானைப் புணர்ச்சி, elephant's coitus; 2. ஓர் விதம், a posture assumed in coitus.

கரிரம், அத்தி, fig tree; 2. கருவேல், Indian gum arabic—Acacia arabica.

கரிரோமம், யானை மயிர், the hair of an elephant.

கரிலம், கரிப் பாலை, which see.

கரில், காரப்பு, pungency.

கரி லங்கம், காரீயம், see கரிய லீயம்.

கரிலங்க கெட்டை, பாதத்திற்காகக் காரீயத்தை கெட்டையாகச் செய்தல், depriving black lead of its tenacity for purposes of Alchemy.

கரி வண்டு, கருப்பு வண்டு, any black beetle of the class of Coleoptera.

கரி வரி, } வெள்ளைப் பாஷாணம், white
கரி வைரி, } arsenic.

கரி வாயு, நிலக் கரி வாயு, coal gas; 2. அடுப்புக் கரியின் ஆவி, charcoal vapour.

கரி வாளைக் கோலா, ஓர் வகைக் கோலா மீன், இது கடல் மீன், இதிது பச்சை நிறம், 8½ அடி நீள முள்ளது, Gar fish — Belone chorum. It is a sea fish, bluish green in colour, of about 8½ ft. in length.

கரி வாளை, ஓர் பெரு வகை வாளை மீன். இது கடல் மீன்; இதிது நீல நிற முள்ளது; 12 அடி நீளம், herring-like sea-fish, bluish green in colour, of about 12 ft. in length.

கரிகம், see கரிரம்.

கரீடம், } காருவதே உலர்ந்த சாணம் அதாவது காட்டு விராட்டி, a naturally dried
கரீஷம், } cowdung used for calcining metals; 2. எரு முட்டை, a prepared and dried cowdung (sold commonly and used for kindling and burning fire in our kitchen).

கரீட டகம், பவளம், coral.

கரீரம், அகத்தி, sesbane tree — Coronilla grandiflora; 2. கருவேல், Indian gum arabic—Acacia arabica; 3. மிடா, water jar; 4. மூங்கிற் போத்து, the young plant of a bamboo reed; 5. யானைத் தந்தம், elephant's tusk; 6. தைலப் பானை, a large pot intended for boiling medicated oils.

கரீஷம், பெரிய எழுத்தாணிப் பூடு, a large species of style plant — Launaea nudicantis.

கரு, கருப்பு, black; 2. கருப்பம், pregnancy; 3. இன் முட்டை, ovum; 4. கோழி முட்டை, immature egg in a fowl; 5. முட்டைக் கரு, the yolk of an egg; an egg, the shell of which is not hardened; 6 நிறம், colour; 7. முளை, germ; 8. முப்பு, a secret name for the Universal salt; 9. அட்ட கருமக் கரு, a magical paint prepared out of the embryo of animals including human beings and also of plants, roots etc. to fascinate, injure or destroy a person; 10. பிறப்பு, birth; 11. குழந்தை, child; 12. குட்டி, the young one of an animal; 13. நடு, middle; 14. பரமாணு, atom; 15. கருவாளி, a genius; 16. நீலகிரியில் விளையும், கருங்காலி மரம், Nilgiri ebony; 17. தலை மண்டை யோடு, human skull; 18. மூன்று மாதத்திய பிண்டம், foetus three month's old.

கரு இண்டு, கருப்பு இண்டஞ் செடி, black Indian cock's spur — Pisosia aculiata. See கரு விண்டு.

கரு கட்டி வார்த்தல், மண்ணினால் வார்ப்புக் கருவி அல்லது அச்சுச் செய்து, உருக்கிய வஸ்துவை அதில் ஊற்றல், making a mould of mud and then pouring a melted liquid into it.

கரு கலைக்கு மருந்து, வயிற்றுப் பிள்ளையை அழிக்கு மருந்து, any medicine or agent which causes abortion; abortive drug.

கரு கலைதல், கரு வழிவு, miscarriage.

கரு கலைத்தல், வயிற்றுப் பிள்ளையை யழித்தல், to cause or bring about abortion or miscarriage before full development of the child; induced abortion i.e. an abortion brought about by artificial means —Abactus venter.

கருகல், தீய்தல், becoming scorched; 2. சோறு கறிகளின் காந்தல், charred rice or curry.

கருக வறுத்தல், to fry anything in fire so as to render it rather black.

கருகற் புண், ஆறிய புண், a healed or dried up sore or wound.

கரு குங்கிலியம், see கருங் குங்கிலியம்

கருகுதல், நிறங் கருத்தல், getting scorched as the face is.

கரு கூலம், கருப்புக் கட்டி, jaggery.

கருக் கட்டல், மண்ணினால் வார்ப்புருச் செய்தல், making mould for casting.

கருக் கட்டான், கருக்கு வாய்ச்சி, jagged jujube—Zyzyphus trinervia; 2. ஓர் மரம், white Indian orange ball tree—Buddleia asiatica.

கருக் கணம், இலவம் பஞ்சு, silk cotton — Eriodendron anfractusom.

கருக் கண்ணி, வெள்ளைக் கண்ணி, cleodendron—Cleodendron infortunatum.

கருக்கம், இரசாயனம், alchemy.

கருக் கரைத்தல், see கரு கரைத்தல்.

கருக் கலப்பு, கருவிற் பட்ட பொழுதே கலக்கக் கூடியவைகள், those which mingle during impregnation.

கருக்கல், கருத்துப் போதல், becoming scorched or partially charred; 2. தீயும் படிச் செய்தல், causing to be scorched: 3. இருள், darkness; 4. விடியற் காலம், morning twilight; 5. மேகங் கவிந்த இருள், cloudy darkness; 6. கருக்குதல், the art of blackening; 7. சுடுதல், toasting: scorching; 8. இருள், darkness; 9. வைடூரியக் கல், a precious gem—Cats' eye; 10. மூன்று மாதத்தியக் கருப் பிண்டம், a foetus, three month's old.

கருக்கல் நெல், see கருக் காய்.

கருக்கன் வெள்ளி, கருத்துப் போகக் கூடிய மட்ட வெள்ளி, black silver *i.e.* an impure silver capable of oxidising easily. It is opposed to சொக்க வெள்ளி, a pure kind of silver.

கருக்காத்தா மரம், கருக்கு வாளி, which see.

கருக்காத் தாரா, see கருக்கு வாளி.

கருக் காந்தம், சந்திர காந்தக் கல், a stone said to emit moisture when placed or exposed to moon light—Moon-stone.

கருக்காப் பாரை, ஓர் வகைக் கடல் மீன், horse-mackerel—Carux sausen.

கருக்கா மரம், கருக்கு வாய்ச்சி, jagged jujube —Ziziphus trinervia.

கருக்காம் பாறை, இரத்தச் சூறை, tunny fish.

கருக்காய், இளங் காய், tender or immature fruit: 2. பதர், chaff; 3 நெற் பதர், chaff of paddy.

கருக்கி, தீய்த்து, having scorched or charred.

கருக்கிக் கொடுத்தல், பத்தியமாகக் கஞ்சி காய்ச்சி கொடுத்தல், preparing and giving of liquid food as a diet for a patient.

கருக் கிடை, கருத்துடன் செய்வது, that which is done with care; 2. ஆழ்ந்த கருத் துடையது, that which evokes deep thought; 3 கருக்கிடை நூல், a science which evokes deep thought as போகர் கருக்கிடை நிகண்டு, a vocabulary compiled by Bogar.

கருக்கு, பனை மட்டையின் கூர்மை, the serrate edge of the stalk of palmyra leaf; 2. பனை மட்டை, palm leaf; 3. வாட் கருக்கு, the serrate edge of a saw or sickle; 4. பொசுக்கு, to burn superficially—Singe; 5. சுடு, toast; 6. இலையின் கருக்கு, jagged indentation of leaves; 7. கருக்குக் கஷாயம், which see; 8 போதை வஸ்து, narcotic drug such as hemp; 9. புதுமை, newness; 10 சுத்தம், cleanliness; 11. அழகு, beauty.

கருக்குக் கஷாயம், பனை மட்டைக் கருக்குக் கொண்டு தயாரிக்கும் கஷாயம். இதைப் பித்த சுரத்திற்குக் கொடுப்ப துண்டு, a decoction extracted from that portion of the serrate edges of the palmyra leaf stalk. It is prescribed in bilious fever; 2. பல சில சரக்குகளைக் கருக்கிக் காய்ச்சி வடித்த கஷாயம், a decoction extracted from several charred drugs.

கருக்குச் சதை, விலா வெலும்புகளின் இடையேயுள்ள கூர்மையான தசை நார், the muscular fibre in the intercostal muscles—Serratus muscle.

கருக் குடி, சவர்க் காரம், soap; 2. உழ மண், fuller's earth.

கருக் குடையாள் மூலி, கொத்தான், a twiggy plant—Cassytha filiformis.

கருக் குணம், see கருக் கணம்.

கருக்குதல், see கருக்கல்; 2. சுடுதல், toasting; 3. காய்ச்சுதல், to boil; 4. எரித்தல், burning.

கருக்குத் தாமம், see கருக்கு வாய்ச்சி.

கருக்குப் பட்டு, ஓர் வகை செய்ப் பணியாரம், a sweet cake prepared in ghee.

கருக்குப் பல், அரத்தைப் போன்ற பல், jagged tooth.

கருக்குப் பீர்க்கு, பீர்க்கு, rough edged luffa; sponge-gourd — Cucurbita acutangulus alias Luffa acutangula.

கருக்குப் போடல், கருக்குக் கஷாயமிடல், to prepare a decoction of the serrate edges of the palmyra leaf-stalk. See கருக்குக் கஷாயம்.

கருக்கு மட்டை, கருக்கு வாய்ந்த பனை மட்டை, the stem of a palmyra leaf having jagged end.

கருக் கும்மட்டி, ஓர் வகைக் கருப்புக் கும்மட்டி, a black variety of bitter apple—Citrullus vulgaris.

கருக் குகு, கும்பகம், suppression of breath; 2. கர்ப்பையி லிருக்கும் சிறு முட்டைகள், the reproduction eggs— Ova.

கருக் குருமான், see கரிக் குருவி.

கருக் குருவாய் ஓதல், 'கருவுக் கெல்லாம் குரு மருந்தா யிருக்கும்படி' எடுத்துச் சொல்லல், giving out the secret of quintessence or superior medicine prepared from the animal product.

கருக்குவா, see கருக்கு வாச்சி; 2. கருவாலி, Deccany olive wood—Elaedendron glaucum.

கருக்கு வாச்சி, சிலந்திப் பூச்சி; 2. கருவாலி, Deccany olive wood — Elaedendron glaucum; 2. See கருக்கு வாட்சி.

கருக்கு வாட்சி, கருக் காத்தா மரம், இதற்கே கருவாச்சி, கரிக் கட்டான், கரிக் கொட்டை கரிக் கொட்டான், கருக்கு வாலி, கருக்கத் தாரா, கருக்குவா, கருக்கு வாச்சி, கருக்கு வாளி எனப் பல பெயர்கள் வழங்கும். இது 20 அடி உயரம்; இலைகள் மாறி மாறியும், முட்கள் இல்லாமலும் இருக்கும். பூக்கள் சிறியவையாயும், பச்சையும், மஞ்சளும் கலந்த நிறமாயும் இருக்கும். இலைகள் சிறிது சிரு சிருப்பாயும், மணமாயு மிருக்கும். இதன் கஷாயம் இரத்தத்தைச் சுத்தி செய்யும்; பட்டையும் கஷாயத்திற் குதவும், இம் மரத்தி னின்று பிசின் வடியும். the term literally means jagged edge and sword. Jagged jujube—Zizyphus trinervia alias Z. glabrata. The tree is 20 ft. high; leaves alternate; hard and thick nut; small greenish yellow flowers. Leaves have little taste but a fragrant smell the decoction is given to purify the blood. The bark also is used in decoction. The stem of the tree yields gum by exudation.

கருக்கு வாய்ச்சி, கருக்கு வாளி, see கருக்கு வாட்சி.

கருக்கு விளிம்பு, தலையி லிருக்கும் எலும்புகள் ஒன்றோ டொன்று பொருந்து வதற்காக அவைகளின் விளிம்பில் ஏற்பட்ட இரம்பத்தைப் போன்ற வரிசையாக அமைக்கப்பட்ட முனைகள், அல்லது ஓரங்கள்; இவைகள் சேரு மிடங்களில் தையலைப் போற் காணப்படும். அறியாமையினால் இதைப் பிரம லிபி அதாவது தலை எழுத்து என்று சொல்வதுண்டு. the serrated edges of the line of junction showing the inter-locking of the bones on the head as in coronal suture etc. This appears like a stitch or a seam. Ignorant peoplo call this Brahma's writing indicating one's fate.

கருக்கு வெள்ளி, see கருக்கன் வெள்ளி.

கருக் குவை, ஓர் சிறிய மரம், holly-leaved spindle tree—Salacia prinoides; 2. ஓர் மரம், sour-leaved spindle tree—Enonymous serratifolius.

கருக் குழலிற் பாய்ச்சல், உலோகங்களை யுருக்கி வார்ப்பில் சாய்த்தல், casting melted metals or other liquids into moulds.

கருக் குழல், வார்ப்பு வேலைக்காக உபயோகிக்கும் குழாய்கள், tubes used for preparing moulds; 2. சினைப் பைக்கும் கருப் பைக்கும் சம்பந்தம் ஏற்படுத்தும் குழாய்கள், the ducts uniting the ovary and the uterus (for conveying the ovum and the spermatoza)—Oviducts.

கருக் குழி, கருப் பாசயத்தி னுள்ள குழி இது முக்கோணமா யிருக்கும், the cavity of the uterus, triangualar in shape—Uterine cavity.

கருக் குழி மொக்கு, சினைப் பை, the female sexual gland in which the ova are formed —Ovary.

கருக் கூடல், கரு வுண்டாதல், conception; impregnation.

கருக் கூடு, பிண்டம் தரித்து வளரு மிடம், கருப்பை, a hollow muscular organ, being the abode and place of nourishment of the embryo and the fetus—Womb; 2. சினைப்பை, ovary.

கருக் கூடு கண்ணனி, பெருஞ் சூலி மரம், a big variety of toon tree — Cedrela toona. *C.f.* அகச் சூலி, which see.

கருக் கூட்டு மருந்து, பெண்கள் புண்டாவதற்குக் கொடுக்கு மருந்து, medicine prescribed for conception.

கருக் கூலம், கருப்புக் கட்டி, a lump of jaggery.

கருக் கொண்ட கருப் பாசயம், பிண்டந் தங்கி யிருக்கும் கருப்பை, the pregnant uterus—Gravid uterus.

கருக் கொப்பிளம், see கருப்பைக் கொப்பிளம்.

கருக் கொள்ளல், கருப் பற்றல், impregnation; to become pregnant with.

கருக் கொள்ளுதல், see கருக் கொள்ளல்.

கருங் கச்சோலம், see கருப்புக் கச்சோலம்.

கருங் கஞ்சம், கருங் கஞ்சன், } வெண்கலம், bell-metal.

கருங் கஞ்சா, சேங் கொட்டையை எருவாகப் போட்ட நிலத்தில் பயிர் செய்த கஞ்சா. இது ஓர் கற்ப மூலி, ganjah plant grown on the soil manured with dhoby's marking nut, just to render it a black plant.

கருங் கஞ்சாங் கோரை, கருப்புக் கஞ்சாங் கோரை, a black variety of ocimum.

கருங் கடலை, கருப்புக் கடலை, black Bengal gram.

கருங் கடாகம், கருப்புக் கரிசலாங் கண்ணி. See கரிய கரிப்பான்.

கருங் கடுகு, கருப்புக் கடுகு, black mustard—Brassica nigra.

கருங் கடுகு ரோகணி, கருப்புக் கடுகு ரோகணி, black hellebore—Helleborus niger.

கருங் கடுக்காய், பொதிகை மலையில் வளரும் கருப்புக் கடுக்காய், இது முள்வாய்ந்த மரத்தின் காய். இதனால் நரை திரை நீங்கித் தேகம் தூண் போலாகும். நெடுங் காலம் காயத்தை நிறுத்தும், black gall-nut found grown in the Pothigay hills; black gallnut of an armed tree; the fruit invigorates the system and prevents grey hairs and wrinkles on the face. It rejuvenates the system and enables one to live to a long age.

கருங் கட்டான், கருப்புக் காக்கட்டான், the blue-flowered Mussell-shell creeper — Clitorea ternatea (typica).

கருங் கட்டுக் கொடி, கருப்புக் கட்டுக் கொடி, a black variety of the plant known as coagulating creeper—Cocculus villosus. It is a very rare plant (*unidentified*).

கருங் கட்டை, கோரான் கட்டை அல்லது சுளுக்கு, torch tree—Ixora parviflora.

கருங் கணன், கருப்புக் காக்கணம், see கருங் காட்டான்.

கருங் கண், கொள்ளிக் கண், evil eye.

கருங் கண்ணி, கருப்புக் கரிசலாங் கண்ணி, see கரிய கரிப்பான்; 2. கருப்புக் கண்களை யுடைய பெண், (lit) a woman having dark eyes; 3. மை தீட்டிய கண்களை யுடைய பெண், a woman having collyrium coat in the eyelids; 4. ஓர் வகைப் பருத்தி, a kind of cotton — Gossypium obtusifolium; 5. கருப்புக் கண்களை யுடைய ஓர் வகை மீன், a species of fish having black eyes.

கருங் கண்ணிப் பாறை, ஓர் வகைப் பாறை மீன், a kind of sea-fish.

கருங் கண் தோகை, மயி லிறகு, peacock's feather.

கருங் கத்தரி, நீல வர்ணக் கத்தரி, purple brinjal—Solanum melongena (americana).

கருங் கத்தலை, ஓர் வகை ஆற்று மீன். இது பளபளப்பாயும், மஞ்சளும் நீலமும் கலந்த நிறமாயும், முதுகின் மேற் பாகம் கருப்பாக வும், வாற்புறம் மங்கலாயு மிருக்கும். சுமார் 1 அடி நீளம் உள்ளது. பெரிய ஆறுகளில் வசிக்கும். கடலுக் குள்ளும் பிரவேசிக்கும், a kind of river-fish known as Bola coitor—Scinaena coitor. Its colour is silvery and spotted with gold and purple hues. The upper half of the dorsal is blackish. It is a foot long; frequents large rivers; descending to sea at seasons. It is opposed to வெள்ளைக் கத்தலை, grey curtalay—Scinaena albida which is silvery in colour and is 3 ft. in length.

கருங் கந்தன், see கருங் காந்தன்.

கருங் கரடி, கருப்புக் கரடி, the black bear.

கருங் கரணை, கருப்புக் கரணைக் கிழங்கு, a black variety of elephant foot yam.

கருங் கரப்பன், see கருங் கரப்பான்.

கருங் கரப்பான், குழந்தை கட்குச் சாணைப் பாம் பின் தோலைப் போல் உடல் முழுவதும் வெதும்பிச் சொறி புண்டாகிப் பக்க ரம்பு தோன்றி, வமைச்சல் கண்டு, வீக்கக் கடுமைப்

தோல் வெடித்துச் சலம் வடிந்து விகாரரூபம் முதலிய குணங்களைக் காட்டு மோர் வகைக் கரப்பன் நோய், a skin disease in children with branny desquamation, followed by atrophy of the skin, raised veins, itches, watery discharge due to the fissure of the skin, change of bodily appearance etc., just like one affected by poisonous bites.

கருங் கரி சாலை, கருப்புக் கரிசலாங் கண்ணி. இது சித்தர் கூறி யுள்ள மகா மூலிகை இருபத்து மூன்றில் ஒன்று. திருமூலர் கருக் கிடையிற் சொல்லி யுள்ள அடியிற் கண்ட செய்யுளின் படி இது காய கற்பத்துக்குச் சிறந்தது.

"கன்ன கரி சாலை தேகந் திரை போக்கும்
கன்ன கரி சாலை சிறந்த நரை போக்கும்
கன்ன கரி சாலை தேகஞ் சிறு பிள்ளை
கன்ன கரி சாலை சிதையா திவ் யாக்கையே"

a black or blue variety of the eclipse plant contemplated in Siddhar's science. It is one of the twenty three drugs with high potent power prescribed for rujuvenation and this is evident from the stanza quoted above in Tamil from the work of Tirumular.

கருங் கரிப்பான், see கருங் கரிசாலை.

கருங் கலம், மண் சட்டி, earthen vessel.

கருங் கலி, கருப்புக் கற்றாழை, black american aloe—Agave americana.

கருங் கல், கருப்புக் கல். இது ஓர் உபரசச் சரக்கு, primitive granite; black stone forming one of the natural substances contemplated in Tamil medicine; 2. எல்லாவிதக் கருங் கல்லுகளையும் குறிக்கும் ஓர் பொதுப் பெயர், a general term for granite stones though they are light-coloured and variegated; 3. சித்திரக் கல், ornamental granite of bright colour; 4. சக்கி முக்கிக் கல், fire-flint; 5. பொன்னின் மாற் றறிய வுபயோகிக்கும் உரை கல், a black siliceous fossil; touch stone — Lapis lydius. It is used by goldsmiths to ascertain the quality of gold, see கட்டளைக் கல் 6. காரீயக் கல், black-lead stone—Graphite; 7. தீ முருகற் பாஷாணம், a kind of mineral poison with properties of phosphorous.

கருங் கழுகு, கருப்பு நிறக் கழுகு. மற்றக் கழுகுகள் இதைக் கண்டால் பயப் படும், black vulture; king vulture—Gtogyps calvus. It is usually seen hunting over rocky hills and is dreaded by other vultures.

கருங் கழுதை, கருப்பு நிறம் வாய்ந்த கழுதை. இது மாந்திரீகத்திற்கு மெத்த உபயோகப் படும், black ass, psychologically a very useful animal in magic and witchcraft. C.f. கரு நாய், கரும் பூனை.

கருங் கழுதை லத்தி, கருப்புக் கழுதையின் மலம். இது அனேக நோய்களை அகற்றுங் குணம் வாய்ந்ததால் தமிழ் வைத்தியத்தில் மிக்க உபயோகப் படும், the dung of a black ass. It has the virtue of curing many ailments and so is very highly useful in Tamil Medicine.

கருங் கழுத்துக் குருவி, கழுத்தின் பாகத்தில் கருப்பா யிருக்கும் ஓர் வகைக் குருவி, இதை நெய்யில் பொரித்து, நூற் படித் தயாரித்து நெற்றியில் திலக மிட, எல்லாம் சித்தியாகும், a species of black bird with its neck black and is said to possess psychological virtues in magic. It is fried in ghee and with it a paint is prepared as per rules mentioned in Siddhar's science and the paint when placed as a dot between the eye brows is said to enable one to attain success in all his attempts.

கருங் களா, ஓர் பெரு வகைக் கடல் மீன், a large species of sea-fish— Cybium kuhtit.

கருங் கள்ளி, கருப்புக் கள்ளி, black spurge, (*unidentified*).

கருங் கற்றலை, கருப்புக் கற்றலை மீன், umbrine, a sea fish 9 inches long — Umbrina dussumieri. See கருங் கத்தலை.

கருங் கற்றாழை, ஆனைக் கற்றாழை, elephant aloe—Agave americana.

கருங் காக மாசி, கருந் தக்காளி, black Indian winterchery of the Physalis genus.

கருங் காக்கட்டான், see கருங் காக்கணம்.

கருங் காக்கணம், கருப்புக் காக் கட்டான், blue flowered mussell-shell creeper—Clitorea ternatea (typica).

கருங் காஞ்சொறி, கருப்புக் காஞ் சொறி. இதனால் குத் திருமலும், நீர் இரத்தமும் நீங்கும், the black variety of a small climbing nettle plant — Tragia involucrata (can nabina). It is a remedy for irritating cough and hematuria.

கருங் காடிகம், தித்திப்பு நாவல் பழம், sweet jaumoon.

கருங் காடு, சுடு காடு, cremation ground.

கருங் காடை, ஆண் காடை ; இதற்கு மார்ப் பக்கம் கருப்பா யிருக்கும். இதைச் சண்டை யிட மகமதியர்கள் வளர்ப்ப துண்டு, bastard quail ; black quail — Turnix taigoo. It is so called from its breast being black. It is reared by Mahomadans for enjoying bird-fight because of its well-known fighting qualities.

கருங் காணம், கருப்புக் கொள், black horse-gram—Cassia absus ; 2. காட்டுக் கொள், wild horse-gram—a plant of Rynchosia genus.

கருங் காந்தள், கார்க் கோடல், acute-leaved mangrove—Avicennia officinalis (alba).

கருங் காமாலை, சதை கருத்துக் காணும் காமாலை, a kind of scrofuloderm marked by deep black scars.

கருங் காய், செங் காய், partially ripe fruit ; 2. கச்சல் பாக்கு, dark areca-nut not fully developed or turned to its red colour of the outer skin.

கருங் காய்ப் பனை, கருப்புக் காயை யுடைய பனை, palmyra tree yielding black fruit.

கருங் காரம், காடிக் காரம், silver nitrate.

கருங் காலகம், கருப்பு மிளகு தக்காளி, a kind of black pepper or chilly takkali — Solanum melongena (nigra).

கருங் காலன், ஓர் வகைக் கருப்பு எலி, a black rat.

கருங் காலி, உடுக்கை மரம். இம் மரம் 20-30 அடி உயரம். கிளைகள் முள் ளுள்ளவை. இதன் இலைகள் சிணையாயும், பால் ஒதிய மரத்தின் பாலை ஒத்து மிருக்கும். சில சமயம் இம் மரம் முள் ளில்லாத தாயும் இருக்கும். அனேக சிறிய மஞ்சள் நிறமான பூக்களை யுடையது. இதனின்று பிசின் எடுக்கலாம், black sundra tree—Acacia catechu typica alias Diospyros melanoxylon. Tree 20 30 ft. high ; branches armed with prickles and some times unarmed ; many-flowered ; flowers small and yellow ; yields a gum ; 2. எட்டி மரம், nux vomica tree—Strychnos nux vomica ; 3. செங்கருங் காலி, glabrous foliaged cutch—Acacia catechu sundra ; 4. காக்காய்த் தாளி அல்லது கருந் தாளி, black satin wood — Diospyros ebenum ; 5. கருந் தும்பி, Coromandel ebony—Diospyros tupru ; 6. முட்டை மரம், yellow-leaved tree; milk wert—Nanthophyllum flavescens. See தும்பி.

கருங்காலிக் கிழங்கு, கருங்காலி மரத்தின் கிழங்கு, the bulbous root of the tree, கருங் காலி, which see.

கருங்காலித் தைலம், கருங்காலிப் பட்டையி னின்று இறக்கிய தைலம். இதை மேக நோய் களுக்குக் கொடுக்கலாம், a medicated oil extracted from the bark of the tree (Acacia sundra) ; ebony oil. It is prescribed for syphilitic disorders.

கருங்காலிப் பட்டை, கருங்காலி மரத்தின் பட்டை, இது துவர்ப்பு ; ஆகவே இதை அதிரண பேதி, குன்மம், நீரிழிவு, தந்தமூல ரோகம், இருமல், சுவாசம் இவைகளுக்குக் கொடுப்ப துண்டு, the bark of the tree (Acacia sundra). It is used in decoction for diarrhoea, dyspepsia, diabetes, disease of the teeth, cough, hard-breathing etc and also as a tonic.

கருங்காலிப் பிசின், கருங்காலி மரத்தின் பிசின். இதனால் கருங் கரப்பான், மேக மூத்திரம், அஸ்திக்காம் முதலியவை போம், விந்துவை வளர்ப்பிக்கும், the gum of black sundra tree. This is efficacious in diabetes, black scurf, disease of the blood etc and it promotes secretion of semen.

கருங் காலி வயிரம், கருங்காலி மரத்தின் உள் வயிரம், the inner core of the tree (Acacia sundra).

கருங்காலி விதை, கருங்காலி மரத்தின் விதை. இது மெல்லிய தாயும், தட்டை யாயும் நுனி யில் கூர்மையாயும் இருக்கும், the seed of the tree—Acacia catechu. It is soft, flat and sharp at the end.

கருங் கால், காலிற் கருப்புக் காணும் ஓர் மாட்டு நோய், a cattle disease marked by its causing a black leg — Symptomatic, anthrax ; 2. மேகம், கரப்பான், குட்டம் இவைகளினால் உண்டாகும் கருப்பு நிறக் கால், leg rendered black due to affections from syphilis or venereal causes, scurf leprosy etc.

கருங் கால் நாரை, கருப்புக் கால்க ளுடைய ஓர் வகை நாரை, a kind of crane with black legs.

கருங் காவகம், see கடுக்காய்ப் பூ.

கருங் காவி, }
கருங் காவிகம், } கருங் குவளை, blue Indian water-lily ; blue lotus — Monochora

vaginalis alias Pontederia vaginalis; 2. அவுரி மருக் கட்டி, indigo cake of commerce.

கருங் காளான், நீலக் காளான். இது நாகத்தைக் கட்டும், blue mushreom said to consolidate zinc.

கருங்காற் சம்பான், கருப்புக் கால்களை யுடைய குதிரை, a species of horse having black legs.

கருங்காற் றலையன், ஓர் வகை பெருச்சாளி, a kind of rat.

கருங் கிரந்தி, கருஞ் செவ்வாப்பு. இது குழந்தை பிறந்த மூன்று மாதத்திற்குள் உடம்பு முழுவதும் அல்லது உள்ளங்கை, உள்ளங் கால், முழங் கை, முழங் கால், உதடு, முதுகு முதலிய இடங்களில் கறுத்துக் குரல் கம்மி, உடல் வெதும்பி, முலை யுண்ணாது, சீறி சீறி யழுது, மேல் மூர்ச்சையும் இருமலுங் கண்டு, மலர விழிக்கும்படிச் செய்து, தன் புறத்து மோர் நோய். சாதாரண மாகத் தாயின் வயிற்றில் கருத்தரித்த பின், புருடன் பல நோய் கொண்ட பெண்களுடன் புணர்ந்த பின்பு தனது பெண்சாதி யுடன் சம்போகித்த லாலும், மனக் கவலை, உணவின் பேதம், மித மிஞ்சிப் புருடனுடன் சம்போகித்தல் முதலியவை களாலும், தாயின் இரசாதி தாதுக்களுக்கு வெப் புண்டாகி, இரத்த தாது பேதப் பட்டுப் பிண்டத்தைத் தொடர்ந்து, குழந்தை பிறந்த உடனே இந் நோயை உண்டாக்கும், Cyanosis. It is a disease attacking children within three months after their birth and is marked by the following symptoms — puffed bluish appearance of the whole body or patches in several parts such as the palm, the sole, the elbow, the knee, the lip or the back with hoarseness of the throat, inflammation of the part affected, disgust at sucking, harsh cry, hard breathing, broad look and other symptoms of constitutional disturbance. It is a kind of congenital disease arising from the maturity of bad humors, due to the morbid condition of blood as a result of the over-heated condition of the system of the mother. Several are the causes ascribed to this condition viz :—

(i) the indiscriminate intercourse of the husband with several women suffering from venereal complaints and his subsequent intercourse with his wife after her conception.

(ii) the over indulgence on the part of the wife in sexual acts or her diatetic errors or mental anxiety etc.

2. உடம்பு முழுவதும், எரிச்சலும், நமைச்சலுங் கண்டு, சிகப்பாய்த் தடித்து அதனின்று முலைபோல் தோன்றி, நீர் கட்டி, வெடித்துப் புண்ணாகி, நிலம் போல் கருத்து அசறுண்டாகி உதிரும் ஓர் சரும நோய், an inflammatory skin disease with local itching and burning. It is followed by raised patches of a deep red colour, vesiculation, infiltration, watery discharge and the development of scales and crusts.

கருங் கிலியம், see கருங் குங்கிலியம்.

கருங் கிளி, கருப்புக் கிளி, black parrot — Palacornis columboides alias P. melanorhynchus. It is so called from its having a black coloured band round its neck.

கருங் குங்கிலியம், ஓர் பள பளப்பான கருப்புப் பிசின். இது மேற்கே கடற் கரை யோரக் காடு முள்ள காடுகளில் உற்பத்தி யாகும் ஓர் பெரிய மரத்தி னின்று எடுக்கப் படும். இம் மரத்தி னின்று சிகப்பா யிருக்கும். இம் மரத்தின் பிசின், அடி மரத்தைக் கீறி அதிலிருந்து எடுக்கப் படும் உறைந்த பால். இது மரத்தில் இருக்கும் போது, பார்வைக்குக் கருப்பாயும், அம்பரைப் போலும், பிரித்தெடுக்கும் போது, மஞ்சள் நிறமாயு மிருக்கும். கருப்பூரத் தைலத்திலிடக் கரையும். வெள்ளைக் குங்குலியத்தை விட அதிகமாகப் புகையும், black dammer — Canarium strictum (resin of). It is so called from its shining black resin. The tree is large and is abundantly grown in all forests of the West coast; brilliant crimson foliage. Resins obtained from incisions in the trunk; transparent and of a deep brownish yellow or amber colour. When adhering to the tree it has a black shining appearance. It is soluble in oil of turpentine. It burns with more smoke than the white dammer.

கருங் குட்டம், முழங் கால், மூக்கு, இமை, இவ்விடங்களில் ஸ்பரிசமற்றுக் கருப்பாய்ப் படர்ந்து, உடம்பு முழுவதும் தீப் போற் காந்தியும் நமைச்சலு முண்டாகிச் சாம்பற் றூள் போல் உதிரச் செய்யும் ஓர் வகைக் குட்ட நோய், black leprosy numbness charac-

terised by dark scaly patches of skin affection on the extensor surfaces of the body such as the knee, the nose the eye-lid etc., with a sense of glow all over the body, intense itching, branny scales etc.,

கருங் குண்டகம், கருப்புப் பாசி. இது பாறை களில் முளைக்கும், stone lichen — Lichen growing upon rocks.

கருங் குண்டு, காசுக் கட்டி, areca.nut—Areca Lichen catechu.

கருங் குண்டு மணி, see கருங் குன்றி.

கருங் குண்டு மிளகாய், மைக் குண்டு மிளகாய், a kind of black chilly.

கருங் குந்தம், ஓர் வகைக் கண் ணோய், a disease of the eye.

கருங் குந்திரிக்கம், கருங் குங்கிலியம், black dammer—Canarium strictum.

கருங் குமிரி, காகோளி, wild peepul — Ficus arnottiana.

கருங் குமிழ், கருங் குமிழம் பூ மரம், black Kandahar tree, bearing blue or black flowers—Gmelina rheedii.

கருங் குமுதம், கரு விழியில் கருங் குவளைப் பூ வைப் போல் சிவந்த சதையை வளர்ப்பித்து, அதில் தீ யினால் சுட்ட புண்போல் எரிச்ச லையும், குத்தலையும் உண்டாக்கும் ஓர் கண் ணோய், the formation of a bleb resembling the black koomla flower on the cornea. It is marked by pricking and burning sensation—A kind of keratitis.

கருங் குயில், ஆண் குயில். இது பச்சை கலந்த கருப்பு நிறம் வாய்ந்த பறவை. சுமார் 16 அங்குல நீளம், மூக்கு வெளிர்ப் பச்சை, கால் கள் நீலம், வாய் சிகப்பு, சாப்பிட ருசியா யிருக்கும், black koel; Indian cuckoo—Cuculus maculatus. The male is of glossy greenish-black throughout; 16 inches in length, bill pale-greenish, inside the mouth reddish; legs blue and excellent to eat.

கருங் குரங்கு, கருப்பு மந்தி. இது மேற்கு மலைத் தொடர்ச்சியி லுள்ள கொச்சி, திருவனந்த புரம் முதலிய இடங்களில் விசேஷம். மனித சஞ்சார மில்லாத உயர்ந்த அடர்ந்த காடு களில் உலாவும். இது மிக்கக் கொடியது, பார்வைக்கு சிங்கக் குரங்கைபோ லிருக்கும், வால்நுனியில் திரட்சியாக மயிர் இருக்கும். black monkey or lion monkey—Macacus silenus alias Inuus silenus alias Semnopithecus johni. It is a native of the more elevated forests of tall and thickly grown trees most abundant in Cochin and Travansore. It frequents the most dense and unfrequented parts of the forests at a considerable elevation. In its nature, it is savage. It almost resembles the lion-monkey with a tuft of hair at the tip of the tail.

கருங் குரா, காட்டுக் கருணைக் கிழங்கு, wild yam root; itching root—Dracontium polyphyllum.

கருங் குருந்து கருப்புக் கல், see கருங் குருக்கை.

கருங் குருவி, கரிக் குருவி; வாற் குருவி, இதைப் பிடித்து வளர்ப்ப துண்டு. இது கீச்சுக் கீச்சு என்று கத்தும்; நாய், பூனை, ஆடு, கோழி முதலிய வைகளைப் போலும் கத்தும், கூச்ச லிடும், மாமிசம் புசிக்கும். மாந்திரீகத்திற்கு உதவும். Common drango — Dicrurus macrocercus. It is with a long tail and a peculiar cry ending in a metallic creaking; often caught and tamed; will imitate all sorts of sounds, such as that of dogs, cats, sheep, poultry and the notes of many birds and will eat meat. It is useful in Magic on account of its peculiar virtues.

கருங் குருவி மை, மாந்திரீக நூலின்படி, கருப் புக் குருவியைக் கொண்டு தயாரிக்கும் சால மை, a magic paint prepared from black bird (குருவி) according to the process laid down in Tamil Magic.

கருங் குரோசிகம், குரோசாணி ஓமம், Khorassa ajwaun—Hyoscyamus niger.

கருங் குவளை, நீலோற்பலம், இச் செடியின் இலை இரண்டு முதல் நான்கு அங்குல நீளம்; காம்புகள் 6-12 அங்குல நீளம், பூக்கள் நீலம் அழகு வாய்ந்தது; 6 இதழ் கள்; அவைகளுள் 3 உட் புறம், 3 வெளிப் புறம், குளத்தின் ஓரங்களில் விளையும். இதன் வேர், வயிறு, ஈரல், முதலியவை களின் நோய்களுக்கு உபயோகப் படும். தூள் செய்து சர்க்கரையிற் கலந்து காசத் திற்குக் கொடுக்கலாம். இலைகளை வதக்கிப் பாலிற் கலந்து வாந்தி பேதிக்குக் கொடுப்ப துண்டு. வேரைப் பல் வலிக்கு மெல்லுவ துண்டு. இதன் கிழங்கு, உணவுக் குதவும், black water-lily; blue lotus or blue nelumbo; —Monochoria vaginalis alias Ponteb deria vaginalis. Leaves 2-4 inches long; petioles 6-12 inches long; flowers blue

and pretty; petals six; three exterior and three interior; aquatic herb found on margins of tanks. Root is used in diseases of the liver and the stomach; pulverised and mixed with sugar, it is administered in asthma; leaves bruised and mixed with milk is administered in cholera; root chewed for relief in toothache; young shoots are edible.

கருங் குழல், see கருங் குருவி.

கருங் குழிக் கரும்பு, காட்டுக் கரும்பு, wild sugar cane — Saccharum spontaneum. C.f. நாணற் கரும்பு.

கருங் குளவி, மிகப் முன்ன கருப்புக் குளவி, a large black species of stinging wasp—Hornet.

கருங் குறிஞ்சா, } கருங் குறிஞ்சி, } கருப்புக் குறிஞ்சா, black coorinjah—Cynanchum ipecacuanha.

கருங் குறிஞ்சிகா, மிளகு தக்காளி, mad apple —Solanum melongena.

கருங் குறுக்கை, கல்வம் செய்வதற்காக உபயோகிக்கும் கருப்புக் குருவிந்தக் கல், black flint out of which is prepared a hard (mortar) grindstone for purposes of grinding medicine.

கருங் குறுவை, இது ஓர்வகைக் கருப்புக் குறுவை நெல். அறுபது நாளில் அறுக்கக் கூடிய கருப்பு நெல் லாதலால் இப்பெயர். இது பத்தியத்திற் குதவும். சித்தர்கள், யோகிகள் முதலியோர் இதை உணவாகக் கொள்வார்கள், a kind of black paddy that could be sown and reaped in 60 days. It is prescribed by Vaidyans in diet. This rice is highly recommended to persons who sit at Yoga practice and so it is used by Siddhars and Yogis with great advantage. Great virtues are attributed to it.

NOTE.—This should not be confounded with அறுபதாங் குறுவை, a different variety which is also reaped in 60 days.

கருங் குறுவை யரிசி, கருங் குறுவை நெல்லினின்று பிரித்தெடுத்த அரிசி. இது கெப்பு நிறமாகவும், காசரிசியைப் போலவும் இருக்கும். இது வாயு, இசிப்பு வலி, முதலிய நோய்களைப் போக்கி, உடம்புக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். இது பத்தியத்திற்கு உதவும். ஆகவே யோகிகள் இதைச் சமைத்து உணவாகக் கொள்வதனால், வாயு பித்த சிலேட்டும குணங்களைச் சம நிலையில் நிறுத்தி வதாகக் கொள்ளப்படும். இதன் குணம் மிக்கச் சிறப்பாகக் கூறப் படும். இதனின்று தயாரித்த ஆறு மாதக் காடியைத் தான் பழச்சாறு என்று பரிபாஷையாகக் கூறுவது. இக் காடி தமிழ் மருந்து தயாரிப்பில் மிகு தியாக உபயோகப் படும், rice hulled from black paddy. It has medicinal virtues and is said to be a useful diet in rheumatism and lumbago and it restores the healthy functions of the body and gradually induces a salutary change in the habit and constitution and so Yogees use it in their diet. Vinegar is prepared from it by allowing it to ferment for a period of 6 months and it is highty useful in Tamil medicinal preparations.

கருங் குன்றி, கருப்புக் குண்டு மணி, a black bead of the plant of Rhynchosia genus; 2. கருப்புக் குன்றி மணி, crab's-eye plant —Abrus precatorius melanospermus.

கருங் கெண்டை, கருப்புக் கெண்டை மீன். இது ஓர் வகை ஆற்று மீன், 5. அங்குல நீளம், வெள்ளியைப்போல் பளப்பா யிருக்கும். இது உணவிற்குதவாது. இதனின்று எண்ணெய் எடுப்பதுண்டு, black bitter carp (fish); barbus chola—Barbus liacanthus. Found in rivers (fresh water). 5 inches in length and silvery in colour. Unfit for food being bitter; oil is obtained from it during its breeding season.

கருங் கேசம், வெண் கலம், bell-metal; 2. கருப்பு மயிர், black hair.

கருங்கை, கருப்புக் கை அதாவது மேகங் கொண்ட கை, hand or arm rendered black from venereal causes.

கருங் கையான், கருப்புக் கரிசலாங் கண்ணி, eclipse plant — Eclipta prostata. It is so called from its dark juice.

கருங் கொக்கு, கருப்பு மூக் குடைய கொக்கு, a black paddy-bird; a stork with a black bill—Herodias garzetta.

கருங் கொடி, தண்ணீர்க் கொடி, a kind of running plant yielding berries; 2. குறிஞ்சா, common delight of the wood — Hiptage madablota; 3. வெற்றிலைக் கொடி, betel vine.

கருங் கொடிக் கத்திரி, கொடிக் கால் கத்திரி, a kind of brinjal cultivated in the betel-vine gardens.

கருங் கொடி வேலி, see கருங் கொடி வேலி.

கருங் கொடி வேலி, கருப்புச் சித்திர மூலம், black-flowered leadwort — Plumbago (black variety) not identified. See கருப் புச் சித்திர மூலம்.

NOTE.—It is a rare plant (unidentified) said to consolidate mercury and to possess extraordinary virtues. It should not be confounded with நீலக் கொடி வேலி, blue flowered leadwort—Plumbago capensis, which is quite a different variety.

கருங் கொட்டி, கருநெய்தல், a black variety of an aquatic plant known as Indian water-lily—Nymphaea lotus; 2. கருப் புக் கொட்டிக் கிழங்கு, the root of an aquatic plant (black variety) — Aponogeton monostachyon.

கருங் கொட்டை, see கருக்கு வாய்ச்சி.

கருங் கொல், இரும்பு, iron.

கருங் கொள், கருப்புக் கொள், இதற்குச் சடச்சி யங்கம், வானக் குலாவி, காட்டுக் கொள், என்ற பல பெயர்களுண்டு, black gram—Rynchosia genus. See கருங் கானம்.

கருங் கொள்ளிக் கரப்பன், கருப்பு கொள்ளிக் கரப்பன், a kind of strophulus in children attended with dark spots. It terminates in a dark itchy scab.

கருங் கொள்ளு, கருப்புக் கொள்ளு, black gram, see கருங் கொள்.

கருங் கொன்றை, கருப்புக் கொன்றை மரம், Sumatra senna; Siamese tree senna —Cassia siamea alias C. sumutrana; 2. சரிக்கொன்றை, horse cassia—Cassia marginata.

கருங் கொன்னை, see கருங் கொன்றை.

கருங் கோங்கு, கருப்புக் கோங்கு, Tinnevelly black dammer or Black kongu tree—Balanocarpus alias B. utilis alias B. erosa; 2. செம்மேரக் கோங்கு, dipterocarp dammer—Hopea racophloea.

கருங் கோலம், இரும்பு, iron, see கருங் கொல்.

கருங் கோலிகம், see கா கோலி.

கருங் கோவை, கருப்புக் கோவை, black bitter melon—Coccinia indica (black variety). It is opposed to சிகப்புக் கோவை, a red variety of bitter melon. It is a common variety known as Indian caper — Bryonia grandis; 2. காக் கோவை, black caper—Bryonia amplexicaulis.

கருங் கோழி, கருப்புத் தோலுடைய கோழி, a fowl with a black skin. Its flesh is considered wholesome medicinally.

கருங் கோழி கற்பம், கருங் கோழியினின்று தயா ரிக்கும் ஓர் வகைக் கற்ப உணவு. இக் கோழியின் மயிர், குடல், கால், மூக்கு, இவை களை நீக்கிக் கொடி வேலி வேரும், ஓமம் உமக் கும், சேர்த்து அரைத்து அதற்குள் பொ திந்து, பாண்டத்தில் வேடு கட்டி அவித்து, வெந்த பின்பு வேறு உணவு கொள்ளாமல், இந்த உண்ண உடம்பிலுள்ள நோயெல்லாம் போம். உடம்பு கற்ப தேக மாகும். மூல வகை நோய்கள் எல்லாம் போம், a medical preparation of black fowl serving as a cordial. The process is as follows:—The fowl before being roasted, should be well-cleaned by getting rid of the objectionable portions of it such as hairs, intestines, legs, beak etc. and then the paste prepared by grinding leadwort root and an ollock of omum (sison) is inserted inside the fowl which is then baked in steam arranged for the purpose. This confection when taken in instead of food is said to cure all ailments including different kinds of hemorrhoids in the body thus promoting longevity.

NOTE.—The black fowl referred to here is not to be judged by the colour of its plumage, but by that of its skin which is black. So a white fowl with white plumage may also have a black skin.

கருங் கோழி கன்னி முட்டை, கருங் கோழி, முதல் தடவை இடும் முட்டை. இது உடம் பிற்குப் பலத்தைக் கொடுக்கும், the first set of eggs laid by the black fowl. It is said to impart strength and health to the consumers; 2. மூன்று மாதம் சென்ற தலைப் பிண்டம், the first foetus three months old in the womb of a woman; the foetus developed for three months in the womb of a woman for the first time.

கருங் கோழி முட்டை, கருங்கோழி இடும் முட் டை. இது உடம்பிற்கு மிக்க வலிமைத் தரும், egg of the black fowl which is said to give strength to the body.

கருங் கோளி, see கோளிக் குரும்பாசன்.

கருச சிருகம், குழந்தைகளுக்கு மூச்சுவிட முடி யாது, தொண்டையில் சிலேட்டுமம் கட்டி இழுத்தல். இதனால் குரல் வளைக்குத்

நாபிதம் கண்டு, உடம்பு கருத்துக் காணும், a spasmodic croup in children marked by sudden laryngeal spasm, with a crowing inspiration and the development of cyanosis (blueness of the skin), due to laryngeal inflammation—Laryngismus stridulus.

கரு சக்கினம், வலிப்பு அல்லது இழுப்பைத் தடுக்கு மருந்து, any medicine curing convulsion; 2. வலிப்பைப் போக்கு மருந்து, an agent that relieves spasm—Antispasmodic.

கருசம், வலி, இழுப்பு, spasm.

கருச் சங்கு, கருப்புச் சங்கு, black conch; 2. கருப்புச் சங்கஞ் செடி, a black variety of four-spined monetia — Azima tetracantha.

கருச் சாரம், சவ் வீரம், corrosive sublimate —Mercuric chloride.

கருச் சிதைத்தல், பருவம் அல்லது காலத்திற்கு முந்திப் பிரசவித்தல், to give birth to a fetus before it is viable—Miscarry; 2. பிண்டத்தை அழித்தல், to abort.

கருச் சிதைவு, கரு வழிதல், premature expulsion of the fetus - Abortion.

கருச் சீலை, கரு மருந்து தடவிய சீலை, piece of cloth smeared with magic paint; 2. மாதவிடாய்ச் சீலை, menstrual cloth.

கருச் சீவல், கடற் பாசி, which see

கரு ஞானம், பாம் பாட்டிச் சித்த ரியற்றிய வோர் ஞான நூல், a treatise on Philosophy compiled by Pambatti Siddhar.

கருஞ் சங்கங் குப்பி, see கருப்புச் சங்கங் குப்பி.

கருஞ் சடைச்சி, கருப்புச் சடைச்சி, a black variety of Indian snake root — Ophiorrhiza mungos; 2. கருப்பு செட்டிச் செடி, black solah—Cassia pumila.

NOTE.—சடைச்சி should not be confounded with சடச்சி, matted hair plant—Grewia tiliaefolia, which is quite a distinct plant.

கருஞ் சத்திரகம், குருக்கு, yellow thistle; yellow gamboge—Argemone mexicana.

கருஞ் சந்தனம், கருப்புச் சந்தனம், black sandal wood probably அகிற் சந்தனம், Agil wood.

கருஞ் சரக்கு, கருப்பு நிறமான சரக்குகள், கருஞ் சீரகம், கருஞ் சூரை, கரு நெல்லி முதலியன, black variety of drugs such as Black cumin, Hedge caper shrub, black gooseberry etc; 2. கருப்பு வகைத் தானியங்கள்—கருஞ் சோளம், கருங் குறுவை நெல், வரகு, எள் முதலியன, black grains such as black maize, black paddy; common black millet, gingelly seed etc; 3. மேன்மையான சரக்குகள், superior kind of drugs.

கருஞ்சனம், முருங்கை மரம், moringa tree—Hyperanthera moringa; 2. சுரை, bottle gourd—Cucurbita lagenaria.

கருஞ் சாட்டியம், கருந் தவரை, apple-fruited ebony—Diospyros bourdilloni.

கருஞ் சாணி, காண்டா மிருகம், rhinoceros.

கருஞ் சாந்து, புனுகு, கஸ்தூரி, அகில் இவைகள் சேர்ந்தக் கருப்புக் கலவைச் சாந்து, a black mixture of prefumes such as civet, musk, agil etc; 2. சேறு, mire as opposed to வெள் சாந்து, a mixture of lime and sand—Mortar.

கருஞ் சாமை, கருப்புச் சாமை, black little millet.

கருஞ் சாய வேர், கருப்புச் சாய வேர், a black variety of chay-root or madder root—Oldenlandia umbellata.

கருஞ் சாரை, கருப்புச் சாரைப் பாம்பு, a black variety of rat.snake or male cobra—Zaoccys mucosus alias Ptyas mucosus (nigra); 2. வழலை, a mystic name for the quintessence used in alchemy: 3. ஓர் பூடு, a plant; black rusty varnish—Holigarna ferruginea alias H. arnottiana.

கருஞ் சாரைக் கொழுப்பு, வழலை நாத முப்பு, a secret name for the essence of a universal solvent.

கருஞ் சாரைப் பிச்சு, கருப்புச் சாரைப் பாம் பின் பித்தப் பை, இது மருந்திற் குபயோகப் படும், the bile duct of black rat-snake used in medicine.

கருஞ் சார், அரைப் பொருத்து, hip-joint.

கருஞ் சாலிகம், எலுமிச்சை, lime — Citrus medica-acida.

கருஞ் சாளி, காண்டா மிருகம், see கருஞ்சாணி.

கருஞ் சாளை, ஓர் வகை இழிந்த கருப்பு மீன், a black inferior kind of fish.

கருஞ் சிட்டை, கருப்புத் தழும்பு, a black scar.

கருஞ் சித்தி காம், குழித் தைலம், medicated oil collected in a pot kept in a pit just below the heating vessel containing the drug—Pot-oil.

கருஞ் சித்திர மூலம், கருப்புச் சித்திர மூலம். இதுவே சித்தர் பட்டை, a black variety of leadwort — Plumbago zeylanica. It is also known as Siddhar's bark.

கருஞ் சிலந்தி, ஓர் வகைப் பூ மரம், golden blossomed pear tree—Ochna wightiana; 2. கருப்புச் சிலந்திப் புண், black ulcer; 3. கருப்பு விப்புருதி, black cancer—Melanotic cancer.

கருஞ்சிலி, குறிஞ்சா, Indian ipecacuanha—Tylophora asthmatica.

கருஞ் சிலை, கருங் கல், black granite stone; 2. கருப்புப் பாறை, black rock.

கருஞ் சிலைக் குளான், கருங் கல்லிற் குள்ளிருப்பது அதாவது கெண்டகச் சிலை. இது ஓர் உப ரசச் சரக்கு, a mineral substance found in the strata of granite stones; a kind of unidentified fossil.

கருஞ் சிலைக் கூழன், கருப்புக் கூழன் கல், a black pebble found on the sea-shore.

கருஞ் சிவதை, காரமும், கசப்பு முள்ள கருப்புச் சிவதைக் கொடி. இதனால் எலி விஷம் போம், the black variety of Indian jalap—Ipomaea turpethum. It is pungent and bitter and cures rat-bite.

கருஞ் சிவதை வேர், கருப்புச் சிவதை வேர், இது விஷத் தன்மையது, black turpeth root poisonous by nature.

கருஞ் சிவப்பான, செம்பட்டை நிறமான, reddish brown in colour (generally applied to hair)—Auburn.

கருஞ் சிவப்பு, கருப்புக் கலந்த செந் நிறம், dark red colour.

கருஞ் சிவரி, கழுதைத் தும்பை, donkey tumbai or Indian borage — Trichodesma indicum.

கருஞ் சிறைப் பறவை, மயில், pea-cock — Pavo cristatus.

கருஞ் சிற்றகத்தி, கருப்புச் சிற்றகத்தி, a black variety of sesbane — Sesbania grandiflora; 2. கருஞ் செம்பை, bastard sensitive plant—Sesbania aegyptiaca.

கருஞ் சீந்தில், பேய்ச் சீந்தில், black moon-creeper—Menispermum cordifolium.

கருஞ் சீபி, கருப்புக் குன்றி மணி, black seed of crab's eye plant—Abrus precatorius.

கருஞ் சீரகம், ஓர் கடைச் சரக்கு. இது சீரகத்தைப் போன்றது. கருப்பு வர்ணம், சிறு கசப்புடன் காரமு முள்ளது, வாசனையா யிருக்கும். இது குடல், இரைப்பை இவைகளில் உண்டாகும் கிருமிகளைக் கொன்று, அசீரணம், குடல் ரோகம், இவைகளைப் போக்கிப் பசியையும், சீரண சக்தியையு முண்டாக்கும். இதைச் சூரணித்து உட்கொள்ள, வயிற் றுப்பிசம், உடம்பின் சூடு, தலை வலி இவைகள் போம். கபத்தை வெளிப் படுத்தும், அன்றியும், இதை அரைத்து, நல்லெண்ணெயில் குழைத்தாவது, பால் கசகசா வுடன் சேர்த் தரைத் தாவது, உடம்பில் பூசிக் குளிக்கக் கரப்பான், சொறி, சிரங்கு முதலிய சரும நோய்கள் குண மாகும். பற்றுப் போட வீக்கம் போம். பார்வை தெளி வடையும். இதைப் பாவனத் திரவமாகத் தயாரித்துப் பேதி மருந்துடன் கலந்து கொடுக்க மேல் நாட்டு வைத்தியர்கள் உபயோகிப்பார்கள். சிறிய அளவில் சூதகத்தை வெளிப்படுத்தும். பெரு வளவில் கருவை யழிக்கும். ஆகவே இதை அறை வீட்டுப் பெண்களுக்குக் கொடுக்கப் பால் சுரப்பது மன்றிப் பிரசவக் குற்றங்களையும் போக்கும். வாந்தியை நிறுத்தும். பொடி செய்து முகர நீர்க் கோர்வையும் சளியும் போம், black cumin—Nigella sativa. It is a drug sold in bazaars. It almost resembles the cumminseed, but it is black in colour, bitter and pungent in taste. It is an aromatic carminative, stomachic and digestive. It is employed as a corrective of purgatives and believed to possess anthelmintic properties and is said to cure indigestion, loss of appetite, bodily heat, head ache, etc. It is an expectorant and Vaidyans prescribe it for skin diseases. Ground with sessamum oil or with milk and poppy seeds and applied externally, it cures itches, eruptions and other skin diseases. It cures swelling when used as an ointment and clears up vision. A tincture prepared from the seeds is used by the Western practitioners as an excellant adjunct to purgative draughts. In small doses, it has a well-marked emmenagogue effect, being useful in dysmenorrhea and in large doses, it causes abortion. It has a decided action not only as a galactagogue but also serves in puerperal diseases; arrests vomiting and when bruised and inhaled relieves cold and catarrh.

NOTE—It is substituted for British fennel seeds.

கருஞ் சீரி, see கருஞ் சீரகம்.

கருஞ் சுக்கான், சுடாத கருப்புச் சுக்கான் கல், இது உபரசச் சரக்குகளி லொன்று. இதற்குப் பல பேருண்டு. அவையாவன:—கருமணற் கல், தவளைச் சுக்கான், மணற் பொருக்குஞ் சுக்கான் முதலியன (போக. நிகண்டு) black limestone (not burned). It is one of the 120 kinds of natural substances. It is known by several names as mentioned above in Tamil medicine; 2. கருப்புச் சுண்ணாம்புக் கல், a black variety of quicklime as opposed to white; black limestone (burned).

கருஞ் சுக்கிரன், விழியைச் சுற்றிலும் உளுந்து போல் துவாரத்தை யுண்டு பண்ணு மோர் கண் ணோய், an eye disease attended with perforations about the size of a black gram around the eyeball.

கருஞ் சுண்டி, கருப்பு இந்திரியக கொடி, black sensitive plant of the Mimosa genus—Mimosa rubicaulis.

கருஞ் சுருட்டை, ஓர் வகைக் கருப்புப் பாம்பு, இது கடித்தால் நாக்கு வெளியில் தள்ளும், black carpet snake or carpet-viper—Echis carinata. Its bite is said to cause the protrusion of the tongue.

கருஞ் சுருமா, கருப்பு சுரு மாக்கல், a black variety of sulphuret of antimony.

கருப்பாசய சேதனக் கிரியை, கருப்பையி னின்று குழந்தையை வெளி யெடுக்க வயிற் றைப் பிளத்தல். சாதாரணமாகக் குழந்தை பிறக்க முடியாமற் போனால் கை புகுவதற் கும், குழந்தை வெளி வருவதற்கும் போது மான வரை வயிறு, கருப்பை இவைகளின் பக்கச் சுவர்களைக் கத்தி கொண் டறுத்துக் குழந்தையை வெளிப் படுத்தல், cutting through the belly and the womb of the mother to extract the *child. It is the* operation by which the fetus is taken out of the uterus when delivery of a living child is otherwise impossible — Caeserean operation.

NOTE.—This operation consists in making an incision through the walls (parietes) of the abdomen and the womb sufficiently large to admit the introduction of the hand and the extraction of the fetus.

கருப்பாசய தாபிதம், கருப்பத்தி லுண்டான வேக்காடு, inflammation of the uterus.

கருப்பாசயப் பெரும் பாடு, கருப் பையி னின்று வெளி வரும் அமிதமான இரத்த வொழுக்கு. இது சிலருக்கு மாத விடாய்க் காலத்திலும் அல்லது எப்பொழுதுமேயும் காணலாம், excessive discharge of blood from the womb — Menorrhagia. This may occur in some always or at the periods of menstruation ; 2. மாத விடாய்களுக் கிடையே காணும் இரத்த வொழுக்கு, bleeding which occurs between the periods of menstruation—Metrorrhagia.

கருப் பாசயப் பை, கருப்பப் பை, the womb.

கருப்பா சயம், கரு விருக்கு மிடம், the seat of the foetus—the womb or the uterus ; 2. பொரித் தேற்றான் மரம், a variety of water clearing-nut tree—Strychnos genus (*unidentified*).

கருப்பா சய ரோகம், கருவிருக்கு மிடத்தி லுண் டாகும் பொதுவான பல நோய்கள், diseases in general of the uterus or the womb.

கருப்பா சய வக்கிரத் தவம், கருப்பப் பை வளைந்து கவிழ்தல், flexion or version of the uterus anteriorly or posteriorly—*Metrocampsis.*

கருப்பா சய வலி, கருப் பைக்கு நேரும் வலி, *pain in the uterus—Metralgia.*

கருப்பா சய விரணம், கருக் குழியி லுண்டாகும் விரண நோய், ulceration of the womb.

கருப் பாணி, பனை மரத்தின் பாளையி னின்று வடிக்கும் பத நீர். இது புளிக்காது இருக் கும்படி குடுவைக்குள் சுண்ணாம்பு தடவிக் கட்டுவார்கள், a sweet juice extracted from the palmyra tree and drawn into a pot lined with chunam to prevent fermentation.

கருப் பாதம், செம் முருங்கை, see கருப்ப பாதம்.

கருப்பா தானம், கருப்பந் தரிப்பதற்காக வேண்டிச் செய்யுங் கிரியைகள், rites performed for conception of a child ; 2, பிள்ளை சுகமாகப் பிறக்க வேண்டிச் செய் யும் சடங்கு, a ceremony for promoting safe delivery.

கருப் பாலை, see கரும் பாலை.

கருப்பி, சில பாஷாணம், a kind of arsenic ; 2. இரும்பு, iron ; 3. கரு நொச்சி, which see ; 4. புற்றான் சோறு, an artificial cellular receptacle like bee-hive, for the habitation of white-ants.

கருப் பிடா வேர், the root of an unknown tree.

கருப் பிடித்தல், கரு வுண்டாதல், conception ; 2. வார்ப்பதற்காக மண்ணால் கருக் கட்டல், the matrix in which anything is to be cast to receive a form—Mould.

கருப் பிணி, சூல் கொண்ட பெண், a conceived woman ; 2. கருப்ப ஸ்திரி, a pregnant woman ; 3. வயிற்றில் ஐந்நூறு சிசுவை யுடையவள், a woman big with child ; 4. (கரு + பிணி) சினை அல்லது கருவில் லேற் பட்ட நோய்கள், diseases of the womb ; 5. கருப்பா சயத்தி லுண்டாகும் நோய்கள், diseases developed in the womb.

கருப் பிணி சூல், கருப் பிணியா யிருக்கும் போதே மறுபடியும் சூல் கொள்ளல் அதாவது ஒரு பிள்ளையை யுண்டா யிருக்கும் போதே மற்றொரு பிள்ளையும் கருவில் தரிப் பது, a second conception of a female who has already a fetus in the womb—Superfetation. See இரட்டைப் பிள்ளைத் தாய்ச்சி.

கருப் பிணிய வேட்சணம், கருப்பை சோகம் சுரக் குறித்த வைத்தியம், the art or practice of a mid-wife—Midwifery; 2. பிரசூத வைத்தியம், the art of assisting women in parturition and treating their diseases in connection therewith — Obstetrics.

கருப் பிண்ட மாற்றம், பிரசவ காலத்தில் கருப் பையில் இருக்கும் குழந்தையை யோனி வழி யாய்க் கையை விட்டு திருப்புதல், the manual turning of the foetus in delivery, by introducing the hand into the womb—Version.

கருப் பிண்டம், கருப்பையில் இள்ள பிண்டம், foetus in the womb; 2. கருத் திரண்ட வுடல், foetus in the womb perfectly formed or well developed.

கருப் பிலவு, முள் இலவு, thorny cotton tree—Bombax malabarica.

கருப் பிலம், விசாரனை யென்னு மோர் மூலிகை, child's amulet tree—Putranjiva roxburghii; 2. கறி வேப்பிலை, curry-leaf —Murraya exotica.

கருப்பு, கருமை, blackness; 2. கரி, charcoal; 3. கருந் தும்பி, crow ebony — Diospyros melanoxylon.

கருப்பு அகரம், ஓர் கடைச் சரக்கு, a drug; 2. see உருத்திர சடைகை.

கருப்பு அகில், see கருப் பகில்.

கருப்பு அம்பர், கருப்பு நிறமான ஓர் வகை அம் பர், a black variety of amber. See அபஷி அம்பர்.

கருப்பு அழிஞ்சில், see கருப் பழிஞ்சில்.

கருப்பு இந்திரியக் கொடி, கருப் பிண்டு, sensitive tree—Mimosa rubicaulis.

கருப் புகா மரம், கருப்பு + உகாமரம், a black variety of உகா which see. See கருப்புக் காய்.

கருப்புக் கச கசா, ஓர் வகைக் கருப்புக் கச கசா, black and bitter poppy seed.

கருப்புக் கசடு, மருந்தின் அடி வண்டல், precipitated medicine; 2. தைலத்தின் மேலாகப் படியும் அழுக்கு, the deposit on the surface of medicinal oils etc.

கருப்புக் கச்சோலம், கருப்பு ஏலத் தோல், the skin of black cardamon.

கருப்புக் கடலாரை, see கட லாரை.

கருப்புக் கடுகு, கருங் கடுகு, black mustard—Brassica nigra.

கருப்புக் கடுகு ரோகணி, கடுகு ரோகணி, black hellibore—Helliborous niger as opposed to white hellibore — Helliborous album.

கருப்புக் கடு கோதயம், see கருப்புக் கடுகு.

கருப்புக் கடுக்காய், கடுக்காயில் ஓர் வகை, a black variety of gallnut—Terminalia chebula; 2. பிஞ்சுக் கடுக்காய், tender gallnut.

கருப்புக் கட்டி, கரும்பின் சாற்றால் உண்டான வெல்லம், jaggery prepared from sugar-cane; 2. பனை வெல்லக் கட்டி அல்லது பனங் கருப் பட்டி, palmyra jaggery; 3. கற் கண்டு, sugar-candy.

கருப்புக் கரிக்காண் உளுந்து, black dholl——Phaseolus mungo.

கருப்புக் கரி சாலை, கருங் கரிசலாங் கண்ணி, black eclipse plant, see கருங் கரிசாலை.

கருப்புக் கரும்பு, கருஞ் சிவப்புக் கரும்பு, a dark red sugar-cane.

கருப்புக் கலியாண முருங்கை, கருப்புக் கொட் டையை யுடைய முருக்க மரம். இதுவே கரி முருக்கு, black coral tree with glossy black seeds — Zanthoxylum rhetsa. See இரைச்ச மரம்.

கருப்புக் களி மண், இரும்புச் சத்துக் கலந்த களி மண், fine dense clay containing manganese and iron.

கருப்புக் காசு கட்டி, கருப்பு நிறமான ஓர் வகைக் காசுக் கட்டி, black catechu—Catechu nigrum.

கருப்புக் காஞ்சொறி, சிறு காஞ் சொறி, black variety of climbing nettle mercury also known as small climbing nettle—Tragia involucrata (cannabina).

கருப்புக் காடை, கருங் காடைப் பறவை, black partridge—Francolinus pictus.

கருப்புக் காய், see உருத்திர சடைகை. See கருப்பு அகரம்.

கருப்புக் காரம், புண் புரை களுக்கு இடும் கடுங் காரம், a caustic applied to wounds in surgery.

கருப்புக் கிட்டி, சோளப் பயிரி லேற்படும் பூச்சி நோய், a destructive pest affecting the maize crop.

கருப்புக் குக்கிலியம், see கருங் குங்கிலியம்.

கருப்புக் குன்றி, கருப்புக் குன்றி மணிக் கொடி, a black dholl creeper — Rhynochosia (genus). See கருங் குன்றி.

கருப்புக் கெளிறு, கருப்புக் கெளிற்று மீன், black macrones—Macrones armatus. It is a fresh water fish. See கெளிறு.

கருப்புக் கையாந் தகரை, see கருங் கரிசாலை.

கருப்புக் கோடா சூரி, a black variety of coromandel gendarussa—Rungia repens.

கருப்பு சித்திர மூலம், see கருங் கொடி வேலி.

கருப்பு செந் தாமரை, கருப்புத் தாமரை, dark red lotus.

கருப்புச் சங்கங் குப்பி, கருப்புப் பூவுள்ள சங்கங் குப்பி மரம், black-flowered glory tree—Cleodendron inerme.

கருப்புச் சடை யொட்டிப் புல், ஒரு வகைச் சடை யொட்டிப் புல், a kind of black hairy grass.

கருப்புச் சிலந்தி, கருஞ் சிலந்தி, black cancer —Melanotic cancer.

கருப்புச் சுவலை, கர்ப்ப சூலை யென்னு மோர் பூடு, இது தில்லை மரத்தை யொத்தது, a plant of the species of Tiger's milk spurge—Sapium insigne (malabarica).

கருப்பு டாமர், கருப்புக் குங்கிலியம், black dammer—Canarium strictum; 2. தண்ணை அல்லது தம்பகம், tumbaga dammer — Shorea tumbaggia. See கருந் தண்ணை.

கருப்புத் தக்காளி, see கருந் தக்காளி.

கருப்புத் திராட்சை, கருப்புத் திராட்சைப் பழம், dark-coloured grapes; 2. கருப்புக் கொடி முந்திரிக் கைப் பழத்தைக் காய வைத்துச் சர்க்கரைப் பாகு அல்லது தேனி லிட்டுப் பதப் படுத்தியது, a black species of grapes dried and seasoned in syrup or honey.

கருப்புத் தேயிலை, ஓர் வகைத் தேயிலை, a black variety of Indian tea—Camellia thea.

கருப்பு நாவல், சம்பு நாவல், black jaumoon; Malabar plum—Jambosa.

கருப்பு நாவி, கரு நாவி, black aconite root—Aconitum ferox.

கருப்பு நீர், அயச் சத்துக் கலந்த கருப்பு நிற மான தண்ணீர், a dark mineral water containing iron.

கருப்பு நெல், see கருங் குருவை நெல்; 2. கருப்பு நிறமான நெல், any black variety of paddy.

கருப்பு நெல் லரிசி, see கருங் குருவை யரிசி; 2. உமி போக்கிய கருப்பு நெல், husked black paddy.

கருப்பு நெற் கஞ்சி, கருங் குருவை அரிசிக் கஞ்சி. விஷக்கடி யுண்டவர்க்கு இதைக் கொடுப்ப துண்டு, conjee prepared from black Kuruvai paddy and given to patients suffering from poisonous bites.

கருப்பு நேதிரக் காய், see டிவிடிவிக் காய்.

கருப்பு நொச்சி, see கரு நொச்சி.

கருப்புப் பசலை, see கரும் பசலை.

கருப்புப் பாணிதம், கரும்பின் சாறு, the juice of sugar-cane.

கருப்புப் பாவட்டை, கரும் பாவட்டை, black variety of Pavetta or Indian pavetta—Pavetta indica.

கருப்புப் பிலாங் கொடி, (கருப்பு+உப்பிலாங் கொடி) கருப்பு இண்டங் கொடி. See கருப்பு இந்திரியக் கொடி.

கருப்புப் பில்லாஞ்சி, பூலாஞ்சி, black honey shrub—Phyllanthus reticulatus.

கருப்புப் புரசு, see கரும் புரசு.

கருப்புப் பூலா, see கரும் பூலா.

கருப்புப் பேயத்தி, ஓர் வகைக் கருப்பு அத்தி. இதனால் ரசம் பற்ப மாகும், a black variety of bitter fig, which is capable of calcining mercury.

கருப்பு மணித் தக்காளி, மணித் தக்காளி, fox-grape—Solanum nigrum; 2. கருந் தக்காளி.

கருப்பு மந்தாரை, கருப்பு மந்தாரைப் பூ, black or purple mountain ebony—Bauhinia purpurea. It is opposed to வெள்ளை மந்தாரை, white mountain ebony—B. acuminata.

கருப்பு மரம், அக்க மரம், black wood—Dalbergia; 2. கருங் காலி மரம், black satin wood—Dalbergia ebenum.

கருப்பு மருதம்,
கருப்பு மருது, } see கரு மருது.

கருப்பு மனோசிலை, கருப்பு வர்ண முள்ள மனோ சிலை, a black variety of arsenic—Arsenicum nigrum.

கருப்பு மாதிரம், கருமத்தை, black dhatura—Dhatura stramonium (nigrum).

கருப்பு மொச்சை, காட்டு மொச்சை, black-seeded bean—Lablab niger alias Dolichos lablab.

கருப் புரம், கருப்பூர மரம், camphor tree — Cinnamomum camphora; 2. ஓர் கருப்பு நெல், a kind of black paddy; 3. நீர், water; 4. பொன், gold.

கருப்பு வசம்பு, கரு நிற வசம்பு, a black variety of sweet flag.

கருப்பு வழிஞ்சில், see அழிஞ்சில்.

கருப்பு வழுதலை, நீலக் கத்திரிக் காய், purple brinjal — Solonum melongena (americana).

கருப்பு வன்னி, கருப்பு வன்னி மரம், black shamee—Prosopis spicigera.

கருப்பு வாகை, see கரு வாகை.

கருப்பு வில், கரும்பு, sugar-cane.

கருப்பு வெற்றிலை, கம்மாறு வெற்றிலை, black betel leaf.

கருப் புனந்தி, see உருந்து.

கருப் புள்ளி, கருவி லுண்டாகும் புள்ளி, embryonic spot; germinal spot; 2. கருப்புப் புள்ளி, black spot.

கருப் புள்ளிக கோல், குழந்தைகளுக்கு வலிப்பு முதலிய நோய்கள் ஏற்படுங் காலத்தில் சூடு போடுவதற்காக உபயோகிக்கும் மூன்று புள்ளிகளை யுடைய சூட்டுக் கோல். இது பஞ்ச லோகத்தைக் கொண்டு கிரகணம் பிடிக்கும் போது செய்யப் படுவது, a branding iron with three knobs, used for cauterising children attacked by fits or other diseases. It is made of five metals and is made during eclipse.

கருப் பூமத்தை, see கருமத்தை.

கருப்பூர சிலாசத்து, see கர்ப்பூர சிலா சத்து.

கருப்பூரச் சிலை, see கர்ப்பூர சிலா சத்து.

கருப்பூரத் துளசி, ஓர் வாசனைத் துளசி, a fragrant basil smelling like camphor; 2. கருந் துளசி, which see.

கருப்பூரத் தைலம், கருப்பூர எண்ணெய். இது கருப்பூர மரத்தி னின்று புடமிட்டு எடுக்கப் படும், oil of camphor—Camphora. It is a volatile oil obtained from the wood of Cinnamonum camphora by sublimation; 2. ஓர் மரத்தின் எண்ணெய். வாசனையைக் கருதி இதற்குப் பொய்யாக இப்பெயர் வழங்கும், oil of turpentine obtained by distillation from the swamp pine tree — Pinus palastris. It is a misnomer from its smell.

கருப்பூர நீர், தண்ணீரை விட்டுக் குலுக்கி வடித்த கர்ப்பூர நீர். இது மற்ற மருந்தோடு அனுபானமாகக் கொள்ளப் படும், camphor water or camphor solution—Aqua camphorae. It is chiefly used as a vehicle for other medicines.

கருப்பூரப் புல், வாசனைப் புல், lemon grass —Andropogon schoenanthus.

கருப்பூர மரம், கருப்பூரம் விளையும் மரம், camphor tree — Cinnamomum camphora. See கர்ப்பூர மரம்.

கருப்பூரம், சூடன், இது முகவாசம் ஐந்தினுள் ஒன்று. இது சீனம், ஜாவா, ஜப்பான் இவ் விடங்களி லிருந்து நமது நாட்டுக்கு இறக்குமதி யாகிறது. இது கருப்பூர மரத்தினின்று எடுக்கப் படும். வெண்மை யாகவும், பள பளப்பாயும், கட்டி கட்டி யாகவும், மிக்க வாசனையும், காரமு முள்ளதாயு மிருக்கும். தண்ணீரில் மிதக்கும். சாதாரணமாகவே வெளியில் ஆவியாய்ப் போகக் கூடியது. இது, பற்றி எரியும் போது மிக்க வாசனையும் புகையு முள்ளதா யிருக்கும். ஆகவே, நமது கோவில்களில் இது கொளுத்த உபயோகப் படுவது மன்னியில் மருந்திலும் உபயோகப் படும். இது உடம்பிற்குச் சூட்டைத் தருவது மன்னியில் வியர்வையையும் பிறப்பிக்கும். வலியை நீக்குந் தன்மையது. மிகுந்த அளவில் விஷத் தன்மை யுடையது. இதைச் சுரம், அழற்சி, காசம், மார்பு வலி, கக்குவான், இருதயத் துடிப்பு, மூத்திர நோய்கள், வாத நோய். அரி புண், சூலைப் பிடிப்பு முதலிய நோய்களில் மிகுதியாக வுபயோகப் படுத்துவதுண்டு. சன்னிபாத சுரம், நெருக்கப் பூட்டிய அம்மை, சூதக வாயு, காக்கை வலி, சித்த கலிதம், கருப்ப நோய் முதலியவைகளிலும் இது உபயோக மாகும். முகருவதனால் தலை வலியும், ஜலிப்பும் போம். வாத நோய், படுக்கைப் புண், சரும நோய், தமைச்சல் முதலியவைகளுக்கும் இது பூச்சு மருந்தாக உபயோகப் படும், camphor— Camphora officinarum. It is one of the five aromatics. It is largely imported into our country (India), from China, Java and Japan. It is obtained from the wood of the camphor tree — Cinnamomum camphora. It occurs in white translucent masses of a crystalline structure, with a powerful penetrating odour and pungent taste, followed by a sensation of cold; floats on water; volatises slowly at ordinary temperature; burns with a bright flame; sub-

limes when heated. It is a diffusible stimulant and a diaphoretic and is also a sedative, anodyne and antispasmodic. In large doses it is a poison. It is used in numerous diseases extensively, mainly in fever, inflammation, puerperal insanity, asthma, angina pectoris, whooping cough, palpitation of the heart, affections of genito-urinary organs, incontinence of urine, rheumatism, gangrene and gout. It is also useful in typhus, small pox, measles, hysteria, epilepsy, spermatorrhoea, uterus pain etc. and when sniffed up the nostrils, it relieves head-ache, and cold in the head. As an external application, it is used in the form of embrocation for rheumatism, sprains and other painful affections for preventing bed sores and for allaying pruritus in skin diseases.

NOTE.—Camphor exists in the form of white crystalline fragments in the wood of *Dyrobalanopa Camphora*, a forest tree of Sumatra, Bornes and Java. It appears to possess no advantage over officinal camphor, whilst its price is far greater. Camphor exists in small quantities in other plants, and has been prepared in Tennasserim Provinces in considerable quantities from the leaves and stems of *Blumea grandis*.

கருப்பூர வல்லி, see கர்ப்பூர வல்லி.

கருப்பூர வழுதலைக் கனி, ஓர் விஷத் தன்மை பொருந்திய பழம், a poisonous fruit.

கருப்பூர வில்வம், வாசனை யுள்ள இலைகளை யுடைய ஓர் வில்வ மரம், a species of Bilva tree with fragrant leaves. See கர்ப்பூர வில்வம்.

கருப்பூர வெற்றிலை, ஓர் வகை வாசனை வெற்றிலை, a sweet smelling betel-leaf.

கருப் பெட்டி, கருப் பை, uterus; womb.

கருப் பெள்ளு, see எள்ளு.

கருப் பேதம், கருப்பையின் அமைப்பில், மனிதர், விலங்கு, பட்சி முதலியவைகளுக்கு இயற்கை யாகவே ஏற்பட்டுள்ள வித்தியாசங்கள், the difference in nature, structure etc. in the formation of the womb in men, animals, birds, etc; 2. கருக் குழியில் ஆண், பெண் என உண்டாகும் இரண்டு வகைப் பேதங்கள், the two kinds of conceptions viz. male and female in the different classifications of men, animals, birds etc; 3. ஒரே கருக் குழியில் உண்டாகும் பல விதா வித்தியாசங்கள், the different changes that take place in the womb from time to time such as the formation of the embryo in the uterus etc.

கருப் பேரண்டம், கருப்பா மணக்கு, a dark variety of castor seed.

கருப் பை, கருப் பாசயம். இது பெண்களின் மூத்திரப் பைக்கும், மல வாயிற்கும் நடுவே யுள்ளது. இதுவே பிண்டத்திற்கு உறைவிடமா யுள்ளது. கரு தரித்த 39 வாரம் வரை பிண்டத்தை சன்னிட்டதே இது வைத்துக் கொண்டிருக்கும். இதற்கு அடி, உடல், கழுத்து, வாய என்ற பல பாகங்க ளுண்டு—நீளம் 3 அங்குலம், அகலம் 2 அங்குலம். இது முக்கோண வடிவமா யிருக்கும். இதைச் சுற்றிலு முள்ள தசைகள் போனித் துவாரத்தில் பிருதுவாயும், வழு வழுப்பாயும் உள்ள இரத்த சரக்களின் தொடர்ச்சியா யுள்ளது, uterus or womb. It is placed between the bladder and the rectum in women and is destined for the accommodation of the foetus, which it usually retains for thirty-nine weeks from the period of conception. The organ is divided into several parts viz:—fundus, corpus, cervix and Os. Length is 3 inches and breadth 2 inches. It is a triangular cavity lined by a continuous smooth and highly vascular membrane covering the vagina.

கருப்பை, கருப் பாசயப் பை, the uterus or the womb; 2. கருப் பை, the external vascular membrane which invests the foetus in the womb — Chorion; 3. கா லெலி, a black species of rat; 4. கரும் பனங்காய்ப் பனை, palmyra tree bearing or yielding a black-coloured fruit; 5. உட் கொண்டது, that which is contained within; 6. எலி, rat in general; 7. முட்டையின் பை, the sac containing the yolk of an egg—Yolk-bag.

கருப்பைக் கசிவு, கருப்பையி லுண்டாகும் சீக் கசிவு, uterine discharge.

கருப்பைக் கல், கருப் பையி லேற்படும் கல் அல்லது இறுகின வஸ்து, uterine stone or calculus—Uterolith.

கருப்பைக் கழுத்து, கருப் பையில் கழுத்தைப் போற் குறுகின பாகம், the slender part or that part of the womb corresponding to the neck—Cervix uteri.

கருப்பைக் கிழிவு, கருப் பாசயத்தி லுண்டாகும் சதை வெடிப்பு, the laceration of the uterus or the womb.

கருப் பைக் கீழ், see கருப்பைப் பாதி.

கருப்பைக் குழல், கருப் பையில் இரு பக்கத்தி லிருந்து கிளம்பி பைக்கு வந்து சேரும் இரண்டு குழாய்கள், the two canals or tubes which arise at each side of the uterus in females and pass towards the ovary—Fallopian tubes.

கருப்பைக் கொப்புளம், கருப் பையி லுண்டாகும் கொப்புளம், boil in the womb.

கருப்பைச் சுருக்கம், பிரசவ காலத்தில் கருப் பாசயத்தி லேற் படும் சுருக்கம், the contraction that takes place in the womb during the time of delivery or child birth; 2. இயற்கை யாகவோ அல்லது பல காரணங்களா லுண்ணிட்டோ கருப் பைக்கு ஏற்படும் சுருக்கம், contracted uterus or womb formed naturally or through other causes.

கருப்பைச் சூலை, கருப் பையில் உண்டாகும் சூலை நோய், acute or colic pain felt in the womb—Uteralgia. *C f.* கருப்ப சூலை.

கருப்பைச் சூல், வேறு இடங்களில் உண்டாகாமல் கருப் பையில் கருத் தரித்தல், uterine gestation or uterine pregnancy in contra-distinction to the one in a place other than the uterus.

கருப்பை தாபிதம், கருப் பையில் ஏற்படும் அழற்சி, inflammation of the womb—Hysteritis; uteritis

கருப்பைத் தளர்ச்சி, see கருப்பை யிறக்கம்.

கருப்பைத் தாங்கி, கருப்பை,வெளி சோக்காமற் படித் தாங்கிக் கொள்வதற்காக யோனிக் குள் ளுபயோகிக்கும் வஸ்து, an appliance which is introduced into the vagina to bear up the womb such as the pessary etc.

கருப்பை நாள தாபிதம், கருப் பையின் இரத்த நாளங்களுக் குண்டாகும் அழற்சி. இதனால் கால் வீக்கம் உண்டாகும், inflammation of the veins of the womb attended with swelling of the legs—Uterine phlebitis.

கருப்பைப் பாதி, கருப்பையின் கீழ்ப் பாகம், the lower portion of the womb.

கருப் பை போக்கு, கருப் பையினின் றுண்டாகும் இரத்தப் பெருக்கு, uterine hemorrhage.

கருப் பைப் புறட்டு, கர்ப்பாசயத்தின் உட்புறம் வெளிப்புற மாகுதல், intr version of the womb—Procidentia uteri.

கருப் பைப் பெயர்வு, see கருப்ப விலகு; 2. கருப்பை தன் னிடத்தை விட்டு நழுகல், change of position or displacement of the uterus.

கருப் பை மாற்றம் கருப்பை இட மாறி நழுவி யிருத்தல், falling down of the womb from its proper position — Prolapsis of the uterus; 2. கருப்பை தன் இடத்தை விட்டு நழுவி யிருப்பதைப் பழைய நிலைக்குக் கொண்டு போய் நிறுத்துதல், to restore the womb to its proper position.

கருப் பை யழற்சி, see கருப்பை தாபிதம்.

கருப் பை யிறக்கம், பிரசவ நோய்க்கு முன் கருப் பையும், வயிறும் தளர்வதனால் இறங்கிக் காணுதல், the subsidence of the womb and the belly before approaching labour.

கருப்பை யொழுக்கு, கருப்பா சயத்தி னின்று வரும் கசிவு, any discharge from the uterus or the womb; uterine discharge; 2 கருப் பைப் போக்கு, which see.

கருப் பை வலி, கருப் பையி லுண்டாகும் வேதனை, uterine pain— Uterismus; 2. பிரசவ வலி, pang of child-birth; labour pain.

கருப் பை வளைவு, பெண்களுக்கு மூன்று அல்லது நான்கு மாதங்களி லுண்டாகும் கருப் பப் பையின் விலக்கம், displacement of the womb occurring in a woman. This may continue for the first 3 or 4 months during her pregnancy — Retroversio uteri.

கருப் பை வாயு, கருப்பா சயத்தைப் பற்றிய ருதுக வாயு முதலியன, disorders of menstruation due to the affection of the womb as hysteria etc. *C.f.* கருப்ப வாயு.

கருப் பை வாய், சிராயு முகம் அதாவது கருப் பாசயத்தின் முகம், entrance into the womb—Os uteri.

கருப் பை விளிம்பு, கருப் பையின் ஓரம், the margin or edge of the Os uteri—Amphideum.

கருப் பொருள், முட்டையி லிருக்கும் வஸ்துக் களாகிய வெள்ளை கரு, மஞ்சட் கரு, substances in the egg such as the albumen (white) and the yolk; 2. கருப்பப் பையி

துள்ளே யிருக்கும் கிலிர முதலிய வஸ்து, the contents of the womb as ovary etc; 3. பரமாணு, the atom; 4. மூலப் பொருள், electron.

கருப் போக்கு, see கரு வுற்பத்தி.

கருப் போடம், see கிருமி ரோகிணி.

கருப் போட்டம், கருப்பப் பையில் பிண்டத்தின் அசைவு, the movements of the child in the womb.

கருப் போற்பத்தி, கரு வுற்பத்தி, the formation of the embryo. See கரு வுற்பத்தி.

கருமகள், காக்கை, crow.

கருமகா, see கரு வேல்.

கரும காண்டம், நோய்களின் பூர்வீக வரலாறு களைப் பற்றியும், அவைகள் கருமத்தா லேற் படும் விதிகளையும் குறிக்கு நூல். இது அகத்தியர் இயற்றியது, a treatise on diseases, their history and origin as attributed to Karma (actions of previous births), written by Agastiya, the father of Tamil medicine.

கரும காமம், பொய்க் காமம், love or passion affected or feigned purposely with some object in view.

கரும காலி, பெரும் பாடு, menorrhagia; 2. இரத்தப் போக்கு, abnormal discharge of blood.

கரு மசம், அரச மரம். இதைச் சுற்றுவதால் பெண்கள் கருப்ப மடைவார்கள் என்ற கொள்கையினால் இதற் கிப் பெயர், peepul tree—Ficus religiosa. It is so called from the belief that women conceive by going round it several times.

கரு மஞ்சரி, நாயுருவி, Indian burr — Achyranthus aspera.

கரு மஞ்சாரிகம், காட்டு வெண்டை, white wild-musk mallow—Hibiscus ficulnens.

கரு மட்டி, மட்டிப் பூச்சி அதாவது ஓர் சிப்பி, a large edible oyster—Ostrea edulis.

கரு மணல், கருப்பு மணல், black sand; 2. இரும்பு மணல். இது உபரசச் சரக்கி லொன்று. இதற்குக் கருந் திரை, சூட்டு மணல், ஒளி மணல், நீலமணல் எனப் பல பேருண்டு, iron ore, which is one of the 120 kinds of natural substances contemplated in Siddhar's medical works. It is known by several names such as black wave, hot sand, bright sand, blue sand, etc; 3. கருப்பு நுண் மணல், fine black sand on the sea-shore.

கருமணல் வாரி, உலோக மணல், iron ore.

கருமணற் கற்கால், கருப்புச் சுக்கான் கல், black lime-stone.

கரு மணி, கருப்பு மணி, black bead; 2. கருப்பு விழி பாகம், the black portion of the eye—Iris; 3. கண் வலை, a coat of the eye resembling a fine net-work over the black of the eye—Retina; 4. கண் மணி, the apple of the eye; 5. நீல மணி, blue stone.

கருமணிக் கெண்டை, ஓர் வகைக் கெண்டை மீன். இது கெம்பு நிறச் செவுள் இரண்டடி நீள முள்ள ஆற்று மீன், carp fish or a reddish river fish of about 2 ft. in length—Labeo contius alias Cyprinus kontius.

கருமத்தம், கருமத்தன், } கருமத்தை, black dhatura or stramonium.

கருமத்தின் தழை, கருமத்தை யிலை, black-dhatura leaf.

கரும நிவர்த்தி, முற் பிறப்பில் செய்த கரு வினை நீக்குவதற்காகச் செய்யும் தொழில், ceremonies effected to get rid of the influence of evil deeds done in the past lives.

கரும நோய், பூர்வ கர்மத்தினு லேற்பட்ட நோய், disease the causes of which are attributed chiefly to the evil actions of previous births; 2. தீராத நோய்கள், incurable or chronic diseases.

கரு மந்தம், see கரு டாக்கம்.

கரும பந்தனம், கரும பாசம், the tie or vinculum connecting the actions of previous births with their fruits in the future birth.

கரும பூதகி, சுடலை யாவாரை, tanners' senna grown in burial grounds.

கரும மூலம், தருப்பைப் புல், sacrificial grass so called from its use in ceremonies.

கருமம், தொழில், action; 2. செயல், deed; 3. பூர்வ கர்மம், action done in a previous birth; 4. ஆன்மாவைப் பற்றிய தொழில், good or evil entailed on the soul; 5. வினைப் பயன், fate as the consequence of the acts; 6. இயற்றும் தொழில், any act of piety such as the one done in marriage, funeral and religious obsequies; 7. கடமைக் குரிய தொழில், moral duty; 8. கிலைத்தைக் கருதி நடத்தும் தொழில்,

business or any avocation in life; 9. கற்பரி பாஷாணம், a kind of native arsenic; 10. சூடு, heat.

கரு மயிடம், எருமை, buffalo.

கரு மயிர், கருப்பு மயிர், black hair; 2. கரடி, bear.

கரு மயிர்த் தொங்கலி, see உரோம விருட்சம்.

கரும யோகம், see கர்ம யோகம்.

கருமா மாத்தி, வெண் காயம், onion—Allium sativum alias Allium cepa.

கரு மாம், see கரு மசம்.

கருமருட் கிழங்கு, கருப்பு மருள் கிழங்கு. இது குழந்தைகளின் இருமல், சயம் முதலிய நோய்களுக் குதவும், a black variety of bow-string hemp; Hyacinth aloe—Sansie-vera roxburghiana alias Aloe hyacinthoides. It is useful in choronic cough and consumption and as an expectorant to children.

கரு மருதம், see கரு மருது.

கரு மருது, கருப்பு மருத மரம். இதற்கு இருள் மருது என்றும் பெயர். மரம் பெரியது, பட்டை ஆழ்ந்த வெடிப் புள்ளது, இலைகள் நேர் நேராகவும், நீளமாகவும், தடித்த காம் புள்ளவை களாயும், காய்கள் வழு வழுப் புள்ளனவாயு மிருக்கும். பூக்கள் சிறியவை, வெண் பச்சை நிற மரம். ஓர் புண்ணிய மரம். இதன் பட்டை சிவப்பு நிறம் வாய்ந் தும், சிறு கருப்புள்ள தாயு மிருக்கும். வெண் மருது என்ற மாறும் ஒன் றுண்டு. அது துவர்ப் புள்ளது. சுரத்தை நீக்கு மருந்து. உள்ளுக்கும் வெளிக்கும் பிரயோ கிக்கலாம். இதன் இலையின் ரசத்தைக் காது வலிக்குப் பிழிவ துண்டு. இதன் பட்டையை எடுத்துச் சாம்பலாக்கிச் சுண் ணாம்பாகத் தாம்பூலத்தில் அருந்தப் படும். இம் மரத்தின் பிசின் நறு மணப் புகைக்கும், பூச்சு மருந்தாகவும் உபயோகப் படும், black marutham or Negroe's olive — Terminalia tomentosa. It is a large tree with bark deeply cracked; leaves nearly opposite; linear-oblong with thick-stalked glands near the base; fruit glabrous (smooth with hairs); flowers small and greenish white in colour. It is a sacred tree and is opposed to வெண் மருது, or white marudu — Terminalia arjuna. The bark is reddish brown with an unpleasant astringent taste. It is an astrigent and a febrifuge and is used both internally and externally; the juice of the leaves is dropped into ears for earache. Ashes burnt and obtained from the bark produce a kind of chunam. It is used with betel-leaves. Plant yields a gum used as an incense and as a cosmetic.

கருமருது, இரும்பிலி, black satinwood—Maba buxifolia. -See விசாரம்.

கரு மருதை, கருங் கொடி, spring creeper—Hiptage madablota.

கருமரு தோன்றி, கருப்பு மருதோன்றி, a black species of fragrant nail dye—Lawsonia alba alias L. spinosa.

கரு மருந்து, கருப்பத்தி லிருக்கும் பிண்டத்தை வெளிப் படுத்து மருந்து, medicine that induces or facilitates the child-birth—Parturifacient; 2, கருவைக் கலைக்கு மருந்துகள், drugs or medicines that cause abortion - Abortifacients; 3. கருவைக் கொண்டு செய்யு மருந்துகள், (in Magic) drugs or medicines prepared from fetus or the product of it as a chief ingredient.

கரும ரோகம், see கரும நோய்.

கரு மலம், குழந்தை பிறந்தவுடன் முதல் முதல் அதன் வயிற்றிலிருந்து வெளிப்படும் கருப்பு மலம் அல்லது காட்டுப் பீ, the first black excrement or fecal discharge of a new born child—Meconium; 2. கருப்பு மலம், black-coloured feces in general; 3. கருப் பையின் அழுக்கு, the discharges from the uterus after child-birth.

கரு மலர்க் குவிதல், கருப்பத்தி லுள்ள விதை மலர்ந்து மறுபடி குவிதல், the expansion and contraction of the ova in the ovary.

கருமலாகி, நாயுருவி, Indian burr—Achyranthus aspera.

கரு மலை, அய மலை, mountain containing iron ore.

கருமலைப் பழம், கருப்பு நிறமான மலை வாழைப் பழம், black fruit of plantain tree growing on the top of hills.

கரும விபாகம், ஓர் தமிழ் வைத்திய நூல், a Tamil medical treatise; 2. ஊழ் வினைப் பயனை அனுபவித்தல், the entire working out of the consequences of Karma.

கரும விபீதம், கடு தாரத்தி, pointed-leaved tick trefoil—Uraria pictas.

கரும வியாதி, முற் பிறப்பிற் செய்த தீ வினையினால், இப் பிறப்பில் வந்தடையும் தீராத நோய்கள். இவைகளை யாதொரு பரிகாரமுமின்றி அனுபவித்துத் தீரவேண்டிய வழி, lingering or chronic incurable diseases occurring in a person according to the past sins and as a result of atrocious deeds committed by him in his previous births. The only remedy for it is suffering without any sort of relief.

கரும வேதனை, கருமத்தால் லேற்பட்ட தீராத கஷ்டம், everlasting trouble experienced by a person as a result of past sins.

கரு மறுத்தல், கரு வுண்டாகாத படித் தடுத்தல், contraception; 2 பிள்ளை யுண்டாகாதிருத்தல், barrenness; sterility.

கரு மனோசிலை, see கருப்பு மனோசிலை.

கருமா, பன்றி, pig; hog; 2. யானை, elephant.

கரு மாடக்காரி, ஓணான், lizard; blood-sucker.

கருமா நிமிளை, கண்களுக்கு மையிடுவதற் குபயோகப் படும் கருப்பு நிமிளை. இதுவே அஞ்சன நிமிளை அல்லது கருமாக் கல், a native sulphide of antimony known as black antimony — Antimonium nigrum (Sb_2S_3). It is used for painting eyebrows and eye-lids.

கரு மாந்தம், கரு வழிவு, abortion; 2. (கரு + மாந்தம் = பிள்ளை மாந்தம்) குழந்தைகளுக் கேற்படும் மாந்த நோய், indigestion in children; 3. குழந்தைகளுக்குக் கருப்பத்திலேயே ஏற்பட்ட மாந்த நோய். இதனால் மலம் புளிப்பு நாற்றம் வீசும், congenital disease in children marked by zymotic diseases.

கருமா மிர்தம், கழுதைத் தும்பை, donkey's tumbai or Indian borage—Trichodesma indicum.

கரு மாலிகை, பே ரீச்சம் பழம், date fruit.

கரு மாறல், கரு வேற் படாமை, barrenness: 2. கருவைத் தடுத்தல், contraception; 3. சூல் கொள்ளும் நிலைமை மாறுதல், a stage at which a woman ceases to conceive; the change of life; 4. மாதவிடாய் நிற்றல், the period when menstruation normally ceases—Menopause.

கரு மாறி, ஓர் மரம், a tree (*unidentified*); 2. பிரசவ வேதனை, pangs of child-birth; 3. கருப்ப வாயு, hysteria; 4. கருவை மாற்றச் செய்யு மருந்து, medicine bringing about changes in conception or in the fetus—Abortive drugs; 5. குழந்தையைப் பிறக்கச் செய்யு மருந்து, medicine that promotes or facilitates the child-birth—Parturifacient; 6. மாத விடாய் நின்ற பெண், a woman having menopause.

கரு மாறிப் பட்டை, பிரசவ வேதனையில் குழந்தை சீக்கிரம் வெளிப் படுவதற்காகக் கஷாயமிட்டுக் கொடுக்க உபயோகப் படும் ஓர் மரப் பட்டை, (முருங்கைப் பட்டை), the bark of a tree (Moringa) prepared as a decoction and given to a woman in labour for promoting child-birth.

கரு மாறிப் பாய்தல், கருப் பையில் குழந்தை தரிப்பதற்குப் பதிலாக மாறி மற்றொரு விடத்தில் உண்டாதல், conception taking place in places other than in the womb such as in the fallopian tubes in cases of tubal pregnancy.

கரு மாற்றம், கருவில் ஏற்படும் வித்தியாசங்கள், the changes that take place in conception or impregnation.

கரு மானம், கரு வித்தை, (*in Magic*) black art; 2. உலோகத்தை மாற்ற மடையச் செய்தல், (*in Alchemy*) transmutation of a metal; 3. சூனிய வித்தை, witchcraft.

கரு மானுபவம், செய்வினைப் போகம் அதாவது முற் பிறப்பிற் செய்த வினைப் பயனை அநுபவித்தல், suffering for the past sins; experiencing the fruits of the actions of the previous birth.

கருமான், கலை மான், stag; 2. பன்றி, hog.

கரு மிளகு தக்காளி, see கருந் தக்காளி.

கரு முகில், see கரு முகிற் பாஷாணம்.

கரு முகில் மேனி, see கருவாளை.

கரு முகில் வண்ணம், கருப்பு மேக நிறம், colour of a dark cloud; 2. தீ முறுகல் பாஷாணம், a prepared arsenic of the colour of a dark cloud, perhaps refers to crude phosphorous.

கரு முகிற் சிலை, காந்தக் கல், loadstone; 2. கருப்புக் காந்தக் கல், black load stone; 3. கருமேக வர்ணக் கல், a stone of the colour of a dark cloud.

கருமுகிற் றண்டுக் கல், காகச் சிலை அதாவது கருப்புக் காந்தக் கல். See கரு முகிற் சிலை.

கரு முகிற் பாஷாணம், 32 வைப்புப் பாஷாணங்களுள் ஒன்று, one of the thirty-two

kinds of prepared arsenic, so called because of its colour.

கரு முகை, இரு வாட்சி, tuscan jasmine—Jasminum sambuc(flore-manora pleno); 2. சாதி மல்லிகை, Malabar jasmine—Jasminum malabaricum; 3. சிறு சண்பகம், Kanangga flower tree — Canangium odoratum; 4. முல்லை smooth jasmine—Jasminum trichotonum.

கரு முசட்டை, கருப்பு முசட்டை இது அஞ்சனம் செய்வதற் குதவும், black-leaved bindweed—Rivea ornata. It is used in preparing collyrium.

கரு முடித்தல், குளிய முதலிய வித்தைக்காக வேண்டிய, அட்ட கருமக் கருவைச் செய்து முடித்தல், (*in Magic*) to prepare the magic paint required for witchcraft etc; 2. இரச வாதத்திற்காகத் தயாரிக்க வேண்டிய மருந்துகளைச் செய்து முடித்தல், (*in Alchemy*) to prepare the quintessence salts or compounds for transmuting metals into gold. *C.f.* குரு முடித்தல்.

கரு முதல், see கரு முரல்; 2. கருவுக்கு ஆதி, the rudiment of pregnancy.

கரு முரசு, கரு நிறமான பல் வீறு. இது உடம்பில் வங்கம் சேருவதனால் அது கந்தகத்தினோடு சேர்ந்து இந் நிற மடையும், bluish colour of the gum due to the existence of lead in the system acted upon by H_2S.

கரு முரல், ஓர் வகை மீன், a kind of fish.

கரு முருகி, கையாந் தகரை, eclipse plant—Eclypta prostata.

கரு முல்லை, காட்டு முல்லை, smooth jasmine —Jasminum ritchiei.

கரு முள்ளி, see கரி முள்ளி.

கரு மூக்கு வாய், ஓர் வகைச் சத்திரக் கருவி. இது தமிழ் ரண வைத்தியத்தில் சொல்லிய 26 கருவிகளு ளொன்று, one of the twenty-six instruments used in Tamil surgery.

கரு மூஞ்சிப் பாறை, இருப் பாறை மீன், grey horse-mackerel—Caranx ire.

கரு மூலி, கருப்பு மூலிகை, any black variety of a plant: 2. மாந்திரீகத்தில் பிண்டக் கருவைக் கொண்டு செய்யு மருந்து, (*in Magic*) a black paint prepared with the fetus as a chief ingredient; 3. அறிஞ்சில், which see; 4. பசியெடுக்கா திருக்க வேண்டிச் சித்தர்கள் உண்ணும் மூலிகை. இது பொதிகை மலையில் உற்பத்தி யாகும், a rare drug grown on the Pothigai hills and taken by Siddhars to keep off hunger.

கரு மேக கற்பக் கால், see முடவாட்டுக் கால்.

கருமேக சலம், கருப்பத்தி லுண்டாகும் பனிக் குடத்து நீர், amniotic fluid of the uterus —Liquor amni; 2. மழைச் சலம். rain water.

கரு மேகம், கை கால் முதலிய பல விடங்களில் மேற் றோல் கரு நிற மடைந்து விகாரமாய்த் தோற்றும் ஓர் மேக நோய், a kind of eczema appearing in the face, limbs and other parts of the body rendering the skin black.

கரு மேகன், துரிசு, blue vitriol — Copper sulphate; 2. கருமேகங் கொண்டோன், one whose skin is turned black from syphilitic causes.

கரு மேதை, எருமை, buffalo.

கரு மேந் திரியம், செயற் கருவிகள் அதாவது கிரியைக் குரிய ஐந்து விதப் புலன்கள். அவை யாவன—உபத்தம், பாணி, பாதம், பாயுரு, வாக்கு அல்லது முறையே பெண் குறி, கை, கால், மல வாயில், வாய். இவை ஐந்து விதத் தொழில்களைச் செய்வதற்குக் கருவிகளாய் நிற்றலின் இப் பெயர் பெற்றன, organs of motor action and they are so called from their five different actions in the body. They are the genital, the hand, the leg, the anus and the mouth.

கரு மேற் கரு, கருப்பத்தின் மேற் கருப்பம், conception after conception of a female.

கரு மேற் கரு கொள்ளல், எற்கனவே ஏற்பட்ட கருப்பத்தில் ஒரு பிண்டந் தரித்திருக்குங் காலை மற்றொரு பிண்டம் வாய்த்தல். ஒரே புணர்ச்சியில் இரண்டு சினைகள் கருக்கொண்ட போதிலும், நாதாசயத்தி னின்று ஒரே காலத்தில் இறங்காமல் ஒன்றன் பின் னொன்றாய்க் கருக் குழியில் இறங்கிப் பிண்டம் உற்பத்தி யாகும், a second conception of a female who has already a fetus in the womb. It is an impregnation consequent on the descent of the ova into the womb from the ovary, not observing the same order of time, one being more slowly evolved than the other, although both were fecundated in the same coitus and during only one oestrum.

NOTE.—It is also supposed to be the existence of two wombs in the same

woman or impregnation taking place, whilst the womb contains a blighted fetus.

கரு மேனி, கருப்பு உடம்பு, black body; 2. பருத்த உடம்பு, corpulent body.

கருமை, கருப்பு, blackness; 2. இருள் நிறம், darkness; 3. கருப்பு மை, black paint; 4. வல்லமை, strength; 5 வெள்ளாடு, goat; 6. நஞ்சு, poison; 7. கொடுமை, cruelty.

கரு மொச்சை, see கருப்பு மொச்சை.

கரு மோலி, காத் தொட்டி, thorny caper. See ஆதொண்டை.

கரும் பசலி, கருப்புப் பசலை, a black bitter variety of Indian spinach See கசப்புப் பசலை.

கரும் பசு, காராம் பசு, cow with black dugs.

கரும் படை, மேகப் படை, ringworm with a dark stain; 2. மேக வியாதி, கிரந்தி, குட்டம் முதலான நோய்களினால், உடம்பின் பல விடங்களில் உண்டாகும் கருப்புத் தழும்புகள், dark patches in several parts of the body, due to syphilis, leprosy or other venereal causes.

கரும் பந்தன், சாரைப் பாம்பு, male cobra.

கரும் பயறு, இது பயறு, a small black variety of pulse.

கரும் பருந்து, கருப்புப் பருந்து. இது செல் வயல்கள் அருகிலும் குளக்க ரையண்டையும் காணப் படும், black kite or spotted eagle —Aquila naevia alias A. melanaetus. Found near paddy fields and tanks.

கரும் பல்லி, கருப்புப் பல்லி, black lizard; 2. கருப்புப் பல்லிப் பூடு. இது சித்த குளிகையும் காய கற்ப மூலிகை, (literally) black lizard plant opposed to செம் பல்லிப் பூடு, a rare plant (*unidentified*) supposed to be used by Siddhars for rejuvenation.

கரும் பவளம், கருப்புப் பவளம், black coral.

கரும் பளிங்குக் கல், மேக வர்ணக் கல். இது பாறையி னின் றெழும்பிப் பட்டை முகக் கல்லாக அமையப் பெற்றது. இது கருப்பாயும் கடினமாயு மிருக்கும், basalt, a volconic rock. It is composed of augite and labra dorite often with olivine in disseminated grains. The term is chiefly applied to the hard, black, crystalline form of dolerite, and especially to that variety of the rock which exhibits prismatic structure.

கரும் பனை, கருப்பு வழலைப் பாம்பு, a poisonous snake of the Lycodon family. It is known as 'king of serpents'.

கரும் பனிச்சை, காம் காய்ந்து நான்காம் நாளில் குருத் தோன்றி, உடம்பெல்லாம் குத்தல் கண்டு, கறுத்து, குருக்கள் உள்ளுக்கு வாங்குவதனால் பேதி, மூர்ச்சை முதலியன கண்டு, உடம்பு விரிந்து இரணமாகி அதில் கிருமிகள் ஏற்பட்டுப் பிரக்கினை யற்று இருக்கும்படிச் செய்யும் ஓர் வகை அம்மை நோய், a kind of variola or small pox occurring or appearing after a four day's fever. It is characterised by small pustules which are developed, ulcerated and subsequently blackened in various parts of the body. It is attended with acute pain, purging, fatigue, unconciousness etc consequent on the absorption of bad matter; a severe form of measles in which the eruptions are rendered black and are followed by effusion of blood—Black measles.

கரும் பனை, இதுவே பனை, palmyra tree—Borassus flabellifer.

கரும் பனைக் கண்ணி, கூந்தற் பனை, talipot tree or fan palm—Caryota urens.

கரும் பனையன், ஓர் வகைக் கருப்புப் பாம்பு, a black variety of Kraite — Bungarus cerulus.

கரும் பாடு, மாதவிடாய்க் காலத்தில் இரத்தம் கருப்பாய் வரும் சூதகம், menstruation attended with dark blood.

கரும் பாண்டம், இரத்தங் கூடிய வுடம்பு, body full of or rich in blood.

கரும் பாம்பு, கருப்பு வழலைப் பாம்பு, a black variety of ground snake. See கரும் பனை.

கரும் பாலை, (கரும் + பாலை) கருப்புப் பாலை, black paulay—Bassia elliptica; 2. பாலை மரம், ape-flower tree — Mimusops roxburghiana; 3. கரும்பின் ஆலை, sugar-cane mill.

கரும் பாவட்டை, see கருப்புப் பாவட்டை.

கரும் பாவை, ஓர் கண் நோய், an eye disease i.e. opacity of the lens—Cataract.

கரும் பாறை, கருப்புக் கல் பாறை, black granite rock; 2. கருப்புப் பளிங்குக் கல், black marble stone; 3. கருப்புச் சுக்கான் கல், black lime-stone.

கரும் பாறை நீர், கருப்புப் பாறையின் வழியாய் ஓடும் நீர் ; கல் நீர், இதனால் மயக்கம், அசீரணம், தாகம், இரத்த சம்பந்தமான வியாதி முதலியன குணப் படும், water flowing on the beds of black granite rocks. It seems to have the peculiar virtue of curing giddiness, indigestion, thirst and blood diseases.

கரும்பி, கரு வண்டு, black beetle.

கரும் பிண்ணாக்கு இலை, கருப்புப் பிண்ணாக்குக் கீரை, a black variety of jews mallows—Carchorus capsularis.

கரும் பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, black oil-cake left after extracting oil from gingelly seeds.

கரும் பித்தம், கருப்புப் பித்தம், black bile or black choler; 2. ஓர் வகைப் பைத்தியம், a kind of dementia or madness; 3. கருத்த நிறமான வாந்தி யுண்டாகிக் கடைக் கண் சிவந்து பிறு பிறுத்துக் காணுமோர் பித்த ரோகம். இது நாவில் ருசி யற்றுப் பசியு மற்று, உடலை வற்றச் செய்து வாந்தியை யுண்டாக்கு மோர் ரோகம், biliousness marked by vomiting of black bile, reddening in the corner of the eyes and heaviness of body with other symptoms such as tastelessness, loss of appetite, emaciation etc.

கரும் பித்த வாந்தி, கரும் பித்தத்தை வெளிப் படுத்தும் வாந்தி, black vomit — Vomito negro.

கரும் பிலாச்சை, கருப்புப் பிலாச்சை மீன். இது ஓர் கருஞ் சிவப்பு நிறமான கடல் மீன், Globe fish—Tetrodon magaritatus. It is a dull red-coloured sea-fish.

கரும் பிள்ளை, காக்கை, crow.

கரும் பிறப்பு, கருமையான நிறத்தோடு பிறத்தல், any person born or thing formed with dark colour; 2. இழிந்த சன்மம், the lowest form of birth and existence; 3. நர சன்மம், beings subject to death—Mortals.

கரும்பு, கரும்புச் செடி. இதை நமது நாட்டில் அறியாதார் ஒருவரும் இல்லை. இது தண்ணீர்ப் பாங்குள்ள இடங்களில் பெரும்பாலும் பயிராகும். ஆகவே, இதைச் சில இடங்களில் மட்டுந் தான் காணலாம். இது 6–12 அடி உயரம், இதில் மஞ்சள், வெள்ளை, சிவப்பு என மூன்று வகை யுண்டு. சில விடங்களில் ஊதா நிறமும் உண்டு. இதனின்று இரசமெடுத்துச் சர்க்கரை காய்ச்சி எடுக்கப்படும். இதன் பாகு தான் வெல்லமாகி யுபயோகப் படும்.

இதன் வேர் எரிச்சலைத் தணித்து மூத்திரத்தைப் பெருக்கும் குணம் வாய்ந்தது. இதன் தண்டைக் கரணைகளாக வெட்டித் தின்ப துண்டு. இதன் சாற்றி னின்று ஏற்படுபவை, கரும்புச் சர்க்கரை, அதாவது சிவப்பு, வெள்ளை அல்லது சீனிச் சருக்கரை, கருப்புக் கட்டி, வெல்லம் எனப் பல வகைப் படும். இவைகளுக்குக் கரும்பின் குணமே யுண்டு.

கரும்பு ரசம் உடம்புக்கு வலிமைக் கொடுக்கும். அத்துடன் சீரகம், ஏலம் இவைகளைத் தூள் செய்து சேர்த்துக் கொடுக்க இருமல், மந்தம், பித்தம் இவைகள் போம். அன்றியும் இரத்தத்தையும், நீர்த் தாரையையும் சுத்தி செய்யும். கரும்பின் சக்கையி லிருந்து காகிதம் செய்யப் படும். கரும்பு அடியிற் கண்ட படிப் பல விதப்படும், sugar-cane—Saccharum officinarum. There is not one in our country who is not aware of this plant. It is found only in moist places and as such could be found only in certain places. Stalk 6–12 ft. high and it consists of three varieties – white, red and yellow and sometimes purple in some places. Juice is expressed from this and sugar is prepared. The considerable portion of the molasses or the treacle derived from it is known as jaggery.

The root of the sugar-cane is considered demulcent and diuretic. The stalk is cut into small pieces and chewed for its juice. The products or preparations from the sugar-cane consist of different kinds viz:—cane sugar *i.e.* course brown sugar, white sugar or *chini*, sugar-candy and jaggery. The properties of these preparations are mostly those of the sugar-cane.

The juice is highly nutritious and mixed with powdered cumin seeds and cardamon, it is a good remedy for cough, dullness of appetite and biliousness. It is also said to purify the blood, and the urinary tract. Paper is manufactured from sugar-cane pith. Sugar-cane consists of different varieties and they are :—

1. செங் கரும்பு, red-coloured sugar-cane.

2. பேய்க் கரும்பு, wild sugar-cane—Saccharum spontaneum.

3. வெள் கரும்பு, white coloured sugar-cane — Saccharum officinarum.

4. இரசதாளிக் கரும்பு, a superior kind of sugar-cane — Saccharum genus.

NOTE.—This plant was originally a native of India and was known here from time immemorial. It was introduced in general use in Europe by the Saracens during the time of the Crusades, but for a long time it was unknown to the Greeks and the Latins.

கரும் புசம், கரு வண்டு, black beetle — Apis violacea.

கரும்புச் சருக்கரை, கரும்பஞ் சாற்றி னின்று காய்ச்சி எடுக்கும் சருக்கரை, மற்றும் பல விதப் பூடுகளி னின்றும் சர்க்கரை யெடுப்ப துண்டு, cane-sugar, extracted from sugar-cane, as distinguished from that taken from several other plants of the vegetable kingdom.

கரும் புடையன், கருப்புப் புடையன் பாம்பு, black wart-snake — Ophidi colubriformesus opposed to செம்புடையன், a red variety.

கரும்புத் தட்டை, கரும்பின் மேற் பாகம், the panicle of sugar-cane plant; 2. கரும்பின் இளந் தண்டு, the tender stalk of sugar-cane.

கரும்புத் திரயம், கரும்புச் சாற்றி னின்று தயாரித்த நாட்டுச் சருக்கரை, coarse brown sugar prepared from the juice of sugar-cane.

கரும்பு ரசம், கரும்பஞ் சாறு, juice of sugar-cane; 2. (கரும்+புரசம்) see கரும் புரசு.

கரும் புரசு, கருப்புப் புரச மரம், black bastard teak; Tisso flower — Butua frondosa; 2. see கரும் பொரசு.

கரும்புர சேஸிதம், காட்டெள்ளு, wild gingelly— Sesamum prostatum.

கரும் புலி, கருப்புப் புலி. இதன் கொழுப்பு மாந்திரீகத்திற் குதவும். இக் கொழுப்பின் வாசனையால் பசு மாடு பால் கறவாது, black tiger—Felis tigris. Its fat is useful in Magic and by smelling it, the cow will not yield milk.

கரும் புல், பனை மரம், palmyra tree.

கரும்பு வெல்லம், கரும்பி னின்று எடுக்கும் வெல்லம், jaggery obtained from sugar-cane. It is opposed to பனை வெல்லம், palmyra jaggery.

கரும் புளித்தல், கனிம் பூறிக் கெடுதல், becoming spoiled when kept in a brass or a copper vessel.

கரும் புளிப்பு, செம்பின் ருசி, the acid taste of verdigris or rust.

கரும் புள், கருப்பு வண்டு, black beetle—Apis violacea; 2. கருப்புப் பறவை, black bird; 3. பெண் வண்டு, female beetle; 4. கரிக் குருவி, which see; 5. காக்கை, crow from its black colour.

கரும்புள் மாருதி, see கரும் பூலா.

கரும் புள்ளி, உடம்பில் கருப்பு நிறமான புள்ளிகளை யுண்டாக்கும் ஓர் மேக நோய், a venereal disease developing black spots all over the body; 2. கரும் புள்ளிகளை யெழுப்பும் இரந்தி நோய், dark spotted syphilis; 3. கரும் புள்ளி வண்டு, a beetle with black dots on its back.

கரும் புள்ளிக் கல், கருப்புப் புள்ளிகளை யுடைய கல், உலோக தாது வுள்ள கல். இதுவே காளகக் கல், a mineral stone with black dots arising on it from the presence in it of metallic remnants.

கரும் புறத்தான், முதுகில் கருப்பு நிற முடைய பிராணி, any animal having a dark back.

கரும் புறம், பனை மரம், palmyra tree; 2. கருமை, blackness.

கரும் புறவு, }
கரும் புறு, } கருப்புப் புறு, turtle-dove — Turtur cambayensis; 2. நீலப் புறு, blue-rock-pigeon—Turturinae.

கரும் பூ, நீலோற் பலம், blue Indian water-lily — Pontederia; 2. கருப்புப் பூவுள்ள ஊமத்தை அதாவது கருமத்தை, black dhatura.

கரும் பூசம், கருப்பு முசுக் கட்டைச் செடி, black mulberry—Morus nigra.

கரும் பூலா, கருப்புப் பூலாஞ்சி அதாவது நீர்ப் பூலா. இது மயிரை வளர்க்கும், black honey shrub—Phyllanthus multiflorus. Used for hair growth.

கரும் பூல், see கரும் பூலா.

கரும் பூ வாக, கருப்புப் பூ வாச, black portia tree. It should not be confounded

with கரும் புரசு, a different variety which see.

கரும் பூனகம், see கரு நெல்லி.

கரும் பூனை, கருப்புப் பூனை. இதன் கண், மலம் முதலியன மாந்திரீகத்தில் உபயோகப் படும், black cat. Its eyes, feces etc. are highly useful in magic.

கரும் பெலாச்சி, see கரும் பிலாச்சை.

கரும் பை, நா யுருவி, Indian burr—Achyranthus aspera.

கரும் பொரசு, கருப்புப் புரச மரம், East Indian satin wood; Zante wood—Chloroxylon swietenia.

கரும் பொன், இரும்பு, iron.

கரும் பொன்னார், கரு வங்கம், black lead.

கரு ரோமன், கோடா ரூரிப் பூடு, Coromandel gendarussa—Rungia repens.

கரு லோக மலை, அயமலை, mountain containing iron ore.

கரு லோகம், இரும்பு, iron; 2. தாரா, copper made black by melting it with spelter or zinc.

கருவகம், (கரு+அகம்) கருத் தரிக்கும் இடம், uterus as the seat of conception.

கரு வக்கணை, வக்கணை, yellow wood ebony—Diospyros chloroxylon.

கருவங்கச் செந்தூரம், காரீயத்தைக் கொண்டு தயாரிக்கும் செந்தூரம். இதனால் முதிர்ந்த நரை மாறும், calcined red oxide prepared from black lead which is said to turn long standing grey hairs into black.

கரு வங்கம், காரீயம், black lead.

கரு வங்கு, கருப்பாக முகத்தில் படரும் வங்கு, black spots on the face foreboding some evil.

கரு வசம்பு, கருப்பு வசம்பு, black sweet flag—Acorus calamus.

கரு வஞ்சி, see எழுத்தாணிப் பச்சிலை.

கரு வடகம், கறி வடகம், condiments prepared, dried and preserved to be used in seasoning curry preparations.

கரு வடம், பூ நீர், efflorescence found in the soil of fuller's earth.

கருவடி நாகம், கரு நாய். இது குணியத்திற் குதவும், black dog useful in sorcery and witchcraft.

கரு வட்டம், கண்ணைச் சுற்றிலும் கருப்பு நிறமாகப் படரும் ஓர் தசை நோய், dark skin round the eye. It is a skin disease.

கரு வண்டிருல், ஓர் வகை இருல் மீன், black prawn—Astacus nigrans.

கரு வண்டு, கருப்பு வண்டு, black beetle. It is used in medicine and magic.

கரு வண்டு நாபி, இவச் சாரம், a prepared salt used in Alchemy, as opposed to சத்தி சாரம், which see.

கரு வதை, கரு வழித்தல், to abort; 2. பிண்டத்தை வதை, causing injury to the fetus in the womb.

கரு வத்தி, (கரு+அத்தி) கருப்பு அத்தி, black fig; 2. (கரு+வத்தி) கருவை யழிக்க வுபயோகிக்கும் காரத் திரி, a strong caustic or corroding lint inserted into the vagina for effecting abortion.

கருவம், சினை, ovary or ovum; 2. கருப்பம், embryo; 3. பிண்டம், fetus. See கரு.

கரு வம்பம், திருகு கள்ளி, twisted spurge—Euphorbia tirucalli.

கரு வயிரக் கல், உறை கல், touchstone.

கரு வலி, மிக்க பலம், great strength.

கரு வழலை, கருப்பு வழலைப் பாம்பு. இது கடித்தால் உடம்பில் வெப்பத் தோடு அதிக வியர்வை, உள்ளங் கை, உள்ளங் கால் களில் சிவப்பு, மாரடைப்பு, முதலிய குணங்களைக் காட்டும், black vazalay, a ground snake—Lycodon jara. It is a poisonous snake, the bite of which is characterised by great warmth, excessive perspiration, inflamed sole and palm, obstruction to the heart's function, etc.

கரு வழிக்கும் கிரந்தி, பெண்களுக்குப் பிள்ளை யுண்டாகாத படிச் செய்யு மோர் வகைக் கிரந்தி நோய், syphilis in women causing sterility.

கரு வழிக்கு ராஜன், இரச கற்பூரம், impure sub-chloride of mercury or sublimate of mercury; 2. வங்க பற்பம், calcined lead; 3. கருவழிக்கு மருந்து, any medicine or agent causing abortion.

கரு வழித்தல், கருப்பக் கரைத்தல், causing abortion or miscarriage.

கரு வழிப்பு, கருப்பக் கரைவு, miscarriage.

கரு வழிவு, கருப்ப வழிவு, an abortion or labour artificially induced.

கரு வளைச் சுக்கான், *கருஞ் சுக்கான்*, black lime stone.

கரு வளைதல், *கர்ப்பத்தைக் கலக்குதல்*, to cause abortion.

கரு வளையல், *கருப்பு வளையல். இது பூ சீனைக் கொண்டு செய்வது. இது மருந்திற்கும், மாந்திரீகத்திற்கும் மிக்க வுபயோகமாகும்*, black bangle made from fuller's earth. It is much used in medicine and magic.

கரு வறிதல், *பகுத் தறியும் பருவ மடைதல்*, to attain the age of discretion; 2. *கருப்பத்தை அறிதல்*, determining pregnancy.

கரு வறிந்தோர், *கரு வேலை செய்யும் மாந்திரீகன்*, a magician skilled in black art.

கரு வறுத்தல், *மூலத்தை அழித்தல்*, to destroy the origin; 2. *கருப் பையை விலக்குதல்*, to remove the uterus or the womb.

கரு வறை *கருப்ப மிருக்கு மிடம்*, the seat of conception; 2. *கருக் குழி*, womb.

கரு வா, *இலவங்க மரம்*, clove tree; 2. *இலவங்கப் பட்டை*, cinnamon bark — Cinnamomum zeylanicum; 3. *கருவா மரம்*, cassia cinnamon— Cinnamomum macrocarpum.

கரு வாகை, *கருப்பு வாகை மரம். இதுவே காட்டுத் துரிஞ்சில் அல்லது சிலை யூஞ்சல் மரம் எனக் கருதப் படும். இது மலையாளம், சோழ நாடு முதலிய விடங்களின் சமுத்திரக் கரைகளில் விசேஷம். இது 30–40 அடி உயரம். இலைகள் குறுகி முட்டை வடிவாயும், அடியில் வெளுப்பாயு மிருக்கும்; பூக்களின் உச்சி சிறியது, விதைகள் தட்டையாயும், ஓரங்களிற் கனத்தும், ஒரு காய்க்குள் 10 விதைகள் அடங்கியு மிருக்கும்; பூக்கள் வெளிர் மஞ்சள், வாசனை யுண்டு. இம் மரம் மிகவும் உறுதி; தேக்கு மரத்திற்குச் சமமாகச் சொல்லலாம். இதன் பிசின் கபில நிறமாயிருக்கும். மரம் எந் நிலத்திலும் வளரக் கூடியது. இதன் பட்டையின் சாற்றுடன் எலுமிச்சம் பழச் சாறும், சுக்குங் கலந்து தேங்காயெண்ணெயிற் கொதிக்க வைத்துக் குஷ்டத்திற்குப் பூசலாம். இது கொப்புளம், கட்டி பிளவை முதலியவைகளுக்கும் உபயோகப் படும்.* Fragrant acacia or Red tamarind tree—Albizzia odoratissium alias Mimosa marginata. *It is common in* Malabar, Coromandel coast and other places. It is a tree 30-40 ft. high, leaves narrow, oval, pale in the underside; panicles terminal; heads of flowers small, legume flat, thin and thick-margined, about ten-seeded; flowers pale yellow, very fragrant. The wood is hard and strong like teak; gives a dark brown gum. Juice of bark mixed with lime juice and powdered dried ginger boiled in cocoanut oil is applied externally in leprosy and ulcers. It is also useful for boils, abscesses, carbuncles, etc.

கருவாக் கூட்டுச் சூரணம், *இலவங்கப் பட்டையுடன் மற்றச் சரக்குகளும் சேர்ந்த பொடி*, a compound powder of cinnamon.

கரு வாசம், *வெள்ளரி*, cucumber.

கரு வாடு, *கருப்பு ஆடு*, black sheep; 2. *காய வைத்துப் பதப் படுத்திய மீன்*, cured and dried fish— Salsa menta.

கருவாட்டு வாலி, *எருத்து வாலன் குருவி. இதன் வால், மீன் வாலைப்போ லிருக்கும், அதி காலையில் பாடும்*, a bird of paradise with a long tail resembling that of a fish. It sings at day-break; 2. *வலியான் குருவி*, king-crow.

கருவா தசகம், *யாளி*, a fabulous animal supposed to attack even the lion.

கருவாதி யுப்பு, *பூரணுதி வுப்பு*, an alchemical salt; 2. *கருப்பத்திற்குக் காரணமான வுப்பு*, salt inducing conception.

கருவா திரைஞ்சம், *கரு நாகம்*, black cobra.

கருவாத்துக் கிழங்கு, *ஓர் வகைக் கிழங்கு. இது தீனிப் பைக்கும், ஈரலுக்கும் பலத்தைக் கொடுக்கும். நீர்க் கட்டுகளை உடைக்கும். கல்லடைப்பை நீக்கும், மார் வலியைப் போக்கும்*, a root (*unknown*) supposed to be a useful remedy for strengthening the stomach and the liver. It also cures stricture of urine, urinary calculus and chest pain.

கருவாத் தைலம், *இலவங்கப் பட்டைத் தைலம். இது இலவங்க பட்டையி னின்று வாலையில் இறக்கியது. புதியது மஞ்சள் நிறம், நாளாகச் சிகப்பா யிருக்கும். வாசனையும், ருசியும், பட்டையைப்போ லிருக்கும். இது பல் வலி, தலை வலி, இவைகளுக் குதவும். இது சுறு சுறுப்பைத் தரும். ஆகவே இதை மருந்தோடு அநுபானமாகக் கடுஞ் சுரத்திற்குக் கொடுப்பதுண்டு*, oil of cinnamon—Oleum cinnamomi. It is obtained by distillation from cinnamon bark; of a yellowish colour when recently prepared, but

gradually becoming red; has the odour and taste of the bark. A good stimulant and carminative used as an adjunct to other medicines in the advanced stages of fever. It relieves tooth-ache and head ache.

NOTE.—Different oils are prepared from cinnamon—(1) Oil from the bark (2) oil from the leaves and (3) oil from the root and these differ in colour. No. 2 is used externally in rheumatic pains, head-ache and tooth-ache. It strengthens the gums and perfumes the breath.

கருவா பிஞ்சம், see எலிப் பயறு.

கருவாப் பட்டை, சன்ன இலவங்கப் பட்டை இது நமது நாட்டில் பல விடங்களிலும் கிடைக்கக் கூடியதா யிருந்தாலும், பெரும் பான்மையாக இலங்கை, மலையாளம், திரு நெல் வேலி, முதலிய கீழ் மகா சமுத்திரக் கரைகளிலும், தீவுகளிலும் அதிகம் கிடைக் கும். இது ஓர் விளைவுப் பொருள். சீனத்தில் அதிகமாய்ப் பயிராகும். இதன் மரம் 20-30 அடி உயரம். பட்டை கனம், சீனம், வாசனை யுடன் நார் நாராகவு மிருக்கும். இதைக் கறி மசாலைகளுடன் சேர்ப்ப துண்டு. இதை மற்றச் சரக்கு களோடு சேர்த்து வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அதி சார பேதி, வாந்தி இவைகளுக்கும் கொடுக்கலாம். இதன் கஷாயம் கருப் பையைச் சுருங்கச் செய்யும். பெரும் பாடு, பிரசவ வலிக் குறைவு, நீடித்த இடுப்பு வலி இவைகளுக்கு முபயோகப் படும். வயிற்று வலி, பல் வலி, நாக்கு வாதம் முதலியவற்றைக் குணப் படுத்தும். இதை கசப்பு மருந்து, பேதி மருந்து, வெகுட்டலை யுண்டாக்கும் துவர்ப்புச் சரக்கு முதலிய வைகளுக்கு அனுபான மாகவும் கொடுப்ப துண்டு. இதில் காட்டுக் கருவாப் பட்டை என்றும், பெரிய லவங்கப் பட்டை யென்றும், சில வகைகள் உண்டு, common cinnamon —Cinnamomum. It is procurable in several parts of our country, but it is very common on the sea-shores of the Indian ocean such as those of Ceylon, Malabar and Travancore. It is abundantly obtained from China and is a commercial product. The plant is 20-30 ft. high. The real bark occurs in small closely rolled quills containing several smaller quills in them, brown in colour with a fragrant odour and warm sweet aromatic taste. It is fibrous in quality. It is used in spices entering into the preparation of curry powder and is also employed with various combinations for use in flatulency, colic, diarrhoea, and vomiting; decoction prepared from it is prescribed for contraction of the womb and as a stimulant for the uterine muscular fibre. It is also given with advantage in menorrhagia, labour pains and in tedious labour due to defective uterine contractions. It acts as a powerful stimulant in cramps of the stomach, tooth-ache and paralysis of the tongue. It is frequently employed as an adjunct to bitter tonics, purgatives and vegetable and mineral astringents. There are different species such as wild cinnamon, great cinnamon etc.

கருவாப் பட்டை கலவைச் சூரணம், இலவங் கப் பட்டையுடன் மற்றக் கடைச் சரக்குகளை யும் சேர்த்துச் செய்யும் சூரணம், a medicinal powder consisting of cinnamon as a chief ingredient in its preparation along with bazaar drugs.

கரு வாப்பு, கருஞ் செவ் வாப்பு. இது பிறந்த வுடன் குழந்தைகளுக் காணு மோர் நோய். இதனால் உடம்பு முழுவதும் கரு நிற மடை வது மல்லாமல், குரல் கம்மல் முதலிய பல கெட்ட குணங்களையுங் காட்டும், a disease attacking chiefly new-born children by which their skin is rendered dark. It is marked by sore-throat and other bad symptoms. It is opposed to செவ் வாப்பு, another variety of the disease in which the skin is rendered red.

கருவாப் பூ, see இலவங்கப் பூ.

கரு வாமணக்கு, கருப்பு ஆமணக்கு, black castor plant as opposed to செவ்வா மணக்கு, a variety with red seeds; 2. பொட்டி லுப்பு, nitre.

கரு வாயம், சாராயம், arrack.

கருவா மரம், இலவங்கப் பட்டை மரம், cinnamon-bark tree.

கருவா முப்பு, வெடி யுப்பு, nitre—Potassium nitrate.

கருவாய்ச் செய்தல், உலோகங்களை உருக்கிச் சாய்க்க வார்ப்புச் செய்தல், moulding for casting melted metals.

கரு வாலி, கருக்கு வா, Ceylon tea — Elaeodendron glaucum; 2. கவுதாரி, partridge.

கருவால் திருக்கை, see கருவாற் திருக்கை.

கருவா லிகம், காரைச் செடி, thorny webera —Canthium parviflorum.

கரு வாழை, கருப்புப் பழங்கள் காய்க்கும் வாழை மரம், plantain tree yielding dark-coloured fruits; 2. காட்டு வாழை, wild plantain — Musa superba; 3. காவல் வாழைப் பழம். இது கருத் தெப்பாய் இருக்கும். இது சித்தருண்ணும் ஓர் வகைக் கற்ப மூலி, மகா மூலிகை 28ல் ஒன்று, dark red plantain used by Siddhars for rejuvenation. It is classified as one of the 28 kinds of drugs restoring lost youth.

கரு வாழைக் கிழங்கு, கரு வாழை மரத்தின் அடி வேர்க் கிழங்கு, the bulbous root of black plantain tree.

கரு வாளி, இரசம், mercury; 2. பண்டிதன், scientist; 3. வித்தைகளிற் தேர்ச்சி படைத்த வன், one skilled in any art such as magic, alchemy etc.

கருவாற் றிருக்கை, ஓர் வகைத் திருக்கை மீன். இதன் மேற் பக்கம் கரும் புள்ளிகள் காய்க் தும், வயிற்றின் அடியில் வெண்மையாயு மிருக் கும்; வால் கருப்பு, விழி மஞ்சட் கலந்த பச்சை; பற்கள் பாசி படர்ந்த நிறம், முதுகு நீல வர்ணம் இது கடலிலும், கழிமுகத்திலு முண்டு. 6 அடி அகலம்; இதை மீனாகவும் கருவாடாகவும் தின்பதுண்டு. இதன் ஈரலி லிருந்து எண்ணெய் எடுப்பதுண்டு, thorn-back trygon—Aetobatis narinari alias A. flagellum. It is a broad flat sea-fish of about 6 ft. in width, but proportions vary greatly with age. Dirty or bluish spots all over; abdominal surface white; tail black; iris golden-green; teeth greenish yellow; back deep leaden in colour; raw or salted fish cooked and eaten. Livers yield oil.

கருவான பூரம், கருப் பூரம், camphor; 2. கட்டிய கருப் பூரம், consolidated camphor.

கருவி, ஆயுதம், instrument; 2. சத்திர சிகிச் சைக் கருவி, surgical instrument; 3. அகப் புறக் கருவிகள், organs or faculties either of the mind or the body; 4. மேகம், cloud.

கருவி கரணம், இந்திரியங்களும், மனம் முத லானவைகளும், organs of senses and the mind; 2. பொறி புலன்கள் வழி, organs of senses and faculties of mind i.e. physical and intellectual faculties.

கருவி கழறுதல், பலம் குறைதல், to lose strength; 2. இந்திரியங்கள் பல வீனத்தி னால் சோர்வடைதல், exhaustion through organic weakness; 3. உடம்பின் கருவிகள் தளருதல், relaxation of the organs of the body.

கரு விருசி, கரு கொச்சி, which see; 2. மலை வாழை, hill plantain—Musa superba.

கரு விடும் வாசல், ஆண் குறி, penis; 2. விந்து விருக்கும் ஸ்தானம், spermatic region; 3. குழந்தை வெளிப் படும் வாயில் அதாவது கருப்பையை விட்டு வெளி வரும் யோனி மார்க்கம், vaginal passage through which the child passes after leaving the uterus.

கரு விடும் வாயில், see கரு விடும் வாசல்.

கரு விந்தி, கருப்பு இண்டஞ் செடி, a black variety of Indu. See இண்டு.

கருவி நாசம், பிராணு யாமம். இதனால் ஐம் புலன்களையும் அடக்கலாம், Pranayama through which the five senses may be conquered; 2. ஐம்புல வடக்கல், mortification of the five senses.

கருவி நீர், மேக நீர், rain water; 2. உடல் நீர், water from the body; 3. மூத்திரக் கருவி நீர், urine; 4. வியர்வை, perspiration; 5. பனிக் குடத்து நீர், amniotic fluid.

கருவி நூல், உடலின் கருவிகளைப் பற்றிக் கூறும் கட்டுரை, a work on bodily organs; 2. உடம்பின் கருவி கரணங் தத்துவங்களைப் பற்றிக் கூறும் நூல், a treatise on the study of physical and intellectual faculties in man.

கருவி யமைப்பு, உடம்பின் பஞ்சேந்திரியங் களின் அமைப்பு, the organic structure of the five senses; 2. தொழிற் கருவி ஐம்புலன் அமைப்பு, the structural principles on which the five senses are to function; 3. அவயவங்களின் அமைப்பு, the structure of the organs of the body; 4. வைத்தியம் அல்லது வாதத் தொழிலில் மருந்து செய்ய வேண்டிப் புடம், வாலை முதலியவைகளுக் குரிய ஆயுதங்களைச் சரிவர அமைத்தல், arranging or setting right instruments appropriately for purposes of effecting calcination, distillation, sublimation etc. of drugs for use in medicine or in alchemy—Apparatus.

கருவி யுப்பு, பூரணுப் புப்பு, (*in Philosophy*) secret salt prepared for controlling the senses and thus enabling one to be absorbed in eternity.

கரு விரிதல், கருப்பை விரிதல், dilatation of the womb; 2. கருப் பைத் தளர்தல், relaxation of the uterus; 3. கரு மலர்தல், expansion of the ovum.

கருவிரு கணம், காட் டெள்ளுச் செடி, wild gingelly plant—Sesamum prostratum.

கருவி லமைப்பு, கருப்பத்தி லேயே இன்னபடி யென்று நியமித்த விதி, that which was destined to be, even while in the womb; 2. கருப் பாசயத்தின் அமைப்பு, the structure of the uterus or the womb; 3. குழந்தைக்குக் கருப்பத்தி லிருக்கும் போதே ஏற்பட்ட அவயவத்தின் அமைப்பு, the structure of the organ even while in the womb—Congenital. *C.f.* கருவு ளமைப்பு.

கரு விலம், கிருமிகளா லுண்டான குரு அல் லது சிறு கொப்புளம், germinal vesicle.

கரு விலி, ஓர் வகைக் கரு வழலைப் பாம்பு, a kind of black vazalay snake. See கரு வழலை; 2. கருப்பம் அல்லது குழந்தை யில்லாத பெண் அதாவது மலடி, barren woman; 3. கருப்பை யற்ற அல்லது நீக்கப் பட்ட பெண், a women deprived of womb or from whom the womb has been removed.

கருவி லுறுப் பற்றல், கருப்பத்தி லிருக்கும் போது, உறுப்புகள் உண்டாதல், formation of organs in the course of development of the fetus in the womb; 2. கரு வில் பிண்டம் வளருதல், development or growth of a child in general while in the womb; 3. (கருவில் + உறுப்பு + அற்றல்) கருப்பத்திலேயே அவயவங்களை இழத்தல், to be deprived of organs even while in the womb—Congenital loss of organs.

கருவில் வாதம், கருப்பத்தில் எழுந்த வாத நோய், nervous disease of a congenital nature.

கரு விழி, கருப்பு விழி, the black of the eye *i.e.* the choroid including the iris; 2. கரு முழி, the black apple of the eye; 3. அண்ட பிண்டக் கரு, (*in Alchemy*) the quintessence or the universal solvent; 4. ஆம், ஓம், (*in Magic*) the potent sound of AM & OM.

கருவிழி காசம், கரு விழியில் ஏற்படும் காச நோய், a disease of the lens of the eye affecting the vision; 2 கரு விழி வாயு, a disease of the eye affecting the optic nerve.

கருவிழி கோசம், கருப்பு விழியைக் கவர்ந் துள்ள சவ்வு, the membrane covering the black of the eye—Cornea.

கருவிழிக் கெண்டை, கருப்பு விழியை யுடைய ஓர் வகைக் கெண்டை மீன், a black-eyed carp fish. See கருமணிக் கெண்டை.

கருவிழித் தோல், கருப்பு விழியின் மேலுள்ள சவ்வு பாகம், the sclerotic coat of the iris; 2. கண்ணின் கரு மணியின் மேற் றோல், the horny transparent membrane in the fore part of the eye, through which the ray of light passes—Cornea.

கரு விளங்கம், கரு வேம்பு, balsam tree — Garrugu pinnata.

கருவிள நீர், தேங்காயின் கருப்பு நிறமுள்ள இள நீர். இதனால் சொறி சிரங்கு போம், a young or tender cocoanut with dark water inside capable of curing sores and itches; 2. கருப் பையி லுள்ள இள நீர் அதாவது பனிச் குடத்து நீர், the amniotic fluid in the womb—Liquor amni.

கரு விள நெல்லி, கீழ்க் காய் நெல்லி, featherfoil—Phyllanthus polyphyllus.

கரு விளம், see கரு விளா; 2. விளா மரம், wood-apple tree; 3. வில்வம், bael tree—Craetava religiosa.

கரு விளா, ஓர் வகை விளா மரம், dark woodapple tree; 2. வில்வம் bael tree. See கரு விளம்.

கரு விளாகிதம், வில்வ மரம், bael tree—Craetava religiosa.

கரு விளாதிகம், கீரைத் தண்டு, common spinach—Amaranthus gangeticus.

கரு விளை, காக்கணங் கொடி, mussel-shell creeper—Clitorea ternatea.

கருவினுடை வண்டம், முட்டை யோடு, egg-shell.

கருவின் போக்கு, கருப் போக்கு அதாவது தாய் வயிற்றில் கரு ஏற்பட்டுத் தோன்றிய காலத்தி லின்று சொற்ப நிலையி லிருந்து மேன் மேலும் விருத்தி யாகிப் பிறகு படிப் படியாக இறக்க மடைந்து கதியை யடையு மார்க்கம், the process of evolution and involution of man from the time or moment of conception in the mother's womb till his death and lastly aiming at the final beatitude or the absorption of the soul in the deity. Of course, this includes the history of man

with regard to condition, state or mode prior to, during and after his mundane existence i. e. death and of the soul in its passing through several stages viz :—

1. பிறந்தது முதல் 30-வயது வரைக்கும் வளரும் பருவம், from the date of conception or birth up to the thirtieth year the body attains its growth and development.

2. முப்பது வயதின் பிறகு உடம்பின் ஒளி போகும், after the thirtieth year, the body begins to lose lustre and brilliancy.

3. நாற்பது வயதில் அழகு போம், in the fortieth year, the body loses beauty and fairness.

4. ஐம்பதில், பிருதிவியில் அப்பு மேவும், அதனால் உடம்பு தளரும், மயிர் வெளுக்கும், at the fiftieth year, the element of water embraces that of earth, with the result of relaxation of muscles etc. of the body and the appearance of grey hairs.

5. அறுபதில் பிருதிவியில் அப்புக் கலக்கும், ஆகவே கண் ஒளி மங்கும், நடை குறையும், in the sixtieth year, the element of water combines with that of earth with the consequence of dimness of vision and slowness in gait.

6. எழுபது வயதில் தேய் வுண்டாம், தாது உலரும், அறிவு குன்றும், in the seventieth year, diminishing or gradual sapping of the bodily strength.

7. எண்பதில் வெய்வு, வெளியிற் பாயும், மூச்சு மேல் நோக்கும், during the eightieth year, generation of heat in the system and hard breathing.

8. தொண்ணூறு வயதில் ஆகாசம்; சீவனோடு ஐம்புலன்களும் வசமாகிப் பொருந்திக் கொள்ளும், இந்திரியம் அற்றுப் போம், during the age of ninety, domination of Akasa (ether). Then the five senses will cling to the soul with the result that man will begin to lose the powers of the senses.

9. நூறு வயதில் மரணம், at the age of hundred, death comes in.

NOTE.—The above is an enumeration calculated to the maximum period (100 yrs.) of man's existence and now that the average period of existence is three score and ten years the proportion should be taken calculated as such against each of the above items.

NOTE 2.—These changes will not apply to Siddhars and Yogees who by their supernatural powers live without the bodily changes mentioned above.

கருவின் மலர், மயி லிறகு, the feather of a pea-cock.

கருவின் வெளி, முடி மாமிசம், the flesh on the top of the head—Scalp.

கருவீ, காக்கை, crow.

கரு வீடு, நஞ்சுக் கொடி, navel or umbilical cord.

கருவீட் டுப்பு, அண்ட வுப்பு, the salt prepared from the human skull.

கரு வீரல்; மண் ணீரல், spleen; 2. ஈரல், liver.

கரு வீரிகம், குல் கந்து, dried rose flowers preserved in syrup.

கரு வீழி, கருப்பு விழுதி. இது 23 மகா மூலிகைகளு ளொன்று, dark vizhudhi — one of the 23 rare drugs of high potency. (*unidentified*).

கருவு காதிதம், கோரைப் புல், koray root; sedge grass—Cyperus.

கரு வுண்டாதல், கருப்பந் தரித்தல், to conceive.

கருவு நாதம், விந்து, semen virile.

கருவு நீர், நாதம், a fluid discharge like semen from the vagina.

கரு வுப்பு, கல் லுப்பு, crystallised sea-salt; 2. கருப் புப்பு, impure common salt; 3. ஞானி யுப்பு, philosopher's salt; 4. பிண்ட வுப்பு, salt extracted from the foetus; 5. திலா லவணம், (எள் ளுப்பு), salt extracted from sesamum seed.

கரு வுமரி, கருப்பு உமரிப் பூடு, greater Indian salt wort—Suaeda monoica.

கரு வுயிர்த்தல், ஈன்றல், to bring forth the young as does a human being or an animal.

கருவு ளமைப்பு, உயிர் வாழ்க்கைக்கும் உடலுக்கும் ஏதுவான ஆறு வித நியமங்கள், the

six orders of things essential to sentient beings after assuming the corporeal existence viz :—

1. பேறு, getting gain or profit.
2. இழிவு, loss.
3. இன்பம், pleasure.
4. பிணி, diseases and sufferings.
5. மூப்பு, old age.
6. சாக்காடு, death.

கருவுள் ளமைப்பு, கருப்பத்தினுள் ஏற்பட்ட அமைப்பு, the structure inside the womb; 2. கருத் தோன்றும் போதே ஏற்பட்ட விஷயம், பேறு, இழிவு, இன்பம், பிணி, மூப்பு, மரணம், முதலியன, the six incidents of birth which a person could not get rid of or avert. See கருவு ளமைப்பு.

கரு வுள்ளி, பே யுள்ளி, a black thorny shrub. See உள்ளி.

கரு வுற்பத்தி, சாதாரணமாகவே பெண்களுக்கு நாதாசயங்களி லிருந்து நாதம் அல்லது சினைகள் வெளிப் பட்டு நாத நாளத்தின் பக்கம் உலாவும். அப்போது நாத நாளக் கிரகுஞ்சம் விரிந்து அவ்விடத்தில் முதிர்ந்து தயாராக விருந்த நாதத்தைக் கௌவி, குழற் மூலமாய்ச் செலுத்திக் கருப்பையை யடையச் செய்யும். இவ்விதமாக கருக் குழியை யடைந்த நாதமானது விந்தக் கிருமியை எதிர் பார்க்கும். அப்பொழுது புணர்ச்சி காலத்தில் புருஷரின் சுக்கிலம் பெண்களின் யோனி வழியாய்ப் புகுந்து கருப் பையின் வாயிலாகக் கருக் குழியை சேருங் காலத்தில், அனேக விந்துக் கிருமிகள் அவ்விடம் உலாவும். ஆகவே, நாதமானது ஒரு கிருமிகளி லொன்றைப் பற்றிக் கருக் கொள்ளும். இக் கருவே திரண்டு, பிண்டத்திற்கு முதற் காரணமாகிப் பிறகு நாளா வட்டத்தில் முதிர்ந்து, கடைசியில் பூரண குழந்தையாகக் கருப்பாசயத்தை விட்டு வெளிப் படும், the fimbriated extremity of the tube expands and embraces the ovum released from the ovary, passes through the tube and reaches the womb where it awaits the arrival of a spermatozoon which is its male counterpart. This spermatozoon which is found in large numbers in the male sperm ejected during coitus, travels by its own lashing movement of its tail along the vagina and the neck of the womb and finally enters the cavity of the womb where the ovum had previously become lodged. The ovum and the spermatozoon now coalesce and form a small mass known as the impregnated ovum or embryo. It is here that the embryo gradually undergoes further development until it reaches the full term when it is born. See கர்ப் போற்பத்தி.

கரு ஊமத்தன், see கரு ஊமத்தை.

கரு ஊமத்தை, கருப்பு ஊமத்தை. இது கிடைப்பது மிகவும் அரிது. சித்தர்கள் தங்கள் நூற்களில் இதன் குணத்தை விரிவாக எழுதியுள்ளார். இதனால் நாகம் செந்தூர மாகும். இம் மூலியை உரலில் இடித்துச் சாறு பிழிந்து அதில் நாகத்தைத் தோய்த்து வாட்ட அது உருகிக் கட்டும், வேதை யாகும். நவ லோகத்தி லிட நீறும், சூதத்தில் ஊட்டிட அது வெண்ணெய் போலாகும். பிறகு அரியில் வைத் தூத மணி போலாம். இதன் வேரை அரைத்து அயத் தகட்டில் பூசி மூன்று புடமிடத் திரக்கச் செம்பாகும், பொன்னு மாகும். இம் மூலியின் சமூலம் வாங்கிச் சூரணித்து சர்க்கரையிற் கலந் துட்கொள்ள காய சித்தி யுண்டாம், black datura — Datura nigrum. This species is very difficult to find and is found only very rarely. Siddhars have written much in their works about their virtues. It is said that zinc is converted into a red oxide by its use. The juice of this plant easily consolidates metals like zinc. It calcines nine metals; treated with mercury, colloid or butter of mercury is derived, and when this is heated in a charcoal fire, consolidated beads of mercury are obtained. The root of this plant is pulverised and coated on iron sheets or foils, which when calcined three times, are reduced to refined copper (*alchemical*) and even gold. The whole plant when bruised and taken mixed with sugar is capable of rejuvenating the system.

கரு ஊமத்தை, நீல ஊமத்தை; ஊதா ஊமத்தை இது 2–3 அடி உயரம், அடித் தண்டு மிருதுவா யிருக்கும், காய்களுக்கு முட்க ளுண்டு. இலைகள் மிக்க வாசனையும், சிறு கசப்பும், வெகுட்டலு முடையன. காய்க் குள் விதை கருப்பா யிருக்கும், விஷத் தன்மையது, வெண் பூக்கள் பெரிதாயும், ஓரங்களில் நீல நிறமா யும், இராக் காலங்களில் வாசனையாயு மிருக்கும். வருஷ முழுவதும் பூக்கும், பாழ் நிலங்களில் விளையும். இதன் எல்லாப் பாகமும்

மருத்திற் குதவும். பச் இலையை வதக்கிக் கட்டி களுக்கு வைத்துக் கட்ட வலி நீங்கும். எண் ணெயி லிட்டுக் காய்ச்சி - சிரங்குகளுக்கும், வாத நோய்க்கும் மேற் பூச்சாகப் பூசலாம். காச நோய்க்கு இதன் காய்ந்த இலையைச் சுருட்டிப் பிடிக்கலாம். விதைகளை, வலியைப் போக்கவும், இழுப்பைத் தடுக்கவும் பாவனத் திரவமாக உபயோகிப்ப துண்டு. இதை முறைப்படி உபயோகிக்கா விடில் அபா யத்தை விளைவிக்கும். இதன் வேரைப் பொடி செய்து யுனானி வைத்தியர்கள் காக்கை வலிப்புக்குக் கொடுப்ப துண்டு. இதன் இலை யின் சாறு, வெள்ளையைக் குணப் படுத்துவ தாகக் கருதப் படுகிறது. போக சக்தியை மூட்டுவதற்கு இதன் விதைகளோடு அக்கிரா கார வேரும் இலவங்கமும் சேர்த்துத் தாம் பூலத்தி லருந்துவ துண்டு. இதன் விதையி னின்று சத் தெடுத்துக் கண் ணோய்க்கும் உபயோகிக்கலாம். இதைச் சாராயங்களில் அதி தனவாகப் போதையை யுண்டாக்க உப யோகிக்கப் படும். விதையின் புகை மயக் கத்தை யுண்டாக்கும். ஆகவே, கஞ்சாப் பிடிப்பவர்கள் அதை உப யோகிப்பார்கள். பொடி செய்து தின் பண்டங்களில் வைத்துக் கொடுத்து மயக்க முண்டாக்கி உடம்பில் அணிந் திருக்கும் நகைகளை திருடர்கள் களவு செய்வ துண்டு, purple or violet thorn apple. Asiatic datura or Indian datura — *Datura fastuosa*. The plant is 2-3 ft, high ; stem smooth, fruit prickly, leaves are of a heavy odour, faintly bitter with nauseous taste ; fruit contains black seeds of a poisonous nature ; large white flowers tinged with purple ; sweet-scented at night ; flowers all through the year ; grows wild in waste lands. All parts are medicinal ; fresh leaves are bruised and used in poultices for sedative action; leaves are boiled in oil and rubbed on the body for itch and rheumatism; in asthma; the dried leaves may be smoked liked tobacco. Seeds are used in tincture as anodyne and anti-spasmodic and it is a very dangerous drug if incautiously used. Powdered root is used by Hakeems in epilepsy ; the juice of the leaves is said to cure gonorrhoea. Seeds in *very small* doses are chewed with pellitory root, cloves, betel and nut as an aphrodisiac. Alkaloid 'daturina' is used in ophthalmic practice. Seeds are used to render liquor more intoxicating and their smoke causes giddiness and as such are used by ganjah-smokers. They are also used in powder for committing theft of jewels on a person and for other criminal purposes by mixing them with eatables. See also ஊமத்தை.

NOTE.—These seeds were formerly used by the Grecian priests of Delphi and other ancient oracles to produce prophecies and this was evidently copied from the Indian practitioners. Flowers being sacred to Mahadevan are used in religious worship. This plant should not be confounded with the *black* variety, a very rare and genuine plant contemplated in Siddhar's science, possessing extraordinary virtues. There is however another variety Tatula found in Persia with purple flowers.

கரு ஊரார், ஓர் சித்தர். கருவூரிலே கன்னா சாதியில் பிறந்தவர். கமல முனியின் உபதே சத்தால் அரு ளடைந்தவர். வாதக் கடலைக் கடந்தவர், வைத்தியம், யோகம், ஞானம் முதலிய வற்றுள் சித்தி யடைந்தவர். வாத முறையில் தேர்ச்சி யடைந்தவர். அனேக அற்புதங்களைக் காட்டிய சித்தர்களில் மகா வல்லவர். இவர் தன் சிஷ்யராகிய இடைக் காடருக்குத் தனக்குத் தெரிந்த எல்லா வற் றையும் போதித்துத் தஞ்சையிலும், காளாஸ்தி யிலும் சமாதி யானவர், he is one of the Siddhar's school of thought, born of an ironsmith. He attained supreme wisdom from the spiritual inspiration of Kamala Muni and attained success in Medicine, Yoga and Gnana philosophy. He was responsible for many wonderful discoveries and improvements in the practice of Alchemy. He is one of the great Siddhars who produced great miracles. He taught all he knew to his disciple named Idaikhader and finally showed attainment of Samadhi both in Kalahstri and Tanjore.

NOTE—*It is not to be wondered at as to* how a Siddha could attain Samadhi *in two places*. This is possible for them alone for the reason that they are endowed with supernatural powers by which they can materialise, dematerialise and rematerialise their bodies at Will.

கரு ஊரான், see கரு ஊரார் ; 2. கருப்பத்தில் பிறந்தவன், one who has taken his birth in the womb.

கரு ஊர், கருப்பை, the womb as shown in
"கரு ஊரிலே பிறந்து கரு ஊரிலே வளர்ந்து"
(ஞான வெட்டி).
which means born and bred in the womb.

கருவெடுத்தல், பெண்களின் கருப்பையினின்றுட, மிருகம், பட்சி வகைகளினின்றும் மூலப்பொருள்களை, பில்லி, சூனியம், முதலிய மாந்திரகத் தொழில்களில் அட்ட கருமக் கருமுடிப்ப தற்காகச் சேகரித்தல், gathering important ingredients and essences from the contents of the womb of a woman and other animals such as birds, beasts, etc. required for the art of black magic such as witchcraft, sorcery etc ; 2. கருப்பங்கொள்ளல், to conceive ; 3. சூனியத்தை மாற்றுதல், to counteract or remove the effects of black art ; 4. பிண்டக் கருவை மந்திர சக்தியைக்கொண்டு வெளிப்படுத்தல், to bring out the foetus in the womb with the aid of occult power.

கருவெரு, (கரு+எரு) வஸ்துவின் மூலப்பொருள் (பரி பாஷை), the essential part of any substance or compound ; the original element of anything. *C.f.*

"மனிதனே மூன்றுதாரம் சுத்தி பண்ணி
மைந்தனே கருவெருவுக் கலந்து கொட்டி"
(தட்சி. மெ. ஞானம்)

2. உடம்பின் கழிவுகள், the excretions from and the secretions of, the body.

கருவென்ற சாரம், காய்ச்ச லவணம், an unknown salt ; 2. ஆறுங் காய்ச்ச உப்பு, nitre boiled and filtered six times.

கருவேங்கை, வேங்கை மரம், Indian kino—Pterocarpus marsupium. See வேங்கை.

கருவேசரி, கருப்புக் கழுதை. இது வைத்தியம், மாந்திரிகம் முதலியவற்றில் மிக்க உபயோகப் படும், black or dark-coloured ass which is found to be useful in the medical and magical practice ; 2. கருப்புக் கோவேறு கழுதை, black mule.

கருவேசரிக் கொடி, கழுதைப் பாலாட்டாங் கொடி, a variety of ஆட்டாங் கொடி, which see. It is so called probably from its milky juice resembling asses' milk.

கருவேட்டி, காவி வஸ்திரம், cloth of a dark red colour or the one dyed in red ochre used by Indian ascetics.

கருவேப்பிலை, கறிவேம்பிலை, curry-leaf ; 2. கறிவேப்பிலை மரம், curry-leaf tree—Murraya koenigii ; 3. கரும் பச்சை நிற இலைகளையுடைய ஓர் வேப்ப மரம், a kind of margosa tree so called from its leaves darker than those of the ordinary margosa tree — Murraya genus, see கருவேம்பு ; 4. காட்டுப் பண்ணரிகி, Indian wampee tree—Clausena indica.

கருவேப்பீர்க்கு, கறிவேப்பிலையின் ஈர்க்கு, the rib of curry-leaf ; 2. கருவேம்பின் இலையீர்க்கு, the rib of the dark-coloured margosa leaf. See கருவேம்பு.

கருவேம்பு, ஓர் வகை வேப்ப மரம், இதன் இலைகள் கரும் பச்சை நிறமாயிருக்கும். இலைகள் அரும்பு புள்ளன, பூக்கள் பல, காய்கள் சதைப்பற்றுள்ளன, a kind of margosa tree, dark-leaved margosa—Murraya genus. Its leaves are darker than the ordinary margosa leaves. Trees or shrubs without spines, having pinnate leaves ; many flowered ; cymos inflorescence and its fruit is succulent.

கருவேம்பு, கருப்பு வேப்ப மரம் அல்லது எண்ணெய்க் கரை மரம், இது சம அளவுள்ளது. குளிர் காலத்தில் இலைகள் உதிர்க்கும், வெளிற் காலத்தில் அவை தளிர்த்தும், பூத்தும் வரும். பூக்கள் வெளிர் மஞ்சளாயிருக்கும், காம்புகளில் ஓர் வெண் வஸ்து தங்கி நிற்கும், காய்கள் கொத்துக் கொத்தாகத் திராட்சையைப் போல் வெளிர்ப் பச்சை நிறமுமுள்ளன. பிசின் எண்ணெய்ப் பசை யுள்ளதும், கற்பூரத் தைல வாசனை யுள்ளதாயு முண்டு. காய்களைப் பச்சையாயும் சமைத்தும் சாப்பிடுவதுண்டு. இதன் பட்டை, தோலை பதப் படுத்துவதற்கு உபயோகப் படும், black neem or wing-leaved garooga — Garuga pinnata. Medium sized tree; pinnate leaves fall during cold season and the tree throws out leaves and flowers in the hot season ; flowers of yellowish white colour and panicles covered with a mealy kind of white substance. Large bunches of smooth fleshy fruits of a pale green colour and they resemble grapes. Greenish - yellow exudation contains small proportion of resin (பிசின்) and some oil. It has the odour and taste of turpentine. Fruits eaten both raw and cooked. Bark is collected by tanners.

கருவேம்பு, கருப்பு வேப்ப மரம். இது மிகவும் அரிது, ஒருவரும் பார்த்த தில்லை. மலையுச்சியில் வளருவதாக சொல்லப் படும். இது ஓர் கற்ப மூலிகை, a black variety of margosa, a rare plant said to be found on the tops of hills and is said to possess virtues of rejuvenation (*unidentified*) ; 2. கறிவேப்பிலை மரம், see கறிவேம்பு ; 3. நிலவேம்பு, ground neem ; French chiretta—Andrographis paniculata.

கரு வேலங் குச்சு, கருவேல மரத்தின் குச்சி. இது பல் விளக்க வுதவும், 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி' என்று பழமொழியு முண்டு, twigs of the acacia tree which are used as tooth-brush after the ends are beaten or chewed to make them soft. It strengthens the gums even as banyan twigs do and there is a proverb too to that effect.

கரு வேலங் கொழுந்து, கருவேல மரத்தின் இலைக் கொழுந்து. இதை அரைத்துச் சீத பேதிக்கும், இரத்த பேதிக்கும் உள்ளுக்குக் கொடுக்கலாம். அன்றியும், சிலந்திப் புண் முதலியவைகளுக்கு வைத்துக் கட்டலாம், the tender leaves of acacia tree; they are beaten into a pulp and administered in dysentary and diarrhoea. Externally they are used in poultice to ulcers and abscesses.

கரு வேல மரம், see கரு வேல்.

கரு வேலம் பட்டை, கரு வேல மரத்தின் பட்டை இது கனமாயும், வெளிப் புறம் கருப்பாயும், உள் புறம் சிவப்பாயும், துவர்ப்பாயு மிருக்கும். இதனின்று கஷாய மிறக்கிப் பலத்திற்காக உள்ளுக்கும், பல் வலி, வாய் ரணங்களை ஆற்றுவதற்குக் கொப்புளிக்கும் நீராகவும் உபயோகிக்கலாம். இதன் வெந்நீர்க் கஷாயம், கருப்ப நோய்களுக்கும், வெள்ளைக்கும், அழலை ஆற்று வதற்கும, சீதபேதி, நீரிழிவு முதலிய நோய்களுக்கும், புண் புரைகளை கழுவுவதற்கும் உபயோகப் படும். இதைச் சூரணித்து நல்லெண் ணெயிற் குழைத்துக் கட்டிகளுக்கும், பிளவைகளுக்கும் பூசவ துண்டு. அன்றியும், பட்டையி னின்று சாராயம் காய்ச்சலாம். இது துவர்ப்புக் குண முள்ளதால் தூள் செய்து பல் பொடியாக வுபயோகிக்கலாம், இதன் பட்டைச் சாற்றைப் பாலிற் கலந்து கண் ணோய் களுக்கும் உபயோகிக்கலாம், the bark of black acacia or babool bark —Acacia arabica. It occurs in large thick pieces, coarsely fibrous. It is hard and heavy and is externally dark and internally red. It is a powerful astringent and is used as a tonic. The decoction from the bark is used as a gargle in tooth-ache and as mouth wash in inflammation of the mouth (stomatitis) and also in cancerous and syphilitic affections and also in mercurial ptyalism. It is a valuable application in prolapsis. Infusion is useful in womb complaints such as vaginitis, menorrhagea, leucorrhoea and in gonorrhea. It is given internally in chronic diarrhoea and diabetes mellitus. It is externally applied to clean wounds and sores. The powdered bark mixed with gingelly oil is used as an ointment in cancerous affections. The bark may be employed as a substitute for oak bark. It is also added to arrack during manufacture to modify its quality. Thin twigs are used as tooth brush and powdered bark as tooth-powder. The juice of the fresh bark mixed with milk is dropped into the eyes in conjunctivitis.

கரு வேலம் பிசின், கருவேல மரத்தின் பிசின். இது துவர்ப்புக் குணமுடையதால், இந்திரியத்தைக் கட்டும். இதைத் தண்ணீரில் கலக்கி உட்கொள்ள இருமல், குடல் விரணம், அதிசார பேதி, சீத பேதி, தொண்டை நோய், நெஞ் செரிவு, இவைகள் நீங்கும். தூளை முட்டை வெண் கருவில் சேர்த்துக் குழைத்து வெந்த புண், தீச் சுட்ட புண், இவைகளுக்குப் பூசலாம். கொய்னுவுடன் கொடுக்க சுரம் போம். நெய்யில் வறுத் துட் கொள்ள வீரிய முண்டாம். தூள் இரத்தப் போக்குக்கு உபயோகப் படும், the gum of black acacia tree. Gum arabic—Gummi acacia. The gum yielded by Acacia farnesiana and A. lebbek is said to be of a superior quality. Being an astringent, it is used as an aphrodisiac. Dissolved in water, the solution is taken with advantage in cough, inflammation of bowels, diarrhoea dysentery, throat complaints, heartburn etc. The powdered gum mixed with the white of an egg is applied to scalds and burns; mixed with quinine it is taken in fever and fried in ghee it is taken as a nutritive tonic in cases of sexual debility. The powdered gum is used for hemorrhages.

கரு வேலன், see கருவேல்.

கரு வேலன் கஷாயம், கருவேலம் பட்டைக் கஷாயம்.

கரு வேலன் குச்சு, see கருவேலங் குச்சு.

கரு வேலி, see கருங்கொடி வேலி.

கரு வேலை, கொடிய பாதகமான தொழில், wicked deed; 2. சூனியத் தொழில், (*in Magic*) black art; 3. வார்க்கும் வேலை, mould work; 4. பிண்டக் கருவைக் கொண்டு செய்யும் பில்லி, சூனியம் முதலிய

மாந்திரிகத் தொழில், the art of magic such as those practised in witchcraft, sorcery etc, with the aid of magic paint prepared with the essence of a foetus; 2. வார்ப்பு வேலை, mould-work.

கரு வேல், கருவேல மரம் அல்லது கருவ மரம். இது சுமார் 30—40 அடி உயரம். இலைகளின் பக்கங்களில் முள் ளிருக்கும். கொழுந்து மிருதுவானது, பூக்களின் மொட்டு உருண்டை வடிவம், பூக்கள் சிறியவை, மஞ்சளாயும், வாசனையாயு மிருக்கும். இதை எல்லா விடங்களிலும் பார்க்கலாம். ஆனால் தட்சணம் அல்லது தென் தேசங்களில் மிகுதியாக விளையும். இத னின்று ஓர் பள பளப்பான பிசின் எடுப்ப துண்டு. இதன் இலைகளைக் கொளுத்தி தேங்கா யெண்ணெயிற் கலந்து சிரங்குகளுக்குப் பூசலாம்; காய்களும், தழைகளும் ஆடுமாடுகளுக் குணவாகும். இதன் பட்டையி னின்று மைசூரில் சாராயம் காய்ச்சு வார்கள். இப் பூவின் மொட்டைச் சர்க்கரை யோடு பொடி செய்து இருமலுக்கு கொடுக்கக் குண மாகும், black acacia. Black babool or Indian gum arabic—Acacia arabica. Tree is 30-40 ft. high, armed with stipulary thorns; tender leaves, soft and smooth; heads of flowers globose; flowers small, bright yellow and fragrant. The tree is common all over India, but plentiful in the Deccan and the Coromandel coast. Gum exuding from the bark is transparent. The leaves burnt and mixed with cocoanut oil are applied for itches and other skin affections. Poultices of the bruised tender leaves are used as an excellent astringent and stimulant application to ulcers attended with sanious discharge. Twigs and branches are useful for cattle. From the bark is distilled arrack in Mysore. The tender buds pulverised with sugar are useful in coughs.

கருவேல் ஷர்பத், கரு வேலம் பட்டையைக் கஷாய மிட்டு அதைச் சர்க்கரைப் பாகில் சேர்த்துக் காய்ச்சி வடித்த ஓர் வகைப் பானம், a syrup prepared from the decoction of black acacia bark.

கருவேல் தோல், see கருவேலம் பட்டை.

கருவை, வரகு வைக்கோல், panicum grass or millet straw—Papsalum frumentaceum; 2. வேதைக் குரு, a quintessence used in alchemy.

கரு வோடு, பேரண்டம் அதாவது தலை மண்டையோடு, human skull.

கரு வௌவால், கருப்பு வௌவால் மீன். இது ஓர் கடல் மீன், 2 அடி நீளம், இதைச் சாப்பிட சிரங் குண்டாம், black bat fish; black pomfret—Stromateus niger. It is 2 ft. in length. It is a sea.fish and when consumed it develops skin diseases such as itches etc.

கருள், இருள், darkness; 2. கருப்பு நிறம், black colour; 3. கருமை, blackness; 4. சிற்றம், wrath.

கருவனை, பொரிக் கறி, a fried preparation of curry.

கரூபா, see கஜேருபா.

கரு மத்தை, see கரு ஊமத்தை; 2. பெண்களின் மூன்று மாதத்திய கருப்பம்; a secret term used for a foetus three month's old. (உரோம ரிஷி. 500).

கரே காம், முழங்கை மடிப்பு, the fold at the elbow.

கரேகை, தலை மண்டை யோட்டின் பொருத்துகள், the joints of the cranial bones—Suture.

கரேடம், நகம், nail.

கரேணு, யானை, elephant; 2. பெண் யானை, female elephant; 3. வெண் ணாங்கு, maple-leaved lance wood — Pterospermum acerifolium.

கரேந்தகம், ஓர் வகைப் புல், a kind of grass.

கரை, நீர்க் கரை, bank as of a river, shore as of a sea, bund as of a tank; 2 பக்கம், side; 3. இடம், place; 4. இளைப்பு, emaciation.

கரை கடத்தல், எல்லையை மீறுதல், to transgress the limit; 2. அளவு மீறுதல், to exceed the limit or quantity.

கரை கண்டர், துருசு, blue vitriol—Copper sulphate or acetate.

கரை கண்டுகம், கரு வீழி, black veezhi. See விழுதி.

கரை கரு, அழிந்த கருப்பம், an aborted child or fetus.

கரை காணு பாது, கழுதைத் தும்பை, donkey toombay or Indian borage — Trichodesma indicum.

கரைக் கல் லோலம், கடற் பாசி, sponge; seaweed.

கரைக் கல் லோலன், நீர்ப் பாசி, duck-weed.

கரைக் காற்று, கடலோரத்தி னின்று வீசுங் காற்று, land-breeze experienced by those in sea-voyage as distinguished from கடற் காற்று, sea-breeze enjoyed by those living on the side of sea shore.

கரைச்சு மருந்து, பேதி மருந்து, any purgative or laxative; 2. கரைக்கு மருந்து, any solvent or medicine capable of dissolving a substance as Aqua regia dissolving gold; 3. உருக்கு மருந்து, any medicinal compound capable of melting metals or metallic substances such as gold, silver etc—Menstruum; 4. கருவைக் கரைக்கு மருந்து, any medicine or chemical agent bringing about abortion; abortive drugs such as Madar milk, Bichloride of mercury etc.—Abortifacient.

கரை சல், கரையல், the act of dissolving.

கரை சிலை, இந்துப்பு, rock or Sindh salt or an impure common salt.

கரைச் சல், உருக்குதல், the act of melting; 2. உருக்கும் பதம், the state of being melted; melting-point.

கரைச்சி, சதையைக் கரைக்கு மருந்து, any substance dissolving flesh as மாமிச பேதி, which see; 2. உடம்பை இளைக்கச் செய்யு மருந்து, any medicine or agent reducing a corpulent body to a slender one; 3. உடம்பை இளைக்கச் செய்யும் வியாதி, any disease causing emaciation of the body such as consumption; 4. சதையை அரிக்கக் கூடிய மருந்து, the substance which corrodes the flesh of animals as caustics.

கரைஞ் சால்,
கரைஞ் சான், } அகில், a fragrant wood known as Agil.

கரைதல், கரைந்து போதல், to dissolve in a fluid as does salt or sugar in water; 2. சூட்டினால் உருகுதல், melting through application of heat (fire or sun); 3. ஏக்கத்தினால் இளைத்தல், to pine away as from longing or anxiety; 4. நோயினால் இளைத்தல், to become emaciated through disease such as consumption; 5. பத மழிதல், to get over-ripe as do fruits; 6. உரு வழிதல், to change in features or in appearance through emaciation or other causes; 7. ஆவியாய்ப் போதல், to get evaporated or volatalised as camphor does.

கரை தோஷம், உடம்பை இளைக்கச் செய்யும் ஓர் வகைத் தோஷம். இது சாதாரணமாகக் குழந்தைக்காவது அல்லது பெற்ற தாய்க்காவது காணும் நோய். இது கிரக தோஷத்தினால் ஏற்படுகிற தெனக் கருதப்படும், any morbific diathesis affecting either the child or its mother. It causes emaciation of the body and is said to be due to astral influence through meteorological changes.

கரைத்தல், கரைக்குதல், to dissolve in water; 2. உருக்குதல், to melt as we do with metals; 3. அழித்தல், to abort as is done to the child or fetus in the womb; 4. கரையச் செய்தல், (*in Medicine*) to cause to waste away; letting any coarse powdered substance into a liquid which is often agitated for purposes of dissolution—Macerate.

கரைத்துக் குடித்தல், சோறு முதலிய உணவுப் பண்டங்களைக் கையிலிட்டுக் கலக்கியோ அல்லது மத்துக் கொண்டு கடைந்தோ அல்லது நீரில் கரையும்படிச் செய்தோ உட் கொள்ளல், to take in or drink any liquid in which solid food such as boiled rice etc., is squeezed or reduced to a pulp with a churn or in which a medicine is macerated.

கரைத்துப் போடல், முழுவதும் கரையும்படிச் செய்தல், to dissolve away or to cause anything to vanish.

கரை படல், கரைந்து போதல், getting dissolved; 2. உருக்குப் படல், to get melted.

கரைப்பன், see கரப்பன்.

கரைப் பாம்பு, நிலத்தில் வாழும் பாம்பு, ground snake as opposed to கடற் பாம்பு அல்லது நீர்ப் பாம்பு, sea-snake or water-snake.

கரைப் பூடு, கடற் கரை யோரங்களில் விளையும் அல்லது பயிராகும் பூடு, plant found grown or cultivated near the sea shore; 2. கடற்கரையி னின்று 40 மைலுக் குட்பட்ட நிலங்களில் விளையும் அல்லது பயிராக்கப் படும் மருந்து மூலிகைகள். இது வைத்தியத் திற் குதவாது, medicinal plants or drugs found grown naturally or cultivated on lands within an area of 40 miles from the sea-shore. These are said to be unsuitable for use in medicines.

கரை மரஞ் சேருதல், கடை வழிப் படல் அதாவது இறத்தல். இது வோர் இடக்கரடக்கல். அதாவது மாறு படக் கூறும் வார்த்தை, to attain final salvation. It is an euphemistic term for death.

கரையத் தக்க, உருகத் தக்க, capable of dissolving—Soluble.

கரையல், கரைகை அல்லது கரைவு, the act of being dissolved; dissolving; 2. உருகுதல், melting; 3. கரைந்த அல்லது உருகின பண்டம் அல்லது பொருள், that which is dissolved or melted.

கரையற் சாதம், குழைந்த சோறு, over-boiled rice; 2. பதம் அழிந்த சாதம், putrified boiled rice; 3. கடைந்த சாதம், boiled rice churned for giving to convalescents.

கரையற் பொன், உருக்கிய பொன், melted gold; 2. சுத்தப் பொன் அதாவது ஊதிய பொன், refined gold; 3. புடமிட்ட பொன் அதாவது தங்கம், superior gold; 4. திராவகத்தில் கரையும் பொன், gold which dissolves in acid or in certain fluid; 5. பொன் தூள், gold dust.

கரையாக்கு மணல், see கரு மணல்.

கரையாத, நீரிற் கலக்காத, insoluble; 2. உருக்கப் படாத, not capable of being melted.

கரையான், செம்படவன், fisherman.

கரையு மாடி, உருகத் தக்க கண்ணாடி, fusible glass.

கரை வாடை, வட மேற்குக் காற்று, north-west wind or breeze.

கரைவு, கரையுந் தன்மை, dissolution; 2. மன இளக்கம், tenderness of mind.

கரோடி, தலை மண்டை யோட்டுப் பொருத்துக்கள், sutures of the skull; 2. மண்டை யெலும்புகள், skull-bones.

கரோடிகை, கழுதை, ass; 2. கழுதையின் மண்டை யோடு, the skull of an ass.

கரோமியம், பெரு வேம்பு, large neem—Melia azadirachta.

கரோருகம், நகம், nail.

கர்க்கச தலம், கொம்புப் புடல், palwal snake-gourd—Trichosanthes dioica.

கர்க் கசம், சொர சொரப் பானது, that which is rough.

கர்க்கடக சிங்கி, இதுவே கடுக்காய்ப் பூ. கடுக்காய்ச் சுருக்காகக் கொள்ளப் படும். இது சிறிதும் பெரிதுமாக இருக்கும்; வெண் பச்சை நிறம், சிறு துவர்ப்பாகவும், சிறிது கசப்பாகவு மிருக்கும். இது பல விருத்திகளை யுண்டாக்கும். கோழையை யறுக்கும் குண முண்டு, இருமல், காசம், சயம், சுரம், பசி யின்மை, முதலிய நோய்களுக்கு உபயோகிக்கலாம், crab's horn—Pistacia integerrima alias Rhus karkasinghee. Horn-like excrescence formed by the deposition of the ova of an insect. These galls vary in size; the external surface is of a pale greenish grey colour. They are strongly astringent and slightly bitter in taste. They are tonic, expectorant and useful in cough, phthisis, asthma, fever and dullness of appetite. See கடுக்காய்ப் பூ.

கர்க்கடக சிங்கி மரம், கடுக்காய்ப் பூ மரம், crab's claw, Japanese tallow sumach—Rhus succedanea alias R. acuminata.

கர்க்கடக சிரிங்கம், நண்டின் கால், the claw of a crab.

கர்க்கடக் சிரிங்கி, see கர்க்கடக சிங்கி.

கர்க்கடக சோதி, தலைச்சன் குழந்தை தலை மண்டை ஓட்டில் செய்யப் படும் ஒரு வகை அண்டச் சுண்ணம். இது சித்தர் நூலிற் சொல்லிய ஓர் இரகசியமான முறையால் செய்யப் படும், a calcined compound prepared out of the skull of the first-born child. It is prepared by a secret process described in Siddhar's science.

கர்க்கடக பாஷாணம், ஓர் வகைப் பிறவிப் பாஷாணம், a kind of native arsenic—a mineral poison.

கர்க் கடகம், நண்டு, crab; 2. ஓர் ராசி, (*in Astronomy*) cancer, a constellation of the Zodiac; 3. ஓர் விஷ வேர், a poisonous root; 4. ஓர் வித எலும்பு முறிவு, a particular kind of fracture of the bone.

கர்க் கடம், குழாயின் பருமனை நிர்ணயிக்கும் கருவி, an instrument for measuring the calibre of tubes—Callipers; 2. ஓர் மீன், a fish—Punelodus gagora.

கர்க் கடி, கக்கரி, country melon—Cucumis utilissimus.

கர்க் கடில், தாமரை மணி, pericarp of lotus.

கர்க் கடினி, ஓர் பூடு, Curcuma xanthorrisha.

கர்க் கண்டு, இலந்தை, common jujube—Zizyphus jujuba; 2. பத்து கால் பிண்டம்,

a name applied to fetus which is 10 days old.

கர்க் கரகம், ஓர் மீன், a fish — Pinelodus gagora; 2. விஷ வேருள்ள ஓர் பூடு, a plant with a poisonous root.

கர்க் கரம், எலும்பு, bone; 2. கல், stone; 3. சுக்கான் கல், limestone.

கர்க் கரி, தயிர்க் கடையும் தாழிச் சட்டி, a vessel in which curd or milk cream is agitated in order to obtain butter—Churn.

கர்க் கவம், கருக்குவா அல்லது கருக்கு வாலி மரம், Deccany olive wood or Ceylon tea—Elaeodendron glaucum.

கர்க் காடம், ஓர் மீன், see கர்க் கடம்.

கர்க் கோடகம், கரும்பு, sugar-cane.

கர்க் கோடகி, முடக் கொத்தான் வேர், the root of palsy-curer — Cardiospermum halicacabum.

கர்ச் சக்கினம், ஊமத்தை, thorn-apple — Datura stramonium; 2. வண்டு கொல்லி, ringworm shrub — Cassia alata; 3. தகரை, ringworm plant — Cassia tora; 4. எருக்கு, madar plant — Calotropis gigantea.

கர்ச்ச மரம், வெள் கொண்டை மரம், gurjan tree; wood oil tree — Dipterocarpus indicus.

கர்ச்சி, சிறு வழு துணை, Indian night shade —Solanum indicum.

கர்ச் சிதம், மத யானை, an elephant in rut.

கர்ச் சித்தல், வயிற்ற் இரைச்சல், rumbling noise in the stomach.

கர்ச் சிப்பு, குடல் வாத முழக்கம், a roaring sound of the bowels in wind; a gurgling sound experienced in hernia.

கர்ச் சுண்ணைக் குகை, see கல் சுண்ணக் குகை.

கர்ச்சு ரோகம், சொறி சிரங்கு, itches; 2. கருப்பட்டிச் சிரங்கு, an itchy eruption of the skin —Prickly heat; 3. உடம்புச் சொறி, an itchy affection of the skin—Psarosis.

கர்ச் சூடிகம், ஓர் வகைப் பக்ஷ, a kind of pastry.

கர்ச் சூரகம், மஞ்சள், turmeric; 2. தேள், scorpion.

கர்ச்சூர சேதன், முருங்கை, drum stick tree —Hyperanthes moringa.

கர்ச் சூரம், காய்ந்த பேரீந்து இப்பழம் சதைப் பற்றுள்ளதும், ஒரே விதையுள்ளதுமானது. இது இரத்தத்தைச் சுத்தி செய்யும், பித்தத்தை அகற்றும், date-palm—Phoenix dactylifera. Fruit is fleshy and one-seeded. It is useful in purifying blood and in curing biliousness; 2. கழற் கொடி, bonduc-nut creeper—Caesalpinia bonduc; 3. தேள், scorpion; 4. தேங்காயின் உட் சதைப் பற்று, kernel in the interior part of a cocoanut; 5. பேரீந்து, wild date-tree—Phoenix sylvestris; 6. தாளகம், yellow orpiment.

கர்ச்சூர ரசம், ஈச்சங் கள், the juice or toddy of the wild date-tree used to leaven bread and also drunk as an intoxicating liquor; date-toddy.

கர்ச் சூரக் காய், பேரீச்சங் காய், பேரீச்சம் பழம், date-fruit—Phoenix dactylifera.

கர்ச் சூராதி பானம், பேரீச்சம் பழம், திராட்சை முதலிய இந்திப்புப் பழ வகைகளைக் கொண்டு தயாரித்த குடிநீர், a sweet drink or beverage prepared with dried date, grapes, and some plums.

கர்ச் சூராதி லேகம், பேரீச்சம் பழத்துடன் மற்றக் கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கும் ஓர் ஆயுர்வேத மருந்து, an Ayurvedic preparation consisting of dried date fruit as a chief ingredient amongst other bazaar drugs.

கர்ச் சூரி, பேரீந்து விதையினால் தயாரிக்கும் ஓர் வகைச் சருக்கரை, a kind of sugar prepared from date fruit.

கர்ச் சூரிகம், சிற் றீஞ்சு மரம், small date tree —Phoenix farnifera.

கர்ச்சூரிக் காய், கோதுமை மாவினால் செய்த ஓர் தித்திப்புப் பணியாரம், a puffed up cake made of wheat flour having inside it a sweet confection—Puffs (sweet); 2. பேரீச்சங் காய், date fruit.

கர்ஜ் ஜீரம், see கர்ச் சூரம்.

கர்ண அர்வு ரோகம், காது தெறிப்பு, a kind of tumour in the ear—Polypus of the ear.

கர்ண கஷாயம், குரும்பை; காதுப் பீ, dirt in the ears.

கர்ண கண்டு, காதுக் குள் இலேட்டு மத்திலும் தினவையும் வலியையு முண்டாக்கும் ஓர் வகைக் காது நோய், a disease of the ear causing excessive itching and pain due

to the aggravated condition of the local kapam (phlegm); 2. காது நமைச்சல், itching of the ear.

கர்ண கண்டூரி, see கட லழிஞ்சில்.

கர்ணகம், நடு விரல், middle finger; 2. ஓர் முன்னை, a species of munnay — Premna longifolia.

கர்ண கிட்டம், காதுக் குறும்பி, wax in the ear.

கர்ண கிருமி, காதில் உண்டாகும் மிகச் சிறிய பூச்சி. இது காதில் பிறந்து அதனால் புழுக்கள் உண்டாகி அவை அவ்விடத்தில் சீழ், இரத்தம், மாமிசம் இவைகளைப் புசித்துக் கொண்டு அதிக வரையும், மிக்க வலியையு முண்டாக்கும். இது திரிதோஷத்தினு லுண்டாகு மெனக் கருதப் படும், a disease of the ear due to the breeding of larvae locally. It is marked by a discharge of pus and blood followed by excessive itching and great pain. It is said to be caused by the derangement of the three humours in the system — Maggots in the ear.

கர்ண குட்டம், உடம்பில் பச்சை வர்ணத் துடன் பொரி பொரியாக வெடிப்புக் கண்டு, காக்கட்டான் பூ நிறமாகக் காணும் ஓர் வகைக் குட்ட நோய், a kind of leprosy marked by livid colour of the skin with fissures and ulcerations of the size of small pimples or papules.

கர்ண குதம், காது குறும்பி. இது காதிற்குள் பித்தத்தின் சூட்டினால் வரண்டு கிடக்கும். இதுவே காது அழுக்கு, a glandular secretion known as ear-wax inside the ear hardened by the heat of local Pittam (bile)—Cerumen.

கர்ண குரோசம், கா திரைச்சல், noise in the ears—Tinnitus aurium.

கர்ண கூசிகை, காதிற்குள் வாயு தங்குவதனால் பிறந்து அதனால் காதின் உட் கருவியில் குறும்பி முடங்கிக் கொண்டு மிக்க வேதனையை உண்டாக்கும் ஓர் நோய், a disease of the ear due to the stickiness of the ear. wax or other secretions in the internal ear. It is marked by intense pain.

கர்ண கூதகம், காதில் குறும்பி கெட்டிப் பட்டு அதனா லேற் படும் காது நோய், ear-ache produced through the hardening of the ear-wax.

கர்ணைக் கல், செவி மூலத்தின் நரம் பண்டைக் காணப்படும் கல், ear stone found near the the auditory-nerve—Otolith.

கர்ண சம சிராவம், காதில் அடி படுவதாலும், குளிக்கும் போது தண்ணீர் காதிற்குள் புகுவதாலும் அல்லது காதிற்குள் கட்டி ஏற்பட்டுச் சீழ் கொள்ளுவதாலும் இந் நோய் பிறக்கும், a disease of the ear caused by blows on the ear, or water getting inside the ear while bathing, or by a boil which suppurates; 2. கா தொழுக்கு, discharge of pus from the ear.

கர்ண சிராவம், தலையில் ஏதாவது காயம் பட்டோ அல்லது காதிற்குள் திரிதோஷக் களினால் கட்டி புறப் பட்டோ அல்லது காயம் பட்டோ, திரி தோஷங்கள் விகற்ப மடைந்து, காதி னின்று சீழ் வடியும் ஓர் நோய், any discharge or secretion of pus from the ear-cavity due to a heavy blow on the head or the ear or caused by deranged humours (Doshas) of the system stuffing the ear-cavity or by the bursting of an abscess in the inner ear by spontaneous suppuration—Otorrhoea.

கர்ண சுரம், ஓர் காது நோய், an affection of the ear; 2. கா திரைச்சல், noise in the ear; 3. காது நோயால் ஏற்படும் சுரம், fever arising from diseases of the ear.

கர்ண சுரோதம், செவியின் தாரை, auditory passage of the ear.

கர்ண சூலை, சிலேட்டுமப் பண்டங்களைப் புசித்தலினால் வாயு செவி மூலத்திற் பாவிக் குத்த லுடன் வலியையும், தலை, பிடரி, நெற்றி, கண், புருவம், தாடை, கண்டம் முதலிய விடங்களில் வாளால் அறுப்பது போல் வலியையும், குடைச்சலையும் உண்டாக்கும் ஓர் செவி வாதம், a piercing pain in the region of the ear and inside the tympanum due to deranged humour (Vayu) caused by irregular diet i.e., taking food or other articles of fare giving rise to phlegmatic tendencies. It is also characterised by neuralgic affections of the temples, nape of the neck, forehead, eyes, eye-lids and jaw— Otitis. See காது குத்தல்.

கர்ண சூலை வாதம், ஓர் வகைக் காது நோய். குளிர் காற்றி லடி படல், சில்லென் றிருக்கும் தண்ணீரில் மூழ்கல் முதலிய காரணங்களை முன்னிட்டு, இந் நோய் ஏற்பட்டுக் காதில் தங்கி, வாதம் கோபா மடைந்து, செவிகளின் மூலத்தில் குத்தல் வலி, சிரசு, பிடரி, நெற்றி, கண், புருவம், காசி, ஆகிய விடங்களில் பரவி வாளால் அறுப்பது போல் ஏற்பட்டு, உடம்

புச் சளி முதலிய குணங்களைக் காட்டும், a form of otalgia marked by an acute pain in the internal ear which extends to every part of the face such as the ear, the head, the forehead, the eyes, the eye-lids, the nose, etc attended with heaviness of body. It is said to be due to the deranged vital air (Vatha) arising from various causes such as, exposure to chill weather, bathing in very cold water etc.—Geniculate otalgia.

கர்ண சூலை வாயு, வாயு கோபா றடைந்து அதனால் உட் செவி முழுவதும் தாக்கப் பட்டுக் கர்ண சூலையிற் கன்னப் பொறி, தலை, கண்டம் முதலிய விடங்களில் காணும் வலி யைப் போற் கண்டு துன்புறுத்து மோர் காது நோய், a disease of the ear affecting the whole of the internal ear and in which the deranged Vayu causes piercing pain in the region of the cheek-bones, head, temples, neck etc. as in the case of otitis.

கர்ண சோபை, காதிற்குள் அதிக வீக்கத்தை மாத்திர முண்டாக்கு மோர் நோய், a disease of the ear marked only by swelling in the affected part.

கர்ண தந்திரிகை, காதிற்குள் பிசினைப் போல் நெகிழ்ச்சியாகவும், இழுத்தால் அறுமல் தந்தி யைப் போல் நீளுந் தன்மை யுள்ள சீழை யுண்டாக்கு மோர் நோய், a disease of the ear attended with a discharge of pus, viscous like gum and elastic as to be drawn like a wire.

கர்ண தாபிதம், காதுக் குழலில் வெளிப் புற மிருக்கும் சவ்வுக்கு அழற்சி கண்டு அதனால் காணும் வீக்கம், a swelling of the ear due to the inflammation of the outer membrane in the ear-cavity (tympanum).

கர்ண நாதம், காதிற்குள் ஓசையைத் தெரிவிக் கின்ற நரம்புகளில் வாயு சேருங்கால் இந் நோய் பிறந்து, அதனால் காரண மில்லாமலே காதுக்குள் நானாவிதச் சத்தங்களை யுண் டாக்கு மோர் காது நோய், a disease of the ear attended with noise inside. It is attributed to the accumulation of deranged Vayu (air) in the auditory-nerve. See காதிரைச்சல்.

கர்ண நோய், see கர்ண ரோகம்.

கர்ண பரணி, காதி லுண்டாகு மோர் விரண நோய், an ulceration of the inner ear.

கர்ண பரிபோடகம், வாயுவினால் காதுக்குள் சொற்ப வீக்கத்தை யுடைய கொப்புளங் களைப் பிறப்பித்துப் பிறகு சில வேளை விருத்தி யடைந்து, அம் மார்க்கத்தில் வெந்து குத்தலை புண்டாக்கும் நோய், an ear-disease characterised by small inflamed vesicles which may develop in a few cases causing local inflammation and acute pain.

கர்ண பலம், ஓர் மீன், a kind of fish—Ophiocephalus kurraway.

கர்ண பாகம், காதின் வெளிப் புறத்திற் காணும் அழற்சி, inflammation of the outer ear—Otitis externa; 2. பித்தங் கோபா றடைவதனால் காதிற்குள் கட்டி ஏற்பட்டு அதனால் சீழ் வடிதல், discharge of pus from the ear due to suppuration caused by the formation of some abscess inside the ear. It is said to be caused by the aggravated condition of the deranged bile (pittam)—Suppuration of the ear.

கர்ண பாதிரியம், வாயு சிலேட்டுமத் துடன் கூடிச் சத்த நரம்புகளில் வியாபிக்கும் போது காதிற்குச் செவிட்டுத் தன்மையை யுண்டாக் கும் நோய், deafness of the ear due to the concerted action of the two humours viz. wind and phlegm on the auditory-nerve.

கர்ண பால சோஷம், காதுக்குள் ளிருக்கும் நரம் புகளில் வாயு தங்கிச் சஞ்சரிக்கும் போது உண்டாகி அதனால் நெற்றி யுலர்ந்து, காதிற் குள் வறட்சியை யுண்டாக்கும் நோய், a disease of the ear causing dryness inside the ear passages and parched condition of the forehead. It is said to be caused by the influence of wind (one of the three humours) prevailing on the auditory-nerve.

கர்ண பாலி, காதின் மடல், the lobe of the ear; 2. வெளிக் காது, external ear.

கர்ண பிதாரிகை, திரி தோஷத்தினால் காதிற் குள் சிறிய நிலப் பூசினிக் கிழங்கைப் போல் மாமிசத்தை யுண்டாக்கும் நோய். அதனால் அவ்விடத்தில் திமிர், வீக்கம், சல வொழுக்கு, குத்தல், குறும்பி அடைப்பு முதலிய குணங் கள் உண்டாகும், a disease of the ear marked by morbid growth of flesh inside the ear of the size of a bulbous root of ground pumpkin and is attended with numbness, swelling, putrid discharge,

throbbing pain, obstruction from ear-wax etc—Polypus of the ear.

கர்ண பிப்பலி, இது மாமிசத்தைப் பற்றிப் பிறக்கும் நோய். இதனால் காதில் உருண்டையாய்ப் பல இடங்களில் கெட்ட சதை வளர்ந்து இரண்டு ஒன்று அல்லது பலவாறுக உண்டாய்க் கொண்டேயிருக்கும், a disease of the ear arising from morbid growth of flesh in several parts which collect and develop either into one or several inside the ear from time to time.

கர்ண பிரதிநாகம், காதிற்குள் குறும்பி தடைபட்டு, தலைவலியை யுண்டாக்குமோர் நோய், a disease of the ear producing headache. It is a particular disease of the ear arising chiefly from the suppression of its secretion or wax.

கர்ண பிரநாதம், காதின் கூச்சல், ringing noise in the ear.

கர்ண பீடம், காதின் வெளிப் புறம், the external portion of the ear—Concha; the outer end of the auditory passage.

கர்ண புட்பம், நீல வாடாமல்லிகை, blue amaranth.

கர்ண பூதி, பித்தத்தினால் கபங் கெட்டு, சீழ் இரண்டு இறுகுவதனால் காதுக்குள் சவ்வில் நோவு அல்லது சேர்வின்மை, கெட்ட நாற்றம், ஓயாது சலம் வடிதல், முதலிய குணங்களைக் காட்டும் ஓர் காது நோய், a disease of the ear marked by fetid smell, constant watery discharge from the ears, with or without pain in the tympanum etc. It is due to the hardened condition of pus arising from the derangement of the bile and phlegm.

கர்ண பூதி கந்தம், உடம்பில் வாயுவானது தொண்டை, அண்ணுக்கு, மேற் பாகு இவ்விடங்களில் தங்கி நிற்கும் மற்ற தோஷங்களை அனுசரிக்குங்கால், காதில் நோய் பிறந்து அதனால் வாய் நாசி முதலியவைகளின் மூலமாகக் கெட்ட நாற்றம் வீசும் ஓர் நோய், a disease of the ear in which fetid breath is emitted through the mouth and the nostrils owing to the presence of the deranged Vayu mixed up with the other humours (Doshas) in the throat and about the root of the palate. See பூதி நாசிகா ரோகம்.

கர்ண பூய ரோகம், உடம்பின் நிலைமை கெடுவதால் காதி லிருந்து சீழ் வடியும் ஓர் காது நோய், discharge from the ear attributed in general to the constitutional change —Otorrhoea.

கர்ண பூரகம், கடப்ப மரம், common cadamba tree—Nauclea cadamba.

கர்ண பூரணம், காதிற்குள் மருந்தை ஊற்றி நிரப்புதல், administering medicine into the ear in full. (உ-ம்) கர்ண பூரணமாக உபயோகித்தல்.

கர்ண பூரம், நீலத் தாமரை, blue lotus flower; 2. வாகை, common sirissa—Acacia sirissa.

கர்ணப் புற்று, see கன்னப் புற்று.

கர்ண மட்குராம், ஓர் வகை மீன், a sort of fish—Silwans unitus.

கர்ண மந்திரம், சாகுந் தருவாயில் ஒருவனுக்குக் காதில் ஓதும் மந்திரம், sacred spell uttered into the ear of a dying person.

கர்ண மலம், காதுப் பீ, excretion of the ear; ear-wax.

கர்ண மூலம், கேள்வி மூலம், hearing; 2. செவி மூலம், polypus of the ear.

கர்ண மோடம், கருவேல மரம், Indian gum tree—Acacia arabica.

கர்ணம், காது, ear; 2. சுக்கான், lime-stone; 3. கன்னம், cheek; 4. எருக்கு, madar plant. வட மொழியில் சிரவணம், சிரவம், சுருதி, சுரோத்திரம் எனக் காதிற்குப் பல பெயர்களுண்டு, in Sanskrit, the ear goes by different names as mentioned above in Tamil.

கர்ண யீனம், காது மந்தம், dullness of hearing; 2. செவிடு, deafness.

கர்ண ரந்திரம், காதின் துவாரம், the orifice or the auditory passage of the ear.

கர்ண ரோக பேதம், பொதுவாகக் காதில் வரும் நோய்கள். அவையாவன, diseases in general of the ear, viz:—

1. கர்ண சூலை—காதுக் குத்தல், inflammation of the ear—Otitis.
2. கர்ண வித்திரதி—காதுக் கட்டி, internal abscess of the ear.
3. கர்ண பூயம்—கா தொழுக்கு, purulent discharge from the ear—Otorrhoea.
4. கர்ண கண்டு—காது நமைச்சல், itching in the ear.

5. கர்ண நாதம் — கா திரைச்சல், noise in the ear.

6. கர்ண அரிசம் — கா தெருச்சி, cyst or polypus in the ear.

7. கர்ண கிருமி—காதுப் புழு, maggot in the ear.

8. கர்ண பாதிரியம்—செவிடு, deafness.

9. கர்ண பூதி கந்தம் — காது நாற்றம், fetid smell from the ear.

10. கர்ண பிரநாதம்—காது கூச்சல், ringing noise in the ear.

11. கர்ண சிராவம்—காது சீழ், discharge of pus etc. from the ear.

12. கர்ண குதம் — காதுக் குறும்பி, any mucous accumulation in the ear dried and hardened.

13. கர்ண சோபை—காது வீக்கம், swelling in the ear.

14. கர்ண பாகம் — காது சீழ் கொள்ளல், suppuration of the ear.

15. கர்ண பூதி — காது நாற்றம், fetor in the ear same as (9).

16. கர்ண அற்புதம்—காதுக் கழலை, tumour in the ear.

NOTE.—According to Ayurveda there are 28 different kinds of ear-diseases which are noticed in practice. The general classifications are only of 5 kinds viz:— வாத கர்ண சூலை, பித்த கர்ண சூலை, சிலேட்டும கர்ண சூலை, திரிதோஷ கர்ண சூலை, இரத்த கர்ண சூலை, ear aches caused by the deranged humours viz wind, bile and phlegm together with the one caused by the combined three humours and that brought about by the deranged or altered condition of the blood (including அபிகாத சூலை, the one due to traumatic causes).

கர்ண ரோகம், காதில் சீதளம் அநுசரிக்கும் போதெல்லாம் காதில் நீர் தங்கி அதனால் குத்தல், வலி முதலிய குணங்களை யுண்டாக்கும் ஓர் வகைக் காது நோய், neuralgic affection of the ear arising from exposure to chill weather. It is marked by acute pain etc.

கர்ண லிகியம், ஓர் வகைக் காது நோய். இந்நோய் சிலேட்டுமத் துடன் கூடிய இரத்தத்தினால் காதிற்குள் கிருமிகள் ஏற்பட்டு அவைகளால் சிறு சிறு கொப்புளங்கள் உண்டாகும். அதனால் காதுகளில் தினவு, நீர்க் கசிவு, வலி முதலியன உண்டாகி, ஓர்கருவியைக்கொண்டு குடையும்படித் தூண்டும், a disease of the ear marked by excessive itching, watery discharge, pain etc. due to small vesicles or eruptions developed inside the ear owing to the formation of germs locally. Sometimes the itching is so very intense as to drive one to the necessity of using some instrument to pick the ear for relief. The disease is attributed to phlegmatic condition of the blood in the system

கர்ண வல்லிகம், ஓர் காது நோய், a particular disease of the ear.

கர்ண வாதம், இதுவே செவிபடு வாதம், see கர்ண பாதிரியம்.

கர்ண வாதிரியம், see கர்ண பாதிரியம்.

கர்ண விஷம், காதின் விஷம், ear poison.

கர்ண வித்திரதி, காதின் தினமைச்சலுக்காக ஏதாவது ஒன்றைக் கொண்டு காதிற்குள் குடைவதினால் கட்டி எழும்பி, வேதனையை யுண்டாக்கும் ஓர் காது நோய், an abscess of the ear attended with pain, burning sensation and tension in the ear. It is said to be caused by the insertion of some instrument for turning into the ear ordinarily, so as to get relief of the itching occasionally caused; 2. காதிற்குள் ஏற்கனவே உண்டா யிருக்கும் எழுச்சிகளாலும் அல்லது காதிற்குள் காயப் படுவதாலும் ஏற்படும் கட்டி அல்லது வேறு வகைகளால் உண்டாகும் கட்டிகள். இதனால் மூச்சுத் திணறல், எரிச்சல், ஜிவ்வென்ற குத்தல், குடைச்சல், நோய், சீழ் அல்லது இரத்த நீர் ஒழுக்கு முதலிய குணங்கள் உண்டாகும், any abscess caused inside the ear by any local ulcer as well as any idiopathic abscess in the cavity. It is marked by a choking sensation, burning, piercing and throbbing pain followed by red or yellow discharges from the ear.

கர்ண விவரம், see கர்ண ரந்திரம்.

கர்ண வேதனி, காதைக் குத்துவதற்கும், இரணங்களை அறுப்பதற்கும் உபயோகப் படுத்தும் மூன்று அங்குல நீள முள்ள ஊசி, a needle 3 inches in length used for either boring the ear or for the operation on wounds or ulcers in the ear.

கர் ணுக்கியம், வெள்ளை வாடா மல்லிகை, white amaranth.

கர்ணூர சோற்புதம், காதுகளின் மூலத்தில் மூல ரோக உபத்திரவத்தைப் போல் வலி, நாற்றம்

முதலிய குணங்களையும், காது செவிட்டையும் உண்டாக்கும் ஓர் காது நோய், a disease of the inner ear characterised by pain, fetid smell etc., like those peculiar to piles and deafness.

கர்ணாற்புதம், ஓர் காது நோய். இது செவிடு முதலிய கர்ணார்சோற்புத ரோகத்திற் குண்டான எல்லா குணங்களை வாய்ந்து, அத்துடன் செவிப் பிரதேசத்தி லெல்லாம் ஏக வீக்கத்தையு முண்டாக்கும், a disease of the ear with deafness and all the other symptoms characteristic of the above mentioned disease (Karnarsorputham) together with swelling all round the ear —Furuncular otitis.

கர்ணி, கழுத்தின் பக்கம், the side of the neck; 2. காதி னருகு, the part near the ear; 3. கருப்பைப் பிதுக்கம், prolapsus of the uterus or polypus uteri.

கர்ணிக சன்னி, பதின் மூன்று சன்னி வகைகளுள் ஒன்று அதாவது காதின் ரோகத்தினால் ஏற்படும் சன்னி, one of the 13 kinds of delirium said to be due to a disease of the ear.

கர்ணிக சன்னி பாத சுரம், ஓர் வகைச் சன்னி பாத சுரம். இதனால் காதின் மூலத்தில் வீக்கத்துடன் சத்தங் கேளாமை, வாய் திறக்கக் கூடாமல் கண்டத்தை இறுக்கிப் பிடித்தல் போலிருத்தல், உடம் பெரிச்சல், நடுக்கல், அற்ப வலி, பிதற்றல், மார்பு இடித்தல், இரைப்பு, இருமல் முதலிய குணங்கள் ஏற்படும், a form of high fever due to a disease of the ear. It is marked by swelling of the internal ear, deafness, constriction of the neck and the consequent inability to open the mouth, burning sensation in the body, slight pain, raving, palpitation of the heart, hard-breathing, cough, etc.

கர்ணிகம், see கர்ணிக சன்னி; 2. ஓர் வகைக் கொம்மட்டி, a kind of bitter apple (colocynth).

கர்ணிக வாதம், இரண்டு காதிலும் இரத்தங் கட்டிக் கொண்டு அதனால் வலி கொள்ளு மோர் காது நோய், a ear-disease with pain due to congestion or effusion of blood in the ears.

கர்ணி காரம், வெண்ணுக்கு, see அரேணு; 2. தாமரைத் தண்டு, lotus stalk.

கர்ணிகை, தாமரைக் கொட்டை, pericarp of lotus; 2. பிதுக்கம், protrusion.

கர்ணோதயம், (கர்ண + உதயம்) பிரசவத்தில் குழந்தையின் காது முதலாக வெளித் தோன்றல், presentation of ears first in delivery. This is possible only in tumour of the neck of the fetus.

கர்ணோற்பாதம், (கர்ண + உற்பாதம், great pain in the ear) ஓர் காது நோய். இதனால் காதுக்குள் சிறு கொப்புளங்கள் வேர்க்குருக்கள் போல் எழும்பி அவைகள் பழுத்துடைந்த பின் பெரிய கொப்புளங்களுண்டாகி, அத்துடன் வீக்கம், இரத்தக் கசிவு, நோவு, எரிச்சல் முதலிய குணங்களையு முண்டாக்கும், a disease ofthe ear attended with small eruptions in the cavity of the ear, which after suppuration, develope into big boils or ulcers thereby giving rise to swelling, bloody discharge, pain, burning sensation etc.

கர்ணோன் மந்தம், ஓர் வகைக் காது நோய். அது வாத சிலேட்டுமங் களினாற் பிறப்பது. அதனால் செவி மார்க்கத்தில் நிலை பெற்ற வீக்கம், நோவின்மை, அதிக நமைச்சல், சீக்கிரத்தில் வசப்படாமை, முதலிய குணங்களுண்டாகும், a chronic disease of the ear said to be caused by the concerted action of the two humours viz: wind and phlegm in the system. It is well indicated by a long-continued swelling, painlessness, excessive itching etc.

கர்த்தபகம், உடம்பில் சிகப்புப் புள்ளிகளை யெழுப்பி, வலியை யுண்டாக்கும் ஓர் சரும நோய், a cutaneous disease giving rise to round, red and painful vesicles.

கர்த்தப நீர், கழுதை மூத்திரம், asses' urine.

கர்த்தபம், கழுதை, ass; 2. ஓர் வாசனை, a perfume; 3. வெள்ளாம்பல், the white esculent water lily—Nymphae lotus; 4. வாயு விளங்கம், common wind-berry—Embelia ribes; 5. பெண் கழுதை, she-ass; 6. சாணியில் உற்பத்தி யாகும் வண்டு, a kind of beetle generated in cow-dung.

கர்த்தப வண்டகம், பூப்பருத்தி, the tulip tree of India—Thespesia populnea.

கர்த்தப வண்டம் கழுதைப் புடுக்கு, donkey's testicle; 2. கல்லால், stone banyan tree —Ficus infectoria.

கர்த்தப வல்லி, நரி வாழை, pipe flower—Cleodendron sphoenanthus.

கர்த் தபி, உடம்பில் மண்ட லாகாரமாய் வெண் காக்கட்டான் காயைப் போல் சிவந்த கொப் புளங்களை விஸ்தாரமாக உண்டாக்கு மோர் நோய், a disease of the skin developing ulcers of the size of the fruit of white-flowered mussell-shell creeper all over the body. C.f. கர்த் தபகம்.

கர்த் தமம், புலால், meat; flesh; 2. சேரான் கொட்டை, dhoby's nut—Semecarpus anacardium.

கர்த் தவம், see கர்த் தூபம்.

கர்த்த வர்த்தமம், ஓர் வகைக் கண்ணோய். அது இமைச் சந்துகளில் உண்டாகும் கட்டிகள் சீழ் கொண்டு உடையும் போது பிறக்கும். அதனால் அவ்விடத்தில் சேற்றைப் பூசினது போ லிருக்கும், a disease of the eye-lids attended with congestion of the parts, consequent on the suppuration of abscesses inside the eye-lids; 2. கிலிஷ்ட வர்த்தமம். இது பித்தம் கோளா றடைந்து அதனால் இமைகள் சிவந்து, பீளையைத் தள்ளு மோர் கண்ணோய், a disease of the eye-lids marked by inflammation of the eye-lids with a muco-purulent discharge. It is said to be due to the deranged humour (bile) affecting the blood.

கர்த் தனம், வயிற் றிரைச்சல், rumbling noise in the stomach.

கர்த்தன், மௌனி, a saint who practises silence.

கர்ப்ப காசம், கர்ப்பிணிகளைத் தாக்கும் ஓர் வகைக் கண்ணோய், a disease of the eye such as conjunctivitis attacking pregnant women; 2. கருப்பிணிகளைத் தாக்கு மோர் வகைக் காச நோய், asthma attacking pregnant women; 3. கருப் பத்திலேயே ஏற்பட்ட காசம், asthma as a congenital disease.

கர்ப்ப காதினி, கரு வழிப்போன், embryo-killer; 2. கரு வழித்தல், causing abortion; 3. கலப்பைக் கிழங்கு, plough root—Methonica superba.

கர்ப்ப காமம், கருப்பிணி யாக வேண்டிய இச் சை, desire for impregnation.

கர்ப்ப காரணம், கருப்பத்தை யுண்டாக்குவது, anything which causes impregnation; 2. கருப்ப முண்டாகும் காரணங்கள், causes of pregnancy.

கர்ப்ப காலக் கிறுதி, கீழி, chilli-fruited caper—Cadaba indica alias Stromeria tetrandra.

கர்ப்ப காலச் சம்பவம், பிள்ளைத் தாய்ச்சியா யிருக்கும் போது நேரும் நோய், துன்பம், வேதனை முதலியவைகள், several incidents that occur during the periodof pregnancy such as, diseases or other ailments, afflictions, pains, discomforts etc; 2. கருப் பையி லிருக்கும் பிண்டத்திற் குண்டாகும் நோய்கள் அல்லது வேறு பாடு கள், diseases or other phenomena of the utero-gestation.

கர்ப்ப கால பரிமாணம், கருப்பையில் பிண்டம் நிலைத் திருக்கும் கால அளவு, the period of retention of foetus in the womb; duration of utero-gestation.

கர்ப்ப காலம், சூல் கொண்ட காலம், time of impregnation or conception; 2. கருப் பிணியா யிருக்குங் காலம், the period of pregnancy; 3 குழந்தை கருப் பையிலுள் தங்கி யிருக்குங் காலம், the period during which the foetus or child remains in the womb.

கர்ப்ப கோசம், கருப்பப் பை, the uterus or the matrix; embryo-receptacle.

கர்ப்ப கோளகை, கருப் பாசயம், the womb; the uterus.

கர்ப்பக் கல், பிரசவத்தை துரிதப் படுத்து வதற்காக வுபயோகிக்கும் ஓர் சதுரக் கல், a quadrangular stone used for the purpose of hastening the delivery of the child.

கர்ப்பக் கிரகம், கர்ப்ப ஸ்தானம், womb; 2. கரு வுதிக்கு மிடம், the seat of impregnation; 3. சினை யுதிக்கு மிடம், the female sexual gland in which the ova are formed—Ovary; 4. கருப்பிணியா யிருக்குங் காலயில் ஏற்பட்ட கிரக நிலை, the position of the planets operating on the mother and the child while she is pregnant; 5. கருப்ப மாவதற்குக் காரணமா யுள்ள கிரகம், the planet responsible for the conception of a woman; the state of the constellation of stars favourable or unfavourable for the conception of the women.

கருப்பக் கிலேசம், பிரசவ வேதனை, the pang of child-birth; 2. அறை வீட்டுச் காய்ச்சல், puerperal fever.

கர்ப்பக் குழி, see கர்ப்ப கோசம்.

கர்ப்பக் கோளாறு, கருப் பையில் ஏற்பட்ட குற்றங்களை அவையாவன, disorders of the womb or the uterus—Uterine disorders viz :—

1. மலச் சிக்கல், constipation.
2. மூல நோய், piles—Hemorrhoid.
3. வெள்ளை யொழுக்கு, whites — Leucorrhoea.
4. பல் வலி, tooth-ache.
5. படை, skin disease—Eczema.
6. அக்கி அல்லது அரைப் புண், herpes or shingles.
7. தலை வலி, head-ache.
8. குரக்கு வலி, cramps.
9. நெஞ் செரிவு, heart burning.
10. நெஞ்சுத் துடிப்பு, palpitation.
11. சோர்வு, faintness.
12. கை, கால் வீக்கம், swelling of the hand and the legs.
13. தூக்க மின்மை, sleeplessness.
14. அஜீரண பேதி, diarrhoea.
15. அதிக வாந்தி, excessive vomiting.
16. நரம்பு வலி, neuralgic pains.
17. பொய் வலி, false pains.
18. நீர் இறக்கம், frequency of urine.

C. f. கருப்பாசய ரோகம்.

கருப்பங் கரைத்தல், கரு வழிதல், abortion.

கருப்பங் கலங்குதல், கருப்பங் கரைதல், abortion; miscarriage.

கர்ப்பங் கொள்ளல், கருக் கொள்ளல், to conceive; to be impregnated.

கர்ப்பங் கொள்ளுகை, கருப்பிணி யாதல், impregnation.

கர்ப்ப சங்கு, கருப் பிண்டத்தை வெளிப்படுத்துவதற்காக வுபயோகிக்கும் ஓர் வகைக் கருவி, an instrument used in surgery for holding the fetus for the purpose of bringing it out—Forceps; 2. இறந்த குழந்தையை வெளிப் படுத்தும் கருவி, an instrument for extracting a dead foetus.

கர்ப்ப சலனம், கருப்பா சயத்தில் குழந்தை அல்லது பிண்டம் உலாவுவதால் ஏற்படும் அசைவு, the movement of the fetus or the child in the womb; quickening.

கர்ப்ப சாதனம், கருவை யழிக்கச் செய்தல், procuring abortion; causing miscarriage.

கர்ப்ப சாதனி, கருப்பு வாகை மரம், a black variety of sirissa or fragrant sirissa—Albizzia odoratissima.

கர்ப்ப சித்திரா, கருக் குழியின் வாய், the mouth of the womb.

கர்ப்ப சிராவம், கருப் பையி லிருக்கும் இளங் கருவு மூன்றும் மாதத்தில் கரைந்து வெளிப் படல், abortion taking place during the third month in a pregnant woman; 2. கர்ப்ப மேகம் அதாவது வெள்ளை நோய், a discharge commonly known as whites from the vagina or the passage leading outwards from the womb—Leucorrhoea.

கர்ப்ப சின்னம், கருப்பமா யிருத்தற் குரிய அடையாளங்கள் அவையாவன, symptoms of pregnancy or the sum of the symptoms, signs and conditions associated with it—Gravidism. They are:—

1. சூதக நிற்பாடு, the suppression of menses.
2. உடம்பு மசக்கை, morning sickness.
3. தேக அசௌக்கியம், மனச் சஞ்சலம், பசி, விருப்பம் முதலியன, irritability of body and mind, capricious appetite and longings.
4. முலைக் காம்பு வட்டம், பருத்துக் கருப்பா யிருத்தல்; பால் கசிதல், darkened and enlarged areolae, and the oozing out of milky fluid.
5. வயிற்றி லேற் படும் பிண்ட அசைவு, quickening being the first perception of the child in the womb.
6. முலை விம்மல், enlargement or distension of breasts.
7. வயிறு பருத்தல், enlargement of the abdomen.
8. குழந்தை பிரளல், movements of the child.
9. குழந்தையின் இருதயத் துடிப்பு, pulsation the child's heart.

கர்ப்ப சூதம், கரு வழிவு, miscarriage.

கர்ப்ப சூலை, இரத்த குலையினால் மாத விடாய்த் தடைபட்டுக் கருப்பையில் குத்தலை யுண் டாக்கு மோர் வகைச் சூதக நோய், a morbid or unnatural suppression of menstruation accompanied by periodical pain—Amenorrhoea; 2. கீழ் வயிற்றில் வாயு அனுசரிப்பதனால் கருக் குழியில் உதிரம் சிக்கி அல்லது கட்டித் திரண்டு சிசுவின்மேல்

பிரண்டு வறுவதனுல் ஏற்படும் வலியோடு கூடிய நோய், (யூகி முனி. 1200), a disease of the uterus due to the deranged wind prevailing in the abdomen. It is marked by congestion of blood draining the fetus and causing pain in the womb.

கர்ப்ப சேதம், பிரசவ காலத்திற்கு முன்னதாகக் கருவுக்கு அழிவு ஏற்பட்டு அதனுல் பிண்டம் வெளிப் படுதல், the premature expulsion of the foetus before the child is viable—Miscarriage.

கர்ப்ப சோதனை, கருப் பை சோதனை, examination of the uterus; 2. கர்ப்பத்தை நிர்ணயித்தல், ballotment — Deventro inspiciendo.

கர்ப்பச் சூடு, கருப்பையிற் றங்கி யிருக்குங் காலத்தில் உடம்பில் உதிய சூடு, congenital heat.

கர்ப்ப ஸ்திரி, கருப்பவதி; கருப்பிணி, a pregnant woman.

கர்ப்பட் சயம், கரு சிதைதல், the loss of the embryo; miscarriage.

கர்ப் பண்டம், தொப்புள் சுப்பு, enlargement of the navel.

கர்ப் பதம், சூலாதல், conception; 2. சினைப் படல், impregnation.

கர்ப்ப தாடனம், அல்குலின் வழியாக விரல்களை விட்டுக் கர்ப்பத்தைத் தூக்கிப் பிடித்தும், விடுத்தும் கருப்பத்தைச் சோதித்தல், a mode of determining the presence or otherwise of the child in the womb by inserting the finger through the vagina and feeling the womb—Ballotment.

கர்ப்ப தாரணம், சூல் கொள்ளல், gestation; 2. சினை கொள்ளல், becoming heavy with pregnancy—Gravidity.

கர்ப்பத் திராவணம், இரசம் முதலிய லோகங்களைக் கையாளும் ஓர் முறை, a particular process applied to the use of minerals especially mercury.

கர்ப்பத் துடக்கு, கருப் பையி னின்று ஒழுகும் இரத்தம், the black dots of blood expelled after delivery from the womb and called lochial discharge popularly known as 'cleansings'; 2 கருப்பிணியா யிருக்குங் காலத்திற் கூட ஏற்படும் மாத விடாய், the menstrual discharge occurring in some cases even during the period of pregnancy.

கர்ப்பத் தவம், சூல் கொள்ளல், impregnation.

கர்ப்பத் துவாதசம், கருக் கொண்ட பன்னிரண்டாவது நாள், மாதம் அல்லது வருஷம், the twelfth day, month or year from conception.

கர்ப்ப நாசம், கருப்ப வழிவு, destruction of the foetus or the embryo—Abortion.

கர்ப்ப நாடி, தொப்புள் கொடி, umbilical cord; 2. கர்ப்பந் தரித்ததை நிர்ணயிக்கும் நாடி, pulse at the wrist by which pregnancy is determined.

கர்ப்பந் தரித்தல், கருப்பிணி யாதல், to conceive.

NOTE.—Pregnancy of women occurs by having sexual intercourse with males. But Hindus believe that a woman under certain conditions may become pregnant by the influence of a dream about it. This is possible as per quotation from the sacred poem in Tiruvassagam "வித்தின்றியே விளைவு செய்குவாய்"—(திருவாசகம்).

கர்ப்ப பரிசம், see கரு வுற்பத்தி.

கர்ப்ப பாதகம், கருச் சிதைவுண்டாக்கல், causing abortion; 2. செம் முருங்கை, red moringa.

கர்ப்ப பாதம், ஐந்து முதல் ஏழு மாதத்திற்குள் ஏற்படும் அகாலப் பிரசவம், expulsion of the foetus occurring at any time between the 5th and the 7th month—Miscarriage; 2. நான்காம் மாதத்தின் பிறகு உண்டாகும் கர்ப்ப அழிவு, miscarriage after the 4th month of pregnancy.

கர்ப்ப பாதனம், see கர்ப்ப பாதகம்.

கர்ப்பப் பிஷ்டம், கிருமி சத்துரு, worm-killer.

கர்ப்பப் பிரமேகம், கருப்பையில் ஏற்படும் ஓர் வித மேக வொழுக்கு, a discharge from within the womb known as the whites—Leucorrhoea; 2. பிறவியிலேயே ஏற்பட்ட வெள்ளை வொழுக்கு, hereditary gonorrhoea.

கர்ப்பப் பிரம்சம், பிரசவ காலத்தில் கருப்பை கீழே இறங்கிப் போதல், relaxation of the uterus and the sinking forward and downward of the abdomen as a sign of approaching labour.

கர்ப்பப் பின்னம், கருப்ப வழிவு, abortion.

கர்ப்பப் பை, கருப் பை, the womb.

கர்ப்ப போஷணம், பிண்டத்தை வளர்த்தல், nourishing a fetus; 2. கரு வளர்தல், gestation.

கர்ப்ப மேகம், *வெள்ளைச் சிரவம்,* a discharge of whites or a watery discharge from the vagina during pregnancy.

கர்ப்ப மேற் கர்ப்பம், *பெண் சூல் கொண்டிருக்கும் போதே, இரண்டாவது கருப்பந் தரித்தல்,* a second conception of a female who has already a fetus in the womb—Superfoetation.

கர்ப்பம், *கரு,* embryo or fetus; 2. *கருப் பாசயம்,* womb or uterus; 3. *சினை,* ovum; 4. *கருக் கொள்கை,* pregnancy. *இது தமிழ் வைத்தியப்படி நான்கு விதம் அவையாவன,* according to Tamil medicine, the four kinds are:—

1. *சாதாரண கருப்பம்,* ordinary conception—Abdominal pregnancy.
2. *அழி கருப்பம்,* pregnancy followed by abortion.
3. *மூட கருப்பம்,* false pregnancy——Pseudo-cyesis.
4. *மும் மாங்காய் அல்லது கீ நாக்கிய கருப்பம்,* pregnancy extending up to three years.

இங்கிலீஷ் வைத்தியபடி, கர்ப்பம் பலவிதமாகச் சொல்லப்படும். சாதாரணமாக இது கருத்தரிக்கும் இடத்தை அனுசரித்தே அடியிற் கண்டபடி பிரிக்கப்பட் டுள்ளது, according to Allopathic science, the following are the different kinds of pregnancy:—

1. *அடிவயிற்று கருப்பம், நாதம் அடிவயிற்றில் தங்குதல்,* lodgment of the ovum within the abdominal cavity—Abdominal pregnancy.
2. *பொய் அல்லது மூட கருப்பம், பார்வைக்குக் கர்ப்பமே ஒழிய உண்மையில் அல்ல,* apparent, but not real pregnancy—False pregnancy.
3. *இரட்டைக் கருப்பம், இரண்டு பிள்ளை தரித்தல்,* gestation with twins—Twin pregnancy.
4. *வெளி கருப்பம், கருப்பைக்கு வெளியே யுண்டாகும் கருப்பம்,* pregnancy outside of the walls of the uterus — Extra-uterine pregnancy.
5. *நாள கருப்பம், கருப்பையின் நாளத்தில் ஏற்படும் கருப்பம்,* pregnancy occurring in the fallopian tube—Fallopian pregnancy.
6. *[illegible] கருப்பம், வயிற்றின் கொழுப்பினால் கருப்பமாகக் காணப் படும் பொய் கருப்பம்,* false pregnancy with the accumulation of fat in the abdominal wall — Fatty pregnancy.
7. *உள் வெளி கருப்பம், கருப் பையில் ஒன்றும், கருப் பைக்கு வெளியில் ஒன்று மாக ஏற்படும் இரட்டை கருப்பம்,* double pregnancy—one uterine and the other extra-uterine—Heterotopic pregnancy.
8. *சூதக கருப்பம், சூதக வாயுவின் சம்பந்தத்தால் பொய்யாகக் காணும் கருப்பக் குறிகள்,* symptoms of pregnancy in hysteric women who are not really pregnant.
9. *கோச கருப்பம், வயிற்றின் கோசத்திற் காணும் கருப்பம்,* pregnancy within the peritoneal cavity—Intra-peritoneal pregnancy.
10. *சவ்வு கருப்பம், பிண்டப் பையைக் கிழித்துக் கொண்டு வெளி வந்து கருப் பையில் ஒதுங்கி நிற்கும் கருப்பம்,* pregnancy in which the fetus has broken through its membrane envelope and lies in contact with the walls of the womb — Membraneous pregnancy.
11. *அடுக்குக் கருப்பம், கருப் பையில் ஏக காலத்தில் பல நாதங்களால் பிண்டங்கள் ஏற்படும் கருப்பம்,* the presence of more than one fecundated ovum in the uterus at the same time—Multiple pregnancy.
12. *நாதாசய கருப்பம், நாதாசயத்தி லுண்டாகும் கருப்பம்,* pregnancy occurring within an ovary—Ovarian pregnancy.
13. *நாதத் தாரைக் கருப்பம், நாதக் குழாயி லுண்டாகும் கருப்பம்,* pregnancy within an oviduct — Tubal pregnancy.
14. *அறியாக் கருப்பம், பெண்களுக்கு யாதொரு உணர்ச்சியு மில்லாமலே ஏற்படும் கருப்பம்,* pregnancy of which the woman is unaware—Unconscious pregnancy.
15. *நாத சண்டப்பை கருப்பம், ஓர் பிண்டம் நாதா சயத்திலும், மற் றொன்று*

கருப்பா சயத்திலும் உண்டாகும் கருப்பம், pregnancy with one fetus in the womb and another in the ovary — Utero-ovarian pregnancy.

16. கண்டப்பை உதர கருப்பம், ஓர் பிண்டம் அடி வயிற்றிலும், மற்றோர் பிண்டம் கருப் பையிலும் காணும் கருப்பம், pregnancy with one fetus in the uterus and another in the abdominal cavity—Utero-abdominal pregnancy.

17. பன்மை கருப்பம், ஒன்றிற்கு மேற் பட்ட கருப்பம், pregnancy with more than one fetus — Plural pregnancy.

கர்ப்ப யந்திரம், தைலங்கள் தயாரிக்க ஆயுர் வேதத்தில் சொல்லி யுள்ள ஓர் வகை யந்திரம், an apparatus described in Ayurveda for purposes of preparing medicated oils.

கர்ப் பயம், கருப் போற்பத்தி, genital conception as opposed to அண் டோற்பத்தி அதாவது முட்டையில் பிறப்பது, conception outside the body from an egg.

கர்ப்ப ரத்தவொழுக்கு, கருப்பா சயத்தில் ஏற் படும் இரத்த வொழுக்கு, hemorrhage from the womb—Uterine hemorrhage.

கர்ப் பரம், மண்டை யோடு, the skull ; 2. பாதி மண்டை யோடு, the half of a skull; 3. அஞ்சனமாக உபயோகிக்கும் ஓர் தாதுப் பொருள், a mineral substance used as a collyrium—Antimony.

கர்ப்ப லட்சணம், கருக் கொண்ட குறி, symptom of pregnancy. See கர்ப்ப சின்னம்.

கர்ப்ப வகனம், சூல் கொண் டிருக்கை, gestation.

கர்ப்ப வதி, கருப்பிணி, a pregnant woman.

கர்ப்ப வதை, பிண்டத்தை அழித்தல், the killing of the embryo.

கர்ப்ப வர்த்தமன், பிண்டத் தாரை, embryopath ; passage leading from the womb.

கர்ப்ப வழிவு, see கர்ப்ப நாசம்.

கர்ப்ப வழக்கு, பிரசவித்த பின் கருப்பையி னின்று ஒழுகப் பெற்ற மாசு, lochial discharge commonly known as 'cleansings' from the uterus after child-birth.

கர்ப்ப வாசம், கருவில் தங்கி நிற்றல், existence in the womb.

கர்ப்ப வாதை, குழந்தை பெறுவதற்காக ஏற் படும் இடுப்பு வலி, labour pains or pangs of child-birth.

கர்ப்ப வாந்தி, மசக்கையால் வாந்தி யெடுத்தல், the pernicious vomiting of pregnancy ; morning sickness — Hyperemesis gravidarum.

கர்ப்ப வாயு, சூல் அல்லது சூதக வாயு, flatulency in the womb causing hysteria.

கர்ப்ப விசுதி, கருக் கொள்ளும் போதே ஏற் படும் அழிவு, abortion even at the beginning of pregnancy.

கர்ப்ப விச்சுயுதி, கருப்ப வழிவு, abortion.

கர்ப்ப விபத்தி, பிண்ட மழிவு, death of a foetus.

கர்ப்ப விப்புருதி, கருப்பக் கழலை, uterine tumour ; 2. கருப்பக் கட்டி, abscess or cancer in the uterus.

கர்ப்ப வேதனை, கருப்பையி லுண்டாகும் வலி, uterus pain.

கர்ப் பாகாரம், பிள்ளை பெறும் அறை, lying-in room.

கர்ப்பாசய சலனம், கருப் பாசய அசைவு, movement of the fetus taking place in the womb ; 2. கருப் பையின் கலக்கம் அல்லது அழற்சி, uterine irritation.

கர்ப் பாசய தாபிதம், பிரசவித்த பிறகு ஏற்படும் கருப்பை அழற்சி, inflammation of the womb after child-birth.

கர்ப் பாசயம், கருப் பை, uterus, womb.

கர்ப் பாசய ரோகம், பொதுவாகக் கருப்பையி லுண்டாகும் நோய்கள், diseases in common of the uterus (womb) viz ;—

1. கர்ப்ப பாதம் — அகாலப் பிரசவம், miscarriage.
2. கர்ப்பப் பிரமேகம்—கருப்பத்தி லேற் பட்ட வெள்ளை யொழுக்கு, leucorrhoea.
3. கர்ப்பப் பிரம்சம்—கருப் பை சழுகல், relaxation of the uterus (womb).
4. கர்ப்பாசய தாபிதம் — கருப்பை யழற்சி, inflammation of the womb.
5. கர்ப்பாசய விரணம்— கருப் பையி லேற்படும் இலந்தி, கட்டி, பிளவை முதலிய இரணங்கள், ulcer, abscess or cancer in the womb.

6. சூதக பந்தம்—மாத விடாய்த் தடை, stoppage of the menses—Amenorrhoea.

7. சூதக காஷ்டம்—மாத விடாய்ப் போக்கு, dysmenorrhoea.

கர்ப்பாசய வக்கிரத்துவம், கருப்பையின் மேற் புறம் பின்னுக் காவது, முன்னுக் காவது வளைந்து போதல், அல்லது முழுதும் பின் னுக்காவது முன்னுக்காவது சாய்ந்து குறுக் காய்ப் படுத்துக் கொள்ளல், retroflexion and ante-retro-version of the uterus or anteflexion and anteversion of the womb.

கர்ப் பாசய வளைவு, கருப்பை இருச் சாய்ந்து மாறல், tilting back of the bottom of the womb—Retroversio uteri.

கர்ப் பாசய விரணம், கருப் பைக் கட்டி, cancer of the uterus; 2. கருப்பைப் புண், ulceration of the womb.

கர்ப் பாசய வுபாங்கம், கருப் பையைச் சார்ந்த வுறுப்புகள், appendages of the uterus.

கர்ப் பாஷ்டமம், கருவி லுதித்த நாள் தொடங்கி எட்டாவது நாள், மாதம் அல்லது வருடம், அல்லது பிறந்ததி னின்று ஏழாவது வருடம். இது உப நயனத்திற்காக குறிக்கப் படும், the eighth day, month or year from the date of conception or the seventh year from the date of birth calculated for purposes of thread-wearing ceremony (upanayanam).

கர்ப் பாதானம், கரு வளர்ந்து நோயின்றிக் குழந் தையைப் பெறுவதற்காக வேண்டிச் செய்யு மோர் சடங்கு அதாவது சீமந்தம், the ceremony of impregnation being one of the principal rites of the Hindus. This is effected for the well being of the child and safe delivery; 2. கருப்பந் தரிக்க வேண்டிச் செய்யும் சடங்கு, rites performed for the very conception of the child.

கர்ப் பிணி, கர்ப்ப வதி; பிள்ளைத் தாய்ச்சி, a pregnant woman.

கர்ப்பிணிக் காப்பன், பிரசவமான பின் அறை வீட்டில் சுரங் கண்டு, இடுப்பில் குருக்கள் எழும்பிச் சிவந்து சீழ் கொண்டு, உடம்பில் வெகு சீக்கிரம் பரவிச் சடுதியில் மரணத்தை யுண்டு பண்ணும் நோய். தகுந்தபடி மருந்து கொடுத்து சிகிச்சை செய்யில் இந் நோ யைத் தடுக்கக் கூடும், an acute suppurative and rapidly spreading inflammation of the cellular tissue beginning in the pelvis after parturition. It is one form of puerperal fever and is usually rapidly fatal. If properly treated at the time of delivery or antiseptics properly applied, the occurrence may be prevented—Erysipelas malignum internum.

கர்ப்பிணி ரோகம், கருப்பவதிக்கு ஏற்படும் நோய்கள், diseases of pregnancy or of a pregnant woman.

கர்ப் புரை, சாம்பிராணி, frankincense; benzoin.

கர்ப் பூசம், தர்ப் பூசினி, the water-melon.

கர்ப்பூர கிச்சிலி, கர்ப்பூர கிச்சிலிக் கிழங்கு. இதுவே சீமைக் கிச்சிலிக் கிழங்கு. இது உயரம் 3-4 அடி, அகன்ற இலை; நடுவில் கருநீலக்கோடு பாய்ந் திருக்கும். பூக்கள் நீலம். உச்சியில் சிவப்பு; வேர் கருங்கி யிருக்கும்; வெளிப் பக்கம் சாம்பல் நிறமாயும், உட் பக்கம் சிறிது சிவப்பாயு மிருக்கும். அடித் தண்டு வாசனையுள்ளது. வேருக்குக் கர்ப்பூர வாசனை யுண்டு. வாயுவைக் கண்டிக்கும் குணம் வாய்ந்தது. சுறு சுறுப்பைக் கொடுக்கும் குணமு முண்டு. வழுவண்டகாயம், சுளுக்கு இவைகளுக்கு மெதத உபயோக மாகும். காய்ந்த வேர் வாசனை யுள்ளதால் ஸ்நானத் திற் குதவும், camphor root — Curcuma zedoaria alias Amomum latifolium. Its height 3–4 ft.; leaves broad with a dark purple sheath down the middle; flowers deep yellow with bright crimson tuft; root externally of an ash colour and internally dark red; smells like camphor. It is a carminative and a stimulent and is applied to bruises and sprains. Dry root forms a scented powder and as such used in bathing.

கர்ப்பூர கிச்சிலிக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு, camphor root or camphor turmeric—Curcuma zedoaria alias Hedychium coronarium. See சீமைக் கிச்சிலிக் கிழங்கு.

கர்ப்பூரக் கிளுவை, மலை மா, hill balsam tree—Balsmodendron caudatum.

கர்ப்பூரக் கொடி, கர்ப்பூர. வல்லி, country lavendar or country borage — Coleus aromaticus. It is also called camphor creeper from its smell; 2. கற்பூர வெற் றிலைக் கொடி, a betel vine smelling like camphor.

கர்ப்பூர சிலாசத்து, இது கர்ப்பூரமும் அயமும் சேர்ந்த ஓர் வகை வைப்புச் சரக்கு. இது

சாம்பல் நிறங் கலந்த சிவப்பு நிறம், மிருதுவாயும், ஒளிவீசுந் தன்மைய தாயு மிருக்கும், எளிதில் ஒடிக்கக் கூடியது. இது வெண் கல்லினத்தின் ஈன சாதியைச் சேர்ந்தது. நேபாளத்தி லிருந்து இறக்குமதி யாகும். இதைப் பொடி செய்து தோல் வழுவுண்ட பாகங்களுக்கும், நமைச்சலோடு கூடிய சிலந்திப் புண்களுக்கும் மேலே தூவுவதற் குதவும். இது மூத்திர வியாதி, பெருமேகம், இரத்தக் கொதிப்பு, கக் கிருமல், அதிசாரம், முதலிய வைகளுக் குபயோகிக்கப் படும். இதன் பற்பம் இருமலையும், நீர்க் கோர்வையினு லுண்டாகும் வீக்கத்தையும் போக்கும். இதைச் சாதாரணமாய்ப் பசு வெண்ணெயில் குழைத்துக் கொடுப்ப துண்டு, it is a foliated granular gypsum supposed to be mixed with camphor and iron — Crystallised foliated gypsum. It is of a reddish grey colour, self-translucent and easily broken. It is an impure variety of alabaster imported from Nepaul; when powdered it is sprinkled over excoriations and ichorous ulcers. It is also employed by native Vaidyans in cases of urinary diseases, syphilis, blood pressure, whooping cough, diarrhoea etc. Calcined powder prepared by Vaidyans is prescribed for cough, swelling in cases of dropsy and other diseases involving unnatural accumulation of water in any cavity of the body. The powder is generally administered mixed with cow's butter.

NOTE.—This should not be confounded with Shilajat (சிலாசத்து அல்லது கல்மதம்) which is known as stone lac or bitumen supposed to issue from stones of mountains in hot weather and found to be produced in mountains where iron abounds.

கர்ப்பூரச் சிலை, see கர்ப்பூர சிலா சத்து.

கர்ப்பூரத் துளசி, கற்பூர வாசனை யுள்ள தோர் வகைத் துளசி, camphor basil, a variety of basil emitting camphor smell.

கர்ப்பூரத் தைலக் காரம், செடிகளி லின்று தயாரிக்கும் கற்பூர வாசனை யுள்ள தைலக் காரம். இது மட்டிப் பால், குக்குலம், புன்னாகம், கருப்பு டாமர் முதலிய பூண்டுகளி லின்று தயாரிக்கப் படும், Terebinthinate stimulants *i.e.* stimulants with camphor fragrance prepared from the oil extracted from various plants such as Malabar ailanto—Ailanthus malabarica; Mookul bdellium—Balsamodendron mukul; Common poon — Calophyllum inophyllum; Black dammer—Canarium strictum etc.

கர்ப்பூரத் தைலம், கருப்பூரத் திராவகம். இது ஓர் மரத்தி லிருந்து எடுக்கப் பட்ட பிசினைப் போன்ற வஸ்துவி லின்று இறக்கும் தைலம். இது நமது நாட்டில் எளிதில் கிடைக்கக் கூடியது. இது கர்ப்பூரத்தைப் போல மிக்க வாசனையாயும், விரு விருப்பாகவு மிருக்கும். காற்றில் வைத்திடக் கர்ப்பூரத்தைப் போலவே ஆவியாய்ப் போகும் தன்மையது. நெருப்பிலிடப் புகை யெழும்பி எரியும். இதற்கு சன்னி, வலி, இசிவு, முதலிய வைகளைக் கண்டிக்குங் குணமுண்டு. உடம்பில் சூடு பெறத் தேய்க்க வுதவும். உள்ளுக்குக் கொடுக்க வயிற்று வலி, பொருமல், வயிற் றுப்பிசம் பித்தவாயு, அசீரணம், விக்கல், வாந்தி பேதி, இருமல் முதலிய நோய்களுக் குபயோகமாகும். மூக்கி லிடக் கிருமிகளைப் போக்கும். தண்ணீரிற் கலந்து ஆசனவாய் வழியாய்ப் பிரயோகிக்க வலிப்பு, இசிவு இவைகள் போம்; இதன் களிம்பு இரணங்களுக்கும், நோயுடன் கூடிய கட்டி, பிளவை, விப்புருதி முதலிய வைகளுக்கும் பூச்சு மருந்தாக உபயோகப் படும். தலைச் சுண்டு, மயி ருதிர்தல், முதலிய நோய்களுக்குத் தேய்க்க அவைகள் குணமாகும். இது ஜனனேந்திரியத்தி லுள்ள மூத்திர உப்புக்களின் சளி சவ்வுக்குச் சுறு சுறுப்பை யுண்டாக்கி மூத்திரத்தை அதிகப் படுத்தும்; மிகுந்த வளவில் இது பேதியை யுண்டாக்கும். மலப் பூச்சிகளைக் கொல்லும், வெளிக்குப் பூச அழற்சியைப் போக்கும்.

சன்னி பாத சுரம், அதித சுரம், மார்வலி, பலவீனம் முதலிய நோய்களில் சுறு சுறுப்பை யுண்டாக்கும். இரத்தங் கக்கல் இரத்த வாந்தி, பெரும்பாடு, கருப்பாசய இரத்த வொழுக்கு, இரத்த மூலம் முதலிய நோய்களில் இரத்தப் போக்கை நிறுத்தும், குடற் கிருமிகளையுங் கொல்லும்.

மேலும் மூளை சம்பந்தமான கோளாறு, பித்த நோய், சீத பேதி, வெள்ளை யொழுக்கு, பாண்டு ரோகம், மேக சம்பந்தத் தாலும், வாத சம்பந்தத்தாலும் ஏற்படும் கருவிழி அழற்சி; கருவிழி மேற்றோலின் அழிவிரணங்கள் முதலான வைகளையும் குணப் படுத்தும். அன்றியும், தீச்சுட்ட புண், அழி விரணங்கள், வாதப் பிடிப்பு, நரம்பு வலி, காசம், பொருத்து வீக்கம் முதலிய நோய்களுக்கு மேற்பூச்சு மருந்தாகவும் உபயோகப் படும், Turpentine oil also called spirits of turpentine—Oleum terbinthinae. The essential oil is drawn by distillation

from oleo-resin (turpentine) collected from turpentine tree called swamp pine —Pinus palustris or from the frankincense pine—Pinus taeda. The concrete turpentine is a softish bright yellow opaque solid, resinous but tough. The oil of turpentine smelling like camphor, is a colourless liquid with a strong peculiar odour and a hot pungent taste. Under exposure to the air, it is volatalised. It is very inflammable when put in fire. It is a sedative, antispasmodic and astringent and it is used in hysteria, epilepsy, puerperal and other convulsions, and in tetanus. It is generally rubbed on the body to produce heat. It is a useful remedy in ileus, colica pictonum and flatulent colic as well as in dyspepsia, indigestion, hiccough, cholera, cough etc. When sniffed, it kills germs; when used in enema through the rectum, it proves invaluable as an antispasmodic and gives relief in hysterical and other convulsions. Ointment of turpentine (unguentum teribinthinae) is useful as a stimulent application to indolent and ill-conditioned ulcers; mixed with ghee, it is applied externally to ulcers, cancers, etc; when applied to the head, it removes dandruff, scurf, falling of hairs etc.

It is primarily a stimulant especially to mucous surfaces of the genito-urinary organs and increase the quantity of urine. In large doses, it is a purgative and anthelmintic; locally and externally applied, it is a valuable rubifacient and a counter-irritant.

In typhus and typhoid fevers as well as in the advanced stages of fevers of other types and in low adynamic inflammation, especially of the lungs and also in cases where vital powers are greatly depressed, it proves invaluable as a stimulant. In passive hemorrhages such as hemoptysis connected with phthisis hematemesis, hematuria, menorrhagia and in uterine hemorrhoidal hemorrhage, it exercises considerable powers as an astringent. For the expulsion of intestinal worms (ascarides) it acts as an efficient vermifuge.

It is also used with advantage in cerebral affections attended with depression, biliary concretions, advanced stages of dysentery, gonorrhoea, leucorrhoea, dropsy, diseases of the eye such as, syphilitic and rheumatic iritis and in incipient gangrene of the cornea.

As an external application, it is used in burns, gangrenous ulcerations, chronic rheumatism. neuralgia, asthma, croup, enlargment of the joints etc.

NOTE.—In Sanskrit, it is known as *Sarala rasa* or *Shrivasa*. It is the *Alah* of the old Testament. It is an oleo-resin from species of coniferae. Galipot is the residue of turpentine and when purified, it is called burgundy pitch. It is made by distilling turpentine in a common still, when the oil will be collected in the receiver.

கர்ப்பூரத் தைலம், *கற்பூரத்தைச் சாராயத்தில் கரைத்துப் பிறகு நவாச்சாரத்தைக் கரைத்த தண்ணீரையும் அத்துடன் சேர்த்துத் தயாரித்து வாதப் பிடிப்பு முதலிய நோய்களுக்கு உபயோகிக்கும் மேற் பூச்சு மருந்து*, a liniment prepared by chemists by dissolving camphor in spirit and adding to it a solution of ammonia. It is knows as compound liniment of camphor—Linimentum camphorae ccmpositum.

கர்ப்பூர நீர், *கற்பூரத்தைத் தண்ணீரிற் கரைத்த நீர். இது மற்ற மருந்துகளோடு அநுபானமாகக் கொள்ளப் படும்*, camphor water—Aqua camphorae. It is used as a vehicle for other medicines.

கர்ப்பூரப் புல், *ஓர் வாசனைப் புல்*, lemon grass —Andropogon citratus.

கர்ப்பூரப் புல் லெண்ணெய், *கற்பூரப் புல்லை வாலையி லிட்டுக் காய்ச்சி வடித்த எண்ணெய். இது சுறு சுறுப்பை உண்டாக்கும், வாயுவைக் கண்டிக்கும், வலியைப் போக்கும் குணமும் இதற்கு உண்டு. நீரைப் பிரிக்கும். மேலுக்குத் தடவி, அழலையைப் போக்கவும் உபயோகப் படும். வாயு ரோகம், குடல் நோய், புளித் தேப்பம், முதல்யவைகளுக்கு மிக்கச் சிறந்தது. வாந்தி பேதியைக் குணப் படுத்தும். வாதப் பிடிப்பு, சூம்பு, வலி, முதலிய நோய்களுக்கும் மிக்க வுதவும்*, the volatile oil of lemon grass, Lemon grass oil; oil of verbena —Oleum andropogi citrati. It is a stimulent, carminative, antispasmodic and diaphoretic; locally applied, it is a rubi-

facient. Therapeutically, it is used in flatulent and spasmodic affections of the bowels, and gastric irritability. It is a remedy of value in cholera and it proves serviceable in arresting vomiting and it is applied externally as an embrocation in chronic rheumatism, neuralgia, sprains and other painful affections.

கர்ப்பூர மணி, பொன் னம்பரினுற் செய்த மணி. இதற்குக் கரோபா அல்லது கஹ்ருபா என்றும் பெயர். இது திருவனந்த புரத்தில் அபூர்வமாய் அகப்படும். ஜப்பானில் அதிகமாய்க் கிடைக்கும், yellow-coloured amber. Karbah — Succinum or Electrum. It is rarely found in Travancore, but in excess in Japan. See அம்பர்.

கர்ப்பூர மரம், இம் மரம் மிக்க உயரம், பூக்கள் சிறியவை, வெளிர் நிறமான பச்சையும், மஞ்சள் நிறமுங் கலந் தன்னவை. காய் சதைப் பற் றுள்ளது. உள் மரம் வெளுப்பாயும், சிவப்புப் புரை படர்ந்ததாயும், வாசனை யுள்ளதாயு மிருக்கும். இதன் சமூலத்தி னின்றுதான் கற்பூரம் எடுக்கப் படும். இம் மரம் சீனம், ஜப்பான், ஜாவா, முதலிய விடங்களில் விசேஷ மாய்ப் பயிராகும். ஆகவே, அவ்விடங்களி லின்று ஏற்றுமதி யாகும் கர்ப்பூரத்திற்கு அடியிற் கண்டபடிப் பல பேர்க ளுண்டு, camphor tree; camphor cinnamon — Cinnomomum camphora. Tree is lofty; flowers small pale and greenish yellow; fruit a drupe; the size of a pea; wood white, damasked with reddish waves, of aromatic odour. The tree is abundantly grown in China, Japan, Java and other places and hence the camphor prepared from the whole plant and exported from the above countries takes the respective names such as :—

1. சீனக் கர்ப்பூரம், China camphor.
2. பார்மோசா கர்ப்பூரம், Formosa camphor.
3. டச்சு கர்ப்பூரம், Dutch camphor
4. ஜப்பான் கர்ப்பூரம், Japan camphor.
5. கிரேக் கர்ப்பூரம், Camphor from Greece.
6. சாதாரண கர்ப்பூரம், Common camphor (prepared from cinnamon bark).
7. சுமாத்திரா கர்ப்பூரம், Sumatra camphor.

கர்ப்பூர மரம், நீலகிரி, என் ணெய் மரம், இதன் தோற்றத்தையும், இலையின் வாசனையையும் கருதி இதற்கு இப் பெயர் வந்தது. இது மிகவும் உயரமாய் வளரு மரம். நீலகிரியில் விசேஷம். இதன் கொழுந்தும், தழையும் வெண்மை நிறம், பூக்கள் பெரியவை. தனியாயும் அல்லது 2-3 பூக்களாய்ச் சேர்ந்து மிருக்கும். இதன் இலை, தளிர் முதலியவைகளி லிருந்து எடுக்கும் யெண் ணெய் கற்பூர வாசனை யுள்ளது, blue gum, Australian gum—Eucalyptus globuleus. It is so called from its appearance and the smell of its leaf. It is a lofty tree found in common in Nilgiris. Young shoots and foliage are white in colour; flowers large solitary or 2 or 3 together. The oil from leaves and young shoots is camphor-like in smell.

NOTE.—The term camphor tree (கற்பூர மரம்) is applied wrongly to the whole eucalyptus genus (Australian gum trees), because of the mere smell, although no camphor is produced. The best of this kind was introduced into Nilgiris from Tasmania.

கர்ப்பூரம், இதுவே சூடன். இது ஓர் வாசனை கடைச் சரக்கு. எல்லாக் கடைகளிலும் விற்கப் படும். இது ஜப்பான், சீன தேசங்களில் ஏராளமாய்க் காடுகளில் விளையும், மரத்தின் எண்ணெயி லிருந்து தயாரிக்கப் படும். இது கர்ப்பூர மரத்தின் சமூலத்தைத் துண்டுகளாக நறுக்கித் தண்ணீரில் காய்ச்சிப் பிறகு எடுத்துப் பக்குவப் படுத்தப் படும். இது வெண்மையான கட்டிகளாகவும், மிக்க வாசனையும், சிறுமிளப்பும் பொருந்திய தாகவு மிருக்கும். உருசிக்க விரு விருப்பாயும், குளிர்ச்சியாயும், சில்லென்று மிருக்கும். சாராயத்தில் கரையும், தண்ணீரில் மிதக்கும். காற்றில் வைக்கக் கரைந்து ஆவியாய்ப் போகும்; கொளுத்திவிட எரியும். அதிக அளவில் உள்ளுக்குக் கொடுக்க விஷத் தன்மையைக் காட்டும். இது இரைப்பு, மா ரடைப்பு, மார்ச் சளி, மார்த் துடிப்பு, இவைகளுக்கு மேலே பூசவும்; சூதகச் சூலை, பிரசவ ரோகம், சொட்டு மூத்திரம், அதிசாரம் இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கவு முதவும். அழி புண், கீல் வாயு, சிரங்குப் புண் முதலியவைகளுக்கும், நமைச்சல், படுக்கைப் புண் இவைகளுக்கு மேலுக்கும் உப யோகிக்கலாம். இதனின்று தைலமும், செய நீரும், தீ நீரும் எடுக்கப் படும். பூசும் தைலத்தைத் தேங்கா யெண்ணெய் அல்லது விளக் கெண்ணெயோடு சேர்த்துக் கருக்கு, நரம்பு வலி, இடுப்பு வலி இவைகளுக்குத் தேய்க்க நிலை குணமாகும். இப்

பூசம் ஈந்தலத்தை மார்பில் தேய்க்க மேற் சுவாசம், காசம், இவைகளைச் சாந்தப் படுத்தும், கற்பூரத்தையும், அபினியையும் கூட்டிச் சிறிது அளவாகப் படுக்கைக்குப் போகு முன் சாப்பிட இந்திரியக் கலிதம் நீங்கும் இதைச் சாராயத்தில் சேர்த்துத் துணியில் நனைத்துப் போடத் தலை வலி நீங்கும். வேது பிடிக்க வியர்வை யுண்டாகும். வாந்தி பேதிக்கு இது முக்கிய மருந்து, camphor—Camphora of chemists. It is a product of the tree (cinnamomum camphora). It is a fragrant substance available in all bazaars. It is abundantly obtained from the concrete oil extracted from the wood etc., of the tree by sublimation. It occurs in white translucent masses of a powerful penetrating odour and pungent taste, followed by a sensation of coolness; readily soluble in rectified spirit; floats on water; volatalises slowly when exposed to air; burns with a bright flame. In large doses, it is an acronarcotic poison.

It is therapeutically used in asthma, and chest complaints (angina pectoris), bronchitis and palpitation of the heart. It is extensively employed also in the affections of the genito-urinary system comprising dysmennhorea, spermatorrhoea, incontinence of urine, irritable state of the uterus, diarrhoea etc. It is externally applied in gangrene, rheumatism, gout, ulcers, sprains, pruritus, in skin diseases, bed-sores etc. Mixed with cocoanut oil or castor oil, it is used in the form of embrocation for sprains, neuralgic affections, hip-pain etc. When applied to the chest, it gives relief in asthma and other lung and heart affections. Mixed with opium it is a good aphrodisiac; mixed with alcohol, soaked in lint and applied to head, it will relieve head-ache. Its vapour when inhaled produces perspiration and the drug is a good remedy for cholera. See கருப் பூரம்.

NOTE 1.—Camphor is a vegetable principle arising from its separation in sublimation of the concrete volatile oil contained in the wood of the trees. It is not a gum or a resin as is generally supposed. Impure camphor of the shops is concrete, grey, granular, moist and full of heterogenous particles; but refined camphor sold, is in flat cakes, semi-transparent with a crystalline appearance. In either case, it has a fragrant odour and a hot taste like that of pepper-mint; it is inflammable and very volatile as to easily pass into air when left exposed when it is warm. Its odour is very penetrating; weight sensibly decreases by keeping, owing to evaporation. Bazaar dealers moisten it to increase the weight. Camphor is prepared by boiling chips of the wood in a retort and then purifying it by sublimation and making it into cakes

In Medicine, camphor is primarily a diffusable stimulant and diaphoretic. In veterinary practice, it is used in fever and for destroying worms in cancer. Vaidyans consider Borneo and Sumatra camphor to be more highly medicinal than ordinary camphor.

NOTE 2.—Sumatra camphor called also Barus camphor has also a very high reputation. Camphor may also be procured from thyme, marjoram, ginger, Indian sage-leaf etc. The so-called Mercury camphor (இரச கற்பூரம்) is an impure sub-chloride of mercury.

கர்ப் பூரம், கொளுத்தும் கற்பூரம், common camphor (used for burning); 2. கற்பூர மரப் பொது, eucalyptus genus; 3. சீனு அல்லது ஜின்னிக் கருப்பூரம், camphor cake of China and Japan.

கர்ப்பூர வல்லி, பாஷாண பேதி. இச் செடி 2-3 அடி உயரம், இலைகள் அகலமாயும், முட்டை வடிவமாயும், அடிப் பாகம் வட்டமாயும், கனதியாயும், இரண்டு பக்கமும் சொர சொரப்பாயும் இருக்கும்; மிக்க வாசனை யுள்ளது இது தரையோடு படர்ந் திருக்கும். இலை முழுதும் சாறுள்ளது. தோட்டங்களில் அபூர்வமாய்ப் பூர்க்கும். இதன் சாறு வயிற்றின் வாயுவைப் போக்கும் குழந்தைகளுக்கு வயிற்று வலிக்கு இதைக் கொடுப்ப துண்டு. இலையைக் கீரையாகச் சமைத்தும் உண்ணலாம். இதனால் கல் லடைப்புப் போகும், country borage—Coleus aromaticus alias C. amboynicus. Shrub 2-3 ft., branches pubescent; leaves broad, ovate, rounded at the base, very thick, hispid on both surfaces with very fragrant smell. Flowers pale blue, and when inspissated, very aromatic. Solid succulent leaves; common in gardens, but it rarely flowers; low growing and wide-spreading herb. Expressed juice is a powerful carminative and is given in colic in children. Leaves eaten mixed with

articles of food. The plant is found useful in gravel.

NOTE.—This is another species of the same fragrant camphor creeper, so called from the smell of its leaves.

26. தாளம் — கை வாத்தியம், கைத் தாளம், the art of beating the cymbals for keeping time in music—Cymbalogy.
27. அஸ்திரப் பரீட்சை — வில் வாச்சிரமம், the art of shooting with bow and arrow including that of throwing darts — Archery. *C f..* தனுர் வித்தை.
28. கனகம் அல்லது சொர்ணப் பரீட்சை —பொன்னின் மாற்றறியும் வித்தை, the art of finding out the assay of gold or examining the refineness and preciousness of gold.
29. இரதப் பரீட்சை — இரதம் ஓட்டும் வித்தை, the art of driving a chariot—Aurigation.
30. கஜப் பரீட்சை — யானையின் குணம் குறிகளை யறியும் வல்லமை, the expert knowledge in studying the characteristic marks of an elephant.
31. அசுவப் பரீட்சை — குதிரையின் நிறம் குறி முதலிய வற்றைத் தெரிதல், the knowledge of colour, marks qualities etc., of a horse.
32. இரத்தினப் பரீட்சை — நவ ரத்தினங் களின் ஒளி, சொலிப்பு, நீரோட்டம் முதலிய குணங்களைச் சோதித்து எடுத்தல், the art of examining brilliance, lustre, flaws etc. in the nine gems before choosing them.
33. பூமிப் பரீட்சை — நிலத்தின் கூறு, நீர் வளப்பம், தாதுப் பொருள் முதலியவைகளை நிர்ணயிப்பது, the

knowledge of the nature of different soils, fertility, source of supply of water and minerals contained therein, etc—Geology.

34. சங்கிராம இலக்கணம்—யுத்த முறை விதி, கிரமம், முதலிய வைகளைக் கற்றுத் தேர்தல்; போர் வித்தை, military warfare and tactics.

35. மல்ல யுத்தம் — மற் பிடி அல்லது மற் போர், wrestling, pugilism (boxing), gymnastics, athletic art etc.

36. ஆகருஷணம்—அழைத்தல், the art of summoning or calling a spirit by enchantment.

37. உச்சாடனம்—அகற்றல், ஏவல் முதலியன, expelling a demon from a person or exciting it to injure some one by magical incantations.

38. வித்து வேஷணம் — பகை மூட்டல், exciting hatred and enmity between parties by magic spells.

39. மதன சாஸ்திரம்—கொக் கோக நீலை நூல், erotics—Modus cocundi.

40. மோகனம் — மயக்குதல், libidinous fascination through magic.

41. வசீகரணம் — புணர்ச்சிக் கிணங்கும் படி வசியம் செய்தல், the art of influencing women to yield to sexual intercourse or win a person to one's side. *Cf.* Hypnotism.

42. இரச வாதம் — இழிந்த வுலோகங் களைப் பொன் னாக்குவது, transmutation of baser metals into gold—Alchemy; 2. பௌதிக நூல், Chemistry.

43. காந்தருவ வாதம் — ஆகாயத்தில் வசிக்கும் காந்தருவர்களைப் பற்றிய இரகசியங்கள், the knowledge of the secrets of the conditions etc. of heavenly beings and celestial choristers.

44. பைபீல வாதம்—இழிவகைப் பிராணி களின் பாஷைகள், the language of the lower order of animals and creatures down to emmets.

NOTE.—Also spelt as பிபீல வாதம். the art of exploring caves of mountains and adopting them for human habitation.

45. கவுத்துக வாதம்—மனோ துக்கத்தி லிருந்து மனோ குதூ கலத்தை யுண் டாக்குவது, the restoring of pleasure to a distressed mind.

46. தாது வாதம்—நாடி நடை யறிதல், the knowledge of pulse, 2. தாது நூல், mineralogy.

47. காருடம் — மாந்திரீக வித்தையினால் விஷத்தைப் போக்கல், charms and incantations for expelling poison from the system.

48. நஷ்டப் பிரசனம், information respecting any loss, by astronomical calculations.

49 முஷ்டி பிரசனம், telling what is concealed in a man's hand by astronomical calculations.

50. ஆகாயப் பிரவேசம் — ஆகாயத்தி லெழும்பி மறைதல், the art of entering high up in the sky and becoming invisible, including the balloon ascent.

51 ஆகாய கமனம் — ஆகாய மார்க்கத் தில் உலாவல், the art of walking in the air.

52. பரகாயப் பிரவேசம் — கூடு விட்டுக் கூடு பாய்தல், the art of passing from one body into another body or substance at pleasure—Metempsychosis.

53. அதிரிசயம் — தன்னை மறைத்துக் கொள்ளல், the art of making oneself invisible.

54. இந்திர சாலம் — சால வித்தை, the art of conjuring or juggling; legerdemain through stratagems or tricks.

55. மகேந்திர சாலம் — ஆகாயத்திலும் பூமியிலும் அதிசயங் காட்டல், the art of performing wonders in heaven and earth.

56. அக்கினி ஸ்தம்பம் — நெருப்பைக் கட்டுவது; கனல்மே லிருத்தல், the art of restraining the action of fire, *i.e.* subduing the efficacy of fire and walking or remaining or resting on fire.

57. சல ஸ்தம்பம் — நீர் மேல் நடத்தல், the art of walking on the surface of water.

58. வாயு ஸ்தம்பம் — காற்று அல்லது மூச்சைப் பிடித்தல், the art of restraining the wind or the breathing.

59. திருஷ்டி ஸ்தம்பம் — கண் கட்டு வித்தை, the art of screening an object from being seen.

60. வாக்கு ஸ்தம்பம்—வாயைக் கட்டல், the art of restraining or nullifying the faculty of speech.

61. சுக்கில ஸ்தம்பம் — இந்திரியத்தைக் கட்டுதல், the art of restraining the semen virile.

62. கனை ஸ்தம்பம் — மறைத்து வைத்திருப்பதை ஒருவரும் கண்டு பிடிக்காத படிச் செய்தல், the art of preventing the discovery of things concealed.

NOTE.—This is also spelt as சனன ஸ்தம்பம், birth-control.

63. கட்க ஸ்தம்பம் — குத்து, வெட்டு முதலியவைகளால் காயம் படாத படிச் செய்தல், the art by which the power of sword or other weapon is nullified.

64. அவத்தைப் பிரயோகம்— யோகாப் பியாசத்தினால் ஆன்மாவை பஞ்சா வஸ்தையில் ஏதாவது ஒன்றின் நிலையில் நிறுத்தல், the power of stationing the soul at pleasure in any one of the five stages by virtue of Yoga practice or abstract meditation ; 2. சூனியம் வைத்துக் கொல்லல், the art of killing by Sorcery.

கலைக் கொம்பு, கலைமான் கொம்பு. இது உபரசச் சரக்கி லொன்று, stag's horn. It is one of the 120 kinds of natural substances.

கலைச் செம்பு, ஓர் உயர்ந்த சுத்தச் செம்பு, a superior kind of refined copper.

கலை ஞானம், see கலைக் கியானம் ; 2. அமுத கலைக் கியானம். இது அகஸ்தியர் செய்த வோர் நூல், a treatise on medicine said to be-compiled by Agastya ; 3. நூலறிவு, the knowledge of art and sciences ; 4. எல்லாவிதத் தொகுப் புடைய ஓர் வைத்திய நூல். இது நோய் சிகிச்சை, மருந்து கலத்தல், சத்திரம் செய்தல், உயிர்ப் பித்தல், உறுப்புகளைப் பொருத்துதல், காய கற்ப மாக்கல், முதலிய இரகசியங்களைக் குறிக்கும். a complete medical science including several chapters on the science of healing, physic, pharmacy, therapuetics surgery, revival of the dead, re-union of several limbs, rejuvenation and other mysterious things done with supernatural powers. 4. கல்வி யுணர்வு, the literary knowledge.

கலைதல், ஒன்றை விட்டுப் பிரிதல், separation of one from another.

கலைத்தல், குலைத்தல், to break up ; 2. பிரித்தல், to separate from anything.

கலைத் தோல், ஆண் மான் தோல், the skin of a male deer.

கலை நாறி, கஸ்தூரி, musk.

கலைப் பதி, பெருங் சின்னி, a large variety of Indian shrubby copper leaf (as opposed to சிறு சின்னி, a smaller variety— Acalypha fruiticosa.

கலைப் பாக்கு, கல் பாக்கு, venezuala soap bark tree—Pithecolobium bigeminum.

கலை மகள், மனோ சிலை, red arsenic.

கலை மகள் கண்ணி, வாடா மல்லிகை, ever-fresh jasmine—Gomphrena globosa.

கலை மகள் நிறம், வெள்ளைப் பாஷாணம், white arsenic.

கலை மருது, see கலி மருது.

கலை மான், ஆண் மான், male deer or hart ; 2. வட தேசத்துக் கலை மான், rein-deer.

கலை மான் கொம்பு, இதற்குச் சிங்கி யென்றும் பெயர். இதை இழைத்துப் பற்று போட வலி நீங்கும், உள்ளுக்குக் கொடுக்கப் பெண் ருதுவாவாள், பற்பம் செய்து கொடுக்க மேகச் சூடு, கால் கை எரிச்சல், கண் நோய் முதலியன குணமாகும், hart's horn or antelope's horn—Cormi cervi. Rubbing this and applying it to swelling or the affected part relieves pain ; given internally, it brings about maturity in women. Calcined powder given internally, is a good remedy for venereal heat, burning sensation of the limbs, diseases of the eyes etc. See கலைக் கொம்பு.

கலை மான் மூலி, திருகு கள்ளி, Indian tree spurge—Euphorbia tirucalli.

கலையம், கலயம், a small earthen pot generally used for securing medicines in, in calcination.

கலை யிலக்கும் காரி, மாமிசபேதி, a mineral stone supposed to dissolve flesh.

கலை வல்லோர், காருசி மரம், jungle cork tree — Holoptelea integrifolia ; false white teak—Trewia nudiflora.

கலோசயம், பிராய் முட்டி அல்லது புறு முட்டி; paroqueet burr — Triumfetta Mhomboidea.

கலோலம், see அண்டம் சாக்கை.

கல், கல்லு, stone; 2. நவரத்தினங் களு ளொன்று, one of the nine gems; 3. மலை, mountain; 4. கருப் பிண்டம், embryo or foetus; 5. பாஷாணம், poison; 6. சித்திர மூலம், Ceylon-leadwort — Plumbago zeylanica; 7. செங் கழுநீர்க் கிழங்கு, root of Indian red water-lily — Nymphae odorata; 8. பாகலிலை, the leaf of Pagal creeper—Mimordica charantia; 9. இருமல், cough; 10. சிறு கல், gravel; 11. பாறை, rock; 12. முத்து, pearl; 13. பச்சைக் கல்லின் களங்கம், a flaw in an emerald; 14. செங் கல், brick.

கல், கல்லு. இது மண் அல்லது தாது வகை யினுலாகிய ஓர் கடினமான வஸ்து. சாதா ரணமாகக் கட்டடங் களிலும், சிறுபத் தொழில்களிலும், வீடுகளிலும் உபயோகப் படுத்துவத னிமித்தம் இதைப் பற்றி விரிவாக எழுத வேண்டிய அவசிய மில்லை. இதைக் குழந்தை முதல் எல்லோரும் அறி வார்கள். ஆனால் இக்கல் லுண்டாகும் விதமும் அதன் பல பிறுசுகளும், உபயோ கங்களு மட்டும் அடியிற் கண்டபடி கூற வேண்டிய தவசியம். It is a hard solid mass of earthy or mineral matter. It is now in general use in manual or mechanical arts such as building and architecture and in decorative and domestic arts. It does not require detailed comment as it is known to everyone, even to a child, but its different classifications however, seem necessary to be mentioned here and they are as follows:—

1. கருங் கல், granite stone.
2. சலவைக் கல், marble stone — a crystalline form of limestone capable of being polished. C.f. Hornblende.
3. கரும் பளிங்குக் கல், basalt, C.f. No. 13.
4. மணற் கல், sandstone.
5. சவுக்காரக் கல், steatite.
6. தாமிரக் கல், porphyrytic granite.
7. பச்சைக் கல், greenstone i.e. igneous rock composed of felspar and hornblende.
8. இரட்டைக் கருங் கல், binary granite.
9. சித்திரக் கருங்கல், graphic granite.
10. படிக்கட்டுக் கல், tran rock (German) or step stone. It is so called from its being found frequently in hills or buildings with step-like terraces on the sides.
11. கற் பலகைக் கல், slate.
12. கற் பூ, flower stone — any fossil or organic remains, animal or vegetable, imbedded in rocks.
13. மேக வர்ணக் கல், basalt, a volcanic rock. The term is applied to a crystalline form of dolerite.
14. காரீயக் கல் அல்லது சிலா வங்கக் கல், black lead stone or graphite. It is a form of carbon occurring mixed with iron oxide in crystalline rocks.
15. காவிக் கல், (கற் காவி), red ochre stone; red chalk. It is a mineral dye containing peroxide of iron.
16. சிவைச் சுண்ணும்புக் கல், yellow limonites chalk.
17. சுண்ணும்புக் கல், ordinary limestone including rocks made up of lime.
18. சுக்கான் கல் (கருஞ் சுக்கான், வெண் சுக்கான்), kankar or conglomeratic limestone.
19. கூழாங் கல், pudding stone — shingle i.e. loose pebbles on the sea-shore.
20. குரு விந்தக் கல், grey flint — an aqueous rock.
21. குளியற் கல், (ஓர் வித மணற் கல்), bathstone — a variety of sandstone; C.f. மணற் கல்.
22. மா வயிரக் கல், felspar.
23. உரை கல். இது கருப்பாகவும், மிருதுவாயும், பளபளப் பாயு மிருக் கும், touchstone — Lapis lydius. It is black, smooth and somewhat glossy.
24. பளிங்குக் கல், crystal.
25. வெண் கல் (ஓர் விதப் பளிங்குக் கல்), white stone or white translucent quartz. See 24.
26. பருக்கைக் கல், loose pebble with or without sand.
27. பரு மணற் கல், grit, i.e. a sandstone with angular grains of quartz.

28. சருப்பாங்கக் கல், serpentine i.e. the mottled appearance of rock resembling a serpent's skin.

29. (a) சாணைக் கல், hone.

(b) திருப்பதிக் கல், whetstone found near Tirupathi and used by barbers for sharpening razors. C.f. சாணைக் கல்.

30. செம்புத் தீக்கல், copper pyrites—Sulphide of copper.

31. செங் கல், red stone or brick.

32. சொறிக் கல், laterite.

33. சவுக்காரக் கல், soapstone. It is a metamorphic rock with a soft and greasy feel.

34. மாக் கல், stealite or pot stone. There is a quarry of good pot stone at the Nagari hills. C.f. சவுக்காரக் கல், in No. 32.

35. தவளைக் கல், iron stone or any ore of iron.

36. தீக்கல், fire-stone—Pyrites.

37. தீத் தட்டிக் கல் அல்லது சக்கி முக்கிக் கல், flint. It is an aqueous rock of siliceous concretion.

38. வெட்டுக் கல், laterite. See சொறிக் கல், in No. 32.

39. இரத்தினக் கற்கள், கோமேதகம், புட்ப ராகம், வயிரம், பச்சை, நீலம், சிவப்பு, வயிடூரியம், முதலியன, precious stones such as cinnamon stone, topaz, diamond, emerald, sapphire, ruby, cat's eye etc.,

40. பல்பக் கல், see மாக் கல் in No. 34.

Besides the above classification, the following are the several kinds of stones, according to Tamil Medical science, having medical virtues :—

1. கெண்டகச் சிலை.	13. காகப் பச்சை
2. சூடாலைக் கல்.	14. காகச் சிலை.
3. தேக்கல்.	15. மந்தாரச் சிலை.
4. மஞ்சட் கல்.	16. சாலக் கிராமம்.
5. சிலா சாகம்.	17. மாக்கிஷச் சிலை.
6. அன்ன பேதி.	18. மாந்துளிர்க் கல்.
7. அஸ்தி பேதி.	19. காஸ்மீரக் கல்.
8. சொர்ண பேதி.	20. காணகக் கல்.
9. மாக்கிஷ பேதி.	21. குருந்தக் கல்.
10. கற் சிட்டம்.	22. காந்தக் கல்.
11. முடவாட்டுக் கல்.	23. நீலாஞ்சனக் கல்.
12. கோ ரோசனை.	24. நீலபடிகக் கல்.
25. நாரக் கல்.	30. சிலா வங்கம்.
26. இராசவர்த்தகக் கல்.	31. தவளைக் கல்.
27. கருடக் கல்.	32. அஞ்சனக் கல்.
28. படிகக் கல்.	33. குருவிந்தக் கல்.
29. சகஸ்திர பேதி.	34 கதண்டுக் கல்.

NOTE No 1.—Is a ternary compound of felspar and mica. Syenite is another variety of granite—a compound of quartz felspar and hornebleud.

No. 2.—Consists of two varieties viz. black (கருங் சலவைக் கல்) and white (வெள்ளைச் சலவைக் கல்). It means cold stone, i.e. any stone which when polished feels specially cold to the touch.

No. 3.—Is composed of auguite and labrodorite

No. 4.—Belongs to aqueous rock of sand group; grinding stones are made from this.

No. 5.—Is a metamorphic rock including மாக்கல் of No. 34; and பல்பக் கல் of No. 40. It is composed of silica, magnesia, alumina, and oxide of iron in varied proportions.

No. 6.—Is an igneous rock in which large crystals of felspar are imbedded.

No. 7.—Resembles white stone of Scotland and is easily liable to decay It is composed of felspar and hornblende. Certain plutonic rocks containing augite are also called green stones.

No. 10.—The Lava and its accompanying volcanic ash come under this head.

No. 17.—Is known as வெள்ளைக் கக்கான் white limestone and as கருங் கக்கான் black limestone. No. 17 comes under Metamorphosed rocks, while No. 18 under aqueous rocks.

No. 20.—Is purely a siliceous fossil with which is prepared a grindstone for cutting many valuable precious stones.

No. 22.—Includes albite and labrodite as well.

No. 23.—Is used by gold and silversmiths for ascertaining the purity and the exact colour of metals.

No. 33.—It is composed of silica, magnesia, alumina, and oxide of iron. In its laminated form, it is known as அப்பிரகம் (mica).

கல், பூண்டின் பெயர்களில் அடியிற் கண்டபடி முதற் பெயராக வரும் சொல், the first term in the compound names of plants as mentioned below :—

கல்லு மாவு—Mangifera indica.
கல் அத்திமரம்—Ficus glomerata.
கல் வாழை—Musa paradisiaca.
கல் தாமரை—Nelumbium speciosum.
கல் அத்தி—Ficus glomerata.
கல் ஆல்—Ficus bengalensis.

2. மீன் பெயர்களுள் அடியிற் கண்டபடி முதற் பெயராக வழங்கும் சொல்:—

கற் குறவை—Ophiocephalus genus.
கல் வாருவல்—Polynemus indicus.
கற் கெண்டை—Barbus genus.
கல் வாரல்—Rhynchobdella aculeata.
கற் பிலாச்சை—Ostracion genus.

NOTE.—The term கல் (stone) takes its name from its habitat in rocky soil or ground and sometimes from hardness of fruit, wood etc.

கல்க கஷாயம், ஆயுள் வேதப்படி உலர்ந்த சரக்குகளைத் தண்ணீர், பால், உமிழ் நீர், இலைச் சாறு முதலியவைகளை விட்டு ஊற வைத்து இரசம் பிழிந்துக் கொள்வது, (*In Ayurveda*) an extract taken from the mixture of dried drugs steeped in water, milk, saliva, juice of leaves etc.

கல் கண்டம், கலுவம், grinding stone intended for powdering medicine and drugs.

கல் கண்டு, கற் கண்டு, sugar candy.

கல் கண்டேத்தி, கரு நாகம், black cobra.

கல் கபரி, கல் பெருங்காயம். இது ஓர் உபரசச் சரக்கு; a hard variety of assafoetida as opposed to பால் பெருங்காயம், the soft one. It is one of the 120 kinds of natural substances contemplated in Tamil Medicine.

கல்க பலம், மாதுளை, the pomegranate plant.

கல்க மருந்து, தைல வண்டல், the hard sediment left at the bottom of the vessel after the preparation of medicated oil.

கல்கம், எண்ணெய்க் கசடு, the viscous sediment deposited by oily substances; 2. காது குறுக்கு, the wax in the ear; 3. ஆயுள் வேதத்தில் குளிகை அல்லது மாத்திரையின் பெயர். (*In Ayurveda*) it is a name applied to a medicine powdered or ground and then made or formed into a pill; 4. ஈரமான அல்லது உலர்ந்த பூண்டுகளைப் பால் அல்லது தண்ணீர் விட்டுக் கல்லில் அல்லது கலுவத்தில் விட்டு கெழுத் துவையலைப் போல் அரைத்து எடுத்த பசை, a medicated tenacious paste prepared by grinding a fresh or dried plant or plants in a mortar with a pestle into a paste by adding to it either milk or water if necessary — A medicinal or levigated paste.

NOTE.—In connection with any medicated oil or Ghritam, this term is invariably used to mean the paste of drugs with which the oil or the Ghritam is treated or cooked.

கல் கம்பி, பூதத் தான்றி மரம், Carey's myrtle bloom—Careya arborea.

கல் கரி, ஓர் வகை நிலக் கரி, a kind of coal usually anthracite. It is the result of the mineralisation of vegetable remains.

கல் கலிங்கி, சிகப்பு அகில், pink cedar—Acrocarpus fraxinifolius.

கல்க விதி, கல்கம் அல்லது குளிகை செய்ய ஏற்பட்டுள்ள முறையும், அதை அநுசரித்த கட்டளைகளும், the several processes and rules relating to the preparation of medicinal pastes and pills.

கல் களிஞ்சி, சிகப்பு அகில், pink cedar—Acrocarpus fraxinifolius; 2. தூண் மரம் அல்லது சந்தன வேம்பு, Sandal neem—Cedrela microcarpa; 3. மதகிரி வேம்பு, Indian Mahogany—Cedrela toona.

கல் காரம், கற்களாக அகப்படும் காரச் சரக்குகள், stone-like alkaline substances found naturally; 2. வெண்காரம், borax; 3. படிக் காரம், alum; 4. பனை வெல்லக் கட்டி, palmyra jaggery in a lump; 5. பனங் கற் கண்டு, sugar-candy prepared from palmyra juice; 6. பூமியி லிருந்து வெட்டி எடுக்கப் படும் கல் போன்ற படிக் காரம், வெண் காரம் முதலிய கடினமான காரங்கள், mineral mordants or alkalies hard like stone such as alum, borax etc.

கல் கார்க்கு, கல் மூடி, glass-stopper.

கல் கார்க்கு புட்டி, காற்றுப் புகாவண்ணம், கண்ணாடி மூடி யிட்ட குப்பி, glass-corked air-tight bottle.

கல் கால், முட்ட வாட்டுக்கல். இது உபரசச் சரக்குகளி லொன்று, it is one of the 120 kind of natural substances described in Tamil Medical Science.

கல் கிளிஞ்சி, களிஞ்சி, which see; 2. செவ் வகில், red cedar—Cedrela toona.

கல் குடல், கல்லைப்போல உறுதியான குடல், bowels as strong as stone; 2. கல்லு கலையும் செரித்துக் கொள்ள வல்ல குடல், (figuratively) bowels capable digesting even hard substances like stones; 3. கோழிக் குடல், intestines of fowls;

4. எளிதில் பேதி யாகாத குடல், bowels not easily moveable as they usually are not when taking even purgatives.

கல் குறவை, ஓர் வகைக் குறவை மீன், snake-headed fish belonging to Ophiocephalus genus. See கற் குறவை.

கல் கெண்டை, கெண்டை மீன் வகை, a variety of carp-fish of the Barbus genus. See கற் கெண்டை.

கல் கொறுக்கை, ஓர் வகைக் கடல் மீன், இது வெள்ளியைப் போல் பளபளப் பதியும், வெளிப்புறம் ஆறு வரியைம் போன்ற சிகப்பு வரிகளும், பக்கங்களில் மூன்று வரிகளும், முதுகின் சிறும்புகளில் மூன்று வரிகளும் உள்ளது, a sea-fish silvery shining in colour with six brownish black bands externally, three bands laterally and three rows along the spinous portion of the dorsal—Pristipoma furcatum; 2. பகே பேதி, a sea-fish of the same variety—Pristipoma percidae.

கல் கோவை, see கற் கோவை.

கல் சதை, இரணம், பிளவை, கட்டி முதலிய வைகளைச் சுற்றிலு முள்ள கல்லைப் போற் கடினமான தசைப் பாகம், the hard muscular portion surrounding an abscess.

கல் சிலை, ஓர் பறவை, a kind of bird; 2. கல் மலை, rocky mountain; 3. காவிக் கல் மலை, mountain containing red ochre; 4. கல்லினாற் செய்த பதுமை, a stone image.

கல் சுண்ணம், கற் சுண்ணாம்பு, stone lime; it is a hard variety of lime as opposed to சிப்பிச் சுண்ணம், shell lime.

கல் சுண்ணாம்பு, see கல் சுண்ணம்.

கல் சூரி, கழற் கொடி, eagle stone creeper—Caesalpenia bonducella alias Guilandina bonducella.

கல் செம்பு; கல்லோடு கூடிய செம்பு, அதாவது செம்பு, கிமிலா, துரிசு முதலியன, copper found in the mineral kingdom in a combined state such as in copper pyrites, copper glances, copper sulphate etc.

கல் செம்பு, ஓர் கற்ப மூலிகை, a rejuvenating plant (unidentified). See கற் செம்பு.

கல் தாமரை, மலைகளிலும், பாறைகளின் சந்து களிலும் முளைக்கும் நீ ருதவி யில்லாத தாமரை. இது மகா மூலிகைகளில் ஒன்று. அரப் பொடியை இதனால் கருக்கிட்டுப் புடமிடச் செம் பாகும். ஆகவே இதற்கு அயத்தினிடச் செம்பி என்றும் பெயர் வழங்கும். இதனால் வயிற்று வலி போம், dry lotus generally found grown in the crevices of rocks and mountains. It is classified as one of the 28 potent drugs contemplated in Siddhar's science—Nasturtium. When the juice of this plant is applied to heated iron repeatedly, it is said to convert it into copper.

கல் தாமிகம், கடவழிஞ்சில், a kind of creeper probably of the genus Alangium plant.

கல் திருக்கை, முதுகின் பக்கம் சிறு சிறு கற்களை யுடைய வோர் வகைத் திருக்கை மீன். இது வாத ரோகியில் பத்தியத்திற் குகந்த கறி, a sea-fish of the Ray genus known as stone-back. It is useful in diet and is prescribed by Vaidyans in rheumatic pains—Trygon (genus).

கல் துத்தி, விஷங்களைப் போக்கு மோர்வகைத் துத்தி, stone mallow—Abutilon indicum. It serves as an antidote to poisons.

கல் துரிஞ்சி, கரு வாகை, fragrant sirissa—Albizzia odoratissima.

கல் துளசி, கப சுரத்தைப் போக்கும் ஓர் வகை முள் துளசி, stone basil—Ocimum genus. It is used in fever attended with phlegm.

கல் தேக்கு, ஓர் வகை மரம், racemed fish-bone tree—Dillenia bracteata; 2. பூதந் தான்றி மரம் அல்லது இலச்சை கெட்ட மரம், carey's myrtle bloom — Careya arborea.

கல் நகம், மலை, mountain.

கல் நவரை, ஓர் வகைச் சிறிய கடல் மீன். இது ஊதாச் சிகப்பு நிறமாயும் மஞ்சள் வரிகள் அமைந்தும் இருக்கும். 16. அங்குல நீள முள்ளது. உண்பதற்கு மிக்க ருசியா யிருக்கும். இதை ஆங்கிலேய மீருசிய முல் லட்டுக்குச் சமானமாகக் கூறலாம், a small species of sea-fish; stone-mullet—Upenius indicus. It is purple red with yellow bands; 16 inches in length and forms a very delicious dish. It is similar to striped-perch. It can be compared to red-mullet alias English mullet—Upeneoides vittatus. See மனவை.

கல் நாதம், அன்ன பேதி, green vitriol or Iron sulphate—Ferri sulphus; 2. கல்லு ருகிப் பூடு, which see; 3. See கல் மதம்.

கல் நார், பருங் கல்லின் சாரம், சணலைப் போல் நிற மூடைய நீர்வகை நார் போன்ற தாதுப் பொருள். இது இரு வகைப் படும். இச் சரக்கு சாதாரணமாக ஐரோப்பா தேசத்தி லிருந்து பெரும்பாலும் இறக்குமதி யாகின் றது. இதற்குக் கல்லுக்குள் சுவாலை, கடிய கல் நார், லோ விர்து, பூங் கல்லின் சாரம், என்ற பல பெயர்களுண்டு. இதன் குணத் தைக் கருதி இது சிறு நார், முன் நார், அலை நார் என மூன்று வகைப் படும் ஆகவே இதற் குச் சீமைக் கல் நார் என்றும் பெயர். நமது தேசத்திலும் மைசூர் முதலிய விடங்களிலும் அகப் படும். இச் சரக்குக்கு நாட்டுக் கல் நார் என்றும் சாதாரணமாகப் பெயர் வழங்கும். இதில் நார்கள் அமைந் துள்ளதால் இதற்குக் கல் நார் என்று பெயர். இது நெருப்பைத் தாக்கும் மகிமை வாய்ந்தது. ஆகவே இந் நாரினின்று நெருப்புச் சுடாதபடிச் சட்டை நெய்து உடுத்திக் கொள்ளலாம். சீமைக் கல் நாரினின்று அட்டை ஓடு, முத லிய அனேக சாமான்கள் செய்வதுண்டு. நாட்டுக் கல்நாரி னின்று நமது நாட்டு வைத் தியர்கள், பல் பொடி, பற்பம், முதலானவை களைச் செய்து, அசீரணம், குடல் வாதம், சுவாசம், இருமல், பித்தரோகம், மூத்திர வியாதி முதலிய பல நோய்களுக்குக் கொடுப்பார் கள். அன்றியும், விந்து நட்டம், நீர் எரிவு முதலியனவும் நீங்கும். Stone + fibre — Asbestos, an igneous rock. It is a fibrous mineral substance resembling flax in colour. It is otherwise known as amianthus or earth flax or mountain flax. Its texture is delicately fibrous. It consists of two kinds viz.— Foreign asbestos and Country asbestos; and from its quality, it is divided into 3 kinds viz. the red which is flexible, the white which is rigid and the one incombustible. The foreign kind is largely imported into this country from Europe; whereas the other kinds are indigenous and are chiefly found in Mysore and other places. All have the quality of resisting the action of fire. The magnesian fossil found in Mysore, contains flexible fibres. Out of the foreign kind, fire-proof cloth, board-tile and other materials are manufactured; while from the indigenous kinds which have a limited use in Medicine are prepared by our Vaidyans, tooth powder, and calcined powder and they are used for tooth complaints and indigestion, disorders of bowels, asthma, cough biliousness, urinary diseases and also in spermatorrhea, stricture of urine etc.

NOTE.—It is an igneous rock. The ligniform asbestos resembles wood in external appearance and its fibres are somewhat rigid and its colour is dusky brown.

கல்நார் பற்பம், கல் நாரைக் கொண்டு செய்யும் பற்பம், calcined country asbestos.

கல் நீர், கருப்பத்தி லுண்டாகும் பனிக் குடத்து நீர், amniotic fluid contained in a sac in the womb—Liquor amnii.

கல் பட்டன், காட்டு வெக்காளி, partridge pea-tree—Anacolosa densiflora.

கல்ப ஸ்தானம், மருந்துகளைக் கலக்கும் முறை களைக் கூறு மோர் ஆயுள் வேத நூல். இதன் முகவுரையில் மூலிகைகள் அகப்படும் பல ஊர்களின் பெயர்களும் காணப் படும், a standard treatise on Ayurveda pharmacy. It also treats in its introduction about the different countries from which the drugs are obtained.

கல்ப் நிதானம், இராம தேவர் செய்ததாகச் சொல்லும் ஓர் போலி வைத்திய நூல். இது ஆயுள் வேதத்தி னின்று தமிழில் மொழி பெயர்த்த தாகக் காணப் படுகிறது, a medical work falsely attributed to the name of Ramadeva (a Siddha). It is evidently an Ayurvedic treatise translated into Tamil.

கல்பம், போகர் பாடிய 700 பாடல்கள் அடங் கிய வோர் காய கற்ப நூல், a treatise on rejuvenation consisting of 700 poems compiled by Bogar; 2. கஞ்சா, gunjah or Indian hemp—Cannabis sativa; 3. பலத் தைத் தரு மருந்து, (*in Ayurveda*) any preparation to strengthen the body; 4. காய கற்பம், (*in Siddhar's science*) elixir or universal panacea to maintain youth or to secure immortality; 5. விஷம் தீர்க்கு மருந்து முறை, (*in Toxicology*) the doctrine of poisons and their antidotes; 5. ஆயிரங் கோடி வருஷம், tens of thousand millions of years; 6. கல் பாந்த காலம், (*in Natural Philosophy*) 4320 millions of Solar sidereal years; 7. நோ யாளிக்குச் செய்யும் சிகிச்சை, treatment of the sick; 8. மருந்து தயாரிக்கும் வித்தை, the art of preparing medicine; pharmacy.

கல்பனு குபம், பிராந்தியினு லேற்பட்ட பொய்க் காட்சி, false appearance or show through delusion.

கல் பனை, கல் லிடுக்கில் முளைக்கும் ஓர் பூடு, an unknown plant (perhaps of the Borassus family) found generally grown in the crevices of rocks; 2. கற்பனை (அத்தியாசம்), (*in Vedantha Philosophy*) illusion or illusory superim position; 3. see கல் முங்கில்.

கல் பாக்கு, see கல்லப் பாக்கு.

கல் பாசி, மழையாற் பிறந்த கல்லின் பாசி, lichens; moss found on stone in the rainy season—Parmetia palmata. See கற் பாசி.

கல் பாச்சி, ஓர் கடைச் சரக்கு, a bazaar drug.

கல் பாஷாணம், see கற் பாஷாணம்.

கல் பாதி, கல் லத்தி, hill banyan — Ficus tomentosa.

கல் பிக்கி, பிக்கச் சிரியன், stone bikky — Eleocarpus munronii.

கல் பிரமி, கற்ப மூலிகைகளில் ஒன்று, one of the rejuvenating drugs contemplated in Siddhars' science (not identified).

கல் பிரமியம், see கற் பிரமியம்.

கல்புகு வல்லி, இது நவலோகத்தையும் பேதிக்கும் காய கற்ப மூலிகை, a rejuvenating plant. It is also used for calcining the nine metals. See கலப்புகு வல்லி.

கல் பூ, பிராணிகள் அல்லது தாவர வஸ்துக்கள் கல்லுக் குள் புதைந்து இடப்படுதால் ஏற்படும் தாது சத்து, (flower + stone) any fossil or organic remains of animals or vegetables imbedded or lying buried in rocks; 2. கல் தாமரை, which see.

கல் பொட்டன், ஓர் கசப்பு மரம், a bitter wood —Xylopia parvifolia; 2. வெள்ளைப் புலை, calycine croton — Dimorphocalyx glabellous.

கல் பொட்டியன், see கல் பட்டன்.

கல் பொருக்கி, கல்லைப் பொறுக்கும் ஓர் புறு, a pigeon supposed to live on small pebbles. See கல்லுப் பொருக்கி.

கல்போ லாதல், இறுகுதல், to be congealed; to solidify; 2. கெட்டி யாதல், to be hardened; 3. கெட்டியாக இறுகுதல், to be hardened like a rock; to become as hard as a stone.

கல் போல் கட்டல், see கல் போலாதல்.

கல் மகோதரம், வயிற்றுக்குள் கட்டி யுண்டாகி, வயிறு கல்லைப் போல் கெட்டியா யிருக்கும் ஓர் வகை மகோதரம், a kind of dropsy marked by an enlarged abdomen which is hardened like a rock — Abdominal dropsy.

கல் மடி, பசுவின் காய் மடி, hard udder of a cow; 2. கெட்டி முலை, hardened breast of a female. See கல் முலை.

கல் மஷம், அழுக்கு, dirt; 2. புண்ணினின்று ஒழுகும் அல்லது வடியும் சீழ், இரத்தம் முதலியன, pus or matter, blood etc, emitted from a boil or an abscess.

கல்-மஷங்கள் தகர்த்துச் சாடி, அழுக்குகளைப் போக்கும் வெள்ளைக் காக்கணம், white flowered mussel-shell creeper — Clitoria ternatea (albiflora). It is so called from its cleansing the matter in wounds.

கல் மதமாலி, செய்க் கொட்டான் மரம், soap-nut tree— Sapindas trifoliatus. See பூவந்தி மரம்.

கல் மதம், கல்நாதம் இதுவே சிலாசத்து. இது ஓர் உபரசச் சரக்கு. இது சாதாரணமாய் இமயமலையி லுற்பத்தியாகிக் கல்கத்தாவில் கடைச் சரக்காக விற்கப் படுவ துண்டு. இது காப்பிக் கொட்டைத் தூள் அல்லது மூக்குத் தூள் நிறமும், பிசு பிசுப்பு முள்ளது. உலர்ந்த பிறகு கரு நிறமாகவும், கசப் பாகவும் இருக்கும். இது கடினமாயும், உவர்ப்பும் கார்ப்பும் கலந்த ருசி யுள்ளது மானது. இதில் பல வகைக ளுண்டு. இவற் றுள் சில வகைகளின் நிறம் வெண் சிவப்புக் கலந்ததாயும், மணலைப் போலும், கோமய வாசனை யுள்ளதாயு மிருக்கும். இது தான் கசப் பில்லாத இனத்தைச் சேர்ந்தது. இது கோடை காலத்தில் இமய மலையிலும், இன் னும் மற்ற மலைத் தொடர்புகளிலும், கல்லி னின்று உருகி வடிந்து வெளிவரும். ஆகவே, கல் மதம் என்பது கல்லில் இருந்து வடியும் ஓர்வித அரக்கைப் போன்ற சரக்கு என்று பொருள் படும். மற்ற சில உலோகங்களில் உள்ள மருந்தின் குணம் இதற்கு முண்டு. நமது நாட்டில் அனேக விடங்களில் இதை மோசடியாக விற்ப துண்டு. கலப் பில்லாத சரக்கு நேபாளத்தி லிருந்து கிடைக்கக் கூடும். இதை நமது நாட்டு வைத்தியர்கள் மருந்தில் உபயோகப் படுத்து முன் முறைப்படி சுத்தி செய்வார்கள். நெருப்பி லிட்டால் உருகும், புகையாது. தண்ணீரில் இதிதளவு மாத்திரம் கரையும். இதை நெருப்பி லிட்டுக் காய்ச்சினாலும் அல்லது கொதிக்க வைத்தாலும் இம் மருந்தின் குணம் மாறி விடுதல் தவிர்க் கெட்டும்

Dic 193..

போய் விடும். இதை உள்ளுக்குக் கொடுக்க, மயக்கத்தை யுண்டு பண்ணும்; இச்சரக்கை எரித்துச் சோதிக்க முக்கியமாய் சாம்பலுப்புக் காரம் (*Potassium*), சுண்ணாம்பு கலந்த மண்ணுப்பு, மண் சத்து (*Silica*) முதலிய சரக்குகள் அடங்கி யிருப்பதைக் காணலாம், (Stone + lac) Bitumen. It is one of the 120 kinds of natural substances contemplated in Tamil Medical science. It is generally produced in the Himalayan regions and is sold as a bazaar drug in Calcutta. It is brown in colour like that of coffee powder or snuff and is a sticky unctuous substance. When dried it is dark, tastes bitter and is hard. It consists of different kinds and some of which will be found of a pale red colour in appearance, like vegetable bdellium; in smell it is like that of stale cow's urine and this is considered pure. In hot whether, it is supposed to issue from stones of mountains like the Himalayas, Vindhya hills etc. It is so called because it is a fossil exudation (resembling lac) from stones or rocks and is endowed with virtues like those of some other minerals. It is generally adulterated and sold in bazaars, but the pure drug is the one obtained from Nepaul. Vaidyans of our parts generally clean or purify this before introducing it in medicine and then prescribe them in cases of urinary diseases, diabetes, gravel, anemia, consumption, cough and skin diseases. It only melts but never fumes when genuine, and it is partially soluble in water. Its virtues are supposed to be altered or otherwise lost when heated or boiled and when administered internally produces giddiness; this drug when burnt and examined is found to contain Potassium, Calcium, Magnesium, Silica, etc.

NOTE.—It is also known as Stone-lac, Mineral caoutchouc, Mineral Tallow, Mineral tar, Mineral Wax etc. It is a substance exuding from rocks in hot weather and is produced in mountains where iron abounds. Asphalt is also known as solid bitumen and petroleum as fluid bitumen. See மண் தயிலம்.

கல் மதனம், ஓர் வகைக் கடல் மீன், இது வெண் சிகப்பும், சுமார் ஒரு அடி நீளமும் உள்ளது, a kind of sea-fish — Sclopsis vosmeri. It is pale-red in colour and is about a foot in length.

கல் மரம், கருஞ் சந்தனம், இதற்கு வடமொழியில், சாலாறு சார்யகம் என்று பெயர், black sandalwood.

கல் மரிக்கல், சுக்கான் கல், limestone.

கல் மா, காட்டு மா, Buchanan's mango — Buchanania angustifolia.

கல்மா சுணம், கருங் குன்றி மணி, black jeweller's bead.

கல் மாந்தம், குழந்தைகளுக் கேற்படும் ஓர் வகை ஈரல் நோய். இது கல் லீரலைப் பற்றிய தால் இதற்குக் கல் மாந்தம் எனப் பெயர். இது சாதாரணமாகக் குழந்தைகளுக்கு நாளா வட்டத்தில் மித மிஞ்சிய வுட்டத்தினுற் காணும். இதனுல் ஒக்காளம் பசியின்மை, சோகை, பல வீனம், வயிற்றின் மேல் நீலம் படர்ந்த நரம்புகள் முதலிய கெட்ட குணங்கள் காணும். சில சமயங்களில், வயிற் றுப்பிசமும் காணும், an affection of the liver in children — Cirrhosis of liver. It is generally due to prolonged over-indulgence in eating and is followed by bad symptoms such as nausea, diminished appetite, paleness of the skin, gradual loss of energy i.e. weakness, blue lined veins on the abdomen etc. It is sometimes marked by abdominal dropsy.

NOTE.—In adults, the commonest cause of cirrhosis of the liver is alcohol, syphilis and also over-heating.

கல் மாரி, கல் மழை, shower of hail-stone; 2. உடம் பெங்கும் காய் காயாக உண்டாகு மோர் வகை அம்மை நோய், a kind of variola or small pox attended with hard pimples all over the body.

கல் மிளகு, கெட்டி மிளகு, solid and matured pepper seed.

கல் மீசை, கன்ன மீசை, whiskers.

கல் முகப் பிரமம், see கல் லாரை.

கல் முதிரை, ஓர் வகை மரம். இது கருங் காலியைப் போன்றது, a tree resembling black ebony; 2. கெட்டிப் பட்ட தானியம், hardened grain; stone pulse.

கல் முரசு, உறுதி யடைந்த பல் லீறு, hardened gum of tooth; strong gum; 2. கப்பொட்டி மரம், which see; 3. நீர் கட்டுக் கொடி, see கட்டுக் கொடி. See கன் முரசு.

கல் முராகி, குன்றி மணி, jeweller's bead, country liquorice—Abrus precatorious.

கல் முருக்கு, see கலியாண முருக்கு.

கல் மூங்கில், கெட்டி மூங்கில், male bamboo; stone bamboo or dark bamboo — Bambusa stricta; 2. முள் ளில்லாச் சிறு மூங்கில், thornless reed—Oxytenanthera thwaitesii; 3. சிறு மூங்கில், small solid bamboo —Dendrocalamus strictus.

கல் மூடி, குப்பி வாயை யடைக்கும் கண்ணாடிக் கல், glass-stopper which closes the mouth of a bottle or any vessel.

கல் மொந்தன், ஓர் வகை மொந்தன் வாழை, a species of stout plantain.

கல்யாண குரோதினி, மார் அகன்று, இடை சிறுத்துக் காணு மோர் பெண், a woman with a well-formed breast and a depression above the hip.

கல்யாணச் சாவு, பெரிய சாவு; அதாவது கிழத்தன மடைந்தபின் னேரும் சாவு, death of an aged or an old man.

கல்யாண துவரை, ஓர் வகைத் துவரை, a kind of dholl—Rhynchosia genus.

கல்யாண பூசினி, சாம்பற் பூசினி, ash-coloured pumpkin. See கலியாண பூசினி.

கல்யாண பைரவம், ஓர் வகை ஆயுள் வேத மாத்திரை, an Ayurvedic pill.

கல்யாண முருக்கு, see கலியாண முருக்கு.

கல்யாண லவணம், மூல நோய்க்குக் கொடுக்கும் ஆயுள் வேத முறைப்படி தயாரித்த ஓர் வகை யுப்பு, a medicinal salt prepared according to the process of Ayurveda and prescribed for piles.

கல் யானை, காண்டா மிருகம், rhinoceros.

கல்லகச் சத்து, சிலாசத்து அல்லது கல் மதம். இது மலைக்குள் ளிருந்து வருவதா லிப் பெயர், bitumen. It is so named because it exudes from mountains; 2. கற்பூர சிலாசத்து, crystallised foliated gypsum.

கல் லகம், மலை, mountain.

கல்ல காதிகம், see பாம்பு கொல்லி.

கல்ல காசி, கொட்டைக் கரந்தை, bald ascetic — Sphoeranthus indicus.

கல்ல காரம், நீர்க் குளிரி, a flowering water-plant — Damasonium indicum; 2. செங் குவளை, red Indian water-lily.

கல்ல காரிசம், நீர்க் குளிரி, see கல்ல காரம்.

கல்லக் காரம், ஓர்விதப் பனங் கட்டி, a variety of palmyra jaggery; 2. பனங் கற்கண்டு, palmyra sugar-candy.

கல்லங் காய், கற் காய், a fruit whose pulp is as hard as a stone.

கல்லங் கோரை, ஓர் வகைக் கோரைப் புல், a kind of hard grass of Cyperus genus; hard sedge-grass.

கல் லடி, கல்லின் அடிப் புறம், the under surface of a stone generally referring to crevices of rocks; 2. கற்கடக பாஷாணம், a kind of native arsenic.

கல்லடி காயம், கல்லடி படுவதனு லேற்பட்ட காயம். இது மோதிக் கொள்வதாலும், கல் லெறியாலும் ஏற்படும், a wound caused by one's dashing against stone or one struck with it; a wound caused by or inflicted with stone.

கல்லடிக் காளான், கல் லடியிலும் பாறைகளின் சந்துகளிலும் முளைக்கும் பெருங் காளான், a large species of mushroom generally found grown under stone or in the crevices of rocks.

கல்லடிச் சேம்பு, பேய்ச் சேம்பு, wild Indian kales supposed to be of Colcasia genus. (*unidentified*).

கல்லடிப் பூடு, கல்லி னடியில் அல்லது சந்து களில் முளைக்கும் பூண்டு, any plant taking its origin from underneath stones or crevices in rocks.

கல்லடி மூலம், கற்கடக பாஷாணம். இது பாறைகளின் அடியி லிருந்து வெட்டி யெடுப்பதால் இப் பெயர், a mineral poison (*unidentified*). It is so called from its being found under rocks; 2. கற் பாஷாணம், any poison found under rocks.

கல் லடைசல், நீர்த் தாரையில் கல் லடைத்துக் கொள்ளல், obstruction of stone in the urethra; 2. கல் உறுத்துதல், irritation due to rubbing of the stone in the bladder.

கல் லடைப்பு, மூத்திர வடைப்பு அதாவது மூத்திரத்தில் உப்புக்கள் மணற் போல் பருத்து, உப்புக் கற்களாகி, மூத்திரப் பையில் அல்லது குண்டிக் காயில் தங்குவதால் ஏற்படும் நோய். இதனால் மூத்திரம் பெய்ய கஷ்டப் படும், large concretions of stone in the bladder or kidney — Calculus or Gravel. It is attended with difficulty in passing urine.

கல் லடைப்பு, வாயுவானது கீழ் வயிற்று முகத்லதச் சுற்றிக் கொண்டு, மூத்திரத்தை உலர்த்துவதாலும், பெண்களோடு புணருங் காலத்தில் வேகத்துடன் விழும் விந்துவை அடக்குவதாலும், உடம்பின் சூட்டினால் விந்து ஒழுகி அண்டத்தின் நடுவே தங்குவதாலும் அல்லது விந்துவை கட்டுவதற்காகத் தாது புஷ்டி மருந்துகள் சாப்பிடுவதாலும், மேற்கண்ட விந்து கல்லுகளாகத் திரண்டு பிறகு அவைகளுள் வாயு கலப்பதால் மணல் போல் பருத்து பயறு, கடலை, கடுகு முதலியவைகளின் அளவாகக் கொண்டு, சில சமயங்களில் கோழி முட்டை பருமன் பருத்து, மூத்திரத்தோடு சேர்ந்து வெளிவரும் பொழுது ஆண் குறித் துவாரத்தை அடைத்து அதனால் வேதனையை யுண்டாக்கு மோர் நோய், a urinary disease occasionally developed in the urinary bladder — Vesicle calculus. It is said to be due to the deranged Vayu encircling or prevailing in the region of the abdomen arising from any of the following causes viz:—

1. Suppression of seminal discharge during sexual intercourse.
2. Retention of semen in the spermatic region in involuntary discharge during nocturnal emissions due to excessive heat in the body.
3. Prevention of discharge of semen induced by taking aphrodisiac preparations.

The calculus or stone which is formed in the bladder may vary in size from that of fine particles of sand or mustard up to things as large as green gram or Bengal gram and sometimes attain the size of a hen's egg even and block the passage of urine. It is accompanied by pain and difficulty in passing urine.

கல்லண்டக் கரு. முடி யண்டப் படருப்பு அதாவது தலை மண்டை ஓட்டி னின்று தயாரிக்கும் ஓர் வகை யுப்பு, a kind of salt extracted from the human skull.

கல் லண்டம், பிடுக்கில் இரத்தம் சேர்ந்து அதனால் வீக்கங் கொண்டதுபோல் பருத்துக் காணு மோர் அண்ட நோய், a collection of blood in the scrotum causing a swelling or enlargement of the part — Haematocele.

கல் லத்தி, கடினமான அத்தி, stone-fig — Ficus excelsa alias F. scandens; 2 கல் லிச்சி அல்லது கல் லித்தி, stone-fig—Ficus gibbosa (parasitica); 3. கல் லால், stone banyan or Hill banyan — Ficus tomentosa; 4. பூ தாளம், great council tree—Ficus altissima.

NOTE.—It seems that there is some confusion as regards the synonym of this term for, no distinction is made between அத்தி and இச்சி and அத்தி and ஆல், perhaps due to the fact that the tree is very large and gives out root from its branches like banyan.

கல்லத் தவம், செவிட்டுத் தனம், the state or condition of being deaf.

கல்லம், செவிடு, deafness; 2. மஞ்சள், turmeric; 3. கை காற் குத்தல், shooting pain in the extremities.

கல் லம்மை, கா யம்மை, stone-pox—Variola vaccina atrophica. See அபாகி ரோகம்.

கல் லரசி, கொடி யரசு, wild peepul—Ficus arnottiana.

கல் லரவிந்தம், see கல் தாமரை; 2. இத்தி, which see.

கல் லரளி, விஷக் கல், poison stone; 2. சரளைக் காடுகளில் முளைக்கும் பூடு. இது செம்பைக் குருவாய்ப் பண்ணும், சூதத்தை வெண்ணெ யாக்கும், an unidentified plant found grown in plains and forests. It is capable of turning copper into a quintessence and reducing mercury into a glutinous substance; 3. காட் டரளி, which see.

கல் லரிதாரம், கட்டியாக வுள்ள ஓர் வகை அரிதாரம், stone orpiment found in lumps. C.f. கட் டரிதாரம்.

கல்லல், கல் லடைப்பை நீக்குதல், to remove the obstruction of the calculus or stone in the bladder or the passage of the urine.

கல் லவம், மலை நெல், mountain paddy.

கல் லவி, சச்சவிர்ப் பூடு, honey sweet tree—Meliosma simplicifolia alias M. arnottiana.

கல் லவுத்து, ஆனைப் பிச்சான், battle of plassey creeper—Spatholobus roxburghii.

கல் லவுரி, ஓர் வகை அவுரி, bastard indigo—Amorpha fruiticosa.

கல் லழிஞ்சில், ஓர் வகை யழிஞ்சில், stone-

mango, a variety of Alangium—Alangium lamarckii ; 2. அழிஞ்சில் மரம், common Alangium tree.

கல் லறுத்தல், see கல்லல்.

கல் லறை, பிரேதக் குழி, grave yard.

கல் லாகம், செங் குவளை, red Indian water-lily. See கல் லாரம்.

கல் லாசிரியம், see கல்லுப் பசீர்.

கல் லாடம், வாத, வைத்திய யோக, ஞான விஷயங்க ளடங்கிய ஓர் வைத்திய நூல். இதனைச் சிலர் அகஸ்தியர் பாடிய தென்றும், சிலர் இராம தேவர் பாடிய தென்றும் கூறுவர், a medical treatise consisting of four parts viz. Alchemy, Medicine, Yoga and Philosophy and said to have been compiled by Agastiya or Ramadevar; 2. இரணத்தை யாற்றும் மேற் பூச்சு மருந்து, a healing application — Medicament.

கல்லாந் தலை, ஓர் வகைக் கடல் மீன், a kind of sea-fish.

கல்லா மணக்கு, புல்லா மணக்கு, (stone castor plant) creeping aumanac — Tragea chamaelea.

கல் லாமை, ஓர் வகை யாமை, starred tortoise — Testudo geometrica.

கல் லாம்பல், நீர்க் குளிரி, water archer—Saggitaria cordifolia.

கல் லாரம், செங் குவளை, red Indian water-lily; 2. நீர்க் குளிரி, see கல் லாம்பல் அல்லது கல் லகாரம்; 3 கருங் குவளை, blue nelumbo. See கல் லகாரம்

கல் லாரா, ஓர் வகை மீன், a kind of fish—Eleotris butis alias Polynemus indica.

கல் லாராய்தல், கல் கலந் திருக்குதா வெனச் சோதித்தல், examining to see if stones are mixed in anything.

கல் லாரல், ஓர் வகை ஆரல் மீன். இது கல்லில் ஒட்டிக் கொண்டிருப்பதா லிப் பெயர். இதன் வால் கூர்மையாயும், சுமார் இரண்டு மூன் றடி நீளமாயும் இருக்கும். இது ஆறுகளிலும், கழிகளிலும் காணப் படும். இது வறுத்து அல்லது குழம்பி லிட்டுச் சாப்பிட வுதவும், rock aural ; thorny-backed eel ; stone-eel —Mustacembulus armatus. Title from adhering to stones and rocks. It is a variety of Ponticerianus with a rather pointed tail 2 to 3 ft. in length. It is found in fresh and brackish waters. Good for eating especially when curried or fried.

கல் லாரிகம், குரு வேர், a fragrant root — Coleus osmirrhizon.

கல் லாறை, மலை யடி வாரங்களில் அகப்படும் ஆரையைப் போன்ற ஓர் அபூர்வ வகைக் கொடி. இது தேகத்தை இறுகும்படிச் செய்யு மெனச் சொல்லப் படும். காய சித்திக்காகச் சித்தருண்ணு மோர் மூலிகை, an unknown creeper of the species of Marselia said to be found very rarely at the foot of the hills. It is supposed to be taken in by Siddhars for rejuvenating the system; 2. காட் டாரை, which see; 3. கட லாரை, which see; 4. சங்கை, ironweed.

கல் லார்மா, அண்டிமா, cashew nut — Anacardium occidentale.

கல் லாலங் கட்டை, குருவி யாலங் கட்டை, stem of hairy stalk-figged banyan — Ficus dalhousie.

கல் லால மரம், கல் லால். இம் மரத்தின் அடியி லமர்ந்து சிவன் உலகத்தாருக்கு ஞானத்தை போதித்தது, stone banyan tree — Ficus infectoria. It is under the shade of this tree that God Siva taught wisdom to the world.

கல் லாலம், கல் லால், which see; 2. காட் டால், wild banyan—Ficus mysorensis ; 3. See கற் றுமரை. See இத்தி.

கல் லாலன், see கல் லால்.

கல் லாலா, (கல்+ஆலா) காட் டால், wild banyan—Ficus mysorensis ; 2. கல் லால், which see.

கல் லால், ஓர் வகை பூவரசு, tulip mallow—Thespesia populnea (typica) ; 2. ஓர் வகை ஆல், hairy stalk-figged banyan — Ficus dalhousie, see கல் லாலங் கட்டை; 3. குருக் கத்தி, cluster-fruited white fig—Ficus tjakela ; 4. கல்லால மரம். இதனடியி லமர்ந்து சிவன் உலகத்திற்கு ஞானத்தை புகட்டியது. இதன் இள விழுது கறிக் குதவும், white fig — Ficus infectoria alias F. venosa. Title from hardness of wood. It is said that God Siva sat in the shade of this tree and taughs wisdom to the world. Young shoots eaten in curries.

NOTE.—There are other kinds of this tree such as குருவி யால், மலை யால், etc. which are not identified and for which no botanical names are found.

கல் லாளிகம், குருந்து, Indian wild lime — Atlantia monophylla.

கல் லாவணை, அண்ட வுப்பு, which see; 2. சுக்கான் கல், lime stone; 3. பூ நீறு, fuller's earth

கல்லான், பாறை, rock.

கல்லான் காரி, கல் வாழை (stone + plantain) rock plantain—Canna indica.

கல்லி, ஆமை, tortoise; turtle; 2. பருவத் திற்கு மேம்பட்ட அறி வறிவு, early development of mental powers; precociousness; 3. ஊர்க் குருவி, sparrow.

கல்லி சிமலைக் காய், நாய்த் தேக்கு, dog teak—Dillenia pentagina.

கல் லிச்சி, கல் லித்தி மரம், (stone + ficus tsiela) stone fig; stone tsiela — Ficus scandens; 2. சீன இச்சி மரம், Chinese banyan—Ficus; 3. காட் டிச்சி, stone fig (rhomboid - leaved) — Ficus gibbosa (parasitiaca); 4. மஞ்சள் கல் லிச்சி, yellow barked fig—Ficus tsiela.

கல் லிச்சி, ஓர் வகை மலை இச்சி. இதன் இலை அண்ட வடிவாயும், காய் பட்டாணியைப் போல் சிறியதாயும், மிருதுவாயு மிருக்கும். இதன் வேர் பட்டை அல்லது இலைகள் முதலியவைகளை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, இரணம், வழுவுண்ட புண் இவைகளுக்கு மேற் பூசலாம். இதைச் சாலைகளில் வைத் துப் பயிரிட அழகாக விருக்கும், willow fig—Ficus retusa. Leaf oval in shape, fruit of the size of a pea and smooth, root or root bark and leaves boiled in oil form applications in wounds and bruises. It is a large and handsome avenue tree.

கல் லிடை மூலி, கல் அல்லது பாறைகளின் சந்துகளில் முளைக்கும் மூலிகை, herbs or plants found grown under stones or in the crevices of rocks. C.f. புல் லிடை மூலி.

கல் லிதளை, (கல் + இதளை) மலை இதளை, hill olive — Linociera malabarica alias L. leprocarpa.

கல் லித்தி, see கல் லிச்சி; 2. இத்தி, oval-leaved fig—Ficus talboti.

கல்லிய சிங்கி, கற்கடக சிங்கி, crab's horn—Pistacia integerrim.

கல்லியம், கள், toddy; 2. சாராயம், arrack; 3. மது, fermented liquor.

கல்லி யாச்சா, see கலி யாச்சா.

கல் லிறால், சப்பை இறால். இது நண்டைப் போல் இருக்கும் ஓர் இறால் இனம், a sea-prawn resembling a crab and known as lobster — Squat lobster; 2. கருப் பிறால், black prawn.

கல் லிரும்பிலி, see கல் லிரும்பிலை.

கல் லிரும்பிலை, இரும் பறப்பி, jungle geranium—Ixora notoniana.

கல் லிலம் பிலி, (கல் + இலம்பிலி), see கல் லிரும்பிலி.

கல்லி வாதம், கை கால்களை நீட்டவும் முடக்க வும் முடியாது மணிக் கட்டு, முழங் கை முதலிய இல்களில் வலியை யுண்டாக்கு மோர் வாத நோய், rheumatism marked by inability to stretch or bend the limbs and pain in the joints such as wrist, elbow etc.

கல் லிழிலங் காய், கல்லி சிலைக் காய், fish bone tree—Dillenia pentagyna.

கல்லிரு மூலி, see அழு கண்ணி.

கல்லி ளியம், நீலாஞ்சனக் கல், sulphate of antimony. See கல் லீயம்.

கல்லின் காரம், see கல் நார்.

கல் லீகம், குமிழ், bell vervein — Gmelina tomentosa alias G. asiatica.

கல் லீசம், வன்னி, Arjuna's penance tree—Prosopis spicigera.

கல் லீயம், வெள்ளீயக் கலப்பு, an alloy consisting mainly of tin and lead; 2. சுருசக் கலப்பு, (stone + lead) a hard variety of an alloy consisting of bell-metal; 3. நீ லாஞ்சனக் கல், sulphate of antimony — Antimonium sulphuratum; 4. துரிசு, blue vitriol.

கல் லீயவம், கல் விருசு, a mountain creeper.

கல் லீரல், ஈரல். இது உடம்பின் உள் ளுறுப்பு களி லொன்று.கருஞ் சிவப்பு நிறமா யிருக்கும். இது அடி வயிற்றின் முன் புறமாய் வலது பக்கத்தின் மேற் பாகமா யுள்ள வுறுப்பு. இதில் தான் பித்த நீர் உற்பத்தியாகி இரண்டு இரத்தக் குழல்களின் மூலமாய் பித்தா சயத்தை அடைகின்றது, liver, one of the internal organs of the body. It is of a dark red colour situated in man on the right upper side and towards the front of the abdominal cavity. It is the seat for the secretion of bile which is carried through two tubes into the bile duct.

கல்லூ, கல் லுருவி, which see; 2. கல்லுதல், to eat away as a caustic does; 3. கல், stone; 4 மலை, mountain.

கல் லூகம், பெரு வாகை மரம் large sirissa—Albizzia lebbek.

கல்லூ காமிகம், கும்பச் சுரை, bottle gourd—Cucurbita lagenaris.

கல்லூக் கவலைக் காத்தான், see கல்லூக் கலைத் தான்.

கல்லூக் கவலைத்தான், பொன்னுங் காணி, an edible plant bearing gold-coloured flowers—Illecebrum sessile.

கல்லூக் குடல், கெட்டிக் குடல், hardened bowels; 2. எளிதில் பேதி யாகாத குடல், costive bowels. See கல் குடல்.

கல்லூக் குத்தல், கூர்மையான கல் காலில் குத்துதல், pricking of sharp stones on the leg; 2. நீர்த் தாரையில் கல் லடைப்பி னால் ஏற்படும் குத்தல் நோய், pricking pain experienced in the passage of urine owing to obstruction of stone or calculus.

கல்லூக்குள் சவளை, see கல் சார்.

கல்லூக் குறைத்தான், பொன், gold.

கல்லூக் கொடி, see கல் லுருவி.

கல் லூசில், ஓர் வகை உசில்; ஊடுசில், see உசில்.

கல்லூச் சிவலைக் காய், நாய்த் தேக்கு, dog teak—Dillenia pentagyna.

கல்லூச் சுண்ணம், see கற் சுண்ணம்.

கல் லூடம்பு, கல்லைப்போற் கடினமான வுடம்பு, body as hard as a stone; 2. பல முள்ள வுடல், strong body.

கல் லூணி, see கல் லுருணி.

கல் லூண்டை, ஓர் வகைச் சம்பா நெல், a kind of chamba paddy.

கல் லூதிரி, அகோரக் காய்ச்ச லுடன் பேதியும், வாந்தியும் கண்டு, மூன்றும் நாளில் தலையில் குருக்கண்டு, ஏழாம் நாளில் நீர் கட்டி 10ம் நாளில் இறங்கு மோர் அம்மை நோய், a kind of variola or small-pox attended with high fever, diarrhoea and vomiting. It is marked by eruptions on the head to begin with and these eruptions subsequently extend all over the body. On the seventh day, they develop into hard pustules and these disappear by the 10th day with the formation of scabs; 2. ஓர்வகை நெல், a kind of paddy.

கல்லூத் தீர்தல், விலை யுயர்ந்த இரத்தினங்களைச் செதுக்குதல், to cut and polish precious stones like diamonds etc.

கல்லூ நீராக்கி, மாங்கிஷ பேதி, a kind of stone with the peculiar virtue of converting stone into a liquid.

கல்லூப் பயறு, சிறு பயறு, a kind of hard small pulse.

கல்லூப் பயற்றங் கொடி, சிறு பயற்றங் கொடி, creeper of கல்லூப் பயறு, which see.

கல்லூப் பாசிதம், வரிக் கற்றாழை, long-leaved aloe—Furcraea gigantea.

கல்லூப் பனை, மலைப் பனை; தொட்டிப் பனை, palmyra growing on hills; hill palmyra—Borassus flabellifer; 2. ஆண் பனை, male palmyra — Borrasus flabelliformis (male plant).

கல்லூப் பிரமேகம், கோசத்தில் கல் லடைப்பி னால் உண்டாகும் ஓர் வகைப் பிரமேக நோய். இதனால் மூத்திரம் சிக்கிக் கொண்டு வயிறு கல்லைப் போல் விம்மி, விரு விருப் புடன் நாபியைப் பற்றி,உப்பிச முண்டாகிக் கோசத் தில் கல்லைப் போல் மேக நீர்க் கசிந்து அத் துடன் உடம்பில் கற்றாழை நாற்றம் வீசுதல், வயிறு கனத்தல், பசி யடங்கல் முதலிய குணங்கள் ஏற்படும், a kind of urinary disease—Stone in the bladder. It is characterised by sharp pain in the abdominal region, swelling of the part, white discharge from the genitals, fetid smell in the body, heaviness of stomach, loss of appetite etc. It is due to the obstruction of urine by the formation of large concretions (stones) in the bladder.

கல்லூப் பீனசம், see கல்லடி சேம்பு.

கல் லூப்பு, பாறை யுப்பு, rock-salt; 2. சோற் றுப்பு, common salt; 3. சமுத்திரத்தில் தானாய் வளர்ந்த வுப்பு, salt naturally precipitated and formed into beds under the sea; 4. பருத்த வுப்புக் கற்கள், crystallised big pieces of salt obtained by evaporation; 5. அனலுக்கும் நீருக்கும் அசையாத கல்லுப்பு அதாவது தண்ணீரில் கரையாது, நெருப்பிற்கு ஓடாது, ஆனால் உலோகத்தைப் போலிருக்கும். ஆகவே, இது வாதத்திற்கு உபயோக மானது. இதைத் தமிழில் கட்டுப்பு எனக் கூறுவது, (*in Alchemy*) a consolidated or fixed salt which stands the test of fire and water. It is insoluble in water but melts like metals in fire and as such is used in

1 Kalanji (கழஞ்சி) = 82 grains

This table sometimes varies according to different places.

கழட்டல், நீக்கல் (உ-ம்) அறுசுவை கழட்டல், to give up or relinquish the six tastes.

கழப் பாகம், வெண் மிளகு, white pepper.

கழர், களா மரம், Bengal currant — Carissa carandas.

கழலடி, கழற்சிக் கொடி வேர், the root of bonduc nut creeper.

கழலல், கழலுதல், to fall out as a loose tooth; 2. தளர்தல், to become loose; 3. வெளி வரல், coming out of fixture as in மூட்டு கழலல், to be dislocated as a joint; 4. விடல், to let go as இந்திரியங் கழலல், to get a discharge as semen; 5. பிதுங்கல், to protrude.

கழலாபு, பீர்க்கு, sponge-gourd — Cucurbita acutangulus.

கழலி, பிரண்டை, adamantine creeper — Vitex negundu.

கழலிச் சிட்டு, ஓர் வகைச் சிட்டுக் குருவி, a kind of sparrow.

கழலிலை, கழற்சி யிலை, the leaves of bonduc nut creeper.

கழலுதல், see கழலல்.

கழலேறு வாதம், காலின் நரம்புகளைப் பற்றிய வோர் வாத நோய், a rheumatic affection of the nerves of the leg.

கழலை, கழலைக் கட்டி, tumour; 2. அதிமாமிசக் கழலை, sarcoma; 3. சிறு கழலை, a small rounded body or mass—Tubercle; 4. பரு, wen; 5. புரைக் கழல், goitre.

கழலை, உடம்பின் வளமையின் பேதத்தினால் வட்டமாய் எழும்பும் ஓர் கட்டி. இது உடம்பி னுறுப்புகளுக்குச் சம்பந்த மில்லாமலே பருக்கும். இங்கிலீஷ் வைத்தியத்தில் இது அடியிற் கண்டபடி பலவித மாகக் கொள்ளப் படும், according to English Medicine, it is a round mass of new tissue growing independantly of its surrounding structures. It is a morbid growth due to differences and changes in the physiological functions of the body. The following are different varieties:—

1. மணற் கழலை, a tumour of the brain containing calcareous matter — Sand tumour.
2. நிணக் கழலை, fatty tumour—Lipomata.
3. அதிமாமிசக் கழலை, solid tumour composed of abnormal connective tissue cells—Sarcoma.
4. என்புக் கழலை, bony tumour or Osteoma.

5. இரத்தக் கழலை, tumour composed chiefly of blood-vessels as adenoma, angioma; a tumour containing effused blood — Hematoma.
6. இலந்திக் கழலை, carcinoma—Cancer.
7. நார்க் கழலை, fibrous tumour or fibroma.
8. நரம்புக் கழலை, tumour growing from nervous tissue.
9. முருந்துக் கழலை, cartilagenous tumours—Chondroma; Enchondroma.
10. பருக் கழலை, warty tumour.
11. விஷக் கழலை, malignant tumours such as carcinoma or sarcoma.
12. நிணை நீர்க் கழலை, a solid tumour —Lymphoma.
13. இரத்த குடாக் கழலை, Cavernous tumour—Cavernoma.
14. கொழுப்புக் கழலை, same as No. 2.
15. காளான் கழலை, a tumour of fungus-like growth.
16. ஓடு கழலை, migratory tumour.
17. பிணி நீர்ப் பைக் கழலை, cystic tumour.
18. பூர்வக் கழலை, hylic tumour.
19. சத்தக் கழலை, innocent tumour.
20. சளிக் கழலை, mucous tumour.
21. பொசிவுக் கழலை, oozing tumour.
22. கருவிக் கழலை, organoid tumour.
23. முலைமுகக் கழலை, papillary tumour.
24. அண்டக் கழலை tumour of the scalp associated with skull bones —Puffy tumour; 2. விரைதயி லுண்டாகும் சதைக் கழலை, a fleshy swelling or tumour of the testicle—Sarcocele; 3. பீடுக்கில் ஏற்படும் கொழுப்புக் கழலை, a fatty scrotal tumour.

கழலைக் கட்டல், வீக்கங் கொள்ளல், to get swelled; 2. பருத்துக் கெட்டியாதல், to swell and become hard; 3. அதிகச் சதை புதிதாக உண்டாதல், formation of a new and abnormal growth or neoplasm; 4. கணு வுண்டாதல், formation of a tubercle; 5. கோளம் வீக்கமுடன் அல்லது வீக்கமில்லாமலே கெட்டிப் படுதல், the hardening of a gland with or without swelling — Adenosclerosis.

கழலைக் கட்டி, உடம்பின் சருமத்திற் கடியில் தினை நீர் கழலை பல அளவாகக் காணு மோர் வீக்கம், a small cystic swelling varying in size from a millet seed to an orange developed in the skin or the tissues immediately beneath it—Wen; 2. புதிதாகச் சதை வளர் வதனால் சருமத்தின் மேல் வீங்கிக் காணு மோர் கழலை, a permanent swelling in some part of the body occasioned by a new growth—Dermoid cyst.

கழலைக் கரப்பன், உடம்பில் பல விடங்களில் சிறு பருக்களை யுண்டாக்கும் ஓர் விதக் கரப்பன் சொறி, small tumour-like itchy skin eruptions rising in different parts of the body; a disease marked by the formation on the skin of multiple tumours accompanied by intense itching — Prurigo nodularis.

கழலை ரோகம், இமையைப் பற்றிய ஓர் சதை வளர்த்தி. இது மூன்று விதம், அவையாவன:—நீர்க் கழலை, இரத்தக் கழலை, தசைக் கழலை, a disease of the eyelids attended with morbid growth of flesh. It consists of three kinds viz. tumour containing morbid fluid or blood or flesh, see கண் ணோய் வகை; 2. பிரமேகம் அல்லது விரண மேக முடைய ஆண் பெண் ளிவர்களின் மர்ம ஸ்தானங்களில் விஷ நீர்த் தொந்தத்தினால் அழலை கண்டு கவர்ணை யற்றப் பருக்கள் ஏற்படும் ஓர் விரண நோய், a disease of the genitals either of a male or female, due to the affection of tumours arising from venereal or syphilitic contagion. It is marked by painless eruptions.

கழலை வீக்கம், சதை வளர்த்தியினு லேற்படும் வீக்கம், a swelling or growth due to some abnormality of the tissues.

கழல், கழற்சிக் கொடி, bonduc nut creeper—Guilandia bonducella; 2. கால், leg; 3. பாதம், foot; 4. பொன் வண்டு, a golden-coloured beetle.

கழல் மணி, கழற்சிக் காய், bonduc nut — Caesalpania bonducella,(உ-ம்) கழல் மணி வெண்மை யுள்ளி (தேரையர்).

கழல் வாதம், கால் அல்லது பாதத்திற் கேற்படும் வாத நோய், rheumatism affecting the leg or feet; 2. பொன் வண்டு, a golden-coloured beetle. C.f. கழலேறு வாதம்.

கழல்வு, see கழலுதல்.

கழறல், கழலுதல்; பெயர்தல், being dislocated.

கழற் காய், கழற்சிக் காய், which see; 2. கிழங்கு, bulbous root.

கழற் காய் வல்லி, ஓர் கொடி, elephant cow-itch — Mucana gigantea.

கழற் கொடி, see கழல்; 2. கர்ச் சூரம், dried date fruit.

கழற் கொழுந்து, கழற்சி யிலைக் கொழுந்து, the tender leaves of bonduc nut creeper.

கழற்சி, கழற்சிக் கொட்டைச் செடி அல்லது கெச்சக் காய்ச் செடி. இது நமது தேசத்தில், காடு, புதர், வேலி யோரம் முதலிய விடங்களிற் காணலாம். இது முள்ளுகள் நிறைந்த ஓர் கொடி; பூக்கள் பெரிது; மஞ்சள் நிறம்; கந்தக நிறம் போன்றது. இலைகளின் நடுவேயும் முட்க ளுண்டு, கொட்டை ½, ¾ அங்குலம் குறுக்கள வுள்ளது, eagle stone creeper or nicker tree — Caesalpinia bonducella. It is a common prickly shrub found in all forests, bushes, hedges and other places; flowers large yellow or sulphur-coloured; leaves also with recurved prickles between them. The seeds are ½ to ¾ inch in diameter, the root bark little bitter and the root itself is acrid.

1. கொடிக் கழற்சி, Indian filbert — Caesalpinia bonducella.
2. செங் கழற்சி, a red variety of bonduc nut.
3. பூனைக் கழற்சி, prickly brassiletto climber — Caesalpinia mimosoides.

கழற்சிக் காய், see கழற்சிக் கொட்டை.

கழற்சிக் கொடி, see கழற்சி.

கழற்சிக் கொட்டை, கெச்சைக் காய். இது கழற்சிக் கொடியின் காய். இதற்குக் கழற்சிக் காய், கழற்சிக் கொட்டை, கலிச்சிக் காய், வச்சிர பீசம் எனப் பல பெய ருண்டு. இது சாம்பல் நிறமாயும், மேற் புறம் வழ வழப்பாயும், குன்றி மணியைப் போல் பள பளப்பாயும் இருக்கும்; உருண்டை யாயும், கெட்டியாயு முள்ளது; மேலோடு மிக்கக் கனதியா யிருக்கும். இதன் பருப்பு மஞ்சள் அல்லது வெள்ளை நிறம்; இதை யிழைத்து விதை வீக்கம், அண்ட வாயு இவைகளுக்குப் பற்று போடலாம். இது விரேசன குண முடையதால், விளக் கெண்ணெயிற் கொடுக்கப் பேதியாகி வாயுவைப் போக்கும். இப் பருப்பைச் சூரணித்து மிளகுத் தூளுடன் கூட்டி வாதக் காய்ச்சல், முறைக் காய்ச்சல் இவைகளுக்குக் கொடுக்கலாம். கோழி முட்டையிற் கலந்து பொரித்துக் கொடுக்க, அண்ட வாதம், கருப்பை வலி, கண்டமாலை இவைகள் குண மாகும். இப் பருப்பின் தூளை புகை (உக்கா) பிடிக்க வயிற்று வலி போம். பெருங் காயத்தை மோரிற் கலந்து இத்துடன் கொடுக்க குன்மம் குணப் படும். இக் கொட்டையைக் கொளுத்தி, அத்துடன் படிகாரம், கொட்டைப் பாக்குச் சுட்ட கரி இவைகளுடன் சேர்த்துப் பல் விளக்க ஈறு நோய், பல்லரணை முதலிய பல் நோய்கள் குணமாகும். இவ் விதையை விளக் கெண்ணெயிற் கூட்டி எரித்து வடித்த தைலத்தை, ஓதம், விதை வாயு, விதை வீக்கம் முதலிய வைகளுக்குப் பூச நன்மையைத் தரும். அன்றியும், இத் தைலம் இரத்த வொழுக்கை நிறுத்தி, தொத்து நோய்களை விலக்கும்; குட்டத்திற்கு உள்ளுக்குங் கொடுக்கலாம். விதைப் புழுக்களைக் கொல்லுந் தன்மையது. இதன் பருப்பு மிக்கக் கசப்பு வாய்ந்ததால் உடம்பிற்கு நல்லதெனவும், விஷ சுரத்தை கொய்னாவைப் போல் கண்டிக்கு மெனவும், நமது நாட்டு வைத்தியர்களின் அபிப் பிராயம், bonduc nut. It is the seed of the eagle stone creeper. It has several names as Anklebell, Bezoar nut, Caly's foe, Fever nut; Grey bonduc, Indian filbert, Molucca nut or bean, Sumatra nicker etc. It is of a dull grey colour, smooth, shining all round and very hard; the shell is very thick; its kernel is of yellow or white colour and it is macerated and applied to swollen testicles, and in cases of orchitis. Having a purgative quality, when it is mixed with castor oil and given internally, it proves beneficial in testicle complaints. The powdered kernel mixed with powdered pepper is given with advantage in rheumatic and intermittent fevers; when mixed up with the contents of an egg and fried in ghee, it is a valuable remedy in cases of acute orchitis, ovaritis and scrofula. The powdered seed smoked through a *hookah* is said to cure colic; mixed with butter-milk and asafoetida it acts as a tonic in dyspepsia. The burnt seeds with alum and burnt areca-nut or its ashes serve as a good dentrifice useful in spongy gums, gum-boils etc. The ointment made from the seeds with castor oil forms an excellent application in incipient hydrocele, acute

orchitis and glandular swellings. It also restrains hemorrhage and is given internally in leprosy. The seed is an anthelmintic. The kernels are very bitter and considered a powerful tonic and antiperiodic like quinine by Vaidyans.

NOTE.—Bonduc nut was probably one of the eagle-stones of the ancients. The kernels are antiperiodic like quinine. It is substituted for British chinchona bark, gentian and santonin. Oil is used as a cosmetic. In Egypt, the nuts are strung as necklaces and used by pregnant women as amulets against abortion and sorcery. In Scotland the nuts are known as Molucca beans. The seeds are used by boys as marbles and the ashes as mordants.

கழற்சிக் கொழுந்து, கெச்சைக் காயின் இலைக் கொழுந்து. இதன் கொழுந்து ஈரலைப் பற்றிய கோளாறுகளுக்குச் சொஸ்தமளிக்கிறது. அன்றியும், சூதகச் சிக்கலையும், மூத்திரத் தாரை முதலிய குழாய்களைச் சுத்தப் படுத்தும். இவ் விலையி லிருந்து பிழிந்த எண்ணெய் இசிவு, வாதம் முதலிய நரம்பைப் பற்றிய நோய்களையும் போக்கும், the tender leaves of bonduc nut creeper. They are efficacious in disorders of the liver and are reckoned as deobstruent and emmenagogue and the oil extraced from them is useful in convulsions, palsy, and other nervous complaints. These leaves are boiled with ghee or castor oil which is applied to painful and swollen testicles.

கழற்சிப் பிரமாணம், கெச்சைக் காயளவு, a standard quantity of the size of a bonduc nut.

கழற்சி யிலை, கழற்சிக் கொடியின் இலை. இதை விளக் கெண்ணெய் விட்டு வதக்கிக் கட்ட வாத நோய், குடல் வாய்வு, விதை வீக்கம், விதை வாய்வு இவைகள் குணமாகும். இவ் விலைகளுக்குச் சூதகச் சிக்கலைப் போக்கும் குண முண்டு, leaves of bonduct nut creeper. These leaves when mixed up with castor oil and heated or warmed, form an external application in rheumatic complaints, intestinal disorders, as flatulency etc. and testicle complaints as orchitis etc. They are also reckoned as an emmenagogue.

கழற்சி வித்து, see கழற்சிக் கொட்டை.

கழற் கசாந்தம், தேசிப் பூ, an unknown flower.

கழற்ச பதம், see அரி விட்டம்.

கழற் சேவகம், கொள்ளிக் கட்டைத் தேக்கு, fire-brand teak—Premna tomentosa.

கழற் புளி, பெருங் குமிழ், coom teak—Gmelina arborea.

கழற் பருப்பு, கழற்சிக் கொட்டையின் உட் பருப்பு, the inner kernel of bonduc nut. See கழற்சிக் கொட்டை.

கழற் பேதி, பாச்சான் கள்ளி, a kind of spurge.

கழற்றல், வெளி வருவித்தல், to cause to come out as காதல் கழற்றல், causing the discharge of semen muliebre in a woman; 2. முழுவதும் நீக்குதல் அல்லது விலக்குதல், to abandon totally; to give up wholly as in ஆசையை கழற்றுதல்.

கழற்றி, அகற்றப்படச் செய்வது, that which is removed as பித்தக் கழற்றி, any drug or medicine that removes or gets rid of the bile from the system.

கழற்றுதல், see கழற்றல்; 2. நீக்குதல் as பாம்பு சட்டை கழற்றுதல், to slough off as a snake; 3. நீக்கப் பண்ணல், causing to be removed.

கழனி, சேறு, mire.

கழனி நண்டு, வயல் நண்டு, crabs found in the field and other agricultural tracts.

கழனிப் பயிர், நெல், paddy.

கழனி வெண்டை, சாதாரண வெண்டை, common bendy (Hibisqus) grown in rice-fields.

கழனீர், கழுவு நீர் அரிசியை அலம்பி விட்டுக் கழித்த நீர், water decanted from rice after being washed and cleaned.

கழா நிலம், see கழி நிலம்.

கழாயம், சிறுகீரை, see கழாய்; 2. see கஷாயம்.

கழாய், கழுகு, eagle; 2. சிறு கீரை, field spinach; pig's greens — Amarantus campestris.

கழாய் வலம், } கழா லக்கு } சிறு கீரை, see கழாய்.

கழாலை, உவர் நிலம், saline soil; 2. கழி நிலம், brackish soil; soil fed by back-water.

கழாநம், பாக்கு, arecanut; 2. கள், toddy.

கழி, உப்பு வாரி, back-water; 2. உப்பளம், salt pan; 3. செம் மெழுகு, red-wax; 4. மெழுகு வத்தி, candle; 5. மிகுதி, excess.

கழி கடை, பயனற்ற தென நீக்கியது, that which is rejected or thrown out as worthless; refuse.

கழி கணம், குழந்தைகளுக்குச் சீதம், சீதமாகப் பால் போலும், சலம் போலும் பேதியாகி உள்ளங் கை, உள்ளங் கால் இவைகள் சில் லிட்டுக் காணும் ஓர் வித கண நோய், a constitutional disease in children inherited from parents due to congenital heat; and it is marked by white diarrhoea or other dysenteric disorders followed by chillness of the extremities.

கழிகம், வாலுளுவை, intellect tree—Celastrus paniculata.

கழி காலம், சென்ற காலம், past time; 2. வாந்திபேதி காலம், the time or season of cholera.

கழி கிராணி, உண்ட வுணவு செரியாமல் அடிக்கடி பேதி யாகும் ஓர் விதக் கழிச்சல், chronic diarrhoea due to indigestien.

கழிக் காரை, ஓர் வகைக் காரைச் செடி, common honey-thorn — Canthium parviflorum.

கழிச்சல், குடலின் இளக்கத்தினா லுண்டாகும் வயிற்றுப் போக்கு. இது பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்குங் காணும். சாதாரணமாய் உடம்புக் கொவ்வாப் பண்டங்களைச் சாப்பிடுவதாலும், ஊசிய பண்டம், சலித்த சாதம், நாட் சென்று கெட்டு மேற்பட்ட பண்டங்கள் முதலியவைகளை யுண்பதாலும்; சீதோஷ்ண நிலைகளினாலும், சில சமயம், பயம், பீதி முதலிய காரணங்களினாலும் ஏற்படும். இதனால் நீர்ப் பேதி, வயிற்று வலி, வயிற் றிரைச்சல், நாக்கில் மாப் படிதல், மூன் பாய்தல், தாகம் அல்லது வரட்சி, பல வீனம் முதலிய குணங்கள் ஏற்படும். இதில் அனேக விதங்க ளுண்டு, any undue looseness of the bowls—Diarrhoea. It is found in grown up people or adults and children. The commonest causes are the eating of unsuitable food, poisonous substances such as stale food, vapid or tasteless cold rice, and other substances decomposed from long-keeping, sudden changes in the weather, chillness or from sudden fear, excitement etc. The following are the symtoms:— watery stools (with undigested matters), colicky pain, rumblings in the intestines, coated or furred tongue, thirst or dryness of the tongue, weakness etc. The following are different kinds of diarrhoea:—

1. சீதக் கழிச்சல், mucous diarrhoea—Diarrhoea mucosa.
2. இரத்தக் கழிச்சல், dysenteric diarrhoea.
3. சலக் கழிச்சல் அல்லது நீர்க் கழிச்சல், watery diarrhoea; diabetes.
4. சங்கரக் கழிச்சல், diarrhoea attended with various symptoms—Sympathetic diarrhoea.
5. சோபக் கழிச்சல், diarrhoea followed by great weakness and exhaustion.
6. வெள்ளுடைக் கழிச்சல், white diarrhoea.
7. வயிற்றுக் கழிச்சல், gastrogenic diarrhoea.

See அதி சாரம்.

கழிச்சல், see வாந்திபேதி.

கழிச்சல் சுரம், அசீரண பேதி, சீதபேதி இவைகளின் நிமித்த மாகக் காணும் சுரம், fever accompanying diarrhoea or dysentery—Dysenteric fever.

கழிச்சல் தோஷம், திரி தோஷத்தினு லேற்பட்ட வோர் வகைக் கழிச்சல், diarrhoea due to complications arising from derangement of the three humours in the system.

கழிச்சல் வாந்தி, கழிச்சலினு லேற்படும் வாந்தி அதாவது வாந்தி பேதி, purging followed by vomitting—Cholera.

கழிஞ்சி, see ஏ ரழிஞ்சில்.

கழிதல், பேதி யாதல், purging; 2. சாதல், dying; 3. மிகுதல், being excessive.

கழித்தல், நீக்குதல், evacuating as மலங் கழித்தல், evacuating the bowels; 2. போக்குதல், spending or passing away as காலங் கழித்தல், to pass away the time; 3. விலக்குதல், removing or getting rid of as சதையைக் கழித்தல், removing the flesh which sticks to bones.

கழி நிலம், உப்புத் தரை, saline soil; 2. கழியைச் சார்ந்த நிலம், land adjoining back waters; 3. உப்பளம், salt-pan.

கழிந்த காலம், ஆயுள் கடந்த காலம், past ages; 2. இறந்த காலம், past time; the period of death; 3. சென்ற காலம், by gone days.

கழிந்தார், இறந்து போனவர், deceased persons.

கழிந்தோர், மிக்க வலிமையுடையவர், men

having great muscular energy and vigour; 2. மிகுந்த பலசாலிகள், very strong men.

கழி பிறப்பு, முற் பிறப்பு, previous birth ; the birth preceding the present.

கழி பொருள், தள்ளு படியான வஸ்து, that which was rejected as useless—Refuse.

கழிப் பாப்பு, அறுகாற் பிராணி, an animal or creature having six feet.

கழிப் பிரண்டை, கோப் பிரண்டை, a species of adamantine creeper—Vitex quadrangularis.

கழிப்பு, ஒழிக்கை, expulsion; 2. தோஷம் நிவர்த்தித்தல், the act of propitiating or appeasing the evil spirits or deities by offerings; 3. கழலல், emission.

கழிப்புக் கழித்தல், சாந்தி செய்தல், to remove the evil influence of deities by animal sacrifice or other offerings.

கழிப்புச் சுற்றல், சோறு முதலானதை நோயாளியின் தலையைச் சுற்றி, கெட்ட தேவதை பார்வை அல்லது திருஷ்டி தோஷம் விலகும் படிச் சாந்தி செய்தல். இது சாதாரணமாய் மாந்திரீகரால் செய்யப் படும், waving round the head of the patient boiled rice etc. to avert the evil influence caused by malignant spirits or jeolous eyes. This is a ceremonial magic generally effected by magicians.

கழிப்புச் செய்தல், see கழிப்பு சுற்றல்.

கழிப் புல், உவர் நிலத்தில் விளையும் புல், grass grown on saline soil.

கழிப் பேடுத்தல், see கழிப்பு சுற்றல்.

கழி மாந்தம், குழந்தைகளுக்கு காணுகிற கழிச்சல் ஏற்படும் மாந்த நோய். இதனால் வாந்தி, மூர்ச்சை, சிரசில் வியர்வை, கை கால் குளிர்ந்து வலிப்பு முதலிய குணங்கள் காணும், indigestion in children characterised by the following symptoms viz. passing motion of varied colours, vomiting, fatigue, perspiring on the head, chillness of the extremities, convulsion etc.

கழி முட்டான், கழி நிலத்தில் காணும் ஓர் வகைப் புல், a species of grass found grown on saline soil — Apluda aristata.

கழி முள்ளி, கழி நிலத்தில் வளரும் ஓர் முள்ளி, Indian night shade found grown on saline soil.

கழி மூலி, கழி நிலத்தில் வளரும் மூலிகை, herbaceous plant growing in saline soil or found on the banks of back waters.

கழி யுடல், தசை நீங்கிய உடல், the bones of animals separated from the flesh — Skeleton.

கழி யுப்பு, கழியில் பூர்க்கும் உப்பு, salt from the swamps.

கழி யுண்ணன், கழியும் படியாக மித மிஞ்சி உண்போன், one who indulges to excess in eating and purges thereby—Glutton.

கழி வலி, பிரியும் சக்தி, negative current as in electricity as opposed to கவர் வலி, positive current.

கழி வாசல், இரைப் பை, stomach.

கழிவாய் நஞ்சன், ஓர் வகைப் பாம்பு, a species of snake.

கழி விந்து, கலிதமான விந்து, discharged semen; 2. தானுகவே வெளிப் படும் விந்து, semen through involuntary emission.

கழி விரத்தம், இழிந்த அதாவது அசுத்தமான இரத்தம், impure or venous blood.

கழிவு, உடலை விட்டு வெளிப் படுதல், discharge; 2. தள்ளுபடியான வஸ்து, refuse; 3. மலம் அல்லது உடற் கழிவு, fecal matter or other excretions and secretions from the body; 4. பிராயச் சித்தம், expiation as of sin; 5. சாவு, death; 6. மிகுதி, excess; 7. எஞ்சியது, surplus matter.

கழிவுச் சரக்கு, உதவா தென தள்ளுபடியான சரக்கு, drugs rejected as useless.

கழிவுப் பொருள், மல மூத்திராதிகள், excretory matters; 2. கட்டி, விரணம் இவைகளினின்று வெளி வரும் சீழ், இரத்தம் முதலியன, matter of pus etc. thrown out or oozing from boils, abscesses, wounds, ulcers, etc.; discharge.

கழி வெண் பிறப்பு, பிறப்பைக் கடந்து ஆன்மா விடுதலை யடைவதற்காகக் கடையில் அடையும் கதி அல்லது நிர்வாண நிலை, (*In Jainya Philosophy*), that stage of the soul entering the Nirvana in the course of working out for final emancipation.

கழு, கழுகு, eagle; 2. காசம், asthma.

கழுகு, பிணங்களைப் பிடுங்கித் தின்னும் ஓர் பறவை, the name of a well-known bird of prey which lives chiefly on dead bodies; Vulture—Gyps indicus alias G. bengalensis; 2. பொன் னிறமான கழுகு

yellow-coloured eagle — Aquilinae falconidae; 3. பெருங் கழுகு அல்லது கூளி, large eagle—Vultur changoun.

கழுக் காணி, வயிரக் கட்டை, (metaphorically) said of a person with a very strong constitution.

கழுசி, சீந்திற் கொடி, moon-creeper, bile-killer—Menispermum cordifolium.

கழுதி ரதம், பேய்த் தேர், mirage.

கழுது, ஓர் வகைப் பேய், a demon; 2. வண்டு, beetle.

கழுதை, வண்ணான் கழுதை. இப் பிராணி மிக்க இழிவாகக் கருதப் பட்டாலும், இது வைத்தியம், மாந்திரீகம் முதலிய தொழில்களுக்கு மிக்க உபயோக மானது. இதில் கருங் கழுதையை மிக்க மேன்மையாகக் கருதப் படும். பொதுவாகக் கழுதையின் தலை மண்டை, கொழுப்பு முதலியவைகள் பில்லி, சூனியம் இவைகளுக்கும், இதன் பால், மூத்திரம், குளம்பு, விட்டை இவைகள் வைத்தியத்திலு முபயோகப் படும், domestic ass; dhoby's donkey—Equus asinus. Although this animal is considered very inferior in the animal kingdom, still it serves manya useful purpose in Magic and Medicine. The one of black colour is considered highly useful. The skull and fat are used in witchcraft and sorcery. Its milk, urine, dung and its hoof are all employed in medicine with much advantage.

NOTE—Asses are distinguished from horses by their long ears and head and through their long tuft of hairs at the end of their tails.

கழுதைக் கத்தம், கழுதை விலத்தி, the dung of an ass.

கழுதைக் காரிகம், see கழுதைக் கொடி.

கழுதைக் குடத்தி, } see கழுதைப் புலி.
கழுதைக் குறத்தி, }

கழுதைக் குத்தி, காகோளி, false Kamela — Casearia tomentosa.

கழுதைக் குரல், அவயக் குரல். இதை நற் சகுனமாகக் கொள்ளப்படும், the call of an ass through disagreeable is considered a good omen.

கழுதைக் குளம்படி, வட்டக் குளம்படி, plant known as ass's hoof.

கழுதைக் குளம்பு, கழுதையின் கால் குளம்பு. இதனால் குளிர வலி போம், ass's hoof used for curing convulsions attended with spasm, occurring in women subsequent to their confinement.

கழுதைக் குறண்டி, பூனை முட் குறண்டி, a species of plant of the Lepidagathis genus. See குறண்டி.

கழுதைக் கொழுப்பு, கழுதையின் சதைக் கொழுப்பு. இது மாந்திரீகத்திற் குதவும், the fat of an ass used in Magic for driving off devils and demons.

கழுதைச் சாணி, see கழுதை விலத்தி.

கழுதைச் சிறு நீர், see கழுதை மூத்திரம்.

கழுதைத் தும்பை, ஓர் வகைத் தும்பை. இதன் பூ வெளிது நீலம். பாழ் நிலங்களில் விளையும். நீரைப் போக்கும். பாம்பு கடிக்குக் கொடுப்பதுண்டு, இரத்தத்தைச் சுத்தி செய்யும். இலைக் கஷாயம் புண்களைக் கழுவ வுதவும், donkey toombay; Indian borage; small purslane — Trichodesma indicum alias Borago indica. Flowers pale blue, grown in waste places; have repute for curing snake-bites; diuretic; blood-purifier; and cold infusion of leaves is depurative.

NOTE—Ceylon borage is another species of this genus (Zeylanicum) whose leaves are used as emmollient poultice.

கழுதை நீர், see கழுதை மூத்திரம்.

கழுதை நெய், see கழுதைக் கொழுப்பு.

கழுதை புட்டை, see கழுதை விலத்தி.

கழுதை புட்டை மரம், அண்டிமாங் கொட்டை மரம். இதன் பூ சிவப்பு, காய் மாங்காயைப் போ லிருக்கும். இதன் உள் விதை முந்திரி பருப்பைப்போ லிருக்கும், a kind of tree with red flowers and fruit about the size of a mango. The kernel of the seed resembles that of cashew nut pulp.

கழுதைப் பாக்கு, காட்டுப் பாக்கு, wild areca-nut plant.

கழுதைப் பாலாட்டங் கொடி, நஞ் சறுப்பான் கொடி, see கழுதைப் பாலை; 2. கரு வேசரி, black ass; black mule.

கழுதைப் பாலை, நாய்ப் பாலை, common Indian ipecacuanha—Tylophora asthmatica.

கழுதைப் பால், கழுதையின் பால். இது மிக்க இனிப்பா யிருக்கும். இது வாத ரோய், சரப்பன், புண், உள் வித்திரதிக் கட்டி, கிரந்தி, சீழ்ப் பிரமேகம், சோதி ஈரல், ரத்தப் பிரமை, பித்த தோஷம், வெண் குட்டம், க்ஷய ரோய், வைத்தியம் முதலான ரோய்

களுக்கு நாளொன்றுக்கு இரண்டு வேளை தனியாக வேனும், மருந்துடன் கலந்தேனும் நமது நாட்டு வைத்தியர்கள் கொடுப்பதுண்டு. அன்று பிறந்த குழந்தைகளுக்கும் நோயணுகா வண்ணம் சில நாளைக்கு இதைக் கொடுத்து வருவதுண்டு. க்ஷயத்திற்கு வெகு சிலாக்கியமானது. இதற்கு நஞ் சறுப்பான் என்னும் பெயர். இது எல்லா விஷயத்திலும் மூலைப் பாலுக்கு மேன்மையாகவே சொல்ல வேண்டும். இதைக் கரந்தபடி குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். எளிதில் குடிக்கக் கூடியது, ass's milk—Lac asinae. It is sweet to the taste. Vaidyans prescribe it singly or with medicine to be taken twice a day, morning and evening to effect a cure in the following diseases viz. rheumatic pains, skin eruptions; itches, internal abscess, syphilitic ulcers, albuminaria, mental derangement, bilious disorders, white leprosy, phlegmatic diseases, lunacy etc. It is also administered to new-born babies for a few days as safeguard preventing them from being attacked with any disease. It is a valuable medicine in phthisis and is said to kill the germs.

கழுதைப் புலி, கழுதைக் குடத்தி. இது பார்வைக்கு நாயைப்போ லிருந்தாலும், புனுகு பூனை இனத்தைச் சேர்ந்ததெனச் சொல்லக் கூடும். பின் கால் முன் காலைவிட குட்டையா யிருக்கும். பாதங்களில் நான்கு விரல்களும் தேய்ந்த நகமும் உண்டு; வெளிர் மஞ்சளும் சாம்பல் நிறமும் கலந்த வரிகள் அமைந்தது. வால் மயி ரடர்ந்தது. மலைச் சாரல்களின் குகை அல்லது பொந்துக்களில் வசிக்கும். கழுதைக் குரல் போன்றது. இதன் எலும்பை அரைத்து கோரோசனை, கஸ்தூரி இவைகளுடன் கலந்துப் பற்று போட வாத வலி குணமாகும். கோமாரி முதலிய மாட்டு நோய்கள் அணுகாதபடி இதன் தலையை மாட்டுத் தொழுவத்தில் புதைத்து வைப்பதுண்டு. இதன் பற்களைப் பிரசவப் பெண்ணின் இடுப்பில் கட்ட வேதனை நீங்கும்; நாசி யெலும்பிற்கு உணவை ஜெரிக்கும் சக்தியுண்டு. ஆகவே, இப் பிராணி இறப்பதற்கு முன்னதாகவே இவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும், Hyaena or Strand wolf — Hyaena striata alias Canis hyaena alias H. vulgaris. Though it somewhat resembles the dog in appearance, it connects the cat with the civet which it resembles. The hind legs are much shorter than the front; and the feet have only four toes with blunt worn-out claws. It is of a pale yellowish grey colour with stripes; the tail is bushy. It frequents especially ravines, holes and caverns. Its cry is disagreeable like that of an ass. The bone of this animal rubbed into a paste and mixed with bezoar and musk is used to alleviate rheumatic pains. The head is sometimes buried in cattle sheds to prevent cattle disease; its incisors are tied round the loins of a woman in labor to lessen her pains; its nasal bone is believed to possess the power of digesting food and so they must be removed and secured before the animal is dead.

கழுதை மறி, கழுதைக் குட்டி, the young of an ass.

கழுதை மான் புள்ளி, பாஷாணத்தைக் கட்டு மோர் வித மூலி, an unknown drug capable of binding or fixing arsenical poisons.

கழுதை முள்ளி, கோழி முள்ளி, sea-holly—Acanthus ilicifolius.

கழுதை மூத்திரம், கழுதை விடு மூத்திரம். இதனால் உஷ்ணம், தாது நஷ்டம், காசம், இரைப்பு, சில் விஷம், கிருமி விரணம், தந்தி மேகம், அபஸ்மாரம் முதலிய பல நோய்களுக்கும், உலோகங்களையும், மருந்துச் சரக்குகளையும் சுத்தி செய்வதற்கும் உதவும், இதில் பாஷாணத்தின் தோஷத்தை நீக்கும் சக்தி வாய்ந்த வஸ்துக்கள் உண்டு. கிராணியைப் போக்கும். புழுக்களைக் கொல்லும், ass's urine. In Tamil medicine it is considered to be of great use not only in curing diseases but also in cleaning or purifying metals and medicinal drugs and freeing them from their noxious properties. The diseases cured through this are—excess of heat in the body, spermatorrhoea, asthma, bronchitis, poisonous bites, germs in wounds and sores, gonorrhoea, epileptic fits etc. The urine of an ass tends to neutralise the effects of poison generated through the chemical action of two different substances in the organism. It is strong and proves curative in cases of chronic dysentery. It is a vermifuge.

கழுதை யிலத்தி, கழுதைப் பீ. இதற்கும் இதன் மூத்திரத்தைப் போலவே, உலோகங்களைத்

சுத்தி செய்யவும், குதிகால் வாதம் முதலிய வாத நோய்களுக்கு வைத்துக் கட்டவும் உதவும், dung of an ass having the same virtue as that of ass's urine in cleaning the metals of its impurities and curing rheumatic diseases such as talalgia etc.

கழுதை வண்டு, குரு முறைக் கெடுத்த ஓர் வகை வண்டு. இதன் மேல் சொறிபோ லிருக்கும். இதைப் பிடித்து வந்து முதுகில் கண்ட அரிசியைப் போல் முட்டைகள் விழும். இவ் வரிசி கையில் பட வெந்து போகும். உடம்பில் பட விரிந்து போம். இக் குருவால் எல்லா உலோகங்களும் நீறும், Donkey's beetle. It is a kind of beetle with the universal property of reducing all drugs to ashes. Its body outwardly appears to be itchy; impinging on its back, will be found dropping particles like rice. These particles when touched, blister the hand and in coming into contact with the body are said to corrode the skin and as such they are used for calcining all metals.

கழுதை விட்டை, see கழுதை யிலத்தி; 2. கழுதை விட்டன், bloody drop ordure tree —Sterendia guttata.

கழுதை விட்டைப் பால், கழுதை இலத்தியைப் பிழிந் தெடுத்த ரசம், the juice extracted from the dung of an ass.

கழுதை விரியன், ஓர் விரியன் பாம்பு. இதன மந்த குணத்தினால் இதற்கு இப் பெயர் வாய்ந்தது போலும். இது கருப்பு நிறம், பெரிதாக வளரும். கடித்தால் கொல்லக் கூடிய விஷ மிராது, ass viper of the family of Viperidae and is so called probably of its dullness. It is of a black colour and grows up to a large size. Its bite is not deadly.

கழுதை வீரியம், கழுதையின் வாந்து. இதை கழுதை சம்போகம் செய்யும் போதுச் சேகரித்து அத்துடன் கடைச் சரக்குகளையும் சேர்த்து மருந்துத் தயாரித்து தாது விர்த்திக்காக உபயோகிப்ப துண்டு, the semen of an ass. It is collected or secured by Vaidyans during its intercourse and mixing it up with other ingredients is used as an aphrodisiac.

கழுதை வுதடு, பருத்த அல்லது தடித்த வுதடு thick-lipped like that of an ass—Macrochelia.

கழுத் தடி, தோள் மேல், bottom of neck or the upper side of the shoulder.

கழுத் தளவு, கழுத்து வரை, up to the neck.

கழுத் தறுப்பு, பெருந் துன்பம், great distress as if the throat is being cut; 2. கழுத்தை யறுத்தல், cutting of the throat.

கழுத் தாடாளி, கழுத் தாடாத பிராணி, any animal with a stiff neck; 2. ஒட்டை, camel.

கழுத் திசிப்பு, see கழுத் திசிவு.

கழுத் திசிவு, சீதளம், சன்னி முதலிய ரோகங்களில் கழுத்து நரம்புகளுக்குக் காணும் இசிவு, contraction or otherwise of the nerves of the cervical region through cold or chillness, or in cases of delirium or apoplexy etc; 2 பிடரி யிசிவு, contraction of muscles in the nape of the neck, as in opisthotonous.

கழுத்து, கண்டம். இது தலையும் உடலும் சேருமிடம், the part of the body that connects the head with the trunk—Neck.

கழுத்துக் கரப்பான், கண்டக் கரப்பன் அதாவது குழந்தைகளுக்குக் கழுத்தைச் சுற்றிலும் வரும் கரப்பன் புண், skin eruptions found round the neck in children.

கழுத்துக் கிரந்தி, கழுத்தி லுண்டாகும் கிரந்திப் புண். இதனால் குர லடைப்பு, தொண்டைக் கோளங்களின் அழற்சி முதலியவை ஏற்படும், any ulcer (syphilitic) on the neck causing hoarseness, inflammation of the tonsils etc; 2. கழுத்தின் கோளங்களுக் குண்டாகும் வீக்கம். இது குழந்தைகளுக்குச் சீதளத்தினா லுண்டாகும், glandular swellings of the neck. The glands on each side of the neck known as lymphatic glands often become swollen in children from cold or other causes; 3. மேகத்தினால் கழுத்தி லுண்டாகும் புண், a tubercular disease of the glands in the neck.

கழுத்துக்குக் கயி றிடல், தூக்கு போட்டுக் கொள்ளல், to commit suicide by hanging.

கழுத்துக்குச் சுருக் கிடுகை, கயிற்றினால் கழுத்தில் சுருக்கிட்டு, மூச்சு விட முடியாதபடி இறுகச் செய்தல், constriction of the neck by a ligature around the neck to cause death by preventing air entering into the lungs—Strangulation.

கழுத்துச் சுளுக்கு, கழுத்து நரம்பிற்கு ஏற்படும் சுளுக்கு, sprain of the nerves ordinarily on

the neck ; 2. கோணக் கழுத்து. இதனால் தலை ஒருபுறம் சாய்ந்துக் காணும், wry-neck caused by contraction of the muscles of the neck and so drawing the head to one side.

கழுத்தத் திருகல், கழுத்தை முறித்தல், குழந்தைகளைக் கொல்லும் ஓர் விதம், to wring the neck. It is a method adopted criminally to kill a child without any visible symptoms.

கழுத்து நரம்பு, கழுத்தில் ஓடும் நரம்புகள், the nerves distributed in the neck.

கழுத்து நாடி, இருதயத்தி லிருந்து கழுத்தின் வழியாய்ச் சிரசிற்கு இரத்தத்தைக் கொண்டு போகும் இரத்தக் குழாய்கள், the arteries or blood-vessels carrying the blood from the heart to the head through the neck.

கழுத்து நாளம், தலைக்கும், இருதயத்திற்கும் நடுவே தோளின் இரு புறமாய் கழுத்தில் ஓடும் இரத்தக் குழாய், the two large veins on each side of the neck, by which the blood is returned to the heart from the head —Jugular veins.

கழுத்து நோய், கழுத்து வலி, pain in the neck ; 2. பிடரி வலி, pain in the nape of the neck ; 3. கழுத்தில் காணும் வியாதிகள், diseases of the neck in general.

கழுத்துப் பிடிப்பு, கழுத்து விறைப்பு. கழுத்து நரம்புகள் கடினமடைந்து திருப்ப முடியாமை, stiff-neck—Torticollis.

கழுத்துப் புண், கழுத்தைச் சுற்றிலும் வரும் கிரந்திப் புண், a tubercular disease of the glands of the neck often showing itself by glandular tumours which suppurate and turn into ulcers—Scrofula ; 2. மாடுகளுக்குக் கழுத்தில் வரும் புண், sore especially found in the cattle on the neck —Yolk-gall.

கழுத்துப் பெரு நரம்பு வேர், தலையினும், கழுத்தின் முன்ன நரம்பு முடிச்சு, a ganglion opposite the second and the third cervical vertibrae—Superior cervical ganglion.

கழுத்துப் பொருத்து, கழுத்தின் பின் பக்கம் முள்ளந் தண்டெலும்புகளின் சேர்க்கை, the joints of the bones in the cervical region ; that part which joins the head with the neck.

கழுத்து மடிப்பு, உடலின் தடிப்பினால் கழுத்தின் தோலில் ஏற்படும் மடிப்பு, the folds of the skin on the neck due to corpulency.

கழுத்து மாலை, see கண்ட மாலை.

கழுத்து முடிச்சு, குரல் வளை வெளியிற் காணப்படும் பிதுக்கம். இது ஓர் பெரிய குருத்தினால் ஆக்கப் பட்டது, the prominence in the front of the neck caused by the largest of the cartilages which enclose the larynx—Adam's apple.

கழுத்து முள் ளெலும்பு, பிடரி எலும்பு, bones of the nape of the neck—Cervical vertibrae ; 2. ஏழு முள்ளந் தண்டெலும்புகள், the seven vertebrae of the neck.

கழுத்து முறித்தல், see கழுத்துத் திருகல்.

கழுத்து மேல் நிற்றல், தப்பித்துக் கொள்ளாதபடி வற் புறுத்தல், pressing one so as not to escape ; 2. கழுத்தை மிதித்தல், throttling by trampling upon the neck.

கழுத்து ரோகம், பொதுவாகக் கழுத்திற் காணும் வியாதிகள், diseases of the neck in general.

கழுத்து வலி, சீதளத்தினால் கழுத்து நரம்புகளுக் குண்டாகும் வலி, an affection of the nerves of the neck due to exposure to chilliness or cold or through other causes.

கழுத்து வாதம், கழுத்தைத் திருப்பிப் பார்க்க முடியாமற் படிக்கு நரம்பு விறைத்துக் காணு மோர் வாத நோய், stiffness of the neck due to rheumatism — Symptomatic torticollis ; 2. கோணக் கழுத்து, a distorted or twisted neck.

கழுத்து வீக்கம், கழுத்தின் கோளங்களுக்குக் காணும் வீக்கம், a glandular swelling of the neck ; 2. கழுத்தி லேற்படும் கழலைக் கட்டி, a tumour of the neck as goitre etc ; 3. பொன்னுக்கு வீங்கி, swelling due to inflammation of parotid glands — Mumps.

கழுத் தாட்டி, தொண்டை, throat.

கழு நீர், புண்களைக் கழுவும் நீர், water or other liquid for the purpose of cleansing wounds, sores etc— Lotion ; a cold decoction of the drugs used in washing the affected part—Wash ; 2. அரிசி களைந்த நீர், water with which the rice has been washed or cleansed ; cold washings of rice ; 3. செங்கழு நீர்ப் பூ, red Indian water-lily—Nymphae rubra ; 4. முகம், மயிர் முதலியவைகளைக் கழுவிச் சுத்தி செய்வதற்காக உபயோகிக்கும் நீர், any scented liquid used for toilet purposes such as hair-wash etc.

கழு நீர்க் காடி, அரிசி கழுவித் தீர்ந்த நீரினின்று தயாரித்த புளித்த காடி, a fermented or sour liquid prepared from rice water; 2. வடித்தக் கஞ்சியைக் கொண்டு தயாரித்தக் காடி, a sour liquid obtained by fermenting a boiled conjee.

கழு நீர்ப் பிங்கான், புண் அல்லது இரணங்களை கழுவு வதற்காக உபயோகிக்கும் தட்டைப் பிங்கான், a flat dish used in cleansing sores or wounds.

கழு நீர்ப் பூ, செங் கழு நீர்ப் பூ, red Indian water-lily—Nymphae rubra.

கழுநீர் மண்டி, கழு நீரின் அடியில் தங்கி நிற்கும் வண்டல், sediment of rice water found deposited at the bottom.

கழுநீர் மூத்திரம், கழு நீரைப் போன்ற வெண் மூத்திரம், white or milk-coloured urine—Chyluria.

கழு நுழையாள், ஒட்டை, camel.

கழுந்து, குடத்தின் கழுத்து, the neck of a pot; 2. பொருத்து, joint; 3. மர வயிரம், the heart of a tree.

கழு மணி, சுத்தி செய்த சங்கு மணி, polished beads made of conch; 2. மெருகிட்ட இரத்தினம், polished gem.

கழுமல், மயக்கம், delusion; 2. மாதுளை, common pomegranate — Punica granatum; 3 மிகுதி, excess.

கழு மாகிதம், பொய்யு, quinine.

கழு முதல், சேர்தல், to join; 2. கலத்தல், to mix together; 3. கலக்குதல், mixing.

கழு முள், மாதுளை, pomegranate — Punica granatum.

கழு வண்டம், வைத்திய முப்பு, a universal agent composed of three salts used in medicine.

கழு வாகதம், குறிஞ்சா, swallow wort—Secamone emetica.

கழுவிக் குளிப் பாட்டல், செத்த பின்புத் தண்ணீர் ஊற்றிக் கழுவுதல், to cleanse the dead body.

கழுவி நெய், கழுவி லேற்றிய பிணத்தி னின்று எடுத்த கொழுப்பு. இது மாந்திரீகத்திற் குதவும், the fat collected from the corpse of an impaled person for purpose of using it in Magic.

கழுவுதல், சுத்தி பண்ணல், to wash or cleanse; 2. வட்டாக வுருக்குதல், to melt and cast in mould as metals; 3. புண்களைக் கழுவுதல், to cleanse wounds.

கழுவு நீர், see கழு நீர்.

கழுவை, see கழு முள்.

களை, மூங்கில், bamboo—Bambusa arundinacea; 2. கரும்பு, sugar-cane; 3. கருப்பஞ் சாறு, sugar-cane juice; 4. மூங்கிற் குழாய், bambu tube; 5. கரும்புத் தாள், stem of sugar cane.

களை நெல், மூங்கி லரிசி, bamboo-seed.

களை முத்தம், மூங்கிலிற் பிறந்த முத்து, a dark or brown-coloured pearl supposed to be formed in a bamboo.

களகச் சத்தி, கருப்புக் கடலை, black Bengal gram.

கள கண்டகம், கழுத்தி லிருக்கும் மாமிசக் கிரந்தி பருத்தல், swelling of the parotid gland.

கள கண்டக ரோகம், (களம் = கழுத்து + கண்டகம் = தாடை). இதுவே வாத கள கண்டகம். வாத கபத்தினாலும், கொழுப்பினாலும், கழுத்திற்கும், தாடைக்கும் இடைவெளியில் வலியைப் போல் நோவில்லாத மாமிச மொத்தைதையைத் தொங்கப் பண்ணு மோர் நோய், a painless pendant large or small, occurring in the front part of the neck due to chronic enlargement of the thyroid gland. It is due to the deranged and aggravated Vayu and Kapam and is characterised by the presence of fat-in the affected part and attended with difficulty of respiration—Goitre.

NOTE — Prominence of the eye-balls and loss of voice are the chief characteristics. It is incurable.

களகண்ட மாலை, வாயு அல்லது கபாதிக்கத்தினால் தொண்டையின் கோணம் வீங்கி, வெளிப்புறத்தில் சிறிய அல்லது பெருங் கழலையைப் போற் தொண்டையைச் சுற்றிலுங் காணும் சிலந்திகள், neck affected with diffuse lipoma or fatty tumour. It is due to Vayu or deranged phlegm. *C.f.* கண்ட மாலை.

கள கண்டம், குயில், Indian cuckoo; warbler; 2. கழுத்தின் வீக்கம், temporary swelling of the neck; 3. புரைக் குழல், see கள கண்ட மாலை; 4. தொண்டை யெழுச்சி, goitre.

கள கண்ணளி, கழுத்தில் வெள்ளை அதாவது நுளைகளில் புண்டாகும் லெக்கிப் புண். இதுவே கண்ட மாலை, sores or ulcers with sinuses in the neck. See கண்ட மாலை.

களகது ரோகம், புகைக் குழல், goitre.

களகம், பெருச்சாளி, bandicoot.

கள களத்தல், அடிக் கொளி, gurgling noise; 2. கோழைச் சத்தம், mucous rale.

கள களப்பு, நெஞ்சில் கோழை கட்டுவதால் உண்டாகும் சத்தம், noise due to the accumulation of phlegm in the chest; 2. மரணத் தருவாயில் நெஞ்சிற் காணும் சத்தம், the sound emitted by the dying—Death-rattle.

களகள வெனல், களகள வெனச் சத்தித்தல், gurgling rale in the lungs; rattling as if blowing through a pipe into soapy water.

களக் கழலை, தொண்டையில் தோற்றும் கழலைக் கட்டி, tumour in the neck. C.f. கள கண்டகம்.

களக் கிரகம், தொண்டையைப் பிடித்தல், seizing by the throat; pressure on the throat, which is a feeling or sensation experienced in nightmare; 2. தொண்டையை அமுக்கும் ஓர் நோய், any disease marked by compression of the throat.

களங்கம் கெடுக்கும் காளி, களங்கத்தைக் கெடுக்கும் வெள்ளிய மணல், tin ore which tends to spoil the formation of களங்கு which see.

களங்கச் சத்துரு, ஈய மணல், lead ore.

களங் கட்டி, ஓர் மீன், a fish.

களங்கம், களிம்பு, verdigris; 2. கறுப்பு, blackness; 3. மாசு, stain; blot; 4. நீல நிறம், blue colour; 5. சிதாம்ப பாஷாணம், a mineral poison; a native arsenic; 6. நில வேம்பு, ground neem or French chiretta—Andrographis paniculata; 7. வெட்டையாகச் செய்த உலோகக் கலப்பு, a metallic compound that is turned into a reducible mass. See களங்கு.

களிங்கு, களங்கம், which see; 2. பற்ற உலோகங்களோடு இரசத்தை முக்கியமாகச் சேர்த்துத் தயாரிக்கும் பொடிக் குளிகை, a pill prepared from several metals with mercury as chief ingredient; 3. ஒருவித பாஷாணம், a kind of arsenic; 4. வெட்டையாகச் செய்த உலோகக் கலப்பு, (in Alchemy) a metallic compound turned into a reducible mass; 5. சிறு ஈச்சு, small date or coromandel coast date—Phoenix farinifera; 6. கல கலக்கச் செய்த உலோகம், a metal which is split into atoms.

களிங்குச் செம்பு, களிம்பு புள்ள செம்பு, copper with verdigris or impure copper as opposed to சுத்தச் செம்பு, refined and pure copper; 2. வெட்டையாகச் செய்த செம்பு, copper that is turned into a reducible mass.

களிங்கு முறை, உலோகங்களை வெட்டையாகச் செய்யு முறை, (in Alchemy) the method or process of converting metals into a reducible mass; 2. உலோகங்களை அணுக்களாகப் பிரித்து கல கலக்கச் செய்தல், to agitate a metal by splitting or seperating it into divisible atoms.

களிங்கு வேதை, உலோகங்களைக் களங்காக மாற்றி அதை வாதத்திற் குபயோகப் படுத்தல், a process in alchemy by which metals are first rendered into a reducible mass by splitting or separating their atoms before using them for transmutation.

கள சாலூகம், தொண்டையிற் காணும் கழலை, tumour in the throat. See களக் கழலை.

களாகு, see அறி விடயம்.

கள கண்டு, உள் நாக்கு வீக்கம், swelling of the uvula; 2. நாக்கு மீ திருக்கும் முள், pointed projections or papillae of the tongue; 3. பிடரியி னுட் பக்கம் காணும் சதை வளர்ச்சி, growth of flesh found in the inner side of the neck; 4. தொண்டைப் பிளப்பு, an ulcer of the throat.

கள கண்டு, கபாதிக்கத்தினால் இரத்தம் பாழாகி அடைந்து, அதனால் வாயின் பின்புறம் அண்ணத் தருகில் சதை வளர்ந்து, பொத்தை யைப் போல் காணு மோர் நோய், inflammation of the two small glandular bodies situated one on each side of the back of the mouth at its juncture with the throat. It is the enlarged tonsils said to be caused by the deranged blood and kapham—Tonsilitis.

கள கண்டிகம், (களம்=கழுத்து+கண்டிகம்=வீக்கம்), உள் நாக்கு வீக்கம், swelling of the uvula; 2. உள் நாக்கு, uvula; 3. அண் ணாக்கு, soft palate; 4. தொண்டைக் குழிக்கும், மேல் பாகத்தும் காணும் தசிதம்,

inflammation or affections of the glottis and the trachea.

களவிடையம், see அதிவிடயம்.

களச்சிக் கோல், சத்திரக் கருவி இருபத் தாறில் ஒன்று, one of the twenty-six instruments used in surgery according to Tamil Medical science.

களஞ்சி, ஒரு பாஷாணம், a kind of prepared arsenic; 2. கழற்சி அதாவது 40 குன்றி மணி எடை, a weight of 40 grains; 3. கழற்சிக் காய், bonduc nut.

களதம், see களகம்.

கள தௌதம், கண்ணாடி, mirror; 2. வெள்ளி, silver. See களதௌதம்.

களதூதம், see கள தௌதம்.

கள தௌதம், கண்ணாடி, mirror; 2. வெள்ளி, silver.

களத் தனி, ஓர் சதை வளர்ச்சி, a small fleshy protuberance resembling the nipple hanging in the throat.

களத்தரி, தான்றி, devil's abode — Terminalia belerica.

களத் தூரி, } களத் தூன்றி, } தான்றி, see களத் தரி.

களப கஸ்தூரி, வாசனைக் கலப்பு, a mixture of perfumes.

களபம், யானை, elephant; 2. கலவை, mixture; 3. கலவைச் சாந்து, perfumery.

கள பித்தம், பித்தா திக்கத்தினால் தொண்டையில் குத்திக் கொண்டு, குரல் கம்மி, வாய் கசந்து, நாவில் வழு வழுப்பு புண்டாகி, தொண்டைப் புண், புற வீச்சு, பாதத்தில் வீக்கம், காது இரைச்சல், நா வரட்சி, சிவந்த மயிர் முளைத்தல் முதலிய குணங்களை யுண்டாக்கி, தன்புறத்து மோர் பித்த நோய், a bilious disease affecting the throat. It is marked by hoarse voice, bitterness of taste, coating of the tongue, sore throat, neuralgia of the back of neck, swelling of the foot, noise in the ear, parched tongue, growth of red hairs etc.

கள பிருந்தம், கண்டத்தி னிரு பக்கங்களிலும் கெட்ட மாமிசம் வளர்ந்து அதனால் கண்டத் துவாரம் அடைப்பு, சுரம், உடம் பிளைப்பு முதலிய குணங்களைக் காட்டும், a disease of the throat marked by obstruction of respiration due to the blocking of the passage consequent upon the morbid growth of flesh on either side, fever, emaciation etc.

களபுளா, வயிறு அல்லது குடலிரைச்சல், rumbling noise in the stomach or bowels.

களப்பன், see களப் பன்றி.

களப் பன்றி, பெருங் குமிழ், coomb teak — Gmelina arborea.

களப் பன்வன, தெக்தக மரத்தில், an unknown plant?

களம மிடல், நெல் புடத்தில் வைத்தல், to keep buried under a heap of paddy.

களமம், நெல், paddy.

கள மாலை, see கண்ட மாலை.

களம், கழுத்து, neck—Cervix; 2. தொண்டை, throat; 3. விஷம், poison; 4. களர், which see; 5. எலி, rat; 6. களர் நிலம், saline soil; 7. மனது, mind; 8. கறுப்பு, blackness; 9. மிடறு, கீழ் வாய், lower jaw.

களம் பழம், களாவின் கருப்புப் பழம், the black fruit of Bengal currant bush—Carissa carandas; 2. கருப்புப் பழ மரம், any black-fruited tree.

களரம், காட்டுப் புறா, wild pigeon; 2. புறா, pigeon in general. See கள ரவம்.

கள ரவம், புறா, pigeon; 2. முள், thorn; 3. குயில், Indian cuckoo.

கள ராத்தி, களர் நிலத்தில் விளையும் அத்தி மரம், wild sesban growing in the brackish soil.

களரி, களர் நிலம், saline soil; 2. காடு, jungle; 3 தொழில் செய்யு மிடம், business place; 4. கருமை, blackness; 5. மிடறு, the neck.

களரி கட்டு, சபையி லிருக்கும் அல்லது அரங்கில் பயிலும் மனிதர்களை மந்திரத்தினால் கட்டு மோர் வித்தை, a magic art consisting in hypnotising the whole audience in an assembly or persons engaged in gladiotorial performances in an arena.

களரி கட்டுதல், சபையை வசப் படுத்துதல், to hypnotise the audience in an assembly; 2. நாடகத்தில் நடிப்பவர்களை மந்திரத்தினால் கட்டுதல், to hypnotise or prevent by magic spells, actors or dancers in a theatre from playing their part; 3. தொண்டையைக் கட்டுதல், causing affection of the throat.

களரி கேசம், கேக்கு விதை, caraway seed.

கள ரோகம், கழுத்து அல்லது தொண்டையில் பொதுவாக வரும் நோய், any disease in common affecting the neck or the throat; disease of the neck or the throat.

களர், களா மரம், any black-fruited tree, see களா; 2. உவர் நிலம், saline soil; 3. கருப்பு, blackness; 4. கழுத்து, neck; 5. அவுத்தி, see அகத்தி; 6. சபை, assembly.

களர்க் காய், see கழற்சி.

களர் நிலம், உவர் மண் தரை, soil of fuller's earth; 2. கார மண் தரை, soil of alkaline earth; 3. உப்பு நிலம், saline soil.

களர்ப் பூமி, see களர் நிலம்.

களர் மண், உவர் மண், dhoby's earth; fuller's earth.

களர் மண் ணுப்பு, உவர மண் ணுப்பு, crystal salts found in brackish soils.

களர்வா, கார் கோளி அல்லது கார் கொன் மரம், tooth-brush tree; Pilu—Salvadora persica. *C.f.* உகா; 2; களா, which see.

களர் விழுதி, ஓர் மந்தாரை, purple mountain ebony—Bauhinia purpurea, see களா விழுதி.

கள வங்குரம், தொண்டையில் அழற்சி கண்டு உண் ணாக்குப் பருத்தல், enlargement of the tonsils due to inflammation of the throat.

களவம், கலப்பு, mixture; 2. களபம், perfumery.

களவன், நண்டு, crab.

களவாய், ஓர் கடல் மீன், a sea-fish.

களவி, கட்டியி லிருக்கும் சீழ் முதலியன, matter or pus in an abscess or boil.

கள வித்திரதி, (களம் + வித்திரதி = throat + abscess) திரி தோஷத்தினால் கழுத்து முழுவதும் கட்டியையும், வீக்கத்தையும் உண்டாக்கி, வலித்து, பழுத்து, சீழையும், நாற்றத்தையும் உண்டாக்கும் கட்டிப் புண். இது சன்னி பாதத்தோடு கூடிய வித்திரதி போன்ற தன்மை யுடையதால் இப் பெயர், a disease of the neck marked by several abscesses with an extensive swelling, pain, fetid discharge of pus etc. It occurs along the whole inner lining of the throat owing to the concerted action of the three humours in the system. It is so called because it exhibits all the features present in Vidrudhi of Sannipatham type *i. e.*, abscess followed by delirium.

கள வியல், சோரப் புணர்ச்சி, illicit intercourse; 2. விப சாரம், prostitution.

களவு, உன் மத்தம், datura — Datura stramonium; 2. களா, which see.

களவுணி, சிறு களா, small Bengal currant —Carissa spinarum.

களவுதம், வெள்ளி, silver.

களவுப் புணர்ச்சி, சோரப் புணர்ச்சி, illici intercourse; 2. காந்தருவ மணம் அதாவது பெற்றோர் சம்மத மில்லாமல் இருவர் சம்மதப்படிப் புணருதல், one of the eight kinds of marriages — that which is brought about by mutual consent without consulting the elders and without ceremony.

கள வொழுக்கம், திருட்டுத் தனமாய்ப் புணர்ந்து திரிதல், விப சாரித்தல், living a life of prostitution. *C.f.* களவுப் புணர்ச்சி.

களற் காசிகம், கொய்யா மரம், guava tree—Psidium guyava.

களற் கொட்டி, ஓர் வகைக் கொடி, a kind of creeper probably one of கொட்டிக் கிழங்கு, which see.

களற்சிக் காய், see கழற்சிக் கொட்டை.

களன், ஊமத்தை, which see; 2. கழுத்து, neck; 3. மயக்கம், stupor; 4. தொண்டை, throat; 5, ஒலி, sound, noise; 6. சிலேட்டுமம், phlegm.

களா, முள்ளுக் களா, berberry or jaundice berry—Berberies nepalensis; 2, மலைக் களா, hill carondah; 3. சிறு களா, small Bengal currant — Carandus spinarum; 4. பெருங் களா, large Bengal currant—Carissa carandas; 5 தணக்கு, whirling nut—Gyrocarpus jacquini; 6. see களவு.

களா, பெருங் களா. களாச் செடியி லோரினம், இம் முட்செடி வேலிக்கு வைக்க மிக்க வுபயோகப் படும். உள்ளே நுழைய முடியாது. இச் செடி காடுகளிலும், பயி ரிடாத இடங்களிலுங் காணலாம். இதற்கு அனேக பூக்க ளுண்டு: இலைகள் அல்லது கிளைகளின் பிரிவுகளில் இரட்டை முற்க ளுண்டு; பூ வெண்மை, வெயில் காலத்தில் பூக்கும்; காய் கருப்பு, பழுக்காத காய் மிக்கத் துவர்ப்பு. மருந்திற் குபயோகப் படும். பழுத்தது உடம்பிற்குக் குளிர்ச்சி, பித்தத்திற்கு நல்லது. இதன் வேர் சீரணசக்தியை யளிக்கும். இதன் காய் ஊறுகா யிடலாம்; பச்சைக் காய் சட்னி செய்யலாம். இதைப் பச்சையாகவும் தின்னலாம். தின்பதற்கு முன் உப்பிட்டுக் குலுக்கினால் ருசியா யிருக்கும். இதி லின்று கோவாவில் சாராயம் (wine) காய்ச்சி உள்ளூரில்

படுமென்பார்கள். இக் காயின் பலம் மிக் கப் பித்தை தணிக்க பயன்படுகிறது. இதிலிரு க்கும் · கரிக்களாய், large carondah or Bengal current bush—Carissa carandas alias Capparis carandas. It is a thorny shrub or small tree, very good for fences as the thorns render it impassable. It is found in jungles and uncultivated places; many-flowered; spine always in pairs at the division of branches and at every other pair of leaves; flowers pure white; flowering in hot season; berry black. Unripe fruit medicinally astringent; ripe fruit cooling and sour; useful in bilious complaints root bitter and stomachic. Fruit is of great value for making preserves and pickles. Unriped is used for tarts and puddings; also eaten when raw; to be kept in salted water before being eaten whereby the taste is improved. Wine is also made in Goa for local consumption; milky juice exudes from the fruit (wounded), very adhesive; fruit used as mordants. The different species are:—

1. சிறு களா, small Bengal currant —Carandas spinaraum.
2. பெருங் களா, large Bengal currant —Carissa carandas.
3. மலைக் களா, hill carondah — Vaccinum nilghirensis.
4. முள்ளுக் களா, Indian berberry — Berberis aristata alias Berberis nepalensis.
5. சொத்தைக் களா, Mauritius plum — Flacourtia sepiaria alias F. ramontchi alias F. inermis.
6. கொட்டைக் களா, stone carondah.
7. சீமைக் கொட்டைக் களா, Nilgiri carondah — Vaccinium nilgherrense. C.f. No. 3.
8. கொத்துக் களா, fascicled-leaved berberry.
9. கலிக் களா, spinous berberry, same as No. 4.

களாக் காய், களாச் செடியின் கருப்புக் காய், the black fruit of Bengal currant. See களா.

களா சவுடு, கொத்தவரை, cluster bean.

களா சாத்திரம், காம நூல், any treatise on sexual love; 2. கொக்கோக நூல், erotic science of Kokkaga Muni concerning four different kinds of women arranged according to their lasciviousness.

களாசி, சிறு கீரை, pig's greens — Amaranthus campestris.

களா சீத வாதம், (கள + அசீத + வாதம்) உஷ்ணத்தினால் கழுத்தில் உண்டாகும் வாத நோய், neuralgic pain in the neck due to excess of heat in the system.

களாஞ்சி, ஓர் வகை வாத நோய், a kind of rheumatism. See காளாஞ்சி.

களாஞ்சு, தண்டங் கீரை, garden greens — Amaranthus blitum.

களா நூல், see களா சாத்திரம்.

களாப் பூ, களாச் செடியின் பூ. இது கண் படல நோய்களைக் குணப் படுத்தும், flower of Bengal currant useful in cataracts of the eye.

களாப் பூங் கோரை, ஓர் வகைக் கோரைப் புல், a kind of sedge-grass.

களா மயம், கழுத்தில் உண்டாகும் கண்டமாலை முதலிய பலவகை நோய்கள், diseases of the neck in common as scrofula, goitre, etc.

களாய கஞ்சம், காலின் கீல் களை மடைந்து நடப்பதற்கு முன் நடுக்கமும், பிறகு வளைந்து நடத்தலுமாம், trembling of the legs before starting to walk and then limping when walking due to the joints of the legs becoming loose.

களாய கஞ்ச வாதம், கீல் வாதம். இது மழை அல்லது குளிர் காலத்தில் ஈரத் தரையில் வசிப்பதாலும், நடையின்றி சதா உட்கார்ந் திருப்பதாலும், மிதமிஞ்சி தூங்குவதாலும், மற்றும் வேறு காரணங்களை முன்னிட்டும், உடம்பின் இரத்த வோட்டம் குறைவு பட்டு கீல்களில் தங்கி நிற்கும். அப்போது உடம்பு வலி, வீக்கம், கால் நடுக்கம், திமிர், கீல் தளர்ச்சியினால் நொண்டுகை முதலிய குணங் களையுண்டாக்கும், a kind of rheumatoid arthritis affecting the joints of the body. It is characterised by pain all over the body, swelling with inflammation, trembling of the legs, numbness, looseness of the joints, limping etc. It is due to exposure to wet and cold in rainy or chill weather, living in damp basement rooms, sedantary habits, over sleep and other circumstances in life.

களாயம், இல், joint.

களா லிகம், கொழுஞ்சி, common orange — Citrus aurantium.

களா வகம், சிறு கீரை, see களாசி.

களா வர்த்த வாதம், கழுத்துப் பக்கத்துச் சதைகள் தாபிதங் கொண்டு அதனால் நரம்புச் சுருக்காகி விடுத்து, நோய்கொண்ட பக்கம் தலைச் சாய்ந்து இருக்கும் ஓர் விதக் கழுத்து வாதம், muscular rheumatism of the neck due to spasm of the nerve, and thus drawing the head to one side — Wry-neck.

களாவி, தாசு. இது ஈயத்தைப் போன்ற ஓர் வகைத தாது. இதை வடமொழியில் ஜசதம் என்பர், a mineral resembling lead.

களா விலச்சை, see களர் விழுதி அல்லது களா விழுதி

களா விழுதி, மேஷ சிருங்கி அதாவது சிறுகுறிஞ்சா, Indian ipecacuanha — Gymnema sylvestre; 2. களர் விழுதி, which see.

களாவு, மலைக் களா, whortleberry — Vaccinium nilgherrense; 2. ஓர் வகைக் களா, another species of whortleberry—Vaccinium bourdilloni.

களாற் புதம், திரி தோஷத்தினால் நாக்கின் இறுதியிலும், அடிக் கழுத்திலும் நோவில்லாத வீக்கத்தை யுண்டாக்கி பழுக்காமலே இருக்கும் ஓர் கழலை ஒருவேளை பழுத்தால் அதினின்று இரத்தம் வடியப் பெறும், a tumour or permanent swelling without pain developed at the root of the tongue and folds of the neck. It is said to be due to the derangement of the three humours in the system. It generally remains without development, but when ripened and burst, it is attended with copious bloody discharge.

களாற் பூகம், பிச்சைப் பாத்திரத்திற்காக வுதவும் தென்னை மரம், a cocoanut tree suitable for making a beggar's bowl.

களி, இறுகிய பழச் சாறு, the thickened juice of fruits boiled with sugar-jelly; 2 இறுகிய பசை, thick paste; 3. சீதம், mucous; 4. கள், toddy; 5. குழம்பு, pastry; thick pulp; 6. மாக் களி, poultice; 7. கஞ்சி, gruel; a thick consistence; 8. களி மண், clay; 9. பாக்குக் குழம்பு, water in which arecanut is boiled; 10. கூழ், pasty pudding; 11. வெறி அல்லது மயக்கம், intoxication; 12. தேன், honey; 13. கேழ் வரகுக் களி, raggy flour baked into a thick mass and made into balls.

களி கஞ்சா, see கஞ்சாக் கோரை.

களிகம், வாத முலைவை, thorny-staff tree — Celastrus paniculata.

களி கிண்டல், களியைப் போல் கிண்டுதல், stirring about a solution of flour until it is thickened; to make pap; to reduce into a pulp.

களிகை, நாக மல்லி, ring-worm plant—Rhinicanthus communis; 2. இளம் பூ வரும்பு, tender flower; bud. See அணிச்சை.

களிக் கயல், கண், eye.

களிக் காய், சதைப் பற்றுள்ள காய், fruit with pulp inside; 2. கசப்புக் காய், bitter fruit.

களிக் குரு, see களிச் சுண்ணம்.

களிங்கம், மரங் குத்திப் பறவை, wood-pecker.

களிச்சக் காய், see கழற்சிக் கொட்டை.

களிச் சவுக்காரம், மெதுவான சவுக் காரம், soft soap; 2. சவர்க்காரச் சுண்ணம், a calcinated compound prepared from fuller's earth.

களிச்சி யிலை, see கழற்சி யிலை.

களிச் சுண்ணம், குரு மருந்து அல்லது முப்பு. தமிழ் வைத்திய நூற்களில் சித்தர்களாகிய திருமூலர், கொங்கணவர் முதலியோரால் முதற் காப்பிலேயே பரி பாஷையாக இதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது, universal solvent or the three salts. It is a secret term used in the treatises of Siddhars on medicine even in the very first poem invoking the desired God or Goddesses and imploring their protection and blessing.

களிச் செம்மண், பூக் காவி, red ochre.

களிஞ்சி, சிகப்பு அகில், red cedar — Acrocarpus fraxinifolius.

களித் தரை, களிமண் நிலம், clayey soil.

களித் தடுப்பு, களி கிண்டும் நீண்ட கோல், a long wooden shaft to stir about pap; 2. இலேகியம் கிண்டும் துடுப்பு, wooden stirring rod used in preparing electuaries.

களித் தயிர், குளவி, wasp.

களித் துயில், தலைவனும் தலைவியும் இருவருமாக அணைக்துத் தாங்கும் இன்பத் துயில்.

a love-sleep enjoyed by the couple in embrace.

களித் துழவை, அழாவிச் சமைத்த கூழ், pap prepared by stirring with a wooden rod.

களிந்தம், ஏலம், cardamon—Elleteria cardamomum. See கலிந்தம்.

களி பதம், களியைப் போற் றிண்டும் பிசு பிசுப் பான பதம், a stage of thick paste or viscous state to which anything is stirred up.

களிப் பறட்டைக் கீரை, ஓர் வகைக் கீரை, a kind of greens.

களிப் பாக்கு, அவித்துக் காய வைத்த பாக்கு, areca-nut boiled and dried; 2 சாயப் பாக்கு, boiled arecanut coated with paste; 3. தெக்கம் பாக்கு, another kind of areca-nut.

களிப் பாசிதம், கொய்யா, see களற் காசிகம்.

களிப் பிரண்டை, கோப் பிரண்டை, a species of adamantine creeper.

களிப்பு, மது, வெறி, போதை, intoxication; 2. சிற் றின்பம், sexual happiness; 3. ஒட்டுந் தன்மை adhesive or sticky nature.

களிப்புக் கள்ளி, கொடிக் கள்ளி, beak-flowered creeping milk-hedge — Sarcostemma inter-medium. It is so called because the plant yields a beverage used by Rishis in olden days.

களிப் புண், களியைப் போற் குழ குழத்தப் புண், a phagedenic ulcer.

களிப்பு மண், செம் மண், red clay.

களிப் புறு, மணிப் புறு, ring dove.

களி மகன், கள்ளுக் குடியன், drunkard.

களி மண், பிசு பிசுப்பான சன்ன மண், fine thick glutinous mass of earth; plastic earth; Potter's clay—Argilla figuli; 2. நிலத்தைச் செழிப் பிக்கும் பொருக்கு மண், a rich calcareous earth or clay much used for manure—Marl; 3. வண்டல் மண், a deposit of clay or fine earth from running water.

களி மண் குளிர்ச்சி, களி மண்ணைப் போல் மிக்க குளிர்ச்சி, clay-cold.

களி மண் சுண்ணம், பிசு பிசுப்பான சுண் ணாம்பு, lime-clay.

களிமம், எலி, rat.

களி மயக்கு, மதத்தினுல் ஏற்பட்ட மயக்கம், dizziness due to infatuation.

களி முத்தை, see களி மொத்தை.

களி மொத்தை, களி மொத்தை, boiled and stirred-up balls prepared from the flour of ragi, millet or other grains used as poultice or as food.

களிம் பகற்றல், செம்பு, இரும்பு முதலிய வற் றின் குற்றத்தைப் போக்கல், removing the verdigris of copper or the rust of iron etc; 2. புடமிடல், refining by calcination; 3. சுத்தி செய்தல், cleaning.

களிம் பகற்றும் வண்ணன், கோடா சூரி, a kind of prepared arsenic.

களிம்பு, துரு, rust; 2. மலினம், verdigris; 3. மாசு, சீலை மருந்து, plaster; 5. உலோ கங்களின் மாசு, oxides in metals and minerals; 6. வழு வழுப்பு, glutinous excretion; 7. கன் மதம், scoria; 8. மெழுகு, கொழுப்பு முதலியவைகளை மருந்திற் கலந்து வெண்ணெயைப் போற் குழப்பி இரணம், புண் புரை, இவைகளுக் குபயோகிக்கும் ஓர் விதமேற் பூச்சு மருந்து, any soft unctuous substance or ointment prepared by mixing fat, wax or other glutinous substances with drugs or medicines and used as an external application for wound, sores, etc.

களிம்பு பதம், பிசு பிசுப்பான பதம், glutinous or viscous state. See களி பதம்.

களிம்பு போக்குதல், குற்றத்தை நீக்கி சுத்தி செய்தல், to cleanse by freeing any substance from noxious matter.

களிம்பு மண், செம் மண், copper ore; 2. இரும்பு மண், iron ore.

களிம்பு மலை, செம்பு மலை, mountain containing copper ore.

களிம் பூறுதல், களிம் பேறுதல், to become rusty; 2. களிம்பாற் கைத்தல், to become noxious as acid substances do when kept in copper or brass vessels.

களிம் பேறுதல் see களிம் பூறுதல்.

களி யடை காய், see களிப் பாக்கு.

களியம் புறு, ஓர் வகைப் புறு, a kind of dove.

களியன், குடியன், drunkard.

களி யாட்டு, மது வெறி யாட்டம்; குடி போதையால் ஆடும் கூத்து, drunkard's dance; revel.

களி யுப்பு, வழலை அல்லது முப்பு. the three alchemical salts forming an universal solvent.

களிர், சுறு மீன், shark.

களிவாய் நஞ்சன், கடித்தால் வாயி னின்று வழலையைத் தள்ளும் ஓர் வகைக் கொடிய விஷப் பாம்பு, a very poisonous snake, the bite of which causes expulsion of froth and saliva.

களி றிணம் பு, யானைத் திப்பிலி, elephant pepper. See ஆனைத் திப்பிலி.

களிறு, ஆண் சுறு, the male of a shark; 2. ஆண் பன்றி, boar; 3. ஆண் யானை, the male of an elephant; 4. விலங் கேற்றின் பொது, the male of any animal in common.

களிற்றி ணம்பு, see களி றிணம் பு.

களு கொளொளெனல், கொளு கொளுத்தல், becoming rotten.

களுசி, சிந்தில், moon-creeper.

களுர்க் கிழங்கு, ஓர் வகைக் கிழங்கு, a kind of bulbous root.

களே பரம், உடல், body; 2. பிணம், corpse; 5. எலும்பு, bone.

களே வரம், see களே பரம்.

களை, களைப் புல், weed; 2. அழகு, beauty; 3. ஆயாசம், fatigue.

களை கொள்ளல், ஆயாசங் கொள்ளுதல், becoming tired or exhausted.

களைக் கொட்டி, see களைக் கொட்டி.

களைக் கோல், களையுங் கருவி, any instrument for removing dirts etc. from wounds.

களைதல், வேரோடு நீக்குதல், to extirpate or root out as disease; 2. எடுத்தல், to cure as nails; 3. கழற்றுதல், to strip as clothes; 4. கழுவுதல், to wash as rice; 5. கொல்லல், to kill or destroy.

களை தவம், கொடித் துத்தி, creeper-mallow of Abutilon genus.

களை தீர்க்கி, மயில் விசிறி, pea-cock feather fan so called from its removing fatigue when used; 2. கஞ்சி, rice-gruel water.

களை தீர்தல், see களை தெளிதல்.

களை தெளிதல், ஆயாசம் தீர்தல், to recover from fatigue or langour.

களைத்தல், சோர் வடைதல், to become exhausted; to be wearied; 2. மூர்ச்சை யடைதல், to swoon.

களை நீக்கல், களைப்பைப் போக்குதல், to cause one to recover from fatigue—Reviving.

களை நீங்கல், see களை தெளிதல்.

களைப் புல், see களை.

களையா வேட்கை, நீங்காத ஆசை அதாவது காம விச்சை, desire that cannot be got rid of *i.e.* sexual desire.

களை யாறுதல், இளைப் பாறல், to take rest.

களை யாற்றுதல், see களை நீக்கல்.

களை யேறுதல், ஆயாச மதிக மாதல், becoming increased in fatigue.

களை வாங்குதல், முகத்தி னழகு குன்றல், to be decreased in lustre and beauty of the face.

களைவு, திருவாண மாக்குகை, the act of stripping off naked.

களொளகம், தொண்டையிற் கழலை, tumour in the throat.

கள், தென்னஞ் சாறு; பனஞ் சாறு, cocoanut juice; palmyra juice; 2. வண்டு, beetle; 3. கள்ளு, toddy; 4 மது, any fermented liquor; 5. மலர்த் தேன், honey from flowers; 6. பெருங் களா, see களா.

கள். தென்னை, பனை முதலிய மரத்தின் பாளையி னின்றும், வேம்பு, அத்தி முதலிய வற்றின் அடி மரம் அல்லது வேரி னின்றும், இறக்கும் பால் போன்ற வஸ்து. இது எம் மரத்தி னின்று இறக்கு கிறார்களோ அப் பெயரிட்டு அழைக்கப் படும். இதில் அனேக விதங்க ளுண்டு, அவையாவன :—தென்னங் கள், பனங் கள், ஈச்சங் கள். கூந்தற் பனங் கள், வேப்பங் கள், அத்திக் கள் முதலியன, a sweet juice-like milk extracted from the sheath of palmyra trees or from the stem or the root of other trees such as margosa, fig etc. It derives its name from the tree from which it is drawn as cocoanut-toddy, palmyra-toddy, date-toddy etc.

கள் மரம், தென்னை, ஈச்சை அல்லது பனங்கள், toddy-drawing tree generally referring to cocoanut, date or palmyra tree.

கள்வன், கரியன், dark or black person: 2. நண்டு, crab; 3. முசு அல்லது செங் குரங்கு, red-faced monkey; 4. இலங்கைக் குரங்கு, dog-headed monkey of Ceylon—

Sannopithecus priamus ; 5. *கர்க் கடகம்*, cancer of the Zodiac ; 6. *யானை*, elephant.

கள்ளக் கடலி, *கொடி நெல்லி*, gooseberry creeper (*unidentified*) said to possess rejuvenating virtue.

கள்ளக் கருப்பம், *பொய்க் கருப்பம் அதாவது பார்வைக்குக் கருப்பத்தைப் போல் தோன் றல், ஆனால் உண்மையாகவே கருப்ப மில்லா மை*, apparent but not real pregnancy—Pseudo-pregnancy ; 2. *சோரப் புணர்ச்சி யில் உண்டான கருப்பம்*, pregnancy following an illicit intercourse ; 3. *சூதக வாய்வு சம்பந்தத்தால் வயிறு பருத்து கருப்பத்தைப் போல் காணப் படும் பொய்க் கருப்பம்*, an abdominal enlargement in hysteric women simulating pregnancy —Phantom pregnancy.

கள்ளக் கழலை, *இரத்தக் கழலை*, a tumour due to extravasation of blood or exudation or retained sebaceous matter.

கள்ளக் காது, *தூர்ந்து போன காது*, ears the lobes of which were first bored and then blocked by aftergrowth.

கள்ளக் காய், *கனற்ற பழம் அல்லது பழுக்கா மற் பழுக்கும் காய்*, unriped fruit even when stimulated for ripening ; 2. *வேர்க் கடலை*, ground nut.

கள்ளக் கிடை, *நோய் கொண்டவர் போல் பாசாங்கு காட்டி படுத்திருக்கை*, to take to bed on the ground of pretended illness.

கள்ளக் குரல், *பொய்க் குரல்*, pretended voice.

கள்ளக் கூவை, *போலிக் கூவைக் கிழங்கு*, false arrow-root—Koempferia rotunda.

கள்ளங் கடலி, *குருந் தொட்டி*, common balah—Sida rhombifolia.

கள்ளச் சரக்கு, *போலிச் சரக்கு*, false or substituted drugs sold in bazaars in place of genuine ones.

கள்ளச் சவ்வு, *பொய்ச் சவ்வு* a morbid skin-like layer resembling a living membrane —False membrane.

கள்ளச் சாமம், *நடு ராத்திரி*, dead of night.

கள்ளச்சி, *வாழைப் பூவின் உள் ளுள்ள நரம்பு*, a hard membraneous substance inside the plantain flower.

கள்ளச் சுரம், *விட்டு விட்டுக் காயும் காய்ச்சல்*, intermittent fever ; 2. *வெளிக் காட்டாத உட் சுரம்*, internal fever without any visible symptoms outside ; 3. *பொய்ச் சுரம் அல்லது கதகதப்பு*, feverishness ; 4. *பொய்யாக நடித்த சுரம்*, feigned or pretended fever ; 5. *பகுத்தறியக் கூடாத சுரம்*, any fever difficult of diagnosis.

கள்ள ஞானம், *பொய்ஞ் ஞானம்*, false or feigned wisdom ; 2. *வாச்சா ஞானம்*, lip or pseudo-philosophy.

கள்ளத் தீன், *திருட்டுத் தனமாகச் சாப்பிடும் பத்தியத்திற்கு விரோதமான உணவு*, food taken by a patient clandestinely when prohibited in diet.

கள்ளத் தூக்கம், *பொய்த் துயில்*, pretended or false sleep ; 2. *அரி துயில்*, half sleep; 3. *யோக நித்திரை*, conscious sleep.

கள்ள நித்திரை, see *கள்ளத் தூக்கம்*.

கள்ள நீர், *புண் ணீர்*, fluid from a sore or wound ; 2. *இரத்தம்*, blood ; 3. *ஊன் தண்ணீர்*, a thin serous fluid—Ichor.

கள்ள நேரம், *கூரிருட்டு*, darkness before dawn ; 2. *தூங்கு நேரம்*, time to sleep.

கள்ளப் பசி, *பொய்ப் பசி*, false appetite—a craving felt when food is no longer needed. It is one of the bad symptoms of a disease.

கள்ளப் பாறை, *ஓர் கடல் மீன்*, a sea-fish — Caranx armatus ; 2. *திருட்டுத் தனமுள்ள பாறை மீன், நீலப் பச்சை நிறம், 8 அங்குல நீளம்*, a cunning caranx of bluish-green colour, about 8 inches in length—Caranx kalla.

கள்ளப் புணர்ச்சி, *சோரப் புணர்ச்சி*, illicit intercourse.

கள்ள மயிர், *பொய் மயிர்*, false hair.

கள்ளமுது போக்கல், (*கள்ள + முது + போக்கல்*) *சுத்தி செய்தல்*, to clean dirt or rust.

கள்ளம், *அவிச்சை*, spiritual ignorance ; 2. *புண்ணின் அசுத்து*, morbid matter in a boil or wound preventing the healing process.

கள்ளல், *கள் குடித்தல்*, to drink toddy ; 2. *கரும்பு*, sugar-cane.

கள்ள வலி, *பிரசவத்தி லேற்படும் பொய் வலி*, pains which do not indicate the beginning of real labour—False pains.

கள்ள வாதி, *பொன் செய்வதாக நடிக்கும் திருட்டுவாதி*, dabblers in Alchemy ; vulgar charlatans.

கள்ள வால், ஆலமரத்தைப் போன்ற மரம், a tree resembling the banyan; bastard banyan; 2. பொய்யாக இளமை கொண்டாடல், pretended youthfulness.

கள்ள வியாதி, அசாத்திய நோய், deceptive disease difficult of cure; incurable disease; 2. நிர்ணயிக்க முடியாத நோய், a disease difficult for diagnosis.

கள்ளவுரி, போலி அவுரி, bastard indigo—Amorpha fruiticosa (purple flowers).

கள்ளன், சோர பாஷாணம், a prepared arsenic.

கள்ளாகி சொரிந்த வுப்பு, வழலை யுப்பு, quintessence salt.

கள்ளாட்டு, கள்ளைக் குடித்து ஆடுதல், drunken revel.

கள்ளாம்பல், வெள்ளாம்பல், white Indian water lily—Nymphae lotus.

கள்ளாம்பிதம், சதாப் பிலை, see அர்வதா.

கள்ளி, கள்ளிச் செடி. எல்லா வகைகளுக்கும் இது பொதுப் பெயர். இதினின்று பால் வரும். பொதுவாகக் கள்ளி என்றால் வேலி கள்ளி திருக்கும் திருகு கள்ளியைத் தான் குறிக்கும். கள்ளிப் பாலுக்கு வெந்து போகச் செய்யும் குணமுண்டு. கள்ளியைச் சாதாரணமாய் வேலிகளிற் பார்க்கலாம். சப்பாத்துச் செடிக்கும், நாகதாளிச் செடிக்கும் பொதுவாகக் கள்ளி யெனவே பெயர் வழங்கும். இதில் இலைவற்றிற்கு மருந்துக் குரிய குணமுண்டு. ஆகவே வைத்தியத்தில் இது மிக்க உபயோகப் படும். அடியிற் கண்டபடி கள்ளியில் அநேக வகைகள் உண்டு, அவைகளாவன, milk-hedge—Euphorbia genus. The term is a common name for several species. It generally refers to twisted spurge—Euphorbia tirucalli. The milky juice of Kalli has blistering properties. This kind of tree will be found in hedges. It also refers to the common prickly pear and snake-hood fig. Some of these have medicinal virtues and so used in medicine. The following are the different kinds of Kalli viz:—

1 கோடு கள்ளி, see கொம்பு கள்ளி in No. 7.

2. திருகுக் கள்ளி, twisting milk-hedge or spiral spurge — Euphorbia tirucalli.

3. சதுரக் கள்ளி, (சாதிக் கள்ளி), square milk-hedge or square spurge — Euphorbia antiquorum.

4 மான் செவிக் கள்ளி, deer's ear spurge. C.f. No. 5.

5. இலைக் கள்ளி, leafy milk spurge—Euphorbia neriifolia.

6. ஆட்டான் கள்ளி, (ஆடு தின்னாக் கள்ளி), goat's milk hedge — Euphorbia tortilis.

7. கொம்புக் கள்ளி (கோல் கள்ளி), stick or branch spurge—Euphorbia linearifolia.

8 நாருக் கள்ளி; spiral leafy milk-hedge—Euphorbia nivulia.

9. ஐங்கணுக் கள்ளி, five angled-milk spurge - Euphorbia ligularia.

10. தேர்க் கள்ளி, Madagascar spurge —Euphorbia bojeri.

11. வலங் கள்ளி, spiral spurge — Euphorbia rottler.

12. மாந்தல் கள்ளி, winged square spurge— Euphorbia trigona.

13. கண்டங் கள்ளி, caper spurge — Euphorbia.

14. பட்டணத்துக் கள்ளி (பதனக் கள்ளி), Coromandel kalli — Euphorbia madraspatana.

---

15 முதித்தற் கள்ளி (முது கள்ளி), ancient spurge. C.f. No. 3.

16. நாய் நாக்குக் கள்ளி, dog's tongue Same as No. 5.

17. நாதாங்கிக் கள்ளி, C.f. No. 5.

18. திருவற் கள்ளி, see No. 2.

19. காம்பு கள்ளி, see No. 7.

20. வயற் கள்ளி, field spurge. See No. 9

---

21. சப்பாத்துக் கள்ளி, (prickly pear), round milk edge; common prickly pear—Opuntia dillenii.

22. பலகைக் கள்ளி, plate-leaf hedge—Opuntia tuna.

23. முள்ளுக் கள்ளி (முண்டுக் கள்ளி), thorn spurge—Opuntia dillenii.

24. நாகதாளிக் கள்ளி, snake milk-hedge or snake hood fig—Opuntia nigricans.

---

25. கொடிக் கள்ளி. சோமலதைக்கும் இதுவே பெயர், creeping milk-hedge—Sacrostemma inter-medium alias S. brevistigma. The sacred Soma plant is also known by this same name.

26. பெருங் கள்ளி, (பொக்கைதக் கள்ளி), large spurge — Plumeria acutifolia.

27. சுரக் கள்ளி, fever spurge — Soymida febrifuga.

28. திலக் கள்ளி, erect six-angled torch thistle—Cereus hexagonus.

29. மலைக் கள்ளி, mountain or hill milk-hedge — Kalanchoe laciniata.

30. இரணக் கள்ளி, ulcer spurge — Bryophyllum calicynum.

31. காட்டெருமைக் கள்ளி, wild buffalo milk plant — Tithymalus tirucalli.

32. பூச்சிக் கள்ளி, cochineal cactus — Nopalea coccinellifera.

33. எருமை நாக்குக் கள்ளி, buffalo tongue milk-hedge — Onosma bracteata. (*C. f.* Hind. Gowzaban).

34. சர்த்தர்க் கள்ளி (சத்த கள்ளி), berry bamboo—Ochlandra rheedli.

---

35. கருங் கள்ளி, black spurge.

36. கோபுரக் கள்ளி, tower spurge.

37. மரக் கள்ளி, tree-spurge.

38. செஞ் சதுரக் கள்ளி, scarlet square spurge.

39. குதிரைச் செவிக் கள்ளி, horse ear spurge.

40. முயற் செவிக் கள்ளி, rabbit's ear milk hedge.

41. கணுக் கள்ளி (முண்டுக் கள்ளி), joint milk hedge.

42. முப் பட்டைக் கள்ளி, triangular spurge.

43. பாச்சான் கள்ளி, same as No. 42.

44. நண்டு கள்ளி, crab milk-hedge.

45. கடற் கள்ளி, sea milk-hedge.

46. பயற்றங் கள்ளி, an unknown variety ?

47. புட்டன் கள்ளி, an unknown variety.

48. சோற்றுக் கள்ளி, an unknown variety?

49. பொத்தைக் கள்ளி, an unknown variety.

50. நரக் கள்ளி, an unknown variety.

51. சப்பட்டைக் கள்ளி, an unknown variety.

NOTE—1. The specific name kalli (கள்ளி) in Tamil also applies to ஆட்டான் கள்ளி, common tree spurge (Euphorbia tortilis) because goats eat this plant.

NOTE—2. Nos. 1 to 14 are the best known kalli plants in S. India. Although Nos. 15—20 refer to the regular group of the Euphorbia genus, their names appear to be synonymous with those mentioned above (1—14).

The names of Nos. 21—24 and 25—34 though end with the same termination, they are quite a different species and as such fall under different botanical groups as can be seen from the terms employed against each name and therefore the term *kalli* includes also the species of Sarcostemma, Opuntia, Plumeria, Soymida, Cereus, etc. Whereas the rest Nos. 35—51 are unidentified and so their botanical names could not be traced.

NOTE—3. The milky juice of kalli (Euphorbia) genus should not be confounded with தில்லைப் பால், tiger's milk-spurge, which is quite a different species yielding also milky juice—Excoecaria agallocha.

கள்ளிக் காக்கை, செம் போத்து. இதன் தலை, கழுத்து, முதுகின் கீழ்ப் பாகம் கறுப்பாயும், வால் பக்கம் பச்சையாயும், முதுகின் மேற் பாகத்தி லுள்ள சிறகு கபில நிறமாயு மிருக்கும், coucal — Centropus rufipennis. The head, the neck and the lower region of the back are black, while its upper parts and wings are brown in colour.

கள்ளிக் காரம், கள்ளிக் காக்கையின் மலம், coucal dung said to be very pungent: 2. சப்பாத்துச் செடி கொளுத்திய சாம்பல், potash from the ashes of prickly pear.

கள்ளிக் கிரந்தி, see கள்ளிப் பூக் கிரந்தி.

கள்ளிக் குருவி, பன்றிக் குருவி, white-headed babbler — Malacocircus griseus alias M. affinis.

கள்ளிக் கொம்பு, கொம்பு கள்ளி, see கள்ளி.

கள்ளிச் சிட்டு, ஓர் சிட்டுக் குருவி, a species of sparrow.

கள்ளிச் சிலைக் காய், நாய்த் தேக்கு, dog teak—Dillenia pentagyna.

கள்ளிச் சூலை, ஓர் சூலை நோய், a kind of colic.

கள்ளிச் சேம்பு, நீர்ச் சேம்பு, water archer—Saggitaria obtusifolia.

கள்ளிச் சொட்டு, கள்ளி மரத்தி னின்று வழியும் துளி, thick drops of spurge-milk.

கள்ளிப் பட்டை, கள்ளி மரத்தின் பட்டை, the bark of spurge tree. See கள்ளி மரப் பட்டை.

கள்ளிப் பழுப்பு, பழுத்த மஞ்சள் நிறமான கள்ளி, ripe yellow-coloured spurge ; 2. பழுப்புக் கொடிக் கள்ளி, yellow-coloured riped branch milk-hedge.

கள்ளிப் பால், கள்ளி மரத்தி னின்று வழியும் பால், spurge milk exuding from the tree; 2. சதுரக் கள்ளிப் பால், milk of square-spurge.

கள்ளிப்பூக் கிரந்தி, கள்ளிப் பூப் போற் தடித்து நினவெடுத்து சொறிவதனுல் உண்டாகும் மேகப் புண், an outbreak of syphilitic rash all over the body consisting of eruptions which are hard acne-like pimples due to secondary syphilis.

கள்ளி மடையான், see கள்ளி மந்தாரை.

கள்ளி மந்தாரை, பெருங் கள்ளி, pagoda tree; jasmine spurge — Plumeria acutifolia ; 2. ஆட்டான் கள்ளி, goats' spurge —Euphorbia tortilis.

கள்ளி மரப் பட்டை, திருகுக் கள்ளிப் பட்டை. இதனுல் நரம்புச்சிலந்தி, கபவாத சன்னிபாதம், வாதப் பிரகோபம் முதலிய நோய்கள் போம், the bark of tirucalli — Euphorbia tirucalli. This is a specific for guinea worm, phneumonia, rheumatic inflammations etc.

கள்ளி மாதிதம், சதுரக் கள்ளி, square-spurge —Euphorbia antiquorum.

கள்ளி முளையான், எழுமான் புளி, spurge sprout—Carallum adscendens ; 2. நாகுக் கள்ளி, spiral leafy milk-hedge—Euphorbia nivulia.

கள்ளி முளையான், ஓர் பூடு. இது புளிப்பாக விருக்கும். ஆகவே இந்தத் துவையலாக உபயோகப் படுத்துவ துண்டு. இது பித்தத் தைத் தணித்துப் பசியை யுண்டாக்கும், spurge sprout—Stapelia variegata. It allays bile and promotes hunger serving as an adjunct to food.

கள்ளி மேடு, Point Calimere so called from the abundant growth of Kalli (spurge).

கள்ளிமேற் புல்லுருவி, கள்ளிச் செடியின் புல்லுருவி, a parasite of spurge tree.

கள்ளி யிலையான், இலைக் கள்ளி, leaf spurge —Euphorbia nivulia.

கள்ளி யுப்பு, கள்ளியை எரித்து அதன் சாம்பலி னின்று தயாரித்த உப்பு, salt extracted from the ashes of the milk-spurge plant.

கள்ளி விரா, காகோளி, mustard tree—Salvadora persica.

கள்ளின் செருக்கு, கள்ளின் போதை, intoxication of toddy.

கள்ளு, கள். இது தென்னை, பனை, ஈச்சை முதலிய மரங்களின் பாளையைச் சீவி அதனின்று வடியும் இனிப்பான சாறு. இச் சாறு ஒழுகும்போது ஒரு குடுவையை அதனிடம் கட்ட அது சொட்டு சொட்டாய் அதற்குள் வடியும். இதை மரத்தி னின்று இறக்கி விடியற் காலையிற் குடிக்க உடம்புக்கு குளிர்ச்சியைத் தரும். இது காற்றுப் படப் புளித்த தானுல் கீழ் மக்கள் குடிப்பதற்கு போதை யுண்டாக்கும். இச் சாறு வெல்லம், காடி முதலியவைகளைச் சேகரிக்கவும் உதவும். இக் கள் வகையில் தென்னங் கள்ளை ரொட்டிக்குக் கலப்பார்கள். நமது நாட்டு வைத்தியர்கள் இதைச் சயத்துக்கும் கொடுப்பார்கள். வேப்பங் கள்; அத்திக்கள் ளென்றும் வேறு வகை களுண்டு. இவை மருந்திற் குபயோகப் படும், toddy. It is a sacchrine juice obtained by the excision of the spadix or young flowering shoot of the palmyra, cocoanut, date and other palms and when the juice exudes, it drops into earthen pots which are attached or tied to the stem by toddy-drawers (shanaurs) to receive it. Taken fresh from the tree early in the morning before sunrise, it serves a pleasant and wholesome drink. When exposed to air it undergoes various fermentation and becomes the common intoxicating drink of the lower classes. Its other uses are for making sugar, vinegar etc. The different toddies, particularly that of the cocoanut are used by bakers as a leaven for raising bread. Vaidyans prescribe it in consumption. The juices drawn from the bark of margosa, fig and other

trees also called toddy, are often used in medicine.

The following are the varieties of toddy:—

1. தென்னங் கள்ளு, cocoanut toddy. It is drawn from cocoanut tree.
2. பனங் கள்ளு, palmyra toddy. Good for distilling arrack.
3. ஈச்சங் கள்ளு, date toddy. Common in Mysore.
4. வேப்பங் கள்ளு, margosa toddy—a stomachic.
5. அத்திக் கள்ளு, fig toddy—purifies the blood and cools the system.
6. அரசங் கள்ளு, peepul toddy—used medicinally.
7. சப்பாத்துக் கள்ளு, prickly-pear toddy—a purgative.
8. கூந்தற் பனைக் கள்ளு, sago palm toddy—an inferior toddy used in the Malabar coast.

See also கள்.

கள்ளுகி, கொடிவலக் கத்திரி, plant (*unidentified*).

கள்ளுக் காடி, புளித்த கள், sour toddy.

கள்ளுச் சாராயம், பனஞ் சாறு முதலியவற்றினின்று காய்ச்சி வடிக்கும் சாராயம், arrack distilled from the juice of the palmyra etc.

கள்ளுணி, கள் ளுண்போன், one who drinks toddy; 2. தேனுண்ணும் வண்டு, honey-bee.

கள் ளுண், தேன் வண்டு, honey-bee.

கள் ளுண்ணி, see கள்ளுணி.

கள் ளூறும் பனை, see இடுக்குப் பனை.

கற கறத்தல், தொண்டையில் உண்டாகும் உணர்ச்சி, irritation of the throat.

கற கறப்பு, தொண்டை யறுப்பு, irritation of the throat.

கற கறெனல், see கற கறத்தல்.

கறங்கல், பேய், demon; vampire.

கறடகி, பவளப் புற்றுப் பாஷாணம், a kind of prepared arsenic.

கறடு, இழிந்த முத்து, inferior pearl.

கறட்டி, உலர்ந்த கட்டி, dried abscess.

கறட்டி யோனுன், see காட் டோனுன்.

கறட்டு கறட்டெனல், தொண்டையில் கோழை அல்லது கபங் கட்டுவதால் உண்டாகும் சுவாச ஒலி, gurgling rale due to congestion of phlegm in the throat; 2. மரண காலத்தில் தொண்டையில் ஏற்படும் ஒலி, death—rattle.

கறட்டுக் கந்தகம், அசுத்தமான கெந்தகம், impure or crude sulphur.

கறணிப் பனை, வெருகு, male palmyra; tom-cat.

கறத்தல், பால் கறத்தல், pressing out milk; drawing out milk from the breasts or udder by the fingers.

கறநாட்டுப் பூண்டு, சிறு முன்னை, a small species of fire brand teak — Premna latifolia.

கறந்த மேனி, பரிசுத்தமான தேகம் அதாவது பெண்ணினிடம் சேராமை, unpolluted body i.e. body not polluted by sexual intercourse.

கற மன், காய்ந்து வறண்டது, that which is dried and decreased.

கறல், விறகு, fuel; 2. துரு, rust.

கற வீரம், see அலரி.

கறவு மறப்பனி, சதுரக் கள்ளி, square-spurge —Euphorbia antiquorum.

கறவை, கறக்குதல், கறக்கை, milking as of cow; 2. கறவைப் பசு, milch cow, 3. கலம் நிறையப் பொழிதல், filling up a vessel.

கறவைக் கலம், பால் கறக்கும் பாத்திரம், milk pail or vessel.

கறவள, வளராதது அல்லது முதிர்ச்சி யடையாதது, that which is undeveloped or defective in maturity; stunted in growth; 2. கட்டையன், undersized person; 3. குள்ளன், dwarf; 4. பழுக்காத காய், fruit not developed to its usual full size; 5. நீராத கட்டி, cystitis; 6. கல்லீரல், liver; 7. ஓர் மரம், a kind of tree.

கறள், துரு, rust; 2. கறை, stain.

கறள் பிடித்தல், see கறை கட்டுதல்.

கரு, காடைக் குரல், the voice of a quail.

கருடாயம், 'ஐகாரம்' the Tamil letter (vowel) 'ai'.

கருவள, see கறளை.

கறி, மிளகுத் தூள், pepper powder; 2. களிப் பாக்கு, arecanut boiled and dried up; 3. மரக் கறி, vegetable; 4. இறைச்சி as ஆட்டுக் கறி, meat; mutton; 5. கடித்து மென்று தின்னல், to eat by biting and chewing; 6. கறி அல்லது மசாலைத் தூள், curry powder; 7. சமைத்த கறி, இது அடியிற் கண்டபடி பலவகைப் படும், prepared curry. The following are different kinds:—

1. இலைக் கறி, greens.
2. மரக் கறி, vegetable curry.
3. அவட்டற் கறி, baked curry.
4. மாமிசக் கறி, meat.
5. புளிக் கறி, sour curry.
6. தித்திப்புக் கறி, sweet curry.
7. பொரிக் கறி, fried curry.
8. தாளித்த கறி, seasoned curry.

கறி கழுவின தண்ணீர், மரக்கறி அல்லது இறைச்சிக் கழுவிய தண்ணீர், washings of the vegetable curry or meat.

கறி கோலம், see அழிஞ்சில்.

கறிக் கருணை, உணவில் உபயோகிக்கும் காராக் கருணைக் கிழங்கு, (literally) yam used in curry; elephant foot yam—Typhonium orixense alias Arum orixense. It is a yam without acrid taste; 2. சேனைக் கிழங்கு, tahiti arrow root—Tacca pinnatifida. See கருணை.

கறிக் கன்று, கையாந் தகரை, eclipse plant —Eclypta prostata.

கறிக் காய், மிளகு, pepper.

கறிக் கும்மட்டி, சாம்பற் பூசினி, ash pumpkin.

கறிக் கூட்டு, கறியோடு சேர்க்கும் சரக்குகள், ingredients of curry; curry-stuff; 2. கறி மசாலை, condiments; curry powder.

கறிசல மாக்கி, மாங்கிஷ பேதி, a mineral dissolvent capable of dissolving meat etc.

கறிசனி, வெள்ளைக் காக்கணம், white flowered mussel-shell creeper — Clitorea ternatea.

கறிச் சரக்கு, கறி மசாலை, see கறிக் கூட்டு.

கறிச் சரக்கு சுத்திரம், கறி மசாலை அரைக்கும் யந்திரம், spice mill.

கறிச் சுரை, கறிக் குதவும் சுரைக்காய், bottlegourd used for culinary purpose; calabash—Lagenaria vulgaris.

கறிச் சேம்பு, சேப்பங் கிழங்கு, Egyptian yam —Colocasia antiquorum alias Arum colocasia.

கறித்தல், கடித்தல், biting; 2. புசித்தல், eating.

கறித் தும்பை, பெருந் தும்பை, large leucas —Leucas aspera alias Phlomis aspera; 2. கொடித் தும்பை, a creeper with an edible fruit—Purslane.

கறித் தூள், கறி மசாலை, condiment; 2. சம்பாரப் பொடி, curry powder.

கறிப் பாகல், மிதி பாகல், ground pagal or corolah—Momordica humilis.

கறிப் பாலை, பாலைக் கீரை, edible paulay—Mimusops kauki.

கறிப் புடல், புடலங் காய், snake-gourd — Trichosanthus anguina; 2 ஓர் வண்டு, a beetle.

கறிப் புடோல், see கறிப் புடல்.

கறிப் பெருங்காயம், சமையலில் உபயோகிக்கும் பெருங்காயம், asafoetida used in cookery.

கறிப் போளம், ஓர் வாசனைப் பிசின், a fragrant resin or gum. See கறிய போளம்.

கறி மசாலை, கறிக் குபயோகிக்கும் கூட்டுச் சரக்கு, spices and other fragrant ingredients used in cookery.

கறி மஞ்சள், கறிக் குதவும் மஞ்சள், turmeric used in kitchen as distinguished from that used as cosmetic—Curcuma longa.

கறி முருங்கை, முருங்கை மரம், drum-stick tree—Hyperinthera moringa.

கறி முள்ளி, முள்ளுக் கத்திரி, thorny brinjal; prickly brinjal — Solanum agreste; 2. கண்டங் கத்திரி, Indian nightshade; 3. முள்ளிக் கீரை, thorny spinach — Amaranthus spinosis.

கறி முள்ளிக் காளி, மிளகு தக்காளி, pepper takkali—Solanum melongena.

கறி மேதை, சப்ஜா விதை, spogel seed.

கறிய சீரம், see கருஞ் சீரகம்.

கறிய சூரி, கத்தைச் சூரி, literally (oyster + knife), bristly button weed — Spermacoce hispida.

கறிய பிலை, see கறி வேப்பிலை.

கறிய போளம், கருப்புக் குங்கிலியம், black dammer—Canarium strictum; 2. கறும் பிசின், Socotrine aloe — Aloe succotrina.

கறிய மால், துளசி, holy basil — Ocimum sanctum.

கறியமுது, தேவதைகளுக்கு படைக்கும் சமைத்த உணவு, cooked food offered to Gods in worship.

கறியமுது வடகம், see கறி வடகம்.

கறியன், செக் கெல்லி, tapering nutmeg — Myristica attenuata.

கறி யாமணக்கு, பப்பாளி, papaw mango — Carica papaya; 2. பறங்கி யாமணக்கு, foreign castor — Papaya vulgaris. See கனி யாமணக்கு.

கறியுப்பு, சோற்றுப்பு, common salt — Sodium chloridum; 2. கடலுப்பு, culinary salt or sea-salt; 3. பிரம வுப்பு salt deposited at the bottom of the sea.

கறியுப்புத் திராவகம், see உப்புத் திராவகம், Hydrochloric acid.

கறி வடகம், குழம்பு தாளிக்க வுபயோகிக்கும் வடகம். இது பருப்பு, வெங்காயம், பெருங்காயம், கடுகு, பூண்டு முதலியவை சேர்ந்தது, condiments consisting of pulse (dholl) onions, asafoetida, mustard, curry-leaf, garlic, turmeric etc. pounded together and made into balls and when required, a portion of this is fried in ghee and used for seasoning sauce. See வடகம்.

கறி வேப்பிலை, கறிவகைக் குபயோகிக்கும் ஓர் வாசனை யிலை, curry-leaf. It is so called from its resemblance to margosa leaf and from its use in curry. See கறி வேப்பிலை மரம்

கறிவேப்பிலை மரம், இதுவே கறிவேம்பு. இது எல்லாத் தோட்டங்களிலும் பயிராகும், காடுகளிலும் விளையும் ஓர் சிறு மரம். இதன் பூ சிறியது, வெண்மை, இம் மரம் முழுவதும் வாசனை பொருந்தியது. வெயிற் காலத்திற் பூக்கும். இதன் வேர் அகலப் பரவுவது மன்றி, வேரிலும் தளிர்க்கும்; வேர்ப் பட்டையினின்று எண்ணெய் எடுக்கலாம். இவ் வெண்ணெய் மணமாகவும் இஞ்சியைப் போன்ற ருசியாயும் இருக்கும். வில்வ இலையினின்று வடித்த எண்ணெயைப் போல இவ் விலையி லிருந்து எடுக்கும் எண்ணெயும் ஓர்வித வாசனை யுள்ளது. இவ் வேருக்கு மலத்தை இளக்கும் குணமுண்டு. பட்டை, வேர் கருகுப்பைத் தரும். இதைச் சிரங்குக்கு மேற் பூச்சு மருந்தாகவும், கஷாயமிட்டு சுரம், வாந்தி பேதி முதலானவைகளுக்கும் கொடுக்கலாம். இக் கொழுந்தைப் பாலில் இட்டு கொதிக்க வைத்து இடித்து விஷக் கடிக்குக் கட்டலாம். இலையைப் பச்சையாகச் சீதபேதிக்கும் உட்கொள்ளலாம். கொழுந்தை வதக்கி கஷாய மிட்டுக் கொடுக்க வாந்தியை நிறுத்தும். இலையின் சீத கஷாயம் வாந்தியை நிறுத்தும், இலை சீரண சக்தியைத் தரும்; வாயுவைப் போக்கி பலத்தைத் தரும்; கூட்டில் சேர்க்கவும், குழம்பு தாளிக்கவும் உதவும். இலை காய்ந்தாலும் வாசனை தன்மை போகாது. இதன் விதையி னின்று எடுக்கும் எண்ணெய் பள பளப்பாயும் மஞ்சள் நிறமாயு மிருக்கும், ஆனால் இவ் வெண்ணெயின் குணம் இன்னதென்று இன்னும் விளங்கவில்லை. Curry-leaf tree — Murraya koenigii alias Bergera koenigii. This is a small tree common in jungles and largely cultivated in Indian gardens. Flowers small and white; the whole plant has a peculiar odour; flowers in hot season. The roots spread widely and send up numerous suckers and they have a thick soft bark loaded with oil globules. The oil has an agreeable odour and tastes like fresh ginger; the leaves yield to distillation a small quantity of volatile oil resembling that obtained from bael leaves. Root medicinal laxative; bark and roots stimulant and used externally in eruptions and internally as an infusion to check vomiting in cholera. Tender leaves boiled in milk and bruised are applied as poultice to poisonous bites; fresh leaves eaten raw in dysentery; infusion of roasted leaves stops vomiting. Leaves are stomachic and tonic and they are also used for seasoning curries and mixed in curry pastes; retain their flavour even when dry. A yellow transparent oil is derived from seeds and its properties are yet to be ascertained.

கறி வேம்பு, கறிவேப்பிலை மரம், curry-leaf tree —Murraya koenegii.

கறு கறுத்தல், மிக்கக் கரு நிற மடைதல், to grow very dark; to become jet black.

கறுக் கன்னி, வெள்ளைக் கன்னி. இதற்கு வடமொழியில் 'சங்குபுஷ்பி' என்றும் தெலுங்கில் 'மண்டேக பிரம்மி' என்றும் வழங்கும். இச் செடி 2-3 அடி உயரம், இலைகள் நாற்கோணமாக விருக்கும். இலைகள் நீண்ட காம்புக ளுடையது. இரு பக்கமும

முக் முகப்பா யிருக்கும்; வெள்ளைப் பூ; உட் பக்கம் சிகப்பு. இது மூளைக்கு பலம் தரும். இலைச் சாறு வயிற்றுக் கிருமிகளைக் கொல் லும், மிக்க கசப்பாதலின் உடம்பிற்கு நன் மையைத் தரும். விஷ சுரம், குழந்தைச் சுரம் இவைகளுக்குச் சிறந்தது. இது குணத்தில் இதன் இனமாகிய சங்கன் குப்பியைப் போன் றது, saraswati leaf—Cleodendron viscosum alias Volkemeria infortunata. This shrub is 2-8 ft. high; branchlets quadrangular; leaves long-petioled and hairy on both sides; flowers white-tinged with rose inside. It is a medicinal tonic and antiperiodic; fresh juice of leaves employed as vermifuge; a bitter mental tonic and a febrifuge in malarious fevers especially of children. In quality it resembles Inerme which is another species of the plant.

கறுக்கன் கன்னி, see கருக் கன்னி.

கறுக்கன் வெள்ளி, மட்ட வெள்ளி, inferior silver.

கறுக்காய், குரும்பி, தண்ணீர் சேராத இளநீர்த் தேங்காய், young of a cocoanut devoid of water; 2 கடுக்காய், which see.

கறுங் கரணை, கறுப்புக் கரணைக் கிழங்கு, black elephant yam

கறுங் கழுதை, கறுப்புக் கழுதை. இது மாந்தி ரீகத்திற்கு மிக்க வுபயோகமானது, black ass which is of great use in Magic.

கறுங் கழுதை மூத்திரம், see கழுதை மூத்திரம்.

கறுங் காய்ஞ் சொறி, கறுப்புக் காய்ஞ் சொறி, black nettle plant—Tragia involucrata.

கறுங் குறிஞ்சி, கறுப்பு மருதோன்றி, see கரு மருது.

கறு தகுவாதி, see கல் லுப்பு.

கறுத்த காக்கட்டான், see கருங் காக்கணம்.

கறுத்த காக்கணம், see கருங் காக்கணம்.

கறுத்த நிறத்தி, கறு வூமத்தை, black-flowered datura.

கறுத்த நீர், கறுத்த அல்லது புகை நிறமான நீர், dark or smoky-coloured water; 2. பாறை நீர், rock-water.

கறுத்த பூ, see கருங் காக்கணம்.

கறுத்தல், கறுப்பாதல், to grow dark; 2. முற்றுதல், to mature.

கறுத்த வளை, தூதுவளை, three-lobed nightshade—Sol anum trilobatum.

கறுத்தவன், கரியன், a dark man.

கறுத்த வுப்பு, கறுப் புப்பு. இது மிகவும் விலாக் கியமாக வைத்தியர்களால் கொள்ளப் படும். இது மிக்க சக்தி வாய்ந்ததால் வைத் தியத்திற்கு மிக வுபயோகம். இதை விஷ சுரத்திலும் காணும் மண்ணீரல் கட்டி, ஈரல் கட்டி இவைகளுக்குக் கொடுக்கப் படும், black salt — Bitloben. It is nothing else than an impure chloride of sodium containing little sulphuret of iron. It is held in high esteem by native Vaidyans who prescribed them for chronic enlargements of the spleen and the liver due to malarial poisoning. In medicinal use it has wide powers.

கறு நாகம், காரீயம், black lead.

கறு நிமிளை, கறுப்பு நிமிளை black bismuth.

கறு நிறத்தி, see கருமத்தை.

கறுந் திராட்சை, see கறுப்புத் திராட்சை.

கறுப்பச்சி, see எவட்சாரம்.

கறுப் பப்பிரகம், கிருஷ்ண அப்பிரகம், black mica. See அப்பிரகம்.

கறுப் பழிஞ்சில், கறுப்பு அழிஞ்சில் காயுள்ள மரம், see அழிஞ்சில்.

கறுப் பறுகு, கறுப்பு அருகன் புல், black panic grass.

கறுப்பன், கறு நிற முடையவன், a dark or black person; 2. ஓர் சிறு தேவதை, a fierce demon; 3. கருக் குருவை நெல், black paddy (*Kuruvai*); 4. கல் லுப்பு, sea-salt; 5. வழலை யுப்பு, salt collected from the soil of fuller's earth; கரப்பன், which see.

கறுப்பி, எவட்சாரம், which see; 2. கரு வண்டு, black beetle; 3 காக நிமிளை, black bismuth; 4. நீல பாஷாணம், a kind of prepared arsenic; 5. தொட்டி பாஷா ணம், a prepared arsenic; 6. மீனம்பர், ambergris — Ambragresia of chemists; 7. கறுத்த பெண், a dark woman.

கறுப் பீரல், மண்ணீரல், spleen.

கறுப்பு, தழும்பு; scar; 2. பேய் பிசாசு, an epheumistic term for minor evil spirits; 3. அபினி, opium; 4. தும்பிலி, ebony-wood; 5. கருமை, blackness.

கறுப்புக் கடலை, கறுப்புக் கொண்டைக் கடலை, black Bengal gram.

கறுப்புக் காஞ்சொறி, see கருப்புக் காஞ்சொறி.

கறுப்புக் குங்கிலியம், see கருங் குங்கிலியம்.

கறுப்புக் கட்டுதல், குழந்தைகளுக்கு ஏற்பட்ட தோஷத்தை மந்திரத்தால் நிவர்த்தித்தல், to remove or cure the morbid diathesis in children through magic.

கறுப்புக் கொடி வேலி, see கருங் கொடிவேலி.

கறுப்புக் கொள்ளல், குழந்தைகளுக்கு தோஷந் தாக்கல், to be attacked with morbid diathesis especially of children ; 2. பேய் கொள்ளல், to be possessed of demon.

கறுப்புக் கொள்ளு, கறுப்புக் குதிரைக் கொள்ளு black horse gram. See கருங் காணம்.

கறுப்புச் சித்திர மூலம், see கருங் கொடி வேலி.

கறுப்புச் சிலந்தி, கறுப்புச் சிலந்திப் பூச்சி. இது பட்ட இடத்தில் கறுத்த நிறமுடைய வீக்கத்தை யுண்டாக்கி, இரத்தமும் சீழும் வடிந்து, நாற்றத்தை யுண்டாக்கும், a black species of spider, which on contact with the body develops a dark-coloured swelling attended with suppuration and a fetid discharge of blood and pus.

கறுப்பு டாமர், see கருங் குங்கிலியம்.

கறுப்புத் தேயிலை, சீனத் தேயிலை, China tea.

கறுப்பு நாய், மூக்கத்தாரி, an unknown plant.

கறுப்புப் படர்தல், உடம்பில் கரு மேகம் படர்தல், dark patches on the skin from venereal or syphilitic causes.

கறுப்புப் பயறு, வயப் பயறு, a black variety of the species of gram known as field gram—Dolichos trilobus.

கறுப்புப் பில்லாஞ்சி, கறுப்புப் பூளை, black honey shrub—Phyllanthus multiflorus. See பூளை.

கறுப்புப் புல்லாந்தி, see கறுப்புப் பில்லாஞ்சி.

கறுப்புப்பு, கறுப்பு உப்பு. இவ் வுப்பு அழுகின முட்டையைப் போல் நாற்ற மடித்தாலும் மிக்க மேன்மை யுடையதாகக் கொள்ளப் படும். இது அடியிற் கண்டபடி தயாரிக்கப் படும் :—56 பவுண்டு சோடா வுப்பும், 20 அவுன்ஸ் கடுக்காயும் சேர்த்து ஒருமண் பாண்டத்திலிட்டு 6 அல்லது 7 மணி நேரம் எரித்து எடுத்த பின் பார்க்க 6 குன்றிமணி எடை அயத்தூளும் 14 கு. எ. கந்தகமும், 12 கு. எ. உப்புச் சுண்ணமும், சோடா வுப்பு 444 குன்றிமணி எடையும் கிடைக்கும். இவ் வுப்பு குன்ம ரோகத்திலும், குலைப் பிடிப்பிலும் வலிவை யுண்டாக்கு மருந்தாகவும், மண்ணீரல், குடற் சவ்வு இவைகளைச் சுத்தி செய்யவும், வாதப் பிடிப்பு, பாரிச வாயு இவற்றை குணப் படுத்தவும் உபயோகிப்பதுண்டு ; தெலுங்கில் இதற்கு கந்தக வுப்பு என்று பெயர், black salt—Impure chloride of sodium. Although this variety has somewhat the smell of a rotten egg, it is still considered superior. It is prepared as shown below :—Mix 56 lbs. of impure muriate of soda and emblic myrobalans and 20 ounces of dried myrobalans and heat them when 6 grains of black oxide of iron, 14 grains of sulphur and 12 grains of muriate of lime and 444 grains of muriate of soda will be obtained. It is used as a tonic in dyspepsia and gout ; and as a deobstruent in obstruction of the spleen and mysenteric glands and as a stimulant in chronic rheumatism and palsy In Telugu this is known as sulphur salt. See கறுத்த வுப்பு.

கறுப்புப் புள்ளி, உடம்பில் கறுப்புப் புள்ளிகள் ஏற்படும் ஓர் மேக நோய், a venereal or syphilitic disease developing black spots in several parts of the body.

கறுப்புப் பூலாஞ்சி, see கருப்புப் பில்லாஞ்சி.

கறுப்புப் பூனை, உடல் முழுதும் கறுப்பு மயிர் அடர்ந்த பூனை. இது மாந்திரீகத்திற்கு மிகவும் உபயோகமானது. ஐரோப்பியர்கள் இதை வளர்ப்பதினால் நல்ல அதிட்டம் உண்டாகு மெனக் கருதுவார்கள், a cat with pure black hairs. It is said to be very useful in Magic such as, witchcraft, sorcery etc. In Europe, it is considered lucky to have a black cat in the house.

கறுப்புப் பூனைக் காஞ்சொறி, black variety of cowhage plant—Mucana pruriens.

கறுப்பு மட்டி வாயன், see கருப்பு மட்டி வாய்.

கறுப்பு மட்டிவாய், ஓர் கறுத்த வெண்மையான கடல் மீன். இதன் நீளம் சுமார் $2\frac{1}{2}$ அடி, a grey silvery sea-fish about $2\frac{1}{2}$ ft. in length—Sparus berda alias Chrysophyrs berda.

கறுப்பு மணித்தக்காளி, கறு நிறமான மணித் தக்காளி, black nightshade — Solanum nigrum.

கறுப்பு மரம், கருந் தும்பி, coromandel ebony —Diospyros melanoxylon.

கறுப்பு மருதமரம், see கரு மருது.

கறுப்பு மாதர் பால், கறுத்த பெண் முலைப்பால். ரோயாளிகளுக்கு மருந்தில் அநுபானமாகக் கொடுக்க இது உதவாது, breast milk of a black or dark woman. Patients are prohibited from taking it as a vehicle in medicine.

கறுப்பு முருங்கை, முருங்கை மரத்தில் ஓர் இனம், a black variety of moringa.

கறுப்பு முன்னை, கறுப்பு முன்னே, a black variety of premna.

கறுப்பு வரால், ஓர் கறுப்பு வரால் மீன். இது சுமார் இரண்டடி நீளம். பத்தியத்திற் குதவும், a dark-coloured walking fish (fresh water) about 2 ft. in length. Much esteemed in diet.

கறுப்பு வவ்வால், கரு நிறமான ஓர் வகை கடல் வெளவால் மீன். இது சுமார் 2 அடி நீளம். சாப்பிட ருசியா யிருக்கும், a sea-fish known as black pomfret, dark, about 2 ft. in length — Stromateus niger. Excellent dish.

கறுப்பு வழுதலை, கறுப்புக் கத்தரி, see கருங் கத்தரி.

கறுப்பு வாகை, see கரு வாகை.

கறுப்பு விரம், விளக்கின் கொழுந்திலுள் படரும் கரி, lamp-black.

கறுப்பு வெற்றிலை, see கம்மாறு வெற்றிலை.

கறுப் பேற்றிக் கொள்ளல், அபினி தின்னல், eating opium.

கறும் பசும் பால், கறுப்பு நிறமான பசுவின் பால், milk of black-coloured cow; 2. காராம் பசுவின் பால், milk of the cow having black tongue and nipple.

கறு வலந்தான், விச்சளி, swift bird or king-fisher—Halcyon brunniceps.

கறுவல், கறு நிறம், black colour; 2. கறுப்பு மனிதர், a black person.

கறுவாப் பட்டை, see இலவங்கப் பட்டை.

கறு வாப்பு, see கருஞ் செவ்வாப்பு.

கறுவிக் கொட்டை, ஓர் சீமை விதை, caraway seed.

கறு விருளி, see கருங் காக்கணம்.

கறே லெனல், மிக்கக் கறுப்பா யிருத்தல், to be of intense black or dark colour.

கறை, இரும்புக் கறை, rust; 2. மாசு, stain; 3. இரத்தம், blood; 4. நிறம், colour; 5. நஞ்சு, poison; 6. கருங் காலி, which see; 7. குற்றம், defect; 8. மாத விடாய், catamenia; 9. உரல், mortar; 10. see கறை விலக்கு; 11. இருள், darkness; 12. கறுப்பு, blackness.

கறை கட்டுதல், பல்லீறில் மாசு படிதல், formation of a concretion or hard crust on the teeth — Tartar; 2. துருப் பிடித்தல், to become rusty.

கறை கண்டன், துருசு, blue vitriol — Copper sulphate.

கறைக் கோங்கு, இலைப் புங்கு, dipterocarp dammer—Hopea glabra.

கறைச் சுவாலை, கறை யுண்டாக்கும் நெருப்புத் தழல், oxidising flame.

கறைச் சூலை, ஓர் வகைச் சூலை நோய். இதனால் இரத்தம் பொங்கித் தோலைப் பற்றுவதனால், நரம்பின் அவாரத்தில் இரத்தம் தடைபட்டுத் தங்குவதாற் பிறந்து, பிறகு கீழ் முதுகை யனுசரித்து நின்று அவ்விடத்தில் மிக்க வலி, கை கால் உளைவு, அறிவு, தேஜசுக் குறைவு முதலிய பல குணங்களைக் காட்டும், a disease attended with severe pain in the lower region of the back. It is said to be due to an inflammatory condition of the tissues adjoining the muscles of the small of the back and the lowest region of the spine. The inflammation may extend down to the limbs and give rise to prostration and several other painful symptoms — Lumbago.

கறைத் துணி, குதச் சீலை, piece cloth used by woman to sponge the menstrual discharge.

கறை நீக்கல், மாசு நீக்கல், to remove the stain or blemish; to subtilize.

கறை படல், இரத்தம் படிதல், to be stained with blood.

கறை படிதல், உதிரம் படல், to menstruate.

கறை பிடித்தல், பல்லில் நிற மேறுதல், to be stained with concretions in the teeth; 2. துருப் பிடித்தல், to get rusty; 3. இரத்தங் கட்டல், discolouration from the stagnation of the blood. *C.f.* கறை கட்டுதல்.

கறை போக்கி, சவர்க் காரம், bleaching powder for removing stains; 2. கறையைப்

போக்கும் மருந்து, anything that removes the stain; 3. சூதகம் போக்கி, any medicine to promote the menstrual discharge—Emmenagogue.

கறைப் பல், மாசு படிந்த பல், unclean teeth; 2. நிறம் பாய்ந்த பல், stained or discoloured teeth.

கறை யடி, உரலைப் போன்ற தடித்த கால், leg as thick as mortar; 2. யானைக் கால், elephant leg; 3. யானை, elephant.

கறையான், சிதல், செல்லு, white-ant — Termes bellicosus alias Formigas brancas. It is a species of termite and not an ant.

கறையான் நோய், உதிர நோய், diseases relating to blood.

கறையான் புற்று, சிதல்களினால் கட்டப் பட்ட வரிகளோடு கூடிய மண் புற்று. இது பாம்புக்கு வசிக்கு மிடமாகும், large mounds of earth thrown out by white ants just to screen themselves. As they contain several holes they form the residential holes for snakes—Ant hill or Termite mound.

கறை விலங்கு, செந் தரைப் பூடு, a kind of white cedar—Heynea trijuga. See கரு விலங்கம்.

கறை விழியாள், see கருங்கண் கோதை.

கறை விளங்கு, வெண் டேக்கு, a species of white cedar. See கறை விலங்கு.

கரேர்டிகை, கழுதை, ass.

கரேர்தி கெத்தை, பச்சைப் பாம்பு, green snake.

கற் கசம், உத்தாமணி அல்லது வேலிப் பருத்தி, hedge cotton — Daemia extensa See உத்தாமணி.

கற்கடக கரம், நண்டு வாய்க் காலி, crab-clawed scorpion or lobster-mouthed-legged scorpion; 2. தேள், scorpion.

கற்கடக காலிகா, see ஒருக் கொம்பு; 2. நண்டு வாய்க் காலி, see கற்கடக கரம்.

கற்கடக சிங்கி, see கற்கடக சிரிங்கி.

கற்கடக சிரிங்கி, கடுக்காய்ப் பூ, the horn-like excrescences caused by insects on the branches of the tree — Red-lac sumach. It is so called from galls like scorpion's or crab's claw—Galls of Pistacia integerrima.

NOTE.—This tree is also known as crab's claw, or Japanese tallow sumach — Rhus integerrima alias R. succidanea.

கற்கடக நாதி, கிச்சிலி, orange—Citrus aurantium.

கற்கடக நூல், தாமரை நூல், filaments of lotus.

கற்கடக பாஷாணம், பிறவிப் பாஷாணம் 32ல் ஒன்று, one of the thirty-two kinds of native arsenic.

கற்கடக மாதிரி, சதுரக் கள்ளி, square-spurge —Euphorbia antiquorum.

கற்கடகம், see கற்கடக நூல்; 2. நண்டு, crab; 3 கற்கடக சிங்கி, which see; 3. தாமரை நூல், lotus fibre.

கற்கடக விராசி, இராசியில் ஒன்று (In Astronomy), one of the signs (crab) of the zodiac.

கற்கடக வைரி, குரங்கு, monkey.

கற்கட காதி, நண்டு, crab.

கற்கடம், கரும்பு, sugar-cane — Saccharum officinarum; 2. வில்வம், bael tree — Crataeva religiosa.

கற்கடி, வெள்ளரி, cucumber — Cucumis sativus.

கற் கண்டம், see அகில்.

கற் கண்டு, (கல் + கண்டு = stone + piece) கரும்புக் கட்டி, crystal of cane sugar; sugar candy.

1 பனங் கற்கண்டு, palmyra sugar candy.
2. ஈச்சங் கற்கண்டு, date sugar candy.
3. சீனிக் கற்கண்டு, China sugar candy.
4. பத்தாய் கற்கண்டு, flat sugar candy.
5. தேன் கற்கண்டு, sugar candy from crystallised honey.

கற்கண்டுப் பானகம், கற்கண்டு முதலாக பல சரக்குகளை கூட்டி வாசனை யுள்ளதாகச் செய்த குடிநீர், a sweet drink consisting of sugar candy in a solution mixed along with other ingredients for giving flavour.

கற் கந்தம், விஷ்ணு காந்தை, fish-eye plant—Sphoeranthus indicus alias S. africanus.

கற் கந்து, தொட்டிப் பட்டை, bark of தொட்டிப் பூடு, jujube creeper—Scutia indica.

கற்க பலம், மாதுளை, pomegranate—Punica granata.

கற்க மருந்து, கடைச் சரக்கு bazaar drugs; 2. உபரசச் சரக்கு, natural substances described in Tamil Medicine, ordinarily procurable or available in bazaars.

கற்க மூலி, கடையில் விற்கு மூலிகை அல்லது மருந்துச் சரக்கு, dried herbs or medicinal drugs sold in bazaars.

கற்கம், இலுப்பைப் பூ, mahwa flower—Bassia longifolia; 2. கடைச் சரக்கு, bazaar drugs; 3. பலவகைக் கூட்டு மருந்து, a mixture of several drugs; 4. கஷாயம், தைலம் முதலியவைகளைக் காய்ச்சும் போது அடியில் படரும் வண்டல், the residue or sediment precipitated in the course of preparing boiled decoctions or tinctures, ointments, medicated oils etc; 5. மருந்தின் பொது, medicinal drugs in general.

கற்காம், மத்து, pestle.

கற் கரி, நிலக் கரி, blind coal or glance coal—Anthracite; 2. தயிர்கடை தாழி, churning rod.

கற் கரித்தார், நிலக்கரிக் குழம்பு, coal tar.

கற்கரி வாயு, கரி வாயு, coal gas; 2. கரி சரக்க வாயு, marsh-gas or fire-damp.

கற்கரு சிடை, ஓர் பூடு, a plant cucurbita genus.

கற்க வகை, கஷாயம், குடிநீர், தைலம், இலேகியம், முதலிய மருந்துகளைத் தயாரிக்க வேண்டி சேர்க்கப் படும் பல வித மருந்துச் சரக்குகள், several kinds of drugs entering into the preparation of medicines like decoctions, infusions, or tinctures, ointments, electuaries etc.

கற் கவுதாரி, ஓர் வகைக் காட்டுக் கோழி. இது 18 அங்குல நீளம். மண்ணிறம் போன்றது. ஆகவே உட்கார்ந் திருக்க காணப் படாது. கறிக்குச் சிறந்தது. மிக்க வாசனை யுள்ளது, common sand-grouse—Pterocles exustus. 18 inches in length. When seated on the ground, it is difficult to observe from its similarity of colour to the ground; flesh tasty, and of high flavour.

NOTE— Painted sand-grouse or evening sand-grouse is another variety – Pterocles fasciatus.

கற்கனல், ஓர் வகை பாஷாணம், a mineral poison; 2. கல் மதம், bitumen.

கற்கா, நொச்சி, adamantine creeper—Vitex negundu.

கற் காக்காச்சி, ஓர் வகைச் சிவப்பு கடல் மீன், a species of red-coloured sea-fish—Holocentrum rubrum.

கற் காசா, ஓர் வித கடல் மீன். இது சாம்பல் நிறமும், சுமார் 6 அடி நீள முமுள்ளது, a sea-fish gray in colour and about 6 ft. in length—Holcanthus xanthurus.

கற் காணம், see கருஞ் சீரகம்; 2. ஓர் வகைக் கொள்ளு, a hard variety of horse-gram; 3. மட்டப் பொன், an alloy of gold.

கற் காதி, see கற்க வகை.

கற் காந்தம், நால் வகைக் காந்தக் கற்களுள் ஒன்று. இதனால் சோகை, அசீரண பித்தம் இவைகள் போம், one of the four kinds of magnetic ores—Magnetic iron stone. It is used medicinally for anemia and gastritis.

கற் காமி, see கல் மதம்.

கற் காரம், காரக் கல், a species of caustic stone or mineral—Lapis infernali.

கற் காரு, see அகில்; 2. காரக் கல், see கற் காரம்; 3. பூசினி, pumpkin — Cucurbita moschata.

கற் காவி, காவிக் கல். இது ஓர் உபரசச் சரக்கு, a kind of earth or clay of a red colour—Red ochre. It is one of the 120 kinds of natural substances contemplated in Tamil Medical science; 2. அரமினிக் கல், Armenian bole; 3. காவி மண், red earth imported from Persia.

கற் கானம், கருஞ் சீரகம், see கற் காணம்.

கற்கி, குதிரை, horse.

கற்கிப் பல், குதிரைப் பல் பாஷாணம், (lit) horse tooth poison which is a kind of native or mineral poison.

கற் கிளிச்சி, ஓர் நீலக் கடல் மீன், a species blue sea-fish—Caesio cuning.

கற் கிளிஞ்சில், ஓர்வகைக் கெட்டிக் கிளிஞ்சில், a kind of hard bivalve.

கற் குடல், see கல் குடல்; 2. ஓர் வித நோய்க் குடல், intestines affected with some disease; 3. மந்தக் குடல், sluggishness of the intestines.

கற் குரு, கற்பூரச் சிலாசத்து, crystallised foliated gypsum.

கற் குறவை, பாறைகளுக் கடியில் ஒட்டிக் கொண் டிருக்கும் ஓர் கடற் குறவை மீன். இது பச்சை யாயும், உடம்பு நடுவில் நீலவரிக ளமைந்த தாயும், அடி வயிறு சிறிது மஞ்ச ளாயு மிருக்கும். சுமார் 8 அங்குல நீளம், இதைத் தண்ணீரி லிருந்து எடுத்த வுடனே இறந்து விடும், வெகு சீக்கிரம் நாற்ற மடை யும், rock-doke. It is a sea-fish (trout) clinging to rocks known as Hill trout or stone ophiocephalus — Discognathus lamta. It is greenish with a blue band along the centre of the body; abdomen yellowish; 8 inches in length. It dies as soon as it is removed from water and putrifies very rapidly.

கற் கெண்டை, (கல்+கெண்டை = stone+carp), ஓர் வகைக் கெண்டை மீன். இது ஆற்று மீன். மலையாளம், பவானி ஆறுகளில் விசேஷம், a species of carp of barbus genus — Homaloptera brucei. It is a river fish found haunting in rocky streams of Malayalam, Bhavani and other places.

கற் கொத்தி, கல் பொறுக்கிப் புறு, a species of pigeon pecking stones.

கற் கோரை, ஓர் வகைக் கடினமான கோரைப் புல், a kind of hard sedge grass; 2. ஊசிக் கோரை, a thin variety of sedge grass.

கற் கொழுஞ்சி, கெட்டி நாரத்தை, hard bitter orange.

கற் கோட்டை, ஓர் மூலிகை, an unknown plant.

கற் கோரோசிகம், சதகுப்பி, common dill; sulphurwort—Pencedanum graveolens.

கற் கோவை, கொல்லன் கோவை, see ஆகாச கருடன்; 2. இராமக் கோவை, Rama's caper; 3. மலைக் கோவை, hill caper.

கற் சட்டி, மாக்கல் சட்டி, soapstone pot.

கற் சட்டிப் பாறை, களிமண் இறுகுவதால் ஏற் படும் ஓர் இனம் பாறைக் கல். இது சேலத்தில் மிகுதி, a variety of steatite consisting of hardened clay used for making vessels —Soap stone. It is a mineral bezoar occurring in irregular and angular pieces in Salem quarries.

NOTE—This should not be confounded with snake stone (விஷக் கல்) or scorpion stone; chemically, it is a silicate of magnesia and iron.

கற் சத்து, கற்பூரச் சிலா சத்து, see கற் ரு; 2. கல்நார், asbestos.

கற் சரீரம், கல்லைப் போல் கெட்டியான அல்லது வலுவான வுடம்பு, body as hard as a stone.

கற் சவளை, see கல் நார்.

கற் சவுடு, கெட்டி பட்ட வண்டல், hardened sediment; 2. கெட்டியான உவர்மண் தரை, hard soil of fuller's earth.

கற்சவுடு நாதம், அன்ன பேதி, green vitriol —Iron sulphate.

கற் சாகம், பச்சைக் கல் அல்லது மரகதம், green stone or emarald.

கற் சாடி, மாக் கல் சாடி, soapstone jar; 2. களி மண் சாடி, steatite jar; 3. தைலச் சாடி, porcelain jar intended for preserving medicinal oils.

கற் சிட்டம், உறுதின கல். இது பல வகை, over-burnt brick. There are different kinds:—

1. அரிச் சிட்டம், half over-burnt brick.
2. கட்டிச் சிட்டம், hard over-burnt brick.
3. நகற் சிட்டம், fully blown over-burnt brick.
4. நாறுஞ் சிட்டம், fetid over-burnt brick.

கற் சிப்பி, பாறைகளில் அகப்படும் சிப்பி. இது சோழநாட்டு கடற்கரைகளில் விசேஷம், rock-oyster, a variety largely met with in some parts of the Coromandel coast.

கற் சீரகம், ஓர் வகைச் சீரகம், a hard variety of cumin seed; fennel seed.

கற் சுணை, கல்லின் மேலுள்ள சொர சொரப்பு, sharp granis or roughness of the surface of stones.

கற் சுண்ணக் குகை, கல்லுச் சுண்ணாம்பினால் செய்த உருக்குக் குகை, a crucible made of common lime stone, mixed usually with other ingredients.

கற் சுண்ண முப்பு, அண்டக் கற் சுண்ணத் தால் செய்யும் முப்பு, a universal salt prepared with lime-stone (essence) as its chief ingredient.

கற் சுண்ணம், see கற் சுண்ணாம்பு.

கற் சுண்ணாம்பு, கல்லுச் சுண்ணாம்பு, ordinary lime-stone as opposed to சிப்பிச் சுண்

ணும்பு, lime prepared from sea-shells ; 2. நீற்றி யெடுத்த சுண்ணும்பு, slaked lime obtained by calcining lime stone in lime kilns.

கற் றுரக்காய், பேரிச்சங் காய், date fruit (dried).

கற்றூர சுங்கன், சப்பாத்துக் கள்ளி, prickly pear.

கற்றூர மாதிதம், சவுக்கு மரம், cassuriana tree.

கற்றூரம், கழற் கொடி, bonduc nut creeper—Caesalpinia bonducella ; 2. பேரீந்து, wild-date fruit.

கற் றூரம் பழம், பேரிச்சம் பழம், date fruit.

கற் றூரம்பா, செருப் படை, a low spreading plant.

கற் றுரை, செக் கவுரி, spinous wild indigo—Tephrosia spinosa.

கற் றூர், see றூரம் பழம்; 2. பேரிச்ச மரம், date palm.

கற் றுவல், see கவறச் சூலை ; 2. ஓர் வாத வலி, a sort of rheumatic pain.

கற் செம்பு, see கல்ச் செம்பு.

கற் சேப்பு, see கல் சேம்பு.

கற் சேனி, மணித் தக்காளி, black-berried solanum—Solanum nigrum.

கற் சோகம், see அசோகு.

கற்ப இருமல், கஞ்சா குடிப்பதா லேற்படும் இருமல், cough due to gunjah smoking.

கற்ப ஔடதம், பூரணுதி லேகியம், an electuary prepared with drugs promoting strength so as to overcome infirmity and disease.

கற்பகக் கரம், சோழித் தலை கந்தகம், a prepared arsenic, perhaps red-sulphide.

கற்பக மாரீசம், கருந் தக்காளி, black takkali or tomato of the Physalis genus.

கற்பகம், புளி யாரை, Indian sour-sorrel—Oxalis corniculata ; 2. பனங் கள், palmyra toddy ; 3. தென்னை, cocoanut tree ; 4. பவளப் புற்று பாஷாணம், a kind of arsenic ; 5. தாழை, fragrant screw-pine—Pandanus odorotissimus ; 6. மாஞ்சில், fragrant cyperus—Valeriana jatamansi.

கற்பக வெல்லம், பனை வெல்லம், palmyra jaggery.

கற்ப காண்டம், கோழிக் கீரை, cock's green—Portulae oleracea.

கற்ப காலம், கருப்பிணியா யிருக்கும் காலம், period of pregnancy; 2. கோடி யுகம், billions of years; 3. காய சித்திக்காக கற்பம் சாப்பிடுங் காலம், the time of taking medicine for rejuvenation. *C. f.*

காலங் கழிந்து காயம் நெகிழ்ந்து காற்று மழிந்து
தோலும் சுருக்கியும் நாடி நரம்பும் துவண்ட பின்பு,
சாலவும் கற்பம் சாரா து சார்ந்தும் சத்திலை காண்
வாலிப மெய்திடுங் காலத்தில் கற்பம் வசப் படுமே.

The above is a stanza advocating that youth is the proper period for taking *Kalpam* and that no benefit will be derived by having it in advanced age especially after the muscles have relaxed, the nervous system weakened and the body wrinkled.

கற்ப கோளகை, கருப்பப் பை, the womb or the uterus.

கற்ப கோளாறு, கருப் பைக்கு நேரும் குற்றங் கள், disorders of the uterus.

கற்பக் கடம்பு, நீர்க் கடம்பு, female kadamba—Stephegyne parviflora.

கற்பக் கல், சுக்கான் கல், limestone.

கற்ப சங்கு, see கர்ப்ப சங்கு.

கற்ப சாதனை, கற்ப மூலிகைகளை யுண்டு காயத்தை சித்தி செய்துக் கொள்ளும் பழக்கம், a settled habit of taking potent drugs for strengthening or rejuvenating the body with a view to promoting longevity.

கற்ப சாஸ்திரம், கருவைப் பற்றிய நூல், embryology ; 2. கருப்பிணியைப் பற்றிக் கூறும் நூல், midwifery ; 3. காய கற்பத்தைப் பற்றிக் கூறும் நூல், a treatise on rejuvenation.

கற்பச் சூடு, தாயார் வயிற்றிலுள் ளிருக்கும் போதே உடம்பில் ஏற்பட்ட சூடு, congenital heat.

கற்பஞ் சாதித்தல், காய சித்திக்காகக் கற்ப மூலிகைகளை யுண்டு பழகல், taking of rejuvenating drugs with a determined will.

கற்பத்தி, புளி யாரை, Indian sour sorrel—

Oxalis corniculata: 2. நீலஞ் சோதி. இது ஓர் கற்ப மூலிகை, blue lustre plant probably a variety of blue gum of the Eucalyptus genus. It is one of the rejuvenating drugs mentioned in Tamil Siddhar's science; 3. பொற்றலை கையாந் தகரை, Mari-gold verbesina — Eclipta prostata.

கற்பத் தொந்த ரோகம், கற்பத்திலேயே சம்பந்தப் பட்ட நோய், congenital disease.

கற்ப நூல், பற்பல சித்தர்கள் அவரவர் அநுபோகப் படி அருந்தி யுள்ள கற்பங்களின் முறைகளைக் கூறும் நூல்கள், அவையாவன, அகத்தியர் 100; நந்திசர் 100; போகர் 44; சட்டை முனி 21; கொங்கணவர் 16; திருமூலர் 66; கோரக்கர் 90; உரோமரிஷி, கடைக் கண்ணர், மச்ச முனி, இராமதேவர் 71; the different treatises mentioned above on rejuvenation explaining the different rejuvenating drugs and the methods adopted by Siddhars while taking them according to their own experience.

கற்ப நெறி, see கற்ப முறை.

கற்ப நோய், see கற்பத் தொந்த ரோகம்; 2. கருப் பைக்கு நேரும் நோய், uterine disease; 3. கற்பம் சாப்பிடும் போது பத்தியத் தவறுதலால் ஏற்படும் நோய்களின் விவரம்:— பெண் போகம் செய்தால் சயம் ஏற்படும் பெரு வயிறு, கை கால் சுறப்பு, கடுப்பு, புளி தின்பதால் உண்டாம், சோகை யோடு பாண்டு கிழங்கு தின்பதால் உண்டாகும். மயக்கம், சுரம் மாமிசம் மீன் தின்பதால் உண்டாம், குன்மம் மோர் சேர்ப்பதால் வரும். கண் இரண்டும் போம் பச்சை யுப்புச் சேர்ப்பதால், diseases or other complications arising in the course of taking medicines (*Kalpam*) for rejuvenation and longevity owing to faulty diet etc viz., consumption by having sexual intercourse with women; tympanites and swelling of limbs etc. by taking or including tamarind in food or diet; anemia and dropsy by taking tuberous roots in food; giddiness or fever by taking meat and fish; dyspepsia by drinking butter-milk; loss of eye-sight by taking ordinary common salt; 4. கற்ப கோளாறினு முண்டாகும் நோய்கள், uterine disorders.

கற்பத் தரித்தல், see கருப்பத் தரித்தல்.

கற்ப பாத்திரம், சிவயோகிகளும், சித்தர்களும் காய கற்பம் சாப்பிடுவதற்கும், கற்ப மருந்துகளை பதனப் படுத்துவ தற்காகவும் வேண்டி உபயோகிக்கும் அடியிற்கண்ட பாத்திரங்கள். மேற்கண்ட முறை தவறாமல் காய முண்ணில் உடம்பி லுள்ள தோஷங்கள் போம், vessels or basins used by Yogis and Siddhars for taking or preserving medicines in rejuvenation. If such vessels are used as directed below, many of the ailments will be cured:—

1. தேற்று மரத்தின் வேரினால் செய்த பாத்திரம், அமுரி வைக்க உதவும், vessels carved out of the root of water-clearing nut tree are useful for keeping urine.
2. நூறு வருடத்திய வேப்ப மரத்தின் வேரினாற் செய்த பாத்திரம், நெய் தேன் வைக்க உதவும், one made from the root of margosa tree of one hundred years old for keeping ghee and honey.
3. காந்தத்தினாற் செய்த பாத்திரம் சாப்பிட உதவும், vessels made of magnet or loadstone are used as an eating dish.
4. அப்பிரகக் கிண்ணி, basin made of mica.
5. இரச பாத்திரம், vessels made of consolidated mercury.
6. கெந்தகக் கிண்ணி, dish or cup made of sulphur (consolidated).

NOTE—Vessels or dishes referred to in Nos. 4. 5 & 6 are used for preserving medicines or for taking food.

கற்ப புட்பம், see அசோகு.

கற்பப் பற்று, பிரசவத்திற்குப் பின் ஏற்படும் கருப்பா சயத்தின் அழுக்கு, lochial discharge known as the cleansings, black clots and blood, after-birth etc. expelled from the womb after delivery.

கற்ப மூலிகை, காய கற்ப மூலிகைகள், அதாவது சித்தர்கள் கற்ப நூலின்படி நீடித்த காலம் காயத்தை நிறுத்தவேண்டி சாப்பிடும் மூலிகைகள், according to Siddhars' works on Rejuvenation, drugs taken by Siddhars for retaining the body for a long period and thus promoting longevity.

கற்ப மேகம், கர்ப்பத்தினு லேற்பட்ட மேக ரோகம், congenital syphilis.

கற்பம், நரை, மூப்பு, பிணி முதலியவைகளினுல் அழியாத படி உடம்பைப் பலப்படுத்தி நீடூழி காலம் வரை உயிரோ டிருக்கச் செய்யு மருந்து, any medicine or drug (panacea) taken for combating against grey hairs, old age, disease etc, for purposes of promoting longevity. *C. f.*

பாரப்பா வெகுகோடி கால மட்டும்
பண்பாக சடத்தோடே இருப்பதற்கு,
சேரப்பா கற்பமது கொள்ளவேணும்
செர்மையுடன் பத்தியமா யிருக்கவேணும்,
காரப்பா உப்பு வகை கட்டவேணும்
கருத்துடனே குருமுடித்து கொள்ளவேணும்
சீரப்பா இவையாவும் முடித்தோன் சித்தன்
செகத்திலே நெடுகோன்தா னிருப்பான் பாரே.
(கருவூ. வாத. காவி. 700).

The above is a stanza quoted from Karuvurar 700 on Alchemy in which Kalpam is defined as a panacea intended for prolonging life for an indefinite period. It is said that while taking the said medicine, one should strictly follow the prescribed diet, should consolidate common salt and keep in readiness the quintessence essential for this purpose.

He who accomplishes this successfully is a Siddha who can live in this world for ages.

" கற்பத்தையுண்டால் காய மழியாது
கற்பத்தினுலே காணலாம் கைலையை
கற்பத்தினுலே காணலாம் சோதியை
கற்பத்தினுலே காலையும் கட்டிடே."

This stanza assures that by taking 'Kalpam' one can avert death, reach Heaven, see the Astral Light and restrain the breath.

NOTE—It is already pointed out in the Introduction of this work, that medicines and material remedies may greatly help one in the process of Rejuvenation if used according to the instructions given in Siddhars' works and if one has only the mind and faith to do it. 'Muppu' mentioned in Siddhars' science and other preparations categorised under Universal Medicine will also help one to live for ages.

கற்பம், கஞ்சா, ganjah plant — Cannabis sativus; 2. அஷ்டமா சித்திகளை அடைவதற் கேதுவான மருந்து, drugs aiding one to attain the eight supernatural powers; 3. இரசம், mercury; 4. இரச கற்பூரம், bichloride of mercury—Hydrargiri sub chloridum of chemists; 5. தீமுருகற் பாஷாணம், a kind of arsenic; 6. அமுத சித்தி. இதனுல் உடம்பில் பரவுகிற இரத்த வோட்டம் மாறி அமிர்த வோட்டம் ஓடப் பெறுதல், success attained in the conversion of blood into nectar—a process by which the blood circulation in the human body is turned into nectar circulation; 7. பொதுவாகச் சித்தர்கள் நீடூழி கால மிருக்கவும், மூப்பு வாராமற்படி தடுக்கவும் சாப்பிடு மருந்து, medicine taken generally by Siddhars for prolonging life and for rejuvenation; 8. இரண்டிரவும் பகலுங் கொண்டது, a period constituting two nights and one day; 9. கருப்பம், pregnancy; 10. புளியாரை, sour-sorrel—Oxalis corniculata.

கற்பம் சாதித்தல், see கற்ப சாதனை.

கற்ப யோகம், கற்பத்தைச் சாப்பிட்டு உடம்பை நிலை நிறுத்திக் கொண்டு பிறகு செய்யும் யோகம், Yoga practice taken up after strengthening the body through rejuvenating drugs thereby promoting longevity. See கல்ப யோகம்.

கற் பரணை, கல்லினுற் செதுக்கிய மூடி, stone cork; 2. கண்ணுடியாற் செய்த மூடி, glass-stopper, glass cork.

கற்பரம், துருசு, blue vitriol; copper sulphate; 2. துளசி, holy basil — *Ocimum sanctum.*

கற்பரன், வெள்ளைப் பாஷாணம், white arsenic in its native state.

கற்பரி பாஷாணம் மலைகளிலும், பாறைகளின் அடியிலும் உற்பத்தியாகும் பாஷாணம் இது வாதத்திற் குதவும், நவலோகம் நீறும். இதற்குப் பல பெயருண்டு அவையாவன— ...தம்பம், கனகத்தின் தூமம், நெடுங் குலிசம், காந்தம், கதம்பவாசி, செம்புக்குள் வேதையாக்கி, இரசித சதுக் குறளி, நிசிரியி ...ற்பதி. (போகர். நிகண்.), a kind of native arsenic said to be found at the bottom of mountains and rocks—Mineral poison. It is used for transmutation of metals and for calcining all the nine metals (நவலோகம்). It is known by different names as mentioned above.

கற்ப லவணம், சிந்து லவணம், Sindh salt;

2. கற்பம் சாப்பிடும் போது உபயோகிக்கும் கட்டுப்பு, consolidated salt used while taking medicine for rejuvenation.

கற்பலா, கல்லுப் பலா, stone-jack of the Artocarpus genus.

கற்பல்லு, குதிரைப் பல் பாஷாணம், (horse-tooth poison), a kind of native arsenic.

கற்ப வகை, சித்த நூற்களில் சொல்லியுள்ள காய கற்பத்துக் குரிய பலவிதமான மூலிகைகள். கருவூரார் நூலின்படி இவைகள் நூற்றெட்டு எனக் கொள்ளப் படும்.

"நூற்றியெட்டு கற்பமதும் அறிந்து
நுணுக்க முடனே தானும்
சேத்தியுடனே கொண்டால் சடலம்
நிலைத்து விடும் தப்பாது."

(கருவூ. வாத. காவி)

(a) மேற்கண்டபடி 108 மூலிகைகளும் கிடைப்ப தரிதாகையால் நூல் வழியாக தெரிந்த வரையில் கூறப்பட்டுள்ளது; அவை யாவன, the different kinds of medicines laid down in the Siddhars' works on Rejuvenation. According to Karuvurar, it is said that there are on the whole 108 kinds of drugs. As all the 108 (Kalpa) drugs could not be got at or traced completely in books, the following as far as they are known are given below:—

1. கடுக்காய், galnut.
2. மிளகு, pepper.
3. விட்டுணு கரந்தை, Vishnu's basil or fever plant (blue-flowered).
4. வெள்ளை விட்டுணு கரந்தை, Vishnu's basil (white-flowered).
5. சூரிய காந்திப் பூ, sun-flower.
6. ஓரிலைத் தாமரை, one-leaf lotus.
7. சீந்தில், moon-creeper.
8 நூறாண்டு வேம்பு, margosa tree of one hundred years old.
9. கரு வேம்பு, black-leaved margosa.
10. வேம்பு, margosa tree.
11. வெள்ளைத் தூதுவளை, three-lobed night-shade (white-flowered).
12. சிவனார் வேம்பு, Shiva's neem.
13. கீழா நெல்லி, niruri plant.
14. பொற்றலை, mari-gold verbesina.
15. செங் கொடி வேலி, leadwort (red-flowered).
16. கரு நெல்லி, black gooseberry.
17. வில்வப் பூ, bael flower.
18. மருதோன்றி, nail dye.
19. பலாசு, palaus tree.
20. வெண் புரசு, palaus tree (white-flowered).
21. பொற் கொன்றை, yellow-flowered cassia.
22. வெள்ளை மந்தாரை, white variegated mountain ebony.
23. வெள்ளை நீர் முள்ளி, water thorn (white-flowered).
24. செந் நாயுருவி, red Indian burr.
25. வெள் ளெருக்கு, white-flowered madar plant.
26. சிவப்புக் கள்ளி, red spurge.
27. கருந் துளசி, black basil.
28. வெண் டாமரை, white lotus.
29. குரோசாணி, Khorasan ajwaun or Persian ajwaun.
30. செங் கரந்தை, red-flowered basil.

(b) அடியிற் கண்டவை யெல்லாம் கண்டு பிடிக்க முடியாத கற்ப மூலிகைகள், the following are the unidentified rejuvenating plants viz:—

1. சாறு கரந்தை.	8. நெல்லிப் பூ.
2. சங்க நிறக் கரந்தை.	9. கரு வீழி.
3. வெண் கரந்தை.	10. சரபி நெற்றி.
4. விடத் தேர்.	11. நெல்லி முள்ளி.
5. கிளிமூக்குமாங்காய்	12. கல் பிரமி.
6. சங்கத் தூதுவளை.	13. குமுளா தொண்டை
7. பிரமி.	

See இணட்ட வகுப்பு IV.

கற்ப வாயு, கருத்தரிக்கும் போதே குழந்தைகளுக் கேற்படும் வாயு ரோகம், flatulent diseases inherited by children while in the womb; 2. பெண்களுக்குக் கருக் குழியில் உண்டாகும் வாயு ரோகம், flatulency of the uterus in a pregnant women.

கற்ப விப்புருதி, கருப் பையின் அல்லது கருப்பை வாயிலேனுண்டாகும் விப்புருதிக் கட்டி. தமிழ் வைத்தியத்தில் இது ஐந்து வித விப்புருதிகளில் ஒன்றாகக் கருதப்படும், a malignant tumour in women known as cancer or carcinoma of the womb attacking either the body or the neck of the womb. According to Tamil Medical science it is classified as one of the five kinds of cancers.

கற்பவான், கற்பம் சாப்பிட்ட யோகி அல்லது சித்தன், a Yogi or Siddha who had taken medicine for rejuvenation or longevity.

கற்ப விதி, காயகற்ப முறைகளைக் கூறும் சட்டைமுனிச் செய்த ஓர் நூல், a treatise on Rejuvenation compiled in Tamil by the Siddha, Satta Muni; 2. பெண்களின் கருப்பத்தைப் பற்றிக் கூறும் விதிகள், a book dealing with the rules of pregnancy.

கற்ப விருமல், கஞ்சா குடிப்பதனாலும், அல்லது கற்பம் சாப்பிடும் போதும் உண்டாகும் இருமல், cough due to ganjah smoke; cough experienced on taking medicine for rejuvenation.

கற்ப வெள்ளை, பெண்களுக்கு கருப்பையி லிருந்து ஒழுகும் வெள்ளை. இது சாதாரணமாய் மேக வெட்டையினாலும், பிரசவத்தினாலும், மற்றும் வேறு வித காரணங்களினாலும், கருப்பாசயம் அல்லது யோனிவாயிலைப் பற்றி ஏற்படும், a discharge in women commonly called Whites—Leucorrhoea. It may be due to several causes such as gonorrhoea, inflammation of the vagina following child-birth etc. and as such may extend to the womb or the vagina.

கற் பழித்தல், கன்னி முத்திரையைக் கெடுத்தல், deprivation of virginity by causing rupture of hymen; defloration; 2. சோரப் புணர்ச்சியினால் பெண்கள் கற்பு நிலையைக் கெடுத்தல், to commit rape on a woman thereby causing the forced surrender of her chastity—Stupration or Seduction.

கற்பற்று, உருக்குக் கல், over-burnt brick or a melted stone; 2. கிட்டக் கல், stony concretion due to over-heat in calcination.

கற்பனு நாமம், உண்டாக்கிக் கொண்ட பெயர், coined name.

கற் பாக்கினி, பப்பாளி, papaw fruit tree—Carica papaya.

கற்பாங்க தோஷம், கருக் குழியி லேற்படும் குற்றங்கள், uterus complaints or disorders.

கற்பாங்கம், கருப் பாசயம், the uterus or the womb in a female.

கற் பாசம், பஞ்சு, native cotton.

கற்பா சாகிகம், காட்டுப் புங்கு அல்லது மணிப் புங்கு, soapnut or Southern India monkey's blood—Sapindu's trifoliatus.

கற்பாசி, கல்லின் மேல் படரும் பாசி. இது மழையினா லுண்டாகும். இது மூத்திரக் கட்டை யுடைக்கும். மகோதரத்திற்கும் இதை வைத்து இடுப்பில் கட்ட நீர் இறங்கும். அன்றியும், மேக நோய்க்கும், சோகைக்கும் உபயோகப் படுத்தலாம், stone-moss i.e. moss deposited on stones owing to their moisture during the rainy season. This is prescribed for stricture of urine; in cases of abdominal dropsy, it is applied to the lower region of the back, for inducing free passage of urine. It is also used in venereal cases and for anemia; 2. இப் பாசி அதாவது பாறைகளின் மேற் காணும் புல்லுருவி இனத்தைச் சேர்ந்தது. இது வாசனைத திரவியங்களில் ஒன்றாகப் பொருந்தும். இதில் இலை இலைவிட்டு யிருக்கும். பச்சை மஞ்சள் கலந்த நிற முள்ளது. சுவர்களின் மீதும் காணலாம். இதில் சில இனங்கள் மருந்துக்கும் உபயோகப் படும், rock-moss or lichen or order of flowerless (cryptogamic) plants—Lichen rotundatus. It occurs as crust-like expansions, usually greenish yellow in colour, over stones and rocks—Parmelia perlata. Some of these lichens occur also in small branching shrub like tufts over brick walls. Some species of lichen growing on rocks are also used as medicine. See பாசி.

கற்பாசிச் சத்து, கற்பாசியின் சத்து, essence of rock-moss.

கற் பாஞ்சான், பெருங் காயம், assafoetida.

கற் பாட்டி, see கற்புடை மகள்.

கற் பாஷாணம், பாறைகளுக் கடியிற் காணப் படும் பாஷாணம், mineral poison found under the bed of rocks; 2. குக்தக பாஷாணம் a kind of native arsenic.

கற் பாதி, கல் லத்தி, hill banyan—Ficus tomentosa.

கற்பாந்த காலம், ஊழி காலத்தி னிறுதி, the end of the world; 2. யுகம் முடியும் வரை, time limited to the end of a Yuga (extending to some lakhs of years).

கற் பாந்தச்சி, இனி மூக்கு மாங்காய். இது பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை ஒரே பழம் காய்ப்பதாகச் சொல்லப் படும். இது காயசித்திக் குதவுவது, a rare kind of mango supposed to bear fruit (only one) once in twelve years. It is considered useful for rejuvenation and to secure eternal youth. See இனிமூக்கு மாங்காய்.

கற் பாம்பு, கடற் குதிரை வகையைச் சேர்ந்த ஓர் மீன், pipe-fish — Synganathus serratus.

கற்பா லவணம், see கற்ப லவணம்.

கற் பாலை, காட் டிலுப்பை, East Indian star apple—Chrysophyllum roxburghii.

கற்பாழி, மலைக் குகை, rock-cut cave; 2. மலைப் பொந்து, deep cavern in a rock.

கற் பாறை, கல்லாகச் சமைந்த பாறை, metamorphosed rock.

கற் பிசிவு,கருப் பிணிகளுக் குண்டாகும் இழுப்பு வலி. இது பிரசவத்திற்கு முன்னும், பிரசவ காலத்திலும், அதற்கு பின்னும் உண்டாகலாம். ஆனால் பிரசவித்த பின்னுண்டாகும் இசிவு கருப்பையின் கோளாறினாலும், குண்டிக்காயின் வியாதியாலும் ஏற்படும், convulsions in pregnant women which may occur before, during or after labour. Convulsions of lying-in women after labour are due to irritation in the womb or disease of the kidney.

கற்பிணி காயசித்தி, ஆபிறம், இது ஓர் காய சித்தி மூலிகை. இது வாதத்திற்கு முதவும், an unidentified plant supposed to be used in rejuvenation and for prolonging life. It is also useful in Alchemy.

கற் பிதம், நியமித்த மருந்து, a medical direction for remedies for diseases; a recipe; prescribed medicine.

கற் பிரண்டை, முப் பிரண்டை, a rare species of adamantine creeper having three facets—Vitex triangulis.

கற் பிரமியம், நீர்த்தாரை வழியாய்க் கன்று அல்லது மோரைப் போல் வெண்ணிறமாக இறங்கும் ஓர் பிரமேகம் அதாவது நீர் வியாதி, presence of chyle in the urine —Chyluria; 2. கல்லடைப்பினால் ஏற்படும் மூத்திரக் கிரிச்சரம், stricture of urine due to obstruction of stone in the urethral passage.

கற் பிரம், see கல் லாரை.

கற் பிலாச்சை, ஓர் கடல் மீன், a sea-fish of the ostracion genus known as Coffer-fish—Minous monodactylus alias Ostracion turritus.

கற் பிரகம், } see கல் லாரை.
கற் பிரம், }

கற்பு, முல்லைக் கொடி. இது கற்புக்கு அறிகுறியாகும், eared-jasmine—Jasminum auriculatum—an emblem of female chastity; 2. கற்புடைமை, chastity; conjugal fidelity; 3. தியானம், meditation.

கற்புடை மகள், தன் காதலன் சொல்லுக்கு எதிர் மறுக்காமையும், பிறிதொரு ஆண் மகனைக் கருதாமையுமான குலப் பெண், a virtuous woman pure in manner and style with implicit obedience to her husband's command, and free from all illicit sexual contamination.

கற்பு தாரகம், ஓர் மரம், satin ebony tree—Cordia latifolia.

கற்பு நிலை, பெண்கள் தங்கள் ஒழுக்கத்தை விட்டு தவறாத நிலை, the state of being pure from all contaminations and free from wandering from the path of duty or from variation in following a common or established rule and lastly from all unlawful sexual vices; generally said of women—Virgin zone.

NOTE.—Married women are considered chaste when they stick to one husband whom they treat with great reverence.

கற்புநிலை தவறல், பெண்கள் ஒழுக்கத்தைத் தவறுதல், to loose the virgin zone—Zonum solvere; becoming morally loose.

கற் புரம், பொன், gold; 2. பொன்னாங் கண்ணி, an edible plant—Illecebrum sessile.

கற் புராங்கம், ஓர் ஈ, a species of fly.

கற்புரி, முல்லை, see கற்பு.

கற்புரை, சாம்பிராணி, frankincense—Styrax benzoin.

கற் புழை, மலைக் குகை, cave, cavern. See கற்பாழி.

கற் பூ, see கல்லாரை; 2. கற ருமலரைப்பூ, see கல் தாமரை.

கற் பூசரம், நாக மலை, mountain containing lead ore.

கற் பூசோ, see கழுதை மான் புள்ளி.

கற் பூடு, பவளம், stone plant; coral—Lithophytes.

கற்பூணி, கல்லிற்குள் ஊன்றி நிற்கும் பூ, any fossil or organic remains, animal or vegetable, imbedded in rocks—Flower stone.

கற்பூரகம், சீமைக் கிச்சிலிக் கிழங்கு, camphor turmeric—Curcuma zerumbet.

கற்பூரக் கன்னணி, பொன்னுக் கன்னணி, see கற்புரம்.

கற்பூரக் கிச்சிலி, ஓர் வாசனை யுள்ள கிச்சிலி, a variety of sweet scented orange—Citrus aurantium.

கற்பூரக் கிளுவை, மலைக் கிளுவை, mountain mango; hill jujube—Protium caudatum.

கற்பூரக் கொடி, see கற்பூர வெற்றிலை.

கற்பூர சத்து, see கற்பூர சிலாசத்து.

கற்பூர சிலா சத்து, படிகாரத்தைப் போன்ற வெண்மையான கல். இது ஓர் கடைச் சரக்கு. இது பனி உற்பத்தியாகு மிடங்களில் அகப் படும், a white stone resembling alum—Crystallised foliated gypsum. It is a bazaar drug and is supposed to be available in places frequented with dew or mist.

NOTE.—It is probably Ammonia iron-alum (being conjoined with peroxide of iron) known as Salajet or Alum earth of Nepal which forms an important article of the Indian Materia Medica. (Madras Quart. Med. Journal. Vol. IV page. 239)

கற்பூர சிலா சத்து, மூன்று மாதத்திய கருப் பிண்டம், a secret name referring to a foetus, three month's old.

கற்பூர சிலாசத்து ரசம், மூன்று மாதத்திய கருப் பிண்டத்தி னின்று வடிக்கும் சாரம், essence prepared from a foetus three month's old.

கற்பூர செய நீர், கற்பூரத்தி னின்று வடிக்கும் செய நீர், a strong pungent water prepared by a secret process by exposing in night's dew camphor mixed with other ingredients.

NOTE—This should not be confounded with camphor water (Aqua camphorae) prepared ordinarily by a dispensing chemist and used chiefly as a vehicle for other medicines.

கற்பூரச் சிலை, see கற்பூர சிலா சத்து.

கற்பூரச் செடி, கற்பூர வாசனை யுள்ள ஓர் சீமைச் செடி, eucalyptus plant. See கர்ப்பூர மரம்.

கற்பூரணி, கற்றாழை, aloe — Aloe vera (officinalis).

கற்பூரத் திரவியம், see கருப்பூரத் தைலம்.

கற்பூரத் திராவகம், கற்பூரத் தைலம். இதை வாலையி லிட்டு இறக்குவதால் இப் பெயர், oil of turpentine. It is so named because it is obtained like acids by distillation.

கற்பூரத் தேகம், காயகற்ப தேகம், rejuvenated body supposed to emit smell like camphor.

கற்பூரத் தைலம், see கர்ப்பூரத் தைலம்.

கற்பூரத் தோதியம், காட்டுக் கொள்ளு, jungle or wild horse.gram—Cassia absus.

கற்பூர நாலிகம், பச்சை கற்பூர வாசனை யுள்ள பொங்கல், food prepared with rice dressed with spices, crude camphor and ghee.

கற் பூரப் புல், வாசனைப் புல். இது காவட்டம் புல், காமாட்சிப் புல், சாயப் புல், மாந்தப் புல் லெனவும் வழங்கும். இது சாதாரணமாக தோட்டங்களிலும், கொல்லைக் காடுகளிலும் விளையும். தண்டு 5-7 அடி உயரம். இலைகள் வேரண்டை அடர்த்தியா யிருக்கும்; 3-4 அடி நீளம்; இதன் பூக்கள் ஆண் பெண் என இரு வகைத்து. இவ் வாசனைப் புல் கசப்பா யிருக்கும்.

இதைச் சீதள கஷாய மிட்டு குழந்தைகளுக்குச் சீரணத்தை யுண்டாக்கவும், சன்னிபாத சுரத்திற்குங் கொடுப்ப துண்டு. இதற்கு நீரைப் பிரிக்குங் குணமுண்டு. மிளகுடன் சேர்த்துச் சூதக வலிக்கும், சூதகக் கோளாறுக்கும் கொடுக்கலாம். குடலின் சவ்வைப் பலப் படுத்தும். இதனின்று எண்ணெய் எடுத்து வாதப் பிடிப்புகளுக்கும் மேற்பூச உதவும். இலையை மோரிற் கலந்து வண்டு கடிக்குத் தடவலாம். இக் கொழுந்தைத் தேயிலைக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இதன் தண்டின் உள் குருத்தை கறிகளில் வாசனையை யுண்டாக்க சமைக்கும் போது சேர்க்கலாம். வாலையி லிட் டிறக்கியதால் இதன் எண்ணெய் பளபளப்பாயும், காரமாயும், எலுமிச்சை வாசனை பொருந்தியதாயு மிருக்கும். ஆகவே, இதை வாசனைத் திரவியங்களில் சேர்ப்ப துண்டு. இது இலங்கையி லிருந்து ஐரோப்பாவிற்கு ஏற்றுமதியாகும். இது வங்காளம், இலங்கை இவ் விடங்களில் விசேஷம். இவ் வெண்ணெய், கரு கருப்பையும், சீரண சக்தியையு முண்டாக்கி வலிப்பு முதலியவைகளைக் கண்டிக்கும். குடல் வாயுவையும், எதிர்க் களித்தலையும்

குணப் படுத்தும், வாந்திபேதிக்கு மிக்க அருமையானது. வாந்தியை நிறுத்தி நோயை வசப் படுத்தும். இவ் வெண்ணெயைத் தேங்கா யெண்ணெ யுடன் கலந்து பூச, இடுப்பு வாதம், கீல்வாயு, வாதவலி, சுளுக்கு முதலியவை குணமாகும், fragrant grass. It is also known by other names viz. Butter-milk grass, Cashmere tea, Camphor grass, Masaulay grass, Sour grass etc.—Andropogan schoenanthus. Culms 5.7 ft; leaves many near the root; 3-4 ft. long. Flowers in pairs, the one hermaphrodite and the other male. The leaf is bitter to taste.

An infusion of the fragrant leaves is given to children as an excellent stomachic and is of much use in typhoid fevers; it is also diaphoretic; mixed with pepper, it is useful in disordered menstruation and neuralgic forms of dysmenorrhoea It is a tonic to the intestinal mucous membrane. The oil prepared from them is a most valuable remedy in rheumatism when applied externally. Mixed with butter-milk, the leaves are used in cases of ringworm and when fresh and young, they are used as a substitute for tea The white centre of the leaf-culms is used to flavour curries. The oil by distillation is transparent, has extremely pungent taste and lemon-like odour and so it is much used in perfumery (as oil of Verbena). It is largely exported to Europe from Ceylon. It is found in abundance in Bengal and Ceylon. This oil is stimulent, carminative, antispasmodic and diapheretic and it is useful in flatulent and spasmodic affections of the bowels and gastric irritability. It is of great value in cholera as it allays vomiting and aids the process of reaction. Mixed with an equal quantity of cocoanut oil, it forms an excellent liniment for lumbago, chronic rheumatism, neuralgia, sprains and other painful affections.

கற்பூரப்புல் வெண்ணெய், see கர்ப்பூரப்புல் வெண்ணெய்.

கற்பூர மணி, பொன் னம்பரினும் செய்த மணி, இவ் வம்பர் தேவ தாரு முதலிய மரங்களின் பிசினி லிருந்து திரண்ட கற்பூ. இது சாதார மாய்ச் சுக்கான் பாறைகளில் அகப்படும். இது ஒடியக் கூடியத் தன்மையதாயும், இலேசாயும், பளபளப் பாயும், கெட்டியாயு மிருக்கும். மஞ்சள் நிறம் வாய்ந்தது; நொருக்கினால் வாசனையா யிருக்கும்; தேய்த்தால் மின்சார சக்தி ஏற்படும். இதனின்று தயாரித்த எண்ணெய், வலிப்பு, இசிவு இவைகளுக்குச் சிறந்தது, beads made from amber. It is a fossil of the resin yielded by trees chiefly of pines known as Devadaru etc. which grew during the cretaceous periods of geologists. It is a brittle, light, hard and transparent substance of yellow colour. When bruised, it exudes aromatic odour and when rubbed, it becomes electrical. The oil of amber prepared from this by distillation is a valuable stimulant and antispasmodic. See கர்ப்பூர மணி.

கற்பூர மணிக்காடி, அம்பர் காடி அதாவது பொன் னம்பரை வாலையி லிட்டு வடிப்பதினால் கிடைக்கும் திராவகம், succinic acid obtained from amber by distillation.

கற்பூர மணித் தைலம், அம்பர்த் தைலம், oil of amber.

கற்பூர மயம், கற்பூரத்தாற் செய்த, made of camphor; 2. அதிகமாகக் கற்பூரம் கலந்த, mostly adulterated with camphor.

கற்பூர மரம், see கருப்பூர மரம்.

கற்பூரம், see கர்ப் பூரம்; 2. பொன்னுக் கண்ணி, see கற்புரம்.

கற்பூர ரசம், ஓர் வகைக் கற்பூரக் கலவை, camphoriated mixture.

கற்பூர வகாரி, see இரச கற்பூரம்.

கற்பூர வல்லி, see கர்ப்பூர வல்லி.

கற்பூர வழுதலை, கருப்பூர வாசனை யுள்ளக் கத்தரிக் காய், a species of brinjal or egg-plant with fragrance of camphor—Solanum melongena.

கற்பூர வாழை, ஓர் வாசனை யுள்ள வாழைப் பழச் செடி, a plantain tree the fruit of which having a camphor smell.

கற்பூர வில்வம், see கர்ப்பூர வில்வம்.

கற்பூர விளக்கு, விளக்கைப் போல் உபயோகிக்கும் கிண்ணிக் கருப்பூரம். இதைக் கொளுத்தி அத்தீயினால் கட்டிய சரக்குகளைச் செந்தூர மாக்க வுபயோகிக்கலாம், camphor cast in moulds and used like lamps. By burning such camphor, consolidated volatile substances can be reduced to red-oxides

கற்பூர வுப்பு, பூரம் சேர்ந்த ஓர்வகை வேதை யுப்பு. இது சாறு வராத் தழைகளில் சாறு வரச் செய்யும், an alchemical salt prepared with bichloride of mercury as chief ingredient. It helps in extracting juice from plants devoid of moisture. See also கர்ப்பூர வுப்பு.

கற் பேதி, செருப்பீளைச் செடி, woolly caper—Achyranthes lanata.

கற் பொடி, see அன்ன பேதி.

கற் பொருத்தல், see கல்லு பொட்டன்.

கற் பொறுக்கி, கல் பொறுக்கும் ஓர் வகைப் புறா, a species of pigeon pecking stones.

கற் போற்பத்தி, கரு வுண்டாகுகை, the act of conceiving or becoming pregnant—Conception; 2. கருப்பந் தரிக்கும் விதம், the method or secret of conception or principles involved in the taking place of conception. See கர்ப் போற்பத்தி.

கற் றசை, (கல் + தசை) கடினமான சதை, muscles as hard as stone, hardened muscle; 2. வாடாத சதை, irreducible flesh.

கற்றசை வுடம்பு, இளைக்காத சரீரம், irreducible constitution.

கற்றடி விரியன், ஓர்வகை விரியன் பாம்பு, a a kind of viper-snake.

கற்றடி நாயகன், ஓர்வகைப் பூடு, an unknown plant?

கற்றலை, ஓர் வகைக் கடல் மீன். இது அடியிற் கண்டபடி பலவகைப் படும், a sea-fish, Jew-fish—Sciaena genus It consists of different species as mentioned below:—

1. கூர் கற்றலை, sharp cuttalay.
2. கருங் கற்றலை, see கத்தலை.
3. வரிக் கற்றலை, see கததலை.
4. பெருவாய்க் கற்றலை, large-mouthed cuttalay.
5. வெள்ளைக் கற்றலை, white cuttalay—Sciaena albida.
6. தாரடிக் கற்றலை, another variety.
7. ஆனைவாய்க் கற்றலை, elephant-mouthed cuttalay.

கற்றலைக் கெண்டை, ஓர்வகைக் கெண்டை மீன். இது ஆற்றுமீன் வகையைச் சேர்ந்தது, வெளுப்பும், 1 அடி நீளமும் வாய்ந்தது, a kind of carp-fish living in rivers. It is silvery and about a foot in length.

கற்று, கன்றோடு கூடிய பசு, a cow with young calf.

கற் றாமரை, see கல் தாமரை; 2. ஓர் தாழை, a kind of screw-pine.

சற்று லிகம், வேர்க் கடலை, groundnut.

கற்றாழஞ் சருகு, கற்றாழைச் செடியின் காய்ந்த இலை, dried leaves of aloe plant.

கற்றாழஞ் சாறு, சோற்றுக் கற்றாழையை இடித்துப் பிழிந் தெடுத்தச் சாறு, the juice extracted from the thick-leaved pulp-aloe.

கற்றாழஞ் சோறு, சோற்றுக் கற்றாழையின் உள்ளீடு, aloe-pulp.

கற் றாழம், see கற்றாழை.

கற்றாழம் பால், see கற்றாழஞ் சாறு; 2. பொதுவாகக் கற்றாழைச் செடியி னின்று பிழிந்த சாறு, the fresh juice extracted from the pulp of aloe in general.

கற்றாழம் போளம், பொதுவாகக் கற்றாழையி னின்று எடுக்கும் பிசின், gum-resin or myrrh spontaneously deposited in the cortical layers of the aloe leaf, C. f. கரிய போளம்.

கற்றாழை, (கல் + தாழை) எல்லா வகைக் கற்றாழைக்கும் பொதுவான பெயர். இது தென் தேசத்தில் பல விடங்களிலு முண்டு. இதன் அடித தண்டு குட்டையாயும், இலைகள் சதைப்பற் றுள்ளதாயு முள்ளன, பூக்கள் கொத்துக் கொத்தாக விருக்கும்; காய் சவ்வுத் தன்மையது. எல்லாவிதக் கற்றாழை இலைகளி னின்றும் கசப்பான பிசின் போன்ற சாறு எடுக்கலாம். இச் சாற்றுக்கு தான் 'போளம்' என்று பெயர். இது உலறந்தால் மருந்திற் குபயோகப்படும். இதில் பல வர்ணங்களுண்டு, சிலவற்றி லிருந்து நார் எடுக்கப் படும். இவைகள் பெரும்பாலும் வேலிகளில் வைத்துப் பயிராக்கப் படும். இது அடியிற் கண்டபடி அனேக வகை யாயினும், 4, 6, 17 ல் கண்ட சோற்றுக் கற்றாழையும், செங் கற்றாழையும்தான் மருந்திற்கு மிகச் சிறந்ததாகக் கருதப் படும், (stone + screw-pine) aloe genus. It is so called from its hard blades of leaves. It is a common name employed for all kinds of aloes. They are naturally found or cultivated in several parts of Southern India. Succulent plant; stem short, leaves fleshy, flowers in clusters; fruit membraneons; leaves of several species furnish a bitter resinous juice which when inspissated forms drug aloe. It is then known as

gum-resin or myrrh. They are of different colours and some of them yield a useful fibre. Most of the kinds are generally found cultivated as hedge-plant Although there are different kinds as mentioned below, those of Nos. 4, 6 & 17 are considered to have superior virtues in medicine ;—

1. *கருங் கற்றுழை*, black aloe.
2. *நார்க் கற்றுழை*, fibre aloe.
3. *இலைக் கற்றுழை*, leaf-aloe.
4. *சோற்றுக் கற்றுழை அல்லது குமரி*, Ghee aloe or Indian aloe—Aloe indica alias Aloe vera (typica).
5. *காட்டுக் கற்றுழை*, wild aloe.
6. *செங் கற்றுழை அல்லது செப்பு சோற்றுக் கற்றுழை*, hepatic aloe —Aloe vera officinalis.
7. *எருமைக் கற்றுழை*, bastard aloe —Agave vivipara.
8. *மலைக் கற்றுழை*, hill aloe —Fourcroya cantala.
9. *ஆனைக் கற்றுழை*, elephant aloe or American aloe — Agave americana.
10. *வெண் கற்றுழை*, white aloe.
11. *பேய்க் கற்றுழை*, demon aloe—Aloe ramosa.
12. *மருள் கற்றுழை*, hyacinth aloe — Aloe hyacinthoides, yields silky fibre.
13. *வரிக் கற்றுழை*, striped aloe.
14. *துலுக்கக் கற்றுழை*, Turkey aloe or Socotrine aloe — Aloe socotrina, (yields socotrine aloe).
15. *சிறு கற்றுழை*, seaside aloe or small Indian aloe — Aloe litoralis. A reddish-leaved species near East coast.
16. *சீமைக் கற்றுழை*, foreign aloe or fetid aloe—Foureroya gigantea. Gives fibres, used in arts and manufactures.
17. *செப்பு வரிக் கற்றுழை*, red-striped aloe (unknown plant). It is said to have extraordinary virtues and as such used in Alchemy and Rejuvenation. It is doubtful if this is the same variety mentioned in No. 6.
18. *நாகபடக் கற்றுழை*, snake-hood aloe.

NOTE—Various species of Agave, especially Agave americana are also popularly called aloe. Botanically, genus agave differs from genus aloe. Even from a chemical point of view, there is no analogy between the said two varieties. Again the word Aloe or Lign aloe called in latin Lignum aloe is used in ancient writings to designate a substance totally different from the modern aloe, viz. the resinous wood of Aquilaria agallocha.

கற்றுழைக் கிழங்கு, *சோற்றுக் கற்றுழஞ் செடியின் வேர்க் கிழங்கு*, root of Indian aloe.

கற்றுழைச் சருகு, see *கற்றுழஞ் சருகு*.

கற்றுழைச் சோறு, see *கற்றுழஞ் சோறு*.

கற்றுழை நாற்றம், *வியர்வையினால் சிலருக்கு உடம்பில் புளிப் புண்டாகிக் கற்றுழையைப் போல் வீசும் நாற்றம்*, strong-smelling condition of perspiration considered as a disease, common amongst some people —Osmidrosis. But Bromidrosis—which has a fetid or an offensive smell is another condition.

கற்றுழைப் பால், see *கற்றுழைச் சாறு*.

கற்றுழை மடல், *கற்றுழை யிலை*, petals of aloe.

கற் றீட்டு, (*கல்+தீட்டு*) rock alum, see *கல் மதம்*.

கற் றீண்டு, see *கழுதைத் தும்பை*.

கற் றுரிஞ்சி, see *கல் துரிஞ்சி*.

கற் றுரிஞ்சில், *கல்லுத் துரிஞ்சில் இது சுமார் 40-50 அடி உயரம், பூக்கள் வெள்ளையும் சிகப்பும் கலந்தது. பிசின் எடுக்கலாம். பட்டை சாய மிறக்க உதவும்*, stipulated acacia; stone sirissa — Albizzia stipulata alias Acacia stipulata. The tree is 40-50 ft. high ; flowers white and rose-coloured, yields gum ; bark gives a dye

கற் றுருவல், (*கல்+துருவல்=கல்லைத் துளைத்தல்*) *மூத்திரப் பையிலிருக்கும் கல்லைக் கரைத்தல்*, the process adopted to crush to pieces the stone in the bladder with an instrument—Lithotrity.

கற் றுளசி, *மலைத் துளசி*, stone basil. See *கல் துளசி*.

கற் றாசிதம், *தலைச் சுருளிப் பூடு*, Indian birthwort or Great medicine — Aristolochia indica.

கற்றூணாக்கல், கல் தூணைப் போல் உடம்பை வலுவாகச் செய்தல், to cause the body becoming strong like a stone pillar; to render the body invulnerable.

கற்றூணாதல் உடம்பு கல் தூணைப் போல் வலுவடைதல், becoming of the body sturdy and strong; body becoming hard like stone.

கற்றேக்கு, கல் தேக்கு, Carey's myrtle bloom—Careya arborea; 2, ஓர் வகைச் சிறிய தேக்கு, fish-bone tree — Dillenia bracteata.

கனகக் கதலி, பொன் னிறமான ஓர் வாழை, a species of gold-coloured plantain.

கனகக் கைரிகம், பொன்னிறமான காவி மண், a species of yellow ochre.

கனக சண்பகம், மஞ்சள் சண்பகம், yellow champauk—Michelia champaca.

கனக சபை, தலைப் பேரண்டம், human skull.

கனக சாரம், கற்பூரம், camphor; 2, வெண் காரம், borax.

கனகச் சம்பா, ஓர் வகை உயர்ந்த பொன் னிறமான சம்பா நெல், a species of golden coloured superior *chamba* paddy.

கனகச்சி, பரியங்கப் பாசி, an unidentified plant ?

கனகச் செம்பு, தங்கச் செம்பு, (*In Alchemy*) highly concentrated gold of copper colour.

கனகதம், ஒட்டகம், camel.

கனக தோரவல்லி, ஓர் வகை புட்ப ராகம், a kind of topaz.

கனகத் தாம்பிரம், காரீய மண், lead ore.

கனகத் தும்பி, பொன் வண்டு, dragon fly—Diplux elisa.

கன கந்தம், காட்டு மா, wild mango—Mangifera sylvatica.

கனக பராகம், பொன் தூள், gold dust.

கனக பலம், நேர் வாளம், true croton oil plant—Croton tigilium.

கனக புட்பி, ஓர் வகைத் தாழை, a species of Pandanus (screw-pine) with yellow blossoms.

கனகப் பிரபை, முடக் கற்றான், palsy curer —Cordiospermum helicacabum.

கனக மாளை, பொன் கட்டி, lump of gold; nugget.

கனக மிளகு, வால் மிளகு, tail pepper — Piper cubeba.

கனக மூலி, சோற்றுக் கற்றாழை, Indian pulp aloe—Aloe vera (typica) alias A. indica.

கனகம், பொன், gold; 2. மிளகு, pepper; 3. கழற்சி, bonduc nut — Caesalpinia bonducella; 4. வால் மிளகு, see கனக மிளகு; 5. தங்கம், refined gold; 6. ஊமத்தை, thorn apple; datura—Datura stramonium; 7. நெல்லிக் காய், Indian gooseberry—Phyllanthus emblica; 8. மீன் கொத்தி, common king-fisher — Halcyon leucocephalus; 9. ஓர் வகை மஞ்சட் சந்தன மரம், a species of yellow sandal wood; 10. ஓர் வகைக் கஷாயம், a kind of decoction.

கனக ரசம், அரி தாரம், orpiment.

கனக ரம்பை, ஓர் வாழை, a kind of plantain tree (Musa).

கனக வச்சிரத்தி, see கட்டுக் கொடி.

கனக வர்ணி, மஞ்சள், turmeric—Curcuma longa.

கனக வல்லி, see நருக் கொம்பு; 2. கற்பூர வல்லி, thick-leaved lavendar.

கனக வுப்பு, கல்லுப்பு, sea-salt; 2. சமை யுப்பு, common salt.

கன கனத்தல், see கண கணத்தல்.

கன கனப்பு, உடம்பின் கொதிப்பு, excessive heat of the body; 2. உடம்பு காய்தல், feverishness; 3. சன சுரம், feverishness; low fever.

கன காகுவயம், ஊமத்தை, datura—Datura stramonium.

கன காசம், கண் பாவை முழுவதும் தாக்கப் பட்டுண்டாகும் கண் ணிருள், a cataract in which the lens has become completely affected causing total blindness — Hypermature cataract; 2. வெள்ளி, silver.

கன காசவம், கருமத்தையின் பஞ்ச மூலத்தைக் கொண்டு தயாரிக்கும் ஓர்வகை ஆசவம், எனப் பட்ட ஆயுர்வேத மருந்து, an Ayurvedic fermented infusion or tincture prepared with the aid of the entire plant of black datura forming the chief ingredient.

கன காட்சி, சோதிப் புல், luminous grass.

கனகா மிர்தம், வெள்ளி, silver—Argentum; 2. பொன்னும், வெள்ளியும், gold and silver.

கன காரியம், see கன காகுவயம்.

கன காவயம், ஊமத்தை, thorn-apple — Datura stramonium ; 2. பொன் ஊமத்தை, gold-coloured datura—Datura fastuosa.

கனகி, ஊமத்தை, see கனக குவயம் ; 2. கலைச் செம்பு, which see.

கனகே, வெள்ளி லோத்திரம், the lodh tree —Symplocos racemosa.

கன கொதிப்பு, மிக்கக் கொதிப்பு, abnormally high temperature—Hyper-thermia.

கனங்கா, கோரைக் கிழங்கு, koray root—Cyperus rotundus.

கனங் காசிகம், வெப்பு அக்கி மல்லிகை, see அக்கி மல்லிகை.

கனங் காதிகம், சுவற்று முள்ளங்கி, wall-radish—Blumea aurita.

கனங் காய், மஞ்சு ரஞ்சிதம், fragrant heart's joy ; Cupid's plant—Artabotrys odorotissimus.

கனங் கொள்ளல், உடம்பு பாரித்தல், becoming corpulent ; growing stout.

கனசம், வால் மிளகு, tail pepper.

கன சாம், இரசம், mercury ; 2. நீர், water.

கன சலம், பனிக் கட்டி, ice.

கன சாரம், பச்சை கருப் பூரம், crude camphor ; 2. சீதளம், camphor cinnamomum — Cinnamomum camphora ; 2. மிகுதி யானச் சத்து, highly concentrated essence ; thick extract.

கன சிரிங்கி, ஒதிய மரம், Indian ash-tree—Odina pinnata.

கன சுரம், கடுமையான சுரம், high or excessive fever—Hyper-pyrexia.

கன சுவனம், ஓர் தடித்த தண்டுக் கீரை, a kind of thick-stalked spinach — Amaranthus polygamus.

கனச் சூடு, அதிகச் சூடு, intense heat.

கன தண்டி, கன முள்ளது, that which is heavy.

கன தந்தி, நெரிஞ்சி, caltrops thistle—Tribulus terrestris.

கன தாது, உடம்பிற் சேர்ந்த தாது, inspissated element of the body.

கன தாள், உள்ளங் கால், sole of the feet.

கனதி, பாரம், heaviness ; 2. உடம்பு பாரம், heaviness of body.

கன தூக்கம், அதிகமான தூக்கம், excess of sleep—Hyper-somnia.

கன தூரம், கற்பூரம், camphor.

கனைதி, வளைக்க முடியாதப் பொருத்து அல்லது மூட்டு, stiffness and immobility of a joint—Ancnylosis.

கனத்த கஷாயம், பெரு மூலிகைகளைக் கொண்டு வடித்த கஷாயம், a strong decoction prepared from powerful drugs.

கனத்த கருவாகு நாள், கருத் தரித்த மூன்று மாத முதல் ஆறு மாதம் வரை, period of full development of the foetus between the third and the six month.

கனத்த குரல், வெடித்த குரல், coarse voice —Rancity.

கனத்த தூமம், see கற்பரி பாஷாணம்.

கனத்த நாள், நோய்க்குக் கொண்டாட்டமான நாள் அதாவது அமாவாசை அல்லது பௌர்ணமி. இது சாதாரணமாய்க் கிரக நிலையை அநுசரித்தே வரும், a day on which any disease is said to have its supremacy *i.e.* full moon or new moon, due to the influence of planets. This is supposed to be a critical period for patients.

கனத்தப் பிரசவம், கஷ்டமானப் பிரசவம், complicated labour.

கனத்தப் பிரவம், see கருப்பு அகரம்.

கனத்தல், தலை, உடம்பு முதலியவை பாரங் கொள்ளல், to grow heavy as in head, body etc. ; 2. தடித்தல், to grow dense or thick.

கனத்த வாயு, உடம்பி லதிக வாயு கொள்ளல், having excess of flatulence.

கனத்தி, வைப் பரிதாரம், a prepared orpiment.

கனத் துருமம், நீர் முள்ளி, water thorn—Astrecantha longifolia.

கனத் தொழி லியற்றல், உடம்பி லுறுப்பு அதிகமாக தொழிற் படுதல், excessive functioning on the part of an organ — Hyperfunctioning.

கன பண்டம், கெட்டியான பண்டம், solid substance ; 2. செரிக்காத பண்டம், substance not easily digestible.

கன பதார்த்தம், see கன பண்டம்.

கன பல்லவம், முருங்கை, drumstick tree—Guilandina moringa.

கன பார்வை, தூரத்துப் பார்வை, far-sightedness—Hyperopia.

கன பித்தம், உடம்பிற் கதித்த பித்தம், excessive secretion of bile—Hypercholia.

கன புடம், மருந் தெரிப்பதற்காக வேண்டிப் போடும் பெரிய புடம். இது ஒரு கஜ உயரத் திற்குமேல், 800 எருவைக் கொண்டு போடும் புடம், சிலர் 100 எரு வென்றும் சொல்வர், a big fire that is used for calcining metals or other metallic compounds. It is said to be performed with the aid of 800 cow-dung cakes piled up to a height of three feet. According to some authors, it is a calcination set up with 100 cow-dung cakes.

கன புருஷம், வைடூரியம், a precious stone—Cat's eye.

கன புளிப்பு, மிக்கப் புளிப்பு, abnormally or excessively acid—Hyperacid.

கன பேதனிப்புச் சாதி, சாமசாதி யாகிய ஆண் சாதி நான்கு வகைகளி லொன்று, one of the four classes of men divided according to lust.

கன பேதி, அதிக பேதி, excess of purgation—Hyper-catharsis ; 2. கரைக்குந் திரவம், a fluid that dissolves or renders any substance into a liquid—Solvent.

கன போசனம், அமித வுணவு, excess in the amount of food taken — Hyper-alimentation.

கன பேதிக் குளிகை, அதிக பேதியை யுண்டாக் கும் மாத்திரை, any pill promoting purgation ; drastic purgative pill.

கனப்பாகு, see கன்னல் சர்க்கரை ; 2. அதிகத் தடிப்பான பாகு, a thick syrup.

கனப் பாண்டு, அபாயமான பாண்டு ரோகம், a serious or dangerous type of dropsy.

கனப்பு, பருமை, thickness, 2. கொழுப்பு, fattiness ; 3. பாரம், weight.

கனப்புக் காட்டல், சூடுண்டாக்கல், to heat ; to make hot.

கனப்புச் சட்டி, நெருப்புச் சட்டி, fire-pot ; 2. குளிர் காய்வதற்காக நெருப்பிடும் சட்டி, a small earthen pot filled with combustibles employed for purposes of relieving oneself from cold.

கனப் புற்று, (கனம்+புற்று), நார்த் தசை மிகுதியாக வுள்ள புற்று, cancer containing hard fibrous tissue—Hard cancer.

கனப்புப் போடல், தீ மூட்டல், to kindle fire.

கனப் பேறல், உடம்பு சூடுண்டாதல், to get increased in warmth of the body.

கனமது பலம், ஒரு பல மிடை, one palam weight.

கன முதிர்ச்சி, அளவு கடந்து பக்குவப் படல், past the stage of maturity — Hyper-maturity.

கன மூத்திரம், அதிகமான மூத்திரப் போக்கு, excessive secretion of urine — Hyper-diuresis.

கன மூலம், வேர் பருத்த செடி, thick-rooted plant.

கன மூலி, சிறந்த குணம் வாய்ந்த மூலிகைகள், potent drugs.

கனம், இரசம், mercury ; 2. மேகம், clouds ; 3. ஊசிக் காந்தம், which see ; 4. காந்தம், load-stone ; magnet ; 5 பாரம், heaviness ; 6. பருமன், thickness ; 7. செறிவு, density ; 8 மிகுதி, excessiveness ; 9. கன வடிவு, cube, as a solid ; 10. வட்டம், circle ; 11. அகலம், breadth ; 12. ஈயம், lead ; 13. பொன், gold ; 14. கோரைக் கிழங்கு, the tuberous root of koray (sedge) grass—Cyperus hexastachyus communis.

கனம் பார்த்தல், எடையைச் சோதித்தல், to examine or estimate weight ; 2. பருமனைச் சோதித்தல், to find out the thickness of a substance ; 3. அடர்த்தியைச் சோதித்தல், to find out the specific gravity of a substance.

கன யோகபதி, அரியாதீத நிலை, the highest state of the soul when it is free from corporeal entanglements.

கன யோகம், சாக்கிரம், one of the five states of the soul i.e, wakefulness.

கன ரசம், மழை நீர், rain water ; 2. கண்டக் காய்ச்சிய கஷாயம் ; thick juice or thick-sapped decoction ; 3. கற்பூரம், camphor.

கனரம், கோரைக் கிழங்கு, see கனம்.

கன ருசி, மிகுந்த ருசி, excessive taste ; 2. மின்னல், lightning ; 3. மீன், fish.

கனர் வாகம், சிறு கீரை, garden greens—Amaranthus campestris.

கனலல், எரிதல், to burn ; 2. சூடு அல்லது வெப்பங் கொள்ளல், to grow warm ; to get heated.

கன லாக்கினி, see ஆதவ ; 2. நெருப்பின் சுவாலை, the flame of fire.

கன லாக்கினி காரி, see கன லாக்கினி.

கன லாதிபம், see இந்திர கோபம்.

கனலி, கொடி வேலி, leadwort—Plumbago zeylanica; 2. சூரியன், the sun; 3. நெருப்பு, fire; 4. பன்றி, hog; 5. செவிடு வாதம், deafness; 6. இரத்த மூலம், hemorrhoid or bleeding piles; 7. கருப்புச் சித்திர மூலம், a black variety of leadwort—Plumbago genus; 8. காட்டாமணக்கு, physic nut—Jatropha gossypifolia; 9. கள்ளி, spurge—Euphorbia genus; 10. கட்பொட்டி, which see; 11. பப்ப வெட்டி, apple-bladder nut—Turpinia pomifera.

கனலுதல், எரிதல் அதாவது சூடு கொள்ளல், to be affected with heat; to glow as fire; 2. கொதித்தல், to boil as water; 3. சிவத்தல், to become red; to be inflamed; 4. சுடுதல், to burn; 5. காய்தல், to scorch.

கனலே பூதம், இரசம், mercury—Hydrargyrum (Hg).

கன லேறுதல், see கனப் பேறல்.

கனவல, காயா, bilberry tree—Medinilla heyneanum.

கன லொழுங்கு, சுவாலை, flame.

கனலோடு வாயு கலந்திடும் சூதகம், கார் முகிற் பாஷாணம், a kind of prepared arsenic.

கனல், நெருப்பு, fire; 2. உஷ்ணம், heat; 3. மூங்கில், bamboo; 4. சோதி மரம், a tree luminous in the dark (unidentified.)

கனல் நாசனி, செங் கீரை, red-flowered chickweed of the Mollugo genus.

கனல் நிறக் கல், நெருப்பு நிறத்தைப் போன்ற கல்: செம்புக் கல், ruby; 2. மாணிக்கம், a kind of ruby. See கனல் நிறம்.

கனல் நிறம், மாணிக்கம், a kind of ruby supposed to be on the head of a particular cobra.

கனல் பாலி, நெருப்பைப் போல் தொட்டால் வேகச் செய்யும் பாலையுடைய தில்லை மரம், tiger's milk tree—Excoecaria camettia alias E. Agallocha alias E. crenulata.

கனல் பூமி மரம், வைக்கிராந்த பாஷாணம், a mineral poison.

கனல் பேதி, சகஸ்திர பேதி, a mineral stone or ochre having solvent qualities.

கனல் மரம், சோதி மரம், a tree luminous in the dark supposed to be found on the mountain tops.

கனல் வாதை, பசி, hunger as in "கனல் வாதை அள்ளிப் புசித்து நான் கண் மூடி மௌனியாகி" (தாயுமானவர்).

கனல் மீறல், உடம்பின் சூடு அதிகரித்தல், having excess of heat in the body; 2. உஷ்ணம் அல்லது கொதிப்பு மிகுதல், to have excess of temperature as in fever.

கனல் மூங்கில், விஷ மூங்கில், Asiatic poison bulb or Asiatic quill—Crinum asiaticum alias C. toxicarum.

கன வஸ்திரம், பருத்த எலும்பை உடைத்தாயிருத்தல், having a thick bone.

கனவ மலம், உமரிப் பூடு, Indian salt-wort—Chenopodium album.

கன வரம், உடம்பின் சிறந்த பாகம், the best part of the body; the vital part.

கன வட்டம், குதிரை, horse.

கன வளர்த்தி, மிக்க உயரம், excessive tallness.

கன வாந்தி, அதிகமாக ஏற்படும் வாந்தி, excessive vomiting—Hypremesis.

கன வாசம், ஓர் பூசினிக் கொடி, a kind of pumpkin gourd.

கன வாயு, அதித்த வாயு, excess of flatulence.

கன விதலோ, காஞ்சிரை, see எட்டிக் கொட்டை.

கன விந்தம், see கன விரதம்.

கன வியர்வை, அதிகமாக வியர்த்தல், excessive sweating—Hyperhidrosis.

கன விரதம், நீர், water; 2. மேகச் சத்து, essence of cloud.

கன விரத்தக் கதிப்பு, உடம்பில் எப் பாகத்திலாவது இரத்தம் அதிகமாக விருத்தல், excess of blood in any part of the body—Hyperemia.

கனவிற் கூறல், ஒருவன் கோரிய காரியங்களை கனவின் மூலியமா யடைதல், receiving instructions in one's dreams of things which one desired to have.

NOTE—Siddhars and Yogis and sometimes inventive geniuses usually receive instructions in their dreams from the tutelary spirit or deity supposed to rule men. Dreams or visions of a true spiritualist furnish revelations even of one's destiny.

கன வீரம், see அலரி.

கன வீனம், பாரக் குறைவு, decrease in weight.

கனவு, தூக்கம், sleep; 2. கனா, dream; 3. மயக்கம், stupor; 4. தூக்க மயக்கம், drowsiness.

காக்காய்க் கொல்லி, பேன் கொட்டை, இது ஓர் முருக் கேறிய பூடு; இதன் பட்டை ஆழமாய் வெடித்தும், இலைகள் மாறி மாறி, வட்டமாயும், அடியில் கொஞ்சம் வெண்மையாயு மிருக்கும். மலையாளம், ஆந்திர தேசம், கொங்கணம் முதலிய இடங்களிற் பயிராகும். சாராயம் காய்ச்ச வேண்டி திருவாங் கூரிலிருந்து ஐரோப்பிய தேசங்களுக்கு இது ஏராளமாய் ஏற்றுமதி யாகிறது. இதன் காய் பட்டாணி யள விருக்கும்; முதலில் வெண்மை யாயும், பிறகு, சிகப்பும், கருப்பாயும் மாறும். உலர்ந்த காய் மிக்கக் கசப்பு, இதில் எண்ணெய்ப் பசை யுண்டு; இவ் வெண்ணெய் அதிக அளவில் மிக்க விஷத் தன்மையது, crow-killer —Cocculus indica. It is a strong, climbing and twining shrub with bark deeply cracked into fissures; leaves alternate, slightly cordate, roundish, whitish beneath. It commonly grows in Malabar, the Andhra Province and the Konkan; and is largely exported from Travancore to Europe for the manufacture of malt liquors. The bunch of fruit is of the size of a large pea and is of pure white colour, becoming red and ultimately black getting ripened. Dried berries are extremely bitter. The oil from berries is highly poisonous in excess.

காக்காய்க் கொல்லி விதை, பேன் கொட்டை விதை. இக் காயை உலர வைத்து அதினின்று விதை எடுப்பார்கள். இதைக் கடையில் விற்பதுண்டு. இதற்குப் பூச்சியை அழிக்குங் குணமுண்டு. இது தலைப் பேன்களைக் கொல்லும்; இதை ஆமணக் கெண்ணெயுடன் கலந்து சரும நோய்களுக்கும், பச்சைக் காயின் சாற்றை ஊழ்த்தசைச் சிலந்திகளுக்கும், புண்களுக்கும் உபயோகப் படுத்துவார்கள். இது மயக்கத்தை உண்டாக்குதலால், சாராயத்திற் கலப்பதற்காக வேண்டி ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி யாகும். இவ் விதையைச் சூரணித்து நெய்யோடு கலந்து களிம்பாக இரணங்களுக்குப் போடலாம். விஷத் தன்மை யுள்ளதால் உழுவுண்ட ரணங்களில் சம்பந்தப் படாமல் எச்சரிக்கையாய் உபயோகப் படுத்த வேண்டிய தவசியம்; சோற்றோடு கலந்து பறவைகள், மீன்கள் இவைகளுக்கு மயக்கத்தை உண்டாக்கிப் பிடிப்பதற்குபயோகப் படும். இதனின்று இறக்கும் தைலத்திற்கு பைக்ரோடாக்ஸின் (Picrotoxin) என்று பெயர். இது கொடிய விஷத் தன்மை யுள்ளது. ஆகவே இதை உள்ளுக்குக் கொடுக்க உதவாது, berries of crow-creeper or bitter creeper — Fructus cocculi of chemists. The seeds are extracted only from the dried berries and these are sold in bazaars. It is an insecticide destroying pediculi or lice which infest the hairs; mixed with castor-oil, it is an ointment useful in certain chronic skin-diseases. The juice of the fresh berry is applied extrnally for foul ulcers and scabies. They have an intoxicating effect and on that account they are largely exported to Europe for being used in the manufacture of malt liquors. The powdered seeds mixed with ghee forms a healing ointment for external application; but great care should be taken to avoid all abrasions or ulcerated surfaces because of the risk of absorption into the system of the poisonous principle of the seeds; mixed with moist rice, the berries are used for intoxicating birds and fishes in catching them. Oil from berries is highly poisonous in excess. Its active principle is *picrotoxin*.

NOTE—The picrotoxin is a powerful poison deeply irritating the respiratory and other centres in the medulla and thus producing violent spasmodic muscular contractions. In small doses, it is used in epilepsy, paralysis affecting the muscles of the pharynx and in headache. It checks night-sweats in phthisis. It is an antidote for morphine and chloral poisoning. The pericarp of the plant yields another dangerous alkaloid monispermine, which is never administered internally.

காக்காய்ச் சிப்பி, ஏரிப் பிண்டம், cockles in the tank. It is a heart shaped mollusc with wrinkled bi-valve shells commonly found along sandy shores.

காக்காய்ச் சோளம், பல்லாரி, கர்நூல் இவ் விடங்களில் விளையும் ஓர் வகைக் கறுப்புச் சோளம். இது சாதாரண சோளத்தை விட மிகச் சிறியது. இதை உணவாகக் கொள்வார்கள், a black variety of cholam much smaller than the ordinary ones (Indian corn) grown in Bellary, Kurnool and other Ceded districts. It is used there as staple food.

காக்காய்த் தாளி, இலங்கையி லுற்பத்தி யாகும் ஓர் வகைக் கருங் காலி, Ceylon ebony — Diospyros ebenum.

காக்காய்த் தோலி, *உள்ளங் காலிற் புறப்படும் ஓர் கொப்புளம்*, a boil on the soles of the feet. *C.f. காக்காத் தோல்.*

காக்காய்த் தோல், see *காக்காத் தோல்.*

காக்காய்ப் பாலை, *பாலை யினத்தைச் சேர்ந்த ஓர் மரம்*, cluster-flowered croton—Gelonium lanceolatum.

காக்காய்ப் புண், see *காக்காத் தோல்.*

காக்காய்ப் பூ, *தொட்டிகளில் வைத்துப் பயிராக்கும் ஓர் பூஞ் செடி. இதன் பூ சிறியது, ஊதா நிறம். இதன் கீழ் பாகம் கடித்து பளபளப்பா யிருக்கும். இலைச்சாறு வெள்ளைக்குக் கொடுக்கலாம்*, crow-flower or Sisparra creeper or Smooth torenia — Torenia asiatica. It is a herbaceous pot-plant bearing small, bell-shaped, purple-flowers, with a large bloch in the lower lobe sparkling like enamel. The juice of the leaves is a specific for gonorrhoea.

காக்காய்ப் பொன், *கஞ்சத் தகடு. இது பொன் தகட்டைப் போல விருக்கும் பித்தளைத் தகடு*, tinsel or brass leaf glittering like gold ; 2. *அப்பிரகத் தகடு*, mica in flakes.

காக்காய் மீன், *கொருக்கை மீன்*, a sea-fish —Pristipoma chrysobalian : 3. *பொன் னிறப் பிசின்*, gold-coloured gum.

காக்காய் முள், *ஆனை நெருஞ்சில்*, elephant caltrop—Pedalium murex.

காக்காய் மூக்கன், *நீண்ட மூக்கன்*, one with a long crow-like nose.

காக்காய் மூக்கி, *நீண்ட மூக் குடையவள்*, a woman with a long sharp nose like that of a crow ; 2. *கார்முகிற் பாஷாணம்*, a variety of prepared arsenic.

காக்காய் மூக்கு, *நீண்டு வளைந்த மூக்கு*, hook-nose ; 2. *கழுகைப் போன்ற வளைந்த மூக்கு*, aquiline nose ; 3. *தேங்காய் முளை*, cocoanut sprout ; 4. *கருமுகிற் பாஷாணம்*, a prepared arsonic.

காக்காய் வலி,
காக்காய் வலிப்பு, } see *காக்கை வலி.*

காக்காய் வல்லி, *ஓர் செடி*, elephant cowitch —Mucana gigantea.

காக்காய் வெருட்டி, *காக்காயைப் பார்த்து நடுங்கும் வௌவால்*, vámpire bat or crow terror. See *காகா பிசாசு.*

காக்கனம், see *காகானம்.*

காக்கினி, குருஞ் சூலி, see *காக நித்தம்.*

காக் குத்துவான், see *காக் கத்துவான்* ; 2. *சீனக் காக்கை*, China crow—Cuckatoo.

காக் குமிளம், குளிரி, water-archer — Saggitaria obtusifolia.

காக் குரட்டை, see *காக் குறட்டை.*

காக் குறட்டை, *காக்கணங் கொவ்வை*, mussell-shell creeper, see *காக்கணம்* ; 2. *கருங் காக்கணத்தி*, palmated gourd ; blue mussell-shell creeper—Clitoria ternatea.

காக்கை, *காக்காய். இது எல்லோருக்கும் தெரிந்த இந்தியப் பறவை ; கருப்பாயும் பளபளப் பாயும், கழுத்தின் பின்புறம் சாம்பல் வர்ணமாயும், சிறகு, வயிறு, வாலும், கருப்பு நீலச் சாயலும, 15-18 அங்குல நீளமு முள்ளதாயு மிருக்கும். இதை எல்லா விடங்களிலும் காணலாம் ; இதன் கூட்டில் தான் குயில் தன் முட்டைகளை பொரிக்க விடும். தனிக் காக்கையைப் பார்த்தால் அவ சகுனமாகவும், இரண்டு காக்கை புணரும் போது பார்த்தால் தோஷமாகவும் கருதப் படும். இது கத்துவதி னின்று பலாபலன் களையும், சிலவேளை மரணத்தையும் அறிய லாம். இதற்கு ஐந்து குண முண்டு, அவையா வன :—காலையில் எழுந் திருத்தல், காணாமல் புணருதல், கூடி யுண்ணல், மாலையிற் குளித் தல், கெடுதியை தன் இனத்திற்கு அறிவித் தல், ஆகிய இவைகளாம். இது அடியிற் கண்டபடி பலவகை யாயினும், பொதுவாக அத்தினி, ரூபம், மூலாவி, மாஞுலி, என நான்கு வகைச் சாதிகளாகப் பிரிக்கப்பட் டுள்ளன. நீர்க் காக்கைக் கறியினால் பாண்டு, வீக்கம், மகோதரம் முதலிய நோய்களும், அண்டங் காக்கைக் கறியினும் பித்த மேகம், காமாலை, பாண்டு முதலிய வியாதிகள் குண மாகுதலால் இவை பத்தியத்திற் குதவும்*, country crow — Corvus splendens alias Carvus doricus. It is a well known Indian bird. It is generally glossy, nape black with neck ashy ; back, wings, tail and abdomen are also black with a blue reflection ; its length varies from 15–18 inches. It is found everywhere and its nest is resorted by the cuckoo to deposit her eggs in. The sight of a single crow is considered inauspicious and the sexual connection of crows is calculated to be inauspicious. The cawing of a crow is also believed to bring n good or ill-luck and sometimes death according to the import of the cry. The five peculiarities attributed to crows are:—rising

very early in the morning; never being seen when they pair; eating together; bathing before retiring for the night; warning their companions of apparent danger. The flesh of carrion crow is useful in cases of dropsy, swelling and abdominal diseases; and that of water-crow for venereal complaints arising from bilious humours, jaundice and dropsy being prescribed by Vaidyans as diet. They come under four general classifications as noted above, according to their quality. They are of different species as mentioned below:—

1. *காக்கை*, country or common crow—Corvus splendens.
2. *அண்டங் காக்கை*, carrion crow or Indian raven — Corvus culminatus.
3. *சீனக் காக்கை*, china crow.
4. *நீர்க் காக்கை*, water crow.
5. *மணியங் காக்கை*, another variety.

காக்கை கொல்லி, see *காக்காய்க் கொல்லி*.

காக்கைக் கண்ணன், *ஒற்றைப் பார்வை யுடைய கண்ணன்*, squaint-eyed man.

காக்கைக் கரிச்சான், *ஈயத் தண்டுச் செடி*, see *ஈயத தண்டு*; 2. *கறுப்புக் கரிசலாங் கண்ணி*, black eclipse plant—Eclypta prostrata.

காக்கைச் சேல், *ஓர் வகைக் கருப்பு கெண்டை மீன்*, a fresh-water black carp; crow carp—Etroplus maculatus.

காக்கைச் சோளம், see *காக்கைச் சோளம்*.

காக்கைப் பாலை, see *காக்காய்ப் பாலை*.

காக்கைப் பொன், see *காக்காய்ப் பொன்*, 2. *பொன்னிறப் பிசின்*, gold coloured gum.

காக்கைப் பலா, *ஓர் கறுப்புப் பலா*, a black variety of jack-fruit — Caesaria esculenta,

காக்கை பாலை, see *காக வேப்பிலை*.

காக்கைப் பார்வை, *ஒற்றைப் பார்வை*, an oblique look.

காக்கைப் பித்து, *காக்கையின் பித்தம்*, the bile of crow's bladder.

காக்கைப் பீலை, *ஓர் பூடு*, false Kamela — —Casearia esculenta.

காக்கை மல்லி, *அது*, morinda root; wild ach root—Morinda tinctoria.

காக்கை மாறி, *ஓர் பூடு*, an unidentified plant.

காக்கை மூக்கு, see *காக்காய் மூக்கு*.

காக்கை வலி, *காக்காய் வலிப்பு, இதற்கு மிரிகி அல்லது அபசமார ரோகம் என்றும் பெயர். இந் நோய் நரம்பை அநுசரிப்பதால், கீச்சக் குரலுடன் உரக்கக் கூவல், அறிவும், உணர்ச்சியு மழிந்து திடீரெனப் பூமியில் விழுதல், விரல்கள் முடங்கி, பற்கள் கிட்டி, புருவம் நெரித்து, வாயிலிருந்து நுரை தள்ளல், மூச்சு முட்டல், கைகால் உதறிக் கொள்ளல் முதலிய சேஷ்டைகளுடன் பிராணன் விடுபவர்களைப் போற் குறிகளும் காணப்படும். இது மூளையைப் பற்றிய நோயாதலால். பித்தம் பரவி, சித்தம் கலங்கி, உதடு, நாசி, விழி முதலிய வெல்லாம் சேர்த்து இழுப்பதுடன் வலிப்புங் காணும். சிலர் கைகால் உதறுமலே உணர்ச்சியையும் அறிவையும் மீண்டும் பெறுவார்கள். இதற்கு மனக் கவலை, அச்சம், முட்டி மைதுனம், குடி முதலிய பல காரணங்களைச் சொல்வதுண்டு. ஆனால் உண்மையான காரணம் இன்ன தென்று தெட்டென விளங்க வில்லை இதனால் சிலருக்கு பித்து பிடிப்பது முண்டு. குடும்பத்தி லிருந்தாவது, பெற்றோரிட மிருந்தாவது தொத்ததினால் இந் நோய் ஏற்படுவ தெனசொல்லிவிட முடியாது*, epileptic fits or epilepsy. It is also known as Grand Mal. It is a disease of the nervous system characterised by the following symptoms viz:—uttering a strangled scream, loss of consciousness, dropping on the ground, fists and teeth tightly clenched, eyebrows twisted, white froth collecting on the lips, panting laboriously, arms and legs jerked backward and forward and other distressing features akin to those of a dying person. In some cases it leads to insanity. It is looked upon as the result of some local irritation of the *brain-surface* (governing the movements of the muscles), due to the deranged condition of the bilious humour prevailing the cerebral region; consequently spasms begin with the facial region such as the eyes, nose, lips, teeth etc., and then spread to arms and legs giving rise to convulsive fits. The absence of

convulsions is the chief point of difference between one variety and another.

Many are the causes ascribed to this disease such as mental worry, fear, masturbation, heavy drinking etc ; but the actual cause of true epilepsy is not known. It cannot even be said that it is due to a hereditary taint in the parents or anyone in the family as a predisposing cause to epilepsy in the offspring.

காக்கை வலிச் சுழற்சி, காக்கை வலியால் ஏற்படும் தலைச் சுழற்சி, vertigo which attends or follows an epileptic attack—Epileptic vertigo.

காக்கை வேர், see காக்கட்டான் வேர்.

காக்கை வேலி, see உத்தா மணி.

காக் கொரட்டை, see கருங் காக்கணம்.

காங் கயம், see கடுகு ரோகிணி ; 2. கில பாஷாணம், a variety of prepared arsenic.

காங்கு, பெரும் பானை, a large earthen pot ; 2. கோங்கு இது ஓர் பிசின் மரம். இதன் பூ சிறிது சிகப்பு, மலையாளத்தின் காடுகளில் விசேஷம், common caung — Hopea wightiana. It is a large resinous tree very common in the forests of Malabar and its flowers are pink.

காங் குட்டம், see கங் குட்டம்.

காங்கு ரசம், உப ரசங்களைப் பொன்னாக்கும் ஓர் வைப்பு ரச மருந்து. இது கொங்கணவர் வாத காவியத்தில் பத்து வகையாகக் கூறப்பட்ட செய ரசத்தில் ஒன்று, an alchemical mercurial compound said to transmute inferior metals into gold. It is said to be one of the ten alchemical mercurial preparations described in the Konganava works on Alchemy.

காங் கேயம், பொன், gold ; 2. கோரைக் கிழங்கு, koray root —Cyperus rotundus.

காங் கேருகம், காக பலை, sweet smelling hare-foot—Uraria lagopoides.

காங் கேருகி, ஓர் மரம், a tree ; 2 பீர்க்கு, gourd plant — Luffa acutangula.

காங்கை, வெப்பம், heat ; 2. சுத சுதப்பு, feverishness — Pyrexia.

காங்கை தணிக்கு மருந்து, உடம்பி லுறுங் காய்ச்சல், மேகம், கபாலச் சூடு, முதலிய நோய்களா லேற்படும் வெப்பத்தை ஆற்று மருந்து, the medicine which abates or allays the heat in the system due to diseases such as fever, venereal heat, brain-heat etc and tends to cool the system—Refrigerant ; 2. அழற்சியைத் தணிக்கு மருந்து, any medicine counteracting the inflammation or irritation caused by fever, etc—Antiphlogestibs.

காங்கை பூமி, உஷ்ண பூமி, hot place.

காங் கைகயன், வைப்புப் பாஷாணங்களி லொன்றாகிய கில பாஷாணம், a variety of prepered arsenic.

காங் கோதகம், வா யகன்ட பாத்திரங்களை வைத்து மழைத் துளிகளை ஆகாயத்தி லின்று நேரே பிடித்துச் சேர்த்த சுத்தமான நீர், rain water collected directly in a basin kept for the purpose.

காச கந்தம், ஓர் வேர், a species of root.

காசகம், கல், stone ; 2. காரச் சாம்பல், alkaline ashes.

காச கரம், இருமலை யுண்டாக்கக் கூடியது, that which produces cough.

காச கா மலம், ஓர் கண்ணோய், a disease of the eye.

காச குப்பி, காரச் சாம்பலினாற் செய்த குப்பி, a glass bottle made out of alkaline ashes. C.f காசி குப்பி.

கா சக்கினி, சிறு தேக்கு, beetle-killer — Cleodendron serratum.

காசக் கூறு, காசத்தின் பிரி விகை, various kinds of asthma.

காச சிலேட்டுமம், காச ரோகத்தி லெழும் கோழை அல்லது சளி, the mucous sputum or phlegm arising from asthma. C.f. சிலேட்டும காசம்.

காச சுவாசம், காச நோயிற் காணும் கஷ்ட சுவாசம், hard or difficult breath experienced by patients suffering from Asthma.

காசச் சுரம், காச நோயால் பிடிக்கப் பட்டவர்களுக் குண்டாகுங் காய்ச்சல். இதனால், இருமல், கோழை, அல்லது கபம் தள்ளல், நடுக்கம், வியர்வை, பிரமை, ஏப்பம், வாந்தி, வயிற்றில் நோய், பேதி, கொட்டாவி, தாகம், மூர்ச்சை, விக்கல், முதலியன உண்டாகும். இதைச் சய சுரத்திற் கொப்பிடலாகாது, fever of an Asthmatic patient

followed by cough. and attended with discharge of mucous or phlegm. It is marked by tremor, perspiration, bewilderment, belching, stomach-pain, purging, yawning, thirst, fatigue, hiccough etc. This should not be confounded with the fever occurring in phthisis.

காச திலகம், கருப் புப்பு, black salt.

காச துத்தம், பால் துத்தம், white-vitriol — Sulphate of zinc.

காசத் தரு, பறவைக் கொல்லிப் பூடு, a plant so called from being an enemy of birds —Hemionitis cordifolia.

காச நீர், தலையில் சேரும் ஓர் கெட்ட நீர்; இது காசத்தை யுண்டாக்கும், a morbid fluid collected in the head supposed to cause Asthma.

காச பத்திரம், பூச பத்திரி, an unidentified drug.

காச பாக யந்திரம், வாலைக் குப யோகிக்கும் மூக்கு நீண்ட பாத்திரம், a glass retort.

காச பித்தம், மிக்க இருமலினால் உடம் பிளைத்து குரல் கம்மி, வாயில நீரூறி, நெஞ்சு கனத்து, விக்கலை யுண்டாக்கு மோர் நோய். (பூலி. முனி. 800), a bilious disorder in an Asthmatic patient characterised by emaciation due to excess of cough, hoarseness of voice, excessive salivation, heaviness of chest and hiccough.

காச பிந்து, கரு விழியி லேற்படும் ஓர் வகைக் கண்ணோய், a disease of the cornea of the eye; 2. கரு விழியில் புள்ளிகளை யுண்டாக்கு மோர் கண்ணோய், a disease causing spots on the black of the eye—Phlyctenular keratitis.

காசப் புல், ஓர் பொன் னிறமான புல் வகை, a yellow or gold-coloured grass.

காச மட்க்கி, காச நோயை அதிகப் படுத்தாமற் தணிக்கு மருந்து, a medicine serving for the relief of asthma—Anti.asthmatic.

காச மர்த்தகம், பெரும் புல், a large variety of grass; 2. ஓர் பூடு, a plant — Trichosanthes dioeca.

காச மர்த்தம், இருமல் மருந்து (ஓர் வகைப் புளிப்பு), a remedy against cough (an acid preparation); 2. புளி, கடுகு கலப்பு, a mixture of tamarind and mustard.

காச மலம், கண் காசத்தி னுண்டாகும் கண் ணழுக்கு, morbid fluid or other impurities secreted by the eye, in cataract etc.

காச மல்லிகை, நத்தைச் சூரி, (lit) oyster knife; bristly button-weed—Spermacoce hispida.

காச மாதாரி, பொருமபிலி, a species of horse gram plant.

காச முறுக்கி, கருப்பு விழியில் நரம்பு சிவந்து, வெள்ளை விழியில் தசை வளர்ந்து, கீழிமை யை உறுத்தி, நீர் வடிந்து, வலி மிகுதியால் வருத்துவ துடன், பல் வலியையும், தலை வலி யையும் உண்டாக்கும் ஓர் கண்ணோய் (அக. நய. விதி), a disease of the eye marked by inflammation of the optic-nerve, morbid growths on the white of the eye, irritation of the lower lid, watery discharge, distressing pain, tooth-ache, headache etc.

காசம், இரைப்பும் இருமலோடும் கூடிய கஷ்ட மூச்சு. இது கோழை அல்லது ஈளை காசம், வரட்சி காசம் என இரு வகைத்து:—இது கன்ம நோயாயினும், வைத்திய நூற்படி பிராணவாயு கோளா றடைந்து, வாத பித்த சிலேட்டுமத்தில் கலப்பதால், கோபம் அல்லது அச்சம், மலச் சிக்கல், மிகு ஊட்டம், வாயு, குன்மம், சூலைப் பிடிப்பு, நெஞ்சின் தளர்ச்சி முதலிய குற்றங்கள் உண்டாகிற தென்று சொல்லப் படும். அன்றியும், தொண் டையி லுண்டாகும் கரகரப்பி னாலும், நரம் பிற்குக் காணும் அதிர்ச்சியாலும் இந் நோய் காணலாம். சுவாச காசத்தினால் வருந்து பவரும் பிறகு காச நோயால் பீடிக்கப் படலாம். இது பிராணாயாமத்தினால் மட்டுமே அல்லாது மற்ற எவ்வித மருந்தினாலும் எளிதில் வசப்படா தாதலால், அசாத்திய நோயென்றே கூறலாகும். இது அடியிற் கண்டபடி பல வகைப் படும், Asthma. It is only an attack attended with great difficulty in breathing, and is of a spasmodic character, occurring in paroxysms. This disease is said to be of two kinds viz. *humid* and *dry* according to the presence or absence of expectoration. Although the origin of this is traced to results of *Karmic* actions, the medical science explains it as due to the deranged condition of vital air (Prana) combining with the other three humours, thereby giving rise to the following exciting causes viz—emotions such as anger or fright, costive

bowels, heavy supper, flatulence and other forms of dyspepsia, gouty nature, emphysema of the lungs etc. Moreover, the disease is ascribed to the sudden spasmodic contraction of the wind-pipe or shock to the nervous system often ushering in attacks. Sufferers from chronic bronchitis may also show a susceptibility to Asthma. It is said that Pranayama and kindred ways of scientific breathing are the only treatment that could bring on appreciable cure and that medical treatments give only temporary relief. The following are the different kinds of Asthma:—

1. சுவாச காசம், bronchial Asthma.
2. மந்தார காசம், climatic Asthma. *C.f.* No. 13.
3. இரத்த காசம், blood-spitting asthma—Hemoptysis.
4. நீல காசம், Asthma, vomiting blue bile.
5. சிலேட்டும காசம், humid Asthma.
6. பித்த காசம், Asthma due to sexual excess
7. வாத காசம், Asthma due to humour—*Vata.*
8. பால காசம், Asthma common in juveniles.
9. விரண காசம், Asthma due to inflammation—Reflex Asthma.
10. கர்ப்ப காசம், congenital Asthma.
11. கோழை அல்லது ஈளை காசம், same as No 5.
12. தொந்த காசம், hereditary Asthma.
13. பக்க காசம், Asthma affecting intercostal muscles.
14. பக்க மந்தார காசம், a variety of No. 2.
15. சுடர் காசம், another variety.
16. பீநிச காசம், Asthma from spasmodic catarrh or coryza—Catarrhal asthma.
17. காத காசம், sexual Asthma.
18. வலி காசம், spasmodic Asthma.
19. அடைப்புக் காசம், stone Asthma.
20. குன்ம காசம், Asthma due to dyspeptic disorders.

காசம், பொதுவாக கருவிழியிலேற்படும் நோய். இதற்கு "கண் பூ" என்று சொல்வதுண்டு. இந் நோய் உண்டானவுடன் சிகிச்சை செய்ய வேண்டும். கவனியாது விட்டுவிடில், கண் முழுவதும் பரவி, பார்வை குறைந்து, கருவிழியின் நடுவில். உட்புறமிருக்கும் லிங்கம் அல்லது கண்மணி கெட்டுப் போகும். இக் கண் மணியின் படிகத் தன்மையை இழத்தலால் பார்வை குறையும். இதனும் கண்ணின் பாவை, வெள்ளை அல்லது சாம்பல் வர்ணமாகத் தோற்றும். இதைக் கருவிழித் தடிப்பென்று கருதப் படாது. இது சாதாரணமாய் வயதானவர்களைத் தாக்கும். இது மருந்து சிகிச்சைக்குப் பெரும்பாலும் இசையாத காரணம் பற்றி சஸ்திர வித்தை தான் சிறந்ததாக கருதப் படும். இவை பலவகைப் படும். அவையாவன, cataract. It is commonly understood as 'flower in the eye'. It requires immediate treatment, lest it may extend to the whole eye and consequently the vision may be impaired. So, it is a degeneration of the lens. In this, the lens assumes white or bluish-white appearance and it should not be confounded with the opacity of the cornea. It most frequently occurs in elderly people. Surgical operation is the only cure and the only course left, as it is not easily curable by medicinal application. Cataract consists of several kinds and they are:—

1. வாத காசம், cataract due to *Vatha.*
2. அந்தி காசம், cataract which makes vision clear in evening twilight.
3. வரட்சி காசம், membranous cataract.
4. பித்த காசம், cataract attended with bilious humour of the eye.
5. இழு காசம், another variety.
6. வால காசம், infantile or juvenile cataract.
7. விழி காசம், cataract affecting the eyeball.
8. குவளை காசம், cataract affecting the socket.
9. மந்த காசம்; cataract causing dullness of vision.

10. நீரோளி காசம், fluid cataract.

11. சிலேட்டும காசம், cataract due to phlegmatic causes.

12. நீல காசம், cataract in which the lens is turned blue.

13. குமரி காசம், immature cataract marked by dullness of vision due to the affection of the lens.

14. இரத்த காசம், blood cataract.

15. பிறவி காசம், congenital cataract.

16. கருங் காசம், black cataract.

காசம், சுவாச காசம் முதலியவை, a disease with pulmonic or bronchial affections; 2. கோழை, phlegm; 3. கண் பூ, cataract of the eye; 4 கற் பராசுரணம், which see; 5. (lit) இருமல், cough; 6. பொன், gold; 7. கருவிழி ரோகம், an eye disease affecting the optic-nerve — Gutta serena; 8 ஆகாயம், sky; 9. நாணல், reed; 10. காச லவணம், any purified salt of potash or soda in a crystalline state; 11. ஓர் கல், a crystal or quartz; 12. காரச் சாம்பல், alkaline ashes; 13. கண் காசம், a disease of the eye especially an affection of the optic-nerve or Gutta serena.

காசரண வாதம், (காசம் + ரணம் + வாதம்) காசம் ஏற்பட்டு நெஞ்சு புண்ணாகிக் காணும் ஓர் வாத நோய், a kind of rheumatism attributed to irritation of the mucous membrane of the bronchial tubes.

காசரம், எருமை, buffalo; 2. நாணல், reed; 3. காட்டெருமை, wild buffalo.

கா சரளி, see ஆற் றரளி.

காசரைக் கீரை, கொடிக் காசரை, a kind of edible greens. See காச் சுரை.

காச ரோகம், அதிக பெண் போகத்தினால் உடம்பில் வெப்பம் மிகுந்து, அதனால் சுவாசக் குழலின் கிளைகளுக்குள் ஒட்டிக் கொண்டிருக்கும் சிலேட்டும சவ்வுக்குக் காணும் தாபிதத்தினு லேற்படும் காச நோய். இதனால் விடும் மூச்சு கோளா றடைந்து இருமல், கோழை இவ்வகைகளை யுண்டாக்கும். இது முதல் முதல் கண்டத்தி னுட் புறத்தில் கர கரப்பையும், கீழ்முகமாக வுலாவும் வாயு மேல் நோக்கி மார்பிற் றங்கி யிரா நின்ற உதானனுடன் சேருவதால் கண்டத்தில் மணி யோசையைப் போன்ற இருமலையு முண்டாக்கும், (*In Pathology*) bronchitis or asthma due to irritation of the mucous membrane of the bronchial tubes, arising from excessive heat of the system as a result of excessive sexual indulgence. It is a disorder of respiration characterised by difficulty of breathing, cough and expectoration. It is due to spasm of the muscular tissue of the bronchial tubes caused by peripheral nervous irritation. It is said to be caused by the deranged Vayu being suddenly pressed upward and emitted through the mouth in unison with the deranged Udanan situated in the trachea, producing a peculiar metallic sound; 2. கருவிழி ரோகங்களின் ஓர் பிரிவு. இது கண்களின் மூன்றும் புரைச் சவ்வில் வாயு அனுசரிப் பதனு லேற்படும், (*In Ophthalmology*) it is one of the diseases of the black of the eye (iris) and is said to be due to one of the three humours viz, wind, prevailing in the third inner lining membrane of the said region of the eye. See also காசம்.

காசர்க் கிழங்கு, மஞ்சட் சிவப்பு நிறமான முள்ளங்கி யினத்தைச் சேர்ந்த ஓர் வகைக் கிழங்கு, a kind of yellowish red root resembling horse radish.

காச லவணம், கறுப் புப்பு, black salt; 2. தாரசத் தின்ன உப்புடன் கடுக்கா யையும் சேர்த்துப் புடமிட்டுத் தயாரிக்கு மோர் வகை பேதி யுப்பு, a saline purgative prepared by calcining fossil salt and gallnut together. It consists of muriate of soda with a small quantity of iron lime and sulphur. It is an aperient as well as a tonic.

காச லவணம், காய்ச் சுப்பு, salt of potash or soda boiled to a crystallised state. See அட்டுப்பு.

காசல் கீரை, ஓர் வகைக் கீரை, a kind of greens—Hibiscus sabdariffa.

காசல் விதை, காசல் கீரையின் விதை, seed of காசல் கீரை, which see.

காச வெளி, எழுத்தைப் பார்த்த பின் மனிதரைப் பார்த்தால் இருள் போலத் தோற்று மோர் கண்ணோய், a disease of the eye causing hazy appearance of the objects around immediately after reading.

காசறை, கஸ்தூரி; musk ; 2. கஸ்தூரி மான், musk deer ; 3. மயிருக்கிடும் வாசனைத் தைலம், scented hair-oil ; hair ointment.

காசா, காயாச் செடி. இதற்குக் காயாம் பூச் செடி, அல்லது சிறு காசா என்றும் பெயர். இச் செடி, 10-12 அடி உயரம், அடித் தண்டு குட்டையாயும், இலைகள் சிறு காம்புகள் வாய்ந்ததாயும், பூக்கள் ஊதா நிறமாயும் இருக்கும். இதன் காய்கள் 1-2 விதைக ளிருக்கும். இக் காய் துவர்ப்பு ; பழுத்த வுடன் புசிக்கலாம். இதன் இலை சாய மேற்ற உதவும். இலையின் சீத கஷாயம் அழற்சி யைப் போக்கும். இது கீழ் கண்டபடி பல வகைப் படும் :—iron wood tree—Memycylon edule. Its shrub is 10-12 ft ; stem short, leaves shortly petioled ; flowers bluish-purple ; fruit 1-2 seeded. Astringent pulpy berries are eaten when ripe. Leaves are used in imparting a deep red tinge. Leaves in infusion are anti-inflammatory. It consists of different varieties as mentioned below :—

1. சிறு காசா, small ironwood tree—Memecylon edule (typica).
2. பெருங் காசா, big variety.
3. கானகக் காசா, wild ironwood tree.
4. வெள்ளைக் காசா, narrow leaved tree berberry — Memecylon angustifolium.
5. பூங் காசா, many-flowered ironwood—Memecylon edule (ramiflora).

காசா, பொன் னாவாரை, occidental cassia—Cassia occidentalis ; 2. நாணல், reed—Saccharum spontaneum ; 3. எருமை, buffalo ; 4. மிக அழகிய, very fine or elegant.

காசாகிதம், அறைக் கீரை, round-headed amaranth—Amarantus gangeticus.

காசாகு வாகு, see கருந் தக்காளி.

காசாங்கம், காசாவின் சமூலம், the plant காசா as a whole.

காசாண்டி, வா யகண்ட செம்புப் பாத்திரம், a copper vessel with a wide mouth.

காசா நிறம், திப்பிலி மூலம், root of piper longum ; 2. ஓர் சிகப்பு நிறம், a sort of deep red colour.

காசா முந்திரிகை, கொடி முந்திரிகை, common grape vine—Vitis vinifera.

காசாம் பாரை, ஓர் கடல் மீன், a sea-fish.

காசாம் பூ, காயாவின் பூ, flower of the Kaya tree. See காசா.

காசாம் பூ வண்ணன், துரிசு, blue vitriol ; 2. காய்ச்சற் பாஷாணம், a mineral poison.

காசாம் பூ வர்ணத்தான், see காசாம் பூ வண்ணன்.

காசா யேலம், சிகப்பு ஏலம், a red variety of cardamom.

காசா லினி, பழு பாகல், buffalo carelah—Momordica hispida.

காசா விருட்சம், குடசப் பாலை, milk plant—Dregea volubilis.

காசான், see காசா.

காசான் இலை, காயா செடியின் இலை, leaves of ironwood tree—Memicylon tinctoria.

காசி, சீரகம், cumin seed ; 2. காசி குப்பி, a bottle manufactured formerly in Benares out of Fuller's earth ; 3. உவர் மண் ணுப்பு, salt extracted from Fuller's earth ; 4. சத்திர வைத்தியத்திற்கு ஆதி ஸ்ட மாகிய காசி தேசம், Benares, the seat of ancient Hindu surgery ; 5. பண்டைய காலத்து ஒரு சிறிய தாம்பிரக் காசு, a small copper coin current in ancient days ; 6. ஓர்வகைத் தாது, a kind of mineral.

காசிகம், see ஆடு தின்னாப் பாளை.

காசிகா வகத்தி, ஓர் வகைஅகத்தி, see அகத்தி.

காசிக் கட்டி, see காசு கட்டி.

காசிக் கல், see காகச் சிலை.

காசிக் கிருட்டி, ஓர் பறவை, a bird.

காசிக் கிருஷ்ணன், சீரகம், cummin seed—Cuminum cyminum ; 2. சாதி பத்திரி, mace.

காசிக் குடபதி, கழுதை, ass.

காசிக் குப்பி, பூ நீரால் செய்த காசி தேசத்துக் குப்பி. ஆதியில் இது புடமிடு வதற்கும் மருந்துகள் வைப்பதற்கும் உபயோகப் படுத் தப் பட்டது, a bottle of Benares made out of Fuller's earth. It was formerly used for calcining or preserving medicines ; 2. கங்கா சலம் அடைக்கும் குப்பி, a bottle sold at Benares for preserving the sacred water taken from the Ganges.

காசிச் சாரம், அணங்கன என்றும் உப்பு. இது உவர் மண், வெடி யுப்பு, நவாச் சாரம் இம் மூன்றையும் ஒக்கக் கூட்டி காசிக் குப்பி யிலே அடைத்து எரித் தெடுக்கப் படும், a

salt prepared from a mixture of three salts viz:—Fuller's earth, Nitre and Sal ammoniac taken in equal quantities.

காசிச் சீரம், சிறு சீரகம், cumin seed as opposed to பெருஞ் சீரகம், sweet-fennel —Foeniculum vulgare.

காசிடை, காசி நிறை யளவு, the weight of a pie (an old Indian copper coin).

காசிடை புகட்டல், காசி அளவு உள்ளுக்குச் செலுத்தல், to administer internally any thing weighing a pie as medicinal oil.

காசி தாக்கியம், கொம்புப் புடலை, common snake-gourd — Trichosanthes anguina alias Cucumis anguina.

காசித்து, காய சித்தி, rejuvenation.

காசித் தும்பை, பேய்த் தும்பை. இதன் சாறு சீதளம், தலை வலி போம், Benares toombay or Cucus — Leucas linifolia. Its fresh juice will relieve cold and headache; 2. ஓர் வகைச் செடி, balsam flower —Impaticus balsamina.

காசிப் பலிகம், கேந்திர வல்லி, an unidentified creeper.

காசிப் பன்னீர், மேன்மை பொருந்திய பன்னீர், superior rose water manufactured at Benares.

காசி மகா மரம், see கருவாகை.

காசி மீரம், குங்குமப் பூ, English saffroon— Mallota philippensis.

காசியபம், காசிப ரிஷியினால் செய்யப் பட்ட ஓர் வடமொழி ஆயுர்வேத நூல், an old treatise of Ayurveda compiled by sage Kasibar.

காசி யரளி, தங் கரளி, a species of oleander with yellow flowers.

காசி யென்ற மேரு, see காசி குப்பி.

காசி யென்ற மேருக் கேற்றல், காசிக் குப்பியில் மருந்தை அடைத்தல், to secure medicines in a Benares bottle.

காசி ரோர்த்தம், தொட்டாற் சுருங்கி, touch-me-not; 2. ஆடு தின்னாப் பாளை, which see.

காசி லவணம், see காசிச் சாரம்.

காசிலிக் கீரை, புளிச்சக் கீரை, sour greens —Hibiscus cannabinus.

காசி வாசனி, குறும் பூசினி, a kind of pumpkin.

காசினி, அறைக் கீரை, which see; 2. சிக்கிரி, வெந்த முள்ளங்கிச் செடி, Chicory; wild endive—Chicorium intybus.

காசினிக் கீரை, ஓர் செடியின் இலை. இது சிக்கிரி என்றும் வெந்த முள்ளங்கி இனம், கீரையாக உபயோகப் படும்; முள்ளங்கி யிலையைப் போன்றது. பச்சை வர்ணம், சிறு கசப்பா யிருக்கும். குளிர்ச்சியையும், கொழுமையையுந் தரும்; குழம்புக் குதவும், leaf or garden endive which is a vegetable variety of Indian endive. The leaf resembles that of Indian radish, but is a little bitter to taste. It is cooling and nutritious and used for stew. C. f. சல் லாத துக் கீரை.

காசினிக்குப் பாண்டம், பூசனிக் காய், pumpkin—Curcubita.

காசினி யிலை, காசினிக் கீரை see காசினி.

காசினி விதை, சிக்கிரி விதை. இது சீரகத்தினும் சிறியது, வெண் ணிறச் சாயல், குளிர்ச்சியை யும் வாட்சியையுந் தரும், அக்நியும், பலத் தைக் கொடுக்கும். அழற்சியைப் போக்கும். வாயுவைக் கண்டிக்கும். இதைப் பித் தாதிக்கத்திற்கு கொடுப்ப துண்டு, seed of Chicori plant — Chicoria endivia alias C. intybus. It is smaller than commin seed in size, whitish in colour and cooling. It is a tonic, demulcent, carminative and cordial. It is prescribed in bilious complaints.

காசினி வேர், சிக்கிரி வேர். இது கபில நிறம், சூடு, மாசுகளைப் போக்கும், நீரைப் பிரிக் கும்; குடலைச் சுத்தி செய்யும்; உள்ளுறுப் பின் வீக்கம் போம். பழய சுரம், தொந்த சுரம் நீக்கும்; கபத்தை வெளிப் படுத்தும், இவ் வேரை வறுத்துச் சூரணம் செய்து வாசனைக்காக காப்பித் தூளோடு சேர்ப்ப துண்டு, root of chicori. It is brown in colour; removes impurities in the system, diuretic, cleanses the bowels, allays inflammation of internal organs; cures lingering and chronic fever. It is an expectorant. Its root is roasted, powdered and mixed with coffee powder to give flavour.

காசீசம், அன்ன பேதி, green-vitriol — Iron sulphate.

காசு, காசுக் கட்டி, Indian catechu; 2. நாண யம், coin as பொன் காசு; 3. பொன், gold; 4. 28. குன்றி மணி எடை யுள்ள பழய காலத்துப் பொன் நாணயம், an ancient

gold coin equivalent to 28 grains (troy); 5. செம்புக் காசு, copper coin ; 6. கோழை, phlegm.

NOTE—In old Madras currency காசு was a small indeterminate copper coin of which ten were equal to one doody, being less than half a pie.

காசு கரப்பன், உடம்பில் தமைச்சல் ஏற்பட்டு, சொறிந்த விடத்தில் வெந்து, காசு மாதிரி தடித்துக் குருக்கள் கிளம்பும் ஓர் கரப்பன். இதைச் சிலர் பூச்சிக் கடி யென்றும், பித்தத் தடிப் பென்றும் கருதி, சிறு பிள்ளை மூத்திரத் துடன் சாம்பலையுங் கலந்து மேற் பூசுவ துண்டு. இவை சில நேரம் பொருத்து மாறி விடுவது முண்டு. இது மனக் குழப்பத்தா லேற்படுவ தெனக் கருதப் படும், eruptions of small round patches of the size of a pie resembling the effects of nettle-stings ; and the parts affected are swollen through itchiness and disappear after a short time—Urticaria or Nettle-rash. This is erroneously believed to be due to small venomous bites and so a solution of burnt ashes with child's urine is used as an external application. It is believed to be generally due to excitement.

காசு காதி, கொத்த மல்லி, coriander seed—Coriandrum sativum.

காசுக் கட்டி, காய்ச்சுக் கட்டி, அல்லது பற்கா விக் கட்டி. இது ஒரே மரத்துத் துவர்ப்புச் சரக்கு என்று சொல்லிவிட முடியாது. ஏனெனின், பல துவர்ப்புக் குண முடைய மரங்களி னின்று பிசின் அல்லது சாறு எடுத்து, அத் துடன் வாசனைத் திரவியங்களையும் சேர்த்து, தாம்பூலத்துடன் அருந்துவதற்கு ஏற்றபடி தயாரித்த சரக்குக்குத் தான் இப் பெயர். இதைக் கடைகளில் நான்கு மாதிரியாக விற்பார்கள், அவையாவன :—

1. சாதாரணமாய்த் தென் னிந்தியாவில் ஓதலை, கருங்காலி, முதலிய துவர்ப்புக் குணம் வாய்ந்த மரங்களி னின்று சாறெ டுத்துப் பிறகு அதைக் கொண்டு இச் சரக்கு தயாரிக்கப் படும். இது கறுப்பு நிறமா யிருக்கும், எளிதில் உடையக் கூடியது.

2. சிங்கப்பூர், மலாய தேசம் இவ் விடங் களில் கம்பீர் என்னும் செடியி னின்று தயா ரிக்கப் பட்டு வெளியூருக்கு ஏற்றுமதி யாகும் இதற்குக் கத்தக் காம்பு என்று பெயர். இது சப்பையா யிருக்கும். பெகு (Pegu) தேசத்தி லிருந்து வருவது தான் மிகச் சிறந்ததாகக் கருதப்படும். இது சிவப்பா யிருக்கும். இதில் துவர்ப்புச் சத்து மிகுதியா யிருக்கும்.

3. ஜாவாபாத்தி லிருந்து விசேஷமாக ஏற்றுமதி யாகும் சரக்குக்குத் தான் ஜாவா பாத் காசு கட்டி என்று பெயர். இது கட்டி யாக வெளிப் பக்கம் சாம்பல் அல்லது கபில நிறமாயும், உட் பக்கம் வெள்ளையாயு மிருக் கும். இது செடி அல்லது மரத்தி னின்று எடுப்ப தல்ல, பல துவர்ப்புப் பட்டைகளைச் சேர்த்து அதனின்று கஷாயம் இறக்கித் தயாரிக்கப் படும். இது பல அளவாக இருக் கும், துவர்க்கும். இதை யூனானி வைத்தி யர்கள் மற்றச் சரக்குகளோடு கலந்து இலிங் கச் சோர்வு முதலிய நரம்புத் தளர்ச்சிக்கு மேற் பூச்சு மருந்தாக உபயோ கிப்பார்கள்.

4. வட இந்தியாவின் நேபாளம், கல்கத்தா, பீரார் என்னும் சில பாகங்களிலிருந்து இச் சரக்கு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி யாகும். இது வெளிர் சிகப்பாய் இருக்கும்.

5. பாக்கு மரத்தி னின்று ஓர் வகைத் தயார் செய்வ துண்டு. இது தென் னிந்தி யாவின் கடைகளில் சாதாரண மாகவே கிடைக்கக் கூடியது. முற்றிய பாக்குகளை வேகவைத்து அதனின்று எடுப்பதால் இதற் கும் மற்ற வகைக்கும் வெகு வித்தியாச முண்டு. இது கறுப்பு வர்ணம், மிக்கத் துவர்ப்பு, உண்மையான காசு கட்டியைப் போலவே யிருக்கும். இதுதான் விசேஷமாய்த் தாம்பூலத்தில் அருந்துவதற் குபயோகப் படும். மருந்திற்கும் துவர்ப் புண்டாக்க உத வும். இதை வாயிலிடக் கரைந்து தொண்டைக் கம்மல், தொண்டைப் புண், குர லடைப்பு முதலியன நீங்கும். அன்றியும், இரச வாய்ப் பிடிப்பு, அல்லது இரச வேகம் விரணப் புண், பல்லீறு விரணம் இவைகளைப் போக்கும். இதன் பாவனத் திரவம் படுக்கைப் புண்ணுக் கும், கஷாயம் வைப்பதற்கும், புண்களைக் கழு வுவதற்கும், மூலைக் காம்பு விரணத்திற்கும் உபயோகிக்கலாம். இதைச் சீதபேதி, இரத் தப் போக்கு இவைகளுக்குங் கொடுக்கலாம். லிங்கப் புண்ணுக்குச் சேர்த்து களிம்பாகப் பூசலாம் ; சிலேவி துட்டி பிளாஸ்திரி யாகவும் உபயோகிக்கலாம், catechu or black catechu — Catechu nigrum of chemists. It cannot be said that it is the product of one tree as is generally believed but an inspissated lump obtained or extracted from boiling or as balls formed of a compound of superior catechu (of different trees with astringent properties) with different spices and prepared in a way suitable for chewing with betel leaves The four principal varieties that are found in the Madras market are :—

1. The dark coloured or black catechu prepared in S. India from the juice of trees Acacia catechu, Acacia catechu, sundra etc.—Catechu nigrum. It is a little black, hard and brittle.

2. The red or brown catechu is the one manufactured in Singapore and Malaya from the tree called Uncaria gambier — Catechu palladium. It is bitter in taste. Pegu catechu is the most celebrated obtained from Pegu, as it is said to contain more of tannin than other astringent extracts.

3. White catechu (grey or pale brown externally) which is not the product of any particular plant, but is supposed to be prepared from the decoction of several astringent barks — Hyderabad catechu. This is found in masses of varied size and astringent in taste. Unani doctors mix it with other drugs and prescribe as an external application for impotency and other nervous disorders.

4. Pale cutch extracted from the trees Acacia suma (white sundara) and Acacia sundara and exported from Nepaul, Calcutta, Berar and other places in N. India to Europe.

5. There is another more common variety in the bazaars of S. India, which is Areca-palm catechu. It differs wholly from Acacia catechu as it is purely obtained from the ripe nuts of betel palm which yield by boiling, a black or brown-red colouring matter, very astringent in property, resembling the true catechu mentioned above. It forms the chief ingredient in the pack intended for chewing betel-leaves and in medicine to lend to its as ringent properties. A small piece held in the mouth slowly dissolves and acts well in hoarseness, sore throats, loss of voice etc; also in cases of mercurial salivation or mercurial ptyasis, bleeding ulceration, and sponginess of the gums. The tincture is an excellent application externally for bed-sores; and the decoction is used for washing sores and cracked nipples. It is a valuable astringent in passive diarrhoea and hemorrhages. Mixed with lard, it is used as an ointment in chronic ulcerations; steeped in a lint it is used as plaster.

NOTE—This substance which was formerly known as Terra Japonica or Terra catechu was believed to be a mineral. It is now properly understood as one of the kinds of Catechu prepared in India. It is also locally used with advantage in relaxation of the uvula, hypertrophy of the tonsils and as injection in leucorrhoea and atonic menorrhagia.

காசுக் கட்டி பில்லை, காசு கட்டியை மருந்துச் சரக்குகளோடு கலந்து சக்கரை யிட்டு திரட்டிய பில்லைகள், tablets prepared by mixing catechu and other medicinal drugs with sugar—Catechu lozenges.

காசுக் கூட்டல், see காசு போடல்.

காசு சங்கம், வளைய லுப்பு, salt used in the manufacture of bangles known as glass-gall—Fel vitri.

காசு போடல், காசிடை மருந்து கூட்டல் அல்லது சேர்த்தல், adding or mixing a pie-weight of medicine.

காசு மண், காவிக் கல், red-ochre.

காசு மரி, பெருங் குமிழ், Kashmere tree — Gmelina arborea; 2. நன்னாரி, Indian sarsaparilla — Hemidesmus indicus; 3. கொடி முந்திரிகை, grape-vine — Vitis vinefera.

காசுமீர சீரகம், ஓர் வகைச் சீரகம், a variety of cumin; Kashmere cumin.

காசு மீரத் தேக்கு, வெண் தேக்கு அல்லது குமிழ மரம், white teak or Cashmere teak—Gmelina arborea; 2. சிறுங் குமிழ், small Kashmere tree — Gmelina asiatica.

காசுமீர படிகம், காசுமீரக் கல். இது உபரசச் சரக்குகளி லொன்று, a red crystal known as Kashmere stone. It is one of the 120 kinds of natural bodies contemplated in the Tamil Medical science.

காசு மீரப் பழம், காசுமீரத்தி லுற்பத்தி யாகும் செரிப் பழம், a cherry grown in Kashmere; Kashmere cherry — Parinarium tomentosa.

காசுமீரப் பிசுதா, காசுமீர தேசத்தில் உற்பத்தி யாகும் பிசுதாப் பருப்பு, kernel from the nut of Pistachis tree in Kashmere known as Kashmere pistachio — Parinarium armeniaca.

காசு மீரப் பூ, காஸ்மீர தேசத்தில் உற்பத்தியாகும் குங்குமப் பூ, Kashmere flower or English saffron grown in Kashmere. See குங்குமப் பூ.

காசு மீரம், குங்குமப் பூ, see காசுமீரப் பூ; 2 see காசு மீரக் கல்; 3. காசுமீர திராட்சை, Kashmere grape; 4. சீமை யால், elastic fig—Ficus elastica; 5. கோஷ்டம், Arabian costum—Costus speciosus.

காசுமீர ரோஜா, ஓர் வகை ரோஜாப் பூ, Kashmere rose — Rosa indica (carrea semiplena).

காசு ரண்டம், நா யுருவி, Indian burr — Achyranthes aspera.

காசுருக் கீரை, காசினிக் கீரை அல்லது புளிச்சற் கீரை, sour-greens – Hibiscus sabdariffa.

காசு லவணம், வளைய லுப்பு, see காசு சங்கம்.

காசு லவம், see காசு லவணம்.

காசை, see காயா; 2 நாணற் புல், coarse grass; reed; 3 காயாங் குலைச் செடி, which see; 4. க்ஷயரோகம், consumption.

கா சோட்டி, see எட்டி.

காச் சகம், பேய்ப் புடல், devil's gourd—Trichosanthes cucumarina alias T. laciniosa.

காச்ச கற்கீரை, முன்னைக் கீரை, leaves of the Indian headache tree—Premna integrifolia.

காச்சக் கீரை, புளிச்சைக் கீரை, Indian brown hemp—Hibiscus cannabinus.

காச்சப் பட்டை, ஓர் மரப் பட்டை, resin-seed shrub—Pittosporum tetraspermum.

காச்சம், see காச்சக் கீரை.

காச்சரக் கிழங்கு, மஞ்சள் முள்ளங்கி, carrot, see காரட் கிழங்கு.

காச் சரக்கு, see காச்சக் கீரை.

காச் சலம், தேவ தாரு, bastard sandal or red cedar — Erythroxylon monogynum.

காச்சல், see காய்ச்சல்.

காச்சற் கட்டி, see காய்ச்சற் கட்டி.

காச் சாத்திரம், காட்டாத்தி, yellow mountain ebony—Bauhinia tomentosa.

காச்சி, துவரை, dholl — Cytisus cajan; 2. சாய்ச்சு லவணம், வளைய லுப்பு, see காசு சங்கம்.

காச் சிகம், துவரை, see காச்சி.

காச்சிக் கிழங்கு, பெரு வள்ளிக் கிழங்கு, white yam — a favourite vegetable root—Dioscorea alata.

காச் சிரம், நிலப் பனைக் கிழங்கு, root of ground palm — Curculigo orchioides.

காச் சிமல, கஞ்சா இலை, Ganjah leaf. See சத்திகுரு நாக இலை.

காச்சினுர் (யுனு), யுனுனி வைத்தியத்திற் குறித்த ஓர் மரம். இதன் பட்டை, மருந்திற் குதவும், a plant referred to in the Unani, the bark of which is useful in medicine.

காச் சுப்பு, see காய்ச் சுப்பு.

காச் சுரக்கை, உலர்ந்த சுரக் குடுக்கை, dried bottle-gourd.

காச் சுரம், see காச் சுரை.

காச் சுரை, புளிச்சைக் கீரை, see காச்சக் கீரை.

காச்சு லவணம், சவட் டுப்பு, salt produced from the earth impregnated with soda; 2. துருசு குருவாகு மோர் உப்பு, (*in Alchemy*) a salt capable of converting copper sulphate or copper acetate into a quintessence salt having alchemical virtues. See காய்ச்சு லவணம்.

காச்சு லவண வுப்பு, see காச்சு லவணம்.

காச்சுவா, இற்று மல்லி, short-tubed Arabian jasmine—Jasminum sambac.

காச் சுவாதம், பிரசவ சுரம், puerperal fever.

காச் சுறுக்குக் கீரை, see காச்சக் கீரை.

காச்சை, காசா which see.

காச் சொறிக் கீரை, see காச்சக் கீரை.

காஸ் மீரக் கல், see காசுமீரக் கல்.

காஸ் மீரம், see காசு மீரம்.

காஜா, see காசா.

காஞ் சச்சம், புங்கு, pungu tree — Dalbergia arborea.

காஞ் சதம், see காஞ் சச்சம்.

காஞ்ச நாகரம், ஓர் கடைச் சரக்கு, a bazaar drug.

காஞ்சம், நீ லாஞ்சனக் கல், black antimony; 2. துருசு, blue-vitriol or copper-sulphate; copper acetate.

காஞ் சனகம், மந்தாரை, mountain ebony—Bauhinia variegata.

காஞ்சன காரிணி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water-root—Asparagus racemosus.

காஞ்சனத் தூள், பொன் மணல், gold ore; 2. பொன் ராவிய தூள், gold filings.

காஞ்சன புட்பி, மஞ்சட் பூ வுள்ள ஓர் பூடு, a plant akin to Premna spinosa with yellow flowers.

காஞ்சன மாலிதம், கொத்தவரை, cluster bean—Cyamopsis psoralioides.

காஞ்சனம், தாமரைக் கொத்து, a bunch of lotus; 2. புன்கு மரம், Indian beech—Pongamia glabra, see காஞ் சக்கம்; 3. பொன், gold; 4. மருதாணி, fragrant nail dye—Lawsonia alba; 5. தங்கம், refined gold; 6. இலிங்க பாஷாணம், which see; 7. செஞ் சந்தனம், red sandal—Pterocarpus santalinus; 8. பொன் ஊமத்தை, yellow thorn-apple—Dhatura fastuosa (typica); 9. நீர் விளா, water feronia—Limonia acidissima; 10. காட்டாத்தி, see காஞ்சினி; 11. சண்பகம், champak—Michela champaka; 12. அத்தி, fig—Ficus glomerata; 13. மஞ்சள், turmeric.

காஞ்சன குலம், சண்பகம், champak—Michelia champaca.

காஞ்சன வயம், see ஊமத்தை.

காஞ்சனி, மஞ்சள், turmeric; Indian saffron—Curcuma longa; 2. பொன் னிறம், colour of gold; 3. கோரோசனை, Indian bezoar—Bezoar orientale; 4. ஊமத்தை, datura plant—Datura stramonium; 5. காட்டாத்தி, mountain ebony—Bauhinia tomentosa; 6. கொடிப் புன்கு, hog creeper—Dalbergia scandens; 7. சண்பகம், Indian magnolia—Michelia champaca.

காஞ்சன், சாதி லிங்கம், vermilion—Bisulphuret of mercury.

காஞ்சா, கஞ்சா, Indian hemp—Cannabis sativa. See கஞ்சா.

காஞ்சான், ஓர் பூடு, tree bilberry—Memecylon talbotianum.

காஞ்சி, காடி, vinegar; 2. காவட்டம் புல், citronella—Andropogon nardus; 3. புளிப் பானம், sour drink; fermented liquor; 4. ஆற்றுப் பூவரசு, river portia—Trewia nudiflora; 5. ஆயா, entire-leaved elm—Elmus integrifolia.

காஞ்சிகம், அரிசி, வாற் கோதுமை முதலிய தானிய வகைகளி லிருந்து வடித்த காடி, a sour liquid with a vinous smell produced from the acetus fermentation of powdered rice, barley or other grains; 2. புளித்த கஞ்சி, fermented acid gruel; water of boiled rice etc. preserved in a closed pitcher for spontaneous fermentation; 3. கழு நீர், water of cleansed rice; 4. காடி, vinegar; 5. கொள்ளைப் பயிர், a destructive weed in a garden cultivation—Strigia euphrasioides.

காஞ்சிகம், உடம்பி லிருக்கும் ஓர் விதச் சத்து வஸ்து. இது புளித்தால் சர்க்கரைப் பதார்த்தம், carbo-hydrate from the liver, cartilage and other tissues. When allowed to ferment, it changes into starch—Glycogen or animal starch.

காஞ்சிக வடகம், மசாலை யிட்ட கூழ் வடகம், rice gruel seasoned with condiments; 2. புளித்த கூழும், துவையலும் சேர்த்த உணவுப் பொருள், a dish consisting of sour-gruel meal and a paste ground with several condiments.

காஞ்சிகா, எட்டி, strychnine tree—Strychnos nux vomica.

காஞ்சிகி, கொழு மிச்சை, citron; bitter orange—Citrus aurantium (bigaradia).

காஞ் சிகை, எட்டி, see காஞ்சிகா; 2. இருபாலை, small pauley—Pootranjiva roxburghii; 3. பலாசு, Bengal kino—Erythrina monosperma.

காஞ் சியம், உப தாதுக்களில் ஒன்றாகிய வெண்கலம், one of the inferior class of alloys i.e. bell-metal or bronze.

காஞ்சிரக் கொட்டை, எட்டிக் கொட்டை, nux vomica.

காஞ் சிரங்களம், மதுரம், sweetness; 2. எட்டி மரம், see காஞ்சிகா.

காஞ்சிரங் காய், எட்டிக் கொட்டை, see காஞ்சிரக் கொட்டை.

காஞ்சிரம், see காஞ்சிகா.

காஞ்சிரம் பழம், எட்டிப் பழம், fruit of the strychnine tree.

காஞ்சிரை, see காஞ்சிகா.

காஞ்சிரைப் புல் லுருவி, எட்டி மரத்தின் மேல் முளைக்கும் புல் லுருவி, a parasite on the strychnine tree.

காஞ்சிரை மேற் புல்லுருவி, see காஞ்சிரைப் புல்லுருவி.

காஞ்சினி, மஞ்சிட்டி, Indian madar; Madder of Bengal—Rubia manjista; 2. மஞ்சள், turmeric; 3. கொக்கிறகு, stork's feather; 4. சண்பகம், Indian magnolia; champak—Michelia champaca; 5. காட்டாத்தி, see காஞ்சனி.

காஞ் சீரகம், see காஞ்சொறி.

காஞ்சகம், முருங்கை, drum-stick tree — Hyperanthera moringa.

காஞ்சுரை, உலர்ந்த சுரைக்காய், dried bottle-gourd; 2. சுரைக் குடுக்கை, fruit of bottle-gourd which when dried and emptied of its contents is used by beggars as a feeder-bottle — Fakeer's bottle; 3. see காஞ்சிரை.

காஞ்சுலோ, see காஞ்சொறி

காஞ்சுனை, see காஞ்சுரை.

காஞ்சொறி, செந்தொட்டி. இது ஓர் முறுக்கேறிய கொடி. இதன் இலைகள் முசுமுசுப்பா யிருக்கும். இதன் கிளை உடம்பிற் பட்டால் கடிக்கும்; பூக்கள் சிறிது, பச்சை நிறம்; கொத்துகளாக விருக்கும்; சிலவேளை ஒரே காம்பில் அனேகம் உண்டு. மேற் பூ ஆண், அடிப் பூ பெண், வருஷ மெல்லாம் பூர்க்கும். இதன் சிறு வேருக்கு எவ்வித வாசனையும் ருசியும் இராது.

இதன் வேர் மேகத்திற்கு நல்லது. கஷாய மிட்டுச் சாப்பிட மூத்திரக் கட்டை உடைத்து நீரைப் பிரிக்கும். இதன் சாற்றைப் பசும் பாலில் சர்க்கரை யிட்டுக் கொள்ள சுரம், சொறி சிறங்கு இவைகள் போம். இதன் காயை நசுக்கிக் கட்டிகளுக்கு வைத்துக் கட்ட பழுத் துடையும். இது அடியிற் கண்டபடி பல வகைப்படும், scorpion leaf—Tragia involucrata. It is a twining creeper; leaves sharp, serrated, closely covered with hair which on touch sting like a nettle; flower small and greenish found in small clusters and sometimes several flowers found together in the same foot-stalk; upper one is male and lower one female; flowers nearly all the year; its small root has no taste or smell.

The root is medicinally an alterative restoring healthy functions to the system in old venereal complaints; the root in decoction is taken internally for curing suppression of urine; its juice mixed with cow's milk and sugar given as a drink is found useful in fevers and itch; and its fruit made into paste is applied to boils to hasten suppuration. This plant consists of different varieties viz:

1. எருமைக் காஞ்சொறி, climbing nettle—Tragia involucrata (typica)
2. பூனைக் காஞ்சொறி, climb nettle mercury —Tragia involucrata (cannabina).
3. வெள்ளைக் காஞ்சொறி, white climbing nettle — Tragia involucrata (angustifolium).
4. சிறு காஞ்சொறி, small climbing nettle—Tragia cannabina. Root is medicinally diaphoretic and alterative.
5. பெருங் காஞ் சொறி, large climbing nettle.
6. கறுப்புக் காஞ்சொறி, black climbing nettle—Tragia involucrata (muller).
7. எட்டிக் காஞ் சொறி, another variety obviously bitter.

காஞ்சொறி யொற்றல், காஞ்சொறிப் பூடை உடம்பிற் படும்படிச் செய்து தினவை யுண் டாக்கல், touching one with a nettle plant to cause itching sensation.

காஞ் சோன்றி, see காஞ் சொறி.

காடகம், காட்டு முள்ளி, large nail-dye — Barleria genus.

காட சத்திரி, பழ முண்ணிப் பாலை, edible paulay—Mimusops binectaria.

காடச் சரம், ஓர் நீர் ரோகம், a urinary disease.

காடம், தலையின் பின்புறம், the back part of the neck—Occiput; 2. பிடரி, nape of the neck.

காடம் பரம், பிரைக் குத்திய பாலின் மேற் படரும் ஆடை, the surface or skin of coagulated milk; 2. கடப்பம் பூவி னின்று வாலை யைக் கொண்டு இறக்கிய ஓர் மது, a spirituous liqour distilled from the flowers of Kadamba; 3. கடப்ப மரம் (வெள்ளை) நன்றாகப் பூர்த்து, தேன் பொருந்திய காலத்து, அம் மரத்தின் குழிகளிற் தங்கி நிற்கும் மழைத் தண்ணீர், the rain water which collects in the hollow spots of the tree (Nauclea Kadamba) when the flowers are in perfection and are found impregnated with honey; 4 மது, a spirituous liquor in general; 5. யானை மதம், the fluid which issues from the temples of an elephant in rut; 6. கோலம், குயில், Indian cuckoo; preaching crow.

காடம் பூ, மஞ்சள் பூ பூர்க்கும் ஓர் செடி, hairy yellow-flowered laurustinus — Viburnum hebanthum.

காடன், ஓர் மீன், a species of fish.

காடாக்கினி, மருந்தெரிப்பதற்காக இரண்டு விரற் கனமுள்ள 4 அல்லது 5 விறகால் எரிக்கும் பெரு நெருப்பு, a big fire used for preparing medicines and got up with 4 or 5 pieces of fuel, each of 2 fingers' width—Conflagration.

காடாற்று முன்னெலும்பு, மயானத்தில் பிணஞ் சுட்ட வெலும்பு, unburnt bones left after the cremation of a dead body.

காஷாய நாதாந்தி, செம்பு, copper.

காஷாயம், மஞ்சட் சிகப்பு வஸ்திரம், orange-red-coloured cloth worn by mendicants (sanyasis); 2. ஓர் மருந்து, see கஷாயம்; 3. கூழ், rice-gruel.

காடி, புளித்த நீர். இதற்குப் பொதுவாகக் காடி என்று பெயர். இனிய பழ வர்க்கங்கள், அரிசி வகைகள், சர்க்கரை, தேன் முதலிய வஸ்துக்களைப் புளிக்க வைத்து அவைகளினின்று இறக்கும் நீர். இது ஊதா நிறமாயும், புளிப்பாயும், வாசனையாயு மிருக்கும். இது குளிர்ச்சியை யுண்டாக்கி, வயிற்றுக் கிருமிகளைப் போக்கும். இதைச் சர்க்கரை யோடு சேர்த்து சுரத்திற் குபயோகிக்க, தாபத்தைக் குறைத்து குளிர்ச்சியைத் தரும். இதை தீச் சுட்ட புண், கொதிநீர்ப் புண், வழுவுண்ட தோல், இவைகளின் மேற் பூச குணமுண்டு. சாரவுப்பு விஷங்களிலும், மயக்கத்தை யுண்டாக்கும் மற்ற விஷங்களிலுங் கொடுக்க குணமுண்டாகும். ஐரோப்பாவில் கோதுமையைப் புளிக்க வைத்தும், திராட்சை ரசத்தினின்றும் காடி எடுப்பதுண்டு. இக்காடி, ஊழ்த்தசை ரணம், மார்க் கட்டி, சுளுக்கு முதலியவைகளுக்கு உபயோகப் படும். நமது நாட்டில் பனங் கள், தென்னங் கள் இவைகளிலும், கருப்பஞ் சாற்றி னின்றும் காடி எடுப்பார்கள். உஷ்ண தேசத்தில் காடி வெகு சீக்கிரத்தில் பக்குவ மடையும். இது ஊறுகாய், சட்னி இவைகளுக்கும், கடினமான வேகாத பதார்த்தங்களை சீக்கிரத்தில் வேக வைக்கவும் உபயோகப் படும். அன்றியும், சுளுக்கு, தலைநோய், விஷக் கடி, முதலியவைகளுக்கு வலி யுள்ள இடங்களில் கந்தையில் நனைத்துப்போட குணமாகும். சூதக சம்பந்தத்திலும், மூக்கில் ஏற்படும் இரத்த வொழுக் கிற்கும் மேற்கண்ட மாதிரி செய்யலாம். சுடுகஞ்சி யுடன் சேர்த்துக் குடிக்க, வியர்வையைத் தரும். கடலைப் புளிப்புக் காடி தான் மருந்திற்கு மிக்க விசேஷமான தெனக் கருதப் படும், Vinegar. Acetum of chemists. An impure acetic acid made by the acetous fermentation of sweet fruits, rice, toddy, sugar, honey etc. It is purple in colour, sour in taste with a sort of flavour. It is cooling and is a vermifuge; mixed with sugar, it is a refrigerant and as such used in fevers. It serves as an excellent external application in cases of burns, scalds, abrasions etc. It is found useful in alkaline and other kinds of poisons promoting giddiness. In Europe, it is prepared from malt or unmalted grains such as wheat, barley etc., by acetous fermentation. This acid liquid is applied to gangrene, incipient mammary abscess, sprain and other local affections. In India, vinegar is largely prepared from the toddy or the sacchrine juice of the Palmyra and Cocoanut palm as also from the juice of sugar-cane. Domestically, it is useful for pickles as a preservative and for baking hard substances easily. When soaked in lint, it serves as an excellent application in sprains, head-ache and poisonous bites. It is used also like-wise in cases of menstrual complaints and bleeding from the nostrils. Bengal gram vinegar is considered an important and a common menstruum for medical purposes. The following are different varieties and each kind is named after the substance from which it is extracted:—

1. பழக் காடி, fruit vinegar.
2. அரிசிக் காடி, grain vinegar.
3. கள்ளுக் காடி, toddy vinegar.
4. சர்க்கரைக் காடி, sugar vinegar.
5. கடலைக் காடி(புளிப்பு), bengal gram vinegar.
6. ஈச்சங் காடி, date vinegar.
7. பனங் காடி, palm vinegar.
8. தென்னங் காடி, cocoanut vinegar.
9. திராட்சைக் காடி, grape vinegar.
10. கஞ்சிக் காடி, rice vinegar.
11. ஆறுமாதக் காடி, six-months' vinegar.
12. சீமைக் காடி, malt vinegar.

காடி, ஊறுகாய், pickle; 2 கஞ்சி, gruel; 3. கள், toddy; 4. நெய், ghee; 5. மூளை, the brain; 6. புளித்த நீர், any sour-water or liquid.

காடி கட்டுன் டழுவாள், மா விலிங்கம், garlic pear—Crataeva religiosa.

காடிக்காரத் தழும்பு, காடிக் காரத்தை அடிக்கடி உபயோகிப்பதனுல் சதைக் கறுத்து ஏற்படும் தழும்பு, discoloration of the skin caused by prolonged or frequent application of nitrate of silver—Argyria.

காடிக் காரம், ஆயக் கல், stick of lunar caustic—Argenti nitras. It is an impure nitrate of silver; 2. நெருப்புக் கல், fire-stone—Lapes infernalis.

காடிக் காரம், ஆங்கிலேய முறைப்படி, இம் மருந்து வெடியுப்பு திராவகத்தில் வெள்ளியைக் கரையும்படிச் செய்வதா லுண்டாகும். இதைச் சிறிய அளவில் தீபக மருந்தாகவும், வலியைப் போக்கவும் உபயோகிக்கலாம்; பெருவளவில் சதையை அரிக்கக் கூடிய விஷத் தன்மையது. இதை அதிசாரம், சீதபேதி, அசீரணத்தோடு கூடிய குன்ம நோய், வாந்தி பேதி, வயிற்றுப் புண், வலிப்பு, காக்கை வலி, கக்குவான், காசம், சூதகத் தலைவலி, இரச வேகம், முதலிய நோய்களுக்கு உள்ளுக்குப் பிரயோகிக்கலாம். கீல் வாயு, அக்கிப் படுவன், மேகப் புற்று ரோகம், அழுத் தசை விரணங்கள் இவைகளுக்கு மேற் பூச்சு மருந்தாக உபயோகப் படும். அன்றியும், வாய்ப் புண், சரும நோய் இவைகளுக்கும் பூசலாம். மேலும், தண்ணீரிற் கரைத்து வைசூரியில் குழிவிழாத படிக்கும், கண் ணோய்க்குக் கலிக்கமாகவும், விஷமேறிய இரணங்களுக்கும், விஷக் கடிக்கும் தீய்ந்து போகும்படி தடவ வுதவும், Nitrate of silver ($AgNo_3$). In Allopathic science, it is obtained by dissolving silver in nitric acid. In small doses, it is a tonic, an anti-spasmodic and *a sedative*. In large doses, it is a corrosive poison. The prominent diseases in which it is administered internally with advantage are—advance stages of diarrhoea, dysentery, dyspepsia attended with gastralgia, cholera, ulceration of the stomach, chorea, epilepsy, hooping cough, spasmodic asthma, hysterical headaches and mercurial palsy. Externally, it is a valuable application in arthritis, erysipelas, chancres, indolent, foul and phagedenic ulcers. Locally, it is applied in cases of the *ulceration of* the mouth and skin-diseases. It is also applied as a solution in small-pox to prevent 'pitting'; and as a collyrium in various forms of ophthalmia and in poisonous wounds and bites caused by *rabid animals for cauterising the surface.*

NOTE.—It is a powerful astringent and an escharotic of moderate strength. It stains the skin and other tissues when applied undiluted. The bazaar article is impure. It is occasionally prepared by Hakeems and Vaidyans. It is the strongest and the most manageable caustic known.

காடிக் கூழ், புளிக்க வைத்தக் கூழ், sour pap.

காடிச் சத்து, புளித்தக் காடியை வாலையி லிட்டு இறக்கப்படும் போதை யுள்ள சாரம் அல்லது சத்து, the intoxicating principle obtained *from fermented liquors*—Alcohol.

காடிச் செய நீர், இள நீரையும், இள வழுக்கையையும் சேர்த்துக் கரைத்துத் தெளிவித்து, அத்துடன் சுண்ணாம்பு நீர் விட்டுக் கலக்கி, சூரிய புடத்தில் வைத்துப் பிறகு தெளி வித்து வடித்த காடி. இது செந்தூரம் செய்ய வுதவும், a strong pungent fermented liquid filtered after exposing to the sun's *rays* a *solution of lime* water and the coconut extract obtained from a mixture of tender coconut and its water. This is used for preparing Red oxides.

காடிச் சோறு, புளித்த கஞ்சி, sour gruel; 2. புளித்த கஞ்சியினின்று எடுக்கப்படும் சோறு. இச் சோற்றை யரைத்து கட்டிகளுக்குப் பூச பழுக்கும், rice taken out of sour conji. This rice when made into a paste and applied to abscess, is said to ripen it; 3. சொண்டி சோறு. இதைத் திருட்டுத் தனமாக தயாரிப்பார்கள். '*Sonti soru*' an intoxicating liquor extracted from the fermentation of boiled rice. This is a product of illicit manufacture.

காடித் தாய், காடிக் காளி, mother of vinegar.

காடித் தெளி நீர், நோய்களுக்குக் கொடுக்கவும், புடம் போடுவதற்காக வேண்டி மருந்துகளை அரைப்பதற்கும் உபயோகப் படுத்த வேண்டி தெளியவைத்த காடிநீர். இது கருங் குருவை யரிசியி லின்று போகர் நூலின் முறைப்படித் தயாரித்த பழச் சாறு என்னும் ஆறு மாதத்தியக் காடி, vinegar from black *Kuruvai*, or dark-red paddy allowed to ferment in the summer after exposure to the sun and then filtered after six months according to the process laid down in Bogar's works. It is administered internally as well as ex-

ternally for various diseases and chiefly for grinding medicines with, for purposes of calcination. See *காடி*.

காடித் தேன், *தேனி லின்று தயாரித்த காடி*, vinegar prepared from honey; 2. *காடியையும், தேனையும் கலந்து, கோழையை அகற்றுவதற்காக அல்லது அழற்சியைப் போக்க உபயோகிக்கப்படு மோர் கலவை மருந்து*, a medicated mixture of vinegar and honey used as an expectorant or demulcent—Oxymel.

காடி நீர், see *காடி*, 2. *கழு நீரை வெயிலில் வைத்து வடித் தெடுக்கப் படும் புளித்தத் தண்ணீர்*, rice-water fermented by exposing it to the Sun.

காடிப் பால், *பனங் கள்*, palmyra toddy.

காடிப் புளி, *வியர்வையி லுள்ள ஓர் வகைப் புளிப்பு*, the sour substance found in sweat—Cholesterin.

காடி மூலி, *பருத்தி*, cotton—Bombax malabaricum.

காடி யிலை, *புளித்த இலை அதாவது புளிச்சைக் கீரை*, see *காச்சக் கீரை*.

காடிவல, *கல்லுமா*, kidney plum — Pygeum gardneri.

காடி வகை, *பல வகைக் காடி*, the different varieties of vinegar—Aceta. See *காடி*.

காடி வைப்பு, *காடி தயாரிக்கும் விதம்*, the process in the manufacture or preparation of vinegar. See *காடித் தெளி நீர்*.

காடினம், *மூளையின் முன்பக்கத்து கூச்சுவின் அண்ட வடிவு*, oval prominences at the sides of the anterior pyramids of the oblongata—Olivery body.

காடீசம், *வெங் காரம்*, borax or biborate of soda—Soda biborous.

காடு, *மரம், புதர், பயிர், தாவர வர்க்கங்கள் அடர்ந்த வனம்*, any tract overrun with trees, plants, and bushes and overspread with wild vegetation; 2. *காட்டில் உற்பத்தியாகும் பூண்டு, விலங்கு, பறவை முதலியவைகளைக் குறிக்க வந்த உப சர்க்கம்*, the first term or the syllable in a word referring to or indicating plants, animals, birds etc., born or originated in forests as in *காட்டுப் பருத்தி*, (forest cotton), *காட்டுப் பன்றி*, (wild hog), *காட்டுக்கோழி*, (wild fowl) 3. *மிகுதி*, excess; 4. *அடர்த்தி அல்லது நெருக்கம்*, thickness or density; 5. *மொழிக்கு இறுதியாக வரும் சொல்*, as in *இடு காடு அல்லது சுடு காடு*, burial or cremation ground; 6. *தருசுக் காடு*, an unagricultural tract.

காடு, *ஆரணியம். இது வளப்பம், இடம், தன்மை, உபயோகம் இவைகளைக் கருதி, அடியிற் கண்டபடி பல வகையாகக் கொள்ளப் படும்*, forest or jungle which consists of different kinds, according to its fertility, situation, nature, state etc. as mentioned below:—

1. *வெள்ளக் காடு*, forest frequented by inundations.
2. *புன் செய் காடு*, agricultural tract of dry lands.
3. *வயற் காடு*, agricultural tract of wet lands.
4. *மலைக் காடு*, mountainous tract.
5. *கரம்பைக்காடு*, uncultivated tract.
6. *பருத்திக் காடு*, cotton forest.
7. *புற் காடு*, grass jungle.
8. *மாங் காடு*, mango forest.
9. *புழுதிக் காடு*, marshy tract.
10. *மணற் காடு*, sandy tract.
11. *புகைக் காடு*, forest on fire.
12. *புதர்க் காடு*, bushy forest.
13. *இடு காடு அல்லது சவக் காடு*, burial ground.
14. *சுடு காடு*, cremation ground.
15. *பிணக் காடு*, same as Nos. 1 & 2.

காடுகி, *சிற் றெழுத்தாணிப் பூண்டு*, a small variety of style-plant. See *எழுத்தாணிப் பூண்டு*.

காடு கிழாள் வெயில், *மாலையில் தோன்றும் மஞ்சள் வெயில்*, refracted yellow-light found during sunset.

காடு படுதல், *காட்டில் விளைதல்*, forest-born; 2. *வனத்தில் தோன்றுதல்*, being found in the forest; 3. *அபரிமிதமாக விளைதல்*, growing in abundance.

காடுபடு திரவியம், *காட்டில் விளையும் பொருள்கள், அவையாவன:—அரக்கு, கருந் தினை, தேன், நாவி, மயிற் பீலி, தேன் கூடு முதலியன*, forest-produce such as sealing-wax, black millet, honey, aconite, peacock's feather, bee-hive etc.

காடேறுதல், *தவசி முதலியோர் வனம் புகுதல்*, entering into forest life,—as of mendicants; 2. *சாகும் பொழுது தெளிவுண்டாதல்*, false apprehension of relief or cure from disease, just prior to or on the approach of death.

காடை, ஓர் சிறு பறவை. இது பலவகைப் படும், a small bird known as quail—Coturnix. The following are the different varieties:—

1. பெரிய காடை, large batair or European quail—Coturnix communis.
2. மாரி காடை, rain quail — Coturnix coromandelica.
3. கருங் காடை, black-breasted quail — Turnix taigoor.
4. சிறு காடை, common quail — Coturnix communis alias Tetrao coturnix.
5. புதர்க் காடை, jungle bush quail—Coturnix penta.
6. செங் காடை, rock bush quail — *Coturnix argoonda.*
7. சிறு காடை, painted bush quail—Perdicula rasores.
8. குறும்புள், *francoline partridge* — Tetrao coturnix.

The different varieties sold in the Madras market are:—

1. கட்டிக் காடை, Indian roller.
2. காமதாரிக் காடை, a quail with coloured forehead.
3. யானை வலி செய், a species of quail supposed to give one an elephant's strength.
4. செங் காடை, see No. 6.
5. புரான் காடை, another variety.

NOTE—மணற் காடை, though termed as காடை, it is really a species of frog buried in the sands of sea-shores, living by absorbing the essence of gold in the sand and as such, it is useful in Alchemy.

காடைக் கண்ணி, கம்பந்தினைக் கண்ணி பயிர். இது காடையின் கண்ணைப் போன்ற ஓர் வகை வரகு, Indian oats or common millet so called from its resemblance to quail's eyes—Panicum miliaceum *C.f.* காடைக் கழுத்தன்.

காடைக் கழுத்தன், காடையின் கழுத்து நிறத்தைப் போன்ற ஓர் வகை நெல். இது நீள மான நெல். இந்த மாதத்தில் அறுக்கலாம், quail-necked paddy. It is a long and slender paddy maturing in five or six months.

காடைக் கழுத்தி, முன்னை மரம், Indian headache tree—Premna integrifolia.

காடைச் சம்பா, ஓர் வகைச் சம்பா நெல், a kind of chamba paddy.

காடைச் சாறு, காடை இறைச்சியி னின்று இறக்கிய சாறு அல்லது ரசம். இதுவே காடை சூப் பெனவழங்கும். இதனால் இளைத்த உடம்பு பருக்கும், பத்தியமாய்க் கொடுப்பர்கள் தேறுவர், essence of the flesh of quail boiled with various other ingredients — Quail soup. It is a liquid food prescribed by Vaidyans for gradual recovery of emaciated patients or those in a state of convalescence.

காடைப் புடம், காடை உயர மூன்று அதாவது மூன்று வருளில் போடும் புடம், a small fire with 3 cow dung cakes used for calcining oxidising metals and metallic compounds; 2. ஒருப் புடம், calcination with a single dried cow-dung cake.

NOTE.—The different authors of Tamil Medical Science, vary their proportions in regard to the degree of fire required for their processes and some fix it as only one cow-dung cake, while others as two, each weighing about 5 palams in weight.

காடை மீன், ஓர் வெள்ளைமையான சிறு கடல் மீன், a small whitish or silvery sea-fish.

காட்சம், சேராங்க பாஷாணம், a variety of arsenic.

காட்சி, தோற்றப் பொருள், object of sight; 2. பிரத்தியட்ச தரிசனம், visible appearance; 2. பார்த்தல், sight; view; 3. தன்மை, nature; 4. அழகு, beauty; 5. மாத விடாய், menstrual blood; 6. கண்ணின் பலவிதப் பார்வை அதாவது இரட்டைக் காண்டல், திரியக் காண்டல், தெளியக் காண்டல், (*in Ophthalmology*) different kinds of vision such as bilopia, triplopia and distinct vision; 7. கண் காட்சி, exhibition; 8. தத்துவ ஞானிற் கூறியபடி இரு வகைக் காட்சி, அகமையாவன அகக் காட்சி, (*in Philosophy*), the inner vision relating to spiritual affairs; புறக் காட்சி, the outer vision or physical vision relating to external or secular affairs; 9. அறிவு, intelligence or knowledge; 10. விரகாவஸ் தைக் காட்சி, (*in Erotic science*) amorous experiences perceived by a man at the sight of his lover; 11. பிரத்தியட்சப் பிரமாணம், (*in Agama philosophy*) the different perceptions or evidence of the

senses ; and they are described in seven ways, viz :—

1. ஐயக் காட்சி, doubt perception or indistinct apprehension.
2. திரிபுக் காட்சி, change perception or mistaking one thing for another.
3. விகற்பக் காட்சி, difference perception or discrimination especially in distinguishing name, kind, quality, action and substance.
4. பொறி வாயில் காட்சி, sense perception with the aid of mental faculties.
5. மனக் காட்சி, mind perception or ideas of things perceived by the senses.
6. அநுபவக் காட்சி, experience perception or affections towards objects perceived.
7. யோகக் காட்சி, meditation perception or spiritual perception by abstract devotion of a knowledge of events past, present or future.

காட்சி மறைத்தல், see அஷ்ட குற்றம்.

காட்சி யாதல், தூக்கத்தில் தோன்றல், appearance in a vision.

காட்சி வாதி, பார்த்தது அதாவது கண்ணாற் கண்டு தெளிவது தான் 'அறிவு' என்ற கொள்கை யோன், one who asserts that what is actually seen or perceived by the senses and determined thereby alone is true knowledge.

காட்டகத் தமிர்து, காட்டில் விளையும் பொருள், see காடுபடு திரவியம்.

காட் டகத்தி, வீழி, chilli-fruited caper — Cadaba indica alias Stroemeria tetrandra (of Roxburghii).

காட் டகம், அகரு, aloewood—Agallochum.

காட்டகி, காட்டுக் கொன்றை, wild kondray—Pithecolobium bigeminum alias Mimosa bigemina.

காட்ட குட்டம், ஓர் பறவை, an unidentified bird.

காட் டக்குரோட்டு, காட்டு அக் ரோட்டுக் கொட்டை, wild walnut — Aleauritis moluccana.

காட்டகை, காட்டுச் சீரகம், purple-fleabane —Vernonia anthelmintica.

காட் டகுசம், செவ் விறகு, (lit) red fuel or firewood (unidentified). It is said to be used in Alchemy, because of its fumes having extraordinary virtues.

NOTE—It is doubtful if it could be செவ் மரம், red wood — Amrona rohituka and so calls for research.

காஷ் டகுசம், see காட் டகுசம்.

காட் டட்டம், வெள் பாதிரி, white-flowered fragrant trumpet tree —Sterocospermum xylocarpum.

காட் டஷ்டம், see காட் டட்டம்.

காட் டணம், பெருங் குமிழ், coomb teak—Gmelina arborea.

காட்ட தாதி, படர் முன்னை அல்லது கொடி முன்னை, spreading or creeper premna—Premna (genus).

காட் டதிமதுரம், காட்டு அதி மதுரம், (root of) wild Indian liquorice as opposed to நாட்டு அதி மதுரம், (root of) Indian or Country liquorice—Abrus precatorious.

காட் டத்தி, பேயத்தி, devil fig — Diospyros embryopteris ; 2. காட்டில் விளையும் அத்தி, wild fig—Ficus hispida.

காட் டமிர்தம், இலைப் பால். இதைக் காட்டில் உள்ள சித்தர்கள் அருந்துவதால் இப் பெயர், tiger's milk — Excoecaria agallocha. It is so called from its milk being used as a beverage for Siddhars in the forest.

காட்டமிர்து, see காடுபடு திரவியம்.

காட்டம், விறகு, fuel or fire-wood ; 2. உறைப்பு, pungency ; 3. வெண் கலம், bell-metal ; 4. அதி மதுரம், country liquorice ; 5. நட்டை மரம், which see ; 6. மருந்தின் காரம், pungency of medicine.

காட் டரவி, காட்டு மா, jungle mango—Cerbera odollam. See காட் டரளி.

காட் டரளி, காட்டு அரளி மரம். இதற்குக் காட்டு மா எனவும் பெயர். இது அடர்த்தியான மரம்; 20 அடி உயரம்; உப்பளத்தில் விசேஷமாக வளரும். இதன் இலைகள் பளபளப் பாயும், பூக்கள் வாசனையாயு மிருக்கும்; விதைக் காய் 2-4 அங்குல நீளம்; மாங்காயைப் போல் உள்ளே நாரும், ஓடும் இருக்கும் ; விதை வெள்ளை ; காயின் சதைப் பாகம் தோஷ மற்றது ; கொட்டையோ மயக்கத்தை யுண்டாக்கும் விஷத் தன்மையது ; பட்டை, விரேசன மருந்து. இதன் பால், இலை, வாந்தியையும், பேதியையும் உண்டு பண்ணும். திருவனந்த புரத்தில் நாயைக் கொல்லு வதற்காக இக்காயை உபயோகிப்

பாரிகள். இதன் எண்ணெய் விளக்கெரிக்க வுதவும், wild nerium or jungle mango —Cerebra odallam alias C. lactaria. It is a bushy tree about 20 ft. high; a native of salt swamps; leaves shining; flowers fragrant; ripe carpel 2-4 inches long, somewhat resembling a green mango, fibrous and woody within; white-seeded. The fleshy drupe is medicinally inert, the nut is narcotic and even poisonous and the bark purgative; milk sap and leaves are emetic and purgative. In Travancore the fruit, is employed to kill dogs. The oil extracted from the seed is used for lamps. See உதளை.

காட்டரளி, காட்டரளி. இதன் இலை அலரியைப் போன்றது, wild gannair; willow-leaved water croton—Homonoia riparia. Its title is from the resemblance of the leaf; 2. உவாத்தேக்கு—Dillenia indica. C. f. குதிரை ஒட்டக்காய்.

காட்டலகு, காட்டு அலகு மரம், an unidentified tree; but believed to be referring to காட்டரளி which see.

காட்டலகுக் குழல், மருந்தை வைத்து அவிப்பதற்காக உபயோகப் படுத்தும் காட்டலகு மரத்தினாற் செய்த குழாய், a wooden tube made out of the Alagu tree used for roasting medicine.

காட்டலரி, see, காட்டரளி; 2. கண்டலைப் பாலை. இது பெரியதாய்ப் படரும் ஓர் செடி. இதன் காம்பு வளைந்தும், மஞ்சள் நிறமாயும், பூக்கள் வெளிர் மஞ்சள் நிறமாயும், வாசனையாயும், 9-10 அங்குல நீளமாயு மிருக்கும். காய் மாங்காயைப்போ லிருக்கும்; விதை மயக்கத்தைத் தரும். இதன் இலை, பட்டை, இவற்றிற்குப் பேதிக் குணமுண்டு. இதன் காயை அரைத்து சரும நோய்களுக்குப் பற்று போடலாம். விதையி னின்று எண்ணெயும் எடுக்கலாம், mango-like cerbera or forbidden fruit—Tabernaemontana dichotoma. It is a wide spreading shrub. Follicles re-curved, orange-coloured; flowers yellowish-white, slightly fragrant; 9-10 inches long; fruit looking like a mango both in its colour and shape. Seed is a powerful narcotic; leaves and bark purgative; fruit externally applied as cataplasm in diseases of the skin. Oil is extracted from the seeds.

காட்டலாகிரி, கொடி மாதுளை, creeping anaur—Punicum genus.

காட்டவரை, பேய்ப்பவரை; forest-beans—Mucana pruriens.

காட்டவுரி, காட்டில் விளையும் அவுரியைப் போன்ற செடி, wild or false indigo—Indigofera argantia alias I. trita.

காட்டழல், காட்டில் தானாகவே பற்றுந் தீ, forest-fire started by friction.

காட்டா, காட்டுப் பசு, wild cow, bison —Bos gavaeus.

காட்டாகு, கொடி முல்லை, eared-jasmine —Jasminum auriculatum.

காட்டாக்கினி, காட்டுத் தீ, see காட்டழல்.

காட்டாஞ்சி, ஓர் மரம், entire-leaved staff tree — Gymnesporia emarginata alias G. montana.

காட்டாடு, காட்டில் வசிக்கும் ஆட்டைப் போன்ற பிராணி. இது ஆட்டைப் போல் தாவும், நரியைப் போல் கத்தும், jungle sheep—Cervulus muntjac. It runs like a sheep and howls like a fox.

காட்டாதவள், see காட்டாமணக்கு.

காட்டாதாரிகம், கொடி யத்தி, creeper fig—Ficus repens.

காட்டாத்தி, காஞ்சனி, holy mountain ebony—Bauhinia tomentosa.

காட்டாத்தி, திருவாத்திச் செடி. இது 6-12 அடி உயரம்; முள் ளில்லாதது. இலைகள் அண்ட வடிவு அல்லது உருண்டை; அடிப் பக்கம் சிறிது முசு முசுப்பா யிருக்கும்; காம்பு, இலை, புற விதழ் இவைகளும் இப்படியே இருக்கும். இலைக் கொழுந்துகள் சிறியன, மூன்று நரம்புகளோடும், காம்புக்கு இரண்டு பூக்கள் உண்டு; பட்டை சாம்பல் வர்ணம், மிருதுவா யிருக்கும். பூக்கள் பெரியது, வெண் மஞ்சள் நிறம், கவிழ்ந் திருக்கும்; காய்க்குள் 5-6 விதை யுண்டு. இது மலையாளம், குற நாடு, அயோத்தியா இவ் விடங்களில் விசேஷம். காய்ந்த இலைகளும், பூக்களும் அசீரணபேதிக்கும், வேரின் பட்டைக் கஷாயம் ஈரல் நோய், சளி நோய்களுக்கும், புழுக்களைப் போக்கவு முபயோகப் படும். இதன் பட்டை கட்டிகளுக்கும், புண்களுக்கும் உபயோகப் படும். இதன் விதைகள் உடம்புக்கு பலத்தைத் தருவது மன்றி, தாது புஷ்டியையு முண்டாக்கும்; விதைகளை காடிசேர்த் தரைத்து விஷங் கொண்ட இரணங்களுக்குப் பூசலாம். சாதாரணமாகவே விதைகளைத் தின்னலாம், holy mountain ebony—Bauhinia tomentosa. It is a shrub 6-12 ft in height; unarmed; leaves oval or round at the base; bottom surface villous; bran-

ches, petioles, peduncles and calyx are also villous ; leaflets are three-nerved ; peduncles two-flowered. The bark is ash-coloured and smooth; flowers large, pale yellowish and drooping ; legumes 5–6 seeded. The shrub is common in Ceylon, Malabar and the Coromandel coast.

Its dried leaves and flowers are prescribed for diarrhoea; the decoction of root-bark given for inflamed liver and phlegmatic diseases. It is an anthelmintic. Seeds are medicinally tonic aphrodisiac ; they are made into a paste with vinegar and applied to poisonous wounds ; they are also often eaten.

காட்டாமணக்கு, காட்டாதளை. இச் செடியை எங்கும் பார்க்கலாம். முள் வேலிகளைச் சுற்றிலும், கரம்பை நிலங்களிலும் முளைக்கும். இதை ஒடித்தால் பால் வரும். இதற்கு விசேஷ குணங்கள் உண்டு. இதன் இலை கரப்பான், சிரங்கு, வெட்டுக் காயம் இவைகளுக்கும்; இதன் விதைத் தைலம் வாத ரோகங்களிலும் உபயோகப் படும். இதன் பாலை நன்றாகக் குழைத்து, வெண்ணெயைப் போலான பின் கத்தி, கண்ணாடி, இவைகளால் நேரும் காயங்களுக்குப் பூச குண முண்டாகும். இதன் இலையி லிருந்து வடிக்கும் எண்ணெய் வெண் மஞ்சள் நிறமா யிருக்கும் ; இதற்கு விசேஷ குண முண்டு. இதன் பாலைத் துணியில் நனைத்து காயம், விரணம், புண் இவைகளின் மேற் போட இரத்தத்தை நிறுத்தும். இரத்தக் கட்டி, நரம்பிற் காணும் கட்டி இவைகளுக்கு இப் பாலை பீச்சக் குழலினால் உள்ளே பிரயோகிக்க குண முண்டாகும். இவ் வெண்ணெயுடன் தேங்கா யெண்ணெயைக் கலந்து நாட்பட்ட வாத நோய்களுக்கு மேலில் தேய்க்கக் குணமுண்டாகும். இதன் விதையைப் பேதிக்கு உபயோகப் படுத்துவ துண்டு; சிற்றாமணக் கெண்ணெயை விட அதிகமாகவும், நேர்வாளத்தை விட குறைவாகவும் பேதியாகும். ஒருவருக்கு இரண்டு அல்லது மூன்று விதைகள் போதும் ; இலையை வதக்கி விளக்கெண்ணெயை மேற் பூசி, கட்டிகள் பழுத் துடைய உபயோகிக்கலாம். இதன் சாற்றை மூலத்திற்குத் தடவலாம். இதன் பிசினை விரண வாயை மூடுவதற்கு உபயோகிக்கலாம். இதன் எண்ணெயை ஆளி விதை யெண்ணெய்க்குப் பதிலாக உபயோகிப் பதற்காக, இது இங்கிலாந்து தேசத்திற்கு ஏற்றுமதி யாகும். இவ் வெண்ணெய் விளக்கெரிக்கவும் உதவும். பெண்களுக்கு பால் சுரக்கும்படி இவ்விலையின் கஷாயம் மேற் பூச்ச மருந்தாக உபயோகப் படும். பல்லீறு கொப்புளங்களையும், மிருதுவான பல்லீறுகளையும் நீக்கி, பலப் படுத்துவதால் இதன் குச்சு பல் விளக்க உதவும், moghul castor ; purging nut, physic nut —Jatropha curcus alias J. Purgans. This evergreen plant is common throughout in India. It is found grown in hedges and agricultural tracts. Viscid juice comes out when broken. It has many useful qualities. Leaves are useful in skin eruptions, itches, injuries or wounds ; oil from seeds is an esteemed remedy for rheumatism. The viscid juice well-rubbed is used in incised wounds caused by knife, glass piece etc. The oil expressed from the leaves is yellowish-white and serves as a purgative. The fresh juice from the stem is steeped in a lint and applied to wounds, injuries and sores to arrest bleeding or hemorrhage for, it is a reputed hemostatic and styptic ; oil when mixed with cocoanut oil or diluted with a bland oil, forms an excellent embrocation for chronic rheumatism. Seeds are used as a purgative by Vaidyans ; and their operation is stronger than the castor and weaker than the croton seed. Two or three may be taken for a dose. Leaves warmed and rubbed with castor oil are applied for inflammation when suppuration is wished for ; the juice is applied externally for hemorrhoides and the gum is used like collodion to close wounds. Its oil is exported to England as a substitute for linseed oil ; and it is also used for burning lamps. A decoction of the leaves is used externally to promote secretion of milk in women. The stick of this plant is used as a tooth-brush for strengthening the gums and to core spongy-gums or gum-boils.

NOTE—The seed of this plant is known as English physic nut ; and its oil is pale yellow. The want of uniformity in its action is a serious defect in its employment as a purgative. It is said to cause more griping than castor oil. The active principle of the oil is Jatrophic acid.

C f. ஆமணக்கு.

காட்டாமணக்கு, பேயாமணக்கு, wild castor — Baliospermum axillare; 2. சிவ

யாமணக்கு, bronze-leaved physic nut—Jatropha gossypifolia.

காட்டாமணக்கு விதை. சீமை யாமணக்கு, விதை, English physic nut.

காட்டாமணத்தி, see காட்டாமணக்கு.

காட்டா மணி, see உத்தாமணி.

காட்டாரியம், கேழ் வரகு, ragi — Tuval ariyam.

காட்டாரை, கல்லாரை, see கடலாரை.

காட்டாலம், பேயால மரம், wild banyan tree. See கல்லால்.

காட்டால், பேயால் அல்லது கல்லால். இதன் பட்டைக் கஷாயம் மருந்திற்குதவும், forest banyan tree or demon fig—Ficus citrifolia. The decoction of its bark is medicinal.

காட்டாவங்கம், வெள்ளைக் கழற் கொடி, a white species of Bonducella.

காஷ்டாவங்கம், see காட்டாவங்கம்

காட்டாவாரை, see காட்டாவிரை.

காட்டாவிரை, மலை யாவாரை, mountain downy senna—Cassia tomentosa.

காட்டாளை, ஓர் சுழல் வண்டு, a whirling beetle.

காட்டான், காட்டுப் பசு, wild cow. See காட்டா.

காட்டிச்சி, கல் லித்தி, stone fig—Ficus gibbosa (parasitica).

காட்டிஞ்சி, காட்டில் விளையும் இஞ்சி, wild ginger — Zingiber capitatum ; 2. மூக்கரைச் சாரணை, a species trianthema ; 3. சிற் றிஞ்சி, small ginger — Zingiber zerumbet.

காட்டிஞ்சி மூலம், வெள்ளைச் சாரணை வேர், one styled trianthema — Trianthema obcordata.

காட்டிண்டு, இண்ட முள்ளு, fine-leaved acacia—Acacia pennata.

காட்டி தோஷணு, திப்பிலி, long-pepper — Piper longum.

காட்டி மறைதல், அம்மை வெளி காட்டி, உள்ளுக்கு வாங்கிக் கொள்ளுதல், appearing outwardly and then getting absorbed inside as in இராமக்கம், a small-pox — Variole siliquosa.

காட்டிராட்சி, அரத்தை, galangal—Alpinia galanga.

காட்டிருப்பவல், see இருப் பவல்.

காட்டிருப்பை, see காட்டிலுப்பை.

காட்டிலந்தை, காட்டில் விளையும் இலந்தை. இதன் பழம் துவர்ப்பு, உடம்பிற்குக் குளிர்ச்சி, jungle jujube — Zizyphus rugosa. Its fruit is cool and astringent ; 2. நரி இலந்தை, jackal bair—Zizyphus horrida alias Z. oeonoplia. See இலந்தை.

காட்டிலம், வாழை, plantain tree — Musa paradisiaca.

காட்டிலவு, காட்டுப் பருத்தி, false traganth or yellow silk cotton — Cochlospermum gossypium ; 2. பாறை இலவு, large-flowered silk cotton — Bombax insigne.

காட்டிலா, வெள் ளெருக்கு, white-flowered giant swallow wort — Calotropis gigantea (albiflora) ; 2. வாழை, see காட்டிலம்.

காட்டிலுப்பை, காட்டிருப்பை மரம், wild mowah or broad-leaved bassia—Bassia lalifolia ; 2. கற் பாலை, East Indian star-apple —Chrysophyllum roxburghii ; 3. பாற் சோற்றுப் பாலை, oval mowah — Dichopsis elliptica.

காட்டிலுப்பை, காட்டிருப்பை ; மதூகம். இம் மரம் 40 அடி உயரம்; இலை அடர்ந் திருக்கும் காம்பு கவிழ்ந் திருக்கும் ; பூ வெள்ளையில் சிறிது பச்சை நிறம். இதன் காய் சிறிது, ஆப்பில் பழத்தைபோ லிருக்கும். இதற்குள் 1-4 விதைக ளுண்டு. இது தென்னிந்திய காடுகளிலும், வங்காளம், பம்பாய், கூர்ச்சரம், இராஜ பட்டணம், முதலிய விடங்களில் விசேஷம். இதன் பூ வினின்று மதுயர்கள் போதை யுள்ள சாராயம் காய்ச்சு வார்கள் ; இதன் பூ இனிப்பா யிருக்கும். இதைப் புசிக்கலாம். நரிகளுக்கு இப் பூவின் பேரில் மிகப் பிரியம். இதன் விதைகளி னின்று எடுக்கும் எண்ணெய் இலுப்பை எண்ணெயைப் போலவே இருக்கும். இது விளக் கெரிப்பதற்கும், நெய்யில் கலப்பதற்கும், பணியாரம் சுடவும் உபயோகப் படும். இதன் சாராயத்தை சரியாகக் காய்ச்ச, ஐயர்லந்து விஸ்கியைப் போலிருக்கும், நாட்பட்டால் பிராந்தியைப்போல் இருக்கும் ; ஆகுல் இச்சாராயம், வயிற்றுக்கு ஒவ்வாமல் விஷகாரத்தை யுண்டு பண்ணும். இதன் விதை யெண்ணெய் சரும நோய்க்கும், வாதத் தலை வலிக்கும் பூசலாம் ; பட்டை வாத நோய்க்கும், சொறி முதலிய சரும நோய்களுக்கும் மருந்தாகும்; இதன் பிண்ணுக்கு மீனைக்கொல்லும் ; இலுப்பைப் பூவை பாலிற் கொதிக்க வைத்து தாது புஷ்டிக்குக் கொடுக்கலாம். பூவைக் காய வைத்து வறுத்து அண்டவீக்கத்திற்கு ஒத்தடம் கொடுக்கலாம், wild

mowah—Bassia latifolia. This tree is 40 ft. high; leaves dense; corolla, thick and fleshy; pedicles drooping; flowers white with a tinge of green and cream colour. Its berry about the size of a small apple: 1–4 seeded. It is found to grow wild in South India, Bengal, Bombay, Guzerat, Rajaputana and other places. An ardent spirit is distilled from the flowers by the hill tribes and used as a strong and intoxicating liquor. Its flowers are sweet and eaten raw; and jackals particularly are fond of them. Its seeds yield by expression a large quantity of concrete oil, which resembles closely the ordinary mowah oil and is used for burning lamps, for adulterating ghee and for frying cakes. The spirit from this flower, when carefully distilled looks very much like good Irish whisky; but when matured by age, it acts like brandy. It is said to excite gastric irritation giving rise to malarial fever. Oil from the seeds serves as a useful application in skin diseases and to the head in cephalalgia. The leaves boiled in water form a good embrocation; and its bark is a remedy for rheumatic affections and itches. The residue cake is used to poison fish. The flowers boiled in milk are useful in impotence due to general debility. The dried flowers are used for fomentation in orchitis.

காட்டி ஓமிழி, நாகர வண்டு, a large kind of beetle.

காட்டி ஞமணத்தி, see காட்டாமணக்கு.

காட்டி ஞவாடை, நன்னாரி, Indian sarsaparilla.

காட்டீகை, see காட்டீண்டு.

காட்டீசன், see கார்த்திகைக் கிழங்கு.

காட்டீச்சம், see காட்டீச்சை.

காட்டீச்சை, ஈச்சம் பனை. இதன் உயரம் 30–40 அடி; பட்டை 10-15 அடி நீளம்; இலைக் காம்புகள் மூடிக் கொண்டும், அடி பாகத்தில் முள்ளாகவு மிருக்கும்; குருத்து 2-3 அடி நீளம்; கதிர் 1½ அடி நீளம்; காய்கள் கதிரில் தொங்கும். இது எல்லாவிடங்களி லும் பயிராகும். இதி னின்று கள் இறக்குவார்கள்; இத் தித்திப்புக் கள் எல்லாவித பானங் களை விட மிகக் குளிர்ச்சியைத் தரும். இதன் காயை பாக்கைப்போல் தாம்பூலத்தி லுபயோகிக்கலாம். இதன் கள்ளி னின்று கற்கண்டு, வெல்லம், சர்க்கரை காய்ச்சி எடுக்கலாம். இதற்குக் கரும்பஞ் சருக்கரையைவிட மேலான குணம் உண்டு. ஈச்சங் குருத்தின் நடு பாகம் மேக வொழுக்கு, வெள்ளை, தந்தி மேகம் இவைகளுக் குபயோகமாகும். இதன் வேர் பல்வலி, நரம்புத் தளர்ச்சி, முதலியவைகளைப் போக்கும், Indian wine palm—Phoenix sylvestris. The tree is 30–40 ft. high; fronds 10-15 ft. long; petioles compressed with a few short spines at the base; spadix 2–3 ft. long; spikes 1½ ft. long; fruit scattered in long pendulous spikes. It grows on all soils and situations. The tree is cut for toddy which is considered the coolest of all beverages. The fruit is chewed in the same manner as the areca-nut with betel-leaf and chunam. Out of juice are prepared, sugar-candy, jaggery and sugar which are considered to be more nutritious and agreeable than the cane-sugar. The central tender part of the palm or spathe is useful in gonorrhea, gleet and other venereal discharges. The root is used in toothache and nervous debility with advantage.

காட்டீஞ்சு, ஈச்சம் பனை, see காட்டீச்சை.

காட்டீந்து, காட்டீச்சை.

காட்டீரகம், கொட்டை முந்திரி, cashew nut —Anacardium occidentalis.

காட்டீருள்ளி, காட்டு வெள்ளை வெங்காயம் அல்லது நரி வெங்காயம். இது கோழையை யகற்றும், நீரைப் போக்கும், jungle onion or jackal onion — Urginia indica alias Scilla indica. It is an expectorant and diuretic.

காட்டீலை, வாழை, plantain tree — Musa paradisiaca; 2. கடுக்காய், gallnut — Terminalia chebula.

காஷ்டீலை, see காட்டீலை.

காட்டு, காட்டைச் சேர்ந்த, relating to forest 2. காட்டிற் பிறந்த, forest-born; 3. காட்டி லிருக்கும், existing in the forest—wild; 4. உறைப்பு, pungency; acridity, see காட்டம்.

காட்டு அரணி, see காட்டரணி.

காட்டு ஓம வல்லி, ஓம வல்லியின் ஓரினம், a variety of ஓம வல்லி, which see.

காட்டு கஞ்சா, இமய கிரி, காஷ்மீரம் இக் காடு களில் தானாகவே பயிராகும் மத மத்தகச் செடி, wild hemp found growing wild in Western Himalayas and Kashmere — Cannabis sativa.

காட்டு கஞ்சாங் கோரை, சேகி, sage tea plant—Salvia plebeia ; 2 காட்டில் விளையும் கஞ்சாங் கோரை யினம், forest white basil—Ocimum basilicum.

காட்டுகை, புகைக் காட்டுதல், the act of applying smoke—Fumigation.

காட்டுக் கடலி, பூனைப் பிடுக்கன், Indian linden—Grewia scabrophylla.

காட்டுக் கடலை, காட்டுக் கடலை. இது இருமலுக்கு உபயோகப் படும், spider-flower shrub or forest Bengal gram—Osbeckia aspera. It is used medicinally for coughs; 2. காட்டுக் கொண்டைக் கடலை. இதன் இலை வழுவழுப்பா யிருத்தலால் இது புண்களுக்கு வைத்து கட்டவும், சரும ரோகங்களுக்கும் உபயோக மாகும், wild Bengal gram or Dwarf mallow—Melastoma asperum alias Malva rotundifolia. It has mucilagenous and emmolient leaves which are used for poultices and also as external application in certain skin diseases.

காட்டுக் கடுகு, நாய்க் கடுகு, wild mustard—Cleome viscosa alias Polanisia icosandra.

காட்டுக் கண்ணி, முட்டை காரி, claw-flowered laurel—Acronychia laurifolia.

காட்டுக் கதலி, காட்டு வாழை, wild plantain—Osbeckia aspera see காட்டு வாழை.

காட்டுக் கத்திரி, காட்டு கத்திரிக் காய்ச் செடி hedge caper — Capparis sepiaria; 2. காட்டுக் கண்டங் கத்திரி, wild Indian brinjal—Solanum indicum (typica).

காட்டுக் கத்தூரி, கஸ்தூரி வெண்டைக் காய் விதை, musk mallow — Abelmoschus moschatus (seeds of). See வெட்ட கத்தூரி.

காட்டுக் கத்தோதிகம், சாமை, little millet—Panicum miliare.

காட்டு கப்பற் கிழங்கு, காட்டுக் கிழங்கு, a wild root—Sanseviera lanuginosa.

காட்டுக் கமுகு, இலங்கைக் கமுகு, Ceylon betel palm—Areca concinna.

காட்டுக் கம்பம் புல், ஓர் வகைக் கம்பம் புல், a wild coraly—Eragrostis ciliata.

காட்டுக் காவணை, பாவட்டை, Indian Pavatta—Pavetta indica.

காட்டுக் கரந்தை, ஓர் வகைக் கரந்தை, wild sweet basil of the Sphoeranthes genus.

காட்டுக் கருஞ் சீரகம், see கருஞ் சீரகம்.

காட்டுக் கருவணை, காட்டுக் கருணைக் கிழங்கு. இது நரம் பிணிக்கு நல்லது. கரு கருப் பைத் தரும், purple-stalked dragon — Dracontium polyphyllum alias Synantherias sylvatica. It is medicinally anti-spasmodic and a powerful stimulant; 2. காட்டு சேனைக் கிழங்கு, tahiti arrow-root—Tacca pinnatifida.

காட்டுக் கருவணை; மருந்துக் கருணைச் செடி. இது பாஷாணத்தைப் பற்ப மாக்கும்; கெந்தகத்தைத் தைலமாகச் செய்யும்; செம்பிலுட ஊறலைப் போக்கு மெனக் கருதப்படும், a species of forest elephant-yam referred to in the Siddhars' science whose botanical name is not known. It is said that this variety has extraordinary virtues as converting arsenic into a calcined oxide, sulphur into an oily liquid and rendering copper free from verdigris.

காட்டுக் கரும்பு, பேய்க் கரும்பு, wild sugarcane—Saccharum spontaneum.

காட்டுக் கருவா, காட்டு இலவங்கப் பட்டை. இது ஓர் சிறிய மரம். இதன் இலையைக் கசக்க வாசனையா யிருக்கும்; உள் பட்டையை சாதாரணமாகக் கருவாப் பட்டைக்கு பதிலாய் மோசடியாகக் கடையில் விற்பார்கள். இது மிக்க காரியாயும், பெரிதாயும் இருக்கும்; வழவழ யிருக்குமே யல்லாது மற்றென்றைப் போல் சுருட்டையா யிராது; வாசனையும், ருசியும் மிக்க வித்தியாசமா யிருக்கும். இதன் காய்ந்த மொக்கு கருவாப் பட்டையைப் போல் வாயுவைப் போக்கி பசியை யுண்டாக்கும் குண முள்ளது; இதன் விதைகளை இடித்துத் தேன் அல்லது சர்க்கரையில் கலந்து சீத பேதி, இருமல் இவைகளுக்குக் கொடுக்கலாம்; மற்ற கடைச் சரக்குகளோடு சேர்த்து காத்திற் குபயோகிக்கலாம். இதன் பட்டை கறிமசாலை யாகவும் வழங்கலாம், wild cinnamon tree or country cinnamon—Cinnamomum iners alias C. eucalyptoidus. It is a small tree; leaves, when bruised are fragrant

and aromatic; panicles exceed the leaves; the inner bark is sold in the bazaars as a substitute for cassia cinnamon, although it is a much larger and thicker bark. It is curved but seldom quilled; and its smell and taste are quite different from those of true cinnamon. The dried buds partake of the carminative properties of cinnamon; the seeds mixed with honey or sugar are prescribed by Vaidyans for dysentery and cough; and combined with other ingredients for fevers. Its bark is a condiment in curries.

காட்டுக் கருவா, காட்டிலவங்கம், jungle lavangam—Cinnamomum wightii; 2. சீன மிளகு, China pepper—Pimenta acris.

காட்டுக் கரையாம் பூ, மலை நாவல், clove-like black plum—Eugenia caryophyllaca.

காட்டுக் கரோசயம், சாரப் பருப்பு, which see.

காட்டுக் கர்ப்பூர கிச்சிலிக் கிழங்கு, காட்டு பூலாங் கிழங்கு, forest orange root of Curcuma genus.

காட்டுக் கல், வெள்ளைக் கல், white stone.

காட்டுக் கள்ளி, மலைக் கள்ளி, இதன் பூ மஞ்சள் நிறம்; இலைகளை வதக்கிக் காயம், புண் முதலியவைகளுக்கு வைத்துக் கட்ட, அழற்சி அல்லது எரிச்சல் போம், hill kalli; leper's plant; kidney wort—Kalanchoe laciniata alias Cotyledon laciniata. Its flowers are yellow; leaves valued as an external application to wounds and sores to allay irritation and promote cicatrization.

காட்டுக் கறி வேப்பிலை, see ஆனைத் தளை.

காட்டுக் கறு வேப்பிலை, see காட்டுக் கறி வேப்பிலை.

காட்டுக் கற்றாழை, ஆனைக் கற்றாழை, wild aloe or hill aloe—Agave americana.

காட்டுக் கனி, காட்டெலுமிச்சை, Indian wild lime—Atlantia monophylla.

காட்டுக் காசினி, காட்டில் விளையும் காசினி, wild endive—Blumea lasera.

காட்டுக் காட்டா மணி, காட்டு உத்தாமணி, see உத்தாமணி.

காட்டுக் காய்ச் சாறு முட்டி, ஓர் அவுரிப் பூடு, curved podded five-leaved indigo—Indigofera panciflora.

காட்டுக் காய்ச் சுரை, see கசச் சுரை; 2. ஓர் வகைச் சுரைக் காய், a species of bottle-gourd; 3 முட் புளிச்சை, thorny hemp bendy—Hibiscus surattensis; 4. காட்டு புளிச்சைக் கீரை wild sour greens.

காட்டுக் காய் வள்ளி, காட்டு வள்ளி, காய் வள்ளி, bulbous-rooted yam—Dioscorea sativa (typica), see காட்டுச் சிறு வள்ளி; 2. காய்ச் சிறு வள்ளி, cummin yam—Dioscorea bulbifera.

காட்டுக் காரை, மலைக் காரை, பிக்கி, gland petioled saw-leaved olive linden—Elaeocarpus oblongus (autus).

காட்டுக் காலு வாழை, see கானல் வாழை.

காட்டுக் கிச்சிலி, காட்டில் விளையும் கிச்சிலிப் பழம், wild orange—Aurantium nobilis; 2. காட்டெலுமிச்சை, wild lime—Atlantia monophylla.

காட்டுக் கிச்சிலிக் கிழங்கு, ஓர் வாசனைக் கிழங்கு, jungle zedoary of the Hedychium genus.

காட்டுக் கிட்டம், மலைக் கிட்டம், iron crust; spongy stones such as prunice etc. found in mountains or mountainous tracts.

காட்டுக் கிராம்பு, நீர்க் கிராம்பு. இதை நசுக்கி மோரிலிட்டுக் குடிக்க சீத பேதி குணமாகும்; வயிற்றுக் கிருமிகள் பேதியில் கழியும்படி இதைக் கஷாயம் வைத்துக் கொடுப்பதுண்டு, primrose willow—Justicea suffruticosa. The plant, ground and steeped in buttermilk is considered efficacious in dysentery. A decoction of it is a vermifuge and a purgative.

காட்டுக் கிழங்கு, சிறு வள்ளிக் கிழங்கு, small sweet yam or Chinese yam—Dioscorea aculeata; 2. காட்டில் உற்பத்தி யாகுங் கிழங்கு, bulbous roots found grown in forests; forest esculent roots so called from its growth in the forest.

காட்டுக் கிளிப் பிள்ளை, காட்டில் வசிக்கும் கிளிப் பிள்ளை, jungle parrot—Taccocua leschenaultii alias Zandostomers sirkeer.

காட்டுக் கிளுவை, கற்பூரக் கிளுவை. இச் செடி அல்லது மரம் மிக்க வாசனை யுள்ளது. இதை வேலிகளிலும், சாலைகளிலும் வைத்துப் பயிராக்குவதுண்டு. இதன் இலை, பட்டைக்கு மாம்பழ வாசனை யுண்டு, hill kiluvai or hill mango—Protium caudatum. It is a shrub or green-barked tree found common as a hedge plant or an avenue

tree. The whole tree has a pleasant fragrance. Leaves and bark have the flavour of a mango; 2. மலைக் கிளுவை, downy hill balsam tree — Balasmodendron pubescens; 3. பச்சைக் கிளுவை, hill balsam tree — Balsamodendron berryi alias B. caudatum.

காட்டுக் கிள்ளை, சுருதாளி விதை, common cherry nutmeg—Polyalthia cerasoides.

காட்டுக் கீரை, காட்டில் பறிக்கும் பல வகைக் கீரை, a mixture of several wild greens.

காட்டுக் கீழா நெல்லி, காட்டு நெல்லி, many-leaved phyllanthus—Phyllanthus polyphyllus; 2. ஓர் வகைப் பூலா, a kind of wild kilanelli—Phyllanthus reticulatus.

காட்டுக் குமிழ், ஓர் குமிழ மரம், French mulberry of the Western ghauts — Callicarpa lanata; 2. பாமரக் குமிழ், false white teak—Trewia nudiflora.

காட்டுக் குருந்து, காட்டெலுமிச்சை, Indian wild lime — Atlantia monophylla (Trichilla). See also காட்டுக் கிச்சிலி.

காட்டுக் குருந்தோட்டி, ஆனைக் குருந்தோட்டி, forest morning mallow — Sida rhombifolia (scabrida).

காட்டுக் குளஞ்சி,
காட்டுக் குள வஞ்சி, } see காட்டுக் குள வஞ்சி.
காட்டுக் குளாஞ்சி,

காட்டுக் குறிஞ்சி, குறிஞ்சா, country ipecacuanha—Asclepias asthmatica.

காட்டுக் கூந்தல், ஓர் காட்டுப் புல், a kind of forest grass.

காட்டுக் கொங்கை, see காட்டுக் கோங்கு.

காட்டுக் கொசு, காட்டி லுலாவும் கொசு, wild mosquitoes.

காட்டுக் கொஞ்சி, கொஞ்சி. இப் பழச்சதைப் புசிக்கலாம். இதன் கொம்பை தண்ணீர் விட்டரைத்துக் கடி வாயினில் கட்ட பாம்பு விஷம் போம், wild lemon; blood-sucker root — Glycosmis pentaphylla (macrocarpa) alias Limonia pentaphylla. Its twig bruised with water is a specific in snake-bite.

காட்டுக் கொடி, பாதாளகருடி. இது ஓர் கசப்பு வாசனைக் கொடி, ink-berry or ink creeper—Cocculus villosus; it is a bitter fragrant creeper. See கட்டுக் கொடி; 2. ஓர் வகை நன்னாரி, square-branched sarsaparilla — Smilax zeylanica; 3. வாயு விளங்கம், wind-berry climber — Embelia ribes.

காட்டுக் கொடி முந்திரிகை, காட்டு திராட்சைக் கொடி. இதற்கு மலையாளத்தில் கண்ணாம்பு வல்லி என்று பெயர். இதன் பூக்கள் சிறியன; விதைகள் கொத்தமல்லி விதையைப் போலிருக்கும்; வாசனையாயும், சிறிது வழுவழுப்பாயு மிருக்கும்; இரைப்பைக்கு வலிமையும், சீரண சக்தியையு முண்டாக்கும், jungle grape vine; jungle angoor — Vitis latifolia. Flowers small and brown; seeds of the size of coriander seeds, but pleasant, aromatic and of mucilaginous taste. It is medicinally cardiac and stomachic.

காட்டுக் கொட்டி, கொட்டிக் கிழங்கு, a variety of Indian water-lily root.

காட்டுக் கொட்டை, see காட்டாமணக்கு; 2. நாகணம், king's seed — Croton tiglium.

காட்டுக் கொத்தமல்லி, காட்டில் விளையும் கொத்தமல்லி, wild coriander.

காட்டுக் கொய்யா, மலைச் சிறு கொய்யா, wild guava of Ceylon—Rhodomyrtus tomentosa.

காட்டுக் கொழுகி, சிறு கீரை, pig-greens — Amaranthus campestris.

காட்டுக் கொழுஞ்சி, காட்டெலுமிச்சை, wild lime—Atlantia racemosa; 2. கொள்ளுக் காய் வேளை, purple wild indigo—Tephrosia purpurea (typica). See கொழுஞ்சி.

காட்டுக் கொழுமிச்சை, கசப்பு எலுமிச்சை, bitter lime; 2. கசப்பு நாரத்தை, bitter orange.

காட்டுக் கொள், கருங் காணம், black horse-gram; 2. காலியாந் துவரை, black dholl —Rhynchosia minima; 3. முலைப் பால் விதை, breast milk-seed—Cassia absus.

காட்டுக் கொள், காட்டில் விளையும் கறுப்புக் கொள். இது வனத்திரங்களில் மிகுதியாய் வளரும். இது குதிரைக் கொள்ளைப் போலிருப்பதால் இத்தப்பெயர். இச் செடியின் பூ சிறியது; மஞ்சள் நிறம். இதன் விதை, கருப்பாயும், பள பளப்பாயும், சப்பையாயும், கசப்பாயு மிருக்கும். இதை கன்னுகத்தூள் செய்துக் கொண்டு, அத் தூளை இறுகின் குழாய்க்குள் வைடத்து, கண் வெப்பு, பீளைக் கண், முதலிய கண்ரோகங்களுக்கு ஊத குண முண்டாகும். சாதாரண

மாய் குதிரைக் கொள்ளினும் கருப்புக் கொள் ளுண்டு. இதற்கும் மருந்துக் குண முண்டு, black horse-gram — Cassia absus alias Senna absus. It is a common shrub growing in dry jungles and is so called from the resemblence of its seed to horse-gram; flowers small, yellow colour; seeds small, black, polished and flat; taste bitter. The seeds are reduced to a fine powder; used as an external application for conjunctiva in purulent and other ophthalmic diseases. Some black seeds are also found in horse-gram and these are also used for medicinal purposes; 2. சிறு காவியாக் கொள்ளு, jungle small horse-gram — Atylosia scarabaeoides alias Dolichos medicagineus.

காட்டுக் கொள்ளி, மின் மிடக் கிய்ச்சான், a plant (unidentified). C. f. மல்லிப் பூடு.

காட்டுக் கொன்றை, கருங் கொன்றை, Roxbugh's cassia — Cassia marginata; 2. மலைக்கொன்றை, இதன் இலைக் கஷாயம் குஷ்டத்தைப் போக்கும், மயிரை வளரச் செய்யும், hill cassia. Pithecolobium bigeminum decoction of the leaves is a remedy for leprosy and a stimulant for the growth of hair.

காட்டுக் கொன்னை, காட்டுக் கொன்றை. இதன் இலைக் கஷாயத்தினால் குட்டம் போம், தலை மயிர் வளரும், wild condray, wight's inga —Mimosa bigemina. Decoction of leaves is a medicine for leprosy and a stimulent for the growth of hair. See காட்டுக் கொன்றை.

காட்டுக் கோங்கு, ஓர்வகைக் கோங்கு, Prussic acid tree—Pygerum wightiana.

காட்டுக் கோதிகம், சிறு குமிழ், small Kashmere tree—Gmelina asiatica.

காட்டுக் கோதுமை, வாற் கோதுமை, barley or tail wheat — Hordeum vulgare; 2. காட்டில் விளையும் கோதுமை, wild wheat —Choloris barbata alias Coix barbata.

காட்டுக் கோரை, பெருங் கோரை, large sedge grass—Cyperus umbellatus.

காட்டுக் கோவை, பெருங் கோவை, large-flowered bryony — Momordica covel; 2. இராமக் கோவை, அல்லது கருங் கோவை, Rama's caper or black caper—Momordica umbellata.

காட்டுக் கோழி, சம்பக் கோழி, jungle-fowl —Gallus sonneratii; 2. கற் கவுதாரி, common sand-grouse — Pterocles exustus; 3. சாம்பற் காட்டுக் கோழி, grey jungle fowl or Indian woodcock—Scolopax indica; 4. சிவப்பு காட்டுக் கோழி, red jungle fowl — Gallus bankiva; 5. சிறுக் கோழி, red spur fowl — Galloperdix. C. f. காருக் கோழி.

காட்டு சாதிக் காய், see காட்டுச் சாதி; 2. பெரிய காட்டு சாதிக்காய். இதன் உள் சதைப் பற்றை எடுத் திடித்து கொதிக்க வைத்து மஞ்சள் நிறமான ஓர் எண்ணெய் எடுப்பார்கள். இது வலியில்லா விரணங்களுக்குப் பூசுவதற் குதவும். இதை நல்ல எண்ணெயோடு கலந்து வாதப் பிடிப்புக்குப் பூசலாம்; எண்ணெய் விளக்கு மெரிக்கலாம், Malabar nutmeg — Myristica malabarica. Its kernel when bruised and boiled, yields yellowish concrete oil which is employed as an external application to indolent ulcers. Heated with some bland oil, it is serviceable as an embrocation in rheumatism. Its oil is also used for burning lamps.

காட்டு செட்டிப் பூ, மாசி பத்திரி, Indian absinth — Artimesia vulgaris.

காட்டுச் சங்கம், நாக வண்டு, a kind of beetle; but according to Bogar, it appears to be a reptile carrying water to snakes.

காட்டுச் சண்பகம், நீலகிரிச் சண்பகப் பூ, white-stalked tulip tree of Nilgiris; white champak — Michelia nilgrica.

காட்டுச் சதகுப்பை, சத குப்பிச் சக்கரத்தி. இது ஓர் கடைச் சரக்கு, a plant akin to common dill—Anethum graveolens. It is a bazaar drug. It is opposed to நாட்டுச் சத குப்பை, common dill.

காட்டுச் சதுர கள்ளி, சதுரக் கள்ளி, square spurge—Euphorbia antiquorum.

காட்டுச் சந்தனம், தேவ தாரு, red cedar—Erythroxylon monogynum alias E. Indicum.

காட்டுச் சம்பங்கி, see காட்டுச் சண்பகம்; 2. உரோம வாசனி, forest champak — Plumeria acutifolia. It has sulphur-coloured flowers.

காட்டுச் சம்பு நாவல், காட்டுப் பெரு நாவல், Munro's wax rose apple — Eugenia Munronii.

காட்டுச் சருக்கரை, பூமி சருக்கரைக் கிழங்கு, ground sugar root – Merma arenario.

காட்டுச் சல்லாத்து, (யுனானி.) இது சல்லாத்துக் கீரை. இது தீனிப் பைக்கு வலுவைக் கொடுக்கும்; (*in Unani*) garden lettuce or cabbage lettuce—Lactuca scariola. It is a stomachic.

காட்டுச் சாதி, பொதுவாகக் காட்டில் விளையும் மரங்கள், forest trees in general; 2. காட்டுச் சாதிக் காய், jungle nutmeg—Myristica laurifolia; 3. காட்டுச் சாதி பத்திரி, wild mace—Myristica malabarica.

காட்டுச் சாதி பத்திரி, see காட்டுச் சாதி; 2. வன சாதிப் பத்திரி. இதற்கு வாசனை கிடையாது, forest mace—Myristica horsfieldii. This variety has not the qualities of the other one, M. fragrans (common nutmeg).

காட்டுச் சாம்பல், இலம் பிசி, Munro's rose wax apple; water jaumoon—Eugenia munronii (mundagam); 2 see காட்டுச் சம்பு நாவல்.

காட்டுச்சாய வேர், காட்டு இம் பூறற் செடி, இதன் சமூலத்தைக் கஷாய மிட்டுக் கொடுக்க உடம்பு தேறும், wild chay root—Oldenlandia corymbosa. The whole of the plant is used medicinally as decoction. It is an alterative.

காட்டுச் சாரணை, மூக் கரைச் சாரணை, white trianthema—Trianthema decandra.

காட்டுச் சாரை, மருகு. இதன் எண்ணெய் பல் வலிக்கு உதவும், marjoram—Origanum marjerana. It yields oil of thyme and is a remedy for toothache.

காட்டுச் சார்வணை, see காட்டுச் சாரணை.

காட்டுச் சாவல், காட்டுச் சாவல் கோழி, Indian wood cock—Scolopax indica. See காட்டுச் சேவல்,

காட்டுச் சீகை, காட்டுச் சீயக்காய், sensitive tree—Mimosa rubicaulis; 2. பேய்ச் சீயக்காய், rusty mimosa; narrow-leaved soap pod—Acacia pennata.

காட்டுச் சிலந்தி, காட்டுச் செருந்தி, forest gold champak—Lapidagathis scariosa.

காட்டுச் சிறு கீரை, காட்டில் விளையும் சிறு கீரை, a herbaceous plant with a cluster of flowers found grown in the forest—Five-leaved amaranth or wild spinach—Amarantus tenuifolius.

காட்டுச் சிறு சாமை, காட்டில் விளையும் சாமை, wild small millet—Panicum antipodum.

காட்டுச் சின்னி, வனச் சின்னி, a wild species of Indian shrubby copper leaf—Acalypha fruticosa.

காட்டுச் சீயக்காய், see காட்டுச் சீகை.

காட்டுச் சீரகம், கசப்புச் சீரகம், wild cumin—Vernonia anthelmintica. See அக்கினி பீஜம்.

காட்டுச் சீரகம், கற்றிலைச் சீரகம். இதற்கு நெய்ச் சிட்டி என்றும் பெயர். இதைச் சாதாரணமாய் எங்கும் பார்க்கலாம். இதன் பூக்கள் ஊதா நிறம்; குளிர் காலத்தில் பூக்கும், பூவின் காம்பு நீளம்; இதன் காய்ந்த விதை, கருஞ் சிவப்பாயும், கசப்பாயு மிருக்கும்; அரு வருப்பையு முண்டாக்கும். இது குடற் பூச்சிகளைக் கொல்லுந் தன்மையது. இதை மற்றச் சரக்குகளோடு சேர்த்துச் சூரணித்து பாம்புக் கடிக்குக் கொடுப்ப துண்டு. இருமலுக்கு இதைக் கஷாயமாக வைத்துக் கொடுப்பார்கள்; வாயுவையும் கண்டிக்கும். இதைப் பொடித்து எலுமிச்சம் பழச் சாற்றில் கலந்து தலையிற் பூச, பேன், ஈர், முதலியவைகள் அற்றுப் போம். ஆயுள் வேதத்தில், இது சரும ரோகங்களுக்கு சிறந்த மருந் தெனக் கூறப்பட்டுள்ளது, wild cumin—Vernonia anthelmintica. It is a plant common everywhere; flower purplish; flowering in cold season; long peduncles. The dried seeds are dark-brown; taste, nauseous and bitter. Seeds are powerfully anthelmintic; as an ingredient of compound powder it is prescribed in snake-bites; an infusion of them is given for coughs and against flatulency; reduced to powder and mixed with lime-juice, they are used to expel pediculi from the hair; they are of great repute in the Ayurvedic Materia Medica as a medicine for skin diseases; they are also used in leprosy. Seeds also yield valuable oil by pressure.

காட்டுச் சீரக வள்ளி, காயா வள்ளி, humped yam—Dioscorea globosa. It is an esculent creeper; 2. காட்டுக் காய்வள்ளி, which see.

காட்டுச் சுண்டெலி, காட்டில் வாழும் சுண்டெலி. இது யுனானி வைத்தியத்தில் மிகுதியாக மருந்திற் குபயோகப் படும், forest mouse—Mus rodentia. This is used much in Unani medicine.

காட்டுச் சுண்டை, சுண்டை, Indian tree potato—Solanum pubescens.

காட்டுச் சுரம், மலைச் சுரம், malarial fever.

காட்டுச் சுரை, கசப்புச் சுரை, false calabash—Cucurbita lagenarius alias Rapo lagenarius.

காட்டுச் சுள்ளி, ஓர் வகை முள்ளி, Mysore prickly nail-dye — Barleria mysorensis.

காது விரணம், காதில் புண் புரை முதலிய வற்றால் ஏற்படும் விரணம், sores or ulcers from abscesses etc; ulceration of the ear.

காது விறைப்பு, காது முறைப்பு, stiffness of the outer ear.

காது வீக்கம், காதிற் குள் ஏற்படும் நோய் அல் லது புண்ணினால் உண்டாகும் வீக்கம், swelling of the ear through inflammatory diseases.

காது வெளியாதல், கா தடைப்பு நீங்கல், to be free from dullness of hearing; 2. செவிடு குணப் படல், the curing of deafness.

கா தெலும்பு, கன்னப் பொறி யெலும்பு, temporal bone.

கா தெழுச்சி, காதில் சதை வளர்ந்து, துவாரம் அடை படுவதனால் செவி டுண்டாகும் ஓர் நோய், a visible growth of flesh or swelling in the meatus attended with loss of hearing; 2. செவிக்குள் வரும் இரணம், an ulcer in the ear.

கா தெழுச்சி, காதி லெழுங் கட்டி. இது சாதா ரணமான நோய். இது காதிற் குள் மிக நுட்பமாய் அமைந் திருக்கும் உள் சவ்வுக்கு அழற்சி கண்டு, அதிலிருந்து கட்டி புறப்பட்டு சீழ் வரும். இக் கட்டி உண்டாகிற இடம்

மூளைக்கு வெகு சமீபமாய் இருப்பதால் இது அபாய கரமானது. இதனால் காது நரம்புகளில் குற்றம் ஏற்பட்டு, காது செவிடு, காதிரைச்சல், பல்வலி, கண்ணெரிச்சல் முதலியவைகள் ஏற்பட்டு, சல தோஷம், சைத்தியம், இவைகளுக்குக் காரணமாகும், discharge from the ear. It is a common ear trouble. It is due to the chronic inflammation of the middle ear resulting in a boil with a discharge of pus which escapes through a perforation in the drum-membrane. The seat of the boil is very near the brain; and so such discharge should be looked upon as dangerous; for, it may spread all around causing deafness, ringing in the ears, tooth ache, burning of the eyes cold in the head etc; and it may even lead to an attack of mastoid abscess.

காதெளிவு, பொற்றலைக் கையாந் தகரை. இதற்கு மஞ்சட் பூவுண்டு, verbisinia marigold — a variety of eclipse plant with yellow flowers.

காதைப் பொத்துதல், சத்தம் கேளாதபடிக் காதை மூடுதல், to shut the ears to prevent hearing.

காதொட்டி, அறுந்து போன காதை ஒட்டச் செய்யு மருந்து, a medicine or drug capable of re-uniting the two edges of a torn ear of a female; 2. சிற்று முட்டி, fragrant sticky mallow — Pavonia odorata.

காதொலி, காதின் சத்தம், sound of the ear; 2. See காதிரைச்சல்; 3. யோகாப்பியாசத்தில் காதில் கேழ்க்கும் சிலம் பொலி, சங்குநாதம் முதலியன, the different kinds of melodius sounds heard at a certain stage in Yoga practice, such as, the creeking of anklet, the blowing of conch etc.

காதொழுக்கு, காதில் சீழ் வடிதல், discharge of pus from the ear.

காதோடம், வெண் கடம்பு, white cadamba —Anthocephalus cadumba.

காதோதி, காதண்டை வந்து கூச்ச லிடும் பூச்சி அதாவது கொசு, an insect creating a noise near the ear — Mosquito.

காத் தட்டி, துதொண்டை, thorny caper— Capparis horrida alias C. zeylanica.

காத் தண்டு, (கா + தண்டு) தோட்டத்தில் விளையும் தண்டினம், இது கீரைத் தண்டு அல்லது வாழைத் தண்டைக் குறிக்கும், (garden + the stem of a vegetable plant) generally referring to the stem of garden greens — Amaranthus blitum or to that of plantain tree—Musa paradisiaca.

காத் தானம், மரப் பொந்து, the hollow of a tree.

காத்தியம், மென்று தின்னும் மருந்து, see காதியம்.

காத்திரம், உடல், body (as in திட காத்திரம்), 2. உறுப்பு, limb of the body; 3. கீரி mungoose—Herpestes mungo; 4. யானையின் முன் கால், the fore-leg of an elephant; 5. பாம்பு, snake; 6. அளவு, size (as in கண்டை காத்திரம்); 7. பருமன், thickness; 8. கனம், solidity; 9. உடற் பருமன், corpulence.

காத்திர வேயம், பாம்பு, snake.

காத்திரன், உடல் கனத்தவன், robust man.

காத் திராந்த லேபனி, வாசனைச் சந்தனம், perfumed sandal paste.

காத்திரி, கீரி, mungoose, see காத்திரம்.

காத்து, காற்று, wind; breeze See காற்று.

காத் தூலம், அதிகமாய்க் கள்ளைக் குடிப்பதினாலேற்படும் உடம்பு பாரிப்பு, stoutness of the body through drinking too much of toddy.

காத் தேனி, மணித் தக்காளி, black-berried solanum—Solanum nigrum.

காத் தொட்டி, } see காத் தட்டி.
காத் தோட்டி, }

காந்த அயசு, அயச் சிலை, iron ore.

காந்த ஊசி, காந்த ஆணி, magnetic needle. See காந்த ஆணி.

காந்த கம்பி, இடி தாங்கி, lightning rod; 2. மின்சாரக் கம்பி, electric wire.

காந்தகன், ரூத பாஷாணம், a kind of arsenic; mercurial poison.

காந்த காசீசம், அன்ன பேதி, green vitriol— Iron sulphate.

காந்த காஷ்டம், செவ் விறகு. பிணத்தைச் சுட உபயோகிப்பதா லிப் பெயர், red fuel probably referring to deodar or red sanders serving as fuel for burning the dead.

காந்தக் கல், *அயக் காந்தக் கல்*, loadstone or magnetic iron ore — Ferri oxidium magneticum; 2. *ஊசிக் காந்தம்*, magnet; 3. *சந்திர காந்தம்*, moon stone emitting moisture when exposed to moonlight; 4. *சூரிய காந்தக் கல்*, sun-stone emitting fire when exposed to sun's rays; 5. *தீக் கல்*, burning glass. See *காந்தம்*.

காந்தக் கவர்ச்சி, *காந்தத்திற் கியல்பிலேயே இரும்பு முதலியவைகளி னிடத்து உண்டான கவர்ச்சி அதாவது இழுக்குந் தன்மை*, the influence of a magnet upon certain metallic substances chiefly iron — Magnetic attraction.

காந்தக் கழி, *கழியைப் போற் செய்த காந்தம்*, bar-magnet; 2. *மாந்திரீகக் கோல்*, magic wand; magnetic rod.

காந்தக் களி மண், *திருமண் அல்லது கோபிச் சந்தனம்*, common magnesian clay used by a class of the Hindus for putting on Namam (*நாமம்*), the sectarian mark on the forehead; 2. *நாம வெள்ளை*, white earth used by Vaishnavites for Namam (*நாமம்*) obtained from Dwaraka; 3. *மஞ்சள் திருச் சுண்ணம்*, aluminous yellow earth obtained from the Ganges at Haridwar used by Madhwas. See *கோபிச் சந்தனம்*.

காந்தக் கிட்டம், *பச்சை யாயும். ஊதி விட்டு ஊதும பொழுது புகைகள், ரந்திரங்கள் இல்லாமல் வெள்ளியைப் போலும் விளங்கும் காந்தத்தின் கிட்டம்*, magnetic iron pyrites or ferrosoferric sulphide (magnetic iron sulphide) occurring in masses with a granular structure. When heated in a blasting furnace, it emits a green colour and then exhibits all characteristics like silver without impurities—Pyrrhotite or Pyrrhotine.

காந்தக் கிண்ணம், *காந்தத்தினுற் செய்த ஓர் வாயகன்ற பாத்திரம். இதில் பாலை விட்டால் பொங்கிவழியா தென்றும், இரசத்தை விட்டால் இரசங் கட்டி, வெள்ளி யைப் போலாகு மென்றும் கூறப்படும். இதைச் சித்தர்கள் காய சித்திக்காக வேண்டி புசிப்பதற்கு முன் கற்பத்தை இதில் விட்டு பத்திரப் படுத்துவார்கள். இக் கிண்ணம் செய்யு முறை வெகு இரகசிய மானது*, a basin made out of magnetic metallic compound by a secret *special* process known only to the Siddhars. It is said that milk boiled in it never over-flows and that mercury when poured into it, is consolidated and converted into silver. This vessel is said to be used for preserving Rejuvenating medicines.

காந்தக் கிண்ணி, *காந்த உண் கலம். இதை அடியிற் கண்டபடி செய்யப் படும். காந்தத்தை கல்லுப்பு, மெழுகு இவைகளுடன் கலந்து உருக்கி விந்தினுற் சுருக்குக் கொடுக்க கண் விட்டாடும். அப்போது வார்ப்பி லூற்றிக் கிண்ணியாக அடித்துக் கொள் வது*, magnetic eating dish. The following is the process of manufacturing it:—Magnet in a powdered state is mixed with the paste of consolidated sea-salt and then melted in a furnace and when the product is in fusion, drops of Vindhu (an unknown fluid) are let in off and on, till that state of completion, noticed by the glowing colour of the flame, is arrived at. Then the product is cast in moulds and then shaped according to the required size. See *காந்தக் கிண்ணம்*.

NOTE—This is an impossible task unless the consolidation of sea-salt (*கல்லுப்பு*) and the true sign ificance of the term 'Vindu' are ascertained.

காந்த சக்தி, *காந்தத்திற் குள்ள இழுக்கும் சக்தி*, magnetic power.

காந்த சத்து, *காந்தத்தின் சத்து*, magnesium; essence of magnesia; 2. *காந்த சாரம்*, magnetism,

காந்த சத்துக் கிண்ணி, see *காந்தக் கிண்ணம்*.

காந்த சத்துச் சுண்ணம், *காந்தத்தி னின்று சத்தெடுத்து அதை மற்றச் சரக்குகளோடுச் சேர்த்து புடமிட் டெடுத்த சுண்ணம். இது வாதத்திற் குதவும்*, an alchemical compound obtained by the calcination of a mixture of several alkaline compounds in which the essence of magnet forms the chief ingredient.

காந்த சத்துரு, *போகர் நிகண்டின்படி காந்தத் திற் குள்ள இழுக்கும் சக்தியை கெடுக்கும் வஸ்துக்கள், அவையாவன,—நவாச்சாரம், வெடியுப்பு, துருசு முதலியன*, according to Bogar's vocabulary, substances which destroy or retard the effect of the magnetic power such as salt-ammoniac, nitre, blue vitriol etc.

காந்த சத்துவம், *காந்த சத்துச் சுபாவம்*, natural magnetic power.

காந்த சாரம், காந்தத்தின் சக்தி, a peculiar property or power possessed by bodies or animals whereby they naturally attract or repel one another—Magnetism.

காந்த சிகிச்சை, காந்தம் கலந்த மருந்தைக் கொண்டு செய்யும் சிகிச்சை, a treatment effected through medicine prepared from magnet mixed with other ingredients—Magneto-therapy ; 2. மந்திர உச்சரிப்பினால் அல்லது மனோ சக்தியினால் நோய்களைக் குணப் படுத்துதல், magnetic treatment effected by chanting of Mantrams or a cure effected through animal magnetism i.e by magnetic passes—Hypnotic cure.

காந்த சிங்கி, காந்தம் சேர்ந்த ஓர் பாஷாண மருந்து, a poisonous compound containing magnet as one of the ingredients.

காந்த சிந்தூரம், காந்தத்தைப் புடமிட்ட சிகப்புத் தூள், a red-oxide obtained by calcination of magnet — Magnetic oxide of iron.

காந்த சூசி, காந்த ஊசி, magnetic needle.

காந்தச் சவளை, காந்த மணல், magnetic iron ore.

காந்தச் சுண்ணம், காந்தத்தை புடமிட்டு சுண்ணச் சத்தாக மாற்றிய மருந்து. இதைப் பாலுடன் கூட்டி ஒரு மண்டல முண்ண, உடம்பின் காந்தல், வெக்கை, வெதுப்பு, சூலை, பாண்டு, கிராணி முதலிய நோய்கள் போம், an alkaline compound of magnet obtained by calcination. It is said that by taking this powder internally for 40 days, chronic heat of the body, venereal or syphilitic heat, colic, dropsy, chronic diarrhoea etc. are cured.

காந்தச் செந்தூரம், see காந்த சிந்தூரம்.

காந்தச் செம்பு, காந்தத்தி னின்று தயாரிக்கும் வாதச் செம்பு, an alchemical copper prepared from magnet.

காந்தன் மலாரன், சவர்க் காரம், fuller's earth ; bleaching powder.

காந்தத் துருவம், காந்தத்தின் ஒடுக்க வழு, magnetic pole.

காந்த பசாசம், காந்தக் கல், loadstone or magnet.

காந்த பட்சி, மயில், pea-cock — Pavo cristatus.

காந்த பலம், காந்த சக்தி, magnetic power.

காந்த பற்பம், காந்தத்தைப் புடமிட்டெடுத்த வெள்ளைத் தூள். உள்ளுக்குச் சாப்பிட இது பூரண ஆயுளைக் கொடுக்கும், white oxide of loadstone or magnet obtained by calcination. It is taken internally for prolonging life.

காந்த பன்னிகம், சன்னி நாயகம், a plant prescribed as a specific for apoplexy or in cases of delirium.

காந்த பாஷாணம், முப்பத் திரண்டு பிறவி பாஷாணங்களில் ஒன்று, one of the 32 kinds of native arsenic.

காந்த பாத்திரம், see காந்தக் கிண்ணம்.

காந்த புட்பம், மந்தாரை, mountain ebony. See காஞ்சனகம்.

காந்தப் பெட்டி, காந்தத்திலும் செய்த திசை யறி கருவி, an instrument for directing the course of ships — Mariner's compass.

காந்த மணி, see காந்தக் கல்.

காந்த மண், செம் மண், a soft moist pasty mass of a reddish-brown colour—Moist peroxide of iron ; 2. காந்தத் தரு மண், magnetic oxide of iron — Ferri oxidum magneticum ; 3. காந்தச் சத்துள்ள செம் மண், magnesite wherein is found carbonate of magnesia.

காந்த மண் சத்து, காந்த மண்ணைப் போது மான அளவு எரித்து எடுக்கும் ஓர் வெண்ணிற மான சத்து, magnesia or oxide of magnesia extracted from magnesium carbonate by application of heat.

காந்த மண் ணுப்பு, பேதி யுப்பு, epsom salt —Magnesium sulphate.

காந்த மண் பற்பம், காந்த மண்ணி னின்று தயாரிக்கும் பற்பம். இது காந்த மண் கலந்த சுண்ணும்பு கல்லுக்குள் இயற்கையாகவே இருக்கும். இது வெண் ணிறமான பொடி, மருந்திற் குபயோகப் படும், magnesium carbonate obtained from magnesite—Magnisiae carbonas. This basic carbonate of magnesia exists in a native state in the mineral kingdom in magnesian lime-stones as carbonates. It is a white granular powder used in medicine.

காந்த மயமலை, காந்தமும் இரும்பும் கலந்து கிடைக்கப் பெற்ற மலை, mountain containing magnet mixed with iron ores.

காந்த மயம், (காந்தம் + மயம்), influence or predominence of magnetic power ; 2. (காந்தம் + அயம்) காந்தமும் இரும்பும் சேர்ந்தது, an alloy of magnet and iron.

காந்த மலை, காந்தம் வெட்டி யெடுக்கும் மலை, mountain wherefrom loadstone is dug out ; 2. காந்தமய முனை, magnetic pole.

காந்த மாட்டுதல், காந்த மூட்டுதல், to induce magnetic properties i.e to render a piece of iron magnetic ; 2. காந்தத்தை அரைத்தல், to grind loadstone into a powder.

காந்த மின்சாரம், காந்தத்தைக் கொண்டு மூட்டு மின்சாரம், electricity induced by means of a magnet — Magneto-electricity.

காந்த மின்னோட்டம், காந்த மின்சார வோட்டம், magneto-electric current.

காந்த மின் உபகரணம், காந்த மின்சாரக் கருவிகள், magneto-electrical apparatus.

காந்த மூசை, காந்தத்தினாற் செய்த மூசை, a crucible made of magnet.

காந்த மூட்டல், காந்தச் சக்தி கொடுத்தல், inducing magnetism.

காந்தம், இரும்புக் குணமுடைய வோர் உலோகம். இது மற்ற உலோகங்களைப் போலவே பூமியினின்று வெட்டி எடுக்கப் படும். இதற்குத் தான் காந்தச் சிலை அல்லது காந்தக் கல் என்று பெயர். இதற்கு இரும்பை இழுக்கும் சக்தி யுண்டு ; நிறம், வடிவு இவைகளைக் கருதி இது அடியிற் கண்டபடி *பல வகைப் படும். ஆனால் வடமொழி நூலின்படி இது நான்கு வகைப் படும். இது இயற்கையாகவே பூமியின் கீழ் உற்பத்தியாகி, இரும்புடன் கலந்து வெட்டி யெடுக்கப் படும். இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, எகிப்து இவ் விடங்களில் விசேஷமாய் அகப்படும். கல் காந்தத்தி னின்றும் அசல் காந்தம் எடுப்ப துண்டு. ஆனால் மின்சார சக்தியினால் காந்த சத்துக் கொடுத்து காந்தம் என விற்கப் படுவது போலிக் காந்தமே ஒழிய வேறல்ல. ஏனெனில், சில காலத்திற்குப் பிறகு, இச் சக்தி நீங்கி இரும்பைப் போலாகும்.

நாட்டு வைத்தியர்கள் இரும்பையும், காந்தத்தையும் சேர்த்து அயக் காந்த செந்தூரம் செய்வார்கள். இது உடம்புக்கு வலிவைக் கொடுத்து ஆயுளை விருத்தி செய்யும். இதை கந்தகத்துடன் கலந்து சயம், பாண்டு இவைகளுக்கும் கொடுப்பதுண்டு. சித்தர்கள் இதினின்று பாத்திரம் செய்து கற்பங் கொண்டதினால் காயசித்தி யடைவார்கள், magnet—Ferri oxidum magneticum of chemists. This is dug out from the earth just like other metals and it is known as loadstone. It has the power of attracting iron. It consists of several varieties as mentioned below according to their shape, colour etc ; but according to Sanskrit authorities, it is divided into four kinds as enumerated below. It is found in a natural state in combination with protoxide and peroxide of iron. It is found in large quantities in England, Germany, America, Egypt and other countries. Pure magnet is usually obtained from loadstone ; but iron to which is imparted the power of magnet by electric current is not a true magnet as it loses its virtue subsequently.

Vaidyans mix iron filings with loadstone and prepare calcined powder of red oxide which is said to invigorate the human system and prolong life. They also consider it to possess tonic and de-obstruent qualities and prescribe it with sulphur in cases of consumption and dropsy. Many are the uses of this metal as described in the Siddhars' science. Vessels are even made out of this by Siddhars and used as eating dishes which tend to rejuvenate the system.

*1. கல் காந்தம். இது சோகைக்கும் குன்மத்திற்கு முதவும், magnetic iron stone used medicinally in anemia and gastritis.

2. அரக்குக் காந்தம், a red variety of magnet.

3. ஏழு ஊசிக் காந்தம், one having a strong magnetic power to attract seven needles.

4. உருளைக் காந்தம் அல்லது பலவகைக் காந்தம், round magnet.

5. ஓட்டுக் காந்தம், flat magnet.

NOTE — வடமொழி நூற்படி காந்தக் கல் நான்கு வகைப் படும் :—உரோமகம், பிராமிகம், சம்பகம், திராவகம்,

காந்தம் பிடித்த பொடி, காந்தத்தில் ஒட்டியுள்ள பொடி, a mass of soft iron at the extremity of a magnet—Armature.

காந்தயச் சாரி, காய்ப் பூவரசு அல்லது காட்டுப் பூவரசு, which see.

காந்தம் பிடித்தல், *காந்தம் இழுத்தல்,* the attraction of a magnet.

காந்தரச விருட்சம், *சோதி விருட்சம். இதில் காந்தம், இரசம் இவைகளின் சக்தி யுள்ளதாகக் கருதி இப் பெயர் அமைந்தது போலும். இதின் வெளிச்சத்தினால் இரவு பகல் தோன்றாது. இம் மரம் வாதத்திற் குபயோகப்படு மென்று கருதப் படும்,* a tree luminous in the dark. It is so called because of the supposed virtue of this tree as containing the properties of magnet and mercury. It is said that, by its brightness, night and day could not be distinguished and that it is useful in Alchemy.

காந்தரவம், *பூமி,* earth.

காந்தருவ சுரம், *கனவில் விந்து நஷ்டத்தை யுண்டாக்கும் ஓர்வகைச் சுர நோய். இதனால் உடம்பு முழுவதும் வீக்கி, பல வீனம், தலை வலி, மதிப் பிரமை, கோபம், பசி யின்மை, பெரு மூச்சு, ஏப்பம், விக்கல், அடிக்கடி நீரிறங்கல், கண்களில் மஞ்சள் நிறம் படர்தல் முதலிய குணங்களுடனும் பாடுதல், பரியாசம் பண்ணல் முதலிய சின்னங்களையுங் காணலாம்,* a kind of fever attended with nocturnal emissions. It is marked by swelling all over the body, weakness, headache, hallucination, anger, loss of appetite, sighing, belching, hiccough, frequent discharge of urine, yellow colouration of eyes etc. It is conspicuous by its giving rise to mental affections such as laughing, singing, joking etc. with a sense of suffocation.

காந்தருவ நகரம், *ஆகாயத்தில் வசிப்பதாகச் சொல்லப் படும் ஓர் வகை தேவ சாதி,* a class of supernals (celestial beauties) supposed to be inhabiting the sky indulging in luxuries.

காந்தருவ பூத நோய், *காந்தருவ உலகத்தில் திரியும் பூதங்கள் மனிதர்களைத் தாக்குவதனால் ஏற்படும் நோய். இதன் தூண்டுதலினால் இப் பேய் பிடித்தோர் ஆடல், பாடல், சங்கீதம், கேளிக்கை முதலியவைகளை விரும்பிச் செய்வார்கள்,* a devilish disease supposed to be caused by the influence of the evil spirit hovering about the Celestial regions of the Gandharvas. It is said that such spirits induce in human beings strange and involuntary gesticulations such as singing, dancing, jesting, joking etc.

காந்தருவ பூதம், *காந்தருவருக்குள் ளுண்டாகும் இச்சைகளை மனிதருக்கும் உண்டு பண்ணு மோர் வித பைசாசம்,* a demon or devil responsible for imparting to men the ambitions and aspirations of the Gandharvas.

காந்தருவப் புணர்ச்சி, *ஆண் பெண் இருவரும் தங்கள் பெற்றோர் அல்லது பெரியோர்களது சம்மத மின்றி தாங்களே ஒருவருக் கொருவர் சம்மதித்துக் கலியாணம் அல்லது வேறு விதமான சடங் கொன்று மாகாமலே புணருதல்,* sexual intercourse which is brought about by the mutual consent of the male and the female of themselves without the knowledge or assent of their parents or elders in the family.

காந்தருவ மணம், *காதலர்கள் இருவரும் தம்முள் மன மிசைந்து கூடுவதனா லேற்படும் மணம். இது எண்வகை மணத்துள் ஒன்று,* one of the eight kinds of marriage contemplated in the Hindu Religious Codes under which the parties themselves bring about marriage on their mutual consent and effect their sexual union without formal marriage or any other usual ceremonial or customary rites.

காந்தருவம், see *காந்தருவ மணம்.*

காந்த ரூபம், *தான்றிக் காய்,* devil's abode — Terminalia belerica.

காந்த லவணம், *ஆயுர்வேத முறைப்படி செய்து வாத ரோகத்திற் குபயோகிக்கு மோர் வகை யுப்பு,* a medicated salt prepared with magnet according to the process of Ayurveda and recommended by experts for rheumatism and other nervous affections.

காந்த லாடம், *குதிரை லாடத்தைப் போற் செய்து காந்த சக்தி யூட்டிய இரும்பு,* horse-shoe magnet.

காந்தலாய்ப் போதல், *தீய்ந்து போதல்,* to become scorched. See *காந்துதல்.*

காந்த லோகம், *காந்தம்,* magnet (metal) ; 2. *வார்த்த இரும்பு,* cast-iron ; 3 *காந்தமும். இரும்பும்,* magnet and iron ; 4 *பூலோகம்,* Earth which in itself is a Magnet.

காந்தல், *உஷ்ணங் கொள்ளல்,* getting heated in body ; 2. *உமிக் காந்தல்,* the heat derived from burning the paddy-husk ; 3. *தீய்தல்,* becoming scorched ; 4. *வெப்*

பத்தினால் அழற்சி கண்டு உடம்பு இளைத்தல், being reduced or emaciated by the internal heat of the body as a result of inflammation of a particular organ, as the lungs in consumption; 5. நெருப்பின் வெப்பம், "ஓத்தலில் உலை வைத்து காந்தலில் கறி சமைத்தல்", glowing heat of fire as used in the above proverb; 6. மிதமிஞ்சி வேகுதல், being baked too much by fire.

காந்த வயசு, (காந்த + அயசு) அய மண், iron ore; 2. (காந்தம் + வயசு) காந்த மருந்துகளைச் சாப்பிட்டு அதனால் அடைந்த வயது, life prolonged by the use of the calcined preparations of magnet.

காந்த வலி, காந்தத்திற் குள்ள இழுக்கும் சக்தி, the attractive power of magnet.

காந்த விடா, சிறு வழுதலை, prickly night-shade— Solanum indicum.

காந்த வியம், புணர்ச்சிக்காகப் பிறரால் சேரப்படல், being approached for sexual intercourse.

காந்த விதசு, காந்தத்தினாற் செய்த இருசு, magnetic axis.

காந்த ஊசி, காந்தத்தினாற் செய்த ஊசி, magnetic needle; 2. வடக்கு திசையைக் காண்பிக்கு மோர் காந்த ஊசி. கப்பலை ஓட்டுவதற்காக உபயோகப் படும் திசையறி கருவி, mariner's compass always indicating the north. It is used for directing the course of ships.

காந்த வைத்தல், தீய வைத்தல், allowing to be scorched.

காந்தளம், கலப்பைக் கிழங்கு, plough root— Gloriosa superba.

காந்தனிகம், சின்னி மரம், birch-leaved acalypha—Acalypha fruiticosa.

காந்தள், சவர்க் காரம், fuller's or dhoby's earth; 2. வெண்காரம், borax; 3. கார்த்திகைப் பூ. இது அடியிற் கண்டபடி பல வகைப் படும், November flower—Gloriosa superba. It consists of different varieties as mentioned below;—

1. செங்காந்தள், red November flower.
2. வெண் காந்தள், white " "
3. சிறு காந்தள், small " "
4. செப்புக் காந்தள், red " "
5. கருங் காந்தள், black " "
6. நரிக் காந்தள், jungle " "
7. காய் காந்தள், another variety.

காந்தற் சோறு, தீய்ந்த சோறு, over-boiled and scorched rice.

காந்தாமற் கருகாம லெடுத்தல், பதனழியாத படிக்கும் தீயாமற்படிக்கும் பொங்கி எடுக்கும் பதம், a stage at which boiled substances are taken out without being over-boiled or scorched.

காந்தா யசம், அயக் காந்தம், iron mixed with magnet or the one containing magnetic power.

காந்தா ரகம், ஓர் வகைக் கரும்பு, a kind of sugar-cane.

காந்தாரப் பொருள், காந்தார தேசத்துக் காடுகளில் விளையும் பொருள்கள், the forest produce of Kandahar near Peshawar.

காந்தாரம், காடு, forest; jungle; 2. ஐம்பத்தாறு தேசத்துள் ஒன்று, one of the 56 ancient provinces of India i.e. Kandahar near Peshawar; 3. ஓர் கரும்பு, a kind of sugar-cane; 4. நோய்க் குறி அல்லது குறிகளுள்ள நோய், a symptom or symptomatic disease.

காந்தாரி, சிவனார் வேம்பு, Shiva's neem — Indigofera asphalathoides; 2. சத்தி சாரம், a prepared salt of burning and acrid nature as opposed to சிவ சாரம் which see; 3 எரிச்சலை யுண்டாக்குந் தன்மையது, that which is of a burning nature; 4. ஓர் வகைக் கரும்பு, see காந்தாரகம்; 5. காந்தார தேசத்தில் விளையும் பொருள்கள் அவையாவன :—குங்குமப் பூ, பிஸ்தா பருப்பு, குமிழந் தேக்கு முதலியன, substances growing in Kandahar including Kashmir flower — European saffron, Kashmir nut—Mismish, Kashmir tree —Goomil teak etc.

காந்தாரி, தச நாடியி லொன்று. இது கண்டமதி லோடி அவ்விடத் திரா நின்ற உயிரைப் பற்றி, பெரு நரம்போடு சேர்ந்து நிற்கும் ஓர் வகை நரம்பு. இது ஏழு நாடியாய்ப் பிரிந்து உடம்பில் காது, குரல்வளை, நரையீரல், ஈரல், வயிறு முதலிய பாகங்களுக் கோடி நிற்கும். இது இடகலை நாடிக்குப் பின் புறத்தில் சேர்ந்து இடது பக்கம் முன்னங் தண்டு வரையிலும் வியாபித் திருக்கும், one of the ten nerves extending to the throat absorbing or taking with it, the vital air present. It branches out into seven small nerves which are distributed

to the various regions of the body viz. the ear, the larynx, the lungs, the liver, the stomach, the alimentary canal and the heart — Pneumogastric nerves. It is a nerve joining in its posterior course with the Idakala (nerve-current of Prana) working in the left half of the body and the left sympathetic, perhaps the spinal accessory arising from the sides of the spinal marrow.

காந்தாரிக் களிம்பு, சீனக் களிம்பு, an ointment prepared by the Chinese.

காந்தாரி மிளகாய், சீனத்து மிளகாய், China pepper.

காந்தாளி, see காந்தாளிகம்.

காந்தாளிகம், சின்னி மரம், see காந்தளகம்.

காந்தாள், கார்த்திகைப் பூ, see காந்தள்.

காந்தானம், நாய் வேளை, dog mustard — Cleome viscosa.

காந்தி, சூரிய காந்தி. இது சூரியனைக் கண்டவுடன் பூர்க்கும், sun-flower — Hibiscus mutabilis. Lover of the sun. It opens when the Sun is up; 2. சந்திர காந்தி. இது சந்திரன் புறப்படப் பூர்க்கும், ஆகவே இப் பெயர், lover of the moon—Ipomaea bonanox. It is so called from its flower opening when the moon is up; 3. ஒளி, brightness, brilliance; 4. உஷ்ணம், heat; 5. கற்பூர சிலா சத்து, a fossil or mineral drug known as crystallised foliated gypsum; 6. கிரணம், ray; 7. இரசித பாஷாணம், a kind of arsenic; 8. விஷ்ணு கரந்தை, Vishnu's basil — Evolvulus alsinoides; 9. காவிக் கல், red ochre; 10. பசு மஞ்சள், turmeric; 11 வைடூரியம், a gem called cat's eye; 12. சிற்றிலைப் பூடு, iron weed — Serratula anthelmintica alias Vernonia anthelmintica; 13. பித்தம், bile; bilious humour.

காந்திகம், காந்த சக்தி. இச் சக்தியால் நோய்களை குணப் படுத்தலாம். இது ஆங்கிலேயருக்கும் ஜெர்மானியருக்கும் தெரியு முன்னமே வெகு காலமாய் நமது நாட்டில் தெரிந்து அநுசரிக்கப் பட்டு வந்தது, Magnetism. Diseases are cured by this method. It found its way into the Therapeutics of the ancient Hindus; and Animal Magnetism was very extensively practised in India long before they were recognised by Mesmer in Germany and John Elliotson in England.

காந்தி காட்டல், சூடு தாக்கல், imparting heat.

காந்தி கொள்ளல், உடம்பு சூடு கொள்ளுதல், system getting heated; 2. உடம்பு மேனி யடைதல், body becoming glossy.

காந் திதம், பித்தம், bile.

காந்தி தாயகம், ஓர் மரம், an unknown tree.

காந்திப் போதல், அதிகத் தீயினுல் தீய்ந்து போதல், becoming scorched by over-heat.

காந்தி யதிக மேனி, காவிக் கல், red ochre.

காந்தியான மருந்து, சூட்டை யுண்டாக்கு மருந்து, warmth producing medicine.

காந்தி யிருத்தல், அதிக சூட்டினுல் கருத்தல், blackened by being over-burnt or scorched.

காந்தியுட மூலி, சோதி விருட்சம், a plant luminous in the dark; 2. நீலஞ் சோதி, bright blue leaved plant.

காந்தி யோனி, சிலா மதம், bitumen, a fossil exudation; 2. உதிர பாஷாணம், a mineral poison. See இரத்த பாஷாணம்.

காந்தி யோன், கற்பூரச் சிலை, see கற்பூர சிலா சத்து.

காந்தி ரசம், குங்குமம், red powder or red paint used on the forehead by Hindus.

காந்திரி, புணருவதற்காக ஒரு பெண்ணினிடம் போதல், going to or approaching a woman for sexual intercourse.

காந்தீ கரித்தல், காந்த மேற்றல், rendering magnetic; imparting magnetic properties; inducing Magnetism.

காந்துகம், வெண் காந்தள், papery-barked obtused-leaved mangrove — Avicennia officinalis (alba); 2. வெள்ளை காந்தற் பூ, a white variety of gloricsa.

காந்துதல், எரிச்ச லுண்டாதல், burning as a sore; 2. தீய்ந்து போதல், becoming scorched; 3. பல்லினுல் கரண்டுதல், scraping with the teeth; 4. வெப்பங் கொள்ளல், feeling a glowing sensation in the body; 5. கருகுதல், becoming charred; 6. வெப்பத்தினுல் உறிஞ்சுதல், absorbing through heat.

காந்துவி, மண் ணீரல், spleen.

காந்தை, அழகு வாய்ந்த பெண், a lovely woman.

காங்தோ ரகம், செங் கரும்பு, red-coloured sugar-cane.

காபச்சார், see ஆதொண்டை.

காபடிகன், இந்திர சாலம் செய்வோன், a magician ; one creating an illusion,

காபணம், ஒத்தடம், fomentation.

காபதம், see இலாமிச்சை வேர்.

காபாலம், குட்டம், leprosy.

காபாலன், சிர்பந்த பாஷாணம், a kind of arsenic.

காபாலி, திருகு தாலி, twisted tali as in the proverb 'திலக முள்ளும் திருகு தாலியும்'.

காபி, see காப்பி.

காபிசம், see காபிசாயனம்.

காபி சாயனம், கள், toddy.

காபித்தம், விளா, wood-apple—Feronia elephantum.

காபிரம், சாம்பிராணி, frankincense benzoin.

காபிலம், உச்சி முதல் உள்ளங் கால் வரை ஈரத் துணியால் உடம்பைத் தேய்த்து சுத்தி செய்தலான ஓர் வகைக் குளியல். இது சாதாரணமாய் நோயாளிகளுக்காக வமைத்தது, a kind of bath generally prescribed for a class of bed-ridden patients; and it consists of rubbing them from head to foot with a cloth soaked in cold water and sponged—Sponge bath ; 2. கபிலப் பசுவின் நெய், ghee of a dark brown cow esteemed in diet.

காபினி, நவச் சாரம், sal-ammoniac — Ammonium chloride

காபுரம், வயிற் றுப்பிசம், tympany ; wind dropsy ; 2. பாக்கு மரம், areca-nut tree ; 3. ஓர் வகைக் கோரைப் புல், a kind of sedge grass — Cyperus pertinuis ; 4. ஓர் வாசனை, a perfume.

காபுலிக் கடுக்காய், முழுவதும் கன்றுப் பழுத்து சிவந்த நிறமடைந்த காபூல் தேசத்துக் கடுக்காய், a well-matured, red galnut of Kabul ; 2. சிவந்த சீனக் கடுக்காய், red China galnut ; 3. சீமைக் கடுக்காய், galnut imported from foreign countries.

காபுலிக் காவி, கற் காவி, Kabul earth — Armenian bole.

காபுலிப் பெருங் காயம், காபூலி லிருந்து வரும் பெருங் காயம், assafoetida obtained from Kabul in Afghanistan.

காபுலி மட்டி, see காபுலிக் காவி.

காபுலி யரிசி, வாயு விளங்கம், Kabul rice—Embelia ribes.

காபுலி யவரை, பெரிய அவரை. இது பெங்களூரில் பயிராகும், Kabul country bean ; broad bean — Vicia faba alias Fuba vulgaris. It is a plant with edible seeds grown in Bangalore.

காபேட்சு, நாணல், reed.

காப்பி, கோப்பிச் செடி. இது நமது தேசத்துச் செடி யல்ல; ஆனால் இந்த தேசத்திற்குக் கொண்டு வந்து பயிராக்கப் பட்டது. பூர்வதில் அராபியர்கள் மாத்திரம் இதை வழங்கி வந்ததாய்த் தெரிகிறது. இப்பொழுது தென் னிந்தியாவில் மேற்கு மாகாணங்களின் காடுகளில் பயிராகும். குளிர்ந்த தேசமாகிய மைசூர், குடகு, வைநாடு, நீலகிரி, திருவனந்தபுரம், மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலாகிய மலையாளம் இவ்விடங்களில் விசேஷமாய்க் கிடைக்கும். மேலும், சேர்வராய மலை, ஆனைமலை, ஜாவா, இலங்கை முதலிய தீவுகளிலும் விளையும். இச்செடி 15–16 அடி உயரம் வளரும். ஆனால், 2–3 அடி வளர்ந்த புல்லின் மேற் பாகத்தைக் கழித்துப் பக்கங்களில் தூரு விடும்படி செய்வார்கள். மூன்றாவது வருஷத்தில் காய்கள் விடும் ; காய்கள் கொத்து கொத்தாய் இருக்கும்; ஒவ்வொரு காய்களிலும் இரண்டு விதைகள் ஒட்டிக்கொண்டிருக்கும். பழுத்தக் காய்களை நசுக்கி, அதினின்று வரும் விதையைப் பொருக்கிக் காயவைத்து பதப்படுத்துவது தான் காப்பிக் கொட்டை, Arabian coffee—Coffea arabica alias C. vulgaris. This plant is not a native of this soil ; but it was introduced here by the Arabs who were formerly using it. It is now very common and is cultivated in the Western side of the presidency and runs wild in some forests. The chief coffee districts in S. India are Mysore, Coorg, Wynad, Nigiris, Travancore and all sections of the Western ghauts. There are also numerous estates in other isolated hill-ranges such as Shervaroys, Anamalais and in the islands of Ceylon, Java, etc. The plants grow to a height of 15–16 ft. ; and when they have grown 2–3 ft. high, they are topped to promote lateral growth. The trees begin to bear fruit during the third year. The berries are two-seeded

and closely united; they are found in clusters. When the tree bears fruit, the riped berries are picked up by hand and the pulp is removed; and the seeds therein are washed and dried. These are known as coffee-seeds.

NOTE—The plant was first brought across the Red sea from Abyssinia and cultivated in the mountains of Arabia; and this product was introduced in Europe at Venice in 1615 A.D. The plant was introduced into Southern India more than two centuries ago by a Muhamadan pilgrim, Bababuden, a fakir who took up his Samadhi and got buried on a hill in Western Mysore; that hill is even now known as Bababuden Giri.

காப்பிக் கஷாயம், காப்பித் தூளைத் தண்ணீரில் ஊறப் போட்டு இறக்கிய கஷாயம், coffee-decoction. See காப்பித் தண்ணீர்.

காப்பிக் கொட்டை, காப்பிச் செடியின் பழத்தினின்று எடுத்துக் காயவைத்து பதப் படுத்திய விதை. இதற்குக் கோப்பிக் கொட்டையென்றும் பெயர். இக் கொட்டையின் தரம், காயின் வடிவு, நிறம், வாசனை, செழிப்பு முதலியவைகளைக் கருதி, பலவிதமாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இதை வறுத்துத் தூள்செய்து கஷாய ரூபமாக வழங்குவார்கள். இது தான் காப்பித் தண்ணீர், coffee seeds—Coffea beans. It is from the ripe red berries that this seed is taken, washed and then dried. The value of commercial coffee depends upon the texture, form and size of the berry and its colour and flavour. Various are the species of the genus Coffee viz. alpestris, grumelioides, wightiana, liberica (Liberian coffee) etc. The seeds when ground and roasted are known as coffee-powder which is used for making decoction.

காப்பிச் சுரை, காப்பிச் செடியில் பூச்சிகளினு லேற்படும் நோய், a disease common to coffee crops caused by a fungus — Coffee Blight.

காப்பிச் செடி நோய், காப்பிச் செடியில் பூச்சி விழுந்து, அதன் காய்ப்பைக் கெடுக்கும் ஓர் நோய், a disease of the coffee plant caused by fungus (Hemibia vastatrix) which destrcys the whole crops.

காப்பிடம், ஒற்றிடம், fomentation.

காப்பித் தண்ணீர், காப்பித் தூளை வெந் நீரில் கொதிக்க விட்டு, கஷாயமாக வடித்து, அதில் பாலும் சர்க்கரையும் பலவாறாகக் கலந்துள்ள ஓர் வகைப் பானம். இது உஷ்ணத்தைத் தரக்கூடிய தாகையால், இதைச் சாதாரணமாய் நரம்பு மண்டலங்களுக்குச் சுறு சுறுப்பை யுண்டாக்க வுபயோகிப்ப துண்டு. இது உழைப்பாளிகளின் சிரமத்தை நீக்கி, ஆயாசம், களைப்பு இவைகளை மாற்றி, கிளர்ச்சியைத் தரும். இதைக் குடற் கோளாறு, வாதந் தலைவலி, சோம்பல், ஆரம்ப அசீரண பேதி, விஷம் அல்லது முறை சுரம் முதலிய நோய்களுக்குக் கொடுப்ப துண்டு. இது இருதயம், குண்டிக்காய், மேற்சருமம் இவைகளின் தொழில்களை விருத்தி செய்யும். இதற்கு வியர்வையை யுண்டாக்குங் குண முண்டு. ஆகவே, இதை குளிர் காலத்தில் பிரயோகிப்பதனால் சுறு சுறுப்பை யுண்டாக்கும். அருவருப்பைத் தரத்தக்க மருந்துகளான கொள்ளு, நிலா விரை, பேதியுப்பு முதலியவைகளின் ருசியை மாற்றுவதற்காக இதைக் கொடுக்கலாம். பால், சருக்கரை கலக்காமல், மிகுதியாகத் தூளிட்ட கஷாயத்தினால் காசத்தின் கொடுமை, கக்குவான் இவைகள் சிறிது தணியும். மயக்கத்தைத் தரும் அபினி, ஊமத்தை முதலியவைகளால் ஏற்பட்ட விஷங்களில் தெளிவை யுண்டாக்கி, போதையா லேற்பட்ட தளர்ச்சியை போக்கும். நரம்பு நோயா லேற்பட்ட மூளையின் வலியை மிதப் படுத்தும். வாந்தி பேதி சன்னிபாத சுரம் இவைகளின் ஆரம்பத்திலும் இதைக் கொடுக்கலாம். இக் காப்பித் தண்ணீரைத் தேயிலைத் தண்ணீரைப் போலவே சாதாரண பானமாக வுலக முழுதும் உபயோகித்து வந்தாலும், இதனால் ஏற்படும் நன்மைகளைவிட கெடுதிகள் பல வுண்டு. குளிர் தேசத்தில் உபயோகப் படுத்தக்கூடிய இதை, உஷ்ண தேசத்தில் உபயோகிப்பதால் நேரும் நோய்களுக்கு கணக்கே கிடையாது. அசீரண ரோகிகளுக்கு இது உதவாது; தூக்கத்தைக் கெடுக்கும். இதனால் பாரிச வாயு, சந்துப் பிடிப்பு, நீர் வியாதி முதலிய நோய்கள் உண்டாகும், coffee drink. It is a decoction of coffee powder to which are added milk and sugar in desired proportions. It affords heat to the system; and the effect of the coffee alkaloid is therefore to stimulate the nervous and vascular systems. It serves as a very useful drink for the labouring classes in fatigue as it produces a feeling of buoyancy and exhilaration, increases the heart's action and stimulates the system so as to sustain prolonged and

severe muscular exertion. It is prescribed medicinally for hemicrania, derangements of the viscera, drowsiness, diarrhoea at the infant stage, malarial and intermittent fever etc. It accelerates the action of the heart, the kidney and the skin; its diophoretic property aids generally its stimulating effect rendering its use desirable in cold climates and in the cold weather. It is given to disguise the taste of nauseous medicines, particularly quinine, senna and epsom salts. A strong decoction without milk or sugar is an effectual stimulent in opium poisoning and other narcotic poisons; it allays the severity of the paroxysm in spasmodic asthma or whooping cough. It is advantageously given in the depression after drunkenness; and it is very useful in all nervous affections manifesting depleted energy of the brain. It is recommended also in cholera infantum and in the early stages of typhoid fever.

Although the decoction of the coffee seeds is used as an ordinary drink like tea all over the world, the re-actions injurious to the system, arising from the use of this, are innumerable; and consequently, the disadvantages are apparently more than the advantages derived thereof. By its being used in hot instead of in cold climates, countless diseases are said to arise. Its use by dyspeptic patients is highly objectionable. It has the power like tea of retarding the advent to sleep for some hours. It is said to cause paralysis, rheumatism, diabetes etc.

NOTE—The crystalline principle Caffeine is identical with the Theine contained in tea. It is said to have the power of checking the waste of tissues. Coffee contains also nitrogenous substances, salts of potassium, magnesium and calcium in combination with phosphoric acid and chlorine.

காப்பித் தூள், காப்பிக் கொட்டையை வெண்ணெய் அல்லது நெய் யிட்டு வறுத்து இடித்து எடுத்த பொடி. இது வெகு மணமாக விருக்கும். இதைத் தான் காப்பித் தண்ணீருக் குபயோகிப்பது, powder of coffee seeds prepared by adding some butter or ghee to the seeds and then roasted. It is afterwards powdered and used in decoction. This powder bears a fragrant smell.

காப்பிப் பூச்சி, see காப்பிச் செடிப் பூச்சி.

காப்பியம், தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a treatise on medicine by Terayar, an ancient Tamil physician; 2. தாமரை மணி, pericarp of the lotus.

காப்பிரி, செந் நெரிஞ்சி, a red variety of caltrops—Tribulus terrestris; 2. ஓர் சாதி, Kaffir or negro of Africa; 3. புணர்ப்பின் முதன் மொழி, plant first term as in காப்பிரி மிளகாய், Kaffre chilly (large chilly).

காப்பிரிக் கோழி, இறகில் சுருட்டை மயிர்கள் வாய்ந்த ஆப்பிரிக்கா தேசத்துக் கோழி, a species of African fowl with a peculiar feather having a tendency to curl up; frizzled fowl.

காப்பிரி சல்லாத்து, காட்டு சல்லாத்து. இது சுருட்டை யுள்ள சல்லாத்துக் கீரைச் செடி. இது உடம்பின் சூட்டை யகற்றிக் குளிர்ச்சியைத் தரும், curled endive—Chichorium endiva. It eliminates the heat and cools the system.

காப்பிரி மிளகாய், பெரிய குட மிளகாய். இது பெரிது; குடத்தைப் போன்ற வடிவ முள்ளது; கார மிராது, சிறிய எலுமிச்சை யள விருக்கும்; தோல் கனதி, மெதுவு; தோட்டத்தில் பயிராகும். இதை இந்தியர்கள் தயிரி லிட்டு ஊறு காயாகவும் அல்லது காய வைத்து வற்ற லாகவும் உபயோகிப்பார்கள். ஐரோப்பியர்களோ, கறிக் குழம்பி லிட்டும் அல்லது இதைப் பிளந்து மசாலை யிட்டும், காடியுடன் சேர்த்து ஊறுகா யாகவும் உபயோகிப்பார்கள். இதில் சிறிய குட மிளகாய் என்பது மற்றோர் இனம், Kaffree chilly; pot-chilly; bell-pepper — Capsicum grossum. The title is from its shape of a water-vessel. It is a very large species of mild chilly, about the size of a lime; skin fleshy and tender; cultivated in gardens. Indians soak it in curd and use it as pickle or dry it in the Sun and use it as a fried curry. Europeans use them either in stews or have them opened, stuffed with certain spices and pickled in vinegar. There

is another variety a smaller one known as Cherry-pepper — Capsicum cerasiformis; 2. ஓர் கொடிய காரமுள்ள காப்பிரி மிளகாய், an intensely biting fruit known as African pepper - Capsicum fastigiatum.

காப்பிரி யெலுமிச்சை, காட் டெலுமிச்சை, Indian wild lime — Atlantia monophylla.

காப்பு, மூங்கில், bamboo—Bambusa arundinacea; 2. திருநீறு, sacred ashes worn for protection; 3. காவல், protection; 4. மந்திரித்தக் கயறு, a magic string used as a protective; 5. மாந்திரீகன் பாது காப்புக்காக தோளில் அணியும் ஓர் தடயம், a magic ring or bracelet made of copper or silver worn by magicians on their upper arms as a preservative from any injury by their adversaries; 5. See காப் புறை.

காப்பு கட்டல், பேய், பூதம் அல்லது பில்லி, சூனியத் தொழில் இவைகள் அணுகாதபடி, பாது காப்புக்காகக் கடவுளை தியானித்து குளிசம் அல்லது மஞ்சள் கயிற்றை பிணியாளிகளின் கையில் கட்டுதல், tying an amulet or a yellow string after praying to God, as a protective against the influence of evil spirits and other acts of malevolence; 2. மூலிகை சாபம் நிவர்த்தியாகும் பொருட்டு ஏற்பட்ட மந்திரத்தைச் செபித்து குறித்த மூலிகைக்கு மஞ்சள் நூல் கட்டுதல், tying a yellow string to a particular plant after chanting the appropriate mantrams for dispelling evil curses, so as to derive the full benefit of that drug towards diseases.

காப்புகா வரிசி, see கார்போக வரிசி.

காப்புறை, நோய்கள் அணுகாமற் படிக்குக் காக்கு மருந்துகள். இது தமிழ் வைத்தியப்படி காப்பு, நீக்கம், நிறைப்பு ஆகிய மூவகை மருந்துகளுள் ஒன்று, medicines which act as preventives in diseases. It is one of the three classes of medicines viz. preventive, curative, and suffusive as contemplated in Tamil medicine.

காமகக் கோரி, see இருவாட்சி.

காமகட்க தலம், தாழை, common screw-pine of India—Pandanus odoratissimus.

காம கஸ்தூரி, திருநீற்றுப் பச்சை, love-musk —Ocimum basilicum.

காம கமனம், காமத்தின் நடவடிக்கை, lascivious life; immoral habits.

காமகம், காமுறல், indulging one's passions by running after men or women.

காம காம், காமுகம் அதாவது காமத்தை மூட்டு மருந்து, any medicine that promotes sexual desire—Aphrodisiac.

காம கருக்கல், மூன்று மாதத்தியப் பிண்டம், foetus three month's old.

காம கலிதம், விந்து வெளிப் படல், discharge of semen; 2. வீரியம் பாய்தல், emission of semen.

காம காந்தம், குறிஞ்சா, see காமுகம்.

காம காமின், காம விகாரத்தினு லேற்படும் பலவித இச்சைகள், various desires or wishes following lust; the dictates of sexual passion.

காம கிருமி, பெண்களின் யோனியி லிருந்து கொண்டு தினவை யுண்டாக்கிக் காம விச்சையை யுணடு பண்ணும் ஓர்விதப் பூச்சி அல்லது புழு, a germ in the vagina of the females causing itching sensation and exciting them to sexual acts.

காம குணம், மோகம், passion.

காம கேசரி, அதிக மோகம், excess of sexual desire.

காம கேசரிக் குளிகை, புருஷருக்குத் தாது விருத்தியை யுண்டாக்கி அதிக மோகத்தை மூட்டு மோர் மாத்திரை, pills promoting excessive secretion of semen thereby exciting sexual desire in men — Aphrodisiac pills.

காம கேளி, காம விளையாட்டு, sexual perversion; love play; 2. புணர்ச்சி, coition; copulation.

காமக் கட்டு, காம விச்சையின் மிகுதி, excess of sexual passion; 2. அடக்காக் காம விச்சை, uncontrollable lust.

காமக் கண்ணி, காமப் பார்வை யுடையவள், a woman of lustful eyes.

காமக் கலகம், காமப் புணர்ச்சி, sexual congress; 2. காமச் சேஷ்டை, sexual perversion; disordered state of sexual impulse.

காமக் கவலை, காம விகாரம், anxiety or disquietude of mind caused through lustful thoughts ; 2. காம சேஷ்டை, lasciviousness.

காமக் கனல், பெண்ணின் காமத்தி னளவாக கலவியில் யோனி வழியாய் வெளிவரும் காம நீர், a fluid discharge in a woman from orgasm in sexual intercourse. This is unknown in Western science.

NOTE.—The ancient doctrine of the Siddhars is that each sex contributes a sexual fluid whose elements, mingling and getting incorporated into one, constituted the gnesis of a new being ; and this was long held to be an absurd theory by Western scientists. We see that this theory is not very far from what modern researches have established. So, this fluid is different from any discharge that might have escaped from the ovary on the part of the female.

காமக் காய்ச்சல், காம விரகம், feverishness experienced in lust through excitement —Venereal fever ; 2 பெண்களுக் கேற் படும் காமக் காய்ச்சல், a feverish condition in a female through extreme sexual desire.

காமக் கிரியை, see காம கேளி.

காமக் கிரீடை, காம லீலை, amorous sport.

காமக் கிழத்தி, குலப் பரத்தை, a faithful concubine of a courtesan's family ; a concubine who is not legally married ; 2. காமதனைத் தணிப்பவள், a woman satisfying man's lust.

காமக் குறி, யோனித் துவாரம், the vagina of a female.

காமக் குறிப்பு, காமத்தினால் உடம்பிற் காணப் படும் குறிகள், the symptomatic changes found in men and women through the excitement of sexual passion ; 2. காதலை வெளிப் படையாகக் காட்டும் சைகைகள், amorous gestures exhibited by a woman or man.

காமக் கூட்டம், இருவரும் தம்முள் மனமொ த்து பிறர் அறியாமல் செய்யும் புணர்ச்சி, clandestine intercourse after mutual consent.

காமக் கொடி, காமப் பெண், lascivious woman.

காமக் கொடியோன், சூத பாஷாணம், a kind of arsenic.

காமக் கொடுமை, காம விகாரத்தால் கொடிய காரியங்களைச் செய்தல், cruelty with sexual perversion—Tyrannism.

காம சரம், மா மரம், mango tree—Mangifera indica.

காம சரீரம், சூக்கும தேகம், astral or subtle body.

காம சலம், see காமக் கனல் ; 2. விந்து, semen —Semen virorunet mulierum.

காம சனனி, வெற்றிலை, betel-pepper — Piper betle.

காம சன்னி, காம விகாரத்தினால் ஏற்படும் சன்னியைப் போன்ற குறிகள், symptoms akin to those of delirium exhibited by persons intensely excited by sexual passion.

காம சாதி, கொக்கோ முனின்படி வகுக்கப் பட்ட நான்கு வகை பெண் சாதிகள், அவை யாவன,—பத்மினி, சங்கினி, சித்தினி, அத்தினி, the four classes of women as stated above divided according to their lust, and enumerated in the Tamil erotic science of Kokkaga Muni.

காம சாஸ்திரம், மதன நூல். இதுவே கொக் கோக நூல், erotic science or the science of love and love-play. It is classed as medical science for, it treats physically; and so it is termed as Sexual Physiology.

காம சாரம், see அபினி ; 2 மா மரம், mango tree.

காம சாரி, அடைக்கலக் குருவி, domestic sparrow. It is so called from its excessive desire for sexual intercourse.

காம சால்னம், காமதநா லுண்டானது, caused by passion ; arising from lust.

காம சித்தங்கம், காமக் கவலையும், காம பாதை யும் உள்ளவன், one whose mind and body is overcome with sexual passion.

காம சுந்தரம், பசு, cow.

காமச் சுரம், சையோக விஷயமாய் அதிக விரு ப்பதினால் ஏற்படும் காய்ச்சல். இதனால் மனோ வியாகூலம், மயக்கம், உணவு வெறு ப்பு, நெஞ்சு வலி, இளைப்பு முதலிய குணங்க ளுண்டாம். மேலும், ஆண்குறி, பெண் குறி, தொப்புள், முலை முதலிய விடங்களில் ஓர் உணர்ச்சியையும் சில சமயங்களில் உடம்பின் எரிச்சலையும் உண்டாக்கும், amative fever or fever-lust. It is a fever incidental

to an ungratified amorous longing of the heart or crowing due to any such ardent passion. It is characterised by aberration of mind, drowsiness, aversion to food, pain in the cordiac region and fast emaciation. It is also marked by a peculiar sensation in the male or female genital region, navel, nipple etc. and sometimes even by a burning sensation in the body.

காம ஞாலத்தி, see இலங்கை.

காமந் சுருக்கி, காம விச்சையைத் தணிக்கு மருந்து, an agent that lessens the sexual impulse — Ant-aphrodisiac.

கா மணம், சிறு மூலம், (lit) small root ; 2. திப்பிலி, long-pepper.

கா மணி, நவச் சாரம், ammonium chloride ; 2. கையாந் தகரை, eclipse plant — Eclypta prostrata.

கா மதம், பசுவின் சாணம், cow-dung.

காம தரிசனம், காமப் பார்வை, lustful look ; the look of a charming person ; looking lovely ; 2. காமக் காட்சி, illusion from lust.

காம தனம், ஊமத்தை, datura plant.

காம தாலம், குயில், Indian cuckoo.

கா மதுரம், சாராயம், arrack, liquor ; 2. கள்ளு, toddy ; 3. ஓர் மதுர பானம், a sweet drink.

காம தூதி, பெண் குயில், the female of an Indian cuckoo ; 2. பாதிரி மரம், trumpet flower tree—Bignonia suaveolens.

காம தூதிகம், ஓர் பூடு, a plant — Tiaridium indicum.

காம தேவர், பதினொரு தரம் சாரணைத் தீர்ந்த ஓர் இரசக் குளிகை. இதை சித்தர்கள் ககனம் பாய்வதற்காக வுபயோகிப்பார்கள், a consolidated mercurial pill animated eleven times. Siddhars use this pill for flying in the aerial regions.

காம தேனு, see காம தேவர் ; 2. தாளிப் பனை, talipot tree — Coripha umbraculifera ; 3. வெற்றிலை, betel-pepper—Piper-betle.

காமத் தானம், கொக்கோக நூலிற் கண்டபடி பெண்களுடம்பில் காமந் தங்கி நிற்பதாகக் கருதப் படும் சில பாகங்கள். இவை நகக் குறி முதலியவைகளினால் கூச்சமேற் படுத்தி காமப் பெருக்கை யுண்டாக்கக் கூடிய இடங்கள், certain parts of the female body. the excitation of which caused by a male through impress of nails etc. said to bring about erotic fancies and increase of sexual passion, as contemplated in the Science of Love compiled by Kokkoga Muni — Erotogenic zone.

காமத் திராச மூலம், see கருக் தக்காளி.

காமத் தீ, காமாக்கினி, இது உடம்பிற் தங்கி யுள்ள மூன்றாவித அக்கினியுள் ஒன்று, fire of lust, said of the venereal principle operative in the human body. It is one of the three fires in the human system.

காமத்துப் பாலோர், தூர்த்தர், lascivious people.

காமத்துப் பால், திருக்குறளில் காமத்தைப் பற்றிக் கூறும் பகுதி, a portion in the sacred 'Kural' treating of Love and Love affair ; 2. விந்து, semen ; 3. சுரதம், semen muliebre.

காமத் துரோகி, காமத்தை நீத்தவன் அதாவது சன்னியாசி, one who hates lasciviousness ; celebate ; 2. ஆசையை விட்டோன், one who got rid of all desires ; 3. பெண் ணாசையைத் துறந்தோன், one who is free from sexual desire.

காமத்துவச பங்கம், ஆண் தன்மை யில்லாமை, want of the power of procreation ; impotency.

காமத் தேகம், காம விச்சையை அதிகமாகக் கொண்ட தேகம், the body of a amorous person ; the body of a person easily susceptitible to sexual passion.

காமத் தேதி, காம விகாரி, a passionate person.

காமத்தைக் களையப் பண்ணணி, பூனைக் காலி, cowhage—Mucana pruriens.

காம நாயகம், காமத்தை விளைவிக்கும் ஓர் வகைப் பிசின். இது பெர்ஷியா தேசத்தி லிருந்து வரும் ஓர் புளுணிச் சரக்கு, a resin supposed to promote sexual desire. It is an aphrodisiac drug obtained from Persia and used by Unani doctors in medicine ; 2. ஓர் வகைப் பூண்டு, ammoniacum plant.

காம நீர், பெண் காமக் கினை, see காமக் கினை ; 2. சுக்கிலம், விந்து, semen, virile ; 3. தலைப் பிண்ட செய நீர், a pungent liquid prepared from the first-born child or foetus ; 4. வெடி யுப்பைக் கட்டி கார மேற்றிய செய நீர், a consolidated nitre exposed to night's dew to make it a pungent liquid.

காம நூல், மதன நூல். இது 64 கலைக்கியா னங்களி லொன்று, The Science of Love which is one of the 64 arts and sciences of the Hindus—Sexual physiology ; 2. கொக்கோக நூல். இதில் 64 லீலைகளைப் பற்றி விவரித் துள்ளதால், இதை ஒரு ஆபாச நூலெனக் கருதி, தற்கால நூல் ஆராய்ச்சி யாளர் அபிப் பிராயத்தின்படி இராஜாங்கத் தாரால் விலக்கி வைக்கப் பட்டுள்ளது, The Science treating exhaustively not only of Love and Love-affair but also about the 64 postures in sexual intercourse—Erotics. It is brushed aside by the modern scientists as obscene considering it as vulgar and too intricate and mysterious to be comprehended by modern science. It was written in verses in Tamil by Kokkoga Muni and is now proscribed by Government as an obscene publication.

காம நோய், காமத்தா லுண்டாகும் பலவித நோய்கள், diseases in common arising from sexual desire ; 2. காம விகாரம், morbid sexual instinct or desire—Eroticism ; 3. காமத்தா லுண்டாகும் வேதனை அல்லது துன்பம், love-sickness.

காம பாணி, கழுதைத் தும்பை, donkey toombay—Trichodesma zeylanicum.

காம பலம், காம விச்சை, sexual desire ; 2. காமத்தை விளைவிக்கும் ஓர் வகை மாம் பழம், a species of mango-fruit promoting sexual passion ; 3. காமத்தை யுண் டாக்கும் பழம், any fruit tending to increase sexual passion.

காம பலா, மாம் பழம், mango known as love-fruit—Mangifera indica.

காம பீடிதம், காம வேதனை, torment of lust.

காம பூதம், மனிதர்களுக்கு கனவில் அதிகமாகக் காம இச்சையை மூட்டும் மோகினி யென் னும் ஓர் பெண் பூதம், a female demon known as Mokini exciting excessive sexual desire in dreams of men or women ; 2. தான் கருத்து வைத்தத தலைவன் அல் லது தலைவியை நினைவிற் காணல், the appearance of her lover in a woman's dream or of his love in a man's dream ; the vision of a lover in dream ; 3. காமத் தால் ஏற்படும் ஓர் நோய், love-sickness.

காம போகம், காம நுகர்ச்சி, gratification of lust or sexual desire.

காம போகி, குன்றி மணி, crab's eye.

காம போசம், கமேலா மாவு மரம், Kamela tree — Rottleria tinctoria ; 2. ஓ ரூர், Cambodia.

காமப் பயித்தியம், காமக் கவலை, see காம வெறி.

காமப் பற்று, காம விச்சை, sexual desire ; 2. மனதின் தீக் குணங்களுள் ஒன்று, libidinous propensities ; 3. உலகப் பற்று, (in Moral Philosephy) wordly desire.

காமப் பாலுடம்பிற் கலத்தல், பெண்களின் நாதத்தை சித்தர்கள் தங்கள் உடம்பிற் கலக் கும்படிச் செய்தல், secretions of women absorbed by Siddhars' into their system through sexual contact or other means of sexual congress which are too delicate to be mentioned here ; 2. சித்தர் கள் தங்கள் விந்தைக் கட்டி இரத்தோட் டத்திற் கலக்கும்படிச் செய்தல், conservation of the sex-energy and the subsequent transmutation of this to physical strength and vitality by process of absorption through Yoga practice ; 3. காயசித்தி யடைதல், getting rejuvenated.

NOTE—The sex energy which is imported into the blood circulation invigorates the system thus paving the way for Rejuvenation. This is a secret process known only to Siddhars and Yogis.

காமப் பால், மூலைப் பால், mother's milk ; breast milk ; 2. விந்து, semen ; 3. பெண் ணின் நாதம், a fluid like semen supposed to be discharged by women during sexual intercourse—Aura seminis alias Halitus seminis.

காமப் பித்தன், புணர்ச்சியின் பேரிலேயே சதா ஞாபக முடையவன், one who is affected with erotomania—Erotomaniac.

காமப் பித்து, see காமப் பைத்தியம்.

காமப் பிராந்தி, see காமப் பைத்தியம் ; 2. மோக மயக்கம், delusion in love.

காமப் பிரியகாரி, அமுக்கிரா, burr wood — Physalis flexuosa.

காமப் புணர்ச்சி, சங்கற்பத்திரு லேற்படும் புணர்ச்சி, sexual union brought about by destiny.

காராம் பசு, நாக்கு, மடி, முலைக் காம்பு இவைகள் கருத்த பசு, a sacred cow, the tongue, the udder and nipple of which are black.

காராம் பசும் பால், காராம் பசுவின் பால். இதனால் விழிப் பிணி, க்ஷயம், குணமாகும், the milk of the cow with black tongue and udder, said to cure eye diseases and consumption.

காராயி, அடி யிரல் அல்லது மண்ணீரல், spleen.

காராவு, see காராம் பசு.

காரா வெண்ணெய், பசு வெண்ணெய், butter from cow's milk.

காரானை, மேகம், cloud; 2. கறுத்த யானை, black elephant; 3. காட்டுப் பலா, wild durian—Cullenia excelsa.

காரான், see காரா.

காரி, ஆவிரை, Tinnevelly senna; 2. கண்டங் கத்திரி, Indian prickly night shade; 3. காரிக் குருவி, which see; 4. கள், toddy; 5. காக்கை, crow; 6. கிளி, parrot; 7. கருமை, blackness; 8. களர் நிலம், brackish soil; 9. நஞ்சு, venom; poison; 10. ஈயக் கல், ore of lead; 11. கருப்புக் குதிரை, black horse; 12. காரீயம், black lead; 13. மிளகு, black pepper; 14. வெண்காரம், borax; 15. கருப்பு எருது, black bull; 16. பதினறு படி யளவு, a quantity consisting of 16 Madras measures; 17. ஆயுள் வேதத்தில் 4096 பலம் இடையுள்ளது, (*In Ayurveda*) a weight consisting of 4096 pallams.

காரிகடு மலை, see காரிய மலை.

காரிக மூலி, see காட்டு முருங்கை; 2 காரிகத்தைப் போக்கும் மூலிகை, any green herb curing eczema.

காரிகம், நீலம், blue; 2. see காரகம்; 3. உள்ளங் காற் றினவு, which see; 4. காவிக் கல், red ochre.

காரிகம், ஓர் வகைக் குஷ்டம். இதனால் உடம்பில் பல குருக்கள் எழும்பி, பிறகு ஒன்றோடொன்று கலந்து உள்ளங் கால், உள்ளங் கை அல்லது ஆசனவாய்ப் பக்கம் உண்டாகும் நோய். இதனால் அவ் விடத்து மயிர்கள் சிவப்பா யிருக்கும், a kind of eczema. It is but another form of leprosy in which the eruptions or patches extend or become confluent, invade the soles of the feet, the palm of the hands and the region of the anus and in which the local hairs assume a red colour; 2. ஓர் மேகப் படை. இது கால், கை இவந்து அல்லது கறுத்துத் தோலுரியச் செய்யும், an erythematous eruption affecting chiefly the hands, the feet, and the anus region. It is followed by exfoliation of the skin marked by red or dark brown pigmentation — Epidemic erythema or Acrodynia.

காரிகல், நத்தைச் சூரி, bristly button-weed —Spermacoce hispida.

காரிகா, வறட் சுண்டி, see ஆடு தின்னுப் பாளை.

காரி காலம், பாகற் கொடி, see கார வல்லி.

காரிகை, பெண், woman ; 2. கொடி வேலி, hedge-creeper—Plumbago zeylanica ; 3. வாலை, a young woman.

காரிக் கூன், இது திராட்சைச் செடியின் அடி பாகத்தில் உண்டாகும் மரக் காளான் என்றே சொல்லலாம். இது இலேசாகவும், கையிநூற் தேய்க்க உதிரும் ; வெண்மை யாயும், கசப்பாயு மிருக்கும். இது சூடு, வரட்சி, பித்தம் முதலிய கோளாறுகளை பேதியால் வெளிப் படுத்துவதோடு வாயு, சீக்கம், குடல் முறுக்கு, வயிற்று வலி முதலியவை கள் போம் ; விஷங்களை முறிக்கும். இதை உரலில் இடிக்கவும், அரைக்கவும் கூடாது. ஏனெனில், சிறு நகங்களைப் போல வஸ்துக் கள் இதிலுள்ளதால், இவை நஞ்சுக் குணத் தைக் கொடுக்கும். ஆகவே, உரத்த துணி யில் தேய்க்கத் தூள்கள் உதிரும் ; இதைத் தான் உபயோகப் படுத்துவது. இதில் ஆண் பெண் என இருவகைப் படும்.

இது முதலில் எகிப்து தேசத்துச் செடி, பிறகு அராபியரால் இந் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தாகையால், யுனானி வைத்தியத் தில் இது மிகுதியாக உபயோகப் படும். வட இந்தியாவில் 'காரகா' என்னும் மரத்தி னின்றும் எடுப்பதாகச் சொல்லப் படும், garikoon or garic—Polyporous ignarius alias Boletus. It is a fungus growth found generally at the bottom of the vine tree. It is light ; white and bitter ; pulverised by rubbing with the hand. It is a good purgative in removing heat, billiousness and dryness of the skin from the system. It should not be ground or pounded for the reason it becomes poisonous if some of the minute nail-like particles contained in them are reduced into fine powder and so, they are generally rubbed in some course cloth. There are two kinds of this, the male and the female agarics.

It was first brought into India by the Arabs and naturalised and so, it is much used in Unani medicine. It is also said that it is obtained from a tree named 'Karaka' in Northern India.

காரிக் கோழி, see கார் கோழி.

காரி சுண்டி, வாய் விளங்கம், wind-berry — Embelia ribes.

காரிண்டு, கருப்பு இண்டஞ் செடி, black mimosa—Mimosa rubicaulis ; 2. தறட் டிச் செடி, Indian cock's spur—Pisonia aculeata.

காரிப் பிள்ளை, ஓர்வகைக் கரிக் குருவி, a species of king-bird.

காரிப் புள், see காரிப் பிள்ளை.

காரிமை, கொடி வேலி, Ceylon leadwort—Plumbago zeylanica.

காரிய் கோரம், புகையிலை, tobacco — Nicotiana tobacum.

காரியக் கடுகு, see கற் பாஷாணம்.

காரிய சித்தி, எடுத்த காரியம் கை கூடுதல், success in one's undertaking.

காரியப்பித் துவேஷம், சோம்பு, anise-seed —Pimpinella anisum.

காரியப் பைத்தியம், பொய் அல்லது பாசாங் குப் பைத்தியம், false or feigned madness.

காரிய மாயை, மூலப் பிரகிருதி, Maya as the material cause of the world.

காரியம், கருப்பத்தி லுண்டாகும் செயர் நீர், amniotic fluid — Liquor amnii ; 2 ஏலம், cardamom — Elleterium cardamomum ; 3. செய்யுந் தொழில், action.

காரிய வாராய்ச்சி, தொழிலின் ஆராய்ச்சி, research in a particular business.

காரி யாதி, வெருங் காயம், see காயம்.

காரி யாவஸ்தை, ஆன்மாவுக்கு, காரணத்தி லேற்பட்ட மூன்று அவஸ்தைகள், the three minor conditions as effects of the soul derived from causes.

கா ரிரத்தக் குழாய், கருப்பு இரத்தக் குழல், vessels carrying impure blood ; vein.

காரிரத்தம், கருப்பு இரத்தம், venous blood ; 2. ஆடுதின்னுப் பாளை, which see.

காரி லவணம், பீடா லவணம், glass-gall — Fel vitri.

காரி விகாரி, குதிரை, horse.

காரி விதை, கண்டங் கத்திரி விதை, seeds of Indian prickly night shade.

காரிழை நாதம், கந்தகம், sulphur ; 2. குமரி நாதம், the fluid verile of a young woman called Nadam—Verile muliebre.

காரினி, விடத் தேர், asby babool ; sore-eye plant—Dichrostachys cinera.

காரீடம், எரு முட்டைக் குவியல், heap of cow-dung cakes.

காரீயம் பொருட் பேதி, see காரீயம்.

காரீயக் கல், கருப்பு ஈயக் கல், black lead stone—Graphite. It is a form of carbon occurring in pure, more or less iron state as crystalline rocks.

காரீய சத்துரு, கருப்பு ஈயத்தின் சத்துருச் சரக்குகள். அவையாவன, enimical drugs of black lead and they are:—

1. அயக் காந்தம், calcined oxide of magnetic iron.
2. திமிசு, bismuth or antimony.
3. இராச வர்த்தம், lapis lazuli.
4. சிப்பி, bi-valve shell.
5. அண்டம், fowl's egg or human skull.
6. நண்டு, river-crab.
7. நத்தை, snail.
8. கெவுரி, yellow arsenic.
9. கெந்தி, sulphur.
10. நற் சுண்ணம், calcium carbonate
11. அப்பிரகம், mica.
12. வெடி யுப்பு, nitre.
13. கல் லுப்பு, sea-salt.
14. கல் நார், asbestos.
15. சாரத்தி வேதி, a mineral dissolvent.

(போக. திக.)

காரீயச் செம்பி, செங் கீராய், a red plant of of Mollugo (chickweed) genus (unidentified); 2. ஒருக் கொம்பு, which see.

காரீயச் செம்பு, காரீயத்தோடு மற்றச் சரக்குகளைச் சேர்த்து உருக்கி யெடுக்கும் செம்பு, (*In Alchemy*) pure copper extracted from black lead by melting it with other ingredients.

காரீய தோஷம் போக்கி, see ஆத்தி முன்னங்கி.

காரீய பந்தனி, பொன் ஊமத்தை, yellow-coloured datura—Dhatura fastuosa; 2. கருப்பு ஈயத்தைக் கட்டு மூலிகை, a drug which cousolidates black lead.

காரீய பற்பம், காரீயத்தைப் புடமிட்டெடுத்த பற்பம். மூத்ர பிரமேகம், நீர் கடுப்பு ஆகிய வெட்டைச் சூட்டினா லெழுந்த நோய்களை யெல்லாம் குணப்படுத்தும், calcined oxide of lead. It is used as a curative in gonorrhoea, diabetes and all other urinary diseases said to arise from venereal heat.

காரீய போசனு, கா ரெள் ளெண்ணெய், black gingelly oil — Sesamum indicum.

காரீய மலை, காரீயம் வெட்டி யெடுக்கும் மலை, mountain wherefrom black lead ore is dug out—Black lead mine.

காரீய மித்துரு, காரீயத்திற்கு அநுகூலமான சரக்குகள். அவையாவன, friendly drugs to black lead and they are:—

1. நாகம், zinc.
2. மயூரச் செம்பு, copper from peacock's feather.
3. பூ நாகம், earth-worm.
4. செம்பு, copper.
5. வெள்ளி, silver.
6. வங்கம், lead.
7. சூதம், mercury.
8. தவளை, frog.
9. கல் மதம், bitumen.

(போக. திக.)

காரீயம், கருப்பு ஈயம், black lead; 2. பூ நாகம், graphite (from its softness)—Plumbago; 3. கரு நாகம், an impure zinc used in commerce—Speiter.

காரீயம் பலத்தி, மச்சம், fish.

காரீய லேகினி, காந்த சக்தியை இழுக்கும் ஈயக் கரி, a carbon point in an electric lamp—Crayon.

காரீரம், குழலா தொண்டை. இது ஓர் முட் செடி. இதன் பழத்தை உண்ணலாம்; கொழுந்தைச் சூரணித்து கொப்புளிக்கு மருந்தாக உபயோகிக்கலாம். இப் பூடு பச்சையாகவே கொழுந்துவிட்டெரியும், common caper — Capparis aphylla alias C. sodada. Its fruit is eaten; top shoots and young leaves are made into a powder and used as a blister in native medicine. The plant burns with strong flame even when green.

கா ருகச்சி, கக்கரிக் காய், field-cucumber — Cucumis melo.

காரு கத்தபம், வண்ணான் கழுதை, dhoby's ass distinguished from கோவேறு கழுதை, mule.

காரு கத்திரி, தொண்டையில் திரு திருப்பை யுண்டாக்கும் காரக் கத்திரி, a kind of brinjal the taste of which lends irritation to the throat; brinjal with an acrid taste.

காருகம், கருங் குரங்கு, black monkey; 2. குரோசாணி யோமம், Khorassan ajwaun — Hyoscyamus niger.

காரு கரவணை, காரக் கருணை. சாப்பிடத் தொண்டையில் திருதிருப்பை யுண்டாக்கும் ஓர் வகைக் கருணைக் கிழங்கு. இதன் வேர் கொடிய காரமானது; குமிண்டாக்க வெளிப் பூச்சு மருந்தாக வுபயோகப் படும். இதைத் துண்டித்து, புளி யிட்டு வேகவைத்தால் பாவிக்கலாம்; பாகு விட்டுச் சமைத்து காப்பிட வைத்து உப யோகிக்கலாம். இதன் விஷத்தைப் போக்க இதை இரண்டு, மூன்று தடவைக் கூட வேக வைக்க வேண்டி வரும், caustic potato; itching yam—Amorphophallus campanullatus. Roots resemble yam; and they produce itching sensation in the throat when baked and eaten. Roots are medicinally very caustic and are externally employed as stimulants; cut in slices and boiled with tamarind, they are useful as pickles; cooked in syrup and made into preserves; to remove or to get rid of the acrid taste they have to be boiled twice or thrice. See கருணைக் கிழங்கு.

காரு கலி, விடத் தலை, ashy babool; sore-eye plant—Dichrostachys cinera.

காருக் குளம்பு, கிராம்பு, clove.

காருங் கருவணை, see காரு கரவணை.

காருசகம், கா லெள், black sesamum — Sesamum indicum; 2. நுரை, foam; froth; 3. புற்று, white ant's hill.

காருசம், தானாகவே முளைக்கும் எள், sesamum growing spontaneously; 2. கருங்காலி, Ceylon iron-wood—Messua ferrea (typica); 3. கரையான் புற்று, white ant-hill; 4. யானைக் குட்டி, a young elephant; 5. சிவப் பரிதாரம், red orpiment; 6. see காருசகம்; 7. கடற் பாசி, see காருச் சிவல்.

காருச் சிவல், கடற் பாசி, Ceylon moss — Gracelaria lichenoides.

காருட தந்திரம், மந்திரத்தினால் விஷத்தைத் தீர்க்கும் வித்தையைக் கூறும் நூல், a treatise on the art of curing poisons or poisonous bites by charms.

காருடம், காருட வித்தை. இது 64 கலைகளுள் ஒன்று, the art of eliminating poisons from the human system through the chanting of Mantrams or by magic. This is one of the 64 well-known Arts and Sciences; 2. மரகதப் பச்சைக் கல், a green stone containing felspar and horn-blende; 3. மருக் காரை, see காரடம்; 4. கறிப்பு டோல், vegetable snake-gourd — Cucurbita anguinus; 5. காரடி வித்தை, jugglery.

காருட விஞ்சை, see காருட வித்தை.

காருட வித்தை, விஷம் அல்லது விஷ கடியைத் தீர்க்கும் வித்தை, the art of counter-acting poisons or poisonous bites by charms or by hypnotic suggestions; 2. சால வித்தை, செப்படி வித்தை, jugglery. See காருடம்.

காருடன், see கருடன்.

காருணி, வானம்பாடி, sky-lark; 2. பசளை, Indian spinach — Basella cordifolia; 3. see ஆடு தின்னாப் பாளை.

காருணிய நாமம், see கருணை.

காருண்ணி, see ஆடு தின்னாப் பாளை.

காருதவியம், கரு நாயுருவி, a black variety of Indian burr.

காருதிச் சிவல், கடற் பாசி, which see.

காருபம், மருக் காரை, see காரடம்.

காருப்பு, இலை வண்ணம், sesamum salt; 2. மர வுப்பு, salt obtained from wood-ash.

காரும் பாதி, கரு வண்டு, black beetle.

காரு ராசி, புடலங்காய், snake-gourd—Cucumis anguinus alias Trichosanthes anguinus; 2. மருக் காரை, see காரடம்.

காரு வாகன், வண்ணான், washerman.

காருள நாங்கி, கொத்தான், air-plant; air-creeper—Cassytha filliformis.

காருன்னி, see ஆடு தின்னாப் பாளை.

காருகம், கருங் குரங்கு, black monkey.

கா ருமத்தை, see க ருமத்தை.

கரொட்ச வாசன், பெருங் குறிஞ்சா, Indian Ipecacuanha—Tylophora asthmatica.

கா ரெலி, கறுப் பெலி, black rat; 2. கருப்பை, womb.

கா ரெள், கறுப்பு எள், black sesamum.

காரை, ஓர் செடிய முட் செடி. இதைப் பாழ் நிலங்களிலும், மைதானங்களிலும் காணலாம்; சில வீடுகளில் வேலிகளில் வைத்துப் பயிராக்கப் படும். பூக்கள் சிறியது; மஞ்சள் நிறம் வாய்ந்தவை; சிறிய பழங்கள் பட்டாணி யளவிருக்கும். இதன் பட்டையும், கொழுந்தும் சிறுபேதிக்கு உபயோகிக்க

[illegible] பழம் நிறத்தால்; இலையை கறி செய்வார்கள். இதன் வேருக்கு [illegible] பூச்சிகொல்லுங் குணமுண்டு. இது அடியிற் கண்டபடி பலவகைப் படும், thorny webera — Canthium parviflorum alias Gardenia micrantha. It is a thorny shrub found in waste lands; but in some places as a hedge plant; flowers small and yellow; fruits small and about the size of the pea; bark and young shoots are of much use in dysentery; leaves are used in curries; fruits are eaten; and the root is supposed to have anthelmintic properties. It consists of different kinds as mentioned below:—

1. செங் காரை, red canthium — Canthium parviflorum. See காரை.
2. குத்துக் காரை, scraggy thorny cauray — Canthium angustifolium.
3. கொத்துக் காரை, cluster cauray. See காரை.
4. மதுக் காரை அல்லது பெருங்காரை, sweet cauray or common emetic nut — Randia dumetorum. It is so called from the taste of the seeds.
5. மருக் காரை, same as No, 4.
6. பூங் காரை, flower cauray — Gardenia dumetorum.
7. சடைக் காரை, bushy honey-thorn, another variety.
8. ஈச்சங் காரை, a species of thorny webera resembling the country date-palm.
9. காட்டுக் காரை, இதுவே பிக்கி, leaved olive linden — Eleocarpus oblongus.
10. மலைக் காரை, mountain cauray — Canthium Neilgherrense.
11. மனைக் காரை, Voa vanguer of Madagascar — Vangueria spinosa (edulis).
12. மதக் காரை, same as No. [illegible]
13. மலை மருக்காரை, hill emetic nut — Randia candolleana.
14. உகாக் காரை — உருத் திராட்சச் செடி, wild olive linden — Eleocarpus serrata.
15. வெள்ளைக் காரை, grey emetic nut — Randia uliginosa.
16. வையக் காரை, sweet thorn — Flacourtia cataphracta.
17. தேன் காரை, honey-bush — Murraya exotica.
18. குதிரைக் காரை. இதுவே ஒதிய மரம், elephant cauray or Indian ash tree — Odina wodier.
19. கருங் காரை, black cauray — Canthium didymum.
20. நல்ல காரை, common honey-thorn — Webera tetrandra.
21. மலர் காரை, spinous cape jasmine — Gardenia turgida (montana).

NOTE.—Although the names of the varieties mentioned above end with the same term or suffix காரை, they all appear to belong to different botanical groups except the Canthium genus in Nos. 1—3 and 10.

காரை, பாகல், spiked bitter snake-gourd — Momordica charantia; 2. காறை எலும்பு, collar bone; 3. பற் காறை, tartar of teeth; 4. பெருங் காரை. இதன் சாற்றினால் தங்கம் சேர்க்கப்படும், common emetic nut. It is a shrub, the leaves of which act on gold chemically; 5. காரல் மீன். இது பலவகை யுண்டு. அவையாவன, a sea fish —Bride-fish. It consists of different kinds and they are:—

1. பெருங் காரல், large bride-fish — Equuala splendens.
2. கழிக் காரல், back-water bride-fish.
3. கருப்புள்ளிக் காரல், another variety.
4. பொட்டுக் காரல், spotted bride-fish —Equuala eduntula.
5. செங் காரல், red bride-fish — Lutjanus marginatus.

காரைக் கட்டு, see காக்கட்டு; 2. [illegible] நோய். இதனால் வர்ந்தைக் கட்டு பல்லின் மேல் இறுகும் பசிங்கு விழுந் தகும், a disease of the teeth in which the crystallised deposits at their roots get cemented together and separate later from the teeth taking away a part of their (enamel) coating — Calcareous deposit.

காரைக் கட்டு, பல்லின் அடியில் கெட்டித்த படர்தல், formation of hard crust or concretion in the teeth.

காரைக் கரிக்கான், see உருந்து.

காரைக் கீரை, see கொடிவலம்

காரைசா, புனுகு, civet.

காரைச் செங்காரி, சாம்பிராணி மரம், Java almond—Canarium commune.

காரைச் செடி, see காரை.

காரைத் தேசிகம், துத்தி, Indian marsh-mallow—Sida mauritiana.

காரைப் பழம், காரைச் செடியின் பழம், honey-thorn fruit.

காரைப் பொடி, காய்ந்த ஓர் சிறு மீன், a small bride-fish—Equuala genus.

காரை யெலும்பு, கழுத்தின் கீழ் இரு பக்கங்களிலு முள்ள வெலும்பு, collar bone. See காறை யெலும்பு.

காரை விழல், see காரைக் கட்டு.

காரை வேர், காரைச் செடியின் வேர், root of காரை, which see; 2. பல்லினடி, the bottom or root of the teeth at the cemented portions.

கார், ஆவணி, புரட்டாசி மாத மழை காலம், the rainy season of August and September; 2. இருள், darkness; 3. கருங்குரங்கு, black monkey; 4. கார்ப்பு, pungent taste; 5. கார் நெல், a red coarse paddy; 6. நீர், water; 7. மேகம், cloud; 8. வெள்ளாடு, goat; 9. திப்பிலிக் கட்டை, root of long pepper—Piper longum; 10. கருமை, blackness; 11. கருப்பாயுள்ளது, that which is black; 12. கருங்குட்டம், black leprosy; 13. ஆண் மயிர், men's hair; 14. அறிவு மயக்கம், illusion; 15. மழை, rain; 16. அழகு, beauty; 17. எலி மயிர், rat's hair; 18. பசுமை, greenness; 19. வார்த்தை அல்லது செடியின் முதன் மொழி அல்லது உபசருக்கம், word's prefix or first term as in கார் இரத்தம், black blood or கார்க் கோவை, scarlet fruited gourd—Cephalandra indica.

கார் கருவணை, see காரு கவணை.

கார் காஞ்சிரம், கருப்பு எட்டிப் பூடு; இதன் அடித்தண்டு அறுகோணம்; இலைகள் வாய்த்தது; பூக்கள், வெளிறிய சிவப்பு. இதன் சமூலத்தை அரிசி களைந்த நீரில் இடித்துப் போட்டு கஷாயமாகச் செய்விக்க பாம்புகடி குணமாகும், bitter luffa — Peristrophe bicalyculata. Stem hexagonal with boughs; flowers pale rose. Whole plant macerated in an infusion of rice is a remedy in poisonous snake-bites. C.f. சிவ வேம்பு.

கார் காய், சந்திர நாகம், a black serpent—Caput draconis; 2. கார்த்திகை மாதத்தில் காய்க்கு மாங்காய், mango yielding in November.

கார் காலம், மழை காலம், rainy season.

கார் காலங்கி, பழு பாகல், buffalo carolah—Momordica dioica alias M. hispida.

கார் குவளை, மழை காலத்திற் பூக்கும் குவளைப் பூ, water-lily flowering in rainy season.

கார் குறட்டை, கருங் காக்கணம், which see.

கார் கை, துவரை, common dholl — Cajanus indicus.

கார் கொன், காரிவா மரம், tooth-brush tree—Salvadora persica alias S. wightiana; 2. கறுப்புக் கொன், see கருங் கொன்.

கார் கோணி, தேட் கொடுக்கி, Indian turnsole — Pandamus odoratissimus alias Heliotropium indicum.

கார் கோல், see கருஞ் சீரகம்.

கார் கோழி, கருங் கோழி, fowl with a black skin.

கார்க் காய், see கார் காய்.

கார்க் கோடகன், கருடக் கல், mineral stone used as an antidoote in snake-bites. See also கருடக் கல்.

கார்க் கோடம், பிரண்டை, adamant creeper—Vitex quadrangularis.

கார்க் கோடன், see கருப்புப் பச்சை.

கார்க் கோலம், கார்போக அரிசி, hazel-leaved psoralea—Psoralea corylifolia.

கார்க் கோரை, கோரைப் புல், koray or sedge grass—Cyperus rotundus.

கார்க் கோல் விதை, see கார்க் கோலம்.

கார்க் கோழி, கறுப்புக் கொன், see கருங் காணம்; 2. see கருஞ் சீரகம்; 3. தேட் கொடுக்கி, see கார் கோணி; 4. நிலப் பனை, ground palm — Curculigo orchioides.

கார்க் கோழிகம், தேட் கொடுக்கி, see கார் கோணி.

கார்க் கோழினி, கருங் கொள்ளு, black gram, see கருங் காணம்.

கார்க் கோளி, see கார்க் கோழி ; 2. முத்தக் காசு, koray root—Cyperus rotundus.

கார் சினம், கருப்பு ரத்தம், வாந்தியும் பேதியு மாய் வெளி வரும் ஓர் நோய், Black vomit, a disease characterised by evacuation and vomitting of dark bloody matter—Melaena.

கார்ட் கிழங்கு, மஞ்சள் முள்ளங்கி அல்லது, காச்சக் கிழங்கு. இது இந்நாட்டுச் செடி யல்ல, சீமையின். விதைகள் நரம்பிற்கு வலி மை யுண்டாக்கும் ; உஷ்ணத்தைத் தணிக் கும் குணமும், உடம்பிற்கு ஆரோக்கியத்தை யுண்டாக்கும் தன்மையும் வாய்ந்தது. இவ் விதைகளை தேனிலிட்டுக் காய்ச்சி புளிக்க வைத்தால் ஓர்வகை மதுபானம் கிடைக்கும். இக்கிழங்கு சாப்பிட வுதவும். இதில் அராபிக் கிழங்கு என்று ஒரு இனமும் உண்டு, carrot —Daucus carota. It is a foreign plant acclimatised here. Seeds are medicinally nervine tonic; boiled with honey and fermented they yield spirituous liquor; roots refrigerant and alterative, and familiar as food. Gaujar is another Arabic variety of this root.

கார்த்த பத்திரி, வறட் சுண்டி, see ஆடு தின்னாப் பாளை.

கார்த்தபம், கழுதை, ass. See கர்த்தபம்

கார்த்தம், காமம், sexual passion.

கார்த்தல், உப்புக் கரித்தல், to be saltish; having saline taste.

கார்த்தன், துரிசு, blue vitriol—Copper sulphate; 2. செம்புக் களிம்பு, verdigris.

கார்த் தாளி, see தாளி.

கார்த்திகை, காந்தள், November flower; 2 தேள், scorpion; 3. கார்த்திகை நட்சத்திரம், the third lunar asterism.

கார்த்திகைக் கிழங்கு, கலப்பைக் கிழங்கு, இதற் குக் கண்வேலிக் கிழங்கு, காந்தள், அக் கினிச் சிலம், தலைச் சுருளி, கோடல், கண் வலிப் பூ, வெண் தோன்றி, தன்னீர்க் கிழங்கு என்று பல பெயர்களுண்டு. இந் நாட்டில் சுதேசி வைத்தியர்கள் வசநாபிக் குப் பதிலாக இதை உபயோகப் படுத்து கிறார்கள். செப்புப் பூக்கள் நீளமாயும், இதழ் கள் திருகிக் கொண்டு மிருக்கும். இக் கிழங்கு குழலையப்போல நீளமாயும், ஒரு பக்கம் வளைந்தும், இரண்டு முனைகளிலும் கூர்மையுள் ளதாக உள்ளதாகவும், 3–5 அங்குலமும், விரற் பருமனுள்ளதாயு மிருக்கும். மணல் வெளியிலும், ஈரமுள்ள நிலங்களிலும் விளைவது பெரிதா யிருக்கும். இதன் மேற்றோல் சுருக்க மா யிருக்கும் ; வெளிப் பக்கம் கபில நிறம் ; உட்புறம் வெண்மை ; கரகரப்பா யிருக்கும். அதிக வளவில் உட் கொண்ண விஷத் தன் மையை யுண்டாக்கும். இக் கிழங்கு இரைப் பைக்கு வலிமையும், உடம்பிற்கு ஆரோக்கி யத்தையும் கொடுக்கத் தக்கது.

நமது நாட்டு வைத்தியர்கள், பிரசவத் தில் நஞ்சுக் கொடி விழாமற்படி தொந்திரவு ஏற்பட்டால், இதை அரைத்து உள்ளங் கை கள், உள்ளங் கால்களுக்குப் பூசுவ துண்டு. பிரசவ வலியை யுண்டாக்கத் தொப்புள், கடிதடம், யோனிவாய் இவ் விடங்களிலும் தடவுவ துண்டு. இதைத் தேனிற் குழைத்து வெள்ளைக்குக் கொடுக்கலாம். குடற் பூச்சி கள் சாக வேண்டி மாடுகளுக்கும் கொடுப்ப துண்டு, plough root. November-flower plant — Methonica superba alias Gloriosa superba. It has various names as Hary's plant, Country aconite, Flame-flower, Malabar glory lily etc. Vaidyans substitute this for Aconite. The root of this plant is tuberous and cylinderical, bent near one end and occasionally much pointed at both ends; length 3–5 inches, about the size of a finger; sometimes larger when the plant grows in the sandy and wet soil; it looks shrunk; brown outside and white inside; its taste is bitter but not acrid. In large quantities it is poisonous. The tuberous root is a tonic and stomachic.

Vaidyans apply the paste of this root to the palms and the soles of women in cases of retained placenta or to the navel, supra-pubic region and vagina for promoting pains in difficult parturition; mixed with honey it is given in gonorrhoea. It is employed as an anthelmintic for cattle.

NOTE—5 to 10 grains of powder of this root is regarded as a tonic. It is considered as possessing nearly the same medicinal properties as that of Aconitum ferox (வசநாபி). A salt is obtained from the root by repeated washing and grinding throwing away the liquor; and the white powder found as a residue at the bottom, is bitter to the taste, though not poisonous; and it is prescribed for gonorrhoea.

கார்த்திகைக் கொடி, see கார்த்திகைக் கிழங்கு.

கார்த்திகை சேவகன், கரு நாபிக் கிழங்கு, black aconite—Aconitum ferox.

கார்த்திகைப் பூ, கார்த்திகைச் செடியின் செப்புப் பூ. இதுவே கண் வலிப் பூ, the red flowers of plough-root plant — November flower. It is used in Ophthalmia.

கார்த்திகை வாளை, கார்த்திகை மாதத்தில் அகப்படும் ஓர் வாளை மீன், Ribbon fish found in the month of November—Trichiurus savala. It is silvery-white of about 16 inches in length.

கார்த் துளசி, see கருந் துளசி.

கார் நாற்றம், முதல் மழையில் பூமியினின் றெழும்பும் மண் ணாற்றம், earthy odour arising from the soil during the first rain of the year.

கார் நிதி, பேய்ப் பீர்க்கு, wild bitter gourd; wild luffa—Luffa acutangularis.

கார் நிறக் கல், மேக வர்ணக் கல், a dark-grey stone—Basalt.

கார் நிறம், கருப்பு நிறம், dark colour; 2. மாமிசநிறச் சிலை, (lit) a red stone of the colour of flesh. See சாக் கல்.

கார் நெல், கார்காலம் அதாவது ஆவணி புரட்டாசி மாசத்தி லறுக்கும் நெல், paddy reaped in the rainy season of August and September.

கார் நொச்சி, கருப்பு நொச்சி, black species of vitex. See கரு நொச்சி.

கார் புகா, கார் புகா வரிசி, கார் போகம், } see கார்போ கரிசி.

கார் போகரிசி, கார்ப்புகா அரிசி. இது கார் போகி என்னும் செடியின் விதை; கருஞ் சிவப்பு நிறமுடையது; அண்ட வடிவாயும், வாசனையாயும், கசப்பாயு மிருக்கும். மலத்தை இளக்கும்; சுரு சுருப்பை யுண்டாக்கும்; காம விச்சையைத் தரக் கூடியது. இவை கள் சரும ரோகங்களுக் குபயோகமாகும். இரைப்பைக்கு வலிவைத் தரும். இவைகளி னின்று எண்ணெய் எடுக்கலாம். இவ் வெண் ணெய் நிறமற்றதாகவும், தண்ணீரை விட இலேசாயும், வாசனை பொருந்தியதாயு மிருக் கும்; இதை சால் முகரா வெண்ணெயோடு கலந்து வெண் குட்டத்திற்குப் பூசலாம். விதைகளை, பசும் பாலில் அரைத்து பாம்பு விஷம், நமைச்சல், ஆனைச் சொறி, குஷ்டம், கரப்பன், இரணம், முதலிய சரும ரோகங் களுக்கு மேலே தேய்த்துக் குளிக்க குணமா கும்; தேள் கடிக்கும் உபயோகிக்கலாம். இத னால் பசி அதிகரிப்பதுடன், புத்தியும் உண் டாகும், babchi seeds; seeds of hazel-leaved psoralea — Psoralea corylifolia (seeds of). These seeds are dark brown in colour, about the size of a mustard; oval-shaped, having aromatic odour and unctuous bitter taste; they are laxative, stimulant and aphrodisiac. They are also stomachic and de-obstruent and are useful in skin diseases. Oil extracted from the seeds is colourless, lighter than water, and aromatic. Diluted with Chalmugra oil, it forms a useful application in leucoderma or white leprosy. Ground into a paste and mixed with cow's milk, they are recommended for skin diseases such as itches, psoriasis, leprosy, eczema, ringworm etc. and also in poisonous bites as of scorpion etc. They also increase appetite and improve the intellect.

கார் போகி, கார்ப்போகு செடி அல்லது கார்ப் புகா, hazel-leaved psoralea; scurfy pea —Psoralea corylifolia.

கார்ப் பவம், see கருனைக் கிழங்கு.

கார்ப் பாசம், பருத்தி, Indian cotton shrub —Gossypium herbaceum.

கார்ப் பாசி, see இலைப் பாசி.

கார்ப் பாதி, see கார்ப் பாசம்.

கார்ப் பானை, உவர்ப்பானை, acrid; pungent; 2. உவர்ப்பானை, saltish.

கார்ப் பான், கையாந் தகரை, eclipse plant—Eclypta prostata.

கார்ப் பிகம், கருப்பப் பை, womb; uterus.

கார்ப் பீகம், பருத்தி, see கார்ப் பாசம்.

கார்ப்பு, அறுவகை சுவைகளுள் ஒன்று அதாவது உறைப்பு, one of the six tastes viz. raciness; 2. கரிப்பு, saltishness; 3. காரமானது, that which is corrosive or caustic; 4. கசப்பு, bitterness; 5. காரம், pungency; 6. கெட்டி, hard; 7. கரிக்குந் தன்மை, corrosiveness.

கார்ப் புப்பு, காரமான வுப்பு, a caustic or corrosive salt of any kind.

கார்ப் புரம், நீர், water; 2. பொன், gold.

கார்ப் புகா, கார்ப் புவா, } see கார் போகரிசி.

கார்ப் பெயல், பெரு மழை, heavy rain.

கார்ப் போகு, see கார் போகரிசி.

கார் மணி, கரிமணிக் கண்ணி, see கார்ப்பான்; 2. காராமணிப் பயறு, see காராமணி.

கார்மணித் தக்காளி, see கருப்பு மிளகு தக்காளி.

கார் மனத்தகம், தீய் எண்ணமுள்ள மனம் தன்மை, evil-mindedness; 2. பில்லி, சூனியம் முதலியவைகளைச் செய்து ஒருவருக்குப் பல தீங்குகளை யுண்டாக்கும் கெட்ட எண்ணம், evil-mind with a tendency to inflict harm to one through magic, sorcery etc.

கார் முகம், மூங்கில், bamboo; 2. மேகம், cloud.

கார் முகன், சோர பாஷாணம், a kind of prepared arsenic; 2. கருப்பு நிறமான ஓர் வகைத் தேன், a kind of dark-coloured honey; 3. மலை வேம்பு, hill neem—Melia sempervirens alias M. composita.

கார் முகில், ஓர்வகை கருப்புப் பாஷாணம், a prepared arsenic so called from its colour of the clouds.

கார்முகில் வர்ணம், நீ முறுகல் பாஷாணம், a dark grey-coloured arsenic.

கார்முகில் வன்னம், see கார்முகில் வர்ணம்.

கார்முகிற் கன்னம்,ஓர்வகை கருப்புச் சுண்ண மருந்து, a dark compound of calcium carbonate prepared by calcination.

கார்முகிற் பாஷாணம், see கார் முகில்.

கார்மேக சாரம், see காரீச் சாரம்.

கார் மேகம், கருங் குரங்கு, black-faced monkey.

கார் வங்கம், கரு வங்கம், black-lead.

கார் வழலை, கருப்பு வழலைப் பாம்பு, a black variety of cobra.

கார்வா, ஓர்வகைக் கடல் மீன், a brown species of sea-fish—Lethrinus karwa.

கார்வாய் சன்னி, பெண்களுக் குண்டாகும் ஓர் வகை சன்னி, a kind of delirium peculiar to women.

கார் வினை, பாவத் தொழில், sinful acts.

கார் வெள்ளி, மட்ட வெள்ளி, கருக்கன் வெள்ளி, impure silver; 2. கலப்பு வெள்ளி, dark silver alloy.

கால கஞ்சம், see கார் கஞ்சனம்.

கால கஞ்சனம், ஈரல், liver.

கால கண்டகம், கச்சக் குருவி, a species of venomous sparrow; 2 தண்ணீர்ப் பாம்பு, water-snake.

கால கண்டம், தாழ்ந்த குரலுடைய ஓர் பறவை, a species of bird of Sylviadae family with a low voice; 2. பாடும் பறவைகள். singing birds in common—Warbler; 3. வயிற்றின் வலது பக்கத்தி லிருக்கும் சதை, the muscular portion on the right side of the abdomen; 4. கரு நாகம், black cobra. See கார் வழலை; 5. ஆண் குருவி, cock-sparrow; 6. மயில், pea-cock.

கால கதி, மரணம்,death as a result brought about by the course of time.

கால கத்தூரி, கருப்புக் கஸ்தூரி, black musk; 2. கஸ்தூரி வெண்டை, musk benday—Hibiscus abelmoschus.

காலகம், சேங் கொட்டை, dhoby's nut—Semecarpus anacardium; 2. கரு விழி, black part of the eye; 3. தண்ணீர்ப் பாம்பு, water-snake; 4. பெண் பேய், female demon or other evil spirit; 5. பெண் காக்கை, female crow; 6. கரும் புள்ளி, dark spot; 7. தேள், scorpion; 8. பால் புளிப்பதால் தோற்றும் புழு, a small worm found by the fermentation of milk; 9. சியாமா பட்சி, syama bird—Turdus macrourus.

கால கரந்தகம், பாம்பு, snake; 2. நீர்ப் பாம்பு, water-snake.

கால கரு, கருப்பு அகரு, black aloe-wood—Agallocha.

கால கலம், கருப்புகாலம் அதாவது பஞ்ச காலம், time of famine.

கால காலன், வழலை யுப்பு, Universal salt averting death.

கால காலாக்கினி யாமேனன், குப்பை மேனி, dung-hill plant—Acalypha indica.

கால குணத்தான், see அலரி.

கால குந்தி, கழற்சிக் கொடி, which see.

கால கூடகம், ஓர் விஷப் பூண்டின் பெயர், the name of a poisonous plant.

கால கூடம், பெரு விஷம், deadly poison; 2. எட்டி மரம், nux-vomica tree—Strychnos nux-vomica; 3. ஓர் கிழங்கின் விஷம், a poison contained in a bulbous root; 4. ஓர் விஷ மரத்தின் பிசின். இம் மரம் அரச மரத்தைப் போன்றது. கொங்கண தேசம், மலையா பர்வதச் சாரல் முதலிய விடங்களிற் கிடைக்கும், the gum of a poisonous tree resembling the peepul tree, generally found in Konkon and the mountainous regions of Malaya.

காலகோட்டி விஷச் சுண்ணம், சஞ்சுக் கொடியினின்று தயாரிக்கும் சுண்ணம், an alkaline compound prepared from the navel-cord of the first-born child. *C. f.* குடற் சுண்ணம்.

கால கோட்டி விஷம், கொடிய விஷம், virulent poison.

காலக் கந்தம், தும்பை, leucas flower; 2. காட்டத்தி, false Mangosteen — Diospyros embryopteris; 3. நாவி யரம்சம், gum fig—Ficus glomerata; 4. கரு வேல், black babool—Acacia arabica.

காலக் கனல், see வடவாழித் தீ.

காலக் கியானம், வைத்தியம், விஷம் இவை களைக் குறித்த நூல். இது சிவன் உமா தேவிக்கு உபதேசித்ததாகக் கூறப் படும், a treatise on Medicine and Toxicology, said to have been preached by God Siva to his consort Umai.

காலக் கிரம நோய், நாளடைவில் சேரும் நோய்கள், diseases occurring in course of time, age etc. or in age periods. See கால நோய்.

காலக் கிரமம், காலத்தின் ஒழுங்கு, order or regularity of time or season; cycle of time.

காலக்கினி தகன், see காட்டுத் தீ.

காலக் குறி, ஆண், பெண்ணின் பருவ காலத்திற் குரிய அடையாளங்கள், characteristic changes indicating different stages of manhood or womanhood; 2. காலப் பொழுதின் அடையாளங்கள், seasonal indications as of rain, dew etc.

காலக் கோட்டரிசி, கவிழ் தும்பை, stooping leucas.

காலங் கண்டவன், வயதிலும், அநுபவத்திலும் தேர்ச்சி யடைந்தவன், a person of age and experience.

காலங் கழித்தல், வாழ்நாளை வீணாகப் போக்கல், idling away one's life-time; 2. சீவனம் செய்தல், to make a living.

காலங் கறுப்பு, கறுப்பு காலம், famine time.

காலங் காட்டி, விடியற் பொழுது, the break of day as the first appearance of light in the morning.

காலங் கார்த்தல், see காலங் காட்டி.

காலங் கிட்டல், மரணப் பொழுது நெருங்குதல், approach of death.

காலங் கூடல், இறத்தல், dying.

கால சக்கரம், ஆயுள் காலம், life-time; 2. ஆயுளின் கிரக நிலைப்படி ஏற்படும் பலா பலன்கள், different changes experienced in one's life time as influenced by planetary movements.

கால சங்கம், விடியற் பொழுது, early morning.

கால சந்தி, காலை வழிபாடு, morning-worship.

காலசம், காற்று, wind.

கால சர்ப்பம், கரும் பாம்பு, black cobra.

கால சாகம், கறி வேப்பிலை, curry leaf — Murraya koenigii; 2. துளசி, holy basil.

கால சாலி, கறுப் பரிசி, black rice.

கால சாரம், அணில், squirrel.

கால சிக்குவம், கறுப்பு நாக்கு, black tongue.

கால சிங்கி, தவளை நெய்யை துரிசிக்குத் தடவி அதினின்று இறக்கிய தைலத்துடன், கெந்தி, காரம், நாபி, சாரம், முதலிய சரக்குகளும் சேர்த்துக் குழப்பிய மருந்து, an ointment prepared by mixing sulphur, borax, aconite; sal ammoniac, etc. with the medicated oil extracted by steeping blue vitriol in frog's ghee.

கால செய மதம், தயிர், curd.

கால சுக வீனம், காலத்திற் கேற்றபடி நேரும் நோய், ill-health through diseases occurring according to the change of season. *C. f.* கால நோய்.

கால சேயம், மோர், sour-milk.

காலச் சக்கரம், see கால சக்கரம்.

கால ஸ்கந்தம், தும்பைப் பூ, leucas flower; 2. ஓர் பச்சிலைச் செடி, a herbaceous plant.

கால ஞானம், மகாதேவர் பார்வதிக் கருளிய வைத்திய பாக மடங்கிய வோர் நூல், a treatise on medicine, said to have been preached by Maha Deva to Parvathi.

காலஞ் செய்தல், இறத்தல், dying.

காலஞ் செல்லுதல், இறந்து போதல், ceasing to exist.

காலஞ் சொல்லி, காகம், crow; 2. பல்லி, wall lizard. Title is from the fact of foretelling the future.

காலஞ் சொல்லுதல், வாழ் நாளின் பலா பலன்களைக் கூறுதல், predicting events good or bad of one's life-time.

காலடி, உள்ளங் கால், sole of the feet; 2. காற் சுவடு, foot-print as in மயிற் காலடி, யானைக் காலடி, plants resembling the feet of the peacock and the elephant; 3. மிக்க சமீபம், close proximity.

காலடி மண், பாதத்தி னடியிலொட்டியிருக்க மண்ணு மாந்திரீகத்தில் உபயோகப் படும், the mud impressed or trampled by human feet. It is used in Magic.

கால தட்சணி, ஓர் பாம்பு, a snake.

கால தண்டம், மரணம், death.

கால தத்துவம், ஆன்மாவுக் குரிய போகங்களை நிச்சயிக்கும் காலம், the period which determines the duration of the soul's experiences of pleasures and sorrows.

கால திண்டுகம், கருங் காலி, a black variety of ebony — Diospyros ebenum.

காலத் தாலே, காலையில், in the morning.

காலத் திரயம், மூன்று வகைக் காலம், the three-fold divisions of time as past, present and future.

காலத் தீ, ஊழித் தீ, destructive or submarine fire supposed to occur at the end of the world.

காலத் தூதர், see காலதூதர்.

கால திருவுலம், குக்கில், bdellium - Balsmodendron Roxburghii; a fragrant resinous exudation from the plant Guggal — Amyris agallocha alias Balsmodendron Roxburghii.

கால நுட்பம், நிமிஷம், minute; 2. காலத்தின் நுட்பமான பிரிவு, moment of time.

கால நேத்திரம், கருங் கண், black eye.

கால நேமி, காலச் சக்கரம், wheel or cycle of time; 2. அசுரன், demon.

கால நோம், இருவர்க்கு வரும் கிரக பலன், the influence of planets relating to an individual's period of fortune or the reverse.

கால நோக்காடு, பெண்களுக்குக் கரு முதிரும் காலத்திற் காணும் வயிற்று வலி, (*In Midwifery*) pain in the uterus or its adjacent parts due to the pressure exerted by the distended womb during the progressive period of pregnancy.

கால நோய், இருதுக்களின் நிலைமையும், கால பருவத்தையும் அனுசரித்து ஏற்படும் நோய்கள், diseases of periodical type brought about by the variation of atmospheric heat or humidity with the change of seasons or other climatic conditions.

கால பரணி, நந்தியா வட்டம், common wax-flower — Tabermontana coronaria; 2. 3. கருந் தாளி, a dark kind of Ipomaea.

கால பர்ணம், தகரை, ringworm plant — Cassia tora.

கால பலம், பிண்டம் தரித்த காலத்தையும், பிறந்த தருணத்தையும், பருவ காலத்தையு முன்னிட்டு கிரக நிலைப்படி ஒருவருக்கு ஏற்படும் பலா பலன், (*In Astrology*) one's fortune, health or otherwise as determined according to the disposition of the planets during the time of conception, or at the time of one's birth or at the approach of the different stages of life during one's life-time.

கால பலன், கால நிகழ்ச்சி, events bad or good occurring in one's life time.

கால புட்பம், நன்னாரி, Indian sarsaparilla — Hemidesmus indicus.

கால பூதம், கோழி, fowl.

கால பேதம், வெயில், பனி, காற்று, மழை முதலியவற்றின் மாறுபாடுகள், (*In Astronomy*) climatic changes or other variations in the atmospheric conditions brought about by sun's heat, dew, wind, rain etc.; meteorological changes; 2. கெட்ட காலம், (*In Astrology*) the bad time in the period of one's life due to influence or disposition of the planets; 3. கால வித்தியாசம் (*lit*) change of time or season.

கால பேத விரேசனம், கோடை, மழை, பனி முதலிய காலங்களுக்குத் தக்கபடி பேதி யாகத் தரும் கொடுக்கும் காலக் கிரமமான மருந்துகள், purgatives prescribed upon due consideration to the weather conditions such as summer, rainy or dew season prevailing at the time.

கால பேதி, காலத்தை அனுசரித் துண்டாகும் பேதி, purgation or diarrhoea occurring according to climatic condition; 2. வாந்தி பேதி, cholera.

கால வைரவ ரசம், யமனும் கண்டு அஞ்சும் படியான மருந்து, an all healing drug at the efficacy of which even Yama, the God of Death is overawed.

கால போசனம், காலத்தில் அல்லது சரியான வேளையில் உட்கொள்ளும் உணவு, timely meal; 2. காலத்திற் கேற்றபடி கொள்ளும் உணவு, food taken according to the prevailing season.

காலப் படிகம், கருப்புப் படிகக் கல், (*lit*) black crystal; 2. காஷ்மீரக் கல், Kashmir stone.

காலப் பழக்கம், நாட் பட்ட பழக்கம், long-standing habit; 2. கெட்டப் பழக்கம், bad habit.

காலப் பிரசவம், கால முறைப்படி உண்டாகும் பிரசவம், child-birth taking place after full-time pregnancy, as opposed to அகாலப் பிரசவம், miscarriage; 2. கஷ்டப் பிரசவம், (*In Midwifery*) protracted or tedious labour.

காலப் பிரமாணம், காலத்தின் அளவு, measure of time.

காலப் பூப்பு, பெண்கள் சரியான வயதில் ருது வாதல், maturity of girls at their proper age. *C. f.* அகாலப் பூப்பு.

கால மடைதல், இறத்தல், dying; reaching the end of one's life time.

கால மயக்கம், காலையி லேற்படும் பித்த மயக்கம், giddiness due to biliousness experienced in the morning.

கால மயக்கு, see கால மயக்கம்; 2. கர்ப்பிணிகளுக்குக் காலையி லுண்டாகும் வாந்தி, மசக்கை, தலை சுரக்கானம் முதலியன, morning sickness in pregnant women marked by vomiting, nausea, giddiness etc.

கால மரணம், கால நியமப்படி ஏற்படும் சாவு, natural death; 2. கொடிய மரணம், cruel death.

கால மல்லாக் காலம், அகாலம், improper or unseasonable time.

கால மல்லிகை, கருப்பு மல்லிகை அதாவது துளசி, holy basil—Ocimum sanctum.

கால மறிதல், ருது வாதல், attainment of puberty; 2. (*In Philosophy*) முக் காலத்தையும் உணர்தல், knowing of events present, past and the future, said of Yogis; 3. ஒருவனுக்கு நேரும் சம்பவங்களை அநுபவத்தில் தெளிதல், knowing or guessing one's mishaps by his own experience; 4. போது காலத்தை நிர்ணயித்தல், (*In Midwery*) determining the time of delivery of pregnant women; 5. (*In Astrology*) சாகுங் காலத்தை நிட்சயித்தல், reading the approach of one's death; determining the time of death; 6. ஒருவருக்கு ஆயுள் காலத்தில் நிகழும் கால சம்பவங்களின் பலா பலன்களை அறிந்து சொல்லுதல், predicting events good or bad in one's life-time; 7. மழை, மாரி, இடி, மின்னல் முதலியவைகளா லேற்படும் கால சம்பவங்களைக் கண்டறிந்து சொல்லுதல், (*In Astronomy*) fore-telling the psychological happenings relating to the condition of weather, rain, thunder, lightning and other meteorological changes.

கால மாதல், see கால மடைதல்.

காலமாய் விடல், see கால மடைதல்.

காலல மாலல, துளசி, holy-basil — Ocimum sanctum.

கால மாறு, காலை தோறும், every morning.

கால மானம், கால அளவு, measure of time.

கால மிருத்து, குறித்த காலத்தில் அடையும் மரணம், death occurring at the stipulated or destined moment as opposed to அகால மிருத்து, untimely death; 2. இயற்கையான சாவு, natural death.

காலமிழ் தண்ணீர், கணுக்கால் மறையு மளவுள்ள தண்ணீர், water sufficient to cover the ankle portion; 2. கணுக்கால் வரையுள்ள தண்ணீர், water ankle-deep.

கால மீரம், பளிங்கு, crystal glass.

கால முகம், கருப்பு முகம், black-face; dark face; 2. கருங் குரங்கு, black-faced monkey.

கால முட்டி, ஓர் நோய், an unknown disease.

கால மூர்த்தி, இரசம், quick silver.

கால மூலம், கருப்புச் சித்திர மூலம், a black variety of leadwort—Plumbago nigra; 2. கருப்புக் கிழங்கு, any black bulbous root.

கால மூன்று, முக் காலம், past, present and future; 2. முப் பொழுது, morning, noon and evening; 3. வெயில், மழை, பனி காலங்கள், the three seasons of the year as summer, rainy and dew.

கால மே, விடியற் காலையில், (colloq) in the morning.

காலமே காட்டியும், அதி காலையில், (colloq) very early in the morning; break of day

கால மேகம், மஞ்சிட்டி, madder of Bengal. See இரத்த காசி.

கால மேவலி, ஓர் கொடி, an unknown creeper.

கால மேனிகை, கருஞ் சிவதை, a black variety of சிவதை, tiger's foot — Ipomaea pestigridis.

கால மேசிம்பம், சிவதை, cat's green (பூனைக் கீரை) tiger's foot or claw — Ipomaea pestigridis alias Convolvulus pestigridis.

காலம், குறித்த வேளை அல்லது பொழுது, any particular time or season; 2. சாவு, death as in காலம் நெருங்கல், reaching of destination; 3. எட்டு தினம் கொண்டது, according to Charaka, a period of eight days; 4. விடியற் காலம், day-break; 5. தகுந்த நேரம், proper time; right oppurtune; 6. பருவம், season of the year; 7. வயதின் பருவம், season of life; different stages of manhood or womanhood; 8. மரண காலம், time or moment of death; 9. காலச் சக்கரம், cycle of time or period; 10. பிரசவ காலம், போது காலம், time of delivery; 11. மூக் காலம், present, past and future; 12. பருவ காலம், age of puberty in women; 13. கருமை, blackness; 14. கால பேதம், weather; 15. முகூர்த்தம், sensible time, as opposed to அமூர்த்தம், artificial time as கடிகம்; 16. சூரிய காலம், astronomical time; 17. மருந்து முடிக்குங் காலம், அவையாவன, the time or period prescribed in Tamil Medical Science for preparing medicine viz:—

1. செயநீர் காலம், period for preparing pungent liquids i. e. dew season.
2. குருமுறைக் காலம், time fixed for preparing medicine of high potency i. e. summer.
3. செந்தூரக் காலம், season for calcining red-oxides of metals.
4. திராவகக் காலம், time for distilling acids.

காலம் நெருங்கல், மரணம் சம்பவித்தல், approach of death; 2. ஆயுள் முடிதல், reaching the end of one's life time.

காலம் பண்ணுதல், இறத்தல், dying.

காலம் பார்த்தல், ஒருவன் இறுதி காலத்தைக் கணக் கிடல், (In Astrology) calculating the time of one's death.

காலம் பிறக்கக் காட்டியும், விடிவதற்கு முன், (collq) before dawn.

காலம் பெற, காலம் பிறக்க அதாவது விடியற் காலையில், (collq) early in the morning.

காலம் மாறல், ருது மாறுதல், change of season.

காலம் முடிதல், ஆயுள் முடிதல், completion of one's life-time.

கால யந்திரம், காலத்தைக் குறிக்கும் யந்திரம், a machine or other instrument for measuring or showing the progress of time—Time-piece; clock or watch; 2. காலக் குறி யறி யந்திரம், an apparatus for registering atmospheric phenomena—Meteorograph; 3. கால சக்கரம், cycle of time; 4. காலத்தைக் குறிக்கும் யந்திரம், hour-glass contrivance for measuring time.

NOTE.—Hour-glass contrivance is an apparatus made of glass for measuring time by the running of sand from one compartment to the other. It was used in olden days in Europe before clock, time-piece or watch was introduced. Similarly in India, a contrivance (நாழிகை வட்டில்) on the same principle was in use; and this contained a small vessel which, with holes in the bottom and its floating on water in another big vessel, sinks at the end of every 24 minutes.

காலரா, see வாந்தி பேதி.

கால ராத்திரி, மரணப் போழ்தின் இரவு, the dreadful night preceding death.

கால ருது, பெண்களுக்குக் காணும் முதற் பிரவிடை, the time or epoch of the first menstruation.

கா லலம்புதல், காலைக் கழுவுதல், (lit) washing one's feet; 2. மல வாயிலைச் சுத்தி செய்தல், (fig) cleaning of one's posterior after stool.

கால லவணம், கறுப் புப்பு, black factitious and purgation salt.

கால லோகம், இரும்பு, iron; 2. கருப்பு உலோகம், any black metal.

காலல், கொப் புளித்தல், blistering, 2. கொப்புள மெழும்பல், rising in blisters.

கால வகை, கால வித்தியாசம், changes in the circumstances of time or of one's life-time.

காலவம், நெருப்பு, fire.

காலவரை, காலவளவு, measure of time.

காலவரையறை, கால நியமிப்பு, fixing up of time; limitation of time.

காலவிஷம், கொடிய நாக விஷம், the venom of cobra—Ooluher naga.

காலவிதி, தீவினை, misfortune.

காலவித்தியாசம், கஷ்ட காலம், times of misfortune; reverses in life.

காலவிருத்தி, see கழற் கொடி.

காலவெள்ளெழுத்து, நியமித்த காலத்திலுண்டாகும் வெள்ளெழுத்து. இது சாதாரணமாக 37 வயதுக்கு மேல் பித்த ஒளியானது விரிகின்றபோது பிறந்து, கருவிழியில் அற்ப புகை கம்மியது போல் தட்டமான பொருளை தெரிய வொட்டாமற்படி ஒளியை மறைக்கு மோர் கண்ணோய், defective sight which generally occurs above the age of 37—Presbyopia. It is a condition reached at a particular age when, according to the bilious humour, the lens is flattened with the result that small objects close to the eyes become indistinct.

காலவேறுபாடு, கால பருவங்களின் வித்தியாசம், changes in the seasons of the year.

காலளவு, காலில் ஒரு பாகம், one fourth of anything.

காலனுசாரம், மஞ்சள் நிறமான சந்தனம், yellow sandal.

காலனுண்ட கற்பம், நாக பாஷாணம், a poisonous compound of zinc.

காலனை யுதைத்தோன், சிவனார் வேம்பு, Shiva's neem; wiry indigo—Indigofera aspalathoides.

காலனை வென்றோன், see காலனை யுதைத்தோன்.

காலன், காந்த பாஷாணம், a poisonous compound of magnet; magnetic poison; 2. சில பாஷாணம், a kind of prepared arsenic; 3. எருமை, buffalo; 4. வழலை யுப்பு, Universal salt.

காலன் கொம்பு, மாட்டுக் கொம்பு, ox-horn; buffaloe's horn.

காலா, ஓர் வகைக் கடல் மீன், a sea-fish called Indian sturgeon—Polynemus indicus. It is also known as Robaul fish and the following are the different species :—

1. பொன்னன் காலா—பொன்னிறக் காலா மீன், golden robaul—Polynemus tetradactylus.
2. தாழங் காலா—தாழைக் காலா மீன், screw pine robaul — Polynemus indicus.
3. வரிக் காலா—கோடுவாய்ந்த காலா மீன், streaked robaul—Cyprinus mola.
4. போலிக் காலா—காலாவைப் போன்ற மீன், false robaul.
5. தவசிக் காலா—மயிரைப் போல் நீளமாக வளர்ந்த சிறும்பற் காலா, pilgrim fish — Polynemus paradiseus.
6. கட்டிக் காலா,
7. இரைக் காலா,
8. கடிக் காலா,

(6–8) unknown varieties.

காலா காலம், ஏற்ற காலம், proper or right time; 2. அந்தந்தக் காலம், respective season or time.

காலா குரு, கா ரகில், black agil wood.

காலாக் கினி, see காலத் தீ.

காலாக் கினியோன், குப்பை மேனி; dung hill plant—Acalypha indica.

காலாங்கம், கருத்த வுடம்பு, dark blue body.

காலாங்கன், மிருத பாஷாணம், a kind of prepared arsenic; 2. சிரப்பந்த பாஷாணம், a poison supposed to be prepared from human skull.

காலாங்கி, see காலாங்கி நாதர்.

காலாங்கித் தங்கம், ஓர் மாற்றுயர்ந்த தங்கம், a kind of superior gold with high refineness; refined gold.

காலாங்கி நாதர், போகருடைய குரு. சாதியில் சீனன், தமிழ் தேசத்திற்கு வந்து சித்தர்களோடு சேர்ந்து வாத வைத்திய யோக ஞானத்தில் தேர்ச்சி யடைந்த ஓர் சித்தன், Kalaungi, a Chinaman, and the preceptor of Bogar also a Chinese. He is one of the Siddha, who came to Southern India, joined the Siddhars' School of Thought and attained high proficiency in Alchemy, Medicine, Yoga philosophy and Spiritual Wisdom.

காலா சயம், இரும்பு, iron.

காலா சுரம், ஓர் கொடிய சுர நோய், (collq.) black fever; 2. விஷக் காய்ச்சல், a chronic malarial fever—Kala azar.

காலாஞ் சனம், கருப்பு மை, black unguent.

காலாடுதல், கால் நடுங்குதல், trembling of the leg; 2. மூச் சாடுதல், symptom of respiration said of a dying person.

காலாடு நீர், கணுக் கால் அளவு தண்ணீர், water up to the level of ankle; ankle-deep water. See கா லமிழ்த் தண்ணீர்; 2 கால் கழுவுதற்கு போதுமான தண்ணீர், water sufficient for washing the leg.

காலாட்டம், see கால் நடுக்கம்,

காலாணி, முள் தைப்பதனால் உள்ளங் காலில் ஏற்படும் ஆணி, corn or collosity of the sole; corn in the toe.

காலாதிசம், see அருகதம்.

காலாதீதப் படல், (காலம்+அதிதம்+படல்) கால முறை தவறுதல், time-barred; barred by limitation of time; exceeding in time.

காலா தீதம், காலங் கடத்தல், becoming unlimited by time; 2. கால மிகுதி, excess of time.

காலாறு குதி, see கொக் குருவி; 2. சாதகப் புள், sky-lark; 3 வண்டு, beetle.

காலாந்த பைரவி ரசம், see கால பைரவி ரசம்.

காலாந்தம், கால முடிவு, end of time or termination of one's life career.

காலாந் தரம், இடை வெளி, interval; 2. இறுதி காலம், end of one's time as in காலாந் தரத்தில் கொல்லும், being killed at the end of one's career; 3. சில வேளையில் விஷத் தன்மை, venomous at certain times.

காலா மிந்தர், கரிக் கட்டை மரம், black tree; calaminder tree — Diospyros hirsuta. See காலே மிந்தரம்.

காலாபசம், see காலா சயம்.

காலாயம், நீர், water.

காலாயுதம், சேவல், cock so called from its horn in the leg.

காலாழ், சேறு, mire.

காலோறு, see காலாறு பறவை.

காலாறுதல், நடை ஓய்ந் திருத்தல், cessation from walking; 2. காலில் இரத்த வோட்டம் உண்டாகும்படி உலாவுதல், moving about to help the circulation of blood for overcoming numbness of feet, said of bed-ridden patients or convalescents.

காலாறு பறவை, அறுகால் வண்டு; six-legged beetle.

காலி, கள், toddy; 2. காட்டு முருக்கு, which see; 3. பூனைக் காலி, cowhage — Mucana pruriens; 4. பசு, cow; 5. காலியாக் தலை வரை, which see; 6. புனல் முருக்கை, see காட்டு முருக்கை; 7. பாம்பின் கீழ்வரிசைப் பற்களில் ஒன்று, one of the fangs of a snake in the lower row of teeth; 8 காலை யுடையது, one having legs as ஆயிரங் காலி, millipedes.

காலிகம், கரி, charcoal; 2 ஓர் மஞ்சள், a kind of turmeric.

காலி கயம், சிறிய நங்கை, rattle snake-root—Polygala glabra.

காலிகை, கருமை, blackness; 2. கருஞ் சந் தனம், black sandal; 3. கள், toddy; 4. காக்கை, crow; 5. நரி, fox; jackal; 6. புடலைக் கொடி, snake-gourd creeper; 7. அத்தி மரம், fig tree.

காலிங்கம், வெள்ளைப் பூண்டு, garlic; 2. யானை, elephant; 3. பாம்பு, snake; 4. ஓர் வெள்ளரி, a species of cucumber; 5. ஓர் விஷப் பூடு, a poisonous plant; 6. வெட் பாலை, dysentery rosebay — Wrightia antidysenterica; 7. ஓர் சுரை, a kind of gourd.

காலிங்கி, வெட்பாலை மரம், downy oleander —Wrightia tomentosa: dyer's oleander —Wrightia tinctoria.

காலிங்கை, see காலிங்கி.

காலிதம், படிகாரம், alum.

காலி யகம், ஓர் மஞ்சள், a kind of turmeric. Cf. காலீயகம்.

காலி யமியம், see கண்டில் வெண்ணெய்.

காலியம், விடியற் காலம், day-break.

காலியாங் குட்டி, நீங்கு விஷ மில்லாத ஓர் சாதாரண பாம்பு. இது 1 அல்லது 2 சாணுள்ளது; கடிக்கத் தெரியாதது, a harmless (innocuous) snake — Trophidonotus stolatus. It is 1 or 2 span in length and is not known to bite.

காலியாந் துவரை, கருந் துவரை, black dholl — Rhynchosia minima; 2. காட்டுக் கொள்ளு, wild horse-gram — Rhynchosia genus. See சிறு காலியாந் துவரை.

NOTE.—It is a shrub also known as black goomchy, usually with twining stems and yellowish flowers and is imported from Ceylon.

காலி ராசி, காலிப் பட்டணத்தில் விளையும் பாக்கு, betel-nut obtained from Galle, a town in Ceylon.

காலிலி, காற்று, air, breeze; 2. பாம்பு, snake, so called from its having no legs; 3. முடவன் அல்லது முடத்தி, a lame man or woman; 4. இரத்த மோடுகின்ற நாடியிற் பிறந் தலாவும் ஓர் சிறிய கிருமி, an organism found in the blood. See இரத்தக் கிருமி.

காலிலிக் கிருமி, இரத்த மோடுகிற நரம்புகளில் பிறந் தலாவும் புழுப் பூச்சி, an organism or bacterium found commonly in the blood. See இரத்தக் கிருமி.

காலிலிப் பிண்டம், கால் அல்லது பாத மில்லாமல் அங்கக் கேடான கருப் பிண்டம், a monster fetus without the lower limbs or feet—Apeduous fetus; Apus.

காலி வாசம், செங் குளவி, red-wasp.

கா லிறங்கல், வாயு இறங்குதல், descent of wind (humour) causing inflammation as in scrotum (Orchitis); 2. யானைக் கால் உண்டாதல், development of elephantiasis of the leg; 3. காலில் கெட்ட நீர் இறங்குதல், accumulation of morbid fluid in the tissues of the leg; edema of the leg.

காலி றால், ஓர் வகை இறால் மீன், a kind of prawns — Astacus jamaicensis.

காலீயகம், மர மஞ்சள், tree turmeric — Coscinium fenestratum.

காலீயம், see காலீயகம்.

காலுதல், வாந்தி பண்ணல், vomitting; 2. கொப் புளித்தல், to gargle; 3. ஒழுகுதல், flow of saliva from the mouth; 4. பீரிடல், issuing or gushing forth as blood from a vein; 5. வெளிப் படல், issuing out as tears from the eyes; 6. குதித்தல், leaping forth; 7. கக்குதல், ejecting as poison from a serpent's fang.

காலுதறு வாதம், see கா லூன்று வாதம்.

காலூதல், கால் வீக்க முடைதல், swelling of the leg.

காலூரம், தவளை, frog.

கா லூறல், மேகத்தினால் உள்ளங் காலிற் காணும் தினவு, itching of the sole from venereal causes; 2. பிரயாணத்தை முன்னிட்டு உள்ளங் காலில் ஏற்படும் அரிப்பு, an itching casually felt in the sole as a sign of impending journey.

கான முல்லை, see காட்டு மல்லிகை.

கான மூர்த்தி, முட்டை, egg.

கான மௌவல், see காட்டு மல்லிகை.

கானம், வானம் பாடி, sky-lark ; 2. சீந்தில், moon-creeper — Menispermum cordifolium ; 3. பொன், gold ; 4. see எட்டி ; 5. துளசி, holy basil—Ocimum sanctum ; 6. வாசனை, scent ; 7. காடு, jungle.

கானயம், காட்டு வெக்காலி, see கான மடக்கு.

கான யூகம், கருங் குரங்கு, black monkey ; 2. காட்டுக் குரங்கு, wild monkey.

கான லக்கினி, சிவப்பு சதுரக் கள்ளி. இது சித்த ருண்ணும் மூலிகைகளில் ஒன்று, red square-spurge—Euphorbia antiquorum. It is one of the drugs generally taken by Siddhars ; 2. காட்டுத் தீ, wild-fire ; 3. see காடாக்கினி.

கானலாகினி, see கான லக்கினி.

கான லாவனி, see இசங்கு.

கான லிந்திரன், கொடி வேலி, Ceylon leadwort—Plumbago zeylanica.

கான லோடுதல், பேய்த் தேராடல், mirage seen floating before the eyes.

கானல், பேய்த் தேர், mirage ; 2. கானல் நீர், heat-wave ; heated state of the atmosphere passing from one locality to another ; movement of heat or warmth ; 3. சூரிய கிரணம், sun's ray ; 4. வெளிச்சம், light ; brightness ; 5. காடு, forest.

கானல் கன்னி, see காட்டு மருக்கொழுந்து ; 2. வன தேவதை, Virgin goddess of the forest.

கானல் நீர், see கானல், mirage commonly mistaken in appearance for a sheet of water.

கானல் பலா, see காட்டுப் பலா.

கானல் பால், see கானற் பால்.

கானல் மா, see காட்டு மா.

கானல் மிருகம், கொக்கு மந்தாரை, taper-pointed mountain ebony — Bauhinia acuminata; 2. காட்டுப் பன்றி, wild boar; 3. மான், deer.

கானல் மிளகாய், see ஊசி மிளகாய்.

கானல் முருங்கை, see காட்டு முருங்கை.

கானல் வாகியம், சீரகம், cumin seed—Cuminum cyminum.

கானல் வாழை, see காட்டு வாழை; 2. மலை வாழை, mountain or hill plantain — Musa superba.

கான வல்லை, see கானவன்; 2. see காட்டு முருங்கை.

கானவன், குரங்கு, monkey.

கான வாரணம், see காட்டுக் கோழி.

கான வாழை, நீர் வாழை, traveller's palm — Ravenala madagascariensis.

கான விருக்கம், பாதிரி மரம், trumpet-flower tree—Bignonia chelanoides; 2. காட்டு மரப் பொது, forest trees in common.

கான விருடி, சிற்று முட்டி, rose-coloured sticky mallow—Pavonia zeylanica.

கானற் கன்னி, see இருப்பவல்.

கானற் குன்று, வைக்கிராந்த பாஷாணம், a mineral poison.

கானற் சலம், see காட்டுப் பலா; 2. see கானல் நீர்.

கானற் பலா, see காட்டுப் பலா.

கானற் பால், see காட்டெருமைப் பால்.

கானற் பீலிதம், தும்பை, leucas flower.

கானற் பேய்ச்சி, பேய்த் தும்பை, devil leucas—Leucas linifolia.

கானனம், காடு, forest, wood-land.

கானனு சாரி, நன்னாரி, Indian sarsaparilla — Hemidesmis indicus.

கானனு சேதி, நவ்வல் அதாவது நாவல், jaumoon or black plum—Eugenia jambolina.

காணுங் கள்ளி, see இலைக் கள்ளி.

காணுங் கீரை, கன்று குட்டி காணு வாழை, calf's grass—Commelina communis.

காணுங் கெளிறு, ஆற்றுக் கெளிற்று மீன், a river fish—Macranes.

காணுங் கெளுத்தி, ஓர் கடல் மீன், a sea-fish known as mackerel—Scomber microlepidotus; 2. கண் ணண்டை புள்ளிகள் வாய்ந்த கெளுத்தி மீன், another species of mackerel with dots near the eyes — Scombar brachysoma; 3. கடற் கெளுத்தி, a kind of tumy fish—Bonito.

காணுங் கோழி, வான் கோழி, turkey-fowl; 2. see காட்டுக் கோழி.

காணுங் கோரை, see காணுங் கீரை.

காணுதி நாதம், 'மகாரம்', the mystic letter 'Ma'.

காணு முசல், புதர்ப் பறவை. இது இரவில் பெருங் கூச்சலிடும், வேகமாகப் பறக்கும், jungle hare or stone plover — Oedicnemus crepitans. It is so called because it occurs in bushy wilds; its long cry heard at nights; it flies very rapidly.

காணு முருங்கை, காட்டு முருங்கை, jungle moringa—Ormocarpum sennoides.

காணு மொச்சை, see காட்டு மொச்சை.

காணுவதி, திப்பிலி, long-pepper — Piper longum.

காணு வாழை, கன்று குட்டிப் புல். இதைக் கன்று குட்டி பிரியமாகத் தின்பதால் இதற்குக் கன்று குட்டிக் காணு வாழை என்று சொல்வதுண்டு. கோழிக் காணா கீரை என்றும் பெயர். இது சாதாரணமாய் நீர்ப் பாயும் நிலங்களின் ஓரங்களில் புற்போல் முளைத்திருக்கும்; இதன் பூ நீலம்; கன்றுக் குட்டி பால் மறக்க இதை ஆகாரமாய்க் கொடுப்பதுண்டு. இதைக் கீரையாகவும் உண்ணலாம்; இதை மாவில் தோய்த்து பஜ்ஜியைப் போல் உபயோகப் படுத்துவதுண்டு. இதில் மற்றோர் இனமு முண்டு. இதன் பூவும் நீலமாக விருக்கும். இதன் வேர், தலை மயக்கம், சுரம், பித்தாதிக்கம் முதலியவைகளுக்கும், பாம்பு கடி விஷத்திற்கும் உபயோகமாகும்; குழிப் புண்ணும் ஆறி விடும், Blue spiderwort — Commelyna communis alias C. Bengalensis. It literally means forest plantain, but it is called calf's grass; because its leaves are used to feed calves. It is commonly found on the banks of water-courses sending suckers into the ground like grass. It has bright blue flowers. Young calves are fed with this, when it is found desirable to wean

them from their milk. It is also used as vegetable greens in food. It is mixed with flour and prepared as 'Bajji' There is another species of this, known as Bengalensis or common spiderwort—Commelyna obliqua. It has also bright blue flowers. Its root is useful in vertigo, fevers and bilious affections; and it serves as an antidote to snake-poison. It also heals up incurable deep-sores.

கானுவு, காட்டுக் குன்றி, see குன்றி.

கானு வேளை, கருவேளை, a black variety of Velai or five-leaved cleome — Gynandropsis pentaphylla.

கானுழி, வெள் வங்கம், white lead; tin; 2. (கால் + நாழி) கால் நாழி அளவு, an Indian measure of capacity *i.e.* 28/4 or 7 cubic inches; 3. சென்னை அளவுப் படி அதாவது காலபடி, according to Madras superficial measure, ¼ measure.

கா னுழிகை, (கால்+நாழிகை) கால் நாழிகை, an Indian 4/24 or 6 minutes.

கானுனு சாரி, see கானனு சாரி.

கானுன், ஓர் கொடி, an unknown creeper.

கானுன் வாழை, see கானு வாழை.

கானுன் வேளை, see கானு வேளை.

கானிகம், மணித் தக்காளி, black-berried solanum—Solanum nigrum.

கானித்தம், see ஏலம்.

கானிய மேனிக் கல் see கரும் புள்ளிக் கல்.

கானி ருப்பியம், see அனுமூறு துவரை.

கானிலம், } see கான விந்திரன்.
கானி லிந்திரன், }

கானிற் குன்று, வைக் கிராந்த பாஷாணம், a mineral poison.

கானீயம், see கக்கரிக் காய்; 2. (கான் +ஈயம்) காட்டில் தோண்டி யெடுக்கும் கரீயம், graphite.

கா னௌள், காட் டெள்ளு. இது காட்டிலும், மலையிலும் தானுகவே விளையும் எள்ளு. இது பெரும்பாலும் நாட்டு எள்ளைப் போல் தான் இருக்கும், ஆனால் கொஞ்சம் பெரிது. இதன் மேற்றோல் சாம்பற் கருப்பா யிருக்கும்; எண் ணெயைப் போல் ருசிக்கும்; இதினின்று எண் ணெயெடுத்து வடதேசத்தில் விளக் கெரிப் பார்கள். இது மிக்க நயம்; இனிப்பா யிருக் கும்; நாட்டு எள் ளெண்ணெயைப் போல் சமையலில் உபயோகிப்பார்கள். இதி னின்று எடுத்த புண்ணாக்கு காலை மாடுகளுக் குத வும், wild gingelly; hill gingelly—Anthemis mysorensis. It resembles closely the gingelly seed, but a little larger in size; the achenes are of a greyish black colour with its taste oily. Oil is expressed from the seeds and used as common lamp oil in Northern India; and it is very cheap. It is sweet in taste and used like gingelly oil for culinary purposes etc. The cake is given to milk-cows.

கான், சல தாரை, gutter; 2 பூ, flower; 3. காடு, desert; jungle; 4. வாய்க் கால், channel; 5. வாசனை, fragrance; 6. ஆல், banyan tree; 7. கன்னி, girl.

கான் குடம், நறும் பிசின், fragrant gum or resin.

கான் குடோ, see கான் குடம்.

கான்படு திரவியம், காட்டி லுண்டாகும் அரு மையான பொருள்கள், rare products found in the forest. See காடுபடு திரவியம்.

கான் புலி, காட்டுப் பூனை, wild cat.

கான் மரம், ஆல மரம், banyan tree: 2. காட்டு மரம், forest tree in general.

கான் மயலப் பட்சி, மீனம்பர், ambergiris.

கான் மா, காட்டுப் பன்றி, wild boar; 2. பன் றிப் புடல், short snake-gourd — Trichosanthes nervifolia.

கான் மீரம், காசுமீரம், Kashmir.

கான் முகல், see காட்டு மல்லிகை.

கான் முறிதல், கா லொடிதல், fracture of the leg.

கான் மௌவல், see காட்டு மல்லிகை.

கான் யாறு, காட் டாறு, jungle river.

கான் யாற்று நீர், முல்லை நிலத் தாறு, river in a sylvan tract.

கான் றுகன், பாதிரி மரம், trumpet-flower-tree—Stereospermum chelonoides.

கான்றல், கக்குதல், ejecting from the mouth; 2. வாந்தி செய்தல், vomiting; 3. காறித் துப்பல், coughing and ejecting phlegm; retching and spitting; 4. கொப் புளித்தல், gargling.

கான்றியம், see காந்தல்; 2. உஷ்ணம், heat.

கான்றை, ஓர் முட் செடி, an unknown thorny shrub.

கிகண்டம், மயிற் றோகை, peacock's tail.

கிகிணி, காக்கணஞ் செடி, mussell-shell creeper—Clitorea ternatea ; 2. வலியான் குருவி, king-crow — Diorurus indicus ; 3. ஓர் கறுப்புப் பாடுங் குருவி, a black singing bird that can imitate all sorts of sounds ; large-tailed drongo — Edolius paradiseus.

கிகீதி, காடை, quail.

கிக்கிரி, மீன் கொத்திப் பறவை, king-fisher of Halcyoninae family—Halcyon leucocephalus ; 2. வெண் கழுத்து மீன் கொத்தி, white collared king-fisher — Alcedo chlorocephala.

கிக்கிலம், மலை தாங்கி, sickle leaf — Sida carpinifolia.

கிங்கி சாலம், வேல மரம், babool tree — Acacia indica.

கிங்கிணி, நரி முருக்கு, fox palaus — Erythrina genus ; 2. கிலு கிலுப்பை, rattlewort—Crotolaria laburnifolia.

கிங்கிரம், குதிரை, horse ; 2. யானை, elephant ; 3. வண்டு, beetle.

கிங்கிரா, நந்தியா வட்டம், common waxflower — Tabernaemontana coronaria alias Marium coronarium.

கிங்கிரை, இரத்தம், blood.

கிங்கினி, சிறுவிடு கொள். இது தண்ணீரைக் கட்டும், a kind of jungle gram capable of binding water — Dolichos medicagineus. It is opposed to பெருவிடு கொள், which see.

கிசம், } தளிர், tender leaf ; 2. துளிர்,
கிசலம், } sprout.

கிசலயம், } see கிசம்.
கிசலை, }

கிசாலம், } see கிசலம்.
கிசாலயம், }

கிசில், கீல், a th[illegible] dark resinous substance obtained from tar—Pitch.

கிசு கிசு, see அகருள் பாய்ச்சல் ; 2. கிச்ச லாட்டம், titillation.

கிசுமிசு, விதை யில்லா திராட்சை, seedless raisins.

கிசோரம், ஓர் செடி, an unknown plant.

கிச்சடி, அரிசிக் கஞ்சி, (*lit*) rice-gruel ; 2. அரிசி, பருப்பு, நெய், கறி மசாலை, வெங்காயம் முதலியவைகளை சேர்த்துச் செய்யும் ஓர் வாசனைச் சோறு, a dainty mess of rice cooked with butter or ghee and dholl and flavoured with spices and onion.

கிச்சரி, see கிச்சடி.

கிச்ச லாட்டம், see கிசு கிசு.

கிச் சாட்டம், see கிச்ச லாட்டம்.

கிச்சிகம், } காட்டுக்கொஞ்சி, wild lemon —
கிச்சிகா, } Glycosmis pentaphylla.

கிச்சிலி, கொழுஞ்சி, Mandarin orange — Citrus aurantium nobilis ; 2. நாரத்தை, seville bitter or orange—Citrus vulgaris ; 3. see கிச்சிலிக் கிழங்கு ; 4. பூலாங் கிழங்கு, long zedoary—Curcuma zedoaria.

கிச்சிலிக் கஷாயம், நாரத்தைத் தோலி னின்று இறக்குங் கஷாயம், infusion of bitter orange peel—Infusum aurantii.

கிச்சிலிக் கரவணை, காட்டு மிளகு, lopez root —Toddalia aculeata.

கிச்சிலிக் காடி, கிச்சிலிப் புளிப்பு, fermented orange juice ; 2. புளி நாரத்தை ரசத்தைப் புளிக்க வைத்த காடி, acetic acid from bitter orange by the acetous fermentation.

கிச்சிலிக் கிழங்கு, வாசனைக் கிழங்கு, orange root — Hedycharum spicatum alias Kompferia galanga ; 2. பூலாங் கிழங்கு, poolah root—Curcuma zedoaria.

கிச்சிலிக் குடி நீர், see கிச்சிலி ஷர்பத் ; 2. நாரத்தைத் தோலின்று வடித்த குடி நீர், tincture of orange peel — Tinctura aurantii.

கிச்சிலிக் குருவி, ஓர் வகைக் குருவி, a kind of king-fisher — Halcyon.

கிச்சிலிச் சாராயம், கிச்சிலி மது, orange wine.

கிச்சிலி ஷர்பத், கிச்சிலிப் பழத்தின் சாற்றைச் சர்க்கரைப் பாகில் ஊற்றி ஈரம் வற்றும்படிக் காய்ச்சி யெடுத்தப் பாகு, a thick syrup prepared from orange juice and a solution of sugar — Orange syrup. It is a favorite beverage in hot weather and safer than the lime juice.

கிச்சிலித்தோ லெண்ணெய், கிச்சிலித் தோலி னின்று வடிக்கு மெண்ணெய், oil from the rind of orange—Zest.

கிச்சிலித் தோல், கிச்சிலிப் பழத்தின் தோல், orange peel.

கிச்சிலிப் படிகம், தம்புரா, Indian toothache tree—Zanthoxylum alatum.

கிச்சிலிப் பழம், கொழுஞ்சிப் பழம். இம் மரம் 20–25 அடி உயரம். இதன் கடு பாகம் கிளைகள் வாய்ந்ததாயும்; இளந் தளிர்கள் மயிரைப் போன்றனவாயும்; இலைகள் அண்ட வடிவாயும், பல்லு பல்லாகவும், காம்புகள் சிறிது நீளமாயு மிருக்கும் பூக்கள் வெண்மை, பெரிது; பழம் மஞ்சள், சிகப்புக் கலந்தது, உட் சுளை தித்திப்பு. இது ஆந்திர தேசம், குடகு, மைசூர், நீலகிரி முதலிய மலைப் பிரதேசங் களிலும், வடக்கே காஸ்மீரம், சிம்லா முதலிய இமயமலைச் சாரலிலும் பயிராகும். இது குணத்திலும், விலையிலும், ஓர் உயர்ந்த பழம். இந்தியாவிலும், சீனத்திலும் தான் தித்திப்புக் கிச்சிலி அகப்படும்.

நமது நாட்டு வைத்தியர்கள், இது இரத்தத்தைச் சுத்தி பண்ணி, பசி தீபனத்தை யுண்டாக்கு மெனக் கருதுவார்கள். இதன் தோல் வாயுவைப் போக்குவதுடன் அசீரணத்திற்குக் கொடுக்கும் கஷாயத்தின் கசப்பை மாற்றுவதற்கும் உபயோகப் படும். இதன் பூக்களை வாலையி லிட் டிறக்கி, மருந்திலும், வர்ச்னையிலும், சமையலிலும் சேர்க்கப் படும். இப் பழத்தின் ஒவ்வொரு பாகமும், பத்தியத்திற்கோ அல்லது மருந்திற்கோ உதவும். இது சொறி கரப்பானுக்கு ஓர் சிறந்த ஔஷதமாகும். இதன் தோலைக் காந்த உப்போடும், சீனக் கிழங் குடனும் கூட்டி வலி வைத்தரு மருந்தாக உபயோகிக்கலாம். உட் சதைப் பற்றைச் சுட்டு ஊழல் விரணத்திற்கு போடலாம். கிச்சிலி நீரைச் சூதகத் தடையால் சேர்ந்த சூதகப் பைத்தியத்திற் குபயோகிப்ப துண்டு. இதன் தோலும், பூவிலின்று வடிக்கு மெண்ணெயும் சூலைப் பிடிப்பு, வாத முடக்கு முதலிய நோய்களில் பூச மருந்தாக வுபயோகப் படும்.

கமலா கிச்சிலியில் இருக்கும் ஓர்வித புளிப்புச் சத்து (citric) கோளாறடைந்த கல்லீரலுக்கு சுறுசுறுப்பை யுண்டாக்கும்; இதிலிருக்கும் திமுருகல் சத்து நரம்பு மண்டலத்தைப் போஷிக்கும் தன்மை யுடையதால், நரம்புத் தளர்ச்சிக்கும், பித்து பிடித்தவர் கட்கும் உபயோகப்படும்; காலையில் அருந்த இரைப்பையை பலப்படுத்தி, பித்த நீரை மாற்றி, சிறு குடலில் இருக்கும் உணவின் சத்தைச் செரிக்கச் செய்து, உடம்பைப் பலப் படுத்தும். இப் பழ ரசத்துடன் மிளகுத் தூளைக் கலந் துபயோகிக்க, மந்தம், அரோசிகம், மலச் சிக்கல் இவைகள் போம், orange tree—Citrus aurantium (nobilis). Tree 20–25 ft; spines axillary; young shoots glabrous; leaves oval; slightly toothed; petioles more or less dilated. Flowers large and white; fruit yellowish red; pulp sweet. It is largely grown in Andhra province, Coorg, Mysore, Nilghiris and other mountainous tracts. In the North, it is common in Kashmir, Simla and the Himalayan regions. It is costly owing to its essential virtues. Sweet oranges are available only in India and China. There are several varieties cultivated in India.

Vaidyans think that oranges are invaluable as purifying the blood and improving the appetite. The rind is well-known as a useful carminative and a valuable addition to bitter infusion in cases of dyspepsia. Orange flowers are distilled and orange water obtained therefrom is used in cooking, in medicine and as a perfume Every part of the ripe fruit is used either in diet or medicine. It is invaluable in scurvy. The rind pulverised and added to magnesia and rhubarb, affords a grateful tonic to the stomach disease, gout and dyspepsia. The roasted pulp is an excellent application to fetid ulcers. Orange water is also prescribed for hysteria in small doses. The oil from the rind and flowers forms externally an excellent stimulating liniment useful in gout, rheumatism etc.

In Kamala orange will be found citric acid which serves as a stimulant to disordered liver. The phosphate contained in this sweet orange forms a nutrition to the nervous system. It is a useful remedy in cases of nervous relaxation and lunacy. The juice when taken in the morning, strengthens the stomach, removes biliousness, helps the digestive process in the small intestines and tones the system; mixed with pepper powder, it is given in cases of indigestion, nausea constipation etc.

கிச்சிலிப் பனை, குமுதிப் பனை; Malayan sugar palm—Arenga saccharifera.

கிச்சிலிப் பாகு, சர்க்கரைப் பாகி லிட்ட புளிப்பும் கசப்பு முள்ள கிச்சிலி எலுமிச்சை

முதலிய ஊறுகாய், preserves made from bitter and acid fruits such as orange, lemon etc.—Marmalade.

கிச்சிலிப் பாணி, கிச்சிலிச் சாற்றுடன் சர்க்கரை யிட்டு பெயோகிக்கும் குடிநீர், orange sweet drink; a solution of orange-juice and sugar.

கிச்சிலிப் பாணிதம், see கிச்சிலிப் பாணி.

கிச்சிலிப் புல், ஓர் வாசனைப் புல், orange grass—Andropogon nardus. The title is from its orange smell. See காவட்டம் புல்.

கிச்சிலிப் புளிப்பு, see கிச்சிலிக் காடி; 2. கிச்சிலித் திராவகம், citric acid occurring free in oranges, lemons etc.

கிச்சிலிப் பூக் குடி நீர், கிச்சிலிப் பூத் தீ நீரில் சர்க்கரை யிட்டு பாகாகக் காய்ச்சி, உபயோகிக்கும் குடி நீர், syrup of orange flower—Syrupus aurantiifloris. It is orange-flower water containing sugar in solution which is afterwards heated and strained.

கிச்சிலிப்பூத் தண்ணீர், கிச்சிலிப் பூவை ஊறவைத் தெடுத்த வாசனை நீர், a fragrant liquid obtained by soaking orange flowers in water.

கிச்சிலிப் பூத் தீ நீர், கிச்சிலிப் பூ ரசத்தினின்று வாலையி லிறக்கிய நீர். இது சூதகப் பைத்தியம், நரம்பு வலி, இழுப்பு இவ் வகைகளைக் கண்டிக்கும், water distilled from the juice of orange flowers and used as an antispasmodic and sedative in nervous and hysterical cases — Aqua aurantiifloris. See கிச்சிலிப் பூத் தண்ணீர்.

கிச்சிலிப் பூத் தைலம், கிச்சிலிப் பூவி னின்று எடுக்கும் எண்ணெய், oil extracted from orange-flower.

கிச்சிலிப் பூப் பாணிதம், கிச்சிலிப் பூ சர்பத், syrup of orange flower. See கிச்சிலிப்பூக் குடிநீர்.

கிச்சிலி ரசம், கிச்சிலிப் பழத்தைப் பிழிந்த ரசம், orange-juice.

கிச்சிலி வாழை, see இரசதாளி வாழை.

கிச்சிலி ஊறுகாய், கிச்சிலிக் காய் அல்லது கிச்சிலிப்பழத் தோலை மசாலை யிட்டு எண்ணெயில் ஊறப்போட்ட ஊறுகாய், a seasoned pickle of orange raw fruit or rind of orange ripe fruit prepared by mixing it with condiments and keeping it soaked in gingelly oil.

கிச்சிலி வேர், சிறு கிச்சிலிக் கிழங்கு, orange root or Camphor zedoary — Hedychium spicatum; 2. கற்பூரக் கிச்சிலிக் கிழங்கு, orange root or camphor root—Curcuma zedoaria.

கிச்சுக் கிச்சு பண்ணுதல், அக் குள் பாய்ச்சல், poking under the arm to cause a thrilling sensation to excite laughter—Titillation.

கிச்சுக் கிச்சு மூட்டல், see கிச்சு கிச்சு பண்ணுதல்.

கிஷாணம், கவிழ் தும்பை, stooping leucus.

கிஸ்மிஸ் பழம், விதை யில்லாத் திராட்சை, stoneless raisins from Persia used in Christmas cakes. See கிசுமிசு.

கிஜரேயமாம், (புருணி) புறாக் கல், pigeon stone.

கிஞம், அறிவு, knowledge.

கிஞ்சுக பாணி, துளசி, holy basil — Ocimum sanctum.

கிஞ்சக பன்னி, see கிஞ்ச பன்னி.

கிஞ்சகா, கொடிக் காசரைக் கீரை, a kind of edible greens.

கிஞ்ச பன்னி, நாயுருவி, Indian burr—Achyranthes aspera.

கிஞ்சம், புளி மா, sour mango tree; Indian hog-plum—Spondias mangifera; 2 புளி, tamarind—Tamarindus indicus.

கிஞ்சன், see ஆரைக் கீரை.

கிஞ்சாரு, நெல்லின் முள், paddy's spine.

கிஞ்சி, வேம்பு, margosa tree—Azadirachta indica; 2. முதலை, crocodile—Crocodilus sauria; 3. வெள்ளை கழற் கொடி, white species of bonduc creeper; 4. மிகச் சிறிது, very little.

கிஞ்சிகம், திருவாத்தி, see ஆத்தி.

கிஞ்சிகா, வேப்ப மரம், see கிஞ்சி.

கிஞ்சிக் கினம், ஆத்து மா, the soul.

கிஞ்சிதம், see கிஞ்சித்து.

கிஞ்சித்து, கொஞ்சம், a small quantity; 2. புளிமா, hog-plum, see கிஞ்சம்; 3. திப்பிலி மூலம், root of long-pepper — Piper longum.

கிஞ்சில், கொஞ்சம், very little.

கிஞ்சுகம், கிளி, parrot; 2. கேகயப் புள், a bird charmed by music; 3. சிவப்பு, red-

ness; 4. பலாசு, palaus — Butea frondosa; 5. முள் முருக்கு, thorny coral tree—Erythrina indica.

கிஞ்சுகி, பலாசு, see கிஞ்சுகம்.

கிஞ்சுமம், முதலை, crocodile.

கிஞ்சு மாரம், see கிஞ்சுமம்.

கிஞ்ஞா, ஓர் வகைச் செடி, a shrub with a small ever green-leaf. See கொஞ்சி.

கிடக்கை, படுத்தபடி கிடத்தல், recumbent posture; 2. கட்டில், cot; couch; 3. பூமி, earth; 4. இடம், place.

கிடங்கு, குழி, pit; depression as in கண் கிடங்கில் விழல், sunkenness of the eyes.

கிடங்கு பள்ளம், காதினுள் ளிருக்கும் ஆனைப் பள்ளம், tympanic cavity; 2. காதின் புறத் துப் பள்ளம், glenoid cavity.

கிட சாரி, சடைச்சி, matted-hair plant — Grewia triliaefolia.

கிடத்தல், see கிடக்கை.

கிடத்துதல், படுத்தபடி கிடக்கச் செய்தல், placing in a recumbent posture.

கிடந்த கிடை, நோயால் படுத்த படுக்கை, bed-ridden as from a disease

கிடந் துருளல், படுத்த படுக்கையில் உருளல், rolling in bed; restlessness in bed.

கிடப் பரிணம், see அடுக்குச் செம் பரத்தை.

கிடப்பு, படுத்துக் கிடத்தல், lying prostrate; 2. கிடந்து துயிலல், resting in sleep.

கிடப்புதல், see கிடத்துதல்.

கிடவம், ஊமத்தை, thorn-apple—Datura.

கிடவாக் கிடை, see கிடந்த கிடை.

கிடா, see கடா.

கிடாக் காலன், எருமைக் கொம்பு, buffalos's horn.

கிடா முன்னை, ஓர் வகை முன்னை, serrate fire-brand teak—Premna thrysoidea.

கிடாய், ஆட்டுக் கடா, male of sheep.

கிடாரங் காய், கடாரங் காய், citron.

கிடார முக்கி, ஓர் மூலி, an unknown plant.

கிடாரம், கொப்பரை, cauldron; copper boiler.

கிடாரவன், ஓர் வகை அகில், a kind of agilwood. See அகில்.

கிடாரி, see கடாரி.

கிடாரை, see கடார நாரத்தை.

கிடி, பன்றி, hog; 2. மருட் பன்றி, a species of wild and mad hog living in the hills and jungles.

கிடிச் செவி, see அமுக்கிரா.

கிடிப குட்டம், பன்றித் தோற் போல் கனத் துக் காணும் ஓர்வகைக் குட்ட நோய். இத னால் உடம்பு பச்சைநிற மடைந்து நமைச்ச லுண்டாகி, சதை வழுவுண்டு, கொப்புளங் கள் எழும்பி, ஊன் வடிந்து, நாற்றம் வீசும். a kind of leprosy characterised by the thickening of the skin like hog's skin, which is often the first manifestation of the disease. It is marked by the following symptoms viz.—greenish patches on the skin, itching, abrasion of the skin, ulceration of the affected parts with fet... leprous discharge etc.

கிடிபம், மரத்தைத் துளைக்கும் பட்சி, woodpecker.

கிடிமம், ஆமை யோட்டைப் போல் தடித்த சதை, a flattish raised patch of integument—Heloid tumour.

கிடியம், பன்றி நெய், lard.

கிடுக் கட்டி, இலுப்பைப் பூவில் மிளகாய் சேர்த்து இடித்த கட்டி, cake of mohwa flower mixed with chilli and other seasoning ingredients, roasted and pounded.

கிடேச்சு, நெட்டி, pith.

கிடேரி, பசுவின் கன்று, heifer.

கிடை, சடை மரம், sola pith; 2. நெட்டி, pith; 3. ஆட்டுக் கிடை, sheep fold; 4. நோயில் விழுதல், falling ill; 5. கிடக்கை, lying down; 6. ஓர் குளத்துப் பூடு, a plant growing in tanks — Aeschynomene aspera.

கிடை கொடுக்காமை, படுக்கையிற் பொருந் தாமை, restlessness in bed as of sick persons.

கிடை கொடுத்தல், பொலிவதற்கு இடங் கொ டுத்தல், allowing to copulate as animals; 2. படுக்கையிற் பொருந்துதல், resting in bed.

கிடைச் சரக்கு, நெடு நாள் கிடந்த சரக்கு, old stock of drugs.

கிடைச்சி, கிடைச்சு, கிடைச்சை, } see கிடேச்சு.

கிடை பொருந்தாமை, see கிடைக் கொடுக் காமை.

கிடைப் படல், நோய் படுதல், falling ill; being laid up with disease.

கிடைப் படுதல், see கிடைப் படல்.

கிடைப் பாடு, நோய், disease; 2. நோயால் படுக்கையிற் தள்ளுதல், being confined to bed through disease.

கிடைப் பிசகு, படுக்கையில் நேர்ந்த சுளுக்கு, cramp or sprain occurring from lying in a wrong position in bed.

கிடையாய்க் கிடத்தல், படுத்த படுக்கையாய்க் கிடத்தல், being confined to bed as from disease.

கிட் கிழங்கு, கின்னிக் கிழங்கு, root of birch-leaved acalypha—Acalypha fruiticosa.

கிட் சுசியம், see கனா விழுதி.

கிட்டக் கல், உருகிய செங் கல், over-burnt brick; 2. கிட்டம், iron dross; 3. குமிடக் கல், a spongy stone ejected from volcanoes—Pumice.

கிட்டப் பார்வை, அருகி லிருக்கும் பொருள்கள் மாத்திரம் தெரியும் பார்வை, short-sightedness.

கிட்டர், இரும்புக் கிட்டம், scum of iron; 2. இரும் புருக்கிய தூள், scoria of iron; 3. இரும்பு படிந்த தூள், iron dross; iron crust; 4. உலோகக் கட்டி, lump of metal; 5. இரத்தினக் கரடு, crust in a precious stone; 6. வண்டல், sediment; 7. கழிவுப் பொருள், excretion; secretion.

கிட்டம், இதற்கு உருக்கு, எஃகு, மண்டூரம், அயக்கல் எனப் பல பெயர்களுண்டு. அயத்திற் குண்டான குணம், செய்கை இதற்குமுண்டு. வைத்தியர்கள் இதைச் சுத்தி செய்து செந்தூர மாக்கி, இரத்த விருத்தி, பல வீனம், பாண்டு, சோகை, இவைகளுக்குக் கொடுக்க. குணமாகும். இதைக் கரிசலாங் கண்ணிச் சாற்றில் கொடுக்க பெரு வயிறு, குன்மம், குடல் வாதம் இவைகள் தீரும். அன்ன பேதியைக் கொடுக்க வேண்டிய நோய்களுக்கு இதைக் கொடுக்கலாம், (*In Tamil Medicine*) it is a common term used for steel, scoria of iron, iron-stone etc. It has the same property and action as iron. It is cleansed and calcined into a red oxide and given for improving blood, weakness, dropsy, anemia etc. Given in the juice of eclypse plant, it is found useful in abdominal dropsy, dyspepsia, hernia etc. This can be used in diseases as a substitute for green vitriol.

கிட்டம் பிடித்தல், துருப் பிடித்தல், becoming rusty.

கிட்ட லோகம், உருக்கு, steel.

கிட்டல், நெருங்கல், as in பல் கிட்டல், close setting of the teeth.

கிட்ட வர்ச்சிதம், விந்து, semen virile.

கிட் டாக்கினிக் கொட்டை, சேரான் கொட்டை, marking nut—Semecarpus anacardium.

கிட்டா மாரி, சிறு புள்ளடி, acute oblong unifoliate tick trefoil — Desmodium gangeticum.

கிட்டி, சிறு சின்னி, birch-leaved acalypha—Acalypha fruiticosa; 2. பன்றி, hog; 3. இடுக்குத் தடி, an instrument by which something is squeezed, crushed or forced; clamp; 4. கவ ரிறுக்கி, iron clamp; 5. நாழிகை வட்டில், a common device in ancient days for measuring time by the discharge of sand—Clepsydra; 6. சின்னி, Indian shrubby copper leaf.

கிட்டி கட்டல், இரசம் பிழிதல், extracting juice by squeezing or crushing.

கிட்டி கட்டிப் பிழிதல், see கிட்டி கட்டல்.

கிட்டிக் கிழங்கு, சின்னிக் கிழங்கு, root of acalypha.

கிட்டிண காரம், சவுக் காரம், Fuller's earth; soap.

கிட்டிண சாசி, see கருஞ் சீரகம்.

கிட்டிண சாரம், திப்பிலி, long-pepper—Piper longum.

கிட்டிண சுரம், see கரு நொச்சி.

கிட்டிண பாணம், see எட்டி.

கிட்டிண பேடம், see கடுகு ரோகிணி.

கிட்டிண போளம், கரிய போளம், black myrrh.

கிட்டிணம், கறுப்பு, blackness.

கிட்டிண வல்லி, நன்னாரி, Indian sarsaparilla —Hemedesmus indicus.

கிட்டிண வாலி, குதிரை வாலி, horse tail millet; rough panic grass — Panicum verticillatum.

கிட்டி பாணம், see கிட்டிண பாணம்.

கிட்டிப் பேடம், see கிட்டிண பேடம்.

கிட்டிமம், உவர் நீர், salt or brackish water.

கிட்டிராம், நெருஞ்சில், a thorny shrub; caltrops—Tribulus terrestris.

கிட்டிலம், see அரக் காம்பல்.

கிட்டி வான், எட்டி, strychnine tree.

கிட்டினன், திப்பிலி, long-pepper.

கிட்டுதல், பல் ஒன்றோ டொன்று நெருக்கி இறுகுதல், teeth setting firmly together or their doubling up tightly; 2. அணுகல், approaching.

கிணம், see கணம்; 2. காய், wart; 3. தழும்பு, scar.

கிணற் ருமை, கிணற்றில் வாழும் ஆமை, fresh water tortoise living in wells; Terrapin —Emys trijuga.

கிணற்றுச் சத்தம், see கிணற் றொலி.

கிணற்றுத் தவளை, கிணற்றில் வாழும் தவளை, well-frog—Rana cutipora.

கிணற்று நீர், கிணற்றின் நீர். இதனுல் மிகு தாகம், உஷ்ணம், தேக வழற்சி, சூலை, உட்கடுப்பு, குடைச்சல், மயக்கம், வீக்கம், பித்த தோஷம், சுவாசம் இவைகள் போம், well-water — Aqua fontana. It is said to relieve the following complaints viz:—intense thirst, constitutional heat, colic pain, internal irritation, boring pain, giddiness, swelling, bilious affections pulmonary complaints etc.

கிணற் றொலி, மந்தமான சத்தம், weak or dull sound.

கிறுங்கு, ஓர் வகைப் புல், a species of grass —Rotboella corymbosa.

கிறுட்டு, முள் எலும்புச் சிவல், a thin bony appendage in the gills of a fish.

கிணி, நாயுருவி, Indian burr — Achyranthes aspera.

கிணிதி, சிறு கிலுப்பை, rattle-wort—Crotolaria laburnifolia.

கிணு கிணி, see குணு கிணி.

கிணு கிணுப்பு, காதில் லெழுமோர் ஒலி, a peculiar tinkling sound of the ear—Tinnitus aurium.

கிணா மகள், கிறவி அதாவது 16 வயதுப் பெண், a girl of sixteen years.

கிண் கிணி, வெண்கல மலை, bronze or bell-metal ore.

கிண்கிண் ணிருமல், கிண் ணென்று சப்திக்கு மிருமல், cough with a metallic sound.

கிண்டல், கிளறுதல், stirring as is done in preparation of electuaries.

கிண்டன், தடியன், a fat and strong person; 2. ஓர் உறப்பான துணி, a coarse cloth.

கிண்டி, மூக்குச் செம்பு, a drinking vessel with a nozzle.

கிண்டிக் கொடுத்தல், கிளறிக் கொண்டேயிருத்தல், keeping on stirring as in the preparation of medicated oils, electuaries etc.

கிண்டிப் பார்த்தல், சலாகையால் சோதித்தல், examining with a probe.

கிண்டுதல், see கிண்டல்.

கிண்ணை முலை, கிண்ணத்தைப் போன்ற முலை, woman's breast resembling the shape of a cup.

கிண்ணம், சிறு வட்டில், a small cup made of metal.

கிண்ணி, see கிண்ணம்; 2. உண் கலம், a metallic bowl used as an eating dish; 3. இரசம், கந்தகம், அப்பிரகம் முதலியவைகளைக் கட்டி, வல்லுப் பாத்திரமாகச் செய்த கிண்ணி. இது காய கற்பத்திற் குதவும், a bowl for holding food or other eatables, made of consolidated mercury, sulphur, mica and other substances. It is intended to be used for purposes of Rejuvenation.

கிண்ணிக் கருப்பூரம், கருப்பூரத்தைக் கிண்ணி மாதிரி வாற்றல், refined camphor cast in a mould of cup—Cup-camphor; 2. see இரச கற்பூரம்.

கிண்ணிக் கால், நாயின் மாறுபட்ட கால், a deformed leg of a dog.

கிண்ணித் தைலம், கிண்ணியின் உட் பக்கம் படிக்க மேலும்படி தயாரித்தத் தைலம், medicated oil which is prepared by a process of sublimation in which the vapour is made to condense again as a deposit on the inner side of a cup or receiver.

கிண் ணெனல், கிண் ணென்ற சத்தம், sounding like a metal.

கிண்வணை, மலை மா, Kambala tree—Sonneratia acida.

கிதபம், see கைமத்தை.

கிதம், நெய், ghee.

கிதவும், see கிதபம்.

கித்தில், கூந்தற் கமுகு, jaggery palm — Caryola urens.

கித்தள், see கித்தில்.

கித்மி விதை, (யுனானி) சீமைத் துத்தி விதை, seeds of marsh-mallow —Althaea officinalis.

கிந்தரம், see ஆந்தை.

கிந்தாதி, துடரிப் பூடு, a thorny shrub — Rhamnus circumcissus; 2. தொடரி, prickly buck thorn—Scutia indica.

கிந்திகம், திப்பிலி மூலம், root of long-pepper, 2. புளி மா, sour mango — Spondias mangifera.

கிந்து காலன், கொந்தி நடப்பவன் அல்லது ஒற்றைப் பாதத்தில் நடப்பவன், one who walks awkwardly on tip-toe or on one foot. *C. f.* குந்து காலன்.

கிந்துக் கினம், see கிமித்துக் கினம்.

கிந்துதல், நொண்டி நடத்தல், limping.

கிமித்துக் கினம், புழு, worm.

கிம்பகம், எட்டி, nux vomica — Strychnos nux-vomica.

கிம் புருடர், வானுலகத்தி லுள்ள மனித முகமும், குதிரை யுடலும் படைத்த ஓர் தேவ கணம், a class of Celestial musicians or Lyrists supposed to possess the combined form of man's face, and horses's body. They are said to inhabit the region next above the clouds.

கிம்மம், துத்தம், vitriol or glass like oil.

கிம்மியம், see ஆகாச கருடன்.

கிம்மீரம், செம் மட்டை நிறம், brown colour.

கியார சம்பர், (யுனானி) சரக் கொன்றைப் புளி, a Unani term referring to Indian laburnum—Cassia fistula.

கியாழதம், மூன் றெழுத்தி லொன்றாகிய 'கிலி', one of the three mystic syllables named 'Kili'.

கியாழ மிறக்கல், கஷாயம் வடித்தல், preparation of decoction or infusion.

கியாழும், கஷாயம், decoction; 2. சீத கஷாயம், infusion.

கியாழும், காய்ந்த அல்லது பச்சை மூலிகைகளின் வேர், பட்டை, இலை, பூ, விதை, கிழங்கு அல்லது சமூலம் இவைகளை வென்னீர் அல்லது குளிர்ந்த சலம் இவைகளில் ஊற வைத்து அல்லது காய்ச்சி வடித்த கஷாயம், the water whether hot or cold in which the root, bark, leaf, seed, tuberous root of a dry herb or the whole portion of it is soaked or boiled down in proportionate quantities and extracted as decoction. See கஷாயம்.

கியான தரம், வகாரம், a code word referring to Alchemy.

கிரக கச்சபம், வீட் டாமை, house-tortoise.

கிரக கணம், நோய்க ளுண்டாக்கும் பேய்கள், the whole number of demons causing diseases of human beings.

கிரக கபோதம், வீட்டுப் புறா, house-pigeon.

கிரக கன்னியம், சோற்றுக் கற்றாழை, hepatic aloe — Aloevera officinalis alias Aloe perfolia.

கிரக கூலகம், புடலை, common snake gourd —Trichosanthes anguina.

கிரகங் கழித்தல், கிரக தோஷத்திற்குச் சாந்தி பண்ணுதல், to effect a ceremonial observance so as to mitigate or avert the evil influence of planets on a particular individual.

கிரக சமித்து, வீட்டி லுபயோகிக்கும் 9 வகை ஓம விறகு, அவையாவன, sacrificial fuel consisting of nine kinds of trees or plants used for domestic purposes viz:-

1. எருக்கு, madar.
2. முருக்கு, coral tree.
3. கருங் காலி, acacia.
4. நா யுருவி, Indian burr.
5. அரசு, peepul tree.
6. அத்தி, fig tree.
7. வன்னி, suma tree.
8. அறுகு, couch grass.
9. தருப்பை, sacrificial grass.

கிரக சம்பந்தம், கிரக தோஷம், affection caused by the evil influence due to planetary movements.

கிரக சம்பந்த வுணவு, ஒவ்வொரு சரக்குக்கும் அதற் குரிய கிரகங்களின் தொந்தம் உண்டு. ஆகவே மனிதர்கள் அவரவர்களின் சபக் கிரகங்களுக்கும் அல்லது அவைகளின் நட்புக் கிரகங்களுக்கு மாத்திரமே உரிய உணவு

அல்லது பதார்த்தங்களை உபயோகப்படுத்துவதனுற் சுகமும் மற்ற பலனும் உண்டாம். அவ்வாறின்றி, அசுபகிரகங்களுக்குரிய பண்டங்களை மாறுபடச் சாப்பிடுவதால் நோயுண்டாகுமென கருதப்படும், food or other dietary substances taken on the principle that each planet bears corresponding relation weather good or friendly to each of the food substances or the essentials contained in that food or diet. So, it is considered advantageous for one to keep one's good health by sticking to the principles of diet according to his own good stars. By not adhering to the said principle, one is likely to fall ill because of his taking substances relating to bad stars.

NOTE 1.—There are a great many stars in the Universe and a great many forces existing in the human organism; and so consistent with them there are a great many plants which are the earthly representatives causing Astral influences corresponding to the quality of the stars; and these plants will attract the influences of the stars to which they are respectively related. By using such plants as Medicine or food, we attract the planetary influence needed to restore the vitality in the diseased parts.

NOTE 2.—By the judicious use of plants, beneficial astral activities may be attracted and evil influences averted or neutralised; but to know what plants are required in each case, it is necessary to be acquainted with Astrology and Astronomy in relation to the Anatomy of the human body.

கிரக சாந்தி, see கிரகம் கழித்தல்; 2. நவக்கிரக தோஷ நிவர்த்தி, a ceremony in general performed for averting the evil influence of the nine planets.

கிரக சாரம், பாபக் கிரகங்களின் தோஷம், evil influence of planets; 2. கிரக நிலை, planetary disposition; 3. நவாச் சாரம், sal-ammoniac.

கிரக செபம், கிரக தோஷம் கழியச் செய்யும் மந்திரத் தியானம், incantations to ward off the evil influence of planets.

கிரகண சக்தி, தெளியும் ஆற்றல், power of understanding.

கிரகண தோஷம், கர்ப்ப காலத்தில் கிரகணம் பிடிக்கும் போது, தாய் சும்மா இராது தகாத தொழில் செய்வதாலும் அல்லது கிரகணத்தைப் பார்ப்பதாலும், கருப்பையில் குழந்தைகட் கேற்படும் குற்றங்கள், deformities or other defects in the body occurring to a child in the womb when the pregnant mother does not keep quiet, but takes to certain undesirable actions at the time of eclipse or sees the eclipse; 2. பிளந்த உதடு, hare-lip supposed to be caused as a result of the mother's seeing an eclipse during her pregnancy.

கிரகண பாகம், பித்தத்தினுல் மூக்கு நுனியிலுட் புறத்தில் வெந்து எரிச்சலையும் வலியையு முண்டாக்கு மோர் நோய், a disease of the nose marked by an inflammation of the nasal chambers adjoining the tip of the nose, burning sensation and pain in the affected part.

கிர கணம், see கிர காகமம்; 2. கை, the hand; 3. இந்திரியம், an organ of sense; 4. வயிற் றிற்கும் குடலுக்கும் இடையேயுள்ளதாகச் சொல்லப் பட்ட ஓர் கற்பனை உறுப்பு, an imaginary organ supposed to be between the stomach and the intestines; the small intestine or that part of the alimentary canal where the bile assists digestion and from which the vital warmth is said to be diffused.

கிர கணி, குடலின் மேற் பாகத்திலுள்ள சிறு குடற் பகுதி, (*literally*) the uppermost extremity or the receiving ducts of the intestines. It is situated between the intestines and the duodenum. It is affected by the causes which produce dullness of appetite; 2. உட்கொண்ட உணவு செரியாமையினுல் கழிவதும், அல்லது செரித்தால், மலக் கட்டாயும் அல்லது மலம் குழம்பாகவோ அல்லது நீராகவோ நாற்றத்துடன் வெளிப்படும் அசீரண பேதி, a disease in which the food taken is passed off in the shape of undigested fecal matter or if digested, produce sometimes either constipation or liquid motions accompanied in both cases by pain and fetid smell; 3. அதிசார ரோகத்தை அடுத்து வருதல், அதாவது அசீரண காலத்தில் திரிதோஷ வேறுபாட்டால் பலவிதமாக பேதி யாதல். இதுவே கழிச்சல் என்று சொல்லப் படும், a long continued or chronic diarrhoea *i.e.* continued looseness of the bowels resulting from neglected diarrhoea. It

is supposed to be caused by the derangement of the three humours in the system; 4. அதிசாரக் கழிச்சல் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஓர் கலப்பு மருந்து, a mixture prescribed for diarrhoea etc.

கிரகணித்தல், பற்றுதல், holding; grasping; 2. உட்கொள்ளல், absorbing.

கிரகணியம், புளி நறளைக் கிழங்கு, (acid + Vitis lanata + root) root of acid Naralay or fox-grape — Vitis carnosa (root of); 2. see அருநெல்லி.

கிரகணி ரோகி, கழிச்சலால் பீடிக்கப் பட்டவன், one who is attacked or affected with dysentery.

கிரகணி, இரைப்பையி லிருக்கும் உணவு சீரணமாகி பக்குவப் படும் வரையில் சிறு குடலுக்குள் போகாதபடி அதை இறுத்தும் தன்மையுடைய ஓர் உறுப்பு, that portion of the stomach which prevents the food entering the small intestines before it is properly digested—Pylorus.

கிரகணி கதம், சீதபேதி சம்பந்த மானவை, that which is related to dysentery; 2. சீதபேதி தோஷம், a morbid affection of dysentery.

கிரக தானியம், வீட்டி லுப யோகிக்கும் தானியங்கள், grains used for domestic purposes:—

1. கோதுமை, wheat.
2. பச்சரிசி, raw-rice.
3. துவரை, dholl.
4. பச்சைப் பயறு, green-gram.
5. கடலை, Bengal-gram.
6. எள், gingelly-seed.
7. மொச்சை, bean.
8. உளுந்து, black-gram.
9. கொள்ளு, horse-gram.

கிரக தீமை, see கிரக தோஷம்.

கிரக தோஷம், பொதுவாக நவக் கிரகங்களின் கோளாறினால் ஏற்படும் தோஷம் அல்லது நோய், morbid diathesis or diseases in general ascribed to baneful influences of malignant stars; 2. பாலக்கிரக தோஷம். இது குழந்தைகள் பாற் குடிக்கும் காலத்து, தாய் அல்லது செவிலித் தாய் நடக்கும் நியமப்படி நடவாமற் போவதால், கிரகங்களின் ஏவலினால் பேய் பூதங்கள் குழந்தைகளைத் தாக்குவதால் ஏற்படும் நோய்கள். இவைகளைக் குணப் படுத்துவது கஷ்டமாகவும், சிலவேளை அசாத்தியமாகவு முடியும். இத் தோஷத்தினால் குழந்தைகளுக்கு நேரும் நோய்கள், அந்தந்த தேவதைகளின் ஏவலின் பிரகாரம் அடியிற் கண்டபடி பலவிதமாய்க் காணும், அவைகளாவன, an attack in children especially in cases where the rules or directions laid down previously in respect of the conduct of the mother or the wet-nurse during the time the child is brought up in the breast, are not strictly adhered to or even followed regularly; and, as a consequence of this, demons under the influence of the then presiding planets make their appearance for the purpose of getting proper respect and worship. It is supposed that the said attack becomes very hard to be cured; and in some cases even result in as almost incurable. The diseases arising as such are various as mentioned below and they vary in their nature and characteristics according to command of the presiding deities:—

1. ஒரு வருஷம் வரையில் மோக னாங்கி பிடிக்கும். இத் தேவதையினால் ஏற்படும் கோளாறுகள் — வாந்தி, பால் உண்ணாமை, சுரம், நீர்ப் பேதி, பூனைக் குரல், for one year the child will be under the influence of the demoness 'Mohanangi'; and the symptoms are:— vomiting, aversion to mother's milk, fever, watery motion, cat's voice (mew).

2. இரண்டு வருஷம் வரையில் நீலகண்டி தேவதை தொடரும். இதனால் உண்டாகும் குறிகள்—சுரம், வியர்வை, கொட்டாவி, கை காலிற் தங்காமல் அழுகல், for two years the child will be under the influence of the demoness 'Nilakandi'; and the symptoms are:— perspiration, fever, yawning and restless cry.

3. மூன்று வருஷம் வரை — விரோத கன்னி பிடிக்கும். இதனால் நேரும் நோய்கள் — கண்பீளை, பாலுண்ணாமை, வெண் பேதி, வயிறு கல் போலிருத்தல், சுரம் முதலியன, for three years, the child is ruled by the demoness 'Virodha

Kanni' and the condition is marked by muco-purulent discharge from the eye, aversion to mother's milk, white diarrhoea, tympanites, fever etc.

4. நான்கு வருஷம் வரை—பைரவி தேவதை தொடரும். இதனால் காணும் குறிகள் — தேங்காய்ப் பூ பேதி, தாயை விடாமை, வாயில் நுரை தள்ளல், கை கால் முடக்கு, வயிறுப் பிசம், விலாத் தூக்கு, உச்சித் துடித்தல் முதலியன, for 4 years under the influence of 'Bairavi' and the condition is characterised by diarrhoea, clinging to the mother, discharge of froth from the mouth, rickets, swelling of the abdomen, sucking in of the intercostal spaces, throbbing movement of fontanelle etc.

5. ஐந்து வருஷம் வரை— ஆகாச ஜின்னு பிடிக்கும். இதனால் உண்டாகும் நோய்கள் — விலாத் தூக்கிப் போடல், வயிற்றுச் சப்பு, சொறி சிரங்கு, கரப்பான் முதலியன, until the 5th year, under the cruel demoness, 'Akasa jinnu'; and the signs are, sucking in of the intercostal spaces, abdominal swelling, itch and sores, carpaung (skin affections).

6. ஆறுவருஷம் வரை—வைத்திரி கன்னியின் தொந்தம். இதனால் கை கால் வீக்கம், முகம் வியர்த்தல், கண் சொக்கல், பா லுண்ணுமை, முது கெலும்பு, திமிர்ந் திருத்தல், வயிறுப் பிசம், விலாத் தூக்கல் முதலியன, until the sixth year the child will be ruled by 'Vythri kanni'; and the con- dition is attended with swelling of the limbs, perspiration of the face, whirling of the eyeball, stiffness of the spine, abdominal swelling, sucking in of the intercostal spaces, etc.

NOTE.—Graham is literally known as seizing or influencing destinies of men. At the large religious festivals a small offering is made to all the planets at once; and excepting on these occasions they are never worshipped together. They are however, frequently worshipped seperately by those who suppose themselves to be under the adverse influence of one or other of them.

ஆயுள் வேதப்படி கிரக தோஷம் பன்னிரண்டு வகைப்படும். இவை சில நூற்களில் அடியிற் கண்டபடி வேறுபடும். அவையாவன:—According to Ayurveda, planetary diseases consist of 12 kinds. They vary according to some books as shown under:—

1.	கந்தம்	—	கந்தம்.
2.	விசாகம்	—	சுகந்தனம்,
3.	மேஷம்	—	பூதனு.
4.	சுவானம்	—	முக மண்டலிகை,
5.	பிதுர்	—	கட பூதனு
6.	சகுனி	—	சகுனி.
7.	பூதனு	—	ரேவதி
8.	சீத பூதனு	—	அர்யகை.
9.	அதிர்ஷ் பூதனு	—	பூ குதிகை.
10.	முக மண்டலிகா	—	நிருதி.
11.	ரேவதி	—	பிலி பிச்சிகை.
12	சட்க ரேவதி"	—	காமுகை.

NOTE—Innumerable are the Grahas and their tutelary divinities who roam about in the world in quest of offerings for their mischief and cruelty choosing their victims from amongst persons who are impure in mind, body and action — (Susruta Samhita).

கிரக பலம், கிரகத்தின் அதிகாரம், planetary influence.

கிரக பீடை, see கிரக தோஷம்.

கிரகப் பிழை, பால கிரக தோஷம், affection of children due to the influence of malignant stars or planets. See கிரக தோஷம்.

கிரக புட்பம், வீட்டு உப யோகப்படும் 9 வகைப் பூக்கள்; அவையாவன, the nine kinds of flowers of domestic use viz:—

1. செந் தாமரை, red lotus.
2. வெள் ளாம்பல், white Indian water-lily.
3. சண்பகம், champauk.
4. வெள் காந்தள், November-flower.
5. முல்லை, smooth jasmine.
6. வெண் டாமரை, white lotus.
7. கருங் குவளை, blue Indian water-lily.
8. மந்தாரை, mountain ebony — Bauhinia genus.
9. செவ் வாம்பல், red Indian water-lily.

(b) வேறு வகை புஷ்ப வகைகள், the other kinds of flowers are:—

1. மல்லிகை, common jasmine.
2. செவ் வந்தி, chamomile.
3. ரோஜா, rose.
4. பவள மல்லிகை, coral jasmine.
5. மகிழம் பூ, ape-face flower.
6. மனோரஞ்சிதம், Cupid's plant.
7. அலரி, oleander.

கிரகம், நவக் கிரகம், அவையாவன:—the nine planets according to the Hindu system and they are:—

1. சூரியன், Sun.
2. சந்திரன், Moon.
3. செவ்வாய், Mars,
4. புதன், Mercury.
5. வியாழன், Jupiter.
6. சுக்கிரன் அல்லது வெள்ளி, Venus.
7. சனி, Saturn.
8. இராகு, Dragon.
9. கேது, Descending Node.

2. மனிதருக்கு அபூர்வ சக்தியையும், மனோ வல்லமையும், இரகசியங்களை உணர்ந்தலையும், எதிர்கால உணர்ச்சியையும் தரக்கூடிய நட்சத்திரங்கள் அல்லது கோள்கள், (*In Astrology*) celestial bodies or fixed stars producing super-human character in a man by inducing him to exhibit uncommon fortitude and marked irrelevancy in his dealings and the power of knowing the present and future events; 3. மனிதர்களுடைய உடம்பையும், மனதையும் கவர்ந்து தீங்கிழைக்கும் கோள்கள். இதனால் பைத்தியம் முதலிய நோய்கள் ஏற்படும். ஆகவே, வைத்திய நூல்களில் இக் கோள்களின் தோஷங்களை நிவர்த்திக்கவேண்டி ஒரு பாகம் ஏற்பட்டே யிருக்கிறது. குழந்தைகளை 9 கிரகங்களும் ஒன்பது விதமாகத் தாக்கி, வலிப்பு, முதலிய நோய்களைக் காட்டும். இத்தகைய தோஷம் பிள்ளை குளியத்திலும் ஏற்படும், (*In. Hindu Medicine*) evil demons or spirits who seize or exercise bad influence in the body and mind of man causing insanity etc, So, it falls within the province of Medical Science to expel these demons; and therefore a chapter is set apart for this purpose. These spirits which cause convulsions etc. especially in children are divided into nine classes according to the number of planets. Sometimes these conditions are also attributed to certain magical influences which take possession of the whole man; and as such they fall within the purview of Occult Science. See கிரக தோஷம்.

கிரகம், இழுப்பு வலி, a stretching pain.

கிரகம் பிடித்தல், கோள் பிடித்தல், இது பளிங்கில் எப்படி உருவம் காணப்படுகிறதோ, அல்லது உடம்பில் உஷ்ணம் குளிர்ச்சி எப்படி புகுமோ அத்தன்மை போலவே நிகழும், the possessing of a person by a Graha, that imperceptibly enters into his body in the same way as an image in a mirror or as heat or cold penetrating into the human body.

கிரக பக்ஷி, வீட்டில் வளர்க்கும் பறவைகள், poultry.

கிரக ரத்தினம், வீட்டில் பெண்கள் அணிவதற்கு உபயோகப் படும் ஒன்பது வகை இரத்தினங்கள்; அவையாவன, the nine kinds of gems used as ornaments by women in houses viz:—

1. மாணிக்கம், ruby or carbuncle.
2. பவளம், coral.
3. புஷ்பராகம், topaz.
4. நீலம், sapphire.
5. வைடூரியம், cat's eye.
6. முத்து, pearl.
7. வைரம், diamond.
8. முத்து, pearl.
9. பச்சை, emarald.

கிரக வர்சன், see ஓணன்.

கிரக லோகம், வீட்டில் பாத்திரம், நகை வகைகளாக வுபயோகப் படும் ஒன்பது வகை உலோகங்கள், அவையாவன, the nine metallic minerals used as ornaments and utensils in house-holds viz:—

1. பொன், gold.
2. வெள்ளி, silver.
3. செம்பு, copper.
4. இரும்பு, iron.
5. ஈயம், lead.
6. பித்தளை, brass.
7. நாகம், zinc.
8. காந்தம், magnet.
9. உருக்கு, steel.

கிரக வகை, கிட்டி துன்ற வகையும் மனிதர் வகை ஆண், பெண், அலி, Domestically, the three different kinds in human beings are:—male, female and eunuch.

கிரக வதிபதி, நோயை யுண்டு பண்ணும் முக் கியமான கோள், the particular planet causing a particular disease through its demon in human beings.

கிரக வாகு, கோழி, fowl.

கிரகன், ஓர் வகைப் பட்சி, a kind of bird.

கிரகா கமம், பேய் பிடித்தல், demoniacal possession.

கிர காடிகை, பிடரி, nape.

கிர கபஸ்மாரம், (கிரகம்+அபஸ்மாரம்) கிரக தோஷத்தினு லேற்படும் காக்கை வலி, a nervous functional disease or epilepsy due to the influence of malignant stars and planets.

கிரகா வேசம், பேய் பிடித்தல், hysteria or possessing devils due to evil influence of stars.

கிரகிணி, பாற் சோற்றி, the solidified juice of various plants—Caoutchouc.

கிரகித்தல், சாரம் வாங்கல், to extract essence; 2. உள்ளுக் கிழுத்தல், absorbing.

கிரகி யகை, see கிரக யகை.

கிர கிரத்தி, see காட்டாமணக்கு.

கிர கெம்பீரம், see கிர சேபீரம்.

கிரகோற்பத்தி, ஒன்பது கிரகங்களின் உற் பத்தி, the origin of the nine planets; 2. ஒன்பது தேவதைகள் ஏற்பட்ட விதம், the origin of the nine presiding deities.

NOTE.—These deities viz. Skanda, Mesha etc. are the causes of the nine diseases of infant life; and they were created by Mahadeva and Parvati; and therefore it is their duty to see that iniquities of the parents are visited on their children.

கிரக்கனி பித்தன், சாதிக் காய், nutmeg — Myristica fragrans.

கிரக்கல், சோர் வடைதல், getting fatigued.

கிரசு, விழுங்கல், swallowing; consuming.

கிர சேமிரம், பச்சைக் கற்பூரம், crude camphor; 2. கற்பூரம், common camphor.

கிரஞ்ச காமிரம், செங்கு, west Indian cocoon —Eutada scandens

கிரஞ்சம், வெள் ளுள்ளி, garlic—Allivum sativum.

கிரஞ்சனம், முருங்கை, moringa tree — Hyperanthera moringa.

கிரணைச் சுண்டி, செட்டி தளம், an unknown plant.

கிரண பூதம், இரத்தக் கண், கொடிய பார் வை, பயங்கரமான பேச்சு, அதிக வுணவு முதலிய இராட்சச அல்லது பூத குணங்களை யுண்டாக்கு மோர் நோய், a disease caused by the evil influence of planets. It is characterised by blood-shot eyes, fierce look, fearful speech, gluttonous eating of food and other devilish qualities.

கிரணப் பிரியன், வெள்ளை நாகணம், Nepaul oil tree—Croton tigilium.

கிரணம், கதிர், ray of light; 2. சூரிய கிர ணம், sun's ray.

கிரணியம், பொன், gold.

கிரத மாலம், கொன்றை மரம், cassia tree—Cassia fistula.

கிரதம், சிலந்தி, ulcer.

கிரதரன், see கிருதரன்.

கிரதிதம், கெட்டி முடிச்சி யுள்ள கழலை, a knotty stone-like tumour.

கிரந்தி, கிலேட்டுமத்தினுல் நரம்புகளி லுண்டா கும் முடிச்சி, a knot of nerve fibres; nodules; 2. கழுத்து, அக்குள், அறை முத லான விடங்களில் சிறிய வுருண்டை வடிவமா யுள்ள கோளங்கள் வீங்கி யுண்டாகும் கட்டி, glandular swelling in the form of an abscess occurring chiefly in such parts of the body as, neck arm-pit, groin etc.; 3. கிரந்திப் புண், venereal or syphilitic sores or ulcers; 4. கோளத்தின் வீக்கம், glandular swelling; venereal swelling; 5. நரம்புச் சத்து பிறப் பதற்கான சிறு சிறு ஆசயம். இதை வெட்டிப் பார்க்கு மிடத்து வெண் ணிறமான பல நரம்பிழைகள் ஓடி யிருக்கும். சோஷணைக் குழல்களிலும், நரம்பு களிலு முள்ள சிறு சிறு திரட்சி, (*In anatomy*) a mass of nervous matter containing nerve-cells and giving origin to nerve fibres — Ganglia; 6. நெல்லி, Indian gooseberry — Phyllanthus emblica; 7. பருப்பு, kernel; 8. தோலைப் பற்றிய மேக நோய், any syphilitic affection of the skin, 9. ஏலத் தோல், skin of cardamom; 10. கிரந்தி நாயகம், an unknown plant used for glandular swellings; 11. மூன்று நாடியாகிய இடகலை, பிங்கலை, சுழு முனை சேரு மிடம், (*In Psychological Physiology*), inter-section of the three nerve-currents.

கிரந்தி, வாயு கோபித்து கபம் சேர்ந்து அதனால் ஊன், கொழுப்பு, இரத்தம் இவைகள் கெடுதி யடைந்து, திரண்டு முடிச்சாகவும், கடின மாகவும் எழும்பும் கட்டி. ஆயுர் வேதப்படி இது 9 வகைப் படும், a glandular inflammation which gives rise to the formation of round, knotty elevated hard swellings due to the deranged and unusually aggravated Vayu which vitiates the flesh, fat, blood mixed up with Kapham (கபம்) of any part of the organism.

(A). (*In Ayurveda*), it is divided into 9 kinds viz :—

1. வாதக் கிரந்தி,
2. பித்தக் கிரந்தி,
3. சிலேட்டுமக் கிரந்தி, } syphilitic sores due to the three humours in the human system.
4. இரத்தக் கிரந்தி, the one that alters the condition of blood.
5. மாமிசக் கிரந்தி, the one that attacks the muscles.
6. மேதோ கிரந்தி, the one that invades the fat in the system.
7. அஸ்திக் கிரந்தி, a form of syphilis which attacks the bones.
8. நரம்புக் கிரந்தி, the one that affects the nervous system.
9. விரணக் கிரந்தி, the one attended with ulceration of the parts affected.

(B). தமிழ் வைத்தியப்படி கிரந்திக வகைகள், (*In Tamil Medicine*) the following are the different kinds of ulcers :—

1. காய்க் கிரந்தி as அத்தி, ஆல், அலு முதலியன, eruptions of the sizes of fig, banyan fruit, mulberry etc. arising from syphilitic causes.
2. சொறி கிரந்தி, psoriasis.
3. நாசிக் கிரந்தி, rodent ulcer of the nose.
4. வாய்க் கிரந்தி, ulcer of the mouth.
5. கண்டரிக்கும் கிரந்தி, rodent ulcer.
6. கண்டக் கிரந்தி, ulcer of the throat.
7. கெர்ப்பக் கிரந்தி, hereditary or congenital syphilis.
8. யோனிக் கிரந்தி, pudendal ulcer.
9. மேல் வாய்க் கிரந்தி, ulcer affecting the palate.
10. கரு அழிக்கும் கிரந்தி, syphilis in a female bringing about abortion or barrenness.
11. இலிங்கக் கிரந்தி, hard chancre of the penis.
12. கன்னக் கிரந்தி, ulcer in the cheek.
13. நாக் கரிக்கும் கிரந்தி, ulcer of the tongue.
14. அரி கிரந்தி, corroding ulcer.
15. எழுமணிக் கிரந்தி, ulcers so called probably of their rising like beads.
16. மருள் கிரந்தி, ulcer causing confusion of mind.
17. சடைக் கிரந்தி, ulcers appearing in a row.
18. புருடக் கிரந்தி, primary syphilis.
19. அழி கிரந்தி, chancroid with a tendency to slough — Phagedenic chancroid.
20. சந்துக் கிரந்தி, venereal ulcer affecting joints—Gouty ulcer.
21. செங் கிரந்தி, red venereal ulcer affecting children.
22. கருங் கிரந்தி, black venereal ulcer affecting children.
23. மேக கிரந்தி, venereal herpes.
24. கொறுக்குக் கிரந்தி, chancre.
25. பெருங் கிரந்தி, true syphilis.
26. கள்ளிப் பூக் கிரந்தி, Secondary syphilis in which the lesion resembles Kalli flower.
27. துத்திப்பூக் கிரந்தி, that in which the lesion resembles Tutti flower.
28. காளான் கிரந்தி, fungating chancre.

கிரந்திக, கோள, glandular.

கிரந்தி கந்திகம், மிளகு, pepper.

கிரந்திக் பாணகம், பெண்கள் நோய், a disease of women.

கிரந்திகம், திப்பிலி மூலம், root of long-pepper; 2. புளி மா, sour mango—Spondias mangifera; 3. கெபத்திகை, an unknown plant; 4. சிறு காஞ்சொறி, common caper—Capparis aphylla; 5. குக்கிலியம், a resin or bdellium; 6. காது வெளிப் புறத்து வரும் ஓர் நோய், a disease of the outer ear.

கிரந்திக் கட்டு, கரந்தைக் கட்டி, tumour or nodules from syphilitic causes.

கிரந்திக் கரப்பன், மேகத்தினால் குழந்தைகளுக்குக் காணும் கிரந்தியோடு கூடிய கரப்பன் நோய், a skin disease in children attended with syphilitic affections—Syphiloderm.

கிரந்திக் காரன், மேகக் கிரந்திக் காரி, organism causing venereal or syphilitic diseases.

கிரந்தி சூலை, கிரந்தி நோயால், கை கால், முளி, பொருத்து இவ் விடங்களில் நீர் கட்டிக் கொண்டு, வீக்கம் கடுத்தும் சருடு கட்டியும், வெடித்துச் சீழ் சலம் வடிதலும், இந்திரியம் முதிர்ந்து நீர்க் கடுத்தும் காணும் ஓர்வித சூலை நோய், a form of rheumatism from syphilitic causes affecting the joints owing to a collection of morbid fluid; and it is marked by swelling, stiffness, fissure in ulcers, discharge of pus and water, burning sensation during micturition and watery semen.

கிரந்திவனையல், கிருமியோடு கூடிய மேகக் கிரந்தி, a syphilitic disease attended with germs.

கிரந்தி தகரம், நந்தியா வட்டம், East Indian rosebay—Tabernaemontana coronaria.

கிரந்தி தலம், ஓர் வாசனை, a perfume; 2. ஓர் கிழங்கு, a bulbous root.

கிரந்தித் தொய்வு, ஓர் நோய், கிரந்தியினால் காணும் இளைப்பு, cutaneous tuberculosis.

கிரந்தி நாயகம், சரும நோய்களுக்குபயோகிக்குமோர் பூண்டு, an unknown plant used as a sovereign remedy for syphilitic cutaneous affections. See கிரந்தி நாயகம்.

கிரந்தி நையல், கிரந்தி நோயால் ஏற்படும் துன்பம், syphilitic sufferings.

கிரந்தி பண்டம், கிரந்தி நோயை அதிகரிக்கும் பண்டங்கள், highly-flavoured articles of food aggravating syphilitic skin affections.

கிரந்திப் பரு, மேகக் கிரந்தியினால் ஏற்படும் புண், a syphilid in the form of warty growths; venereal pimple.

கிரந்தி பர்ணகம், ஓர் வாசனைப் பூடு, a fragrant plant.

கிரந்தி பலம், விளா, wood-apple; 2. மலைக் காரை, spinous honey-thorn—Vanguerria spinosa.

கிரந்திப் பவுத்திரம், பவுத்திரத்தின் புரையடி கறந்து புண்ணாகி, அல்லது ஆண் குறியைப் பற்றி தண்டி வடியில் வீக்கி இரண்டாகி மூத்திரம் துளி துளியாய்ச் சொட்டும் ஓர் வகைப் பவுத்திர நோய், urinary fistula in which the urine forces its way through the skin of the perineum and the urine drips through the body of the penis which becomes inflamed and swollen at the bottom.

கிரந்திப் புண், மேகத்தினால் எழும் கட்டி, venereal ulcers or buboes; 2. ஆண் குறியிலுண்டாகும் மேகப் புற்று, chancre.

கிரந்திப் புண்ணாற்றி, மேகத்தினால் எழுந்த கிரந்திப் புண்களை ஆற்றும் மருந்து, a remedy directed against or used for the relief of syphilis—Anti-syphilitic.

கிரந்திப் பூண்டு, see கிரந்தி நாயகம்.

கிரந்தி மாஷிதம், கச்சிக்கை கூமா; Cooma tree (unknown) the leaf of which is poisonous.

கிரந்தி முகம், பாக்கு மரம், areca-nut tree.

கிரந்தி மூலம், குதத்தில் விரணம் ஏற்பட்டுச் செடி கொடியாய் முளை யுண்டாகிச் சீழும் இரத்தமும் ஒழுகப் பெற்ற ஓர் மூல நோய், a kind of piles characterised by ulcer and polypus of the rectum which appears at the very verge of the anal orifice. It is attended with a discharge of pus and blood; 2. திப்பிலி மூலம், long-pepper root.

கிரந்தி யெண்ணெய், கிரந்திப் புண்ணிற்கும், மேகத்தினால் எழும் சரும நோய்களுக்கும், வேண்டி தயாரித்த வெண்ணெய், medicated oil prepared for syphilitic sores and other cutaneous eruptions arising from venereal causes.

கிரந்திலம், தூதுவளை, three-lobed solanum —Solanum trilobatum; 2. ஓர் வாசனை, a perfume; 3. இஞ்சி, green or undried ginger; 4. அருகன் புல், a kind of Cyperus grass.

கிரந்தி வச்சிரகம், ஓர் வித எஃகு, a kind of steel.

கிரந்தி வாயு, குழந்தைகளுக்குக் கிரந்தியினால் காணும் வாயு, flatulence due to syphilitic eruptions in the body attended with a difficulty of breathing especially in children.

கிரந்தி விசர்ப்பி, வாத சிலேட்டும விசர்ப்பி, இரத்தம் உடம்பில் பல விடங்களில் தங்குவதால் சிறிய கொப்புளங்களைத் திரட்டி மேலெழும் வரிசை வரிசையாக செந்நிறமான கிரந்திகளை யெழுப்புமோர் விரண நோய், a kind of erysipelas giving rise to small

red vesicles diffused in several rows in different parts of the body due to a peculiar inflammation of the skin arising from impurities of blood.

கிரந்தி வியாதி, மேகத்தினால் உடம்பில் அதிக நோய். இது அசாத்தியம், syphilis or a venereal disease, constitutional or hereditary often very difficult to be eradicated from the system.

கிரந்தி விரணம், கிரந்திப் புண், syphilitic sores or ulcers.

கிரந்தி விறகு பலம், பருத்தி, cotton.

கிரந்தி வீக்கம், கோளங்களின் வீக்கம், glandular swelling.

கிரந்தி வெப்பு, மேகத்தினால் குழந்தைகளுக்குக் காணும் ஓர் வகை சுரம், fever in children from syphilitic causes.

கிரந்திகனி, கொட்டைக் கரந்தை, Indian globe-thistle — Sphoeranthus indicus; 2. கலி முருக்கு, an inferior kind of Erythrina.

கிரந்தி ஸகம், ஓர் கிழங்குப் பூடு, plant consisting of a bulbous root.

கிரம நாடி, முறைப்படி நிமிஷத்திற்கு 70-75 தரம் அடிக்கும் நாடி, natural pulse at the rate of 70-75 beats in a minute.

கிரமப் பிரசவம், இயற்கை அல்லது கஷ்டமின்லாதப் பிரசவம், natural labour without difficulty.

கிரம பூரகம், வெள்ளைக் கொடி, white wheel creeper—Getonia floribunda alias Calycopteris floribunda.

கிரமாங்கதம், (கிரம+அங்கதம்) ஒழுங்கான மார்பு, straight or erect chest.

கிரமாதீதப் பிரசவம், சாதாரண பிரசவத்திற்கு மாறாக, வலிப்பு, இரத்தப் பெருக்கு, தலை தவிர மற்ற அவயவங்கள் வெளி காட்டல், கருப்பைக் கிழிவு முதலிய குற்றங்களுடன் விளைந்தப் பிரசவம், preter-natural labour attended with disorders such as, convulsions, hemorrhage, presentation of organs other than head, laceration of the womb etc.

கிரமா முகி, see கிரமுகம்.

கிரமா மூலப் பத்திரம், செம்பத்திரை, an unknown plant.

கிர முகம், see கிரந்தி முகம்; 2. செம்பு லோத்திரம், a red variety of lodhra tree; 3. ஓர் வகைக் கோரை, a kind of grass — Cyperus; 4. பாக்கு, betel-nut — Areca catechu.

கிரம், கிளி, parrot; 2. பன்றி, hog.

கிரயந்தம், திப்பிலி, long-pepper—Piper longum.

கிரவுஞ்சம், see அன்றில்; 2. குமாயிற்கு கிழக்கே யுள்ள இமயமலைத் தொடர், the eastern part of the Himalayan range in Assam; 3. திருநெல்வேலி சமீப முள்ள ஓர் தீவு, an unknown island near Tinnevelly Dt.

கிராககம், பருந்து, hawk; falcon; 2. ஆரை, a green—Marselia quadrifolia; 3. மலத்தைக் கழிக்கும் மூன்று மடிப்புகளில் ஒன்று, one of the three folds which lead off the feces from the body.

கிராகசம், மயக்கம் தரும் தன்மையது, the condition produced by the narcotics—Narcotism; 2. தாழை, screw-pine — Pandanus odoratissimus; 3. முதலை, வாளைப் போன்ற முள் பரப்பிருக்கு மீன், saw-backed fish.

கிராகதம், நாக முட்டி, frog-creeper—Tiliacora racemosa.

கிராகதி, நில வேம்பு, ground neem — Justicia paniculata.

கிராகம், see ஆமை; 2. கடல், நதி இவைகளில் வாழும் துஷ்ட மிருகம், a rapacious animal living in sea or fresh water; 3. கடலில் வாழும், பெருமீன், திமிங்கிலம், முதலை, சுறா, நீர் யானை முதலியன, any large fish or marine animal such as whale, crocodile, shark, hippopotamus; 4. தொடை வாதம், paralysis of the thigh; 5. பெண் முதலை, female crocodile.

கிராகடம், வானம்பாடி, a lark.

கிராகரம், கிசக கோவி, common caper — Capparis aphylla.

கிராகவம், ஓர் வகைக் கவுதாரி, a kind of patridge—Perdix sylvatica.

கிராகி, மயக்கம் தரும் மருந்து, a substance which promotes giddiness and sleep — Narcotic; 2. see குட்டிச் சொல்லக் கள்ளி; 3. மனிதர்களையும், கோழ்களையும் உண்டாக்கும் ஓர் பெண் பேய், a female spirit seizing men and causing death and diseases; 4. மூர்ச்சை, swoon; 5. வலிப் புண்டாக்கும் வலிப்பு, fainting fit.

கிராகி பலம், விளா, wood-apple — Feronia elephantum.

கிராகியம், பஞ்சேந்திரியம், the organs of sensual perceptions; 2. மயக்கத்தைக் கொடுக்கும் ஓர் விஷம், a narcotic poison.

கிராகினம், உடும்பு, great lizard; 2. ஓர் வகை வேல மரம், a kind of Mimosa.

கிராச சல்லியம், தொண்டையிற் சிக்கிக் கொள்ளும் வஸ்து, any extraneous substance lodged in the throat.

கிராசப் பிரமாணம், இரசத்தை கட்டுவதற்காக உபயோகிக்கும் ஓர் முறை, a process applied for consolidating mercury. *Cf.* கிராசங் கொடுத்தல்.

கிராசம், கவளம், mouthful; 2. விழுங்கல், swallowing; 3. ஆகாரம், food; nourishment.

கிராசம் கொடுத்தல், உலோகங்கள் நெருப்பிலுருகிக் கண் விட்டாடும் போது வெட்டை அல்லது களங்காக மாறுவதற்கு மருந்துப் பொடியை சிறிதளவாகத் தூவிக் கொண்டேயிருத்தல், (*In Alchemy*) sprinkling of medicinal powder during the fusion of metals for making them brittle or otherwise rendering them into an alchemical compound.

கிராடம், செம்பைப் பொன்னாக்கு மருந்து, (*In Alchemy*) that which converts copper into gold. See செயகுதத் தாம்பிரம்.

கிராட வல்லபம், ஓர் வகைச் சந்தனம், a kind of sandal wood.

கிராண நாடி, மூக்கினுள் சிகிச்சை செய்ய வேண்டி உபயோகிக்கும் குழாயைப் போன்ற ஓர் சிறிய கருவி, a small tube-like instrument used in treatment of the nose.

கிராணம், கிரகணம், eclipse; 2. சிறு வட்டில், a small basin; 3 மூக்கு, nose; 4 முகர்தல் perception of odour.

கிராண வேதம், வெண் கடுகு, white mustard.

கிராணி, கிராணிக் கழிச்சல், chronic diarrhoea. See கிரகணி; 2. குடலின் மேற்பகுதி, the upper most extremity of the intestines. See கிரகணி.

கிராணிக் கடுப்பு, கழிச்சலினால் ஏற்படும் ஆசனக் கடுப்பு, irritation of the rectum in cases of chronic diarrhoea.

கிராணிக் கழிச்சல், வாயு அல்லது முத்தோஷத்தால் குடலில் வாயு அதிகரித்து அதனால் குடலின் ஒரு பக்கம் கோளாறடைந்து, உணவு செரியாமல் பலவிதமான கழிச்சலையுண்டாக்கி, ஆசனவாயில் கடுப்பையும் உண்டாக்கும் ஓர் அசாத்திய வயிற்றுப் போக்கு. இதனால் வயிறு இரைந்து, மலம் நாற்றத்துடன், வெளிப்படுவதுடன், வயிற்றுவலி, தாகம், சோர்வு, சற்று பசிதல் முதலிய குணங்களுண்டாகும், chronic diarrhoea caused by vitiated wind or the aggravation of all the Doshas. In this, the intestines are deranged by chronic ulceration with the result that the digestive fire is weakened and food taken is simply passed off as undigested fecal matter or sometimes as liquid motions accompanied by the following symptoms, viz. irritation of the rectum, noisy stools, fetid odour, pain in the stomach, thirst, langour, flatulence etc.

1. மூலக் கிராணி, diarrhoea from excessive heat in the anal region.
2. சீழ்க் கிராணி, diarrhoea chylosa.
3. நீர்க் கிராணி, watery or serous diarrhoea.
4. வாயுக் கிராணி, flatulent diarrhoea.
5. சூதிகாக் கிராணி, vicarious diarrhoea from menstrual disorders.
6. அசீரணக் கிராணி, lienteric diarrhoea.
7. மேகக் கிராணி, diarrhoea from syphilitic causes.
8. குன்மக் கிராணி, dyspeptic diarrhoea.
9. கருப்பக் கிராணி, diarrhoea after confinement.
10. ஒட்டுக் கிராணி, infectitious diarrhoea.
11. சங்கரக் கிராணி, sympathetic diarrhoea.
12. தொந்தக் கிராணி, cachectic diarrhoea.
13. இரத்தக் கிராணி, dysenteric diarrhoea.
14. குடற் கிராணி, irritative diarrhoea.
15. விலா முறுக்குக் கிராணி, diarrhoea attended with pain in the sides of the upper part of the abdomen.
16. சோபக் கிராணி, see கழிச்சல்.
17. மலக் கிராணி, stercoral diarrhoea.
18. எலும்புருக்கிக் கிராணி, tuberculous diarrhoea. See கழிச்சல்.

NOTE. — This should not be confounded with sprue or *painless* diarrhoea. The symptoms are peculiar and free from such difficulties as are experienced in chronic diarrhoea although it may lead to a fatal result.

கிராணித் திரவியம், கிராணி தீர்க்குங் கார உபயோகப் படும் சரக்குகள், அவையாவன, drugs or other medicines that are considered useful in cases of chronic diarrhoea viz:—

1. பொடுதலை, creeping vervain — Lippia nodiflora.
2. நாய் வேளை, dog mustard plant — Cleome viscosa.
3. சிறு குறிஞ்சா, small Indian Ipecacuanha—Gymnema sylvestre.
4. மோர், butter-milk; sour-milk.
5. புளியாரை, Indian sorrel —Oxalis corniculata.
6. வசம்பு, sweet flag—Acorus calamus.
7. திரி சாரம், the three kinds of salts viz:—
   (a) வெடி சாரம், salt petre.
   (b) சத்தி சாரம், an alkaline salt containing the ingredients of a & c and common salt.
   (c) நவச் சாரம், sal-ammoniac.
8. கறி வேம்பு, curry leaf—Murraya exotica.
9. அழிஞ்சில், sage-leaved alangium —Alangium lamarckii.
10. பெருங்காயம், assafoetida—Ferula asafoetida.
11. இரு சாரம், which see.
12. பஞ்ச லோகம் அதாவது பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், gold, silver, copper, iron and lead.
13. மிளகு, black-pepper—Piper nigrum.
14. பாவட்டை, Indian pavetta—Pavetta indica.
15. நற் சீரகம், cumin seed — Cuminum cyminum.
16. முட்காய் வேளை, five-leaved wild indigo — Tephrosia senticosa.
17. அகிற் பட்டை, bark of Agil tree.
18. காவட்டம் புல், which see.
19. ஐந்துப்பு, five kinds of salts. See ஐந்துப்பு.

NOTE.—The action of these bare five salts in diarrhoea is very much doubted.

கிராணி வாயு, கிராணிக் கழிச்சலில் உண்டாகும் வயிற்றுப் பொருமல், rumbling noise in the stomach due to wind or flatulence in chronic diarrhoea.

கிராதகம், நில வேம்பு, ground neem — Justicia paniculata. See கிராதம்.

கிராதுசம், குரல் வளையின் நீள் துவாரம், fissure of the glottis or the longitudinal aperture through which the air passes into and from the lungs—Rima glottidis.

கிராதுரசி, கருடன், Brahminical kite.

கிராதித் தமம், see கிராதகம்.

கிராந்தினி, சடா மாஞ்சில், valerian or Indian spikenard—Cyperus stoloniferus.

கிராந்தி, see கிராந்தகம்.

கிராந்தி போதல், மெலிந்து போதல், becoming emaciated as in diseases.

கிராந்தி குடபோ லிருத்தல், மெலிந்து கொண்டு போறற் காணல், appearing to be thin and emaciated through grief and anxiety.

கிராந்துதல், உள் இருக்கும் நோயினால் இளைத்தல், becoming emaciated through an internal disease; 2. பூச் செடி இளைத்தல், (*In Botany*) being blighted with disease as in deeply spoted flower plants.

கிராம கோலம், வீட்டுப் பன்றி, domestic pig.

கிராம சடகம், ஊர்க் குருவி, domestic sparrow.

கிரௌஞ்சம், நீர் வாழும் பறவை, water bird; water-fowl.

கிராமணி, see அருவி.

கிராமிய கர்மம், see கிராமிய தர்மம்.

கிராமிய தர்மம், புணர்ச்சி, sexual intercourse.

கிராமிய மாமிசம், வளர்த்த மிருகத்தின் மாமிசம், the flesh of domesticated animals.

கிராமியம், வளர்த்த மிருகம், tame or domesticated animals; 2. கொக் கோகத்திற் சொல்லிய 64 இலக்கணங்களில் முதல் விதம், one (the first) of the 64 postures described in the erotic science of Kokkoga Muni.

கிராம் பாணி, இலவங்கம் போன்ற நகங்கள், clove-shaped nails.

கிராம்பு, இலவங்கம், clove—Eugenia caryophyllata ; 2. காட்டு இலவங்கம், wild clove —Pimenta acris ; 3. நீர்க் கிராம்பு, water-clove—Jussieua repens.

கிராம்பு, இலவங்கம். இது சமையல் பாகத்திற்கும், மருந்திற்கு முதவும். இதினின்று எண்ணெய் எடுக்க வேண்டுமானால், இது புதிதாகவும், எண்ணெய்ப் பசை யுள்ளதாகவும் இருக்க வேண்டும். இதன் கஷாயம் வாந்தியை நிறுத்தவும், அசீரணம், வயிற்று நோய், வயிற்றின் வாயு, குன்மம், இவைகளைப் போக்கும். கர்ப்பிணிகள் வாந்தி, வயிற்றுப் பொருமல் இவைகளுக்கும் கொடுக்கலாம். இதை வாயிலிட்டுத் தைல மிறக்கிப் பல் வலிக் கிடலாம், clove. It is used in medicine and culinary preparations. To extract oil, it must be fresh and oily. A decoction of this is used for arresting vomitting and curing digestive disorders as indigestion, colic, flatulence, dyspepsia etc. and is specially recommended for pregnant women in cases of vomitting and rumbling noise of the stomach. The oil distilled from this forms an esteemed remedy for toothache. *C. f.* காட்டுக் கிராம்பு.

கிராம்புத் தைலம், கிராம்பி னின்று வடித்தத் தைலம். இது பல் வலிக் குபயோகப் படும், oil extracted from clove ; oil of cloves —Oleum caryophylla. It is useful in tooth complaints.

கிராம்பு பத்திரி, see இலவங்கப் பத்திரி.

கிராம்புப் பூண்டு, நீர்க் கிராம்பு. இது பேதிக் குதவும், primrose willow — Justicia suffruticosa. It is useful in dysentery.

கிராம் பூ, இலவங்கப் பூ, which see.

கிராம் பெண்ணெய், see கிராம்புத் தைலம்.

கிராயுதம், see கிரி யந்து.

கிரார்த்தகம், see கிராதகம்.

கிராலகம், சுரை, woolly heart-vine — Vitis lanata.

கிராவணத்துக் காதி, வசம்பு, sweet flag — Acorus calamus.

கிராவணம், வங்கம், lead ; 2. கல் மலை, stone mountain ; 3. மலை, mountain ; 3. ஓர் வாத முறை, a process in Alchemy.

கிராவம், மலை தாங்கிப் பூடு, wound plant — Sida carpinifolia.

கிராவ ரோகசம், மலை மேல் முளைக்கும் பூடு, plants growing on a hill ; 2. அமுக்கிரா, horse-root—Physalis flexuosa.

கிராவாதி, இரும்பு, iron.

கிரி, பன்றி, pig ; hog ; 2. மலை, mountain ; hill ; 3. மூளை மண்டலம், brain of a foetus ; 4. மருட் பன்றி, wild hog ; 5. சிறு சவுக்கு, common tamarisk — Tamarix gallica (*indica*).

கிரி கணம், ஓர் சாதி கவுதாரி, a species of partridge.

கிரிகம், தொண்டை, throat ; 2. குரல் வளை, larynx.

கிரிகரம், see கிரிகணம்.

கிரி கரன், தச வாயுவி லொன்று, (*Hindu Physiology*) one of the ten vital airs in the human body, discharging the function of sternutation (sneezing).

கிரி கலாசம், பல்லி, lizard ; 2. பச்சை ஓணான், chameleon.

கிரி களா, மலைக் களா, hill carondah.

கிரி கன்னி, வெள்ளைக் காக்கணம், white-flowered mussell-shell creeper—Clitoria ternatea (albiflora) ; 2. விஷ்ணு கிரந்தை, Vishnu's plant—Sphoeranthus indicus ; 3. துர்க்கை, goddess Durga.

கிரி காயம், இரும்பு, iron.

கிரி கிரி, மருட் பன்றி, wild pig.

கிரிகை விருட்சம், தாளிப் பனை, talipot — Corypha umbraculifera.

கிரிசம், இளைப்பு, thinness ; becoming thin ; lean.

கிரிசாம், மலையிற் பிறந்த யானை, elephant born in mountain.

கிரி சலம், மலைத் தண்ணீர், mountain water.

கிரி சனம், நாடி நடை, beating of the pulse.

கிரி சாங்கம், இளைத்த தேகம், emaciated body ; thin-limbed.

கிரி சாங்கி, நீர்க் கோழி, water-cock or hen ; water-fowl.

கிரிசார பூமி, மண் பூமி, earth as distinguished from the other worlds.

கிரி சிந்தூரம், உப தாதுச் சரக்காகிய காவி, red-ochre which is classed as belonging to sub-mineral kingdom.

கிரிசிப்பு, மெலி வாதல், becoming thin or emaciated.

கிரிச் சரம், மூத்திரக் கிரிச்சரம் அதாவது மூத்திர நாளம் அடைபட்டு மிக்க வருத்தத்தோடு கொஞ்சம் கொஞ்சமாக மூத்திரத்தை விழச் செய்தல். இது ஆண் குறியில் மிக்க வலியையும், எரிச்சலையும், சில சமயங்களில் வீக்கத்தையு முண்டாக்கும். இது மேகத்தினு லேற்படும், stricture of the urethra or channel by which the urine passes. The symptoms are:—little urine dribbling out after trying to make water (micturition), increased difficulty in making water, extreme pain in the penis, burning sensation and a little swelling. It is due to venereal causes.

கிரிச்ச ரிடம், சாதிக் காய், nutmeg — Myristica fragrans.

கிரிச்ச ரிட்டம், } see கிரிச்ச ரிடம்.
கிரிச்சி ரிட்டம், }

கிரிச்சியம், see கப் பொட்டி.

கிரிச்சிர பிராணி, உயிர் அபாய நிலையில் இருப்போன், one whose life is at stake or in danger.

கிரிச் சிரோன் மீலம், கண் ணிறப்பை ரோகம், a disease of the eye-lids.

கிரிச் சினம், see கிரிச் சரம்.

கிரிஞ்சனம், ஓர் உள்ளி அல்லது பூண்டு, a kind of onion or garlic; 2. நரி வெங்காயம். காட்டில் விளையும், சாப்பிட உதவாது, a small red variety of wild onion prohibited as food; 3. கஞ்சா, tops of hemp chewed to produce inebriating effect—Ganjah.

கிரிட லவணம், செய் யுப்பு, artificial or factitious salt as distinguished from rock-salt found naturally.

கிரிடி, கோழி, fowl; 2. காட் டீச்சம் பழம், the fruit of a marshy date-tree — Phoenix paludosa.

கிரி தாங்கி, மலை தாங்கிப் பூடு, see கிராவம்.

கிரிதி, வமனை, wind-berry—Maesa indica.

கிரிதிராசி, தொடை நரம்பு வலி, sciatica.

கிரிது கர்ணம், சிறிய காது, short ear.

கிரித்தவும், see இருள்.

கிரி பயம், மரப் பொது, tree in common.

கிரிபனியம், மூன்றெழுத்தில் ஒன்றாகிய 'கிலி', one of three mystic letters 'Kili'. See கியாழுதம்.

கிரி புட்பகம், சாம்பிராணி, benzoin.

கிரி மல்லி, கொடிப் பாசி, moss creeping in water; creeper moss—Hydrilla verticillata.

கிரி மல்லிகை, மலை மல்லிகை, tree jasmine —Millingtonia hortensis; 2. வெட்பாலை, Tellicherry bark — Holarrhena antidysenterica.

கிரியல்லிப் பாலை, வெட் பாலை, see கிரி மல்லிகை.

கிரிமிக் கினி, வா லுளுவை, spindle tree — Celastrus paniculata.

கிரி மிஞ்சி, see கிரி மிஞ்சிப் புழு.

கிரி மிஞ்சிப் புழு, ஓர் வகைப் புழு, cochineal insect—Coccus cacti.

கிரி மேதம், கஸ்தூரி வேல், sweet-scented babul — Vachellia farnesiana, alias Acacia farnesiana.

கிரிமை, see ஆமை.

கிரி யரத்தை, மலை யரத்தை, hill galangal.

கிரியா சக்தி, தொழி லியற்றிக் காட்டுஞ் சத்திகள், supernatural power as shown in actions; 2. மூவகைச் சத்திகளுள் ஒன்று (In Agama Philosophy) one of the three active or female energies of Siva by which the Creation or Evolution is effected.

கிரி யாத்து, வடதேசத்தில் பயிராகும் ஓர்வகைச் சிறு வேம்பு. இது இமாலயம், நேபாளம், வங்காளம் முதலிய விடங்களில் மிகுதியாய்க் கிடைக்கும். இப் பூடு முழுவதும் மிகக் கசக்கும். இதற்கும் நில வேம்பைப் போலவே குண முண்டு. இது சுரத்தைப் போக்கி பலத்தைத் தருவதில் சிறந்த மூலிகை, Himalayan chiretta — Swertia chirata. This herb is largely grown in Northern India and obtained in large quantities in the Himalayas, Nepaul, Bengal etc. The whole plant is intensely bitter with properties similar to those of the ground neem of Southern India. It is valuable as a tonic and febrifuge.

கிரியா பதம், வைத்தியம் செய்யு முறை, manner of medical treatment; 2. மருந்திடு முறை, mode of application of remedies.

கிரியா மார்க்கம், நான்கு வகை மார்க்கங்களில் ஒன்று. இது புறத் தொழிலால் வழிபடுகை, (In Agama Philosophy) one (this being the second stage) of the four kinds of worshipping Siva by Pujah or rites and ceremonies for progress towards union with the Deity; while the other two advanced stages are Yoga and Gnana. C. f. யோக மார்க்கம் and ஞான மார்க்கம்.

கிரி யாம்பு, அரிசிக் கழுநீர் விள்று. நயாரித்த காடி, sour-gruel made from the fermentation of rice-water.

கிரி யேந்திரியம், see கரு மேந்திரியம்.

கிரியை, see கிரியா மார்க்கம்; 2. இறந்தோர்க்குச் செய்யும் சடங்கு, funeral rites and ceremonies; 3. see கிரியா சத்தி; 4. உடம்பின் தொழில், bodily action; 5. மருந்திடல், applying a remedy; 6. வைத்திய சிகிச்சை, medical treatment or practice.

கிரீ நானி, பச்சை கற்பூரம், crude camphor.

கிரீ வாணம், கிலாஞ்சனக் கல், antimony.

கிரீ வாந்தியம், முடக் கொத்தான், palsy-curer —Cordiospermum halicacabum.

கிரீ வாரிணி, இரத்த மாஞ்சில், red grass.

கிரீ விளாவல்லி, சிறு நன்னாரி, country sarsaparilla—Periploca indica.

கிரீ வேம்பு, மலை வேம்பு, large neem; hill neem—Melia azedarchta.

கிரீசரம், see இரு சரம்.

கிரீச்சரம், see கிரிச்சரம்.

கிரீட கந்தி, சிறு செருப்படை, a low spreading plant grown in rice-fields.

கிரீடபம், தாளிப் பனை, talipot — Corypha umbraculifera.

கிரீடம், வேலிப் பருத்தி, hedge cotton — Daemia extensa.

கிரீடாதி புதி, see கிரீடம்.

கிரீடித்தல், புணர்தல், copulating.

கிரீடை, புணர்ச்சி, copulation.

கிரீட்டி, பிரண்டை, adamant creeper—Vitis quadrangularis.

கிரீட்டும கந்தி, see கிரீட கந்தி.

கிரீஷ்ம சுந்தரகம், பற் பாடகம், fever plant —Mollugo spergula.

கிரீதம், மென் சுண்ணம், chalk.

கிரீவ நாடி, கழுத்து நாடி, carotid artery.

கிரீவம், கழுத்து, neck.

கிருக கருசம், குழந்தைகளுக்குக் காணும் 'கொவ்' எனும் இருமலும் கஷ்ட சுவாசமும், a spasmodic state of the glottis, specially characterised by crowing inspiration (croup), occasioned by the narrowing of the glottis—Laryngismus stridulus; Apnoea infantum.

கிருகக் கபாடம், சுவாசக் குழலின் வாயி லைத் தடை அமைக்கப் பெற்ற மூடி சவ்வு. இதற்கு குரல்வளை வாய் என்றும் பெயர், the cartilage plate at the root of the tongue that covers the glottis like a lid — Epiglottis. It is commonly known as the mouth of the wind-pipe.

கிருகக் குழி, தொண்டைக் குழி, glottis or wind-pipe.

கிருகம், மிடறு, throat; 2. குரற் செபுப, trachea; 3. சுவாசக் குழலின் மேற் பகுதி, larynx; 4. சுவாசக் குழல், wind-pipe; 5. கீழ்நி, a medicinal plant.

கிரு கரம், குழந்தைகளுக்குக் காணும் வலிப் பிருமல். இது தொண்டைப் பிடிப்பினு லேற் படுவது, spasmodic croup in children known as 'child crowing' — Cynanche trachealis.

கிரு கரன், கவுதாரி, partridge; 2. தசவாயுவி லொன்று. இது தும்மல், கோபம், வெப் பம் இவைகளை யுண்டாக்கும், one of the ten vital airs in the human body giving rise to sneezing, anger and heat in the face; 3. செரிப்பதற்கு ஆதாரமா யுள்ள ஐந்து வாயுவி லொன்று, one of the five vital airs, promoting digestion.

கிரு கலம், குரல்வளை அல்லது மிடற்றில் அறுத் துப் பிளப்பது, an operation performed for opening the larynx—Laryngotomy.

கிருக வாகு, பல்லி, lizard; 2. மயில், peacock.

கிருக வாயில், அன்னம், தண்ணீர், வாயின் வழி யாக இறங்கும் குழாய், the passage in the neck by which food and water are carried through into the stomach; carrier of food and drink—Oesophagus or gullet.

கிருக வாயில் துவாரம், குரல் வளை அல்லது மிடற்றுத் துவாரம், the aperture between arytenoid cartilages — Rima glottidis.

கிருகணம், கவுதாரி, partridge.

கிருசம், மெலிவு, leanness.

கிருசயம், மலைப் பூவரசு, hill portia.

கிருசரம், எள், gingelly or sessamum seed.

கிருச ரான்னம், எள்ளுச் சாதம், a dainty dish prepared from sesamum seed, rice and ghee.

கிருச ரோகம், உடம்பை இளைக்கச் செய்யும் சயம், காசம் முதலிய நோய்கள், diseases tending to emaciate the system as consumption, asthma etc. — Wasting diseases.

கிருசாறு, பவளக் கொடி, coral reef; 2. நெருப்பு, fire.

கிரு நாசி, மெல்லிய நாசி, a thin nose

கிரு சாந்தன், நெருப்பு, fire.

கிருக்கிரோசன் மீனை வர்த்தமம், ஓர் கண்ணோய், இது அபத்திய வஸ்துக்களைப் புசிப்பதால் உடம்பில் வாயு அதிகரித்து, கண்ணிமையின் மின் நரம்புகளை பலவீனப்படுத்தி, நித்திரையி லிருந்து எழுந்தவுடன் கண்ணைத் திறக்க வொட்டாமலும், தாக விழுந்தாற் போல கண்ணில் உறுத்தியும், சிரமமல் கொண்டும், பிரயாசத்தோடு விழித்தலும், இமை கனத்தலும் முதலிய கிக் குணங்களை யுண்டாக்கும், a disease of the eye said to be caused by the deranged condition of wind arising from taking prohibited articles of fare in violation of the rules of diet. It is characterised by the affection of eyelids and the consequent inability to open the eyes on rising from bed because of the gluing together of the eye-lashes or the opening of them with much difficulty, smarting feeling as if sand or dust were in the eye, watery eyes, heaviness of lids etc.—A kind of Ophthalmia.

கிருச் சினம், see கிரிச்சரம்.

கிருடம், பிரண்டை, adamant creeper—Vitis quadrangularis.

கிருடி, சிரசிலாகி, catheter.

கிருட்ட விரணம், ஆறாத காயம் அல்லது புண், a wound or sore not completely healed up.

கிருட்டி, பன்றி, hog; 2. பிரண்டை, see கிருடம்; 3. மருட் பன்றி, wild hog; 4. ஒரீற்றுப் பசு, cow that calved once; 5. ஓர் பறவை, a kind of bird.

கிருட்டிகம், கொட்டையில்லா முந்திரிக் கொடி, creeper of seedless raisins. See கொடிமி.

கிருட்டி சாகியம், சமுத்திராப் பழம், south sea island bottle-brush tree — Barringtonia speciosa.

கிருட்டி சாரம், தீம் பிரண்டை, a variety of sweet adamant creeper.

கிருட்டிணை அகரு, கறுப்பு அகரு, black eagle wood. See அகரு.

கிருட்டிணை கருமம், வெள்ளை விழுந்த காயத் தழும்பை கருப் பாக்கல், the blackening of a white cicatrix, due to a bad or defective granulation.

கிருட்டிணை கற்பம், காய கற்பத்திற்காக லோகாந் தாமிரத்தும் அயக் காந்த செந்தூரம், calcined red oxide prepared with iron and magnet for purposes of Rejuvenation.

கிருட்டிணை கேழி, ஓர் வகை பன்றிப் பூடு, Braziliam hog weed — Bougainvillea spectabilis.

கிருட்டிணை சகுனி, காக்கை, crow.

கிருட்டிணை சருசபம், கறுப்புக் கடுகு, black mustard; 2. புள்ளி மான், spotted antelope; 3 நூக்கமரம், rose wood — Dalbergia sisso; 4. சதுரக் கள்ளி, square-spurge — Euphorpia antiquorum; 5. கண் விழி, the eyeball.

கிருட்டிணை சர்ப்பம், ஓர் வகைக் கருஞ்சர்ப்பம், a black snake; 2. கரு நாகம், hooded black cobra.

கிருட்டிணை சாலி, ஓர் கறுப்பு நெல், a black variety of paddy.

கிருட்டிணை சிங்குவாத நோவும், நாக்குக் கறுத்து, மரணத்திற் கொண்டுபோகும் ஓர்வாத நோவும், a fatal disease marked by the dark appearance of the tongue. It is said to be due to some rheumatic complications or other morbid conditions arising from disordered humors of the human system.

கிருட்டிணை சீரகம், see கருஞ் சீரகம்.

கிருட்டிணை துரணம், இரும்புத் துரு, iron rust.

கிருட்டிணை சொரிதம், சம்பகப் பூ, champank flower; 2. கொடிச் சம்பங்கி, cowslip creeper—Pergularia minor.

கிருட்டிணை தண்டுலம், ஓர்பூடு, a plant — Gynendropsis pentaphylla; 2. திப்பிலி, long pepper—Piper longum.

கிருட்டிணை திலம், கறுப் பெள்ளு, black sesamum.

கிருட்டிணை நயனம், கறுப்பு வாற் கோதுமை, black barley; 2. கரு விழி, the black of the eye.

கிருட்டிணை பாணி, ஓர் வகைத் துளசி, a kind of basil—Ocimum pilosum.

கிருட்டிணை பலம், காட்டுச் சீரகம், wild cumin —Vernonia anthelmintica.

கிருட்டிணை பாகபலம், பெருங்களா, large carondah— Carissa carandus.

கிருட்டிணை பாஷம், எட்டி, nux vomica—Strychnos nux vomica.

கிருட்டிணை பூசிதம், சந்தனம், sandal wood tree.

கிருட்டிண பூவிகம்,
கிருட்டிண பேடம், } see கிருட்டிணபேதி.
கிருட்டிண பேதி,

கிருட்டிண முற்கம், ஓர் கறுப்புக் கடலை, black lentil.

கிருட்டிண மண்டலம், கருவிழி, the black part of the eye. See கிருஷ்ண மண்டலம்; 2. ஓர் கறுப்பு விஷப் பாம்பு, a black venomous snake.

கிருட்டிண மல்லிகம், துளசி, holy basil—Ocimum sanctum.

கிருட்டிண மிருகம், கறுப்பு மான், black antilope—Antilope bezoartica.

கிருட்டிண மூலி, துளசி, holy basil—Ocimum sanctum; 2. நன்னாரி, Indian sarsaparilla — Hemidesmus indicus; 3. கருஞ் சீரகம், black cumin seed.

கிருட்டிணம், இரும்பு, iron; 2. கறுப்பு, blackness; 3 காகம், crow; 4. மிளகு, black pepper—Piper nigrum; 5. திப்பிலி, long-pepper—Piper longum; 6. ஓர் விஷப் பூச்சி, a kind of venomous insect; 7. பெருங் குமிழ், hill vervein—Gmelina arborea; 8. ஓர் வாசனைத் திரவியம், a perfume; 9. கருவிழி, the black part of the eye; 10. கறுப்பு, blackness; 11. இருட்டு, darkness; 12. கறுப் பகரு, black agallocham; 13. கரு நிமிளை, antimony; 14. துரிசு, blue vitriol.

கிருட்டிண யோனி, கறுப்புப் பெண் குறி, black pudendum.

கிருட்டிண லவணம், கறுப் புப்பு, factitious salt; muriate of soda with a portion of sulphur and iron.

கிருட்டிண லோகம், காந்தம், loadstone.

கிருட்டிண வகத்தி, தோதகத்தி, dark black wood—Dalbergia latifolia.

கிருட்டிண வர்ணம், இரும்பு மணல், iron sand; iron ore; 2. கறுப்பு நிறம், black colour.

கிருட்டிண வலச்சி, see கிருட்டிண வல்லி.

கிருட்டிண வல்லி, நன்னாரி, Indian sarsaparilla—Hemidesmus indicus.

கிருட்டிண வியாலம், சிகப்புச் சித்திர மூலம், red leadwort—Plumbago rosea.

கிருட்டிண விருத்திகம், see கிருட்டிணவிருந்தை.

கிருட்டிண விருந்தை, பாதிரி, trumpet-flower tree — Stereospermum chelinoides; 2. பெருங் குமிழ், kumil—Gmelina arborea.

கிருட்டிண சேர்ந்த மிருகம், கலைக் கொம்பு, stag's horn.

கிருட்டி ணசனம், மான் தோல், black deer's skin so called from its use by Yogis and others who sit on it.

கிருட்டி ணஞ்சனம், கறுப்புமை, black collyrium; 2. see கருங் குமிழ்.

கிருட்டி ணப்பிரகம், பொன்னுக் குரிய குணக் கனுள்ள கறுப்பு அப்பிரகம், black coloured mica having the virtue of gold.

கிருட்டிண வாசம், அரச மரம், peepul tree—Ficus religiosa.

கிருட்டிணி, காக்கணஞ் செடி, mussell-shell creeper—Clitorea ternatea.

கிருட்டிணிகை, கறுப்புக் கடுகு, black mustard.

கிருட்டிணை, கடுகு, mustard; 2. முந்திரிகை, grapes—Vitis vinifera; 3 வால் மிளகு, tail pepper—Piper cubeba; 4. கறுப்பு அட்டை, black leech; 5. முந்திரிச் செடி, cashew tree—Anacardium occidentale.

கிருட்டி தாமிகம், நன்னாரி, see கிருட்டிண வல்லி.

கிருஷணி, see உத்தாமணி.

கிருஷைப்பம், கடுகு, mustard.

கிருஷாங்கி, நீர்க் கோழி, water fowl—Rallinae latitores; 2. நீர்க் காக்கை, water-crow—Gallicrex cristatus; 3. நீர்ப்பறவை, Indian water-rail—Rallus indicus.

கிருஷ்ணஹரித் தரும்பை, பேய்த் தும்பை, wild leucas—Phlomis linifolia.

கிருஷ்ண கந்தகம், கிடைப்பதற் கரிதான ஓர் வகை கறுப்புக் கந்தகம், a black or dark and rare variety of sulphur.

கிருஷ்ண கந்தம், கறுப்பு அல்லி, black lotus—Nymphae tringra; 2. முருங்கை, moringa—Hyperinthera moringa.

கிருஷ்ண கருமம், புண்களைச் சுடுதல் அல்லது தீய்த்தல், a peculiar way of cauterising a wound or sore—Cauterisation. C. f. கிருட்டிண கருமம்.

கிருஷ்ண கர்க்கடகம், கறுப்பு நண்டு, black crab.

கிருஷ்ண கர்ப்பம், ஓர் பூடு, a plant—Myrica sapida.

கிருஷ்ண காம்போசி, பூலா, black honey shrub—Phyllanthus multiflorus.

கிருஷ்ண காயா, பனை மரம், palm tree — Borassus flabellifer.

கிருஷ்ண குச்சம், கண் பூ, cataract of the eye.

கிருஷ்ண குட்டம், ஓர் வகைக் குட்ட நோய். இதனால் உடம்பு முழுவதும் கறுத்தல், மேற்றோல் திமிருடன் நாற்றம் வீசுதல், நோதல், சத்த தாதுக்களும் உஷ்ணப் படல், அறை, புறங்கை, தலை, இவ் விடங்களில் இரணமுண்டாதல், புத்தி சஞ்சலப்படுதல் முதலிய குணங்களுண்டாகும், black leprosy — Lepra nigricans. It is characterised by dark patches upon the skin, anaesthesia or loss of sensation in the affected skin, fetid smell, heated or inflamed condition of the seven constituent parts of the body as blood, flesh, bone, skin etc. ulceration of the private parts, elbow, head etc.

கிருஷ்ண கெந்தம், பனை மரம், see கிருஷ்ண காயா.

கிருஷ்ண கெந்தா, முருங்கை, drum-stick tree —Pterygosperma moringa.

கிருஷ்ண கேழி, ஓர் செடி, Brazilian hog-weed—Bougainillea specatabilis.

கிருஷ்ண சதுகம், கறுப்பு சதுக மரம். இது காய சித்திக் குதவும், a black variety of 'Sadugam', an unknown tree. It is said to be useful in Rejuvenation.

கிருஷ்ண சர்ப்பம், see கிருட்டிண சர்ப்பம்.

கிருஷ்ண சன்னுகம், கறுப்புக் கடலை, black Bengal gram.

கிருஷ்ண சாபம், நிலப் பனை, ground palm — Curculigo orchioides.

கிருஷ்ண சாரம், கறுப்பு மான், black deer.

கிருஷ்ண சாலிச்சம், நல்லரிசி ; கருப் பரிசி, a variety of black rice. C. f. புட்டரிசி.

கிருஷ்ண சிங்கு வாத தோஷம், see கிருட்டிண சிங்கு வர்த தோஷம்.

கிருஷ்ண சுரம், ஓர்வகைச் சுரம். இதனால் உடம்பில் கருப்புத் தழும்பும், நாக்கு, பல், உதடு இவைகள் கருப்பாயும் காணும், a kind of fever marked by dark patches on the body and discolouration of the tongue, lips and teeth—Black fever.

கிருஷ்ண தூரிகை, பாம்பின் விஷம் முறியும்படி கொடுக்கும் ஓர் மூலிகை வேர், the root of an unknown plant given as an antidote for snake-poison.

கிருஷ்ண தத்தூரி, see கருமத்தை.

கிருஷ்ண தாரி, see கருமத்தை.

கிருஷ்ண துளசி, see கருந் துளசி.

கிருஷ்ண தோஷம், விஷ சுரம், fever as typhus, malaria etc. See கிருஷ்ண சுர

கிருஷ்ண பலம், see கார்போக வரிசி.

கிருஷ்ண பலி, காரெள், black sesamum seed.

கிருஷ்ண பலா, பெருங் களா, large carondah — Carissa carandas ; 2. பிடங்கு நாறி. fire-brand teak — Premna tomentosa.

கிருஷ்ண பற்பம், கிருஷ்ண ரசம், (*In Ayurveda*) black sulphide of mercury. It is prepared by rubbing together equal parts of sulphur and mercury ; 2. இரச பற்பட்டி, incrustation of mercury.

கிருஷ்ண பாக பலம், (கிருஷ்ண + பாக + பலம் = black + ripe + fruit) பெருங் களாச் செடி, large carondah—Carissa carandas alias Capparis carandas. It is so called from its edible fruit being black.

கிருஷ்ண பாகம், வெண் பூலா, white poolah or goomchy—Cicca leucopyrus.

கிருஷ்ண பாணம், எட்டி, nux-vomica.

கிருஷ்ண பிரம், see கறுப்பு வாகை.

கிருஷ்ண புட்ப பீசம், see கருமத்தை.

கிருஷ்ண பேடம், see கடுகு ரோகிணி.

கிருஷ்ண பேதி, see கடுகு ரோகிணி.

கிருஷ்ண போளம், see கறுப்பு போளம் அல்லது கரிய போளம்.

கிருஷ்ணப் பிரகம், கறுப்பு அப்பிரகம், black mica. See கிருஷ்ணப் பிரகம்.

கிருஷ்ணப்பிர சோதிக் குரு, கரு வேல், black babool—Acacia arabica.

கிருஷ்ணப் பிரியம், கொடி முந்திரிகை, grapes —Vitis vinefera.

கிருஷ்ண மணி, கண்ணிற் குள் கருவிழியில் அமைந் துள்ள கல் அல்லது இலிங்கம், the crystalline lens situated behind the cornea of the eye.

கிருஷ்ண மண்டலத் துவாரம், கருவிழித் துவாரம், aperture or opening in the pupil or at the centre of the iris of the eye—Pupil.

கிருஷ்ண மண்டலப் படலம், கருவிழியில் படரும் ஓர் சதை வளர்ச்சி, a thin coating formed on the iris of the eye.

கிருஷ்ண மண்டலம், (கிருஷ்ண + மண்டலம் = black + sub-division or circles of the eye-ball). கருவிழி, choroid including the iris generally known as black of the eye as opposed to வெள் விழி அல்லது சுக்கில மண்டலம், the white portion of the eye; 2. கருவிழியி லுண்டாகும் ஓர் நோய். இது இதர வஸ்துக்களைத் தெரிய வொட்டாமற் படி திரை போட்டது போல் மறைத்தல், கறுத்தல், சிவத்தல், உப்புதல், குழி விழுதல் ஆகிய இவ் வைந்து குணங்களையும் கருவிழியி லுண்டாக்கும், a disease in the iris of the eye. It is characterised by dimness of vision, inflammation, darkening of the eyes, swelling and depression in the eye-ball.

கிருஷ்ண மாத, see கருந் துளசி.

கிருஷ்ண முக்கா, பனிப் பயறு, black variety of gram; dew-gram. It is a pulse so called from its being brought to perfection by the night's dew.

கிருஷ்ணம், குயில், Indian cuckoo—Eudynamis honorata; 2. துரிசு, copper sulphate —Blue vitriol; 3. திப்பிலி, long-pepper—Piper longum; 4. மிளகு, black-pepper —Piper nigrum; 5. இரும்பு, iron; 6. நாக மணல், zinc ore; zinc mixed with sand; 7. கறுப்பு, blackness; 8. கரு நீலம், dark-blue; 9. மான், deer.

கிருஷ்ண ரசம், see கிருஷ்ண பற்பம்.

கிருஷ்ண ரத்தி, வெட் பூலா, white honey shrub—Fleuggea leucopyrus.

கிருஷ்ண ரேகடை, கறுப்பு மணல், black sand: 2. இரும்பு சேர்ந்த மணல், iron ore; iron mixed with sand.

கிருஷ்ண லவணம், கறுப்புப்பு, black salt

கிருஷ்ண லோகம், இரும்பு மணல், iron ore.

கிருஷ்ண லோகிதம், கறுத்த சிவப்பு நிறம், dark-red colour.

கிருஷ்ண வந்திகா, பெருங் குமிழ், large goomchy — Gmelina arborea.

கிருஷ்ண வப்பிரகம், கருப்பு அப்பிரகம், black or adamant mica.

கிருஷ்ண வர்ணம், உலோக மணல், iron mixed with sand; 2. கறுப்பு நிறம், black colour; 3. கருநீல நிறம், drak blue colour.

கிருஷ்ண வல்லக்கினி, கருங் கொடி, spring creeper—Hiptage madablota.

கிருஷ்ண வல்லி, see கிருட்டிண வல்லி.

கிருஷ்ண வாக்கியம், கீரப் பூலா, black honey shrub—Phyllanthus multiflorus.

கிருஷ்ண விருட்சம், வேங்கை, kino-tree — Pterocarpus marsupium.

கிருஷ்ண விருந்தை, பாதிரி மரம், trumpet-flower tree—Bignonia chelonoides.

கிருஷ்ண விறுகி, கறுப் பரிசி, black rice.

கிருஷ்ண வெலி, கறுப்பு எலி. இது கடித்தால் அடிக்கடி இரத்த வாந்தி யுண்டாவது மன்றி, மழை காலத்தில் மிகுதியாக இரத்தம் விழும், black variety of rat — Mus rattas. Its bite leads to vomitting of blood which tends to aggravate especially during the rainy season,

கிருஷ்ணவை கட்டிய விடம், உரல், mortar.

கிருஷ்ணான் குளிகை, சாரணை நீர்த்த இரச மணி, animated mercurial pills; 2. வீர மணி, consolidated mercuric chloride.

கிருஷ்ணு, துளசி, holy-basil — Ocimum sanctum.

கிருஷ் ணகரு, (கிருஷ்ண + அகரு) கறுப்பு அகரம், black eagle-wood.

கிருஷ் ணசனம், கிருட்டி ணசனம், a kind of of posture.

கிருஷ் ணசனி, கிள்ள முள்ளங்கி அல்லது கவற்று முள்ளங்கி, wall-radish—Bluemea aurita.

கிருஷ்ணுட்சக் காளா, see கருந் துளசி.

கிருஷ்ணிகை, கறுப்புக் கடுகு, black mustard.

கிருணு, வங்கம், lead; 2. ஈயம், tin.

கிருணு வலி, ஈய தோஷத்தினால் ஏற்படும் வயிற்று வலி, dry belly-ache produced by lead-poisoning — Colica pictonum.

கிருஷ்ணை, see கிருட்டிணை.

கிருதக் கிருமி, நெய்யி லுண்டாகும் புழு, a worm found in putrified ghee.

கிருதக் குள பாளித போசனம், சர்க்கரை பொங்கல் அதாவது நெய், கண்ட சருக்கரை, பால் இவைகளோடு சேர்ந்த அன்னம், a dainty dish of boiled rice prepared with ghee, sugar and milk.

கிருத சித்திரம், கின் பீர்க்கு, vegetable gourd —Luffa acutangula alias Cucurbita acutangulus.

கிருத சித்திரா, பேய்ப் பீர்க்கு, devil's gourd or bitter luffa—Luffa amara.

கிருத பாகம், நெய்யினால் தயாரித்த மருந்து, a medicinal preparation made of ghee.

கிருத பாக விதி, மருந்து நெய் செய்யு முறை, the rules relating to or the process of the manufacture of medicated ghee.

கிருத பூரம், மாவு, தேங்காய், நெய், பால், சருக்கரை இவைகளைக் கொண்டு தயாரித்த பிட்டாய், sweetmeat or sweet cake prepared of flour, cocoanut, ghee, milk and sugar.

கிருத மண்டாதி, சிறு புள்ளடி, unifoliate trefoil—Hedysarum gangeticum.

கிருத மாலம், see கிருத மாலிகை.

கிருத மாலிகை, கொன்றை, cassia — Cassia fistula.

கிருதம், செங் கொன்றை, red cassia—Cassia marginata; 2. மருந்து நெய், medicated clarified butter or confection; 3. யோகத்தில் கண்டிருக்கிறபடி சரக்குகளின் மொத்த நிறைக்கு சமன் சருக்கரையும், இரண்டு பங்கு பசு வெண்ணெய் அல்லது பசு நெய்யும் சேர்ந்தது, a confection, according to the rules of preparation of medicines in Ayurveda, consisting of powdered drugs with an equal quantity of sugar and twice that of cow's butter or ghee; mixed in the proportion of 1 : 1 : 2; 4. நெய், ghee; 5. சிறுந் தீ யிட்டு உருக்கி, ஆற வைத்த வெண்ணெய், butter which has been melted gently and allowed to cool; 6. செம் முருங்கை, red Indian laburnam—Cassia marginata.

கிருதரன், முகத்தில் பரவி நின்று தும்மல், கோபம், வெப்பம் முதலியவைகளை யுண்டாக்கு மோர் வாயு, one of the vital airs prevailing in the facial region and causing sneezing, anger and heat. See கிருகரன்.

கிருத வேதனு, பேய்ப் பீர்க்கு, wild bitter gourd. See கிருத சித்திரர்.

கிருதாளி, தாளிப் பனை, talipot tree—Corypha umbraculifera.

கிருதி மாசம், see ஆனைத் திப்பிலி.

கிருது, மருந்து நெய், clarified butter.

கிருதுகம், நிணக் கழலை. இது சாதாரணமாய் இரத்தக் குழாயில் அல்லது அதனடியில் தங்கி நிற்கும் வண்டலிற் காணும் கொழுப்பின் கேட்டினு லுண்டாவது, a sebaceous tumour. It is a fatty accumulation occurring in the sebacious glands of the tissues.

கிருத்தி, மான் தோல், deer's skin; 2. தோல், skin.

கிருத்திமம், தோல், skin.

கிருத்திம ஊதல், செயற்கையா யூதல், artificial inflation.

கிருத்திய முறை, செய் விதம், modus-operandi.

கிருத்தியம், தொழில், action; 2. விரணத் தொழில், operation; 3. முறை, process.

கிருத்திரசி, தொடை நரம்பு, sciatic nerve.

கிருத் திரசி வாதம், தொடை வாதம் அதாவது தொடை நரம்புகளைப் பற்றிய வாத ரோகம். இது அடி முதுகு முதற் கொண்டு பாத விரல் வரைக்கும் பரவி யுள்ள நரம்புகளின் துவாரங்களை அனுசரித் துள்ளது. இது எப்பொழுதும் நடை யின்றி யிருத்தல், பகல் நித்திரை, பதினான்கு வகை வேகத்தை மறுத்த லாகிய செய்கை களாலும், கடற் கரைக் காற்றை உட் கொள்வதாலும், மாமிசம், மாப் பண்டம், தயிர், பால், வெல்லம், கள், புண்ணாக்கு, மதுர வஸ்து, மந்த வஸ்து, இலவண வஸ்து, அதி சீதளப் பண்டம், எண்ணெய்ப் பண்டம், கந்த மூல பலாதிகள் முதலியவைகளை மிதமின்றிப் புசித்தல், ஆகிய விக் காரணங்களினால் பிறந்து, உடம்பில் குத்தல், கனத்தல், நோவு வேதனை முதலிய குணங்களைக் காட்டும், neuralgia or inflammation of the sciatic nerve extending from the nates up to the toes of the feet. It may be considered therefore a disease in which the two great nerve-trunks emenating from below the lower extremity of the thigh down to the bottom reaching the insteps and toes, become stuffed with enraged Vayu and thus deprive the lower extremeties of their power of locomotion. It is said to originate from the following causes viz. sedentary habits, day-sleep, suppression of the 14 natural cravings or urgings, such as stool, urine, etc., the inhaling of sea-breeze, excessive eating of meat, starch food, curd, milk, jaggery, oil-cakes, sweet-meats, substances not easily digestible or of those likely to promote dull appetite, saline substances, oleaginous articles, green

roots, fruits and other herbaceous ingredients and *indulging in toddy and cool* drinks. It is marked by a pain of shooting or tearing nature especially on the back of the thigh frequently and totally incapacitating the sufferer—Sciatica.

NOTE.—Gouty and rheumatic patients are often subject to this disease with many relapses. In women, sciatica is sometimes due to the pressure on the sciatic nerve within the pelvis caused by the infant's head during labour.

கிருத்திரம விஷம், *நாபி முதலிய விஷப் பூண்டு, பாம்பு, அரணை முதலிய விஷப் பிராணிகளின் விஷங்களை உணவு அல்லது மற்ற பதார்த்தங்களோடு கலந்து கொடுப்பதினு லேற்படும் விஷம்*, any poison introduced into the system by mixing animal and vegetable poisons such as aconite poison, snake poison, horse lizard poison etc., with food or other substances.

கிருத்திரம், *ஓர் வாசனைத் திரவியம்*, a kind of perfume ; 2. *வாசனைப் புகை*, an incense ; 3. *ஓர் உப்பு*, a kind of salt ; 4. *துரிசு*, sulphate of copper used as collyrium ; 5. *இராசாளி*; a large kind of hawk ; falcon.

கிருத்திரிம, *கையாற் செய்த*, mechanical.

கிருத்திரிம திரவயோகம், *கையாற் கூட்டிய கரைப்பு அல்லது விலயம்*, solution of mechanical mixture.

கிருத்திரிமம், *கையாற் செய்தது*, that which is made artificially or mechanically.

கிருத்துருணி, *பம்பந் திராய்*, Indian chickweed—Mollugo genus.

கிருத்துரும தூபம், *பதினெட்டு வகைச் சரக்குகள் சேர்ந்த ஓர் வாசனைக் கலப்பு*, a mixture of perfumes consisting *of* 18 ingredients.

கிருந்தி, see *கஞ்சாங் கோரை*.

கிருபீட சன்மன், *நெருப்பு*, fire ; 2. *சந்திரன்*, moon.

கிருபீடம், *நீர்*, water.

கிருபீட யோனி, *சலத்தில் பிறந்தது*, that which has taken its origin in water; water-born ; 2. *நெருப்பு*, fire.

கிரும நிஷத்தினி, *திப்பிலி*, long-pepper—Piper longum.

கிருமி, *கிருமிக் கிரந்தி அல்லது அரி புண்*; *canker; eating and spreading sore*; 2. *புழு*, vermicule ; 3. *குடற் பூச்சி*, intestinal worm ; 4. *அணுக் கிருமி*, germ ; microbe ; 5. *ஈரிப் பூச்சி*, maggot or animalcule ; 6. *சிறு பூச்சி*, mite ; 7. *நாங் கூழ்*, earth-worm.

கிருமி, *உடம்பிற்குள் காணப்படும் அநேக விதமான புழு அல்லது பூச்சிகள்*, *worms* or parasites of various shapes which germinate or grow in a living organism in the different parts of the human body. The different kinds that have their origin in feces, phlegm, blood, etc. are :—

1. *பெரும் பூநாகக் கிருமி*—Nematode.
2. *நீர்ப் பாம்புக் கிருமி* an unknown kind.
3. *நெல் முளைக் கிருமி*, hook-worm.
4. *சன்னநீளக் கிருமி*, Filaria.
5. *அணுக் கிருமி*, microbe.
6. *வெண் கிருமி*, thread or maw-worm.
7. *செங் கிருமி*, red-worm.
8. *அந்தர்மலக் கிருமி*, *worms of rectum* — Oxyuris vermicularis. Same as No. 6.
9. *வட்டக் கிருமி*, *round-worm* — Ascaris.
10. *காலில்லாக் கிருமி*, worm without legs for locomotion.
11. *சூக்குமக் கிருமி*, microzoon.
12. *தோன்றாக் கிருமி*, invisible worm.
13. *இரத்தக் கிருமி*, germs of blood.
14. *நீர்க் கிருமி*, water worms or germs.
15. *மஞ்சட் கிருமி*, a yellow organism — Ochromyia.
16. *வாற் கிருமி*, flagellated germ.
17. *கருங் கிருமி*, black coloured germ.
18. *மண்டைக் கிருமி*, worm in the head.
19. *சூரைக் கிருமி*, an unknown kind.
20. *சுரோணிதக் கிருமி*, germ-cell.
21. *சலக் கிருமி*, water-worm.
22. *கணைக் கிருமி*, germ responsible for *கணம்*.
23. *தாதுக் கிருமி*, germ concerned in *the increase or vitality*.
24. *வாய்க் கிருமி*, worms found in the teeth, saliva, etc.

25. சுக்கக் கிருமி, germ-cell.

26. புனக் கிருமி, an unknown kind.

27. சூலைக் கிருமி, microbe of rheumatism or colic.

28. சுக்கிலக் கிருமி, spermatozoon.

29. வயிற்றுக் கிருமி, germs in the stomach.

30. குடற் கிருமி, intestinal worm such as, tape-worm etc.

31. ஈரற் கிருமி, liver flukes

கிருமி அரா, பருத்தி, cotton.

கிருமி கர்ண சூலை, இரண்டு காதுகளும் சத்தமே கேளாது செவிடு பட்டு, அவைகளினின்று புழுக்கள் நெளிந்து, இரத்தம், சீழும் வடியும் ஓர் காது நோய், a disease of the ear characterised by deafness, discharge of pus and blood attended with maggots.

கிருமி கர்ணம், காதினுள் புழுக்கள் ஏற்பட்டு செவி டுண்டாக்கு மோர் நோய், germination of vermins or of the local parasites in the cavities of the ear. It completely impairs the faculty of hearing. It is so called from the existence of worms in the ear.

கிருமி கிருட்டன், பிரண்டை, adamant creeper—Vitis quadrangularis.

கிருமி குட்டம், உடம்பி லுற்பத்தியாகி புழுக்களைத் தன்னும் ஓர்வித குட்டம். இது அசாத்தியம், a form of leprosy caused by microbes (*bacillae leprae*) found in the skin nerves and tubercles. This is incurable.

கிருமி குட்ட விஷ பாகம், சீர் விளா, a variety of wood-apple tree — Limonia acidessima.

கிருமி கொல்லி, புழுக் கொல்லி, an agent either killing or rendering powerless the intestinal germs or parasites — Vermicide.

கிருமிக் கிரந்தி, வாயிற் புண்ணாகி புழுக்களைத் தன்னும் ஓர்வித கிரந்திப் புண்ணோய், a venereal or syphilitic ulceration of the mouth attended with germs—Canker; 2. கண் இரப்பைகளிலும், வெள் விழிச் சந்திலும், இரப்பை மயிர்களின் சந்திலும் பலவித புழுக்கள் ஏற்பட்டு கமைச்சலுடன் விரண முண்டாகி, கண்களின் உள் பாகத்தைக் கெடுக்கு மோர் கண்ணோய், a disease of the eye-lids marked by the formation of microbes on the inner surface of the eye-lids or at the root of the eye-lashes, inflammation of conjunctiva as a result of irritation etc, thus ultimately leading to damage of the eyes when the disease does not progress favourably; 3. கண்ணிரப்பைச் சந்திலும், இரப்பை மயிர்களின் சந்திலும், மேகத்தினால் நீர் கட்டி, வீக்க முண்டாகி புழுக்கள் நெளியும் ஓர் கிரந்தி நோய், a cyst or swelling of the eye from syphilitic causes, characterised by itching sensation appearing in the angles of the eye due to the germination of the parasites in those parts.

கிருமிக் கினம், வாய் விளங்கம், worm-killer—Embelia ribes alias E. grandulifera; 2. புழுக் கொல்லி, worm-killer; 3. இலந்தை வேர், root of jujube; 4. சேங் கொட்டை மரம், marking-nut tree.

கிருமிக் குரு மாறுத சூலம், தும்புரு, Indian tooth-ache tree—Zanthoxylon alata.

கிருமிக் குன்றம், வா லுளுவை, spindle tree — Celastrus paniculata.

கிருமிக் கூடு, மார்பில் பூச்சிகளினு லுண்டாகும் ஓர் நோய், a disease of the chest due to microbes; 2. புழுக்கள் தங்குமிடம், seat of microbes.

கிருமிக் கொல்லி, குனு கினி, worm killer—Vermifuge. *C.f.* புழுக் கொல்லி.

கிருமி சத்து, புழுக்களி னின்று தயாரிக்கும் ஓர் வகைச் சத்து, an essence prepared from microbes.

கிருமி சத்துரு, புரசம் விதை, seed of palaus tree—Butea frondosa; 2. பூவரசம் விதை, seed of portia tree — Hibiscus populaneus; 3. see ஆடு தின்னாப் பாளை; 4. ஓர் பூடு, a plant—Erythrina fulgens.

கிருமிசம், see கிருமி வாந்தி.

கிருமி சம்சை, see அகில்.

கிருமி சிரோ ரோகம், ஓர்வகைத் தலை நோய். இது அசுத்தமான அல்லது பழைய வுணவுகளைச் சாப்பிடுவதால் திரிதோஷ மிகுந்து, தலையி லுள்ள இரத்த மாமிசத்தைக் கரைத்துக் கிருமிகளை யுண்டாக்கும். இக் கிருமிகள் இரத்தத்தைக் குடிக்கும் போது தலையில் மண்டை வாட்டி, மதர்த்தல், வீக்கம், பிளத்தல் போன்ற வலி, எரிச்சல், கெட்ட நாற்றம், மூக்கில் சலம் வடிதல், தாடை

இலங்கு நமைச்ச லுண்டாகி வீங்குதல், காதிரைச்சல், சுரம், இருமல், பலவீனம் முதலிய குணங்களை யுண்டாக்கும், a kind of headache due to the formation of microbes in the head, arising from the disintegration of the blood tissues as a result of eating unwholesome food which leads to the derangement of the three humours in the system. The mircobes when operating on the blood give rise to various symptoms such as, dried condition of the scalp, feeling of fullness across the head, swelling, excruciating or throbbing pain, burning sensation, fetid smell, discharge from the nose, itching around the jaw followed by inflammation and swelling of the throat, noise in the ear, fever, cough, weakness, etc.

கிருமி சுத்தி, கிளிஞ்சில், bivalve-shell.

கிருமி சூத்திரம், ஓர் நோய், an unknown disease.

கிருமி சேனம், புழுக் கொல்லி, vermifuge; anthelmintic.

கிருமிச்சம், see கிருமிசம்.

கிருமிச் சுரம், உடம்பி லுள்ள புழுக்கள் அல்லது கிரிப் பூச்சிகளினால் குழந்தைகளுக் கேற்படும் சுரம். இதனால் வாந்தியும், பேதியும் காணும்போது வாயின் வழியாயும் அபானத்தின் வழியாயும் பூச்சிகள் விழும், a fever in children due to worms in the intestines—Worm fever. These worms find their passage through the mouth when vomiting or through the anus during purging.

கிருமிச் சூலை, குடற் பூச்சிகளினால் ஏற்படும் வயிற்று வலி, colicky pain due to intestinal worms.

கிருமிச் சைலம், கறையான் புற்று, a hillock formed by the white-ants for their habitation—Ant-hill.

கிருமிச் சொறி, புழுக்கள் உடம்பினுள் மீத்தோல் வழியாக உட்டோலுக்குள் புகுவதா லுண்டாகும் சகிக்க முடியாத சொறி அல்லது தினவு, intolerable itching caused by animalcules (Acarus scabi) which burrow under the skin through the thinnest part of the upper layer of the skin (epidermis).

கிருமிஞ்சிப் புழு, சப்பாத்திப் புழு, prickly-pear worm or cochineal insect—Coccus cacti.

கிருமிஞ்சி யோமம், கிருமானி யோமம்; குறிஞ்சி யோமம். இது கால் நடைகளுக்கு மருந்தாக வுதவும், Indian meadow saxifrage—Seseli indicum alias Conidium diffusum. This is used as a medicine for cattle.

கிருமி தந்தகம், பல் சொத்தை விழுவதாலேற்படும் பல் நோய், tooth ache due to decay of the teeth.

கிருமி தந்தம், புழுக்க ளரித்த பல் அல்லது சொத்தைப் பல், worm-eaten tooth with accumulation of pus and blood—Carious tooth.

கிருமி தந்த ரோகம், சீழ்ப் பல், இது வாதாதிகள் அதிகரிப்பதனால் பல்லுகளிலும், வேர்களிலும் பரவி, பல்லுக் கிடையில் அன்ன ரசம் அடைந்து கெட்டு நாற்றம் வீசி, கொப்புளங்க ளெழும்பி, சறு வீங்கி, இரத்தம் சீழ் கசிந்து புழுக்கள் நெளியும், an inflammatory condition of the edges of the gums accompanied with constant secretion of pus. It is due to the aggravated condition of Vatha (humour) prevailing upon the gums and the root of the teeth. The food collecting and decaying around the gums is also one of the exciting causes. The disease is marked by fetid smell, appearance of boils, swelling of the gum, formation of pus in the socket, which is secreted into the mouth—Pyorrhoea alveolaris.

கிருமி தோஷ நாசனி, இருகல சற்பாட்சி, an unknown plant used for curing diseases due to the effects of poisonous microbes in the system.

கிருமித் தவம், கருப்பு அகரம், black Agaru-wood or black eagle wood.

கிருமி நாசகாரி, வயிற்றுக் கிருமிகளைப் போக்கடிக்கும் மருந்துகள், medicines or drugs that expel or destroy worms or intestinal animal parasites—Vermifuges and Vermicides.

கிருமி நாசகி, see ஆடு தின்னாப் பாளை.

கிருமி நாசத் திரவியம், வேப்பம் விதை, margosa seed.

கிருமி நாசம், ஓமம், bishop's weed—Carum copticum; 2. குராசானி யோமம், black

henbane — Hyocyamus niger alias H. agrestis; 3. பேய்ப் பீர்க்கு, bitter wild gourd; strainer vine; bitter luffa—Luffa amara; 4. வேப் பீர்க்கு, central rib of the margosa leaf; 5. பலாசம் விதை, seed of palaus—Butea frondosa; 6. பக்கம் பாலை, worm-killer—See ஆடு தின்னாப் பாலை; 7. வாய் விளங்கம், wind berry — Embelia ribes; 8. எருக்கு, madar plant — Calotropis gigantea.

கிருமி நாசனி, see கிருமி நாசம்; 2. See எலிச் செவி; 3. பேய்த் தும்பை, devil's leucas—Phlomis zeylanica.

கிருமி நாசி, நில வாகை, Tinnevelly senna —Cassia angustifolia.

கிருமி நாயகம், see ஆடு தின்னாப் பாலை.

கிருமி போஷணம், see அரக்கு.

கிருமிப் படை, புழு அல்லது கிரிப் பூச்சிகளினால் குழந்தைகளுக்கோ அல்லது பெரியவர்களுக்கோ உடம்பில் ஏற்படும் படை, சொறி முதலிய சரும நோய்கள், skin diseases such as ringworm, itching etc. in children or adults, due to the action of worm, microbes, germs, bacterium etc; 2. கிருமியினால் குழந்தைகளுக் கேற்படும் மண்டைக் கரப்பன், a variety of ringworm occasionally attacking the scalp in children — Tinea tonsurans or Microsporon Audouini; 3. கிருமியினால் குழந்தைகளுக்கு முகம், உடம்பு, கால் இவைகளில் உண்டாகும் கரப்பன் அல்லது கடுவன், a contagious skin-disease commonly attacking or appearing on the face, body or limbs. It is caused by the growth of a fungus — Trycophyton tonsurans; 4. அரைக் கடுவன், a parasitic skin-disease like ring-worm on the inside of the thighs and groins—Tinea cruris; 5. அறைப் படை, dhoby's itch which is a tropical skin-disease found especially troublesome in the folds of the thigh—Tinea imbricata.

கிருமிப் பவுத்திரம், கிருமிகளினா லேற்படும் ஆசனப் பவுத்திரம். இதில் மலவாயி னருகே கண்கள் விட்டு இரண முண்டாகி, கிலவேளை மலம் இதன் வழியாய் நாற்றத்துடன் வெளிப்படும், an abscess said to be caused by parasites on the margin of the anus. It is transformed into a fetid and putrid ulcer infested with worms and parasites which eat away the sides and burrow into the region of the anus, with the formation of holes through which fecal matter is sometimes found to gush out — Fistula in ano.

கிருமிப் பிடித்தல், பூச்சிப் பிடித்தல், being affected with worms.

கிருமிப் பித்தம், ஈரற் கோளாறினா லேற்படும் ஓர்வகைப் பித்த நோய். இது மலத்திற் கிருமி விழுதல், வயிற்றைப் புரட்டிப் புரட்டி வலித்தல், உடம்பு முழுவதும் தினவு, வலி, மல சலம் வறட்சி, கை கால் சில்லிடல், உடம்பி லொருவித நாற்றம் வீசுதல் முதலிய குணங்களைக் காட்டும், a kind of biliousness supposed to be caused by torpor of the liver. It is characterised by worms in the stools, spasmodic griping and twitching pain in the bowels, intense itching throughout the body, bodily pain, constipation, chillness of the extremeties, fetid smell of the body etc.

கிருமிப் புழு, see கிருமிக்கிப் புழு.

கிருமிப் பொடி, கிரிப் பூச்சி, small parasites or microbes; 2. புழுக் கொல்லிச் சூரணம், any powder for killing intestinal worms, such as powder of Palaus seed, Santonin etc. *C. f.* கிருமி நாசனி.

கிருமிப் போக்கி, உடம்பி னின்று புழுக்களை வெளிப் படுத்தும் மருந்துகள், any medicine or drug expelling intestinal worms from the body—Vermifuge. See கிருமி நாசகாரி.

கிருமி மலடு, பெண்களின் கருப்பையில் புழுக்கள் ஏற்பட்டுக் கருவை யழிப்பதனா லுண்டாகு மலட்டு நோய், barrenness in women supposed to be caused by impregnation being affected due to the existence of of worms in the uterus (*Bacillus abortus*).

கிருமி மார்பு ரோகம், ஓர்வகை மார்பு நோய். இது சிலேட்டு மாதிக்க வஸ்துக்கள் அல்லது கருணை, சேம்பு முதலிய கிழங்கு வகைகளைப் புசிப்பதனால், ஆமாசயத்தில் பெரும் பூ நாகத்தைப் போலும், கீரிப் பாம்பைப் போலும், பெரிதாகவும், சிறிதாகவும் பூச்சிகளுற்பத்தி யாகிக் குடலி லொட்டிப் பின்னிக் கொண்டு, இருதயத் தானத்திற்கு மேல் எதிர்த் தேறுவதால், மார்பில் துடித்த லோடு, வீக்கம், வாளா லறுப்பது போல்

வலி, கண்கள் கறுப்பாகத் தோற்றல், இருமல், வாயினின்று கோழை விழுதல் முதலிய குணங்களைக் காட்டும், pain in the chest said to be due to the upward course of the worm in the intestines through the alimentary canal or oesophagus. It is marked by palpitation of the heart, swelling and excruciating pain in the chest, darkness of the eyes, dullness of vision, discharge of mucous froth from the mouth etc. These worms are said to be formed in the intestines owing to the aggravated condition of phlegm or wind as due to errors in diet.

கிருமி மூலம், பல்லிப் பூடு. இதுவே கொல்லைப் பல்லி, lizard plant—Strigia euphrasioides; 2. குடற் புழுவினு லேற்படும் மூல நோய், piles said to be caused through worms in the intestines.

கிருமியம், மாமிசம், flesh; meat.

கிருமியரி, வாயு விளங்கம், wind-berry—Embelia ribes.

கிருமி யரிநாசி, புறங்கை நாறி, an unknown fetid plant used for curing itches probably referring to பீநாறி which see.

கிருமி யர்ப்பாசனம், நரி முருக்கு, inferior kind of Erythrina.

கிருமியாளி, see கிருமி யரி.

கிருமி யோமம், குராசாணி ஓமம், henbane—Hyocyamus niger; 2. கிருமிக்காக கொடுக்கும் ஓமம் சேர்ந்த ஓர் மருந்து, a medicine in which Omam forms the chief ingredient prescribed for killing worms in the intestines.

கிருமி ருஷ்டங்கி, see ஒட்டை மரம்.

கிருமி ரோகம், நாக்குப் பூச்சி, சிரிப்பூச்சி, புழு முதலியன மனித வுடம்பி லுள்ள கருவி கரணங்களில் உற்பத்தியாகி, அவ் விடத்திலுள்ள தசை, இரத்தம் முதலிய தாதுக்களைக் கொண்டு ஜீவிப்பதினால், அனேக நோய்கள் ஏற்படும். இவை அனேக காரணங்களை முன்னிட்டு உடம்பி லுண்டாகும் பித்தம் அல்லது சிலேட்டு மாதிக்கத்தினால் பிறக்கும். இதனால் உடம்பு நிறம் மாறி, வயிறு வலித்து, மார்பு எடுப்பாகத் தோன்றி, மந்தம், அன்னத் துவேஷம், பிரமை, முதலிய குறிகள் ஏற்படும்.

இவைகளா லுண்டாகும் நோய்களாவன: சோகை, மஞ்சள் காமாலை, ஆனைக் கால், பிரமை, உடம் பிளைப்பு, வலிப்பு, சுரம், ஈரல் வலி, முதலியன, diseases caused by worms or parasites which germinate and grow in a living organism. They are due to the aggravated bile or phlegm arising from various causes and are characterised by change of complexion, colicky pain, raised or prominent chest, dull appetite etc.

The following are the diseases arising from the effects of these worms:—anemia, jaundice, elephantiasis, hypochondriasis, progressive emaciation, convulsions, fever, liver-disease etc.

கிருமி வாந்தி, குடற்புழுவினு லேற்படும் வாந்தி, vomiting due to worms in the intestines.

கிருமி விரண சோதனம், கோடாசொரி, a prepared arsenic used for testing the sores or ulcers caused by worms in the system.

கிருமி விரேசனம், உடம்பினி லுள்ள கிருமியினு லேற்படும் பேதி, purging due to the presence of worms in the intestines.

கிருமி வைத்தல், புண், சிலந்தி இவைகளில் புழு வுண்டாதல், breeding of worms or maggots as in a sore, or ulcer.

கிருமிவைத் திறத்தல், கட்டி, பிளவை, சிலந்தி இவைகளில் புழுக்க ளுண்டாகி அதனால் சாதல், to die of abscess, carbuncle, cancer, ulcer etc. infested with cankering worms.

கிருமீலகம், ஓர் பூடு, a plant — Phaseolus aconite folius.

கிருமீலி, அனேக குழந்தைகளைப் பெற்ற பெண், a woman having given birth to many children.

கிருமுகம், பாக்கு மரம், areca-nut tree.

கிருமுதலாடை, பொடுதலை, creeping vervain —Verbena nodiflora.

கிருமேளகம், ஒட்டகம், camel.

கிரு வைசூரி, தட் டம்மை, measles; flat variola.

கிருனம் பீரம், see உள்ளி.

கிரேசமிரம், பச்சை கருப்பூரம், crude camphor.

கிரேந்தி, கச்சோலம், husk of cardamom.

கிரோசின் எண்ணெய், இதற்கு மண் ணெண்ணெய் அல்லது கில வெண்ணெய் என்றும்

பெயர். இது இந்தியாவில் ஆசாம், முதலிய தேசங்களில் எடுக்கப் பட்டாலும், ருஷியா, ரொமேனியா, துர்க்கி, அமெரிக்கா, பர்மா, பாரசீகம் முதலிய நாடுகளில் விசேஷம். இது ஏற்பட்டதன் பின், பூர்வத்தி லிருந்து விளக்கெரிக்க உபயோகித்து வந்த புங் கெண்ணெய், வேப் பெண்ணெய், இலுப் பெண்ணெய் இவைகள் அடியோடு நின்று விட்டன. இது மிக்கக் கெடுதியையும், கஷ்டத்தையும் விளைவிக்கக் கூடியதாயினும், நாகரீகத்தையும், வெளிச்சத்தையும் கருதி உபயோகப் படுத்தப் பட்டு வருகின்றது. சுத்தி செய்யாத வெண்ணெய்க்குத் தான் மண்தைலம்(Crude oil) என்று பெயர்.

இம் மண் எண்ணெய் கை கால் குடைச்சல், முதலிய வாத ரோகங்களுக்கும், சொறி சிரங்கு, கரப்பான், படை முதலிய சரும நோய்களுக்கும் மேலே தடவுதற் குதவும். ஆனால், மண் தைலமோ பிசின்போல் வழுவழுப்பாயும், பச்சையாயும் இருக்கும். இதற்குக் கிருமியைக் கொல்லுங் குணமு முண்டு. குழந்தைகளுக்கு கரப்பான், புண் இவைகளுக்கு மேற் பூச வுதவும், Kerosine oil. It is also known as earth-oil or rock-oil. In India, it is found in Assam and other places; but from Russia, Rumania, Turkey, America, Burma, Persia etc., it is obtained in abundance. After the introduction of this oil into India, the use of the indigenous lamp-oils such as margosa oil, dalbergia oil, mowah oil etc. expressed from various oil-seeds has ceased. Although this oil is injurious and costly, its use has become very extensive because of its powerful light and refineness as suited to present day civilization. The unrefined oil is known as earth-oil or crude-oil which occurs as a semi-solid somewhat of the consistence of a tenacious treacle.

Vaidyans use this oil as an external application in rheumatic complaints as also for children in cases of itch, ringworm, eczema and other skin-diseases of parasitic origin. It is also useful in epilepsy, hysteria, palsy etc., in all which, it is rubbed on the affected part with the hand in the form of liniment.

NOTE.—Naptha and Kerosine oil are finer varieties; and petroleum or fluid bitumen is the rock-oil which is formed by the slow decomposition of organic remains, animal or vegetable or both combined. மண் தைலம் is the crude-oil of a deep dark green colour with a peculiar unpleasant aromatic odour and pungent acrid taste, exuding from rocks. It is also found collected on the surface of certain lakes. It is obtainable from almost all the bazaars.

கிரோத நஞ்சு, அழல் நஞ்சு, irritant poison.

கிரோதி, அழற்சியை யுண்டாக்கு மருந்துகள், a medical application that causes pain or heat—Irritant.

கிரௌஞ்சம், ஓர் விஷம், a poison.

கிரௌஞ் சாதனம், தாமரை நூல், the fibres of the stalk of the lotus; 2. திப்பிலி, long pepper; 3. தாமரைக் கொட்டை, the seed of the lotus.

கிரௌரியம், கொடுமை, cruelty.

கிலம், சிதைந்தது, that which is destroyed or rendered useless.

கிலாச குட்டம், உடம்பின் தோலைப் பற்றியதாய், சீழ் இரத்தம் முதலானதும் ஒழுகப் பெறாத ஓர்வகைக் குட்டம், a kind of leprosy which confines only to the skin and is free from any secretion.

கிலாசம், சதையை மூடிக்கொண் டிருக்கும் எழுவகை சருமங்களி லொன்று, one of the seven layers of the skin covering the muscles of the body; 2. தேமல், இது தோலைப் பற்றிய நோய்; ஓர் கசிவு மில்லாதது. இது வாயு கோளாறுடைவதினால் ஏற்படும், a form of skin-disease marked by the absence of any secretion and due to the action of deranged Vayu.

கிலாசி, தேம லுடையோன், one who is attacked of கிலாசம், which see.

கிலாலம், நீர், water.

கிலாயு, கபாதிக்கத்தினால் ஏற்படும் ஓர்வகைத் தொண்டை யடைப்பு. இது தொண்டையின் சோணம் நெல்லி விதை யளவு வீங்கி, வலி கண்டு, அதனால் கவளம் உணவு தொண்டையி லடைத்துக் கொண்டது போல் தோற்றுவிக்கும். இது சாதாரணமாக மருந்தினால் குணப்படாது. சத்திரம் செய்தால் தான் குணப்படும், a hard tumour in the throat. It is a disease in which the aggravated phlegm and blood give rise to a hard and painful glandular swelling in the throat of the size of a gooseberry seed; and consequently a sensation is generally experienced as if a morsel

or bolus of food were stuck in the throat. This disease, by its very nature, is curable only by surgical aid and not by medicine.

கிலானம், களைப்பு, exhaustion ; 2. இளைப்பு, emaciation.

கிலானி, களைப்பு, fatigue ; weariness.

கிலிகை, சிற் றெலி, a small rat.

கிலிங்கி, கிலு கிலுப்பை, rattle-wort.

கிலிட்டம், வலி, pain ; suffering.

கிலிட்ட வர்த்தமம், ஓர்வகைக் கண்ணோய். இது கபத்தினாற் பிறந்து, இமைச் சந்துகளிற் சிவந்த வீக்கத்தை யுண்டாக்கும். இவ் வீக்கம் கட்டிகளாகத் தோன்றி தினவை யுண்டாக்கும், a disease of the eyelids marked by a mild and copper- coloured inflammatory swelling or abscess, slight pain, and an itching sensation. It is due to the phlegmatic humour of the human system.

கிலீடகம், ஓர் பூடு, a plant – Glycyrrhize glabra ; 2. ஓர் விஷக் கிழங்குடைய பூடு, a plant with a poisonous bulbous root.

கிலீடம், ஓர், விஷப் பூச்சி, a kind of venomous insect.

கிலீபத்துவம், see கிலீபம்.

கிலீபம், பேடித் தனம், impotency.

கிலீப லிங்கம், அலிக்குறி, a genital without the characteristic symptoms either of a male or female.

கிலீபன், பேடி அதாவது ஆண் தன்மை யற்றவன், an impotent man ; 2. அலி, hermaphrodite ; eunuch.

கிலுகிலி, see கிலு கிலுப்பை.

கிலு கிலுப்பை, பேய் மிரட்டி. இது காய்ந்தால் உள்ளிருக்கும் விதைகள் ஒலிக்கும், rattle-wort—Crotolaria laburnifolia. It is a plant, the fruit of which rattles or crackles in the legumen owing to the dry pods contained in them.

The following are the different varieties :—

1. வெள்ளைக் கிலுகிலுப்பை, white rattle-wort.
2. பெருங் கிலுகிலுப்பை, large rattle-wort.
3. வட்டக் கிலுகிலுப்பை, rount rattle-wort.
4. செங் கிலுகிலுப்பை, red rattle-wort.

கிலுக்கம், கிலுக்கப் பட்சி, a bird raising a rattling noise.

கிலுங்காகிதம், நாகலிங், Ceylon iron-wood—Mesua ferrea (coromandalina).

கிலுங்காகிலு,
கிலிங்கி,
கிலுப்பை,
} see கிலு கிலுப்பை.

கிலுத்தம், மணிக் கட்டு, wrist ; 2. மனித ரூபமுள்ள பழம் காய்க்கு மரம், a tree bearing fruit resembling the human form.

கிலேசக்கினம், குட்ட நோயைத் தீர்த்தல், curing leprosy ; 2. ஓர் வகைச் சுரை, a sort of bottle gourd—Mimordica mixta.

கிலேசபகம், வலியைத் தணித்தல், allaying pain or suffering.

கிலேசம், நோயினு லுண்டான வருத்தம், pain from disease ; 2. வெண் குட்டம், white leprosy.

கிலேடகிகம், கிலீடக வேரினின்று தயாரிக்கும் ஓர் மது, a fermented liquid or wine prepared from the root of கிலீடகம், which see.

கிலேதக கிலேட்டுமம், இரைப் பையில் இருந்து கொண்டு உட் கொண்ட உணவு பண்டங்களை மிருதுவாக்கு மோர் வகை கிலேட்டும நீர், the peculiar digestive fluid secreted by the stomach, being the solvent fluid in the digestive processes—Gastric juice.

கிலேதகம், ஈரம், moisture ; 2. வயிற்றுக் கோழை, mucous of the stomach; 3. அதிக வாய் நீர், excess of saliva.

கிலேதம், வீக்கம், இரணம், புண் இவைகளைக் கழுவு வதற்கு அல்லது ஊறிக் கொண்டிருக்கும்படி துணியில் நனைத்து மேல் போடுவதற்கு உபயோகிக்கும் மருந்து நீர், a lction for washing and cleaning swellings, wounds, ulcers or sores or for externally applying with the lint soaked in it.

கிலேதனம், கபம், a kind of phlegm.

கிலேது, திரி தோஷம், a morbid combination or concerted action of the three humours of the human body ; 2. நோய்ச் சோனாது, complication of a disease.

கிலோமம், மூத்திரப்பை, சலப்பை, bladder or a reservoir containing the urine.

கிலோம நீர் கிலோமம் உறுப்பி னின்று உற்பத்தியாகும் வாய் நீரைப் போன்ற ஓர்வகைத் தடித்த கார நீர், a thick alkaline fluid like saliva, secreted by pancreas — Pancreatic juice.

கிலோம யோனி, பையுடைய யோனித் தாரை, the bladder and vagina—Vesico-vagina.

கிலோ மரம், மூத்திரப்பைக்கு ஏற்படும் அழற்சி, inflammation of the bladder—Cystitis.

கிலோ மலம், மூத்திரப் பையில் நிற்கும் கற்களை உடைத்து எடுத்தல், the art of removing or extracting the calculus or stone in the bladder—Lithotomy.

கிலோமா, வாய் நீரைப் போன்ற கார நீரில் ஓர் பாகத்தை சுறப்பிக்கும் நீண்ட கோள உறுப்பு. இது அடி வயிற்றின் பின்பக்கம் குறுக்காக நிற்கும், a long gland situated transversely across the posterior wall of the abdomen, secreting an alkaline fluid like saliva—Pancreas.

கில்லம், கழுத்து, neck.

கிழ, வயது சென்ற, aged; old.

கிழக்கன்,
கிழக்கா,
கிழங்கன், } see கிழங்கான்.

கிழங்கான், ஓர் வகைக் கடல் மீன். இது 1 அடி நீளம்; நீல காந்தியும், வெள்ளியைப் போன்ற நீண்ட வரிகளும், இறகி னருகே கரும் புள்ளிகளும் அமைந் துள்ளது. இது பத்தியத்திற் குதவு மீன். பழைய மலச் சிக்கலைப் போக்கி தேகத்திற்கு செழுமையை யுண்டாக்கும். இது பெண்களுக்கு பால் சுரக்க வைப்பதில் சுறு மீனைவிட விசேஷ குணமுடைய தால், கைக் குழந்தையுடைய பெண்கள் இதைச் சாப்பிடுவது நல்லது. குட்டங் கொண்டவனுக்கும் இது ஒன்றே பத்திய மீனாக வுதவும்; Indian whiting—Silago sihama alias Atherina sihama. It is a sea-fish 1 foot long, having a brilliant purple reflection and silvery longitudinal band and dark dots near the wing. It is highly useful as a diet for patients as being nutritious. It evacuates obstructed or retained stools thus proving wholesome to the body. Women are advised to eat it as it is said to be more nourishing than the shark's flesh; and therefore, it is prescribed as diet for promoting the secretion of milk in women with baby in arms. Vaidyans advise leprous patients to eat this. Other species of this are Bengal whiting —Sciaenoides pama, Bicuda etc.

கிழங்கு, செடி கொடிகளின் மூலம், underground tuberous or bulbous root of plants and creepers; 2. உருளை, கருணை முதலிய உண்ணுங் கிழங்கு, esculent root as potato, yam etc; 3. பிண்டம், (fig.) foetus; 4. காரணம், cause.

கிழங்கு, மரம் செடி, கொடி, இவைகளின் மூலம். இக் கிழங்குகள் சாதாரணமாய்ப் பூமிக்குள் ளிருந்து வெட்டி யெடுக்கப் படும். இவைகளில் இரண்டு வகை யுண்டு. (1) உணவுக் குரியது (2) மருந்திற் குரியது. ஒவ்வொரு வகையிலும் அடியிற் கண்டபடி பல வகை யுண்டு, tuberous or bulbous roots of trees, plants and creepers; and they are found buried underground and dug up after a particular period according to the nature of the plant. They are classified into two kinds—(1) edible used like vegetables, (2) non-edible used for medicinal purposes; and each of these consists of different varieties as mentioned below:—

(A) உண்ணுங் கிழங்கு, esculent roots:—

1. உருளைக் கிழங்கு, (lit) common potato plant—Solanum tuberosum.
2. கருணைக் கிழங்கு elephant-foot yam —Typhonium orixense.
3. காரு கருணை, caustic potato — Amorphophallus campanullatus.
4. சர்க்கரை வள்ளிக் கிழங்கு அல்லது சீனிக் கிழங்கு, sweet yam—Ipomaea batatas.
5. மரவள்ளிக் கிழங்கு, mountain sweet yam—Manihot utilissima.
6. சேப்பங் கிழங்கு, cocoa root — Colocasia indica.
7. காருக் கருணை, south sea arrow root—Tacca pinnatifiida
8. சிறு வள்ளிக் கிழங்கு, goa yam — Dioscorea aculeata.
9. காய் வள்ளிக் கிழங்கு, humped yam Dioscorea globosa.
10. காய்ச்சில் கிழங்கு அல்லது பெருவள்ளிக் கிழங்கு, large-yam—Disocorea alata.

11. புதுச்சேரி வள்ளி அல்லது பொட்டுக் கறிவள்ளி, Pondicherry sweet potato—Dioscorea purpurea.

12. நாறுங் கிழங்கு அல்லது காட்டு வள்ளி, pig-snout yam — Dioscorea pentaphylla.

13. யாமிசுக் கிழங்கு, common yam—Dioscorea sativa.

14. கூவைக் கிழங்கு, Malabar arrow root—Curcuma angustifolia.

15. மஞ்சட் கிழங்கு, turmeric; yellow root—Curcuma longa.

16. ஆள் வள்ளிக் கிழங்கு, same as No. 5.

17. காட்டுக் கிழங்கு, same as No. 8.

18. சேனைக் கிழங்கு, same as No. 8.

19. கொட்டிக் கிழங்கு, water-lily root.

20. முள்ளங்கிக் கிழங்கு, country radish—Raphanus sativus.

(B) மருந்துக் கிழங்கு, medicinal roots :—

1. நிலப் பூசணி, earth pumpkin — Ipomaea digitata.

2. காட்டுக் கருணை, wild telinga potato—Dracontium polyphyllum.

3. வெற்றிலை வள்ளி, betel yam—Dioscorea oppositifolia.

4. கிச்சிலிக் கிழங்கு, orange root — Hedysarum spicatum.

5. பூலாங் கிழங்கு, poolah root — Curcuma zedoaria.

6. கலப்பைக் கிழங்கு, plough root — Gloriosa superba.

7. கார்த்திகைக் கிழங்கு, same as No. 6.

8. நாபிக் கிழங்கு, aconite root—Aconitum ferox.

9. சீமைக் கிச்சிலிக் கிழங்கு, Europe zedoary—Hedychium spicatum.

10. கற்பூரக் கிச்சிலிக் கிழங்கு, long zedoary—Curcuma zedoary.

11. பேதிக் கிழங்கு, purgative root—Ipomaea purga.

12. பத்தராசுக் கிழங்கு, false jalap root —Mirabilis jalapa.

13. பெருங் கிழங்கு, Mudar root plant; serpent root plant—Aristolochia indica.

14. அல்லிக் கிழங்கு, root of Indian water-lily—Nymphaea lotus.

15. தாமரைக் கிழங்கு, lotus root—Nelumbium speciosum (root of).

16. தண்ணீர் விட்டான் கிழங்கு அல்லது சதா வேரிக் கிழங்கு, water root —Asparagus racemosus.

17. பூமி சருக்கரைக் கிழங்கு, (lit) earth sugar root—Arium campemelatum.

18. நிலப் பனைக் கிழங்கு, ground palm —Curculigo orchioides.

19. வெருகன் கிழங்கு, Verugu root — Arum macrorhizon.

20. இரேவல் சின்னிக் கிழங்கு அல்லது மஞ்சள் சீனக் கிழங்கு, Himalayan rhubarb—Rheum emedi.

21. அமுக்கிருங் கிழங்கு, horse root—Withania somnifera.

22. ஆகாச கருடன் கிழங்கு, Brahaminy kite caper; sky-root—Bryomia epigaea.

23. வாழைக் கிழங்கு, plantain root—Musa paradisiaca.

24. இஞ்சிக் கிழங்கு, green ginger—Zingiber officinalis.

25. புளி நரளைக் கிழங்கு, fox-grape root Vitis carnosa.

26. வெண்தோன்றிக் கிழங்கு, same as No. 22.

27. கோரைக் கிழங்கு, Cyperus root——Cyperus rotundus.

28. சேவகனூர் கிழங்கு, an unknown variety.

29. செய்தற் கிழங்கு, root of white Indian water lily.

30. மருள் கிழங்கு, bowstring hemp root—Sanseveira roxburghiana.

கிழங்குக் கொடி, வள்ளிக் கொடி, creeper of sweet-potato; 2. பிரண்டைக் கொடி, a adamantine creeper.

கிழங்குக் கோவை, see ஆகாச கருடன் கிழங்கு.

கிழங்குத் தண்ணீர், வாழைக் கிழங் கடியில் நிற்கும் தண்ணீர், water found deposited at the bottom of the root of the plantain tree; 2. கிழங்குச் சாறு, the juice extracted from any tuberous or bulbous root.

கிழங்குத் தைலம், பிண்டத் தைலம், oil extracted from the foetus.

கிழங்கு நீர், see கிழங்குத் தண்ணீர்.

கிழங்குப் பிரண்டை, மணிப் பிரண்டை, bulbous root creeper—Cissus bifida.

கிழங்கு மஞ்சள், பூசு மஞ்சள், Indian saffron; woman root—Curcuma longa.

கிழங்கு மணி, see கிழங்குப் பிரண்டை.

கிழங் கெடுத்தல், மூலத்தை அழித்தல், rooting out; 2. வேரோடு பிடுங்கல், destroying the root so as not to revive.

கிழ சிவன், see கிழட்டு சிவன்.

கிழடன், கிழவன், old man.

கிழடு, முதிர் வயது, old age; 2. முதிர் வயதின்மை, dotage—Senium. See கிழட்டுத் தனம்.

கிழடு கட்டை, see கிழட்டுக் கட்டை.

கிழட்டுக் கட்டை, வயது சென்ற உபயோக மற்ற பெண் அல்லது ஆண், a contemptuous term used for an old and useless people.

கிழட்டு சிவன், கிழவன் அல்லது கிழவி, old person, man or woman.

கிழட்டுத் தனம், முதிர்ந்த வயதினால் உடம்பும் மனதும் பலவீனப்பட்ட நிலைமை, the feebleness of body and mind incident to old age—Senility. See கிழத் தனம்.

கிழட்டு முகம், வயதினால் திரைந்து திறம் குன்றிய முகம், face wrinkled by age and deprived of its grace and elegant features.

கிழண்டுதல், வயதினால் தளர்தல், being broken down by age.

கிழண்டு போதல், see கிழண்டுதல்.

கிழத் தனம், வயது முதிர்ச்சியினால் உடம்பிலுள்ள தந்துவங்களின் ஆற்றல் குன்றி, இரத்தம் குறைந்து, களை வேறுபடும் நிலைமை, a change in human beings due to advanced age brought about by the loss of elasticity in the cells of tissues, impoverishment of blood, and characteristic change of grace or elegant features—Senile decay.

NOTE.—The only treatment in this case is that which is directed towards giving elasticity to the tissues.

கிழத் திரி, பெண் குறி, the genital of a female so called from its wrinkles or folds.

கிழத்து, ஓர் வகை மீன், a kind of fish.

கிழப் பிணம், கிழத்தன மடைந்து செயலற்ற ஆண் அல்லது பெண், old useless person often called a living corpse. See கிழட்டுக் கட்டை.

கிழப் வைத்தியம், வயது முதிர்ச்சியினால், அறிவழிந்து, புத்தி தடுமாறி, இளம் பிருந்து, வைத்தியம் கொண்டது போல் கண்டபடி உளறுதல், a form of moral insanity occurring in old people in which the moral feelings are perverted, senses failing, some of the passions excited and lastly the uttering of words getting nonsensical—Senile insanity.

NOTE.—Dr. Burrows says:—"The pious become impious; the content and happy, discontented and miserable; the prudent and economical, imprudent and ridiculously profuse; the liberal, penurious; the sober, drunken. In this, passions which had long been dormant resume their sway and cast shame mingled with pity over the years of the declining age—Senile dementia. See கது கெட்டுப் போதல்.

கிழ மரம், முதிர்ந்த மரம், old tree; 2. நாட்சென்ற மரம், long-standing tree.

கிழ முண்டாதல், கிழத்தன மடைதல், becoming old.

கிழ மேனி, திரைத்த மேனி. இது உடம்பின் தசை நார்கள் நெகிழ்ச்சியை இழந்த காலத் துண்டாகும், shrunken body; body with wrinkles or folds. This occurs at an age when the muscle loses its elasticity.

கிழ மேனி படுகை, மூப் படைவதற்கு முன்னமே கிழத்தன மடைதல், becoming old before the period; becoming prematurely old—Senilism.

கிழமை, கிழத் தன்மை, oldness; 2. மூப்பு, decrepitude; 3. கிழத்தன்மை யடையும் விதம், the process of growing old—Insenescence.

கிழமைக் கழுதல், உரிமையைக் கருதி இறந்தவர்களுக்காகத் துக்கங் கொண்டாடல், mourning for the dead because of their relationship.

கிழமை வட்டம், ஏழு நாட்கொண்ட காலம், a period or cycle of seven days; 2. வாரம், week.

கிழம், முதுமை, old age; dotage; 2. கிழ மனிதர், a contemptuous term for an old person; 3. see கிழத் தனம்.

கிழம் படிதல், கிழத்தனம் அடைதல், growing or becoming old.

Dic 193.

கிழவரி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root—Asparagus racemosus alias A. sarmentosus.

கிழவன், வயது சென்றவன், old man; 2. எண்ணெய்க் கசடு, black sediment in oil; 3. பாட்டன், grand-father.

கிழவன் குடி, பற்பாடகம், fever-plant—Mollugo cerviana.

கிழவன் தாடி, பனி தாங்கி, see காட்டு மருக்கொழுந்து; 2. ஓர்வகை மாம் பழம், a kind of mango.

கிழவி, வயது முதிர்ந்தவள், old woman; 2. பாட்டி, grand mother; 3. முருங்கை, moringa; drumstick tree; 4. கல்லாரை, which see; 5. தாய்க் கிழங்கு, see கிழவிக் கிழங்கு.

கிழவிக் காத் தட்டை, நாணற் தட்டை, reed.

கிழவிக் கிழங்கு, காட்டுப்பட்ட கிழங்கு, an old root; 2. வருடஞ் சென்ற கிழங்கு, root of the previous year.

கிழவி தானிகம், முருங்கை, hore-radish tree—Pterogosperma moringa. See கிழவி.

கிழவி மஞ்சள், முற்றிய வருடத்து மஞ்சள், turmeric of the previous year.

கிழவு, கிழட்டுத் தனம், dotage.

கிழ வேர் வரி, ஆண்குறி, the genital of a male.

கிழாத்தி, கெளுற்று அல்லது ஆற்றுக் கெளுத்தி, a fresh-water shark of cat-fish family—Siluridae; 2. பெருங் குறவை மீன், a dark-coloured fish — Ophiocephalus gachua; 3. ஓர் வகைக் கடல் சுறுமீன், a silvery sea-shark—Tricanthus strigilifer; 4. ஓர் பறவை, a kind of bird.

கிழான், தயிர், curd; 2. சூரியன், the sun.

கிழான் பச்சை, ஓர் வகைச் சந்தன மரம், a variety of sandal tree.

கிழி, கந்தை, rag; 2. முடிச்சு, knot; 3. பொட்டணி, anything tied up in a piece of cloth.

கிழிக் கட்டல், மருந்துகளின் சத்திறங்கும்படி எரிப்பதற் காகவோ, கரையும்படிச் செய்ய வோ அல்லது வேறு முறையாகத் தயாரிக்கவோ, துண்டுத் துணியில் தளர்ச்சியாக முடிதல், extraction of the soluble part of a drug (tied up in a piece of cloth) by causing a liquid solvent to flow slowly through it; 2. மருந்தைத் துணியில் பொட்டணமாகக் கட்டுதல், tying up of a medicine in a piece cloth and suspending it in a solution before heating or preparing it otherwise; 3. கரைந்து சத்திறங்கும்படி மருந்தைப் பொட்டணம் செய்து நீரில் தொங்க விடல், hanging a medicinal bundle in a solution for extracting the essence.

கிழிக் கட்டி எரித்தல், சிறிய பூக்கள், மாவுகள், அணுத்துவ மாகிய வித்துகள், தண்ணீரில் மிதக்கும் பொருள்கள் ஆகிய மருந்துச் சரக்குகளைச் சீலையில் முடிந்து தொங்க விட்டு எரித்தல், applying heat to the bundle of medicine consisting of small flowers, flours, minute seeds, and other substances floating in water for the purpose of extracting the essence. C.f. டோலா யந்திர விதி.

கிழிக் கட்டு, பொட்டணம், anything tied up in a piece of cloth.

கிழிதல், பிளந்து போதல், as in உதடு கிழிதல், splitting as of lips: 2. பீறுண்டு போதல், being torn, as belly.

கிழித் திடல், சத்திர மிடல், applying knife in the human system; i e, operating.

கிழித்தல், பீறல், tearing; 2. வயிறு கொள்ளு மட்டும் சாப்பிடல், eating bellyful; 3. சீல மாக்கல், lacerating; 4. கிழிக்குதல், tearing; 5. கீறல், scratching.

கிழிந்த சவ்வு, பீறுண்ட சவ்வு, ruptured membrane.

கிழிப்பு, கிழிக்கை, tearing; 2. பிளப்பு, cleft as in a lip.

கிழிப்பு காயம், சீல காயம், lacerated wound; 2. கீறுண்ட காயம், scratched or abrased wound.

கிழி மருந்து, சத்து வாங்கும் பொருட்டு, கிழிக் கட்டிய மருந்து, (*In Alchemy*) a medicine tied up in a piece of cloth and suspended in a solution for extracting the essence or the soluble part.

கிழியல், கிழிந்த பாகம், lacerated portion or torn part.

கிழியற் சதை, கிழிந்த தசை பாகம், the portion of flesh torn.

கிழிவு, தசைக் கிழிவு, laceration; 2. பீறல், rent; 3. பிளப்பு, rupture.

கிழிவு காயம், தசைக் கிழிதலால் ஏற்பட்ட காயம், lacerated wound.

கிளப்புதல், தூக்கத்தி னின்று எழுப்புதல், awakening from sleep; 2. உண்டாக்குதல், bringing out; causing to occur as blister; 3. பசி அல்லது வாந்தி மூட்டுதல், inducing, as hunger or vomiting.

கிளம்பல், எழுதல், rising; 2. மூண்டெழுதல், being excited; 3. மேலெழும்புதல், to scale off; to peel off as in a scale.

கிளர், கோத்தற் கோவை, false Kamela — Casearia esculenta; 2. ஒளி, lustre; 3. பூந் தாது, pollen of flowers.

கிளர்ச்சி, மறுபடியும் தோன்றல், relapsing as fever; 2. எழும்புகை, rising as boil.

கிளர்தல், மேலெழல், rising as abscess

கிளர்வு, கிளர்ச்சி, irritability; relapse.

கிளவரி, see கிழவரி.

கிளவரி கேதனம், நான்முகப் புல், square-stalked grass—Saccharum spontaneum.

கிளறல், see கிளறுதல்.

கிளறுதல, கிண்டுதல்; துழாவல், stirring up as with a ladle in the preparation of medicated oils, electuaries, syrups etc; 2. சலாகை யிட்டுச் சோதித்தல், examining with a probe. See கிண்டுதல்.

கிளா, see களா; 2. மலைக் களா, carbolic acid plant—Vaccinum leschinaultii.

கிளாக் காய், see களாக் காய்.

கிளார்த்தி, see கிளா அல்லது களா.

கிளாவரி, see கிழவரி.

கிளி, கிளி மீன், which see; 2, பறவைக் கிளி, parrot — Palaeornis; 3. வெட்டுக் கிளி, locust; 4. பச்சைக் கிளி, green parrot—Loriinae; 5. பஞ்ச வர்ணக் கிளி, love-bird—Loriculus vernalis.

கிளி கட்டல், see கிழி கட்டல்.

கிளிகுத்த சுவாச காசம், வலியோடு கூடிய ஓர் வகை சுவாச காசம், a kind of bronchitis attended with difficulty of respiration.

கிளிச மாரிகம், மாம் பழம், mango—Mangifera indica (fruit).

கிளி செயநீர், பூ நீருப்பு செயநீர், a pungent liquid or hydrate prepared by exposing to night's dew a solution of efflorescent salt collected from the surface of the soil of Fuller's earth.

கிளிச்சல், ஓர் கடல் மீன், a sea-fish—Caesio cuning.

கிளிச்சன், வாத முறையிற் செய்த தங்கச் செம்பு என்னும் 108 மாற்றுப் பொன், (*In Alchemy*) a refined concentrated gold of 108 'Matru' equivalent to about 11 × 24 or 264 carats; *i.e.*, about 11 times the value of pure gold available in the market. (*10 Matru = 24 carats*).

NOTE 1.—In the Tamil Siddha Medicine, volumes have been written on Alchemy by Siddhar's as Bogar, Konganava, Satta Muni, Agastiya, Rama Deva and various others. The augmentation of the fineness of gold (மாற்றுயர்வு) is one of the processes in Alchemy in which this is done either with the standard or natural gold or straight away with the ordinary copper. The standard gold (natural) available in the market for use as ornaments do not exceed 8½ Matrus or 22 carats containing 2 parts of alloy (24 carats being pure gold). But the Siddhars' Science reveals the process of making concentrated gold (தங்கச் செம்பு) of the highest degree of fineness, (1008 Matru) which is valued about 100 times the value of the standard gold (தங்கம்).

NOTE 2.—According to the Alchemical processes mentioned in the Tamil Siddhars' science, highly concentrated gold of various extraordinary degrees of fineness up to 1008 *Matrus* can even be manufactured with the help of 'Alcahest' (முப்பு) combined with the juice of a herb கரும் பசலை (black variety of spinach). See ஆனைக் கோர்வை.

கிளிச் சிறைப் பொன், கிளியின் சிறகைப் போன்ற நிறமுடைய மாற்றுயர்ந்த பொன், (*In Alchemy*) one of the four varieties of refined gold resembling the colour of a parrot's wing. The other 3 varieties are:—ஆடகம், சாதரூபம் and சாம்பூநதம், which see.

கிளிஞ்சான், see கிளி மீன்.

கிளிஞ்சி நீறு, சிப்பியை நீற்றி யெடுக்கும் சுண்ணாம்பு, shell-lime. See கிளிஞ்சல் நீறு.

கிளிஞ்சி உப்பு, கிளிஞ்சி னின்று தயாரிக்கும் உப்பு, salt extracted from the bi-valve shell.

கிளிஞ்சி லோடு, சிப்பி, oyster-shell.

கிளிஞ்சில், கிளிஞ்சி லோடு, bi-valve shell; 2. வழலை, Fuller's earth; 3. பிண்டம், foetus; 4. உடலிரண்டு உயிரொன்று. இது அடியிற் கண்டபடி பலவகைப்படும், bi-valve mussell. It consists of different kinds as mentioned below;—

1. ஓலைக் கிளிஞ்சில், thin and flat mussell-shell.

2. குரிக் கிளிஞ்சில், knife-like mussell-shell.

3. பல்லுக் கிளிஞ்சில், tooth-like mussell-shell.

கிளிஞ்சில் நீறு, சிப்பிச் சுண்ணாம்பு, shell lime obtained by burning bi-valve shells.

கிளிஞ்சிற் சதை, கிளிஞ்சிற் குள்ளே யிருக்கும் சதைப் பற்று, the flesh inside the mussell-shell.

கிளிஞ்சிற் சிப்பி, கிளிஞ்சி யோடு, bi-valve shell.

கிளிஞ்சிற் சுண்ணம், கிளிஞ்சில் நீற்றிய சுண்ணாம்பு, shell-lime.

கிளிஞ்சிற் றண்ணீர், கிளிஞ்சிற் சுண்ணாம்பின் மேல் தங்கிய தெளிவு நீர், the clear water settling on the top portion of a solution of shell lime—Lime-water.

கிளிதம், புசிக்கு மன்னம், rice food.

கிளிதி, see இது இதுப்பை.

கிளித்த நவ யாதி, மூக்குரு, an unknown plant, probably a variety of குரு, bottle flower—Webera corymbosa.

கிளி நாவல், கழற்சி, parrot jamboo — Caesalpinia bonducella.

கிளிப் பட்டை, see கிளியூறற் பட்டை.

கிளிப் பிள்ளை, see கிளி.

கிளிப் பூச்சி, சோளப் பூச்சி, a pest damaging the maize crop; 2. வெட்டுக் கிளி, locust.

கிளி மாசுணம், சிறு சின்னி, birched-leaved acalypha—Acalypha fruiticosa.

கிளி மீன், see கிளி மூக்கு மீன்; 2. பவளக் கொடி களில் வசிக்கும் ஓர் அழகான மீன், இது உண்பதற்குத் தகுந்த தல்ல, a sea-fish found amongst coral-reefs; parrot-fish —Dourada. It is not fit for eating; 3. ஓர் பச்சை நிறமான மீன், a green sea-fish — Pseudocarus chrysopoma.

கிளிமுகன், see கிளி மூக்கன்.

கிளி முருக்கு, முள் முருக்கு, thorny coral tree. See கலியாண முருக்கு.

கிளி மூசிகம், அணு, morinda root—Morinda citrifolia.

கிளி மூக்கன், கற்றாழை aloe; 2. கிளியைப் போல் வளைந்த மூக்குடையவன், one with an aquiline nose.

கிளி மூக்கு, see கிளிமூக்கு மீன்; 2. பருத்தி, cotton—Gossypium arboreum; 3. வளைந்த மூக்கு, hook-nose; aquiline nose; 4. ஓர் வெற்றிலை, a kind of betel leaf. See கிளி மூக்கு வெற்றிலை; 5. see கிளி மூக்கு மாங்காய்; 6. see அகத்தி; 7. கிளியின் மூக்கு, parrot's beak or bill.

கிளி மூக்குக் கிழங்கு, see ஆகாச கருடன் கிழங்கு; 2. கற்றாழைக் கிழங்கு, aloe root.

கிளிமூக்கு மரம், ஓர் மரம், parrot's bill of New Zealand; parrot's beak — Cilanthus puniceans.

கிளிமூக்கு மா, see கிளிமூக்கு மாங்காய்.

கிளிமூக்கு மாங்காய், ஓர் மாமரம். இதில் கிளி மூக்கை யொத்த காய் அபூர்வமாய்க் காய்க்கும். இம் மரத்தின் இலை அரசிலைப் போற் காணப் படும். பூப் பூத்த பத்தாம் நாள் காய் காய்க்கும். இப் பழத்தை யுண்டு வேகமாக ஓடலாம். சித்தர்கள் காய சித்திக்காக வேண்டி வெகு நாள் வரை காத்திருந்து இதைப் பறித்து அருந்துவார்கள், a rare species of mango-tree the fruit of which resembles the parrot-beak; leaves similar to those of peepul tree; bears fruit on the tenth day of its blossoming. By eating it, one can run fast. Siddhars wait for the period of its bearing fruit and eat it for the purpose of rejuvenating their body.

NOTE.—It is also said that this tree bears only one fruit and even that, once in twelve years. This should not confounded with a similar kind (Mangifera indica) available ordinarily in the market.

கிளிமூக்கு மீன், கிளி மூக்கைப் போல் வளைந்த மீன், parrot-fish—Dourada.

கிளிமூக்கு வெற்றிலை, கிளி மூக்கைப் போல் காம்பு வளைந்த ஓர் வித வெற்றிலை, a species of betel the pedicle of which is bent like the beak of a parrot.

கிளி யூரல் பட்டை, see கிளியூறற் பட்டை.

கிளியூறற் பட்டை, ஓர் வாசனைப் பட்டை. இதன் கஷாயம் சுரத்திற் குதவும், a fragrant bark used in decoction for fever.

கிளி யெடுத்து ரவியில் போடல், கிழிக் கட்டிய மருந்தை யெடுத்து வெய்யிலில் உலர்த்தல், taking out the medicine (tied up in a piece of cloth and kept suspended) from the solution contained in the vessel; and then drying it in the sun.

கிளி வெட்டுப் பாக்கு, ஆங்காங்கு தோலுரிந்த பாக்கு, areca-nut in which the brown rind pecked here and there.

கிளுவை, கிளுவை மரம். இதில் அநேக கிளைகளும், கொம்புகளும், தனியில் இலைகளும், பூக்களும், நிறைந்து உள்ளதால் இதற்கிப் பெயர்; இலைகள் மூன்று பிரிவா யுள்ளன; பூக்களும், காய்களும் நிறைந் துள்ளன. இதன் பிசின் மிக்க உபயோக மானது. இதைச் சாதாரணமாக வேலிகளில் வைத்துப் பயிராக்கப் படும்; மிக்க வாசனையா யிருக்கும். இதில் அநேக விதங்க ளுண்டு, balsam tree — Balsmodendron berryi. It is so called from its many branches; and branchlets bear leaves and flowers at their extremities; leaves are three-foliate; shrub or tree is covered with flower and fruit. The exuding gum-resin is very useful, It is very common as a hedge plant and has a grateful fragrance. The following are the different varieties:—

1. வெண் கிளுவை, white balsam—Balsmodendron berriyi.
2. செங் கிளுவை, red balsam—Balsmodendron caudatum (typica).
3. முட் கிளுவை, thorny balsam — Amyris spinosa.
4. பாறைக் கிளுவை, rock balsam. Same as No. 1.
5. கர்ப்பூரக் கிளுவை, camphor balsam—Balsmodendron caudatum.
6. காட்டுக் கிளுவை, wild balsam—Balsmodendron caudatum (Roxburghiana).
7. மலைக் கிளுவை, hill balsam—Balsmodendron pubescens alias Protium caudatum.
8. மல்லங் கிளுவை, spreading balsam—Balsmodendron gileadense.
9. பச்சைக் கிளுவை, green barked balsam.
10. வேலங் கிளுவை, an unknown variety.
11. சாம்பற் கிளுவை, grey balsam.
12. மாங் கிளுவை, mango balsam.
13. செம்பழக் கிளுவை, red-fruited balsam.

NOTE.—Nos. 1—8 come under the Botanical group and the botanical names of Nos. 9—13 are not known.

கிளுவை, நீர்ப் புள். இது 1 அடி நீளம்; இது வெகு சீக்கிரமாகப் பறக்கும்; குளக்கரை ஆற்றங் கரைகளில் மந்தையாகப் பார்க்கலாம். இதை வலை கட்டிப் பிடிப்ப துண்டு. இல்லாவிடில், தலையில் சட்டியைக் கவிழ்த்துக் கொண்டு அல்லது தண்ணீரில் கழுத்தளவு இருந்து கொண்டு தந்திரமாகப் பிடிக்கலாம். இதன் கறி பத்தியத்திற் குதவும். இதை உண்பதால் மாதர்க்கு முலைப் பால் விருத்தியாகும்; மேகப் பிரமேக, விரணம் போம்; அதிக வீரிய முண்டாகும், common teal — Querquedula crecca. It is 1 ft in length; flight amazingly rapid; frequents shores of tanks and banks of rivers in crowded flocks; large numbers are netted and caught. Sometimes they are caught alive by man wading with his head above the water or concealing his head with a large earthern vessel (chatty). They are very useful in diet and are said to promote the secretion of milk in women (lactogogue) and semen in men and also to cure syphilitic ulcers and sores; 2. செங் கிளுவை. இதன் தோகையின் நிறத்தைக் கருதி இப் பெயர். இது உணவிற் குதவாது, whistling teal—Dendrocygna awsuree. It is so called from the colour of the plumage; it is not much used for eating.

கிளுவை, கிளுவை மீன், a kind of small fish eel; grig—Marreca.

கிளுவைப் பிசின், கிளுவை மரத்துப் பிசின், இதுவே குக்குலு, balsam gum—Resin.

கிளை, மரக் கிளை, branch of a tree; 2. தளிர், shoot; 3. மூங்கில், bamboo; 4. வாலு ளுவை, spindle tree—Celastrus paniculata; 5. பூக் கொத்து, bunch of flowers.

கிளை காமிகம், நீர்ப் பூலா, water poolah—Phyllanthus multiflorus.

கிளைச் சுவாசக் குழல், இரண்டு பிரிவின யுடைய மூச்சுக் குழல், the two tubes arising from the bifurcation of the windpipe—Bronchi.

கிளைதல், கிளறுதல், to pry out with a needle, as done with a thorn imbedded in the flesh; 2. சலாகையால் புண்ணில் விட்டுச் சோதித்தல், examining a wound or ulcer with a probe; 3. களைதல், washing as rice.

கிளைத்த ரோகம், புதிதாக உற்பத்தியான நோய், a disease newly springing up from another or former disease.

கிளைத்தல், பெருகல், growing numerous as boil, abscess etc. in succession; 2. ஒன்று போக மற்றொன்று உண்டாதல், pushing out a new in place of old one alternatively; 3. கிண்டல், burrowing.

கிளை நரம்பு, உடம்பின் நரம்பி னின்று ஓடும் கிளைகள், ramification of a nerve.

கிளைப் பனை, பல கிளைகள் ஒட்டிக் கொண்டுள்ள ஓர் வித பனை, a kind of palmyra tree with several branches adhered together.

கிளை யிதழ், புற விதழ், the outer petals of a flower.

கிளை யோடுதல், புரை யோடல், forming sinuses.

கிளை வாதம், see ஆண் தடரி.

கிளை விடுதல், துளிர்த்தல், sprouting; 2. கிளை யுண்டாதல், dividing into branches; ramifying.

கிளை வேரி, see சதா வேரி.

கிள்ளல், பசி யெடுத்தல், feeling hungry as in வயிறு கிள்ளல், pinching of the stomach; 2. கிள்ளுதல், squeezing as of the flesh till it is pained; 3 சிரங்கு கிள்ளல், nipping or pinching off the end of a pimple, pustule, boil, etc.

கிள்ளிக் காய், ஓர்வகை நத்தை, wing-shell—Avicula.

கிள்ளிப் போடல், நோய் ஆரம்பிக்கும் போதே குணப் படுத்துதல், curing a disease in its infant stage; a nipping off in the bud as it were.

கிள்ளு, கிள்ளுகை, pinching; nipping.

கிள்ளுக் கீரை, சுலபமாய் கிள்ளக் கூடிய கீரை, greens that could be easily plucked; 2. அரைக் கீரை, round-headed amaranth—Amaranthus gangeticus; 3. முளைக் கீரை, garden greens — Amaranthus blitum; 4. இளங் கீரை, tender greens.

கிள்ளை, கிளிப் பிள்ளை, parrot; 2. குதிரை, horse; 3. சாதி பத்திரி, mace—Myristica fragrance (pulp of); 4. கருங் கிளி, dark or black parrot.

கிள்ளைச் சாதம், கிளிக் குஞ்சு, young of a parrot.

கிற, குட்டம், leprosy.

கிறட்டி, பிரண்டை, adamantine creeper — Vitis quadrangularis.

கிறட்டை, ஓர் மருந்துப் பூடு, an unkown medicinal plant.

கிறமுகம், பாக்கு மரம், areca-nut tree — Areca catechu.

கிரு, நறுங் குறிஞ்சி, see குறிஞ்சி.

கிருணி, see கிராணி.

கிரு மினிகம், see ஒட்டொட்டி.

கிறி கன்னி, வெள்ளைக் காக்கணம், white mussell-shell creeper — Clitorea ternatea (albiflora).

கிறிச்சல், தீ முறுகற் பாஷாணம், a kind of prepared arsenic.

கிறிச் சீரிடம், சாதிக்காய், nutmeg—Myristica fragrans. See கிரிச்சி ரீட்டம்.

கிறிடம், see உத்தாமணி.

கிறித வேணி, பீர்க்கு, see கிறிது வேதன்.

கிறு கிறுத்தல், மயக்க மடைதல், being giddy; feeling giddiness; 2. தள்ளாடல், reeling; tottering.

கிறு கிறுப்பு, தலைச் சுழற்சி, reeling of the head; 2. மயக்கம், giddiness; 3. தலை மதமதப்பு, swimming in the head.

கிறு கிறெனல், see கிறுகிறென்று வரல்.

கிறுகிறென்று வரல், மயக்கங் கொள்ளல், being seized with giddiness as from hunger or shock.

கிறுக் கட்டி, இலுப்பைப் பூ பணியாரம், a sweet cake prepared from mowah flowers; 2. கண் கட்டி, stye in the eyelid.

கிறுக்கர் மடம், பைத்தியக் காரர்களைச் சோதனைக்காக நிறுத்தி வைக்கு மிடம், lunatic asylum.

கிறுக்கன், பைத்தியக் காரன், lunatic; 2. மனப் போக் குள்ளவன், crazy fellow.

கிறுக் காஸ்பத்திரி, பைத்தியக் காரர் சிகிச்சைச் சாலை, hospital for treating the lunatics.

கிறுக்கு, தலைச் சுற்று, dizziness.

கிறுக்குதல், தலைச் சுற்றல், feeling giddy; 2. சித்த தடுமாறல், being delirious.

கிறுக்கு நாய், பைத்தியம் பிடித்த நாய், a rabid dog.

கிறக்கு நோய், ஓர் ஆட்டு நோய், a disease of sheep; 2. பைத்தியம், lunacy.

கிறக்கு பிடித்தல், பைத்தியம் பிடித்தல், getting mad; being attacked with lunacy.

கிறுச நாதிதம், மஞ்சள், turmeric—Curcuma longa.

கிறு சந்திரன், நீர்ப் பாசி, water-moss; duck weed—Lemnaceae.

கிறுசன், குங்குமப் பூ, English saffron—Crocus sativus; 2. மஞ்சள், turmeric—Curcuma longa.

கிறு தாசிகம், நீர் முள்ளி, water-thistle—Barleria longifolia.

கிறுதி, பாரிச வாயு, paralysis.

கிறுத, see கிருத.

கிறுதுகம், பீர்க்கு, sponge-gourd; luffa—Luffa amara.

கிறுது சுண்டி, நீர்ச் சுண்டி, water mimosa—Mimosa virgata.

கிறு தவம் see கிறுத் தவம்.

கிறுது வேதனன், }
கிறுது வேதன், } see கிறுதுகம்.
கிறுத்து வேதன், }

கிறுத் தவம், அகில், agilwood.

கிறு பந்திகம், திப்பிலி, long-pepper—Piper longum.

கிறுப்பு, see கிறு கிறுப்பு.

கினி, கிரக தோஷம், morbid affection in children or their mother through the evil influence of planets.

கினிதி, see கிறு கிறுப்பை.

கினி பிடித்தல், நோயுண்டாதல், falling ill; becoming sick; 2. குழந்தைக்கு கிரக தோஷ முண்டாதல், child being attacked with morbid diathesis through the influence of a malignant planet.

கினிப் புல், சோளைப் புல். இது கிணறு, தோட்டக்கால் இவ் விடங்களில் செழிப்பாய் வளரும் ஓர்வகைப் புல், guinea-grass—Panicum jumentorum alias P. maximum. It is found luxuriously grown near wells, gardens etc.

கிளை,¹ விளா, wood-apple tree — Feronia elephantum; 2. புடம் போடுவதற்கு முன் காற்று உள்புகாத படிக்கு மருந்துச் சரக்கை யுடைய பாண்டத்திற்கு மேலே யிடும் கவசம் அல்லது சீலை மண், an air-tight coating of clay luted to the vessel containing medicine so as to prevent the escape of heat or gas during calcination.

கிளை சாரம், விளாம் பழம், fruit of wood-apple tree.

கின்னகம், தூக்கணங் குருவி, weaver-bird; Indian tailor-bird—Orthotomus longicauda.

கின்னரச் சுரை, உருண்டைச் சுரைக்காய். இதன் காய்ந்த ஓடு, கின்னரி, வீணை, முதலிய தந்தி வாத்தியங்களுக் குதவும், lute-gourd or calabash climber — Lagenaria vulgaris. The dried round hollow fruit of this creeper is used in the making of Indian stringed musical instruments like Kinneri, Veenai etc.

NOTE.—It should not be confused with மகுடிச் சுரை, which is the longer and narrow variety used for making the wind-instrument (called Magadi) with which snake-charmers entice snakes from their holes or ant-hills.

கின்னரப் பறவை, இனிய இசை பாடும் பறவை, a bird singing with a sweet voice—Canary bird.

கின்னர மிதுனம், கின்னரப் பறவையின் ஜோடி (ஆணும் பெண்ணும்), canary birds in pair or couples.

கின்னரம், see ஆந்தை; 2. இசை பாடும் பறவை, canary bird; 3. நீர் வாழ் பறவை, water-fowl—Albatros.

கின்னரர், மனித உடலும், குதிரை முகமும் உள்ள வான புருடர், divine choristers having the form of a man and the head of a horse living in the celestial regions. C.f. கந்தருவர்.

கின்னரி, ஆந்தை, owl.

கின்னரிக் கன்னி, ஆளி விதை, linseed.

கின்னரிச் சுரை, see கின்னரச் சுரை.

கின்னி, மழைக் கிளி; பெரிய பச்சை வெட்டுக் கிளி, large green locust. See இலைக் கிளி.

கின்னிக் கோழி, மயி லினத்தைச் சேர்ந்த கோழி, a fowl allied to pea-cock—Guinea-fowl; 2. வான்கோழி, Turkey-fowl.

கீ, எலும்போ டொட்டிய சதை, the portion of the flesh in close contact with the bone; 2 எலும்போ டொட்டிய சவ்வு, a membrane investing the bones of animals—Periosteum.

கீகசம், எலும்பு, bone; 2. மிகச் சிறிய புழு வினம், the name given to small microbes; bacterium.

கீசகம், குரங்கு, monkey; 2. மூங்கில், bamboo.

கீசகன், see கீசகம்.

கீச தாருகம், மூங்கில் மரம், bamboo tree—Bambusa arundinacea.

கீச தீரகம், அரை இண்டு, a species of mimosa. See இண்டு.

கீச பர்ணம், see கீச பர்ணி.

கீச பர்ணி, நாயுருவி, Indian burr—Achyranthes aspera.

கீச பாதிகம், கீலிச் செடி, Indigo plant—Indigofera tinctoria.

கீசம், குரங்கு, monkey; 2. குருவி see கீச்சான்; 3. நிருவாணம், nakedness.

கீசரம், see கீசரன்.

கீசரன், சரக் கொன்றை, common cassia—Cassia fistula.

கீசரி, see கீசரன்.

கீச வல்லி, see கீச பர்ணி.

கீசா, இரும்பு, iron.

கீச்சாங் குருவி, கீச்சிடும் குருவி. இது மற்ற பறவைகளைத் தன்னிடம் வரும்படிக்கு அவைகளின் குரலைப் போலவே சத்த மிடும், (*lit*) chirping bird; Indian grey shrikes or True shrikes — Lanius lahtora alias L. burra. It imitates the cry of other birds of prey to attract them near.

NOTE.—Brown shrike—Lasius cristatus is another species.

கீச்சான், see கீச்சாங் குருவி; 2. குழந்தை, infant; 3. கீச்சான் மீன். இது அழுகிய பிணத்தைத் தின்னும்; ஆயினும் ஏழை ஜனங்கள் இதை உண்பார்கள், a silvery sea-fish—Therapon puta. It feeds on carrion but is itself eaten by poor people. See கட்டைக் கீச்சான்.

கீச் சிடுதல், கீச்சுக் குரலாய்க் கத்தல், chirping as birds do; 2. கிறீச் சௌல், making a shrill screeching sound—Stridulus.

கீச்சு, குழந்தைக் குரல், the whining of a child; 2. பறவைச் சத்தம், chirp of birds; 3. கிறீச்சச் சத்தம், screeching sound of insects; 4. see கீச்சுக் கிட்டம்.

கீச்சுக்கீச் சௌல், கீச் சென்னும் ஒலிக் குறிப்பு, as in 'கீச்சு கீச்சென்று மாங்கிளி", reduplicated form of கீச்சு, which see.

கீச்சுக் கிட்டம், இரும்புக் கிட்டம், iron dross.

கீச்சுக் குரல், குயிலைப் போன்ற மெல்லிய குரல், squeaking voice resembling that of the Indian cuckoo.

கீச்சுத் தாரா, செங்கிளுவை, whistling teal—Dendrocygna awsuree alias Anas caryophyllacea.

கீச்சுப் புட்டை, குடலண்ட வாதம். குடலை வயிற்றி னுள்ளே தள்ளும் போது கூச்ச லிடுவதா லிப் பெயர், the descent of the bowels into the scrotum — Hernia. It is so called from the gurgling sound caused when it is attempted to be replaced in or restored to the abdomen.

கீடகம், புழு, worm; 2. பூச்சி, insect.

கீடக்கினம், கெந்தகம், பூச்சிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்ததா லிப் பெயர், sulphur, so called from its property of killing insects.

கீட சத்துரு, வாயு விளங்கம், worm-killer — Embelia ribes.

கீட தந்தம், விஷப் பற்களை யுடைய பிராணி, creature having venomous teeth.

கீட நாமன், கறளை, Iguana's foot vine—Cissus pedata alias Vitis pedata.

கீடப் பகை, வாயு விளங்கம், worm killer — Embelia ribes.

கீட மணி, மின் மினிப் பூச்சி, fire-fly; 2. மின் மினி, glow-worm.

கீட மா, துத்தம், white-vitriol.

கீட மாத்திரி, see கீட நாமன்.

கீடமாறி, சிறு புள்ளடி. பூச்சிகளைக் கொல்லுந் தன்மை யுடையதா லிப் பெயர், bird's foot plant — Desmodium latifolium. It is probably so called from its anthelmintic properties.

கீடம், புழு, a worm, maggot; 2. கோற் புழு, a kind of chrysalis; case-worm; 3. வண்டு, a beetle that builds a sheath-like abode for itself.

கீடம், இது ஈ, குளவி, கொசு முதலிய பூச்சிகளுக்கும், புழு, எறும்பு, ஓந்தி, ஒணான் முதலிய ஊர்வனப் பிராணிகளுக்கும் பொதுப் பெயராக வழங்கும். தமிழ் வைத்திய நூலின்படி, இது 8 வகை யாயினும், ஒவ்வொரு வகையிலும் உள்ள பல பேதங்களைக் கருதி, 77 விதங்களாகக் கீழ் கண்டபடி கூறப்பட்டுள்ளன :—

1. ஒணான்	...	4	விதம்.
2. தவளை	...	8	„
3. காட்டு ஈ	...	16	„
4. குளவி	...	6	„
5. பல்லி	...	5	„
6. கொசுகு	...	4	„
7. எறும்பு	...	6	„
8. சிலந்தி	...	28	„
		77	

மேற் கண்ட 1-7 வகை கீடங்களுக்கு, பிரதி வகையிலும் விஷ குணம் ஒன்றா யிருப்பதால், ஒவ்வொரு வகையும் விளக்கமாக சொல்ல வேண்டுவ தில்லை. ஆனால், எட்டாவதாகிய சிலந்திப் பூச்சிகள் வகையில் ஒவ்வொன்றுக்கும் உருவமும், விஷ குணமும் பேதிப்பதால் இவைகளை மாத்திரம் இங்கு தனித் தனியே எடுத்துச் சொல்ல வேண்டிய தாயிற்று.

(i) வாதச் சிலந்தி :– 1. பீதம் ; 2. குழுதம் ; 3. மூல விஷம் ; 4. இரத்தம் ; 5. சித்திரம் ; 6. சந்தானிகம் ; 7. மேசகம்.

(ii) பித்தச் சிலந்தி :—1. கபிலம்; 2. அக்கினி முகம் ; 3. பீதம் ; 4. பதுமம் ; 5. மூத்திரம் ; 6 சிவேதம் ; 7. கருப்பு.

(iii) சிலேட்டுமச் சிலந்தி 7:—1. பாண்டு, 2. இரத்தப் பாண்டு; 3. வண்டு ; 4. பிங்கம ; 5. திரி மண்டலம் ; 6. தீர்க்க கந்தம் ; 7. சித்திர மண்டலம்.

(iv) சங்கிரணச் சிலந்தி 7:—1. காசம் ; 2. அக்கினி பதம் ; 3. பொரி வண்ணம் ; 4. வைதேகி ; 5. சால மாலினி ; 6. மாலா குணம் ; 7. சுவர்ச்சசம்.

இவைகளின் விவரங்களுக்குச் சிலந்தியைப் பார்க்கவும்.

ஆயுள் வேதப்படி, கீடம் என்பது காலம், தேசம், உருவம், குணம் என 4 வகை பேதங்களோடு எண்ணிறந்த வகைக ளாயினும், நூலின்படி பொதுவாக 4 வகைகளாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொன்றிலும் உள்ள பல பிரிவினைகளைக் கருதி அடியிற் கண்டபடி 67 விதங்களாகக் கூறப்பட்டுள்ளன :—

1. வாயு கீடம்	...	18	விதம்
2. அக்கினி கீடம்	...	24	„
3. சோம கீடம்	...	18	„
4. சங்கிரண கீடம்	...	12	„
		67	

It is a common term for venomous insects as fly, wasp, mosquitoe or creatures such as worms, ants, lizards, frogs, flies etc. In Tamil Medicine, although they are classified into 8 kinds, each of which is sub-divided into several varieties consisting in all of 77 kinds as shown below :—

1. Blood-suckers	...	4	varieties
2. Frogs	...	8	„
3 Jungle flies	...	16	„
4. Wasps	...	6	„
5. Lizards	...	5	„
6. Jungle mosquitoes.		4	„
7. Ants	...	6	„
8. Spiders.	...	28	„
		77	

The different species of venomous creatures in No. 1-7 do not differ very much in their poisonous nature ; and so they were not dealt with seperately ; but in No. 8 each kind differs in shape and poisonous principles ; and so the 28 kinds are according to Tamil Medical Science, brought under 4 groups, each consisting of 7 kinds as mentioned above. They will be dealt with exhaustively under சிலந்தி, which see.

According to Ayurveda, the term (கீடம்) refers to poisonous créatures such as worms, insects, lizards, reptiles etc. of innumerable kinds according to time or season, place, shape and quality, but they are all classified under 4 classes, each of which being sub-divided into different varieties consisting in all of 67 kinds as shown below :—

1. Those causing acute pain ... 18 varieties
2. Those causing blisters with burning sensation ... 24 „

3. Those causing boils with little pain ... 13 varieties
4. Those causing diseases ... 12 „

67

கீடாரி, கந்தகம், sulphur.

கீட விஷம், புழுப் பூச்சிகள் கடிப்பதனு லேற்பட்ட விஷம், the venom caused by the bite of small insects.

கீடாதித் தைலம், புழுப் பூச்சிகளை ஆதியாகக் கொண்டு தயாரிக்கு மோர் வகைப் பூசுதைலம், an ointment for external application prepared from worms, insects, reptiles etc.

கீடிமா, see கீடமா.

கீதந்திரம், திப்பிலி மூலம், root of long-pepper.

கீதம், மூங்கில், bamboo ; 2. வண்டு, beetle.

கீதவம், see ஊமத்தை.

கீதாக் குறி, உடம்பின் மெலிவு, emaciation.

கீதாந்தரன், see அறுகதம்.

கீதி, see கருங் காலி.

கீத்துருணி, கேந்திப் பூ, a flower.

கீநாசம், ஓர் குரங்கு, a kind of monkey.

கீரணம், விழுங்கல், swallowing.

கீரநாண் மயிர், see உள்ளி.

கீர நாயகம், பங்கம் பாளை, see ஆடு தின்னாப் பாளை.

கீரந்திகம், see கீதக்கிரம்.

கீரம், கருங் கிளி, black parrot — Palaeornis columboides ; 2. கிளி, parrot ; 3 பால், milk ; 4. மழை நீர், rain-water.

கீரி, கள்ளி, milk-spurge ; 2. கீரிப் பிள்ளை, mungoose—Indian ichenumon ; 3. சிருக்கொன்றை, common cassia — Cassia fistula ; 4. கரு வாசி, Ceylon tea — Elaeodendron glaucum ; 5. சிறிய இலைகளோடு கூடிய ஓர் மரம், very small-leaved Kambala tree—Pemphis acidula ; 6. see கீரி புரண்டான் ; 7 செட்டி விக்க மரம், Indian mast tree—Lythrum pemphis.

கீரி கன்னணி, வெண் காக்கணம், white mussell-shell creeper — Clitorea ternatea (albiflora).

கீரிகம், வேப் பிலை, leaves of margosa tree —Azadirachta indica.

கீரி நங்கை, வேப்பிலை நங்கை, a species of chilly.

கீரி நங்கை, சிறிய நங்கை, snake-root ; small nangay—Polygala glabra.

கீரி நாயகம், see ஆடு தின்னாப் பாளை ; 2. நஞ்சறுப்பான், country ipecacuanha — Tylophora asthmatica.

கீரி நோய், குடலிற் தங்கிய கீரிப் பூச்சிகளினுல் குழந்தைகட்கு ஏற்படும் நோய், a disease in children arising from worms in the intestines.

கீரிப் பல், கூர்மையான சிறு பல், a small sharp tooth like that of a mungcose.

கீரிப் பாம்பு, வயிற்றி லுள்ள ஓர் பூச்சி, the common round-worm in the intestines—Ascaris Lumbricoides ; 2. வயிற்றி லுள்ள நாடாப் பூச்சி, tape-worm.

கீரிப் பிள்ளை, இது அழகான பிராணி. உடம்பு முழுதும் மயிர் நிறைந்ததாயும், வால்மயிர் அடர்த்தியாயும், கூச்சாயும், சுமார் ¾ அடி உயரமும், 1½ அடி நீளமும் உள்ளது. இது பாம்பு கடித்தால் இறந்து விடும். ஆயினும், அதன் துரிதத் தன்மையாலும், மயிர் சிலிப்பு தலினுலும் தன்னைக் கடிக்காதபடி காப்பாற்றிக் கொள்ளும். பாம்புகளுக்கு இதைக் கண்டால் பயம். இது பாம்பைக் காணில் உறுமிக் கொன்று விட்டு, பாம்பின் விஷத்தை நீக்கிக் கொள்வதற்காக கீரிப் புரண்டான் என்ற செடியில் போய்ப் புரளுவதாகக் கருதப்படும், mungoose—Viverra mungo. It is a well-defined genus of animals with harsh bristled hair, long tails, thick at the base and tapering to wards the end. It is ¾ ft. high and 1½ ft. long. It dies when bitten by a snake ; but owing to its extreme agility and its stiff-hair which bristles at the time it evades being bitten. It is a dread to all snakes and growls with anger at seeing them. It is usually found rolling on the plant called Indian snake root just to free itself from the effects of snake-poison.

கீரிப் புரண்டான், கீரிப் பூடு. இது சுமார் ½-1 அடி உயரம்; பூ வெண்மை ; வேர் சுமார் 6 அங்குல நீளம் ; மிக்கக் கசப்பு ; பாம்புக் கடிக்கும், நாய்க் கடிக்கும் மிக்க உபயோகமானது. பாம்பைக் கடித்த கீரி அதன் விஷத்தைப் போக்க இதில் புரளுவதாகச் சொல்லப் படும். ஆகவே இதற்கு இப் பெயர், Indian snake root — Ophiorrhiza mungos. It is a perennial plant ½-1 ft. high ; flowers white and root about

6 inches long ; very bitter, and used as a tonic. A useful remedy against the bites of venomous snakes and mad dogs. It is so called because of the belief that mungoose soon after killing the snake, resort to this plant and rolls over it to get rid of the snake's poison and hence the name.

கீரிப் பூச்சி, சிறு குடலில் உற்பத்தியாகும் சிறு பூச்சி, intestinal worm ; 2. குழந்தை வயிற்றி லுள்ள பூச்சி, eel-worm especially of children—Ascaris.

கீரிப் பூடு, see கீரிப் புரண்டான்

கீரி மரம், செட்டி விக்க மரம், see கீரி.

கீரி யுள்ளான், ஓர்வகை யுள்ளான் குருவி, a variety of snipes. See உள்ளான்.

கீரிட்டம், மாங்காய், mango — Mangifera indica.

கீரு கன்னி, வெள்ளைக் காக்கணம். இதன் பூ குழந்தைகளின் சுவாசாசய ரோகங்களுக் குத வும், white mussell-shell creeper — Clitoria ternatea (albiflora). The flowers are useful in bronchial diseases of children.

கீரு கம்பளி, பீர்க்கு, sponge-gourd — Luffa acutangula.

கீருடன் மூலி, துளசி, holy-basil — Ocimum sanctum.

கீருதம், செம் முருங்கை, red Indian laburnum — Cassia marginata.

கீரை, இலைக் கறிப் பொது. அனேகமாய் செடி கொடி, மரம் இலைகளின் இலை வகைகளைக் கறியாகவும், கூட்டாகவும் செய்வதுண்டு. சிலவகைகள் கஷாய மிறக்குவதற் குபயோக மாகும். தமிழ் வைத்தியத்தில் மற்றும் சில வகைகள், உலோகங்களைப் புட மிடுவதற் குதவும். கீரை யினம் என்றே சில செடிகளைச் சொல்வதுண்டு. அவைக ளெல்லாம் கறிக்கு மாத்திரந்தான் உபயோகப்படும். இக் கீரை யினங்கள், சாதாரணமாய் உடம்பி லுள்ள நானாவித வியாதிகளைப் போக்கி, மலச் சிக்கலை அறுத்து, உடம்பிற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தமிழ் தேசத்தில் வழங்கும் கீரை யினங்கள் எத்தேசத்திலும் இராது. ஏனெனில், உணவில் மாத்திரம் மல்ல, மற் றும் வாதம், வைத்தியம், யோகம் இவை களிலும் இது மிக்க உபயோகப் படும். தமிழ் பதார்த்த குண சிந்தாமணி பிரகாரம் முக்கிய மான கீரை வகைகளை அடியிற் குறிப்பிக்கப் பட்டிருக்கின்றன, edible greens. It is a term synonymous with greens of all sorts and eatable leaves of trees. Most greens are made into curries and other dishes. Some are used for preparing decoctions ; and some are made use of in the calcination of metals according to the Tamil Siddha Medicine. Some of the plants are classified as Amaranthus genus as their leaves are invariably edible; and as such, they are sold as culinary vegetables in the Indian markets. These vegetable greens, are considered to have remarkable virtues of curing many ailments being a tonic, stomachic, diuretic, anthelmintic etc. and of removing constipation, inflammations, irritations and other complaints ; and they are therefore generally conducive to health. The use of leaves in diet is not so common in other countries as it is found especially in the Tamil country. The following however are, according to the Tamil Materia medica, the most common culinary vegetables indigenous or introduced from elsewhere for which their corresponding English names are given as far as it is ascertainable :—

1. அறைக் கீரை, garden spinach — Amaranthus gangeticus alias A. tritis.
2. குப்பைக் கீரை, dung-hill green — Amarantus polysohyus.
3. செந் தண்டுக் கீரை, red spinach — Amarantus atropurpureus.
4. சிறு கீரை, field spinach — Amaranthus campestris.
5. குமட்டிக் கீரை, a kind of greens — Celosia nodiflora.
6. கோழிக் கீரை, cook's green — Portulaca oleracea.
7. தவிப்புக் கீரை, a pot-herb — Cleome monophylla.
8. பருப்புக் கீரை, dholl greens — Chenopodium album.
9. பறட்டைக் கீரை, Justicia Madurensia.
10. பிண்ணாக்குக் கீரை, oil-cake greens — Melochia corchorifolia.
11. முள்ளிக் கீரை, prickly greens — Amaranthus spinosus.

12. வள்ளைக் கீரை, white greens — Amaranthus polygamus.

13. அகத்திக் கீரை, Sesbania grandiflora (leaves of).

14. முன்னைக் கீரை, Premna integrifolia.

15. புளியாரைக் கீரை, sour-sorrel — Oxalis corniculata.

16. புளிச்சைக் கீரை, Indian sorrel — Hibiscus sabdariffa.

17. முளைக் கீரை, young green—Amaranthus.

18. புளிச் சிறுகீரை, same as No. 15.

19. பொன்னாங் கண்ணி, mary-gold verbesina—Illecebrum sessile.

20. கரிசலாங் கண்ணி, eclipse-plant—Eclypta prostata.

21. ஆரைக் கீரை, Pseudoferns — Marsilea quadrifolia.

22. பசலைக் கீரை, common spinach — Spinacea oleracea.

23. சோயிக் கீரை, sulphur-wort—Anethum graveolens.

24. வெந்தயக் கீரை, fenugreek greens.

25. மணித் தக்காளிக் கீரை, greens of fox-grape—Solanum nigrum.

26. காசினிக் கீரை, garden endive — Chicorium endivia.

27. சாறுணைக் கீரை, another variety.

28. புதினாக் கீரை, Indian pepper-mint —Mentha arvensis.

29. கறி வேப்பிலை, curry-leaf—Murraya koenigii.

30. பூக் கீரை, cook's comb greens— Amaranthus paniculata.

31. முக்குளிக் கீரை, mukkuli green— Portulaca pilosa.

32. பலவகைக் கீரை அல்லது கலவைக் கீரை, mixed edible greens.

33. தண்டுக் கீரை, common spinach— Amaranthus blitum.

34. தூதுவளைக் கீரை, prickly shoonday—Solanum trilobatum.

35. பாற் சோற்றிக் கீரை, see அம்மான் பச்சரிசி.

36. பண்ணைக் கீரை, pea-cook's crest— Celosia cristata.

37. காய்ச்சகரைக் கீரை, same as No. 16.

38. மான் கீரை, Amaranthus angustifolius.

39. துத்திக் கீரை, Indian mallow — Abutilon indicum.

40. விழுதிக் கீரை, Cleome fruiticosa (leaves of).

41. முருங்கைக் கீரை, அல்லது காய்க் கீரை, leaves of drum-stick tree— Moringa pterygosperma.

42. பொடுதலைக் கீரை, creeping vervain —Lippia nodiflora.

43. முசுமுசுக்கைக் கீரை, rough bryony —Mukia scabrella.

44. சிவப்புத் தோட்டக் கீரை, rose spinach—Amaranthus caudatus.

45. குள்ளத் தண்டுக் கீரை, stunted spinach; parrot spinach—Amaranthus viridis.

46. சிறு பசலைக் கீரை, small Indian purslane—Portulaca quadrfida.

47. உமரிக் கீரை, Indian salt-wort— Salsola indica.

48. மணலிக் கீரை, a bitter kitchen herb —Gisekia pharnaceoides.

49. சுக்கங் கீரை, country sorrel — Rumex vesicarius.

50 வல்லாரைக் கீரை, Indian pennywort—Hydrocotyle asiatica.

NOTE.—The term கீரை, refers to greens of all sorts, but specially to those eaten as vegetables. Most greens are prepared by the Dravadians of S. India into curries and other dishes. A list of all the plants taken as vegetables would include nearly the whole of the weeds, except those absolutely poisonous, that are to be met with in S. India.

In Tamil Materia Medica, medical virtues are ascribed to all the edible greens which are of course selected by men as their diet according to the nature of their own constitutions irrespective of taste.

கீரைக் கலவை, கலவைக் கீரை, a mixture of several greens.

கீரைக் காய், வெள்ளரிக் காய், cucumber— Cucumis sativus.

கீரைக் கும்மட்டி, குமட்டிக் கீரை, a variety of greens—Celosia nodiflora. See கொம் மட்டிக் கீரை.

கீரைச் சிறுமி, சிறு கீரை, field spinach—Amarantus campestris.

கீரைத் தண்டு, தண்டுக் கீரை, garden green —Amarantus blitum.

கீரைத் தண்டு போலாதல், மரணக் குறியாக உடம்பு இல்லிட்டு போதல், body becoming chill as a symptom of death.

கீரைப் பாம்பு, see கீரிப் பாம்பு.

கீரைப் பூச்சி, குடலில் உற்பத்தியாகும் ஓர்வித நாகப் பூச்சி, a round worm in the intestines; seat worm—Oxyuris vermicularis.

கீரை மீன், ஓர் சிறிய மீன், a small fish.

கீர்த்தி, குடசபாலை, conessi bark — Holarrhena antidysenterica.

கீர்த்திக் கொடி, ஈசுர மூலி, Indian birthwort—Aristolochia indica.

கீர் நாள மயிர், see கீர நாண் மயிர்.

கீர்வாண வைத்தியம், கீர்வாண பாஷையில் எழுதப் பட்ட தேவ சிகிச்சையைப் பற்றிக் கூறும் ஓர் வைத்திய நூல், a medical treatise written in Sanskrit on the medical treatment of the Devas of the celestial regions.

கீலகம், பொருத்து, joint; 2. சிம்பு, a splint for confirming a broken bone; 3. ஊசி முகக் கட்டி, a kind of tumour having a face in the form of a pin-head.

கீலக வெட்டை, உடம்பின் பொருத்துகளை இறுத்துப் பிடிக்கும் ஓர் வெட்டை நோய், stiffness of the joints said to be due to the collection of a morbid fluid in the joints from venereal causes — Gout; 2. தாபிதத்தினால் பொருத்துகளுக்குச் சீழ் கொள்ளாமலே சிவந்து காணும் ஓர்வகை மேக நோய், a venereal disease characterised by non-suppurative inflammation with considerable redness of the joints; 3. மிகு வெட்டை, intense venereal heat.

கீல காலகம், முடக்கிப் பூடு, prickly buckthorn—Scutia indica.

கீ லசையாமை, கீல் பிடிப்பு, stiff-joint.

கீலம், பிசின், resin; 2. பிளவு, slash; 3. குதத்தில் உண்டாகும் பிளவை, fissure of the anus; 4. வெட்டு, cutting; incision; 5. உப்பு பிடிப்பதற்காக மீனை இரண்டாகப் பிளத்தல், making incisions in fish for salting; 6. முழங்கை, elbow; 7. ஓர் கழலை, a kind of tumour; 8. பிண்டக் குறுக்கம் the crosswise position of the foetus impeding delivery; 9. அணு, a minute particle; 10. முழங்கையால் இடித்தல், a blow or a knock with the elbow.

கீலம் கீலமா யறுத்தல், கூறு கூறாய் அறுத்தல், making several incisions alternatively in a fish for pickling, salting etc.

கீலாலம், இரத்தம், blood; 2. காடி, vinegar; 3. நீர், water; 4. தேன், honey; 5. தித்திப்புக் குடி நீர், a sweet beverage.

கீலா லயம், தோதகத்தி, Malabar blackwood—Dalbergia latifolia.

கீலெண் ணெய், தாரிலிருந்து வடிக்கும் எண்ணெய், a resinous oil obtained from tar —Pitch.

கீல், நிலக்கரியிலிருந்து வாலை ரூபமாக வடித்தெடுக்கும் ஓர்வகைப் பிசின் போன்ற கரிய வஸ்து. இதைத் தான் தமிழில் கீல்தார் எனச் சொல்வதுண்டு, a thick, black, viscid, opaque liquid which condenses in the series of pipes known as condensers, when gas is distilled from coal—Coal-tar; Pix liquida.

NOTE.—Tar (கீல்) is obtained generally by burning pine and fir trees in a close smothering heap, with a channel through which the tar exudes; whereas pitch is the product of Cedrus deodara and Pinus longifolia. It is the residuum of tar inspissated by heat or boiled down to dryness. Black dammer is here used for pitch.

கீல், உடற் பொருத்து, any joint in an animal body; 2. கிழி, to tear; 3. எலும்புகள் ஒன்றோடொன்று கூடுமிடம், joints of the bones.

கீல் கீலாய், சந்து சந்தாய், joint by joint.

கீல் சவ்வு, மூட்டுகளில் இருக்கும் சவ்வு, synovial membrane.

கீல் நெட்டை, கீலில் உண்டாகும் நெட்டைச் சத்தம், crackling of the joints.

கீல் நோய், கீலுக்கு ஏற்படும் பலவித நோய்கள், diseases in common of the joints; arthritis.

கீல் நோவு, கீல் வலி, pain in the joints.

கீல் பிடிப்பு, see கீல் வாதம்.

கீல் வலி, கை கால் பொருத்துகளில் தாபிதத்தினால் ஏற்படும் வலி, pain in the joints through inflammation.

கீல் வாதம், மூட்டுகளிற் காணும் நோய், an affection of the joints; 2. சந்து வாதம்; முழங்கால் முதலிய இடங்களில் பெரிய கீல்களைச் சுற்றிக் கொண்டு தளரா யிருக்கிற சவ்வுக்குக் காணும் வாத நோய், a disease in which the fibrous structures around the joints are affected — Rheumatoid arthritis; 3. மூட்டுகளிற் காணும் தளர்ச்சி, looseness of the joints.

கீல்வாத ரோகம், கீல்களில் அல்லது பேசிகளில் தாபிதங் கண்டு, வெண்ணிறமும், வழுவழுப்புமான ஓர் வகைத் திரவம் மூட்டுகளில் தங்கி, அதனால் அவை வீங்கி விறைத்து, அவற்றின் இயக்கத்தைக் குறைக்கு மோர் வாத நோய். இதுவே பிரமேகத்தினா லுண்டாகிப் பிரமேக கீல்வாத மெனப்பெயர் கொள்ளும், a kind of rheumatism in which the muscular fibres are inflamed and a white fluid (synovial) collected is deposited deep into the joints. It is characterised by swelling and stiffness rendering the movements of the part difficult—Muscular rheumatism. If this condition is due to gonorrhea it is called Gonorrheal rheumatism.

கீல் வாயு, அழற்சியினால் பொருத்துகளில் வலியையும், வீக்கத்தையு முண்டாக்கும் நோய், painful inflammation with swelling affecting the muscles and joints of the human body—Articular rheumatism.

கீல் வியாதி, see கீல் நோய்.

கீல் வீக்கம், பொருத்து வீக்கம், swelling of the joints; 2. பொருத்து எலும்புகளி லுள்ள சவ்வுக் கேற்படும் தாபிதத்தினால் காணும் வீக்கம், swelling of the joints as a result of the inflammation of the synovial membrane — Synovitis.

கீழங்கம், உடம்பின் அடிபாகத் துள்ள அவயவங்கள், the organs of the lower part of the human body.

கீழங்க வாதம், தொடை வாதம். இது வாயுவினால் தொடை நரம்புகளை அனுசரித்து தொடை முதல் புறங்கால் வரை வலி கொண்டு நடக்க முடியாமற் செய்யும் நோய், a disease in which the two great nerve-trunks emanating from below the upper extremity of the thigh and reaching down to the bottom of the in-steps become stiff with Vayu (wind) thereby depriving the lower extremities of the power of locomotion—Sciatica. See கிருத்திர வாதம்; 2. உடம்பின் கீழ்ப் பகுதிகளி லுள்ள உறுப்புகளிற் காணும் நோய்கள், diseases in general of the organs in the lower region of the body.

கீழங்க வாயு, உடம்பின் கீழ்ப் பகுதியி லுள்ள உறுப்புகளிற் காணும் வாயு, inflammation of the organs in the lower part of the body; 2. உடம்பின் கீழ்ப் பகுதியிற் காணும், பாரிச வாயு, paralysis of the lower portion of the body—Paraplegia.

கீழங்க வெலும்பு, உடம்பின் கீழ் பாகத்திய உறுப்புகளின் எலும்புகள், bones of the organs in the lower region of the body.

கீழண்டம், பீசத்தி லுள்ள விதை, one of the two seeds or glandular bodies situated in the scrotum—Testicle.

கீழறுத்தல், ஆழ கத்தியா லறுத்தல், cutting deeply as opposed to மேலறுத்தல், cutting superficially; 2. உள்ளாகவே சதையை அரிக்குதல், a disease in which germs burrow under the surface of the skin as in carbuncles or ulcers.

கீழறுப்பான், இராச பிளவை, King's boil—a kind of carbuncle marked by excavations or cavities under the skin.

கீழறை, சதையின் கீழுள்ள கண்ணறைகள், the cells under the surface of the skin; cells of the tissue.

கீழா நெல்லி, கீழ்க்காய் நெல்லி. இது ஈரப்பான எல்லா நிலங்களிலும் சாதாரணமாய் முளைப்பதைக் காணலாம். இதன் இலை, பூக்கள் மிகச் சிறியது; வேர் வெண்மையாயிருக்கும்; இலை கசப்பு; இதன் வேரும், இலைகளும், சிறு முளைகளும் மருந்து முறையில் மிகவும் உபயோகமானவை. கட்டிப் போன மூத்திரத்தை வெளிப்படுத்தவும், காயத்தினின்று வடியும் இரத்த வொழுக்கை நிறுத்தவும், அதிசாரத்தைப் போக்கவும், உபயோகமாகும். இச் செடியின் வேர், இலை இவைகளை நிழலில் உலர்த்திச் சூரணம் செய்து வெந்நீரில் கலந்துட்கொள்ள, உடம்பிற்கு ஆரோக்கியத்தைத் தரும். இதைக் கற்ப மூலிகையாகவும் கொள்ளலாம். உலர்ந்த மூலிகையைக் கஷாயமாகக் காய்ச்சி, உட்கொள்ள சீதபேதி குணமாகும்; பித்த மயக்கம் தீரும்; வேரைப் பசும் பால் விட்டரைத்துக் காலை மாலை கொள்ள காமாலை தீரும். காய்ச்சித் தலைமுழுகக் குளிர்ச்சியைத் தருவது மல்லாமல்; உள் சுரம், அழலை,

கண் ணெரிச்சல், கை கால் எரிச்சல், நடுக்கல் இவைகள் போம். இதன் சமூலத்தைப் பசும் பாலில் கொடுக்க, மகோதரம், மஞ்சட் காமாலை, அதிசாரம் வசப்படும். இச் செடியில் சிவப்பு கீழா நெல்லி என்னும் ஒருவகை யுண்டு. ஆனால் இதில் மிக்க வித்தியாசமில்லை, Indian phyllanthus; niruri — Phyllanthus niruri. This herb is very common in swampy soils. Its leaves and flowers ary very small; root is white and leaves are bitter. Root, leaves and young shoots are all used medicinally as deobstruent, diuretic and astringent; root and leaves either as powder or decoction used in Rejuvenation, jaundice, and dysentery. Oil in which the whole plant is boiled and anointed on the head before having a bath is said to cure internal fever, bodily heat, burning of the eyes and the extremities, tremor etc. The whole plant mixed with milk is prescribed for jaundice, dropsy, diarrhoea etc. There seems to be another redvariety of many-leaved phyllanthus—Phyllanthus polyphyllus, but there is not much difference between these.

கீழா நெல்லித் தைலம், கீழா நெல்லி சமூலத்துடன் மற்றக் கடைச் சரக்குகளை நல்லெண்ணெயில் சேர்த்து இறக்கிய தலை முழுக்குத் தைலம், a medicated oil for anointing the head, prepared by boiling gingelly oil mixed with the niruri plant as a chief ingredient along with other appropriate bazaar drugs. See கீழா நெல்லி.

கீழிதழ், கீழுதடு, under-lip; lower-lip.

கீழி றெப்பை, கண்ணின் கீழ் இருக்கும் இரப்பை அல்லது கண் மடல், the lower eye-lid.

கீழிரைப் பை, கீழ் வயிறு; abdomen; 2. அடிவயிறு, hypogastric region; the lower and front portion of the belly.

கீழுதடு, see கீழிதழ்.

கீழுப்பு, அமுரி யுப்பு, uric salt; 2. பாறையுப்பு, rock-salt.

கீழுறுப்பு, உடம்பின் கீழ்ப் பாகத்திலுள்ள உறுப்பு, the organ or organs of the lower region of the body: 2 ஆண் அல்லது பெண் குறி, the genital of the male or female; 3. மல வாயில், the anus.

கீழோசகம், நஞ்சு முறித்தான், see அவுரி.

கீழ், கீழ்ப் பக்கம், the lower part; 2. கீழே, down; 3. ஆசனம், the anus.

கீழ்க் கடை, சென்ற நாட்கள், past days.

கீழ்க் கணு, காலின் கீழாக வுள்ள கணு அல்லது காற் பொருத்து, the joint which connects the foot and the leg—Ankle.

கீழ்க் கணு வெலும்பு, காற் கணு வெலும்பு, ankle-bone.

கீழ்க் கண், கண்ணின் கீழ்ப் பக்கம், (*literally*) the lower part or portion of the eye; 2. see கீழ்க் கண் பார்வை.

கீழ்க் கண் பார்வை, கீழ்ப் பார்வை, down look; a squint or awry look; looking askance.

கீழ்க்கது, கட்டியின் அடி பாகம், the bottom of an abscess or wart; 2. கீழ் வெடிப்பு, the fissure or rupture underneath the skin; internal rupture.

கீழ்க் கதுப்பு, கன்னத்துக் கீழ், the lower part of the cheek.

கீழ்க் கதுவாய், கட்டியின் அடி பாகத்தில் உண்டாகும் துளை, the opening at the bottom of an abscess; 2. வெடிப்பின் வாய், the face of a fissure.

கீழ்க் கருப்பை, கருப் பையின் கீழ்ப் பாகம் அதாவது கழுத்து, the neck or the lower part of the uterus—Cervix uteri.

கீழ்க் கரையாறு, கீழ்க் கடற்கரையில் உற்பத்தியாகும் ஆறு கடைச் சரக்கு, அவையாவன:— கல்லுப்பு, பொட்டிலுப்பு, இந்துப்பு, அப்பளா காரம், பலகறை, கடல் நுரை, the six bazaar drugs commonly found in the Eastern sea-coast viz:— sea-salt, salt-petre, rock-salt, sub-carbonate of soda, cowry and sea-froth.

கீழ்க் கலிசை, அடி வயிற்றி லேற்படும் கலிசை abdominal ascites.

கீழ்க் கலிசை மகோதரம், அடி வயிறு வீங்கி மேல் வயிற்றில் கற்போல் இசிவு உண்டாகி, மல சலம் தடைபட்டு, பெரு மூச்சுக் காணும் ஓர்வகை மகோதரம், (யூகி.முனி. 800.) abdominal dropsy characterised by swelling of the abdominal region, tightness of the upper region, obstruction to the passage of faeces and urine, and hard-breathing.

கீழ்க் காது, கன்ன பாளி, lobe of the ear; 2. காதுக்குக் கீழ் அல்லது அடிப் புறம் காதடி, the portion underneath or below the ear; 2. காதின் கீழ் பாகம், lobe of the ear.

கீழ்க்காய் நெல்லி, see கீழா நெல்லி.

கீழ்க் காற்று, அபான வாயு, wind in the intestine escaping through the anus.

கீழ்க்குகா நாளம், கீழ் பாகத்திய உறுப்புகளின் இரத்தத்தை இருதயத்திற்குக் கொண்டு போகும் பெரிய இரத்தக் குழாய், the large trunk which transmits the blood from the lower regions of the body to the heart —Inferior vena cava.

கீழ்க் குரல், அடிக் குரல், voice rising from the lower larynx; 2. மெதுவான குரல், feeble voice.

கீழ்க் குரல் வளை, குரல் வளையின் அடிப் பக்கம், the lower or the hinder portion of the larynx.

கீழ்க் குறண்டி, கரப்பான் பூடு. இதன் அடி பாகம் முள் அடர்ந்ததாயும், பூக்கள் சிறி தாயும், சிகப்பு நிறமாயும் உள்ளவை, carpaung shrub—Lepidagathis cristata. It is a tree with spikes; flowers, small and rose-coloured.

கீழ்த் தாடை, அடித் தாடை, lower-jaw; 2. see கீழ்த் தாடை யெலும்பு; 3. மோவாய்க் கட்டை, the point of the under-jaw—Chin.

கீழ்த் தாடை யெலும்பு, கீழ் வரிசைப் பற்கள் நிறைந்த கீழ்வாய் எலும்பு, the lower-jaw in which the lower teeth are fixed; 2. வில்போல் வளைந்த மோவாய்க் கட்டை யெலும்பு, bone of the chin bent like arrow.

கீழ்த் தோண்டி, கழுதை விதை, bloody drop ordure tree—Sterculia guttata.

கீழ் நோக்கம், கீழ்ப் பார்வை, downward look; 2 உள் நோக்கம், (*In Philosophy*) looking within—Introspection.

கீழ் நோக்கல், கீழ் முகமாய்ச் செல்லல், taking a downward course in its discharge as urine, semen; 2. கீழ் முகமாய்ப் பார்த்தல், seeing with the face downwards; 3. கீழே பார்த்தல், looking down; 4. கீழ்ப் பார்வை, downward look; looking askance; 5. பேதி யாதல், having motions; purging.

கீழ் நோக்கி, நேர் வாளம், true croton oil plant — Croton tigilium; 2. அபான வாயு, wind in the intestines passing down or escaping through the anus.

கீழ் நோக்குதல், see கீழ் நோக்கல்; 2. தான் தனக்குள்ளே பார்த்தல், looking into oneself; the act of looking inwardly; 3. இறத்தல், dying; 4. நாடி யிறங்குதல், pulse going down or sinking.

கீழ்நோக்கு நாள், மரணப் பொழுது, time or moment of death.

கீழ்ப் பக்கம், கீழாக வுள்ள பாகம், the lower part; 2. உள் பாகம், the under or inner side of a thing; 3. அடிப் பாகம், the bottom portion; the under surface.

கீழ்ப் பல், கீழ் வரிசைப் பல், the lower set of teeth.

கீழ்ப் பல் முளைத்தல், குழந்தைகட்கு முதலாகப் பாற் பல் முளைத்தல், the dentition of stomach tooth in children.

கீழ்ப் பாடு, கீழ்ப் பக்கம், which see.

கீழ்ப் பாதி, உடம்பின் கீழுள்ள பாகம், the lower region of the body; 2. உடம்பின் கீழ் பாகத்தில் ஒரு பாதி, one-half of the lower region of the body said of disease affecting such parts as paraplegia and hemiplegia.

கீழ்ப் பாய்ச்சல், மலமூத்திர விறக்கம், the descent of feces and urine; running down of excretions.

கீழ்ப் பாய்ச்சி, ஆசனத்தின் வழியாய் நீர், உணவு அல்லது மருந்தைப் பாய்ச்சுங் கருவி, a clyster employed for conveying water, nourishment or medicine through the rectum—Enema.

கீழ்ப் புரைச் சவ்வு, கருப்பாசயத்தில் பிரசவம் வரையில் கருவைச் சுற்றிக் கொண்டிருக்கும் காதப்பை, a temporary coat surrounding the ovum produced at the period of conception and thrown off from the uterus after parturition — Tunica decidua reflexa.

கீழ்ப் புறம், see கீழ்ப் பக்கம்.

கீழ் முக்கன், see கற்றுழை.

கீழ்வகைப் புணர்ச்சி, பிராணிகளின் புணர்ச்சி, the copulation of animals; 2. மிருகங்களைப் போற் புணருதல், having sexual intercourse with women like animals; 3. கீழ் வகைப் பிராணிகளுடன் புணருதல், man's intercourse with lower animals—Bestiality.

கீழ் வயிறு, அடி வயிறு. இது கீழ் விலாவிற்கு கடுவாகவும், நாபித் தானத்திற்கு கீழாகவும், முன்னந் தண்டிற்குப் பின்னாகவு முள்ளது, abdomen. It is the large inferior cavity of the trunk extending from the pelvic cavity to the diaphragm and bounded in front and at the sides by the lower ribs and the abdominal muscles and behind by the vertebral column.

கீழ் வயிற்றுக் கட்டு, கீழ் வயிறு தழுகாமற் படிக்கு இறுகக் கட்டும் கட்டு, tight abdominal bandage used to prevent abdomen from hanging down (worn by males); 2. பிரசவத்திற்குப் பிறகு கருப்பை சுருக்குவதற்காகவும், தழுகாமற் படிக்கும் வயிற்றை இறுகக் கட்டுதல், (*In Midwifery*) bandage after confinement to insure contraction of the womb and also to keep it in position.

கீழ் வயிற்று பாகம், வயிற்றின் அடி பாகம், the lower abdomen — Abdominal region; 2. அடி வயிறு, the lower part of the belly —Abdomen.

கீழ் வாயு, see அபானவாயு; 2. காலின் கீழ் புறத்தில் காணும் வாயு inflammation of the joints of the leg; 3. கால் பிடிப்பு, rheumatism of the joints of the leg.

கீழ் வாய், தாடை, chin: lower jaw; 2. வாயின் கீழ் பாகம், pharynx; 3. பெண் குறி; குய்யம், the genital of a female—Pudendum muliebre; 4. ஆசன வாய், anus.

கீழ் வாய் நெல்லி, see கீழா நெல்லி.

கீழ்வாய்ப் பாய்ச்சி, யோனித் துவாரத்தைக் கழுவிச் சுத்தப் படுத்த உபயோகிக்கும் ஓர் கருவி, an instrument used for effecting a douche to the vagina.

கீழ் விலா வெலும்பு, சிறிய விலா வெலும்பு, short-rib.

கீளி, ஓர்வகைக் கடல் மீன், a sea-fish; mullet — Upenius macronema.

கீறந்தி, see கச்சோலம்.

கீறல், கிழித்தல், tearing; 2. பிறாதல், scratching.

கீறிக் காயப் போடல், கீறிக் காய வைத்தல், slitting and drying in the sun as is done with fish or meat.

கீறிப் பார்த்தல், அறுத்துச் சோதித்தல், dissecting; 2. சலாகை யிட்டுப் பார்த்தல், to examine by probing; examining with a probe.

கீறிப் பார்த்தல், கத்தியால் அறுத்துச் சோதித்தல், dissecting.

கீறி யாற்றல், கட்டி, சிலந்தி, முதலியவைகளை அறுத்து ஆற்றுதல், opening an ulcer or abscess and then healing it up.

கீறி யுப்பிடல், மீனைப் பிளந்து உப் பிடல், slitting and salting fish; 2. உடம்பில் கத்தியால் அறுத்து உப்பிட்டுச் சுடுதல், making an incision and applying caustic.

கீறி வைத்தல், கத்தியா லறுத்து திறந்தபடி வைத்தல், cutting and leaving anything open; 2. கத்தியாற் பிளந்து மருந்து வைத்தல், opening with a knife and inserting medicine; 3. சத்திரம் வைத்தல். operating; 4. காயம் படுதல், inflicting injury.

கீறு, பிளப்பு, incision; cut; 2. துண்டம், slice; 3. see கீறுதல்.

கீறுதல், see கீறல்; 2. வகுத்துப் போடல், cutting into slices; கத்தியால் பிளத்தல், making an incision with a knife.

கீற் கட்டி, see கீல்.

கீற்று, துண்டம், slice; 2 மாகதக் குற்றம், flaw in diamond; 2. பிளவு, fissure.

கீற்றுக் கால், வெடிப்புக் கால், cracked foot; 2. வெட்டுண்ட கால், chopped foot.

கீற்று நோய், உடம்பிற் சதை பிளந்து காணும் ஓர் மேக நோய், a venereal disease characterised by fissures.

கீற்று வெடிப்பு, கத்தியால் கீறியதைப் போன்ற வெடிப்பு, cleft like an incised wound.

கீனம் பிடித்தவன், கிறு துன்னவன், a whimsical fellow; 2. கிறுக்கன், crazy or cranky fellow.

கீனு, சீமை காண்டா மிருக விரத்தம், kino.

கீனு கூட்டுச் சூரணம், சீமை காண்டா மிருக விரத்தத்தோடு அபினி, இலவங்கப் பட்டை முதலிய பலவகைச் சரக்குகளைச் சேர்த்துத் தயாரித்த சூரணம். இது குலையைப் பிடிக்கும், வயிற்று வலிக்கும், எதிர்க் களிக்கும் குன்ம நோய்க்கும் உபயோகப்படும், compound powder of kino mixed with other bazaar drugs such as, opium, powdered cinnamon bark etc, as chief ingredients—Pulvis kino compositus. It is a very useful preparation prescribed for pyrosis and dyspepsia attended with increased secretion.

கீன்றல், கிழித்தல், tearing.

குகம், குதிரை, horse; 2. மலைக் குகை, mountain cave; 3. தபசிகள் வசிக்கும் குகை, habitation of hermits.

குகரண சாஸ்திரம், see குகுரண சாஸ்திரம்.

குகரணம், see குகுரணம்.

குகரப் பல், குடையான அல்லது குழிப் பல், hollow tooth; tooth with a cavity.

குகரம், குடைவறை, cavern; 2. குரல் வளை, larynx; 3. மலைக் குகை, cavern; 4. குடைவறை, subterranean hole.

குகலா, see கடுகு ரோகிணி.

குகலிதம், குயில், Indian cuckoo; 2. குரல், voice.

குகலீகம், நிலம் புரண்டி. இது தேள் கடிக் குதவும், an unknown plant said to be an antidote for scorpion sting.

குகறு முளம்பம், நல்ல மாதுளை, sweet pomegranate—Punica granatum.

குகனன், எலி, rat; 2. பாம்பு, snake.

குகன் வேர், வேல மரத்து வேர், root of acacia tree.

குகா விபுனகம், தொளை அல்லது குழி புள்ளதாக அமைத்தல், cavernous structure.

குகா விருட்சம், மலைமா, hill balsam—Balsamodendron caudatum.

குகியம், குய்யம், anus.

குகு, குய்ய நாடி. இது தச நாடியி லொன்று. இது நாபியி லிருந்து மர்ம ஸ்தானம் வரைக் கும் பரவி புள்ளது, (*In Eastern Physiology*) one of the 10 tubular vessels of the human body seated in the umbilicus and extending to the pudendum; 2. கள், toddy.

குகுதன், see குகு.

குகுரண சாஸ்திரம், உடம்பி லுள்ள வியாதியின் கூறுபாடுகளை சொல்லும் நூல், that part of medicine which explains the morbid changes of organs in diseases — Pathology.

குகுரணம், see குகரண சாஸ்திரம்.

குகுரணி, வியாதியின் கூறுகளை அறிவதில் வல்லோன், one who is versed in pathology —Pathologist.

குகுரன், நாய், dog.

குகுலா, see கடுகு ரோகிணி; 2. தேனீ, honey-bee.

குகுவிந்தம், முத்தக் காசு, koray root—Cyperus rotundus.

குகூமுகம், குயில், Indian cuckoo—Eudynamis honorata.

குகூன வர்த்தமம், குழந்தைகளுக்குக் காணும் ஓர் கண்ணோய். இது கபம், பித்தம், இரத்தம் இவைகளின் கோளாறுகளிலு ஏற்படுகிறது, கண்களில் வீக்கம், சிவப்பு, குத்தல், நீர்க் கம்மல், கூசல், ஆகிய விக் குணங்களையும், காது, கண், மூக்கு இவைகளின் நினைவால் தேய்த்துக் கொள்ளுதல் முதலிய குறிகளை யும் காட்டும். இது தாயின் பால் குற்றத் தினால் அதிகப் படும், a disease of the eye in children due to the deranged humours and blood manifesting itself in the inner lining of the eye thus giving rise to swelling, inflammation, acute pain, collection of fluid in the eye, intolerance to light etc.; and it is conspicuous by the child's rubbing of the ear, eyes, nose with its fist.

குகை, மலைக் குகை, cave; cavern; 2. யோகம் அல்லது சமாதி புகுமறை, a subterreneous walled room lined with plaster, constructed under the ground as a habitation for silent ascetics, as if retiring for meditation or as a sepulchre to one entering Samadhi after his death; an artificial cave for coolness, refreshment and meditation—Grotto; 3. உலோகங்களை உருக்குவதற்காக வேண்டிச் செய்த குகை, a crucible for melting metals; melting pot; 4. see கடுகு கண்ணைக் குகை.

NOTE.—Crucibles are of different kinds according to the materials used in their manufacture and the purpose for which they are employed. For instance, jeweller's crucibles usually made of clay are quite different from those employed in a chemical laboratory or in a metal factory or foundary, because of their use for melting metals to a higher degree of temperature.

But in Alcheny, crucibles used for melting or calcining metals, are specially made of alkaline substances or other strong chemicals so as to withstand not only the higher degree of temperature in the melting process, but also to satisfy the other conditions peculiar to alche-

mical transmutations such as consolidation, sublimation, retention, annihilation etc.

குகைக் காமன், கல் நார், asbestos.

குகைச் சட்டி, தண்ணீர்க் கொப்பரை, kettle.

குகைச்சீ, கறையான் புற்று, white ant's hill ; 2. புற்றுச் சோறு, a white petrified substance probably a fossil found in the cavity of white ants.

குகை திட்டம், உருக்கவோ அல்லது புடமிடவோ மருந்தினளவிற்குத் தக்கவாறு குகை செய்ய வேண்டி, இன்ன விதமாக இன்னதைச் சேர்த்துச் செய்ய வேண்டுமென்றும், இன்ன அளவு, இன்ன கனம் இருக்க வேண்டுமென்பவைகளையும் நிர்ணயித்தல், an estimation for determining the constituent materials, the dimension, the method etc. required for making a crucible according to the strength of the medicine introduced into it for purposes of melting or calcining.

குகை பிடித்தல், மூசை செய்தல், making a crucible ; மூசையாகச் செய்தல், turning to a shape of crucible.

குகைப் புடம், சித்த நூற்படி வைத்திய முறையில் பொன், வெள்ளி, முதலியவைகளைப் பற்பம், செந்தூரமாகச் செய்யவும், வாத முறைப்படிக் கட்டு, சுண்ணம், களங்கு, முதலியவைகளைத் தயாரிக்கவும் குகையில் வைத்துப் போடும் புடம், calcination with the aid of a crucible of metals such as gold, silver, copper etc., for converting them into oxides and red-oxides, according to the process contemplated in Tamil Medicine or for fixing up volatile substances for purposes of consolidating or otherwise altering them into alchemical compounds as carbonates, sulphides etc. as per methods of Alchemy contemplated in Siddhars' science ; 2. உருக்குவதற்காகப் பொன், வெள்ளியை குகையி லிட்டூதல், the act of melting by blowing gold and silver in a crucible for purposes of refining them ; 3. மாற்றறைச் சோதிக்க வேண்டி பொன் வெள்ளியைக் குகையி லிட்டூதல், examination of gold or silver by melting it in a crucible.

குகை மறைவாய் வைத்தல், திருவருள் காணுதற்படி குகையில் கொண்டு போய் ஒளிய வைத்தல், concealing in caves anything to be kept in secrecy as secret sciences ; 2 உருக்குவதற்காக மூசையில் வைத்து மூடுதல், concealing in a crucible for purposes of melting.

NOTE.—It is even now that many secret sciences or records formerly kept concealed in caves are discovered and published.

குகைமேனைத்தீ, சொர்ண பேதி, a drug which dissolves gold ; 2. உருக்குக் காரி, solvent medicine ; 3 உருக்குவதற்காக உபயோகிக்கு மருந்து, flux used for melting metals.

குகை யழுக வூதல், குகை முழுதும் தணலாகும்படி உருக்குதல், blowing a substance to that high temperature at which the crucible itself is turned red hot.

குகையி லாடல், மூசையில் உருகி யாடுதல், glowing of a metal when melted in a crucible for a long time ; glowing in a molten condition.

குகையி லிடல், மூசையில் வைத்தூதல், blowing after securing in a crucible ; 2 மூசையில் வைத்தல், placing in a crucible.

குகையி லுருக்கல், மூசையில் வைத்து உருக்குதல், melting anything in a crucible.

குகையி லூதல், மூசையில் வைத்தூதல், blowing a substance after securing it in a crucible.

குகையில் வைத்தல், see குகையி லிடல் ; 2. see குகையி லுருக்கல் ; 3. see குகை மறைவாய் வைத்தல்.

குகையில் வைத் தூதல், உலோகங்களை மூசையிலிட் டுருக்குதல், blowing for the purpose of melting a metal secured in a crucible.

குகை யுறை, குகைக் கிடும் மேற் கவசம், the covering or the coating of a crucible ; crucible jacket.

குகை வாய் மூடல், புடமிடு வதற்காக மூசைக்குள் மருந்தை யடைத்து அதன் மேல் சில்லிட்டு, சீலைமண் பூசுதல், sealing or covering the top of a crucible containing the medicine with a lid or plug and then luting it before exposing it to fire for purposes of calcination.

குகை விசம், கல் நார், asbestos.

குக்கம், see இந்திர கோபம்.

குக்கலாதி, வாலுளுவை, spindle three — Celastrus paniculata.

குக்க லாஜிதம், நெற் பொரி, fried paddy.

குக்க லிங்கோ, செரம்பட்டி, bitter melon.

குக்கல், see கக்குவான் ; 2. நாய், dog ; 3. இருமல், cough ; 4. வலி யிருமல், a fit of coughing—Paroxysm ; chin-cough.

குக்கன், நாய், dog. See குக்கல்.

குக்கி, இரைக் குடல், stomach ; 2. அன்னசயம், belly.

குக்கிக் கழிச்சல், வயிற்றுக் கழிச்சல், purging ; purgation.

குக்கிசம், இடுப்புப் பக்கம், the iliac region.

குக்கிச் சளிநீர், வயிற்றினுள் உண்டாகும் பிசுபிசுப்பான நீர், the mucous fluid secreted in the walls of the stomach.

குக்கிச் சுரம், வயிற்றினுள் ஏற்படும் கோளாறினால் உண்டாகும் சுரம், fever relating to the gastric disorder in the stomach — Gastric fever.

குக்கிடம், see குக்குடம்.

குக்கி நீர், இரைப் பையி லூற்பத்தியாகும் பாசக நீர், a fluid secreted in the stomach — Gastric juice or fluid.

குக்கிப் பினிகை, குடலை மூடிய சவ்வு, a membranous expansion which is attached to the intestines ; appendices ; epiploon — Omentum.

குக்கி யந்திர தாபிதம், வயிற்றிற்கும், குடலுக்கும் காணும் அழற்சி, inflammation of the stomach and the intestines — Gastric enteritis.

குக்கி யந்திர, வயிற்றையும் குடலையும் சார்ந்த, relating to the stomach and the intestines—Gastro-intestinal.

குக்கி யந்திரம், (குக்கி + அந்திரம்) வயிறும் குடலும், stomach and the intestines. 2, (குக்கி + யந்திரம்) see குக்கிரோகி.

குக்கிரம், வயிற்றிற்குக் காணும் பெரு வழற்சி. இது வயிற்றுக் கோளாறினு லுண்டாகும், chronic inflammation of the stomach —Gastritis. It is an acute disorder of the stomach.

குக்கி ரோகி, வயிற்றி னுள்ள திரவ அல்லது நீர்த் தன்மையான வஸ்துக்களை வெளிவாங்க வல்லது உட் புகட்ட வேண்டி உபயோகிக்கும் ஓர் சிறிய சல யந்திரம், a small pump used for emptying the stomach or pumping some liquid into it—Stomach-pump.

குக்கிலம், வயிற்றைப் பிளதல், the operation of opening the stomach for the removal of foreign bodies — Gastrotomia or Gastrotomy ; 2. see அநிலிடயம்.

குக்கிலிற் கண், செங் கண், blood-shot eyes.

குக்கில், see குக்கிலியம் ; 2. செம் போத்து, jungle-cock ; crow-pheasant—Centropus rufipennis. See செண்பகக் காக்கை ; 3. மை சாட்சி அல்லது மைச் சாடிதம், foreign googgal. It is a gum-resin akin to myrrh. See குக்குலு.

NOTE.—According to Lushington's vernacular list of plants, the botanical name for Kukkil (குக்கில்) or Googgal (குக்குலு) appears to be a common term referring to the product (resin or gum) of the following six kinds of trees viz :—

1. Shorea genus.
2. Vateria indica
3. Boswellia serrata.
4. Balsamodendron roxburghii.
5. Canarium strictum.
6. Agathis australis.

குக்கில் சூரணம், குக்கிலைக் குடல் நீக்கிய கோழிக் குள் வைத்துப் புடமிட்டு தயாரித்த ஓர் ஆயுர்வேத மருந்து, an Ayurvedic preparation in which the dammer-resin is secured in a fowl after removing its viscera and then burnt in a heap of cow-dung cakes and powdered.

குக்கில் நவ நீதம், வெள்ளைக் குந்துருக்கத்தை வெண்ணெயிற் குழைத்து சூடு காட்டி இரணத்திற்கு உபயோகிக்கும் ஓர் பூசு மருந்து, an ointment prepared by application of gentle heat to a mixture of powdered white dammer and butter.

குக்கில் பால், குக்கிலியம், resin of Indian Dammer—Shorea robusta.

குக்கில் புகை, குக்கிலியப் புகை, fumes or incense of Indian dammer.

குக்கு, கக்கு, to whoop.

குக்குடக் களிம்பு, கோழிப் பீ யுடன் மற்ற சரக்குகளைச் சேர்த்துத் தயாரிக்கும் ஓர் களிம்பு, an ungent prepared from cock's dung mixed with other ingredients.

குக்குட சருப்பம், பறவை நாகம், a flying snake or cobra ; a winged serpent — Basilisk.

குக்குட சிவப்புக் காரம், சிகப்பு சேவலின் பீ, the dung of a red cock.

குக்குடச் சூட்டு, *கோழித் தலை கந்தகம்*, red sulphur so called from its resemblance to cock's crest.

குக்குடத் தண்டம், *கோழி முட்டை*, fowl's egg.

குக்குடத் தவரை, *கோழி யவரை*, west Indian sea-side bean—Canavelia obtusifolia.

குக்குடத்தில் தீர்தல், *கோழிப் புட மிடுதல்*, calcining metals in a fire which is determined from a pile of cow-dung cakes calculated to reach the height of a fowl.

குக்குடப் புடம், *கோழிப் புடம். அதாவது விரட்டிகளை கோழி உயரம் அடுக்கி எரிப்பதா லுண்டாகும் நெருப்பின் உதவியைக் கொண்டு போடும் புடம். பல நூலாசிரியர்களின்படி இது அனேக விதமாய்ச் சொல்லப்படும்*, calcination in which the pile of cow-dung cakes from which the fire is derived is calculated to reach the height of a fowl. In describing the process, various writers differ as mentioned below :—

1. *ஆயுர் வேதப்படி 1 சாண் சதுரம், 1 சாண் ஆழ முள்ள பள்ளத்தில் காட்டு முட்டையை புடம்போடும் மருந்திற்குக் கீழுமேலுமாக நிரப்பிப் போடும் புடம்*, According to Ayurveda, the extent of fire is described as follows :—in a pit of a cubic span, cow-dungs cakes are piled up with the vessel containing medicine in the centre and fire is kindled

2. *சித்த நூலின் முறைப்படி 5 எருவை கோழி உயரம் அடுக்கிப் போடுதல் இதன் சுற்றளவு 16 அங்குல மெனச் சொல்லப் படும்*, according to the Siddha system, it is a fire derived from burning five cow-dung cakes piled up to the height of a fowl and the circumference of which is described as 16 inches.

3. *வேறு சில நூற்களில் ஆசிரியர்கள் 10 எருவைக் கொண்டு போடும் புட மெனக் கருதுவார்கள்*, some authors roughly estimate it be a fire consisting of 10 cow-dung cakes.

குக்குடம், *கோழி*, fowl ; 2. *சேவல்*, cook ; 3. see *குக்குட சருப்பம்*.

குக்குட வெண் மலம், *கோழியின் வெண்ணிற மான மலம்*, the white-coloured dung or excreta of a fowl.

குக்குடா, *இரவு*, night.

குக்குடாசனம், *கோழியைப் போல் குந்தி யிருந்து யோகம் புரிதல்*, a yogic posture compared to that of a sitting fowl with its soles touching the ground.

குக்குடாதி வடகம், *ஓர் ஆயுர் வேத மருந்து*, an Ayurvedic preparation.

குக்குடி, *இலவ மரம்*, silk-cotton tree—Bombax malabaricum ; 2. *பெட்டைக் கோழி*, hen.

குக்குதல், *இருமுதல்*, coughing.

குக் குமுளம், see *அரக் காம்பல்*.

குக்குரம், *கோடக சாலை*, a medicinal plant—Justicia procumbens

குக்குலவம், *குக்கிலி லிருந்து தயாரிக்கும், தைலம் அல்லது நெய்*, a medicated oil or ghee prepared from bdellium.

குக்குலா, see *குக்கில்* ; 2. see *கடுகு ரோகிணி*.

குக்குலு, *மை சாட்சி, இது ஒரு சிறிய மரம். இதினின்று குறுக்காகப் பாய்ந்து அனேக கிளைகள் தொங்கி பூமியைத் தொடும். பூக்கள் சிவப்பு ; காய்கள் திராட்சை யளவாயும், சிவப்பாயு மிருக்கும். இதன் பிசின் மிக்க வாசனை ; சிறிது மஞ்சள் நிறமும், கபில நிறமும் கூடியதாயும், தொட்டால் பிசு பிசுப்பாயும், கசப்பாயு மிருக்கும் ; கொளுத்தினால் சாம் கசியும் ; அடி மரத்தைக் கீறி வைக்கப் பிசின் வரும். இது போளத்தைப் போல் மருந்தில் உபயோகப்படும். இது மிக்கச் சுருசுருப்பை யுண்டாக்கும் ; கோழை யகற்றுந் தன்மையும், ஆர்த்தவத்தைப் பெருக்குங் குணமும் வாய்ந்தது ; உள்ளுக்குக் கொடுக்க இரத்தத்தைச் சுத்தி செய்யும். ஆயுர் வேத வைத்தியர்கள் இதினின்று யோகராஜ குக்குலு, விடங்காதி குக்குலு, அமிர்தாதி குக்குலு எனப் பலவிதமான மருந்துகள் தயாரித்து நரம்பு நோய, கழுத்து நோய், கீரணடைப்பு, கல் லடைப்பு, கணு வாதம், தொண்டை வீக்கம் முதலிய நோய் களுக்குக் கொடுப்பார்கள்*, buffalo googal ; buffalo myrrh ; bdellium—Balsmodendron roxburghii alias Amyris agallocha. It is a small tree with crooked trunks drooping dowr [illegible] ground ; flower small and red ; [illegible] and smooth of the size of a cur[illegible]. It gives a fragrant gum resin which is of a yellowish brown

or dark brown colour unctuous to the touch; of a bitterish taste; in appearance not unlike myrrh; in burning it sputters owing to its moisture. The gum is collected by making incisions in the stem.

Medicinal properties are the same as myrrh. It is used as a perfume and a medicament. It is a stimulent, expectorant and emmenagogue; internally, it is a purifier of blood. It is capable of penetrating into the minutest part of the body. It is heat-making in potency and pungent in taste.

Ayurvedic physicians use this in various forms and their preparations are known by several names as Yogaraja guggulu, Vidangathi guggulu, etc. as mentioned above and prescribe them for nervous affections, scrofulous complaints, urinary disorders such as, stricture of urine, stranguary and stone in the bladder, rheumatism, swelling of throat etc.

NOTE.—(குக்குலு) Guggulu—Balsmodendron Roxburghii is not the same as குங்கிலியம், Dammer genus consist of two kinds viz:—
Black dammer—Canarium strictum.
White dammer—Vateria indica.
However, it is used almost synonymously by some authors because of its kindred properties. See உதிர வேங்கைப் பால் and also notes under குங்கிலு.

துக்குலுவம், குக்குலு சேர்த்துச் செய்யப் படும் ஓர் குளிகை, a pill of Ayurvedic preparation containing Googgul as the chief ingredient; 2. குக்குலுப் புகை, fumigation of googgul.

துக்குறம், குடச பாலை, conessi bark—Holarrhena antidysenterica.

துக் குறுப்பான், கீச்சிடும் குருவி, a screeching bird; 2. ஆந்தை, screeching owl.

துக் குறுவான், see துக் குறுப்பான்.

துங்கிப் போதல், see துங்குதல்.

துங்கி லாத்திதம், பகர வீழி, chilli-fruited caper—Cadaba indica.

துங்கிலி, தளூரம், bastard saul — Shorea talura; 2. காட்டு மா, wild mango — Spondias mangifera.

துங்கிலிகம், see குங்கிலியம்; 2. வாலுளுவை, spindle tree—Celastrus paniculata.

துங்கிலியக் களிம்பு, ஆறாத புண்களுக்கு பூச உதவும் வெள்ளைக் குங்கிலியக் களிம்பு, an ointment prepared from olibanum — Ungentum olibani. It is applied for unhealed sores.

துங்கிலியத் தூள், குங்கிலியப் பொடி. இந்த வெள்ளைக் குபயோகப்படுத்தப் படும், powder of Indian olibamum. It is prescribed for gonorrhoea.

துங்கிலியத் தைலம், குங்கிலியத்தி னின்று இறக்கிய தைலம், oil extracted from olibanum; 2. அனேக சாதி மரங்களி லிருந்து சேகரிக்கப்பட்ட கசப்பும், காரசாரப்பும், வெகுட்டலு முடைய ஓர் எண்ணெய். இது முகம் விடாத கட்டிகளுக்கு முகத்தை யெழுப்பும், an oil yellow in colour, bitter in taste, irritative to the throat, prepared from the resin obtained from several kinds of trees. It is the best application as a local stimulant in blind boils because of its effect in causing the boils point sooner than any other remedy.

துங்குலியப் புகை, குங்கிலியத்தைக் கரியி லிடுவதனால் எழுகின்ற புகை. இது மார்ச் சளி, தொண்டைக் கம்மல் இவைகளைப் போக்கி, கோழையை யகற்றி, இருமலை தணித்து மேல் சுவாசத்தைக் குணப் படுத்தும், அசுத்தத்தை யகற்ற வேண்டி இதை வீடுகள், கோவில்கள் முதலிய பகிரங்கமான இடங்களில் புகை போடுவார்கள், fumes of olibanum generated by placing the gum on the burning charcoal. It proves very favourable in the treatment of chronic forms of bronchitis and laryngitis, moderates the morbid secretions and alleviates the cough and dyspnoea (hard-breathing). It is also used as a disinfectant in houses, temples and other public places.

துங்கிலிய மரம், குங்கிலியப் பால் எடுக்கு மரம். இம் மரம் 100-150 அடி உயரம்; பூக்கள் மஞ்சள்; வாசனை யுள்ளது. இதின் வெடிப்பு களி னின்று வெண்மையான வாசனை யுள்ள பால் வடியும்; இதுவே குங்கிலியம். கற்பூரத் தைலத்தில் கரையக் கூடியது; சிறு துண்டுகளாகக் கிடைக்கும்; இதில் வெண்ணிற மானது மிகச் சுத்தமானது; முதிர்ந்த விதைகளி னின்று எண்ணெய் எடுக்கலாம். இம் மரத்தின் பிசினி லிருந்து வாசனை ரூபமாக வாசனை யுள்ள எண்ணெய வடிக்கலாம். பெரும்பாலும் குங்கிலியத்தின் வெளி நிறம் இளிது மஞ்சள் அல்லது சிவப்பாக இருக்

கும். இத் தேசத்தில், இம் மரம் இமய மலைச் சாரல், சிந்து தேசம், ஆப்கனிஸ்தான், காசுமீரம், வங்காளம் முதலிய இடங்களில் உள்ள காடுகளில் உற்பத்தியாகும். இதன் மரம் வீடுகட்ட உதவும், Indian dammer—Shorea robusta. This tree is 100–150 ft. high; flowers yellow and fragrant. From this tree exudes a whitish aromatic resin soluble in turpentine. It occurs in small rough pieces; and the white ones are considered pure; oil is expressed from ripe seeds; and an aromatic oil is procured from the resin by dry distillation. The pieces of this resin are outwardly little yellowish or reddish in colour. The tree is generally found in the forests of Himalayan regions, Sindh, Afganistan, Bengal and other places in India; and the wood is useful for building purposes.

குங்கிலியம், குங்கிலிய மரத்தின் பால். இது மரங்களின் வெடிப்புகளிலிருந்து பலவகை நிற முள்ளதாய் வெளிவரும் பிசினைப் போன்ற வஸ்து. இத் தேசத்தியக் குங்கிலியம் மேல்நாட்டு வைத்தியத்தில் மிகுதியாக உபயோகிக்கத் தகுந்த சரக்காகும். இச் சரக்கு வெள்ளை, சிவப்பு என்று இருவகைப் படும்; இது சாம்பிராணியைப் போல் புகை போட உதவும்; சாராயத்தில் கரையும். இதைக் கந்தகத் துடன் சேர்த்துக் களிம்பு செய்து இரணங்களுக்கும், சிரங்குகளுக்கும் போடலாம், மெழுகுடன் சேர்த்துப் பிளாஸ்திரியாக புண்ணுக் கிடலாம். இது கசப்பும், காரப்பும், வெகுட்டலும் உடையதா யிருக்கும். இது பிரமேகம், மேக வாய்வு இவைகளுக் குதவும். இதைப் பாலில் கலந்து கொடுக்க, இருமல், மூலம், மார்ச் சளி, மாதருக்குக் காணும் வெள்ளை இவைகள் நீங்கும். இதை ஆயுர் வேதத்தில் மாத்திரை யாகவும், கிருதமாகவும், பக்குவம் செய்து உள்ளுக்கும் கொடுப்ப துண்டு. சர்க்கரையோடுச் சேர்த்து சீதபேதி, செரியாமை, வெள்ளை, தாது புஷ்டி இவைகளுக் கும் கொடுப்பார்கள். இது உடம்பி லுள்ள கெட்ட நீரை யிழுக்கும் தன்மையது; ஆகவே இதை வீடு, கோயில் பிணியாளி அறை இவ் விடங்களில் புகை யிடுவார்கள். இது அடி யிற் கண்டபடி பலவகைப் படும், Indian dammer resin—Shorea robusta (Resin of). It exudes from the fissure made in the bark of the tree in the form of a gum-resin. It is a useful drug in European pharmacopoeia. It consists of two kinds viz, white and red. It is used for fumigating like frankincense and is soluble in alchohol. Mixed with sulphur, it is used as an ointment for wounds, sores etc.; and mixed with wax, it is used as plasters for wounds. It is bitter, pungent and nauseating. Vaidyans prescribe it for venereal complaints as gonorrhoea, gout, etc. Mixed with boiled milk, it is a useful remedy in cough, piles, bronchitis, leucorrhoea or whites in women. In Ayurveda, pills and medicated ghees are prepared with it and given internally. Mixed with sugar, it is administered in cases of dysentry, weak digestion, gonorrhea; and is also used as an aphrodisiac. It is capable of absorbing all morbid fluid from the system. The resin is also used as an incense in several Hindu households, temples and sick-rooms.

The following are the different varieties :—

1. பரங்கிச் சாம்பிராணி, Indian olibanum — Boswellia serrata (typica).
2. வெள்ளைக் குங்கிலியம், conkany resin—Boswellia serrata (glabra).
3. குந்துருக்கம், white or piney dammer — Vateria indica.
4. கருப்புக் குங்கிலியம், black dammer —Canarium strictum.
5. பூனைக் கண் குங்கிலியம், cat's eye resin of yellowish brown colour —Pistacia lentiscus.
6. குக்குலு, Indian bdellium—Balsamodendron roxburghii.
7. மை சாட்சி, foreign guggal—Balsamodendron mukal.
8. சீமை அதாவது ஆஸ்திரேலியா, நியூ ஜீலண்டு இவ் விடங்களி லிருந்து இறக்குமதி யாகும் குங்கிலியம், foreign dammer, (Australian or New Zealand dammer imported into India)—Agathis australis.

NOTE 1.—There are also other varieties such as Amboyna dammer, Burma dammer East Indian dammer, Green dammer, Raul dammer, Rock dammer (உருப்புப்பிசின்) Tambaga dammer etc.

NOTE 2.—It should be noted here that the male frankincense is known as குங்கிலியம், female frankincense as சாம்பிராணி; வெள்ளைக் குங்கிலியம் as Boswellia serrata and கருப்புக் குங்கிலியம் as Canarium strictum.

NOTE 3.—The male frankincense is a hard dark coloured, brittle, resinous substance which exudes from the trees of Dammara genus and is the one imported to India from the Eastern Islands and New Zealand. The indigenous dammars are from other trees.

குங்கிலியம், சால மரம், bastard sal—Shorea talura; 2. குங்கிலிய மரம், Indian dammer—Shorea robusta; 3. [illegible], Madras balsam tree—Balsamodendron berryi.

குங்குதல், குறைதல், decreasing; becoming less.

குங்குமக் கலுழி, see குங்குமக் காவி.

குங்குமக் காவி, செங் காவி, red ochre; 2. குங்கும நிறக் காவி, saffron ochre.

குங்குமக் கோபம், see குங்குமச் செவ் வந்தி.

குங்குமக் கோதை, (சிவப்பு + சந்தி சாரிகை) as in "குங்குமக் கோதைக் குடம் நிறைந்து"; see குங்குமச் சந்தி.

குங்குமக் கோவை, செங் கோவை, red bitter melon—Coccinea indica.

குங்குமச் சந்தி, சிவப்புச் சந்தி சாரிகை இதன் பூவின் நிறத்தால் இப் பெயர். இலை சதைப் பற்றுள்ளது; பூ சிவப்பு, சிறியது; இலையைக் கீரையாக உணவில் கொள்ளப்படும், red chooranay, red trianthema — Oggia trianthemoides. It is so called in Tamil from the colour of its flowers. It is a procumbent herb with fleshy leaves of a brownish colour; flowers small and red; leaves are used in food.

குங்குமச் சம்பா, மஞ்சள் சம்பா நெல், a yellow variety of paddy.

குங்குமச் சேனை, சிவப்புச் சேனைக் கீரை, a red variety of cat's greens — Ipomaea [illegible].

குங்குமச் [illegible], சிவப்புச் [illegible], a red variety of ash-coloured fleabane—Vernonia cinerea.

குங்குமச் செங்கொட்டை, சிவப்புச் செங்கொட்டை; அல்லது சிவப்புச் சங்கொட்டி, a red variety of சங்கொட்டி; which see.

குங்குமச் செம்பரத்தை, சிவப்புச் செம்பரத்தை, flesh-coloured shoe-flower — Hibiscus rosa-sinensis (rosea).

குங்குமச் செவ்வந்தி, சிவப்புச் செவ்வந்தி அல்லது சிவப்புச் சாமந்தி, red chamomile—Chrysanthemum indicum (red).

குங்குமச் செஞ்சரன், சிவப்புச் செஞ்சரம், a kind of red cassia tree.

குடி யோட்டிப் பூண்டு, இதுவே பிரம தண்டு. இதன் தண்டு, காம்பு, இலை இவைகளி லெல்லாம் முள்ளடர்ந் திருக்கும்; பூ மஞ்சள்; விதைகள் கறுப்பு, கடுகைப்போ லிருக்கும்; எண்ணெய்ச் சத்துண்டு, தண்டிலும் இலையிலும், மஞ்சள் நிறமான கசப்புப் பால் வரும். காய்ந்ததும் அபினியைப்போ லிருக்கும்; விதை மலத்தை இளக்கும், வாந்தி ஓக்காளத்தை யுண்டு பண்ணும்; கோழையை அறுக்கும்; அழற்சியைத் தடுக்கும்; விதையின் எண்ணெய் பேதியை யுண்டாக்கும். வேர், பல விருத்தி; விதையும் எண்ணெயும் காசத்திற் குதவும்; எண்ணெயைச் சொறி, சிரங்கு, உடம்பு வலி இவைகளுக்குப் பூச மருந்தாக வுபயோகிக்கப்படும். விதை புகை யிலையில் கலந்து புகைப் பிடிக்க மயக்கத்தைத் தரும், Brahmin's snuff, foreign datura — Argemona mexicana. It is a herbaceous plant; thorny - toothed and full of thistle: stem, leaves calyx are all prickly; flowers bright yellow; seeds dark and resembling mustard seed; full of oil; the stalks and leaves abound with a bitter yellow juice-like gamboge which, when dried, resembles opium. Medicinally, seeds are laxative, emetic, nauseant, expectorant and demulcent. oil is a drastic purgative; root is an alterative tonic: seeds and oil have good effect in asthma; oil is used externelly in cutaneous diseases and muscular pains; seeds are narcotic especially when smoked with tobacco.

குடி யோட்டிப் பூண்டு, குருக்கு, prickly or mexicana poppy — Argemone mexicana; 2. கொல்லைப் பல்லிப் பூடு, garden lizard plant—Strigia euphrasoides, see காரை.

குடி ரகம், துளசி, holy basil—Ocimum sanctum.

குடிரம், காரைச் செடி, common honey-thorn —Canthium parviflorum, See காரை.

குடிரா கதி, கோழி யவரை, cock-bean—Canavalia obtusifolia. See அவரை.

குடி ராகிதம், see குடிரம்.

குடில கண்டகம், see கருங்காலி.

குடில காவிதம். சடைக் குறண்டி, a thorny shrub—Lepidagathis scariosa.

குடிலச்சி, கருவண்டு, black beetle; 2. கதண்டு. which see; 3. see கதண்டுக் கல். 4. see இந்திர பாஷாணம்.

குடில மாயை, see குடிலம்.

குடிலம், குரா மரம், common bottle-flower—Webera corymbosa (typica); 2. ஆகாயம், etheric space: 3. பிரணவம், trilettered mystic syllabe 'Om'; 4. சிலாவங்கக் கல். principal ore of lead — Galena; 5. வெள்ளீயம், tin; 6. வங்க மணல், sand containing lead; 7. நாக பாஷாணம், a poisonous compound of zinc; 8. குடில மாயை. undeveloped Maya; 9. வளைவு, crookedness.

குடிலி, செம்பல்லிப் பூடு, an unknown lizard plant used by the Siddhars for Rejuvenation; 2 நிலஞ் சோதி, another unknown plant used by the Siddhars for Rejuvenation,

குடிலை, சுத்த மாயை. development or absolute Maya; primitive Maya in its incipient state of development as opposed to குடிலம் அதாவது அசுத்த மாயை, which see; 2, பிரணவம், the mystic 'Om'-

குடிலை சூக்கும வாயு. sea குடிலை வாயு.

குடிலை வாயு. விறந்தக் கட்டுக்குள் மூஞ்சூறு உலாவுதல் போல் உடம்பில் வளைந்து வளைந்து ஓடும் ஓர்வகை நாடி. alternative ascending and descending motion of pulse in the human body — Undulatory pulse.

குடில், ஆகாயம், etheric space; 2. உடம்பு, human body.

குடிவகை பாவித்தல், குடித்துப் பழக்கப்படுத்தல், taking to the habit of drinking.

குடி வருணி, செவ் விளநீர், water of a red-coloured tender cocoanut.

குடிவிட் டோடல், நோய் உடம்பை விட்டு வேரற நீங்கல், to be completely or radically cured as in chronic diseases; 2.

இருந்த இடம் தெரியாமற் போதல், disappearing from the usual place; disappearing from the human system.

குடி வீடு, முடி யண்டம், the skull of a foetus.

குடி வெறி, குடி போதை, delirium through drunkeness.

குடிவெறிக் குரிய, குடி மயக்க சம்பந்தமான pertaining to revelling and drunkenness —Bacchanalian.

குடீரகம, கழுதை. ass: 2. முற்றுந் துறவாச் சன்னியாசம், asceticism not wholly adhered to.

குடீரம், புணர்ச்சி, sexual intercourse.

குடு, கள், toddy; 2, மது. any fermented liquor.

குடுகு, see குடுக்கை,

குடுகுடாணை, அண்டம், egg. C. f. கும்பிடாணை

குடுகுடி, உக்கா புகைப் பிடித்தல், smoking Hukkah.

குடுகுடு, மிக்க வயது தளர்ந்த, of extreme old age as குடுகுடு கிழவன், which see; 2. வயிற் றிரைச்சல், gurgling sound or rumbling noise of the stomach.

குடுகுடு கிழவன். தள்ளித் தடுமாடும் மிக்க வயது சென்ற கிழவன். man of extreme old age in a tottering state.

குடுகுடுக்கை, கொப்பரைத் தேங்காய். dried cocoanut inside the shell; 2. காய்ந்து உள்ளாடும் காய், any dried fruit in which the kernal rattles: 3, குடுகுடு வெனச் சப்தித்தல், the act of making a rattling noice.

குடு குடுப்பை, கஞ்சாக் குடுக்கை, shell used in the smoking of ganjah: 2. ஓர் சிறு பறை, a kind of clapper.

குடுகுடெனல், வயிற்றுப் பொருமல், rumbling noise in the stomach; 2. காதின் இரைச்சல் noise in the ear.

குடுக்கை, தேங்காய் குடுக்கை, dried cocoanut sheil used as a vessel; 2. கமண்டலம், an earthen or wooden pitcher used by an ascetic or a hermit; 3. கஞ்சாக் குடுக்கை see குடுகுடுப்பை; 4. சுரைக் குடுக்கை, the dried shel of a bottle-gourd; 5. வாலையி லுபயோகிக்கும் ஓர் மண் பாத்திரம் an earthen vessel or receiver in which a solid substance is submitted to destructive distillation—Retort: 6. பிடுக்கு, scrotum; 7. காய்களின் மேல் ஓடு, மண், முதலியவைகளாற் செய்த சிறிய குப்பியைப் போன்ற பாத்திரம், இதில் பல வகைகளா வன, a small vessel like a bottle made of the hard dried shell of a fruit or clay etc. The different kinds of it are:—

1. சுரைக் குடுக்கை, the hard shell of a bottle - gourd — Cucurbita lagenaria.

2. தீக் குடுக்கை, the hollow shell made of iron.

3. தென்னங் குடுக்கை, cocoanut-shell.

4. வில்வக் குடுக்கை. the shell of bael fruit.

5. விளாங் குடுக்கை, the shell of wood apple.

6. கஞ்சாக் குடுக்கை, gunjah-smoking shell.

7. புகைக் குடுக்கை, smoker's shell.

குடுக்கை தாங்கி, குடுக்கையை ஏந்தும் ஓர் கருவி, retort-stand.

குடுமி, ஆண் மயிர் முடி, lock or tuft of hair tied into a knot at the top of the head especially of men. It is known by different names as mentioned below according to its situation in the head:—

1 உச்சிக் குடுமி, tuft on the crown of head.

2. முன் குடுமி, lock of hair nearer the forehead.

3. பின் குடுமி, lock of hair on the hinder part of the head.

2. தலை யுச்சி. the crown of head; 3. மலை யுச்சி, the summit of a mountain; 4. நுனி, tip, end; 5. பாம்பாட்டி, snake-charmer; 6, விஷக்கடி மருந்து விற்போன். a dealer in antidotes for snake or other poisonous bites.

குடுமிக் கூந்தல், உச்சி மயிர், hair on the crown of head.

குடுமிப் பருந்து, உச்சிக் கொண்டையை யுடைய ஓர் வகைப் பருந்து; இது கறுப்பு; ஓரங்களில் வெண்ணிறம்; கழுத் தடியிலும் மார்பிலும் சுத்த வெண்மை. crested hawk eagle—Limnaetus cristatellus. It is deep black, tipped with white; beneath the foreneck and the breast, pure white; 2. உச்சி சூட்டுடைய ஓர்வகை வல்லூறு, Ceylon crested-falcon — Spizachus cirrhatus.

குடுமியன், see குடுமிப் பருந்து.

குடும்பம், நான்கு பலம். four palams.

குடும்பு, பூங்கொத்து, bunch of flowers; 2. காய்க்குலை. bunch of fruits.

குடுவிச்சு, தேங்காய், cocoanut: 2. பாளைச் செடி, any plant or tree with spatha.

குடுவிதிப் பாளம், see இலுப்பை.

குடுவை, *சிறு மண் பாத்திரம்*, a small earthen pot with a narrow mouth; 2 *மருந்தைப் புடமிடுவதற்காக உபயோகிக்கும் மண் கலயம்*, a small earthen pot used for securing medicine for purposes of calcination; 3. *கள் குடுவை*, pot used for collecting toddy; 4. *பிடுக்கு*, scrotum.

குடுவைப் பறி, *மருந்திடு மட்பாண்டம்*, see குடுவை.

குடுவை பொறைப் பிரயோகம், *உடம்பைக் கீறி இரத்த மெடுக்கக் குடுவையைச் சதையினிடமாகச் செலுத்தல்*, application of cupping - glass to the skin after scarification for drawing out blood.

குடுவைப் பொறையிடல், குடோரியாடி குடுவை வைத்தல். இது உடம்பினின்று இரத்தத்தை யெடுக்க வேண்டிச் செய்யும் சிகிச்சை, a treatment consisting in the abstraction with the aid of a cupping glass. C. f. குடோரி வைத்தல்.

குடூசி, *சீந்திற் கொடி*, moon creeper—Tinosphora cordifolia.

குடேசி, கற்றாழை, Indian aloe—Aloe officinalis.

குடேரகம், see குடேரசம்.

குடேரசம், வெண் துளசி, white basil.

குடேரம். துளசி, holy basil—Ocimum sanctum.

குடை, குடைவேல், umbrella thorn-babool —Acacia planifrous alias A. latronum; 2. குடைதல், scooping out.

குடைகரி, see குடகரி.

குடை கல், மாவரைக்கும் கல். ortholithic stone with a wide cross slab.

குடை கொள்ளுதல், மேலெழும்பல், driving with a blast of air; 2. புடை கொள்ளுதல், swelling as in boils.

குடைக் கருவேல், see குடை.

குடைக் காவலன், see குடைக் கிழங்கு.

குடைக் காளான், பெருங் காளான். an umbrella-shaped large mushreom.

குடைக் கிழங்கு, *சிற் றரத்தை*, lesser galangal —Alpinia galanga (minor)! 2. *சேனைக் கிழங்கு*, elephant-foot yam — Amorphophallus campanulatus.

குடைச்ச லுண்டாதல், நரம்புவலி யுண்டாதல், being attacked with boring pain in the nerves; aching in the limbs or bones.

குடைச்ச லெடுத்தல், see குடைச்ச லுண்டாதல்.

குடைச்சல், வாயுவினு லேற்படும் ஓர் வலி, a continuous borring pain as in neuralgia; 2. கை கால் குடைச்சல், neuralgic pain of the limbs: 3. மிகுந்த வலி, acute pain.

குடைச்சி, *சிறு கீரை*, pig-greens—Amaranthus campestris.

குடைச் சிணுங்கி, கொடிச் சிணுங்கி, a sensitive creeper of the Mimosa genus.

குடைச் சொருகி, செங்நாவி, red aconite,

குடைதல், குடைச்ச லுண்டாதல், feeling continuous boring pain as in rheumatism; 2. *ஆழமாகச் செய்தல்*, scooping: making out a hollow; 3. *குளித்தல்*. bathing; 4. *துளைத்தல்*, perforating; making a hole through; boring; 5. *நீரில் முழுகுதல்*, plunging in water; 6. *கை கால் குடைதல்*, aching pain in the limbs or bones,

குடைத்திரி வாதம், உடல் கடுத்து இடுப் புளைந்து காணும் வாதம், (யூகி. 1200) a kind of rheumatism attended with pain all over the body and boring pain especially in the loins.

குடை நந்தியா வட்டம், see அடுக்கு நந்தியா வட்டம்.

குடைந்த காது, *சதையை துளைத்து துவாரம் செய்த காது*. ear perforated with a punch. See குரவன் குடைந்த காது.

குடைந் தெடுத்தல், புண், *பிளவைகளில்புரையோடிய வரையில் சதையை ஆழமாகத் தோண்டி யெடுத்தல்*, scooping or scraping out the putrid portion of the skin as in carbuncle. gangrene etc.

குடைப் பனை, *தாளிப் பனை*, talipot palm; umbrella palm—Corypha umbraculifera.

குடைப் பனை மணி, *தாளிப் பனையின் விதைகள், இதை மணிகளாகச் செய்து தாசரிகள் அணிவார்கள்*, seeds of talipot tree. They are made into beads and worn by the Dasaris.

குடைப் பாலி, மடையன் சாம்பிராணி, false copaiba—Hardwickia pinnata.

குடைப் புல், மயிற் கொண்டைப் புல், umbrlela grass; trail grass—Chloris barbata,

குடை மகாவிதம், see சதக் காரை.

குடை மரம், வேல மரம், see குடைவேல்,

குடை மல்லிகை, see குட மல்லிகை.

குடை மிளகாய், see குட மிளகாய்.

குடையல், see குடைதல்.

குடை யிப்பி, கடைவில் பாறைகளைத் துளைக்கும் சிப்பி, a genus of marine mollusc which pierces rocks, wood etc—Pholas.

குடையின் பருவதம், பித்தளை, brass.

குடை வண்டு, ஓர் வகைத் துளை வண்டு. perforating beetle; 2. ஓர் வகை சங்கு, a conch or shell—Pholas.

குடை வாய்வு, குடைச்சலை யுண்டாக்கும்வாயு, neuralgic pain.

குடைவு, குடைவதனு லேற்பட்ட பொந்து, a hollow or cavity formed by scooping or excavating.

குடை வேல், see குடை. இதன் பட்டையினின்று சாராயம் காய்ச்சுவ துண்டு. arrack is said to be distilled from the bark of this tree (acacia). 2. உடை, silver-thorned acacia—Acaia latronum; 3. கூந்தல். வேல், umbrella thorn-babool — Acacia tomentosa; 4. கந்தன் வேல், fragrant acacia,

குடோச்சம், see கஞ்சாங் கோரை.

குடோர முட்சி, வெள்ளைக் கழற்கொடி, a white variety of கழற்கொடி, which see.

குடோரி, வங்க மணல். lead ore; 3. வெள்ளை பாஷாணம், white arsenic — Mercurius sublimatus; 3. வெண் காரம், borax or biborate of soda — Sodae biboras; 4. கீறுகை, slitting with knife; scarification; 5. ஆற்றுவதற்காக கீறுகை, performing operation of healing; 6. திப்பிலி மூலம், root of long pepper. 7. மாத்திரை, pill.

குடோரி, வாத முறைப்படி, உலோகச் சத்துக்களை உருக்குவதற்காக உபயோகிக்கும் போகர் நூலில் சொல்லியுள்ள ஓர் பதங்கம், (In Alchemy) a product derived from sublimation as contemplated in Bogar's works; and used for the purpose of melting metallic essences; a substance or mixture frequently employed by ancient chemists to facilitate fusion of minerals—Flux; 2. வெடியுப்பு, பூ நீறு, வெள்ளைப் பாஷாணம், தாளகம், இரசம், கல்லுப்பு ஆகிய இவைகளை எருக்கம் பால் விட்டரைத்து வாலையி லிட்டு இறக்கிய பதங்கம் a compound of sublimate obtained by heating the product which is arrived at after grinding a mixture of volatile substances such as nitre, Fuller's earth white arsenic, borax, orpiment, mercurry and sea-salt in certain proportions with madar milk.

NOTE:—In Alchemy, the term குடோரி fiux) is a common name referring to various kinds of preparations of alkaline fluxes generally employed by ancient 'Alchemists to assist the fusion of minerals. According to modern chemistry, these alkaline fluxes render the earthly mixtures fusible by converting them into glass and they are:—Grude flux, White flux, Black flux in which crystals of tartar form the main ingredient although the mixtures differ in other respects.

குடோரி பண்ணல், குடோரி யாடல், making incision with a knife on the crown of head and inserting medicine for purposes of curing dangeroue diseases.

குடோரி மண், சுத்த மண், pure alkaline earth.

குடடாரி யாடல், சில நோய்களில் உடம்பில் ஏதாவது ஒரு பாகத்தில் கீறி இரத்தம் அல்லது நீர் எடுத்தல், the making of small incisions or punctures in any part of the body for the purpose of abstracting Blood or any fluid in certain diseases, as anasarca, etc; 2. உடம்பில் ஏதாவது ஒரு பாகத்தில் சத்திரம் வைத்து அல்லது வேறு வகையாகக் கத்தியால் கீறி விரண முண்டாக்கி மருந்து வைத்தல், making a slit with a knife in any part of the body for purposes of administering medicines to effect a cure in certain diseases—Scarification,

குடோரி யிடுதல், see குடோரி வைத்தல்.

குடோரி வைத்தல், சன்னி விஷத்திற்குத் தலை மண்டையைக் கீறி மருந்து வைத்து குணப்படுத்தல். நமது நாட்டு வைத்தியர்கள் பாம்புக் கடி, உயிர்ப்புண். ாக்கல்,உடம்பில் விஷமேறி ஏற்படும் நமர், சன்னி, மயக்கம், மூர்ச்சை, காக்கை வலி, முதலிய நோய்களுக்கும் இவ்வித சிகிச்சை செய்வதுண்டு, slitting with knife or scarifying the

scalp on the crown of head and inserting medicine. It is a curative treatment resorted to, by Vaidyans in cases of snake-bites for reviving animation or as a cure in tetanus or apoplexy resulting from sceptic poison or in cases of syncope, coma, epilepsy etc.

குட்கரம், வேலிப் பருத்தி, hedge-cotton—Daemia extensa.

குட்சி, வயிறு, stomach.

குட்சி சூலை, ஈரலுக்கு மேற் பக்கம் காணும் குத்தல் வலி, shooting or piercing pain over the hepatic region.

குட்சிம், ஓர் நோய், an unknown disease; 2. கோஷ்டம், Arabian costus — Costes speciosus.

குட்சுர காண்டம், வெள்ளைக் கரும்பு, white-coloured sugar-cane.

குட்ட கண்டகம், காசுக் கட்டி, black catechu —Acacia catechu.

குட்ட கண்டு, பேயத்தி, devil fig — Ficus hispida.

குட்டக் கண்டு சமனி, பூச பத்திரி, an unkown drug- (See போகர், நிகண்டு, 1200)

குட்ட கந்தம், கொம்புப் பாகல், palwal snake-gourd—Trichosanthes dioeca.

குட்ட கந்தி, வெள்ளி லோத்திரப் பட்டை, the fragrant bark of wood-apple tree—Feronia elephantum; Lodhra bark.

குட்ட கரி, கந்தகம், sulphur; 2. காசுக் கட்டி, catechu.

குட்ட களம், குட்டத்தினால் ஏற்படும் புண் தொண்டை, a leprous throat.

குட்ட கேது, see குட்ட கண்டகம்.

குட்டக் கரப்பான், குட்டத்தைப் போல்உடம்பு முழுவதிலும் படரும் ஓர் வகை மேகக் கரப்பான் நோய், a white scabby scurf or syphilitic eruptions like leprosy spreading over the whole surface of the body.

குட்டக்கனி பலா, see கருந்தக்காளி.

குட்டக்கினம், குட்டத்தைத் தீர்க்கும் பூடு, plant curing leprosy; 2. குட்டத்தைத் தீர்க்கு மருந்து, a remedy for leprosy; 3. பேயத்தி. wild fig—Ficus oppositifolia: 4. காட்டுச் சீரகம், wild cumin — Vernonia anthelmintica.

குட்டக் கினி, see கருங்காலி, 2. தான்றிக்காய் belleric myrobalan.

குட்டக் குறடு, கொல்லன் உபயோகிக்கும்சிறு குறடு, a kind of small brazier's pincers used by smith's working at metals.

குட்டங்கம், குட்டங்கொண்ட கால் கை, leprous limbs.

குட்டங்கொள்ளல், குட்ட நோயால் பிடிக்கப் படல், to be attacked with leprosy.

குட்டங் கொள்ளி, குட்ட ரோகி, one who is attacked with leprosy. — Leper-

குட்ட சிகிச்சிதம், குட்டந் தீர்க்கை, cure of leprosy.

குட்ட சூதனம், குட்டம் தெளிதல், subduing leprosy; 2. கொன்றை மரம், cassia tree—Cathartocarpus fistula.

குட்டணம், see கருஞ் சீரகம்.

குட்டத் தக்காளி, சிறு தக்காளி, black-berried solanum—Solanum nigrum. See குட்டமக் தக்காளி.

குட்ட நாசனம், வெண் கடுகு, white mustard.

குட்ட நாசனி, see கருப்பு அகரம்: 2 வெள்ளை, கிலுகிலுப்பை, white-flowered crotolaria —Cratolaria verrucosa: 3. தகரை, ring-worm plant—Cassia tora; 4. காட்டுச் சீரகம், wild cumin—Vernonia authelmintica; 5. குட்டத்தை நாசப் படுத்து மருந்து, any medicine curing leprosy.

NOTE:—The following are also considered useful in leprosy:—Chaulmoogra oil, madar root, Indian pennywort, cashewnvt oil; gurjon oil; wood oil, arsenic and corrosive sublimate.

குட்ட நோதனம், see குட்ட சிகிச்சிதம்.

குட்ட நோய், see குட்டம்.

குட்ட நோய் கடிய காரா, குட்ட நோயைத் தீர்க்கும் கருப்பரிசி, a kind of black-rice said to cure leprosy.

குட்டப் பாண்டு நாசனி, see கரு மருது.

குட்டமம், கோஷ்டம், see குட்சிம்.

குட்ட மயம், குட்டம் நிறைந்தது. full of leprosy; leprous.

குட்டம், குளம், tank; 2. கோஷ்டம், Arabian costus—Costus speciosus; 3. ஆழம்; depth; 4. திரள், multitude, see கங் குட்டம், 6. துவாரம், hole; 7. சிறுமை, smallness; 8. குரங்குக் குட்டி, the young of a monkey; 9. see இருள்விடு செடி.

குட்டம், தொழு நோய், அல்லது பெரு வியாதி முற் பிறப்பில் செய்த தீவினைகளால் கன்மம் வந்தடைந்து, தோஷங்கள் திடீரென வுண்டாகி, உடம்பின் குறுக்கு நெடுக்காய் ஓடும் சிரைகளிற் பிரவேசித்து, நாடி, நரம்பு, சவ்வு முதலியவைகளைத் தாக்குவது மல்லாமல் எலும்பு, இரத்தம், மாமிசம் இவைகளைச் சிதைவுறச் செய்து, பிறகு வெளிப் புறத்துத் தோளில் தீவிரமாய்ப் பரவி உடம்பில் பல விதமான தழும்புகளை எழுப்பி தீரா விரணத்தை யுண்டு பண்ணும். இதனால் காது உதடு, மூக்கு, விரல்கள் முதலானதும் தடித்து, உடம்பு மினுமினுத்துத் தோல் கடினமாகி சிவந்தும், வெளிர் மஞ்சளாயும் கொப்புளங்கள் ஏற்பட்டு, தினவு எரிச்சலுடன் புண்ணாகி ஆறுமற் குழி விழுந்து, கடைசியாக முகம் விகாரப்பட்டு விரல்களும் குறையும்.

இது மேகம், கிரந்தி, வண்டுக்கடி, பாம்புக் கடி, பூச்சிகடி முதலிய காரணங்களினாலும், பிறரிடத்தி லிருந்து தொத்து வகையினாலும் பிறவியினாலும் உண்டாகிற தென்று சிலர் அபிப்பிராயம். இவையும் மேற்கண்ட கர்ம வினையை அனுசரித்தே வரும் என நிச்சயிக்க இடமுண்டு; இதில் அநேக விதங்களுண்டு. அவையாவன:—leprosy — Lepra arabum alias Leprae verae. It is a disease believed to be due to a reflection of one's evil actions (Karma) in one's previous births. The disease appears all on a sudden and gradually spreads over and affects the nerves blood-vessels, mucous membrane etc. internally; and after eating away the flesh and bones therein comes out with increased sensitiveness and inflammation in some parts of the skin, developing patches of varied form and size. After a time, the ears, the lips, the nose and other parts get thickened in size, while the skin itself, becomes glossy and thick with red or yellowish-white patches. It is marked by blisters on the skin accompanied by itching and burning sensation; and they in turn, burst in to perforating ulcers which sometimes eat away a large portion of the face; and finally the fingers and toes contract and then mutilate and drop off.

Some authors of Indian Medical science attribute the origin of this disease to several pathological causes such as venereal complaints, syphilis, ring-worm, snake-bite, poisonous insects bite or sting, infection, inheritance etc. Even in such cases, it is contemplated that the circumstances leading to them are entirely based on one's previous Karma. The following are the eighteen varieties of leprosy:—

A. ஆயுள் வேதப்படி, according to Ayurveda.

1. அவுதும்பர குட்டம்—அத்திப் பழக் குட்டம், leprosy with lived blotches resembling the ripe fig.

2. மண்டல குட்டம், leprosy with elevated, black, round and spreading patches; and confluent ulcers with leprous germs,

3. விசர்ச்சிக குட்டம், leprosy with black ulcers discharging morbid fluid or followed by serous exudation.

4. உருகியசிம்மிக குட்டம், one attended with ulcers having granuling base.

5. சரும குட்டம் — யானைத் தோற் குட்டம், a from with skin thick like elephant's skin.

6. ஏக சரும குட்டம், one deprived of perspiration, in which patches are very large, of a dark brown colour and oblong like the scales of a fish: while the skin itself is rough like elephant's skin.

7. கிடிம குட்டம், one followed by patches of a dark yellow-colour like the cicatrices of healed ulcers,

8. சித்துமா குட்டம், a kind of leprosy with small, white or copper-red spots which spread over large surfaces accompanied with a thin mealy dust—Lepra vulgaris.

9. அலசக குட்டம், a mild form in which tubercles are large, of a red colour and very itchy.

10. விபாதிகா குட்டம் — கை கால் வெடிப்பு, one characterised by sores in hands, feet, and about the nails, accompanied with small fissures of a red colour.

11. தத்துரு மண்டல குட்டம்—அக்கி வட்டம், a kind of leprosy in which the patches are of a slightly dark reddish colour like herpes.

12. சதாரு குட்டம், a form attended with phagedenic ulcers.

13. புண்டரீக குட்டம்— வெண்டாமரைக் குட்டம், a variety in which the patches are pale-red in the centre, and dark and dull-red on the edges resembling the petals of the lotus.

14. விசுபோட குட்டம்—கொப்புளக் குட்டம், a form marked by boil or eruptions of a dark yellow or red colour and a skin dry and thin.

15. பாமா குட்டம், one attended with multilation of the extremeties —Lepra multilans.

16. சருமதல குட்டம்—செம்புள்ளிக் குட்டம், a mild form of leprosy with red spots—Macular leprosy.

17. காகச குட்டம் — செம்புள்ளிகள் கருகி ஏற்படும் குட்டம், leprosy with black red spots.

18. கபால குட்டம், — மண்டைக் கரப்பான், a form of leprosy with black and purplish patches resembling broken pieces of a black earthen vessel.

B. தமிழ் வைத்தியத்தின்படி according to Tamil Medical science:—

1. நீர்க் குட்டம், leprosy with serous exudation.
2. வெண் குட்டம், white leprosy.
3. சொறி குட்டம், psoriasis.
4. கருங் குட்டம், black leprosy.
5. பெருங் குட்டம், true leprosy.
6. செங் குட்டம், macular leprosy.
7. பொரி குட்டம், leprosy with granules.
8. விரி குட்டம், leprosy with fissures.
9. எரி குட்டம், one with burning sensation.
10. விரற் குறைக் குட்டம், lepra mutilans.
11. சடைக் குட்டம், leprosy with confluent ulcers.
12. யானைக் குட்டம், thick-skinned leprosy.
13. திமிர் குட்டம், anaesthetic leprosy.
14. விரணக் குட்டம், ulcerated leprosy.
15. காய்க் குட்டம், nodular leprosy.
16. அழிக் குட்டம், a form with sloughing ulcers.
17. கிருமிக் குட்டம், leprosy with microbes.
18. ஆருக் குட்டம், incurable leprosy.

NOTE 1.—In Tamil Medicine, குட்டம் means cutaneous affections in general; and so it is a comprehensive term used for various skin diseases. It is considered to be a highly contagious disease arising from various causes such as, constant use of milk in combination with the meat of any domestic: acquatic or amphibious animal, sexual intercourse immediately after partaking any oleaginous substance etc.

In this, the enraged Vayu, in combination with the agitated humours (Pitham and Kapham) enters into the vessels or ducts, which tranversely spread over the body. It is Vayu which deposits Pitha and Kapha (பித்தம், கபம்) on the skin-surface through the medium of their channels and spreads them over the entire surface of the body.

The regions of the skin in which the aforesaid morbific diatheses (தோஷம்) are deposited, become marked with circular rings or patches. In course of time. if the diseaes is neglected at the outset, it enters deeper into the tissues and destroys the fundamental parts (தாதுக்கள்) of the human body.

The prenopitory symptims are: — Roughness of the skin, sudden horripillation itching sensation, anaethesia of the parts, black colour of the blood and rapid growth and spread of ulcers.

NOTE 2.—Some authors classify this disease only under eight varieties and they are:—

1. Blisters in feet.
2. Deformity of generative organs.
3. Cutaneous fissures.
4. Elephantiasis.
5. Ulcers.
6. Coppery blotches — Lepra maculosa.
7. Black leprosy—Lepra graecorum of the highest degree of scabbedness. canker of the whole body.
8. White leprosy — Lepra mosaica.

குட்டம் பிடித்தல், see குட்டங் கொள்ளல்.

குட்டம்போக்கி, வெண் கடுகு, white mustard; 2. குட்டத்தைப் போக்கு மருந்து, that which cures leprosy; 3. பாற் சோற்றி, caoutchouc plant — Euphorbia cattimandu; 4. சுரபுன்னை, soora poon—Ochrocarpus longifolius.

குட்டரி, மலை, mountain; 2. குன்று, hill.

குட்டரோகம், see குட்டம்.

குட்டரோகவக்கினி, கோஷ்டம், see குட்டமம்.

குட்டரோகி, குட்டத்தினால் பீடிக்கப் பட்டவன், one attacked with leprosy.

குட்டல், தலையிற்குட்டல், cuffing on the head

குட்டவிசர்த்தி, வெட்டிவேர், Khus khus root—Andropogon aromaticus.

குட்டவியாதி, see குட்டம்.

குட்டவிரணம், குட்ட நோயில் ஏற்படும் விரணம் அல்லது புண், ulceration or sores in leprosy.

குட்டவிரணம்போக்கி, சேங் கொட்டை, marking nut — Semecarpus anacardium. It is so called from its use in ulceration of leprosy.

குட்டன், சிறுவன், lad; a young boy; 2. குழந்தை, baby; 3. ஆட்டுக் குட்டி, lamb; 4, see குட்டரோகி.

குட்டாம், பெருங்காயம், asafoetida.

குட்டாரி, கந்தகம், sulphur.

குட்டி, நாய், ஆடு, பூனை, பன்றி முதலியவைகளின் குழந்தை, the young of any animal as dog, sheep, cat, pig etc: 2. சிறுபெண், a young girl: 3. கடைக் குட்டி, youngest or the last child (son or daughter); 4. காக்கைப் பலா, false Kamela; 5. see கடிச்சை; 6. கோஷ்டம், see குட்சிம்; 7. வாழைக் கன்று, young plantain tree; 8. see குட்டிச் சாத்தான்; 9. ஓர் செல்லப் பெயர், a pet name for a child especially a girl; 10. பாம்புக் குட்டி, சுறாக் குட்டி முதலியன, the young of serpents and sharks; 11. அழிகுட்டி, aborted fetus or child.

குட்டிகம், see ஓரிலைத் தாமரை.

குட்டி கரைத்தல், கருப்பம் சிதையும் படிச் செய்தல், causing abortion; 2. கர்ப்பம் மருந்துகளினூற் கரைதல், abortion induced by drugs or other medicines; Abactio—Abaetus venter.

குட்டிகா தக்காளி, see குட்டித் தக்காளி.

குட்டிக் கழுதை, கழுதைக் குட்டி, the young of an ass.

குட்டிக் காளுங்கெளிறு, கெளிற்று மீன் குஞ்சு the young of a cat-fish.

குட்டிக் கிழங்கு, ஒரு கிழங்கை யொட்டிமுளையும் சிறு கிழங்கு, a small esculent root growing as an off-shoot from another root.

குட்டிச் சாத்தான், விகார ரூபத்தோடு நாய் போல் அலையும் ஓர் ஆண் குறளி தேவதை. இது செப்படி வித்தை, மாந்திரிகம், சால வித்தை இவைகளுக்கு மிக்க வுபயோகமாக விருக்கும், A goblin invoked in a juggling trick or magic. It is a mischievous devil or spirit with an ugly form and of a wandering nature. See குறளி.

குட்டிச் சாத்தி, ஓர் பெண் தேவதை, a female spirt. C. f. குட்டிச் சாத்தான்

குட்டிச் சாத்திக் காரன், குட்டிச் சாத்திக்கு ஏவல் விடுவோன், one who has power over a female spirit (elf).

குட்டிதம், நாளத்தை தாறு மாறுக்க் கீறல், an unskillful opening of a vein, which is cut to pieces repeatedly with knife.

குட்டித் தக்காளி, சிறு தக்காளி, see குட்டத் தக்காளி.

குட்டித் தாய்ச்சி, சினை கொண்ட மிருகம், animal being with young. C. f. பிள்ளைத் தாய்ச்சி, a pregnant woman.

குட்டித்தேவி, விளா, wood-apple tree.

குட்டி நரை, பாலியத்தி லேற்படும் நரை, premature, gray haia.

குட்டிப் பலா, குட்டிப் பிலா, small jack tree —Artocarpus integrifolius. 2. பேய் முன் ஈனா, charcoal tree—Sponia wightii; 3. பிராய் மரம், paper tree — Streblus asper.

குட்டிப் பல், முளைக்கும் பல், a short projecting tooth—Snag tooth; 2. பல்லிடையே முளைக்கும் சிறு பல், s small tooth projecting as an off-shoot between the two main teeth.

குட்டிப் பனை, பனையைச் சுற்றிலும் முளைக்கும் சிறு பனை, small stunted palmyra young ores growing at the bottom of a main tree.

குட்டிப பாடவம், see குட்டிப் பிடவம்.

குட்டிப் பாடித்தி, *சிற் றரத்தை,* lesser galangal—Alpinia galanga (minor).

குட்டிப் பிடவம், பிடவு, bedaly emetic nut—Randia malabarica,

குட்டிப் பிண்டம், பிண்டத்திற்குள் பிண்டம் a monster fetus consisting of a small imperfect fetus whithin the body of the, principal fetus — Fetus in fetu.

குட்டிப் பிராய், see குட்டிப் பிலா.

குட்டிப் பிலா, see குட்டிப் பலா; 2. *குற்றிப் பிலா,* stunted jack—Epicarpurus orientalis.

குட்டிப் பை, விலங்கின் வயிற்றில் குட்டியின் மேல் மூடிக் கொண்டிருக்கும் பிண்டப் பை, foetal membranes in animals filled with liquor amnii. which dilates the mouth of the womb.

குட்டிப் போடல், விலங்கினங்கள் குட்டிகள் *ஈனுதல்,* the bringing forth of the young by beasts.

குட்டி யச்சம், இளம் அகத்திச் செடி, young sesbane plent—Sesbania grandiflora.

குட்டி யழித்தல், சோரப் புணர்ச்சியினால் நேர்ந்த கருவைக் கரைத்தல், (a contemptuous term) causing miscarriage or abortion of a child conceived in adultery. See *குட்டி கரைத்தல்.*

குட்டி யழிவு, கருப்பத்திற் கேற்படும் நாசம், abortion.

குட்டி யிடுக்கி, *சிற் றரத்தை,* lesser galangal —Alpinia galanga (minor). See கோரைக் *கிழங்கு;* 2. *கோஷ்டம்,* Arabian costus—Costus speciosus; 3. பயிரின் களை, corn weed; 5. see *கற்றாழை.*

குட்டிரம், *சணல்,* Indian hemp — Crotolaria juncea.

குட்டி வாசுகி, *சப்பாத்துக் கள்ளி,* prickly pear—Opuntia monocantha.

குட்டி விரல், விரலோ டடுத்து முளைக்கும் சிறு *விரல். ஆறுவது விரல்.* the sixth extra small finger or toe—Hyperdactylia.

குட்டி விலாங்கு, சமுத்திரத்தில் பொரிக்கப் பட்டு முட்டையினின்று வெளிவந்த வுடன் நதிகளுக்கு வந்துசேரும் ஓர்வகை விலாங்கு மீன். இது பாம்பைப் போல் நீளமாயும், பழுப்பு நிறமாயும் உள்ளது; தின்பதற் குதவும், a kind of river-fish or Eel fish—Elver. Eggs of this fish are hatched in the sea and the young fishes so produced frequent the river. It is long and brown in colour very much resembling the snake; and it is used in food.

குட்டி விளா, நரி விளா; நில விளா, wood apple — Feronia elephantum; 2. *நாய் விளா.* dog-wood apple — Limonia acidissima.

குட்டி விளா, இது ஓர் சிறிய பூடு; ஒருஅடிக்கு மேல் வளராது. இப் பூடு சாதாரணமாக *சீதளத்தையும், சுரத்தையும் போக்குங் குண முள்ளது.* இதன் இலையை வெந் நீரில் கஷாயமிட்டு நாவறட்சி, சுரம், பிரமேகம் இவைகளுக்குக் கொடுக்கலாம்; It is a small plant of the Feronia genus about 1 ft. high. It is employed in medicine for curing cold and fever. Decoction of boiled leaves is given for parched tongue, fever, diabetes etc.

குட்டி விளாதிதம், சருகு மஞ்சள், dried turmeric.

குட்டினம், see *கருஞ் சீரகம்,* 2. *மாதுளை,* pomegranate—Punicam granatum.

குட்டு, தலையில் குட்டுதல், giving a blow on the head with the first; cuffing on the head; 2. குட்டம், leprosy; 3. கோஷ்டம் see *குட்டி யிடுக்கி,*

குட்டுமம், பூ வரும்பு, the bud of a flower.

குட்டு மலம், see குட்டுமம்.

குட்டை, ஓர்வகை சொறி கரப்பான், இதனால் உடம்பின் தோலில் குருக்கள் கண்டு உரிந்து, உதிர்ந்து நமைச்சல் கண்டுதோலின் உணர்ச்சி மாறுபடும், a disease characterised by small eruptions, exfoliation of the cuticle in minute portions or scales; itching sensation occasioned by morbid change of the sensibility of the skin—Scurf; 2. குள்ளம், dwarfishness; shortness; 3. குறுணி, a measure of capacity known as Marakkal; 4. வெள்ளை குட்டம், white leprosy.

குட்டைக் கால், குள்ளமான கால், short leg; 2. அங்கக் கேடான கால், deformed leg.

குட்டைக் கை, குறைந்த கை, short arm; 2. அங்கக் கேடான கை. deformed arm

குட்டைச்சி, குள்ளப் பெண், a short woman.

குட்டைச் சுருட்டை, ஓர்வகைப் பாம்பு, a kind of coiled snake—Oligodon subgriseus.

குட்டைப் புடல், கொம்புப் புடல், short snake-gourd—Trichosanthes nervifolia.

குட்டையன், நோ யுள்ளோன், sickly man; 2. குள்ளன், dwarf.

குட்டை யாடு, பள்ளை யாடு, a variety of small goat.

குட்டை யிடுக்கி, see குட்டி யிடுக்கி.

குண கண்டி, சிவதை, Indian jalap or turpeth root—Ipomaea. turpethum.

குணகம், அப்போது பிறந்த குட்டி, the young of an animal just born; the new-born young of an animal.

குண கரணகம், வேண்டா வெறுப்புக் காட்டுகை, assumed faculty. of showing or exhibiting neither desire nor vexation,

குணகு, பிசாசம், a devil; a goblin,

குணக்கம், குருந்த மரம், a species of wild lime—Atlantia racemosa.

குணக்காரி, குன்றி மணி, jeweller's bead,

குணக்கி, இலைக் கள்ளி, which see.

குணக்கு, நோயின் சிக்கல், கோளாறு முதலியன, complications of diseases; 2. கோணல், curvature; 3. பிணக்கு, love quarrel.

குணக்குதல், வளைத்தல், bending.

குணக்கு மணல், வெள்ளி மணல், silver ore.

குணக் கூறுபாடு, வஸ்துக்களின் பிரிவினை, பேதம், குணம் முதலியன, the determination of the division, nature and number of elements that compose a body — Qualitative analysis.

குணக்கேடு அவ குணம், bad disposition. See குணப் பிழை,

குணங் காட்டல், நோயின்வாசியைக் காட்டுதல் showing signs of cure or improvement in other ways in a disease; 2. இயற்கை அல்லது சுபாவ குணத்தைத் தோன்றச் செய்தல், exhibiting one's real character or natural disposition.

குணங்குறி, நோயின் அடையாளமும் சுபாவமும், symptom, disposition and characteristics of a disease.

குணங்குறி நூல், நோயின் தன்மை, குணம், அடையாளம் முதலியவைகளைக்கூறும்நூல். that branch of medicine which explains the nature and quality of diseases together, with their signs and symptoms... Semeiology or symptomatology.

குணசலி, வல்லாரை, Indian penny-wort—Hydrocotyle asiatica.

குண சாலி, நற்குண முடையவன், a person of good qualities; 2. கொத்தான், moss-creeper—Cassytha filiformis; 3. தாளகம், yellow orpiment.

குணசாலிச்சி, see உத்திரி மாரி,

குணசாலியாள், தாளகம், yellow orpiment.

குணசால் மூன்றுக்கு மித்துரு, முடவாட்டுக் கால், (lit) a plant resembling the crippled leg of a sheep (unidentified).

குண சீலன், நற் குணம், நன் னடத்தை, நற் செயல் முதலிய மேம்பட்ட குணங்கள் வாய்ந்தவன், a man of sterling qualities, excellent conduct and noble actions.

குண சுபாவம், சுபாவ குணம், natural disposition.

குணட்டு, திராட்சைக் குலை, cluster of grapes.

குணஷ்டை, நோயின் தோஷங்கள், morbid symptoms of a disease. 2. தொந்திரவு, trouble.

குண தத்துவம், குணத்தின் சுபாவத்தன்மை, the nature of quality in general; 2. பிரகிருதியின் தன்மைக்கும், மனிதனின் சுபாவத்திற்கும் உண்டான சம்பந்தம், the relative connection between man and Nature in regard to the manifestations of the three-fold doctrine of Nature.

குண தோஷம், ஒருவன் குணாதிசயங்களில் ஏற்படும் குற்றங்கள், eccentric qualities of a man leading to morbid changes in his character.

குணத்தி வல்லாரை, see குணசலி; 2. சிவகரந்தை, fever toolsy — Sphoeranthus amaranthoides,

குணத்தித் தரு, see உத்தாமணி.

குணத் திரயம், முக் குணம், the three fundamental qualities in man emanating from the three-fold principles in nature i. e. purity, passion and mental. darkness.

குணத்திற்கு வரல், நோயி னின்று தெளிந்து வருதல், recovering from illness.

குணந் துல்லியம், வெண் பாதிரி, white coloured fragrant trumpet flower—Stereospermum chelonoides.

குண நிவர்த்தி, நாரத்தை, bitter orange—Citrus aurantium (bigaradia).

குண நூல், நோய் அல்லது மூலிகை மருந்துகளின் குணாதிசயங்களைக் கூறும் ஓர் நூல் that branch of medical science dealing with the nature and quality of any disease or drug.

குணபம், பிணம், corpse; 2. இடுகாட்டுப் பிசாசம், devils or evil spirits haunting about the burial ground; and they are supposed to animate dead bodies.

குண பலம், see அதி விடயம்,

குண பாகம், நோய்குணமாகி வருகிற நிலைமை, the favourable progress in a disease; the stage of recovery from illness; 2. தைலம், லேகியம் முதலியவைகளைத் தயாரிக்குங்கால் அனுசரிக்கும் முறைமை, the rules and processes adopted in the preparation of medicated oils, electuaries etc. 2. சுக்கு நாறி, lemon grass—Andropogon nardus.

குண பாகி, see குண பாசி.

குண பாசி, பேய், devil; demon; 2. பிசாசம், goblin.

குண பாடம், பதார்த்த குணநூல், that branch of medical science which deals with medicinal drugs and their uses — Materia medica.

குணபாட வியற்று வோன், நோயின் கூறுபாடுகளை அறிந்தவன், one who is thoroughly acquainted with the nature of diseases and their symptoms etc.—Pathologist.

குண பாடல், see குண வாகடம், 2. மருந்தின் தன்மை, குணம். இவைகளைப் பற்றிப்பாடிய நூல், any treatise in verse on the nature, quality etc. of drugs.

குண பேதம், குணத்தின் வேறு பாடு, change in the disposition of a man; 2. தேக குண வித்தியாசம். idiosyncrasy: 3. நோய்களின் குறை குணம், distinct qualities of diseases—Diagnosis 4. நோயின் அசாத்திய நிலை, unfavourable symptoms of a disease; that stage of a disease in which recovery is considered impossible.

குண பேதி, குணத்தைப் பேதிக்கு மருந்து; any drug or medicine likely to bring about changes in one's qualities or character such as, intoxicants, stupefying drugs etc.

குணப் படுதல், நோயி னின்று சுகப் படுதல், recovering from illness.

குணப் படுத்தல், நோயை அவிழதத்தினல் சொஸ்தப் படுத்தல். effecting the cure of a disease through medicine; 2. சுக மடையும்படிச் செய்தல், restoring one to health.

குணப் பாடு, சொஸ்தம், recovery from illness.

குணப் பிரகிருதி, இயல்பா யுண்டான குணம், natural disposition or temperament.

குணப் பிரதி, see குணக் கேடு.

குணப் பிழை, கெட்ட குணம், bad qualities in general; 2. நோயினுல் நேர்ந்த குணக் கேடு, affection of a man's disposition directly due to some diseases.

குணமாகத் தக்க, சொஸ்தமாகக் கூடிய. fit to be cured; that may be cured or healed —Curable.

குண மாக்கல், நோயை சொஸ்தப் படுத்தல், curing diseases.

குண மாதல், சௌக்கிய மாதல், becoming cured; being restored to health; recovering from sickness.

குணமா யிருத்தல், சுகமா யிருத்தல், being in sound health; to be well-conditioned.

குணமாய்ப் பேசல். அறிவோடு பேசுதல், talking with reason and sense; talking sanely; 2. சன்னி, மயக்கம், வலிப்பு முதலியவைகளினுல் நினைவு தடுமாறிப் பேசுவதினின்று தெளிந்து சாதாரணமாய்ப் பேசல், talking sanely after recovery from the effects of delirium, giddiness. fits enc. involving incoherant talks.

குணமாய்ப் போதல், நோயினின்று தெளிதல், recovering from illness.

குண மாலி, மாவிலிங்க மரம், lingam tree—Crataeva religiosa.

குண முள்ளது, சொஸ்த மாக்கக் கூடியது. that which has curative virtues or healing power; 2. நற்குணம் வாய்ந்தது, anything having good qualities.

குண முற்றவன், நற்குணம் வாய்ந்தவன், man of good qualities.

குண மூலி, நோய்களை குணமாக்கும்மருந்துகள் drugs having healing power; curative drugs.

குணம், ஒழுக்கம், character: 2. சத்து, essence; 3. நோயின் குணம், the quality of a disease; 4. மூலிகையின் குணம், the virtue of a drug; 5. தன்மை அல்லது

யோக்கியதை, merit; 6. மனோ சுபாவம். (in Metaphysics) disposition of mind; 7. முக்குணம், the three fundamental qualities in nature; 8. சொஸ்தம், the gradual recovery from illness — Convalescence; 9. நிறம், colour; 10. குடம், water-pot: 11. நற்குணம், good nature; good quality; 12. துற் குணம், ill-nature; bad quality; 13. சீலைப் பேன், an insect in clothes; louse; 14. தொப்புள் அழுக்கு, dirt in then navel.

குணம் பாழ், திகைப் பூடு, இதை மிதிப்பதனால் திகைப் புண்டாகும், a plant supposed to cause perplexity or bewilderment when touched or otherwise coming in contact with it; 2. பைத்தியம், lunacy.

குணம் பேதித்தல், குணம் மாறுதல், change of temperament of mind or disposition as in some diseases. See குணபேதம்.

குண ரஞ்சிதம், மனோரஞ்சிதம், Cupid's plant —Artabotrys odoratissimus.

குண லாகிதம், சம்பங்கிப் பூ, champauk—Michelia champaka.

குணலி, சிந்தில், moon-creeper — Menispermum cordifolium; 2. செவ் வகத்தி, red sesbane—Coronilla coccinea.

குண வல்லபை, அதி விடயம், Indian atees—Aconitum heterophyllum.

குண வாகடம், நோய்களின் குணங் குறிகளைப் பற்றிக் கூறும் ஓர் வைத்திய நூல், a medical troatise on the nature and symptoms of diseases—Symptomatology.

குண வாகு, குணத்தின் இயல்பு, natural disposition.

குண விலக்கணம், நோயின் குணத்தைப் பற்றிய நூல், a treatise on the nature, sign and symptoms which are characteristic of and peculiar to a disease — Pathognomy.

குணனை வில் லாக்கினேன், துரிசு, blue vitriol—Copper sulphate.

குணு குணம், நோயின் சாத்தியம் அல்லது அசாத்தியத்தின் தன்மை, the curable or incurable nature of a disease; 2. நன்மை அல்லது தீமையைப் பயக்கும் குறிகள், the favourable or unfavourable symptoms of a disease; 3. நன்மையும் தீமையும், merits and demerits.

குணு குண விளக்கம், நோயின் குணத்தையும் மாறுபாட்டையும் கூறும் நூல், a medical work on the nature of a disease together with its changes.

குணு குணு, see குனு குனு.

குணுசகம், சிறு காஞ்சொறி, small climbing nettle—Tragia involucrata (cannabina).

குணுதியகம், see அரிஞ்சல்.

குணுலம், ஓர் பறவை, a bird.

குணுலயம். see அறுகம் புல்.

குணுனுபவம், குணத்தின் அநுபவம். experience of nature as of diseases.

குணி, ஊமை, a dumb person; 2. நகச் சுற்று, witlow; 3. நொண்டி, a crippled person 4. சொத்தைக் கை யுடையோன்; a cripple with a crooked or withered arm.

குனு, புழு, worm; maggot.

குனுகினி, கிருமிக் கொல்லி, a remedy which expels worms from animal bodies—Vermifuge.

குனு குனு, see குனு குனுத்தல்,

குனு குனுத்தல், மூக்கின் வழியாய்ப் பேசல் speaking through the nose—Rhinism.

குனுக்கு, வெள்ளி, silver—Argentum.

குனுங்கல், வருந்தல், suffering as from cold.

குனுங்கு, பேய், devil; 2. சுடுகாட்டுப் பேய், goblin; 3. மொச்சை நாற்றம், the peculiar smell of cattle, butter etc.

குனேவண்டு, ஓர் வண்டு, a kind of beetle.

குணேடகம், see அதிவிடயம்.

குணேட்டம், see குணேடகம்.

குண்டக் கன்னிகை, தாசி, a prostitute.

குண்டக் காய்ச்சி, பானையைப் போல் காய்க்கும் ஓர் வகைத்தேங்காய், a species of round cocoanut resembling a pot.

குண்டச் சம்பா. see குண்டு சம்பா.

குண்டடி காயம், துப்பாக்கியினாற்சுட்ட காயம் gunshot wound: 2. நோய் கொண்ட பெண்ணைப் புணருவதா லேற்படும் அரையாப்புக் கட்டி, (fig) a venereal bubo of the groins as a result of venereal or syphilitic contact.

குண்டடித்தல், பங்கி யடித்தல், being used or becoming accustomed to bhang.

குண்டடியன், ஆண் சிவிங்கி, leopard—Felis jubata.

குண்டண்டம், பெருமுத்தக் காசு, cyperus root — Cyperus rotundus; 2. பேரண்டம், the human skull.

குண்டம், குடுவை, a small pot; 2. கற்பழிந்து வேசையானவள், a woman who became a prostitute after surrendering her chastity; 3. குளம், tank; 4. பாசிப் பயிறு, green gram; 5. பெரும் பானை, a large pot; 6. கிணறு, well; 7. குழி, a deep hole; cavity; 8. குட்டை, pond.

குண்டல பாலை, ஓர் கற்ப மூலிகை, இது 23 மகா மூலிகைகளி லொன்று, a rejuvenating drug (unidentified). It is one of the 23 all-healing drug contemplated in in the Siddhars medicine.

குண்டலப் புழு, தொட்டால் சுருட்டிக் கொள் ளும் அட்டை, see அட்டை, 2. ஓர் வட்டப் புழு, a round worm.

குண்டலப் பூச்சி, see குண்டலப் புழு.

குண்டல மார்க்கம், பாழ் மண்டலம், etheric region.

குண்டலம், செவ் வாப்புக் கட்டி, see குண்டாலம்; 2 வட்டம், circle: roundness; 3. ஆகாயம், atmosphere; ether; 4. மந்தாரை, mountain ebony—Bauhinia variegata.

குண்டலம் பாலை, see குண்டல பாலை.

குண்டல வாசி, ஆகாயப் பாழில் சஞ்சரிப்பவன், one who travels in the etheric region of the sky.

குண்டல வாயு, வாயு மிகுந்து வயிற்றில் கல் லைப் போற் திரண்டு பிறகு சிதறி உடம்பு முழுவதும் பரவிக் குத்தலை யுண்டாக்கிப் பசி தீபனத்தை யொடுக்கும் ஓர் வாயு நோய், a disease characterised by the aggravated condition of Vayu in the intestines, which in turn extends all over the body decreasing gradually the appetite; 2. ஆகாயம், ether.

குண்டல வுளுவை, ஆறு அல்லது கடலில் வாழும் ஓர்வகை உளுவை மீன், a river-fish or sea-fish known as ringed-goby —Gobius striatus. See உளுவை.

குண்டலாத்தி, சங்கன் வேர், mistletoe berry-thorn—Azima tetracantha.

குண்டலி, சங்கு, see குண்டலாத்தி; 2. சீந்தில் moon creeper — Menispermum cordifolium; 3, மூலா தாரம், the first and the lowest psychic region in the human body viz, the sacral plexus; the posteriors including the hip; 4. see குண்டலி வாயு, 5. மான், deer; 6. குண்டலி சக்தி, serpent's power — the cosmic energy supposed to be coiled up in the sacral region. (உ-ம்.) "குண்டலி யதனிற் கூடிய அசபை" (விநா. அக.); 7. தாளகம், orpiment: 8. பாம்பு, snake; 9. மயில், peacock; 10. நாபித் தானம், the navel region; 11. சுருட்டை, carpet-snake—Echis carinata; 12. பிரணவம், the mystic sound "Om"; 13. பிராண வாயு, the Prana (உ-ம்) உண்மை யென்ற குண்டலியே பிராண வாயு, ஓங்காரம் பிண்டத்தி லுதித்த ஆன்மா.

குண்டலிகம், மூலாதாரம், see குண்டலி.

குண்டலிகா, சம்பங் கோரை, a kind of sedge-grass.

குண்டலிக் கவிசை, வயிற்றி லேற்படும் ஓர் வகைப் பாண்டு, abdominal dropsy—Ascites.

குண்டலிக்குள் காயசித்தி, நாகதாளி, snake-hood fig—Opuntia dillenii.

குண்ட லிங்கம், மலாக்கா சாம்பிராணி, Malacca benzoin — Styrax benzoin. See கூந்த லிங்கம்.

குண்டலி சக்தி, வல்லமை சக்தி, the serpent's power coiled up at the end of the spinal column. See குண்டலி.

குண்டலிச் சம்பங்கி, புல் சம்பங்கிப் பூ, சுருட்டைச் சம்பங்கி, a species of coiled champauk.

குண்டலித்தாய், சக்தி, the Universal energy; 2. துர்க்கை, the gooddess Durga.

குண்டலிப் பாம்பு, see குண்டலி சக்தி.

குண்டலிப் பாலை, ஓர்வகைப் பாலை, a kind of paulay (Mimusops genus)

குண்டலிப் பால், see எழுவகைப் பால்.

குண்டலியா, சீந்தில், see குண்டலி.

குண்டலி யோகம், சிவ யோகம், a kind of Yoga practice.

குண்டலி வாயு, see குண்டலினி; 2.வயிற்றில குத்தலை யுண்டாக்கும் ஓர்வகை வாயு, a kind of flatulency due to air or gas in the stomach or the intestines. It is attended with acute pain.

குண்டலினி, மூலாதாரத்தில் பாம்பைப் போல் சுருண்டுக் கொண்டிருக்கும் ஓர்வித சக்தி, இச் சக்தியை யோக சாதனையினால் தான் எழுப்பக் கூடும். ஆருதாரத்தி னாடியிற்

குண்டலினி

காட்டி யுள்ளபடி மனித வுடம்பினில் ஆறு தலங்க ளுண்டு. இவ்வாறு தலங்களில். குதத்திற்கும் குய்யத்திற்கும் இடையே யுள்ள மூலாதாரம் தான், முதன்மையான இடம். இதில்தான் குண்டலிச் சக்தி அமைந் துள்ளது. இத் தலத்திற்கு கணபதியும் வல் லபையும் காரண கர்த்தர்கள். குண்டலித் தாயாகிய இவ் வல்லபையே குண்டலிச்சக்தி யெனப்படும். பிரணவமாகிய 'ஓம்' என்ப தும் இதில் அடங்கியுள்ளது. தாந்திரிக நூலில் இச் சக்தியே சுருட்டைப் பாம்பு போற் காட்டப் பட்டுள்ளது.

மானிடருள் ஒவ்வொருவ ரிடமும் இச் சக்தி வாய்ந் திருந்தாலும், அச் சக்தியை எழுப்பி அதற்குண்டான சித்திகளை சாதார ணமாகத் தம் வசமாக்கிக் கொள்ள ஒருவ ராலும் இயலாத காரியமா யிருக்கின்றது. இதைச் சபம், தபம், தியானம், யோக சாதனைகள் முதலிய பழக்கங்களினால் தான் வசப்படுத்தக் கூடுமே ஒழிய வேறு வகை யாகச் சித்தியாக்கிக் கொள்ள முடியாது. இத்தகைய சாதனைப் பழக்கங்களினால் மூச் சொடுங்கிய பின்னர், இச் சக்தியானது அணு அணுவளவாகத் தன்னிடத்தை விட் டகன்று, முள்ளந் தண்டின் கயிற்றிற்கு நடுவே யுள்ள சுழிமுனைக்குப் போகும்தாரை யின் வழியாய், சாதிப்பவரின் மனோ சக்திக் கும், சாதனைக்கும் தக்கவாறு மேலுயர்ந்து செல்லும். இவ்வாறு தலமும் ஒன்றிற் கொன்று சம்பந்த மில்லாதபடி, நரம்பு முடிச்சுகளினால் இடைக்கிடையே மூடப்பட் டிருப்பதால், இக் குண்டலிச் சக்தி ஒன்று தான் இதன் வழியாக ஊடுருவிச் செல்லக் கூடும் அப்படி மேல் நோக்கிச் செல்லுங் காலத்தில் ஆறு தலமும் தரிசனையாகும். அப்பொழுது தான் எல்லாவித சித்திகளும் கைகூடும்; அநேக காட்சிகளும் தெளிவாகத் தோன்றும்: நினைத்த காரியங்கள் எல்லாம் சித்தியாகும்.

இச் சித்திகளை ஒரு பொருட்டாக யெண் ணாமல் இவ்வாறு தலத்தையும் கடந்து போனால், கபாலத்திலுள்ள ஆக்கினைத் தானத்தின் உச்சியி லுள்ள பிரம ரந்திரத்தில் இச் சக்தி போய் ஒடுங்கும். இப்படி ஒடுங் நும் காலத்தில்தான் சமாதி கைகூடும், serpent's power coiled up at the end of the spinal coloumn in the sacral region. It is said to be a awakened by Yoga practice As pointed out in the diagram under ஆறுதாரம், there are six psychic centres (nerve-plexuses) in the human body; and that which is situated in the sacral plexus between the anus and the penis is the most important being the one from which the said power starts and passes upwards along the remaining centres; and in it, are stored the dynamic forces of life and energy popularly known as Kundali Sakti or Serpent Vallabhai is said to be lording over this centre; and it is this Goddess Vallabhai that represents the Creative force. Moreover the sacred cosmic sound 'Om' is merged in this centre. In Tantric science, the said stored-up energy is described as a 'coiled serpent' sleeping in the human body.

Although this spiritual power of Kundalini is latent in all human beings it is impossible to awaken it for purposes of gaining psychic powers. This can only be effected successfully through the practice of Japam (chanting of Mantras), Tapas (penance), Dyana (Meditation), Yoga (suspension of mind functions) and other spiritual exercises; for, it is only by such practices. that breath has to be controlled. With the suspension of breath, begins the real awakening of the dynamic force lying dormant at the base of the spinal column in the Sacral plexus; and when once this is roused. it slowly forces, atom by atom, upon the centre of the spinal cord; and gain entrance into the middle channel of சுழிமுனை where from it passes through the other centres according to the will-power and persistent practice of the aspirant.

Because these nerve-centres are closed and bound by knots or obstructions, the Kundalini force alone can pierce through these obstructions; and the moment, the breath is confined in the body. the Kundalini forces its way up gradually through the subtle passage in the spinal-cord reaching the other five centres, As it rises higher and higher, the aspirant naturally attains all wonderful Siddhis (psychic powers). gets spiritual visions and obtains all that he desires; but, if he continuses his practice, even after reaching these six centres without aspiring for the above mentioned Siddhis. the said power flinally

reaches and gets lodged in the hole of Brahma *(பிரம ரந்திரம்)* beyond the Cerebral centre; and here begins the stage which is known as Samadhi (complete concentration) when all external matters and conditions are forgotten. See ஆருதாரம்.

NOTE.—It is the dormant or sleeping power of the Supreme life which is in everything. It is found at the base of the middle channel passing through the spinal cord; and here, it embraces the three channels Idagalai, Pingalai and Suzimuna — the fire, the sun and the moon where these three merge, mingle and create a peculiar substance Vija, which is intensely vigorous and active; and which passes through the entire human body as a subtle force giving life, motion, sensation and particularly energy. (M. Sircar).

குண்டலினி சக்தி, see குண்டலினி; 2. சுத்த மாயை, absolute Maya.

குண்டலீகம், சங்கஞ் செடி, see குண்டலாத்தி.

குண்டல், இசங்கு, which see.

குண்டழித்தல், விலங்கின் விதை யடித்தல், castrating; depriving of virility.

குண்டற் காய்ச்சி, ஓர் வகைத் தென்னை, a kind of cocoanut discriminated according to its fructility.

குண்டன், பருத்து வலுத்து குள்ளமாக வுள்ளவன், a short, stout and able-bodied man.

குண்டாணிக் கொடி, கொம்மட்டிக் கொடி, mortar - flower bindweed — Ipomaea bracteata.

குண்டாதி, பீ நாறிச் சங்கு, smooth volkameria—Cleodendron inerme.

குண்டாலக் கட்டி, செவ்வாப்புக் கட்டி இக் கட்டிகள் பழுக்குங்காலத்தில் பள்ளம் விழும், a skin disease in children characterised by the formation of peculiar blisters or blebs—Pemphigus infantalis.

குண்டாலம், see குண்டாலக் கட்டி.

குண்டால ரோகம், குழந்தைகட்குக் காணும் செவ் வாப்புக் கட்டி, blisters in several parts of the body especially in children. See குண்டாலக் கட்டி.

குண்டாலி, சங்கஞ் செடி, see குண்டாலத்தி.

குண்டாணி, see குண்டாணிக் கொடி.

குண்டி, ஆசனப் பக்கம், the gluteal region; 2. அடிப் பக்கம், the bottom portion of anything; 3. இருதயம், the heart; 4. மூத்திரக் குண்டி, the kidney; 5. மீன் சினை, roe of fish; sprawn; 6. ஈரல், the liver; 7. நொச்சி, chaste tree — Vitex negundo; 8. சூத்தாம் பட்டை, the posteriors; 9. பிட்டம், rump; 10. வயிறு, the stomach; 11. see குண்டி யெலும்பு, 12. ஈரற் கொத்து, the liver, lungs, spleen and other viscera.

குண்டிகம், எரு, வராட்டி, cow dung cake; 2. பேரேலம், large cardamom.

குண்டி காய்தல், வயிறு காய்தல், leaving the stomach empty; 2. பட்டினியா யிருத்தல்; starving as "குண்டிக் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்".

குண்டிக் குளப்புதல், புணர்ச்சி செய்தல், having sexual intercourse.

குண்டிகை, see குடுக்கை; 2. குடம், pot.

குண்டிக்கா யெரிச்சல், மூத்திரக் குண்டிக்குக் காணும் அழற்சி, inflammation of the kidney—Nephritis.

குண்டிக் காய், மூத்திரக் குண்டி, the kidneys; 2. தாமரைக் காய், the heart.

குண்டிக் காய்க் கோசம், குண்டிக் காயைக் கவர்ந்துள்ள பை, the internal capsule or covering of the kidneys — Capsula renalis.

குண்டிக் காய் வலி, குண்டிக் காயைச்சுருட்டிப் பிடிக்கும் நோவு, griping pain of the kidneys; 2. மூத்திரத் தாரையில் கல் லடைப்பினால் காணும் வலி, pain produced by the passage of stone along the ureter—Renal colic.

குண்டிக் கொழுப்பு, குண்டிக்காயின்கொழுப்பு the fatty degeneration of the kidney; 2. மர்ம ஸ்தானம் அதாவது ஆண்குறி அல்லது பெண் குறியி லேற்படும் கொழுப்பு, fatness of the genitals either of a male or female. (slang).

குண்டிப் பட்டை, சூத்தாம் பட்டை, the buttocks.

குண்டிப்பி, சிப்பி முத்து. pearl of oysters.

குண்டிப் புறம், see குண்டிப் பட்டை.

குண்டி முளை, கூபகத்தின் முன் பக்கத்துக்கு மேலாக விருக்கும் ஓர் முளை, the anterior upper bone of the pelvis; the gluteal prominence.

குண்டி யட்சரம், குழந்தைகட்கு ஈரல்வெந்து நாக்கு சிவந்து, உடல் நொந்து வாந்தியும்

பேதியுங் காணும் ஓர் சுரல் நோய், disease of the liver in the children attended with inflammation of the liver and the tongue bodily pain. purging and vomitting—Ulceration of the liver.

குண்டி யெலும்பு, பிட்ட வெலும்பு, bones of the pelvis—Os sacrum.

குண்டில், ஓர் செடி, a plant; 2. முதுகு, the back.

குண்டி வற்றல், பட்டினியா யிருத்தல், starving, வயிற்றிற் கில்லாமல் இளைத்தல், being emaciated for want of food. See குண்டி காய்தல்.

குண்டு, விலங்குகளின் பிடுக்கன் விதை, testicles of beasts; 2. ஆண் குதிரை, stallion 3. இலாகிரி உருண்டை. bolus of opium, ganjah and other drugs; 4. தடித்த அல்லது பருத்த உடம்புள்ள பெண், a term referring to a woman unduly fatty and stout.

குண்டு கழுதை, ஆண் கழுதை, he-ass: jack-ass.

குண்டு காயம், வெடி குண்டு காயம், gun-shot wound. See குண்டடி காயம்,

குண்டுக் காளை, பொலி யெருது, covering bull.

குண்டுக் குதிரை, ஆண் குதிரை, stallion.

குண்டி சட்டி, ஆழமான ஓர் உருண்டைச்சட்டி a round and hollow pot.

குண்டுச் சம்பா, ஓர் உருண்டைச் சம்பா நெல், சொரி குரும்ப்ப நெல், a species of round paddy.

குண்டு நீர், கடல், sea.

குண்டு பீங்கான், ஆழ்ந்த பீங்கான். a deep or hollow dish.

குண்டுப்பி, சிப்பி முத்து, pearl of oysters.

குண்டுப் பூக் கொன்றை, வெள்ளைத் தகரை, sulphur-flowered senna—Cassia glauca.

குண்டு மணி, குன்றி மணி, Indian liquorice—Abrus precatorius.

குண்டு மல்லிகை, see குடமல்லிகை.

குண்டு மாணிக்கம், தூம்புர வாலி, safflower—Carthamus tinctorius.

குண்டு மிளகாய், see குடமிளகாய்.

குண்டு ரோசனை, see குண்டோசனை.

குண்டேசின், சுரத்தை யுண்டாக்கும் பேய், a demon causing fever.

குண்டேந்தி, மலை தாங்கி, wound plant—Sida carpinifolia.

குண்டேறு, ஓர் மீன், a fish.

குண்டை, எருது, bull; ox; 2. ஈகை, which see; 3. கருஞ் சுண்டி, இண்டங் கொடி, sensitive tree—Mimosa rubicaulis.

குண்டைச் சம்பா, see குண்டுச் சம்பா.

குண்டோசனை, உருண்டையாக வளரும் ஓர் மருந்துக் கிழங்கு, a round medicinal root.

குண்டோதினி, நிறைந்த மடியுள்ள பசு, a cow with a full udder.

குண்ணம், பெரு மருந்து, Indian birth-wort—Aristolochia indica.

குண்ணி, see குண்டு மணி,

குண்ணிச் செடிச்சி, தொழு கண்ணி, a medicinal plant—Hedysarum gyrans.

குத கிலம், see குத கீலம்,

குத கீலம், மூல ரோகம், piles; hemorrhoids.

குதக் குதல், see குதப்புதல்.

குதக் குமம், மஞ்ச பத்திரி. இது தங்கத்தைச் செந்தூரிக்கும், an unidentified plant capable of reducing gold into a calcined red-oxide.

குதக் கூடம், ஆசனப் புற்று, இது சிறுவர் களுக்கு வயிற்றில் புளித்த மலஞ் சேருவதா லும், அதிசாரத்தாலும் பிறந்து. குதத்தில் சிவந்த சிலேட்டும மொத்தையைப் போல் இரணத்தையும், உள்ளாக நமைச்சலையு முண்டாக்கும், a tumour-like swelling covered with pimples redder than the skin found in the posteriors or private parts of children; and attended with intense itching. It is due to the acidity of the stools or to diarrhoea.

குதட்டுதல், குழறிப் பேசல், blabbering.

குதண்டகம், see ஆதொண்டை,

குதநாயகம், பெருமருந்து, see குண்ணம்.

குத நெகிழ்ச்சி, see அண்டு தள்ளுகை; 2. ஆசன வாய்த் தளர்தல், relaxation of the muscles of the anus,

குதபம், பகற் பொழுது, mid-day; 2. தருப் பை, sacrificial grass.

குத பாகம், குழந்தைகட்கு ஆசனத்தில் ஏற் படும் சீழ் ஒழுக்கு, suppuration in the anal region of the child.

குதப்பல், உள்ளாக மெல்லாமலே வாயை அசைத்தல், eating with the lips close—Mumble. It is the process of reception and conversion of food as in the case of one without teeth; 2. மெல்லுதல் masticating; 3. உதப்புதல் chewing food to increase the saliva and prepare for swallowing and digestion: stuffing the mouth with food.

குதப் பவுத்திரம், ஆசனப் பவுத்திரம், anal fistula.

குதப்பிய உணவு, விழுங்குவதற்குமுன்மென்ற வுணவு, the food after mastication and just before deglutition (swallowing)—Alimentary bolus.

குதப் பிரம்சம், see அண்டு தள்ளுகை,

குதப் புண், ஆசனப் புண், ulceration of the anus.

குதப்புதல், உதப்புதல், see குதப்பல்.

குதப் பூரிகம், சம்பு நாவல், large-fruit jaumoon—Eugenia malaccensis.

குதப்பை, மலக் குடலின் உட் சவ்விலுண்டா டாகும் பை, sacciform mucous membrane of the rectum; 2. குதப்பை ரோகம், sacciform disease of the anus—Encysted rectum.

குதம காயம், வெங்காயம், onion.

குத மூலம், குதத்தில் உண்டாகும் மூளை மூலம். இதினின்று சீழும், இரத்தமும் ஒழுகும், a small round tumour situated at the verge of the anus and attended with discharge of pus and blood—Piles or Hemorrhoids. See மூலம்.

குதம், மலம், வெளி வருவதற்கான துவாரம். இது பெருங்குடலின் கீழ்ப் பகுதியாகியமலக் குடல்; 4½ விரல் நீளமும், மூன்று மடிப்பு களையும் உடையது, (literally) the channel of fecal matter—Rectum. It is the lower end of the large intestine which passes into the flexure of the rectum. It is 4½ fingers in length and the interior is provided with three spiral grooves of outflow, defecation and closure of the anus.

குதம், தருப்பை, sacrificial grass: 2. வெங் காயம், onion: 3. மலம் கழியும் காவாய், a channel through which the faeces are expelled—Rectum; 4, தும்மல், sneeze; 5. மிகுதி, excess; 6. குசைப் புல், kusa grass—Poa cynosuroides,

குதம்புதல், கொதித்தல், boiling,

குதம்பை, see கூத்தன் குதம்பை.

குதம்பைச் சித்தர், மாந்திரீகம், ஞானம், இவை களின் விஷயமாய்ப் பாடியுள்ளசித்தர்களுள் ஒருவர். இவர் அநேக சித்துக்கள் விளை யாடியதாகவும் சொல்லப்படுவர், one of the Siddhar's school who composed poems on practical wisdom and magic. He is said to have played several wonders through Siddhis (supernatural powers).

குத யந்திரம், மல வாயைச் சோதிக்கவும், கார மருந்திடவும் வசதி யமைக்கப் பெற்ற ஓர் வகைக் கருவி, an instrument containing two apertures, one for seeing the interior of the rectum and the other for applying an alkali — Rectal speculum.

குத யோனி, ஒருவன் தான் முதலாக ஆசனப் புணர்ச்சிக் கிணங்கி, பிறகு அவனே பெண் ணினிடமாகச் சென்று ஆசனப் புணர்ச்சி யை இயற்றுபவன், the man who first becomes a passive member for an act of sodomy and then again commits sodomy with the woman he visits. See ;தம்பிகா.

குத ரோகம், ஆசனத்தைப் பற்றிய நோய், diseases of the anus or rectum in general.

குதலை, மழலைச் சொல், the prattle of a child; 2. மாதர் இனிய சொல், fond word or the amorous talk of a female.

குத வளையம், ஆசன வாயைச் சுருக்கும் சக்தி வாய்ந்த வளையம், circular or ring like muscles which close the external orifice of the anus—Sphincter ani.

குதவாய், அபான வாயில், anal orifice

குத வெடிப்பு, மல வாயிற் காணும் வெடிப்பு, anal fissure.

குத வொழுக்கு, ஆசன வொழுக்கு, discharge of mucous from the rectum—Rcetel catarrh.

குதருதி, புளி, tamarind—Tamarindus indicus.

குதறுதல், விரண மாதல், turning into an open wound or sore: 2. கிண்டுதல், exciting heat and redness.

குதற் கம்மல், ஓர்வகை கண்ணோய், an eye-disease.

குத ஞசம், see குத ஞசனம்.

குத ஞசனம், பெருங்காயம், assafoetida—Ferula asafoetida.

குதனு, அவலட்சண உடம்பு, body with a disagreeable appearance.

குதாங் குரம், மூலி மூலம், piles.

குதா தோஷம், சித்தா மல்லி, short-tubed arabian jasmine — Jasminum sambuc (typica)

குதானகம், see குதானன்,

குதானத் திகம், சம்பங்கி, champauk — Michelia champaca.

குதானன், தாளி, convolvulus creeper; American bindweed—Ipomaea sepiaria.

குதி, உள்ளங் காலின் பின் பக்கம், the hindmost part of the foot: 2, காற் குதி. heel of the foot; 2. குதித்தல். jumping.

குதிகா விசிவு, குதி காலிற் காணும் இசிவுவலி, cramp in the heels.

குதிகா லெலும்பு, குதிகால் உள்ளாகவிருக்கும் எலும்பு, heel-bone — Calcaneum; Os-calcis.

குதி கால், see குதி.

குதிகால் மேகப் புடை, மேகத்தினால் குதிகால் எலும்பு வளர்ந்து பிதுங்கிக் காணல், exostoses on the heel due to gonorrheal infection—Gonorrheal heel.

குதிகால் வலி, குதிகால் நோவு, pain in the heel—Talalgia; 2. குதிகால் அழுந்த வைக்கும் போது தோன்றும் வலி, pain caused by pressure on the heel—Painful heel.

குதிகால் வாதம், குதிகால் ஊனுவதற்கு முடியாமல் நோய் கொள்ளும் ஓர் வாத நோய், a disease of the heel rendering one unable to rest on the heel owing to excessive neuralgic pain — Pododynia; 2. முன்னங் காலில் நின்று பிறகு குதிகாலை ஊன முடியாமல் வலி கொள்ளும் வாத நோய், pain experienced in raising the toes and suddenly bringing the heels to the ground—Heel-jar.

குதிகால் விரணம், குதிகாலிற் காணும் விரணம், ulceration of the heel.

குதிகால் வெடிப்பு, குதி காலில் ஏற்படும் பித்தம் அல்லது பனியினாற் காணும் வெடிப்பு, crack or fissure of the heel arising from the bilious condition of the system or frost-bite.

குதி காளான், குதிகாலி லுண்டாகும் காளானைப் போன்ற கழலை, a tumour in the heel resembling a fungus; a fungus growth of the heel.

குதிகாற் சிலந்தி, see குதிகால் விரணம்.

குதி கொப்புளம், see குதிக் கள்ளன்.

குதிக் கள்ளன், குதி காலில் ஏற்படும் கொப்புளம், a boil or abscess on the heel: a sore in the heel: 2. see குதி வாதம்.

குதிங் கால், see குதி.

குதிங்காற் குத்து, குதிங் காலிற் ஊனுதற்கு முடியாதபடி ஏற்படும் குத்தல் நோய், an acute neuralgic pain rendering one unable to rest on the heel—Pternalgia.

குதிங்காற் சிப்பி, குதிகால் எலும்பு. heea-bone

குதிச் சந்து, உடம்பினில் நாடியானது இயங்கப்பட்ட பத்து இடங்களில் ஒன்று, one of the ten places in the human body selected for feeling the pulsation i. s. the one behind the ankle.

குதிப் பனிகம், பலா விளி அல்லது பலா விழி, an unidentified plant.

குதிப் பிளவை, குதிகால் விப்புருதி. cancer of the heel.

குதிப்பு, சுதும்பு மீன், milk-fish — Rixe parava alias peixe peuba.

குதிப் புண், குதிகாலில் வரும் புண், கட்டி, விரணம், பிளவை, முதலியன. a common name for wound or sore. abscess, ulceration, carbuncle etc. of the heel.

குதிப் புற்று, குதிகாலிற் காணும் புற்று, cancer of the heel.

குதி யாணி, முள் முதலியவைகள் தைத்துஒடிதலால் குதிகாலில் விழும் ஆணி, a growth of thickened skin on the heel due to thorns etc. running and breaking into it; corn on the heel.

குதியைப் பாதி, வெட்டி வேர். khus khus root—Andropogon muricatus.

குதிரை, ஊர்க் குருவி, sparrow; 2. பரி, horse — Equus vulgaris; 3. மா மரம், mango tree—Mangifera indica.

குதிரைக் காலிரும்பு, தேய்ந்த லாடம், worn-out horse - shoe.

குதிரைக் கால் வாதம், see குதி வாதம்,

குதிரைக் காற் சுண்டு வாதம், see குதிரை வலிப்பு.

குதிரைக் குளம்படி, நீர்ச் சேம்பு. இதன் இலைகளை வீக்கங்களுக்குக் கட்ட வுதவும். arrow head—Saggitaria obtusifolia alias Cyanotes cristata. Its leaves are applied to swelling

குதிரைக் குளம்பு; see குதிரைக் குளம்படி, 2. நீலக் கடம்பு. common cadamba — Anthocephalus cadamba; 3. குதிரைக் காலடி. the hoof of a horse. See நீர்க் குளிரி.

குதிரைக் கொல்லி, see குதிரை வாலி; 2. ஓர் பூடு, a plant — Convolvulus tridentatus: 3. மனிதற்குக் காணும் ஓர் குதிரை நோய், a disease of horses communicable to man—Glanders.

குதிரைச் சாணி, குதிரை வைத்தியன், a farrier having experience of veterinary surgery; 2. குதிரை லத்தி, the dung of a horse.

குதிரைச் சாலி, துயிலிக் கீரை, a kind of greens—Achyranthes polygonoides.

குதிரைச் செவி, குதிரைக் காதைப் போன்ற இலை யுடைய ஓர் கள்ளி, a kind of spurge tree, the leaf of which resembles the horse's ear; 2. குங்கிலிய மரம், Indian dammer—Shorea robusta.

குதிரைச் சேவிதம், சடைத் தும்பை, a kind of leucas.

குதிரைநடை வாய்வு, மனிதர் காலில் தற் செயலாய் காயப்பட்டு வாயு சேர்ந்து ஊன மடைவதனுல் குதிரையைப் போல் நடத்தல், a horse-like gait resulting from wounds due to some accident such as, gun-shot wound—Equinism; 2. குதிரைக்குக் காலில் கோழி முட்டையைப் போல் காணும் ஓர் வீக்கம், a soft puffy swelling about the size of hen's egg in the fetlock joint of a horse—Wind-gall.

குதிரை நோய், குதிரைகளுக் குக்காணும்நோய் கள், diseases of horses in general; 2. மனிதருக்குக் காணும் குதிரை நோய், a mild form of glanders seen in man and contracted from horses—Equinia.

குதிரைப் பசலை, ஓர்வகைப் பசலை, a kind of spinach.

குதிரைப் பயிரி, ஓர் வகைச் சாரணைப் பூண்டு, a kind of shauranay — Trianthema crystallina.

குதிரைப் பல்லன், வெள்ளைப் பூண்டு, garlic; 2. பெரிய தடித்த பல்லை யுடையவன், a man having large thick teeth.

குதிரைப் பல்லி, பெரிய பல்லை யுடையபெண், a woman having large teeth. C. f. மாட்டுப் பல்,

குதிரைப்பற் பாஷாணம், 64 பாஷாணத்தி லொன்று, red orpiment or realgar—Arsenicum rubrum. It is one of the 64 kinds of arsenic.

குதிரைப் பால், குதிரையின் பால் இது உடம் பிற்கு வலிவை யுண்டாக்குவது மன்றி தாது புஷ்டியையுங் கொடுக்கும். இது எளி தில் செரிக்கக் கூடியது. உடம்பிற்கு உஷ் ணம், சுவைக்க துவர்ப்பா யிருக்கும், horse's milk. It invigorates the system; and is an aphrodisiac. It is light in digestion, heat-making in its potency and astringent in taste. It is appetising.

குதிரைப் பிடுக்கன், பீநாறி மரம். இதன் காய் குதிரை பிடுக்கைப் போலிருப்பதாலிப்பெயர் fetid tree; horse almond — Sterculia foetida. It is so called from its seed—vessels resembling horse's testicles.

குதிரைப் பிடுக்கு, குதிரைப் பிடுங்கன். இதன் காய்கள் நீள நீளமாய்த் தொங்குவதால் பார் வைக்கு அழகாக விருக்கும். ஆகவே, இது தோட்டம், அரண்மனை, சோலை, இவ் விடங் களில் வைத்து வளர்க்கப் படும். இம் மரத் தின் இலை பலத்தையும், வியர்வையு முண் டாக்கும்; இதன் விதைகள் கறுப்பாயும், நீளமாயு மிருக்கும்; இதன் பூ கெட்ட நாற் றம் வீசுமாதலால் இதற்கு 'பீநாறி' என்று ஓர் பெயரு முண்டு. இதற்கு மூத்திரத்தை வடிக்குங் குணமுண்டு. ஆதலின், மூத்திர ரோகத்தில் இது மெத்த உபயோகப்படும். horse almond — Sterculia foetida. The fruit is long and ornamental; and so, it is cultivated in gardens, palaces, parks etc. The flowers have most offensive odour, and hence given another name Peenari (பீநாறி). The leaves are aperient and diaphoretic. Seeds are black and long; and they are diuretic and as such, useful in urinary complaints.

குதிரைப் பீஜன், see ஒட்டை மரம்,

குதிரைப் புடுக்கன், see குதிரைப் பிடுக்கன்; 2. குதிரையைப் போல் பிடுக் குள்ளோன், one having testicles like those of a horse.

குதிரை மசாலி, தேன் மரம், honey tree—Schleichera trijuga.

குதிரை மசாலை, குதிரைக்கு அசீரணத்திற்காக கொடுக்கு மருந்து, a mixture or maas of ingredients beaten or blended together and given to horses for indigestion.

குதிரை மறி, பெண் குதிரை, female horse; mare; 2. குதிரைக் குட்டி, colt.

குதிரை மீன், see குழாய் மீன்,

குதிரை முகம், நளகம் அதாவது முன்னங் கால் எலும்பு, the skin-bone.

குதிரை மூத்திரம், குதிரையின் மூத்திரம் தமிழ் வைத்தியப்படி. இது பசி தீபனத்தை யுண்டாக்கும்; உருசிக்கக் காரமாயும், சூடுண்டாக்குந் தன்மையதாயும், சித்த பிரமையைத் தருவதாயு மிருக்கும், இது படை, வயிற்றுப் பூச்சி இவைகளுக் குபயோக மாகும் horse's urine. According to Tamil Medical science, it is appetising. pungent in taste; strong and heat-making in its potency; and cures mental aberrations. It is usually recommended by Vaidyans in cases of ring-worm and worms in the intestines.

குதிரையடிப் பச்சிலை, see குதிரை குளம்படியிலை.

குதிரை ரோகம், see குதிரை நோய்.

குதிரை லத்தி, குதிரைச் சாணி, horse dung.

குதிரை வலி, see குதிரை வலிப்பு.

குதிரை வலிப்பு, பெண்களுக்கு பிரசவ காலத்தில் கருப்பைக் கோளாறு அல்லது தண்டிக்காய் நோயினால் ஏற்படும் ஓர் வகை வலிப்பு நோய், இதனால் கண் கதித்து, வாயில் நுரை தள்ளி, கையும் காலும் ஒரு பக்கத்தில் திருகிக் காணும், a kind of fits in lying in woman due to irritation in the womb or to a disease of the kidney. It is characterised by swollen eyes, foamy froth from the mouth contorption of the limbs etc, See அமர கண்ட வலி; 2. மூளையைப் பற்றிய சன்னியினால் ஏற்படும் வலிப்பு. இதில் சன்னி வாதம் உடம்பினுள் தங்குவதால் இவ் வலி காணும்போது கண்களின் புருவம் துடித்து. கை கால் ஒரு பக்கம் திருகிச்சோர்ந்து, வாயில் நுரை தள்ளி, நெஞ்சிற் கபங் கட்டி, அவயவங்கள் தீப் போற் காந்தி, உடல் படபடத்து நடுங்கிக் கண் நிலைக் குத்தவிடும், apoplectic fits 'due to Vatha (humour) in the system. It is attended with symptoms such as, brow-beating. sudden paralysis on one side of the limbs, forthy saliva from the mouth, accumulation of phlegm in the chest, burning and trembling sensation of the whole body, fixed etc; 3. குதிரையின் கால் சுண்டு வாதம், a disease of the horse attended with trembling of the legs.

குதிரை வாலி, see குதிரை வாலிச் சம்பா, 2. see குதிரை வாலிச் சாமை; 3. see குதிரை வாலிப் புல்; 4. குதிரை வாலைப் போன்ற பூடு வகை, equisetacae family of plants —Horse-tails.

NOTE:—These are plants having great resemblance to ferms.

குதிரை வாலிகம், கொடிப் பாசி. moss-creeping upon water —Hydrilla verticillata.

குதிரை வாலிக் கியாழம், குதிரை வாலிப் புல் அல்லது பூவி னின்று இறக்குங் கஷாயம், decoction prepared from horse-tail grass or purple-wrath.

குதிரை வாலிச் சம்பா, வால் நீண்ட சம்பா நெல், horse-tail paddy.

குதிரை வாலிச் சாமை, ஓர் வகைச் சாமை. horse-tail millet — Panicum verticillatum alias P. crusgalli; 2. ஒட்டுப் புல, sticking grass.

குதிரை வாலிப் புல், ஒட்டுப் புல், இதைப் பசு நெய்யிற் கொள்ள குழந்தைகட்குக் காணும் தலையில்லா எலும்புருக்கி மேகம் தீரும், horse-tail grass — Panicum brizoides. A powder of this mixed with ghee is said to cure osteo-tabes attacking children.

குதிரை வாலிப் பூ, ஓர் கொடி, purple-wrath creeper—Petraea volubilis.

குதிரை வாலிகம், கோரைப் புல், koray grass.

குதிரை வாற் புல், see குதிரை வாலிப் புல்,

குதிரை விட்டை, see குதிரை லத்தி,

குதி வலி, see குதிகால் வலி.

குதி வாதம், முழங்காலில் வாதம் மிகுதியாகச் சேர்ந்து அதனால் அடி யெடுத்து வைக்க வொட்டாது குதியினுள் திரண்டிருக்கும் வாத நோய், cramp in the heels marked by excessive pain rendering one unable to walk. It is due to the aggravated condition of Vayu which is collected in the knee finding its lodgement in the heal; neuralgic pain of the heels—Pododynia, See குதிகால் வாதம்.

குதி குதெனல், கத கதப்பு, feverishness.

குது குலிப்பு, மிகு மகிழ்ச்சி, ecstasy, rapture; 2. மயிர்ச் சிலிப்பு. hair standing on ends —Horripillation.

குதும் பகர், தும்பை, bitter toombay — Leucas aspera alias Phlomis indica.

குதும்பை, sse கூத்தன் குதும்பை.

·க்கி யந்திர தாரம்,, உடம்பிற்குள் ம் குடலின் மேற் சவ்வுக்குக் காணும் ..., inflammation of the membranes of the bowels — Follicular gastro-enteritis.

குதுவம், உடம்பின் மேற்றோலிலும். சவ்விலும் அல்லது பூண்டுகளிலும் ஏராளமாய் நிறைந் திருக்கும் மகா நுட்பமான பை, the little bag or vesicle in animals or plants—Follicle or gland.

குதாணகம், குழந்தைகளுக்குக் காணும் ஓர் கண்ணோய், an eye-disease common in children.

குதை, பசி, hunger; 2. பாசி, moss.

குதோஷ்டம், குதத்தின் பக்கம், the margin of the anus.

குதோதரம், (குதம்+உதரம்) ஆசன அருக் கத்தா லேற்படும் வயிற் றுப்பிசம், tympanites due to constriction of the anus.

குத்தசி, சாதி முத்து, superior solid pearls

குத்தம், எருது, bull.

குத்தரசம், பெருங்காயம். assafoetida.

குத்தலம், முக்குருந்து, wild lime.

குத்தல், கையாற் குத்தல், giving a blow with the fist; 2. கத்தியாற் குத்தல், stabbing with a knife; thrusting with a ...rd; 3, சிறுக சேர்த்தல், as in பிறைக் குத்தல், pouring in small quantity for the purpose of coagulation; 4, துளை செய் தல். pricking; boring as ear; 5 நெரித் தல், crushing to pieces; 6. இடித்தல், pounding as of rice; 7. அலகு குத்தல், hook swinging; 8. பறித்தல், plucking.

குத்தல், உடம்பினுள் ஏற்படும் குத்தல் வலி internal pain; boring pain inside the body; 2. இடித்த அரிசி, pounded rice; 3, நரம்பு வலி, nerve-pain.

குத்தல் குடைச்சல், வாயுவால் ஏற்படும் நரம்பு வலி, piercing and boring pain in the course of the nerves due to aggravated condition of Vayu (humour); 2. வாத வலி, pain experienced in rheumatism.

குத்தாகம், see குட்டி விளா.

குத்தாக்கு சிமிட்டி, see குத்துக்காற் சிமிட்டி.

குத் தாமணக்கு, see உ ர லாமணக்கு.

குத்தா மலை, see உத்தா மணி.

குத்தாமற் குத்தல், காயம் படாமற் குத்தல். causing contusion without inflicting apparent injury.

குத்தா லகம், பருத்தி, cotton — Gossypium herbaceum; 2. see காட்டாத்தி; 3. see கடுகு ரோகிணி.

குத்தாலம், குத்தாலா, } see கடுகு ரோகிணி.

குத்தா ·லிகம், see குட மிளகாய்.

குத்தா வகம், சணல், hemp, flax—Crotolaria juncea.

குத்தி, குப்பி, bottle; 2. எண்ணெய் குடுவை, cruet or small vial for oil; 3. மண், earth; 4. நெய் குத்தி, cruise for ghee.

குத்திக் குத்தி யிருமல், புகைந்து இருமல், coughing often due to irritation.

குத்தி சரித்தல், கத்தியால் வயிற்றில் குத்தி குடலை வெளிப்படுத்தல், bringing out the bowels or entrails by stabbing in the abdomen.

குத்திப் பிடுங்கல், குமட்டல், hoving a tendency to vomit through irritation of the bowels.

குத்தி யிருமல், see குத்திக் குத்தி யிருமல்.

குத்திர சடை, திருநீற்றுப் பச்சை, see உருத் திர சடை.

குத்திரம், சணல், see குத்தா லகம்; 2. மலை, mountain; 3. தலைக் குத்து. piercing pain in the head; 4. முலைக் குத்து, piercing pain in the breast; 5. குரூரம், cruelty.

குத்திர வித்தை, சூனிய வித்தை, black magic; sorcery.

குத்திரன், சூனியம் வைப்பவன், sorcerer.

குத் திருமல், புகைந்து வரும் இருமல், cough due to irritation; 2. கக்குவான், whooping cough—Pertussis.

குத்து, see குத்தல், 2. சணல், hemp; 3. வாயுக் குத்து, aching or piercing pain due to wind (humour); 4 முலைக் குத்து. breast pain; 5. குத்தல் வலி, acute throbbing pain. See குத்திரம்; 6. போத்து, as in மூங்கிற் குத்து, bamboo shoots; 7. கும்ப லாய் வளர்வது, that which grows in clusters; 8. கை யளவு, hand-ful as of rice. (உ-ம்.) குத்து சாதம்.

குத்து குத்தாக முளைத்தல், கொத்து கொத் தாக முளைத்தல், growing in clusters.

குத்துக் கண்டங் கத்திரி, கொத்தாக முளைக் குங் காட்டுக் கண்டங் கத்திரி, wild Indian cluster brinjal — Solanum indicum (multiflora).

குத்துக்கரணம், குட்டிக் கரணம், a turn of the body in the air; somersault.

குத்துக் கரந்தை, கொத்தாக முளைக்கும் கரந்தை, a species of flea-bane growing in clusters—Erigeron obliquum.

குத்துக் கல், பூநீறு, an efflorescent salt found in Fuller's soil; 2. காயத்தை யுண்டாக்கும் கூர்மையான கல், sharp stones likely to cause injuries.

குத்துக் காயம், ஆயுதத்தா லுண்டான காயப் புண், a stab wound caused by a sharp or pointed weapon such as, an incised wound or a punctured wound; 2. கூர்மையான முனை யுள்ள ஆயுதங்களினுல் குத்துவதா லேற்படும் புண், a punctured wound caused by a pointed weapon.

குத்துக் காரன் சம்மட்டி, குத்துக்காற்சம்மட்டி இது தென் னிந்தியாவில் எங்குங் கிடைக்கக் கூடியது. இதன் வேரைச் சூரணத்துக் கொடுக்க மேகத்தா லெழுந்த விரணங்கள், திமிர் வாதம், மூர்ச்சை இவைகள் போம் உஷ்ணத்தைத் தணிக்கும். சமூலத்தைக் கஷாய மிட்டு வீக்கம், வாத சம்பந்தத்தினுல் உண்டாகும் கீல் வாயு, சூலைப் பிடிப்பு, வாத வீக்கம் இவைகளைக் கழுவ உதவும், a herbaceous plant common in Southern India. Its root-powder is given to all complaints arising from venereal or syphilitic disorders such as, ulcers, numbness, fatigue etc., allays heat in the system. Decoction of the entire plant is a useful application as a lotion for rheumatic complaints such as arthritis, swelling through rheumatic inflamation, gout etc.

குத்துக் காரை, கொத்தாக வளரும் காரைச் செடி, see காரை.

குத்துக் காலிடல், கால்லை செங்குத்தாய்மடக்கி உட்காரல், sitting in an upright posture with legs folded and held vertically; sitting or lying with bent legs.

குத்துக் கால், செங்குத்தாய் மடித்த கால்; legs folded and kept in an upright position; 2. see கீரிப் பூடு, 3. see குத்துக் காற் சம்மட்டி.

குத்துக் கால் நீறு, பூநீறு, an efflorescent salt collected in the Fuller's soil.

குத்துக்காற் சம்மட்டி, கீழ் வாதம், முழங்கால் வாயு முதலிய வாத வலிக் குபயோகிக்கும் ஓர் பாசிலை, a herbaceous plant useful as a remedy in arthritic and rheumatic complaints. see குத்துக்காரன் சம்மட்டி.

குத்துக்காற் சிமிட்டி, see குத்துக்காற் சம்மட்டி.

குத்துக் காற் பயறு, உளுத்தம் பயறு, black gram.

குத்துக்காற் பாஷாணம், அறுவகைச் செயநீர், which see.

குத்துக் குமிளன், see குமிழ்.

குத்துக் குடைச்சல், see குத்தல் குடைச்சல்.

குத்துக் குளம்பு, நேரான விலங்கின் குளம்பு, vertical hoof of animals.

குத்துக் கொம்பு, நேரான விலங்கின் கொம்பு, straight horn.

குத்துக் கோரை, குத்துக் குத்தாக முளைத்த கோரை, sedge-grass grown in clusters—Cyperus compressus.

குத்து சாதம், பிடி சாதம், a grasp-ful of boiled rice; 2. கையினு லெடுக்கு மளவு கொண்ட சாதம், handful of boiled-rice.

குத்துச் சிந்தில், சிந்திற் செடி, a species of moon - creeper (in clusters)

குத்துச் சூலை, வாதக் கோளாறினுல் உடம்பில் பல விடங்களில் குத்தலை யுண்டாக்கும் வாத நோய், rheumatic pain affecting the several parts of the body due to the derangement of vayu in the system.

குத்துச் செடி, நிலத்தில் படராது குத்தாக முளைக்கும் செடி, any plant which grows erect and in clusters without spreading in the surrounding parts; 2. சிறு குத்துச் செடி, any small plant or off-shoot growing into a close body or situated near each other.

குத்துச் செடி கண்டங் கத்திரி, குத்தாக முளைக்கும் பாப்பார முள்ளிச் செடி, (bunch + plant + solanum xanthocarpum) Brahmin-mully growing in clusters — Solanum indicum. See குத்துக் கண்டங் கத்திரி

குத்துண்டல், கத்தியாற் குத்து படுதல், being stabbed with a knife.

குத்துதல், துளி துளியாய் விடுதல், pouring in drops as into the ear or eye; 2. எண்ணெயைக் குத்தல், letting oil in drops; 3. கத்தியாற் குத்தல், stabbing with a knife; 4. நுழைத்தல், the act of thrusting; 5. See குத்தல்.

குத்துத் திராய், குத்தாக முளைக்கும் திராய்க் கீரை, wild indian chickweed (in clusters)—Mollugo stricta.

குத்துநாம் பழம், பேரீச்சம் பழம், wild date fruit—Phoenix acaulis.

குத்துப் பகன்றை, குத்துச் சீந்தில், a species of moon creeper—Tinosphora genus; 2. ஓர் பகன்றைச் செடி, a species of bind-weed—Leca verticillata.

குத்துப் பசளை, கொத்தாக முளைக்கும் பசளைக் கீரை, a species of Malabar nightshade growing in clusters—Basella lucida.

குத்துப் பலா, நட்டையாக வளரும் பலா மரம், இது பாலைத் தயிராக மாற்றும், a species of stunted-jack — Epicarpurus orientalis. It is capable of turning milk into a curd.

குத்துப் பன்னீர், கொத்தாக முளைக்கும் பன்னீர்ச் செடி, dew-flower plant (growing in cluster)—Gardenia speciosa.

குத்துப் பாகல், நிலப் பாகல், ground pagal—Momordica humilis.

குத்துப் பாலாடை, see குத்துப் பலா.

குத்துப் பிடாரி, வன தேவிச் செடி, an unknown plant.

குத்துப் பிராய், கும்பலாய் வளரும் ஓர் வகைப் பிராய், cluster pirai—Eleodendron genus.

குத்துப் பூகியம், பாவட்டை, Indian pavetta —Pavetta indica.

குத்து முலை, சிறு திட்டமானமுலை, funnel-shaped breast in woman; 2. நேர் முலை, erect and pointed breast of a woman.

குத்துயிர் கொலை யுயிர், கத்திக் குத்தினால் ஏற்பட்ட அபாயகரமான நிலைமை, an endangered condition of life in a case of stabbing; condition of life and death.

குத்து வலி, see குத்தல் வலி

குத்து வலிப் பிடிப்பு, மேகத்தினால் உடம்பின் மூட்டு அல்லது பொருத்துகளில் அழற்சி கண்டு இறுகி அசைக்க வொட்டாமற் செய்யும் ஓர் வாத நோய், (In Humoural Pathology) acute articular rheumatism frequently producing ankylosis of the joints—Gonorrheal rheumatism.

குத்து வல்லாரை, மலை வல்லாரை, a species of Indian penny-wort (in clusters) — Hydrocotyle asiatica (genus).

குத்துவா, கடல் அயிரை மீன், golden herring-fish—Pellona brachysoma.

குத்து வாகை, நில வாரை, East Indian senna—Cassia angustifolia.

குத்து வாதம், வாதம் மிகுந்து உடம்பு நொந்து சயித்தியமும் ஒக்கக்கூடி எரிச்சலையும் குத்தலையும் உண்டாகும் ஓர் நோய், (யூகி. 1200), a kind of acute rheumatism due to the aggravated condition of Vatha (wind). It is marked by bodily pain, burning sensation and piercing pain in the affected parts.

குத்து வாதை, பசி வருத்தம், a craving through hunger.

குத்து வாய், கடி வாய், the seat of bite; 2. வெட்டு வாய், the mouth of an incised wound.

குத்து வெட்டு, கத்தி அல்லது வேறு விதக் கூர்மையான ஆயுதங்களால் ஏற்படும் குத்துக் காயமும், வெட்டுக் காயமும், punctured and incised wounds caused with a knife or other sharp instruments.

குத் துளைச்சல், பூச்சியா லுண்டாகும் காது வலி, ear-ache or acute pain in the ear due to some microbes.

குத் தூசி, உடம்பினுள் மருந்து புகட்டு மூசி, injection-needle.

குநகம், நகத்திற் காணும் நோய், a disease of the nails.

குநக வெலி, மரக்காலைப் போல் உடல் உள்ள ஓர் வகை எலி. இது கடித்தால் வலியும், சிவந்த மச்சங்களு முண்டாகும், a species of rat with a cylinderical body resembling a wooden measure. Its bite is marked by pain and red-dots in the body.

குநகி, நகம் சொத்தையாக வுள்ளவன், one with rotten nails.

குநர்ச் சகம், சிறு காஞ்சொறி, small-leaved climbing nettle-mercury — Tragia involucrata (cannabina).

குந்தகத் தசை நார், தடைப்படுத்து தசை நார், obturator ligament.

குந்தக பாஷாணம், see கற் பாஷாணம்.

குந்தகம், குங்கிலியம், see குந்தம்.

குந்தக் குந்தம், புனுகு, civet.

குந்தணை, தைலம், மருந்துநெய்(கிருதம்)காய்ச்சும் பொழுது பாத்திரம் விரிந்து பழுதுண்டாகக் கூடுமெனக் கருதி, அதற்குத் துணையாக தைலம் முடியும் வரையில் பொருந்தி ... நக் கும்படி வைக்கும் ஓர் பாத்திரம் ... து தைலப் பாத்திரத்தின் வயிறு மட்டும் ... ன் னும் படியாக வமைத்து, அடி ... ல் கரி நெருப்பின் புகையானது ... ய

போகும்படித் துவாரங்கள் ஏற்படுத்தி, வட்டமா யுள்ள பாதங்க ளமைத்து அண்டாவைப் போல் இரும்பினுற் செய்யப்பட்டது, an iron-covering or iron-stand set with round knobs at the bottom and carved in a way just to fit the middle portion of the big earthen pot intended for the preparation of medicated oil or ghee, so as to serve as a protection when the pot happens to give way; several holes are also made at its bottom for the escape of smoke. It almost resembles a kettle.

குந்தந் தள்ளல், விழிபிதுங்கிக் காணல், protrusion of the anterior surface of the eye—Staphyolma: 2. கண் ஞேயினுல் கருவிழி பிதுங்கல், protrusion of the tubercle in the cornea of the eye — Staphyloma iridis.

குந்தம், நோய், disease; 2. குருந்த மரம், wild lime — Atlantia missionis; 3. see குந்துருக்கம்; 4. கோளாக பாஷாணம், a kind of native arsenic; 5. see கற் பாஷாணம்; 6. தாலம்ப பாஷாணம், a kind of native arsenic; a minearal poison; 7. கள், toddy; 8. ஓர் மல்லிகை, a kind of jasmine — — Jasminum multiflorum alias J. pubescens; 9. குங்கிலியம், Indian olibanum — Boswellia thurifera alias B serrata (resin of); 10. அலரி, fragrant oleander — Nerium odorum; 11. குதிரை, horse; 12. கவளம், handful quantity; 13. நான்கு பலம், four palams weight.

குந்தம், கருவிழியின் மேற்ருேலிற் காணும் ஓர் சதை வளர்த்தி. இது அடியிற் கண்டபடி பலவகைப் படும், protrusion in the cornea of the eye. It consists of diffetent kinds as mentioned below ;—

1. சதைக் குந்தம், staphyloma (muscles).
2. இரத்தக் குந்தம், ,, (blood).
3. நீர்க் குந்தம், ,, (fluid).

குந்தம் புறப்படல், கண் விழியில் கொப்புளம் உண்டாதல், the rising of a tubercle in the eye; protrusion of the eye-ball. See குந்தந் தள்ளல்.

குந்தம் பூ, கண்ணி லுண்டாகும் பூ, cataract in the eye.

குந்தரம், ஓர் புல், a kind of grass.

குந்தல கீடி, பெருங் குடலில் வளரும் ஓர் நீண்டநாகப் பூச்சி, a long thread-worm inhabiting the large intestines—Trichocephalus.

குந்த விளக்கம், வெள்ளைப் போளம், white myrrh or woman's bole — Balsmodendra myrrh.

குந்த லிங்கம், சாம்பிராணி, frankincense.

குந்த வீகம், முண்டினி மரம், an unknown tree said to possess occult virtues.

குந்தளம், பெண் மயிர், woman's hair; 2. மயிர்ச் சுருட்டை, hair curls; 3. மயிர்ப் பொது, hair in general.

குந்தளை, தைலப் பாத்திரம் வைக்கும் பிரிமணை, a stand or seat made of straw for keeping medicated oil pots; any round wooden base for keeping pots.

குந்தனத் தகடு, தங்க ரேக்கு, gold leaf.

குந்தனம், தங்கம், refined gold: 2. சந்தனம், sandalwood.

குந்தாலி, கண்ணேய், see குந்தம்; 2. மலர்ந் திட்ட பூ, flowering Asoka — Humboldtia decurrens; 3. பருத்த வுரல், a large wide-mouthed mortar.

குந்தாணிக் கொடி, கண்ணில் படரும் ஓர் நோய், a disease spreading on the cornea of the eye; 2. ஓர் கொடி, mortar flower bindweed—Ipomaea bracteata.

குந்தாலம், ஓர் பறவை, an unknown bird.

குந்தி, கள், toddy; any fermented liquor; 2. ஓர் சிட்டுக் குருவி, a sparrow; 3. ஓர் செடி, glandular-leaved olive — Olea glandulifera.

குந்தி கறையான், பச் சோந்தி, green-lizard —Chameleon.

குந்தி நடத்தல், முன்னங் காலில் நடத்தல், walking on tip-toe.

குந்தி நிற்றல், ஒற்றைக் காலில் நிற்றல், standing on one leg; 2. முன்னங் காலில் நிற்றல், standing on tip-toe.

குந்திரம், ஓர் பறவை, a bird.

குந்திரிகம்,
குந்திருக்கம், } see குந்துருக்கம்.

குந்து, எலி, mouse: rat.

குந்து காலன், முன்னங் காலால் நடப்பவன். one who walks on tip-toe.

குந்து காலி, முன்னங் காலால் நடப்பவள், a woman walking on tip-toe.

குந்து கால், குந்தின கால், tip-toe.

குந்துரு,
குந்துருசம், } see குந்துருக்கம்.

குந்துருக்கம், வெள்ளைக் குங்கிலியம், white dammer — Vateria indica (resin of); 2. பறங்கிச் சாம்பிராணி, Indian or country resin—Boswellia serrata; 3. கருங் குங்கிலியம், black dammer — Canarium strictum.

குந்துருக்கம், வெள்ளைக் குந்துருக்கம். இது பிசின் மரப் பட்டையினின்று எடுக்கப்படும் ஓர்விதப் பால், இது இலங்கை, மலையாளம், கன்னடம், திருவாங்கூர் இவ் விடங்களில் விசேஷம். இது வெண்ணிறமும், வாசனையும், விருவிருப்பு முள்ளது; கசப்பு, தேனைப் போல விருக்கும்; வெயில் பட மஞ்சளாகி அம்பரைப் போல விருக்கும்; தண்ணீரில் கரையாது; கற்பூர தைலத்தில் கரையும். கடைகளில் இதைச் சிறியது பெரியது என இரண்டுவிதமாக விற்பார்கள். ஒன்று மற்றொன்றைவிட தாழ்ந்தது. இதைக் கிறிஸ்துவக் கோவில்களில் சாம்பிராணியைப் போல் புகை போடுவார்கள். இது வயிற்று வலிக்குபயோகப்படும். the resin of a tree—Gum olibanum or Gum animi; Indian copal—(Resin of) Vateria indica. It is collected from the bark of the tree. A native of ceylon, Malabar. Canara and Travancore. It is a white, pellucid fragrant, acrid and bitter, honey-like resin which, in summer, becomes yellow and looks like amber. Insoluble in water and soluble in turpentine. It is sold in bazaars as two varieties—one big and hard and the other small cellular structure of shining appearance, greatly inferior to the other. It is burnt as incense in churches: and is useful in stomach-ache.

NOTE:—The differences of the resin in colour and size is mainly due to the mode of collection and the age of the trees yielding them, Mixed with wax and oil it forms a basis for various ointments and plasters; combined with butter and wax and heated it forms a good stimulent dressing for carbuncles and other ulcerations The fatty oil obtained from the fruit is a useful application in chronic rheumatism and other painful affections.

குந்துருக்கம், வெள்ளைக் குங்கிலியம் அல்லது பறங்கிச் சாம்பிராணி. இது உயர்ந்த செங்குத்தான மரம்; பச்சையோடு கூடிய சாம்பல் நிறமான பட்டை யுண்டு. இலை மாறி மாறியும் இறகைப் போல் இலை அடர்ந்த காம்புகளும் உண்டு, 6-10 ஜோடி இலைகள்; சிறிய வெள்ளைப் பூக்கள் வாய்ந்தது. இது கொறநாடு மலைச் சாரல்களிலும், தட்சணத்திலும் கிடைக்கும், இதன் வாசனை யுள்ள பிசின் கசப்பாயும், சாராயத்தில் கரையக் கூடியதாகவும் இருக்கும். இதை நெய்யில் கலந்து வெள்ளை, வெட்டை முதலிய நோய்களுக்கும்; எலுமிச்சம் பழம் சாற்றில் குழைத்துச் சரும வியாதி கொப்புளம், புண் முதலியவற்றிற்குப் பூச மருந்தாகவும் உபயோகிப்ப துண்டு, white frankincense → Boswellia serrata alias B, glabra Tall erect tree covered with greenish ash-coloured bark; leaves alternate; pedicles with thick foliage; leaflets 6-10 pairs; small green flowers. It is common in hilly tacts of Concon and Southern India; the fragrant gum-resin is bitter in taste and soluble in alcohol. Mixed with ghee, it is given for gonorrhea and syphilitic complaints and with lime-juice, it is used as an external application for all cutaneous diseases, boils, abscesses, sores etc.

NOTE:—In sub-acute branchitis, in chronic pulmonary affections. bronchorrea and chronic laryngitis. It has been advantageously employed both internally and externally in the form of fumigation. Locally it is useful as a stimulant in carbuncle, foul ulcerations, boils etc.

The gum is used in rheumatic and nervous diseases, urinary disorders and scrofulous affcetions. The oil is useful in aphthae. placenta previa, amenorrhea, dysmenorrhea, sore-nipples, gonorrhea and ringworm.

குந்துருக்கன், கருங் குங்கிலியம், black dammer—Canarium strictum.

குந்தேசிகம், கோபுரக் கள்ளி, a kind of spurge-tree; tower-spurge.

குபக்கினம், தகரை, ring-worm plant—Cassia tora.

குபசியா, see குப சுபா.

குப சுபா, எட்டி, nux-vomica — Strychnos nux-vomica.

குபம், கோஷ்டம், Arabian coatus — Costus speciosus; 2. தழும்பு, scar; cicatrix.

குபயம், சிறு புள்ளடி, unifoliate tick-trefoil Desmonium latifolium.

குபலம், பலவீனம், weakness.

குபாணி, கோணற் கையன், one having a bent or crooked arm.

குபாதன், பாத மில்லாதவன், one deprived of foot; 2. குற்றமுள்ள பாத முடையோன், one with defects in the foot: 3. பாதக் குறைவால் செவ்வையாக நடக்க முடியாத வன், one unable to walk owing to defective foot.

குபிகை, எள், sesamum seed; 2. நல்லெண்ணெய், gingelly oil.

குபி தாந்தகம், துன் மரணம், unnatural death

குபீ ரிடுதல், இரத்தம் வேகமாகப் பாய்தல், flowing forcibly or gushing out in streams; spurting as of blood.

குபேரகம், சின்னி, birch-leaved acalypha—Acalypha fruiticosa alias A. betulina: 2. சந்தன வேம்பு, red cedar — Cedreia toona; 3. ஓர் நீர்ப் பூடு, an aquatic plant —Trapa bispinosa.

குபேரட்சம், பாதிரி, see குபேராட்சி; 2. கழற்கொடி, grey bounduc-creeper — Guilandina bonducella.

குபேரம், கோஷ்டம். Arabian costus—Costus speciosus alias C.arabicus.

குபேராட்சி, கொடிப் புன்கு, hog-creeper—Derris scandens; 2. பாதிரி, trumpet flower tree—Bignonia chelonoides.

குபேரிகை, வட்டத் திருப்பி, sickle-leaf—Sida acuta.

குபையம், சிறு புள்ளடி, unifoliate tick--trefoil —Hedysarum gangeticum.

குபையா தீதம், கோரைப் புல், sedge-grass.

குபோகம், கைமுட்டி போகம், masturbation; Onanism, 2. சிறு சின்னி, see குபேரகம்.

குபோதகம், மஞ்சட் செவ் வந்தி, Chinese flower or Indian chamomile — Chrysanthenum coronarium,

குபோதகி, பசலை. Malabar night . shade—Basella cordifolia.

குப்தம், பூனைக் காலி, cowhage — Mucana pruritus.

குப்பக் கூலி, செய்யான், a venomous centipede.

குப்ப மன்னி, see குப்பை மேனி.

குப்பலை, see குப்பளை.

குப்பளை, வெதுப் படக்கி, Indian birth-wort—Aristolochia indica.

குப்பாசம், பாம்புச் சட்டை, slough or cast-off skin of a snake.

குப்பாஜி விதை, சிறு சீமைத் துத்தி விதை, இது மருதோன்றி விதையைப் போலிருக்கும் இதை யுனானி மருந்துகளில் விசேஷமாகச் சேர்ப்பார்கள், marsh mallow; small foreign tootty—Malva sylvestris. The seed resembles that of mindie. It is frequently used in Unani medicine.

குப்பா மணி, see குப்பை மேனி.

குப்பாயசம், உடல், the body. 2. சட்டை, coat.

குப்பி, 24 அவுன்ஸ் கொண்ட புட்டி, a bottle containing 24 ounces; 2, ஓர் குடுவை, vial; 3. காசி குப்பி, which see; 4. அரக்கு, புட்டி, a flask: 5. சிறு கலசம். cruse; 6, சங்கங் குப்பி, smooth volkameria — Cleodendron inerme; 7. ஓர் வகை வயிரம், a spceies of dimond; 8. சாணி, cow-dung; 9. குப்பிப் பூ, bottle-flower, see துரா; 10. மருந்துப் புட்டி. a phial.

குப்பிக் கல், குப்பி செய்வதற்காக உபயோகிக்கும் கல், a species of glass of which flint was formerly an ingredient, used for making bottle etc—Flint-glass.

குப்பிக்குட் சமைந்த கன்னி, பஞ்ச பட்சி பாஷாணம், a kind of prepared arsenic.

குப்பிக் கெந்தம், see குப்பை மேனி.

குப்பிக் கேற்றல், புடம் போடுவதற்காக மருந்தைப் புட்டியி லடைத்தல், securing medicine in a bottle for purposes of calcination; 2. புடம் போட்ட பின் மருந்தை சீசாவி லடைத்தல், filling in a bottle as medicine after calcination:

குப்பி சாரம், காசிக் குப்பியி லடைத்து எரித்த சாரம், a prepared salt obtained by burning the necessary ingredients secured in a Benares bottle.

குப்பிச் சரக்கு, குப்பியில் வைத்துப் புடமிட்டு நீற்றிய மருந்து, medicinal powder calcined in bottles; 2. பதுங்க வைப்பு. anything prepared by process of sublimation; sublimed preparation.

குப்பிக் சுக்கு, தூரணம் செய்து புட்டியில் அடைத்த சுக்கு; சுக்குத்தூள், powdered dried - ginger secured in a bottle.

குப்பிச் செந்தூரம், சுத்தி செய்த இரசத்தை மற்ற மருந்துகளோடு கூட்டி அரைத்துக் காசிக் குப்பியில் வைத்து, முறைப்படி சீலை மண் செய்து வாலுகா யந்திரத்தில் வைத்து எரிக்க, மேற் பக்கத்தில் படிந்திருக்கக் காணும் சிவப்புச் செந்தூரம். இதுவே

இரசப் பதங்கம், sublimate of mercury—It is obtained by grinding mercury mixed with other drugs and securing it in a Benares bottle which, when subjected to a process of sublimation, will be found to contain a deposit of mercury on its top; 2. மருந்தை சாதாரணமாய்ப் புடமிடாமல் குப்பியில் வைத்து எரித்து எடுக்கும் ஓர் வகைச் செந்தூர முறை, red oxides prepared by the process of heating (sublimation) and not by calcination.

குப்பிச் செயநீர், see அறுவகை செயநீர்.

குப்பித் தைலம், காய்ச்சிய பிறகு குப்பியிலடைத்து, மருந்தின் வேகம் மாறும்படி நெற் குவியலில் பல மாதங்களாகப் புதைத்து வைக்கும் தைலம், medicated oil seasoned after its preparation by keeping it in bottles buried under a heap of paddy for several months so as to moderate its virulency.

குப்பிப் புடத் தைலம், தைலம் சிறு அளவாகச் செய்ய வேண்டி வரின், சீலைமண் செய்த மருந்துப் புட்டியை ஓர் பெரிய மண் பாண்டத்தி னடியில் செய்த துவாரத்தின் வழியாய்த் தலை கீழாகக் கவிழ்த்து அடுப்பின் மேலேற்றி, புட்டியைச் சுற்றிலும் எரு அடுக்கிப் போடும்புடம், medicated oil prepared in small quantities by adopting the following method:—The bottle containing the oil is to be luted with clay and then held in an inverted position by passing the neck through a hole made at the bottom of a large pot. The bottle so held inside the pot is to be surrounded with cow-dung cakes and the whole apparatus is placed on the oven and than heated.

குப்பிப் புடம், see குப்பிப் புடத் தைலம்.

குப்பிப் பூ, குரா, bottle-flower tree—Cupia corymbosa.

குப்பி மா, மாக் கல்லு, soap-stone, so called from its use as a cork to bottles.

குப்பி முடித்தல், பதங்க முடித்தல், accomplishing the process of sublimation; preparation of anything by sublimatory process.

குப்பி முறை, பதங்க முறை, the process of sublimation.

குப்பியம், பொன், வெள்ளி யல்லாத மற்ற உலோகம், metals other than gold and silver; 2. இழிந்த உலோகம், inferior or base metal; 3. வங்க மணல், lead mixed with sand; lead-ore.

குப்பியிலே நுணுக்க மாணேன், சூத பாஷாணம், a kind of prepared arsenic.

குப்பி லவணம், வளைய லுப்பு, glass-gall—Fel vitri.

குப்பி லிங்கம், see குப்பி வைப்பு லிங்கம்.

குப்பி வைப்பு, புட்டியில் வைத்துச் செந்தூரிக்கு முறை, the act or the process of securing medicine in a bottle for purposes of oxidation; a chemical preparation—Alembics.

குப்பி வைப்புச் செந்தூரம், see குப்பிச் செந்தூரம்.

குப்பி வைப்பு லிங்கம், பதங்கித்த ரசம், Sublimate of mercury.

குப்புக் குப்பெனல், வயிற்றி லெழும் ஓர்வித வுணர்ச்சி, a peculiar sensation felt or experienced in the stomach.

குப்புசம், புன்கு, pungam tree — Pongamia glabra.

குப்புந்துக் கொள்ளல், see குப்புற்றுக் கொள்ளல்.

குப்புழாய், சொத்தை நாரை, an unknown tree.

குப்புறக் கவிழ்த்தல், தலை கீழாய்க் கவிழ்த்தல், turning upside down.

குப்புறக் கிடத்தல், முகம் கீழ் நோக்கி கிடத்தல், lying with the face downwards; lying prostrate.

குப்புறத் தள்ளல், முகம் கீழ் நோக்கித் தள்ளுதல், throwing down upon the face.

குப்புறப் பிடித்தல், முகம் கவிழும்படிப் பிடித்தல், holding anything with the face downward.

குப்புறல், குப்புறப் படுத்தல், lying upon the belly—Ventricumbent.

குப்புற விழுதல், முகம் கீழ் நோக்கும்படி விழுதல், falling flat on the face.

குப்புற்றுக் கொள்ளல், முகம் கவிழும்படி மாறுதல், குழந்தைகள் மூன்றும் மாதத்தில் கவிழ்ந்து கொள்ளல், turning or lying with the face downwards as children do in the third month.

குப்பை, கூளம், rubbish; 2. குப்பை மேடு, dung-hill; 3. சத குப்பை, dill seed—Anethum sowa.

குப்பைக் கீரை, குப்பையில் முளைக்கும் கீரை, dung-hill greens — Amaranthus virdis; 2. *அறு கீரை*, garden spinach—Amaranthus tritis; 3. *முள்ளுக் கீரை*, prickly spinach—Amaranthus polystachyus.

குப்பைக் குடையாள், *சிறு கீரை*, field-spinach —Amaranthus campestris.

குப்பைக் கொளுத்தி, குப்பைகளைக் கொளுத்திச் சாம்பலாக்கும்படி உபயோகிக்கும் அடுப்பு அல்லது யந்திரம், shut-in fire for burning waste material; a furnace-like structure or similar contrivance for burning rubbish to ashes—Incinerator; 2. பிரேதங்களைக் கொளுத்திச் சாம்பலாக்கும் ஓர் கட்டடம், a furnace for cremating dead bodies—Cremator.

குப்பை நோய், குதிரைக்கு வரும் ஓர் நோய், a disease attacking horses.

குப்பைப் பருத்தி, see உப்பம் பருத்தி.

குப்பை மஞ்சள், ஓர் இழிந்த மஞ்சள், an inferior kind of turmeric; 2. *குரங்கு மஞ்சள்*, monkey turmeric—Bixa orellana.

குப்பை முள்ளி, *சிவப்பு முள்ளிக் கீரை*, red prickly-spinach—Amaranthus spinosus.

குப்பை மூலிகை, *முடக் கொத்தான்*, palsy curer—Cardiospermum halicacabum.

குப்பை மேனிக் கீரை, குப்பையில் வளரும் ஓர் வகைக் கீரை. இது வீட்டின் புறக்கடை, தோட்டம் இவ்விடங்களில் முளைக்கும். இதற்கு மலத்தை இளக்குங் குண முண்டு. இதை உப்புடன் சேர்த்து அரைத்து சொறி சிரங்குக்குப் போடலாம்; எண்ணெயோடு கலந்து வாதப் பிடிப்புக்கு உபயோகிக்கலாம். இதன் ரசம் சிறிய அளவில் குழந்தைகளின் மார்ச்சளி, கோழை முதலியவைகளை வாந்தி மூலமாய் வெளிப் படுத்தும். இதன் கஷாயம் காது வலிக்குக் காதில் விடவும், சுத்திற்கு ஒத்தடம் கொடுக்கவும் உதவும். உலர்ந்த இலைத் தூள் படுக்கைப் புண்ணுக்குத் தூவ [illegible]க்கலாம். இவ் விலையை அரைத்து மேகக் [illegible]ந்திப் புண், அரி கிரந்திப் புண், பாம்புக் கடி முதலியவைகளுக்கு வைத்துக் கட்டலாம். இதன் சாற்றை மூக்கில் பிழிய தலைவலி குணப்படும். குழந்தைகளின் மலச் சிக்கலுக்கு இவ் விலையை அரைத்து அபான வாயிலில் பூச குண முண்டாகும். இதன் வேரைக் கஷாய மிட்டுக் கொடுக்க பேதியாகும். இதைக் கீரை வகைகளில் சேர்த்துச் சுண்டி சாப்பிட வயிற்று வலி, வாத ரோகம், பீனசம் இவைகள் போம், rubbish plant —Acalypha indica. It is common in Indian gardens and backyards of houses. Leaves are laxative; mixed with common salt they are applied to scabies. The expressed juice of leaves mixed with oil, forms a useful application in rheumatic arthritis; in smaller doses it is an expectorant and a safe remedy in cases of bronchitis and asthma. The decoction is employed in ear-ache as instillation and also as fomentation. The powder of dry leaves is used for curing bed-sores. A cataplasm or poultice of bruised leaves is applied to syphilitic ulcers and maggot-eaten sores; and also to relieve the pain in snake-bites. Juice of the plant dropped into nostrils relieves congestive head-aches; leaves ground into a paste and introduced into the rectum of children relieve obstinate constipation. Roots bruised in water acts as a cathartic. Leaves mixed with other vegetable greens, and takan in food is a good remedy for stomach-ache, rheumatism, catarrhal complaints etc.

குப்பை மேனி மெழுகு, குப்பைமேனியை மற்ற சரக்குகளோடு சேர்த்துத் தயாரிக்கும் மெழுகு, a wax-like preparation from rubbish plant mixed with other ingredients.

குப்பை யணைதல், குப்பையைச் சேர்தல், resorting to a dung-hill, said of a hen for purposes of hatching eggs.

குப்பை யலரி, *ஈழத் தலரி*, pagoda tree — Plumeria acutifolia.

குமக்கி, see கடுகு ரோகிணி.

குமரை, ஆந்தை, owl.

குமஞ்சம், பறங்கிச் சாம்பிராணி, Indian resin —Boswellia serrata; 2, *குங்கிலியம்*, saul dammer—Shorea robusta (resin of); 3. *சாம்பிராணி*, frankincense.

குமஞ்சான், see குஞ்சம்; 2. **ஆண் குமஞ்சான்** அதாவது குங்கிலியம், male frankincense, 2. **பெண் குமஞ்சான் அல்லது சாம்பிராணி**, female frankincense; 3. **தூப வர்க்கம்** different varieties of incense; 4. **பறங்கிச் சாம்பிராணி**, benzamin.

குமஞ்சி, ஆந்தை, owl. See குமரை.

குமடு, கன்னம், cheek.

குமடெறிவான், கர்ப்பூரம், camphor.

குமட்டல், வாய்க் குமட்டல். having a sudden fit of nausea; 2. வயிறு நிறம்ப உண்ணலி லினால் ஓதக் கெடுத்தல், retching es in vomiting.

குமட்டி, ஓர் சுரைச் செடி, bottle-gourd creeper; 2. காட்டுப் பூசம், eye-ball tree—Nephelium longana.

குமட்டிக் கீரை, ஓர் வகைக் கறிக்கீரை, a kind of vegetable green—Celosia nodiflora.

குமட்டிக் கொண்டிருத்தல், ஒக்காளித் திருத்தல், being nauseous.

குமட்டு, வாந்தியெடுக்கை, nauseousness; 2. ஒக்காளம், vomiting sensation; 3. அருக் களிப்பு, nausea: 4. வயிற்றுப் புரட்டு, a peculiar stirring sensation of the sto. mach with a propensity to vomit.

குமட்டுகை, குமட்டுதல், a sudden fit of nausea—Qualm.

குமட்டுதல், அருவருத்தல், loathing; nauseating; 2. ஒக்கா ளித்தல், the act of retching as vomiting; having a vomiting sensation; 3. குடலைப் புரட்டல், affection of the bowels as to feel a vomiting sensation.

குமட்டுள்ள, ஒக்காள முள்ள, qualmish.

குமர தனுசாதி அஸ்தசுக சாதியாகிய ஆண் சாதி நாலில் ஒன்று, one of the four classes of men divided according to lust.

குமண்டை, வயிறு நிறையும் படி சாப்பிட்டுத் தெவிட்டுகை, retching from over-heating feeding beyond natural dasire.

குமண்டை யிடுதல், வயிறு நிறைந்து தெவிட் டல், filling to loathing

குமம், கோஷ்டம், Arabian costus—Costus speciosus.

குமர கண்டம், see குமர கண்ட வலி.

குமரகண்ட வலி, ஓர் வகை இழுப்பு வலி. அது வாத சிலேட்டுமத்தாற் பிறந்து, சுரம், தலை வலி கண்டு, முன் கழுத்தையும், முகத்தையும் முறுக்கி தோளின் பக்கம் வைத்தல், தாடை, கண், செவி, உதடு இவைகளைக் கோணச் செய்தல் முதலிய குறிகளோடு, வலிப்பும் காணும், மாதர்களுக்கு இந்நோய் கருப்ப வாயுவைப் போல் கருப்பையில் அடங்கி யிருந்து சில காலத்திற்குப் பின் சந்நியைப் போற் காணும், a kind of epileptiform fits marked by fever and head-ache attended with violent convulsions in which the front-neck and the face are distorted to one side of the shoulder thereby twisting the face, especially chin, eyes and ears. It is said to be due to the concerted action of the deranged Vayu and Phlegm (humours) In cases of women, this disease does not manifest itself suddenly nor do the symptoms make their appearance all at once. but it lies latent in the uterus till develops in fits.

குமரக மூலி, புதினாக் கீரை. Indian peppermint; Marsh mint—Mentha arvensis.

குமரகம், மாவிலக்கு, garlic pear—Crataeve religiosa.

குமரகன் பூடு. கோழிக்காற் பூடு, a plant re sembling the leg of a fowl.

குமரகன் பெண்டீர், வள்ளிக் கொடி, sweet potato creeper—Ipomaea batatus.

குமரக் கிரியை, சிரித்தல், சிறு நீர் குடித்தல், தரையைக் குத்தல், கல் பொருக்கல், முத லிய குணங்களை யுண்டாக்கும் ஓர் சித்தப் பிரமை, a state of unsound mind manifesting such tendencies as laughing-drinking of urine, striking with the fist on the ground, gathering of pebbles etc.

குமரப் பாரை, சுறாவைப் போன்ற ஓர் பெரிய கடல் மீன். இது 5 அடி நீளம், மேற் பக்கம் பச்சை, கறுப்பு; வயிற்றின் புறம் வெள்ளி யைப் போன்றது. shark pauray — Caranx rottleri. It is so called from its resemblance to shark. . It is 5 ft. long, glossy-green on the back and silvery-white on the abdomen.

குமர மூக்கன், see கொம்பேரி மூக்கன்.

குமரம், கொம்பில்லா மிருகம், animals without horns.

குமர லண்டம். see குமுர லண்டம்.

குமரனுடைய மனைவி மூலம், வள்ளிக் கிழங்கு, see குமரகன் பெண்டீர்.

குமர னேறும் பச்சிலை, மயிற் சிகைப் பூடு. peacock's crest—Actimopteris dichotoma.

குமர னேறும் பட்சி, மயில், pea cock.

குமரஞேசிகம், பிள்ளை மருது, flowering murdah—Terminalia paniculata.

குமரன், இளைஞன், a young man 16 years old; 2. வாலிபப் புத்திரன் a youthful son; 3. ஆண மகன், man in the prime of youth i.e , 16 to 32 (years).

குமரன் மாலிகம், பிராய் முட்டி, rose-coloured sticky-mallow—Pavonia zeylanica.

குமரி, இளம் பெண், a young girl; 2. கற்றாழை, Indian aloe—Aloe indica; 3. கன்னி, a young marriageable woman; 4. கன்னியா குமரி, Cape Comorin; 5. குப்பை மேனி, rubbish plant—Acalypha indica; 6, கௌரிபாஷாணம், a kind of prepared arsenic — Yellow oxide of arsenic; 7. தையோக அல்லது கருத்தரித்தற் குரிய பருவ முடையாள், a woman at the age during which she is fit for sexual intercourse or fit to be in a state to conceive; 8. பருவ மடைந்த பெண், a matured girl; 9. அழி வில்லாப் பெண், a virgin of unchanging youth; 10. பத்து அல்லது பன்னிரண்டு வயதுப் பெண், a young girl 10 or 12 years old: 11, பதினாறு வயதுப் பெண், any girl up to the age of 16 years; 12. காக்கணம், mussel-shell creeper — Clitoria ternatea; 13. மல்லிகை, jasmine — Jasminum sambuc; 14. பேரேலம், greter cardamom; 15. புடமிட்ட பொன். refiined gold; 16. சத்தி, the goddess Sakthi; 17. பூப் படையாப் பெண், a girl in whom menstruation has not commenced; 18 சப்த மாதர்களில் ஒருத்தி, one of the seven renowned women or mother (Saktis); 19. சுத்தப் பொன், pure gold: 20. வழலை, see குமரி காமம்; 21. சத்தி சாரணை.

குமரி கர்ப்பிணி, சிறு பெண்ணா யிருக்கும் போதே கருப்ப மடையும் பெண், a girl pregnant while still young; a girl conceiving prematurely.

குமரி கற்பம், சோற்றுக் கற்றாழையிற் கொள்ளும் காய கற்ப மருந்து, medicine taken along with aloe-pulp for rejuvenation; 2. பெண்ணின் நாதத்தோடு மருந்தைச் சேர்த்துக் கொள்ளும் கற்ப மருந்து. a rejuvenating medicine in which the female vaginal secretion forms the chief ingredient amongst other drugs used for the purpose.

குமரி கற்றாழை, சோற்றுக் கற்றாழை, aloe-pulp; 2. செங் கற்றாழை, red aloe.

குமரி காசம், கண்ணுக் கேற்படும் ஓர் வகைக் காச நோய், இதனால் கண்கள் கலங்கிதாங்க முடியாத கடுப்புடன் வலி யுண்டாகிப் பீளை சேர்ந்து, நடுவிழியில் குத்தலும் அத்துடன் கண்ணில் வாயுவுங் கொண்டு, கண்மணி பெருத்து வீங்கித் திரண்டு நீர் கோர்த்துக் கொண்டு பார்வைக் குக் கெடுதி நேரிடும், cataract of the eyes. It is marked by a bluish-white appearance like contusion. intolerable pain and irritation. muco-purulent discharge. piercing pain in the irris. As a result of deranged Vayu (humour) it is also characterised by dilatation of the pupil, swelling due to the collection of morbid fluid in the eye and impaired vision.

குமரி காமம், பெண்ணின் நாதம், sexual discharge in woman-Semen muliebre (உ-ம்.)

> கொள்ளடா கொள்ளடா குமரி காமம்
> கொண்டவனே உயிர் பிழைப்பான்
> மற்றோன் சாவான்.
>
> (பூரணச் சந்தி ரோதயம்)

the above is a quotation from a Tamil work, alluding to the importance of the woman's secretion in Rejuvenation,

குமரி காவிகம், சிவப்புக் கற்றாழை, red aloe.

குமரி சீவன், விசாரணை அல்லது புத்திர சீவிப் பூடு. child's amulet tree — Putranjiwa roxburghii.

குமரிச் சாறு, கற்றாழைச் சாறு, aloe juice 2. பெண்ணின் நாதம், See குமரி காமம்.

குமரிச் சுறு, குரங்கன் சுறு, zebra shark—Stegostoma tigrinum.

குமரிச் சோறு, கற்றாழைச் சோறு, aloe pulp.

குமரி ஞாழல், மல்லிகை. jasmine; 2. see சங்க புட்பம், 3. இலவங்கம், clove—Cinnamomom genus; 4. ஓர் பச்சைப் பூடு, an ever-green plant.

குமரித போதம், துரிய நிலை, the highest degree or state of the soul in which Yogis attain entire quiescence

குமரித் தைலம், சோற்றுக் கற்றாழை ஆதியாகத் தயாரிக்கும் தலை முழுக்குத் தைலம், a medicated oil prepared with aloe as chief ingredient along with other drugs. It is used for anointing the head.

குமரி நாதம், see குமரி காமம், 2. மாத ருதுு, menstrual blood.

NOTE:—The word implies menstrual blood as found in many dictionaries, but strictly speaking it is not correct as, according to Siddhars' science, it refers only to semen muliebre, which is quite a different fluid discharged by women during sexual intercourse in the same way as men

குமரி நீர், பெண்ணின் காமக் கழிநீர், see குமரி காமம்; 2. கற்றாழை நீர், aloe juice; 3. வெடி யுப்புத் திராவகம், nitric acid; 4. சிறு பெண் மூத்திரம், girl's urine.

குமரி நீலி, கௌரி பாஷாணம், see குமரி.

குமரிப் பருவம், கருத் தரித்தற் குரிய பருவம்; பருவ காலம், the reproductive period of a woman's life—Genesial cycle.

குமரிப் பால், see குமரிச் சாறு; 2. வயது பெண்ணின் முலைப் பால், the breast-milk of a yoong woman.

குமரிப் பூ, இளம் பெண்ணின் ருது அதாவது சூதக ரத்தம், menstrual blood of a virgin girl,

குமரி மஞ்சணத்தி, பூசு மஞ்சள், Indian saffron

குமரி மடல், see கற்றாழை மடல்.

குமரி மணி, வயது பெண்ணின் யோனி லிங்கம், the small elongated organ or clitoris of a young woman.

குமரி மூத்தல், கன்னிகையாய்க் காலங் கழித்தல், living to die as a virgin.

குமரி மூலம், கற்றாழை வேர், aloe-root.

குமரி யட்சரம், குழந்தைகளுக்கு அழற்சியினால் நாக்கு கொப்புளிக் காமலே தடித்து, வெடித்து, சுரங் காய்ந்து, இரத்தமாய் வயிற்றுப் போக்குடன் வாந்தியையும் உண்டாக்கும் ஓர் நோய், a kind of stomatitis due to alimentary disorder. It is marked by swollen tongue, fissure from inflammation without ulceration, fever, dysentery and vomiting.

குமரி யன்னம், see குமரிச் சோறு.

குமரி யாடுதல், கன்னிப் பெண்ணோடு புணர்தல், having sexual intercourse with a virgin.

குமரியா யிருத்தல், கன்னிகையா யிருத்தல், to be a maiden.

குமரி யீஞ்சு, பேரீச்சம் பழம், wild date fruit —Phoenix dactylifera.

குமரி யிருட்டு, விடியுமுன னுண்டாகும் இருட்டு, darkness before daybreak.

குமரி லிங்கம், see குமரி மணி.

குமரி வாயு, ஓர் வாயு, a kind of windy humour.

குமரி வாழை, சுறு வாழை, the young of a

குமர், கன்னி யழியாமை, virginity; 2. விவாக மில்லாத பெண், an unmarried woman; virgin.

குமர்ப் பிள்ளை, குமரி, virgin.

குமலி துளசி, holy basil — Ocimum sanctum.

குமளம் பாசு, துரை மீன், a kind of fish. See அறக்குளா மீன்.

குமாரகம், ஓர்வகை ஈயம், a kind of lead; 2. மா விலங்கம், lingam tree — Crataeva religiosa; 3. பத்து, பன்னிரண்டு வயதுப் பெண், a girl of 10 or 12 years; 4. கற்பழியாப் பெண், a chaste woman; 5. இரட்டை மல்லிகை, double-flowered jasmine.

குமார தந்திரம், இராவணேஸ்வரன் கோகர்ணத்திற் தவம் செய்து பிரமதேவன் வரத்தினாற் பெற்ற ஓர் வைத்தியக் கிரந்தம். இது வடமொழியில் எழுதிய ஆயுள் வேதத்தின் ஒரு பாகம், one of the divisions of Ayurveda in Sanskrit obtained from God Brahma by Ravana as a reward for his penance or austerities at Gokharna.

குமார பிருத்தியம் ஆயுள் வேதத்தில் குழந்தைகள், பெண்கள் இவர்களின் நோய்களைப் பற்றிக் கூறும் ஆறு வைத்திய புத்தகங்கள். இவைகளில் மேற்படி நோய்களின் காரணம், குறி, குணம், முறை முதலியவைகளைப் பற்றிக் கூறும், 6 books in Ayurveda on the Practice of Medicine containing etiology, symptomatology etc. of diseases peculiar to infants and women; and the pathology etc. of those diseases.

குமாரப் பாவுறு, ஓர் கடல் மீன், இது 5 அடி நீளம், a kind of horse-mackerel — Caranx rottlerii. Its length is about 5 feet.

குமாரம், ஓடவைத்த பொன், refined gold obtained by melting process.

குமார வாகனம், மயில், peacock; 2. யானை, elephant.

குமார விருத்தியை, மருத்துவச்சி, mid-wife.

குமாரன், see அக்கினி குமாரன்; 2. வாலிபன், a young lad; 3. ஓர் மரம், a variety of cinnamon—Phoebe paniculata.

குமாரி, சொர்ண பேதி, a solvent or menstruum dissolving gold; 2. அழியாக் கன்னி, a woman of perpetual youth

arrived at puberty; 4. யவ்வன குமாரி அதாவது துலுக்கக் கற்றாழை, Bombay aloe—Socotrine aloe.

குமாரிகா, see காய்ப் பாகல்.

குமாரிகை, பத்து முதல் பன்னிரண்டு வயதுப் பெண், a girl of 10-12 years. See குமாரகம்.

குமாரி பூசை. ஓர்வகை துர்க்கை பூசை இதில் 10-12 வயது பெண்ணை நிர்வாணமாக நிறுத்தி, அவளுக்கு பூசை நைவேத்தியம் செய்தல். இதன் விபரம் சித்த நூற்களில் விரிவாகக் காணப்படும், a worship of Durga in which a girl 10-12 years old is placed naked on a pedestal as the representative of the Goddess and offerings are made to her as generally done to an idol. A detailed account of this will be found in Tamil Siddhars' works. See சத்தி பூசை.

குமாரீசம், மண் திருஷ்டி, madder of Bengal; chay-root—Oldenlandia umbellata.

குமிகை, இள வெள், tender gingelly seed; 2. எள், which see; 3. வெள் ளெள், white gingelly seed or sesamum.

குமிகை சோளம், வெண் சோளம், white guinea-corn—Sorghum vulgare.

குமிடக் கல், கிட்டக் கல், iron dross.

குமிட் கல், கற் கிட்டம், over-burnt brick.

குமிட்டிக் காய், கறிக் குமட்டி, a vegetable variety of குமட்டி, See கலியாண பூசினி.

குமிட்டிக் காளான், மரக் காளான், mushrooms growing on trees.

குமிட்டிக் கீரை, see குமட்டிக் கீரை.

குமிட்டி மாதுளை, see கொம்மட்டி மாதுளை.

குமிட்டில். ஓர் கீரை, a vegetable green.

குமிண்டி, see குமிட்டில்.

குமிதம், தேக்க மரம், teakwood; Indian oak —Tectona grandis.

குமிதிகம், see குமிதம்.

குமிலயம், மயிலிக் கீரை, see குப்பை மேனி.

குமிலி, துளசி, see குமிலி.

குமிழகம், குமிழ் மரம், see குமிழ்.

குமிழங் கொடி, see குமிழ்.

குமிழஞ் சுளுந்து, குமிழங் கட்டையில் கொளுத்தும் தீவட்டி, torches made of coomil stick.

குமிழ ரோகம், அல்குலின் சளிசவ்வில், மேடிட்ட அனேக கொப்புளங்களை யெழுப்பும் ஓர் பிரமேக நோய், higly contagious suppurating ulcers in the mucous membrane of the woman's genital, arising from venereal complaints; 2. கடைக் கண்ணில் குமிழ் போல் சவ்வைப் புடைப்பிக்கும் ஓர் கண்ணோய். இது அடியிற் கண்டபடி மூன்று வகைப் படும், a disease developing the growth of the membrane. (red-boil) in the white of the eye. It consists of three kinds as mentioned below:—

1. சதைக் குமிழம், red boil (flesh).
2. இரத்தக் குமிழம், ,, (blood).
3. நீர்க் குமிழம், (water).

குமிழன், see குமிழ்.

குமிழி, நீர்க் குமிழி, water-bubble; 2. இரத்தக் குமிழி, bubble raised on the surface of the blood as in hemorrhage or when blood gushing out; 3. குமிழஞ் செடி. See குமிழ்.

குமிழ்க் கொள்ளுதல், see குமிழித்தல்.

குமிழித்தல், குமிழி தோன்றல், rising of bubbles; 2. குருக்கள் கொப்புளமாய் எழும்பல், rising or maturing of pustules into boils as in small pox; 3. கொப்பளித்தல், gargling.

குமிழ், குமிழஞ் செடி, Kandahar tree; 2. உள்ளங் காற் கட்டி, boil or swelling in the sole of the foot; 3. நாணல், reed—Saccharum spontaneum; 4. எருதின் திமில், the hump of an ox; 5. நீர்க்குமிழி, water-bubble.

குமிழ், பெருங் குமிழ் அல்லது நம்பிடு தேக்கு, இம் மரம் சாதாரணமாய் இமாலயம், நீலகிரி, கிழக் கடல், மேற் கடலோரங்கள், மலையாளம் இவ்விடங்களில் பார்க்கலாம். அடி மரம் கனதி; பூக்கள் கொஞ்சம் பெரியது; கந்தகத்தைப் போல் மஞ்சள் நிறம்; வேர் கசப்பு. இதன் வேர் பல விருத்தி, இரைப்பு வலிவு, மலம் இளக்கம் முதலிய குணங்கள் வாய்ந்தது; இதைக் கஷாய மிட்டுக் கொடுக்க இருமல், வாத நோய், வாத சுரம், அசீரணம், பாண்டு முதலியவைகள் குணமாகும். இலைகளைக் கஷாய மிட்டுக் கொடுக்க வெள்ளை, மூத்திரப் பை யழற்சி இவைகள் போம்; வேருடன் அதிமதுரம், தேன் சர்க்கரை இவைகளைக் கூட்டி யுண்ண பெண்களுக்கு

முலைப்பால் சுரக்கும். இம் மரத்தின் நிழல் உடம்பிற்கு நன்மையைத் தரும். வேர்ப் பட்டையின் சூரணம் சூலைப் பிடிப்புக்கு மேற்பூச்சு மருந்தாக உபயோகப்படும். இதில் பல வகை யுண்டு.அவையாவன:—Kashmere tree—Gmelina arborea. It is a useful tree commonly found in the Himalayas, Nilgris and in the East and west coasts including Malabar. It has a short, thick trunk; few flowered; flowers large and sulphur-coloured. Root is bitter, tonic, stomachic and laxative; decoction of the root is given in cough rheumatism. fever accompanying gout, indigestion, anasarca etc. Infusion of leaves is useful in gonorrhoea and catarrh of the bladder. Root when taken with liquorice, honey and sugar, increases the secretion of milk in woman; the shade of this tree is good for health; ashes used as mordant. The powdered root-bark is applied externally in gout. The tree consists of different varieties and they are:—

1. செங் குமிழ், red coomil — Gmelina tomentosa.
2. நிலக் குமிழ், small Kashmere tree —Gmelina asiatica.
3. பெருங் குமிழ், see குமிழ்.
4. நாய்க் குமிழ், dog-bamboo — Saccharum spontaneum.
5. நீர்க் குமிழ், another variety.
6. கருங் குமிழ், black Kashmere tree.
7. சிறுங் குமிழ், same as No. 2.
8. காட்டுக் குமிழ். forest beil-vervain —Gmelina lobata.

NOTE.—The root of this tree forms one of the ingredients of தசமூலக் கஷாயம், a decoction of the mixture of 10 plants, which is held in great repute by the Hindu physicians; where as the fruits enter into the composition of several cooling and refrigerant decoctions for fever and burning of the body.

குமிழ், கடைக் கண்ணில் கெட்ட சவ்வுச் சதையை வளர்ப்பிக்கும் ஓர் கடைக்கண் ரோகம், a disease of the corner or angle of the eye developing a membraneous growth.

குமிழ்க் கொடி, நிலக் குமிழ், small Kashmere tree—Gmelina asiatica.

குமிழ்ப்பு, கொப்புளம், boil; 2. புடைப்பு, bubbling; the growth of anything into a conical shape; 3. மயிர்ச் சிலிர்ப்பு, horripilation; the standing of hairs on end.

குமிழ் மிட்டான், தண்ணீர் மிட்டான், water-root—Asparagus racemosus.

குமிழ் மிட்டான், உள்ளங்கைக் கட்டியை குணமாக்கு மருந்து, a medicine curing boil on the palm.

குமிழ் ரோகம், கண்ணின் வெள் விழியில்கொப்புளத்தை யுண்டாக்கும் ஓர் கண்ணோய், a tubercle on the white or sclerotic coat of the eye.

குமிழ் வண்டு, குடை வண்டு, perforating beetle—Xylocopa tenisocapa.

குமிளம், see குமிழ் ரோகம்; 2. see குமிழ்.

குமிளி, நீர்க் குமிழி, bubble on water.

குமிளிக் கண், குருக்கள் எழும்பிய கண், eye marked by vesicles.

குமிளி பாய்தல், நீர்க குமிழியைப் போல் எழும்பல், rising like bubbles.

குமிள், see குமிழ்.

குமுகம், பன்றி, hog; 2. பிரம்புக் கொடி, cane creeper; water-ratan—Calamus rotang.

குமு குமெனல், கும்மென மணத்தல், throwing a strong fragrant smell.

குமுக்குதல், ஊமைக் காயம் உண்டாக்கல், causing contusion, as by beating with a stick or something bulky.

குமுடக் கனிவழி, முட்டைச் சிலந்தி, an ulcer of the size of an egg; an egg-shaped venereal boil.

குமுறு சுனை, சிங்கி விளையாட்டிற் குபயோகிக்கும் ஓர் மூலிகையின் சுனை, hairy prickles of an unknown drug (குமுறு) used in magic.

குமுதகம், see செவ் வாம்பல்; 2. தருப்பை, sacrificial grass; 3. வெள்ளி. silver; 4. வெள்ளைப் பாஷாணம், white arsenic.

குமுதகி, வெள் ளாம்பல், white Indian water-lily—Nymphaea pubescens.

குமுதச் சிலந்தி, கொப்புளம் எழும்பாமலே உள்ளே புடை கொண்டு சீழ் வடியும் ஓர் வகைச் சிலந்திப் புண், a kind of suppurating venereal ulcer discharging pus without visible signs of development on the surface of the body; an ulcer developing underneath the skin and dis-

charging pus without eruption on the surface of the body; 2. ஓர் வகைச் சிலந்திப் பூச்சி. இதன் விஷம் பட்ட விடத்தில் கொப்புளங்கள் எழும்பி, அதனின்று மாறாது சீழ் வடிந்து எரிச்சலுடன் இரைப்பும் நெஞ்சடைப்பு முண்டாகும், a kind of spider, the poisonous bite of which is said to cause or develope in different parts of the body, ulcers attended with constant discharge of pus, burning sensation, hard breathing and spasmodic suffocative attacks.

குமுதபதி மங்கை, செவ் வல்லி, red Indian water-lily—Nymphaea rubra.

குமுத பத்திரம், பெருங் குமிழ், see குமிழ்.

குமுத பாஷாணம், வைக்கிராந்த பாஷாணம், a mineral poison.

குமுத பாந்தவம், கர்ப்பூரம், camphor.

குமுதம், ஆம்பல், Indian water-lily; 2. கர்ப்பூரம், camphor; 3. see கற்பாஷாணம்; 4. செவ் வாம்பல், red Indian water-lily — Nymphaea rubra; 5. தருப்பைப் புல், Kusa or sacrificial grass — Erogrostis cynosuroides; 6. வைக்கிராந்த பாஷாணம், a mineral poison; 7. அடுப்பு, hearth; fire-place; 8. வெள்ளாம்பல், white Indian water-lily — Nymphaea alba; 9. வெள்ளல்லி, white nymphaea lotus — Nymphaea lotus (pubescence); 10. ஓர்வகை நாணல், a kind of reed — Saccharum spontaneum; 11. வெள்ளி, silver; 12. வெள்ளைப் பாஷாணம், white arsenic — Arsenic trioxide; 13. பன்றி, hog; 14. குமிழ், Kashmere tree—Gmelina arborea; 15. புள்ளடி, acute unifoliate tick-trefoil — Desmodium gangeticum; 16. தாதகி புட்பம், downy grislea — Grislea tementosa alias Woodfordia floribunda; 17. ஆகாச தாமரை, sky lotus—Pistia stratiotes; 18. நேத்திர குமுதம் அதாவது கருவிழியில் வரும் ஓர் சதை வளர்த்தி, இது மூன்று வகைப்படும், அவை யாவன, a disease of the black of eye marked by morbid growth of flesh over the pupil. It consists of three kinds viz:-

1. **செங் குமுதம்**, red growth.
2. **கருங் குமுதம்**, black „
3. **வெண் குமுதம்**, white „

C. f. குமிழம்.

குமுதாஸ்தம், ஆம்பற்கொடி, creeper of Indian water-lily.

குமுதிகை, பூசனி, sweet pumpkin—Cucurbita maxima.

குமுதிகை, ஓர் வாசனை மரம், a fragrant tree.

குமுதிப் பனை, கிச்சிலிப் பனை, இம் மரம் மிகவும் உயரம்; பூக்கள் மஞ்சள், ஊதா நிறம்; அடி பாகத்தின் உட்புறத்தில் சவ் வரிசி அபரிமிதமாய்க் கிடைக்கும். பூவினது தண்டுச் சாற்றி னின்று வெல்லமும் மதுவும் தயாரிப்பார்கள், Singapore sago-palm—Arenga saccharifera alias Borassus gomutus. It is a very large and tall palm: flowers yellow and purple; heart of the stem contains large quantities of sago; flower-stalks yield a sugary sap which is made into jaggery and palm wine.

NOTE.—Sago is a farinaceous pith obtained from the stem of many plants mostly palms. See சவ்வரிசி.

குமுதை, ஓர் மரம், a tree; 2. கற் பாஷாணம்; see குமுந்தம்.

குமுந்தகம், see குமுந்தம்.

குமுந்தம், கற் பாஷாணம், a kind of native arsenic.

குமுர்தம், கடுக்காய். Indian galnut. It is so called probably from its being considered next to nectar.

குமுனி, துளசி, holy basil—Ocimum sanctum; 2. பெருந் தும்பை, large leucas — Leucas aspera.

குமுறக் காய்ச்சுதல், கொதிக்கும்படி மிகுந்த தீயிட்டுக் காய்ச்சுதல், heating any liquid to boiling point.

குமுறப் பிழிதல், இறுகப் பிழிதல், squeezing out by pressure; to express completely.

குமுற லண்டம், (குமுறல், gurgling + அண்டம், scrotum) பிடுக்கில் இரைச்ச விடும் ஓர் வகை யண்ட நோய். இதில் பிடுக்கு கைத் துருத்தியைப் போல் பருத்து, குடல் மேலேறி னுைம், கீழிறங்கினுைம் தவளையைப் போ லிரையும். ஆகவே, நடக்கும் போது கனதியால் இசிவு வலியையும் அதிகரிக்கும், reducible hernia. In this, when the rupture which eventually makes its way into the scrotum is pushed back or returned into the cavity of the abdomen, a gurgling sound is commonly heard. So, when the patient begins to walk, a feeling of weight and dragging pain is noted.

குமுறல், ஒலித்தல், gurgling; roaring; sounding; 2. நுரை கிளம்பல், giving out foam; 3. குமிழி யுண்டாதல், bubbling up.

குமுற வெடித்தல், அதிரும்படி இடித்தல், ,pounding forcibly in a mortar.

குமுற வெரித்தல், கொதிக்கும்படி நன்றாய் எரித்தல், heating or boiling anything to a great heat.

குமுறுதல், களகள வென்னும் சப்த முண்டாதல், causing a gurgling sound. See குமுறல், 2. கோபம் அல்லது விசனத்தினுலெழும் அழுகையை யடக்குதலினு லேற்படும் சத்தம். a peculiar sound caused by suppressed anger or grief; 3. செருமுதல், hemming.

குமேதகம், நீர்ச் சுருக்கு, difficulty in passing urine attedded with pain and a sensation of heat — Dysuria.

குமைஞ்சான், see குமஞ்சான்.

குமைதல், புழுக்கமா யிருத்தல், to be close as the air; sultry; 2. குழையும்படி வேகுதல், being over - boiled as to become slimy; 3, சோர்வடைதல். getting fainted.

குமைத்தல், உரலில் இடித்தல், pounding in a mortar; 2. குழையும்படி வேக வைத்தல் over-boiling as to become slimy; 3. வருத்துதல், vexing; 4. நொருங்க மிதித்தல் treading out into a mash.

குமைந்து போதல், see குமைதல்,

கும்பகம், see கற்றுழை, 2. சாலாங்க பாஷாணம், a kind of native arsenic; 3. தொட்டி பாஷாணம், another kind of native arsenic; 4, பாதிரிப் பூ, see கும்பம், 5. மருதம், box myrtle — Myrica sapida; 6. இரப்பையைப் பற்றிய ஓர் கண்ணோய், a disease of the eye - lids. See கும்பிகம்,

கும்பகம், தினப்படி பழகி பிராண வாயுவை யடக்கல், retention of breath in Pranayama in daily practice as a religious exercise.

NOTE:—This method of exercise in Pranayama not only develops one's Personal Magnetism, but also one's will and Power of concentration.

2. சுவாச பந்தனம், control or complete suspension of breath, as in Yoga practice. This is done by stopping the breath by shutting the mouth and closing both the nostrils with the fingers of the right hand, for purposes of attaining Supernatural power rather than Divine and Superhuman powers.

NOTE:—Kumbaka comes in when all the clamourings of the mind are hushed and suspension of breath follows, It comes even through Bhakti for, through intense Bhakti the breath remains suspended in the same way as in Yoga practice.
C, f. கேவல கும்பகம்.

கும்பகயம், பேய்த் தேற்று. a bitter variety of clearing - nut—Strychnos potatorum.

கும்பக வவஸ்தை, see கும்ப காவஸ்வத.

கும்ப காமாலை, பித்தம் இரத்தத்தில் கலப்பதால் உடம்பு வீங்கி, மூட்டில் குடைச்சல் கண்டு, சில பாகங்களில் கண்டு கண்டாய் வீக்க முண்டாகி, மூத்திரம், நகம், கண் இவைகள் மஞ்சள் நிறமடைந்து வாதம் அதிகரித்து. மாலையில் வியர்த்து, அசதி கண்டு துன்புறுத்து மோர்வகை காமாலை, a kind of jaundice due to the presence of bile in the blood. It is marked by general swelling of the body, crushing pain in the joints. knotty swelling in the affected parts; urine. nails, and eyes assuming a yellow tint. aching pain in the limbs, perspiration in the evenings, physical langour, drowsiness etc.

கும்ப காரம், கண்ணுக்கு வலிவைத் தந்து, இரப்பைகளுக்கு அழகைக் கொடுக்கும்அஞ்சனம், a mineral substance (antimony) used as collyrium to strengthen the eyes and beautify the lashes.

கும்பகாரி, சிகப்புப் பாஷாணம். red arsenic

கும்ப காரிகை, கண்ணுக்கிடு மருந்து, collyrium for the eyes, See கும்பகாரம்.

கும்ப காவஸ்தை, அபான வாயு மறைந்து, பிராண வாயு இருதயத்தில் நிறைந்து, அசைவற்றிருக்கு மோர் யோக நிலை. a state of Yoga in which same difficulty is experienced when the corbonic acid gas in the system is gradually expelled and the oxygen with the prana is made to take its place in the lungs. This is what really takes palce in the suppression of breath.

கும்பக் கிருதம், 110 வருடம் சென்ற நெய், (In Ayurveda) clarified butter 110 years old.

கும்பங்கம், கருங்கூளி, black eagle. It is so called probably of its body resembling a pot in shape.

கும்ப சம்பவன், அகஸ்தியர், கும்பத்திற்பிறந்த தாலிப் பெயர், the sage Agastiya, so called from his taking birth in a pot.

கும்ப சரம், *சிவதை,* Indian jalap — Ipomaea turpethum alias Convolvulus turpethum.

கும்ப சாதி, பெண்களின்நாலுவகை சாதிகளில் ஒன்றாகிய *சங்கினி சாதி,* one of the four classes of women characterised according to their lust (Sankini).

கும்ப சீனகம், see *கும்ப சரம்.*

கும்பச் சீனிதம், *பீநாறிச் சங்கு,* smooth volkameria—Cleodendron inerme.

கும்பச் சுரை, குடத்தைப் போன்ற உருண்டைச் *சுரை,* round bottle-gourd — Cucurbita lagenaria.

கும்பஞ் சாய்தல், மரணப் பொழுதில் தலை சாய்தல், drooping of the head as a symptom of approaching death.

கும்பஞ்சான், *சிவதை,* see *கும்ப சரம்,*

கும்பஞ் செய்தல், பிணத்தைப் புதைத்தல். burying the dead.

கும்ப தும்பி, குடத்தைப் போன்ற ஓர் *சுரை,* a large round gourd resembling a pot. See *கும்பச் சுரை.*

கும்பத்தனி, see *கும்பஸ்தனி,*

கும்பஸ்தனி, குடத்தைப் போன்ற முலை யுடையவள், a woman having pot-shaped breasts.

கும்ப நீர், குடத்துத் *தண்ணீர்,* water contained in a drinking pot.

கும்பந்தம், வெண் *கருங்காலி,* whitish black wood—Dyospyros oocarpa.

கும்பப் பிளவை, மேல் முதுகில் தோள் பக்கமாக உண்டாகும் பிளவை, carbuncle in the upper portion of the back just below the sides of the neck.

கும்பப் புடம், ஒரு பானைக் கடியில் 40 துவாரங்கள் செய்து; அப் பானையில் பாதி வரை அடுப்புக்கரி யிட்டு அதன் மீது மருந்தை வைத்து, அப்பானையின் வாயை மடக்கால் மூடி, சீலமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி, அப் பானையின் மடக்கு மீது நெருப்பை யிட்டு மூன்று நாள் அடுப்பில் வைத்து எரிக்குமோர் *முறை,* a process of calcination in which a large round pot, containing of 40 holes at the bottom, is half-filled with charcoal, over which is placed the required medicine. The lid of the pot is than covered with a dish and hermetically sealed by luting the joint with clay and then getting it dried. The whole apparatus is than placed on an oven and heated for three days continuously.

கும்ப மாதி, *சிவதை,* see *கும்ப சரம்.*

கும்ப மாமுனி, see *கும்ப முனி.*

கும்ப மீன், கடல் நத்தை. இதன் அடிப் பக்கத்து ஓடு வெட்டுண்டது போற் காணும், sea-snail with a fissure in the shell at the bottom portion.

கும்ப முசுகம், தண்ணீர்ச் சாலைப் போன்ற பிடுக்கு, jar-shaped scrotum.

கும்ப முனி, கலசத்திற் பிறந்தோனாகிய அகத்திய முனி, the sage Agastya who took his birth in a pot; 2. கொக்கு, stork.

கும்ப மூர்த்தன், மனிதரை நோயால் பீடிக்கச் செய்யும் பேய், a demon causing diseases in human beings,

கும்பம், சாலாங்க *பாஷாணம்,* a kind of native arsenic; 2. *குவியல்,* heap; 3. தோள் மேல், the upper portion of the shoulder; scapula or shoulder blade; 4. நெற்றி, forehead; 5. பலண்டுறுக பாஷாணம், a kind of arsenic- 6. *தாலம்ப பாஷாணம்,* a mineral poison; 7. *குடம்,* water-pot; 8. பிணம் சுட்ட எலும்புகளைச் சேகரித்து வைக்கும் குடம். an urn in which the bones of a cremated dead body are collected; 9. *பாதிரிப் பூ,* trumpet-flower—Bignonia suovalens; 10. *பேயா மணக்கு,* wild croton—Croton polyandrum; 11. *சிவதை,* indian jalap—Ipomaea turpethum.

கும்பம் பாலை, வெட்பாலை, dysentery rose-bay — Holarrhena antidysenterica alias Wrightia tinctoria.

கும்ப யோனி. அகத்திய *முனி,* sage Agastiya; 2. see *கவிழ் தும்பை;* 3. *துரோண புட்பம்,* a flower plant — Phlomis zeylanica- 4, சாலைப் போன்ற பெண் *குறி,* jar-shaped pudendum muliebre.

கும்பலக் கொடி, see *குமிழ்.*

கும்ப லடித்தல். கும்ப வாசனை யடித்தல், flavour of being over-boiled; 2. *சுடு நாற்றம் வீசுதல்,* throwing scorched smell; smell as of being over-burnt.

கும்பலம், குடத்தைப் போன்ற *பூசினி,* pumpkin, so called because of its resemblance to water-pot; 2. see *குமிழ்;* 3. *சிறு குமிழ்,* bell-vervain—Gmelina asiatica.

கும்ப லிகம், மூலாதாரம், the lowest centre in the pelvic region of the human body —Sacral plexus.

கும்ப வாதம், ஓர் வாதநோய், இதனால் தோள், கை மிக்க வலித்து, கன்னமும் கண்ணும் கடுத்து, சிரசில் துடிப் புண்டாகி, வாயு கோளா றடைந்து நாபியின்கீழ் வலி காணும் a kind of rheumatism attended with böring pain in the shoulders and arms, inflammation of cheeks and eyes, tremor of the head, flatulent disorders and colicky pain below the navel.

கும்ப விம்பம், தொட்டி பாஷாணம், a kind of prepared arsenic.

கும்பன்க் கொடி, see குமிழங் கொடி.

கும்பன மோசு, சூரை மீன், tunny fish; 2. மால்டிவ் தீவிலிருந்து இறக்குமதி யாகும் ஓர் கருவாடு, a dried fish exported from Maldive Islands.

கும்பனம், கலியாணி பூசனி, ash pumpkin — Cucurbita indica; 2. see இலைப் பாசி; 3. see குமிழ்; 4. நீர் வெட்டி, shining melon feather foil — Glochidion zeylanicum. See கும்பலம்.

கும்பளா, ஓர் வகைக் கருப்புப் பாரை மீன், a black rock-cod sea-fish—Sparus berda.

கும்பளிக் காய், தீவாந்திரத்தில்விளையும்பருத்த தே.காய், a round big cocoanut imported to India from the islands of Maldives and Nicobars.

கும்பளி மௌலி, மலைச் சூலி, a kind of cedar tree—Cedrela toona.

கும்பற் சாதம், புகை சூழ்ந்த அன்னம், smoked rice; 2. தீய்ந்த சாதம், charred boiled rice.

கும்ப ஞற்றம், தீப் பற்றிய நாற்றம், scorched smell; smell of anything when charred.

கும்பா, வெள்ளி அல்லது வெண்கல பாத்திரம், silver or bell-metal vessel.

கும்பா காரம், காட்டுக் கோழி, jungle-fowl.

கும்பாசம், வெள்ளை நாகணம், white croton-oil plant—Croton tigilium.

கும்பாதிரி, அரக்கு மரம், lac tree — Schliechera trijuga.

கும்பி, சிவதை, Indian jalap. See கும்பரசம்; 2. தாலம்ப பாஷாணம், a kind of arsenic; 3. நெருப்பு, fire; 4. நெற்றி, forehead; 5. வயிறு, belly; 6. யானை, elephant; 7. பலண்டுறுகம், see கும்பம்; 8. சுடு சாம்பல், hot-ashes especially of the oven: 9. சேறு, moist mud containing filthy matter; mire; 10 see கும்பித்தல், 11. பீழை, carey's myrtle bloom — Careya arborea; 12. குவியல், heap.

கும்பிக பிடகம், ஓர் கண் ணோய், see கும்பிகம்.

கும்பிகம், நீலோற் பல விதை, seeds of blue Indian water-lily — Nymphaea stellata; 2. பெருங் குமிழ், see குமிழ், 3. ஆண் குறி, male genital; 4. ஓர் பூடு, a plant — Rottleria tinctoria; 5. கண் ணிரப்பை ஓரத்திற் குருக்கள் எழும்புவதனாற் காணும் வீக்கம், swelling of the eye-lids due to a number of boils or pustules rising at the margin of the eye-lids.

கும்பிகன், see குத யோனி.

கும்பிகா, நாகப்பழக் கொட்டையைப்போன்ற ஓர் விதக் கல் பரு, a hard black wart resembling the stone or the seed of a jambolin fruit in shape; 2. கழற் கொடி, bonduc-nut creeper — Guilandina bonducella; 3. வெண் பாதிரி, white trumpet-flower tree—Streospermum chelonoides; 4. பாதிரி, trumpet-flower — Bignonia chelonoides; 5. see குதயோனி; 6. ஆகாச தாமரை, sky-lotus—Pistia stratiotes.

கும்பிகா ரோகம், பித்தம் அல்லது இரத்தம் கோளா றடைந்து ஆண் குறியில் இலந்தைக் கொட்டையைப் போல் மாமிசக் கட்டியை எழுப்பும் ஓர் நோய், a disease arising from the derangement of bile or blood in the system. It is marked by a tumour of the size of an Indian plum in the penis.

கும்பிகா வர்த்தமம், ஓர் வகைக் கண்ணோய். பித்தமானது இமையின் நரம்புகளை அனுசரிக்கும் போது இந்நோய் பிறந்து, அனேக சிறு கட்டிகள் அல்லது குருக்களை யெழுப்பி, உட் புறத்திலேயே தங்கி வேதனை கொடுக்கும், a disease of the eye due to the derangement of bile (humour) extending to or prevailing upon the nerves of the eye-lids. It is marked by a number of boils or pustules of the size of Jambolin (Kumbika) seeds, appearing at the junction of the eye-lids and eye-lashes and becoming inflamed without bursting.

கும்பிகை, see குடை பாசி.

கும்பிசம், see குமிழ்.

கும்பி சுவேதம், வேது பிடித்தல், treatment by vapours—Vapour-bath.

கும்பிடாளை, பிண்டம், foetus. C. f. குடு குடாளை.

கும்பிடு கல், வழலை, fuller's earth; 2. பிண்டக் கல். இது ஓர் பரிபாஷைச் சொல், white lime-stone. A secret term used in Alchemy.

கும்பிடு கற் சுண்ணம், சுந்தரானந்தர் நூலிற் கூறியுள்ள வழலைச் சுண்ணம், an alchemical compound of calcium referred to, in Sundaranandhar's works on Tamil Medicine.

கும்பிடு கிளிஞ்சில், சிப்பி, bivalve-shell.

கும்பிடு சட்டி, கணப்புச் சட்டி, portable fire-pot; 2. பொன், வெள்ளி உருக்குவதற்கு கம்மாளர் உபயோகிக்கும் நெருப்புச் சட்டி, fire-pot used by goldsmiths for melting on a small scale, gold and silver — Chafing-dish.

கும்பிடு சிப்பி, ஓர்வகைக் கடற் சிப்பி. இது உணவில் மிகச் சிறந்தது, a well-known bivalve shell fish or mollusc living in the sea and much esteemed for food.

கும்பிடு பூச்சி, இலைப் பூச்சி, praying insect found on the leaves of trees — Mantis religiosa.

கும்பிட்டுக் கட்டுதல், தழுவுதல், embracing.

கும்பித்தல், பிராணாயாமம் செய்யும் போது மூச்சடக்குதல், holding or suppressing breath as in Pranayama; 2. யோகத்தில் வாசி பொருமிக்கல், suspending respiration while in Yoga practice.

கும்பித்து இருத்தல், சமாதி நிலையி லிருத்தல், (In Yoga Philosophy) being in a state in which the individual consciousness gets fused and is lost in the transcendental; 2. மூச்சற்று இருத்தல், (In Psychology) being in a state of trance or suspended animation.

கும்பித்துப் போதல், சமாதி புகவேண்டி தம்பித்தல், causing respiration to cease so as to enter Samadhi; 2. மூச் சொடுங்கி நிற்றல், being in a state of breathlessness.

கும்பி நாசி, குடத்தைப் போன்ற மூக்கு, jar-nose.

கும்பிப் போதல், புகை சூழல், being clouded with smoke when charred or over-burnt

கும்பி முகம், நெருப்பைப் போற் சிவந்த புண், a red inflamed wound; 2. ஓர் சிவந்த விஷப் பூச்சி, a kind of red venomous insect.

கும்பீரச் சரு, பேடி வழும், bile of cobra snake.

கும்பீலை, அகாலத்தில் பிறந்த குழந்தை, child begotten in undue season; 2. கரு முற்றாத குழந்தை, child of an imperfect pregnation; child not fully matured or developed; 3. ஓர் மீன், a kind of fish called gilt-head — Ophiocephalus wrahl; 4. முதலை, crocodile.

கும்பீ நாகம், பெரும் பாம்பு, a big snake.

கும்பீரம், see கும்பீலம்.

கும்பீலம், யானையையும் விழுங்கக் கூடிய பெரிய முதலை, a tremendously big crocodile capable of devouring even an elephant.

கும்புதல், see கும்பிப் போதல், 2. உணவு தீய்தல், being over-heated or scorched as boiled rice or other food; 3. அடிப் பற்றுதல், becoming charred and sticky at the bottom of a vessel while food substances are heated.

கும்பை, ஓர் வாழை, a kind of plantain tree See கும்ப வாழை; 2. டிக்கா மல்லி, diga-malli — Gardenia lucida; 3. பெருங் கம்பில் மரம், broad gardenia — Gardenia latifolia; 4. சிறு கம்பில் பிசின், cumby resin tree — Gardenia gummifera; 5. குடம், pot.

கும்பைப் பிசின், கும்பை மரத்தின் பிசின், comby resin—Gardenia gummifera.

கும்பை மரம், கம்பிப் பிசின் மரம், இதைக் கம் பாரிப் பிசின் மர மென்றும் சொல்வ துண்டு. இது ஓர் சிறிய மரம், முள்ளில்லாதது, பிசின் நிறைந்தது; இலைகளின் காம்பு சிறியது; பூ வெள்ளை, வாசனை யுடையது, மொக்குகளி னின்றும், பட்டையி னின்றும் மஞ்சள் பிசின் கீறி யெடுக்கப் படும். இது சுத்தமாகவே அகப்படாது. இப் பிசின் வலிப்பைக் கண் டிக்கும்; பூச்சிகளைக் கொல்லும். போளத் தைப் போன்ற குணம் இதற்கு முண்டு புண் புரைகளைக் கழுவுதற்கு, இதைச் சாராயத்திற் கரைத்து உப யோகிக்கலாம்; அன்றியும், குதகப் பிரமை, குன்ம வாயு, நரம்புக் கோளாறு, முதலியவைகளுக்குக் கொடுப்ப துண்டு; வயிற்றுப் பூச்சிகளையும் கொல்லுந் தன்மை வாய்ந்தது, cumbly resin tree — Gardenia lucida alias G. resinifera. It is a small tree, unarmed, with resinous buds; leaves short-petioled; flowers, pure white and large. It yields a yellow gum-resin from buds and from wounds in the bark; the odour is pecuuliar and offen-

sive. Gum-resin is anti-spasmodic and insecticide; possesses nearly similar virtues to myrrh; by dissolving it in spirits, it is employed as an external apolication for cleaning foul and callous ulcers and for keeping off flies from sores. It is mostly employed internally in hysteria, flatulent dyspepsia and nervous disorders. It is a successful anthelmintic in cases of round worms.

NOTE:—This tree should not be confounded with Gardenia gummifera, which is another variety.

கும்போ வச்சம், see குடச பாலை,

கும்மட்டி, see ஆற்றுத் தும்மட்டி; 2 சர்க்கரை கொம்மட்டி, sweet water-melon. See கொம்மட்டி, 3. கம்மாளர் நெருப்புச் சட்டி, chafing-dish especially of goldsmiths. See குமட்டி.

கும்மட்டிக் கீரை, see குமட்டிக் கீரை.

கும்மதாரி, see இடி கொள்.

கும்மலி, தடித்தவள், a stout woman.

கும்மாயம், சுண்ணும்பு, slaked lime.

கும்மாளங் கொட்டுதல், **கும்மாளம் பாய்தல்**, } see கும்மாளித்தல்

கும்மாளித்தல், சித்தப் பிரமையினல் குதித்தல் கை கொட்டல், கேளிக்கை செய்தல், தன்னை உயர்வாகப் பேசிக் கொள்ளல் முதலியன, a mild form of mania in which the symptoms are manifested under the form of gayety or sport, as jumping, clapping hands. moving merrily, exaggerating social conditions and indulging in other agreeable hallucinations—Amenomania.

கும்மிருட்டு, காரிருட்டு, perpetual or complete darkness; utter darkness.

கும்மெனல், தண்ணீர் காதி னுட் புகுதலாலும் அல்லது உரத்த சத்தத்தினுலும் ஏற்படும் காதடைப்பின் காரணமாக வுண்டாகும் உணர்ச்சி, the effect of sensation in the ear due to water entering into it or sound striking against the drum from excessive cry.

குயக் கலம், மண் பாண்டம், earthen vessel

குயக் காலம், நிலக் கடம்பு, common cadamba—Anthocephalus cadamba.

குயத்தினலகை, நில வாகை, East Indian senna—Cassia angustifolia.

குய பாசியம், பீநாறிச் சங்கு, smooth volkameria—Cleodendron inerme.

குயபீசகம், எட்டி மரம், nux-vomica tree.

குய பேதி, see குய்ய பேதி,

குயப் புண், see குய்யப் புண்.

குய மயக்கு, மனக் குழப்பம், confusion of mind; 2. குழம்புதல், getting confused.

குய மாதுகம், கடுக்காய், Indian galnut.

குயம், தருப்பை, sacrificial grass. see குசப் புல், 2. பெண் முலை, female breast; 3. இளமை, youthfulness.

குயம்பிக் கடி, சுரை, bottle-gourd — Cucurbita lagenaria.

குயலன், சஸ்திரவித்தை அதாவது புண், கட்டி முதலியவைகளை கத்தியால் அறுக்கும் வகைகளில் தேர்ச்சி யடைந்தவன், one who is skilled in surgery—Surgeon.

குய வரி, வரிகளமைந்த புலி, tiger from its sickle-shaped stripes.

குயவன் ளகவழித்த மண், மிகவு மெல்லிய களிமண், a very fine clay sticking to the hand of a potter at work.

குயவன் வீட்டு மண், குயவன் களிமண், potter's clay.

குயா, கோங்கிலவு, false tragacanth — Cochlospermum gossypium.

குயாகம், see குயா.

குயிமாவதி, கொக் கிறகு, stork's feather.

குயி லண்டம், துரிஞ்சில், bat; 2. குயில் முட்டை, egg of Indian cuckoo,

குயில மோதி, see அதி மதுரம்.

குயிலல், துளைத்தல், boring; perforating.

குயிலாயம், பறவைக் கூடு, bird's nest.

குயிலென மரம், see கடம்பு.

குயில், குயிற் பறவை, இதில் ஆண் கரும் பச்சை நிறமா யிருக்கும்; பெண் கம்மலான பச்சை நிறத்தோடு வெண் புள்ளிகளுள்ளன. சுமார் 1-1½ அடி நீளம்; வால் ½ அடி நீளம். இதன் குரல் மிக்க இனிமையா யிருக்கும். பெண் குயில் தன்முட்டையை காக்கையின் கூட்டில் குஞ்சு பொரிக்க விட்டுவிடும். இதன் கறி, புடை, பிரமேகம்; வயிற்று வலி இவைகளைப் போக்கும். வீரிய விருத்தி யுண்டாக்கும், இப்பறவை அடியிற் கண்டபடி இருவகைப் படும்; Indian cuckoo—common koel—Eudynamis orientalis, The

male of this bird is glossy, greenish black throughout and the female. glossy dusky-green, spotted with white above; length about 1—1½ ft. and tall about ½ feet; it has a melodious voice. Female bird deposits her eggs in the nest of a crow for the purpose of hatching. Its flesh possesses the virtue of reducing swelling and is useful in diabetes and colic. It is an aphrodisiac. It consists of two varieties a mentioned below:—

1. புள்ளிக் குயில், spotted cuckoo.

2. வரிக் குயில், variegated cuckoo,

குயில் மூக்கெலும்பு, முதுகின் அடி பாகத்தின் எலும்பு இது குயிலின் மூக்கைப் போன்றதா லிப்பெயர், coccyx bone, which is situated in the lower extremity of the back bone. It is so called from its resmblance to Koel's beak.

குயில் மொழி, see அதி மதுரம், See குயின் மொழி.

குயிற் கண்டிகை, பாற் குறண்டி, milk corandy—Lepidagathis pungens.

குயின் மூக் கெலும்பு, see குயில் மூக் கெலும்பு.

குயின் மொழி, see அதி மதுரம்; 2. குயிற் குரல், sweet and melodious voice.

குயீ, ஓர் வகை நாடி, a kind of artery.

குயோகம், சின்னி, birch-leaved acalypha—Acalypha fruiticosa.

குய், தாளித்த கறி, seasoned curry; 2. சாம்பிராணி, frankincense; 3. தாளிப்பு, seasoning with spices; 2, நறும் புகை, sweet-scented smoke; incense.

குய்ய கோடம், கவுபீனம், a piece of cloth worn in the loins to cover the genital.

குய்ய தீபகம்; மின் மினிப் பூச்சி. fire-fly.

குய்ய பத்திரம்.அரசிலை, leaf of peepul tree—Ficus religiosa.

குய்ய பீசகம், see குய பீசகம்.

குய்ய பீசம், கற்பூரப் புல், lemon grass—Andropogon schoenanthes.

குய்ய பீதம், see குய்ய பீசகம்.

குய்ய புட்பகம், மகிழ மரம், monkey-face flower tree—Mimusops elengi; 2. அத்தி மரம், fig tree so called from its hidden blossom.

குய்ய பேதி, ஆசனத்தின் வழியாய் ஏற்படும் கழிவு, discharge of foeces from the anus.

குய்யப் பால், முலைப் பால், women's breast milk.

குய்யப புண், ஆசனப் புண், ulcer of the anus as, fistulous ulcer etc. 2. இலிங்கப் புண், ulceration of the penis; 3. யோனிப் புண், pudendal ulcer; 4. ஆண் பெண் இருவருக்கும் குறியில் வரும் புண், ulceration of the male and female genitals as chancre, chancroid etc.

குய்ய மல்லிகம், see அதிருசில்.

குய்ய மைதுனம், ஆசனப் புணர்ச்சி, sodomy; 2. இரகசியப் புணர்ச்சி, secret copulation; 3. பெண்ணோடு புணர்தல், having intercourse with woman.

குய்யம், ஆண் குறி அல்லது பெண் குறி, the genital of a male or a female — Varenda viri or Varenda mulibra; 2. அபான வாயில், the anus

குய்ய ரோக மாதாந்திரம், பெண்களின் மாத விடாய்ச் சம்பந்தமான நோயின் பேதங்களாகிய சூதகச் சிக்கல், சூதகச் சூலை, பெரும் பாடு முதலியன, the different varieties of menstrual disorders such as amenorrhoea. dysmennorrhoea, Menorrhagia, Menopause etc.

குய்ய ரோகம், நோய் கொண்ட பெண்களைப் புணருதல், தினப் புணர்ச்சி, வலுவந்தமாக இலேபன முண்டாக்கிப் புணர்தல் முதலிய அடாத செய்கைகளினால் வாத பித்த சிலேட்டுமங்கள் கோளா றடைந்து ஆண் குறியிற் றங்கி விளைவிக்கும் பற்பல நோய்கள், diseases in general of the genital of a male arising from the derangement of the humours Vatha and Bile due to various causes such as. sexual congress with a venereal woman, frequent sexual intercourse. inducing or promoting sexual passion voluntarily by forcing power of erection; 2. பெண் குறியிலுண்டாகும் மேக நோய்கள், venereal or syphilitic diseases of the genitals of a woman. chiefly chancre; 3. பொதுப்பட ஆண் பெண் குறிகளிற் காணும் நோய்கள், diseases in general of the genital organs of males and females; 4. ஆண், பெண் ஆசன வாயிற் காணும் பௌத்திரம், மூலம் முதலிய நோய்கள், diseases of the anus in males and females such as, piles or hemorrhoids, fistula etc,

குய்ய விரணம், ஆண் அல்லது பெண் குறி களிற் காணும் கொறுக்கு, யோனிப் புற்று மேக விரணம் முதலியன, venereal or syphilitic ulcers occurring in the genitals of a male or female as chancre, chancroid, pudendal ulcer, ulcer of the glans penis etc. 2 நோய் கொண்ட பெண் களைப் புணருவதால் அல்குல் மார்க்கமாய் ஆண் குறியில் ஏற்படும் மேகப் புண்கள், venereal or syphilitic ulcers of the penis contracted from the sexual contact with women suffering from venereal or syphilitic complaints.

குரகச் சின்னம், திலக விருட்சம், country cinnamon—Cinnamomum iners.

குரகதம், குதிரைப் பற் பாஷாணம், a kind of native arsenic; a mineral poison; red orpiment or realgar arsenic; 2, குதிரை, horse.

குரகம், நாகண வாய்ப் புள், common maina—Acridotheres tristis alias Maina tagracula; 2. ஓர்விதக் காக்கை, jack-daw—Gracula; 3. நீர் வாழ் பறவைப் பொது, aquatic birds in common; 4. சந்திர வண்ணத்தைப் போல் வெண்மையாயும், மிருது வாயும், சீக்கிரம் உருகத் தக்கதும், பளு வாயு முள்ள ஓர் வகை வெள் வங்கம், tin resembling the colour of the moon (white), soft, but heavy and easily melted.

குரகீலு, see குங்கிலியம்,

குரகு மஞ்சள், சாப்பிரா விதை மரம், இதற்கு வெண்ணெய் விதைச் செடி என்றும் பெயர். இது அமெரிக்க தேசத்தி னின்று கொண்டு வந்து இவ்விடம் பயிராக்கப்பட்டது. மரம் 30 அடி உயரம்; இலைகள் இரண்டு பக்கமும் மிருதுவா யிருக்கும்; காயினுள் 8-10 விதை களும், சுற்றிலும் சிவப்புச் சதைப் பற்று மிருக்கும். இவ்விதை வெண்ணெய்க்குச் சாய மேற்ற வுதவும், இதன் வேரின் பட்டை சுரம், முறை சுரம் இவற்றிற் குதவும்; விதை கள் சிறிது துவர்ப்புள்ளன; வெள்ளைக்குக் கொடுக்கலாம்; வேர் பட்டையின் கஷாயம் கொய்னு (quinine) வுக்கு பதிலாக முறை சுரத்திற்குக் கொடுக்கலாம்; monkey country saffron: arnotta — Bixa orellana. It is also known as butter-seed plant; it is of American origin but naturalised in the West coast. Tree is 30 ft. high: leaves smooth on both surfaces; seed capsules contain 8-10 seeds surrounded by a red pulp. Seeds are used as dye to colour butter. The root-bark and seeds are medicinally antiperiodic and antipyretic; the seeds are slightly astringent and a good remedy for gonorrhoea. Decoction of root bark is a substitute for quinine and other alkaloids of chincona as antiperiodic.

குரக் களித்தல், குரக்கு வலி வாங்கல், being affected with cramps.

குரக்கன், கேழ்வரகு, ragi.

குரக்கு, குரங்கு, monkey; 2. குரங்கினுடைய of or belonging to a monkey.

குரக்குக் கால் கை, குளிர் அல்லது பலவீனத் தால் குரக்கு வாங்கும் கால் கை, limbs affected with cramps due to cold or chillness and weakness.

குரக்கு முகம், குரங்கு முகம், monkey-face:

குரக்கு வலி, குரங்குக்குக் காணும் வலிப்பு, fits or convulsions attacking monkeys; 2. மனிதனுக்கு பலவீனத்தால் கை கால் களிற் காணும் குரக்கு வலி, cramps or spasmodic contractions of the limbs occurring from weakness in human beings.

குரக்கு வாதம், see குரக்கு வலி, 2. கால் குரக்கு. இது திடீரெனக் கெண்டைச் சதை யை இழுத்து முடிச்சிப் போலாக்கி, மிக்க வலியை யுண்டாக்கும், இது கிழவர்களையும் கர்ப்பிணிகளையும் விசேஷமாய்த் தாக்கும். மலச் சிக்கலினாலும் ஏற்படலாம். spasm or cramps in the legs. It is a sudden attack in which the muscles of the calf are drawn into knots which may be felt. The malady is prevalent in elderly people and pregnant women. It is also often caused by constipation.

குரக் கொளி, see குரக்கு வலி,

குரங்ககம், ஓர் அவரை, a kind of bean.

குரங்கதம், மான், deer,

குரங்க நாபி, see குரங்கு நாபி.

குரங்கம், மான், deer: antelope; 2. வெகு வேகமாய் துள்ளி ஓடும் சிறிய மான், a small deer leaping or walking swiftly 3. எட்டி, nux vomica: 4. வாடாக் குறிஞ்சி, a species of ever-green conehead — Strobilanthus genus: 5. விலங்கின் பொது, beast in general; 6. குற்றி விளா, see குரங்கு; 7. see குரங்கன்,

குரங்கவம், நஞ்சு முறித்தான், see அவுரி,

குரங்கன், மலைக் கொன்றை, shingle tree—Acrocarpus fraxinifolius.

குரங்கன் சுறு, மான் நிறத்தைப் போன்ற சுறு மீன், dental shark or dog-fish — Chiloscyllium indicum. It is so called from its colour resembling that of deer.

குரங்காதி, see குரங்கன்.

குரங் கிரத்தம், குரங்கினுடைய இரத்தம் இது விடாச் சுரத்தைக் கேழ்க்கும், monkey's blood capable of curing chronic fever when taken internally; 2. பூவந்தி மரம், soapnut tree—Sapindus emarginata.

குரங் கிலை, முசு முசுக்கை யிலை, இது தாளகத்துக்குச் சுருக்குக் கொடுக்க வுதவும், leaf of bristle bryony — Mukia scabrella alias Bryonia scabra. Its juice is poured in small quantities intermittently while heating orpiment gently (the process of absorption in Alchemy); 2. நாயுருவி, Indian burr — Achyranthes aspera.

NOTE:—This plant may have been so named either from fruits being eaten by monkeys or from leaves and stalks being covered with hairs like those of monkey or from red seeds resembling the face of a white monkey.

குரங்கு, வளைவு, curvature. 2. வானரம், monkey. ape; 3. முசு முசுக்கை, bristly bryony — Bryony scabra; 4. சாமந்தி, chamomile flower; 5. குற்றி விளா, நாய் விளா, dog wood-apple — Limonia acidissima: 6. பூண்டின் முதற் பெயர், plant's first term.

குரங்கு, வானரம், இது பெரும்பாலும் மனிதரை ஒத்திருக்கும். நாற்கால் பிராணியாயினும் சிருஷ்டி வகையில் மனிதருக்கு அடுத்தது என்று நம்பப்படுகிறது. இது கபிலநிறமாயும், வால் நீண்டும், தலையில் மயிரடர்ந்ததாயும் இருக்கும். வயிற்றின் பக்கம் வெண்ணிறம். மருந்துகளைத் தயாரித்து மனிதருக்குக் கொடுக்கு முன் ஆராய்ச்சி சாலைகளில் இதற்கு முன்னம் பிரயோகித்து குணகுறைகளை அனுபவத்தில் காணும் பொருட்டு இப் பிராணி தற்காலத்தில் உபயோகப் படுத்தப் பட்டு வருகிறது. இது நெடுநாள் சீவித் திருக்கக் கூடிய பிராணி யாகையால் இதனின்று கோளங்களை பகிர்ந் தெடுத்து மனிதருக்குப் பிரயோகித்து அவர்கள் நெடுநாள் சீவித்திருக்கும்படி தற்கால மேனாட்டு சாஸ்திர முறைப்படி சிகிச்சை செய்து வருகிறார்கள். குரங்கின் இரத்தத்தைக் குடிக்க மாட்டாட மலைச் சுரம் போம். monkey—Macacus sinicus. Although it is a quadruped, it is popularly believed that it is next to man in creation. It is ash-coloured with long-tail and with the abdomen white. For testing medicines before it is administered to man, this animal serves as a useful medium in laborataries of the present day. It is said to live long and so, its gland is taken out and implanted into aged persons to enable them to live long. Monkey's blood is said to cure hill-fever. The following are the differnt kinds of monkeys:—

1. கருங் குரங்கு, black monkey — Silenus veter.
2. சிங்கவாற் குரங்கு, lion-tailed monkey—Macacus silenus.
3. குட்டைவாற் குரங்கு, stump-tailed monkey—Macacus aretoides.
4. வெண் குரங்கு, white monkey—Simia sinicus.
5. வங்காளக் குரங்கு, Bengal monkey —Macacus rhesus.
6. மலைக் குரங்கு, hill-monkey — Macacus assamensis.
7. நண்டு தின்னிக் குரங்கு, crab-eating monkey—Macacus cynomolgus.
8. பன்றி வாற் குரங்கு, pig-tailed monkey—Macacus nemustrinus.
9. சப்பைத் தலை குரங்கு, toque monkey—Macacus pileatus.
10. இலங்கைக் குரங்கு, Ceylon black monkey; wanderoo — Semnopithecus ursinus.
11. நாய்த் தலைக் குரங்கு, dog-headed monkey.

குரங்கு கடியன், முகிழின் அடி சுருங்கியகாய், a fruit withered at the top of its fold: குரங்கு, அணில் முதலியவைகளால் நுனியில் கொரிக்கப்பட்ட தேங்காய், a cocoanut being gnawed at the tip or otherwise injured by monkey, squirrel etc.

குரங்கு கா, முசு முசுக்கை, see குரங்கிலை.

குரங்கு கை, சூம்பிய கை, the wasting of the muscles of the hand — Ape-hand; an atrophied hand.

குரங்குக் காய், விளாங் காய், wood apple monkey-fruit.

குரங்குக் கொடி, ஆனைத் திப்பிலி, monkey creeper — Scindapsus officinalis. It is so called from hairy appearance.

குரங்குச் சொறி, பூனைக் காலி, monkey's itch cowitch—Mucana pruriens.

குரங் குண்டலி, மலை நாரத்தை, trifoliate, winged lime—Limonia acidissima.

குரங்கு நாபி கஸ்தூரி, a stong-scented substance found in a bag attached to the belly of the deer just above the navel—Musk.

குரங்குப் பலா, சிறு பலா, small Jack—Artocarpus lukoochas.

குரங்கு மஞ்சணத்தி, ஓர் வகை நுணா, a kind of dyeing mulberry — Morinda citrifolia.

குரங்கு மஞ்சணுத்தி, see குரங்கு மஞ்சணத்தி

குரங்கு மஞ்சணாறி, (குரங்கு+மஞ்சள்+நாறி) smell of monkey turmeric. See குரங்கு. மஞ்சணத்தி.

குரங்கு மஞ்சள், குடக்கு மஞ்சள், west coast turmeric; 2. குரங்கு மஞ்சள், monkey turmeric.

குரங்கு மஞ்சள் விதை, சாப்பிர விதை. இதினின்று சாயம் இறக்கப்படும் அன்றியும் இவ்விதை, மேக வெள்ளைக்குச் சிறந்த மருந்து, சுரத்திற்குக் கொடுக்கலாம், butter seed; monkey-turmeric tree seed Dye may be extracted from this seed. It is a useful remedy in gonorrhea. It is antiperiodic and antipyrteic.

குரங்கு முசு, இரு குரங்கின் கை அதாவது முசு முசுக்கை, see குரங்கிலை.

குரங்கு மூஞ்சி, செம் முகம், red-face; blushed face; 2. குரங்கு முகம்; monkey's face; 3. குரங்கைப் போன்ற முகம். an abnormal resemblance of the face of a human being to that of a monkey; 4. see குரங்கு மஞ்சணாறி.

குரங்கு மூஞ்சிக் காய், முன் பக்கம் சிவந்த மாங்காய், red-faced mango.

குரங்கு மூஞ்சிப்பாலை, கணுப்பாலை, monkey-face paulay; Indian ape-face flower—Mimusops hexandra.

குரங்கு மூஞ்சிப் பூ, மகிழம் பூ மரம், ape-face flower; monkey-face flower — Mimusops elengi.

குரங்கு மூஞ்சி மரம், கபிலப் பொடி மரம், monkey-face tree — Mallotus philippenensis. Kamela powder is prepared from the capsules of this tree.

NOTE:—Monkey-face plants belong botanically to' genus Mimusops. The species best known in Southern India is 'monkey face paulay' (Mimusops hexandra).

குரங்கு மூத்திரம், குரங்கின் மூத்திரத் தோடாவது அல்லது அது காய்ந்த பின் அதன் உப்போடாவது வெள்ளைப் பூண்டைச் சேர்த்தரைத்து பற்று போட வாதப் பிடிப்பு நீங்கும், urine discharged in a thick stream or its salt collected when dry and mixed with garlic is said to cure rheumatism when applied externally to the affected part.

குரங்கு வலி, குரங்குக்கு இழுப்பது போற் காணும் வலி. இதனால் கை கால் நீட்டின படியே துடித்தலும், கண் சிமிட்டாமல் மேலே பார்த்தலுமாகிய குணங்களைக் காட்டும் இதனால் கை காலில் இரத்த வோட்டம் தாக்கப்பட்டு, நடுக்கமும் வலியும் உண்டாகும். a peculiar convulsive affection just resembling that to which monkeys are subject. In this the limbs which are stretched, tremble; and the eyes are fixed with an upward look. It is a disease due to the interruption of the circulation of blood in the limbs of the body and is consequently attended with shivering and pain. C. f. குரக்கு வலி.

குரங்கு வலி, திமிர், numbness; 2. see பிரம கண்டவலி; 3. see குரக்கு வலி.

குரசு, see குரச்சை,

குரச்சை. குதிரைக் குளம்பு, horse's hoof.

குரஞ்சனம், வெண்காரம், borax.

குரணசன், பாழி மூக்கன், one having broad nose.

குரண்டகம், பச்சைப் பூ மருதோன்றி, henna with green flowers—Lawsonia alba, 2. பெருங் குறிஞ்சி, large conehead — Strobilanthes consanguineus; 3. பழுப்பு நிறம் அதாவது பொன் னிறங் கலந்த சிவப்பு, yellowish red colour; 4. ஓதம், hydrocele; 5. ஓர் மஞ்சள் வாடா மல்லிகை, a yellow amaranth.

குரண்ட நாசி, see குரண்ட நாசினி.

குரண்ட நாசினி, பருத்திச் செடி, country cotton plant—Gossypium herbaceum.

குரண்டம், பச்சைப் பூ மரு தோன்றி, see குரண்டகம்; 2. கொக்கு, stork; Indian crane—Ardea sibirica; 3. ஒதம், hydrocele; 4. நாரை, a water-bird; heron; 5. அண்ட விக்கம், enlargement of the testicle as in hydrocele, inguinal hernia etc; 6. ஓர் பூடு, a plant—Marselia quadrifolia.

குரண்டல், see குறண்டல்.

குரத்தம், (கு+ரத்தம்) குறைவான இரத்தம், deficiency or decrease of blood—Anaemia.

குரத்தி, see காட்டுத் துளசி.

குரநாசம், வெங்காயம், onion.

குரந்திகம், செந் நாயுருவி, red Indian burr—Achyranthes aspera (rubra).

குரபகம், சிவப்பு வாடா மல்லிகை, red amaranth.

குரபம், எள், sesamum; 2. ஓர் பூடு, a kind of barleria.

குரப் புல், தருப்பைப் புல், see குரம்.

குரப் பூலிகம், சரக் கொன்றை, Indian labournam—Cassia fistula.

குரமடம், பெருங்காயம், assafoetida.

குர மாலிகம், பாதிரி, trumpet-flower tree—Stereospermum chelonoides alias Bignonia chelonoides.

குர மேளிகம், கோழிக் கால் பூடு, fowl's leg plant i. e. plant resembling the leg of a fowl. See குமரகன் பூடு.

குரம், தருப்பைப் புல், sacrificial grass; 2. பாகல், spiked bitter cucumber—Momordica charantia; 3. பசு, cow; 4. மிருகத்தின் குளம்பு, animal's hoof; 5. குதிரைக் குளம்பு, horse's hoof.

குரம்பை, உடம்பு, body: 2. முட்டை, egg; 3. கோஷ்டம், Arabian costum costus speciosus; 4. பறவைக் கூடு, bird's nest; 5. குறிஞ்சா scammony swallow-wort — Secamone emetica; 6. பேரீந்து. wild date tree—Phoenix dactylifera.

குரரம், ஓர் பூடு. a plant — Capparis aphylla; 2 பெண் பருந்து. a female hawk or eagle; 3. see குரரி.

குரரி, பெண்ணாடு. ewe; sheep.

குர லடைப்பு, சீதளத்தால் தொண்டைக் கம்மல். இது சாதாரணமாய் வாயு கோளாறடைந்து மற்ற தோஷங்களும் சீதளத்தால் மெலிடுவதாலும், அதிகக் கூச்சலிடுவதாலும் உற்பத்தியாகி, குரல் வளையில் தங்கி பேச்சொலியை மாற்றும், harsh, rough, grating voice, as when the throat is affected with cold—Hoarseness. It is caused by the deranged Vayu and the other Doshas which are aggravated by exposure to cold, loud talking etc. getting lodged in the sound-carrying channels and thereby affecting the voice; 2. குரற் கம்மல், loss of voice occasioned by functional disease of the vocal cords—Aphonia. See அகிரை.

குரலதிர்ச்சி, குரலசைவு, vocal vibration—Fremitus vocal.

குரலி, தொண்டைக் குழி, glottis. See கிராதம்; 2. பாதிரி, see குரல்.

குர லிராவம், எதிரொலி, பாயும் குரலோசை, vocal resonance.

குர லின்மை, see குரலடைப்பு.

குர லீனம், கழுதை, ass, so called from its harsh voice.

குர லுறுப்பு, குரல் ஓசையின் உறுப்பு, organ of voice—Larynx.

குரலெடுத்தல், சிகிச்சையினால் குர லோசையை அதிகப் படுத்தல், improving the voice of the throat by undergoing a special treatment.

குரலோசை, குரலின் சப்தம், vocal sound; voice.

குரல், தொண்டையின் பேச்சொலி, a sound produced by the speech organs and uttered by the mouth — Voice; 2. பாதிரி மரம், trumpet flower tree. See குரமாலிகம், 3. மிடறு, wind-pipe; throat; 4. பெண் மயிர், woman's hair; 5. தினை, millet—Panicum; 6. குரல்வளை, glottis; 7. பூங் கொத்து, bunch of flowers; 8. மயிர்ச் சுருள், curl of hair; 9. பறவை. யிறகு, bird's plumage; 10. ஓசை, sound.

குரல் கம்மல், see குரற் கம்மல.

குரல் காட்டல், பெருஞ் சத்த மிடல், crying loudly.

குரல் நெரித்தல், தொண்டையை அழுத்திக் குரல்வளை முறியும்படிச் செய்தல், fracturing the throat by pressing the anterior part of the neck.

குரல் மாற்றம், வேற்றுக் குரல், change of voice in the throat due to the affection of the larynx.

NOTE:—In tuberculosis this affection of the throat becomes chronic,

குரல் வளை, சத்தம் பிறப்பதற்காக வேண்டி சுவாசக் குழலின் மேல் அந்தத்தோடு தொடங்கி, கழுத்தின் முன் மேற் பகுதியில் சுவாசக் குழலுக்கும், அடி நாவுக்கும் இடையில் புடைத்திருக்கும் குழாய் பெட்டியை போன்ற உறுப்பு, a short tubular box, opening above into the pharynx and below into the top of the trachea, with vocal chords for production of sound—Larynx; 2. மிடறு, trachea.

குரல்வளைத் தபம், see குரல்வளைத் தாபனம், 2. கிருகரம், an acute type of inflammation of the larynx — Cynanche laryngea.

குரல்வளைத் தாபனம், குரல்வளைக் கேற்படும் அழற்சி, inflammation of larynx—Laryngitis.

குரல்வளை நெரித்தல், தொண்டையை அமுக்கல், squeezing the throat; throttling; 2. தொண்டையின் முருந்தை நொருக்குதல் crushing or fracturing the cartilages of the throat. See குரல் நெரித்தல்.

குரல்வளை நோய், குரல்வளைக் கேற்படும் நோய்கள், diseases in general of the larynx; 2. மிடற்று வாதம், தொண்டை வாதம், trachealgia.

குரல்வளை முருந்து, மோதிர முருந்து, a round ring-like cartilage of the larynx—Cricoid cartilage.

குரல்வளை யழற்சி, see குரல்வளை தாபனம்.

குரல்வளை யறுத்தல், பேச்சின் ஒலியைகுணப் படுத்த வேண்டி குரல் வளையைக் கத்தி கொண்டு அறுத்தல், an operation for opening the larynx for purposes of curing voice-defect — Laryngotomy; Tracheotomy; 2, மருந்தினால் குரல்வளையை சுத்தப்படுத்திக் கொள்ளல், curing voice-defects by application of medicine.

குரல்வளை யறுத்துக் கொள்ளல், தற்கொலை புரிதல், committing suicide by cutting the throat.

குரல்வளை யிசிவு, தொண்டை வாதத்தினால் மிடற்றி லுண்டாகும் இசிவு, a pulling sensation in the trachea — Tracheal tugging.

குரவகம், மருதோன்றி, nail-dye — Lawsonia alba; 2. வாடாக் குறிஞ்சி, any plant which always retains its colour, even after becoming dry and wrinkled as, Lawsonia genus.

குரவகி, கோழிக் கீரை, cock's greens—portulaca oleracea; 2, குறிஞ்சா, scammony swallow-wort—Secamone emetica.

குரவம், குரா, common bottle-flower—Webera corymbosa: 2. குறிஞ்சா, emetic swallow-wort — Tylophora asthmatica: 3. நறுமணம், fragrant smell; 4. பேரீஞ்சு, wild date-palm — Phoenix dactylifera; 6. கோஷ்டம், Arabian costus — Costus speciosus.

குரவம் பாவை, குரா மரத்தின் பூ, common bottle - flower — Webera corymbosa (flower of).

குரவரம், குறிஞ்சா, a winding plant, see குரவம்.

குரவளை, see குரல் வளை.

குரவிகம், பேரீஞ்சு, see குரவம்.

குரவிகா, புல் லாமணக்கு, a plant resembling castor plant — Sebastiana chamaelea.

குரலிக் கோணிகம், புளித் தகரை, a sour ringworm plant—Cassia tora.

குர விளிம்பு, பிடரி யெலும்பையும் பித்திகை யெலும்பையும் இணைக்கும் கருக்கு விளிம்பு, lamboid suture which unites the occipital and the parietal bones.

குரவு, see குரா; 2. நறுமணம், fragrant smell.

குரவை, கடல், sea; 2. see குறவை.

குரவைத் திகிரி, see ஆண் துடரி,

குரற் கந்து, see குல் கந்து,

குரற் கம்மல், குரல் வளையில் உள்ளீரம்வரண்டு பேச முடியாமல் கம்மிய பேச்சை யுண்டாக்குமோர் தொண்டை நோய், a disease of the larynx due to dryness and the consequent inability to talk except with hoarse voice—Hoarseness; 2. குரற் கம்மி, யிருத்தல், to be hoarse.

குரற் கனப்பு, see குரலடைப்பு

குரற் செப்பு, குரல் வளை, glottis.

குரஞ்சம், see குரநாசம்.

குரஞ்சனி, குரலோசையைக் கெடுக்கும்உணவு வகை முதலியன, food - substances likely to affect the voice of the throat.

குரா, மரம், இதை வெள்வெட்சி யென்றும் சொல்வ துண்டு. இது சாதாரணமாக கட்டாந் தரையில் முளைக்கும். இதன் சிறிய பழம் கருப்பா யிருக்கும்; தின்பதற் குதவும் இம் மரம் இலங்கையில் விசேஷம். இதன் மரத்தால் படகு செய்வார்கள். common bottle flower tree—Webera corymbosa. It is commonly found growing in barren land: flowers small and white; its small black-berry is eaten.. The tree is common in Ceylon where fishing boats are made of its wood.

குராசானி, see *குராசானி யோமம்*,

குராசானிப் பூடு, ஓர் ஓமப் பூடு, a plant—Heliotropium zeylanicum.

குராசானி யோமச் சத்து, குராசானி யோமத்தின் இலையினின்று வடிக்கும் நீர், இதை வலி கொண்ட இடத்தில் பூசலாம்; தண்ணீர்க் கலந்த சொட்டைக் கண்ணிலிட அல்லது கன்னப் பொறியில் தேய்க்க கண்மணி விரியும், extract of hyoscyamus — Extractum Hyoscyami. It is prepared from fresh leaves and young branehes of henbane; and is a useful application in many painful affections. A solution ot it dropped into the eye or the extract rubbed on the temple, causes dilatation of the pupil.

குராசானி யோமத் திரவம், குராசானி யோமத்தின் இலையி னின்று தயாரிக்கும் பாவனைத் திரவம், tincture of Hyoscyamus — Tinctura Hyoscyami. It is prepared from the leaves of henbane.

குராசானி யோமப் பத்திரி, குராசானி யிலை, இது ஓர் கற்ப மூலிகை, the leaf of the khorassan omum plant. It is considered as a rejuvenating drug,

குராசானி யோமம், குராசன் என்னும் ஊரில் உற்பத்தியாகும் ஓமம். இது பெரும்பாலும் துருக்கி தேசத்தி னின்று ஏற்றுமதி யாகும் நமது நாட்டிலும் சில பாகங்களில் மருந்திற் காக வேண்டி பயிரிடுவார்கள். விதை சிறியது. கசப்பு; இதன் காய், விதை, இலைகள் மருந்தில் மிக்க வுபயோக மாகும். இதற்கு அபினியின் குணமு முண்டு. இதைக் கண் வியாதிகளுக்கிட கண்மணி சுருங்கும். இதன் விதையைச் சூரணித்து இருதயத் துடிப்பு, நரம்பு ரோகம், சிரோ ரோகம், அதி மூத்திரம், தூக்க மின்மை முதலிய நோய்களுக்கும் இதன் சத்தைச் சூதக வாய்வு, சுவாச காசம், இவைகளுக்கும் கொடுக்கலாம். அன்றியும் இதை அரைத்து நரம்புவலி, வாதப் பிடிப்பு. கோளை வீக்கம், சிலந்தி விரணங்கள் மூலம் இவைகளுக்குப் பூசலாம். Khorassan ajwaun; common henbane — Hyoscyamus niger. It is so called from its being grown and exported from Khorrasan in Turkey. It is also cultivated in India for medicinal purposes. It is a common weed and it seed is small, round and bitter in taste. The capsules, seeds and leaves are extensively used in medicine; and they produce effects similar to opium. In diseases of the eye, it proves valuable from the power it possesses in contracting the pupil when locally applied. The seeds are powdered and given in nervous irritability, mental excitement, discharge of excessive urine. sleeplessness and palpitation of the heart. The extract from the leaves is given in menstrual disorders, asthma etc. As an external application, the seeds are employed in neuralgic and rheumatic affections, painful glandular enlargements, irritable and cancerous ulcerations and hemorrhoids. Hyoscyamine has sedative, anodyne and anti-spasmodic properties.

NOTE:—Its activity resides principally in an alkaloid contained in the seeds, leaves and green flowering tops; and it is known as Hyoscyamine. In over-doses, Hyoscyamus is a narcotic poison producing delirium, coma and death; and its effect is very rapid. Another species called Muticus is sometimes used for smoking.

குராமசனம், நில வேம்பு, ground neem—Justicia paniculata

குரா மரம், see *குரா*.

குரால், கபில நிறப் பசு brown cow; 2. கோட்டான், rock-horned owl—Urrua bengalensis: 3. கபில நிறம், brown colour; 4. கூகை, large owl.

குரிகிற்குனி, ஓர்வகைத் தானிக் கிழங்கு, the root of convolvulus genus.

குரிச்சி, சீனக் காரம், alum.

குரிச்சி கட்டல், கை கால் முடங்கல், persistent, and organic contracture of a joint in certain diseases such as, small-pox and rheumatism attended with venereal or syphilitic affections.

NOTE:—It may be due to a stiffness or immobility of joints arising from various causes or union of bones.

குரிஞ்சி, see குறிஞ்சி.

குரிஞ்சில், தொட்டி பாஷாணம், a kind of prepared arsenic. See குறிஞ்சில்.

குரிஞ்சில் வெண்ணெய், see கண்டில் வெண்ணெய்.

குரிந்தை, see நருக் கத்தி ; 2. சிறு குறிஞ்சா, small Indian ipecauanha — Gymnema sylvestri.

குரி மல்லி, see குடச பாலை.

குரீஇ, குருவி, a small bird ; sparrow.

குரீஇப் பூளை, சிறு பூளை, woolly caper — Achyranthes lanata.

குரீரம், மைதுனம், copulation.

குரு, ஆசான், a spiritual teacher ; 2. வாலை ரசம், sublimate of mercury ; 3. அம்மைக் குரு. pustules in small-pox ; 4. உடம்பிலெழும் சிறு கொப்புளங்கள், vesicles or small blisters or bladder-like elevations on the surface of the body ; 5. கரப்பன் குரு, eruptions on the skin in cutaneous diseases, as prickly heat, itch, herpes, lichen etc ; 6. நர்வித ஒலி, murmur, sound, 7. இரசம், mercury ; 8. சந்தியுப்பு, an alchemical salt ; 9. வேர்க்குரு, prickly heat ; 10. உவர் மண், Fuller's earth ; 11. நிறம், colour ; 12. கொட்டை, nut ; 13. பலண்டுறுக பாஷாணம், a mineral poison ; 14. துரிசு, blue vitriol ; 15. (opposed to இலகு) வயிற்று பாரம், heaviness in the stomach ; 16. எளிதில் செறியாத, difficult to digest ; 17. அளவில் மிகுதி, high in degree ; 18. கொடிய அல்லது உக்கிரமான, violent ; 19. அரிய, valuable ; 20. விலையுயர்ந்த, highly prized ; 21. பூனைக் காலி, see குப்தம் ; 22. கர்ப்பிணி, a pregnant woman ; 23. சுத்த சலம், clear or pure water ; 24. சோறு, boiled rice ; 25. அறுபத்து நான்கு நிமிடம் கொண்ட கால வளவு, a period of time consisting of 64 minutes ; 26. நிறம், colour ; 27. மேன்மையான, superior ; 28. பெருமை வாய்ந்த, reputed ; 29 பசுமை, greenness ; 30. இளமை, tenderness ; 31. இழிந்த உலோகங்களை பேதிக்கும் குரு மருந்து அதாவது இரும்பு, செம்பு, ஈயம் முதலிய உலோகங்களைப் பொன் அல்லது வெள்ளியாக மாற்றும் சக்திவாய்ந்த வாத முறைப்படிச்செய்த சிந்தூரம், சுண்ணம், முப்பு முதலியன, Philosopher's powder or Universal powder capable of converting baser metals into gold i. e. any alchemical preparation such as red oxides, calcium compounds, three salts etc. employed for converting or transmuting iron, copper, lead etc. into gold or silver as the case may be.

குரு, குரு மருந்து அதாவது முதன்மையான மருந்தென அர்த்தங் கொள்ளும். இம் மருந்து சாதாரணமாக உடம்பிற் கேற்படும் எல்லாவித நோய்களேயும் அறவே தீர்க்குமாதலின், எல்லா மருந்துகளுக்கும் இதை அரசனைப் போற் கருதுதலும் பொருந்தும். மேலும், எம் மருந்து இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றக் கூடியதோ, அம் மருந்தொன்றுதான் எல்லாவித நோய்களேயும் கண்டித்து, உடம்பைப் பலப் படுத்தி, பொன்னைப் போலாக்குமெனத் தமிழ்ச் சித்தர்களின் கொள்கை. ஆகவே, தமிழ்ச் சித்த வைத்திய நூற்களில் இத் தகைய மருந்தைச் சோதிக்க வேண்டியே வாத முறையும் சேர்த்துக் கூறவேண்டிய தாயிற்று. இக் குரு மருந்தை முடிக்க வேண்டி, வாத முறைப்படி சுருக்குக் கொடுத்தல், புடமிடல், கொல்லுதல், கட்டுதல், செயநீர் வாங்கல், கிராசங் கொடுத்தல், திராவகம் இறக்கல், பதங்க மேற்றல், காசாரங் கூட்டல், மாற் றுயர்த்தல், சாரணை நீர்த்தல், ஊத்து முறை முதலிய அனேக முறைகளையும், வைத்திய நூலிற் காட்டி யுள்ள நோய்களுக் குரிய மருந்திற்குத் தக்கவாறு சொல்ல வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. தமிழ்ச் சித்த வைத்திய நூற்களில் கூறியுள்ள அனேக குரு மருந்துகளைத் தெரிந்த வளவில் சுருக்கமாகவும், ஒவ்வொரு குரு மருந்திற்கும் வாத முறைப்படி யுள்ள சோதனையும், அதன் குணங்களையும் அடியிற் கண்டபடி அதனதற் கெதிரே கூறலாயிற்று:—

A. போகர் நூல் 7000 த்தின்படி :—

1. இலிங்கக் குரு — இதை வெள்ளிச் செம்பில் பத்துக் கொன்று கொடுக்க பொன் 6 மாற்று ஆருகும்.

2. இரசக் குரு—இதை வெள்ளிச் செம்பில் பத்துக் கொன்று கொடுக்க பொன் 6 மாற்ருகும். குன்றி யுண்ணை சட்டை கக்கும், காய சித்தியாகும்.

3. நாகக் குரு — வெள்ளிச் செம்பில் 10: 1 கொடுக்க 8 மாற்ருகும் ; 1000: 1 நவலோகத்தில் கொடுக்க 25 மாற்ருகும்.

4. சாரக் குரு—நவலோகத்தில் 100: 1 பாய்ச்சிட 16 மாற்றாகும். அருணனைப் போல் தேகமாகும், கண்ணொளி மீறும்,காயத்தை கர்ப்பாந்த காலம் இறுத்தும்.

5. துரிசிக்குரு — நவலோகத்தில் 100:1 பாய்ச்சிட 10½ மாற்று காணும். நாகங் கட்டும், சவ்வீரம் மெழுகாகும்.

6. உப்புக் குரு — நவலோகத்தில் 50: 1 கொடுக்க 6 மாற்று காணும் நரை, திரை மாறும். காயம் சிவந்து போகும். உடம்பில் சட்டை கக்கும்.

7. காந்தக் குரு—நவலோகத்தில் 100:1 இட பன்னிரண்டு மாற்று காணும். மேனி தங்க மாரும், நரை திரை மாறும்.

8. சிங்கிக் குரு—தங்கம், செம்பு சமன் சேர்த்து உருக்க 8 மாற்று ஆகும். செம்பின் ஊறலறும்.

9. நிமிளைக் குரு — செம்பின் ஊறல் போகும். குளிகைக் குதவும்.

10. பூரக் குரு — செம்பின் களிம்பு போகும். உடம்பினில் காணும் வாத ரோகம் 80-ம் போம்.

11. தாளகக் குரு — வெள்ளிச் செம்பில் 10: 1 தாக்க எட்டு மாற்று ஆகும்.

12. அயக் குரு — வெள்ளியில் 4: 1 கொடுக்க 7 மாற்றாகும்.

13. பித்தளைக் குரு — வெள்ளியில் 4: 1 கொடுக்க 6 மாற்றாகும்.

14. தங்கக் குரு—வெள்ளி செம்பில் 10: 1 கொடுக்க தங்கமாகும்

15. வெடியுப்புக் குரு — வெள்ளியில் 10: 1 கொடுக்க 8 மாற்றாகும்.

16. சுக்கான்கல் குரு — செம்பில் 10: 1 கொடுக்க செம்பின் ஊறல் போகும்

17. வெள் வங்கக் குரு—வெள்ளிச் செம்பில் 10: 1 கொடுக்க பசுமையாகும்.

18. கரு வங்கக் குரு — செம்பில் 10: 1 கொடுக்க பசுமை யாகும்.

B. கொங்கணவன் வாத காவியம் 3000 த்தின் படி:—

19. அப்பிரகக் குரு — வெள்ளிச் செம்பில் கொடுக்க 8 மாற்று ஆகும். பச்சை மண் பாண்டத்தில சலம் விட்டு துவாரம் செய்து, இதில் குன்றியிடை போட துவாரம் அடைபடும், குன்றியிடை புண்ணை மேகம் 20ம் நீங்குவதுடன் நீரிழிவும் காணுதோடும்,. காயம் இறுகிக் கட்டும், சுவாசம் மேல் நோக்காது. தேகம் கற் றூணாகும்.

20. செம்புக் குரு — வெள்ளியில் 10: 1 கொடுக்க 8 மாற்றுப் பொன்னாகும்; உடம்பினி லுள்ள நோயைப் போக்கி தேகத்தை கற் றூணாக்கும்.

21. கெந்தகக் குரு — வெள்ளிச் செம்பில் 10: 1 கொடுக்க 6 மாற்று காணும். இரசத்தைக் கட்டும், தங்கம் நீறும், நாகம் சாகும்.

22. ஆறுமுகக் குரு — இதைச் சவாதி லூட்டிப் பிறகு சரக்குகளுக்குப் பூசி புடம் போட வேதை யாகும் வாதத்திற் காணி யாகும்.

23. அங்கிஷக் குரு — இரசத்தைக் கட்டும். இதில் குன்றி யிடை யுண்ண காய சித்தி யாகும்.

24. வச்சிரக் குரு — இதில் சூதம் கட்டும், உடம்பு கல் தூணாகும் நிர்க்குணம் வாய்க்கும்.

C. சட்டைமுனி வாத காவியம் 1000 த்தின் படி:—

25. துரிசிக்கட்டுக் குரு — வெள்ளிச் செம்பில் 20:1 எட்டுமாற்றுக் காணும்.

26. தாளகக் குரு—நவலோகத்தில் 100:1 மாட்டிட வெள்ளி யாகும்.

27. நாகக் குரு — வெள்ளிச் செம்பில் 10:1 கொடுக்க தங்கமாகும். இத்துடன் இலிங்கம் எடைக் கெடைச் சேர்த்து வெள்ளிச் செம்பில் 10: 1 கொடுக்க மாற்று எட்டாகும்.

28. கெந்தகச் செம்பு குரு — நவலோகத்தில் 1000:1 கொடுக்கத் தங்கமாகும்

29. கெந்தகக் குரு—நவலோகம் 1000: 1 பாய்ச்ச 11 மாற்று காணும். இதில் குன்றி யுண்ண சட்டை கக்கி, காய சித்தியாகும்.

30. சூதக் குரு—வங்கம் 100: 1ல் இட வெள்ளியாகும்.

31. நாகரசக் குரு—நவலோகத்தில் 100:1 சேர்க்க தங்கமாகும்.

32. வெள்ளிக் குரு — குடவன் 500: 1 இட்டால் 15 மாற்று ஆகும்.

Universal Medicine. It is a reputed medicine of high potency, capable of curing radically all ailments; and as such, deserves to be called, King of medicines;. It was held by Siddhars School of thought that a medicine, capable of transmuting inferior metals into gold, is the only sovereign remedy (panacea) for curing radically all diseases in the human system on account of its all - healing virtues; hence the necessity had risen for the incorporation of Alchemical processes for preparing such remedies, in the Tamil Siddha works on Medicine. So, the several methods contemplated in Siddhar's Alchemy such as, absorption calcination, destruction, consolidation or concentration amalgamation, distillation, sublimation, alkalization, cupellation, animation or vivification, augmentation, etc, have to be adopted according to the nature of medicine required for a particular disease. The several universal medicines described in the Tamil Siddha works on Alchemy together with their tests and qualities are mentioned below as far as known and as briefly as possible:—

(A) According to Bogar (7000):—

1. Vermilion quintessence — added to white alchemical copper (an alloy of silver and copper) in the proportion of 10 : 1, gold of 6 Matru can be obtained.

2. Mercury quintessence — added to white alchemical copper in the same manner as above, the same result i. e. gold of 6 Matru is obtained. A grain of this taken internally rejuvenates the human system by removing the wrinkles of the body.

3. Zinc quintessence — added to alchemical copper in the proportion of 10 : 1, gold of 8 Matru is derived; but when added to an alloy of nine metals, in the proportion of 1000; 1, it results in gold of 25 Matru.

4. Sal - ammoniac quintessence — added to an alloy of nine metals

in the proportion of 100 : 1, gold of 16 Matru is obtained. Body becomes copper - coloured; eyesight is rendered keen and longevity increased for several ages.

5. Copper-sulphate quintessence — added to nine metals in the proportion of 100 : 1, gold of 10¼ Matru is got. Moreover, it consolidates zinc and turns corrosive sublimate into the colloid.

6. Common salt quintessence — added to nine metals in the proportion of 50 : 1, gold of 6 Matru is arrived at. It removes grey hairs and wrinkles of the skin; and renders the body red like copper.

7. Magnet quintessence — in combination with the nine metals in the proportion of 100 : 1, yields gold of 12 Matru. when taken internally, it removes grey hairs and wrinkles of the skin: and renders the body glossy and red.

8. Litharge quintessence — added to an equal quantity of refine gold and copper, it results in gold of 8 Matru: and it purifies copper by destroying its verdigris.

9. Gold pyrites quintessence — purifies copper; and is used for animating mercurial pills.

10. Mercuric chloride quintessence — purifies copper from its verdigris and eradicates all kinds of rheumatism (80) from the human system.

11. Orpiment quintessence — added to white alchemical copper in the proportion of 10 : 1, gold of 8 Matru can be obtained. This gold melted with the refined gold in due proportions converts the whole mass into a standard refined gold (தங்கம்).

12. Iron quintessence — given to silver in the proportion of 4 : 1, gold of 7 Matru is obtained.

ஞூ

13. Brass quintessence — added to silver in the same manner as above yields gold of 6 Matru.

14. Gold quintessence — added to white alchemical copper in the proportion of 10 : 1, gives a standard refined gold of 8-9 Matru.

15. Nitre quintessence — given to silver in the proportion of 10 : 1, gives gold of 8 Matru.

16. Limestone quintessence — added to ordinary copper in the proportion of 10 : 1, removes its verdigris.

17. Tin quintessence — given to white copper as 10 : 1, yields gold (Matru not known).

18. Lead quintessence — added to copper in the proportion of 10:1. gives gold (Matru not known).

(B) According to Konganawa's works (3000) on Alchemy;—

19. Mica quintessence — given to white copper in the proportion of 10 : 1, yields gold of 8 Matru. A grain of this quintessence thrown into the water of an earthen pot (not baked) consisting of small holes, is said to block these holes and prevent water from escaping. Taken internally, it roots out urinary diseases (20 kinds) from the system especially diabetes. It also rejuvenates the human body and enables one to suspend the breath.

20. Copper quintessence — added to silver in the proportion of 10 : 1-yields gold of 8 Matrus. Cures all ailments of the body; and invigorates the human system.

21. Sulphur quintessence — in combination with white copper in the proportion of 10 : 1, gold of 6 Matru is obtained. Moreover it consolidates mercury, calcines gold into a powder and kills zinc,

ஞூ

22. Arumuga quintessence — added to Javadu (similar to civet) and coated to inferior metals turns them into gold.

23. Angisha quintessence — consolidates mercury; and a grain of this taken internally rejuvenates the system.

24. Diamond quintessence — consolidates mercury, renders the human body hard and strong like a stone pillar; and promotes spiritual success leading towards emancipation.

(C) According to Satta Muni works (1000) on Alchemy:—

25. Consolidated copper sulphate quintessence — given to white alchemical copper in the proportion of 20 : 1, gold of 8 Matru can be obtained.

26. Orpiment quintessence — given to an alloy of nine metals in the proportion of 100 : 1, refined silver (வெள்ளக் வெள்ளி) is obtained.

27 Zinc quintessence — given to white alchemical copper in the proportion of 10 : 1, gold of 8 Matru is obtained.

28. Sulphur copper quintessence— added to an alloy of nine metals in the proportion of 1000 : 1, refined standard gold is obtained.

29. Sulphur quintessence — added to nine metals in the proportion of 1000 : 1; gold of 11 Matru is obtained. A grain of this, when taken internally, exfoliates the skin and rejuvenates the system.

30. Mercury quintessence — given to lead in the proportion of 100: 1. refined silver is obtrained.

31. Zinc Mercury quintessence — given to an alloy of nine metals in the proportion of 100 : 1, refined standard gold is obtained.

32. Silver quintessence — given to brass in the proportion of 500: 1. gold of 15 Matru is obtained.

NOTE:—1. When a computation is made. a grain of this Philosopher's powder converts as many hundreds and thousands of grains of impure and volatile metal which is obliterable by fire, into true gold. This powder. when added to different metals or metallic compounds enumerated above, preserves the product after transmutation eternally from rust, putrefaction and torture of fire, however violent it may be; and makes it a gold of virgin purity. It is the only remedy that cures every disease to its fullest extent; and makes one regain his beginnings, however old he may have become by his age

N. B.—Matru (மாற்று) is the degree of fineness of gold corresponding to 'Carats' in English. The pure standard gold is only 10 Matru or 24 Carats; and so gold beyond this fineness, is unknown to the world. It is only Alchemical gold (தங்கச் செம்பு) that is said to be obtained from above 10-1000 Matru; and no one has seen this. It must vary in colour, appearance, weight, specific gravity etc. The process of making this kind of gold though a mystery, was well-known only to siddhars.

NOTE:—2.—Quintessence is the fifth essence of the ancient and mediaeval philosophy, supposed to be the substance of which the heavenly bodies were composed; and to be actually latent in all things. It is the most essential of any substance; and is considered to be the purest and most refined essence or extract of its kind.

According to the secret science of Hermetic philosophers, the four principles presented literally to the investigation of gold-makers are.

1. The four imponderable fluids are only diverse manifestations of the universal agent, which is light.
2. Light is the fire which is used in the magnum opus under the form of electricity.
3. Human Will directs the vital light by means of the nervous organization.
4. The secret agent of the magnum opus, the Azoth of the sages. the living and vivifying gold of the philosophers and the universal productive metallic agent are nothing but Magnetised Electricity — the first matter of the magnum opus.

This supreme science has been always known, but only by the follower of intelligences who have understood the necessity of being silent (மௌனம்) and biding their time.

It is the forgotten science which still subsists unmutilated in living traditions and superstitions and beneath the shadow of the ancient mysteries of Siddhars of S. India.

NOTE 3.—It is not necessary here to enter into a long detail of the merits of Alchemical authors and philosophers. suffice it to say that Alchemy which is the grand touchstone of natural wisdom, is of a Spiritual origin and that every physician in olden days was obviously an Alchemist or the son of an Alchemist; and so the proverb runs "வாதி மகன் வைத்தியன்". It is also evident that he was both a Philosopher and an Astrologer; hence arose the necessity for the introduction of the elementary principles of Philosophy and Astrology as well in the Tamil Siddha Medicine.

குருகடம், இரத்தத்திலிருக்கும் அணு வுறுப்பு, blood corpuscle.

குரு கண்டகம், முருங்கை, horse-radish—Raphanus sativus; 2. see கண்டகச் சிலை.

குரு கந்தகம், மயில் pea-cock—Pavo cristatus.

குரு காதி, see உவா,

குருகாரம், பொரி காரம், borax: 2, குருமுறைக் குபயோகிக்கும் கார மருந்து அதாவது காரக் குரு. (In Alchemy) an alkaloid used for preparing a universal medicine known as Philosopher's powder—Alcahest.

குருகிதம், முருந்துகளி லிருந்து எடுக்கும் ஓர் வஸ்து, a peculiar substance obtained from cartilages—Chondrine.

குருகிலை, முருக் கிலை, leaves of Erythrina.

குருகி வருதல், சுண்டி வருதல், being reduced in quantity when boiling, as decoction; 2, கிழத் தனத்தால் உடம்பு சிறுத்தல், getting reduced in size, as of the body due to old age. See குறுகல்.

குருகு, (குருகு + அத்தி) வெள்ளையத்தி, white fig tree — Gaertnera racemosa. See குருக் கத்தி; 2. கொய்யடி நாரை, a kind of crane or heron; 3. நீர்ப்பறவைப் பொது, a common name for aquatic birds: 4. இளமை, tenderness; 5. கோழி, gallinaceous fowl; 6. நாரை, crane; 7. வெண்மை, whiteness; 8. யானை, elephant; 9. யானையின் மூளை, the brain of an elephant; 10. குருத் தெலும்பு, cartilage; 11. சேவல், cock; 12, குளவி, wasp; 13. வழலை அல்லது குருமருந்து, see குரு; 14, களிச் சுண்ணம், an alkaloid of calcium used in Alchemy; 15. see கல்லால், 16. பறவைப் பொது, bird in common; 17. see அன்றில்; 18. குரு, pimple.

குருகுக் கிழங்கு, இளம் யாம் கிழங்கு, tender yam; 2. உணவிற் குரிய இளம் கிழங்கு, any tender edible root.

குரு குணம், எளிதில் சீரணமாகாமல், வயிறு குடல் இவைகளுக்குகஷ்டத்தை யுண்டுபண்ணும் வன்மையான பண்டங்களின் குணம், the nature of any substance that could not be easily digestible or one that gives trouble to the digestive organs such as, the stomach and the intestines; 2. மென்மையான குணம், sterling quality.

குரு குதி, பசு முருங்கை, tender drum-stick or moringa.

குருகு மணல், வெள்ளை மணல், fine or white sand.

குரு மண், வெள்ளை மண், white clay.

குரு குரகம், குரு குரு சத்தம், gurgling sound. See குரு குரு.

குரு குரம், சதையைத் துளைக்கும் புழு, a worm burrowing into the skin.

குருகுரு, தொண்டை முதலிய விடங்களிற் காணும் சத்தம், gurgling sound as in throat etc.

குரு குருத்தல், குருவாக அல்லது கொப்புளமாக வெழும்புதல், appearing as pustules or vesicles on the surface of the body; 2. வியர்வைக் குரு வுண்டாதல், breaking out as prickly heat 3. அம்மைக் குரு வெழும்பல், rising of the pocks as in small-pox; 4. மேக விரணச் சொறி யுண்டாதல், the breaking or bursting out of syphilitic or venereal boils or ulcers on the surface of the body with itching 5. அக்கி பூர்த்தல், formation of herpes in clusters; 6. குருகுரு வென சப்த முண்டாதல், causing a murmur.

குரு குலம், பலண்டுறுக பாஷாணம், a mineral poison. See குரு; 2. துரிசு, blue vitriol.

குரு குளிகை, பெருமை வாய்ந்த குளிகை, reputed pill. See இரசமணி.

குருக்கக் காய்ச்சல், சுண்டக் காய்ச்சுதல், boiling down as to become thick and consistent.

குருக்கஞ் செடி, பிரம தண்டு, yellow thistle —Argemone mexicana. See குருக்கு.

குருக் கண், குருட்டுக் கண், blind eye; 2. குரு வெழும்பிய கண், eye with eruptions or vesicles; 3. பெண் முலை, woman's breast; ஞானக் கண், eye of wisdom; third eye.

குருக் கத்தி, குறிஞ்சா. இது ஒரு பெரிய செடி, இலை 7 அங்குல நீளம்; பூக்கள் வெள்ளை, மஞ்சள் வாசனை யுள்ளன; இலைகள் சரும நோய்களுக்கு உபயோகப்படும், delight of the wood — Hiptage madablota, Large shrub with leaves 7 inches long; flowers, white and yellow, fragrant; leaves are used in cutaneous diseases; 2. மாதவிக் கொடி, a taill climber; spring creeper — Molina racemosa; 3. மாதுளை, Pomegranate — Punica granatum; 4. வனத் தவசி முருங்கை, wild gendarussa. —Gendarussa vulgaris. 5. நெரிஞ்சி முள், thistle — Tribulus terrestris.

குருக்கத்தி யெண்ணெய், வசந்தகாலமல்லிகை யெண்ணெய், oil of spring creeper.

குருக்கம், see குருக்கு.

குருக்கல், குரு வுண்டாதல், breaking out of prickly heat; 2. அம்மைக் குரு வெழும்பல், rising of pocks as in small - pox.

குருக்கள், காக பாஷாணம், a prepared arsenic; 2. உடம்பை இளைக்கச் செய்யும் நோய், any disease tending to produce emaciation of the body — Wasting disease; 3. நரி, jackal.

குருக்காதி, குரு மருந்துகள் முடிக்க உபயோகமான சரக்குகள், the ingredients necessary for preparation of quintessential medicines. See குரு முடிப்போன்,

குருக் காரம், காரக் குரு, any substance added to a metal etc, to be facilitate its fusion —Flux. See குருகாரம்; see குங்கிலியம்.

குருக்கி, தொடை வீங்கும் குதிரை நோய், a disease in horses marked by swelling of the thigh.

குருக்கிடை, குருகிடை நூல் அதாவது குரு மருந்து முறையைச் சொல்லும் நூல், a treatise on the preparation of quintessential medicines or salts used in Alchamy.

குருக் கிலை, பிரம தண்டின் இலை, see குருக்கு.

குருக்கிளுதம், சங்கிலை, four - spined monetia —Azima tetracantha.

குருக்கு, பிரம தண்டுச் செடி, prickly poppy —Argemone mexicana. See குடியோட்டிப் பூண்டு.

குருக் குத்தி, ஓர் முட்செடி, a thorny shrub. See தருக்கு, 2. பயிரில் விழும் நோய், blight affecting grain crops.

குருக்குப் பால், பிரம தண்டுச் செடியின் மஞ்சள் பால், இது கண் வலிக் குபயோகமாகும், the yellow juice of prickly poppy. used in Ophthalmia.

குருக்குப் பொருட்டு, குருக்காக பாய்ந்தமுறை transverse process.

குருக் கொடுத்தல், சூனியம் செய்தல், (In Sorcery) doing harm or injury to a person through the influence of evil spirits; 2. குரு மருந்தைப் பிரயோகித்தல், administering or inserting potent medicines.

குருக் கொள்ளுதல், உடம்பில் குரு வெழும்பல், formation or development of vesicles or pustules or other kind of eruptions on the surface of the body as in small-pox, measles etc.

குருங்கடியான், தாளகம், orpiment.

குருங் காடகம், மூக்கு, கண், காது, தொண்டை, ஆக இந் நான்கு துவாரங்களும் கூடுமிடம், the place of union of the four cavities viz. nose, eyes. ears and throat. See நாற் சந்தி.

குருங் காடை, உயர்ந்த காடை, a superior kind of quail.

குரு சகம், see குருசம்.

குருசம், வெண் தோன்றி, sky-root. See ஆகாச கருடன் கிழங்கு, 2. வெள்ளைக் குன்றிமணி, white Indian liquorice — Abrus precatorius (albiflora); 3. see குருச ரோகம்,

குருச ரோகம், தாது இளைப்பதினால் உடம்பு வற்றி இளைத்தல், emaciation through loss of vitality; any disease causing emaciation —Wasting disease.

குரு சாரம், பொடி காரம், an alkaline powder; 2. சிவசாரம், an alkaloid preparation as opposed to சத்தி சாரம், which see.

குரு சித்தன், இரசவாத முறைகளில் வல்லோனாகிய சித்தன், a siddha skilled in Alchemy; 2. சித்தர்களிற் சிறந்தோன்' அதாவது அகத்திய முனி, sage Agastya, the chief of the Siddhar's school.

குரு சுரம், உடம்பிற் தினைபோல் குருக்களை யெழுப்பும் ஓர்வகை சுரம், an acute fever characterised by a crop of pustules of the size of millet seeds—Miliary fever.

குரு சூரியன், வைரம், diamond.

குரு செயநீர், பூ நீருப்பு செயநீர், a strong pungent fluid prepared by exposing to night's dew a mixture in which the efflorescent salt of the soil of the fuller s earth forms the chief ingredient.

குருச் சாரகம், see இருள்விடு செடி.

குச்சி, சீனக்காரம். alum; 2. பூவழலை, salt impregnated with soda.

குருச்சிகம், உறைக் குற்றிய பால், coagulated milk.

குருச் சுண்ணம், முப்பு, the mystic 'three salts' used in Alchemy. It is the quintessence salt prepared by a secret process

குருச்சோ விருத்தம், நெட்டி தனம், an unknown plant?

குருஞ்சூல், see அகச் சூலி.

குருஞ் சேபகம், மலை யெருக்கு; mountain madar plant.

குருடகா, see உத்தாமணி.

குருட துளசி, கஞ்சாங் கோரை, white basil —Ocimum album.

குருடன், கண் ணில்லான், a blind man.

குருடி, கண் ணில்லாதவள். a blind woman.

குருடு, அஞ்ஞானம், want of intellectual or moral discernment; 2, வெளிச் செவி, tragus; 3. உறுப்புக் குறை எட்டினுள் ஒன்று அதாவது பார்வை யின்மை, one of the eight organic defects of the human bady i. e., blindness—Typhlosis.

குருடு, குருட்டுத்தனம், பார்க்க முடியாத நிலைமை, இது அடியில் கண்டபடி பலவிதமாகக் கொள்ளப்படும், blindness. The following are the different kinds;—

1. **அரைக் குருடு,** partial blindness—Amblyopia.
2. **இராக் குருடு,** night - blindness—Hemeralopia.
3. **பகற் குருடு,** day - blindness — Nyctalopia.
4. **முழுக் குருடு,** complete blindness.
5. **நிறக் குருடு,** colour blindness.
6. **எழுத்துக் குருடு,** letter blindness.
7. **மனக் குருடு,** mind blindness—(In psychology) illusion; psychic blindness.
8. **வஸ்துக் குருடு,** object blindness.
9. **சோதிக் குருடு,** temporary blindness due to great lustre or dazzling light (Astral).

10. ஆத்துமக் குருடு, inability of re-cognising the soul—Soul blind-ness.

11. மின்னற் குருடு, blindness due to lightning.

12. அதிர்ச்சிக் குருடு, functional blind-ness through shock due to vio-lent explosions as shells, bombs etc.—Concussion blindness.

13. அம்மைக் குருடு, blindness through small-pox.

14. அந்தி அல்லது மாலைக் குருடு, even-ing or twilight blindness.

15. கிழக் குருடு, blindness through old age — Senile blindness.

16. காமக் குருடு, love-blindness.

17. மாயக் குருடு, blindness caused through Sorcery.

18. மயக்குக் குருடு, blindness through Magic.

19. ஆணவக் குருடு, (fig) blindness through arrogance or self-con-ceitedness.

20. பிறவிக் குருடு, blindness existing from birth — Congenital amau-rosis.

21. பேய்க் குருடு, hysterio amaurosis.

22 கபாலக் குருடு, blindness through brain diseases — Cerebral blind-ness.

23. மோகக் குருடு, blindness through sexual excess — Post-marital amblyopia.

24. ஒற்றைக் குருடு, blindness of one-eye

25. நோய்க் குருடு. blindness through consitutional diseases.

26. வெண் குருடு, blindness through cataract.

குருட்டடி, யோசனை யில்லாது அடிக்கும் அடி, indiscriminate beating.

குருட்டீ, மாட்டீ, gad fly — Tabanus bovi-nus; 2. இரவில் பார்வையற்ற ஈ. fly that cannot see in the night.

குருட்டுக் கண், பார்வை யில்லாக் கண், blind eye.

குருட்டுக் கல், நிறமற்றக் கல், colourless stone; 2. ஒளி மங்கின இரத்தினம், dim gem; 3. ஒளி வீசாக் கல், a stone or gem without lustre; a lens not transparent.

குருட்டுக் கிரகம், குழந்தைகளுக்குக் காணும் கிரக தோஷம், a morbific disthesis in children due to the mal-influence of a paritcular planet p erhaps Venus.

குருட்டுத் தனம், கண்மூடித் தனம், blindness; 2. அறியாமை, முட்டாள் தனம், foolish-ness; 3. அசட்டுத் தனம், recklessness.

குருட்டு நோய், காரணம் தெரியாத நோய், diseases for which no causes could be assigned; 2. கண் குருடு, blindness.

குருட்டுப் பாலை, நந்தியா வட்டம், eye-flower —Tabernaemontana coronaria (crispa).

குருட்டுப் போக்கு, see குருட்டுத் தனம்.

குருட்டு முத்து, ஒளி மங்கின முத்து. a lus tre less pearl

குருட்டு மை, பார்வை யில்லாமைக் குபயோகிக்கு மை, a collyriom used for curing blindness or dim sight.

குருட்டு வழி, நூலிற்கும் அறிவிற்கும் பொருத்தமில்லாத வழி, a blind procedure not amenable to reasoning power nor to the principles of science.

குருட்டு வைத்தியம், கண்மூடித் தனமாய் செய்யும் வைத்தியம், the blind procedure and practice of a quack—Quackery.

குருட்டு வைத்தியன், நூலின் முறை தெரியாத வைத்தியன், one who practices medicine without the knowledge of science. Quack; Charlatan.

குருட்டு வௌவால், பகலில் கண் தெரியாத வௌவால், இது அடியிற் கண்டபடி நான்கு வகைப்படும், bat which is blind to day light — Noctilionidae; Noctule bat. It consists of four kinds as mentioned below:—

1. சிறகு நீண்டோன், long-armed bat —Taphozous longimanus.

2. வெண் வயிற்றோன், white-bellied bat—T. melanopogon.

3. கருந் தாடியன், black-bearded bat —T. saccolaimus.

4. உதடு சுருங்கி, wrinkled-lipped bat —Nyctinomous plicatus.

குருட் டெலி, கடித்தால் விஷத்தை யுண்டாக்கும் ஓர்வித எலி, a kind of rat, the bite of which is considered poisonous

குரு தாபம், மிகச் சூடு, exeessive heat.

குரு தாளகம், தாளகத்தைக் கொண்டு தயாரித்த குரு மருந்து அதாவது தாளகக் குரு, a quintessence derived from orpiment by the process of calcination. See குரு.

குருதி, சிவப்பு, redness; 2. இரத்தம், blood; 3. மூளை, brain; 4. பூநீறு, an efflorescent salt obtained from the soil of fuller's earth.

குருதிக் குழி, இரத்தம் சொரியும் யோனித் துவாரம், the vagina of a woman serving as a channel for discharge of menstrual blood; 2. இருதயம், heart containing blood.

குருதிக் காகிதம், பூமி சருக்கரை கிழங்கு, ground sugar root—Arum campamelatum.

குருதிக் குருகடம், இரத்தத்தி லுள்ள சிறு சாலங்கள், corpuscles in the blood.

குருதிக் கூத்தன், சிவப்புக் கூத்தன் குதம்பை a red variety of கூத்தன்குதம்பை, which see.

குருதி சாலம், இரத்த சாலம், blood-cell.

குருதி சிந்தல், இரத்தம் சொரிதல், shedding blood.

குருதிச் சீழ், இரத்தமும் சீழும், blood and pus.

குருதி நீர், இரத்த நீர், blood-plasma—Liquro sanguinia.

குருதிப் புனல், மிகுந்த இரத்த ஒழுக்கு. profusion of blood; 2. இரத்த நீர், serum of blood.

குருதிமா றக்கி, இரத்தத்தை உறிஞ்சும் அட்டை, leech sucking blood.

குருதி யிலாதினி, see அதிங்கம், 2. நத்தை, snail.

குருதி யூட்டுதல், உடம்பிற்குள் இரத்தம் விடுதல், transfusion of blood; administration of blood into the body — Hemotheraphy. See இரத்தம் விடல்.

குருதி ரோகம், இரத்தக் கதிப்பு, சோகை, இரத்த வேகம், இரத்தத்தைப் பற்றிய நோய்கள், diseases relating to blood such as Plethora, Anemia, Blood pressure etc.

குருது, கிருதம், medicated ghee; 2. நெய், ghee; 3. வெண்ணெயுருக்கிய நெய், clarified butter.

குருது பலம், கோஷ்டம், Arabian costus—Costus specious.

குரு தோன்றல், அம்மை வார்த்தல், appearance of pustules in small-pox, chicken-pox, measles etc. 2. குருவைக் கனவில் காணல், appearance of a Guru or Spiritual teacher in the dream.

குருத்தம், வெள்ளியைப் போன்ற ஓர் உலோகம், a metal resembling silver—Platinum.

குருத் தாமரை, ஆகாச தாமரை, sky-lotus-Pistia stratiotes; 2. கொட்டைப் பாசி, a kind of moss spreading on the surface of water in tanks; 3. குளிர் தாமரை, sky-lotus—Pistia stratiotes.

குருத் திரசிவாத ரோகம், தொடை வாதம். தொடைக்குப் பின்னுக உட்புறத்தில் இருக்கும் பெரிய வெளுத்த நரம்பிற்குக் காணும் ஓர் வாத நோய், a painful affection or inflammation of the large nerve passing down the back of the thigh—Sciatica.

குருத் திருத்தல், வேர்க் குரு கொள்ளல், breaking out of the prickly heat.

குருத் திலை, see குருத் தோலை.

குருத் திறகு, மிருதுவான உட்பக்கத்து இறகு the soft inner feathers as of a bird.

குருத்து, குருத் தோலை, the tender leaves or shoots of the palm etc; 2. பனை முதலிய வற்றின் குருத்து, new shoots of the palm; 3. வெண்மை, whiteness; 4. குருத் தெலும்பு, cartilage; 5. மூளைக் குருத்து, brain matter; 6. செவிக் குருத்து, tympanum.

குருத்துக் குழந்தை, அப்பொழுது பிறந்த குழந்தை, just born baby; new-born child.

குருத்துத் தாளி, சிறு தாளி. hairy-leaved creamy white bindweed — Ipomaea obscura (gemella).

குருத்துவக் கறி, எளிதில் சீரணிக்க முடியாத காற்கறி அல்லது மாமிச வகைகள், vegetable or animal food not easily digestible; 2. வாயு பண்டம், any substance in food promoting flatulency; starchy food.

குருத்துவ போசனம், வாதத்தை யுண்டாக்கும் உணவு, any food tending to aggravate the condition of Vatha (humour) in the human system; any article of food likely to cause rheumatism.

குருத்துவமான கறி, வாதத்தை யுண்டாக்கும் காய் கறிகள், vegetables having the property of causing rheumatism by habitually consuming it; 2. வாயு பண்டம், substance containing starch; starchy food.

குருத்துவம், வாதம், rheumatism; 2. வாயு, flatulency; 3. வெள்ளியத்தைப் போன்ற கனதியான ஓர் உலோகம், a heavy metal like tin—Platinum.

குருத்துவிடுதல், பனை முதலிய வற்றில் புது வோலை கிளம்பல், sprouting or shooting of new leaves, as in palmyra etc.

குருத்து வேலன். முள் வேல், thorn-babool—Acacia tomentosa.

குருத் தெலும்பு, முருந்து வெலும்பு, cartilage bone; 2. கோமளாஸ்தி,* அல்லது முதிரா எலும்பு, tender bone; 3. முள்ளெலும்பு களின் இடையேயுள்ள மிருதுவான எலும்பு, the tender bone or the cartilage between vertebrae.

குருத் தோலை, பனை, தென்னை, ஈச்சை முதலிய வற்றின் இளவோலை, the tender and unexpanded leaves of palm trees such as, palmyra, cocoanut, date etc.

குரு நகாரிலம், சாக்கிரம், waking state—one of the stations of the soul.

குருநடை கொள்ளல், குரு வழியைப் பின்பற்றல், following the foot-steps of a Guru or Spiritul teacher. 2. இராப் போசனம், செய்தவுடன் நித்திரை போவதற்கு முன் சிறு நடையாக 100 அடியாவது உலாவுதல், walking about a short distance of at least 100 ft, soon after night-meals and just before retiring to bed, See குருநடை கொள்ளல்.

குரு நாகம், நாகத்தினுல் செய்த குரு பற்பம், the highly concentrated extract of zinc —Zinc quintessence; 2. நாகப் பாம்பி லுயர்ந்தது, king of cobras.

குரு நாடி, நோயின் தன்மையை அறியக் கூடிய நாடிகளின் விஷயமாக அகஸ்தியர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a treatise in Tamil on pulsation by Agastya. It deals with the diagnosis of diseases by only feeling the pulse. 2. ஓர் நாடி விதி, a medical science in Tamil treating about or containing the rules on the working or functioning of the ten tublar vessels (தச நாடி) in the human system and the hints for ascertaining diseases by feeling the pulse; 3. பிரகஸ்பதியால் இயற்றியதாகச் சொல்லப்படும் ஓர் ஆருட நூல், a treatise on augury or prognostication said to have been given out by Bragaspathy, a spiritual Guru of Devas; 4. பித்தத்திற்கு முன்னதாக அதாவது வாதத்திற்கும் பித்தத்திற்கும் இடையே பேசும் ஓர் நாடி, the inter-pulsation i. e. the pulse between those indicating Vatha and Bile in the radial artery.

NOTE:—This seems to be very difficult for understanding, as it apparently deals with pulsation within pulsation. It cannot be learnt without the initiation of a Guru (Spiritual teacher) as it in volves minute diagnosis.

குருநாத பற்பம், தீசாத கிரந்தி, சூலை முதலிய வற்றிற்கு யூகிமுனி நூலிற் சொல்லி யுள்ள ஓர் மருந்து. a medicinal preparation or prescription of high potency dealt with in the medical science of Yugi muni for curing chronic syphilis, rheumatism and gout; 2. துரிசு பற்பம், calcined oxide of blue vitriol.

குருநாதன், துரிசு, blue vitriol; 2. மௌன குரு, silent saint.

குருநாத் தகடு, மெல்லிய வர்ணத் தகடு, foliated tinsel; 2. see குருநாப் பட்டை; 3. வெள்ளியத் தகடு, a thin sheet of tin or white lead.

குருநாப் பட்டை, மெல்லிய முலாம் பூசிய பித்தளைத் தகடு, a thin brass leaf with a glossy coating. See வேகடைத் தாள்.

குருநாள், வியாழக்கிழமை, Thursday.

குருநீறு, see குரு பற்பம்.

குரு நூல், முதன்மை யான நூல், original work; 2. மேன்மையான நூல், a reputed work; 3. குரு மருந்து முறையைப் பற்றிக் கூறும் வைத்திய நூல், a medical work on the principles and preparation of quintessence salts

குரு நெய்ப்பு கொள்ளல், சிறுசிரங்கு சீழ்கொள்ளல், suppuartion of pustules ; 2. அம்மை பால் கொள்ளல். pusules maturing in small-pox.

குரு நோய், உடம்பில் குருக்களை எழுப்பும் நோய்கள், diseases including small-pox developing pustular eruptions on the surface of the skin; 2. சிலந்தி, tubercle; 3. குட்ட நோய், leprosy as king of diseases.

குருந்தகம், மயில், pea-cock.

குருந்தக் கல், see குருந்தம்; 2. ஓர் வகை மாணிக்கம், a kind of ruby; 3. குருவிந்தக் கல், a variety of corundum next to diamond, distinguished for its extreme hardness—Emery; 4. வச்சிரக் கல், diamond spaat—Spatum adamantinum.

குருந்தம், குருந்தக் கல், corundum or adamantine spar. It is a sort of sapphire (நீலம்) including the grey and dark-coloured opaque crystallised specimens.

NOTE.—Sapphire and ruby are also forms of corundum; and emery is a granular variety mixed with magnetite or haematite.)

குருந்தம், குருந்த மரம், see குருந்து; 2. தாலம்ப பாஷாணம், a kind of native arsenic; a mineral poison; 3. see குருந்தம் பொடி; 4. ஓர் மஞ்சள் மல்லிகை, a yellow amaranth; 5. மஞ்சட் செம்முள்ளி, yellow nail-dye—Barleria prionitis.

குருந்தம் பொடி, குருந்தக் கல்லின் பொடி, emery powder

குருந்தான், காட்டெலுமிச்சை, wild lime tree

குருந்து, வச்சிரக் கல், see குருந்தக் கல், 2. காட்டுக் கொழுஞ்சி, a variety of wild lime—Atlantia racemosa; 3. வெண் குருத்து, white tender leaf as in palm trees; 4, குழந்தை, child; infant; 5. இலவங்கப் பட்டை, Ceylon cinnamon—Cinnamomum zeylanicum; 6. குருக் கத்தி, which see.

குருந்து, குருந்த மரம், இது பலவகைப்படும். wild lime tree—Atlantia genus. The following are the different kinds:—

1. செங் குருத்து, Travancore red wood—Gluta travancorica.
2. காட்டுக் குருந்து, wild lime—Atlantia racemosa.
3. அலைக்குருந்து, hill lime,
4. மாந்தக் குருந்து. same as No. 6.
5. மயிலடிக் குருந்து, false peacock foot tree—Niebuhria linearis.
6. பெருங் குருந்து, Indian wild lime—Atlantia monophylla.
7. பேய்க் குருந்து, raceme - flowered wild lime — Atlantia ceylonica.
8. மூவிலைக் குருந்து, three - leaved wild lime — Trichilia spinosa.

குருந் துழாய், சிறு துளசி, small leaved basil—Ocimum sanctum.

குருந் தூதிகம், புன்னை மரம், Alexandrian laurel—Canophyllum inophyllum.

குருந்தை, குறிஞ்சா மரம், common delight of the wood — Hiptage Madablota. See குருந்தம்.

குருபக்குவம், சிறுதும்பி அல்லது சிறுதும்பை, small leucas. It is so called from its use in calcination of metals.

குரு படாதி, புனுகு, civet.

குரு பண்ணல், பொடி செய்தல், powdering; 2. குரு முடித்தல், the art of finding or preparing a universal remedy for curing all ailments.

குருபதம், பூநீறு, the efforescent salt gathered from the soil of fuller's earth; 2 see ஜந்திலை நொச்சி,

குரு பதாருசம், செவ் விறகு, red wood used as fuel in calcination of metals.

குருபதி, துரியா தீத நிலை. one of the five stations of the soul. It is the highest state of the soul when i is free from all coporeal entanglements.

குரு பத்திரகம், வெள்ளீயம், tin.

குரு பத்திரம், துத்தநாகம், zinc; 2. புளிய மரம், tamarind tree; 3. சிறிய இலை, small leaf; 4. மேன்மையான இரும்பு அதாவது காந்தம், magnet.

குரு பரவுணி, காட்டா மணக்கு, croton plant—Jatropha curcas.

குருபற்ப மாக்குங் குணத்தி, வெள்ளை நீர் முள்ளி. white flowered water thistle plant—Hygrophila spinosa (albiflora). It is so called from its powder of rendering calcined powders highly potent.

குரு பற்பம், சகலவித மருந்துகள் தயாரிக்க வேண்டி உபயோகிக்கும் வைத்திய முப்பு (In medicine) quintessence of the 'three salts' used as a chief ingredient for preparing all kinds medicines. 2. எல்லா வியாதிகளையும் குணப்படுத்தும் மருந்து. allhealing drug; 3. வாத முப்பு, (In Alchemy) a universal medicine for transmuting baser metals into gold.

குரு பாகம், குரு மூலியமாய் கற்பிக்கப்பட்ட முறை, the method or process inspired by a guru (teacher); 2. குரு மருந்தை

முடிக்கு முறை, the method of preparing an all-healing drug; 3. சிறந்த முறை reputed method.

குருமித்தம் ஒரு பலமிடைப் பொன் one palam of gold.

குரு பீடம், see சத்திப்புப்பு.

குரு புறப்படல், குரு வெழும்பல், the breaking out of pimples, pustules etc. upon the skin as rash, vesicles etc. accompanying a disease; 2. அம்மை கொள்ளல், being attacked with small-pox: 3. கொப்புள முண்டாதல், rising of boils.

குருப்பட்டுக் கறுப்பு, கல் லாடத்தில் சொல்லி யுள்ளவோர் கறுப்புக் குரு மருந்து, a black universal medicine described in a Tamil medical treatise known as "Kalladam"; 2. பட்டுக் கொழுத்திய சாம்பல், ashes of burnt silk.

குருப் பித்தல், பருக் கொள்ளுதல், forming pustules; breaking out as of pimples; 2. பருக்கொள்ளும்படி செய்தல், causing formation of pustules.

குருப்பு, பரு, pimple; pustule.

குருப பூச்சி, அறுபுள்ளி வண்டு, a wasp with six spots on its back; spotted wasp. It is used in calcination of metals and in magic. See குரு வண்டு.

குரு மணல், வெள்ளி மணல், white sand or silver ore; 2 நுண்ணிய மணல், fine sand

குரு மணி, see இரச மணி; 2. வைரம், diamond.

குருமம், ஈல்ல இலுப்பை, oval mohwah—Dichopsis elliptica; 2. காட்டு இலுப்பை, wild mohwah—Bassia latifolia.

குருமருந்து, வைத்தியத்தில் எல்லாவித நோய் களைக் கண்டிக்கவும், உடம்பைப் பொன் போலாக்கவும், வாதத்தில் இரும்பு, செம்பு முதலிய இழிந்த உலோகங்களை பொன்னாக மாற்றவும் சக்தி வாய்ந்த முதன்மையான மருந்து, a Universal medicine of high potency capable of not only curing radically all diseases of the system; but also transmuting inferior metals such as iron, copper etc. into gold. See குரு.

குருமலியம், see அசோகு.

குருமன், குழந்தை. child; 2. விலங்கு, பறவை இவைகளின் இளமை, the young of beasts and birds.

குரு மாத்திரை, மாந்த நோய்க்காகக் குழந்தை களுக்கு முலைப்பாலில் இழைத்துக் கொடுக் கும் கஸ்தூரி மாத்திரை, musk pills macerated in women's breast milk and given in indigestion to children; 2. உயர்ந்த மாத்திரை, superior pill; 3. சிறு மாத்திரை, small pill.

குரு மான், see குருமன்.

குருமி தல், குருவெழும்பல்.

குரு மிளகு, கெட்டி மிளகு, solid pepper; 2. நல்ல மிளகு, superior pepper; 3. அமுரியி லிட்ட மிளகு, pepper sooked in urine.

குரு முகம், அம்மை வார்த்த முகம், pox-pitted face; 2. குருக்கள் எழும்பிய முகம், face full of pimples; 3. சிறிய முகம், small face.

குரு முகறன், குருமுகன், one having face pitted with small - pox.

குரு முடிக்குங் காலம், தை, மாசி, பங்குனி ஆகிய பனி காலம். இம்மாதங்களில் உலோ கங்களை புடமிட்டு நீற்றுதற்கு உதவும்படி யான செயநீர் முதலிய மருந்துகளை தயா ரிக்க வேண்டிய காலம், dew season of January, February and March. It is only during this period that medicines such as, Jayaneer etc. useful for calcination of metals are generally prepared; 2. முப்பு முடிக்குங் காலம், (In Tamil Medicine the period selected for preparing quint-) essence of 'three salts'.

குரு முடித்தல், உலோகங்களை நீற்றுவதற் கான மருந்துகளையும் இரசவாதத்தில்இழிந்த உலோகங்களை பொன்னாக்குதற் குரிய மருந் துகளையும், எல்லா நோய்களையும் போக்கக் கூடிய ஒரே மருந்தைச் செய்து முடித்தல், the art of finding a universal remedy for preparing not only strong alkaline compounds and acids for purposes of calcining metals and mercurial preparations for transmutation of inferior metals into gold, but also for curing all diseases of the human body: 2. முப்பு செய்து முடித்தல், the art of preparing quintessence of 'three salts' for purposes of transmutation and rejuvenation.

குரு மூத்திரம், சிறுநீர், child's urine; 2. மூத்திரம், urine of adults.

குரு முப்பு, பூநீறு முப்பு, இது வாதம், வைத் தியம், காயசித்தி, ஆக மூன்று கருமங்களுக்

சம் உதயம், an alchemical prepration called 'Muppu' of ancient Siddhars supposed to have been in practice in the Dravadian period, by which metals were transmuted into gold, all diseases were radically cured. and life rejuvena

குரு முறை, see குரு பாகம்; 2. சவர்க்காரம், washing soda; 3. கோடா சுளி, a kind of prepared arsenic used in Alchemy.

குரு முறை மன்னன், கோடா சுளி, see குரு முறை.

குருமுறை மார்க்கம், வேதை மார்க்கம் அதாவது பொன், வெள்ளி செய்வதற்காக வேண்டி, குருமருந்து முடிக்கும் விதத்தையும், முடித்த பின் அதை இன்ன உலோகங்களில் இன்னவிதமாகப் பாய்ச்ச வேண்டிய முறையையும் பற்றிய விவரம், the process of preparing the Universal medicine for making gold and silver. together with the rules and exact proportions for using it in other metals for purposes of transmuting them into gold or silver of a particular standard.

For details see குரு.

குரு முனி, see அகத்தியர்.

குருமுனி யழகி, see ஊர்க் கள்ளி.

குரு மூஞ்சி, see குரு முகம்.

குரு மூலி, வாதம், வைத்தியம், யோகம், காயகற்பம் இவற்றிற் குதவும், மூலிகைகள் இத்தகைய மூலிகைகள் தென் பொதிகையிலுள்ளன. இவற்றை உட்கொள்ள ஆணவங்கள் ஒடுங்கி ஞானப் பாலூறும் மானிடர்க்குக் கிட்டா. இவைகளைப் பற்றி ஔடத வகுப்பின் கீழ்ப் பார்க்கவும், rare drugs useful in Alchemy, medicine. Yoga and Rejuvenation. It is said that they are found in Pothigai Hill in Southern India. These drugs kill pride and improve wisdom; they are not procurable to ordinary human beings. For a list of these drugs see the classification under ஔடத வகுப்பு. at the end of Vol. I.

குரு மூலி, கஞ்சா, ganjah — Cannabis sativus; 2. பொற்றலைக் கையாந் தகரை, இது செந்தூரத்திற் காதி. ஆகவே இப் பெயர், mary-gold verbesena; Ceylon verbesena —Verbesena calendulacea. It is a radical for preparing red-oxides and hence this name; 3. வீழி வேர், cleome root— Cleome fruiticosa; 4. ஓர் மூலிகை, a plant —Sedaroxylon spinosum.

குரு மெழுகு, எலிப் பாஷாண மெழுகு, a wax-like medicine prepared from rat's bane; 2. உலோகங்களை யுருக்கவேண்டி உபயோகிக்கும் மருந்து, flux.

குரு மேசினம், see இதிரக் கிழங்கு.

குருமை, நிறம், lustre; 2. சிறந்த ஜால மை, a superior kind of black paint used in magic; 3. பெருமை, greatness.

குரும பட்டி, see குரும்பை.

குரும் பவரை, வெள்ளை யவரை, white bean.

குழாய், வாயு, தண்ணீர், ஆவி முதலியவை களைக் கொண்டு போக வுபயோகப்படும்உட் டுளைக் கருவி, a hollow cylindrical tube of wood, metal etc for the conveyance of gas, water, vapour etc- 2. உடம்பினுள் ளமைக்கப்பெற்ற தாரை, கால்வாய் முதலிய உட்டுளைக் கருவி, இது கீழ்கண்டபடி விளக்கச் சொல்லை முதலாக் கொண்டு வரும், (In Anatomy) a tubular organ, passage, canal or vessel in an animal body often preceded by a defining word as mentioned below:—

1. காற்றுக் குழாய், air-tube; windpipe.
2. சுவாசக் குழாய், any tubular passage of the respiratory apparatus.
3. இரத்தக் குழாய், blood-vessel
4. கேள்விக் குழாய், auditory tube or the eustachian tube.
5. கருவிழிக் குழாய், tube-like passsge between the layers of cornea.
6. கருப் பைக் குழாய், uterine tube; fallopian tube.
7. நாதக் குழாய், ovarian tube.
8. மூத்திரக் குழாய், tube conveying urine,
9. அன்ன ரசக் குழாய், lymphatic vessel.
10. உதரக் குழாய், stomach tube for feeding or washing out the stomach.
11. ஊட்டுங் குழாய், tube for introducing food in to the stomach—Feeding tube.
12. இணைக்குங் குழாய், connecting tube.
13. ஊது குழாய், blow - pipe used for melting.
14. மூங்கிற் குழாய், bamboo tube used to keep or preserve oil, honey, medicine etc.
15. பீச்சு குழாய், syringe.
16. சோதனைக் குழாய், test tube closed at one end.

குழாய்க் கந்தகம், வானக் கந்தகம், roll or stick sulphur.

குழாய்த் தண்ணீர், குழாயினின்று வரும் தண்ணீர், pipe water.

குழாய்ப் புண், புரைப் புண், sinus of a sore; 2 குழாய்ச் சலத்தினால் கால் விரல் கவி னிடையே வரும் சேற்றுப் புண், sore-feet due to pipe water.

குழாய் மீன், குழிவை மீன், pipe-fish.

குழாய் மூங்கில், உட்டுளை யுள்ள மூங்கில், a common light bamboo with a tubular cavity known as female bamboo or hollow bamboo — Bambusa arundinecea, It is opposed to கெட்டி மூங்கில், solid bamboo.

குழி, வயிறு, belly; 2. கருக்குழி, womb; 3. பள்ளம், cavity; depression; 4. புடமிடும் குழி, a pit of varied depth intended for calcination.

குழி, உடம்பினுள்ளாவது அல்லது அதன் ஓர் உறுப்பி னுள்ளாவது ஏற்பட்ட பள்ளம், இது சாதாரணமாய் அந்தந்த உறுப்புகளின் பெயர் அல்லது இடத்தைக் கருதி பெயர் பெறும், any hollow space or place within the body or in one of its organs it generally takes its name by the preceding word referring to either the organ itself or its situation in the body as shown under:—

1. வயிற்றி னுட் குழி, abdominal cavity.
2. பல்லிடைக் குழி, buccal cavity,
3. பிண்டக் குழி, see No. 21.
4. அம்மைக் குழி, pock - mark.
5. நாசிக் குழி, nasal cavity — Nassal fossa.
6. உதரக் குழி, pit of the stomach—Epigastrium.
7. செவிக் குழி, labyrinth of the ear: anditory pit,
8. புண் குழி, a depression or sinus of a sore or an ulcer; 2.See No. 12.
9. கன்னக் குழி, hollow cheek.
10. இரத்தக் குழி, cavities (auricles and ventriclas of the heart)
11. சோற்றுக் குழி, belly.
12. கசக் குழி அல்லது கசமலக் குழி, இரத்தக் சொரியும் குழி, a pit or channel for menstrual blood; vagina. See No. 24.
13. கபாலக் குழி, cranial cavity.
14. அக்குட் குழி, arm - pit.
15. பெருங் குழி, See No. 12.
16. வாய்க் குழி, cavity of the mouth —Cavum oris.
17. இடைக் குழி, pelvis cavity.
18. மார்புக் குழி, chest cavity.
19. நாபிக் குழி, navel cavity.
20. கண் குழி, socket of the eye.
21. கர்ப்பக் குழி அல்லது கருக் குழி, uterine cavity,
22. உச்சிக் குழி, fontanelle.
23. கைக் குழி, hollow of the palm.
24. நாற்றக் குழி, (fig) vaginal cavity.
25. உரற் குழி, the hollow space of a mortor.
26. படுகுழி, deep pit endangering life.
27. ஊற்றுக் குழி, pit of a spring.
28. பிரேதக் குழி, a pit for burying the dead.
29. புடக்குழி, a pit for calcining medicine.
30. நெற்புடக் குழி, a pit made in a heap of paddy for concealing a prepared medicine for seasoning.
31. சமாதிக் குழி, a pit constructed for a Yogi for entering into cternal Silence

குழி கை, உள்ளங் கை, palm of the hand. See குழிங் கை.

குழிச் கண், ஆழ்ந்த கண், உள்ளாங் கண். sunken eyes.

குழிக் கண்ணி, உள்ளாங் கண் ணுடையவள், a women with sunken eyes.

குழிக்கண் புழு, ஓர் கண்ணோய், a disease of the eye.

குழிக் கல், குழியம்மி, mortar used for grinding medicine. 2. உரல் mortar for pounding anything.

குழிங் கை, உள்ளங் கை. palm of the hand.

குழி சோதனை, புண் புரைகளின் ஆழத்தை ஊசியிட்டுச் சோதித்தல், examination of a wound, ulcer or eavity with a probe.

குழிச் சட்டி, அழமான மண் சட்டி, a hollow earthen cooking pot.

குழிச் சிலந்தி, குழி விழும் ஓர் சிலந்திப் புண், any sore or ulcer with a hole or cavity —Cancer.

குழி தத்தம், நகம். nail.

குழி தோஷம், குழந்தைகட்குக் கழிச்சலினால் உச்சி, கண் இமைகள் குழி விழுந்து, குய்யம் புண்ணாகி, சுரங் கண்டு, உடல் வற்றும் ஓர் வகை தோஷம், a morbid affection in children marked by excessive purging, depression of fontanelle, sunken eyes, inflammation of the genital, fever, emaciation etc.

குழித் தாமரை, ஆகாசத் தாமரை, rootless nelumbo. Pistia stratiotes.

குழித் தைலம், பூமியில் குழி வெட்டி அதற்குள் தைலம் இறங்குவதற்காக ஒரு சட்டியைப் புதைத்து, அதன் பேரில் குடம் அல்லது பானையில் மூலிகைகளை நிரப்பி, அதன் அடியில் துவார மிட்டு, சுற்றிலும் விரட்டி அடுக்கி எரித்தலினால் மூலிகைச் சத்து பானையின் அடியி லுள்ள துவாரத்தின் வழியாய் கீழே வமைக்கப் பட்ட சட்டியில் வந்து இறங்கும் தைலம், a medicinal oil known as pit-oil' extracted from herbs by the following process:— a pit is dug out; and in it, a pot or receiver is placed or fitted; and over this, the pot containing herbs is placed with a hole made at its bottom just for the escape of the oil oozing out from herbs or other drugs when heated. Around this pot cow dung cakes are piled up and the fire kindled.

குழித் தைலம், பூமிக்குள் கிணறு அல்லது பள்ளங்களில் ஊறும் தைலம், oil obtained from wells or pits underneath the earth —Rock oil or Petroleum.

குழி நரி, குள்ள நரி. இது குழியில் வசிப்பதாலிப் பெயர், fox—Vulpus bengalensis. It is so called from its habitation in the pits burrowed under the ground; 2. see குழி யானை.

குழி நாவல், நரி நாவல், common myrtle — Myrtus communis.

குழித்தம், நகம், nail.

குழித் திருத்தல், குழியா யிருத்தல், being hollow like a cavity or depression.

குழிப் பறங்கி, கோடைப் பூசனி, a species of pumpkin cultivated in summer.

குழிப் பிள்ளை, தென்னம் பிள்ளை, young cocoanut tree; 2. இறந்த குழந்தை dead child.

குழிப் புண், ஆழ்ந்த புண், deep sore; sinus sore; 2. பள்ளம் விழுந்த விரணம், an ulcer in which cavity is formed; 3. துவாரம் வாய்ந்த விரணம், ulcer with a sinus; 4. வாய்ப் புண், inflammation of the mouth.

குழிப் பூதரம், மீனா மரம், a kind of tree.

குழிப் பெருக்கம், குழி பருமனுதல், enlargement of a cavity.

குழி மாத்தி, மலை வேம்பு, Indian mahogany —Chukkrassia tabularis.

குழி மாந்தம், குழந்தைகட்கு உச்சியிற் குழி விழும் ஓர் மாந்த நோய், a form of indigestion in children characterised by depression of fontanelle

குழி மிட்டான், ஓர் வகைத் துளசி, a kind of rough basil—Ocimum sanctum (hirsuta).

குழி மீட்டான், நத்தைச் சூரி, bristly button-weed — Spermacoce hispida; 2. தண்ணீர் விட்டான், water-root — Asparagus racemosus.

குழி முகடி, மீன் கொல்லி, fish-killer—Anamirta cocculus.

குழி முயல், ஓர் வகை முயல், இது புதர்களிலும், பூமியின் கீழ் குழியிலும் வசிப்பதாலிப் பெயர். இது வெண்மையா யிருக்கும்; மேலும் தடித்த ரோமம், சிவந்த கண், நீண்ட காதும் உடைத்தாய்ப் பார்வைக்கு பூனையைப் போலுமுள்ள பிராணி. இது சாதாரண முயலைப் போல் ஓடாது; குதித்து குதித்து ஓடும். இதைத் தான் சீமை முயல் என்று சொல்வது, a rabbit-like animal found in Syria and Palestine; Cony Lepus cuniculus. It is so called from its habitation in holes underneath the ground or under bushes. It is very rarely found here. It is white in colour; has thick hair, red-eyes, long ear; and resembles a cat in appearanee. It cannot run fast like the ordinary kind, but leaps while walking.

குழி முயல் வளை, சீமை முயல் வசிக்கு மிடம், cony burrow.

குழியம், வாசனை யுருண்டை, scent ball.

குழி யம்மி, மருந் தரைக்கும் கலுவக் கல், an oval stone with a hollow space or depression used for grinding medicine; 2. அரைப் புரல், grinding mortar.

குழி யானை, நுண்ணிய மணலினால் குவிந்த வடிவமாய்க் குழி செய்து, உள்ளே புகுந்து கொண்டு அதனுள் தற்செயலாய் வந்து விழும் எறும்பு பூச்சி முதலியவைகளை உணவாகக் கொள்ளும் ஓர் சிறு பூச்சி. குழியில் வந்து விழும் பூச்சி அல்லது எறும்பு தப்பித்து ஓட முயன்றால் சிறிது மணலை அதன் மேல் தூவி ஓடாதபடிச் செய்யும். இது பின்னால் நகரும்; தும்பியைப் போன்றது, ant-lion —Myremeleon formicarius. It forms for itself in the sand a round or funnel-shaped pit, at the bottom of which it conceals itself. If any unwary insect or ant approach the cage of the pit, the loose soil gives way and it tumbles down to be seized by ant-lion. Should it try to escape, it throws up a small shower of sand which seldom fails to bring it down. The legs are so fixed that it can walk only backwards. It resembles dragon-fly.

குழியில் வைத்தல், புதைத்தல், burying as the dead; 2 மருந்தைப் புடக் குழியில் வைத்தல், placing a medicine in a pit for purposes of calcination; 3. மருந்தை வேக மடங்கும்படி குழியில் புதைத்தல், concealing a medicine in a pit for a period of time to bring it to the best state or to make it fit for use.

குழி வண்டு, குழியில் வசிக்கும் வண்டு beetle living in holes under ground.

குழி வாளை, குழி விழும் ஓர் கிரந்திப் புண், a kind of syphilitic ulcer with a cavity or depression in the centre.

குழி விரணம், see குழிப் புண்.

குழி விழுதல், பள்ளமுண்டாதல். இது வாதத்தினால் ஏற்பட்ட செய்கை. இதனால் கண், கன்னம் முதலிய விடங்களில் குழி விழும், formation of cavity or depression. It is a disease due to the derangement of the humour (wind); and is marked by sunken eyes, hollow cheeks etc; 2. உச்சிக் குழி விழுதல், a disease in children followed by depression of fontanelle.

குழிவு, குழிதல், hollowness; depression; cavity.

குழி வேர், பூமிக்குள் புதைந்த வேர், root buried under the earth.

குழுக் கடா, காட்டெருமை, wild buffalo.

குழுதி, கிரகப் பூச்சி, a kind of insect.

குழு முரல், ஓர் மீன், a kind of fish.

குழு மேதி, see குழுக் கடா.

குழுமைக் கட்டி, கூகைக் கட்டி அதாவது பொன்னுக்கு வீங்கி, a disease consisting of inflammation of the salivary glands with swelling along the neck—Mumps or Parotitis; 2. சைத்தியக் கட்டி, a tumour or swelling of the tonsil from cold.

குழை, மயிர், hair; 2. தளிர், tender leaf foliage; 3. நெய்தல், white Indian water-lily—Nymphaea lotus; 4. துளை, hole; 5. காடு, jungle; forest; 6. காது, ear; 7. ஆகாயம், sky; 8. குழாய், tube; pipe.

குழைக் கறி, வெந்து குழைந்த கறி, overboiled curry 2. சமைத்து மத்தினால் கடைந்தெடுத்த கறி, boiled curry violently agitated with a staff and beaten into a pap or paste.

குழைச் சரக்கு, நாட்பட்ட சார மில்லாச் சரக்கு, drug rendered useless from its being kept long.

குழைச்சி, புற்றுஞ் சோறு, comb of white ant's nest; 2. குங்கும பாஷாணம், a kind of red arsenical compound.

குழைச்சு விடுதல், மூட்டுகள் விலகல், getting disjointed; 2. மூட்டுத் தளர்தல், loosening or seperation of the joints; 3. மூட்டு பிசகல், getting dislocated.

குழைதல், பத மழிதல், being over-boiled as rice; 2. வளைதல், becoming flexible as body; 3. நெகிழ்ந்து ஒன்றுதல், being mashed; being reduced into a pulp; 4. இளகல், becoming soft and tender from moisture; 5. வாடுதல், fading as flowers do; 6. தளர்தல், being tired as children; 7. மனம் வருந்தல், being troubled in mind; 8. கூழாய்ப் போதல், becoming a pap; being reduced to a pap.

குழைத்தல், தளிர்த்தல், sprouting; 2. இளகுவித்தல், causing to melt; 3. ஒன்றுயக் கலத்தல், triturating with water; 4. குழையும்படிச் செய்தல், causing to be over-boiled; 5. சூரணத்தைத் தேன், நெய்விட்டுக் கலத்தல், mixing a medicinal

powder with honey or ghee as to render it soft and palatable; 6. கூழாகச் செய்தல், reducing to a pulp; 7. தண்ணீர் அல்லது திரவமாககல, reducing to a liquid; liquefaction.

குழை நாற்றம். அழுகிய இலை நாற்றம், rotten smell of a leaf.

குழைந்த சோறு, அதிகமாக வெந்து குழைந்த சோறு. இதனால் சடாக்கினி பல வீனப்படும். over-boiled rice; rice boiled to a pulp, which is supposed to weaken the gastric fire in the system.

குழைந்த நீர், இளநீர், water of a tender cocoanut.

குழைந்த பதம், அழிந்த பதம், over-boiled condition.

குழைந்த வன்னம், see குழைந்த சோறு.

குழைப் பாசி, இலைப்பாசி, large-leaved moss —Lemma obcordata.

குழை யடித்தல், வேப்பிலை யடித்து நோய் தீர்த்தல், effecting a magical cure by treating with leaves of margosa twigs which are simply passed over the body repeatedly when chanting appropriate mantrams.

குழைய வடித்தல், சிறிது இளக்கமாக சோறு வடித்தல், boiling down rice so as to be soft when eating.

குழையற் கறி, வெந்து குழைந்த கறி, curry over-boiled and reduced to a pulp.

குழையற் பனாட்டு, துவைந்த பனம்பழச்சாறு palmyra fruit jelly.

குழைவா யிருத்தல், மெதுவா யிருத்தல், being soft.

குளக பயம், முட்டுளசி, prickly basil; 2. சுணை யுள்ள துளசி, bristly or sharp basil.

குளகம், மரக்கால், a standard Madras measure for food grains; 2. ஆழாக்கு, liquid measure of ⅛ nali.

குளகன், இளவயதுள்ளோன், a young man; an adult.

குளகு, இலைக் கறி, vegetable greens; 2. கீரை, garden greens.

குளகுளத்த புண், அழுகிய புண், putrid or rotten sore.

குளகுளத்தல், நெகிழ்ந்து ஒன்று படல், being reduced into a pulp; 2. அழுகல், growing rotten; 3. பழுத்து மெதுவாதல், getting soft by being over-riped as fruit or abscess.

குள குளவெனல், நெகிழ்ந்த தன்மை, the state of being over-riped: over boiled condition.

குளக் கமலம், வைப் பரிதாரம், a prepared orpiment.

குளக் கரையில் வசித்த சத்தி, சத்தி சாரணை, spreading hogweed—Boerhavia repens.

குளக் கிழாத்தி, ஓர் ஆற்று மீன். இது பளபளப்பாயும் சிலவாய், தலைப்புறம் மஞ்சள், வாய்ந்த தாயு மிருக்கும்; சுமார் 4 அடி நீளம், mud-jelly — pangasius bunchanani. It is glossy, yellow at its head; about 4 ft. long.

குளக் குரிமை யாசான், செம்பருந்து, red kite or rufus kite—Haliastur indus.

குளக் குருவி, நண்டு, crab living in tanks; 2. ஆற்று நண்டு, river-crab.

குளக் கெழுத்தி, see குளக் கிழாத்தி, 2. ஓர் வகை மீன், macrones.

குளக் கொட்டி, குளத்தில் முளைக்கும் கொட்டிக் கிழங்கு. இது குளத்தில் முளைப்பதாலிப் பெயர் small bulbous root of an aquetic plant — Apnogeton monostachyum. It is so called from its being commonly found growing in tanks like water-lily.

குளக் கோரை, குளத்தில் முளைக்கும் கோரைப் புல், a species of sedge-grass found in tanks.

குளங் கத்தும், விஷப் பாலை, a kind of milky plant (Mimusops) used as an antidote to snake-bite. C. f. கருடப் பாலை.

குளங்கி, குன்றி, snake fruit — Elaeagenus latifolia.

குளசு, கை, கால் எலும்பின் மூட்டு அல்லது பொருத்து, as கை குளசு, காற் குளசு, the inward joints of the moveable bones in hands and feet; 2. பவளப் புற்று, a kind of prepared arsenic.

குளச் சம்பு, குளத்து நத்தை, இது பத்தியத் திற்குதவும், tank snail useful in diet.

குளச் சிப்பி, குளத்திலகப்படும் சிப்பி, oyster-shell found in tanks; bivalva shell-fish.

குளச் செந் நெல், குள நெல், a kind of paddy growing spontaneously in tanks.

குளஞ்சி, கிச்சிலி, Shylet orange; 2. சருக்கரை, sugar: 3, குளரி, wild olive — Elaeagenus latifolia.

குளத்தி, நாறு கரந்தை, Indian globe - thistle —Sphoeranthus indicus: 2. சிவ கரந்தை, Ceylon toolsy — Spoerenthus amaranthoides.

குளத்தியா, கொடி முந்திரிகை, grapes—vitis vinifera.

குளத்தி லமர்ந்த மரத்தி, நாக சிங்கி, a tree supposed to be found growing in tanks.

குளத்தில் நிற்கும் துளசி, see இரத்த மண்டலிப் பூடு.

குளத்துக் கிழங்கு, see குளக் கொடி.

குளத்துக்குப் போதல், மலங் கழித்தல், going to stool: answering the calls of nature.

குளத்துக் குருவி, see குளக்குருவி.

குளத்துக்குள் குறத்தி, நீரறளி, water gannaire—Polyganum genus: 2. வல்லாரை. Indian pennywort—Hydrocotyle asiatica.

குளத்துக்குள் ருத்திராட்சம், நத்தை, snail.

குளத்துக் கோரை, see குளக் கோரை,

குளத்துச் சிப்பி, கிளிஞ்சல், bi-valve shell See குளச் சிப்பி,

குளத்துத் திடல், கிளிஞ்சில், bi-valve shell so called from its being found on or collected from tank beds. See குளத்துச் சிப்பி.

குளத்து நண்டு, குளத்தில் வசிக்கும் நண்டு, pond-crab — Potamon.

குளத்து நீர், குளத்துத் தண்ணீர், இது வாத ரோகத்தை விருத்தி பண்ணும், tank-water promoting rheumatism

குளத்துப் பாசி, குளத்தில் படரும் பாசி, moss or weed in tank-water.

குளத்துப் புட்பம், தாமரை, அல்லி, முதலியன, lotus, nymphae etc. growing in tanks:

குளத்து முட்டை, காட்டெரு. dried cow dung found in grazing plains or maidans.

குள நண்டு, see குளத்து நண்டு.

குள நாவல், கொடி நவ்வல், creeper jaumon.

குள நெல், குளத்து நீரால் பயிராகும் நெல், paddy grown by irrigation with tank-water; 2. பயிரிடாது தானுகவே குளத்தில் வளரும் நெல், paddy growing spontaneously without cultivation — Oryza mutica. See நீவாரம்.

குள நெல்லி, sea குள நெல்.

குளப் பச்சை, see குளத்துப்பாசி.

குளப்படிக் கோரை, குளக் கரையில் கலங்கி நிற்கும் தண்ணீரில் முளைத்த கோரை, sedge grass growing in a pool of dirty water or muddy plash on the shore of a tank: C. f. குளத்துக் கோரை.

குளப்படி நீர், குளம்பு படிந்த சுவட்டில் தேங்கிய நீர், turbid water deposited in hoof marks.

குளப் பன்னிவை, காட்டுக் கொஞ்சி, opal orange tree — Glycosmis pentaphylla.

குளப் பயறு, குளத்தின் தண்ணீரால் உண்டாகும் பயறு, pulse or grains grown with the aid of tank - water.

குளப் பற்று நெல், see குள நெல்.

குளப் பாகல், மிதி பாகல், ground pagal creeper, Balsam pear—Mimordica humilis.

குளப் பாலை, குடசபாலை, அல்லது கசப்பு வெட்பாலை, consesi bark — Holarrhena anti-dysenterica; 2: வாசிப் பாலை, rosy milk-wort — Asclepias rosea: 3. பழ முண்ணிப் பாலை, edible paulay — Mimosops kanki.

குளப் பாலை இலை, கசப்பு வெட்பாலை யிலை, leaves of bitter oleander — Holarrhena anti-dysenterica

குளப் பாலை விதை, கசப்பு வெட்பாலை விதை, இதனுல் சுவாச காசம், பக்க சூலை போம், seeds of bitter oleander which is prescribed for asthma and intercostal neuralgia.

குளப் பூ, ஓர்வகை முட் செவ்வந்தி அல்லது ரோசாப் பூ, Damask Persian rose—Rosa Damacena.

குள மச்சம், கோரை, sedge-grass — Cyperus rotundus.

குளமருது, ஆற்று மருது; நீர் மருது, narrow-leaved myrobalan of Travancore — Terminalia travancorensis alias T. arjuna.

குள மீன், குளத்து மீன். இதை புண்ணை சுரம பாண்டு குணப்படும், tank-fish; pond-fish. It is useful in diet in cases of fever and dropsy.

குள மூடிகம், முன் தொட்டி, an unknown plant supposed to possess magic virtue.

குளம், தடாகம், pond, tank; 2. வெல்லம், jaggery; 3. சர்க்கரை, coarse sugar; 4. நெற்றி, forehead.

குளம்படி, குதிரை, ஆடு, மாடு, கழுதை முதலியவற்றின் பாதம், the hoofs of horse, sheep, cattle, ass etc. See குதிரைக் குளம்படி.

குளம்பல், சந்தனக் குழம்பு, semi-solid sandal paste.

குளம்பு, மிருகத்தின் பாதம், hoof of an animal; 2. see குதிரைக் குளம்படி.

குளம்புக் களிம்பு, குளம்பிற்குப் பூசு மருந்து, ointment for hoofs; 2. மிருகத்தின் குளம்பினின்று தயாரிக்கும் களிம்பு, ointments prepared from hoofs of animals.

குளம்புச் சிலந்தி, குளம்பிலுண்டாகும் சிலந்தி ulcer or sore of the hoofs in animals.

குளம்புச் சீவல், துண்டு துண்டாகச் சீவியெடுத்த குளம்பு, thin slices pared off hoofs.

குளர்த்தம், see கற்பாஷாணம்.

குளவஞ்சி, வஞ்சிக் கொடி, slender rattan —Calamus rotang.

குளவடம்பு, குளத்திற் காணப்படும் அடப்பங் கொடி, a creeper of the convnlus genus found in tanks.

குள வட்டை, நீரட்டை, leech breeding in tanks.

குளவரகு, குளத்தங் கரையில் பயிராகும்வரகு, Indian millet grown on tank-beds—Panicum miliaceum.

குள வல்லி மா, கமு தாழை. wind-killer—Cleodendron phlomoides.

குளவாம்பல், குளத்தில் முளைக்கும் ஆம்பல், white Indian water-lily found in tanks —Nymphaea lotus.

குள வாழை, ஓர் மட்ட நெல், a coarse paddy grown in tank-bed: 2. புளி மாங்காய், narrow medium leaved gamboge—Garcinia wightii

குளவி, செங்குளவி, இது சிவப்பு நிறம், வீட்டின் மரம் அல்லது சுவற்றின் துவாரங்களில் களி மண்ணால் கூடுகட்டி, அதில் புழுவைக் கொண்டு வந்து துணித்து அதனுள் தன் முட்டைகளை ஏற்றி, பிறகு களி மண்ணால் மூடி ரீங்காரம் செய்து, தன்னினமாகச் செய்யும். ஆகவே, புழுவானது குளவியாக மாறி நான்கு சிறகு களோடு வெளிப்படும், Stinging wasp — Sphegidae insecta. It is distinguished by its dark red metallic lustre. It introduces its eggs into the body of the pupa of some other worm which it thrusts into the holes in timber or other apertures of houses; and encloses the whole with moisened earth. By the humming noise of the wasp, the young insect, after undergoing its transformations, find its way into light and emerges as a four-winged fly.

குளவி, மலைப் பச்சை, Indian cork—Millingtonia hortensis; 2. see காட்டு மல்லிகை, 3. ஓர் வண்டு, carpenter bee — Xylocopa tenisocapa; 4. பச்சிலை மரம் அல்லது மலைப் புளி, mysore gamboge — Garcinia Xanthochymus; 5. சதுரக் கள்ளி, square-spurge — Euphorbia quadrangularis; 6. பவழப் பற்று பாஷாணம், a kind of prepared arsenic; 7. தேன் பூச்சி, bee; 8. see கருங்குளவி; 9. ஓர் மல்லிகை, a kind of jasmine — Jasminum flexile.

குளவிக் கூடு, குளவி கட்டின கூடு, இதைத் தேனில் குழைத்துக் கொடுக்க வாந்தியை நிறுத்தும், wasps nest, which, when given mixed with honey, stop vomiting.

குளவிக் கூண்டு கஷாயம், குளவிக் கட்டிய கூண்டின் களிமண்ணை தண்ணீரில் போட்டு இறக்கிய கஷாயம். இது விக்கலை நிறுத்தும். decoction prepared from the clay with which the wasp made its nest. It has the virtue of arresting hiccough.

குளவிக் கொட்டு, குளவி கடித்தல், the sting of wasp.

குளவித் தேன், குளவி கட்டுந் தேன், honey extracted from bee-hive.

குள விந்தம், கஸ்தூரி மஞ்சள், which see.

குளவி மண், குளவி கூடு கட்டிய மண், the clay with which wasps make their nests.

குளவி மெழுகு, குளவிக் கூட்டின் மெழுகு, bees-wax.

குளவுரி, சந்தனம், sandal-wood — Santanum album.

குள வெள்ளரி, ஏரியில் பயிரிடும் வெள்ளரி, cucumber cultivated in tank bed.

குளறி, மூகைப் புல், couch-grass. — Cynodes dactylon; 2. see குளங்கி.

குளறிப் பேசல், தடுமாறிப் பேசுதல், indistinctness of utterance especially due to cleft-palate.

குளறுதல், குடிபோதை அல்லது பயத்தினுல் உளறுதல், stammering through drunkenness or fear.

குளறு வாய், நாக்குக் குளறும் வாய், mouth with faltering tongue; faltering speech; 2. குளறிப் பேசல், defective utterance.

குளம்பல், see குள வாம்பல்.

குளி, இரத்தக் கத்தரிப் பாம்பு, a kind of red scissor viper.

குளிகம், மருந்தின் பொது, medicine in general.

குளிகன், ஓர் காணுக் கோள். இதை சனி புத்திரனுகக் கொள்ளப் படும், an invisible planet, the supposed son of Saturn; 2. அஷ்ட நாகங்களுள் ஒன்று, one of the eight serpents.

குளிகா சித்தி, see குளிகை சித்தி.

குளி குளித்தல், பிரசவித்தல், bringing forth child.

குளிகை, மாத்திரை அல்லது பந்து போற் திரட்டிய பெரு வுருண்டை, இது மருந்து அல்லது அருவருக்கத்தக்க வேறு விதமான வஸ்துவை ஒக்களிக்காது கபளமாய் விழுங்கக் கூடிய அளவில் உருண்டை வடிவமாகத் திரட்டிய வஸ்து, a small ball or pill or sometimes a bolus of medicinal or any disagreeable substance made into a size convenient to be swallowed whole, without nauseation; 2. மாத்திரையைப் போற் செய்த சிறிய வஸ்து. any small pill-like body.

குளிகை, சாதாரணமாக மூலிகைக் கஷாயத்தை குழம்பாகக் காய்ச்சிப் பிறகு, அதில் மருந்து சூரணத்தை யிட்டுக் கிளரி உருண்டையாகச் செய்யும் மாத்திரை; அல்லது மருந்துச் சூரணத்தில் சர்க்கரைப் பாகு அலலது தேன் விட்டுப் பிசைந்து செய்யும் மாத்திரை, (in medicine) pill which are generally made or usually prepared by boiling down a decoction of herbs or other vegetable substances to a thick consistence: and then adding to it some powdered drugs: or pill - masses which are made of powdered medicines by the addition of treacle or honey.

(A) சித்த வைத்தியப்படி, accordine to Siddha system of medicine:—

1. மேகநாதக் குளிகை, Pill made as per process of Sootha Muni, for dyspepsia, dropsy and consumption.
2. செய ரச கற்பூரக் குளிகை, Pill prepared according to the method of Kalluli Siddha, for chronic diarrhoea and indigestion.
3. சிலோதரிக் குளிகை, Pill contemplated in the works of Ugi Muni, for all kinds of fever.
4. சூடாமணிக் குளிகை, Pill as per process of Veda Muni, for Ague, Apoplexy, Delirium etc.
5. சிரோன்மணி பூபதிக் குளிகை, Pill as given out by Pambatti Siddha, for apoplexy, chest pain fatigue etc.
6. இராம பாணக் குளிகை, Pill described in Theriyar works, for all kinds of fever.
7. சகல விஷக் குளிகை, an antidote pill prescribed by Nandisar, for all kinds of poisoning and poisonous bites.
8. கருக் குளிகை, Pill from the works of Konganava for uterine diseases.
9. சிவ குளிகை, the one prescribed by Agastya for morbific diathesis in children.
10. கோடாசனிக்குளிகை, pill described in Bogar's work for dropsy and chronic diarrhoea.
11. சந்திரோதயக் குளிகை, pill contemplated in the work of Kuthambai Siddha for fever and apoplexy.

(B) ஆயுர் வேதப்படி, according to Ayur veda:—

1. ஏகாதச ருத்திர குளிகை, Pill for typhoid fever.
2. கோரோசனுதிக் குளிகை, Pill for children's diseases.
3. தாகசோப சமன குளிகை, Pill for fever and typhoid.

4. *சிந்தாமணிக்* குளிகை Pill for constipation.

5. *திரிலோக சிந்தாமணிக்* குளிகை, pill for typhoid.

6. *வசந்த குசுமாகரம்*, Pill prescribed for diabetes.

7. *கதிராதிக்* குளிகை, Pill for asthma.

8. *வியோஷாதிக்* குளிகை, Pill for asthma, catarrh, fever etc.

9. *பிப்பிலியாதிக்* குளிகை, Pill for thma and cough.

10. *இரசாதிக்* குளிகை, Pill for rheumatic complaints.

11. *வச்சிரகண்டிக்* குளிகை, a pill prepared according to the method of Pathanjali for tremor, fatigue, etc.

12. *பூரண சந்திரோதயக* for nervous debility and for various other kinds of nervous disorders.

2. வாதம், யோகம், ஞானம், கற்பம் முதலிய பழக்கங்களில் சித்தியடைய வேண்டித் தயாரிக்கப்பட்ட மாத்திரைகள். ஆகலின், இவை இரச கந்த பாஷாணம், உப்பு முதலிய ஓடுஞ் சரக்குகளைக் கட்டவும், கவனம் பாய்வதற்காக வாயி லடக்கவும், இறந்தவரை எழுப்புவதற் காகவும், காய சித்திக்கும் மற்று வேறுவிதசெயல்களுக்கும் உபயோகப்படும். இதில் அடியிற் கண்டபடி அனேக விதங்களுண்டு. (In Philosophy) pills made so as to be useful in Alchemy, Yoga, Philosophy, Rejuvenation etc. They are used for purposes of consolidating volatile substances as mercury, sulphur, arsenic, salt etc., for flying in the regions of the sky, for reviving the dead, for rejuvenation and for various other purposes. They are of different kinds as shown under:—

1. *சித்தர்* குளிகை, pills made of different kinds of arsenic (prepared or native) or of other minerals.

2. *மந்திரக்* குளிகை, pill made of herbs possessing occult powers.

3. *இரசக்* குளிகை, consolidated mercurial pill.

4. *இரசவாதக்* குளிகை, pill used in Alchemy for transmuting metals.

5. *வச்சிரக்* குளிகை, pill used for rejuvenating or invigorating the human system.

6. *தம்பனக்* குளிகை, a magical pill by which the body is made a shot-proof or impenetrable.

7. *பூபதிக்* குளிகை, a pill for reviving the dead so as to make them live only for a period of 1½ hours.

NOTE —This kind of revival is said to be possible even with the help of magnetised electricity.

8. *மவுன* குளிகை, a pill enabling one to enter into Silence.

9. *யோக* குளிகை, a pill that assists one to sit at Yoga practice for a long time at a stretch without being disturbed by surrounding environments.

10. *ஞான* குளிகை, a form of pill assisting one in the bath of wisdom.

11. *பிராணாய* குளிகை, pill securing success in the practice of Pranayama i. e. control of breath.

12. *வாலை கேசரிக்* குளிகை, pill lifting one to the etheric regions of the sky.

13. *அஷ்டமா சித்திக்* குளிகை, a beculiar pill enabling one to attain success in the performance of the eight miracles. See *அஷ்டமா சித்தி*.

14. *சித்திக்* குளிகை, see No. 13.

3. *சாரணைத் தீர்ந்த கவுன* குளிகை. இதனால் ஆகாயத்தில் பல அண்டங்களுக்கும் பறந்து செல்ல சக்திகள் ஏற்படும், சித்தர்கள் நூலின்படி, இது அனேக விதமாகத் தயாரிக்கப்படும். விவரத்திற்கு கவுன குளிகையின் கீழ்ப் பார்க்கவும், (In Alchemy) animated mercurial pill enabling one to travel to various planets in the region of the sky. According to Siddhar's science, different are the methods or processes of the manufacturing these pills which are known by different names corresponding to the number of times they are animated.

For details see under கவுன குளிகை

குளிகை கட்டிச் சாரணை தீர்த்தல், இரசத்தைக் குளிகையாகக் கட்டிப் பிறகு உயிர் கொடுத்தல், the process of consolidating mercury into a pill and then animating it.

குளிகை கட்டுதல், மாத்திரை செய்தல், preparing pills: 2. இரச குளிகைக்குச் சாரணை தீர்த்தல், animating mercurial pill; 3. நோயணுகாமற் படிக்கும் கவுனம் பாய்வதற்கும் சித்திக் குளிகையை உடம்பில் கட்டிக் கொள்ளுதல், tying a magic pill on the body to prevent diseases or for flying in the aerial regions or; 4. இரசத்தை மாத்திரையாகக் கட்டுதல், consolidating mercury into a pill.

குளிகை கலை, சந்திர கலை the vital air (prana) passing through the left nostril.

குளிகை கூட்டுதல், குளிகையாகச் செய்தல் making into a pill.

குளிகைக் கூட்டுதல், (குளிகைக்கு + ஊட்டுதல்) குளிகைக்கு சாரணை யூட்டல், animating or giving life to mercurial pills.

குளிகைக் கோடிடல், (குளிகைக்கு + ஓடிடல்) குளிகைக்கு உரையிடல், giving a coating to pills.

குளிகை சாரணை, குளிகைக்குக் கொடுக்கும் அல்லது ஏற்றும் சாரணை அல்லது சத்து, the essence or the active principle of other substances transferred to mercurial pill.

குளிகை சித்தர், சித்தரில் தேரியவர்கள், skilled man amongst Siddhars, who could perform miracles; 2 இரச குளிகையைக் கொண்டு கவுனம் பாயும் சித்தர்கள், Siddhars skilled in or capable of flying in the sky with aid of animated mercurial pill.

குளிகை சித்தி, இரச குளிகைக்குச் சாரணை தீர்ப்பதில் அடையும் சித்தி success attained in the art of giving life to or animating mercurial pills

குளிகை பாடம், இரச குளிகையைத் தயாரிக்கும் விதத்தையும் அதற்குச் சாரணை கொடுக்கும் விதிகளையும் பற்றிய நூல், a treatise on the method of preparing mercury pills and the principles to be observed in giving life to them; 2 இரசக் குளிகைக்கு இட்ட சாரணை, animation imparted to mercury pill.

குளிகை போடல் இரசக் குளிகையை வாயிலடக்கிக் கொள்ளுதல், securing a mercurial pill in the mouth: 2. அபினி உட்கொள்ளல், swallowing opium pill,

குளிகைப் போக்கு, சாரணை தீர்ந்த குளிகையின் தன்மை வேகம் முதலியன, the nature, or power etc. of an animated mercurial pill.

குளிகை மணி, இரச மணி, which see.

குளிகை யந்திரம், மருந்து மாத்திரைகள் செய்யு மோர் கருவி, a machine for preparing pills.

குளிகை யாடல், சாரணை தீர்ந்த இரசக் குளிகையை வாயிலடக்கிக் கொண்டு கவுனம் பாய்தல் அதாவது ஆகயத்தில் வாயு மார்க்கத்தில் பறத்தல் flying in the atmospheric or aerial region by securing in the mouth the animated mercurial pill; 2. அண்டம் பாய்தல், flying in the etheric region from one planet to another with the aid of mercurial pills.

குளிகை யாட்டல், மாத்திரை, செய்தல், making or preparing pills.

குளிகை யிடுதல், துடை அல்லது உடம்பில் எவ்வுறுப்பையாவது கீறி, அதற்குள் சித்தியடைந்த இரசக் குளிகையை வைத்து மூடுதல், inserting or imbedding a mercury pill having a desired effect, into the thigh or any muscular portion of the body through an incision, so as to attain supernatural powers; 2. இரச மாத்திரையை வாயிலடக்கல், securing a mercurial pill in the mouth.

குளிகை யோட்டம், see குளிகை வேகம்.

குளிகை ரகசியம், இரசக் குளிகை தயாரிப்பதற்கு குரிய மறைவான முறை, விதி முதலியவைகள், the secret seience and the art of making or preparing a mercurial pill.

குளிகை வேகம், குளிகையின் வேகம், the dynamic force or power of mercurial pill.

குளிகை வேதை, இரசக் குளிகையாகக் கொண்டு செய்யும் வாதம், The art of making gold with the aid of consolidated mercurial pill.

குளிசங் கட்டல், தோஷங்களை நிவர்த்தி செய்ய வேண்டி தாயத்துமந்திரித்துக் குழந்தை அல்லது பெண்களுக்கு உடம்பில் கட்டுதல், tying an amulet to a child or woman after performing necessary cermonial rites and chanting of mastrams so as to be free from morbid affections.

குளிச தோஷம், பிள்ளை யில்லாத மலட்டுப் பெண்கள் கர்ப்பம் அடையவேண்டி குளிசங் கட்டிக் கொள்ளும் பொழுது, அவ்விடத்தில் எதிர்ப்பட்ட குழந்தைகளைத் தாக்கும் தோஷ நோய், a morbific diathesis in children occuring as a result of a sudden or accidental meeting of a barren woman when an amulet is tied on her body for purposes of favouring pregnancy.

குளிச மாடல், மந்திரித்துத் தகடு எழுதிக் கட்டல். இது நோயாளிகளுக்கும், பேய் பிசாசு பிடித்தவர்களுக்கும் சிகிச்சை யாகச் செய்வதுண்டு tying a talisman or an amulet after necessary incantations. It is done in the case of persons suffering from diseases or from ths evil influnce of *demons, devils or other spirits.*

குளிசம், சக்கரம் அல்லது கோடுகள் கீறி அதனுள் மந்திர வெழுத்தை யடைந்துள்ள செம்பு அல்லது உலோகத் தகடு. இது பேய், பிசாசு, பிடித்தவர்களுக்கும், நோய் அல்லது பில்லி, சூனியத்தால் பீடிக்கப் பட்டவர்களுக்கும், அவைகளினின்று விடுதலை யடையும் வண்ணம் கட்டப்படும், a copper or other metal plate having some diagrams or lines inscribed or drawn on it with some sacred letters filled in the appropriate places — Amulet. It is usually tied to or worn by persons said to possess devils or other evil spirits or any patient suffering from any illness or by the victims to sorcery, witch-craft etc.

NOTE—It may be even a stone, ring or other object engraven with figures of characters, to which are attributed the occult powers of the planetary influences and celestial configurations under which it was made. It is also worn to avert evil from or bring fortune to the wearer; and is used medicinally to impart healing virtue; and is even held to be endowed with magic virtues, Hence it acts as a charm or a medium by which extraordinary results are achieved.

2. பாம்பாட்டிகள் அல்லது மாந்திரிகர் உடம்பில் அணிந்து கொள்ளும் வேரடங்கிய தாயத்து. இதை விஷத்தை யிறக்கு வதற்கும், அல்லது விஷம் தன்னைத் தாக்காத படிக்கு காத்துக் கொள்வதற்கும் உபயோகப் படுத்துவார்கள், a root inclosed in any metal and worn on round the neck or other parts of the body by snake-charmers and magicians, for purposes of freeing patients from the effects of poison or for guarding themselves against the attack of poisonous reptiles or getting freed from their injurious or dangerous reactions; 3. மூலிகையின் சாப நிவர்த்திக் காகவும் அல்லது அதன் பூரண குணத்தைக் காண்பிக்கவும், மந்திர பூர்வமாக பூண்டு அல்லது செடிகளுக்குக் காப்புக் கட்டுதல், magical rites performed for purposes of freeing plants from the effects of curse or other defects; and for enabling them to give full medicinal efficacy.

குளி சீலை, நீர்ச் சீலை அல்லது கோவணம், a piece of cloth worn ordinarily by Hindus during bath to cover their genitals.

குளி தேவதாரி, சுணையுள்ள தேவதாரி மரம் a kind of bristly deodar — Erythroxylon *genus.*

குளி தைலம், தலையில் தேய்த்துக் கொண்டு குளியலாட உபயோகிக்கும் தைலம், a medicinal oil used for anointing the head and even the body before having a bath. It should not be confounded with குழித் தைலம், which is a medicinal oil so called by the process adopted in its preparation.

குளி தோஷம் தூரப் பெண் மூன்றாம் நாள் குளித்தவுடன் வெறும் வயிறோடு பார்ந்தனினால் குழந்தைகளைத் தாக்கும் தோஷ நோய், a *morbid diathesis in children* arising from their being looked at, by a woman with an empty stomach, immediately after her bath on the third day of menstruation.

குளித்தல், ஸ்நானம் செய்தல்; நீராடல், இதனால் சோம்பல், உடம்பு சூடு ஆயாசம், முதலியன நீங்கும், having a bath; bathing removes lethargy, bodily heat, sense of fatigue etc; 2. தூரமாதல், menstruating.

குளித்தவ னெடுத்ததோஷம் தூரப்பெண்கள் குளித்தவுடன் ஏதேனும் முன்னதாக அருந்தாமல் வெறும் வயிற்றோடு தூக்குதலினால் குழந்தைகளுக்கு ஏற்படும் தோஷ நோய், malignant influence to which a child is subjected consequent on its being handled by a menstrued woman after her bath and with an empty stomach i. e. without eating anything.

குளித் தாமரை, see குளிர் தாமரை.

குளித்திப் பூடு, see குதிரைக் குளம்படி.

குளித்தி வாதம் கை கால் உளைந்து, வயிறு பொருமி விம்மி, வலித்து, அனலைத் தேடும், ஓர் வாதம், a kind of nervouse affection characterised by boring pain in the limps, rumbling noice in the stomach, swelling and pain with a craving for warmth.

குளித் தைலம், see குழித் தைலம்; 2 நீராடும் தைலம், any oil for anointing the head before taking a bath, as gingelly oil or any medicinal oil.

குளிப் பச்சை, ஆற்றுப் பச்சை an inferior variety of green stone forming one of the 120 kinds of natural substances described in Tamil Medical science.

குளிப் பாட்டல், நீராட்டுதல், giving a bath.

குளிப் பித்தல், ஸ்நானம் செய்வித்தல், causing to bathe.

குளிப்பு நீராடுகை, bathing.

குளி மீட்டான், குழி see மீட்டான்.

குளியம், மருந்தின் பொது, medicine in general; 2. உண்டை, ball; 3. புலி tiger.

குளிய லாட்டல், see குளிப் பாட்டல்,

குளியாம லிருத்தல், குளிய லாடாம லிருத்தல், remaining without having a bath; 2. கருப்பமா யிருத்தல், being pregnant,

குளிரப் பண்ணல், குளிர்ச்சி யடையும்படிச் செய்தல், cooling; refresing.

குளிரம், நண்டு crab; lobster.

குளிரி, நீர்க் குளிரி அல்லது நீர்ச் சேம்பு, water archer — Sagataris obtufolia alias Damasonium indicum; 2. பீலிக் குஞ்சம், pea-cock feather fan.

குளிரிகம், பூவரசு, portia tree — Thespesia pepulnae.

குளிர், குளிர்ச்சி, coldness; 2. சிறு சிலிர்ப்பு, chillness: 3. சுரத்தில் வரும் நடுக்கத்தோடு கூடிய குளிர், cold attended with tremor in fever — Ague; 4. பனிக் காற்று, chill weather in dewy season; dewy wind; 5, நண்டு, crab; 6. நடுக்கம் trembling; rigor.

குளிர் காணல், குளிரால் தாக்குண்டல், being attacked with cold; 2, சீதள மடைதல் catching cold; 3, உடம்பு சில்லிடல், becoming chill as body in cases of delirium, apoplexy, cholera etc.

குளிர் காந்தி, சந்திர காந்தி, a flowering plant that turns towards the moon — Moon flower — Ipomaea fonanax.

குளிர் காய்ச்சல், குளிரோடு காணும் சுரநோய் அதாவது சீத சுரம், fever attended with or accompanied by cold and shivering — Ague; 2. வாத சுரம், fever born of the excitement of wind (humour).

குளிர் காய்தல், வெயிலிற் கிடத்தில், enjoing the warmth of the sun; basking; 2. நெருப் பண்டையிருந்து உடம்பை சூடாக்கிக் கொள்ளல், warming oneself at the fire or fire-place; being exposed to genial heat.

குளிர் காலம், பனிக்காலம், dewy season; 2. மழைக்காலம் rainy weather.

குளிர்க்காற்று சீதளக் காற்று chill breeze; cold wind.

குளிர் கிருகம் திலக விருட்சம், peacock-flower fence—Adenanthera pavonia,.

குளிர் குளிரல், குளிரால் விறைத்தல், being benumbed with cold: 2. சீதளங் கம்மி உடம்புச் சில்லிடல், being attacked with chillness of the extremities, as a dying person in cholera.

குளிர் கொள்ளல், சீதளமடைதல், becoming chill; 2. குளிரால் வருந்தல், suffering from cold,

குளிர் கோலனிகம், பூனைச் செடி, woolly herb; under shrub—Acrua genus.

குளிர் சன்னி வாதம், வாத சீதள சன்னி, rheumatic fits.

குளிர் சுரம், சீதள சுரம், see குளிர் காய்ச்சல்.

குளிர்ச்சி, see இலுப்பை; 2. சீதளம் chillness; 3. பெண் காமக்கழிவு, ovarian discharge in females; குளிர்ச்சி தரு மருந்து, which see.

குளிர்ச்சிப் பண்டம், குளிர்ச்சி தரும் வஸ்து, cooling substance,

குளிர்ச்சி தரு மருந்து, cooling medicine — Refrigerant.

குளிர்ச்சித் தைலம், சந்தனாதியைப் போல தலைக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும் மருந்துத் தைலம், medicated oil affording cooling effects to the brain as sandalwood oil.

குளிர்ச்சியா யிருத்தல். சில்லென விருத்தல், being cool; 2. குளிர்ச்சியை உணர்தல், to feel refreshing.

குளிர் தாமரை see ஆகாச தாமரை.

குளிர் திகா, see கருங் கொள்.

குளிர்த்தி, see குளிர்ச்சி,

குளிர்த்திக் குடிநீர், தாகத்திற் கருந்தும் சில்லென விருக்கும் தண்ணீர், cool drink.

குளிர்த்திப் பூண்டு, see குதிரைக் குளம்படி.

குளிர் நடுக்கம், குளிரால் ஏற்படும் நடுக்கம், shivering from cold.

குளிர் நாவல், தேவ நாவல் மரம், a kind of superior jaumon tree.

குளிர் நீர், குளிர்ந்த நீர், chill water; cold water; 2. குளிர வைத்த நீர், boiled and cooled water. 3. இள வெந்நீர், luke-warm water; 4. பனிக் கட்டி நீர், பனி நீர், ice water; 5. பன்னீர், rose-water.

குளிர்ந்த காற்று, சல்லென்று அடிக்குங் காற்று, cold blast; chill breeze.

குளிர்ந்த கொல்லி, சிங்கி விஷம், a kind of killing poison.

குளிர்ந்த கொள்ளி, வெளிக்கு அமைதியாகவும், உள்ளே கொடுமை உள்ளவளுமான பெண், a mischievous woman appearing mild but cruel in her activities.

குளிர்ந்த பரிமளம், சிதாங்க பாஷாணம், a kind of native arsenic; 2. நறு மணம், fragrant smell.

குளிர்ந்த மணம், நறு மணம், see குளிர்ந்த பரிமளம்.

குளிர்ந்த ரத்தம், உறைந்த இரத்தம், clotted blood.

குளிர்ந்த வாயு, வாத வாயு, a disease connected with deflexion of humours; 2. சீதளக் காற்று, chill weather.

குளிர்ந்து கிடத்தல், குளிரால் உடம்பு விறைத்துக் கிடத்தல், lying benumbed with cold; 2. உடம்பு சில்லிடல், becoming chill as the body of a dying person.

குளிர்ந்து கொல்லி, கொவ்வைக் கொடி, Indian caper—Coccinea indica; 2. சிங்கி பாஷாணம், as in 'சிங்கிக் குளிர்ந்தும் கொல்லும்' a killing poison though cold to the touch.

குளிர்ந்து போதல், சில்லிட்டுப் போதல், getting cold and stiff just before death.

குளிர்ந்து வருதல், சுரங் கொள்ளக் காணல், feeling feverish.

குளிர் பொறுக்காமை, குளிர் தாங்காமை, extreme sensitiveness to cold; intolerance of cold.

குளிர்ப்பு, see குளிர்மை.

குளிர் மாதி, கொத்த மல்லி, coriander.

குளிர்மை, சீதளம். chillness; 2. சலவை, a disease caused through cold; 3. குளிர்ச்சி, coolness.

குளிர்மைக் கட்டி, பொன்னுக்கு வீங்கி, swelling of the glands of the neck — Mumps. 2. சைத்தியக் கட்டி, swelling of the tonsils, 3. அழற்சி யில்லாமலே மெதுவாக எழும்பும் கட்டி, cold abscess.

குளிர்மையான, குளிர்ச்சியான, chilly.

குளிர்ப் பித்தல், தண்ணீர், வாசனை முதலிய வைகளால் குளிர்ச்சி செய்தல், refreshing with water. perfumes etc; 2. உடம்பின் உஷ்ணம் போக்கல், allaying the heat in the system.

குளிர்மை கொள்ளுதல், சீதளங் கொள்ளல். becoming chill as body; being attacked with cold.

குளிமை வந்தடுத்தல், வாந்தி பேதி, சுரம் முதலியவைகளால் உடலில் சீதளம் கம்முதல், becoming icy cold through disease such as, cholera, delirium etc.

குளிர் வாதம், குளிர்ச்சியா லேற்பட்ட நரம்பு வாதம், neurolgic pain as a result of exposure to cold; 2. குளிர் காலத்தி லுண்டாகும் வாத நோய், rheumatic affections due to exposure to cold in chill weather.

குளிர் வீக்கம். குளிரா லேற்படும் வீக்கம், inflammation or swelling caused in cold weather—Chilblain.

குளீரம், see குளிரம்.

குளுகுளுத்தல், முகம் வீக்க மடைந்திருத்தல் being swollen in face as in anemia, dropsy etc; 2. சோகை பற்றல், becoming anemic and weak.

குளுகுளுப்பை. சோகை, the state or condition of being pale; bloodlessness.

குளுத்தி, see குளிர்த்தி.

குளுத்தி மருந்து, உஷ்ணத்தைப் போக்கி குளிர்ச்சியைத் தரு மருந்து, a medicine which abates heat and cools the system—Refrigerant.

குளுத்தி யெண்ணெய், உடம்பின் வெப்பம் தணிவதற்காகத் தலைக் கிடும் தைலம் அல்லது உள்ளுக் குக் கொள்ளும் மருந் தெண்ணெய், a medicated oil used externally for anointing the head or taken internally for cooling the system.

குளுந்தை, ஓர் வகைக் கஸ்தூரி. இது கொள்ளைப் போலிருக்கும், a kind of musk resembling horse-gram.

குளுப்பை, பாண்டு அல்லது சோகையால்கன்னம் அல்லது முகம் ஊதுகை, swelling of the cheek or face through dropsy or anemia.

குளுப்பை தட்டல், நோயால் கன்னம் கதித்தல், becoming turgid through disease as the cheeks.

குளுப்பை பாய்தல், see குளுப்பை தட்டல்.

குளுப்பை முகம், அதைத்த முகம், bloated face.

குளுமை, குளிர்ச்சி, chillness; coolness.

குளுமை கொள்ளல்' நீர்க்கொள்ளல், catching cold.

குளுமை மூலம், இஞ்சி, ginger—Zingiber officinale.

குளுரி, see குளிரி.

குளுவை, நீர்ப் பறவை, water-bird.

குளேக் கன்னி, வட்ட வழுக்கை, a kind of moss.

குளேச்சு, நாலில் ஒரு பங்கு, one-forth.

குளேஞ்சி, see குளஞ்சி.

குளேயாள், பெண் காமக்களே, secretion from ovary in women.

குளோப்புக் கொன்னை, யானைப் புடுக்கு மரம், see ஆனைப் பிடுக்கு.

குள்ளக் குடைச்சல், ஆழ்ந்த வலி, deep-seated pain.

குள்ளக் குளிர்தல், அதிகமாக குளிர்ந்திருத்தல், being icy cold.

குள்ளக் குறுக்கம், மிகவும் குட்டை, very short in stature.

குள்ளக் கெண்டை, குறுங் கெண்டை, fresh-water carp—Barbus dorsalis.

குள்ளத் தண்டுக் கீரை, குப்பைக் கீரை, இது குப்பையில் முளைக்கும், Parrot spinach—Amarantus viridis. It grows on waste ground; 2. குருந்தண்டுக் கீரை, garden greens—Amarantus blitum.

குள்ளத் தாரா, குட்டையான வாத்து, a short duck—Anas domestica.

குள்ள நரி, குழி நரி, fackal—Vulpes bengalensis alias V hodgson.

குள்ள நரிக் குசு, திகைப் பூச்சி, an insect causing perplexity of mind when touched or otherwise come in contact with it.

குள்ளப்புடலை, தள்ளப் புடலங்காய், a short or stunted snake-gourd.

குள்ளம், குட்டை, short in stature; 2. தந்திரம், cunningness; fraudulent dexterity,

குள்ளம் பாய்தல், வயதின் மூப்பால் உடம்பு குறுகல், becoming diminished in stature through old age.

குள்ளன், குள்ள மானவன். இவன் ரூபம், அமைப்பு, தன்மை, முதலியவைகளைக் கருதி பல பெயர் கொண்டழைக்கப் படுபவன், a man of small stature, a dwarf. considering the size, stature, nature etc. he is called by different names viz:—

1. சித்திரக் குள்ளன், chondraplatic dwarf.
2. சிகண்டிக் குள்ளன், sezual dwarf
3. அலிக் குள்ளன், see No. 2.
4. முடக் குள்ளன், deformed dwarf,
5. சட்டவட்டக் குள்ளன், well-formed dwarf.
6. கட்டைக் குள்ளன், small - limbed dwarf—Micromelic dwarf.
7. குறண்டிக் குள்ளன், dwarf with bent-bones—Rachitic dwarf.

குள்ளாரால், சேற்றுரால்; கிழங் காரால். short sand eel. as opposed to பேயாரால், a long one.

குள்ளி, குள்ள மானவள், a woman abnormally short,

குள்ளிக் கோழி மீன், ஓர்வகை வண்ணாத்தி மீன், இது பவளக் குன்றுகளிலும், பவளச் செடி நிறைந்த கடலோரங்களிலும் அகப்படும், a small sturgeon - fish found usually in corel reefs on the sea-coasts—Achanthurus genus.

குள்ளி மல்லிகை, ஓர்வகை மல்லிகை, சிறு மல்லிகை, very small jasmine — Jasminum angustifolium.

குள் ளிருமல், கக்குவான், whooping cough, 2. சிறுக் கிருமல், hacking cough.

குற குளம், வெள்ளி லோத்திரம், the lodh tree — Symplocos racemosa.

குறக்கம், நாணல், bulrush — Saccharum spontaneum.

குறக் குளிகம், பூஞ் சாந்து, an unidentified tree (?)

குறங்கு, தொடை, thigh: 2. மடி, lap.

குறங் கொன்றகம், பெரு முத்தக் காசு அதா வது பெருங் கோரைக் கிழங்கு, the root of a big variety of koray grass — Cyperus rotundus.

குறஞ்சனம், வெண்காரம், borax — Sodae biborus.

குறஞ்சி, மருதோன்றி, henna; nail-dye— Lawsonia alba; 2. செம் முள்ளி, thorny nail-dye — Babrieria prionitis; 3. see ஈஞ்சு (date-palm).

குறடு, நண்டு, crab — Cancer pagurus; 2. கவைக் கோல், wooden forceps; 3. பாதக் குறடு, wooden sandal; 4. சந்தனக் கல், a kind of red stone for grinding sandal wood; 5. இரும்புக் குறடு, iron forceps, tongs or pincers. The different kinds of forceps are:—

1. காக முகக் குறடு, crow-beak forceps.
2. பூனை முக் குறடு, cat-faced for-ceps
3. முதலை முகக் குறடு, crocodile or alligator forceps.
4. கருமான் குறடு, black-smith's tongs.
5. கம்மாளன் குறடு, gold-smith's pincers.
6. புலி முகக் குறடு, tiger-faced forceps.
7. எலிப் பற் குறடு, mose-tooth forceps.
8. அமுக்குங் குறடு, compressing forceps.
9. பிடுங்குங் குறடு, pulling forceps.
10. பற்றுக் குறடு, grasping forceps.
11. என்புக் குறடு, forceps for cutting bones - Bone forceps.
12. பற் குறடு, forceps for the extraction of the teeth — Dental forceps.
13. செவிக் குறடு, forceps for extracting foreign bodies from the ear Ear forceps.
14. தொண்டைக் குறடு, a long forceps for removing foreign bodies from the throat — Tracheal forceps.

குறட்டின் கண், குறட்டின் துளை, fenestrum or opening of forceps.

குறட் டிழுப்பு, see குறட்டு வலி.

குறட்டு வலி, பலவீனத்தாற் காணும் இழுப்பு, a spasmodic painful contraction of the limp or muscle through weakness — Cramps.

குறட்டு வாங்கல். குறட்டு வலியை நீக்குதல் curing cramps.

குறட்டு வாதம், கை கால்களை இழுத்துப் பிடிக்கும் ஓர் வாத வலிப்பு, spasm attended with the sudden contraction of the limbs.

குறட்டை, காக்கணங் கொவ்வை, mussel-shell creeper — Clitorea ternatea; 2. சவரிக் கொடி, bitater snake-gourd—Trichosanthes palmata; 3. ஓர் வகை எலி, a kind of rat; 4. அயர்ந்த தூக்கத்தில் விடும் ஒலி மூச்சு, snoring; snorting — Stertorous breathing; 5. கோவைப் பழம், Indian caper — Coccinea indica.

குறட்டை, சவரிக் கொடி. இதன் இலைகள் அரும் புள்ளன. பூக்கள் பெரிது, வெண்மை, சிறிது நாற்றமுள்ளவை. பழம் உருண்டை, ஆப்பில் பழம் பருமன், சிகப்பு; உலர்ந்தது, கிச்சிலி பழம் நிற முள்ளது. இதனுள் சதைப் பற்று ஆடும்; கொடி கசக்காது. இதன் வேருக்கு விஷத்தன்மை யுண்டு. இது பசு ரோகங்களுக்கு தமிக்க உபயோகமானது. இதன் பழத் தோலுக்கு விரேசன குண முண்டு. இது அடியிற் கண்டபடி பல வகைப்படும், bitter-ground; round snake gourd — Trichosanthes palmate. It is a climbing plant: leaves toothed; flowers large and white: fruit round and of the size of an apple; crimson when fresh and of a dull orange colour when dry. The contents of the fruit sometimes rattle; vine is not bitter; flowers are slightly fetid; the root though reckoned poisonous is a useful remedy in cattle diseases especially in inflammation of the lungs; the rind of the fruit is a purgative. The plnt consists of different kinds:—

1. பீனிசக் குறட்டை, a variety curing catarrh of the nose — Trichosanthes laciniosa.

2. பெருங் குறட்டை, large corattay —Madecca bracteata.

3. சிறு குறட்டை, small corattay — Trichosanthes incisa.

4. ஆண் குறட்டை, male corattay — Trichosanthes anguina.

குறட்டைக் கிழங்கு, சவரிக் கிழங்கு. bulbous root of குறட்டை, which see.

குறட்டை விடல், தூக்கத்தில் விடும் ஒலி மூச்சு, breathing with a rough, hoarse noise in sleep—Snoring.

குறட்டைப் பழம், இதுவே சவுரிப் பழம். இப் பழம் பந்தைப்போல் சிவப்பா யிருக்கும். உலர்ந்த பழம் சிறிது நிறம் குன்றியிருக்கும். இதனுள் சதைப் பற்று ஆடும்; விதை அதிகமாக வுண்டு. இது தலை நோய், உடம்பின் சூடு, நீர்ப் பீனிசம் முதலியவை களைக் குணப் படுத்தும், இதினின்று தைலம் செய்து தலை மூழ்கிவர வாதக் கரப்பான் போகும். இப்பழத்தை தேங்காய் எண்ணெ யிற் காய்ச்சிக் காதிற்கிட காதுவலி போகு, இதுவிஷத்தன்மைய தாதலால் தின்பதற் குதவாது. இப்பழம் மருந்துக் கடைகளில் விற்கப்படும். இப்பழ ரசம் அல்லது வேர்ப் பட்டையை நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சித் தலை முழுக நாட் சென்ற தலைவலி போம். shavari fruit. It is red, resembling a small ball; and is of a dull colour when dry. The segments of the pulp rattle when dry. seeds are namerous. It is a useful remedy in cases of hoad-ache; and is a specificfor heated constitution and catarrh of the nose. Medicated oil prepared from this and anointed on the head, removes cutaneous affections. Fruit mixed with cocoanut oil is a specific in ear-ache. It is not eatable being considered poisonous It is commonly sold in all the bazaara. of druggists. The juice of the fruit or the root-bark boiled in gingelly oil is good for bathing; and it is found to give relief to a long-standing head-ache.

குறண்டல், குரக்கு வலி, cramps; 2. இசிவுண்டாதல், being attacked with convulsion.

குறண்டல் வாதம், வாத வலிப்பு, a rheumatic affection followed by spasms or spasmodic contractions of muscles; 2. கால் குரக்கு வலி, cramps in the leg.

குறண்டற் கிழவன், கூன் வளைந்த கிழவன், an old man hunch - backed.

குறண்டற் சுறுக்கம், தமுப்பு வலி, spasmodic contraction.

குறண்டற் பனங் கிழங்கு, சுருங்கிய அல்லது சுருண்டு வளைந்துள்ள பனங் கிழங்கு, palmyra root withered and bent.

குறண்டி, கட்டாந் தரையில் முளைக்கும் ஓர் முட் செடி, a thorny shrub grown on barren land — Lepidagathis.

1. ஊசிக் குறண்டி, needle - shaped corandy—Lepidagathis nees.

2. பாற் குறண்டி, milk corandy — Lepidagthis pungens.

3. சடைக் குறண்டி, another variety.

4. முட் குறண்டி, thorny corandy.

5. கீழ்க் குறண்டி அல்லது கரப்பான் பூண்டு, carpaung shrub — Lepidagathis cristata.

6. கழுதைக் குறண்டி, donkey corandy —Lepidagathis scariosa.

7. பூனை முட் குறண்டி, soft prickly corandy.

குறண்டிப் போதல், கூனாக வளைதல், becoming curved or bent so as to from a crooked back or hump; getting hunch - backet.

குறண்டின கால், குறைந்த கால், club-foot —Talipes; 2. சப்பைக் கால், short and distorted foot of congenital origin.

குறண்டுதல், வளைதல், becoming crooked or distorted; 2. வலித் திமுத்தல், having cramps; 3. சுருட்டி யிழுத்தல், twitching.

குறத்தி, நிலப் பனை, ground palm—Curculigo orchioides; 2. நாக சிங்கி, an unknown plant (?)I 3. குறி சொல்பவள், fortuneteller.

குறத்திகம், see குடசபாலை,

குறத்திகா, நிலப்பனை, see குறத்தி,

குறத்தி சன்னி, see கருங் குன்றி.

குறத்திப் பாசி. பூனைச்சிப் புல், paddy grass—Coix lachryma. A. coarse cereal used by hill-tribes in place of millet.

குறத்தி முலைப்பால், தேன், honey.

குறல், பாதிரி, trumpet-flower tree—Stercospermum chelonides.

குறவணவன், குப்பையிற் காணப்படும் ஓர் புழு, a maggot found in the rubbish.

குறவம், கோஷ்டம், Arabian costus—Costus speciosus.

குறவன், இரசம், mercury.

கொதிகுடல், கொதிக்குங்குடல், bowels easily excited by hunger; a peculiar sensation felt in the intestines from excitement; 2. பசியைத் தாங்க முடியாத வயிறு, stomach incapable of bearing hunger.

கொதி கொதித்தல், கொதி யெழும்பல், the agitation of a liquid in boiling; the act of boiling — Ebullition; 2. ஆவியாய்க் கிளம்பல், passing into vapour.

கொதி கொள்ளல், கொதியுண்டாதல், reaching the boiling point; 2. உடம்பில் கொதிப்பு அல்லது வெக்கை ஏற்படல், developing excessive heat in the system; 3. காய்ச்சலினால் உடம்பு காந்துதல், generating heat from the body as in fever; 4. சீதபேதியால் வருந்துதல், being attacked with or suffering from dysentery.

கொதிக் கண், see கொள்ளிக் கண் 2. வெப்பு கொண்ட கண், inflamed eyes; 3. எரிச்சற் கண், burning eyes.

கொதிக்க வைத்தல், குழம்பு முதலிய வற்றை அடுப்பில் கொதிக்கும் வரை சூடேற்றல், boiling broth or sauce to a stage till its contents are completely cooked or backed; the operation of boiling while cooking; 2. உடம்பில் பற்று போடுவதற்காகக் கரைத்த மருந்துகளைக் கரண்டியி லிட்டு கொதிக்கும் வரை சூடு காட்டல், heating a solution of medicine in a big spoon to a boiling point for external application; 3. கஷாயம் வற்றும்படிக் கொதிக்கும் வரை சூடேற்றல் heating or boiling down decoction till it is sufficiently reduced ie quantity.

கொதிக் கழிச்சல், வயுற்றுக் கொதிப்பினால் லெழும் கழிச்சல், diarrhoea attended with flux.

கொதித் தண்ணீர், கொதுகும் நீர், boiling water — Aqua bulliens; 2. சோறு கொதிக்கும் போது வடித்த நீர், water decanted from rice when boiling; water seethed with rice.

கொதித்தல், சுரங் காய்தல், to be suffering from fever; being attacked with fever; 2. வெப்பங் கொள்ளல், getting heated in the system; 3. தண்ணீர் முதலியன காய்ந்து பொங்குதல், over-flowing of water etc. by its being boiled; 4. வயிறு வழுக்குதல் அல்லது வழுவுதல், fluxing or flowing from the bowels as in dysentery

or diarrhoea ; 5. மிகச் சினந்தால், growing extremely angry ; 6. மகவை யிழந்ததினால் தாய்க்கு வயிற்றி லேற்படும் குழப்பம், a peculiar stirring sensation felt or experienced by the mother in the stomach on the loss of her child ; 7. நீர் ஆவி யாய்க் கிளம்பல், turning of a liquid into a gaseous state ; 8. கொதிக்குதல், bubbling up by heat.

கொதித் தைலம், எண்ணெயில் மருந்துச் சரக்குகளைக் கூட்டி காய்ச்சிக் கொதிக்கவைத்து இறக்கிய தைலம், medicated oil prepared by mixing up drugs in oil and then boiling it sufficiently. It is opposed to சுடர்த் தைலம், which see ; 2. ஊற்றிய விளக்கெண்ணெய் அதாவது முத்துக் கொட்டை முதலிய நுட்பமான விதைகளை இடித்துத் தண்ணீரிற் கலந்து கொதிக்க வைப்பதினால் இறங்கும் தைலச் சத்து, oil extracted from caster seeds by boiling process: hot-drawn castor oil.

NOTE :— The following is the Tamilian process for extracting castor oil (hot-drawn). — Small castor-oil nuts are soaked for a night in cold water and strained off next morning when sufficient fresh cold water is added to them and then boiled. The boiled nuts are dried in the sun and then bruised well in a mortar : to the bruised nuts water is again added and boiled, taking care to keep continually stirring the contents until all the oil appears on top. It is then carefully strained off and allowed to cool before securing it in bottles for use.

கொதி நிலையம், கொதிக்கு மளவு, boiling point.

கொதி நீர், see கொதித் தண்ணீர்.

கொதி பிடித்தல் சாப்பிடும் போது கண் படுதல், casting an evil eye by seeing with a spirit of jealousy while one is taking meals.

கொதிப் படக்கி, see கொதிப் பாற்றி.

கொதிப் படக்கிச் சிகிச்சை, ஆற்றும் மருந்துகளை உபயோகித்துச் செய்யும் சிகிச்சை the employment of means for counteracting or lessening inflammation and obviating its effect — Antiphlogestic treatment.

கொதிப் பாற்றி, உடம்பி னுள்ள வெப்பத்தை போக்கு மருந்துகள், medicinal agents tending to soothe or allay the irritation and assuage pain — Sedatives.

கொதிப்பு, காய்ச்சல், fever 2. உடம்பி லெழும் சூடாதிக்கம், excess of heat developed in the system ; 3 கனற்சி, glowing heat ; 4. வெட்டைச் சூடு venereal heat ; 5. வெப்பம், heat in general ; 6. வயிற்றின் கொதிப்பு, abdominal fire or gastric fire ; 7. பொங்குதல், boiling or bubbling up by heat.

கொதிப்புக் கணம், கருப்பச் சூட்டினால் குழந்தைகளுக் கேற்படும் கண நோய், mesenteric fever in children due to congenital causes.

கொதிப்புக் கொள்ளல், see கொதிப் பெடுத்தல்.

கொதிப் பெடுத்தல், உடம்பு உஷ்ணப் படல் getting heated in constitution ; 2. கொதித்தல், bubbling by heat ; 3. கோபத்தால், வெப்புக் கொள்ளல், getting hot or violent through anger.

கொதிப் பேறல், உடம்பில் உஷ்ணம் கொள்ளல், getting heated in the system ; 2. உடம்பின் சூடு அதிகப் படல், the system becoming increased in heat or getting excess of heat.

கொதி மந்தம், உடம்பின் வெப்பத்தால் குழந்தைகளுக்கோ அல்லது பெரியவர்களுக்கோ ஏற்படும் அசீரண நோய், indigestion in children or adults as a result of excess of heat (generally venereal) in the system.

கொதியல், கொதிப்பு, seething.

கொதி யாபாசம், செய் பாகத்தின் பதத்தை வேண்டு மென்றே கெடுத்தல், mistakes in culinary preparations, exhibiting some conflict with preconceived notions of what is reasonable or possible — Culinary paradox.

கொத யெண்ணெய், see கொதித் தைலம், 2. See எரி யெண்ணெய்.

கொதி யெழும்பல், கொதித்தல், operation of boiling — Ebullition ; 2 தளபுள வென்று காய்தல்; agitation of a liquid occasioned by boiling ; 3. உட் சுரங் காய்தல், having a slight internal fever.

கொதிவரக் காய்ச்சல், கொதி யெழும்பக் காய்ச்சுதல், heating to the boiling point to heat to boiling.

கொதி வெந்நீர், கொதிக்கும் நீர் boiling water.

கொதுகு, see கொசுகு.

கொதுகொதுப்பு, இலேசாய் உடம்பு காய்தல் slight febrile affection; feverishness. See கத கதப்பு; 2. கோபம் முதலிய வற்றால் உடம்பிற் காணும் சூடு. heat felt *in an agitated or excited state,*

கொதுகொதெனல், see கத கதெனல்; 2. காயம், விரணம், முதலியவைகள் வீங்கிப் பழுத் தழுகல். a condition in which wounds or ulcers, swell and spread with a *sloughy surface*, as in *Phagedenic* ulcers.

கொதுக்குக் கொதுக்கென கொட்டல், see கொதுக் கொதுக் கென்று போதல்.

கொதுக் கொதுக்கென்று போதல், அடிக் கடி செரியாமையினால் சிறு வளவாக மலங் கழிதல், going to stool often in small quantities or having looseness of bowels, due to indigestion

கொதுக்கென்று போதல், உஷ்ணத்தால் மலத்தோடு சீதங் கழிதல், the fluxing or *discharging of mucous matter* in stools as in dysentery or diarrhoea.

கொதும்பு, தேங்காய் நார், cocoanut fibre.

கொத்தகரை, பேரரத்தை, *greater* galangal —Alpinia galangal (major).

கொத்தச் சக்கை, பலாப் பிஞ்சு, tender jack-fruit,

கொத்தணி, see குன்றி மணி.

கொத்தமகண்டகம், பற்பாடகம், fever plant —Mollugo cerviana.

கொத்தமல்லி, தனியா அல்லது உருளரிசிப் பயிர். இது எல்லோருக்கும் தெரிந்த தானி யம்; எங்கும் கிடைக்கும். இது சாதாரண மாய் 1-2 உடி உயரம் இலைகள் வாசனை, அகலம், நுனியில் பல பற்களமைந்துள்ளன காம்பு வாசனை, பூ வெள்ளை, விதைகளுண்டு. இலை குழம்பு தாளிக்கவும், துவையல் செய் வதற்கு முதவும். இது பித்தம், அரோசிகம் இவைகளை நீக்கும்; இலையின் சாறு தோலின் அழற்சிக்கு மேற் பூசலாம்: குதி ரைக் கழிச்சலுக்கும் கொடுப்பதுண்டு. இவ் விதை வாசனை யுள்ளது, சுறு சுறுப்பைத் தரும்; சீரண சக்தியை யுண்டாக்குவது மன்றி வலிப்பையும் போக்கும். இதிலிருக்கும் எண்ணெய்ச் சக்தியால்தான் இதற்குவாசனை ஏற்பட்டது; இவ் வெண்ணெய்க்கும் மேற் சொன்ன குணங்களுண்டு. காய்ந்த விதைக்குத் தான் தனியா வென்று பெயர். இது வாயு சம்பந்தமான வயிற்று வலி, தலை வலி, உட் சூடு, நளிர் சுரம், வாந்தி, அசீரணம், விக்கல், நா வறட்சி, முதலியவைகளுக்கு மிக்க உபயோகமானது. இதைக் கஷாயமாக வைத்து பால் சர்க்கரைகலந்து இரத்தமூலத் திற்குச் கொடுப்பதுண்டு. அம்மையில் கண் கழுவுதற்கும், கண், இரப்பை நோய்களுக்கும் உபயோகப் படும்படி, இதினின்று கழுவு நீர் தயாரிப்ப துண்டு. இதற்குக் குடி போதை யைத் தணிக்கும் குணமுண்டு, coriander —Coriandrum sativum. The plant is well known by its seeds which are available everywhere—as it is extensively cultivated. It is 1-2 ft. high; leaves, fragrant, broad and serrate; pedicle also aromatic; flowers white; fruit is coriander seed. Leaves are used in confectionery for flavouring curries and *for seasoming*; they have the virtue of curing biliousness *and loss of appetite*. The juice of the fresh plant is an application to erythema. In veterinary practice, the young plants are used when horses are over - purged from *physic*. *The seed is* aromatic, stimulant, carminative and antispasmodic. It contains volatile oil to which it owes its fragrance. This oil has the same virtue as mentioned above. It is a useful remedy in flatulent colic. cephalalgia, internal heat-ague, indigestion, *vomiting* hiccough, parched tongue etc. A decoction of the *seed with milk and sugar* is given in cases of bleeding piles. An eye-wash is prepared from the seeds; and used in small-pox and chronic conjunctivitis It is considered to lessen the intoxicating effects of spirituous liquors.

NOTE:—The dried ripe fruit (Coriandri fructus) is globular like pepper: and its virtues lie in its volatile oil. It forms an ingredient in many medicinal preparations of the Pharmacopoeia, as confection of senna, gentian mixture, syrup of senna and tincture of rhubarb and senna. *Its properties are similar to those of* carum carui. The oil of coriander (oleum coriandri) is obtained by distillation. Leaves are used in chutney; and the seeds are universally used as a condiment as it forms one of the ingredients in curry.

Although the plant when fresh has a disagreeable smell, this disappears when dried; and the aroma becomes, rather pleasant. The seeds are used by druggists for various purposes. They are generally chewed to correct foul breath; roasted seeds are useful in dyspepsia.

கொத்த மல்லிக் கீரை, கறிக் குதவும் பச்சைக் கொத்தமல்லி யிலை, green coriander leaves used in curry.

கொத்த மல்லிச் சூரணம், கொத்தமல்லி விதையைப் பொடி செய்து மற்ற சுடைச் சரக்குகளோடு சேர்த்துத் தயாரித்த மருந்துப் பொடி. இது வயிற்றின் கெட்ட ஆவிகளை கபாலத்திற் கொட்டாமல் தடுக்கும். அன்றியும் மயக்கம், உதிர பேதி, அசீரண பேதி, இந்திரிய வொழுக்கு முதலியவைகளைக் கணடிக்கும், powder of coriander seeds mixed with other medicinal ingredients. It is prescribed for preventing noxious gases to reach the cerebral region; and is also used in cases of dysentery, diarrhoea, spermatorrhoea etc.

கொத்த மல்லிச் செடி, see **கொத்த மல்லி**,

கொத்த மல்லித் தூள், கறிக்குப் போடுவதற்காக இடித்த தனியாத் தூள், powder of dried coriander seeds used in curries and confectionaries.

கொத்த மல்லித் தைலம், கொத்தமல்லி விதையை வாலையி லிட்டு வடிக்கும் எண்ணெய். இது மஞ்சள் நிறம், வாசனையா யிருக்கும். இதற்கு சீரண சக்தி யுண்டாக்கும் தன்மையுண்டு. இது எளிதில் ஆவியாகப் போகக் கூடியது வாயு சம்பந்தமான வயிற்று வலிக்குக் கஷாயமாகக் கொடுப்ப துண்டு. a volatile oil extracted from coriander seeds — Oleum coriandri. It is obtained by distillation from the seeds and is of a yellowish colour; it is corminative and has a strong odous of coriander. It is volatile; and is very useful in flatulent colic.

கொத்த மல்லி யம்மை, நீர்க் கொள்ளுவான், chicken pox C. f. **கொப் புளிப்பான்**.

கொத்த மல்லி யெண்ணெய், see **கொத்த மல்லித் தைலம்**.

கொத்த மல்லி விதை, தனியா அல்லது உருளரிசி. இது வாசனை யுள்ளது. சுரு சுருப்பைத் தரும். சீரண சக்தியை யுண்டாக்கும், அம்மை நோயில் பார்வை கெடாதபடி கண்ணைக் கழுவுவதற்கு இதைக் கஷாயம் வைத்து உபயோகிக்கலாம். இதை வறுத்துப்யோகிக்கக் குன்மம் போம். அரைத்துப் பற்றுப் போட கபால வலி நீங்கும். சிலபுண் புரைகளுக்கு இதை களியாகக்கிண்டி கட்டலாம் கஷாயமாக வைத்து வாய்ப் புண்ணிற்குக் கொப்பளிக்கவும். கண் நோய்க்குபிரயோகிக்கவும் உதவும். இதன் கஷாயத்தோடு பால், சர்க்கரை யிட்டு காப்பியைப் போல் உபயோகிக்க அனிப்பிரமியத் தீரும்; இரத்த மூலத்தை அகற்றும் குடி போதையை சாந்தப் படுத்தும். சீதள கஷாயம் குழந்தை வயிற்று வலியைப் போக்கும். இதுசாதாரணமாய்க் குழம்பு மசாலைக் கூட்டாகவும், மது பான வகையில் வாசனைச் சரக்காவுகும் உபயோகப்படும். common coriander seed—Coriandri fructus. It is aromatic, stimulant and carminative. An eye-wash prepared from the seeds as a decoction or infusion is used for preserving the eye-sight in small-pox; roasted seeds are useful in dyspepsia. They are made into a paste and applied to relieve pain in cephalalgia; they are useful as a poultice for chronic ulcers and carburcles; and as a gargle in thrush A strong decoction with milk and sugar prepared like coffee, is given in cases of bleeding piles; it decreases the intoxicating effects of spirituous liquors. Cold infusion or decoction of seeds is very useful in colic of children. The seeds from an ingredient in curry powder and a flavouring agent in the preparation of liquors. See **கொத்த மல்லி**.

கொத்த மல்லி வைசூரி, see **கொத்த மல்லி யம்மை**.

கொத் தமுரி, see **கொத்த மல்லி**.

கொத் தலரி, அடுக் கலரிப் பூ, cluster oleander; cluster gannair — Kopsia fruiticosa.

கொத்தல், பாம்பு கடித்தல், biting as by a snake; 2. கறி கொத்துதல், chopping as of meat; 3. பறவை மூக்கினால் மோதல் striking with the beak as by birds; 4. இரை கொத்தி யெடுத்தல், picking up grains as by birds.

கொத் தவரை, சீனி யவரை, இது கொத்து கொத்தாக முளைக்கும். செடி-சுமார் 2-3 அடி உயரம். இது கறிக் குதவும், cluster bean —Cyamopsis psoralioides. It is grown in clusters; plant is about 2-3 ft. high; it is used in curries; 2. பச்சை மூங்கில், green bamboo.

கொத்தவன், முடக் கற்றான், palsy curer—Cardiospermum halicacabum.

கொத்தளை, சிறு மீன் கூட்டம், small fish living in shoals; 2. ஓர்வகை மீன், a kind of fish

கொத்தார் குழலி, சிவக. மூலி, wild sarsaparilla — Smilax macrophylla.

கொத்தான், ஆகாச வல்லிக் கொடி. இது ஓர் படர் கொடி, புறவிதழ் மூன்று பிரிவுகளாயும், கொடி மேலுக்கு ஓங்கியும், அக விதழ் மூன்றாகப் பிரிந்து மிருக்கும்; சிறிய வெண் பூக்கள் தூரமாகப் பிரிந்தும் காயின் கொட்டையில் ஒரு விதையும் இருக்கும். மார்கழி தையில் விளையும்; இலை கிடையாது; கயிறைப் போல் முறுக்கிக்கொண்டு வேறொரு மரக்கிளையில் பாய்ந்து நிற்கும். தென் தேசத்தில் பிராமணுள் இதை மோரில் ஊறப் போட்டு வைத்துக் கொள்வார்கள். இடைச்சிகளும் மோர், தயிர் இவைகள் தடிப்பாகக் காணும்படி கலப்பார்கள். இதற்கு மண், வேர் ஒன்றும் அவசியமில்லை. அந்தரத்தில் கட்டி வைக்க முளைத்துப் படர்ந்து தொங்கும், இது எவ் வீட்டில் படர்ந் துள்ளதோ, அது நாச மெனக் கருதப்படும் ஆகவே இதைக் கொல்லைப் பல்லிப் பூடுக்கு சமானமாய்ச் சொல்வதுண்டு. இதன் கிழங்குள்ள விடத்தில் மாத்திரம் நெருப்புப் பற்றாது. இதனால் வெகு சித்துக்கள் ஆடலாம். இதைத் துண்டுகளாய்த் தரித்து, குழித் தைலமாக விறக்கி அஞ்சனம் பார்ப்பதற்காக வுபயோகிப்பதுணடு. இதன் சமூலத்தை சூரணமாக்கி சுக்கு, வெண்ணெயில் குழப்பி கொப்புளத் திற்கும் இதன் சாற்றை நல்லெண்ணெயில் குழப்பி மயிர்க்கால் பலப்படுவதற்கும் உபயோகப் படுத்தலாம். இதன் சாற்றோடு சர்க்கரை கலந்து கண்ணோய்க்குப் போடலாம். அடியிற் கண்டபடி இதில் பல வகையுண்டு. air plant or air-creeper; leafless creeper or thread creeper — Cassytha filiformis. It is a creeper with calyx; three-leaved; spikes ascending; petals three; flowers small, white and rather remote; nut one-seeded; found grown in December and January. It is parasitic leafless thread-like plant found twisting round the branches of trees It is put as a seasoning into buttermilk and much used for this purpose by the Brahmins in Southern India. Shepherd women also mix the juice of this creeper in butter-milk and curdled-milk to make them thicker. It will be found growing luxuriantly in mid-air; and as such, does not require earth or root for its growth. It is believed that the house in which It is found. will be ruined eventually; and therefore, its virtue is similar to that of garden lizard plant. The place where its root is found, will not be affected by fire; and so many are the miracles played with this. Oil extracted from the root is used in magic The whole plant pulverised and mixed with dried ginger and butter, is used in the cleaning of chronic ulcers; juice with gingelly oil is employed for strengthening the roots of hair. The juice mixed with sugar is applied to inflamed eyes. The following are the different kinds; —

1. எருமைக் கொத்தான், buffalo air plant — Caladium ..? cochin-chinense.
2. கொடிக் கொத்தான், see கொத்தான்.
3. பசுங் கொத்தான், air-creeper — Cassytha aphylla.
4. கறிக் கொத்தான் edible thread creeper — Volutella aphylla.
5. முடக் கொத்தான், palsy curer — Cardiospermum halicacabum.
6. வேரிலாக் கொத்தான், moss creeper — Cassytha americana.
7. மூட் கொத்தான், another variety. See ஆகாச வல்லி.

கொத்தான் இஞ்சி, பச்சை யிஞ்சி, green ginger as opposed to உலர்ந்த இஞ்சி, dried ginger.

கொத்தான் கொடி, see கொத்தான்.

கொத்தான் சூரிகை, பச்சை மிளகு. green pepper.

கொத்தகன் வாகை, ஓர் வகை வாகை, a kind of sirissa (?)

கொத்தி, மீன் கொத்திப் பறவை, king-fisher — Halcyon family.

கொதி திகழி, சரக்கொன்றை, Indian labournum — Cassia fistula.

கொத்தித் தின்னல், மூக்கால் கொத்தித் தின்னுதல், picking up with the beak and eating, as food by fowls or other birds.

கொத்திப் பிடுங்கல், மூக்கால் தசையைப் பிடுங்கல், feeding upon carcass as ravens.

கொத்திப் போடல், கொத்துதல், picking up with the beak.

கொத்தி யெடுத்தல், மூக்கால் கொத்தி யெடுத்தல், picking up grains as by fowls, pigeons etc.

கொத் திலை, நிலவேம்பு, ground neem — Justicia paniculata. See கொத்துக் கோரை,

கொத்து, பூங் கொத்து, bunch of flowers ; 2. மூக்காற் கொத்துகை, packing as by birds ; 3. சோறு, boiled rice ; 4. கைப்பிடியளவு, handful ; 5. நாழி யளவு, a measure equivalent to two pints roughly ; 6 மயிர்க் கொத்து, collection of hair. ; 7. பேய்க் கொள், wild gram ; 8. சணல், Madras hemp — Crotolaria juncea ; 9. உணவு, food.

கொத்துக் கடம்பை, கொத்தாக வளரும் ஓர் சிறிய செடி, a small shrub growing dence, known as butter milk leaf plant — Grewia affinis.

கொத்துக் கத்தரி, சுண்டை, turkey berry — Solanum torvum ; ஓர் வகைக் கத்தரி, cluster brinjal.

கொத்துக் கம்பு, ஓர் வகைக் கம்பு, a kind of bulrush millet.

கொத்துக் கழலை, பிடுக்கு அல்லது பூசனி யைப் போல் தொண்டையிற் தொங்கும் ஓர் கொழுப்பு கழலைக் கட்டி இது பளபளப்பாயும், மெதுவாயும் இருக்கும் ; வெளுத்துக் காணும் ; தினவுண்டு, வலியிராது. இதனுல் தொண்டையில் ஓர்வித சப்த முண்டாகும், a pendant swelling of varied size occurring about the region of the throat. It, consists mainly of fatty tissue ; and resembles very much the scrotum or sometimes a pumbkin. It is marked by glossy, soft and pale-coloured swelling, fetid smell, excessive itching and absence of pain ; and is also characterised by a peculiar rumbling noise heard often in the throat.

கொத்துக் களா, ஓர் வகைக் களா, fascicled-leaved berberry ; 2. மலைக் களா, Indian cranberry — Vaccinum leschinaultii.

கொத்துக் காரை, பெருங் காரை, divine jasmine — Randia uliginosa ; 2. பூங் காரை poison fruit — Randia dumetorum.

கொத்துக் கிளா, கருதாளிலை, cherry nutmeg — polyalthia cerasoides.

கொத்துக் குறடு, see கொத்துங் குறடு.

கொத்துக் கோரை, ஓர் வகைக் கோரை, wet land sedge — Cyperus compressus.

கொத்துக் கோவை, காக்கைப் பிலா, esculent leaved false kamela — Casearia esculenta ; 2. காகோளி, downy-leaved false Kamela — Casearia tomentosa.

கொத்துங் குறடு, நண்டு குறடைப் போன்ற அலகுள்ளதால் இதற் கிப்பெயர் வாய்ந்தது போலும், crab, so called from its pincer-like mandibles.

கொத்துங் கூற்று றுள்ளோன், நண்டு, see கொத்துங் குறடு.

கொத்துதல், see கொத்தல்.

கொத்துத் தம்பட்டன், கொடித் தம்பட்டன், sword-bean — Canavalia ensiforms (mollis).

கொத்துப் பசலை, see கொத்துப் பசலை,

கொத்துப் பசலை, கொடிப் பசலை, heart-leaved Malabar night shade — Basella lucida alias B. nigra.

கொத்துப் புங்கன், காய்கள் கொத்தாக விடும் புன்கு, Indian beech yielding fruits in clusters — Pongamia glabra ; 2. கொடிப் புன்கு, which see.

கொத்துப் புடல், கொடிப் புடல், snake-gourd — Trichosanthus anguina.

கொத்த மல்லி, see கொத்த மல்லி.

கொத் துலதம். மா மரம், mango tree — Mangifera indica.

கொத்து வசலை, see கொத்துப் பசலை.

கொத்து வாய், வெட்டு வாய், a long deep cut made in the flesh ; an incision of considerable length particularly of flesh — Gash.

கொத்து வால், தேளினது போன்ற கொட்டும் வால், stiring tail as of scorpion.

கொத்தை. சொத்தை, putrid matter ; 2. குருடன், blind man ; 3. அஞ்ஞானம், spiritual ignorance ; 4. மலம். faeces (slang).

கொத்தம், அடர்ந்த சுருட்டை மயிர், dense curly hair.

கொத்தறி வாள், சதையிற் குத்தி அறுக்கும் கத்தி, a surgical knife or instrument with a handle used for puncturing before cutting through the skin.

கொந்தல், கொந்துதல் அதாவது இறைச்சியைச் சிறிதாக வெட்டல், mincing ; 2. அரித்தல், nibbling ; gnawing ; 3. கொடிய குளிர், biting cold ; 4. அணில் முதலியன கடித்த காய், fruit nibbled by squirrel etc ; 5. பெருங் கோபம், great wrath ; 6 கோபக் குறி, sign of anger.

கொந்தல் மாங்காய், அடிபட்ட மாங்காய், injured mango.

கொந்தவக் காய், see கொந்தளங் காய்.

கொந் தழல், பெருந் தீ, great fire.

கொந்தழற் புண், பற்றியெரியும் தீச்சுட்டபுண் extensive burns caused by a raging fire.

கொந்தளங் காய், சமுத்திராப் பழம், sea-side Indian oak — Barringtonia racemosa.

கொந்தளம், same as கொந்தளங் காய் ; 2. காண்டா மிருகம், rhinoceros : unicorn ; 3. சுருட்டை மயிர், curly hair ; 4 விலங்கின் குட்டி, young of an animal ; 5. பெண் மயிர், woman's hair ; 6, மயிர்க் குழற்சி, lock of hair.

கொந் தளித்தல், பொங்கி யெழுதல், swelling or rising as of waves ; raging.

கொந்தனை, பேய்க் கும்மட்டி, bitter apple — Cucumis colocynthis ; 2. see கொந்தளங் காய்.

கொந் தாழம், see கொந் தாழை, ; 2. ஓர் மருந்து, a medicine. See கொந்தாளம்,

கொந் தாழை, கடற் கரையி லுள்ள தாழை; கடற் றாழை, sea-weed — Algae ; 2. செந் தாழை, false tragacanth — Sterculia urens.

கொந்தாளம், விஷத்தை நீக்கு மோர் மூலிகை, an unknown drug or medicinal plant used as an antidote for poison.

கொந்தின விறைச்சி, நைய வெட்டின இறைச்சி, meat chopped into minute pieces — Mince-meat ; Hash.

கொந்து, நையப் பண்ணு, mince; 2. பூங் கொத்து, bunch of flowers ; 3. கோபம், anger.

கொந்துகம், see குதிரை வூனி.

கொந்துதல், நையப் பண்ணல், mincing ; 2. எரிதல், burning ; 3. குத்துதல், piercing ; puncturing ; 4. அரித்தல், gnawing or nibbling as by rat or squirrel etc. See கொந்தல்.

கொப்பரம், முழங்கை, elbow.

கொப்பரை, நீர் வைக்கும் பாத்திரம், kettle ; water-jar made of brass or copper ; copper boiler ; 2. கடாரம், boiler ; brass pot of a large size,

கொப்பளம், see கொப்புளம்.

கொப்பளித்தல், see கொப் புளித்தல் ; 2. கொப்புளங் கொள்ளல், blistering ; 3, வாய் குமிழ்த்தல், gargling to spirt ; spirting ; 4. கக்குதல், ejecting.

கொப்பரு, see கொப்பரை.

கொப்பறை, கொப்பறைத் தேங்காய் அதாவது தண்ணீரில் வற்றிய தேங்காய், dry kernel of cocoanut ; 2. ஓடு நீக்கிய உலர்ந்த தேங்காய், dried cocoanut from which the shell has been removed.

கொப்பாந் தேன், see கெம்புத் தேன்,

கொப்பு, மரக்கிளை, branch of a tree ; 2. மயிர் முடி, lock of hair.

கொப்புளக் தாள் சதையை கொப் புளிக்கச் செய்யும் மருந் தூட்டிய கடுதாசி, blistering paper.

கொப்புளப் பற்று, கொப்புளத்தின் மேற் காணும் பக்கு, blister scab ; 2. கொப்புளத் திறக்க போடும் பற்று, medicinal coat over blister or boil.

கொப்புளம், சதை யெழுச்சி, boil ; bulla ; blister 2, பரு, pustule ; 3. அம்மைக் குரு, pock ; vesicle ; 4. குமிழி, bubble.

கொப்புள வண்டு, எரி வண்டு, which see.

கொப்புள வாதம், வாத பித்த வீரிய பண்டங்களை மிதமின்றிப் புசிப்பதால் உடம்பு முழுவதும் (உச்சி முதல் உள்ளங்கால் வரை சிறிய நெருக்கமான கொப்புளங்களை புண்டாக்கும் ஓர் வாத நோய், இதை வடமொழியில் ' பரிஸ் போடம் ' எனச் சொல்லுவர், lesion occurring in the skin in groups and characterised by dense eruptions all over the body (from head to foot) arising from eating excessively articles of fare promoting acute disorders of the two humours viz wind and bile in the system ; nettle-rash — Urticaria conferta

கொப்புளி, உமிழ், disgorge. See கொப்புளித்தல்,

கொப்புளிக்கு நீர், வாய் கொப்புளிக்குமருந்து நீர், fluid preparation used for gargling — Gargarisma,

கொப்புளிக்கு மருந்து, உடம்பில் கொப்புளத்தை யுண்டாக்கும் மருந்து, blistering agent or drug — Vesicant ; 2. வாய் கொப்பளிப் பதற்காக வுபயோகிக்கும் மருந்துநீர், medicated gargles : a preparation for rincing the throat with.

கொப்புளித்தல், வாய்கூட்டி உமிழ்தல்; washing the mouth with water or any liquid held in the throat : 2. குமிழி யெழும்பல், bubbling ; 3. இரத்தங் கொப் புளித்தல், gushing or spirting as of blood ; 4. பீரிடல், discharging in jets: 5. கொப்புளங் கிளம்பல், rising of blisters ; 6. வாயால் நீரை அலசிக் கக்கல், rincing the mouth: gargling the mouth or throat.

கொப்புளிப் பான், கொப்புளிக்கச் செய்யும் ஓர் சின்னம்மை, a variety of chicken-pox marked by vesicles — Varicella, c. f, நீர்க் கொள்ளுவான் ; 2. கொப்பளித்த குருக்கள் அழுகி இரணமாக மாறும் ஓர் வகை சின்னம்மை, a rare form of chicken-pox in which the eruption leads to a gangrenous ulceration — Varicella gangrenosa ; 3, நீர்க் கொள்ளுவான், a modified and mild form of small-pox occurring in children who have had a previous attack or have been vaccinated —Variloid.

கொப்புள், see கொப்பூழ்: 2 கொப்புளம், boil ; pustule; 3, நீர்க் குமிழி. bubble; 4. குரு, pustule.

கொப்பூழ், உந்தி, navel ; 2. தொப்புள், umbilicus : 3, கொப்புளம், boil. See கொப்புள்.

கொப்பூழ் அறுத்தல், பிறந்த குழந்தைகளின் தொப்புள் கொடியை கத்தியால் அறுத்தல், cutting the navel-cord or umbilicus of a new born baby with a knife.

கொப்பூழ்க் கொடி, நஞ்சுக் கொடி அல்லது நாபிக் கொடி, umbilical cord : navel-string — Funis umbilicus.

கொப் பென, பொட் டென, quickly ; 2, திடீரென, suddenly.

கொப்பை, கல் லுப்பு, sea-salt.

கொமட்டி, see கொம்மட்டி 2. கொமட்டச் செய்வது. that which makes one vomit. See குமட்டி,

கொமட்டி விதை, சுக்கங்காய் விதை, seeds of Bryonia callosa. See கொம்மட்டி விதை

கொமரப் பாறை, பச்சைக் கடல் பாறைமீன் green horse-mackerel — Caranx rattlerrii.

கொம்பசைப் பசுவின் பால், அசைகின்ற கொம்பை யுடைய பசுவின் பால், இதைக் குடிக்க நோயுண்டாகும், milk of the cow having losse horns. This, if taken, gives, rise to diseases in the system.

கொம் பரக்கு, பொன் மெழுகு, அல்லது அவலரக்கு, lac of a yellowish brown colour — Shell-lac ; 2. மரப் பட்டையின் அரக்கு, இது கீழ்ப் பிரதேச தீவுகளில் விளையும் மரங்களின் பிசின், lac from gum-lac tree. It is a resinous substance, which flows from certain trees of the East Indies ; 3. சிவப்பு பரக்கு இதன் கஷாயம் இரத்தப் போக்கை நிறுத்தும். lac of a reddish colour in its natural state of incrustation on small twigs — Stick-lac. Decoction of this is given to control hemorrhage ; 4. தேட் படை, croton lac tree ; aromatic croton — Croton aromaticus.

கொம்பரக்கு மரம், கிளைகளில் அரக்கு உற்பத்தியாகு மரம், croton-lac tree — Croton aromaticus. It is a tree in which lac is formed on branches : and it is known as stick-lac. See கொம் பரக்கு,

கொம்பரி, see இலைம் பிசின்.

கொம்பர், மரக் கொம்பு, twig of a tree ; 2, விலங்கின் கொம்பு, horn of beasts.

கொம்பனார், கொடியைப் போன்ற ஒல்லியான பெண்கள், slender women.

கொம்பன், see கொம்பன் கொளுத்தி; 2. ஓர் அம்மை, a kind of small-pox ; 3. ஆண் யானை, tusker or male-elephant having tusks ; 4. ஓர் நீண்ட பாகல், a long bitter fruit of Momordica genus.

கொம்பன், விஷக்காற்றினால் இரத்தம்முறிந்து நீராகி, பேதியுடன் வாந்திகண்டு, கணைப்புண்டாகி, வியர்வையினால் உடம் பெல்லாம் பிசுபிசுப்புண்டாகி, சன்னிகண்டு, நாடி ஒடுங்கி 30 நாழிகைக்குள் மரணத்தை யுண்டாக்கும் ஓர் கொடிய வாந்தி. பேதி, a virulent type of cholera chiefly epidemic. The contagion of the disease is due to a poison phere or wind perhaps laden with germ-carrying dust. The germ ir supposed to convert the blood into a watery

fluid. It is characterised by vomiting and purging, a peculiar feeling of exhaustion, cold perspiration often viscous, insensibility or a condition resembling apoplexy and feeble pulse followed by a general collapse within a short duration of 12 hours

கொம்பன் கெளுத்தி, see கொம்பு கெளிறு.

கொம்பன் சம்பா, ஐந்து மாதத்தில் அறுக்கக் கூடிய சம்பா நெல், champa paddy which could be reaped in five months.

கொம்பன் சுறு, ஓர் வகைக் கடற் சுறு இதின் தலை இரு பக்கமும் நான்கு மூலையாக வளர்ந்து, கண்கள் வெளியில் பிதுங்கியிருக்கும்; 7 அடி வரையில் வளரும். பெரிய மீன்கள், மிகுந்த மூர்க்கத் தனமும் மனிதரை விழுங்கக் கூடிய சக்தியும் வாய்ந்தன, மூக்கு கண்ணைவிட வாயின் அருகேயுள்ளது சாம்பல் அல்லது கபில வர்ணம். பெரிய மீன்கள் மலையாளத்து மேற்கு கரையில் காணப்படும். hammer-headed shark—Zygaena blochii alias Sphyrna blochii-The two sides of head rectangular; eyes prominent; 7 ft long; big size exceedingly fierce; capable of devouring men. Nostril much nearer the mouth than the eye; deep grayish or brownish gray colour. Commonest from will be found in the Malabar coast attaining a very large size.

கொம்பன் திருக்கை, ஓர் கடற் திருக்கைமீன், இது சுமார் 20 அடி; ஊதா நிற முள்ளது. sea-devil fish - Dicerobatis eregoodoo. It is 20 ft long; and is of blue colour.

கொம்பன் பாகல், நீண்ட பாகல் காய், long balsam-pear — Momordica charantia.

கொம்பன் யானை, பெரிய கொம்புடைய யானை an elephant with long tusks — Tusker.

கொம்பால் கிழித்தல், மிருகங்கள் கொம்பினால் முட்டி சதையைக் கிழித்தல், tearing the skin by goring with horns as by bull etc.

கொம்பில் கலை மான், கொம்பு விழுந்த கலை மான், pollard.

கொம்பீரம், பச்சைக் கற்பூரம், crude camphor

கொம்பு, நாற்று, seedling; 2. மரக் கொம்பு, twig; 3. வேர்க் கொம்பு, the knop of the articulated root of ginger; 4. யானைக் கொம்பு, the horn of ivory of an elephant.

கொம்பு, விலங்கின் கொம்பு. இக் கொம்புகள் சீப்பு, சிமிழ் முதலிய கருவிகள் செய்வதற்கும், மருந்து முதலிய வஸ்துக்களை பதனப் படுத்துவதற்கும் உபயோகப்படும். மேலும் இவற்றில் சில வகைகள் பற்பம், செந்தூரம் முதலிய மருந்துகளை செய்வதற்கும் உபயோகப்படும். ஆகவே கொம்புகளுள்ள சில முக்கியமான மிருகங்களையும், அக் கொம்புகளின் வளர்ச்சி, தன்மை, வடிவம் முதலியவைக் கருதி ஏற்பட்ட பல திறுசுகளையும் அடியில் முறையே A, B என்னும் பிரிவினைப்படி கூறப்பட்டுள்ளன, animal's horn. From these horns, are made combs small boxes etc, for preserving medicines. Moreover, some of these horns are also found useful in preparing calcined medicines as oxides, red oxides etc. So the names of some of the principal horned animals; and the descriptive names of horns according to their nature, growth, shape etc, are enumerated below in two groups A and B respectively:—

A. Names of Animals:—

1. கரிய மான். Indian antelope or fallow deer — Antelope bezoartica.
2. புள்ளி மான், spotted deer — Axis maculatus.
3. மாடு, domestic cattle — Bos indicus.
4. எருமை, buffalo — Bubalus arni.
5. ஆடு, domestic goat — Capra hircus.
6. காட்டாடு, jungle sheep — Cervulus muntjac.
7. காட்டு பேணி அல்லது காட்டெருது forest ox or bison — Gavaeus gaurus.
8. வெளி மான், ravine deer — Gazella bennettii.
9. வரை யாடு, saddle back — Hemitragus hylocrius.
10. காண்டா மிருகம், Rhinoceros—Dragon,
11. யானை, elephant — Elephas indicus. (Horn of this is ivory).

B. Different kinds of horns:—

1. தறிக்கொம்பு, cropped horns.
2. தோற் கொம்பு, the same as No. 6.

3. திருகு கொம்பு, twisted horns.
4. நாரைக் கொம்பு, tall horns.
5. பிடிக் கொம்பு, the same as No. 9.
6. அசைக் கொம்பு, movable horns.
7. மட்டைக் கொம்பு, horns extended on both sides.
8. முகக் கொம்பு, horns setting down towards the ground.
9. மட்டக் கொம்பு, short horns.
10. கட்டைக் கொம்பு, horns of stunted growth; stump of a horn.
11. முறுக்குக் கொம்பு, winding or tortuous horns.
12. முனைக் கொம்பு, pointed horns
13. முன் கொம்பு, horns bent forward.
14. கோழைக் கொம்பு, burnt horns.
15. வளை கொம்பு, crooked horns.
16. விரி கொம்பு, spreading horns.
17. விரிசல் கொம்பு, another variety of No. 16.
18. விழு கொம்பு, the same as No. 6.
19. வீச்சுக் கொம்பு, the same as No 4
20. விணைக் கொம்பு, horns bent back
21. கூழைக் கொம்பு, blunt horn.
22. முளைக் கொம்பு, horns just sprouting out.
23. கப்புக் கொம்பு, bifurcated horn.
24. கிளைக் கொம்பு, branched horn.
25. கூடு கொம்பு, horns meeting together at points.
26. கூர்க் கொம்பு, the same as No. 12.
27. உளிக் கொம்பு, the same as No. 10.
28. கிளிக் கொம்பு, short and crooked horn.

கொம்புகன், see கொம்பன் பாகல்.

கொம்புக் கள்ளி, இலை யில்லாது கொம்பைப் போற் காணப் படும் கள்ளி; கோல் கள்ளி, twig spurge — Euphorbia genus; 2. *திருக் கள்ளி*, round milk hedge — Euphorbia tiruccalli.

கொம்புக் கெளிறு, நன்னீரில் வாழும்மெளிற்று மீன், fresh water snouted macrone fish —Macrones aor alias Bagrus aor.

கொம்புச் சிமிழ், மருந்து வைப்பதற்காகவிலங் கின் கொம்பு அல்லது தந்தத்திறுற் செய்த பரணி, a small case or box made of horn or ivory for preserving medicine.

கொம்பு டப்பி see கொம்புச் சிமிழ்.

கொம்புத் தேனீ, மரக் கொம்பு அல்லது கிளை களில் கூண்டு கட்டும் தேனீ, bee which attacher its honey-combs to branches of trees—Apis indica.

கொம்புத் தேன், மா மரம் முதலிய மரக்கொம்பு களிற் கட்டும் கோற் றேன் அல்லது நறுந் தேன், pure honey found collected and hanging on branches of trees as mango-tree etc.

கொம்புப் பயறு, பாசிப் பயறு, green gram

கொம்புப் பழம், see எலுமிச்சை

கொம்புப் பாகல், see கொம்பன் பாகல்.

கொம்புப் புடல், கொடியில் விடும்குட்டையான புடலங் காய். இது மருந்திற் குதவும், short snake-gourd climber horn poodal— Trichosanthes nervifolia. It is used in medicine; 2. *கறிப் புடல்*, palwal snake-gourd — Trichosanthes dioica. It is eaten in curries.

கொம்பு மிளகு, ஓர் மிளகு, a kind of pepper.

கொம்பு முட்டை, மரக் கொம்பி லிடு முட்டை eggs laid on brancher of trees.

கொம் பூதி, நத்தை, snail.

கொம்பேறி மூக்கன், நீண்ட மூக்குடையதும், மரத்தில் ஏறக் கூடியதுமான ஓர் கொடிய பாம்பு. இது மரத்தின் உச்சிக் கொம்பின் மேலேறிப் பார்க்கும். இது நிறத்தைக் கருதி பல வகைப்படும். சாதாரணமாக மரத்தில் வாழும்; 4 அடி நீளம். இது பல்லி களையும், தவளைகளையும் பிடித்துத் தின்னும். மனிதரைக் கடித்தவுடன் மரத்தி னுச்சியில் போய் இறந்த மனிதனைக் கொளுத்தும் புகையைக் காண வேண்டி நிற்கும். புகை யைக் கண்டவுடன் விஷத்தை இறக்கிக் கொள்ளும். அப்போது மனிதன் பிழைத் துக் கொள்வானெனக் கருதப்படும். Tree snake — Dendrophis picta alias D. ophidia. It is called branch-ascending and long-nosed snake. It is a snake with an elongated nose; and is capable of climbing up trees. Variations occur in the colouration. It lives on trees; and is about 4 ft. long; and hence known as tree-snake. It feeds chiefly on lizards

and frogs. After biting men, it is said to ascend to the top of the tree to see the smoke of the funeral pyre. On seeing the fumes, it is believed that the snake will withdraw its poison, when there will be every chance for the man, who is kept without burial, to recover from its poisonous bite.

கொம்பேறி மூர்க்கன், see கொம்பேறிமூக்கன்

கொம்மடி, see கொம்மட்டி; 2, நீர் முலாம் பழம, water-melon.

கொம்மட்டி, நீர் முலாம் பழம். இது ஓர் கொடி. இது சாதாரணமாய் நீர் நிலைகளின் சமீபம் உற்பத்தி யாகும். கொம்மட்டி இனத்திற்கே இது ஓர் பொதுப் பெயராக வழங்கினாலும். பேய்க் கொம்மட்டி அல்லது சர்க்கரை கொம்மட்டிக்கு ஓர் சிறப்புப் பெயராகக் கொள்ளப் படும். இது பூண்டின் இறுதிப் பெயராக வரும்போது, அடியில் கண்டபடி பலவகைப் பூண்டுகளின் பெயர் களைக் குறிக்கும், water - melon — Citrullus genus. Though it is a general term for all water - melon creepers found adjoining places where water is stagnant, stll in usage it specifically refers to bitter or sweet-water melon As plant's second term, it refers to various kinds of water-melon as mentioned below viz:—

1. பேய்க் கொம்மட்டி, அல்லது கசப்பு கொம்மட்டி, devil or bitter water-melon—Cucumis colocynthis.
2. சர்க்கரைக் கொம்மட்டி அல்லது தர்ப் பூசினி, sweet water-melon—Citrullus vulgaris.
3. கஸ்தூரி கொம்மட்டி, musk melon —Cucurbita moschata.
4. சிறு கொம்மட்டி அல்லது தும்மட்டி small bitter water-melon — Bryonia callosa.
5. கச்சக் கொம்மட்டி, same as No. I.
6. செங் கொம்மட்டி, red bitter water melon — Cucumis madraspatana.
7. மலைக் கொம்மட்டி, hill colocynth, the same as No, 4.
8. வரிக் கொம்மட்டி, striped gourd Citrullus vulgaris.
9. காட்டுக் கொம்மட்டி, wild bitter water-melon — Cucumis trigomus,

NOTE:—The fruit of this Citrullus genus seems to include also Cucumis and Bryonia genera, as can be seen from the above varieties

கொம்மட்டி, இந்திர வல்லிக் கொடி, water-melon — Citrullus genus; 2. பேய்க் கொம்மட்டி, devil water-melon — Citrullus colocynthis; 3. சர்க்கரை கொம் மட்டி அல்லது தர்ப்பூசினி, sweet water-melon—Citrullus vulgaris; 4 தும்மட்டி அல்லது சுக்கம், dark pumpkin; fowl's cucumber — Cucumis trigonus alias Bryonia callosa.

கொம்மட்டிக். காய், தும்மட்டிக் காய். இது ஓர் வகை வெள்ளரி இனத்தைச் சேர்ந்தது. இதற்குச் சுக்கங் காய் என்றும் மிதக்கங் காய் என்றும் பெயர் இருந்தாலும், இது இவ் வினத்தைச் சேர்ந்த தென்பது சந்தேகம். இதன் தண்டு முசு முசுப்பா யிருக்கும்; இலைகளுக்கு நீண்ட காம்புகளுண்டு; பூக் கள் மஞ்சள். இக் காய் வாத பித்த சிலேட் டுமக் கோளாறுகளையும், குன்மத்தையும் போக்கும். இதன் இரசத்திற்கு பேதியாகுங் குணமுண்டு. இது ஈரலுக்கு பலத்தைக் கொடுக்கும்; பசியை உண்டாக்கும்; பித் தத்தினு லுண்டான நெஞ் செரிச்சல் போம். இதன் விதை ஈரல் நோய், குடல் நோய் இவைகளைப் போக்கும். இதை வற்றலிட்டுச் சாப்பிட அரோசிகம் நீங்கும். இதன் சிறு கசப்புக் கொட்டைகளை எண்ணெயிற் கலந்து கொடுக்கக் குடற் பூச்சிகளைக்கொல் லும். மிருக வைத்தியத்திற்கு முதவும். இதன் காய் துவையல் செய்து சாப்பிடலாம். இலை, கீரையாக உபயோகப்படும். இதையும் சுக் கான் கீரை என்பர். a kind of bryonia—Bryonia callosa alias Cucumis trigonus. Though it is known by different names as mentioned above, it is very much doubted if this is the same as bryonia, The stem is rough with bristly hairs; leaves on long petioles and flowers yellow. It is said to cure the derangement of three humours in the system and also dyspepsia. The juice has cathartic properties; it tones the liver, increases the appetite and cures burning sensation due to biliousness. The seed of the fruit is considered a good remedy for diseases of the liver and the bowels. The fruit dried and seasoned is used in food to improve the appetite. Small bitter seeds are mixed with oil and employed as a vermifuge; they also

prove useful in veterinary practice. Fruit is used as pickle (chutney) Leaves are also used in food like other vegetable greens.

NOTE:—According to some writers, this fruit கொம்மட்டிக் காய், Bryonia callosa is considered to be a synonym of சக்கரக் காய்; and the leaf கொம்மட்டிக் கீரை, to be that of சக்கரக் கீரை, but this is doubted because the latter seems to belong to a different botanical group known as country - sorrel —Rumex vasicaritis.

கொம்மட்டிக் கீரை, கொம்மட்டி யிலை, leaves of bryonia — Bryonia callosa; 2. *சக்கரன் கீரை.* country sorrel — Rumex vasicaritis; 3. *செங் கீரை,* cock's comb greens — Amaranthus atropurpurea alias Celosia modiflora.

கொம்மட்டிக் கொடி, பேய்க் கொம்மட்டி, see கொம்மட்டி.

கொம்மட்டிச் சீரகம், see கருஞ் சீரகம்.

கொம்மட்டிச் சுரை, பேய்ச் சுரை, bitter bottle-gourd; 2. *கறிக்குதவும் சுரை,* bottle-gourd used in curry — Lagenaria.

கொம்மட்டி மரம், *கசப்பு மாதுளை,* bitter pomegranate tree.

கொம்மட்டி மரிகம், நில வேம்பு, ground neem —Celastrus paniculata alias Justicia peniculata.

கொம்மட்டி மாதுளை, *சீதளி,* இதனால் பாட வல்ல இனிய குரலோசை யுண்டாகும், melon lime—Citrus medica-medica. It affords good voice for singing: 2. கொடி *மாதுளை அல்லது துரிஞ்சி,* lemon citron —Citrus medica (limoni medica).

கொம்மட்டி விதை, கொம்மட்டிக்காய் விதை, இவ்விதை கடைகளில் விற்கப்படும். இவ் வினத்தைச் சேர்ந்த வெள்ளரி விதை, பூசினி விதை, தர்ப்பூசுனி விதை, முலாம் பழ விதை, ஆக நான்கு வகை விதைகளைக்குறிக் கும். இவை அடிக்கடி உபயோகிப்பதால் கடைகளில் விதை யெடுத்தே விற்பார்கள். இவைகள் நான்கையும் ஒன்றாகக் கலந்து சர்க்கரைப் பாகில் விட்டு தின்பண்டமாக உப யோகிப்பார்கள். இது உடம்பிலுள்ள உஷ ணத்தைத் தணித்து, நீரைப் பிரித்து, பலத்தை யுண்டாக்கும். இவைகளைச் சாதா ரணமாய் காய வைத்தும், வறுத்தும் உண் ணலாம், seeds of water - melon. The four so called water-melon (cucuribitaceous) seeds sold in the bazaars are those of country water - melon, pumpkin, sweet water - melon and common melon. These seeds are in constant demand; and so they are decorticated and kept ready for use. They are made into balls by putting them together in a boiled syrup and them dried and eaten. They are considered to be cooling, diuretic and strengthening. Seeds are even dried or roasted and the kernels eaten. See கொம்மட்டி.

கொம் மாதி, நெட்டி லிங்க மரம், Indian mast tree—Polyalthia longifolia.

கொம்மி, கோட்டம், common bottle - flower —Webera corymbosa.

கொம்மை, see கொத்தளங் காய்; 2. see கொம்மட்டி; 3. இளம் பெண் முலை, breast of young girl; 4. இளமை, youth; 5. வல்லமை, strength; 6, ஓர் வகைக் கம்பு, a kind of millet (kambu): 7. வெள் வெட்சி, common bottle - flower—Webera corymbosa; 8. வட்டம், circle; 9. see கொம்மட்டி.

கொயிறு, see கொய்று.

கொய், ஓர்வகை ஆற்று மீன், a kind of river-fish — Anabas scandens.

கொய்கை மேனி, ஓர் வகைத் தென்னை, a species of cocoanut See ஆயிரங் காய்ச்சி.

கொய்ச் சாளை, ஓர் மீன், a kind of fish(?)

கொய்யடி, வண்டானம் நாரை, a kind of heron or stork—Pelican ibis.

கொய்யல், see கொய்யா.

கொய்யா, கொய்யாப் பழம், இதன் மரம் இந் தியாவில் எங்கும் பார்க்கலாம். 5-15 அடி உயரம். இப்பழம் வெள்ளை, சிவப்பு என இரு வகைப்படும்; இது தின்பதற்குதவும்; இதில் வெள்ளை சிறந்தது இதினின்று ஐரோப்பி யர் கோவா சல்லி என்று ஓர் குழம்புப் பாகு செய்வார்கள். காய் அசீரண பேதிக்குதவும்; பழம் மல விர்த்தியாகும்; இலையைக் கஷாய மிட்டு வாந்தி பேதிக்கும், கொழுந்தைக்கஷா மிட்டு அசீரணத்திற்கும் கொடுக்கலாம். இதை அரைத்து கட்டிகளுக்கும் வைத்துக் கட்டலாம். இது கருணைக் கிழங்கின் காரலை நீக்கும்; அடி மரத்து வேர் துவர்ப்பா யிருக் கும்; இதில் டானிக் திராவகம் உண்டு. வேர்ப்பட்டையைக் கஷாயம் வைத்துக் கொடுக்க பேதியை நிறுத்தும்; குழந்தை களின் வயிற்றுப் போக்கைக் கட்டும். ஆசன

வாய் அடித்தள்ளிப் போகுதல் இக் கஷாயம் உதவும். சொறி சுரப்பான், ஆறாப் புண், முதலியவைகளிலும், பல்ஈறு, சுறந்து காணில் வாய் கொப்பளிக்கவும், இக் கஷாயம் உபயோகிக்கலாம். இது அடியிற் கண்டபடி பலவகைப் படும், guava or journey mango — Psidium guyava alias Psidium pyriferum, The tree is 5-15 ft. high; and it is cultivated all over India. The fruit generally consists of two varieties viz: — the white and the red The white is pleasant to eat.; Europeans make it into guava jelly or guava cheese; the unripe fruit is employed in diarrhoea and the ripe one is a good aperient. Decoction of leaves is given in cholera; and that of young leaves as a tonic in the disease of digestive organs. The leaves when ground is used is an excellent poultice. It also removes the acridity of elephant yam. Bark of the stem is an astringent and contains tannic acid. Root-bark is also medicinally astringent; and its decoction is administered internally in cholera for arresting vomiting and diarrhoea; it is also recommended in chronic infantile diarrhoea. Locally it is applied beneficially to prolapsus ani, especially of children; it is also successfully employed in scurvy and unhealthy sores; and is a mouth-wash or gargle in swollen gums. The following are the different varieties:—

1. **வெள்ளைக் கொய்யா,** white guava—Psidium guyava (pyriferum).

2. *சிவப்புக்* **கொய்யா,** red guava — Pridium guyava (pomiferum).

3. **மலைச் சிறு கொய்யா,** hill gooseberry—Rhodomyrtus tomentosa.

4. **சிறு கொய்யா,** dwarf or small guava — Psidium guyava (pumilum).

5. **சீமைக் கொய்யா,** chinese guava — Psidium cattleyiauum.

6. **காட்டுக் கொய்யா,** wild guava of Ceylon — Myrtus canescens.

7. **தவிட்டுக் கொய்யா,** bran guava or woolly myrtle — Rhodomyrtus wight.

8. **ஈச கொய்யா,** அதாவது கொட்டையில்லாக் கொய்யா. seedless guava —Psidium (genus).

கொய்யார்க்கம், யுனானி மருந்துக் குதவுமோர் மரம், a tree useful in preparing Unani medicine.

கொய்யின் கீரை, see அறு கீரை.

கொய்யுளை, குதிரை, horse, 2. குதிரைப்பிடரிமயிர், hair on the nape of horse's neck.

கொய்னு, சுரப் பட்டை அல்லது சின்கொனு மரத்துப் பட்டையி னின்று தயாரிக்கும் ஓர் வகைக் காரச் சத்து. இது மஞ்சள் சின்கொனுப் பட்டை அல்லது சிவப்பு சின் கொனுப் பட்டையினின்று தயாரிக்கப்படும். இது எவ்வித சுரத்தையும் முக்கியமாய் கண்டிக்கும், விஷ சுரத்தில் ஏற்படாத வாதப் பிடிப்பு, வாத வலி இவைகளுக் குபயோகிக்க மிக்க குணத்தைக் காட்டும், அன்றியும் ஈழை, கக்குவான், கடுமையான கப வாத சுரம், நுரையீரலின் துன்மாமிசம், கண்விழி நோய், கருவிழி ரோகம், அக்கினி விசர்ப்பி, சீத பேதி, வாய் விரணம், ஈமர், சயம் முதலிய நோய்களுக்கும் உதவும் சிறிய வளவில் இது மெலிந்தவர் களுக்கு பசியை யுண்டாக்கும், அதனு உடம்பு தேறி பல முண்டாகும். அன்றியும், பல வினத்தால் வேர்ப்பதையும் தடுக்கும் பிரசவித்த பெண் கள் உடம்பின் இரத்தம், விஷ மடையுங் காலத்து இது மிகச் சிறந்தது. இது மேற் பூச்சு மருந்தாக சில விரணங்களுக்கு உபயோகப் படுவது மன்றி தொண்டைக் கம்மல் பல் விறு நோய் இவைகளில் வாய் கொப் புளிக்கு நீராகவும் கொள்ளலாம், quinine prepared from cinchona bark — Quinia. It is an organic alkaloid forming the most Important active principle of the said bark, which consists of two varieties viz. yellow (Cinchona calisaya) and red (Cinchona succirubra). It holds a foremost place in fevers of whatever-type. In rheumatic and neuralgic affections which are not due to malaria, it is productive of good results. Amongst other diseases, it has been found serviceable in croup, whooping cough. the advanced stages of pneumonia, gangrene of the lungs, ophthalmia, iritis, erysipelas, dysentery. diarrhoea, cancrum oris. tetanus consumption etc. In small doses, it increases the appetite, especially in weak patients; and consequently It improves their general health

and stength. It also checks the sweating of extreme debility. it various septic conditions of the blood especially puerperal, it has been found of great value. Externally, it may be applied as a stimulant and antiseptic to unhealthy ulcers; and even used as a gargle in sore throat and as a dentrifice to spongy gums.

NOTE:—Its Therapeutic action:— In the advanced stages of exanthemata. it is of great service in re-establishing the strength and restoring tone to they system. It is best given in solution with sulphuric acid; and where the taste is objectionable or irritability of the stomach exists, in this form of pill. Its good effects are speedily manifested if taken in an empty stomach. It cannot prevent the relapse in relapsing fever Large doses of this may cause, buzzing in the ears, deafness, vertigo, wakefulness and sometimes nausea.

NOTE: 2.— Its Physiological actions:—

1. It exerts an inhibitory action in various fermentations and thus it aids the solvent operation of the gastrie juice.
2. It enfeebles or arrests the spontaneous movements of the colourless blood-corpuscles and check their emigration from the vessels.
3. In large doses, it paralyses the heart, causing a sudden fall of blood - pressure, convulsions and death.
4. It has a powerful sedative influence upon the spinal cord and brain by diminishing and finally abolishing reflex movements.
5. It lowers the heat of the body in healthy animals especially in cases of injection by checking oxidation within the organism.
6. It is fatal to the lowest forms of animal and vegetable life.

கொய்ஞ் னிகம், பண்ணைக் கீரை, cock's comb greens — Celosia cristata.

கொரங்கு, see குரங்கு.

கொரட்சி, பார்ப்பை, இது சுவாச காசத்தை நீக்கும் ஓர் மூலி, an unknown drug said to be remedy for asthma.

கொரணி, காட்டு வரகு, wild varagu (millet) Panicum remotum.

கொரண்டம், குறிஞ்சி, which see.

கொரண்டி, முட்குறண்டி, throny coranday —Lepidagathis genus. See குறண்டி.

கொரலி, வெள்ளைத் தினை, talian millet—Panicum glaucum.

கொராங்கரி, மல்லிகை, jasmine — Jasminum Sambuc.

கொராசானி, see குராசானி யோமம்.

கொரிகா, see கொடுக்காய் புளி.

கொரிகை, see எழுத்தாணிப் பூடு.

கொரிக் கடி,
கொரிக்கம்,
கொரிக் கலம், } see எழுத்தாணிப் பூண்டு.

கொரிக்கியம், பாற்கொழிஞ்சி, see கொழுஞ்சி.

கொரித் தலை, நிலவேம்பு, see கொம்மட்டி மாதுளம்.

கொரிந்தை, see காட்டுக் கத்திரி.

கொரிவி, see கோரன்.

கொருக்காப் புளி, see கொறுக்காய்ப்புளி.

கொருக்கு, see கொறுக்கு.

கொருக்கை, பனை யேறி மீன், a sea-fish so called from it's being dark like crow. See காக்கன்.

கொருடன், கோவைக் கொடி, a hedge creeper — Cephalandra indica: 2, கொல்லன் கோவை; 3, see காரை.

கொருணர் வாசம், வெண் கருங் காலி, egg. fruited ebony — Diospyros oocarpa,

கொலிப் பூடு, கொல்லிப் பூடு, any plant causing death, See கொல்லி; 2. see கோலி.

கொலு, சித்திர மூலம், Ceylon leadwort — Plumbago zeylanica.

கொலை, உயிர்வதை, பஞ்ச மா பாதகத்தி லொன்று, murder being one of the five great sinful acts; 2. காயத் திக்குணம் மூன்றி லொன்று, one of the three evil propensities relating to the body.

கொலைக் களம், கொலை செய்யுமிடம், slaughter house; 2. கொல்லப்படு மிடம், battle field where fighting men or killed.

கொலை சுற்றல், கொலை பாதகம் ஒருவனை பிடித்தல், being acted upon or affected destructively by the divine punishment as a retribution for the sinful act of murder committed by one in the past.

கொலை செய்தல், உயிர் வதைத்தல், murdering; killing.

கொலை பாதகம், see கொலை.

கொலைப் பைத்தியம், கொலை செய்யுந் தற்கிச்சை யுண்டாக்கும் பைத்தியம், homicidal insanity ; a form of mania characterised by a desire to commit murder ; an insane tendency to murder.

கொலை மலை, யானை, elephant.

கொலை மேற் கொள்ளல், முன் கருத்தோடு கொல்லுதல், imposing on oneself the duty of murder ; pre-meditated murder.

கொலை யிச்சைக் கிரகம், ஓர் வகைக் கிரக நோய், இதனால் நாசி யுயரல், நாக்கைக் கடித்தல், வெறிக்கப் பார்த்தல், கண்களில் நீர் வடிதல், மாறு ரூபம், முக விகாரம், உடம்பு மெலிந்து நாற்றம் வீசல், மேலும், தாகம் வயிற்றி லெரிவு ஞாபக பங்கம், நாற்ற வாந்தி, நவத்துவாரங்களிலும் இரத்த விழ்ச்சி ஆகிய விக் குணங்களையும் காட்டும் அன்றியும், மல மூத்திரத்தைப் பிசைதல் மார்பி லடித்துக் கொள்ளல் எதிரில் வருவாரை அடித்தல், கத்தி, தடி முதலியவைகளால் எறிதல், குளம், கிணறு இவைகளில் விழப் போதல் முதலிய கெட்ட செய்கைகளும் உண்டாகும் a kind of mania attributed to the influence of an evil planet to which the patient is subjected. It is marked by staring; biting the tongue, watery discharge from the eyes, change of features, ugliness of face, emaciation of the body followed by fetid smell, thirst; burning sensation in the stomach. loss of memory, fetid vomit, hemorrhage through the nine openings of the body etc. It is also characterised by mischievous activities for which the subject is in no way responsible such as, handling of feces and urine. beating the chest, striking persons on contacting them, assaulting with knife and stick, attempting to commit suicide by throwing himself into a well or tank, etc.

கொலை யுண்ணல், கொலை செய்யப் படல், being murdered or killed.

கொலை யோன், துரிசு, green vitriol.

கொலை வெறி, see கொலைப் பைத்தியம்.

கொல் வருத்தம், trouble ; 2. உலோகம், metal ; 3. கொலைத் தொழில், the act of murder.

கொல்லங் கொவ்வை, see கொல்லன் கொவ்வை.

கொல்லங் கோவை மூலம், see ஆகாச கருடன் கிழங்கு.

கொல்ல மருது, கருப்பு மருது, black murdah — Terminalia tomentosa (typica).

கொல்ல மா, கொட்டை முந்திரி, cashew nut tree — Anacardium occidentale; 2. see கொல்ல மாவு.

கொல்ல மாவு, ஆனைக் குரு, elliptic- leaved cinnamon — Machilus macrantha.

கொல்ல மிளகு, மேற்கித்தி மிளகாய், chilly from the coast — Capsicum fruitescens ; 2. கொல்லத்தில் விளையும் மிளகு, pepper grown in Quilon (Travancore).

கொல்லம் பாகல், see கொல்லன் பாகல்.

கொல்லன், கருமான், blacksmith ; 2. கொல்லன் கோவை

கொல்லன் கிட்டம், இரும்புக் கிட்டம், iron dross.

கொல்லன் குதம்பை, பலாமி, an unknown plant (?)

கொல்லன் கூதகம், பல்லிப் பூடு, lizard plant.

கொல்லன் கோவிகம், பின் துடரிப் பூடு இது ஓர் வசிய மூலி, sand-binder ; it is a magic plant. See ஆடை யொட்டி.

கொல்லன் கோவை, கருடக் கோவை, air-living bryony — Bryonia epigaea alias Corallocarpus epigaea ; 2, see காக்கணம். See ஆகாச கருடன் கிழங்கு.

கொல்லன் பகை, see அஞ்சன பாஷாணம்.

கொல்லன் பாகல், ஓர் வகைப் பாகல், a kind of bitter- gourd.

கொல் லாகிகம், செம் முள்ளி, yellow nail dye — Barleria prionitis.

கொல்லாக் கொலை, சித்திர வதை, causing of injuries short of death ; torment ; 2. கொல்ல வேண்டு மென்ற எண்ணத் துடன் செய்யாத கொலை, culpable homicide not amounting to murder.

கொல்லாமை, கொலை செய்யாமை, abstinence from killing.

கொல்லி, நெருப்பு, fire ; 2. ஆட் கொல்லி அதாவது பொன், gold ; 3, உயிரைக் கொல்லும் பூடு, — காக்காய்க் கொல்லி புழுக் கொல்லி முதலியன, plant which kills an

animal or any creature as, crow-killer, worm-killer, etc : 4. பாஷாணம், poison; 5. கொல்லுந் தன்மையது, anything of a destructive nature ; 6 மொழியின் இறுதிப் பெயராக வரும் போது இது அடியிற் கண்டபடி பல பூண்டின் பெயர்களைக் குறிக்கும், as plant's second term, it refers to the names of different plants as mentioned below :—

1. காக்காய்க் கொல்லி, crow killer — Anamirta cocculus.

2, புழுக் கொல்லி, worm-killer — Arislotachia bracteata.

3. கிருமி கொல்லி; devil's leucas — Phlomis zeylanica.

4. மீன் கொல்லி, fish-killer, the same as No. 1.

5. ஈர்க் கொல்லி, louse-killer — Asclepias microphylla.

6. பேன் கொல்லி, the same as No. 5.

8. பாம்புக் கொல்லி, snake-killer — Ruta graveolens.

8, வண்டு கொல்லி, ringworn shurb — Cassia alata.

9. சோறு கொல்லி, another variety.

கொல்லிகம், see ஆற்று முள்ளங்கி.

கொல்லிக் கிழங்கு, see கார்த்திகைக் கிழங்கு.

கொல்லிப் பாவை, மயக்கும் பெண், fascinating or alluring woman or damsel.

கொல்லி மலைக் கிச்சிலி, கொல்லி மலையின் மேல் விளையும் கிச்சிலிப் பழம், orange (tight jacket), grown in Kolli hills (Salam Dt.)

கொல்லு கொலை, கொல்ல வேண்டு மென்ற எண்ணத் துடன் செய்யும் கொலை, premeditated murder as opposed to கொல்லாக் கொலை, which see ; 2. படு கொலை, deliberate murder ; 3. கொடுங் கொலை, brutal murder.

கொல்லு மருந்து, உயிரைக் கொல்லு மருந்து medicinal agents causing death.

கொல்லு மூலி, உயிரைக் கொல்லு மூலிகை, any herb capable of causing or bringing about death.

கொல் லுலை, கொல்லன் உலைக் களம், blacksmith's forge.

கொல்லை, புன் செய் நிலம், dry field ; 2. புறக் கடை, backyard or small garden at the back of village houses ; 3. பூண்டின் முதற் பெயர், plant's first term as in கொல்லைப் பல்லி, 4. முல்லை நிலம், sylvan tract ; 5 மேட்டு நிலம், high ground not fit for artificial irrigation ; 6, மலங் கழிக்குமிடம், latrine or open ground for easing ; 7, மலம். stool.

கொல்லைக் கிருத்தல், மலங் கழித்தல் ; going to stool ; easting'

கொல்லைக் கீரை, see குப்பைக் கீரை, 2. கொல்லையில் விளையும் கீரை. greens grown in baakyard or garden of houses ; garden-greens.

கொல்லைக்குப் பல்லி, see கொல்லைப் பல்லி, as in ' கொல்லைக்குப் பல்லி குடிக்குச் சகுனி' a proverbial expression referring to the destructive nature of the plant being noxious to the growth of other plants sorrunding it.

கொல்லைக்குப் போதல், see கொல்லைக் கிருத்தல்,

கொல்லைக் கோவை, see கொல்லன் கோவை,

கொல்லைப் பயிறு, வயிற் பயறு. field gram ; wild horse-gram — Phaseolus trilobatus,

கொல்லைப் பயிர், கொள், மொச்சை முதலிய புன் செய் பயிர், grains of dry land such as gram, country bean etc.

கொல்லைப் பல்லி, நடி போட்டிப் பூடு, இதனருகே வேறு பயிர்கள் விருத்தி யாகாது ஆகையா லிப்பெயர் இது மாந்திரிகத்தில் மை செய்ய வுதவும். lizard plant — Strigia euphrasioides alias Buchnera asiatica It is so called because it is said to be noxious to the growth of corn. It is a parasitic plant useful in making magic paint. C.f. நின்றிடந் தீய்ஞ்சான், See கொல்லைப் பல்லி.

கொல்லை முதிரை கோதும்பை, wheat.

கொல்லை மை, கொல்லைப் பல்லிப் பூண்டைக் கொண்டு செய்யு மோர் மை, see கொல்லைப் பல்லி,

கொல்வாத் துவிக்கி, see ஆனை வணங்கி.

கொவலை, வெள்ளத் தகரை, sulphur flowered senna — Cassia glauca,

கொவித்தம், செம் முள்ளி, thorny nail dye. See கொல்லா கிகம்,

கொவின், வேல மரத்தைப் போன்ற ஓர் முள் மரம். இது மலையாளத்தில் விசேஷம். நீண்ட

காய். இதற்குள் 6-8 விதைகளுண்டு. பூ வெள்ளை; இதன் வெள்ளைப் பட்டையைக் கஷாயம் வைத்து நெஞ்சுப் படபடப்பு, காசம் முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு, white sundara — Acacia suma alias Mimosa frondosa. It is a thorny tree of the Acacia genus commonly found in Malabar, legumes linear, containing 6-8 seeds; flowers white. It is remarkably conspicuous for its white bark, the decoction of which is a remedy for palpitation of heart, asthma etc.

கொவ்வங் காய், see கொவ்வை.

கொவ்வை, கோவைக் கொடி, Indian caper — Coccinia india alias Cephalandra indica alias Bryonia grandis.

கொவ்வைக் காய்ப் பதம், இளம் பதம், a stage at which anything is selected when it is only tender and soft.

கொவ்வைக் கிழங்கு, கோவைக் கிழங்கு, root of கோவை which see.

கொவ்வைத் தண்டு, கோவைக் கொடியின் தண்டு, the stem of Indian caper.

கொவ்வைப் பழம், see கோவைப்பழம்.

கொவ்வை யங்கனி, see கோவைப் பழம்,

கொழிஞ்சி, கிச்சிலி, common orange — Citrus aurantium; 2. கொழிஞ்சி நாரத்தை அதாவது தித்திப்பு நாரத்தை, sweet bigarade orange — Citrus aurantium biga — radia; 3. கொள்ளுக் காய் வேளை, purple wild indigo or Zanzibar indigo — Tephrosia purpurea alias T. villosa; 4. பூ, வெளித் தோன்றா அல்லது பூவாது காய்க்கு மரம், trees which bear fruits whithout blossoming or which conceal their flowers in the receptacle such as fig etc. See கோளி,

கொழிஞ்சினி, நாய் வேளை இதுவே நாய்க் கடுகு, dog mustard plant — Cleome viscosa.

கொழித மேனி, குப்பை மேனி, see கோழிப் பூண்டு

கொழிதா கிகம், முன் துடரி அல்லது நாயுருவி இது பின் துடரியைப் போன்ற ஓர் வசிய மூலி, Indian burr — Achyranthes aspera. It is supposed to have magic virtues; and is opposed to பின் துடரி, that which causes one follow, See கொல்லன் கோவிகம்.

கொழித்தல், ஆராய்தல், testing; 2. தெள்ளுதல், sifting by jerks in a winnowing fan; 3. கொப் பளித்தல், gargling; 4. மேலெழும்பல், rising up to the surface.

கொழிப் பாயாசம், see காஞ் சொறி.

கொழிப் பூ, see கொழிப் பூண்டு.

கொழிப் பூண்டு, குப்பை மேனி, rubbish plant — Acalypha indica.

கொழி மணல், சன்ன மணல், fine sand; 2. மெருகு மணல், goldsmith's sand.

கொழிய லரிசி, சரியாக குத்தித் தீட்டாத படாத அரிசி, rice not passed through the process of pounding and winnowing: rice improperly pounded and winnowed; 2. தவிடு படாத அரிசி, rice not well beaten and cleaned with pounder for the purpose of removing the bran.

கொழி யால் மட்டி, சிவப்பு, red colour.

கொழு, கொழுப்பு, fat; 2. துளை யிடும் ஊசி, boring needle; 3. உலோகக் கோல், bar of metal; metallic rod.

கொழுக்கச் செய்தல், போஷித்தல், feeding luxuriously; pampering.

கொழுக் கட்டை, வெல்லம், தேங்காய் அல்லது வெந்த பண்டம் கலந்த பூரணத்தை அரிசி மாவால் பொதிந்து வேகவைத்த பலகாரம், இதற்கு மோதகம் என்றும் பெயர், a soft round, semi - coloured, steam - baked cake It is a composition of jaggery or sugar and cocoanut scrapings mixed with other boiled grains etc, inclosed in rice-flour wafer.

கொழுக் கட்டைத் தேக்கு, see கொல்லிக் கட்டைத்தேக்கு,

கொழுக் கட்டைப் புல், மாடுகள் கொழுக்கும் படிச் செய்யும் அடித் தண்டுடைய புல். a kind of grass, the stem or root of which is very nutritious for cattle — Pennisetum chenchiroides:

கொழுக் கட்டை மந்தாரை, ஓர் வகை மந்தாரை. a kind of ebony — Bauchinia genus.

கொழுக் கரி, கொழுந்து விட்டெரியக் கூடிய கரி, dense or solid charcoal capable of burning with flame.

கொழுக் கரியி லூதல், நின் றெரியுங் கெட்டிக் கரியி லூதல், blowing as gold or silver in dense or solid charcoal.

கொழுக் கொம்பு, கொடி படருவதற்கு நாட்டும் கொம்பு, a stick used as a prop for a climbing creeper as vines; 2. நடுக் கொம்பு, the straight and middle stem of a tree.

கொழுங் காதிகம், பீ நாறி, fetid tree — Sterculia foetlda.

கொழுங் கிகா மல்லிகை, jasmine — Jasminum sambuc.

கொழுங் கிரி, மல்லிகை, see கொழுங்கிகா, 2. பீர்க்கு, a gourd of luffa genus.

கொழுச்சி, see கொழுஞ்சி.

கொழுஞ்சி, நாட்டுக் கிச்சிலி அல்லது சீனக் கிச்சிலி, இம் மரம் 20-25 அடி; இதற்கும் எலுமிச்சைக்கும் பார்வையில் சிறிது வித்தியாச முண்டு. இம் மரம் அனேக வருஷ வரைக்கு முள்ளது; 600 வருஷத்திற்கு மேல் மதிப்பிட்டிருக்கிறார்கள், வெள்ளைப் பெரியபூ இதன் இரசம் சீமை எலுமிச்சை இரசத்திற்கும் பதிலாக உபயோகப்படுத்தப் படும். இதன் தோல் உடலுக்கு வலிவும், பலவிர்த்தியும் தரும். வேனிற் காலத்தில், இதன் ரசத்தைப் பக்குவப் படுத்தி பானமாகக் கொள்வார்கள்; இது எலுமிச்சை இரசத்தை விட நல்லது, common country orange or China orange tree — Citrus aurantium alias Aurantium orientale. Tree 20-25 ft; differs a little in appearance from the lime tree (Citrus medica). Tree attains great age; and it is estimated to upwards of 600 years, flowers white, large. The juice is used in lieu of British lemon-juice. The dried outer portion of the rind of the fruit (auranti cortex) is a stomachic and a tonic. Syrup made with the juice of ripe-fruit is a favourite beverage in hot weather. It is safer than the lime juice. See also கிச்சிலிப் பழம்.

கொழுஞ்சி, see கொழிஞ்சி: 2. நாய் வேளை, dog mustard — Cleome viscosa; 3. see கொள்ளுக்காய் வேளை.

கொழுஞ்சி சோளம், முத்துச் சோளம் ripe, milet — Sorgham vulgaris.

கொழுஞ்சி நாரத்தை, கிச்சிலிப் பழம், see கொழுஞ்சி.

கொழுஞ்சிப் பழம், see கொழுஞ்சி.

கொழுஞ்சியடி வண்டு, கொழுஞ்சி மரத்தின் அடியில் முளைத்திருக்கும் எருக்கஞ் செடியில் பற்றி நிற்கும் ஓர் வகை வண்டு. இது குரு முறைக் கொடுத்தது; a kind of beetle frequenting the madar plant grown under the orange tree. This is very useful for preparing universal quintessence medicine.

கொழுஞ் சுடர், துரிசு, blue vitriol — Copper sulphate; copper acetate.

கொழுதுதல், குடைதல், scooping out; 2. பறித்தல், culling; 3. கிழித்தல், tearing.

கொழுத்த, பருத்த, obese; fatty.

கொழுத்த சாப்பாடு, உயர்ந்த உணவு, rich meals.

கொழுத்த முரல், திருவன் கோலா மீன். இது 7 அங்குல நீளம், a sea-fish called half-beak — *Hemiramphus limbatus*. It is 7 inches long.

கொழுத்தல், உடம்பு தெளிந்து பருத்தல், becomming fattened; 2. குழம்பா யிருத்தல், being of thick consistency; 3. மதத்தல், becoming sexually excited.

கொழுத்த ஈரல், கொழுப் படைந்த ஈரல், liver with fatty accumulation — Adiposis hepatica.

கொழுத்த வுடம்பு, பருத்த தேகம், corpulent body.

கொழுத் தாடை, கரும்பின் மேல் பாகம், the top portion of sugar-cane stalk.

கொழுத்துப் போதல், கொழுப் புண்டாதல், growing fat; fattening.

கொழு நீர், அதிகமாக புளித்த கள், highly or excessively fermented toddy; 2. வியர்வை perspiration.

கொழுந் தரும்பு, பூக்களில் முதலாக வுண்டாகும், அரும்பு, the first shoot or growth in a flower; bud.

கொழுந் திலை, தளிர், tender leaf; 2. தேயிலை tea — Camellia tea.

கொழுந்தி லோதியம், பே ரகத்தி, west Indian sesbane — Sesbania grandiflora.

கொழுந்து, see கொழுந்திலை; 2 மருக் கொழுந்து. maid's love — Artmesia abrotanum; 3. கொழுந்து வெற்றிலை, tender betel leaf; 4. தீச் சுவாலை, fire flame; 5. மென்மை, softness; 6. அக்கினிக் கொழுந்து, flame of fire; 7. சுடர்க் கொழுந்து, flame or lamp 8. இளந் தளிர், tender shoot of twig; 9. வெற்றிலைக் கொடி, betel-vine.

கொழுந்துக் கால், கொடிக்கால், pole intended to support climbing of betel creeper

கொழுந்துடை மாது, see ஊர்க் கள்ளி.

கொழுந்துதல், வெயிலினால் சறுகுதல் அல்லது தீய்தல், being scorched or burnt by the sun; 2. கொழுந்து விட்டெறிதல், burning with a brilliant flame; 3. பழுக்கக் காய்ச்சப் படுதல், being heated to redness as iron in a forge.

கொழுந்து மணல், மென் மணல், soft sand with which goldsmiths clean jewels.

கொழுந்து விடுதல், கொழுந்துவிடல், casting out flames or flashes; 2. கொழுந்து விட்டெரிதல், blazing up: sending forth a bright and expanded light; 3. தளிர்விடல், putting forth buds.

கொழுந்து வேர், இளவேர், tender and slender root.

கொழுந் தொட்டி, see ஒட்டுப் புல்

கொழுப் படைத்தல், தொண்டையிற் கொழுப் படைத்தல், இதனால் மூச்சு விட கஷ்டப் படும் obstruction of the throat by fatty tissue which renders respiration difficult

கொழுப் பான. நிணமுள்ள, lardaceous; plumpy.

கொழு பிறக்குதல், உடம்பின் நிணத்தைப் போக்கல், causing to lose excessive fatness; 2. ஒல்லியாகச் செய்தல், reducing to leanness; 3. நிணம் வாங்கல், extracting fat from any animal.

கொழுப்பு, ஆட்டுக் கொழுப்பு, suet; 2. நிணம், fat — Omentum; 3. கொழுப்புத் தன்மை, obesity; 4. தடிப்பு, corpulency; 5. திமிர், virility; 6. மதர்ப்பு, fecundity.

கொழுப்பு, உண்ணும் உணவினாலே உடம்பிலேற்படும் நெய்ச் சத்து. இந் நெய்யே உறைந்தால் கொழுப் பெனப்படும். இது உயிர்ப் பிராணிகளுக்கே மிகவும் உரித்தானது. உணவின் நெய்ச் சத்து வயிற்றில் புகும் பொழுது உதரத் தீயினால் பெருங் கட்டிகளாக வெளிப்பட்டவுடன் பித்த நீர், கணைய நீர் இவைகளின் தொழிலால் சிறு தூள்களாகப் பிரிந்து அன்ன ரசக் குழம்பிற் கலந்து இராசாயனி வழியாய் இரத்தத்தைச் சேரும், இவ்விரத்தத்தி னின்று, பேசிகளை யடைந்து அவ்விடங்களில் தங்கி நிற்கும் போது கொழுப் பெனப்படும். உடம்பில் சிற்சில பாகங்களில் பேசிகளைச் சூழவும், அவைகளுக்கிடை வெளிகளிலும், மஞ்சள்நிறமான ஒருவித கொழுப் பிருக்கிறது இக்கொழுப்பு மிகுதியால் தான் குழந்தைகள், வாலிபர்கள் ஆகிய இவர்களின் உடம்பு திரண்டு புஷ்டியாயிருக்கும். வயது சென்ற மனிதரில் இது மெத்தக் குறைவு. ஆகவே உடம்பை அந்தப் படுத்த இதுவோர் இன்றியமையாத வஸ்து இக் கொழுப்பின் மிகுதியால்தான் உடம்பு பருத்து பற்பல அசௌகரியங்களும், நோய்களும் உண்டாகும். காரணம் என்னவெனில், கொழுப்பு பண்டங்களைச் சாப்பிட்டு உழைப் பில்லாமல் இருப்பது தான். இக் கொழுப்பு, உடம்பில் பரவி எங்கும் சமமாய் இராமல் சில உறுப்புகளாகிய இருதயம், மூளை, இவ்விடங்களில் மாத்திரம் தங்குவதால், மயக்கம், சன்னி முதலிய நோய்கள் கண்டு அபாயத்தை விளைவிக்கும். ஆகையால் குறைந்த வுணவும் மிகுதியான உழைப்பும், கொழுப்பு பண்டங்களை நீக்குதலுமே, இக் கொழுப் பேறலைத் தடுக்கக் கூடிய வழிகள்; இவைகளைத் தவிர வேறல்ல. உடம்பில் இக் கொழுப்பு அதிகப்படுவதால் தான் மந்த புத்தி, மூடத்தனம், அகங்காரம், மமதை, கர்வம் முதலிய உடற் குற்றங்களுக்குக் காரணமாகும். ஆகவே, யோகிகள் இக் குற்றங்களினின்று விலகி, அற்ப உணவுகளை சொற்பவளவாக ஏற்படுத்திக்கொண்டு ஒருவேளைப் புசித்து பத்தியமாக இருப்பார்கள். காய கற்பத்துக்கு ஆகார முறை முக்கியமானதால், இதைப்பற்றி சித்தர் நூற்களில் விரிவாக காணலாம். மேலும் இக் கொழுப் பென்னும் சொல் மொழிக்கு இறுதியாக வரும்பொழுது அடியிற் கண்டபடி பல விதமாக அர்த்தங்கள் கொள்ளும், fat is an oil which is concrete or solid at ordinary temperature (stearin) belonging principally to the animal kingdom. The fat of the food when entering the stomach is melted by its heat: and the drops run together into large masses. By the combined action of the bile and pancreatic juice, these large drops of fat in the intestines are emulsified i. e. broken up into exceedingly minute particles; and give a white and milky colour to the chyme which is then called chyle. The lymphatics of the intestines take this chyle into the blood from which fats are given up to the tissues. In some parts of the body, the muscles are found covered with yellow fat. Children and adults possess excess of

this fat; and consequently their bodies are found well-sharped and formed; but this will be found absent in aged and old persons. So, fat is the most essential factor in giving shape and beauty to the animal body. Persons grow very stout due to increase of this fat which not only gives rise to inconvenience, but sometimes constitutes disease. The cause is taking too much of fat-forming food. When fat is equally distributed, no immediate disadvantage is experienced; but the real danger comes in only when it is accumulated in certain parts as heart and blood vessels of the brain, thereby giving rise to fatty infiltration of the heart marked by attacks of giddinees and that of the brain by apoplexy. So, the only prevention is less food and more exercise and avoidance of fat-forming food. Excessive accumulation of fat in the system is said to be the cause of bodily defects such as, dull intellect, foolishness or stupidity, egoism, arrogance, pride etc; and so. Yogis are wise enough to remain precluded from these evils, by restricting their diet to a limited quantity of light food and that once a day. The principles involved herein are elaborately dealt with in the Siddhar's science, as diet plays an important role in rejuvenation. Moreover, this term 'fat' as a soffix has various significances indicating fats of different animals, fat covering different parts of the body, its nature, the mode of its formation, as also, bodily defects, diseases arising from it etc., are mentioned below:—

1. ஆட்டுக் கொழுப்பு, sheep fat; suet.
2. மாட்டுக் கொழுப்பு, ox or cow's fat.
3. பன்றிக் கொழுப்பு, hog's lard.
4. கரடிக் கொழுப்பு, bear's fat.
5. மான் கொழுப்பு, deer's lard.
6. புலிக் கொழுப்பு, tiger's fat.
7. கடலாமைக் கொழுப்பு, turtle's fat.
8. மீன் ஈரல் கொழுப்பு, shark-liver oil.
9. தவளைக் கொழுப்பு, frog's fat.
10. காட்டுப் பாம்புக் கொழுப்பு, wild serpent's fat.
11. உடும்புக் கொழுப்பு, guana's fat.
12. மயில் கொழுப்பு, peacock's fat.
13. உருக்கி யெடுத்த கொழுப்பு, fat melted and seperated from its membraneous matter — Tallow.
14. கெட்டிக் கொழுப்பு, hard fat — Sebum as distinguished from the soft fat or grease of animals — Adeps.
15. சுற்றுக் கொழுப்பு, fat covering the colon.
16. குண்டிக்காய் கொழுப்பு, the fat of the kidneys — Sevum ovillum.
17. கண் கொழுப்பு, fat in the eye-sockets. pride (slang).
18. தொண்டைக் கொழுப்பு, fat in the throat obstructing respiration.
19. குண்டி (சூத்து)க் கொழுப்பு, abnormal accumulation of fat about the thighs and buttocks; fat in the genital organs and the rectum supposed to induce or tempt one to do perverse acts (slang).
20. இரத்தக் கொழுப்பு, fat in the blood.
21. குடற் கொழுப்பு, fat covering the villi of the small intestines and the colon.
22. தலை அல்லது மண்டைக் கொழுப்பு, fat supposed to be in the head or that covering the skull used figuratively for pride; fat head also refers to dullness or stupidity (slang).
23. வயிற்றுக் கொழுப்பு, fat in the stomach.
24. இருதயக் கொழுப்பு, fat covering the heart.
25. தின் கொழுப்பு, fat due to food substance.
26. ஊட்டக் கொழுப்பு, fat enriched by nutritious food i. e. vital food-stuffs.

27. தசைக் கொழுப்பு. fat adhering to the muscles,

28. மூத்திரக் கொழுப்பு, presence of fat in the urine — Lipuria.

29. அதிகக் கொழுப்பு, an excessive proportion of fat in the tissues Lipomatosis.

NOTE :—Fat is the oily concrete substance covering the connective tissues of animal bodies. It is chiefly composed of carbon; hydrogen, and oxygen only. In Tamil Medicine, the fat mentioned above in Nos. 1—12 is used in medicinal preparations and also as external applications in some diseases ; whereas Nos. 16—24 refer to the fat in the various organs said the human body : some of which are figuratively used for bodily defects said to be caused by it such as pride, arrogance, mischievous activities, perverse acts, dullness, stupidity etc.

NOTE ;— 2 — Fixed fat is also found in vegetable oils and they are extracted generally from (1) seeds (2) kernels (3) berries (4) nuts (5) fruits and the following are the names of specimen plants from which each of the said five kinds of fixed fat are extracted :—

1. Mohwah seed — Bassia latifolia.
2. Cocoanut kernel — Cocos nucifera.
3. Indian berry — Anamirta cocculus.
4. Cashew nut — Anacardium occidentale.
5. Alligator pear fruit — Persea gratissima.

கொழுப்புக் கரைதல், உடம்பிலுள்ள கொழுப்புச் சத்தின் அளவு நாளுக்கு நாள் குறைதல் deterioration or disappearance of the fatty substance in the tissues , the splitting up of fat.

கொழுப்புக் கொள்ளல், கொழுத்தல், becoming or getting fat ; 2. கொழுப்பை இழுத்துக் கொள்ளல், absorbing fat.

கொழுப்புக் கட்டி, கொழுப் பிருக்கும் சவ்வானது வளர்ந்து ஆரம்பத்தில் முடிச்சு போல் எழும்பி பிறகு நாளா வட்டத்தில் பெரிதாகுமோர் கட்டி, a tumour consisting of a mass of fatty matter enclosed in a thin capsule which, at first, resembles a knot and then developes gradually into a large swelling — Lipoma.

கொழுப்புக் கல், மிருதுவான ஓர் சிவப்புக் கல் a soft and red stone ; liver-coloured stone. See ஈரற் கல்,

கொழுப்புக் கழலை, see கொழுப்புக் கட்டி 2. see கொத்துக் கழலை, பிடுக்கில் உண்டாகும் கொழுப்புக் கழலை, a fatty scrotal tumour.

கொழுப்புக் குடல், கொழுப்புப் பற்றிய குடல் intestine with a coat of fat.

கொழுப்புக் கேடு, கொழுப்புச் சத்து சிதைதல் necrosis of the fatty tissue — Fat necrosis.

கொழுப்புத் சதை, கொழுப்புப் பற்றிய சதை, flesh loaded with fat.

கொழுப் புண்டாதல், see கொழுப்புப் பிடித்தல்.

கொழுப்புப் பிடித்தல், கொழுப் புண்டாதல், formation of fat — Lipogenesis.

கொழுப்புப் பிண்டம், கொழுப்பு திரட்சி. இது பிணங்கள் தண்ணீரில் நாட்பட கிடந்து அழுகுவதாலும், ஈரமண்ணில் புதைந்து கிடப்பதாலு முண்டாகும், a soft. unctuous or waxy substances formed from the decomposition of dead bodies under certain circumstance as long immersion in water, burial in moist earth etc, — Adipocere ; 2. உறைந்த கொழுப் புருண்டை, a lump of congealed fat — Keech.

கொழுப் புளுத்தல், see கொழுப்புக் கேடு.

கொழுப்பு மயக்கம், உடம்பில் கொழுப்பினு லேற்படும் மயக்கம் அல்லது மூர்ச்சை, faintness or swooning due to fat in the system.

கொழுப்பு மிஞ்சுதல், உடம்பில் கொழுப்பு அளவு கடந்து சேர்தல், excessive accumulation of fat in the body — Obesity. See கொழுப் பேறதல்.

கொழுப்பு மூத்திரம், கொழுப்புக் கலந்த மூத்திரம். இது குண்டிக் காய் நோயினு லேற்படும், urine marked by the presence of fat in it arising from the disease of the kidney — Lipuria.

கொழுப் புள்ள, புஷ்டியான, corpulent.

கொழுப் பெடுத்தல், உடம்பின் கொழுப்பை நீக்கல், removing the fat from body.

கொழுப் பேறல், கொழுத்தல், having excess of fat. See கொழுப் பேறுதல்.

கொழுப்பு பேறுதல், உடம்பில் கொழுப் புண்டாதல், becoming corpulent or growing excessively fat ; 2. திமிர் கொள்ளல், exhibiting the power of procreation ; 3. மதர்த்

தல், becoming sexually excited ; 4. உடம்பில் கொழுப்பு அதிக மாதல், increase of bodily fat.

கொழு மரம், செம் மரம், see அழிஞ்சில் மரம்.

கொழு மாமிகம், பேரவுரி, a variety of indigo plant with large leaves.

கொழு மிச்சன், see கிச்சிலி, 2. see கொழுஞ்சி.

கொழு மிச்சை, நாரத்தை, bitter orange ; 2. கடார நாரத்தை, citron ; 3. ஓர் வகைக் கிச்சிலி, Sylhet orange — Citrus aurantium (nobilis-chrysocarpa).

கொழு மீன், உப்பு நீர்க் கழிகளில் உலாவு மோர் கடல் மீன், a sea-fish found *frequenting* back-waters.

கொழு முதல், வேரண்டை காணப்பட்ட மரத்தின் பருந்த அடி பாகம், the stout stem of a tree found at the root above the ground level.

கொழு முறி, இளந் தளிர், tender shoot

கொழுமை, கொழுப்பு, obesity : 2. குளிர்ச்சி, coolness ; 3. அழகு, beauty : 4. நிறம், colour.

கொழுமையாய் வளர்த்தல், குழந்தை சதை பிடிக்கும்படி நல்ல உணவு கொடுத்தல், nourishing a child with rich food ; 2, ஆடு மாடு கோழி இவைகள் கொழுக்கும் படி வளர்த்தல், rearing cattle and poultry so as to make them plump by rich feeding.

கொழு மோர், இரும்புக் கரண்டிக் காம்பைச் சிவக்கக் காய்ச்சி முறித்த மோர். இது பயந்த குழைந்தைகளுக்குக் கொடுக்கப் படும், butter-milk which is neutralised or otherwise rendered inert by thrusting into it, the red-hot handle portion of an iron spoon. It is generally given to children affected with shock,

கொழும் புகா, நன்னாரி வேர், Indian sarsaparilla — Periploca indica.

கொழும் புகை, வாசனைப் புகை, fragrant smoke ; incense ; 2, நறும் புகை' perfume.

கொழும்பு, காகதாளி, ஆச்சா, Ceylon ebony — Diospyros ebenum.

கொழும்புக் கொட்டை, இலங்கையில் லுற்பத்தி யாகும் காப்பிக் கொட்டை, Ceylon coffee — Coffea arabica (nalknad).

கொழும்பு கொட்டைக் களா, ஈழ தேசத்துக் கொட்டைக் களா, Ceylon plum — Flacourtia ramontchi See கொழும்புப் பழம்,

கொழும்புக் கோப்பி, இலங்கைக் காப்பிக் கொட்டை, Ceylon coffee, See கொழும்புக் கொட்டை.

கொழும்புச் சவ்வரிசி, இலங்கை பனையி லிருக்கும் சவ் வரிசி, Ceylon sago, a product of Ceylon sugar-palm-Arenga saccharifera.

கொழும்புச் சாராயம், தென்னங் கள்ளி னின்று வாலையினிட் டிறக்கிய சாராயம். இதில் போதைச்சத்து மிகுதியாக வுண்டு. இது கொழும்பினின்று கொண்டு வரப்படும். Colombo arrack distilled from the juice of cocoanut palm. It contains 42% of alcohol. It is exported from Colombo.

கொழும்புச் சிவ கரந்தை, சுரக் கரந்தை, fever toolsy or Ceylon toolsy — Sphaeranthus zeylanicus.

கொழும்புச் சேவகன், இலங்கையிற் உற்பத்தி யாகும் சிற்று முட்டி. Ceylon pavonia- *Pavonia zeylanica*,

கொழும்புத் தேங்காய், ஈழத்துத் தேங்காய், Ceylon cocoanut — Cocos nucifera (zeylanica).

கொழும்புத் தேயிலை, இலங்கைத் தேயிலை, *Ceylon tea or* Indian tea — Camellia thea ; 2. கருக்கு வலி. deccany olive *wood — Elaedendron glaucum*,

கொழும்பு நாரத்தை, ஈழத்து நாரத்தை, green orange of Ceylon — Citrus aurantium (melano carpa).

கொழும்பு நாதல், வெண ணுவல், white jau*mon* — Eugenia zeylanica,

கொழும்புப் பட்டை, ஈழத்து இலவங்கப் பட்டை, Ceylon cinnamon — Cinnamomum zeylanicum.

கொழும்புப் பழம், ஈழத்துக் கொட்டைக் களா இதற்கு மோரிஸ் கொட்டைப் பழம் என்றும் பெயர். இதன் கொட்டையை மஞ்சளோடு சேர்த் தரைத்துப் பூச, பிரசவித்த பெண் களுக்கு உடம்பில் ஈரந் தங்காது. இதன் முள் அம்மைப்பா லெடுக்க வுதவும், Ceylon plum — Flacourtia ramontchi, It is also known as Mauritius plum, The nut of this fruit ground with turmeric, is prescribed for lying-in women to prevent absorption of moisture in the system. The thorn is used for taking out vaccine virus.

கொழும்புப் பனை, ஈழ தேசத்துத் தாளிப் பனை, Ceylon fan tree; Ceylon talipot—Corypha umbraculifera. See தாளிப் பனை.

கொழும்புப் பாக்கு, பச்சை கொட்டைப்பாக்கு raw areca-nut.

கொழும்புப் பாசி, இலங்கை கடற்பாசி. இது உணவிற் குதவும். இவ்வினத்தைக் கொளுத்தி சோடா வுப்பும், ஐடின் சத்தும் எடுக்கலாம். Ceylon moss — Gracilaria greville alias G, lichenoides. It is an edible sea-moss weed. Almost all the plants of this class yield soda and iodine on inceneration.

கொழும்புப் பிசின், சோலைப் புளி, Ceylon gamboge — Garcinia morella.

கொழும்பு மரம், பூ மரம், இதுவே கூடம் பாதிரி, கொஞ்சி அல்லது பூவத்தி, Ceylon oak, hill trumpet flower or flowering fig—Schlelchera trijuga alias S. pubescens. See திருக்கொணமலை மரம்.

கொழும்பு முல்லை, நந்தியா வட்டம், Ceylon jasmine — Tabernaemontana carnoaria,

கொழும்பு வேர், சீன வேர், இதற்கு சோப்சீனி யென்று யூனானிப் பெயர். மலையாளத்தில் கிடைக்கும். இது கசப்பு, மிக்க வாசனை; இவ் வேர் உடம்பிற்கு பலத்தையும், குடலுக்கு வலிவையும் உண்டாக்கும். இதை நன்னாரியைப் போல் உபயோகப் படுத்தலாம். இதைக் கஷாயமிட்டு வாத வலி, காக்கை வலி, மேகக் கிரந்தி முதலிய நோய்களுக் குபயோகப் படுத்துவதுண்டு. Colombo root; China root — Cocculus palmatus alias Radix columbiae. In Unani, it is known as Chob China or Chob-Chini. it is obtained in Malabar. It is bitter in taste. strong in smell; and is a valuable tonic and stomachic. It is to some extent used like sarsaparilla. A decoction prepared from this is prescribed by Vaidyans for rheumaistm, epilrpsy, syphilis etc.

கொழும்பு வைரம், துவரை மல்லி. இது ஈழ தேசத்து ஓர்வகை வைரம் போன்ற கல், a mineral of Ceylon esteemed in jewellery.

கொள கொளத்தல்; இளகல், becoming soft and loose by being over-riped; 2. அழுகல், putrifying or becoming rotten; 3. உடம்பின் சதை தளர்ந்து மெதுவாதல், getting relaxed and soft as muscles through old age or disease. See தளதளத்தல்.

கொள கொளனெல், இளகி, அல்லது அழுகியிருக்கும் தன்மை, the state of being over riped or putrified.

கொளஞ்சி, see குளஞ்சி.

கொளவி, see அதி மதுரம்.

கொளிஞ்சி, see கொள்ளுக்காய், வேளை.

கொளு, பழுவெலும்பு, rib-bone.

கொளு கொளுத்தல், see கொள கொளத்தல்.

கொளுக்கட்டைத் தேக்கு, see கொள்ளிக் கட்டைத் தேக்கு.

கொளுங் குவி, வேலிப் பருத்தி, hedge cotton —Dacmia extensa; 2. பன்றி மொத்தை, pig root —Trapa bisipinosa.

கொளுஞ்சி, see கொழிஞ்சி,

கொளுஞ்சி நாரத்தை, கொடி நாரத்தை, see கொழிஞ்சி நாரத்தை.

கொளுத்தல், see கொளுத்துதல்.

கொளுத்து, உடற் சந்து, the several joints of the body,

கொளுத்துதல், தீ மூட்டல், igniting; kindling fire; 2. வெய்யிற் கடுமையாகக் காய்தல், burning as the sun.

கொளுத்து வெயில், தீப் பற்றும் வெயில், burnig or scorching sun.

கொளுந்தல், எரியப் பண்ணல், causing to burn.

கொளுந்துதல், தீப் பற்றல், taking fire: being burnt.

கொளுப்பு, see கொழுப்பு.

கொளுவல், குடல் வலி, abdominal pain; 2. குடலிசிவு, cramp of the bowels.

கொளுவு, இசிவு, cramp; 2. நெருப்பு, fire.

கொளுவுதல், குடலிசிவு கொள்ளல், having cramp in the bowels; 2. நெருப்பு மூட்டுதல் kindling fire.

கொள், குதிரைக் கொள்ளு, horse-gram-Dolichos uniflorus alias, Glycine tomentosa; 2. see குடை வேல். 3. சிறு விடுகொள் அல்லது பெரு விடு கொள்; இது அவுரி இனத்தைச் சேர்ந்தது போலும். இவ் விதைகளினின்று மை தயாரித்து கண்களுக்குத் தீட்டலாம், an unknown plant probably referring to indigo seed, used as a

collyrium in diseases of the eyes; 4. பண்டைய காலத்து ஓர் நிறை அளவு, a small weight for weighing, used in olden days; 5. கொள்ளு தானியம், இது பல வகைப்படும். gram (grain) in general. It consists of different kinds:—

1. **கருங் கொள்**, black gram — Cassia absus.

2. **காட்டுக் கொள்**. wild gram — Glycine suaveons: jungle horse — gram — Atylosia scarasbaeoides

3. **கார் கொள்**, see **கருங் கொள்**.

கொள் கலம், மருந்து, தைலம், சூரணம் முதலியவைகள் இடும் ஓர் வகைப் பாத்திரம். a vessel for holding (medicine, oil, powder etc); a vessel in which anything is contained — Conceptacle; 2 உண்ணுங் கலம், a plate or dish for eating; eating-dish; 3. கொள்ளு வேக வைக்கும் பானை, pot in which horse — gram is boiled.

கொள் கொம்பு, see **கொழுக் கொம்பு**.

கொள் காட்டு, ஓர்வகை மொச்சை, ciliate leaved horse - gram—Dolichos ciliatus 2. உண்ணுவதற்காக சமைக்கப்பட்டது, that which is cooked for eating.

கொள்ளம், களி மண், clay; loam,

கொள் ளம்மை, காய்ச்சல், பிதற்றல், சன்னி, முதலிய குணங்களுண்டாகி, மூன்றும் நாளில் சிரசில் குரு தோன்றிப் பிறகு குரு முதிர்ந்து 13-ம் நாளில் இறங்கி, பக்குகள் உதிரும் ஓர் அம்மை, a kind of small-pox marked by eruptive fever, raving, delirium, fits etc. in this, the eruptions make their appearance on the third day; and then pimples are developed to the size of horse-gram and become vesicles with watery head: and lastly they dry up on or about the 13th day when the scabs fall of. C. f. பயறம்மை.

கொள்ளல், உட்கொள்ளல், taking in; 2. சாப்பிடுதல் அல்லது குடித்தல், eating or drinking; 3. உயிர் கொள்ளல், animation, 4. வேர் கொள்ளல், taking root; 5. நோய் கொள்ளல், being affected with illness; contracting a disease,

கொள் ளளவு, பிடிக்கு மளவு, as much as can be held - Capacity; 2. உட்கொள்ளு மளவு, as much quantity as could be swallowed ro eaten.

கொள்ளான், see **கொள்**.

கொள்ளாக் கொள்ளி, அடங்காப் பசியுள்ளோன், one having excessive hunger and indulges in eating too much—Glutton.

கொள்ளாத நோய் கொள்ளல், குணப்படாத நோயால் பிடிக்கப் படல், being seized with an incurable disease; 2. குட்டங் கொள்ளல், being attacked with leprosy.

கொள்ளி, கொள்ளிக் கட்டை, fire - brand; 2. நெருப்பு, fire; 3. see எருமை நாக்கி, கல் லுப்பு, sea - salt; 5, மூலை யுப்பு, quintessence salt; 6. அவுரி; Indigo plant — Indigofera tinctoria; 7. புன்கு, Indian beech — Pongamia glabra; 8. அலரி, oleander,

கொள்ளிகம், see **அவுரி**.

கொள்ளிகை, **எருமை நக்கி**. which see.

கொள்ளிக் கட்டை, எரி கொள்ளி, fire-brand.

கொள்ளிக் கட்டைத் தேக்கு. பேதக நாறி மரம், இது ஓர் சிறிய மரம்; சிறிய வெள்ளைப் பூ. இதின் இலை மூத்திரத்தைப் போக்கும். பாண்டு ரோகத்தில் உள்ளுக்கும், வெளிக்கும் பிரயோகிக்கலாம். நாட்டு வைத்தியர்கள் இவ்விலையை வெள்ளாட்டு மூத்திரத்தில் அல்லது வெங்காயச் சாற்றில் ஊறப் போட்டு உபயோகிப்பார்கள். இதைக் கடுக்காயோடு சேர்த்துக் கஷாயமிறக்கி மலக் கட்டுக்குக் கொடுப்ப துண்டு, fire-brand teak — Premna tomentosa. It is a small tree; flowers, small, white; leaves medicinally diuretic; they are given internally and also applied externally in dropsy. Vaidyans use them soaked in goat's urine or in onion joice. A decoction of the leaves and gall-nut proves useful when bowels are costive.

கொள்ளிக் கண். கண்ணூறு அல்லது கொடிய கண். evil eye. See **கொதிக் கண்**.

கொள்ளிக் கண்ணன், கொடிய பார்வையை யுடையவன், man with fiery, evil eyes.

கொள்ளிக் கண்ணி, கொடிய பார்வையுடைய பெண், a woman with fiery, evil eyes.

கொள்ளிக் கரப்பன், குழந்தைகளுக்குக் காணு மோர்வகை கரப்பான் நோய், இதனால் உடம்பில் கொப்புளங்கள் எழும்பி, ஓரத்தில் சிவப்பாயும், நடுவில் கறுப்பாயும், கொள்ளியாற் சுட்டது போற் காணும், fire - brand

carpung. They are skin eruptions consisting of innumerable small papuless in children (between 2 and 4 years). which develope into peculiar blisters almost resembling the ones caused with fire-brand. These appear red all round and black in the centre; and terminate in brownish itchy scabs. They may be roughly compared to Roseola infantalis or Pemphigus as some seem to think.

NOTE :— The disease is said to attack especially children between 2—4 years. The blisters are about the size of four anna pieces consisting of innumerable small papules.

கொள்ளிக் கருவாடு, காய வைத்த உப்பிட்ட கொள்ளி மீன், dried and cured Indian turbot. See எருமை நாக்கி.

கொள்ளிக் கன்னி, வன்னி வாகை, fragrant Acacia. See கரு வாகை.

கொள்ளிக் கொட்டான், see கொள்ளி யெறும்பு

கொள்ளிச் சிலந்தி, கொள்ளியாற் சுட்டது போற் காணும் சிலந்தி, an ulcer resembling the blister caused by a fire-brand.

கொள்ளி சுட்டான், தீப்பட்ட விரணம், injuries caused by fire : burns.

கொள்ளித் தேள், கொட்டு வதலில் கடுமையாகக் கடுக்கும் தேள், a scorpion of a virulent type, the sting of which causes intense burning pain

கொள்ளிப் புண், கொள்ளியாற் சுட்ட புண், injury or wound caused by a fire-brand; black scorched wound.

கொள்ளிப் பூடு, புனுகு, civet.

கொள்ளியம், புங்க மரம், Indian beech — Dalbergia arborea; 2. ஓர் வகை உமரி, coral plant — Salicornia brachiata; 3. பவழப் பூடு, glosswort — Arthrocnemum indicum.

கொள்ளி யெறும்பு, கொள்ளிவா யெறும்பு இது கடிக்க மிகக் கடுக்கும், இது சிவப்பு சிற்றெறும்பில் ஓர் இனம், a kind of red small ant, the bite of which causes intense burning pain.

கொள்ளிவா லெறும்பு, வாலில் விஷ முள்ள எறும்பு, ant having poisonous sting in its tail.

கொள்ளிலை, see கொள்ளுக் காய் வேலை: 2. கொள்ளுச் செடியின் இலை, the leaf of horse-gram plant.

கொள்ளி வாய்க் குணங்கு, see கொள்ளி வாய்ப் பிசாசு.

கொள்ளிவாய்ச் சர்ப்பம், ஓர் வகை விரியன் பாம்பு. See கொள்ளி விரியன்.

கொள்ளிவாய்ப் பிசாசு, ஓர்விண்வீழ்கொள்ளி அல்லது நெருப்புக் காலு மாவி, இது இராக் காலங்களில் சதுப்பான நிலங்களில் இங்கும் மங்கும் உலாவும். இதை தவறுத லாகப் பேய் எனக் கருதுவ துண்டு, a meteor or combustible gas that appears in the night and flirts about over marshy grounds or bogs; it is known as will-o'.the-wish or Jack-o' lantern — Ignis fatuus. It is looked upon as a devil by mistake.

கொள்ளி வாலி, சிவந்த வால், red tail; 2. அரணை, horse-lizard; 3. கருப் புடலும் சிவந்த வாலும், one with a dark body and red tail.

கொள்ளி விரியன், ஓர் விரியன் பாம்பு. இது கடித்தால் மிக்க எரிச்சலைத் தரும், fire-brand viper — Viperidae. Its bite causes a burning smart.

கொள்ளி வீங்கு, மாட்டுக் குண்டாகும் ஓர் தொண்டை நோய், இது அசாத்தியம், a malignant sore-throat of cattle. It is generally fatal.

கொள்ளி வைத்தல், புடத்திற்கு நெருப்பிடல், setting fire to the pile of cow-dung cakes arranged for calcining medicine, 2. பிணஞ் சுடல், burning corpse as குடியிருந்த வீட்டிற்கு கொள்ளி வைத்தல். setting fire to the funeral pile of one's mother in whose womb once he was.

கொள்ளு, குதிரைக் கொள்ளு அல்லதுகாணம் இது தட்டையா யிருக்கும்; எங்கும் கிடைக்கக் கூடியது. இது சில சமயம் கறிகளுக் குபயோகப் படுத்தப் படும். அன்றியும் கல் லடைப்பு, இருமல் இவைகளினால், ஏற்படும் அழற்சியைப் போக்கும்; உடம்பை இளைக்க செய்யும் வேக வைத்த இதின் இரசம் சல தோஷத்திற்குக் கொடுப்ப துண்டு, horse-gram — Dolichos biflorus alias D. uniflorus It is common and sold everywhere. Seeds are used as food for cattle; they are also used in curries at times. The

pulse is a demulcent in calculus affections, coughs etc. It is also said to reduce corpulence. Water of boiled gram is given for cold; 2. கொள்ளுதல், receiving; 3. உட் கொள்ளுதல், see கொள்.

கொள்ளுக் கஞ்சி, கொள்ளும் அரிசியுங்கலந்து வேக வைத்த கஞ்சி, இதனால் அதிக பசி, பலம், வீரிய விருத்தி இவை உண்டாம், a gruel or light food obtained by boiling rice and gram together. This promotes hunger and increases the secretion of semen.

கொள்ளுக் காய் வேளை, கொழுஞ்சிச் செடி, சிறிய ஊதாப் பூ, இலை, புளியிலையைப்போலிருக்கும்; வேர் கசப்பு இதன் கஷாயம் குன்மத்திற் குதவும், zanzibar indigo — Tephrosia purpurea alias T. galegioides. It is a small wild shrub with small purple flowers; and leaf resembling that of the temarind; roots bitter and a decoction of these is considered a good remedy in dyspepsia.

கொள்ளுச் சாறு, கொள்ளு இரசம். இதனால் இளைத்த உடம்பு பருக்கும். வலி உண்டாகும். கிராணி, குன்மம், விழி ரோகம், சலதோஷம இவைகள் போம். பெண்களுக்குக் காணும் வெள்ளை, சூதகக் கோளாறு முதலியவைகளுக்கும். பிரசவத்தில் அழுக்கை வெளிப் படுத்துவதற்கும் இது உபயோகப் படும், water extacted from boild horsegram and mixed with other ingredients or condiments — Horse-grain soup. This not only improves emaciation; but also invigorates the system. It proves useful in chronic dysentery, dyspepsia, ophthalmia and other affection of the eye, bad cold etc. It is used by females in leucorrhoea and menstrual derangements. It is also given to females during parturition to promote lochial discharge.

கொள்ளுதல், see கொள்ளல்: 2, மருந் துண்ணல், takitg medicine; 3. உண்ணல், taking food; 4. மேற் கொள்ளுதல் being attacked with as madness, small-box etc; 5, ஏற்றுக் கொள்ளுதல், accomodating.

கொள்ளு பரனிதம், சூரிய காந்தி, sun-flower — Helianthus indicus.

கொள்ளுப் பூண்டு, காணம், Madras horse-gram — Teramnus labialis.

கொள்ளு மளவு, உண்ணக் கூடிய அளவு, as much as could be eaten or as stomach could contain.

கொள்ளு ரசம், see கொள்ளுச் சாறு.

கொள்ளை, பெருவாரி நோய், epidemic disease; 2. மிகுதி, excess.

கொள்ளை கொடுத்தல், கொள்ளை நோய்க்கு உயிரை பறி கொடுத்தல், giving or offering as a victim to an epidemic disease; losing children or adults in epidemics.

கொள்ளை கொள்ளல், சனங்கள் பெருவாரி நோயில் இறத்தல், carrying away lives of people as by epidemics.

கொள்ளைக் காய்ச்சல், பெருவாரி தொத்துக் காய்ச்சல், infectious epidemic fever; 2. பெருந் தடிமல், influenza. See கோதாரிக் காய்ச்சல்.

கொள்ளை நோயாற் கிடத்தல், வாந்தி பேதி, அம்மை, காய்ச்சல் முதலிய பெருவாரி நோயால் பீடிக்கப்பட்டு வருந்தல். being attecked and afflicted with a pestilential disease as by cholera. small-box, influenza etc.

கொள்ளை நோய், அம்மை முதலிய பெருவாரி நோய், epidemic diseases such as, fever, small-box, influenza, plague. pestilence etc. See கோதாரி.

கொள்ளையிற் போதல், கொள்ளை நோயில் இறத்தல், being carried away in an epidemic.

கொற கொறப்பு, சீதளத்தால் குழந்தைகளுக்குத் தொண்டையில் அல்லது நெஞ்சில் கோழை கட்டிக் காணும் சத்தம். rale or abnormal noice either in the throat or the lungs, generally common in children affected with cold or phlegm.

கொற கொறெனல், சரியாக பொடி அல்லது தூளாகாமை, being rough and hard to the touch due to not being well powdered as, medicinal powders.

கொறண்டல் வாதம், see குறண்டல் வாதம்.

கொறி ஆடு, sheep; 2. செம்மறி யாடு; a short woolly sheep with twisted horns.

கொறிக்குதல், பல்லாற் கோதுதல், gnawing.

கொறி தலை, நில வேம்பு, ground neem — Justicia paniculata; 2. கொறித்த தலை, blotched-head.

கொறிப் புத்தம், சர்க்கரை வேம்பு, margosa tree, the bark of which is sweet to taste.

கொறு கொறுத்தல், குறட்டை விடல், snoring

கொறு கொறுப்பு, see கொற கொறப்பு.

கொறு கொறெனல், நுரை ஈரல் கோளாறினால் கோழை யுண்டாகி, தொண்டையிலிடும் சத்தம், an abnormal sound in the throat in respiration due to phlegm especially when the lungs are not in a healthy state.

கொறுக் கச்சி, see எருவை, 2. நாய் வேம்பு, dog-neem, the same as dog-mustard; 3. நில வேம்பு, ground neem: 4. காணல், see கொறுக்கை, See கொறிதலே.

கொறுக்கச் சிரிகம், பேயவுரி, long-podded Indigo plant — Indigofera subulata.

கொறுக்கம் புளி, see கொறுக்காய்ப் புளி.

கொறுக்கல், see கொறுக்கை.

கொறுக் காய், see கொறுக்காய்ப் புளி.

கொறுக்காய்ப் பால், கொறுக்காய் மரத்தின் பிசின், gum extracted from Malabar tamarind See கொறுக்காய்ப் புளி.

கொறுக்காய்ப் புளி, ஈழப் புளி, இது ஒரு சிறிய மரம்; எங்கும் காணலாம். இலை மிகப் பச்சை நிறம்; காய் மஞ்சள் அல்லது சிவப்பா யிருக்கும். இது புளியங் காயைப் வலைந்து உட்புறம் சதைப் பற்றுக விருக்கும்; 6-10 விதைக ளுண்டு. இம் மரத்தி னின்று பால் எடுக்கலாம். இதன் புளிப்புக் காயை புளியைப்போல் கறிக்குப யோகிக்கலாம், Malabar tamarind, acid leaf tree; pot tamarind — Garcinia cambogia. It is a small ever green tree of West cost: grown in hedges and is also common everywhere Leaves dark green, fruit yellow or reddish with soft white kernel inside; 6-10 seeded; a gamboge of fine quality exudes from the trunk; its sour fruit is used in curry like tamarind.

NOTE:—This should not be confounded with கொடுக்காய்ப் புளி, sweet or Manilla tamarind (Pithecolobium dulce) the pulp of which is edible.

கொறுக்கு, மேக சம்பந்தத்தினால் ஏற்படும் விரண நோய், இது சாதாரணமாய் நோய் கொண்ட பெண்களைப் புணருவதால் ஆண் குறியைச் சுற்றி உண்டாகும். இது இரு வகைத்து. இளங் கொறுக்கு, முற்றிய கொறுக்கு: இரணம் மிருதுவா யிருக்கும் இளங் கொறுக்கு மேகக் கிரந்தி வகையிற் சேராது; இது உடனே சிகிச்சை செய்ய குணமாகும். ஆனால் மற்றொன்றோ கடினமாக விருக்கும். இது ரோகப் பெண்களி னிடமிருந்தாவது, தாய் தந்தையர் மூலமாய்க் கற்பத்தில் ஊறியாவது பிறக்கும். இது உடம்பில் சோரி நிற்பதால் வெகு காலங் கழித்துத் தோன்றினாலும் தோன்றும்; தோன்றிய பின் சில மாதங்கள் கழித்து உடம் பெல்லாம் பரவி, குருக்கள் எழும்பி புண் உண்டாக்கி துன்புறுத்தும். சில வேளை 15-20 வருஷம் கழிந்த பின் கூட தூலை பாரிச வாயு, பைத்தியம் முதலியனவாகத் தோன்றும், a highly contagious ulcer, arising from direct contact of venereal poison — Chancre. It is contracted from the woman suffering from a similar one. It consists of two kinds soft and hard. The first kind is a simple one known as soft chancre or Chancroid, which is non-syphilitic in nature; and can be cured by immediate treatment. Whereas, the other kind is hard chancre known as Syphilis. It is a chronic disease either communicated by an infected woman or transmitted by syphilitic parents to their children. The symptoms may occur with long intervals between the primary sore which appears at the seat of infection and the secondary and tertiary sores which affect several parts of the body. The tertiary symptoms may not appear for years; till even perhaps the end of 15 or 20 years, when other effects such as loco-motor ataxia, general paralysis, insanity may show themselves; and this is known as para-syphilis.

கொறுக்குக் கிரந்தி, உடம்பிலேற்பட்ட கிரந்தியின் சம்பந்தமாய். ஆண் பெண் குறிகளிற் காணும் கொறுக்கு, a kind of venereal sore in the genitals (man or woman) combined with constitutional syphilis; a form of soft chancre followed by pure syphilis.

கொறுக்குக் கொண்டான், கொறுக்கு நோயால் பீடிக்கப் பட்டவன், one who is suffering from chancre.

கொறுக்கு வலி, see குரக்கு வலி; 2. காக்கை வலி, epilepsy. See அபஸ்மார ரோகம்; 3 ஓர் நரம்பு வலி. spasm.

கொறுக்கை, நாணற் தட்டை, European bamboo reed—Arundo karka alias A. donax; 2 ஓர் கடல் மீன், a sea-fish known as star-gazers — Uranos copidae; 3. see கொறுக்கு; 4. குறட்டை கூச்சு, snoring; 5. காக்கன், a dark man; 6. see குரக்கு வலி; 7. காக்கை, crow; 8. கற் கொறுக்கை, a sea fish — Pristipoma furcatum; 8. உயிர்ப்பு, breath.

கொறுக் கைச்சி, ஓர் புல், a kind of grass.

கொறுக்கைத் தாரி, செங்கந் தாரி, false peacock foot tree — Niebuhria linearis.

கொறுக்கைப் புல், நாணற் தட்டை, see கொறுக்கை.

கொறுக்கைப் புளி, see கொறுக்காய்ப் புளி.

கொறுக்கைப் பேனி, பேய்ப் பாற் சோற்றி, a plant of the species of Indian gutta-percha yielding an elastic substance.

கொறுக்கை வலி, see கொறுக்கு வலி.

கொறுக்கை விடல், குறட்டை விடல், snoring

கொறுடு, கன்னம், cheek.

கொற் கஞ்சி, கஞ்சா, gunjah plant — Cannabis sativus

கொற்றம், வலிமை, strength.

கொற்றவன், முடக் கொற்றான், palsy curer —Cardiospermum halicacabum.

கொற்றான், முடக் கொற்றான், see கொற்றவன்; 2. எருமைக் கொத்தான், leafless creeper — Cassytha filiformis. See also எருமைக் கொத்தான்.

கொற்றி, பசுவின் இளங் கன்று, the young calf of a cow; 2. கருந் தாளி, black satin wood—Diospyros ebenum.

கொற்றி தலை, நில வேம்பு, see கொறி தலை.

கொற்றியார், பிரசவத்திற் குரிய தேவதை அதாவது காட்டேரி, goddess of the spiritual power responsible for child-birth.

கொற்றியார் பூசை, பிரசவித்த பத்தாவது தினம் பெண்ணை முழுக்காட்டி, அறையை சுத்தம் செய்து வீட்டிற்குள் அழைத்து வந்து, அன்றி ராத்திரி காட்டேரிக்கு திருப்தி யாகும்படி போடும் பூசை, a ceremonial offering made to the female deity named Katteri responsible for parturition or child-birth on the tenth day of delivery. In this, the lying-in room is ceremoniously cleaned: and the delivered woman is given a bath and admitted into the house. The worship is conducted purely by, the female members in the night on that day.

கொற்று, உணவு, food.

கொன், பொழுது, period; 2. விடியற் காலம், dawn; 3. வலி, strength; 4. அச்சம், fear.

கொன்றான், தாயைக் கொன்றான் அதாவது வாழை, plantain tree.

கொன்றான் சாறு, வாழைச் சாறு, the juice of plantain bark.

கொன்றுதல், கொன்னிப் பேசல் அதாவது திக்கிப் பேசல், stammering; 2. குழறிப் பேசல், babbling; 3. குழந்தை போற் பேசல், partling like child.

கொன்றை, இது கொன்னை மரமெனவும், சரக் கொன்னை யெனவும் வழங்கும். சம உயரம், மேற் பட்டை மிருதுவாயிருக்கும். பூவின் காம்பு நீளம்; காய்கள் நீளடு தொங்கும்; 2 அடி நீளம், உள் சதைப் பற்று கறுப்பும் வழுவழுப்பாயு மிருக்கும். இது கொன்றைப் புளி யென வழங்கும் இது மலத்தை இளக்கும். இதன் இலை, வேர்ப் பட்டை; மேற்பட்டை மருந்திற் குதவும்; பூக்கள் கஷாயம் வைத்து வயிற்றுக் கோளாறுக்குக் கொடுக்கலாம்; வேர் சுரத்தைப் போக்கும். பட்டையும், இலையும் அரைத்து எண்ணெயிற் குழப்பி உடம்பில் தருக்களுக்குத் தடவலாம் அன்றியும், இதன் சமூலத்தால் பெரு வியாதி, கிருமி ரோகம், கீல் பிடிப்பு, விஷ மலம், அரோசகம் இவைகள் நீங்கும். இதன் புளியைக் குழந்தைகளுக்கும், கர்ப்பிணி களுக்கும் பயமில்லாமல் பேதியாகக் கொடுக்கலாம். இதைக் காப்பியிலும் போட்டு சாப்பிடலாம். இதன் பூ நாட்பட வுபயோகிக்க நீரிழிவைப் போக்கும். குழந்தைகளுக்கு வயிற்று வலி கண்டால் இதை தொப்பூழ்ச் சுற்றிப் போட மலங் கழியும். இலைகளை அரைத்து மேற் பூச வண்டு கடி போம். இதன் சாம்பல் காரமாக வுபயோகப்படும். இதினின்று பிசின் ஒழுகும். common cassia. Indian laburnam — *Cassia fistula* alias C. rhombifolia. Tree of moderate size; bark smooth; flowers on long pedicles; legumes 2 ft. long mucilaginous pulp surrounding the seeds. It is known as Cassia tamarind which is a laxative. The root-bark, tree bark and, leaves are medicinally useful; flowers are given in decoction in stomach affections; roots are febrifuge. Bark and leaves are rubbed up mixed with oil and applied

to pustules; root is a strong purgative; leaves are parched and eaten for medicinal purposes. The plant as a whole is used with advantage in leprosy, worm. infections, arthritis. toxic diarrhoea, nausea etc. The pulp being a mild laxative is safely used for children and pregnant women. It is also taken with the essence of coffee. Decoction of flowers, if taken for sometime, proves useful in diabetes. In is flatulent colic of children, it is com monly applied round the navel to produce motions; leaves ground into a paste are applied to ring-worm: ashes used as mordant, and an astringent gum is found exuding from the stem. The following are the different species :—

1. சரக் கொன்றை — கொன்றை' Cassia fistula.

2, மயிற் கொன்றை, peacock laburnam; gold mohur tree — Caesalpinia pulcherrima alias Poinciana regia.

3. சிவப்புக் கொன்றை, red Indian laburnam — Cassia margiuata.

4. கருங் கொன்றை, Sumatra senna — Cassia siamea. It is so called from its dark fruit.

5. குளோப் பூக் கொன்றை, globe-flowered cassia — Cassia glauca.

6. காட்டுக் கொன்றை. wild kondray; Venezuela soap bark tree — Pithecolobium bigeminum.

7, மஞ்சட் கொன்றை, yellow kondray; sulphur-flowered cassia — Cassia sulpeurea alias Senna sumutrana.

8. வரிக் கொன்றை, striped-kondray — Cassia emarginata.

9, பிரம்புக் கொன்றை, same as No. 14.

10. மலைக் கொன்றை, deccany senna — Cassia montana.

11. சீமைக் கொன்றை, same as No 3.

12. இராகத்துக் கொன்றை, same as No. 3.

13. கரிக் கொன்றை, same as No. 3.

14. சிறு கொன்றை செடிக் கொன்றை, cassia plant-Cassia arborescens.

15. பெரு மயிற் கொன்றை, royal peacock flowers — Poincian regia (typica).

16. செழு மலர்க் கொன்றை, large flower cassia — Cassia florida.

17. சொறிக் கொன்றை, rough cassia.

18. எருமைக் கொன்றை, same as No. 4.

19. புலி நகக் கொன்றை, cassia with re-curved prickles — Caesalpinia ligulata: Brasiletto climber wagaty — Wegatea spicata.

20 மந்தாரக் கொன்றை. dull — flower cassia— Cassia.

21. பெருங் கொன்றை. the same as சரக் கொன்றை No. 1; 2. இயல் வாகை unarmed Brasiletto — Peltophorum ferugineum.

22. செம் மயிற் கொன்றை, red pea-cock flower — poinciana regia.

23. பொன் மயிற் கொன்றை, yellow - pea-cock flower — Caesalpinia pul cherrima.

24. முட் கொன்றை, — முள்ளுக் கொன்றை, prickly cassia — Caesalpinia scandens.

25. வெள்ள மயிற் கொன்றை, creamy pea-cock flower — poinciana elata. See பெருங் கொன்றை, in No. 21.

26, குண்டு பூக் கொன்றை. the same as No. 5.

27, சிறு மயிற் கொன்றை, false peacock flower — Caesalpinia pulcherrima (unicolour).

28. காக் கொன்றை, black senna, the same as No. 4.

29. மல்லங் கொன்றை, shingle tree — Acrocarpus fraxinifolius.

30, கொச்சிக் கொன்றை, mottled ebony — Diospyros kanjilali.

31. புலிநகக் காய் கொன்றை, prickly Brasiletto climber — Wagtea spicata.

32. சசன் தார்க் கொன்றை இது சிவ பூஜைக் குதவும், gold flower tree. Flower is offered to Shiva.

33. மாம்பழக் கொன்றை, mango cassia.

34. சூரத்துக் கொன்றை, Surat cassia — Cassia surattensis.

NOTE ;— Cassia is a laxative in small doses and a purgative in large doses. It should always be given combined with carminatives, Under its use, the urine occasionally assumes a dark brown colour. There are only four species of Cassia that are available in the market viz ;—

1. Cassia cinnamon or Cassia bark — Cassia lignea.
2. Common cassia — Cassia fistula.
3. Cassia buds.
4. Cassia senna.

கொன்றைக் கனி, see கொன்றைப் புளி.

கொன்றைக் காய், கொன்னைக் காய், இதை இடித்து வடிகட்டிச் சிறி தளவிற் சாப்பிட மலத்தை இளக்கும். அதிக அளவிற் பேதியாகும். சாதாரணமாக மலக் கட்டுக்கும், மலம் இளக்கவும் இதை உபயோகப் படுத்தலாம், puring cassia pod. It is crushed and the pulp is stained. This pulp, in small doses. is a laxative and in large doses a purgative, In constipation and other cases requiring aperients, it has been successfully employed as a mild laxative. See கொன்றைப் புளி,

கொன்றைக் கொழுந்து, கடையில் விற்கும் கொன்னைத் தளிர், cassia buds sold in the bazaar.

கொன்றை துடி, சிவ கரந்தை, sweet basil ; fever toolsy — Sphaeranthus amaranthoides alias S. zeylanica.

கொன்றைப் பட்டை, கொன்றை மரத்தின் அடி மரத்துப் பட்டை, இதை இடித்து எண்ணெயிற் குழைத்து. அம்மைப் புண், வண்டு கடி, சதை வெடிப்பு முதலியவை களுக்குப் பூசலாம் கடுக்காயோடு கலந்து கஷாய மிட்டு சுரத்திற்குக் கொடுக்கலாம் தோலைக் பதப் படுத்தவும் உபயோகமாகும், bark of the stem of Cassia tree — Cassia bark. It is powdered, mixed with oil and rubbed over pustules, ringworm, chilblains etc. It is added to galnut in decoction and given to fever. It is also used for tanning leather.

கொன்றைப் பிசின், கொன்றை மரத்தின் பிசின். cassia gum.

கொன்றைப் புளி, கொன்றைக் காய்க் குள் விதையை சுற்றிவுள்ள பசை. இது மலத்தை இளக்கும். பஞ்ச காலத்தில் உணவாகக் கொள்வார்கள். இது வைத்தியத் தில் அநேக விதமாய் உபயோக மாகும், இதற்கு விரேசன குண மிருப்பதால் மற்ற பேதி மருந்துகளுடன் கூட்டிக் குழம்பு அல்லது இலேகியமாக நீரிழிவுக்குக் கொடுக்கலாம், புளியோடு சேர்த்து கைபாகமாக உபயோகிக்கலாம். குல்கந்துடன் சேர்த்து பெண்களுக்குக் மல விருத்திக்குக் கொடுப்பதுண்டு. குழந்தைகள் வயிற்றுப் பொருத்தால் காணும் வலிக்குத் தொப்புளைச் சுற்றி தடவுவதுண்டு. mucilaginous pulp surrounding the seeds of Cassia — Cassiae pulpa- it is medicinally a mild laxative, safe for children and pregnant women. It possesses purgative properties ; and so it is best used combind with other purgatives as confection or electuary for diabetes. For house hold use, It is administered in combination with tamarind. Mixed with quikhand. it forms a cooling laxative for delicate woman. In flatulent colic of children, it is commonly applied round the navel to produce motions.

கொன்றைப் பூ, கொன்னை மரத்தின் பூ, இதை க்கஷாய மிட்டு கழிச்சல், சீதபேதி முதலிய வயிற்றுக் கோளாறுக்குக் கொடுப்ப துண்டு cassia flowers, They are given in decoction in stomach affections such as, diarrhoea. dysentery etc.

கொன்றை யிலை, கொன்றை மரத்தின் இலை, இதைக் கீரையாகப் பிரட்டிச் சாப்பிடுவதுண்டு. இலையை அரைத்து வண்டு கடிக்குப் பூசலாம், cassia leaf. It is parched eaten for medicinal purpose.. Ground into a paste, it is applied to ringworm.

கொன்றை வாருதி, see உமுரி.

கொன்றை வேர்ப் பட்டை, கொன்றைவேரின் மேல் பட்டை, இதற்கும் விரேசன குணமுண்டு root-bark of Cassia. It has also purgative properties.

கொன்னிப் பேசல், தெத்திப் பேசல், stammering ; 2, குழந்தையைப் போற் பேசல், prattling like a child.

கொன்னைக் காய், see கொன்றை.

கொன்னைப் புளி, see கொன்றைப் புளி.

கொன்னை வாயன், தெத்து தாயன், stammerer : one who makes faltering speech.

கொன்னை வாய், தெத்து வாய், defective utterance.

கொன்னை, see கொன்றை, 2. குழறுகை; stammering ; 3, திருத்த மற்ற பேச்சு, inability to utter certain words or suppression of certian words — Aphasia.

கோதண்ட வேர், கணுக் கால், ankle.

கோதத்தம், அரி தாரம், yellow orpiment ; 2. ஓர் வெள்ளை தாது உப்பு, a white mineral substance apparently an earthy salt.

கோதந்தம். மாட்டுக் கொம்பு. horn of cattle ; 2. பசுவின் பல், cow's tooth;

கோதந்தி, தாடை. jaw : 2. கதுப்பு, chin : 3, கன்னம், cheek.

கோத மாமை, கோதுமை, wheat.

கோதம், சிதாங்க பாஷாணம். a mineral poison : a kind of native arsenic ; 2, கோபம், anger ; 3, கஷாயம். decoction ; 4. அழுகுத் தசை, gangrene ; 5. உடம்பில் வட்டத் தழும்புகள் ஏற்படும் ஓர் வகைக் குட்டம். a species of leprosy marked by large round elevated spots ; 6. ஓர் வகைப் படை, a kind of ringworm or impetigo ; 7. கண் ணிமையின் விளிம்பைப் பற்றிய விரண நோய், inflammation and ulceration of the margin of the eye-lids.

கோதரணி, ஓர் பூ. a kind oflower.

கோதர புட்பி, ஓர் பூடு, a plant — Convolvulus argentus.

கோதரம், சுக்கு. dry ginger,

கோதரவம், உடும்பு, guana ; 2. ஓர் கொடிய விஷப் பாம்பு, a very poisonous snake.

கோதல், அழுந்த பண்டம், decayed or decomposed matter or substance ; 2. முத்தமிடல், kissing ; 2. அதர பானம், sucking the lips.

கோதனங் காய், சமுத்திராப் பழம், common Indian oak — Barringtonia racemosa.

கோதனம், பசுங் கன்று, cow calf.

கோதா, உடும்பு, guana ; 2. கொம்மட்டி, small water-melon — Citrullus ; 3. நாரத்தை, citron.

கோதாக்கினி, செழு மலர்க் கொன்றை, a flowering tree of the cassia genus (unidentified). C.f. பெரு மலர்க் கொன்றை,

கோதாட்டுதல், அழுக்கைப் போக்கி சுத்தம் பண்ணல், purifying by removing the dirt or filthy matter.

கோதாரணி, பெருங் குரும்பை, bowstring hemp.

கோதாரி, வாந்தி பேதி; cholera : 2. பெரு வாரி நோய், epidemic.

கோதாரிக் கழிச்சல். பெரு வாரி வயிற்றுக் கழிச்சல், epidemic diarrhoea ; 2, பெரும் வாரி வாந்தி பேதி. இதனால் வாந்தியும் அரிசிக் கழுநீர் போல் பேதியும் கண்டு, குரக்கு வலி, ஏற்பட்டு கடைசியாக மரண முண்டாகும், an epidemic cholera marked by vomiting, purging with evacuations like rice-water, accompanied by cramps and collapse — Spasmodic cholera

கோதாரிக் காய்ச்சல், பெரு வாரிச் சுரம், இது நாள்கிரக மாறுதலினால் ஊழிக் காற்றுண்டாகி, அதன் கொடுமையினால் சனங்களுக்கு

பெருவாரியாகக் காணும் ஓர் வகை தொத்துக் காய்ச்சல், இதனால் குளிர், காய்ச்சல், ஓய்ச்சல், நரம்பு வலி முதலிய கோளாறுகளும்; முக்கியமாய் இருமல், கப வாத சுரம், நுரையீரலின் அழற்சி, வாதப்பிடிப்பு முதலிய நோய்களும் காணும், influenza. It is a severe infectious epidemic catarrh marked by distressing, fever, great depression, muscular and neuralgic pains and other nervous distrubances. Bronchitis, Pneumonia or other inflammation of the lungs or of rheumatism are the supervening symptoms. It is chiefly due to a peculiar state of the atmosphere which is attributed to the influence of stars.

NOTE:—In Allopathic science. the disease is said to be due to a minute bacillus (B. influenzac) frund in the sputum. It occurs in great force periodically or at any season of the year in a country; and even spreads at times throughout the world. The first symptoms of this disease are bad cold and chill, and fever with depression of spirits. Complications are frequent and affections various, as of the ear and the eye. This should not be confounded with ordinary catarrhal attacks occurring in changeable seasons, with the symptom of running from the nose with obstruction to breathing.

கோதாரிக் குரல், வாந்தி பேதிக் குரல், சிலர் இம் மாறுபாடு, கண்டத்தின் சளி சவ்வின் வரட்சியினால் உண்டாகிற தென்றும்; வேறு சிலர் நரம்பின் கோளாற்றால் ஏற்படுகிற தென்றும் அபிப்பிராயப்படுவர். cholera-voice. It is a designation of the change of voice occurring in cholera — Vox cholerica. It is attributed by some writers to the drying of the mucous membrane of the larynx from the transudative process; while others regard it was a purely nervous system.

கோதி, நெற்றி, forehead; 2. கோதுமை, wheat.

கோதிகை, முதலை. crocodile; 2. உடும்பு, guana.

கோதிமம், கோதுமை, wheat.

கோதிலாப் புளி, காம்புகள் களைந்த புளி, tamarind gotrid of strings.

கோதிலா லவணம், காய்ச்சுப்பு, salt purified by boiling process.

கோதில்லாச் சாறு, இலை, காம்பு, செத்தைகள் இல்லாத சாறு, juice free from leaves, strings and other rubbish.

கோதீர்த்தகம், ஆசனப் பௌத்திரத்தை சாய்லாக அறுத்த வெட்டு வாய், (In Anatomy) an oblique cut made to the fistula in the rectum.

கோது, பழத்தோல், pod or legume as of tamarind, fruit, kernel, etc. 2, சக்கை, covering or capsules, as of sugar-care. jack fruit etc. 3. பூ நரம்பு, fibre of flowers.

கோதுகம், see கச்சோலம்.

கோது நரம்பு. செடி, இலை இவற்றின் நரம்பு, fibres or filaments of plants and flowers.

கோது பழம், புளியம்பழம், tamarind fruit.

கோதுமை, வாற் கோதுமை. barley.

கோதுமை, கோதுமைத் தானியம், இது ஒரு புராதன உணவு வகைகளில் ஒன்று. இது ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா இவ்விடங்களில் விசேஷமாய்ப் பயிராகும். இத்தேசத்தில் வட நாட்டில் இது ஏராளமாய்ப் பயிராகி வெளியூருக்கு அனுப்பப் படும். நமக்கு அரிசி எப்படியோ அது போலவே ஐரோப்பியர்களுக்கு இது உணவுப் பொருளாகும்; தற்காலம் உலக முழுவதும் உணவுப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. இது இருவகைத்து;—வெள்ளை, சிவப்பு, வெள்ளை கடினமாயும், சிவப்பு மெதுவாயு மிருக்கும். இது மற்ற தானியங்களை விட உடம்புக்கு மிக்க வலிவைக் கொடுக்கும். நமது நாட்டில் வடக்கேயுள்ள மேல் வகுப்பினர் இதை அடை (சப்பாத்தி) செய்து சாப்பிடுகிறார்கள். தென்னிந்தியாவில் இதைப் பலகாரத்திற்காக உபயோகப்படுத்துவார்கள், இதைக் கஞ்சியாக வைத்து பலவீனர்களுக்கும், நோயாளிகளுக்கும் கொடுப்பதுண்டு. இதை ரொட்டி (அடை)யாகச் செய்து சாப்பிடுவதினால் உடம்பிற்கு பலமும், வீரிய விருத்தியுமுண்டாம். நீரிழிவுக் காரர் இவ்வரிசியைப் பொங்கி யுண்பார்கள், wheet — Triticum vulgare alias T- compositum. From the earliest times, it has been one of the chief articles of food in India. It is now cultivated extensively in Europe, America, Australia and other contries. In India, it is grown in Northern India and exported to foreign contries. As

rice is our food, so is wheat to Europeans. Now it is used as chief article of food all over the world. There are two varieties: hard and soft which are white and red in colour respectively. It is most nutritive of the food-grains; and forms the staple food (chapathis) of the majority of the better classes of people in Northern India; whereas in Southern India, it is used as tiffin in the form of cakes. Convalescents - and patients use it in the form of conjee or as bread; it lends strength and vigour to the body. Diabetic patients boil and use it like rice.

கோதுமை அடை, கோதுமை ரொட்டி. இதனால் உடம்புக்கு வலிவு உண்டாகும்; உதராக்கினியும், சிக்கிலத் தாதுவும் அதிகரிக்கும். சிலேட்டுமக் கோபம் நீங்கும், பத்தியத்திற் குதவும். wheat made into bread gives strength to the body; it increases digestive action and is a well-known nutritive food promoting secretion of semen. It cures the phlegmatic humour in the system; and is an article of diet.

NOTE: — In Allopathic Medicine, it is chiefly used in the form of bread - crumbs (mica panis), for giving consistence to pills; it is also employed as an emmolient cataplasm.

கோதுமைக் கஞ்சி, கோதுமை நொய்யைக் கொண்டு தயாரிக்கும் கஞ்சி. இதைச் சூதகப் போக்கு அதிகமாகக் காணுவதை நிறுத்துவதற்குக் கொடுக்கலாம். பல வீனர்களும், நோயாளிகளும் உபயோகிக்கலாம். conjee prepared from flour which is taken to check profuse menstruation. It is prescribed also for convalescents and patients; 2. வாற் கோதுமைக் கஞ்சி இது பத்தியக் கஞ்சி, குடிக்க உடம்பிற்கு வலிவையும், ஆரோக்கியத்தையு முண்டாக்கும், barley water. It is prescribed as a diet to patients; and is a mild nutritive and demnlcent drink.

கோதுமைக் களி, கோதுமை மாவைத் தண்ணீரி லிட்டுக் கொதிக்க வைத்துக் கிண்டிய களி, pudding prepared from wheat flour by boiling it in water and stirring.

கோதுமைக் காடி, கோதுமைக் கஞ்சியை புளிக்க வைத்துத் தயாரிக்கும் காடி, alcoholic fermentation of wheat conjee.

கோதுமைக் கூழ், கோதுமை மாவு அல்லது நொய்யைக் கொண்டு தயாரித்த பாயாசம், wheat porridge prepared like wheat pudding, but in a liquid form.

கோதுமைச் சத்து, கோதுமை ரவா அல்லது மாவைத் தண்ணீரி லிட்டுப் பிழிந் தெடுத்த ரசம், liquid essence of wheat pressed and filtered out from a solution of wheat gruel or flour; 2. கோதுமையில் அடங்கியிள்ள சத்துப் பொருள்கள், the glutinous starchy substance etc. contained in wheat.

NOTE:—It contains 1 to 2% of albumin; 8—12% of glutin; 60 to 70% of starch; some fat and salt, in very small quantities.

கோதுமைத் தவிடு, கோதுமையி னின்று கழிந்த மேற்றோல். இதனுல் செய்த ரொட்டிக்கு சிறிது மலத்தை இளக்கும் குணமுண்டு. ஆகவே குன்மத்திற்கு உபயோகிக்கலாம். இதில் அதிகப் பசையின்மையால் நீரிழிவுக்கும் கொடுக்கலாம். இதைக் களியாகக் கிண்டி கட்டுக் கட்டவும், வறுத்து ஒத்தடம் கொடுக்கவும் உபயோகப் படுத்துவதால் உடம்பு வலி, மார்பு வலி, வயிற்றுவலி முதலியன குணமாகும். the husk or outer coat of wheat; wheat bran. The bran bread is slightly laxative; and may be used by dyspeptic patients and, being free from starch, by diabetic persons. It can also be readily used as poultices and dry applications in the treatment of local pains, chest and abdominal inflammations.

கோதுமை நாகம், ஓர் புள்ளிப் பாம்பு, a spotted cobra.

கோதுமைப் பாணி, கோதுமை மாவைத் தண்ணீரிலிட்டுக் கொதிக்க வைத்துக் கிண்டிய சாரம், mucilage of starch — Mucilago amyli. It is obtained by boiling wheat flour and water and constantly stirring for a few minutes.

கோதுமைப் பால், see **கோதுமைச் சத்து.**

கோதுமை மணி, கோதுமைத் தானியம், wheat as grain.

கோதுமை மால்ட், கோதுமையைத் தண்ணீரில் ஊறப் போட்டு முளைக்கும்படி வைத்து பிறகு எடுத் துலர்த்திய தானியம், இது சாராயம் காய்ச்ச வுதவும், wheat - steeped in water till it germinates and then dried. It is used for distillings liquors.

கோதுமை மாவு, கோதுமையை அரைத்து சலித்த தூள், the meal of wheat ground and sifted — Wheat flour.

கோதுமை மாவு, கோதுமையை அரைத்தமாவு இது பலகாரம் செய்ய வுதவும், மாவைக் கிண்டிக் கட்டி களுக்கும், இரணங்களுக்கும் வைத்துக் கட்டலாம். இம் மாவைத் தண்ணீரில் கலக்கி இரச கந்த பாஷாணம், செம்பு வங்கம், நாகம் முதலிய மருந்துகளால் நேர்ந்த விஷத் தன்மைக்கும் கொடுப்ப துண்டு இம் மாவை, புண்ணுறு எரிச்சல் தரும் அக்குனி விசர்ப்பி, தீச்சுட்ட புண், வெந்த புண், சிரங்கு, கொப்புளம் முதலியவை களுக்கு மேல் தூவலாம், flour obtained by grinding wheat in mills. It is generally used for making bread and other cakes; and soaked in water, it is employed in the form of poultices and applied to boil, ulcer etc. Wheaten flour is useful as a dusting power; and it forms a soothing local application to inflamed surfaces as in erysipelas, burns, scalds, itching and burning eruptions, excoriated surfaces and other external in flammations. A mixure of flour and water is an antidote in cases of poisoning by salts of mercury, sulphur, copper and lead.

NOTE:— Internally, this flour mixed with water is used as a chemical antidote in poisoning by the preparations of mercury, copper, zinc. silver and tin and iodine. It forms a constituent in linseed and other poultices. Wheaten bread is used in pharmacy in the preparation of pills.

கோதுமை யரிசி, கோதுமையை உடைத்துப் பிரித் தெடுத்த பருத்த நொய். இதை அரிசியைப் போற் சமைத் துண்ணலாம், நீரிழிவுக் காரருக்கு இது முக்கிய வுணவாகும், large particles of crushed wheat cooked and used like rice for eating. It forms the staple food for diabetic patients.

கோதுமை ரவா, கோதுமை யரிசியை உடைத்துப் பிரித் தெடுத்த நுண்ணிய நொய், இது பலகாரம், பாயாசம், கஞ்சி முதலியவைகள் தயாரிக்க வுதவும்; இதினின்று ரொட்டி தயாரித்து உணவாக ஆங்கிலேயருக்கு விற்கப்படும், fine crushed particles prepared from the heart of wheat. It is used for preparing cakes, puddings, liquid pastes etc. for making bread for English tablers.

கோதும்பை, கோதுமை, common wheat.

கோதூமம், see கோதுமை.

கோதூளி, அந்திப் பொழுது, evening dusk or twilight.

கோதேஜகம், சதை யொட்டி யிலை, the leef of an unknown plant supposed to unite the two cut portions of flesh, as in incision.

கோதை, சத்தி சாரணை, spreading hogweed — Boerhaavia repens; 2. பெண் மயிர், women's hair; 3. காற்று wind; 4, பேய். devil; 5, உடும்பு, guana

கோதை மாதவி, ஓர் வகை குருக் கத்தி, a species of குருக் கத்தி, which see.

கோத்தக் கொடி, see இலந்தை.

கோத் தணி, கொடி முந்திரிகை, common grape — Vitis vinifera; 2. திராட்சை, dried grape especially of good size — Raisin.

கோத் தவரிகை, see கோத் தணி

கோத் தந்தம், see கோ தந்தம்.

கோத்த புட்பகம், செம் மரம், red wood; red cedar — Amoora rohituka.

கோத்தற் கோவை, காக்கைப் பாலை, esculentleaved false Kamela — Casearia esculenta.

கோத்திக வாசனம், முழங்காலைச் சுண்டி குளிரண்டில் பதிய வைத்து உட்கார்ந் திருத்தல், இது 64 ஆசன வகைகளில் லொன்று, a posture in which the legs are folded crosswise and the inward joints of the feet made to rest in the flexure on either side,

கோத் திரகம், நெட்டி, see கோத்திரம்.

கோத்திரம், தொட்டி பாஷாணம், a prepared arsenic; 2. கொடி முந்திரிகை, see கோத் தணி; 3, நெட்டிப் புல், sola pith grass — Aeschynomens aspera; 4. சிறு வரகு, kora millet — Paspalum scrobiculatum, 5, மறு பிறப்புக்குக் காரணமான கருமம், Karma determining re-birth; 6, மலை, hill; mountain.

கோத்திர லாகிகம், முசுட்டை, clove-scented creeper — Rivea hypocrateriformis.

கோத்திரவம், வரகு, common millet — Paspalum frumentaceum alias Panicum miliaceum ; 2. செறுக்கு வரகு, millet not fully or properly seperated from the chaff ; 3, வரகு போல் கொப்புளிக்கும் ஓர் அம்மை ; வரகம்மை, variola in which the pustules do not develope bigger than millet.

கோத்திர விருட்சம், முண்டக விருட்சம், an unknown tree (?)

கோத்திரி, கொடி முந்திரிகை, grape vine — Vitis vinifera ; 2. முசு முசுக்கை, rough bryony — Mukia scabrella; 3. மலை, mountain ; hill.

கோத்திரிகை கொடி முந்திரிகை, see கோத்திரி. 2. முசு முசுக்கை, rough bryony — Bryonia scabra,

கோத்தி ரேயர், வெள் பருத்தி, white cotton

கோத்திரை, மலை, mountain ; 2. பூமி, earth.

கோநாக சர்ப்பம், அதிக வெயிலினாலும், அலைச்சலினாலும், அடிபட்ட பசுக்களின் மூக்கினின்று உண்டாகி, பிறகு வெளிப் பட்டுத் திரியும் ஓர் வகை நாகம், a kind of cobra originating from the nostrils of the cow knocking about in the scorching sun and exhausted by fatigue.

கோநாக் கிலை, பசு நாக் கிலை, a plant the leaves of which resemble the tongue of the cow.

கோநாய், ஆண் நரி, male jackal ; 2. ஓநாய், wolf.

கோநீர், பசு மூத்திரம், cow's ghee.

கோநெய், பசு நெய், cow's urine

கோ நோக்கம், see கண்டங் கத்திரி.

கோந்தளங் காய், நறு தேங்காய், unripe cocoanut ; 2. see கொந் தளங்காய்.

கோந்த ளாகிகம், முயற் புல், hare grass — Cynodon linearis.

கோந்தனை, பேய்க் கொம்மட்டி, bitter cucumber — Citrullus colocynthis.

கோந்தி, குரங்கு, monkey.

கோந்திக் குணம், குரங்குச் சேட்டை, apishness ; foolery.

கோந்து, பிசின், gum.

கோந்துத் தாள், பிசின் குடுவை அல்லது குப்பி, gum-pot or bottle.

கோப குண்டம், எட்டி, nux vomica — Strychn · nux-vomica.

கோபக் கன்னி, முண்டகனி விருட்சம், an unknown tree (?) . 2. கோபக் கண்ணுடையவள், a woman with an angry look.

கோபக் காரி, தழைச் சுருளி. Indian birthwort — Aristolochia indica.

கோபக் கிதம், கழற் கொடி. bonduc creeper — Guilandia bonducella.

கோபக் குரு, வெள்ளை கழற் கொடி, white bead vine — Abrus precatorius (albiflora).

கோபங்கம், சரகண்ட பாஷாணம், a mineral poison.

கோபங் கொண்டார், see ஒட்டை மரம் ; 2. கதிருநற் திரி தோஷம், the three bodily humours in their morbid coudition. See கோபம்.

கோபங் கொள்ளல், அதிகப் படல், becoming aggravated as humours such as bile etc or disease ; 2, கட்டி சிவத்தல், becoming inflamed as sore or wound.

கோபச் சுரம், பித்த சுரம் இதனால் கோபம் உண்டாகும். bilious fever exciting anger ;

கோப தாபம், கடுஞ் சினம், storm of anger; violent rage.

கோபதி, எருது. bull, as husband of cow.

கோப திண்டம், see கோப குண்டம்.

கோ பத்திரம், தாமரை நூல், lotus fibre.

கோபத்திரை, வாகை, sirissa — Albizzia lebbek.

கோப மடைதல், see கோபங் கொள்ளல்,

கோபம், see இந்திர கோபம், 2. ஆடு தின்னாப் பாளை, ulcer plant ; 3; துத்த பாஷாணம், a prepared arsenic ; 4, திந்திப்புக் கோவை, sweet caper (unidentified) ; 5. அழற்சி, morbid irritation ; 6. திரி தோஷம், disorder or derangement of the three humours of the body.

கோபல், ஒரு அம்பரைப் போன்ற ஓர் கடைச் சரக்கு. இதை அம்பருக்குப் பதிலாக கடைகளில் மோசடியாக விற்பார்கள், false amber or copal It is fraudently sold in bazzars as a substitute for amber.

கோப வல்லி, பெருங் குரும்பை, moorva stemless plant ; 2. நன்னாரி, Indian sarsaparilla.

கோப வைரிணி, see கோபம்; 2. see அகத்தி.

கோபனகம், ஓர் வாசனை, a kind of perfume.

கோபனம், தழும் படைதல், sustaining a mark; 2. திகில், agitation of mind; sudden terror; alarm, 3. அழற்சி புண் டாக்கல், causing morbid irritation or inflammation: 4. ஓர்வகைக் கட்டு, (In Ayurveda), a kind of bandage; 5. இலவங்கப் பட்டை இலை, leaf of Ceylon cinnamon — Laurus cassia.

கோப ஞாதி, வெள்ளைக் குன்றி மணி, white bead vine — Abrus precatorious (albiflora).

கோபனி, காம முடையவள், a passionate woman.

கோபாக்கினி, கோபத்தின் உஷ்ணம், heat arising from anger; wrath.

கோபா பத்திரம், ஆம்பற் கிழங்கு; கொட்டிக் கிழங்கு, esculent bulbous root of Indian water-lily.

கோபா பத்திரிகம், குமிழ், Cashmere tree — Gmelina arborea

கோபா ரசம், போளம், myrrh.

கோ பால், பசும் பால், cow's milk.

கோபா வல்லி, மரள், bowstring hemp — Sanseviera roxburghiana.

கோபா வேசம், கோபங்கொண்ட நிலைமை, the state of being red with anger; angry mood.

கோபி, see கரு நொச்சி, 2. நன்னாரி, Indian sarsaparilla — Periploca indica; 3. கௌரி பாஷாணம், a prepared arsenic: 4. துவாரகை மண், white clay exported from Dwaraka; 5 காப்பிக் கொட்டை, coffee seed — Coffea arabica: 6. நாமம், yellow clay used as a religious mark on forehead by Vaishnavites — Silicate of Alumina; 7. கோபிச் சந்தனம், a kind of yellow sandal-wood; 8. முன்கோபி, hot-headed or impetuous persons; peevish person.

கோபிகம், அசோக, Asoka tree.

கோபி காகிதம், புன்னை, common poon or Alexandrian laurel — Calophyllum inophyllum.

கோபிக் காவி, ஓர் வகைச் சிவந்த மஞ்சட் காவி, a kind of reddish yellow ochre as opposed to பூரான் காவி, common yellow ochre.

கோபிச் சந்தனம், கோபிக் கல், yellow ochre — Silicate of alumina; 2. திரு மண், yellow earth worn by Vaishnavites on their forehead. See கோபி.

கோபி தாகம், தில்லை மரம், tiger's milk spurge — Excoecaria agallocha.

கோபி தாரம், see குரா மரம், 2. மரா மரம். saul tree — Shorea robusta.

கோ பித்தம், எருது அல்லது பசுவின் பித்தப் பையினின்று எடுத்துத் தயாரிக்கும் கோரோசனை, ox bile; bile of cows — Bezoar.

கோபித்தல், கண் கோபித்தல், eyes becoming red or inflamed.

கோபித்த வக்கினி, உதராக்கினி, gastric fire 2. பித்தம், bile.

கோபிப் பேய்ச் சூலை, பித்தா திக்கத்தினால், கோபிக்கும் போது, பேய் கொண்டவர்களை போல் உடம்பு முழுவதும் நடுக்கங் கண்டு சூலை நோய் கொண்டவர்களைப் போல் கை, கால் பலமற்று ஒன்றை யெடுக்கவும், நடக்கவும் முடியாமற் செய்யு மோர் நிலைமை, an agitated condition or strong emotion by which one is rendered unable to handle any substance or to walk any distance owing to the shivering of the body arising from anger. It is due to the affection of the narvous system as a result of the aggravated condition of bile (humour) in the system.

கோபினி, நீர்ப்புறா, water-pigeon.

கோ புச்சம், பசு வால், cow's tail.

கோ புத்நம், சமுத்திராப் பழம், white Indian oak — Barringtonia racemosa.

கோபுரக் கல், செங்கல், brick; red brick.

கோபுரக் கள்ளி, பூதரக் கள்ளி, a kind of tall spurge (?)

கோபுர சித்தன், இரச வாத முறைகளை இயற்றிய சித்தர்களுள் ஒருவர், one of the Siddha's school who instituted the principles of Alchemy.

கோபுரந் தலை, கோபுரத்தைப் போல அடி பருத்தும், மேற் பக்கம் கூச்சாகவும், உச்சி யுயர்ந்து காணும் தலை, tower - head — Acrocephalia. It is a deformity of the head in which its vertical diametre is increased and the top is more or less pointed like a tower.

கோபுரத் தும்மை, see அடுக்குத் தும்பை.

கோபுரத் த்ராவிகி [illegible] Coromandel chiretta — Andrographis echioides alias Justicia echioides. It is a herbaceous hairy plant with four-seeded capsules and whitish flowers having dark purple spots. C. f. [illegible].

கோபுரப் புடம் [illegible] calcination of metals in which pieces of dried cow dung cakes are spread underneath the vessel (containing the medicine) and also piled up over it like a cone.

கோபுரப் பூண்டு, see அதிமதுரப் பூடு.

கோபுரவல் குரங்கு, monkey.

கோபுரக்கல் [illegible], kind of native arsenic (?).

கோப்பி, காப்பிக் கொட்டை, coffee seed; 2. see கோபி.

கோப்பிகா [illegible] see [illegible].

கோப்பியம், மறைத்து வைத்தல், keeping hidden or concealed.

கோப்பிரண்டை [illegible] a species of adamantine creeper. It is round and smooth and is prescribed for flatulence.

கோப்புக் காய்கறிகள், vegetables.

கோப்புக் கொடுத்தல், [illegible] giving or supplying vegetables, curry stuffs etc., necessary for preparing food.

கோப்பை, வெள்ளைக் களிமண்ணால் செய்த சீனப் பாத்திரம் [illegible] a porcelain eating dish manufactured in China; 2. நீர் குடிக்கும் பாத்திரம், drinking cup.

கோமுத் கள்ளி, சதுரக் கள்ளி, square-spurge —Euphorbia antiquorum.

கோமுதூரிகை, பசுவிற்கு வரும் ஓர் அம்மை, cow-pox occurring in a sporadic form, 2. [illegible] small pox of cattle—Vaccinia. It is a contagious inflammation of the skin.

கோமயம், see [illegible].

கோமலை [illegible], mountain containing brass ore.

கோமளம், see [illegible].

கோமாக்கல் [illegible], a variety of white arsenic.

கோமயம், பசுஞ்சாணம், cow dung; 2. பசு மூத்திரம், cow's urine; 3. காடிச்சீர், fermented liquid, vinegar; 4. பசுத்தன்மை, the nature or peculiarity of a cow.

கோமயம் [illegible] cow's urine. It is pungent and strong; and does not generate Vayu on account of its being saturated with alkali. It is stomachic and proves beneficial in cases of colic and other troubles such as enlarged abdominal glands, ascites, distension of abdomen etc; it has purgative quality.

கோமய அருணம், see [illegible]; 2. [illegible] any substance of the colour of cow's urine; 3. [illegible] likeness of a cow in nature.

கோமரம், சதுரக் கள்ளி, see கோமுத் கள்ளி.

கோம ராசி, [illegible] tiger - shark — Stegostoma tigrinum.

கோமளி, ஓமம், which see.

கோமளி மோதம், see ஓமம்.

கோம லகம், see கோ பத்திரம்.

கோமல மூலகம், முருங்கை, drumstick tree —Hyperanthera moringa.

கோம வாசம், தகரம், a fragrant drug.

கோமளம், குருகு, which see; 2. இளமை, youthfulness; 3. மென்மை, softness; 4;

அழகு. beauty : 5. ஓர் வகை மாணிக்கம், a kind of ruby ; 6. கறவைப் பசு, milch cow ; 7. ஓர் வகை ஈந்து, a kind of date tree ; 8. சாதிக் காய், nutmeg ; 6. இளமைச் செவ்வி, youthful grace.

கோம ளாங்கம், மிருதுவான உடம்பு, tender body.

கோம ளாஸ்தி, (கோமளம்+அஸ்தி) மெது வெலும்பு அல்லது முருந்து, soft bone ; cartilage.

கோ மாட்சம், see கோ மாட்சிகம்.

கோ மாட்சிகம், மாட்டு ஈ, gad fly ; cattle fly — Musca domestica.

கோ மாப்பு, நரி நாவல், small jaumoon — Eugenia arnottiana.

கோ மாமிசப் பட்சணி, மாட் டிறைச்சித் தின் போன், one who eats beef.

கோ மாமிசம், மாட் டிறைச்சி; beef.

கோ மாயு. நரி, fox ; jackal.

கோமாரி, மாட்டுக்குக் காலிலும் வாயிலும் வரும் ஓர் நோய், foot and mouth disease of cattle — Murrain : 2 மாட்டுக்கு வரும் ஓர் கழிச்சல் நோய், diarrhoea in cattle : 3. இரத்த கோமாரி, sickness in the hoof of cows.

கோ மார், நாவல் மரம், jaumoon tree.

கோ மாளிக் குணம், பைத்தியம் madness.

கோ மான், பன்றி, hog , 2. சதுரக் கள்ளி, see கோமக் கள்ளி.

கோமியம். கோ மேதகம், cinnamon stone ; 2. see கோமயம்.

கோமிய வண்ணம், பசு மூத்திர நிறத்தை யொத்தக் கல் அதாவது கோமேதகம், one of the gems resembling the colour of cow's urine — Cinnamon stone. See கோ மேதகம்.

கோ மிருகம், கஸ்தூரி மான், musk deer.

கோ முகம், see கோமு காசனம்

கோமு காசனம், யோகாப்பியாசத்தில் கணுக் கால்களை இடுப்புச் சந்திற் சேர்த்து, பாதங் களில் கைகளை ஊன்றி, பசுவின் முகத் தைப் போல் வீற் றிருத்தல். இது அட் டாங்க யோகத் தொன்று, a sitting posture in Yoga in which the ankles are crossed and placed on the hip-joints and the hands made or brought to touch the feet so as to make the posture resemble the face of a cow. It is one of the eight kinds of Yoga.

கோ முச்சிர வல்லி, see கொடி வேலி.

கோ மூத்திரக் கழிச்சல், பசு மூத்திர நிறத்தை யொத்தக் கழிச்சல், a form of diarrhoea in which the watery stool resembles the colour of cow's urine.

கோமூத்திர சிலா சத்து, பசு மூத்திரநிறத்தை யொத்த சிலா சத்து. இதனால் மூத்திரக் கிரிச்சரம், உள் விரணம், இரத்தக் கொதிப்பு இவைகள் போம். bitumen of a yellowish-brown colour. It is capable of curing stricture of urine, inflammation of internal organs, over-heated blood etc.

கோ மூத்திர மண்டூரம், கபில நிறமான மண் டூரத்தில் திரிபலை சூரணம், தேன அல்லது நெய்யைக் கலந்து கொடுக்கு மோர் மருந்து, இதனால் சோகை, பாண்டு முதலிய நோய் கள் போம். a medicinal preparation consisting of a mixure of brown iron dross, powder of three myrobalans and honey or ghee. It is a good remedy in cases of anemia, dropsy etc.

கோ மூத்திரம், பசுவின் மூத்திரம். cow's urine.

கோ மூத்திரிகை, ஓர் வகைப் புல், a kind of yellowish brown grass ; 2. ஓர் கொடி, a creeper.

கோ மேதகம், யமுனைக் கல். இது பசுவின் கொழுப்பு நிறத்தை யொத்திருப்பதா லிப் பெயர். இது இமாசலம், சிந்து இவ்விடங்க ளிலிருந்து கொண்டுவரப்படும், இது மஞ்சள் கலந்து சிவப்பு நிறமா யிருக்கும், இலங்கை யில் அகப்படும் கல்லை யொத் திருக்கும். இது கபத்தை அறுத்துப் பசி தீபனத்தை யுண்டாக்கும், cinnamon stone — Sardonyx. It is so called from its resemblance in colour to the cow's fat. It is brought from the Himalayas and Sind. It is a yellowish-brown gem of the species of garnet found in Ceylon. It is capable of removing phlegm, and promoting appetite. C f. காமியக் கல்,

கோம்பி, பச் சோந்தி, chameleon — Chamoeles vulgaris ; 2. ஓணான், common blood sucker — Lacerta cristata ; a lizard embracing several species.

கோம்பை, தேங்காய், பாக்கு முதலியவற்றின் கதம்பை அல்லது மேலோடு, the fibrous covering or the shell of a cocoanut, areca-nut etc ; 2. கோம்பை நாய். இது தென் னிந்தியாவில் தான் உண்டு. வீட்டுக் குக் காவலா யிருக்கும் Poligar dog peculiar to the South India. It is tamed as a watch-dog ; 3. see குமட்டி.

கோயிலகம், see கோலை.

கோயில் குடியான், துரிஞ்சில், dark sirissa — Albizzia amara.

கோயில் பட்சி, புறா, pigeon : 2. மயில், peacock,

கோயிற் கட்டி, உண்டைக் கட்டி, balls of cooked rice offered in temples,

கோரகம், இளம் பூ வரும்பு, young flower bud ; 2. வட்டில், eating-dish ; cup ; 3. ஓர் வாசனை, a kind of perfume ; 4. கக் கோலகம், the name of a perfume, see கக் கோலம்,

கோரகை, see குயில் ; 2. அகப்பை, wooden; spoon, ladle ; 3. கஞ்சா, gunjah leaf 4. இளம் பூ வரும்பு, see கோரகம்.

கோரக்க நாதர், see கோரக்கர்.

கோரக்கர், நவநாத சித்தர்களு ளொருவர். இவர் வசிஷ்ட மகா ரிஷியாருக்கு கானக் குறச் சாதிப் பெண் பெற்ற பிள்ளை, ஆகவே அநுலோமர். இவர் தபோ பலத்தினாலே ஓர் சிறந்த சித்தரானார். இவர் கஞ்சாப் புகை அதிகமாக உட் கொண்டதனால் கஞ்சா வுக்கே கோரக்கர் மூலியென ஓர் காரணப் பெயர் அமைந்தது போலும். இவர் வாத வைத்திய யோக ஞான விஷயங்களைப்பற்றி அனேகமாய்ப் பாடி யிருப்பினும், சிற்சில நூற்களே காணப்படுகின்றன. இவர் கடை சியாகப் பொய்யூரில் சமாதி யடைந்தாரென் பது நூற் கொள்கை, Korakkar, one of the Nine Great Siddhas. He is said to be the bastard or illegitimate son of Vashishta, the great Sage, being born to a Korava woman living in the forest. He became a great Siddha having attained supernatural powers by his intense austerities. As he became habituated or addicted to too much of Ganjah smoke, the Ganjah leaf itself, has become known as Korrakkha's drug, He was also well-versed in Poetry, Alchemy, Medicine, Yoga and Philosophy ; but only a few of his works are extant. It is said that he finally attained Samadhi in Poyyur perhaps) the village near Negapatam Tanjore District).

கோரக்கர் புளி, ஆனைப் புளி, கோரக்கர் இம் மரத்தி னடியே இருந்து உபதேசித்ததால் இதற்கிப் பெயர், Korakha's chinck or Korakh's tamarind, It is so called because Korakha taught his disciples under this tree.

கோரக்கர் மரம், see ஆனைப் புளிய மரம்.

கோரக்கர் மூலி, கோரக்கர் உபயோகித்த மூலி drug used by Korakha .. Korakha's drug See கஞ்சா.

கோரங்கம், நெல்லி, indian gooseberry — Phyllanthus emblica.

கோரங் காகிதம், நீர் மேல் நெருப்பு, (lit) fire on water probably referring to a plant containing Sodium (unidentified) : fire-flame,

கோரங் காமிகம், see கோரங்கம்.

கோரங்கி, சிற் றேலம். small cardamom ; 2: பூலா, feather-foil — Pyhllanthus reticulatus : 3. கோரங்கி நெல், paddy grown in Coringa (Godaveri Dist.)

கோரங்கிப் பயறு, கோரங்கி தேசத்தில் விளை யும் பயறு, pulse or cereals cultivated in Corangi (Godaveri Dist).

கோரங்கி மூலம், பூலாங் கிழங்கு, bulbous root of பூலா, See கோரங்கி.

கோரங்கி யேலம், சிற் றேலம், little cardamom — Elleteria cardamomum,

கோரங் கிழங்கு, see கோரைக் கிழங்கு.

கோரரங்கு, நீர்க் கோழி, water-fowl.

கோர சண்டி, தலைச் சுருளி இதுவே பெரு மருந்துப் பூடு, Indian birth-wort—Aristolochia indica.

கோரசம், கவுதாரி, partridge ; 2. சிவல், a kind of partridge ; 3. மோர், butter-milk ; 4. தயிர், curdled milk.

கோரடம், see கருங்காலி.

கோரணி, முகஞ் சுளித்தல், distortion of countenance ; 2. காக்கை வலி, epilepsy ; falling sickness ; 3. வாதையால் முகங் கோணல், painful sight or grimace of those who are in suffering ; 4. முணு முணுத்தல், murmuring due to captious sufferings.

கோரணைப் பூடு, வெட்டி வேர், khus khus root—Andropogon aromaticus.

கோரண்டம். see குறிஞ்சி; 2. பெருங்குறிஞ்சி. large-leaved conehead — Strobilanthes consanguineus; 3. செம்முள்ளி, thorny nail dye — Barleria prionitis; 4. மருதோன்றி. fragrant nail dye or henna Lawsonia alba alias L. spinosa.

கோரண்ணம், see கோரண்டம்

கோர தந்தம். வக்கிர அல்லது வளைவான தந்தம், curved tusks; 2. See கோரப் பல்,

கோரத்த சீரம், திருவட்டம் அதாவது விளாம் பிசின், gum of wood-apple.

கோரத் தூஷம், வரகு. Indian millet – Panicum miliaceum.

கோர நீடு, பூனை. cat.

கோர புட்பம். ஊமத்தம் பூ, datura flower; 2. வெண்கலம், bell-metal; bronze.

கோரப் பல், அகோரமான பல், ugly-looking tooth; 2. பாம்பின் விஷப்பல், poisonous fang of snake; 3. நான்கு முற் பற்களுக்கு அடுத்தபடி இரு பக்கத்திலு முள்ள பற்கள். இவை உணவுப் பொருளை கிழித் துண்ண வுதவும், the two sharp-pointed teeth in both jaws, one on each side between the incisors and grinders — Canine teeth. They help to bear and bite things while eating; 2. முறிந்த பல், projecting stump of a tooth — Snag tooth; 2. தெத்துப் பல், deformed tooth

கோர மரணம், வாதையை யுண்டாக்கு மரணம், painful death; agonising death.

கோர மூஞ்சி, அகோரமான முகம், horrible face in a monster birth; 2. சுழித்த முகம், distortion of the countenance — Grimace.

கோரம், கோளக பாஷாணம், a native arsenic; 2. ஊமத்தை, thorn-apple — Datura stramonium; 3. மகிழம் விதை, seed of மகிழ மரம் — Mimusops elengi; 4. உஷ்ணம். heat; 5. குதிரை, horse; 6. வட்டில், eating dish; a hallow metallic plate; 7. நஞ்சு, poison; 8. கொடுமை. cruelty; severity; 9. பயங்கர மானது, that which creates fear; 10. ஓர் மந்திரம், a Mantra; 11. வளைவு, curvature; 12. புகையிலை; tobacco.

கோர ராசனம், see கோ ராசனம்.

கோர ரூபம். பார்ப்பதற்கு பயங்கரமானரூபம், dreadful shape or form as in monster birth.

கோர வாதம், உடம்பின் நரம்புகளில் வாதம் பரவி கீல்களைத் தளரச் செய்து, மூர்ச்சித்து, அடிக்கடி மயங்கி விழச் செய்யுமோர் வாத நோய். இதனால் துர்ப்பலம், ஞாபக மறதி, கீல்கள் தளர்ச்சி முதலிய குணங்கள் உண்டாகும். இதனை வடமொழியில் சிதிலா வர்த்த வாத மென்பர், a kind of rheumatism aggravated by Vatha which spreads through the nervous system and loosens the joints of the body. It is marked by weakness, loss of memory, looseness of joints etc. attended with frequent swooning. It is known in Sanskrit by the name mentioned above.

கோர வாரம், சந்தன மரம், sandal-wood tree —Santanum album.

கோர விருத்தி, இராசத குணம். இது முக்குணத்தி லொன்று, one of the three inherent qualities of man; 2. சூடாதிக்கம், increase of heat in the system; 3. நஞ்சின் மிகுதி, excess of poison.

கோர வெயில், கடு அல்லது கொடிய வெயில். severe or scorching sun.

கோரா, அழுக் கெடுக்காதது; சலவை செய்யாதது, unbleached as cotton cloth; 2. சாய மேற்றாதது, undyed as silk. See கோராப் பட்டு; 3. கரச்சி மீன், a kind of sea-fish — pristipoma caripa; 4. See கோரன்.

கோ ராசனம், நரி, fox; jackal.

கோ ராடம், பூஞ் சாந்துப் பட்டை, (?) ஓர் கடைச் சரக்கு, a bazaar drug.

கோராப் பட்டு, யுனானி வைத்தியத்தில் வீரிய விர்த்திக்காக வுபயோகிக்கு மோர் கடைச் சரக்கு, a bazaar drug prescribed by Unani practitioners for increasing the secretion of semen; 2. சாய மேற்றாத வெண் பட்டு. undyed white silk.

கோராம சன்னி, குழந்தைகளுக்கு உடம்பு நெருப்பைப் போற் காய்ந்து, சதை குலுங்கவும், கைகால் பதைக்கவும் செய்யும் ஓர் சன்னி பாத நோய், a kind of typhoid fever in children marked by fits or convulsions followed by violent agitation of muscles and limbs due to high temperature.

கோரா வாரி, புயற் காற்று, storm; so called from its carrying dust and dirt along with it.

கோரான், சுளுந்து கட்டை மரம், torch tree —Ixora parviflora.

கோரான் கட்டை, சுளுந்துக் கட்டை, வழி நடைக்கு இதை பிரயாணிகள் இரவில் தீ வட்டியாக வுபயோகிப்பார்கள், a piece or twig of jungle geranium. It is used by travellers as a torch in their journey during nights as it burns very readily.

கோரான் காவி, ஓர்வகைக் காவி, a kind of red ochre not bright or clear.

கோரான் குச்சு, சுளுந்துக் கட்டை, see கோரான் கட்டை.

கோரான் சிவப்பு, see கோரான் காவி; 2. கம்மலான சிவப்பு நிறம், dull red colour.

கோரான் சுளுந்து, see கோரான் கட்டை.

கோரன் தூள், see கோரான் கட்டை.

கோரான் வெள்ளை, கம்மலான ஓர் வெள்ளை மண், a kind of dull white clay.

கோரி, பிரேதக் குழி, burial pit; pit for interning the dead.

கோரிகை, அகப்பை, wooden spoon; ladle.

கோரியை, see கோரிகை.

கோருடன், see கோரை.

கோரை, வழலை, the three mystic salts; 2. மயிர், hair; 3. முட்டையுட் சவ்வு, the membrane covering albumen and yolk; 4. முடி மயிர், lock hair.

கோரை, இது கீழ் சமுத்திரக் கரையில் மணற்பாங்கான நிலங்களில் விளையும். இதன் தண்டு வாசனையுள்ளதாயும், மரப் பிசினைப் போல் கசப்புள்ளதாயு மிருக்கும். இதைச் சுறு சுறுப்பு, வியர்வை, குடலுக்கு வலிவு, பல விருத்தி முதலியவைகளை யுண்டாக்குவதற் குபயோகிப் பார்கள். கஷாய மிட்டு சுரத்திற்குங் கொடுப்ப துண்டு; பாண்டுவுக்கும் நல்லது. வாசனைப் பொருளாகவும் உபயோகப்படும். இதினின்று எண்ணெயெடுக்கலாம். மாடுகள் இதைப் பச்சையாகவே தின்னும்; பஞ்ச காலத்தில் இதை மாவாகச் செய்து அடையாகத் தட்டி யுண்பதுண்டு; உருளைக் கிழங்கைப் போல் உருசிக்கும். இது பாய் முடைவதற்கு முதவும். அடியிற்கண்டபடி இதில் அனேக விதங்களுண்டு. அவையாவன, Indian papyrus; small sedge grass — Cyperus rotundus It is found grown in sandy situations on the Coromandel coast. Tubers has an agreeable fragrance and an aromatic, balsamic bitter taste. Tubers are used as stimulant, diaphoretic, stomachic and tonic. Vaidyans recommend decoction of this in fevers and where there is a tendency to dropsy. Tuber used as a perfume: and it yields an essential oil. Cattle eat the greens. Tubers can as well be made into flour and eaten in times of scarcity and famine; and they are also eaten roasted or boiled, having then the taste of potatoes. Floor mat is manufactured with this grass. The following are the several species viz:—

1. சருள்ளிக் கோரை, sedge grass — Scirpus articulatus.
2. ஓமற் கோரை, club grass — Scirpus grossus.
3. கச்சற்கோரை, tender medicinal sedge grass.
4. கஞ்சாங் கோரை, white toolsy— Ocimum album.
5. கல்லங் கோரை, stone sedge — Cyperus racemosus.
6. களாப்பூக் கோரை, sedge grass resembling carissa flower.
7. கன்னிக் கோரை, maidan sedge grass — Cyperus fastigiatus.
8. காட்டுக் கோரை, forest sedge grass.
9. கிளைக் கோரை, branched sedge.
10. குத்துக் கோரை, cluster sedge — Cyperus compressus.
11. குளப் படிக் கோரை, sedge grass grown in tank-steps — Cyperus haspan.
12. கொட்டிக் கோரை, water sedge —Scirpus spiralis.
13. சம்புக் கோரை, the same as கோரை which see.
14. சிப்பங் கோரை, fisherman's sedge grass — Cyperus venustus alias Scirpus miliaceus.
15. சிரகக் கோரை, the same as கன்னிக் கோரை No. 7.

16. கருக்கங் கோரை, wet-land sedge, the same No. 1 — Cyperus compressus.

17. கணைக் கோரை, rough sedge grass — Fairena scirpoides.

18. ஆட்டாங் கோரை, the same as கோரைக் கிழங்கு which see.

19. தந்தக் கோரை, ivory sedge grass.

20. சிற் றாட்டாங் கோரை, small coray root grass — Scirpus tricholomus.

21. திரட் கோரை. cyperus grass with a round stalk.

22. நெட்டிக் கோரை, pith sedge grass

23. மட்டைக் கோரை. leaf-stemmed sedge grass — Cyperus procerus.

24. பசங் கோரை, green sedge—Kyllingia monocephala,

25. பனைக் கோரை, straight sedge grass—Cyperus genus.

26. பாய்க் கோரை, matting sedge grass — Cyperus distach.

27. பிரப்பங் கோரை, cane sedge — Scirpus calamoides.

28. புற் கோரை, creeping sedge-grass —Cyperus pangorei alias C. junctifolius.

29. பூங் கோரை. flower-sedge grass—Cyperus geminatus. See சிலந்தி யரிசி.

30. பெட்டிக் கோரை, box-sedge grass —Cyperus corymbosus.

31. மயிற் கோரை, hair-sedge grass—Scirpus polytrichoides.

32. முடிக் கோரை, sedge grass with 'hairy top—Cyperus difformis.

33. முதலைக் கோரை, pointed sedge grass—Cyperus dubius.

34. மூக்கொற்றிக் கோரை, sedge grass with nose-screw flowers—Scirpus antarticus.

35. வரிக் கோரை, striped-sedge grass —Cyperus alopecuroides.

36. வாட் கோரை, sword-sedge grass —Cyperus iria.

37. சுளுந்துக் கோரை, torch-sedge.

38. கம்பங் கோரை, millet-sedge;white coray—Eragrostis ciliata.

39. ஊசிக் கோரை, needle sedge-grass

40. கற்கோரை, stone-sedge, the same as No. 5.

41. முட்கோரை, throny sedge — Cyperus pygmocus.

42. ஆற்றுக் கோரை, river sedge — Cyperus inundatus,

43. பெருங் கோரை, large sedge — Cyperus umbellatus.

44. நீர்க் கோரை, water sedge — Cyperus procerus.

45. பேய்க் கோரை, demon sedge—Cyperus roxburghii.

46. நெறிக் கோரை, broom sedge — Scirpus plantagineus.

47. தண்டாமரைக் கோரை, lotus sedge —Cyperus irla.

48. தாட் கோரை, another variety of sedge.

கோரைக் கிண்டி, see கோரை யுள்ளான்.

கோரைக் கிழங்கு, முத்தக் காசு. இது மிக்க வாசனை யுள்ளது. சாதாரணமாய்க் கடைகளில் விற்கும்; இது இருதயத்திற்கும், வயிற்றிற்கும் வலிமைக் கொடுக்கும்; வறட்சியை யுண்டாக்கும்; வியர்வையைப் பிறப்பிக்கும்; நீரைப் போக்கும்; கூந்தல் வளர் வதற்கு இது உபயோகப்படும், coray root —Cyperus pertenuis (root of) A fragrant root sold in bazaars. It is cordial, stomachic, dessicant, diaphoretic and diuretic. It is used for perfuming the hair,

கோரைக் குத்தி, see கோரை யுள்ளான்.

கோரை செய நீர், ஐங்கோலச் செயநீர். இது வாதத்திற் குபயோகப்படும். இதன் முறை சித்தர்களுக்குத்தான் தெரியும், an alchemical mystic preparation of a strong pungent fluid or dissolvent known only to Siddhars.

கோரைச் சம்பா, ஓர் வகைச் சம்பா நெல், a kind of rush-paddy.

கோரைச் சுண்ணம், வழலைச் சுண்ணம், the universal salt.

கோரைத் தண்டு. கோரைப் புல்லின் அடித் தண்டு, the tuber of cyperues or sedge grass.

கோரைப் படாத, மயிர் முளையாத of hair not grown as on head; without hair generally said of the head of the fetus.

கோரைப் பதி, பெரும் பீர்க்கு, a large species of luffa.

கோரைப் பாசி, ஓர் வகைப் பாசி, a species of moss—Sida humilis.

கோரைப் பாய், கோரைப் புல்லால் பின்னிய பாய். bulrush mat.

கோரைப் புல், see கோரை.

கோரைப் புற் கிழங்கு, see கோரைக் கிழங்கு.

கோரைப் பேரிகம், மிசிரிப் பருப்பு அதாவது சாலா மிசிரி, salep—Salep orchid.

கோரை மயிர், முறைப் புள்ள நீண்ட மயிர். "கோரை மயிர் குடியைக் கெடுக்கும்" என்பது பழமொழி, long and stiff hair. The proverb is that a woman having such a kind of hair will be the cause of ruination of a family.

கோரை மூஞ்சி, நீண்ட முகம், long face.

கோரை யரிசி, சிலந்தி யரிசி. see கோரை. 2. நீண்ட அரிசி, needle - shaped rice.

கோரை யிறால், நீண்ட மீசைகளை யுடைய ஓர் வகை கடலிறால் மீன், sea-prawn with long - whiskers.

கோரை யுள்ளான், ஓர் வகை நீண்ட உள்ளான், a species of long snipe — Gallinago gallinaria

கோரை வாதம், இடுப்புக் கடுத்து நொந்து, துரட்டியைப் போல் நடுப்படத் தறித்து, வலித்து, நடக்கவும், நிமிரவும் முடியாது சந்து மட்டும் வலிக்கும் ஓர் வாத நோய், (யூகி. முனி 1200), a rheumatic affection of the muscles about the loins. It is characterised by severe pain of the small of the back and piercing pain in the pelvis due to the inflammatory condition of the fibrous tissues. It is aggravated by movements of limbs, often preventing the patient from walking or maintaining an erect position.

கோரை வீரம், போகர் நூலில் சொல்லிய ஓர் வகை வீர வைப்பு, இது காகத்தினிறகை கொக்கிறகைப் போல் வெண்மை யாக்கும். a prepared compound of corrosive sublimate capable of converting the black wing of a crow into a white one resembling that of a stork.

கோரோசம், see கோரோசனை.

கோரோசனை, மாட்டு வயிற்றினின்று எடுக்கப்பட்ட கல்லைப் போன்ற ஓர் கடினமான வஸ்து. இது சாதாரணமாய்ப் பசு, எருது இவற்றின் வயிற்றிலிருந்து எடுக்கப்படும் அன்றியும், மான், வெள்ளாடு, ஒட்டகம், மீன், பாம்பு இவைகளின் பித்தப் பையி னின்று எடுக்கலாம். இதேமாதிரியாகத் தாது வர்க்கங்களிலும் உண்டு. ஆனால் இது பலமாதிரிகளாகவும், பெரிதாகவும், சொர சொரப்பாகவும், அனேக நிறங்கள் கலந்த தாகவுமுண்டு. இக் கோரோசனை சிறு கசப்பாகவும், தித்திப்பாகவும், வாசனையுடையதாகவுமிருக்கும். பசுவின் கோரோசனையோ தட்டையாகவும் வட்டமாகவும், மேற் பக்கம் மிருதுவாயும், பளபளப்பாயும், நிறங்கள் பல வர்ணமாகவும் பொதுவாக கரும் பச்சையாயும் இருக்கும். இதில் கடுகுப் பிரமாணம் வெற்றிலை ரசத்தில் அல்லது முலைப் பாலிற் கொடுக்க, சுரம், குளிர், சீதளம், நீர்க் கோர்வை, இசிவு, மாந்தம் இவைகளைப் போக்கும். இதை கடைச் சரக்குகளோடுச் சேர்த்து மாத்திரைகளாகச் செய்து கடைகளிலும் விற்பார்கள். இம் மாத்திரையைக் கஷாயத்தில் இழைத்துக் கொடுக்கக் குழந்தைகளின் பிணியைத் தீர்க்கும். இது உற்சாகத்தைக் கொடுப்பது மல்லாமல் விஷத்தையும் போக்கும். இதைக் கடுக்காய், மாசிக்காயோடு இழைத்துக் கலந்து. பிறந்த குழந்தைகளுக்கு நாக்கில் தடவுவ துண்டு, உருக்கிய நெய்யில் கலந்து மூக்கிலிட தலை வலியை போக்கும். காட்டிலிருக்கும் வெள்ளாட்டி னின்று எடுக்கும் கோரோசனை புரை புரையாக விருக்கும். இது இராச கருவிகளுக்கு மிக்க வலிவை யுண்டாக்கி, உடம்புக்குப் பலத்தைக்கொடுக்கும்; அன்றியும், நீர் வாதத்தைப் போக்கும்; கட்டிகளைக் கரைக்கும்; இருதய நோய்களையும் குணப்படுத்தும். ஊசியை பழுக்கக் காய்ச்சி இதனுள் விட்டெடுக்க ஊசியின் மேல் மஞ்சள் நிறம் படிந்து மஞ்சப் புகை வெளி வந்தால் நல்ல சரக்கென்றும், கறுத்தால் அல்ல வென்றும் தெரிந்து கொள்ளலாம். a concretion found in the intestines of a cow or an ox known as Bezoar—Bezoar orientale. It is also found in some other animals especially ruminants as, antelope, goat. camel (Calculus cisticus camelimus), and also obtained from fish, snake etc. It is said to be the concretion of bile from the bile duct (biliary calculus): and is given the name of animal bezoar. A similar substance is also obtained from minerals; and it is

known as mineral bezoar. The mineral bezoar is of varied size, generally big and rough. It is a mixture of various colours, The animal bezoar i. e. of cow is oval, oblong, flat, circular, and seldom of the size of an egg; surface very smooth, glossy, colour various generally dark green or bluish green. Structure is laminated and concentric. It tastes rather bitter and sweet and is aromatic. This, *of mustard size* mixed with the betel juice or woman's breast *milk is prescribed* by Vaidyans for fever, cold, chillness, fits, indigestion or loss of appetite in cases of children. Mixed with other bazaar drugs, it is sold in bazaars in the form of pills, which, mixed with decoction, is given internally for children's diseases. It is medicinally cordial and alexipharmac. It is employed with gall-nut or black oak *for preparing* a mixture *for* cleansing the inside of mouth of new - born infants Mixed with *warm* ghee, *it is poured into* the nostrils in cases of head - ache. The bezoar of wild goat — Capra oegagrus will be found in flakes. This is said to be highly useful to vital organs and to promote strength to the system. It is an excellent remedy in urinary diseases, in breaking up abscesses and curing diseases of the heart. The following is the test for ascertaining the purity of the substance. A red-hot *needle pierced through it, will be found* stained with yellow deposit, giving out at the same *time yellow fumes.*

NOTE I;— *According to European nomen*clature. animal bezoars are concretions named after the animal from which it is obtained as, fish-bezoar; goat-bezoar, snake-bezoar etc. Modern writers have extended this term 'bezoar' to all the concretions in the body of animals; and for this reason many snake-stones are *mere animal bezoars; but this animal* bezoar is not considered as a variety of bezoar by native practitioners.

Of animal bezoar, there are two kinds viz—one is a bilious concretion of the cow or bullock and that is bile—Calculus cysticus bovis, contained in a small bag which holds either 2 or 3 small bezoars, each about the size of a tamarind stone or a large marble; and the other one is a concretion found in the fourth stomach of a goat of persia — Capra oegagrus. It has a smooth glossy surface and is of a dark green or olive colour, about the size of kidney bean.

கோரோசனைக் குளிகை, *சன்னி தோஷம், குழந்தைகளுக் கேற்படும் கபரோகம், இருமல், சுரம், தலைவலி முதலியவைகட்குக் கொடுக்கு மோர் மாத்திரை,* a pill prepared with bezoar as chief ingredient and prescribed by Vaidyans for morbid affections, in apoplexy and children's diseases such as, phlegm in the chest, cough, fever, headache etc.

கோரோசனைப் பாவிகம், வைப்புக் கோரோசனை, artificially prepared bezoar; false bezoar.

கோரோசனைப் புளிப்பு, கோரோசனைத் தூள் gallic acid occurring in the bezoar stones in the form of a powder.

கோரோசனை மாத்திரை, see கோரோசனைக் குளிகை,

கோர்க் கலம், மட் பாண்டம், earthen vessel earthenware.

கோர்த்த, மூளையைச் சேர்ந்த, pertaining to the large part of the brain — Cerebral.

கோர்த்த சிரா, மூளைச் சிரா, pertaining to the *nerves of the brain* — Cerebro-neurotic.

கோர்த்தம், மூளையின் பெரும் பங்கு. இது கபால அறையில் நெற்றித் தொடங்கி பிடரி வரையிலு முள்ள விசாலமான பகுதி, the superior and chief portion of the brain occupying the whole upper cavity of the shull—Cerebrum.

கோர்த் தரம், *சிறு மூளை. இது பிடரி யெலும் பினது கீழ்ப் பள்ளத்துள் ளடங்கிய மூளை யின் பகுதி,* that portion of the brain which is posteripr to and underlies the great cerebral mass or cerebrum — Cerebellum.

கோர்வைப் புகையிலை, ஓர்வகைப் புகையிலை, a kind of tobacco.

கோல கசிலி, ஆனைத் திப்பிலி, elephant pepper — Scindapsis officinalis.

கோல கசேபிகம், *மாசிப் பச்சை,* green black oak.

கோல கந்தம், *ஓர் கிழங்கு, இது புழுக்களைக் கொல்ல உபயோகிக்கப் படும்,* a bulbous *root used as a remedy for killing* worms.

கோலகப்பை, நீண்ட காம்புள்ள அகப்பை. இது தைலம் காய்ச்ச உதவும், ladle with a long handle. It is used in the preparation of medicated oil ; 2. துடுப்பு. இது லேகியம் கிண்ட உதவும், a long wooden rod flattened at one end, used for stirring the contents while preparing electuaries.

கோலகம், குளிக்கு மஞ்சள். பெண்கள் குளிக்கும்போது சாதாரணமாக இதை உடம்பிற் பூசிக் கொள்வதற்காக உபயோகிப்பார்கள், turmeric or saffron used as a paint for rubbing the body with, by women generally while bathing; 2. பீர்க்கு, common luffa — Luffa acutangula; 3. திப்பிலி, long-pepper; 4. பூ வரும்பு, flower bud, 5. see அழிஞ்சில்; 6. ஓர் வாசனை, a . perfume; 7. மிளகு, black pepper.

கோலக் கிருதம், நில வேம்பு, ground neem— Justicia paniculata.

கோல சிம்பி, பூனைப் பிடுக்கன். cat bean — Carpopogens pruriens.

கோலச் சங்கம், see கோலச் சங்கு.

கோலச் சங்கு, முட் சங்கு, mistle-toe berry thorn — Azima tetracantha.

கோலச் சுண்ணம், வழலைச் சுண்ணம், (In Alchemy) a prepared calcium compound.

கோல தனம், வாசனைச் சாமான்கள், a mixture of fragrant substances. See கோலந்தனு.

கோல நகுட வேர், see அமுக்கிரா.

கோலந் தனு, ஞாழல் இது வாசனை திரவியங்களோடும், தைல மருந்துகளோடும் சேர்க்கப்படும், a mixture of various shrubs used in perfumes and ungeants such as Cassia, Jasmine etc.

கோலப் புச்சம், ஓர் நாரை, a kind of stork.

கோல மாலம், மலை யாமணக்கு, mountain caster plant; hill ricinus — Ricinus (genus).

கோல முத்தம், ஓர் பூடு, an unknown plant (?)

கோல மூலம், திப்பிலி வேர், root of long-pepper — Piper longum.

கோலம், அழகு, beauty; 2. தக்கோலம், cubeb pepper — piper cubeba; 3, இலந்தைப் பழம், see இலந்தை: 4. பன்றி, hog; 5. பறவை, bird; 6 பாக்கு, areca-nut—Areca catechu; 7. முட் பன்றி, a kind of hedge hog; 8. தொடை, thigh; 9. பீர்க்கு, common luffa — Luffa acutangula; 10. மிளகு, black pepper, 11. see கருங்காலி; 12. திப்பிலி மூலம், root of long-pepper; 13. எடுத் தயிர், curd from which cream is not removed; 14. குரங்கு monkey; 15. முட் பன்றி, porcupine; 16. உருவம், external appearance: shape; 17. அலங்கோலம், confused state; 18. மலைப் பன்றி, hill hog.

கோலரக்கு, see கொம்பரக்கு.

கோல[illegible]ம், முளை, sprout; shoot.

கோலரி, see அமுக்கிரா.

கோல லவணம், துரிசு, a kind of blue vitriol.

கோல வல்லி, ஓர் கொடி. இதன் காய் மிளகைப்போ லிருக்கும், a kind of creeper —Pathos officinalis. The pungent fruit of this resembles pepper.

கோல வல்லீசம், செவ் வியம், common pepper—Piper nigrum.

கோல வுணவு, see கோரைக் கிழங்கு.

கோல வேர், நிலப் பனை, ground palm — Curculigo orchioides.

கோலன் வல்லி, see ஆனைத் திப்பிலி.

கோலன் வைப்பு, சிவனார் வேம்பு. Shiva's neem—Indigofera asphalathoides.

கோலா, திப்பிலி, long - pepper — Piper longum; 2 ஓர் வகை தித்திப்புப் பானம், a kind of sweet drink.

கோலா, ஓர் வகை கடல் மீன். இதன் உடம்பு நீண்டும், ஒல்லியாயும், தலை கூச்சாகவும், எலும்பு பச்சை நிறமாயும் இருக்கும். இதில் அனேக வகைகள் உண்டு. அவையாவன, a kind of sea-fish; gasfish or garpike — Belone. It has a slender body, pointed head and green bone. The following are the different varieties viz:—

1. வட்ட மூக்கு கோலா, bottle-nosed pike—Anacanthus barbatus.
2. பறவைக் கோலா, flying-pike — Exocaetus poecilopterus.
3. பசுங் கோலா, green-pike — Belone annulata.
4. சப்பைக் கோலா, flat-pike.
5. வரிக் கோலா, striped pike.
6. திருவெண் கோலா, white-pike.
7. பாம்புக் கோலா, pike resembling a snake.

8. கருவாலன் கோலா, black-tailed pike

9. ஏமின் கோலா, garfish : garpike.

10. மயிற் கோலா, hairy-pike.

11. பற் கோலா, toothed-pike.

12. தாய்க் கோலா, mother-pike.

13 பேச்சிக் கோலா, another variety.

கோலாக் கட்டா, ஓர் கடல் மீன் இது 1½ அடி நீளம், பச்சை நிறம், நடுவே நீல நிறம் கலந் துள்ளது. a sea-fish — Ch[illegible]mus toloo. It is 1½ ft. long, greenish, shot with blue colour.

கோலாங் கூலம், முசு முசுக்கை. bristly or rough bryony : 2. ஓர் வகைக் குரங்கு அதாவது முசு, langur which is a kind of ape — Presbytis entellus.

கோலாச்சி, ஓர் மீன், a kind of fish (?)

கோலாச் சுறு, சாம்பற் சுறு. grey shark — Carcharias macloti.

கோலாந்தி, பற் பாடகம், fever plant — Mollugo cerviana.

கோலாபம், சிவதை, Indian jalep — Ipomaea turpethum.

கோலா மீன், see கோலா ; 2. பறவை மீன், flying fish — Exococtus mesogaster.

கோலா விண்டு, ஓர் முள்ளி, Indian black berry — Robus lasiocarpus.

கோலா வத்தம், கீழ்க்காய் நெல்லி, which see.

கோலா விதை, இலந்தை விதை. jujube seed.

கோலி, மயிர்; 2. இலந்தை. jujuba 3. உடும்பு, guana ; 4. திப்பிலி, long-pepper — Piper longum ; 5. பன்றிக் கிழங்கு. pig root — Trapa bispinosa ; 6. சிற் றழிஞ்சில், acute-leaved privet — Ligustrum neilgherrense ; 7. புங்கள். elliptic-leaved privet — Ligustrum perrottettii.

கோலிகம், இலந்தை, see கோலி.

கோலிக் கற்றை, see கவரி மான்.

கோலிசம், மிளகு, black pepper — Piper nigrum.

கோலிம், see கட்டுக் கொடி.

கோலி வாசி, கரடி, bear.

கோலி விறம், see அழிஞ்சில்.

கோலுகி, தாளகம், orpiment.

கோலே, see கோலிசம்.

கோல், ஊன்று கோல், leaning staff ; 2. மரக் கொம்பு, branch of a tree : 3. இலந்தை jujube ; 4 அஞ்சனக் கோல், a rod used to blacken the eye-lashes.

கோல் மூலி, இலந்தை, see கோல்.

கோவக் காரி, தலைச் சுருளி, see கோபக் காரி.

கோ வங்கம், சரகண்ட பாஷாணம், a kind of native arsenic.

கோவங் கிழங்கு, see கொவ்வைக் கிழங்கு.

கோவசூரி. மாட்டுக் கு வரும் அம்மை, cow-pox.

கோவசை, மலட்டுப் பசு. cow not calved.

கோவணம், நீர்ச் சீலை. இது ஆண் குறியை மறைக்க வேண்டி இந்துக்க ளணியும் சீலைத் துண்டு, a long narrow or a triangular piece of cloth passed between the legs and fastened to middle string, before and behind. It is worn by males generally by Hindus to cover their genitials ; 2. அரைக் கட்டு, இது காயம், புண், கட்டி இவைகளைக் கட்ட வுதவும், a fore-lap or bandage one band of which is tied round the waist while another band dividing into two in front of the anus is brought from behind between the thighs and the ends fastened in front — T. bandage.

கோவணாண்டி, கோவண மாத்திரம் தரித்த சந்நியாசி அல்லது சாது, a Hindu ascetic or Sadhu found only with a loin cloth and nothing more.

கோவணி, see ஆத்தி.

கோவதை, see கோ வத்தி.

கோவத்தி, பசுக் கொலை, slaughter of cows.

கோவம், பொன். gold; 2. கோபம், anger; 3. தம்பலப் பூச்சி, lady's fly. See இந்திர கோபம்,

கோவர கழுதை. see கோவேறு கழுதை.

கோ வரக்கி, வெள் வாகை. doon sirrissa tree — Albezzia procera (typica).

கோவர புடம். see கோபுர புடம்,

கோ வரிதகி, வில்வம், bael tree — Aegle marmelos; 2. பீர்க்கு, gourd plant — Luffa foetida.

கோவரம், சந்தனம், sandalwood — Santanum album ; 2. சின்ன முத்து, small pustules or measles.

கோ வர்த்தனம், சிங்கம், lion ; 2, மாதுளை. pomegranate — Punica granatum.

கோவல கணவாய், கணவாய்ச் சிப்பி மீன், a species of cuttle-fish — Octapis vulgaris.

கோவலி, பல்லுக் கிட்டுதல், teeth becoming rigidly closed ; lock-jaw.

கோ வளை, நரி வாழை, tube-flower ; pipe — flower — Cleodendron sphoenanthus.

கோவன் காய், மலைத் தக்காளி, mountain current tomato — Solanum denticulatum.

கோவா, மல்கோவா என்னும் ஓர் வகை இனிப்பு மாம்பழம், a kind of sweet mango known as Mulgova ; 2. இடையர் ஊர், shepherd country known as Goa.

கோவாக் கிழங்கு, கோவா தேசத்து உருளைக் கிழங்கு, Goa patato or Gca yam.

கோவா தேவதாரு, கோவா தேசத்தில் விளையும் தேவதாரு மரம். Goa cedar tree ; Goa cypress — Cypresaus glauca.

கோவாத் தூள், அரரோபா பவுடர் அல்லது பாகியா பவுடர் என்று பெயர். இது பாகியா தேசத்தில் விளையும் ஓர் மரத்தின் சக்கையிலிருந்து செய்யப் படும் சூரணம், இது சரும நோய்களுக்குப் பூசு மருந்தாக உபயோகப்படும். Goa powder. It is also known as Araroba powder. or Bahia powder. The powder is produced from the chips of a leguminous plact growing in Bahia ; and is employed as a powerful remedy in ringworm and certian other skin diseases.

கோவா பவுடர், see கோவாத் தூள்.

கோவாரி. பசுவிற்கு வரும் விஷ சுரம், இது ஓர் பெருவாரி நோய். இதற்கு அலரி யென்றும் பெயர் இது ஒரு தொத்து நோய். மனிதர்களுக்கும் ஏற்படும் இந் நோய்க் காணில் உடம்பை முறித்து, மார்பிலும், கழுத்திலும் வலியை யுண்டாக்கிப் பின் பாகமும் தொந்தப் பட்டு அதனால் உடம்பு மிகவும் காய்ந்து பிறகு தணியும், நாடியும் வேறுபட்டு துரிதப் படும். அன்றியும், மேல் மூச்சும், இரைப்பும் காணுவ துடன், 16 நாள் வரைக்கும் நீடித்துத் துன்புறுத்தும் சாதாரணமாக 3-9 நாள் வரைக்கும் தான் இருக்கும். இதற்குப் பனங் கள்ளைப் பரிகார மருந்தாகக் கொடுப்பதுண்டு. மேலும், ஆவாரங் கொழுந்து, கற்றாழைச் சோறு, சீரகம், வெங்காயம், கிளுவைப் பட்டை முதலியவைகளைக் காடியிற் சேர்த்து அரைத்து மருந்து செய்தும் கொடுப்ப துண்டு. இந் நோயைப் போலவே குதிரை களுக்கும், கோவேறு கழுதைகளுக்கும் காண்ப துண்டு, cow epidemic — Rinderpest. It is an infectious disease and is communicable to human subject. Its earliest symptoms is a spasmodic twitching of the muscles of the chest and the neck and sometimes of the hindquarters (The temperature rises to 105° F. and subsequently falling as low as 88° F.) The pulse is little disturbed and then becomes quick and weak. The respiration is accelerated and laboured when the respiratory muscles are involved in the spa[illegible] The disease may even last from I t[illegible] days ; but its usual duration is from three to nine days. Palmyra toddy is given as a cure. The tender leaves of tanneris senna, the succulent portion of aloe leaf, cummin seed, onions, tender bark of Kiluvai are well ground and mixed with vinegar and prescribed by Vaidyans. Similar disease affecting the horse and the mule is known as glanders.

கோவா வவரை, கோவா பீன்சு அல்லது முறுக் கவரை, square or goa bean — Psophocarpus teragonolobus.

கோவிக் கீரை, see கோவிசு கீரை.

கோவிசு கீரை, கோசு முட்டை, இது நமது நாட்டுக் கீரை வகையிற் சேர்ந்த தல்ல ; ஐரோப்பியர் களால் கொண்டு வரப் பட்டு மலைகளின் மேல் பயிராக்கப் படும். இது முழுதும் வளர்ந்தால் இலைகள் ஒன்றிற்கொன்றுகப் புரையைப் போலிருக்கும். இவ் விலைகளை வாத வலி, தலைப் பிடிப்பு இவைகளுக்கு வைத்துக் கட்டலாம். இதன் விதைகள் நீரைப் போக்கும், மலத்தை இளக்கும், வயிற்றிற்கு வலிமை யுண்டாக்கும், கிருமிகளைக் கொல்லும். cabbage - domestic colewort — Brassica oleracea. This plant is not a native of this country ; by Europeans at an early date of their occupation and is now grown on hills ; when perfect. it consists of solid masses formed by the leaves compactly enveloping one another : and it finally expands into a globular mass. The leaves form an application in rheumatism and gout. The seeds are diuretic, laxative, stomachic and anthelmintic.

கோவிசுப் பூ. காலி புளோவர், இது கோவிசுச் செடியின் ஓர் இனம். இது பூர்க்கும் போது

மாறாத லடைந்து இவ்விதமாக உருவம் கொள்ளும், cauliflower — Botrytis, It is a variety of cabbage Its heads are a malformation of the inflorescence, forming a white congolmeration of imperfect buds.

கோ விட்டை, பசுஞ் சாணி, cow dung.

கோவிதா see கோவி தாரம்.

கோவி தாரம், see காட்டாத்தி, 2 see குரா மரம்.

கோவிந்தம், செம் முள்ளி, thorny ...dye — Barleria prionitis.

கோவியம், see கோவிட்டை.

கோவிரதம், விடத் தேர், mint — Mentha crispa,

கோ விருடபம், எருது, bull.

கோ விலங்கு, சிங்கம், lion, as king of beasts.

கோவில் திருமட்ந்தை, வைப் பரிதாரம், an orpiment artificially made ; synthetic orpiment,

கோவிற் புரு, மாடப்புரு. இது வீட்டில் வளர்க்கப்பட்ட புறுவில் ஒன்று. இது சிறந்ததாகக் கொள்ளப்படும். இது வீடுகளிற் கூடு கட்ட நற் சகுனமாகக் கருதப்படும். இதன் கறி சாப்பிட தீபாக்கினியும் சுக்கிலமும் பெருகும். வாதப் பிரகோபம் நீங்கும் இது பத்தியக் கறியாம், blue rock-pigeon — Columba intermedia alias C. livia, It is one of the domestic pigeons in India and is much venerated. It is builds its nest in houses, it is considered a good and fortunate omen. Its flesh is eaten ; and is said to promote hunger and formation of seminal fluid. It mitigates the aggravated condition of Vatha thus curing rheumatic and paralptic complaints.

கோவு கந்தம், தாலம் பாஷாணம், a kind of native arsenic (?)

கோ வெண்ணெய், பசு வெண்ணெய், butter from cow's milk ; cow's butter.

கோ வேறு கழுதை. குதிரைக்கும் கழுதைக்கும் பிறந்த கலப்புச் சாதி, an offspring of *female horse and male ass : mule.*

கோவை, கொவ்வைக் கொடி, இதன் பூ வெள்ளை, பழம் சிவப்பு, 2 அங் குல நீளம், வருஷம் முழுவதும் பூக்கும், வேலிகளில் வளரும், பழத்தைத் தின்னலாம்; காய் கறிக் குபயோகிக்கலாம். இதன் இலைச் சாற்றை விஷக் கடிக்குப் பூசலாம். இலை உஷ்ணத்தையும், வியர்வையையு முண்டாக்குந் தன்மையது. இலைக் கஷாயம் நீரடைப்பு, இரணம், சொறி சிரங்கு, இருமல் இவைகள் போம். இதைச் சூரணித்து சாப்பிட உடம்பின் சூடு, நீரடைப்பு, கரப்பான், இருமல் இவைகள் போம். இலை ரசத்தை வெண் ணெயோடு சேர்த்துச் சிரங்கு, விரணம் இவைகளுக் குபயோகிக்கலாம். இதன் கிழங்கு நீரிழிவு, கோழை, குட்டம், இரைப்பு, நாப்புண் இவைகளை நீக்கும். காயை வற்றல் செய்து சாப்பிட அரோசகம் உஷ்ணம், சிலேட்டுமம் போம் இது அடியிற் கண்டபடி பல வகைப்படும் Indian caper ; Red bitter melon — Cephalandra indica alias Bryonia grandis alias Coccinea indica. It is a climbing shurb with white flowers, and fruit about 2 inches long : *flowering throughout the year.* common in hedges ; ripe fruit is edible ; raw *or green fruit is used in curries.* Juice of leaves is applied to bites of animals. It is stimulant and diuretic ; decoction of leaves is given in cases of stranguary, ulcers, itch, cough etc ; powder of leaves is prescribed for excess of heat in the system, stranguary (obstruction of urine). skin eruptions, cough etc ; juic of leaves mixed with butter is an external application for itch and ulcers to wounds. The root is useful in diabetes and phlegmatic diseases, leprosy, asthma, ulcers, inflammation of the tongue etc. Raw fruit when fried and taken internally removes loss of appetite, excessive heat of the body and phlegmatic disorders The following are the different varieties as mentioned below :—

1. நல்ல கோவை, comm on caper.
2. பெருங் கோவை, large caper —
3. இராமக் கோவை, Rama's caper — Bryonia amplexicaulis.
4. கருடக் கோவை, braminy kite caper — Bryonia epigaea.
5. கார்க் கோவை அல்லது கருங் கோவை, black caper — Karivia amplexicaulis.
6. கற் கோவை, stony caper Bryonia umbellata.
7. ஐவிரலிக் கோவை, five fingered palmate leaf — Bryonia leciniosa.

8. மணற் கோவை, a kind of caper growing in sandy soil.

9. வரிக் கோவை, striped caper —

10. செங் கோவை அல்லது சிவப்புக் கோவை. இதுவே குங்குமக் கோவை, saffron caper — Rhynchocarpa foelia.

11. தித்திப்புக் கோவை, sweet caper — Lehneria umbellatta

12. கொல்லன் கோவை, the same as No. 4. See ஆகாச கருடன்.

13. அப்பைக் கோவை, the same as No. 11.

14. நாமக் கோவை, another variety.

கோவைக் காய், see கோவை,

கோவைக்காய் வற்றல், பச்சைக் கோவைக் காயை அறுத்துக் காயவைத்து எண்ணெயிலிட்டு வறுத்த பண்டம், dried pieces of green caper which are sliced and fried in gingelly oil.

கோவைக் கிழங்கு, see கோவை 2, கொல்லன் கோவைக் கிழங்கு, root of Brahminy kite caper ; 3 கோவை வள்ளிக் கிழங்கு. Goa potato ; Goa yam.

கோவைக் கீச்சான், ஓர் கடல் மீன், a sea-fish

கோவைக் கீரை, கோவை யிலை, leaves of Indian caper.

கோ வைசூரி, பசுவிற்கு வரும் அம்மை, cow-pox. See கோ வசூரி,

கோவைச் சருக்கரை, கோவை தேசத்து சருக்கரை, Goa sugar.

கோவைத் தண்டு, கோவைச் செடியின் தண்டு leaf-stalk of Indian caper

கோ வைத்தியன், பசு வைத்தியன், a veterinary doctor who has specialised in the treatment of cows.

கோவைப் பழம், கனிந்த சிவப்புக் கொவ்வைப் பழம், red riped caper fruit. It is eaten raw.

கோவை யவரை, முறுக்கு பீன்சு, goa bean.

கோவை வள்ளி, சிறு வள்ளிக் கிழங்கு, Goa yam ; goa potato — Dioscorea aculeata.

கோ முகம், சங்கு பாஷாணம், a kind of white arsenic,

கோழும், see கோ முகம்.

கோழும் கொடு மலை, வெங்கல மலை, a mountain containing bell-metal ore.

கோழி, குக் குடம் இது வீடுகளில் வளர்க்கப்படும் பிராணி இதில் சேவல் பெட்டைக் கோழி, என இரு வகைத்து. இதன் கறி உடம்பிற்கு மிகக் சூடு. இதனால் மகாவாதம், வாந்தி, நாட்பட்ட சுரம், சயம் இவைகள் போம்; சுக்கிலம், பித்தம் உண்டாகும்; உடம் பிளைக்கும் இது மாந்தின் வேகத்தை முறிக்கு மாதலால், பத்தியத்திற் காகாது. இதில் அடியிற் கண்டபடி பலவகை யுண்டு, ஆதலின், அவற்றின் மாமிசங்களும் வெவ்வேறு குணத்தை யுண்டு பண்ணும், fowl —Gallus domesticus. Cock and hen are t[illegible]wo kinds. Its flesh lends heat [illegible]e system; and it is useful it c[illegible] of rheumatism, asthma, bodily pain, loss of appetitie, vomiting, chronic fever, consumption etc, It promotes the secretion of bile and semen; but it emaciates the system. As it has the tendency to neutralise the effects of medicine, it is excluded from the list of dietetic substances; Fowl consists of different varieties. and so, the properties and effects of their flesh are also different : —

1. அறுபதாங் கோழி, a hen which lay eggs every 2 months.
2. கருங்கோழி, a fowl whose skin and bones are black.
3. காறுங் கோழி, small jungle fowl.
4. சேவற் கோழி, சாவல்,cock-fowl.
5. வான்கோழி, turkey fowl.
6. பெட்டைக் கோழி, hen fowl.
7. காட்டுக் கோழி, jungle fowl.
8. நீர்க் கோழி, water - fowl,
9. நெருப்புக் கோழி, ostrich fowl.
10. சம்பங் கோழி, another variety.

NOTE : — சுவர்க் கோழி although called a கோழி, it does not belong to the variety of fowl for it is only an insect known as cricket of gryllidae family.

கோழி, see கோழு யவரை. 2, பன்றிக்கிழங்கு pig root — Trapa bispinosa; 3. உபரச வகையிலொன்று. one of the 120 kinds of natural substances contemplated in Tamil medicine : 4. வெருகங் கிழங்கு, bulbous root of வெருகு — Arum macrorhizon ; 5. see கோழித் தலை கந்தகம் ; 6. உள்ளான், common snipe ; 7. காட்டுக் கோழி அல்லது கற்கவுதாரி, rock pigeon : common sand-grouse - Pterocles exustive

கோழி கவிழ்க்கும் நேரம், அந்திப் பொழுது, the time when poultry are shut up i. e. evening time—Cock-shut.

கோழி கூவல், சேவல் கூவுதல், cock's crow indicating day-break.

கோழி கூவு நேரம், விடியற் பொழுது அதாவது காலை 4 மணி, day - break indicating 4 A. M. as the time for cock's crowing.

கோழிக் கண், குன்றி மணி, je[illegible] bead.

கோழிக் கல், குறுஞ்சிலைக் கல். இது இரும்பை மெது வாக்கும், a kind of mineral stone used for polishing iron; 2. see சுரற் கல்.

கோழிக் கறி, fowl curry, see கோழி.

கோழிக் காசினைக் கீரை, உமிரிக் கீரை; sea-blite. See கோழிப் பசளை.

கோழிக் காமம், எளிதில் திருப்தி யடையும் காம விச்சை, sexual desire lasting only for a short duration — Lust.

கோழிக் காரம், கோழிப் பீ, fowl dung; 2. கோழிப் பீ சேர்ந்த மருந்து; medicine in which fowl - dung forms the chief ingredient; 3. சாராயங் கலந்த கோழி யிரத்தம், fowl's blood mixed with arrack or brandy; 4. மருந்து அல்லது சாராயங் கலந்த கோழி சூப்பு, fowl-soup mixed with medicine and brandy; 5. கோழி யெரு, fowl-dung manure.

கோழிக் கா லவரை, ஓர் வகை யவரை, a kind of bean so called from its resemblance to fowl's foot.

கோழிக் கால், கொடி யரசு, wild peepul tree —Ficus arnottiana; 2. கோழியின் கால், fowl's leg.

கோழிக் காற் புல், தட்சணப் புல், Deccan grass—Panicum racemosum.

கோழிக் காற் பூடு, குமரகன் பூடு, a plant, the leaves of which resemble the fowl's leg.

கோழிக் கிரணிகம், see கோழித் தலை கந்தகம்

கோழிக் கிழங்கு, வெருகன் கிழங்கு,seeகோழி

கோழிக் கீரணி, மாந்தப் புல். citronella grass. See காவட்டம் புல்.

கோழிக் கீரை, பருப்புக் கீரை. இது தோட்டங்களில் பயிராக்கப்படும்; மழை காலத்தில்பூக்கும். இது உடம்பிற்குக் குளிர்ச்சி; துவர்ப்புக் குணம். நீரைப் போக்கும்; அழற்சியை நீக்கும்; சொறி கரப்பான் உண்டாம்; கிருமி சேரும். இதன் விதை உட் காந்தலை தணிக்கும்; நீரைப் பிரிக்கும்; குடி நீராகச் செய்யலாம். இக் கீரையை உணவில் கறியாக வுபயோகிக்கலாம், cook's green — Portulaca oleracea It is a herbaceous plant cultivated in gardens; flowers in the rainy season leaves are fleshy. Leaves are refrigerant, astringent diuretic and emollient; promote skin eruptions and itch; cause worms in the intestines. The seeds are also medicinally demulcent, slightly astringent and diuretic; draught is made from it. Leaves are used in curries.

NOTE:—There are three varieties of oleracea viz:—The common green, the golden and the large - leaved golden. The juice of leaves is substituted for spirit of nitrous ether.

கோழிக்குஞ் சாணம, (கோழி + குஞ்சு + ஆணம்)கோழிக் குஞ்சு சூப்பு, chicken-broth

கோழிக் குஞ்சு, இளங் கோழி, chicken.

கோழிக் குடி, நெட்டி லிங்கு, Indian mast tree —Polyathia longifolia.

கோழிக் குடை, குடை மேற் குடை, a plant

கோழிக் குரல். see கோழி கூவல்; 2. விடியற் காலை, cock's crow.

கோழிக் குறுமா, மகம்மதியர்கள் கோழிக் கறியோடு பச்சை மசாலை யிட்டுத் தயாரிக்கும் குழம்பு, a kind of stew prepared by Mahamadans with the aid of green chilly and other curry stuffs.

கோழிக் குறுமான், see கோழிக் குறும்பான்.

கோழிக் குறும்பான், see கோழிக் கீரை.

கோழிக் கூடு பழம், கள்ளிக் கோட்டையில் உற்பத்தி யாகும் வாழைப் பழம், a kind of plantain fruit grown in Calicut.

கோழிக் கொடி, see கோழி முளையான்; 2. see கோழி யவரை.

கோழிக் கொண்டை, சேவற் கொண்டை, cock's comb; 2. சாவற் சூட்டுப் பண்ணை, an ornamental plant known as cock's comb — Celosia cristata; 3. see கோழித் தலை கந்தகம்,

கோழிச்சம், கோழிப்பீ, see கோழி யெச்சம்

கோழிச் சரம், மா காளிக் கிழங்கு அதாவது பெரு நன்னாரி. இது ஊறுகாய்க் குதவும், country or big sarsaparilla. A tuberous root of Hemidesmus genus. It is used in pickles.

கோழிச் சாவல், see கோழிச் சேவல்.

கோழிச் சாறு, கோழிச் சூப்பு, fowl soup; 2. கோழிக் குஞ்சு சூப்பு, chicken-broth.

கோழிச் சிலும்பான், சிறு சிலும்பான், an un known plant (?)

கோழிச் சூடன், கோழிக் கொண்டை, cock's comb; 2. ஓர்வகைப் புல், see கோழிக் காற் புல்.

கோழிச் சூடு, see உச் சிலிந்தி.

கோழிச் சேபகம், மாந்தப் புல், see கோழிக் கிரணி.

கோழிச் சேவல், ஆண் கோழி அதாவது சேவல் கோழி. male of the domestic fowl; cock.

கோழித் தலை கந்தகம், சிவப்புக் கந்தகம். இது சேவல் கொண்டையைப் போல் சிவப்பாயிருத்தலா லிப் பெயர். இது சிறிய தட்டையான துண்டுகளாக கிடைக்கும். ஊதா அல்லது செங்கற்றூள் நிறம் இது கந்தகம் சேர்ந்த ஓர் உலோகம் எனக் கருதப்படும். இதைக் கொளுத்த கொழுந்து விட்டெரிவதுடன் கந்தக நாற்றமும் வீசும். இதைத் தமிழர்கள் வாத முறையில் பொன் வெள்ளி செய்வதற்கு உபயோகப் படுத்துகிறார்களென்பது தெரிந்த விஷயம், red sulphur which is so called from the colour of cock's comb. It is found in small and highly crystalline, flat and irregular pieces of purple or brick-dust colour. It is probably a sulphuret of some metal It burns with a blue flame and emits smell of sulphur. It is resorted to by Tamil alchemists; and is supposed to be used by them as a chief ingredient in preparing artificial gold and silver.

கோழித் தலை கெந்தி, இது தமிழ் முறைப்படி 32 வைப்புப் பாஷாணங்களி லொன்று, according to Tamil medicine, It is a prepared arsenic which is classified as one of the 32 kinds of synthetic poisons, See கெந்தி பாஷாணம்.

கோழி தலைத் சூடன், see கோழித் தலை கந்தகம்.

கோழித் தாடை, கோழித் தொண்டையின் கீழ் தொங்கும் சதை, • the fleshy excrescence hanging under the throat of the domestic fowl — Wattle.

கோழித் தூக்கம், கோழியைப் போல் அடிக்கடி உறக்கங் கொண்டெழும் தூக்கம், light sleep enabling one to wake up frequently like a cock even on slight disturbances.

கோழி நெஞ்சு, கோழிக் கூடையது போன்ற நெஞ்சு, pigeon breast; 2. அச்சத்தால் நடுங்கு மனம். timid or agitated heart; pigeon-hearted; chicken-hearted.

கோழி பற்பம், see கோழிமுட்டை பற்பம்; 2. கோழிப் புடமிட் டெடுத்த பற்பம், white powder obtained by calcining egg.

கோழி[illegible]ரைக் கீரை, see கோழிப் பசலை.

கோழிப் பசலை, see உமிரிக் கீரை.

கோழிப் பித்து, கோழியின் பித்தப் பை, the gall bladder of a fowl.

கோழிப் பிராணன், see கோழி யுயிர்.

கோழிப் பீ, கோழி யெச்சம், fowl's dung; droppings of a fowl.

கோழிப் புடம், பத்தெருவில் போடும் புடம். இது கோழி உயரமிருக்கும் மருந்திற்கு இவ்வளவு தீயென நிர்ணயிக்க வேண்டி இப் பெயர் கொடுக்கப்பட்டது. fire set up or kindled with the aid of 10. cow-dung cakes for calcining metals; the process of sublimating medicines with ten cow-dung cakes piled up to the height of a fowl. The name is given to indicate the intensity of heat required for calcination of a particular medicine. See குக்குடப் புடம்.

கோழிப் புணர்ச்சி, சம்போகத்தில் நீடித்து நிற்காமல் எளிதில் விந்து கலிதமாகும் புணர்ச்சி, sexual intercourse not sustainable, but attended with quick discharge of semen It is opposed to குருவிப் புணர்ச்சி, the one of sparrow referring to a long duration in the intercourse.

கோழிப் புல், see கோழிக் காற் புல்.

கோழிப் பூண்டு, see கோழி யவரை.

கோழிப் போகம், see கோழிப் புணர்ச்சி.

கோழி மருதை, see கரு மருது.

கோழி மீன், ஓர் வகைக் கறுப்பு நிறக் கடல் மீன். இது $1\frac{1}{2}$ அடி நீள மிருக்கும் sturgeon fish — Acanthurus gahm. It is dark in colour and is about $1\frac{1}{2}$ ft. in length; 2. நீல நிறமும் மஞ்சள் கோடுகளும், வாலின் அடியிற் முட்களு முள்ள ஓர் வகைக் கடல் மீன், a kind of sea fish blue in clour with clear cut of yellow bands or stripes and spines below its tail — Spine-tails.

கோழி முட்டை, கோழி யிடு முட்டை, egg laid by hen ; fowl's egg ; 2. மூன்று மாதத்திய பிண்டக் கரு, an euphemistic or secret term used to denote the foetus of three month's duration in the womb of a woman.

கோழி முட்டைக் கரண்டி, கோழி முட்டைப் பதியு மளவு குழியாகச் செய்த கரண்டி, a spoon made hollow so as to hold an egg in it — Egg-spoon.

கோழி முட்டைக் கரு, கோழி முட்டையின் வெள்ளை அல்லது மஞ்சட் கரு, the white (albumen) or the yellow part (yolk) of the fowl's egg.

கோழி முட்டை கற்பம், கருங் கோழி முட்டை நாற்பது எடுத்து வேக வைத்துப் பிறகு சாப்பிடும் உப்பிற்குள் 40 நாள் புதைத்து வைத்து எடுத்துத் தினம் ஒரு முட்டை உரித்து ஓடு நீக்கி ஒரு மண்டலம் அல்லது 40 நாள் பத்திய முறைப்படிச் சாப்பிட உடம்பு கற்றாணுகும், rejuvenating egg of dark-skinned fowl (hen.). 40 eggs of this kind are boiled and kept buried or concealed in a heap of common salt for 40 days and then taken out. Everyday one egg has to be taken as per prescribed diet after removing the shell ; and this, if continued for 40 days, is said to rejuvenate the body.

கோழி முட்டைத் தைலம், அண்டத் தைலம், இது கோழி முட்டையின் மஞ்சட் கருவி னின்றுதயாரித்துக் குழைந்தைகளுக்கு மாந் தம், வலிப்பு முதலியவைகளுக்கும், பெரி யோர்களுக்கு வாத பிடிப்பிக்கும் கொடுக் கும் தைலம், medicinal oil extracted from the yolk of hen's eggs ; and used in children's fits and spasms. It is also prescribed for adults in rheumatic complaints.

கோழி முட்டைப் பற்பம், அண்டோட்டிற்குள் இரசம், வீரம் முதலியவைகளைப் புகட்டி புட மிட்டுத் தயாரிக்கும் பற்பம், white powder prepared by process of calcination from medicines such as mercury. corrosive sublimate etc. which are inserted into an egg-shell and hermetically sealed, 2, கோழி முட்டையை மற்றச் சரக்கு களோடு சேர்த்து புடமிட்ட பற்பம், white powder prepared by calcination of egg mixed with other ingredients.

கோழி முட்டை யகப்பை, கோழி முட்டை பதியும் படிக்குப் பள்ளமாகச் செய்த ஓர் அகப்பை, a ladle so shaped as to hold an egg in it. C. f. கோழி முட்டைக் கரண்டி.

கோழி முட்டை வடிவம், மேற் பக்கம் சிறுத் தும் அடிப்பக்கம் பருமனுயு முள்ள வஸ்து, any substance with its top portion narrow and the bottom broad and thick — Oval shape

கோழி முளையான், சிறு பசளை, large-flowered purslane — Portulaca qudrifida. See முக்குளி.

கோழி முள்ளி, ஆற்று முள்ளி, river-holly — Acanthus ilicifolius.

கோழி யண்டம், கோழி முட்டை, fowl's egg.

கோழி யவரை. வாளவரை sword bean — Canavalia ensiformis ; 2, பெருங் கோழி யவரை, West Indian sea-side bean — Canavalia obtusifolia.

கோழி யவரைச் சாற் றெண்ணெய், கோழி யவரை யிலைச் சாற்றோடு நல்லெண்ணெயும், மற்ற கடைச் சரக்குகளும் சேர்த்துக் காய்ச் சும் தைலம். இதைப் பூசு மருந்தாகக் கொப் புளம், விரணம் இவைகளுக் குபயோகிக்க லாம், a medicated oil prepared with the juice of sword-bean and gingelly oil mixed with other bazaar drugs. It forms a useful application for boils and ulcers or wounds.

கோழி யாணம், கோழிக் குஞ்சு ரசம் அல்லது சூப்பு, chicken-broth ; 2. கோழி சூப்பு, fowl's soup.

கோழி யிரத்த மரப்பொடி, செம் மரத் தூள், red saw-dust of red wood,

கோழி யுள்ளான், ஓர் உள்ளான் குருவி, jud-cock ; jack snipe — Galinago gallimula alias Scolopox gannago.

கோழி யுறக்கம், see கோழித் தூக்கம்.

கோழி யெச்சம், கோழிப் பீ, fowl's dung.

கோழி யென்ற மூலி, see கோழி யவரை.

கோழி ரசம், கோழி சூப்பு, fowl's soup ; cock or hen soup.

கோழி வெண் காரம், கோழியின் வெண்ணிற மான பீ fowl's dung of a white colour.

கோழை, கபம், phlegm ; matter or materials from the lungs — Expectoration ; 2, சிறு குழந்தை, child ; 3. மனத் திட

மில்லாதவன், timid person; 4. கண் முதலியவற்றின் குழி, socket of the eye etc; 5. சளி நீர், viscid solution of mucus.

கோழை கட்டல், மார்ச்சளி யுண்டாதல், formation of phlegm in the chest; 2. சளி யுண்டாதல், formation of phlegm.

கோழை காசம், ஈளை, humid asthma.

கோழை கோழயாய் விழல், மார்பி னின்று கபம் வெளிவரல், issuing of thick phlegm in lumps,

கோழைக் கட்டு, குழ குழப்பாயும், வெண்மையாயும், பிசு பிசுப்புடனும் இருக்கும் சளியின் திரட்சி, collection of soft, white, slimy substance known as mucue; 2 நெஞ்சில் சளி சேருவதனு லேற்படும் கஷ்டம், obstruction in the chest due to excess of phlegm; 3. மார்ச் சளி, accumulation of phlegm; in the bronchial tubes.

கோழைக் கட்டு விழல், நெஞ்சில் கட்டிய கபம் வெளிப் படுதல், discharge of phlegm oclected in the chest.

கோழைக் காய்ச்சல், உதராசயத்தைப்பற்றிய ஓர் காய்ச்சல், gastric fever depending on disease of the mucous follicles.

கோழைக் குத்து, கோழையால் ஏற்படும் குத்தல் நோய், acute pain due to accumulation of phlegm in the chest.

கோழைத் தனம், மனத்திட மின்மை, timidity

கோழை நீர், கப நீர், sputum.

கோழை நெஞ்சு, கோழை கட்டிய நெஞ்சு, phlegm in the chest; chest accumulated with phlegm; 2. திடமற்ற மனம் timid mind; 3. இளகிய மனம், sympathetic mind.

கோழை நோய், கோழையால் ஏற்படும் நோய்கள், phlegmatic diseases; 2. ஈளை, asthma; 3. கயரோகம், phthisis.

கோழை போக்கி, நறுந் தாளி, a species of fragrant convolvulus.

கோழை மாந்தம், குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டுவதால் ஏற்படும் அசீரணம், வலிப்பு முதலிய குணங்கள், indigestion convulsions etc. in children due to accumulation of phlegm in the chest.

கோழை மொழி மூர்க்கன், தவளை, frog.

கோழை யகற்றல், கோழையைப் போக்கல், dephlegmating; removing phlegm.

கோழை யடைப்பு, நெஞ்சுக்கோழை திரண்டு மூச்சு விடக் கூடாதபடி தொண்டையை அடைத்தல், obstruction of respiration due to collections of mucous and phlegm in the passage of throat.

கோழை யறுக்குஞ் சூரன், திப்பிலி, long-pepper — Piper longum.

கோழையறுப்பான், கோழை யறுக்கும்மருந்து அல்லது மூலி, any medicine or drug which promotes expectoration — Expectorant. [illegible] க வகுப்பு.

கோழையான், மனத் திட மில்லாதவன், timid person; weak-minded man.

கோழை யிருமல், கோழை கட்டுவதினுல் வரும் இருமல், cough due to accumulation of phlegm in bronchial tubes — Bronchitis.

கோழை யிளக்கி, நெஞ்சில் தங்கி நிற்கும் கோழையை இளக்கு மருந்து, any drug or medicine rendering the phlegm loose and watery.

கோழை வாங்கல், தொண்டையில் விரற்களை யிட்டு ஒக்களித்துக் கோழையை வெளிப் படுத்தல், ejecting or bringing out the mucus collected in the throat by insertion of fingers into the mouth.

கோழை வாங்கி, நெஞ்சில் ஏற்கனவே தங்கி நிற்கும் கோழையை வெளிக்கு வாங்கும் மருந்து, an expectorant used to expel secretions that are already formed in the chest — Stimulant expectorant.

கோழை விந்து, துளசி, holy basil — Ocimum sanctum.

கோழை விப்புருதி, சீழோடு கூடிய கட்டி, an abscess attended with muco-purulent discharge.

கோளக சீரிடம், மாசி பத்திரி, Indian wormwood — Artemesia vulgaris.

கோளக பாஷாணம், ஓர் வகை விளைவு பாஷாணம், a kind of native arsenic.

கோளகம், see கோளக பாஷாணம்; 2. மிளகு pepper; 3, வால் மிளகு, tail pepper—Piper cubeba; 4, மண்டிலிப் பாம்பு, a kind of hoodless snake capable of whirling round; 5. சிறு கோளம், tubercle: a little gland — Glandule; 6, இரைக் குடல் நெடுகவிருக்கும் சிளமான சிறு மணிகள், the lymphatic glands of the small intestine. situated between the layers of the mesentery —

Mesentric glands; 7, *திப்பிலி*, long-pepper; 8. *கோச மலர்*. glans peins; 9, *போளம்*, myrrh; 10, *தண்ணீர் சால்*, water-jar.

கோளக வச்சிரம், *குருந்தக் கல்*, a variety of corundum next to diamond — Emery; 2, *கருந் தண்ணீர்க் கல்*, a kind of black mineral stone.

கோள காயம், see எழுத்தாணிப்

கோளகை, *மண்டலிப் பாம்பு*, see *கோளகம்*; 2. *அண்ட வடிவம்*, oval shape; 3. *வட்ட வடிவம்*, globular shape; 4, *உறை*, socket.

கோளக் கட்டி, *தொடைச் சந்து, அக்குள் முதலிய விடங்களில் இருக்கும் கோளத்திற் குத் தாபிதம் காணுவதால் ஏற்படும் மேகக் கட்டி*, a venereal bubo appearing particularly in the groins or the arm-pit as consecutive symptom of syphilis due to the inflammation of glands therein —Abscess of the gland.

கோளக் கழலை, *கோளம் மாறுபடுதலால் ஏற் படும் கழலை*, a tumour formed by the pathological development of a tissue — Glandular tumour; 2. *கோளக் கட்டி*, adenoma which is a form of hypertrophy of the lymphatic gland.

கோளக் காய்ச்சல், *கோளத்திற்குக் காணும் தாபிதத்தினு லேற்படும் சுரம்*, fever arising from the inflammation of a gland — Adeno - fever.

கோளங் கட்டி, *உடம்பின் எப்பாகத்திலாவது திரட்சியாகக் கோளம் வீங்கிப் பருத்துக் காணல்*, glandular swelling on any part of the body.

கோள சாஸ்திரம், *உடம்பி னுள்ள கோளங் களைப் பற்றிய நூல்*, a treatise on the glandular system — Adenology.

கோளச் சிலந்தி, see *கோளப் படுவன்*.

கோளத் தாபிதம், *கோளத்திற்குக் காணும் அழற்சி* inflammation of a gland — Adenitis.

கோளத்திற் குரிய, *கோள சம்பந்தமான* relating to a gland — Adenic.

கோளத்தைப் போன்ற, *கோள வடிவமுள்ள* of the shape of a gland; gland like — Adeniform.

கோள நிலைமை, *உருண்டை வடிவமாய் இருக் கும் தன்மை*, the state or condition of being spherical or globular — Sphericity; spherodal state

கோள நீருறை, *கோளத்தின் பிணி நீர்ப் பை*, a cystic adenoma — Adsno-cystoma.

கோள நோய், *சாதாரணமாய்க் கோளத்திற் கேற்படும் எவ்வித நோய்*, any form of glandular disease—Adenosis.

கோளப் படுவன், *கோளச் சிலந்தி*, adeno-ulcers.

கோளப் பிணி, *கோள நோய்*, any disease of a gland.

கோளப் பிரிவு, *கோளம் தனித் தனிக் கோளங் களாகப் பிரிதல்*. abnormal seperation of a gland into distinct parts — Adeno-diastasis.

கோள மறிப்பு, *கோளத்திற்கு ஏற்படும் தடை* glandular obstruction.

கோளம், *உருண்டை வடிவம்*. globular shape; 2. *உடம்பில் நீருறும் சதைப்பற்று*, an organ in the body secreting some fluid; gland; 3. *கண்ணீர், உமிழ் நீர், பித்த நீர் வியர்வை முதலிய கெட்ட நீர்கள் பொசிகின்ற கருவி களின் பொதுப் பெயர்*, a common name for secreting glands form which tears, saliva, bile. water, sweat etc. emanate; 4 *ஓர் பெரிய உருண்டையான நீர் மிடா*, a large globular water-jar.

கோளம், *இக் கோளங்கள், முக்கியமாக உடம்பிற்கு வேண்டிய வஸ்துக்களைத் தயா ரித்துக் கொடுக்க உடம்பினுள் பல பாகங் களில் அமையப் பெற்ற சிறிய உறுப்பு களுக்கே இப் பெயர். அவைகள் நுண்ணிய நாடிகளும், நாளங்களும். விசர்க்கக் குழல் களும் திரண் டிருப்பதினால் உருப் பெற் றிருக்கின்றன. இவற்றிற்கு இரத்தத்தி லிருக்கும் திரவப் பொருளை கவர்வதற்கும். கழிப்பதற்கு முள்ள சக்தி யுண்டு. அன்றி யும் இரத்த மாசுக்களை வடிக்குங் குணமும், வேறுவித தொழில்க ளியற்றும் சக்தியும் உண்டு. இதற்கு மாசயனி கோளத்தையும் உமிழ் நீர் கோளத்தையும் உதாரணமாகச் சொல்லலாம் மேலும் ஈதலைக் கருதி மண் ணீரலுக்கும் ஈரலுக்கும் கழிவுத் தன்மையை நோக்கி குண்டிக் காய்க்கும். முலைக்கும் இப் பெயராகிய கோளம் என்பது பொருந் தும். இக் கோளங்கள் உடம்பின் ஆரோக் கிய நிலைமைக்கும், வளர்ச்சிக்கும் முக்கிய மானவை, அவைகளின் பருமன் பய றளவு முதல் பனங்கா யளவு வரை ஒன்றுக் கொன்று வித்தியாசப் படும் கோளங்கள் சிறியவைகளா யிருந்தாலும் அவைகள் ஒவ் வொன்றிலு மிருந்து அதனதற் குரிய நீர்

Dic 193.

வெளியே பாய்வதற்கு வெவ்வேறு குழல்களுண்டு, பலவிமான சுரப்புகளை உண்டாக்குவதுதான் கோளங்களின் தொழில். அப்படியே உமிழ் நீர்க் கோளங்கள் உமிழ் நீரையும்; ஈரலானது மண்ணிறமான கசப்புள்ள பித்தத்தையும், பிருக்கங்கள் (குண்டிக் காய்கள்) உவர்ப்புள்ள அமுரியையும் கழிக்கின்றன. தேக வளர்ச்சிக்கு வேண்டியிராத வஸ்து ஏதாவ தொன்றிருந்தால் அது சோஷணக் குழல்களால் உறிஞ்சப் பட்டு, அவைகளின் வழியாய் இரத்தத்திற்குள்ளே சேர்ந்து, முன் சொல்லப்பட்ட கோளங்கள் வழியாக அந்தந்த விசர்க்கமாய்க் கழிந்து போகும். கோளங்களின் வழியாகக் கழிந்து போகவேண்டிய வஸ்துக்கள் ஒழுங்காகக் கழியாதிருந்தால் நோயை யுண்டுபண்ணும். கோளங்களின் வழியாய்க் கழியவேண்டிய மற்ற மாசுக்கள் ஏதாகிலும் தடைபட்டால் உடம்புக்குள்ளிருக்கும் உறுப்புகளிலே குழப்பம் உண்டாகும். இக் கோளங்கள் அடியிற் கண்டபடி பல வகைப்படும். glands. This is the name given to collections of speciallised cells in the body which manufacture special substances needed by the body. Gland is a small structure, occurring in many parts of the body, composed of various tissues, blood-vessels, nerves etc. It possesses the power of absorbing or separating the various substances which pass into or are separated from the circulating fluid. It also acts as filters or effects some action in the blood as it passes. Of the latter type are the lymphatic glands, and of the former are the salivary and the sweat glands. The term is sometimes applied to the liver and the kidneys when they are designated as glands of supply (the liver, the pancreas, the spleen); and as glands of waste (the kidneys, the mamma etc). They are of great importance in the maintenance of health and growths. They are of varied size ranging from dholl gram to palmyra fruit, but different in their characteristics. Though these glands are small, they are provided with ducts for purposes of discharging the secreted fluids. Secretion is the chief function of these glands as can be seen from salivary glands secreting the saliva, liver, the bile and the kidneys the urine. Such of the waste matters as are not required for the growth of the body are absorbed by the lymphatics vessels; and taken to the blood from which they are excreted through various excretory organs. If, on the other hand, they are not excreted from the body in the ordinary course disease may appear. If the excretions to be eliminated by these glands are obstructed in their course, some disorder in the internal organs will be the result These glands are of different kinds ...ntioned below:—

1. ...யனிக் கோளம், lymphatic gland.
2. சுவேத அல்லது வியர்வைக் கோளம், sweat or miliary gland.
3. நிணக் கோளம், sebaceous gland.
4. குழற் கோளம், tubular gland.
5. குழலற்ற கோளம், ductless gland.
6. தேவதாரு கோளம், pineal gland.
7. சுழிமுனைக் கோளம், pitituary gland.
8. பிசுந்திக் கோளம், thyroid gland.
9. கேடய கோளம், thymus gland.
10. ஆசனக் கோளம், anal gland.
11. உமிழ் நீர்க் கோளம், salivary gland.
12. கன்னக் கோளம், buccal gland.
13. கண்டக் கோளம், carotid gland.
14. தந்தக் கோளம், dental gland.
15. குடற் கோளம், intestinal gland.
16. கழிவுக் கோளம், excretory gland.
17. சிறு கோளம், follicular gland.
18. பாசக நீர்க் கோளம், gastric gland.
19. சினைக் கோளம், genital gland.
20. மயிர்க் காற் கோளம், pilous gland.
21. கண்ணீர்க் கோளம், lacrimal gland.
22. முலைக் கோளம், mammary gland.
23. பருவ பக்குவக் கோளம், puberty gland.
24. திராட்சைக் குலைக் கோளம், racemose gland.
25. பிரிவினைக் கோளம், secretory gland.
26. ஆறிக் கோளம், sexual gland.
27. யோனிக் கோளம், vaginal gland.
28. கருப்பைக் கோளம், uterine gland.

கோளரி. சிங்கம். lion.

கோளரிஞ்சான், ஓர்வகை ஆற்று மீன். இது சாம்பல் நிறம், இது ¾ அடி நீளம். carp—Labcoariza, It is leaden grey in colour, about ¾ ft. in length.

கோள வங்கம், வங்க மணல், lead ore.

கோள விரணம், கோளத்தி லுண்டாகும் புண், ulceration of a gland.

கோள வீக்கம், கோளத்திற்காணும் வீக்கம், glandular swelling or enlargement of the gland

கோளா, கொத்தின ஆட் டிறைச்சிக் கறி மசாலை யிட்டு உண்டைகளாகத் திரட்டி நெய் அல்லது எண்ணெ யிட்டு வறுத்த பண்டம், minced mutton ... with curry stuffs, made into b... fried in oil or ghee; 2. கஞ்சா ... balls of pulverised gunjah leaves.

கோளாங் கட்டி, ஓர் மண் கட்டி, a mineral compound of silicate found in a lump.

கோளாங் கல், see கூழாங் கல், 2. பருக் கைக் கல், a small gravel stone mixed with or without sand

கோளாறு, குழப்பம், disorder as குடற் கோளாறு, disorder of intestines: 2. வயிற்றுக் கோளாறு, disorder of stomach; 3, குற்றம், defect, as of body.

கோளி, ஆல், banyan tree; 2. கொழிஞ்சி மரம், which see; 3 பூவாது காய்க்கு மரம்; (உ-ம்) அத்தி மரம், tree yielding fruit without blossoming as fig tree; 4. see காகோளி, 5. சிங்கம், lion; 6. see கோளிகை: 7. அத்தி மரம், fig tree.

கோளிகம், திப்பிலி, long pepper: 2. அத்தி மரம், fig tree

கோளிகை, பெட்டைக் குதிரை, mare; 2. பெட்டைக் கழுதை, she-ass.

கோளிப் பாசம், பெருங் குறிஞ்சா, scammony swallow wort — Secamone emetica.

கோளிப் பூடு, see குப்பை மேனி,

கோளியம், துத்தி, country mallow — Abutillon indicum.

கோளி யால், ஓர் வகை ஆல், large - leaved yellow fig—Ficus callosa.

கோ ளிழைத்தல், கொல்லுதல், killing: 2. தீங்கி ழைத்தல், doing harm or injury.

கோ ளோசம், see குங்குமப் பூ.

கோளை, எலி, rat; 2, கோழை, phlegm.

கோளைக் குத்து, நெஞ்சில் கோழை அல்லது கபங் கட்டுவதால் ஏற்படும் மார்பு வலி, pain in the chest as a result of accumulation of phlegm in bronchial tubes.

கோன், காமாட்டம் புல், citronella grass — Andropogon nardus; 2. வலி, strength; 3. நல்லெண்ணெய், gingelly oil: 4. குலை, cluster; bunch; 5. பிரகாசம், brilliance; 6. தன்மை, nature or quality; 7, பாம்பு, snake; 8. விஷம், poison; 9. மேகம், cloud; 10. கிரகம், (In Astronomy) planet; 11. நவக் கிரகம், the nine planets,

கோன் திவசம், ஒன்பது நாள், nine days.

கோன் வாய், புதிதாக ஏற்பட்ட புண், newly caused wound: fresh wound.

கோறடம், see எட்டி.

கோறல், கொல்லுதல், killing.

கோறித்தல், நில வேம்பு, ground neem — Andrographis paniculata.

கோறை, குவளை, socket as eye-socket ; 2. துளை, hole or cavity ; as பற்றுளை; 3. புத்திரத் துவாரம், sinus in fistula ; 4, சொறிந்த வழு, abrasion or scratch in the body; 5. உடம்பின் குற்றம், bodily defect.

கோறைப் படுத்தல், வழு வுண்டல், sustaining an abrasion or scratch; 2. குழி யுண்டாதல், becoming hollow ; forming a cavity

கோறை வைத்தல், துவாரஙகள் உண்டாதல், formation of sinuses as in ulcers.

கோற் கொடி, இலந்தை மரம், jujube tree ; 2. சுரைக் கொடி, bottle-gourd creeper ; Lagenaria vulgaris.

கோற் புழு, கீடம், a kind of chrysalis on branches of trees ; 2. உலண்டம், case-worm.

கோற் பூச்சி, see அங்கக் கோற் பூச்சி,

கோற் றேன், கொம்புத் தேன், a superior kind of honey found collected on branches of trees.

கோனந்தி, see அரிதாரம்.

கோனி, பூவாது காய்க்கு மரம், a tree bearing fruit without showing flowers. See கோளி.

கோனியக் கனி, கோனிப் பூண்டின் பழம், hemlock fruit.

கோனியம், மேனாட்டு ஓர் விஷப் பூடு, a foreign plant from Europe the leaves of which are considered very poisonous — Conium maculatum.

கோனிற் கொடி, கொடிப் புன்கு, hog-creeper — Derris scandens.

கோளை வேல், ஓர் வகை வேல், crooked acacia. See கொடி வேலன்.

கௌ. கொள்ளு, horse-gram ; 2. கள், toddy.

கௌகப், தோலா எடையுள்ள ஓர் பண்டை காலத்து துலுக்கர் வெள்ளி நாணயம், an ancient Mahomadan silver coin weighing 50 tolas.

கௌசபாகம், ஓர் வகைக் கஷாயம், a kind of decoction

கௌசலம். கள், toddy.

கௌசனம், see கோவணம்.

கௌசி, வயிற்றி லுண்டாகும் ஓர் நீராமைக் கட்டி, dropsy of the belly or abdomen. abdominal dropsy — Ascites. See கவிசை.

கௌசிகதாரி, see குங்கிலியம்.

கௌசீகபலம், தேங்காய், cocoanut.

கௌசிகம், ஆந்தை, owl ; 2 தென்னை, cocoanut tree ; 3. see குங்கிலியம் ; 4. பாம்பு, snake.

கௌசிகேயம், வெள்ளை கிலுகிலுப்பை, fox frightener—Crotolaria angulosa,

கௌசிபல், தென்னை மரம், cocoanut tree.

கௌசிரர், நிலக் குரோசினை. இது செம்பி னின்று களிம் பெடுக்கும் an unknown drug said to remove verdigris from copper.

கௌசீதாம், வெள்ளை எருக் கொல்லி, stinking swallow-wort. See எருக் கொல்லி

கௌசுகம். see குங்கிலியம்.

கௌஞ்சம், see கிரவுஞ்சம்.

கௌடதும், வெள் ளுள்ளி, garlic ; 2. வெட்பாலை. Tellicherry bark — Nerium antidysentericum.

கௌடம், வெல்லத்தினால் செய்த ஓர் மது a liquor prepared out of iaggery ; molasses or that which is prepared from sugar ; 2. ஓர் பின்னலான மருந்துக் கொடி, a medicinal twining creeper ; 3. வட தேசம், North India.

கௌடலி. நிர்வாணி, a naked woman ; 2. உடை யில்லாள், one having no clothes on ; 3. சத்தி, the goddess Sakti.

கௌடிகம், see கௌடம்,

கௌடிலம், வளைவு, curve ; bend.

கௌண்டன், உயிர்க் கொல்லி, life-killer ; 2. வேடன், hunter,

கௌண்டினியன், ஓர் இருடி, the name of a great sage ; 2, ஓர் பிராமண கோத்திரம், the title of a Brahmin lineage.

கௌதம தந்திரம், விஸ்வாமித்திரரா ற்செய்யப் பட்ட ஓர் ஆயுள் வேத நூல், an Ayurvedic treatise by Sage Viswamitra,

கௌதம் [illegible], கௌதமரால் தமிழில் செய்யப் பட்ட ஓர் சோதிட நூல். தமிழ் நாடி நூற் கள் சாதாரணமாக உள்ளங்கை ரேகையை அனுசரித்தே வரும். ஆகவே, ரேகை சாஸ்திரத்திற்கும் சோதிடத்திற்கும் நெருங் கிய சம்பந்த முண்டென்பது தெட்டென விளங்கும், a work on Astrology written by Sage Goutana c' Viswamitra, Tamil Nadi work is generally based on palmistry ; and therefore a close relation between palmistry and astrology is clearly established.

NOTE :— It is very doubtful if there is a work like this in existence in Sanskrit, referring to horoscopes individually.

கௌதமம், நறும் பிசின். fragrant resin.

கௌதமி, கோரோசினை, bezoar ; 2. பசு, cow.

கௌதமை, பசு, cow ; 2, கோரோசனம், bezoar.

கௌதம், கிச்சிலிக் குருவி, the king fisher — Halcyon.

கௌதாரம், உடும்பின் குட்டி, young of guana 2, உடும்பின் நிறமான பாம்பு, a snake of the colour of guana.

கௌதாரி, கவுதாரி. partridge,

கௌதீரகம், மா மலை, an unknown plant (?)

கௌதும்பை, see கவிழ் தும்பை,

கௌதூகலம், மிதி பாகல், ground creeper — Mimordica humilis.

கௌதேரசர்ப்பம், சாரைப் பாம்பு. இது உடும்பு நிறத்தை போன்றதால் இப் பெயர் rat-snake. So called from its resemblence in colour to guana. See கௌதாரம்.

கௌதுகவாதம், see கவுத்துக வாதம்.

கௌத்துவம், மணிக்கம், a kind of carbuncle (gem) ; a ruby.

கௌத்தி, காட்டு மிளகு, wild pepper ; 2. வால் மிளகு, tail pepper — Piper cubeba.

கௌந்தியம், வெண் மருது, white murdah — Terminalia arjuna.

கௌந் திரியம், வால் மிளகு, see கௌந்தி.

கௌபம், கிணற்று நீர், well water.

கௌ ழும், மிளகாய், chillie — Capsicum frutescens.

கௌ பலா, தட்டுப் பலா, a kind of jack tree.

கௌபலா சித்தன், see கவுபால சித்தன்.

கௌ பீன சுத்தன், பெண்ணோடு சேராதவன், a confirmed bachelor.

கௌ பீன தோஷம், சோரப்புணர்ச்சி செய்த லாகிய குற்றம், evil of fornication ; venereal affections.

கௌ பீனம், கோவணம் இது இடுப்பின் அரை ஞாண கயிற்றைப் பற்றி இருதொடைகளுக்கும் நடுவே பாய்ச்சி, ஆண் குறியை மறைப்பதற்காக வுபயோகப் படுத்தும் துண்டுத் துணி, a name for the narrow strip of cloth passed between the thighs and fastened to waist or middle string before and behind to cover and conceal the genital organ of a male.

கௌ மாதம், கார்த்திகை மாசம், the month of November.

கௌ மாரகம், இளமை, juvenile age.

கௌமார தந்திரம், பிள்ளைகளை வளர்ப்பதைப் பற்றியும், பயிற்சியைப் பற்றியும் கூறும் ஓர் வட மொழி வைத்திய நூல், the section of a medical work in Sanskrit treating of the rearing and education of children.

கௌமாரம், இளமை, youth ; maiden age of sixteen ; 2. பால பருவம், childhood ; young age ; 3. ஒன்று முதல் 16 வயது வரை, யுள்ள ஆண், a male aged 1 to 16 years ; 4. 16 வயது முதல் 32 வரையுள்ள பெண், a female aged 16 to 32 years.

கௌமாரி, see குமரி.

கௌ மீதி, நிலவு, moon.

கௌர சத்தம், சிவப்புக் கால்களை உடைத்தா யிருத்தல், having reddish legs.

கௌர மிருகம், காட்டுப் பசு, wild-cow — Bos gaurus.

கௌரம், தாமரை, lotus ; 2. காட்டு மாடு, wild ox ; 3. காட்டு மான், wild young deer ; 4. பொன் அல்லது மஞ்சள் நிறம், yellow colour ; 5. வெண்மை, whitness ; 6. வெள்ளைக் கடுகு, white mustard ; 7. தாமரை நூல், filaments of lotus ; 8. பொன், gold ; 9. அரிதாரம், orpiment ; 10. செடி, a pot-herb ; 11. மஞ்சள், saffron.

கௌ ராங்கம், வெள்ளை அல்லது மஞ்சள் உடம்பை உடைத்தா யிருத்தல், having a white or yellowish body.

கௌரி, கடுகு, mustard ; 2. துளசி, holy basil — Ocimum sanctum ; 3. see கௌரி பாஷாணம்; 4 புளி நரளை, hairy wild vine — Vitis setosa alias Cissus acida ; 5. பதது வயதுப் பெண், girl of 10 years ; 6. பொன் னிறம், yellow colour ; 7. see காக் கணத்தி.

கௌரி, பல கறை, இது இந்து மகா சமுத்திரத்திலுள்ள தீவுகளாகிய லாக்டிவ், மாலடிவ் இவ் விடங்களில் கிடைக்கும். சில விடங்களில் இதை நாணயமாக உபயோகப் படுத்துவ துண்டு. பைசாவுக்கு இவ்வளவு என விற்பார்கள், இதைப் பற்பமாகச் செய்து நோய்களுக்குக் கொடுக்கலாம். cowry — Cypraca moucta They are found on the shores of the islands of Laccadives and Maldives in Indian ocean They are current as coins in some parts as a fractional part of a pice. It is also calcined into a medicinal powder and used for curing diseases.

NOTE :— They are used as ornaments amongst hill tribes. In households they are used as instruments of gaming.

கௌரிகம், வெள்ளைக் கடுகு, white mustard.

கௌரி கேஸி, வெள்ளைக் காக்கணம், white mussell-shell creeper — Clitoria ternatea (albiflora).

கௌரி சிப்பி, see கௌரி பாத்திரம்.

கௌரி பாஷாணம், ஓர் வைப்புப் பாஷாணம், a prepared arsenic — Yellow oxide of arsenic. See கவுரி பாஷாணம்.

கௌரி பாண்டம், see உமரி.

கௌரி பாத்திரம், see கௌரி பாத்திரம்.

கௌரிப் பழம், ஓர் சிவப்புப் பழம் இது சாப்பிடவும் ஊறுகாய் போடவும் உதவும், Indian black berry — Rubus flavus. It is eaten and made into preserves.

கௌரி மாதி, சரள தேவதாரி, a kind of Deodar tree.

கௌரி புஷ்பம், ஓர் பூடு, an unknown plant.

கௌரியம், see கரு வேம்பு.

கௌரி யெலுமிச்சை, பெரிய எலுமிச்சை, gowry's neem. It is a large species of lime.

கௌரிலம், see கௌரிகம், 2. அயப் பொடி, iron filings.

கௌரி வேம்பு, see மலை வேம்பு.

கௌரீ யந்திரம், சாரணை கொடுப்பதற்காக உபயோகப்படு மோர் யந்திரம். இதில் 8 சதுர அங்குலச் செங்கல்லைக் கண்ணாடியைப் போல மெதுவாக அரைத்துப் பிறகு அதன் மத்தியில் மூசையைப் போற் குடைந்து, அதற்குள் சுண்ணாம்பு தடவிப் பின் வெள்ளி பொன், அப்பிரேக்கு இவைகளை அரைத்து மூசையில் வார்த்து, வாய் மூடி சீலை மண் செய்து புடமிடப்படும், an apparatus used in Alchemy for purposes of animating mercurial pills. It is made as follows :— a brick of 8 cubic inches is rubbed so to have a smooth surface ; and a hole is scooped out in the centre in the shape of a crucible with a coating of lime inside. In it, is inserted the prepared essence of silver gold or mica with the mouth of the hole closed and hermetically sealed ; and then calcined.

கௌரீ லலிதம், see அரிதாரம்.

கௌ ரேகிகம், பாம்பு, a serpent.

கௌ ரேசியம், வெள்ளை முக முடைய கருங்குரங்கு, a black monkey with a white face.

கௌ லகம், வால் மிளகு, tail pepper.

கௌ லவம், பன்றி, hog.

கௌ லாலகம், மண் பாண்டம், earthen pot.

கௌ லிகம், பாதிரி மரம், trumpet tree — Bignonia suaveolens.

கௌ லேயகன், நாய், dog.

கௌல் மிகம், குன்மக் கட்டியை சிகிச்சை செய்தல, treating a glandular swelling called குல்மம், which see.

கௌ வலம், see இலந்தை.

கௌ ஷியம், see கோரோசினை, 2. சாணி dung. See கவ்வியம்.

கௌவு கருவி, கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளும் ஆயுதம், an instrument for holding fast — Forceps.

கௌவுதல், கவ்வுதல், holding fast with the month.

கௌவை, கள், toddy ; 2. எள் இளங் காய், immature rape seed.

கௌளா, (யூனானி) உடம்பிற்குக் குளிர்ச்சியை உண்டாக்கு மோர் பழம், யூனானி வைத்தியர்கள் இதை மிகுதியாக உபயோகிப்பார்கள், a kind of fruit much used by Unani doctors for colling the system. See கௌரிப் பழம்.

கௌளி, பல்லி, house-lizard — Lacerts gecko ; 2. see அத்தி. 3. 100 வெற்றிலை கொண்ட கட்டு, bundle containing 100 betal leaves.

கௌளிக் காதம், பல்லி பலுக்குதல், இதனால் நேரும் நன்மை தீமைகளை யூகிக்கலாம், chirp of lizard foreboding good or evil.

கௌளி நூல், பல்லி சொல்லுவதின் பயன் கூறும் நூல், a treatise containing the interpretation of the chrips of lizards: a science on the noise of lizards and its presage.

கௌளி பத்திரம், வெள்ளை வெற்றிலை, white betel leaf.

கௌளி பாத்திரம், மஞ்சட் தேங்காய் காய்க்கும் தென்கா மரம்; a species of cocoanut tree yielding yellow fruits; 2. துறவிகள் உணவு ஏற்பதற்காக உபயோகிக்கும் தேங்காய் ஓட்டினால் செய்த பாத்திரம், a cocoanut bowl used by mendicants for holding food or drinking water or other liquid: 3. பூசைக் குதவும் சங்கு, a large kind of conch used in offerings as a cup.

கௌன் குளிகை, see சவன குளிகை.

கௌளிசம், ஆகாயம், sky; 2. கெண்டைக் கல், black granite stone.

Dic.193